கம்பராமாயணம்

இராமாவதாரம்

பகுதி 2

கம்பன் கழகம்
சென்னை

யுத்த காண்டம்

'ஒன்றே' என்னின், ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின், பலவே ஆம்;
'அன்றே' என்னின், அன்றே ஆம்;
'ஆமே' என்னின், ஆமே ஆம்;
'இன்றே' என்னின், இன்றே ஆம்;
'உளது' என்று உரைக்கின், உளதே ஆம்;
நன்றே, நம்பி குடி வாழ்க்கை!
நமக்கு இங்கு என்னே பிழைப்பு? அம்மா!

1 கடல் காண் படலம்

எழுபது வெள்ளம் சேனை சூழ, இராமன் கடலைக் காணுதல்

ஊழி திரியும் காலத்தும் உலையா
நிலைய உயர் கிரியும்,
வாழி வற்ரு மறி கடலும், மண்ணும்,
வட பால் வான் தோய,
பாழித் தெற்கு உள்ளன கிரியும் நிலனும்
தாழ, பரந்து எழுந்த
ஏழு-பத்தின் பெரு வெள்ளம் மகர
வெள்ளத்து இறுத்ததால். 1

பொங்கிப் பரந்த பெருஞ் சேனை,
புறத்தும் அகத்தும், புடை சுற்ற—
சங்கின் பொலிந்த தகையாளைப்
பிரிந்த பின்பு, தமக்கு இனம் ஆம்
கொங்கின் பொலிந்த தாமரையின்
குழுவும் துயில்வுற்று இதழ் குவிக்கும்
கங்குல் பொழுதும், துயிலாத
கண்ணன்—கடலைக் கண்ணுற்ருன். 2

கடவுள் வாழ்த்து: நம்பி - குண நிறைவுடையவன், இறைவன்; குடி வாழ்க்கை - நிலை, இயல்பு; நன்று - பெரிது.

1: 1. பாழி - பெருமை, பெருந்திசை யாகலின் பாழித் தெற்கு என்ருர்.

திரைப் பரப்பில் திவலையும், தென்றலும்

'சேய காலம் பிரிந்து அகலத்
திரிந்தான், மீண்டும் சேக்கையின்பால்,
மாயன், வந்தான்; இனிவளர்வான்'
என்று கருதி, வரும் தென்றல்
தூய மலர்போல் நுரைத் தொகையும்
முத்தும் சிந்தி, புடை சுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த—
திரையின் பரப்பு அம்மா. 3

வழிக்கும் கண்ணீர் அழுவத்து
வஞ்சி அழுங்க, வந்து அடர்ந்த
பழிக்கும் காமன் பூங் கணைக்கும்
பற்று நின்றான் பொன் தோளை,
சுழிக்கும் கொல்லன் ஒல் உலையில்
துள்ளும் பொறியின் சுடும், அன்றே—
கொழிக்கும் கடலின் நெடுந் திரைவாய்த்
தென்றல் தூற்றும் குறுந் திவலை. 4

நென்னல் கண்ட திருமேனி
இன்று பிறிது ஆய், நிலை தளர்வான்-
தன்னைக் கண்டும், இரங்காது
தனியே கதறும் தடங் கடல்வாய்,
பின்னல் திரைமேல் தவழ்கின்ற
பிள்ளைத் தென்றல், கள் உயிர்க்கும்
புன்னைக் குறும் பூ நறுஞ் சுண்ணம்
பூசாது ஒருகால் போகாதே. 5

கடற் கரையில் தோன்றிய பவளமும் முத்தும்

சிலை மேற்கொண்ட திரு நெடுந் தோட்கு
உவமை மலையும் சிறிது ஏய்ப்ப,
நிலை மேற்கொண்டு மெலிகின்ற
நெடியோன் தன்முன், படி ஏழும்
தலை மேல் கொண்ட கற்பினாள்
மணி வாய் என்ன, தனித் தோன்றி,
கொலை மேற்கொண்டு, ஆர் உயிர் குடிக்கும்
கூற்றம் கொல்லோ—கொடிப் பவளம்? 6

3. சேக்கை - படுக்கை; உதறிப் படுத்தல் - உதறி விரித்தல்; 4. பற்று - இலக்கு.

'தூரம் இல்லை, மயில் இருந்த
சூழல்' என்று மனம் செல்ல,
வீர வில்லின் நெடு மானம்
வெல்ல, நாளும் மெலிவானுக்கு,—
ஈரம் இல்லா நிருதரோடு என்ன
உறவு உண்டு உனக்கு?—ஏழை
மூரல் முறுவல் குறி காட்டி,
முத்தே! உயிரை முடிப்பாயோ? 7

கடலின் தோற்றம்

'இந்து அன்ன நுதல் பேதை
இருந்தாள், நீங்கா இடர்; கொடியேன்
தந்த பாவை, தவப் பாவை,
தனிமை தகவோ?' எனத் தளர்ந்து,
சிந்துகின்ற நறுந் தரளக் கண்ணீர்
ததும்பி, திரைத்து எழுந்து,
வந்து, வள்ளல் மலர்த் தாளின்
வீழ்வது ஏய்க்கும்—மறி கடலே. 8

பள்ளி அரவின் பேர் உலகம்
பசுங் கல் ஆக, பனிக் கற்றைத்
துள்ளி நறு மென் புனல் தெளிப்ப,
தூ நீர்க் குழவி முறை சுழற்றி,
வெள்ளி வண்ண நுரைக் கலவை,
வெதும்பும் அண்ணல் திருமேனிக்கு
அள்ளி அப்ப, திரைக் கரத்தால்
அரைப்பது ஏய்க்கும்—அணி ஆழி. 9

கொங்கைக் குயிலைத் துயர் நீக்க,
இமையோர்க்கு உற்ற குறை முற்ற,
வெங் கைச் சிலையன், தூணியினன்,
விடாத முனிவின் மேல்செல்லும்
கங்கைத் திரு நாடு உடையானைக்
கண்டு, நெஞ்சம் களி கூர,
அம் கைத் திரள்கள் எடுத்து ஓடி,
ஆர்த்தது ஒத்தது—அணி ஆழி. 10

9. பள்ளி அரவு - படுக்கையாகிய பாம்பு, ஆதிசேடன்.

மேல் விளைவு எண்ணி இராமன் சிந்தித்தல்

இன்னது ஆய கருங் கடலை
எய்தி, இதனுக்கு எழு மடங்கு
தன்னது ஆய நெடு மானம்,
துயரம், காதல், இவை தழைப்ப,
'என்னது ஆகும், மேல் விளைவு?' என்று
இருந்தான், இராமன், இகல் இலங்கைப்
பின்னது ஆய காரியமும்
நிகழ்ந்த பொருளும் பேசுவாம்: 11

2 இராவணன் மந்திரப் படலம்

எரியுண்ட இலங்கையை மயன் புதுப்பித்தல்

பூ வரும் அயனொடும் புகுந்து, 'பொன் நகர்,
மூவகை உலகினும் அழகு முற்றுற,
ஏவு' என இயற்றினன் கணத்தின் என்பரால்—
தேவரும் மருள்கொள, தெய்வத் தச்சனே. 1

பொன்னினும் மணியினும் அமைந்த பொற்புடை
நல் நகர் நோக்கினன், நாகம் நோக்கினன்,
'முன்னையின் அழகு உடைத்து!' என்று, மொய் கழல்
மன்னனும், உவந்து, தன் முனிவு மாறினன். 2

முழுப் பெருந் தனி முதல் உலகின் முந்தையோன்
எழில் குறி காட்டி நின்று, இயற்றி ஈந்தனன்;—
பழிப்ப அரும் உலகங்கள் எவையும் பல் முறை
அழித்து அழித்து ஆக்குவாற்கு அரிது உண்டாகுமோ? 3

திரு நகர் முழுவதும் திருந்த நோக்கிய,
பொரு கழல், இராவணன் அயற்குப் பூசனை
வரன்முறை இயற்றி, 'நீ வழிக்கொள்வாய்' என்றான்—
அரியன தச்சற்கும் உதவி, ஆணையால். 4

2: 2. நாகம் - வானத்தில் உள்ள நகரம், அமராவதி; 3. எழில் குறி - அழகிற்கு உரிய வரையறை.

இராவணன் ஆலோசனை மண்டபத்து வீற்றிருத்தல்

அவ் வழி, ஆயிரம் ஆயிரம் அவிர்
செவ் வழிச் செம் மணித் தூணம் சேர்த்திய
அவ் எழில் மண்டபத்து, அரிகள் ஏந்திய
வெவ் வழி ஆசனத்து, இனிது மேவினான். 5

வரம்பு அறு சுற்றமும், மந்திரத் தொழில்
நிரம்பிய முதியரும், சேனை நீள் கடல்
தரம் பெறு தலைவரும், தழுவத் தோன்றினான்—
அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினான். 6

இராவணன், முனிவர் முதலாயினாரை விலக்குதல்

'முனைவரும், தேவரும், மற்றும் உற்றுளோர்
எனைவரும், தவிர்க!' என ஏய ஆணையான்,
புனை குழல் மகளிரோடு இளைஞர்ப் போக்கினான்—
நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினான். 7

'பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர்,
தண்டல் இல் மந்திரத் தலைவர், சார்க!' எனக்
கொண்டு உடன் இருந்தனன்—கொற்ற ஆணையால்
வண்டொடு காலையும் வரவு மாற்றினான். 8

ஆன்று அமை கேள்வியர் எனினும், ஆண்தொழிற்கு
ஏன்றவர் நண்பினர் எனினும், யாரையும்,
வான் துணைச் சுற்றத்து மக்கள் தம்பியர்
போன்றவர் அல்லரை, புறத்துப் போக்கினான். 9

திசைகளில் வீரரை நிறுவுதல்

திசைதொறும் நிறுவினன், உலகு சேரினும்
பிசை தொழில் மறவரை; பிறிது என் பேசுவ—
விசையுறு பறவையும், விலங்கும், வேற்றவும்,
அசைதொழில் அஞ்சின, சித்திரத்தினே? 10

இராவணன் வகுத்த உரை

'தாழ்ச்சி இங்கு இதனின்மேல் தருவது என், இனி?
மாட்சி, ஓர் குரங்கினால் அழிந்த, மாநகர்;
ஆட்சியும், அமைவும், என் அரசும் நன்று!' எனா,
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான்: 11

6. தரம் - மேன்மை; 7. முனைவர் - முனிவர்; 8. கால் - காற்று;
9. ஆண்தொழில் - போர்த்தொழில்; 11. அமைவு - குண நிறைவு.

'சுட்டது குரங்கு; எரி சூறையாடிடக்
கெட்டது, கொடி நகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்தது, எங்கணும்;
இட்டது இவ் அரியணை இருந்தது, என் உடல். 12

'ஊறுகின்றன கிணறு உதிரம்; ஒண் நகர்
ஆறுகின்றில தழல்; அகிலும் நாவியும்
கூறு மங்கையர் நறுங் கூந்தலின் சுறு
நாறுகின்றது; நுகர்ந்திருந்தம், நாம் எலாம். 13

'மற்று இலது ஆயினும், ''மலைந்த வானரம்
இற்று, இலதாகியது'' என்னும் வார்த்தையும்
பெற்றிலம்; பிறந்திலம் என்னும் பேர் அலால்,
முற்றுவது என்? இனி, பழியின் மூழ்கினும்!' 14

படைத் தலைவர் பேச்சு

என்று அவன் இயம்பலும், எழுந்து இறைஞ்சினன்,
கன்றிய, கருங் கழல், சேனை காவலன்;
'ஒன்று உளது உணர்த்துவது; ஒருங்கு கேள்!' என,
நின்றனன், நிகழ்த்தினன், புணர்ப்பின் நெஞ்சினன்: 15

' ''வஞ்சனை மனிதரை இயற்றி, வாள் நுதல்,
பஞ்சு அன மெல் அடி, மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழில்'' என அறிவித்தேன்; அது
தஞ்சு என உணர்ந்திலை—உணரும் தன்மையோய்! 16

'கரன் முதல் வீரரைக் கொன்ற கள்வரை,
விரி குழல் உங்கை மூக்கு அரிந்த வீரரை,
பரிபவம் செய்ஞ்ஞரை, படுக்கலாத நீ,
''அரசியல் அழிந்தது'' என்று அயர்தி போலுமால். 17

'தண்டம் என்று ஒரு பொருட்கு உரிய தக்கரைக்
கண்டவர், பொறுப்பரோ, உலகம் காவலர்?
வண்டு அமர் அலங்கலாய்! வணங்கி வாழ்வரோ,
விண்டவர் உறு வலி அடக்கும் வெம்மையோர்? 18

12. பரிபவம் - அவமானம்; 14. முற்றுவது - அடைவது; 15. புணர்ப்பு - சூழ்ச்சி; 16. தஞ்சு - பற்றுக்கோடு; 18. தண்டம் - தண்டனை; விண்டவர் - பகைவர்.

'செற்றநர், எதிர் எழும் தேவர், தானவர்,
கொற்றமும் வீரமும் வலியும் கூட்டு அற,
முற்றி மூன்று உலகுக்கும் முதல்வன் ஆயது,
வெற்றியோ? பொறைகொலோ? விளம்ப வேண்டுமால். 19

'விலங்கினர் உயிர் கெட விலக்கி, மீள்கலாது,
இலங்கையின் இனிது இருந்து, இன்பம் துய்த்துமேல்,—
குலம் கெழு காவல!—குரங்கின் தங்குமோ?
உலங்கும் நம்மேல் வரின், ஒழிக்கற்பாலதோ? 20

'போயின குரங்கினைத் தொடர்ந்து போய், இவண்
ஏயினர் உயிர் குடித்து, எவ்வம் தீர்கிலம்;
வாயினும் மனத்தினும் வெறுத்து வாழ்துமேல்,
ஓயும், நம் வலி' என, உணரக் கூறினன். 21

மகோதரன் பேச்சு

மற்று அவன் பின்னுற, மகோதரப் பெயர்க்
கல் தடந் தோளினன், எரியும் கண்ணினன்
முற்றுற நோக்கினன், 'முடிவும் அன்னதால்;
கொற்றவ! கேள்' என, இனைய கூறினன்: 22

'தேவரும் அடங்கினர்; இயக்கர் சிந்தினர்;
தா வரும் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்;
யாவரும், ''இறைவர்'' என்று இறைஞ்சும் மேன்மையர்
மூவரும் ஒதுங்கினர்—உனக்கு, மொய்ம்பினோய்! 23

'ஏற்றம் என் பிறிது, இனி—எவர்க்கும் இன் உயிர்
மாற்றுறும் முறைமை சால் வலியின் மாண்பு அமை
கூற்றுவன், ''தன் உயிர் கொள்ளும் கூற்று'' எனத்
தோற்று, நின் ஏவல் தன் தலையில் சூடுமால்? 24

'வெள்ளிஅம் கிரியினை விடையின் பாகனோடு
அள்ளி, விண் தொட எடுத்து, ஆர்த்த ஆற்றலாய்!
சுள்ளியில் இருந்து உறை குரங்கின் தோள் வலிக்கு
எள்ளுதி போலும், நின் புயத்தை, எம்மொடும்? 25

'மண்ணினும், வானினும், மற்றும் முற்றும் நின்
கண்ணினும் நீங்கினர் யாவர், கண்டவர்?
நண்ண அரும் வலத்தினர் யாவர், நாயக!
எண்ணிலர் இறந்தவர் எண்ணில் ஆவரோ? 26

25. சுள்ளி - மரத்தின் சிறு கிளை; 26. எண்ணிலர் - மதியாதவர்.

'இடுக்கு இவண் இயம்புவது இல்லை; ஈண்டு எனை
விடுக்குவையாம்எனின், குரங்கை வேர்அறுத்து,
ஒடுக்க அரு மனிதரை உயிர் உண்டு, உன் பகை
முடிக்குவென் யான்' என முடியக் கூறினன். 27

வச்சிரதந்தன் கூற்று

இச் சிரத்தவன் உரைத்து இறுக்கும் ஏல்வையின்,
வச்சிரத்துஎயிற்றவன் வல்லை கூறினன்,
அச் சிரத்தைக்கு ஒரு பொருள் இன்று, ஆயினும்,
பச்சிரத்தம் பொழி பருதிக் கண்ணினன். 28

' ''போய் இனி, மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின், கைகளால்; தின்மின்'' என்று எமை
ஏயினை இருக்குவது அன்றி, என், இனி
ஆயும் இது? எம்வயின் அயிர்ப்பு உண்டாம்கொலோ? 29

'எவ் உலகத்தும் நின் ஏவல் கேட்கிலாத்
தெவ்வினை அறுத்து, உனக்கு அடிமை செய்த யான்
தவ்வின பணி உளது ஆகத்தான்கொலோ,
இவ் வினை என்வயின் ஈகலாது?' என்றான். 30

துன்முகன் கூற்று

'நில், நில்' என்று, அவன்தனை விலக்கி, 'நீ இவை
என் முனும் எளியர்போல் இருத்தியோ?' என,
மன் முகம் நோக்கினன், வணங்கி, வன்மையால்,
துன்முகன் என்பவன், இனைய சொல்லினன்: 31

'திக்கயம் வலி இல; தேவர் மெல்லியர்;
முக்கணன் கயிலையும் முரண் இன்றுயது;
மக்களும் குரங்குமே வலியர்ஆம் எனின்,
அக்கட, இராவணற்கு அமைந்த ஆற்றலே! 32

"பொலிவது, பொதுவுற எண்ணும் புன் தொழில்
மெலியவர் கடன்; நமக்கு இறுதி வேண்டுவோர்
வலியினர்எனில், அவர்க்கு ஒதுங்கி வாழ்துமோ—
ஒலி கழல் ஒருவ!—நம் உயிருக்கு அன்பினல்? 33

27. இடுக்கு - துன்பம்; 28. சிரத்தவன் - தலைமை வாய்ந்தவன், மகோதரன்; சிரத்தை - உறுதிமொழி; பச்சிரத்தம் - புதிய ரத்தம்; 29. அயிர்ப்பு - ஐயம்; 30. தவ்வின - தவறிய; 32. அக்கட - அதிசயம் என்று பொருள்படும் ஒரு திசைச்சொல்; 33. பொலிவது - வருங்கால நிகழ்ச்சி; பொது - நடுநிலை.

'கண்ணிய மந்திரக் கருமம் காவல!—
மண் இயல் மனிசரும், குரங்கும், மற்றவும்,
உண்ணிய அமைந்தன; உணவுக்கு உட்குமேல்,
திண்ணிய அரக்கரின் தீரர் யாவரே? 34

'எரி உற மடுப்பதும், எதிர்ந்துளோர் படப்
பொரு தொழில் யாவையும் புரிந்து, போவதும்
வருவதும், குரங்கு; நம் வாழ்க்கை ஊர் கடந்து,
அரிதுகொல், இராக்கதர்க்கு ஆழி நீந்துதல்? 35

'வந்து, நம் இருக்கையும், அரணும், வன்மையும்,
வெந் தொழில் தானையின் விரிவும், வீரமும்,
சிந்தையின் உணர்பவர் யாவரே சிலர்,
உய்ந்து தம் உயிர்கொடு இவ் உலகத்துள் உளார்? 36

'ஒல்வது நினையினும், உறுதி ஓரினும்,
வெல்வது விரும்பினும், வினையம் வேண்டினும்,
செல்வது அங்கு; அவருழைச் சென்று, தீர்ந்து அறக்
கொல்வது கருமம்' என்று உணரக் கூறினன். 37

மாபெரும்பக்கன் பேச்சு

காவலன் கண் எதிர், அவனைக் கை கவித்து,
'யாவது உண்டு, இனி நமக்கு?' என்னச் சொல்லினன்;
'கோவமும் வன்மையும் குரங்குக்கே' எனு,—
மாபெரும்பக்கன் என்று ஒருவன் வன்மையான். 38

'முந்தினர், முரண் இலர் சிலவர், மொய் அமர்
நந்தினர் தம்மொடு நனி நடந்ததோ?
வந்து ஒரு குரங்கு இடு தீயின் வன்மையால்,
வெந்ததோ, இலங்கையோடு அரக்கர் வெம்மையும்? 39

'மானுடர் ஏவுவார்; குரங்கு வந்து, இவ் ஊர்-
தான் எரி மடுப்பது; நிருதர் தானையே,
ஆனவர் அது குறித்து அழுங்குவார்எனின்,
மேல் நிகழ்தக்கன விளம்ப வேண்டுமோ? 40

'நின்று நின்று, இவை சில விளம்ப நேர்கிலென்;
நன்று இனி நரரொடு குரங்கை நாம் அறக்
கொன்று தின்றல்லது, ஓர் எண்ணம் கூடுமோ?'
என்றனன்—இகல் குறித்து எரியும் கண்ணினன். 41

34. உண்ணிய - உண்ணுதற்கு; 37. வினையம் - சூழ்ச்சி; 39. நடந் ததோ? - கழிந்ததோ?.

பிசாசன் முதலியோர் கருத்துரை

'திசாதிசை போதும் நாம், அரசன் செய் வினை
உசாவினன், உட்கினன்; ஒழிதும் வாழ்வு' என்றான்—
பிசாசன் என்று ஒரு பெயர் பெற்ற பெய் கழல்
நிசாசரன், உருப் புணர் நெருப்பின் நீர்மையான். 42

'ஆரியன் தன்மை ஈதுஆயின், ஆய்வுறு
காரியம் ஈதுஎனின், கண்ட ஆற்றினல்,
சீரியர் மனிதரே; சிறியம் யாம்' என,
சூரியன்பகைஞன் என்று ஒருவன், சொல்லினன். 43

'ஆள்வினை நிலைமையும், அரக்கர் ஆற்றலும்,
தாழ் வினை இதனின்மேல் பகரத் தக்கதோ?
சூழ் வினை மனிதரால் தோன்றிற்றும்!' என,
வேள்வியின் பகைஞனும் உரைத்து, வெள்கினன். 44

'தொகை நிலைக் குரங்குடை மனிதர்ச் சொல்லி என்?
சிகை நிறச் சூலிதன் திறத்துச் செல்லினும்,
நகை உடைத்தாம்; அமர் செய்தல் நன்று' என,
புகைநிறக்கண்ணனும் புகன்று, பொங்கினன். 45

மற்று அவன் பின்னுற, மற்றையோர்களும்,—
'இற்றிதுவே நலம்; எண்ணம் மற்று இல்' என்று,
உற்றன உற்றன உரைப்பதுஆயினர்—
புற்று உறை அரவு எனப் புழுங்கு நெஞ்சினர். 46

கும்பகருணன் கூற்று

வெம்பு இகல் அரக்கரை விலக்கி, 'வினை தேரா
நம்பியர் இருக்க!' என, நாயகனை முன்னா,
'எம்பி எனகிற்கில், உரைசெய்வல் இதம்' என்னா,
கும்பகருணப் பெயரினன் இவை குறித்தான்: 47

'நீ அயன் முதல் குலம் இதற்கு ஒருவன் நின்றாய்;
ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து, அறிவு அமைந்தாய்;
தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்;
ஏயின உறத் தகைய இத்துணையவேயோ? 48

43. கண்ட ஆறு - நாம் ஆராய்ந்து பார்த்த அளவு; 47. இதம் - நன்மை;
48. ஏயின - விதியினல் ஏவப்பட்டன; உறத்தகைய - விளையக்கூடியன.

'ஓவியம் அமைந்த நகர் தீ உண, உளைந்தாய்,
''கோ-இயல் அழிந்தது'' என; வேறு ஒரு குலத்தோன்
தேவியை நயந்து, சிறை வைத்த செயல் நன்றோ?
பாவியர் உறும் பழி இதின் பழியும் உண்டோ? 49

'''நல் நகர் அழிந்தது'' என நாணினை; நயத்தால்
உன் உயிர் எனத்தகைய தேவியர்கள் உன்மேல்
இன் நகை தரத் தர, ஒருத்தன் மனை உற்றாள்,
பொன் அடி தொழத் தொழ, மறுத்தல் புகழ் போலாம்? 50

'என்று ஒருவன் இல் உறை தவத்தியை, இரங்காய்,
வன் தொழிலினாய், மறை துறந்து, சிறை வைத்தாய்,
அன்று ஒழிவதாயின, அரக்கர் புகழ்; ஐயா!
புன் தொழிலினால் இசை பொறுத்தல் புலமைத்தோ? 51

'ஆசு இல் பர தாரம்அவை அம் சிறை அடைப்பேம்;
மாசு இல் புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்று, நம கொற்றம்! 52

'சிட்டர் செயல் செய்திலை; குலச் சிறுமை செய்தாய்;
மட்டு அவிழ் மலர்க் குழலினாளை இனி, மன்ன!
விட்டிடுதுமேல், எளியம் ஆதும்; அவர் வெல்ல,
பட்டிடுதுமேல், அதுவும் நன்று; பழி அன்றால். 53

'மரன் படர் வனத்து ஒருவனே சிலை வலத்தால்,
கரன் படை படுத்து, அவனை வென்று, களை கட்டான்;
நிரம்பிடுவது அன்று, அதுவும்; நின்றது, இனி நம்பால்
உரம் படுவதே; இதனின்மேல் உறுதி உண்டோ? 54

'வென்றிடுவர் மானுடவரேனும், அவர் தம்மேல்
நின்று, இடைவிடாது நெறி சென்று, உற நெருக்கித்
தின்றிடுதல் செய்கிலம்எனின், செறுநரோடும்
ஒன்றிடுவர் தேவர்; உலகு ஏழும் உடன் ஒன்று ஆம். 55

'ஊறு படை ஊறுவதன் முன்னம், ஒரு நாளே,
ஏறு கடல் ஏறி, நரர் வானரரை எல்லாம்
வேறு பெயராதவகை, வேரொடும் அடங்க
நூறுவதுவே கருமம்' என்பது நுவன்றான். 56

50. நயத்தால் - விருப்பத்தோடு; மறுத்தல் - அவள் மறுத்தல்; 51. பொறுத்தல் - அடைய நினைத்தல்; 52. கூசுவது - அஞ்சுவது; 53. சிட்டர் - பெரியோர்; 54. உறுதி - நன்மை; இது ஏளனம் புரியும் குறிப்புமொழி.

கும்பகருணன் கூற்றிற்கு இராவணன் இசைதல்

'நன்று உரை செய்தாய்!—குமர!—நான் அது நினைந்தேன்;
ஒன்றும் இனி ஆய்தல் பழுது; ஒன்னலரை எல்லாம்
கொன்று பெயர்வோம்; நமர் கொடிப் படையை எல்லாம்,
''இன்று எழுக'' என்க!' என இராவணன் இசைத்தான். 57

இந்திரசித்து, தன் தந்தையைத் தடுத்து, வென்று வருவேன் எனல்

என்று அவன் இயம்பியிடும் எல்லையினில், 'வல்லே
சென்று படையோடு, சிறு மானுடர் சினப் போர்
வென்று பெயர்வாய், அரச! நீ கொல்? என வீரம்
நன்று பெரிது!' என்று மகன் நக்கு, இவை நவின்றான்: 58

'ஈசன் அருள் செய்தனவும், ஏடு அவிழ் மலர்ப் பேர்
ஆசனம் உவந்தவன் அளித்தனவும், ஆய
பாசம் முதல் வெம் படை சுமந்து, பலர் நின்றார்;
ஏச உழல்வேன் ஒருவன் யானும் உளென் அன்றோ? 59

'முற்றும் முதலாய் உலகம் மூன்றும், எதிர் தோன்றிச்
செற்ற முதலோரொடு செறுத்தது ஓர் திறத்தும்,
வெற்றி உனது ஆக விளையாதுஒழியின், என்னைப்
பெற்றும் இலை; யான் நெறி பிறந்தும் இலென்' என்றான். 60

'குரங்கு பட, மேதினி குறைத்தலை நடப் போர்
அரங்கு பட, மானுடர் அலந்தலை பட, பேர்
இரங்கு படர் சீதை பட, இன்று இருவர் நின்றார்
சிரம் குவடு எனக் கொணர்தல் காணுதி—சினத்தோய்! 61

'சொல்லிடை கழிக்கிலை, சுருங்கிய குரங்கு என்
கல்லிடை கிழிக்கும் உருமின் கடுமை காணும்
வில்லிடை கிழித்த மிடல் வாளி வெருவி, தம்
பல்லிடை, கிழித்து இரிவ கண்டு, பயன் உய்ப்பாய். 62

'யானை இலர்; தேர் புரவி யாதும் இலர்; ஏவும்
தானை இலர்; நின்ற தவம் ஒன்றும் இலர்; தாமோ,
கூனல் முதுகின் சிறு குரங்கு கொடு வெல்வார்?
ஆனவரும் மானுடர்; நம் ஆண்மை இனிது அன்றோ? 63

'நீரும், நிலனும், நெடிய காலும், நிமிர் வானும்,
பேர் உலகு யாவும், ஒரு நாள் புடைபெயர்த்தே,
யாரும் ஒழியாமை, நரர் வானரரை எல்லாம்,
வேரும் ஒழியாதவகை வென்று அலது, மீளேன்.' 64

61. படர் - துன்பம்.

என்று, அடி இறைஞ்சினன் எழுந்து, 'விடை ஈமோ,
வன் திறலினாய்!' எனலும், வாள் எயிறு வாயில்
தின்றனன் முனிந்து, நனி தீவினையை எல்லாம்
வென்றவரின் நன்று உணரும் வீடணன் விளம்பும்: 65

இந்திரசித்து கூறியதைக் கண்டித்து, வீடணன் விளம்புதல்

'நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை
போலுமால்!—உறு பொருள் புகலும் பூட்சியோய்!
காலம், மேல் விளை பொருள், உணரும் கற்பு இலாப்
பால!—நீ இனையன பகரற்பாலையோ? 66

'கருத்து இலான், கண் இலான், ஒருத்தன் கைக்கொடு
திருத்து வான் சித்திரம் அனைய செப்புவாய்;
விருத்த மேதகையவர், வினைஞர், மந்திரத்து
இருத்தியோ?—இளமையால் முறைமை எண்ணலாய்! 67

'தூயவர் முறைமையே தொடங்கும் தொன்மையோர்
ஆயவர் நிற்க; மற்று அவுணர் ஆதியாம்
தீயவர், அறத்தினால் தேவர் ஆயது
மாயமோ? வஞ்சமோ? வன்மையேகொலோ? 68

'அறம் துறந்து, அமரரை வென்ற ஆண்தொழில்-
திறம் தெரிந்திடின், அதுதானும் செய் தவம்
நிறம் திறம்பாவகை இயற்றும் நீதியால்,
மறம் துறந்து, அவர் தரும் வரத்தின் வன்மையால். 69

'மூவரை வென்று, மூன்று உலகும் முற்றுறக்
காவலில்நின்று, தம் களிப்புக் கைம்மிக,
வீவது முடிவு என வீந்தது அல்லது,
தேவரை வென்றவர் யாவர், தீமையோர்? 70

'வினைகளை வென்று, மேல் வீடு கண்டவர்
எனைவர் என்று இயம்புகேன், எவ்வம் தீர்க்கையான்?
முனைவரும் அமரரும், முன்னும் பின்னரும்,
அனையவர் திறத்து உளர் யாவர், ஆற்றினர்? 71

'பிள்ளைமை விளம்பினை, பேதை நீ' என
ஒள்ளிய புதல்வனை உரப்பி, 'என் உரை
எள்ளலையாம்எனின், இயம்பல்ஆற்றுவென்,
தெள்ளிய பொருள்' என அரசற் செப்பினான்: 72

66. பூட்சி - மன உறுதி; 67. விருத்தம் - முதுமை; 69. நிறம் - பெருமை; 71. எனைவர் - எவ்வளவினர்.

'எந்தை நீ; யாயும் நீ; எம்முன் நீ; தவ
வந்தனைத் தெய்வம் நீ; மற்றும் முற்றும் நீ;
''இந்திரப் பெரும் பதம் இழக்கின்றாய்'' என
நொந்தனென் ஆதலின், நுவல்வதுஆயினேன். 73

'கற்றுறு மாட்சி என்கண் இன்றாயினும்,
உற்று உறு பொருள் தெரிந்து உணர்தல் ஒயினும்,
சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும்,
முற்றுறக் கேட்ட பின், முனிதி—மொய்ம்பினோய்! 74

'கோநகர் முழுவதும், நினது கொற்றமும்,
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால், வெந்தது அல்லது, ''ஓர்
வானரம் சுட்டது'' என்று உணர்தல் மாட்சியோ? 75

'எண்பொருட்டு ஒன்றி நின்று, எவரும் எண்ணினால்,
விண்பொருட்டு ஒன்றிய உயர்வு மீட்சியும்,
பெண்பொருட்டு அன்றியும், பிறிது உண்டாம்எனின்,
மண்பொருட்டு அன்றியும், வரவும் வல்லவோ?* 76

'''மீனுடை நெடுங் கடல் இலங்கை வேந்தன்முன்
தானுடை நெடுந் தவம் தளர்ந்து சாய்வது, ஓர்
மானுட மடந்தையால்'' என்னும் வாய்மொழி—
தேனுடை அலங்கலாய்!—இன்று தீர்ந்ததோ? 77

'ஏறிய நெடுந் தவம் இழைத்த எல்லை நாள்,
ஆறிய பெருங் குணத்து அறிவன் ஆணையால்,
கூறிய மனிதர்பால் கொற்றம் கொள்ளலை;
வேறு இனி அவர்வயின் வென்றி யாவதோ? 78

'ஏயது பிறிது உணர்ந்து இயம்ப வேண்டுமோ?
நீ ஒரு தனி உலகு ஏழும் நீந்தினாய்;
ஆயிரம் தோளவற்கு ஆற்றல் தோற்றனை
மேயினை ஆம்; இனி, விளம்ப வேண்டுமோ? 79

'மேல் உயர் கயிலையை எடுத்த மேலைநாள்,
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்,
கூல வான் குரங்கினால் குறுகும், கோள்; அது
வாலிபால் கண்டனம்—வரம்பு இல் ஆற்றலாய்! 80

74. சோரினும் - தவறுபடுமாயினும்; 75. தம்மனை - தாய்; 76. எண் பொருட்டு - (யாரும்) ஆராய்தற்கு; விண்பொருட்டு ஒன்றிய - வானளாவ ஓங்கிய; 77. வாய்மொழி - தவறாத சாபமொழி; 78. அறிவன் - கடவுள், பிரமன்; 79. ஆயிரம் தோளன் - கார்த்தவீரியன்; 80. கோள் - தீங்கு.

'தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
''நோய் உனக்கு யான்'' என நுவன்றுளாள் அவள்;
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள். 81

'சம்பரப் பெயருடைத் தானவர்க்கு
இறைவனைத் தனு வலத்தால்,
அம்பரத்து உம்பர் புக்கு, அமரிடைத்
தலை துமித்து, அமரர் உய்ய,
உம்பருக்கு இறைவனுக்கு அரசு அளித்து
உதவினான்—ஒருவன், நேமி
இம்பரில் பணி செய, தசரதப்
பெயரினான், இசை வளர்த்தான்; 82

'மிடல் படைத்து, ஒருவனாய், அமரர் கோன்
விடையதா வெரிநின் மேலாய்,
உடல் படைத்து அவுணர் ஆயினர்
எலாம் மடிய, வாள் உருவினானும்,
அடல் படைத்து, அவனியை,
''பெரு வளம் தருக!'' என்று அருளினானும்,
கடல் படைத்தவரொடும், கங்கை
தந்தவன் வழிக் கடவுள் மன்னன், 83

'பொய் உரைத்து உலகினில் சினவினார்
குலம் அறப் பொருது, தன் வேல்
நெய் உரைத்து, உறையில் இட்டு,
அறம் வளர்த்து, ஒருவனாய் நெறியில் நின்றான்,
மை உரைத்து உலவு கண் மனைவிபால்
வரம் அளித்து, அவை மறாதே,
மெய் உரைத்து, உயிர் கொடுத்து,
அமரரும் பெறுகிலா வீடு பெற்றான். 84

81. தீயிடைக் குளித்தவள் வேகவதி; இராவணன் அவள் அழகில் ஈடுபட்டு வலிதில் தீண்டினான்; அதனால் அவள் தீயில் வீழ்ந்தாள்; 82. நேமி - ஆணை; 83. அவுணர் மடிய வாள் உருவினான் ககுத்தனும், அவனியை வளம் தருக என அருளினான் பிருதுவும், கடல் படைத்தவர் சகரரும், கங்கை தந்தவன் பகீரதனும் ஆவர்; உடல் - மாறுபாடு.

'அனையவன் சிறுவர், எம் பெரும!
உன் பகைஞரானவரை அம்மா
இனையர் என்று உணர்தியேல்,
இருவரும் ஒருவரும் எதிர் இலாதார்;
முனைவரும் அமரரும், முழுது
உணர்ந்தவர்களும், முற்றும் மற்றும்,
நினைவு அருந் தகையர்; நம் வினையினால்
மனிதர் ஆய், எளிது நின்றார். 85

'கோசிகப் பெயருடைக் குல முனித் தலைவன்,
''அக் குளிர் மலர்ப் பேர்
ஆசனத்தவனொடு எவ் உலகமும்
தருவென்'' என்று அமையலுற்றான்,
ஈசனின் பெறு படைக்கலம்,
இமைப்பு அளவில் எவ் உலகில் யாவும்
நாசம் உற்றிட நடப்பன,
கொடுத்தன பிடித்துடையர்—நம்ப! 86

'எறும் வலிப் பொரு இல் தோள் அவுணரோடு
அமரர், பண்டு, இகல் செய் காலத்து,
உறு திறல் கலுழன்மேல் ஒருவன் நின்று
அமர் செய்தானுடைய வில்லும்,
தெறு சினத்தவர்கள் முப்புரம்
நெருப்புற உருத்து எய்த அம்பும்,
குறுமுனிப் பெயரினான், நிறை தவர்க்கு
இறை, தரக் கொண்டு நின்றார். 87

'நாவினால் உலகை நக்கிடுவ; திக்கு
அளவிடற்கு உரிய; நாளும்,
மேவு தீ விடம் உயிர்ப்பன; வெயில்
பொழி எயிற்றன; அவ் வீரர்
ஆவம்ஆம் அரிய புற்று உறைவ;—
முற்று அறிவருக்கு அழிவு செய்யும்
பாவ காரியர் உயிர்ப் பதம் அலாது,
இரை பெறா—பகழி நாகம். 88

86. கோசிகன் - விசுவாமித்திரன்; ஈசன் - சிவன்; நம்பன் - விரும்பத் தக்கவன்; 87. குறுமுனி - அகத்திய முனிவன்; 88. ஆவம் - அம்புக்கூடு; பதம் - உணவு.

'பேருமோ ஒருவரால், அவர்களால்
அல்லது? இவ் பெரியவேனும்,
நாரும் மூரியும் அறு; நம்முடைச்
சிலைகள்போல் நலிவ ஆமோ?
தாருவோ, வேணுவோ, தாணுவாய்
உலகினைத் தழுவி நிற்கும்
மேருவோ, மால் வரைக் குலம் எலாம்
அல்லவோ, வில்லும் மன்னோ? 89

'உரம் ஒருங்கியது, நீர் கடையும்
வாலியது மார்பு; உலகை மூடும்
மரம் ஒருங்கிய; கராதியர், விராதனது
மால் வரைகள் மானும்
சிரம் ஒருங்கின; இனிச் செரு
ஒருங்கின—இனி, தேவர் என்பார்
பரம் ஒருங்குவது அலால், பிறிது
ஒருங்காதது ஓர் பகையும் உண்டோ? 90

'சொல் வரம் பெரிய மா முனிவர்
என்பவர்கள், தம் துணை இலாதார்,
''எல் வரம் பெரிய தோள் இருவரே
தமரொடும் உலகம் யாவும்
வெல்வர்'' என்பது தெரிந்து, எண்ணினர்,
''நிருதர் வேர் முதலும் வீயக்
கொல்வர்'' என்று உணர்தலால், அவரை
வந்து அணைவது ஓர் இயைபு கொண்டார். 91

'துஞ்சுகின்றிலர்களால், இரவும் நன்
பகலும், நிற் சொல்ல ஒல்கி,
நெஞ்சு நின்று அயரும் இந் நிருதர்;
''பேர் சனகி ஆம் நெடியது ஆய
நஞ்சு தின்றனர்கள்தாம் நண்ணுவார்
நரகம்'' என்று எண்ணி, நம்மை
அஞ்சுகின்றிலர்கள்—நின் அருள் அலால்,
சரண் இலா அமரர் அம்மா! 92

89. நார் - நாணி; மூரி - வலிமை; தாரு - தரு, மரம்; வேணு - மூங்கில்; தாணு - தூண்; 90. பரம் - சுமை, தொகுதி.

'புகல் மதித்து உணர்கிலாமையின், நமக்கு
எளிமை சால் பொறைமை கூர,
நகல் மதிக்கில மறுப் பொலிய
வாள் ஒளி இழந்து, உதயம் நண்ணும்
பகல் மதிக்கு உவமை ஆம் விபுதராம்,
இரவு கால் பருவ நாளின்
அகல் மதிக்கு உவமை ஆயின
தபோதனர் உளார் வதனம் அம்மா? 93

'சிந்து முந்து உலகினுக்கு இறுதி புக்கு,
உரு ஒளித்து, உலைதல் செய்வார்,—
இந்துவின் திரு முகத்து இறைவி
நம் உறையுளாள் என்றலோடும்,—
அந்தகன் முதலினோர், அமரரும்
முனிவரும் பிறரும், அஞ்சார்
வந்து, தம் உலகமும் வானமும்
கண்டு உவந்து, அகல்வர் மன்னோ. 94

'சொலத் தகாத் துன்னிமித்தங்கள்
எங்கணும் வரத் தொடர்வ; ஒன்னார்,
வெலத் தகா அமரரும் அவுணரும்,
செருவில் விட்டன விடாத
குலத்த கால் வய நெடுங் குதிரையும்,
அதிர் குரல் குன்றும், இன்று
வலத்த கால் முந்துறத் தந்து, நம்
மனையிடைப் புகுவ மன்னோ. 95

'வாயினும் பல்லினும் புனல் வறந்து
உலறினர், நிருதர்; வைகும்
பேயினும் பெரிய பேம் நரிகளும்
புரிதரும்; பிறவும் எண்ணின்,
கோயிலும் நகரமும், மட நலார்
குழலும், நம் குஞ்சியோடும்,
தீயின் வெந்திடுமலால் ஒரு
நிமித்தம் பெறும் திறனும் உண்டோ? 96

93. புகல் - புகலிடம்; மதித்து - ஆராய்ந்து; நகல் - மகிழ்ச்சி; 94. சிந்து - கடல்; 95. விடாத - நீங்காத; குலத்த கால் - சிறந்த கால்; வலத்த கால் - வலக்கால்; 96. பேம் - அச்சம்; புரிதரும் - பல்கும், மிகும்.

'சிந்த மா நாகரைச் செரு முருக்கிய
கரன், திரிசிரத்தோன்,
முந்த மான் ஆயினன், வாலியே
முதலினோர் முடிவு கண்டால்,
அந்த மான் இடவனோடு, ஆழி மா
வலவனும், பிறரும், ஐயா!
இந்த மானிடவராம் இருவரோடு
எண்ணல் ஆம் ஒருவர் யாரே? 97

'இன்னம் ஒன்று உரை செய்தால்;
இனிது கேள், எம்பிரான்! இருவர் ஆய
அன்னவர் தம்மொடும் வானரத்
தலைவராய் அணுகி நின்றார்,
மன்னும் நம் பகைஞர் ஆம்
வானுளோர்; அவரொடும் மாறுகோடல்
கன்மம் அன்று; இது நமக்கு உறுதி
என்று உணர்தலும், கருமம் அன்றால். 98

'இசையும் செல்வமும் உயர் குலத்து இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொள, கிளையொடும் மடியாது,
அசைவு இல் கற்பின் அவ் அணங்கை விட்டருளுதி; இதன் மேல்
விசையம் இல்' எனச் சொல்லினன்—அறிஞரின் மிக்கான். 99

இராவணன் சினந்து நக்கு. வீடணனைக் கடிந்து பேசுதல்

கேட்ட ஆண்தகை கரத்தொடு கரதலம் கிடைப்பப்
பூட்டி, வாய்தொறும் பிறைக் குலம் வெண் நிலாப் பொழிய,
வாள் தடம் தவழ் ஆரமும் வயங்கு ஒளி மார்பும்
தோள் தடங்களும் குலுங்க, நக்கு, இவை இவை சொன்னான்:

' ''இச்சை அல்லன உறுதிகள் இசைக்குவென்'' என்றாய்;
பிச்சர் சொல்லுவ சொல்லினை; என் பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவர் என்றனை; குறித்தது,
அச்சமோ? அவர்க்கு அன்பினோ? யாவதோ?—ஐயா! 101

97. சிந்த - சிதறும்படி; மான் இடவன் - சிவன்; 98. கன்மம் - செய்யத்தக்கது; இது - இவ்வாறு மாறுகொள்ளுதல்; 100. கிடைப்ப - பொருந்த; வாள் தடம் - வாளால் உளவான விழுப்புண் தழும்பு; 101. இச்சை அல்லன - விரும்பத்தகாதன; கொச்சை - இழிவு.

'''ஈங்கு மானுடப் பசுக்களுக்கு, இலை வரம்'' என்றாய்;
தீங்கு சொல்லினை; திசைகளை உலகொடும் செருக்கால்
தாங்கும் யானையைத் தள்ளி, அத் தழல் நிறத்தவனை
ஓங்கல் ஒன்றொடும் எடுக்கவும் வரம் கொண்டது உண்டோ?

'மனக்கொடு அன்றியும், வறியன வழங்கினை; வானோர்
சினக் கொடும் படை செருக்களத்து என்னை என் செய்த?
எனக்கு நிற்க; மற்று, என்னொடு இங்கு ஒரு வயிற்று உதித்த
உனக்கு மானிடர் வலியர் ஆம் தகைமையும் உளதோ? 103

'சொல்லும் மாற்றங்கள் தெரிந்திலை; பன் முறை தோற்று,
வெல்லும் ஆற்றலும் ஒரு முறை பெற இலை; விண்ணைக்
கல்லும் ஆற்றல் என் கிளையையும் என்னையும் களத்தில்
கொல்லும் மாற்றலர் உளர் எனக் கோடலும் கொண்டாய்.

'தேவரின் பெற்ற வரத்தினது என் பெருஞ் செருக்கேல்,
மூவரில் பெற்றம் உடையவன்தன்னொடும், முழுதும்
காவலின் பெற்ற திகிரியான்தன்னொடும், கடந்தது
ஏவரின் பெற்ற வரத்தினால்? இயம்புதி—இளையோய்! 105

'''நந்தி சாபத்தின் நமை அடும், குரங்கு'' எனின், நம்பால்
வந்த சாபங்கள் எனைப் பல; அவை செய்த வலி என்?
இந்திராதியர், சித்தர்கள், இயக்கர், நம் இறுதி
சிந்தியாதவர் யார்? அவை நம்மை என் செய்த? 106

'அரங்கில் ஆடுவார்க்கு அன்பு பூண்டுடை வரம் அறியேன்;
இரங்கி யான் நிற்ப, என் வலி அவன்வயின் எய்த
வரம் கொள் வாலிபால் தோற்றனென்; மற்றும் வேறு உள்ள
குரங்கு எலாம் எனை வெல்லும் என்று எங்ஙனம் கோடி? 107

'நீலகண்டனும் நேமியும் நேர் நின்று நேரின்,
ஏலும் அன்னவருடை வலி அவன்வயின் எய்தும்;
சாலும் நல் வரம் நினைந்து, அவன் எதிர் செலல் தவிர்ந்து,
வாலிதன்னை, அம் மனிதனும், மறைந்து நின்று எய்தான். 108

'ஊன வில் இறுத்து, ஒட்டை மா மரத்துள் அம்பு ஓட்டி,
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து, உயர் வனம் குறுகி,
யான் இழைத்திட இல் இழந்து, இன் உயிர் சுமக்கும்
மானுடன் வலி, நீ அலாது, யார் உளர் மதித்தார்?' 109

108. ஏலும் - எதிர்க்கும்.

வீடணன், மேலும் உறுதிமொழி உரைத்தல்

என்று தன் உரை இழித்து, ' நீ உணர்விலி' என்ன,
'நன்று, போதும் நாம்; எழுக!' எனும் அரக்கனை நணுகா,
'ஒன்று கேள், இனம் உறுதி' என்று, அன்பினன், ஒழியான்,
துன்று தாரவன், பின்னரும், இனையன சொன்னான்: 110

'தன்னின் முன்னிய பொருள் இலா ஒரு தனித் தலைவன்,
அன்ன மானுடன் ஆகி வந்து, அவதரித்து அமைந்தான்,
சொன்ன நம்பொருட்டு, உம்பர்தம் சூழ்ச்சியின் துணிவால்;
இன்னம் ஏகுதி போலும்' என்று அடி தொழுது இரந்தான்.

இராவணன் மறுமொழி

அச் சொல் கேட்டு, 'அவன் ஆழியான் என்றனை; ஆயின்,
கொச்சைத் துன்மதி எத்தனை போரிடைக் குறைந்தான்?
இச்சைக்கு ஏற்றன, யான் செய்த இத்தனை காலம்,
முச்சு அற்றான்கொல், அம் முழுமுதலோன்?' என முனிந்தான்.

'இந்திரன்தனை இருஞ் சிறை இட்ட நாள், இமையோர்
தந்தி கோடு இறத் தகர்த்த நாள், தன்னை யான் முன்னம்
வந்த போர்தொறும் துரந்த நாள், வானவர் உலகைச்
சிந்த வென்ற நாள், சிறியன்கொல், நீ சொன்ன தேவன்? 113

'சிவனும், நான்முகத்து ஒருவனும், திரு நெடு மாலாம்
அவனும், மற்று உள அமரரும், உடன் உறைந்து அடங்க,
புவனம் மூன்றும் நான் ஆண்டுளது, ஆண்ட அப் பொரு இல்
உவன் இலாமையினோ? வலி ஒதுங்கியோ? உரையாய்! 114

'ஆயிரம் பெருந் தோள்களும், அத் துணைத் தலையும்,
மா இரும் புவி உள்ளடி அடக்குறும் வடிவும்,
தீய, ''சாலவும் சிறிது'' என நினைந்து, நாம் தின்னும்
ஓயும் மானுட உருவு கொண்டனன்கொலாம்—உரவோன்? 115

'பித்தன் ஆகிய ஈசனும் அரியும், என் பெயர் கேட்டு,
எய்த்த சிந்தையர், ஏகுழி ஏகுழி எல்லாம்,
கைத்த ஏற்றினும் கடவிய புள்ளினும், முதுகில்
தைத்த வாளிகள் நின்று உள, குன்றின் வீழ் தடித்தின்.* 116

111. முன்னிய - சிறந்த; 112. குறைந்தான் - தோற்றான்; முச்சு - மூச்சு;
116. கைத்த ஏறு - செலுத்திய காளை; தடித்து - இடி.

'வெஞ் சினம் தரு போரின் எம்முடன் எழ வேண்டா;
இஞ்சி மா நகர் இடம் உடைத்து; ஈண்டு இனிது இருத்தி;
அஞ்சல், அஞ்சல்!' என்று, அருகு இருந்தவர் முகம் நோக்கி,
நஞ்சின் வெய்யவன் கை எறிந்து, உரும் என நக்கான். 117

வீடணன், பின்னும் இரணியன் சரிதம் கூறல்

பின்னும் வீடணன், 'ஐய! நின் தரம் அலாப் பெரியோர்,
முன்னை நாள், இவன் முனிந்திடக் கிளையொடும் முடிந்தார்;
இன்னம் உண்டு, யான் இயம்புவது; இரணியன்என்பான்-
தன்னை உள்ளவா கேட்டி' என்று உரைசெயச் சமைந்தான்:

3 இரணியன் வதைப் படலம்

இரணியன் இயல்பும் ஏற்றமும்

'வேதம் கண்ணிய பொருள் எலாம் விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரம் எலாம் தரக் கொண்டு போந்தான்;
காதும் கண்ணுதல், மலர் அயன், கடைமுறை காணப்
பூதம் கண்ணிய வலி எலாம் ஒரு தனி பொறுத்தான். 1

'எற்றை நாளினும் உளன் எனும் இறைவனும், அயனும்,
கற்றை அம் சடைக் கடவுளும், காத்து, அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ? அதன் புறத்து உலவா
மற்றை அண்டத்தும், தன் பெயரே சொல, வாழ்ந்தான். 2

'பாழி வன் தடந் திசை சுமந்து ஓங்கிய பணைக் கைப்
பூழை வன் கரி இரண்டு இரு கைக்கொடு பொருத்தும்;
ஆழம் காணுதற்கு அரியவாய், அகன்ற பேர் ஆழி
ஏழும் தன் இரு தாள் அளவு எனக் கடந்து ஏறும். 3

'வண்டல் தெண் திரை ஆற்று நீர் சில என்று மருவான்;
கொண்டல் கொண்ட நீர் குளிர்ப்பு இல என்று அவை குடையான்;
பண்டைத் தெண் திரைப் பரவை நீர் உவர் என்று படியான்;
அண்டத்தைப் பொதுத்து, அப் புறத்து அப்பினுள் ஆடும். 4

117. இஞ்சி - மதில்; கை எறிதல் - கையொடு கை தாக்கல்.

3: 1. கண்ணிய - கருதிய, குறித்த; கடைமுறை - இறுதியாகிய எல்லை; 2. உலவா - எண்ணில் அடங்காத; 3. பூழை - உள்துளை; 4. சில - சிறிது; பொதுத்து - துளைத்து, பொத்தல் செய்து.

‘மரபின், மா பெரும்புறக்கடல் மஞ்சனம் மருவி,
அரவின் நாட்டிடை மகளிரோடு இன் அமுது அருந்தி,
பரவும் இந்திரன் பதியிடைப் பகற் பொழுது அகற்றி,
இரவின் ஓலக்கம் நான்முகன் உலகத்துள் இருக்கும். 5

‘சாரும் மானத்தில், சந்திரன் தனிப் பதம் சரிக்கும்;
தேரின் மேலின் நின்று, இரவிதன் பெரும் பதம் செலுத்தும்;
பேர்வு இல் எண் திசைக் காவலர் கருமமும் பிடிக்கும்;
மேரு மால் வரை உச்சிமேல் அரசு வீற்றிருக்கும். 6

‘நிலனும், நீரும், வெங் கனலொடு காலும் ஆய், நிமிர்ந்த
தலனுள் நீடிய அவற்றின் அத் தலைவரை மாற்றி,
உலவும் காற்றெடு கடவுளர் பிறரும்ஆய், உலகின்
வலியும் செய்கையும் வருணன்தன் கருமமும், மாற்றும். 7

‘தாமரைத் தடங் கண்ணினன் பேர்அவை தவிர,
நாமம் தன்னதே உலகங்கள் யாவையும் நவில,
தூம வெங் கனல் அந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியின், இமையவர் பேறு எலாம் உண்ணும். 8

‘காவல், காட்டுதல், துடைத்தல், என்று இத் தொழில் கடவ
மூவரும் அவை முடிக்கிலர், பிடிக்கிலர் முறைமை;
ஏவர் மற்றவர்? யோகியர் உறு பதம் இழந்தார்;
தேவரும், அவன் தாள் அலால் அருச்சனை செய்யார். 9

‘மருக் கொள் தாமரை நான்முகன், ஐம்முகன் முதலோர்
குருக்களோடு கற்று, ஓதுவது, அவன் பெருங் கொற்றம்;
சுருக்கு இல் நான்மறை, “தொன்று தொட்டு உயிர்தொறும் தோன்றுது
இருக்கும் தெய்வமும் இரணியனே! நம!” என்னும். 10

‘பண்டு, வானவர் தானவர் யாவரும் பற்றி,
தெண் திரைக் கடல் கடைதர, வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கொற்றத் தன் குவவுத் தோட்கு அமைந்த
தண்டு எனக் கொளலுற்று, அது நொய்து எனத் தவிர்ந்தான்.

6. சாரும் - ஏறிச் செல்லும்; மானம் - விமானம்; சரித்தல் - உலாவுதல்; சந்திரனுக்கு விமானமும் சூரியனுக்குத் தேரும் ஊர்தி; 7. தலன் - இடன், ஈண்டு அண்டம்; நீடிய - நிலைபெற்ற; 8. இமையவர் பேறு - அவியுணவு; 10. குருக்கள் - தேவகுருவாகிய வியாழன் முதலியோர்; 11. தண்டு - தண்டாயுதம்.

'மண்டலம் தரு கதிரவன் வந்து போய் மறையும்
எண்தலம் தொடற்கு அரியன தட வரை இரண்டும்,
கண்தலம் பசும்பொன்னவன் முன்னவன் காதில்
குண்டலங்கள்; மற்று என், இனிப் பெரு விறல் கூறல்? 12

'மயர்வு இல் மன் நெடுஞ் சேவடி மண்ணிடை வைப்பின்,
அயரும், வாள் எயிற்று ஆயிர நனந் தலை அனந்தன்;
உயருமேல், அண்ட முகடு தன் முடி உற உயரும்;
பெயருமேல், நெடும் பூதங்கள் ஐந்தொடும் பெயரும். 13

'பெண்ணில், பேர் எழில் ஆணினில், அலியினில், பிறிதும்
உள் நிற்கும் உயிர் உள்ளதில், இல்லதில், உலவான்;
கண்ணில் காண்பன, கருதுவ, யாவினும் கழியான்;
மண்ணில் சாகிலன்; வானிலும் சாகிலன்;—வரத்தால். 14

'தேவர் ஆயினர் ஏவரும், திரிதரும் இயக்கர்
யாவரேயும், மற்று எண்ணவும் நினைக்கவும் இயன்ற,
கோவை மால், அயன், மான்இடன், யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்; ஆற்றலும் தீர்கிலன்—அனையான். 15

'நீரின் சாகிலன்; நெருப்பினும் சாகிலன்; நிமிர்ந்த
மாருதத்தினும், மண்ணின் மற்று எவற்றினும், மாளான்;
ஓரும் தேவரும் முனிவரும் பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும், அன்னவன்தனைச் சென்று சாரா. 16

'உள்ளில் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வ வான் படைக்கலம் யாவையும் கொல்லா;
நள்ளின் சாகிலன்; பகலிடைச் சாகிலன்; நமனூர்
கொள்ளச் சாகிலன்; ஆர் இனி அவன் உயிர் கொள்வார்? 17

'பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினில் புணரா
வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களால் விளியான்;
தாதை தன்னைத் தான் தனிக் கொலை சூழினும், சாகான்;
ஈது அவன் நிலை; எவ் உலகங்கட்கும் இறைவன். 18

12. எண்தலம் - எண்ணுதற்குக் கருவியாகிய மனம்; தடவரை இரண்டு - உதயமலை, அத்தமலை; 13. மயர்வு - மனச் சோர்வு; 15. மான் இடன் - மானை இடக்கையில் தரித்தவன், சிவன்; 17. நள் - இரவுப்பொழுது; நமனூர் - யமன்; 18. பொருள்கள் - மந்திரங்கள்.

இரணியன் மகன் பிரகலாதன் தன்மை

'ஆயவன் தனக்கு அரு மகன், அறிஞரின் அறிஞன்,
தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான்,
நாயகன் தனி ஞானி, நல் அறத்துக்கு நாதன்,
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன், உளன் ஒரு தக்கோன். 19

தன் மகனை இரணியன் வேதம் ஓதுமாறு சொல்லுதல்

'வாழியான்—அவன்தனைக் கண்டு, மனம் மகிழ்ந்து, உருகி,
''ஆழி ஐய! நீ அறிதியால், மறை'' என அறைந்தான்—
ஊழியும் கடந்து உயர்கின்ற ஆயுளான், உலகம்
ஏழும் ஏழும் வந்து அடி தொழ, அரசு வீற்றிருந்தான். 20

ஓர் அந்தணன் பிரகலாதனுக்கு மறை ஓதுவித்தல்

'என்று, ஓர் அந்தணன், எல்லை இல் அறிஞனை ஏவி,
''நன்று நீ இவற்கு உதவுதி, மறை'' என நவின்றான்;
சென்று மற்றுஅவன்தன்னொடும் ஒரு சிறை சேர்ந்தான்;
அன்று நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான். 21

ஆசிரியன் 'இரணியாய நம' என, சிறுவன்
'ஓம் நமோ நாராயணாய!' எனல்

'ஓதப் புக்கு அவன், ''உந்தை பேர் உரை'' எனலோடும்,
போதத் தன் செவித் தொளை இரு கைகளால் பொத்தி,
''மூ தக்கோய்! இது நல் தவம் அன்று'' என மொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப் பொருட் பெயரினை விரித்தான். 22

'''ஓம் நமோ நாராயணாய!'' என்று உரைத்து, உளம் உருகி,
தான் அமைந்து, இரு தடக் கையும் தலைமிசைத் தாங்கி,
பூ நிறக் கண்கள் புனல் உக, மயிர்ப் புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன்; அந்தணன் நடுங்கி, 23

அந்தணன் உரையும் சிறுவன் மறுமொழியும்

'''கெடுத்து ஒழிந்தனை, என்னையும் உன்னையும்; கெடுவாய்!
படுத்து ஒழிந்தனை; பாவி! எத் தேவரும் பகர்தற்கு
அடுத்தது அன்றியே அயல் ஒன்று பகர, நின் அறிவில்
எடுத்தது என் இது? என் செய்த வண்ணம் நீ?'' என்றான். 24

20. வாழியான் - நல்வாழ்வுக்குரிய நற்பேறுடையான், பிரகலாதன்; 22. போத - நன்றாக; மூ தக்கோய் - மூத்த அறிவுடைய பெரியோனே; வேதத்து உச்சி - உபநிடதங்கள்.

' ''என்னை உய்வித்தேன்; எந்தையை உய்வித்தேன்; இனைய
உன்னை உய்வித்து, இவ் உலகையும் உய்விப்பான் அமைந்து,
முன்னை வேதத்தின் முதற் பெயர் மொழிவது மொழிந்தேன்;
என்னை குற்றம் நான் இயம்பியது? இயம்புதி'' என்றான். 25

' ''முந்தை வானவர் யாவர்க்கும், முதல்வர்க்கும், முதலோன்
உந்தை; மற்று அவன் திருப்பெயர் உரைசெயற்கு உரிய
அந்தணாளனேன் என்னினும் அறிதியோ? ஐய!
இந்த இப் பெயர் உரைத்து, எனைக் கெடுத்திடல்'' என்றான்.

'வேத பாரகன் அவ் உரை விளம்பலும், விமலன்,
''ஆதி நாயகன் பெயர் அன்றி; யான் பிறிது அறியேன்;
ஓத வேண்டுவது இல்லை; என் உணர்வினுக்கு ஒன்றும்
போதியாததும் இல்லை'' என்று, இவை இவை புகன்றான்: 27

' ''தொல்லை நான்மறை வரன்முறைத் துணி பொருட்கு எல்லாம்
எல்லை கண்டவன் அகம் புகுந்து, இடம் கொண்டது, என் உள்;
இல்லை, வேறு இனிப் பெரும் பதம்; யான் அறியாத,
வல்லையேல், இனி, ஓதுவி, நீதியின் வழாத. 28

' ''ஆரைச் சொல்லுவது, அந்தணர் அரு மறை அறிந்தோர்,
ஓரச் சொல்லுவது எப் பொருள், உபநிடதங்கள்,
தீரச் சொல் பொருள் தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது, பிறிதும் ஒன்று உளதோ? 29

' ''வேதத்தானும், நல் வேள்வியினானும், மெய் உணர்ந்த
போதத்தானும், அப் புறத்துள எப் பொருளானும்,
சாதிப்பார் பெறும் பெரும் பதம் தலைக்கொண்டு சமைந்தேன்;
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உளதோ? 30

' ''காடு பற்றியும், கன வரை பற்றியும், கலைத் தோல்
மூடி முற்றியும், முண்டித்தும், நீட்டியும், முறையால்
வீடு பெற்றவர், 'பெற்றதின் விழுமிது' என்று உரைக்கும்
மாடு பெற்றனென்; மற்று, இனி என், பெற வருந்தி? 31

25. வேதத்தின் முதற்பெயர் - பிரணவம்; 26. என்னினும் - என்னைக் காட்டிலும்; 27. போதியாதது - உணர்த்தப்படாத பொருள்; 28. இடம் கொள்ளல் - (தாம் விரும்பி உறையும்) இடமாகக் கொண்டு அமர்தல்; 31. மாடு - செல்வம்.

' ''செவிகளால் பல கேட்டிலர்ஆயினும், தேவர்க்கு
அவி கொள் நான்மறை அகப் பொருள் புறப்பொருள் அறிவார்;
கவிகள் ஆகுவார்; காண்குவார், மெய்ப்பொருள்;—காலால்
புவி கொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையின் புக்கார். 32

' ''எனக்கும், நான்முகத்து ஒருவற்கும், யாரினும் உயர்ந்த
தனக்கும் தன் நிலை அறிவுஅரும் ஒரு தனித் தலைவன்
மனக்கு வந்தனன்; வந்தன, யாவையும்; மறையோய்!
உனக்கும் இன்னதின் நல்லது ஒன்று இல்'' என உரைத்தான்.

மறையவன் நிகழ்ந்ததை இரணியனுக்கு அறிவித்தல்

'மாற்றம் யாது ஒன்றும் உரைத்திலன், மறையவன்; மறுகி,
''ஏற்றம் என்? எனக்கு இறுதி வந்து எய்தியது'' என்னா,
ஊற்றம் இல்லவன் ஓடினன் கனகனை உற்றான்,
தோற்ற வந்தது ஓர் கனவு கண்டனன் எனச் சொன்னான்:

' ''எந்தை! கேள்: எனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இயம்பச்
சிந்தையால் இறை நினைத்தற்கும் அடாதன செப்பி,
'முந்தையே நினைந்து, என் பொருள் முற்றும்?' என்று உரைத்து, உன்
மைந்தன் ஓதிலன், வேதம்'' என்று உரைத்தனன், வணங்கி.

மைந்தன் உரைத்ததை அந்தணன் கூற மறுத்தல்

'அன்ன கேட்டு, அவன், ''அந்தண! அந்தணர்க்கு அடாத,
முன்னர் யாவரும் மொழிதரும் முறைமையின் படாத,
தன்னது உள் உறும் உணர்ச்சியால் புதுவது தந்தது,
என்ன சொல், அவன் இயம்பியது? இயம்புதி'' என்றான். 36

'அரசன் அன்னவை உரைசெய, மறையவன் அஞ்சி,
சிரதலம் கரம் சேர்த்திடா, ''செவித் தொளை சேர்ந்த
உரகம் அன்ன சொல் யான் உனக்கு உரைசெயின், உரவோய்!
நரகம் எய்துவென்; நாவும் வெந்து உகும்'' என நவின்றான்.

மைந்தனை அழைத்து, இரணியன் நிகழ்ந்தன கேட்டல்

' ''கொணர்க என் மைந்தனை, வல் விரைந்து'' என்றனன், கொடியோன்;
உணர்வு இல் நெஞ்சினன் ஏவலர் கடிதினின் ஓடி,
கணனின் எய்தினர், ''பணி'' என, தாதையைக் கண்டான்—
துணை இலான்தனைத் துணை என உடையவன் தொழுதான். 38

34. ஊற்றம் - நெஞ்சத் துணிவு; 37. உரகம் - பாம்பு; 38. துணை இலான் - ஒப்பிலாதவன், திருமால்.

'தொழுத மைந்தனை, சுடர் மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத, அன்பினின் இறுகுறத் தழுவி, மாடு இருத்தி,
முழுதும் நோக்கி, ''நீ, வேதியன் கேட்கிலன் முனிய,
பழுது சொல்லியது என்? அது பகருதி'' என்றான். 39

மைந்தன், தன் உரையின் சிறப்புக் கூற, இரணியன் அதனைச் சொல்ல வேண்டல்

' ''சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன
ஒருவன், யாவர்க்கும் நாயகன், திருப் பெயர் உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து, இடர்க் கடல் கடக்க
உரிய மற்று இதின் நல்லது ஒன்று இல்'' என உரைத்தான். 40

'தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெய, தீயோன்
''தா இல் வேதியன் தக்கதே உரைசெயத் தக்கான்;
ஆவது ஆகுக; அன்று எனின், அறிகுவம்'' என்றே,
''யாவது, அவ் உரை? இயம்புதி, இயம்புதி!'' என்றான். 41

எட்டெழுத்தின் பெருமையைப் பிரகலாதன் எடுத்துரைத்தல்

' ''காமம் யாவையும் தருவதும், அப் பதம் கடந்தால்,
சேம வீடு உறச் செய்வதும், செந் தழல் முகந்த
ஓம வேள்வியின் உறு பதம் உய்ப்பதும், ஒருவன்
நாமம்; அன்னது கேள்; நமோ நாராயணாய! 42

' ''மண்ணின்நின்று மேல் மலர் அயன் உலகு உற வாழும்
எண் இல் பூதங்கள், நிற்பன திரிவன, இவற்றின்
உள் நிறைந்துள கரணத்தின் ஊங்கு உள உணர்வும்,
எண்ணுகின்றது இவ் எட்டு எழுத்தே; பிறிது இல்லை. 43

' ''முக் கண் தேவனும், நான்முகத்து ஒருவனும் முதலா,
மக்கள்காறும், இம் மந்திரம் மறந்தவர் மறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கினர்; அல்லவர் இதன் நிலை உணரார். 44

' ''தோற்றம் என்னும் அத் தொல் வினைத் தொடு கடல் சுழிநின்று
ஏற்று நன் கலன், அருங் கலன் யாவர்க்கும், இனிய
மாற்ற மங்கலம், மா தவர் வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள், திருந்த மற்று இதின் இல்லை, சிறந்த.*

40. சுருதி - கேள்வி, வேதம்; 42. காமம் - விரும்பப்படும் நற் பேறுகள்; சேம வீடு - பாதுகாப்புடையதாய் அமைந்த பரமபதம்; வேள்வியின் உறு பதம் - யாகத்தினால் அடையும் துறக்கம் முதலிய மேலுலகங்கள்; 43. கரணம் - மனம் முதலிய கருவிகள்; உணர்வு - மெய்ஞ்ஞானம்; 45. நன் கலன் - நல்ல மரக்கலம்.

'''உன் உயிர்க்கும், என் உயிர்க்கும், இவ் உலகத்தினுள்ள
மன்னுயிர்க்கும், ஈது உறுதி என்று உணர்வுற மதித்துச்
சொன்னது இப் பெயர்'' என்றனன், அறிஞரின் தூயோன்;
மின் உயிர்க்கும் வேல் இரணியன் தழல் எழ விழித்தான். 46

இரணியன் சின மொழி

'''இற்றை நாள் வரை, யான் உள நாள் முதல், இப் பேர்
சொற்ற நாவையும் கருதிய மனத்தையும் சுடும் என்
ஒற்றை ஆணை; மற்று, யார் உனக்கு இப் பெயர் உரைத்தார்?
கற்றது ஆரொடு? சொல்லுதி, விரைந்து'' எனக் கனன்றான்.

'''முனைவர் வானவர் முதலினர், மூன்று உலகத்தும்
எனைவர் உள்ளவர், யாவரும், என் இரு கழலே
நினைவது; ஓதுவது என் பெயர்; நினக்கு இது நேர
அனையர் அஞ்சுவர்; மைந்த! நீ யாரிடை அறிந்தாய்? 48

'''மறம் கொள் வெஞ் செரு மலைகுவான், பல் முறை வந்தான்,
கறங்கு வெஞ் சிறைக் கலுழன்தன் கடுமையின், கரந்தான்;
பிறங்கு தெண் திரைப் பெருங் கடல் புக்கு, இனம் பெயராது,
உறங்குவான் பெயர் உறுதி என்று ஆர் உனக்கு உரைத்தார்?

'''பரவை நுண் மணல் எண்ணினும், எண்ண அரும் பரப்பின்
குரவர் நம் குலத்து உள்ளவர் அவன் கொலக் குறைந்தார்;
அரவின் நாமத்தை எலி இருந்து ஓதினால், அதற்கு
விரவு நன்மை என்? துன்மதி! விளம்பு'' என வெகுண்டான்.

'''வயிற்றினுள் உலகு ஏழினோடு ஏழையும் வைக்கும்
அயிர்ப்பு இல் ஆற்றல் என் அனுசனை, ஏனம் ஒன்று ஆகி,
எயிற்றினால் எறிந்து, இன் உயிர் உண்டவன் நாமம்
பயிற்றவோ, நினைப் பயந்தது நான்?'' எனப் பகர்ந்தான். 51

'''ஒருவன், யாவர்க்கும் எவற்றிற்கும் உலகிற்கும் முதல்வன்,
தருதல், காத்து, அவை தவிர்த்தல் என்று இவை செயத் தக்கோன்,
கருமத்தால் அன்றிக் காரணத்தால் உள்ள காட்சி,
திருவிலி! மற்று இது எம் மறைப் பொருள் எனத் தெரிந்தாய்.

48. நேர - உடன்பட்டுச் சொல்ல; 49. கறங்குதல் - சுழலுதல், ஈண்டுச் சுழன்று பறத்தல்; 51. அயிர்ப்பு - ஐயுறவு; அனுசன் - தம்பி, இரணியாட்சன்; 52. கருமம் - காட்சி அளவை (பிரத்தியட்சம்); காரணம் - கருதல் அளவை (அனுமானம்); காட்சி - உணர்வு.

' ''ஆதி அந்தங்கள் இதனின் மற்று இல்லை, பேர் உலகின்;
வேதம் எங்கனம், அங்கனம் அவை சொன்ன விதியால்,
கோது இல் நல்வினை செய்தவர் உயர்குவர்; குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர்; இது மெய்ம்மை, தெரியின். 53

' ''செய்த மா தவம் உடைமையின், அரி, அயன், சிவன் என்று
எய்தினர் பதம் இழந்தனர்; யான் தவம் இயற்றி,
பொய் இல் நாயகம் பூண்டபின், இனி அது புரிதல்
நொய்யது ஆகும் என்று, ஆரும் என் காவலின் நுழைவார். 54

' ''வேள்வி ஆதிய புண்ணியம் தவத்தொடும் விலக்கி,
கேள்வி யாவையும் தவிர்த்தனென், 'இவை கிளர் பகையைத்
தாழ்வியாதன செய்யும்' என்று; அனையவர் தம்பால்
வாழ்வு யாது? அயல் எவ் வழிப் புறங்கொண்டு வாழ்வார்? 55

' ''பேதைப் பிள்ளை நீ; பிழைத்தது பொறுத்தனென்; பெயர்த்தும்,
'ஏது இல் வார்த்தைகள் இனையன விளம்பலை; முனிவன்
யாது சொல்லினன், அவை அவை இதம் என எண்ணி,
ஓதி; போதி' என்று உரைத்தனன்—உலகு எலாம் உயர்ந்தோன். 56

பிரகலாதன் அறிவுரை

' ''உரை உளது உணர்த்துவது; உணர்ந்து கோடியேல்,—
விரை உள அலங்கலாய்!—வேத வேள்வியின்
கரை உளது; யாவரும் கற்கும் கல்வியின்
பிரை உளது'' என்பது மைந்தன் பேசினன்: 57

' ''வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை; வேந்த! நின்
பித்து இன்றி உணர்தியேல், அளவைப் பெய்குவேன்;
'உய்த்து ஒன்றும் ஒழிவு இன்றி உணர்தற்பாற்று' என,
கைத்து ஒன்று நெல்லிஅம் கனியின் காண்டியால். 58

' ''தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை-
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின் இலன் முன் இலன், ஒருவன்; பேர்கிலன்;
தொல் நிலை ஒருவரால் துணியற்பாலதோ? 59

57. வேத வேள்வியின் கரை உளது - (என் உரை) வேத நூலறிவுக்கும் வேள்விப் பயனுக்கும் முடிவிடமாய் உள்ளது; கல்வியின் பிரை உளது - கல்வியாகிய பாலுக்கு உறை மோர்த்துளியாக உள்ளது; 58. பித்து - பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள், மயக்க உணர்வு; அளவை - (மெய்ப்பொருளை) அறியும் வகை.

' "சாங்கியம், யோகம் என்று இரண்டு தன்மைய,
வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன;
ஆங்கு அவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன்
ஓங்கிய மேல் நிலை உணரற்பாலதோ? 60

' "சித்து என அரு மறைச் சிரத்தின் தேறிய
தத்துவம் அவன்; அது தம்மைத் தாம் உணர்
வித்தகர் அறிகுவர்; வேறு வேறு உணர்
பித்தரும் உளர் சிலர்; வீடு பெற்றிலார். 61

' "அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப் புறத்து
உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ;
கிளவி ஆர் பொருள்களான் கிளக்குறுதவன்
களவை யார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார். 62

' "மூவகை உலகும் ஆய், குணங்கள் மூன்றும் ஆய்,
யாவையும் எவரும் ஆய், எண் இல் வேறுபட்டு,
ஓவல் இல் ஒரு நிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ? 63

' "கருமமும், கருமத்தின் பயனும், கண்ணிய
தரு முதல் தலைவனும், தானும், தான்; அவன்
அருமையும் பெருமையும் அறிவரேல் அவர்,
இருமை என்று உரைசெயும் கடல்நின்று ஏறுவார். 64

' "மந்திரம் மா தவம் என்னும் மாலைய,
தந்துறு பயன் இவை, முறையின் சாற்றிய
நந்தல் இல் தெய்வம் ஆய், நல்கும் நான்மறை
அந்தம் இல் வேள்விமாட்டு அவிசும் ஆம்—அவன். 65

60. சாங்கியம் - ஆராய்ச்சியால் வரும் ஞானம்; யோகம் - ஆராய்ச்சியால் வரும் ஞானத்தை அனுபவமாகச் செயற்படுத்தும் நிலை; 62. அளவை - பொருள்களின் உண்மையினை அளந்து துணிதற்குரிய அடிப்படை, பிரமாணம்; உளவை- உள்ளவை, ஈண்டு உள்ள மறை பொருளை; ஆய் - ஆராயும்; களவு - மாயம்; 63. தேய்தல் - அளவிற்பட்டுச் சுருங்குதல்; 64. கருமம் - நன்று தீது எனப்படும் வினைகள்; தானும் - வினை செய்யும் கருத்தாவாகிய உயிரும்; தான் - தானாக விளங்குபவன், இறைவன்; 65. அவிசு - தேவர்களைக் குறித்து வேள்வித் தீயில் இடப்பெறும் தேவருணவு.

'''முற்பயப் பயன் தரும், முன்னில் நின்றவர்,
பிற்பயப் பயன் தரும், பின்பு போல் அவன்;
தற் பயன் தான் தெரி தருமம் இல்லை; அஃது
அற்புத மாயையால் அறிகிலார் பலர். 66

'''ஒரு வினை, ஒரு பயன் அன்றி உய்க்குமோ,
இரு வினை என்பவை இயற்றி இட்டவை;
கருதின கருதின காட்டுகின்றது,
தரு பரன் அருள்; இனிச் சான்று வேண்டுமோ? 67

'''ஓர் ஆவுதி, கடைமுறை வேள்வி ஓம்புவார்,
அரா-அணை அமலனுக்கு அளிப்பரேல்; அது
சராசரம் அனைத்தினும் சாரும்—என்பது
பராவ அரு மறைப் பொருள்; பயனும் அன்னதால். 68

'''பகுதியின் உட் பயன் பயந்தது; அன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கது;
புகுதி இல்லாதவர் புலத்திற்று ஆகுமோ? 69

'''எழுத்து இயல் நாளத்தின் எண் இலா வகை,—
முழுத் தனி நான்முகன் முதல முற்று உயிர்—
வழுத்து அரும் பொருட்டது ஓர் புரையின் வைகுமால்,
விழுத் தனிப் பல் இதழ் விரை இலா முகிழ். 70

'''கண்ணினும் கரந்துளன்; கண்டு காட்டுவார்
உள் நிறைந்திடும் உணர்வு ஆகி, உண்மையால்,
மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்—
எண்ணினும் நெடியவன் ஒருவன், எண் இலான். 71

66. முற்பயப் பயன் - முன்னே நுகர்தற்குரிய நிலையில் முதிர்ந்த வினைப் பயன்; பிற்பயப் பயன் - பின்னே நுகர்தற்குரிய வகையில் முதிராத நிலையில் உள்ள வினைப்பயன்; பின்பு போல் அவன் - பின்னே இருப்பது போல் இருந்து அவன்; தருமம் - செயல்; 68. வேள்வி ஓம்புவார் கடைமுறை - யாகம் செய்பவர்கள் யாகத்தின் முடிவில்; 69. பகுதியின் - மூலப் பிரகிருதியிலிருந்து; உட்பயன் - காரிய ரூபமாகிய உலகம்; பயந்தது - (திருமாலாகிய பரம்பொருள்) தோற்றுவித்தது; விகுதியின் மிகுதிகள் - விகாரத்தால் உண்டான தொகுதிகள்; வகுதி - தத்துவங்களின் பகுப்பு; வசத்தன - அடங்கியவை; வரவு போக்கது - (அப் பரம்பொருள்) வினை வயத்தால் வரும் பிறப்பு இல்லாதது; புகுதி - அழுந்தியுணரும் நுண்ணறிவு; 70. எழுத்து இயல் - ஓவியத்தின் தன்மை வாய்ந்த; எழுத்து - எழுதப்படுவது, ஈண்டு ஓவியம்; நாளம் - உள் தொளையுள்ள பூண் தண்டு; புரை - ஒரு பகுதி.

' ''சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்;
இந்தியம்தொறும் உளன்; உற்றது எண்ணினல்,
முந்தை ஓர் எழுத்து என வந்து, மும் முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான். 72

' ''காமமும் வெகுளியும் முதல கண்ணிய
தீமையும், வன்மையும், தீர்க்கும் செய்கையான்
நாமமும், அவன் பிற நலி கொடா நெடுஞ்
சேமமும், பிறர்களால் செப்பற்பாலவோ? 73

' ''காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப்
பால் அமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய்,
சீலமும் அவை தரும் திருவும் ஆய், உளன்—
ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான். 74

' ''உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை ஓர்
தெள் விளி யாழிடைத் தெரியும் செய்கையின்,
உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்;
தள்ள அரு மறைகளும் மருளும் தன்மையான். 75

' ''ஓம் எனும் ஓர் எழுத்துஅதனின் உள் உயிர்
ஆம் அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினன்;
தாம மூஉலகமும் தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான். 76

' ''காலையின் நறு மலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர் புரை சமய வாதியர்
சூலையின் திருக்கு அலால், சொல்லுவோர்க்கு எலாம்
வேலையும் திரையும்போல் வேறுபாடு இலான். 77

' ''இன்னது ஓர் தன்மையன் இகழ்வுற்று எய்திய
நல் நெடுஞ் செல்வமும், நாளும், நாம் அற
மன்னுயிர் இழத்தி! என்று அஞ்சி வாழ்த்தினேன்,
சொன்னவன் நாமம்'' என்று உணரச் சொல்லினன். 78

72. மும் முறைச் சந்தி - அகர உகர மகரங்களாகிய மூன்று சொற்கள்; 76. தாமம் - இடப் பரப்பு, பரமபதம் எனலும் ஆம்; 77. காலையின் மலர் - மலருங் காலத்தில் மலர்ந்த பூக்கள்; சூலை - கொடிய வயிற்று நோய், ஈண்டு மன எரிவு; திருக்கு - மாறுபாடு.

இரணியன் சினமுற்று, பிரகலாதனைக் கொல்லப் பணித்தல்

'எதிரில் நின்று, இவை இவை உரைத்திடுதலும்,
எவ் உலகமும் அஞ்ச,
முதிரும் வெங் கத மொழிகொடு மூண்டது,
முது கடற் கடு ஏய்ப்ப;
கதிரும் வானமும் சுழன்றன; நெடு நிலம்
கம்பித்த; கனகன் கண்
உதிரம் கான்றன; தோன்றின புகைக் கொடி;
உமிழ்ந்தது கொடுந் தீயே. 79

' ''வேறும் என்னொடு தரும் பகை
பிறிது இனி வேண்டலென்; வினையத்தால்,
ஊறி, என்னுளே உதித்தது; குறிப்பு
இனி உணர்குவது உளது அன்றால்;
ஈறு இல் என் பெரும் பகைஞனுக்கு
அன்பு சால் அடியென் யான்—என்கின்றான்;
கோறிர்'' என்றனன்; என்றலும், பற்றினர்,
கூற்றினும் கொலை வல்லார். 80

வீரர் பிரகலாதனைக் கொல்ல முயல்தலும், அவன் உய்தலும்

'குன்றுபோல் மணி வாயிலின் பெரும் புறத்து
உய்த்தனர், மழுக் கூர் வாள்
ஒன்று போல்வன ஆயிரம் மீது
எடுத்து ஓச்சினர்—''உயிரோடும்
தின்று தீர்குதும்'' என்குநர், உரும் எனத்
தெழிக்குநர், சின வேழக்
கன்று புல்லிய கோள் அரிக் குழு எனக்
கனல்கின்ற தறுகண்ணார். 81

'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்தன்னை,
அத் தவம் எனும் தகவு இல்லோர்
''ஏ'' என் மாத்திரத்து எய்தன,
எறிந்தன, எறிதொறும் எறிதோறும்,—
தூயவன்தனைத் துணை என உடைய
அவ் ஒருவனைத் துன்னுதார்
வாயின் வைதன ஒத்தன—அத்துணை
மழுவொடு கொலை வாளும். 82

80. வினையம் - வஞ்சனை, தீவினை.

'எறிந்த, எய்தன, எற்றின, குத்தின,
ஈர்த்தன, படை யாவும்
முறிந்து, நுண் பொடி ஆயின; முடிந்தன;
முனிவு இலான் முழு மேனி
சொறிந்த தன்மையும் செய்தில ஆயின;
தூயவன் துணிவு ஒன்றூ
அறிந்த நாயகன் சேவடி மறந்திலன்;
அயர்த்திலன், அவன் நாமம். 83

' ''உள்ள வான் படை உலப்பில யாவையும்
உக்கன—உரவோய்!—நின்
பிள்ளை மேனிக்கு ஓர் ஆனி வந்திலது; இனிச்
செயல் என்கொல், பிறிது?'' என்ன,
''கள்ள உள்ளத்தன் கட்டினன் கருவிகள்;
கதுமெனக் கனல் பொத்தித்
தள்ளுமின்'' என உரைத்தனன்; வயவரும்,
அத் தொழில் தலைநின்றூர். 84

'குழியில் இந்தனம் அடுக்கினர், குன்று என;
குடம்தொறும் கொணர்ந்து எண்ணெய்
இழுது நெய் சொரிந்திட்டனர்; நெருப்பு
எழுந்திட்டது, விசும்பு எட்ட;
அழுது நின்றவர் அயர்வுற, ஐயனைப்
பெய்தனர்; ''அரி'' என்று
தொழுது நின்றனன், நாயகன் தாள் இணை;
குளிர்ந்தது, சுடு தீயே. 85

'கால வெங் கனல் கதுவிய காலையில்,
கற்பு உடையவள் சொற்ற
சீல நல் உரை சீதம் மிக்கு அடுத்தலின்,—
கிழியொடு நெய் தீற்றி,
ஆலம் அன்ன நம் அரக்கர்கள் வயங்கு
எரி மடுத்தலின்,—அனுமன்தன்
கூலம் ஆம் என, என்புறக் குளிர்ந்தது,
அக் குரு மணித் திரு மேனி. 86

84. ஆனி - ஹாநி, துன்பம்; பொத்தி - மூட்டி; 85. இந்தனம் - விறகு;
86. கூலம் - வால்.

' ''சுட்டது இல்லை நின் தோன்றலை,
சுடர்க் கனல் சுழி படர் அழுவத்துள்
இட்டபோதிலும்; என் இனிச் செயத் தக்கது?''
என்றனர், இகல் வெய்யோர்.
''கட்டி, தீயையும் கடுஞ் சிறை இடுமின்;
அக் கள்வனைக் கவர்ந்து உண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்கள்''
என்றனன், எரி எழு தறுகண்ணன். 87

அனந்தனே முதலாகிய நாகங்கள்,
''அருள் என்கொல்?'' என, அன்னோன்
நினைந்த மாத்திரத்து எய்தின, நொய்தினில்;
நெருப்பு உகு பகு வாயால்,
வனைந்ததாம் அன்ன மேனியினன் தன்மேல்,
வாள் எயிறு உற ஊன்றி,
சினம் தம் மீக்கொள, கடித்தன; துடித்திலன்,
திருப் பெயர் மறவாதான். 88

'பக்கம் நின்றவை பயத்தினின் புயற் கறைப்
பசும் புனல் பகு வாயின்
கக்க, வெஞ் சிறைக் கலுழனும்
நடுக்குற, கவ்விய காலத்துள்,
செக்கர் மேகத்துச் சிறு பிறை நுழைந்தன
செய்கைய, வலி சிந்தி
உக்க, பற் குலம்; ஒழுகின, எயிற்று
இரும் புரைதொறும் அமிழ்து ஊறி. 89

' ''சூழப் பற்றின சுற்றும் எயிற்றின்
போழக்கிற்றில'' என்று புகன்றார்;
''வாழித் திக்கின், மயக்கின் மதம் தாழ்,
வேழத்துக்கு இடுமின்'' என விட்டான். 90

'பசையில் தங்கல் இல் சிந்தையர் பல்லோர்
திசையில் சென்றனர்; ''செப்பினன்'' என்னும்
இசையில் தந்தனர்—இந்திரன் என்பான்
விசையின் திண் பணை வெஞ் சின வேழம். 91

87. அழுவம் - பெருங்குழி; 91. பசை - இரக்கம்.

'கையில், கால்களில், மார்பு, கழுத்தில்,
தெய்வப் பாசம் உறப் பிணி செய்தார்;
மையல் காய் கரி முன் உற வைத்தார்;
பொய் அற்ருனும் இது ஒன்று புகன்ருன்: 92

' ''எந்தாய்!—பண்டு ஓர் இடங்கர் விழுங்க,—
முந்தாய் நின்ற முதல் பொருளே! என்று,
உன் தாய் தந்தை இனத்தவன் ஓத,
வந்தான் என்தன் மனத்தினன்'' என்ருன். 93

'என்ன முன்னம், இருங் களிறும் தன்
பொன் ஆர் ஓடை பொருந்த, நிலத்தின்,
அன்னனைத் தொழுது, அஞ்சி அகன்றது;
ஒன்னர் அத் திறம் எய்தி உரைத்தார். 94

' ''வல் வீரைத் துயில்வானை மதித்து, என்
நல் வீரத்தை அழித்தது; நண்ணுற்று,
ஒல்வீர்! ஒற்றை உரக் கரிதன்னைக்
கொல்வீர்'' என்றனன், நெஞ்சு கொதிப்பான். 95

'தன்னைக் கொல்லுநர் சாருதலோடும்,—
பொன்னைக் கொல்லும் ஒளிப் புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய வந்தது—வாரா
மின்னைக் கொல்லும் வெயில் தின் எயிற்ருல். 96

'வீரன் திண் திறல் மார்பினில் வெண் கோடு
ஆரக் குத்தி அழுத்திய நாகம்,
வாரத் தண் குலை வாழை மடல் சூழ்
ஈரத் தண்டு என, இற்றன எல்லாம். 97

'வெண் கோடு இற்றன, மேவலர் செய்யும்
கண் கோடல் பொறியின் கடிது ஏகி,
''எண் கோடற்கு அரிது'' என்ன, வெகுண்டான்,
திண் கோடைக் கதிரின் தெறு கண்ணன். 98

' ''தள்ளத் தக்கு இல் பெருஞ் சயிலத்தோடு
எள்ளக் கட்டி எடுத்து விசித்து,
கள்ளத்து இங்கு இவனைக் கரை காணு
வெள்ளத்து உய்த்திடுமின்'' என விட்டான். 99

93. முந்தாய் - மூலமாய்; 95. வீரை - கடல்; 97. வாரம் - விருப்பம்; 98. கண் கோடல் பொறி - கண் இமைக்கும் அளவு; பொறி - அளவு; எண் - (நின் பிள்ளையின்) வலிமை.

' ''ஒட்டிக் கொல்ல உணர்ந்து வெகுண்டான்;
விட்டிட்டான்அலன்'' என்று விரைந்தார்,
கட்டிக் கல்லொடு, கால் விசையின் போய்,
இட்டிட்டார், கடலின் நடு;—எந்தாய்! 100

'நடு ஒக்கும் தனி நாயகன் நாமம்
விடுகிற்கின்றிலன் ஆகலின், வேலை
மடு ஒத்து, அங்கு அதின் வங்கமும் அன்றாய்,
குடுவைத் தன்மையது ஆயது, குன்றம். 101

'தலையில் கொண்ட தடக் கையினான், தன்
நிலையின் தீர்வு இல் மனத்தின் நினைந்தான்—
சிலையில் திண் புனலில், சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப் பொலிகின்றான். 102

'மோதுற்று ஆர் திரை வேலையில் மூழ்கான்,
மீதுற்று ஆர் சிலை மீது கிடந்தான்,
ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம்
ஓதுற்றான்—மறை ஒல்லை உணர்ந்தான்: 103

' ''அடியார் அடியேன் எனும் ஆர்வம் அலால்,
ஒடியா வலி யான் உடையேன் உளெனோ?
கொடியாய்! குறியாய்! குணம் ஏதும் இலாய்!
நெடியாய்! அடியேன் நிலை நேர்குதியோ? 104

' ''கள்ளம் திரிவாரவர் கைதவம் நீ;
உள்ளம் தெரியாத உனக்கு உளவோ?
துள்ளும் பொறியின் நிலை சோதனைதான்—
வெள்ளம் தரும் இன் அமுதே!—விதியோ? 105

' ''வரு நான்முகனே முதல் வானவர் தாம்,
திரு நான்மறையின் நெறியே திரிவார்;
பெரு நாள் தெரிகின்றிலர்; பேதைமையேன்,
ஒரு நாள், உனை எங்ஙனம் உள்ளுவெனோ? 106

100. ஒட்டுதல் - சபதம் செய்தல்; 101. நடு ஒக்கும் நாயகன் - எவ்வுயிர்க்கும் நடுவாய் நின்று அருள் சுரக்கும் இறைவன்; வங்கமும் அன்றாய் - மரக்கலம் என்றற்கும் போதாமல்; 104. குறியாய் - மன மொழி மெய்களுக்கு எட்டாத நிலையில் உள்ளாய்; நேர்குதியோ? - எதிர்ப்பட்டு அருள் புரிவாயோ? 105. துள்ளல் - ஒருவழிப்பட அமைந்து நில்லாது வரம்பிகந்து தாவுதல்; விதியோ? - முறையோ?.

' ''செய்யாதனவோ இலை; தீவினைதான்
பொய்யாதன வந்து புணர்ந்திடுமால்,
மெய்யே; உயிர் தீர்வது ஓர் மேல்வினை, நீ,
ஐயா! ஒரு நாளும் அயர்த்தனையோ? 107

' ''ஆயப் பெறும் நல் நெறி தம் அறிவு என்று,
ஏயப் பெறும் ஈசர்கள் எண் இலரால்;
நீ அப்புறம் நிற்க, நினைக்கிலர்; நின்
மாயப் பொறி புக்கு, மயங்குவரால். 108

' ''தாமே தனி நாயகர் ஆய், 'எவையும்
போமே பொருள்' என்ற புராதனர்தாம்,
'யாமே பரம்' என்றனர்; என்ற அவர்க்கு
ஆமே? பிறர், நின் அலது, ஆர் உளரே? 109

' ''ஆதிப் பரம் ஆம் எனில், அன்று எனலாம்;
ஓது அப் பெரு நூல்கள் உலப்பு இலவால்;
பேதிப்பன; நீ அவை பேர்கிலையால்;
வேதப் பொருளே! விளையாடுதியோ? 110

' ''அம்போருகனார், அரனார், அறியார்;
எம் போலியர் எண்ணிடின், என், பலவா?
கொம்பொடு, அடை, பூ, கனி, காய் எனினும்,
வம்போ, 'மரம் ஒன்று' எனும் வாசகமே? 111

' ''நின்னின் பிறிதாய், நிலையின் திரியா,
தன்னின் பிறிது ஆயினதாம் எனினும்
உன்னின் பிறிது ஆயினவோ, உலகம்—
பொன்னின் பிறிது ஆகில, பொற் கலனே? 112

' ''தாய் தந்தை எனும் தகை வந்தனைதான்,
நீ தந்தனை; நீ உறு நெஞ்சினென் நான்;
நோய் தந்தவனே! நுவல் தீர்வும்'' எனா,
வாய் தந்தன சொல்லி, வணங்கினனால். 113

107. உயிர் தீர்வது ஓர் மேல் வினை - (தீவினைப் பயன்கள்) உயிரை விட்டு நீங்குவதற்கு ஏதுவாக இறைவன் செய்யும் திருவருட் செயல்; அயர்த்தனையோ? - மறந்தனையோ? (இல்லை என்றபடி); 108. ஏயப் பெறும் - பொருந்தி ஒழுகும்; ஈசர்கள் - திருவுடைய தலைவர்கள், குறிப்பு மொழியாய்த் திருவில்லாதவர் எனப் பொருள்பட்டது; நிற்க - நிற்றலால்; 109. எவையும் போமே பொருள் - எத்தகைய செயலும் எம்மால் முடிக்கப் பெறுவன; 109. புராதனர் - பழையோர், ஈண்டு அயன் அரன் என்போர்; 112. தன்னின் - தமக்குள்ளே.

'அத் தன்மை அறிந்த அருந் திறலோன்,
''உய்த்து உய்ம்மின், என் முன்'' என, உய்த்தனரால்;
''பித்துண்டது பேர்வு உறுமா பெறுதும்;
கைத்தும், கடு நஞ்சின்'' எனக் கனலா,* 114

'இட்டார் கடு வல் விடம்; எண்ணுடையான்
தொட்டான் நுகரா, ஒரு சோர்வு இலனால்;
கட்டு ஆர் கடு மத்திகை, கண் கொடியோன்,
விட்டான்; அவன்மேல் அவர் வீசினரால். 115

'வெய்யார், முடிவு இல்லவர், வீசிய போது,
''உய்யான்'' எனும் வேலையினுள், ''உறைவோன்
கை ஆயிரம் அல்ல; கணக்கு இல'' என்று,
எய்யா உலகு யாவையும் எண்ணினனால். 116

இரணியன் – பிரகலாதன் உரையாடல்

' ''ஊனோடு உயிர் வேறு படா உபயம்
தானே உடையன், தனி மாயையினால்;
யானே உயிர் உண்பல்'' எனக் கனலா,
வான் ஏழும் நடுங்கிட, வந்தனனால். 117

'வந்தானை வணங்கி, ''என் மன் உயிர்தான்
எந்தாய்! கொள எண்ணினையேல், இதுதான்
உம் தாரியது அன்று; உலகு யாவும் உடன்
தந்தார் கொள நின்றதுதான்'' எனலும், 118

' ''ஏவரே உலகம் தந்தார்? என் பெயர் ஏத்தி வாழும்
மூவரே? அல்லர் ஆகின், முனிவரே? முழுதும் தோற்ற
தேவரே? பிறரே? யாரே? செப்புதி, தெரிய'' என்றான்,
கோவம் மூண்டு எழுந்தும் கொல்லான், காட்டுமேல் காட்சி கொள்வான்.

' ''உலகு தந்தானும், பல் வேறு உயிர்கள் தந்தானும், உள் உற்று,
உலைவு இலா உயிர்கள்தோறும், அங்கு அங்கே உறைகின்றானும்,
மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும்; மற்றும் கேளாய்!
அலகு இல் பல் பொருளும் பற்றி முற்றிய அரிகாண்—அத்தா!

114. கைத்தல் - வெறுத்தல், ஈண்டுக் கொல்லுதல்; 115. எண்ணுடையான் - இறைவனைத் தியானித்தலையுடையவன் (பிரகலாதன்); கட்டு - முடிச்சு; மத்திகை - குதிரைச் சம்மட்டி; விடுதல் - செலுத்தல். 117. உபயம் - உபாயம்; 118. தாரியது - தரத்தில் உள்ளது, வழிப்பட்டது.

'"என் கணல் நோக்கிக் காண்டற்கு எங்கணும் உளன்காண், எந்தை;
உன்கண் நான் அன்பின் சொன்னல், உறுதி என்று ஒன்றும் கொள்
நின் கணல்நோக்கிக் காண்டற்கு எளியனே—நினக்குப் பின்னேன் [ளாய்;
பொன்கணன் ஆவி உண்ட புண்டரீகக் கண் அம்மான்? 121

'"மூன்று அவன் குணங்கள்; செய்கை மூன்று; அவன் உருவம் மூன்று;
மூன்று கண், சுடர் கொள் சோதி மூன்று; அவன் உலகம் மூன்று;
தோன்றலும் இடையும் ஈறும் தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்று அவன்; இதுவே வேத முடிவு; இது சரதம்" என்றான். 122

'என்றலும், அவுணர் வேந்தன் எயிற்று அரும்பு இலங்க நக்கான்,
"ஒன்றல் இல் பொருள்கள் எல்லாம் ஒருவன் புக்கு உறைவன்—என்றாய்;
நன்று அது கண்டு, பின்னர் நல்லவா புரிதும்; தூணில்
நின்றுளன்என்னின், கள்வன், நிரப்புதி நிலைமை'' என்றான்.

'"சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சத கூறு இட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத் தன்மை
காணுதி விரைவின்" என்றான்; "நன்று" எனக் கனகன் சொன்னான்.

'"உம்பர்க்கும் உனக்கும் ஒத்து, இவ் உலகு எங்கும் பரந்துளானை,
கம்பத்தின் வழியே காண, காட்டுதி; காட்டிடாயேல்,
கும்பத் திண் கரியைக் கோள் மாக் கொன்றென, நின்னைக்கொன்று, உன்
செம்பு ஒத்த குருதி தேக்கி, உடலையும் தின்பென்'' என்றான்.

'"என் உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்று அன்று; யான் முன்
சொன்னவன் தொட்ட தொட்ட இடம்தொறும் தோன்றான் ஆயின்,
என் உயிர் யானே மாய்ப்பல்; பின்னும் வாழ்வு உகப்பல்என்னின்,
அன்னவற்கு அடியேன் அல்லேன்" என்றனன், அறிவின் மிக்கான்.

இரணியன் தூணை அறைய, நரசிங்கம் தோன்றிச் சிரித்தல்

'நகை திறந்து இலங்கப் பொங்கி, "நன்று, நன்று!" என்ன நக்கு,
விசை திறந்து உருமு வீழ்ந்ததென்ன ஓர் தூணின், வென்றி
இசை திறந்து உயர்ந்த கையால் எற்றினன்; எற்றலோடும்,
திசை திறந்து, அண்டம் கீறச் சிரித்தது, அச் செங் கண் சீயம்.

123. ஒன்றல் இல் பொருள்கள் - ஒன்றுபடுதல் இல்லா வேறுபட்ட பொருள்கள்; 125. கும்பம் - மத்தகம்; கோள்மா - வலிய சிங்கம்.

பிரகலாதன் பெருமகிழ்ச்சி

' ''நாடி நான் தருவென்'' என்ற நல் அறிவாளன், நாளும்
தேடி நான்முகனும் காணாச் சேயவன் சிரித்தலோடும்,
ஆடினன்; அழுதான்; பாடி அரற்றினன்; சிரத்தில் செங் கை
சூடினன்; தொழுதான்; ஓடி, உலகு எலாம் துகைத்தான், துள்ளி.

இரணியன் நரசிங்க மூர்த்தியைப் போருக்கு அழைத்தல்

' "ஆர் அடா சிரித்தாய்? சொன்ன அரிகொலோ? அஞ்சிப் புக்க
நீர், அடா, போதாது என்று, நெடுந் தறி நேடினையோ?
போர் அடா? பொருதிஆயின், புறப்படு! புறப்படு!'' என்றான்—
பேர் அடாநின்ற தாளோடு உலகு எலாம் பெயரப் பேர்வான்.

நரசிங்க மூர்த்தி வெளிப்பட்டுப் பெருவடிவு கொள்ளல்

'பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது, சீயம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப் புறத்துச் செய்கை யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும். 130

'மன்றல் அம் துளப மாலை மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றும்; சேவடி படியில் தீண்ட
நின்றது ஓர் பொழுதின், அண்ட நெடு முகட்டு இருந்த முன்னோன்
அன்று அவன் உந்தி வந்தானும் எனத் தோன்றினனால். 131

' ''எத்துணை போதும் கை'' என்று இயம்பினால், எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரே? அந்தத் தானவர் விரிந்த சேனை,
பத்து நூறு அமைந்த கோடி வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலும் மாள, தனித் தனி அள்ளிக் கொண்ட. 132

'ஆயிரங்கோடி வெள்ளத்து அயில் எயிற்று அவுணர்க்கு, அங்கு அங்கு,
ஏயின ஒருவர்க்கு ஓர் ஓர் திருமுகம், இரட்டிப் பொன் தோள்,
தீ எனக் கனலும் செங் கண் சிரம்தொறும் மூன்றும், தெய்வ
வாயினில் கடல்கள் ஏழும், மலைகளும், மற்றும், முற்றும். 133

'முடங்கு வால் உளை அவ் அண்டம் முழுவதும் முடிவில் உண்ணும்
கடம் கொள் வெங் காலச் செந் தீஅதனை வந்து அவிக்கும்; கால
மடங்கலின் உயிர்ப்பும், மற்று அக் காற்றினை மாற்றும்; ஆனால்,
அடங்கலும் பகு வாய் யாக்கை அப் புறத்து அகத்தது அம்மா!

129. பேர் அடா நின்ற தாளோடு - புகழ் பொருந்திய பாதத்தால், (தன் பெயர்) பொருந்தி நிற்றற்குக் காரணமாகிய வலிமையோடு எனலும் ஆம்; 132. கை எத்துணை போதும்? - கைகள் எத்தனை உள்ளன; 134. முடங்கு வால் உளை - வளைந்த தூய்மையான பிடரி மயிர்; கடம் - கடமை; கால மடங்கல் - காலனை ஒத்த நரசிங்கம்; அடங்கலும் - (பிடரி மயிர், உயிர்ப்பு என்னும்) அவ்விரண்டும்; அப் புறம் - மேற்புறம்.

'குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டைக் கூட்டில்
பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள்,—அமுது பல்கும்
எயிற்று வன் பகு வாயுள் புக்கு இருக்குந—இருக்கை எய்தி,
வயிற்றின் வந்து, அந்நாள், இந்நாள் வாழும் மன்னுயிர்கள் மண்ணே.

'நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ, கேடு? நான்முகத்தோன் ஆதி
தொன்மையின் தொடர்ந்த வாய்மை அறத்தொடும் துறந்திலோரை,
அன்வயித்து, ஒரும் தீய அவுணர் அல்லாரை, அந் நாள்,
தன் வயிற்றகத்து வைத்துத் தந்தது, அச் சீயம், தாயின். 136

'பேருடை அவுணர்தம்மைப் பிறை எயிற்று அடக்கும்; பேரா,
பாரிடைத் தேய்க்கும்; மீளப் பகிரண்டத்து அடிக்கும்; பற்றி,
மேருவில் புடைக்கும்; மாள, விரல்களின் பிசையும்; வேலை
நீரிடைக் குமிழி ஊட்டும்; நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்; 137

'வகிர்ப் படுத்து, உரக்கும்; பற்றி வாய்களைப் பிளக்கும்; வன் தோல்
துகிற் படுத்து உரிக்கும்; செந் தீக் கண்களைச் சூலும்; சுற்றிப்
பகிர்ப் படக் குடரைக் கொய்யும்; பசை அறப் பிசையும், பல் கால்;
உகிர்ப் புரைப் புக்கோர்தம்மை உகிர்களால் உறக்கும், ஊன்றி; 138

'யானையும், தேரும், மாவும், யாவையும், உயிர் இராமை,
ஊனொடும் தின்னும்; பின்னை, ஒலி திரைப் பரவை ஏழும்
மீனொடும் குடிக்கும்; மேகத்து உருமொடும் விழுங்கும், விண்ணில்;
தான் ஒடுங்காது என்று, அஞ்சி, தருமமும் சலித்தது அம்மா!

'ஆழி மால் வரையோடு எற்றும், சிலவரை; அண்ட கோளச்
சூழ் இருஞ் சுவரில் தேய்க்கும், சிலவரை; துளக்கு இல் குன்றம்
ஏழினோடு எற்றிக் கொல்லும், சிலவரை; எட்டுத் திக்கும்
தாழ் இருட் பிழம்பின் தேய்க்கும், சிலவரைத் தடக் கை தாக்கி.

'மலைகளின் புரண்டு வீழ, வள் உகிர் நுதியால், வாங்கி,
தலைகளைக் கிள்ளும்; அள்ளித் தழல் எழப் பிசையும்; தக்க
கொலைகளின் கொல்லும்; வாங்கி உயிர்களைக் குடிக்கும்; வான
நிலைகளில் பரக்க, வேலை நீர்களை நிரம்பத் தூர்க்கும்; 141

'முப் புறத்து உலகத்துள்ளும் ஒழிவு அற முற்றும் பற்றி,
தப்புதல் இன்றிக் கொன்று, தையலார் கருவும் தள்ளி,
இப் புறத்து அண்டத்து யாரும் அவுணர் இல்லாமை எற்றி,
அப் புறத்து அண்டம்தோறும் தடவின, சில கை அம்மா! 142

136. அன்வயித்து - சேர்ந்து, பின்தொடர்ந்து; 137. சுரித்தல் - சுருண்டு தீய்தல்; 138. சூலுதல்- தோண்டியெடுத்தல்; பகிர்பட - துண்டுபடுமாறு, சரிந்து விழும்படி எனலும் ஆம்; உகிர்ப் புரை - நகச் சந்துகள்; 140. ஆழி வரை - சக்கரவாள மலை.

'கனகனும், அவனில் வந்த, வானவர் களைகண் ஆன
அனகனும் ஒழிய, பல் வேறு அவுணர் ஆனவரை எல்லாம்
நினைவதன்முன்னம் கொன்று நின்றது—அந் நெடுங் கண் சீயம்.
வனை கழலவனும், மற்று அம் மடங்கலின் வரவு நோக்கி, 143

இரணியன் வாள் ஏந்தி, போருக்கு எழுதல்

'வயிர வாள் உறையின் வாங்கி, வானகம் மறைக்கும் வட்டச்
செயிர் அறு கிடுகும் பற்றி, வானவர் உள்ளம் தீய,
அயிர் படர் வேலை ஏழும் மலைகளும் அஞ்ச, ஆர்த்து, அங்கு
உயிருடை மேரு என்ன வாய் மடித்து, உருத்து நின்றான். 144

பிரகலாதன் சொற்கேளாது, இரணியன் நரசிங்கத்தை எதிர்த்தல்

'நின்றவன்தன்னை நோக்கி, ''நிலை இது கண்டு, நீயும்,
ஒன்றும் உன் உள்ளத்து யாதும் உணர்ந்திலை போலும் அன்றே;
வன் தொழில் ஆழி வேந்தை வணங்குதி; வணங்கவே, உன்
புன் தொழில் பொறுக்கும்'' என்றான்—உலகு எலாம் புகழ நின்றான்.

' ''கேள், இது; நீயும் காண, கிளர்ந்த கோள் அரியின் கேழ் இல்
தோளொடு தாளும் நீக்கி, நின்னையும் துணித்து, பின், என்
வாளினைத் தொழுவது அல்லால், வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?'' என்னா, அண்டங்கள் நடுங்க நக்கான்.

நரசிங்கப்பிரான் இரணியன் மார்பைப் பிளத்தல்

'நகைசெயா, வாயும் கையும் வாளொடு நடந்த தாளும்
புகைசெயா, நெடுந் தீப் பொங்க உருத்து, எதிர் பொருந்தப் புக்கான்;
தொகைசெயற்கு அரிய தோளால் தாள்களால் சுற்றிச் சூழ்ந்தான்—
மிகை செய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும் வினையம் வல்லான்.

'இருவரும் பொருந்தப் பற்றி, எவ் உலகுக்கும் மேல் ஆய்,
ஒருவரும் காணா வண்ணம் உயர்ந்ததற்கு உவமை கூறின்,
வெருவரும் தோற்றத்து, அஞ்சா, வெஞ் சின, அவுணன் மேரு
அரு வரை ஒத்தான்; அண்ணல் அல்லவை எல்லாம் ஒத்தான்.

'ஆர்ப்பு ஒலி முழக்கின், வெவ் வாய் வள் உகிர்ப் பாரம் ஆன்ற
ஏற்று அருங் கரத்தின், பல் வேறு எறி திரைப் பரப்பின் உற்ற
பாற்கடல் பரந்து பொங்கிப் பங்கயத்து ஒருவன் நாட்டின்
மேல் சென்றது ஒத்தான் மாயன்; கனகனும் மேரு ஒத்தான்.

144. கிடுகு - கேடகம்; அயிர் - நுண்ணிய மணல்; 149. நரசிங்கத்தின் கர்ச்சனைக்குக் கடலின் முழக்கமும் கைகளின் தொகுதிக்குக் கடலின் அலைப் பரப்பும் ஒப்பு.

'வாளொடு தோளும், கையும், மகுடமும், மலரோன் வைத்த
நீள் இருங் கனக முட்டை நெடுஞ் சுவர் தேய்ப்ப, நேமி
கோளொடும் திரிவது என்னக் குல மணிக் கொடும் பூண் மின்ன,
தாள் இணை இரண்டும் பற்றிச் சுழற்றினன், தடக் கை ஒன்றால். 150

'சுழற்றிய காலத்து, இற்ற தூங்கு குண்டலங்கள் நீங்கி,
கிழக்கொடு மேற்கும் ஓடி விழுந்தன கிடந்த, இன்றும்
அழல் தரு கதிரோன் தோன்றும் உதயத்தோடு அத்தம் ஆன;
நிழல் தரும், காலை மாலை, நெடு மணிச் சுடரின் நீத்தம். 151

' ''போன்றன இனைய தன்மை; பொருவியது இனையது'' என்று
தான் தனி ஒருவன், தன்னை உரைசெயும் தரத்தினானோ?
வான் தரு வள்ளல் வெள்ளை வள் உகிர் வயிர மார்பின்
ஊன்றலும், உதிர வெள்ளம் பரந்துளது, உலகம் எங்கும். 152

'ஆயவன்தன்னை, மாயன், அந்தியின், அவன் பொன் கோயில்
வாயிலில், மணிக் கவான்மேல், வயிர வாள் உகிரின் வாயின்,
மீ எழு குருதி பொங்க, வெயில் விரி வயிர மார்பு
தீ எழப் பிளந்து நீக்கி, தேவர்கள் இடுக்கண் தீர்த்தான். 153

தேவர்கள் நரசிங்கத்தைக் கண்டு அஞ்சி நிற்றல்

'முக்கணான், எண்கணானும், முளரி ஆயிரம் கணானும்,
திக்கண் ஆம் தேவரோடு முனிவரும், பிறரும், தேடிப்
புக்க நாடு அறிகுறாமல் திரிகின்றார் புகுந்து மொய்த்தார்,
"எக் கணால் காண்டும், எந்தை உருவம்" என்று, இரங்கி நின்றார். 154

'நோக்கினார் நோக்கினார் முன், நோக்குறு முகமும் கையும்
ஆக்கையும் தாளும் ஆகி, எங்கணும் தானே ஆகி,
வாக்கினால் மனத்தினால் மற்று அறிவினால் அளக்க வாரா,
மேக்கு உயர் சீயம்தன்னைக் கண்டனர், வெருவுகின்றார். 155

'பல்லொடு பல்லுக்கு எல்லை ஆயிரக் காதப் பத்தி,
சொல்லிய வதனம் கோடி கோடி மேல் விளங்கித் தோன்ற,
எல்லை இல் உருவிற்று ஆகி இருந்ததை எதிர நோக்கி,
அல்லி அம் கமலத்து அண்ணல் அவன் புகழ் விரிப்பதானான்:

151. நெடு மணி - (அக் குண்டலத்தில் பதித்த) சிறந்த மாணிக்கம்; 152. இனைய தன்மை - (இவனுடைய) இவ்வியல்புகள்; போன்றன - (இன்னாருடைய இயல்புகளை) ஒத்தன; இனையது - இன்னதொரு பொருள்; பொருவியது - (இவனை) ஒத்தது.

நரசிங்க மூர்த்தியைப் பிரமன் துதித்தல்

'''தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும் பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால், உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்து ஆமோ? 157

'''பல் ஆயிர கோடி அண்டம், பனிக் கடலுள்
நில்லாத மொக்குள் என, தோன்றுமால், நின்னுழையே;
எல்லா உருவமுமாய் நின்றக்கால், இவ் உருவம்
வல்லே படைத்தால், வரம்பு இன்மை வாராதோ? 158

'''பேரை ஒரு பொருட்கே பல் வகையால் பேர்த்து எண்ணும்
தாரை நிலையை; தமியை; பிறர் இல்லை;
யாரைப் படைக்கின்றது? யாரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது?—ஐயா!—அறியேமால், 159

'''நின்னுளே என்னை நிருமித்தாய்; நின் அருளால்,
என்னுளே, எப் பொருளும் யாவரையும் யான் ஈன்றேன்;
பின் இலேன்; முன் இலேன்; எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர் பொற்கலனே போல்கின்றேன்.'

சிங்கப் பெருமான் சீற்றம் தணிந்து, தேவர்கட்கு அபயம் அளித்தல்

'என்று ஆங்கு இயம்பி, இமையாத எண்கணனும்,
வன் தாள் மழுவோனும், யாரும், வணங்கினரால்
நின்றார், இரு மருங்கும்; நேமிப் பெருமானும்,
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான். 161

''எஞ்சும், உலகு அனைத்தும் இப்பொழுதே'' என்று என்று,
நெஞ்சு நடுங்கும் நெடுந் தேவரை நோக்கி,
''அஞ்சன்மின்'' என்னா, அருள் சுரந்த நோக்கினால்,
கஞ்ச மலர் பழிக்கும் கை அபயம் காட்டினான். 162

157. பெரும் பெருமை - விசுவம் எனப்படும் பிரபஞ்சம்; உன்னை - உன் கண்; ஏத்து - (உன்னைப் போற்றிய) புகழுரை; 158. நீயே உலகத்துக் காணும் எல்லாப் பொருளுமாகி இருக்கையில், புதியதொரு வடிவினைப் படைத்துக் கொள்வாயாயின் உன் படைப்புத் தொழிலில் வரம்பின்மை என்னும் குற்றம் வாராதோ? என்பது கருத்து; 159. தாரை நிலை - ஒழுங்கான நிலை; 160. பின் - காரியம்; முன் - காரணம்; இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையே அமைந்த தொடர்பு, பொன்னுக்கும் அதனால் இயன்று அதனின் வேறாகாத அணிகலன்களுக்கும் உள்ள சம்பந்தம் போன்று அபேத சம்பந்தம் என்பது ஈற்றடியின் கருத்து.

திருமகள் வருதலும், சிங்கப்பிரான் நோக்குதலும்

'பூவில் திருவை, அழகின் புனை கலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடு என்னும் இன்பத்தை,
ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம் மோயை, ஏவினார், பாற் செல்ல. 163

'செந் தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை, நறுந் தாள் இளங் கொழுந்தை,
முந்தா உலகும் உயிரும் முறை முறையே
தந்தாளை, நோக்கினான், தன் ஒப்பு ஒன்று இல்லாதான். 164

பிரகலாதனை நோக்கிச் சிங்கப் பெருமான் இயம்பிய அருள்மொழி

'தீது இலா ஆக உலகு ஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான்; கண்ட முனிக் கணங்கள்
ஓதினார், சீர்த்தி; உயர்ந்த பரஞ்சுடரும்,
நோதல் ஆங்கு இல்லாத அன்பனையே நோக்கினான். 165

'"உந்தையை உன்முன் கொன்று, உடலைப் பிளந்து அளைய,
சிந்தை தளராது, அறம் பிழையாச் செய்கையாய்!
அந்தம் இலா அன்பு என்மேல் வைத்தாய்! அளியத்தாய்!
எந்தை! இனி இதற்குக் கைம்மாறு யாது?" என்றான். 166

'"அயிரா இமைப்பினை ஓர் ஆயிரம் கூறு இட்ட
செயிரின் ஒரு பொழுதில், நுந்தையை யாம் சீறி,
உயிர் நேடுவேம்போல், உடல் அளைய, கண்டும்
செயிர் சேரா உள்ளத்தாய்க்கு, என் இனி யாம் செய்கேம்?†

'"கொல்லேம், இனி உன் குலத்தோரை, குற்றங்கள்
எல்லை இலாதன செய்தாரே என்றாலும்;
நல்லேம், உனக்கு எம்மை; நாணமல், நாம் செய்வது
ஒல்லை உளதேல், இயம்புதியால்" என்று உரைத்தான். 168

பிரகலாதன் வரமும், சிங்கப் பெருமான் அருளும்

'"முன்பு பெறப்பெற்ற பேறே முடிவு இல்லை;
பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுகுவெனேல்,
என்பு பெறாத இழி பிறவி எய்தினும், நின்
அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்" என்றான். 169

163. மோய் - தாய்; 165. சீர்த்தி - மிகு புகழ்; 167. அயிரா - நுண்ணிதாக; 168. எம்மை - எப் பிறப்பும்.

'அன்னானை நோக்கி, அருள் சுரந்த நெஞ்சினன் ஆய்,
''என் ஆனை வல்லன்'' என மகிழ்ந்த பேர் ஈசன்,
''முன் ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்,
உன் நாள் உலவாய் நீ, என் போல் உளை'' என்றான். 170

'''மின்னைத் தொழு வளைத்தது என்ன மிளிர் ஒளியாய்!
முன்னைத் தொழும்புக்கே ஆம் அன்றோ, மூஉலகும்?
என்னைத் தொழுது ஏத்தி எய்தும் பயன் எய்தி,
உன்னைத் தொழுது ஏத்தி, உய்க, உலகு எல்லாம். 171

'''ஏனவர்க்கு வேண்டின், எளிது ஒன்றோ?—எற்கு அன்பர்
ஆன வர்க்கம் எல்லாம் நினக்கு அன்பர் ஆயினார்;
தானவர்க்கு வேந்தன் நீ என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே இறை—தொல் மறை வல்லோய்! 172

'''நல் அறமும் மெய்ம்மையும், நான்மறையும், நல் அருளும்,
எல்லை இலா ஞானமும், ஈறு இலா எப் பொருளும்,
தொல்லை சால் எண் குணனும், நின் சொல் தொழில் செய்ய,
மல்லல் உரு ஒளியாய்! நாளும் வளர்க, நீ!'' 173

பிரகலாதனுக்கு முடி சூட்ட ஆவன புரியுமாறு தேவர்களைப் பணித்தல்

'என்று வரம் அருளி, ''எவ் உலகும் கைகூப்ப,
முன்றில் முரசம் முழங்க, முடி சூட்ட,
நின்ற அமரர் அனைவீரும் நேர்ந்து, இவனுக்கு
ஒன்று பெருமை உரிமை புரிக!'' என்றான். 174

பிரகலாதன் முடிசூடி மூன்று உலகையும் ஆளுதல்

'தே மன், உரிமை புரிய, திசை முகத்தோன்
ஓமம் இயற்ற, உடையான் முடி சூட்ட,
கோ மன்னவன் ஆகி, மூஉலகும் கைக்கொண்டான்—
நாம மறை ஓதாது ஓதி, நனி உணர்ந்தான். 175

170. ஆனை - அருமை பாராட்டிக் கூறுவதோர் சொல் விழுக்காடு; 171. மின்னைத் தொழு வளைத்தது என்ன - தோன்றி உடன் மறையும் மின்னலை (மறைய ஒட்டாமல்) தொழுமரத்தில் பிடித்து அகப்படுத்தி வைத்தாற்போன்று; தொழும்பு - அடித்தொண்டு; 175. தே மன் - தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன்; உடையான் - எல்லா உலகங்களையும் உடையவனாகிய திருமால், ஈண்டுச் சிங்கப் பெருமான்.

வீடணன் முடிவுரை

'ஈது ஆகும், முன் நிகழ்ந்தது; எம்பெருமான்! என் மாற்றம்
யாதானும் ஆக நினையாது, இகழ்தியேல்,
தீது ஆய் விளைதல் நனி திண்ணம்' எனச் செப்பினன்—
மேதாவிகட்கு எல்லாம் மேலான மேன்மையான். 176

4 வீடணன் அடைக்கலப் படலம்

இராவணன் சினந்து வீடணனைத் துரத்துதல்

கேட்டனன் இருந்தும், அக் கேள்வி தேர்கலாக்
கோட்டிய சிந்தையான், உறுதி கொண்டிலன்,—
மூட்டிய தீ என முடுகிப் பொங்கினன்—
ஊட்டு அரக்கு ஊட்டிய அனைய ஒண் கணன். 1

'''இரணியன் என்பவன் எம்மனோரினும்
முரணியன்; அவன்தனை முருக்கி முற்றினன்,
அரணியன்'' என்று, அவற்கு அன்பு பூண்டனை—
மரணம் என்று ஒரு பொருள் மாற்றும் வன்மையோய்! 2

'ஆயவன் வளர்த்த தன் தாதை யாக்கையை
மாயவன் பிளந்திட மகிழ்ந்த மைந்தனும்,
ஏயும் நம் பகைஞனுக்கு இனிய நண்பு செய்
நீயுமே நிகர்; பிறர் நிகர்க்க நேர்வரோ? 3

'பாழி சால் இரணியன் புதல்வன் பண்பு என,
சூழ்வினை முற்றி, யான் அவர்க்குத் தோற்றபின்,
ஏழை நீ என் பெருஞ் செல்வம் எய்தி, பின்
வாழவோ கருத்து? அது வர வற்று ஆகுமோ? 4

'முன்புற அனையர்பால் அன்பு முற்றினை;
வன் பகை மனிதரின், வைத்த வன்பினை;
என்பு உற உருகுதி; அழுதி; ஏத்துதி;
உன் புகல் அவர்; பிறிது உரைக்க வேண்டுமோ? 5

4: 1. கோட்டிய - நேர்மையின்றிச் சென்ற; 2. முரணியன் - வலிமையுடையவன்; முரண் - வலிமை; அரணியன் - பாதுகாப்பவன்; அரண் - பாதுகாப்பு; 4. பாழி - வலிமை; வரவற்று - நிகழக்கூடியது; 5. முன்புற - முன்னதாக.

'நண்ணினை மனிதர்பால் நண்பு பூண்டனை;
எண்ணினை செய்வினை; என்னை வெல்லுமாறு
உன்னினை; அரசின்மேல் ஆசை ஊன்றினை;
திண்ணிது உன் செயல்; பிறர் செறுநர் வேண்டுமோ? 6

'அஞ்சினை ஆதலின், அமர்க்கும் ஆள்அலை;
தஞ்சு என மனிதர்பால் வைத்த சார்பினை;
வஞ்சனை மனத்தினை; பிறப்பு மாறினை;
நஞ்சினை உடன் கொடு வாழ்தல் நன்மையோ? 7

'பழியினை உணர்ந்து, யான் படுக்கிலேன், உனை;
ஒழி, சில புகலுதல்; ஒல்லை நீங்குதி;
விழி எதிர் நிற்றியேல், விளிதி' என்றனன்—
அழிவினை எய்துவான், அறிவு நீங்கினான். 8

வீடணன் வானில் எழுந்து, நீதி பல மொழிதல்

என்றலும், இளவலும் எழுந்து, வானிடைச்
சென்றனன்; துணைவரும் தானும் சிந்தியா-
நின்றனன்; பின்னரும், நீதி சான்றன,
ஒன்று அல பலப்பல, உறுதி ஓதினான்: 9

'வாழியாய்! கேட்டியால்: வாழ்வு கைம்மிக
ஊழி காண்குறு நினது உயிரை ஓர்கிலாய்,
கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ?
வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு, வாய்க்குமோ? 10

'புத்திரர், குருக்கள், நின் பொரு இல் கேண்மையர்,
மித்திரர், அடைந்துளோர், மெலியர், வன்மையோர்,
இத்தனை பேரையும், இராமன் வெஞ் சரம்
சித்திரவதை செயக் கண்டு, தீர்தியோ? 11

வீடணன் இலங்கை விட்டுப் போதல்

'எத்துணை வகையினும் உறுதி எய்தின,
ஒத்தன, உணர்த்தினேன்; உணரகிற்றிலை;
அத்த! என் பிழை பொறுத்தருளுவாய்' என,
உத்தமன் அந் நகர் ஒழியப் போயினான். 12

6. நண்ணினை - மனத்தால் அவர்களை அடைந்தாய்; 7. தஞ்சு - புகலிடம்; சார்பு - பற்று; 10. வாழ்மை - வாழ்க்கை.

அனலனும், அனிலனும், அரன், சம்பாதியும்
வினையவர் நால்வரும், விரைவின் வந்தனர்:—
கனை கழல் காலினர், கருமச் சூழ்ச்சியர்,—
இனைவரும் வீடணனோடும் ஏயினர். 13

அரக்கனும், ஆங்கண் ஓர் அமைச்சர் நால்வரும்,
'குரக்கு இனத்தவரொடும் மனிதர், கொள்ளை நீர்க்
கரைக்கண் வந்து இறுத்தனர்' என்ற காலையில்,
'பொருக்கென எழுதும்' என்று எண்ணிப் போயினர். 14

வீடணன் வானரத் தானையைக் கண்டு, வியத்தல்

அளக்கரைக் கடந்து, மேல் அறிந்து, நம்பியும்,
விளக்கு ஒளி பரத்தலின், பாலின் வெண் கடல்
வளத் தடந் தாமரை மலர்ந்ததாம் என,
களப் பெருந் தானையைக் கண்ணின் நோக்கினன். 15

'ஊனுடை உடம்பின உயிர்கள் யாவையும்
ஏனைய ஒரு தலை நிறுத்தி எண்ணினல்,
வானரம் பெரிது' என, மறு இல் சிந்தையான்,
தூ நிறச் சுடு படைத் துணைவர்ச் சொல்லினன்: 16

மேலே செய்வன குறித்து அமைச்சரை வீடணன் வினுதல்

'அறம்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனென்;
மறந்தும் நன் புகழ் அலால் வாழ்வு வேண்டலென்;
''பிறந்த என் உறுதி நீ பிடிக்கலாய்'' எனத்
துறந்தனென்; இனிச் செயல் சொல்லுவீர்' என்றான். 17

இராமனைக் காணுமாறு அமைச்சர்கள் கூற, வீடணன் மகிழ்ந்து கூறுதல்

'மாட்சியின் அமைந்தது வேறு மற்று இலை;
தாட்சி இல் பொருள் தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக் கடன்' என்று, கல்வி சால்
சூட்சியின் கிழவரும், துணிந்து சொல்லினர். 18

'நல்லது சொல்லினீர்; நாமும், வேறு இனி
அல்லது செய்துமேல், அரக்கர் ஆதுமால்;
எல்லை இல் பெருங் குணத்து இராமன் தாள் இணை
புல்லுதும்; புல்லி, இப் பிறவி போக்குதும். 19

15. களப் பெருந் தானை - போர்க்களத்திற்குச் செல்லும் (அந்தப்) பெரிய வானரப்படை; 17. பிறந்த - உடன்பிறந்த; 18. தாட்சி - தாழ்ச்சி; சூட்சி - சூழ்ச்சி.

'முன்புறக் கண்டிலென்; கேள்வி முன்பு இலென்;
அன்பு உறக் காரணம் அறியகிற்றிலேன்;
என்பு உறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
புன் புறப் பிறவியின் பகைஞன் போலுமால். 20

'ஆதி அம் பரமனுக்கு அன்பும், நல் அறம்
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும், நான் விரும்பிப் பெற்றனென்—
போது உறு கிழவனைத் தவம் முன் பூண்ட நாள். 21

'ஆயது பயப்பது ஓர் அமைதி ஆயது;
தூயது, நினைந்தது; தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி, நம் மனத்து
ஏயது முடித்தும்' என்று இனிது மேயினன். 22

'இருளிடை எய்துவது இயல்பு அன்றும்' என,
பொருள் உற உணர்ந்த அப் புலன் கொள் கேள்வியார்,
மருளுறு சோலையின் மறைந்து வைகினர்;
உருளுறு தேரவன் உதயம் எய்தினன். 23

இராமன் கடற்கரைப் பகுதிகளைக் காணல்

அப் புறத்து, இராமன், அவ் அலங்கு வேலையைக்
குப்புறக் கருதுவான், குவளை நோக்கிதன்
துப்பு உறச் சிவந்த வாய் நினைந்து சோர்குவான்,
இப் புறத்து இருங் கரை மருங்கின் எய்தினன். 24

கானலும் கழிகளும், மணலும், கண்டலும்,
பானலும் குவளையும், பரந்த புன்னையும்,
மேல் நிறை அன்னமும் பெடையும், வேட்கை கூர்
பூ நிறை சோலையும், புரிந்து நோக்கினன்.† 25

தரளமும், பவளமும், தரங்கம் ஈட்டிய
திரள் மணிக் குப்பையும், கனக தீரமும்,
மருளும் மென் பொதும்பரும், மணலின் குன்றமும்,
புரள் நெடுந் திரைகளும், புரிந்து நோக்கினன்.* 26

20. புன் புறம் - புல்லிதாகிய உடம்பு; 22. தொல்லை நாயகன் - பழமையான தலைவன்; 25. கானல் - கடற்கரைச் சோலை; கண்டல் - தாழை; பானல் - கரு நெய்தல்; 26. கனக தீரம் - பொன் துகள் நிறைந்த கரைப் பரப்பு.

மின் நகு மணி விரல் தேய, வீழ் கணீர்
துன்ன அரும் பெருஞ் சுழி அழிப்ப, சோர்வினேடு
இன் நகை நுளைச்சியர் இழைக்கும் ஆழி சால்
புன்னை அம் பொதும்பரும் புக்கு, நோக்கினுன்.* 27

இயற்கைக் காட்சிகளால் இராமன் கவலை கொள்ளல்

கூதிர் நுண் குறும் பனித் திவலைக் கோவை கால்,
மோதி வெண் திரை வர, முட வெண் தாழைமேல்,
பாதி அம் சிறையிடைப் பெடையைப் பாடு அணைத்து
ஓதிமம் துயில்வ கண்டு, உயிர்ப்பு வீங்கினுன். 28

அருந்துதற்கு இனிய மீன் கொணர, அன்பினுல்
பெருந் தடங் கொம்பிடைப் பிரிந்த சேவலை,
வருந் திசை நோக்கி, ஓர் மழலை வெண் குருகு,
இருந்தது கண்டு நின்று, இரக்கம் எய்தினுன். 29

ஒரு தனிப் பேடைமேல் உள்ளம் ஓடலால்,
பெரு வலி வயக் குருகு இரண்டும் பேர்கில,
திருகு வெஞ் சினத்தன, தெறு கண் தீ உகப்
பொருவன கண்டு, தன் புருவம் கோட்டினுன். 30

உள் நிறை ஊடலில் தோற்ற ஓதிமம்
கண்ணுறு கலவியில் வெல்லக் கண்டவன்,
தண் நிறப் பவள வாய் இதழை, தற் பொதி
வெண் நிற முத்தினுல், அதுக்கி, விம்மினுன். 31

சுக்கிரீவன் முதலியோர் சொற்களால் இராமன் மெலிவு நீங்குதல்

இத் திறம் எய்திய காலை, எய்துறும்
வித்தகர் சொற்களால் மெலிவு நீங்கினுன்
ஒத்தனன் இராமனும், உணர்வு தோன்றிய
பித்தரின், ஒரு வகை பெயர்ந்து போயினுன். 32

வீடணன் வருகை

உறைவிடம் எய்தினுன், ஒருங்கு கேள்வியின்
துறை அறி துணைவரோடு இருந்த சூழலில்,
முறை படு தானையின் மருங்கு முற்றினுன்—
அறை கழல் வீடணன், அயிர்ப்பு இல் சிந்தையான். 33

27. ஆழி - கூடற் சுழி; 28. பாதி அம் சிறையிடை - ஒரு பக்கத்துச் சிறகுக்குள்; 30. குருகு - நாரை; 31. கண்ணுறுதல் - இரண்டு உடம்பும் ஒன்றுபடுதல்; கண் - உடம்பு; 33. முற்றுதல் - சேர்தல்.

வீடணனை வானரர் எதிர்த்தல்

முற்றிய குரிசிலை, 'முழங்கு தானையின்
உற்றனர், நிருதர் வந்து' என்ன ஒன்றினார்,
'எற்றுதிர்; பற்றுதிர்; எறிதிர்' என்று, இடை
சுற்றினர்—உரும் எனத் தெழிக்கும் சொல்லினார். 34

'தந்தது தருமமே கொணர்ந்துதான்; இவன்
வெந் தொழில் தீவினை பயந்த மேன்மையான்,
வந்தனன் இலங்கையர் மன்னன் ஆகும்; நம்
சிந்தனை முடிந்தன' என்னும் சிந்தையார். 35

''இருபது கரம்; தலை ஈர்-ஐந்து'' என்னும் அத்
திருவிலிக்கு அன்னவை சிதைந்தவோ?' என்பார்,
'பொரு தொழில் எம்மொடும் பொருதி, போர்' என்பார்,
ஒருவரின் ஒருவர் சென்று, உறுக்கி ஊன்றுவார். 36

'பற்றினம் சிறையிடை வைத்து, பாருடைக்
கொற்றவர்க்கு உணர்த்துதும்' என்று கூறுவார்;
'எற்றுவது அன்றியே, இவனைக் கண்டு, இறை
நிற்றல் என், பிறிது?' என நெருக்கி நேர்குவார். 37

'இமைப்பதன்முன் விசும்பு எழுந்து போய பின்,
அமைப்பது என், பிறிது? இவர் அரக்கர் அல்லரோ?
சமைப்பது கொலை அலால், தக்கது யாவதோ?
குமைப்பது நலன்' என முடுகிக் கூறுவார். 38

அனுமன் ஏவலால், மயிந்தனும் துமிந்தனும் வருதல்

இயைந்தன இயைந்தன இனைய கூறலும்,
மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினார்,
அயிந்திரம் நிறைந்தவன் ஆணை ஏவலால்,
நயம் தெரி காவலர் இருவர், நண்ணினார். 39

விலக்கினர் படைஞரை; வேதம், நீதி நூல்,
இலக்கணம், நோக்கிய இயல்பர் எய்தினார்,—
'சலக் குறி இலர்' என, அருகு சார்ந்தனர்—
புலக் குறி அற நெறி பொருந்த நோக்கினார். 40

36. உறுக்கி - வெகுண்டு; ஊன்றுதல் - எதிர்த்தல்; 38. குமைப்பது - அழிப்பது; 39. அயிந்திரம் நிறைந்தவன் - அனுமன்; அயிந்திரம் - இந்திரனால் செய்யப்பட்ட வடமொழி இலக்கணம்; 40. சலக் குறி - வஞ்சகச் செய்கை; புலக் குறி - ஞானமுடைமைக்குரிய அடையாளம்.

மயிந்தன் வினவும், அனலன் விடையும்

'யார்? இவண் எய்திய கருமம் யாவது?
போர்அது புரிதிரோ? புறத்து ஓர் எண்ணமோ?
சார்வு உற நின்ற நீர் சமைந்தவாறு எலாம்,
சோர்விலீர், மெய்ம் முறை, சொல்லுவீர்' என்றான். 41

'பகலவன் வழி முதல், பாரின் நாயகன்,
புகல் அவன் கழல் அடைந்து, உய்யப் போந்தனன்—
தகவு உறு சிந்தையன், தரும நீதியன்,
மகன் மகன் மைந்தன் நான்முகற்கு, வாய்மையான். 42

'அற நிலை வழாமையும், ஆதி மூர்த்திபால்
நிறைவரு நேயமும், நின்ற வாய்மையும்,
மறையவர்க்கு அன்பும் என்று இனைய, மா மலர்
இறையவன் தர, நெடுந் தவத்தின் எய்தினான். 43

' ''சுடு தியைத் துகிலிடைப் பொதிந்து, துன்மதி!
இடுதியே, சிறையிடை இறைவன் தேவியை;
விடுதியேல் உய்குதி; விடாது வேட்டியேல்,
படுதி'' என்று உறுதிகள் பலவும் பன்னினான். 44

'மறம் தரு சிந்தையன், மதியின் நீங்கினான்,
''பிறந்தனை பின்பு; அதின் பிழைத்தி; பேர்குதி;
இறந்தனை, நிற்றியேல்'' என்ன, இன்னவன்
துறந்தனன்' என விரித்து, அனலன் சொல்லினான். 45

மயிந்தன் இராமனிடம் சென்று செய்தி தெரிவித்தல்

மயிந்தனும் அவ் உரை மனத்து வைத்து, 'நீ
இயைந்தது நாயகற்கு இயம்புவேன்' எனா,
பெயர்ந்தனன்—'தம்பியும், பெயர்வு இல் சேனையும்,
அயர்ந்திலிர் காமின்' என்று அமைவது ஆக்கியே. 46

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்,
மருவ அரும் பெருமையும் பொறையும் வாயிலாய்,
கருணை அம் கோயிலுள் இருந்த கண்ணனை,
அருள் நெறி எய்திச் சென்று, அடி வணங்கினான். 47

45. அதின் பிழைத்தி - அதனால் பிழைத்திருக்கின்றாய்; 46. தம்பி - துமிந்தன்; 47. வேலி - மதில்.

'உண்டு, உரை உணர்த்துவது, ஊழியாய்!' எனப்
புண்டரீகத் தடம் புரையும் பூட்சியான்,
மண்டிலச் சடை முடி துளக்கி, 'வாய்மையாய்!
கண்டதும் கேட்டதும் கழறுவாய்' என்றான். 48

'விளைவினை அறிந்திலம்; வீடணப் பெயர்
நளிர் மலர்க் கையினன், நால்வரோடு உடன்,
களவு இயல் வஞ்சனை இலங்கை காவலற்கு
இளவல், நம் சேனையின் நடுவண் எய்தினான். 49

' ''கொல்லுமின், பற்றுமின்'' என்னும் கொள்கையான்,
பல் பெருந் தானை சென்று அடர்க்கப் பார்த்து, யான்,
''நில்லுமின்'' என்று, ''நீர் யாவிர்? நும் நிலை
சொல்லுமின்'' என்ன, ஓர் துணைவன் சொல்லினான்: 50

' ''முரண் புகு தீவினை முடித்த முன்னவன்
கரண் புகு சூழலே சூழ, காண்பது ஓர்
அரண் பிறிது இல் என, அருளின் வேலையைச்
சரண் புகுந்தனன்'' என முன்னம் சாற்றினான். 51

' ''ஆயவன், தருமமும், ஆதி மூர்த்திபால்
மேயது ஓர் சிந்தையும், மெய்யும், வேதியர்
நாயகன் தர, நெடுந் தவத்தின், நண்ணினன்;
தூயவன்'' என்பது ஓர் பொருளும் சொல்லினான். 52

' ''கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்,
எற்புடைக் குன்றம் ஆம் இலங்கை; ஏழை! நின்
பொற்புடை முடித் தலை புரளும்—என்று ஒரு
நற் பொருள் உணர்த்தினன்'' என்றும் நாட்டினான். 53

'ஏந்து எழில் இராவணன், ''இனைய சொன்ன நீ
சாம் தொழிற்கு உரியை, என் சார்பு நிற்றியேல்;
ஆம் தினைப் பொழுதினில் அகறியால்—எனப்
போந்தனன்'' என்றனன்; புகுந்தது ஈது' என்றான். 54

48. மண்டிலம் - வட்டம்; 49. நளிர் - குளிர்ச்சி; 51. கரண் புகு சூழல் - மனம் சென்ற வழி; கரண் - கரணம், அந்தக்கரணம்; அருளின் வேலை - இராமன்; 53. எற்பு - எலும்பு.

இராமன், வீடணன் அடைக்கலம் குறித்து நண்பர்களோடு ஆராய்தல்

அப் பொழுது, இராமனும், அருகில் நண்பரை,
'இப் பொருள் கேட்ட நீர் இயம்புவீர்—இவன்
கைப்புகற்பாலனோ? கழியற்பாலனோ?—
ஒப்புற நோக்கி, நும் உணர்வினால்' என்றான் 55

சுக்கிரீவன் கூற்று

தட மலர்க் கண்ணனைத் தடக் கை கூப்பி நின்று,
'இடன் இது; காலம் ஈது' என்ன எண்ணுவான்,
கடன் அறி காவலன் கழறினான்அரோ—
சுடர் நெடு மணி முடிச் சுக்கிரீவனே: 56

'நனி முதல் வேதங்கள் நான்கும், நாம நூல்
மனு முதல் யாவையும், வரம்பு கண்ட நீ,
இனையன கேட்கவோ, எம்மனோர்களை
வினவிய காரணம்?—விதிக்கும் மேல் உளாய்! 57

'ஆயினும், விளம்புவென், அருளின் ஆழியாய்!
ஏயினதுஆதலின், ''அறிவிற்கு ஏற்றன,
தூய அன்று'' என்னினும், ''துணிவு அன்று'' என்னினும்,
மேயது கேட்டியால்; வினைவு நோக்குவாய். 58

'வெம் முனை விளைதலின் அன்று; வேறு ஒரு
சும்மையான் உயிர் கொளத் துணிதலால் அன்று;
தம்முனைத் துறந்தது, தரும நீதியோ?
செம்மை இல் அரக்கரில் யாவர் சீரியோர்? 59

'தகை உறு தம்முனை, தாயை, தந்தையை,
மிகை உறு குரவரை, உலகின் வேந்தனை,
பகை உற வருதலும், துறந்த பண்பு இது
நகையுறல் அன்றியும், நயக்கற்பாலதோ? 60

'வேண்டுழி இனியன விளம்பி, வெம் முனை
பூண்டுழி, அஞ்சி, வெஞ் செருவில் புக்கு உடன்
மாண்டு ஒழிவு இன்றி, நம் மருங்கு வந்தவன்
ஆண்தொழில், உலகினுக்கு ஆணி ஆம் அன்றே? 61

55. கைப்புகல் - (நம்) பக்கம் சேர்தல்; 59. வெம்முனை - கொடிய போர்; சும்மை - பழிக்கத்தக்க செயல்; 60. மிகை - மேம்பாடு, சிறப்பு; 61. ஆண் தொழில், உலகினுக்கு ஆணி - இகழ்ச்சிக் குறிப்புகள்.

'மிகைப் புலம் தருமமே வேட்ட போது, அவர்
தொகைக் குலம் துறந்து போய்ச் சார்தல் அன்றியே,
நகைப் புலம் பொதுவுற நடந்து, நாயக!
பகைப் புலம் சார்தலோ? பழியின் நீங்குமோ? 62

'வார்க்குறு வனை கழல் தம்முன் வாழ்ந்த நாள்,
சீர்க்கு உறவு ஆய், இடைச் செறுநர் சீறிய
போர்க்கு உறவு அன்றியே போந்த போது, இவன்
ஆர்க்கு உறவு ஆகுவன்?—அருளின் ஆழியாய்! 63

'ஒட்டிய கனக மான் உருவம் ஆகிய
சிட்டனும், மருமகன் இழைத்த தீவினை
கிட்டிய போதினில், தவமும் கேள்வியும்
விட்டது கண்டும், நாம் விடாது வேட்டுமோ? 64

'கூற்றுவன்தன்னொடு எவ் உலகும் கூடி வந்து
ஏற்றன என்னினும், வெல்ல ஏற்றுளம்;
மாற்றவன் தம்பி நம் மருங்கு வந்து, இவண்
தோற்றுமோ? அன்னவன் துணைவன் ஆகுமோ? 65

' ''அரக்கரை ஆசு அறக் கொன்று, நல் அறம்
புரக்க வந்தனம்'' எனும் பெருமை பூண்ட நாம்,
இரக்கம் இல் அவரையே துணைக் கொண்டு ஏற்றும் ஏல்,
''சுருக்கம் உண்டு அவர் வலிக்கு'' என்று தோன்றுமால். 66

'விண்டுழி, ஒரு நிலை நிற்பர்; மெய்ம் முகம்
கண்டுழி, ஒரு நிலை நிற்பர்; கைப் பொருள்
கொண்டுழி, ஒரு நிலை நிற்பர்; கூழுடன்
உண்டுழி, ஒரு நிலை நிற்பர்—உற்றவர். 67

'வஞ்சனை இயற்றிட வந்தவாறு அலால்,
''தஞ்சு'' என நம்வயின் சார்ந்துளான்அலன்;
நஞ்சினின் கொடியனை நயந்து கோடியோ?—
அஞ்சன வண்ண!' என்று, அறியக் கூறினான். 68

62. மிகைப்புலம் - மேம்பட்ட அறிவு; 63. வார்க்குறு - உருக்கி வார்த்துச் செய்யப்பட்ட; 64. சிட்டன் - பெரியோன் (மாரீசன்), இகழ்ச்சிக் குறிப்பு; 66. ஏற்றும் ஏல் - ஏற்றுக்கொண்டோம் என்றால்; சுருக்கம் - குறைவு; 67. விண்டுழி - பிரிந்த காலத்தில்; கூழ் - உணவு.

சாம்பன் கருத்து

அன்னவன் பின்னுற, அலகு இல் கேள்வியின்
தன் நிகர் பிறர் இலாத் தகைய சாம்பனை,
'என்னை உன் கருத்து?' என இறை வினயினன்;
தொன் முறை நெறி தெரிந்து, அவனும் சொல்லுவான்: 69

'அறிஞரே ஆயினும், அரிய தெவ்வரைச்
செறிஞரே ஆவரேல், கெடுதல் திண்ணமாம்;
நெறிதனை நோக்கினும், நிருதர் நிற்பது ஓர்
குறி நனி உளது என உலகம் கொள்ளுமோ? 70

'வெற்றியும் தருகுவர், வினயம் வேண்டுவர்,
முற்றுவர், உறு குறை முடிப்பர், முன்பினல்—
உற்றுறு நெடும் பகை உடையர். அல்லதூஉம்,
சிற்றினத்தவரொடும் செறிதல் சீரிதோ? 71

'வேதமும் வேள்வியும் மயக்கி, வேதியர்க்கு
ஏதமும், இமையவர்க்கு இடரும், ஈட்டிய
பாதகர் நம்வயின் படர்வராம்எனின்,
தீது இலராய், நமக்கு அன்பு செய்வரோ? 72

'கைப் புகுந்து, உறு சரண் அருளிக் காத்துமேல்,
பொய்க் கொடு வஞ்சனை புணர்த்த போதினும்,
மெய்க் கொள விளியினும், "விடுதும்" என்னினும்,
திக்கு உறும், நெடும் பழி; அறமும் சீறுமால். 73

'மேல் நனி விளைவது விளம்ப வேண்டுமோ?
கானகத்து இறைவியோடு உறையும் காலையில்,
மான் என வந்தவன் வரவை மானும், இவ்
ஏனையன் வரவும்' என்று இனைய கூறினன். 74

தானை நாயகன் நீலன் கருத்து

பால்வரு பனுவலின் துணிவு பற்றிய
சால் பெருங் கேள்வியன், தானை நாயகன்,
நீலனை, 'நின் கருத்து இயம்பு, நீ' என
மேலவன் விளம்பலும், விளம்பல் மேயினன்: 75

70. செறிஞர் - சேர்ந்தவர்; 73. மெய்க் கொள விளிதல் - (இவர்களால் நம்முடைய) உடலையே பிறர் கொள்ளும்படி (நமக்குச்) சாவு நேரிடுதல்; உண்மைத் தன்மை புலப்பட (நம்மை) வெகுண்டு மாறுபடல் எனலும் ஆம்; 75. பால்வரு பனுவல் - பல பகுப்புப் பொருந்திய நூல்கள்.

'பகைவரைத் துணை எனப் பற்றற்பால ஆம்
வகை உள; அன்னவை—வரம்பு இல் கேள்வியாய்!—
தொகையுறக் கூறுவென்; ''குரங்கின் சொல்'' என
நகையுறல் இன்றியே, நயந்து கேட்டியால்! 76

'தம் குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்கினர் கொன்றவர்க்கு எளியர் போந்தவர்,
மங்கையர் திறத்தினில் வயிர்த்த சிந்தையர்,
சிங்கல் இல் பெரும் பொருள் இழந்து சீறினோர், 77

'பேர் அபிமானங்கள் உற்ற பெற்றியோர்,
போரிடைப் புறங்கொடுத்து அஞ்சிப் போந்தவர்,
நேர் வரு தாயத்து நிரப்பினோர், பிறர்
சீரிய கிளைஞரை மடியச் செற்றுளோர், 78

'அடுத்த நாட்டு அரசியல் உடைய ஆணையால்
படுத்தவர் நட்டவர்,—பகைஞரோடு ஒரு
மடக்கொடி பயந்தவர் மைந்தர் ஆயினும்,
உடன் கொளத் தகையர், நம்முழை வந்து ஒன்றினல். 79

'தாம் உற எளிவரும் தகைமையார் அலர்,
நாம் உற வல்லவர், நம்மை நண்ணினல்,
தோம் உற நீங்குதல் துணிவர் ஆதலின்,
யாம் இவன் வரவு இவற்று என் என்று உன்னுவாம். 80

'காலமே நோக்கினும், கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும், முனிந்து போந்தவன்
சீலமே நோக்கி, யாம் தெரிந்து தேறுதற்கு
ஏலுமே?' என்று எடுத்து இனைய கூறினன். 81

மற்றைய மந்திரக் கிழவர் கருத்து

மற்றுள மந்திரக் கிழவர், வாய்மையால்,
குற்றம் இல் கேள்வியர், அன்பு கூர்ந்தவர்,
'பற்றுதல் பழுது' என, பழுது உறு ஒரு
பெற்றியின் உணர்வினர், முடியப் பேசினர். 82

78. தாயத்து - பங்காளியால்; நிரம்பினோர் - வறுமையுற்றோர்; 79. படுத்தவர் நட்டவர் - அகப்படுத்தப்பட்டவரின் நண்பர்கள்; 80. நாம் - அச்சம்; தோம் - துன்பம்.

இராமன் அனுமனைக் குறிப்பின் வினவுதல்

'உறு பொருள் யாவரும் ஒன்றக் கூறினர்
செறி பெருங் கேள்வியாய்! கருத்து என்? செப்பு' என,
நெறி தரு மாருதி என்னும் நேர் இலா
அறிவனை நோக்கினன், அறிவின் மேல் உளான். 83

மாருதி பேருரை

'இணங்கினர் அறிவிலர்எனினும், எண்ணுங்கால்,
கணம் கொள்கை நும்மனோர் கடன்மைகாண்' என
வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன்,
நுணங்கிய கேள்வியன், நுவல்வதாயினன்: 84

'எத்தனை உளர், தெரிந்து எண்ண ஏய்ந்தவர்,
அத்தனைவரும், ஒரு பொருளை, ''அன்று'' என,
உத்தமர், அது தெரிந்து உணர, ஓதினர்;
வித்தக! இனி, சில விளம்ப வேண்டுமோ? 85

'தூயவர் துணி திறன் நன்று தூயதே;
ஆயினும், ஒரு பொருள் உரைப்பென், ஆழியாய்!
''தீயன்'' என்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்;
மேயின சில பொருள் விளம்ப வேண்டுமால். 86

'வண்டு உளர் அலங்கலாய்! வஞ்சர் வாள் முகம்,
கண்டது ஓர் பொழுதினில், தெரியும்; கைதவம்
உண்டுஎனின், அஃது அவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ?
விண்டவர் நம் புகல் மருவி வீழ்வரோ? 87

'உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற,
மெள்ளத் தம் முகங்களே விளம்பும்; ஆதலால்,
கள்ளத்தின் விளைவு எலாம் கருத்து இலா இருள்
பள்ளத்தின் அன்றியே வெளியில் பல்குமோ? 88

'வாலி விண் பெற, அரசு இளையவன் பெற,
கோலிய வரி சிலை வலியும் கொற்றமும்,
சீலமும் உணர்ந்து, நிற் சேர்ந்து, தெள்ளிதின்
மேல் அரசு எய்துவான் விரும்பி மேயினன். 89

84. கணம் கொள்கை - இனமாகக் கொண்டு சிறப்பித்தல்; 87. விண்டவர் - பகைவர்; 88. இருள் பள்ளம் - அறியாமையாகிய இருள் நிறைந்த பள்ளம் போன்ற முகம்; வெளி - (அறிவொளி வீசுகின்ற) வெட்டவெளி போன்ற முகம்; பல்குதல் - வெளிப்பட்டுத் தோன்றுதல்; 89. கோலுதல் - வளைத்தல் செய்தல்; மேல் அரசு எய்துவான் - மேலாகிய வீட்டரசு பெறும் பொருட்டு, இனிமேல் அரசு அடையும்பொருட்டு என்பாரும் உண்டு.

'செறி கழல் அரக்கர்தம் அரசு சீரியோர்
நெறி அலது; ஆதலின், நிலைக்கலாமையும்,
எறி கடல் உலகு எலாம் இளவற்கு ஈந்தது ஓர்
பிறிவு அருங் கருணையும், மெய்யும், பேணினன். 90

' ''காலம் அன்று, இவன் வரு காலம்'' என்பரேல்,
வாலிதன் உறு பகை வலியது ஏறிய
தால், இனி அங்கு இவற்கு இறுதி ஆவதால்
மூலம் என் துணைவரைப் பிரிவு முற்றினன். 91

'தீத் தொழில் அரக்கர்தம் மாயச் செய் வினை
வாய்த்துளர், அன்னவை உணரும் மாண்பினல்
காய்த்தவர், அவர்களே கையுற்றார் நமக்கு;
ஏத்த அரும் உறுதியும் எளிதின் எய்துமால். 92

' ''தெளிவுறல் அரிது, இவர் மனத்தின் தீமை; யாம்
விளிவது செய்குவர்'' என்ன வேண்டுதல்,
ஒளி உற உயர்ந்தவர் ஒப்ப, எண்ணலார்;
எளியவர்திறத்து இவை எண்ணல் ஏயுமோ? 93

' ''கொல்லுமின், இவனை'' என்று அரக்கன் கூறிய
எல்லையில், ''தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த் தொழில்
வெல்லலம், பின்னர்'' என்று இடை விலக்கினன். 94

' ''மாதரைக் கோறலும், மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும், அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும், தூய்து அன்றாம்'' என,
ஏதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினன். 95

'எல்லியில் யான் இவன் இரண மாளிகை
செல்லிய போதினும், திரிந்த போதினும்,
நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன;
அல்லதும் உண்டு, நான் அறிந்தது—ஆழியாய்! 96

'நிந்தனை நறவமும், நெறி இல் ஊன்களும்,
தந்தன கண்டிலேன்; தரும தானமும்,
வந்தனை நீதியும், பிறவும், மாண்பு அமைந்து,
அந்தணர் மனை எனப் பொலிந்ததாம்அரோ. 97

91. வாலிது - சிறப்புடையது; ஏறுதல் - வெல்லுதல், கடத்தல்; துணைவர் - உடன்பிறந்தவர்; 92. காய்த்தவர் - தேர்ந்தவர், பழக்கம் முதிர்ந்தவர்; உறுதி - நன்மை; 93. வேண்டுதல் - கருதுதல்; ஒளி - அறிவு; 95. ஆதர் - அறிவிலிகள், பசுப் போன்றவர்; 96. இரணம் - பொன்.

'அன்னவன் தனி மகள், ''அலரின்மேல் அயன்
சொன்னது ஓர் சாபம் உண்டு; உன்னைத் துன்மதி,
நன்னுதல்! தீண்டுமேல், நணுகும் கூற்று'' என,
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினாள். 98

' ''பெற்றுடைய பெரு வரமும், பிறந்துடைய
வஞ்சனையும், பிறவும், உன் கை
வில் தொடையின் விடுகணையால் வெந்து ஒழியும்''
எனக் கருதி, விரைவின் வந்தான்;
உற்றுடைய பெரு வரமும், உகந்து உடைய
தண்ணளியும், உணர்வும் நோக்கின்,
மற்று உடையர்தாம் உளரோ, வாள் அரக்கன்
அன்றியே தவத்தின் வாய்த்தார்? 99

'தேவர்க்கும், தானவர்க்கும், திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கும், முடிப்ப அரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றாய்;
ஆவத்தின் வந்து, ''அபயம்!'' என்றானை
அயிர்த்து அகல விடுதிஆயின்,
கூவத்தின் சிறு புனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ?—கொற்ற வேந்தே! 100

' ''பகைப் புலத்தோர் துணை அல்லர்'' என்று இவனைப்
பற்றாமேல், அறிஞர் பார்க்கின்,
நகைப் புலத்ததாம் அன்றே; நல் தாயம்
உளது ஆய பற்றால் மிக்க
தகைப் புலத்தோர் தந்தையர்கள், தம்பியர்கள்,
தமையர், இவர்தாமே அன்றோ,
மிகைப் புலத்து விளைகின்றது ஒரு பொருளைக்
காதலிக்கின், விளிஞர் ஆவர்? 101

98. அயன் சொன்ன சாபம் - பிரமனை வணங்கச் சென்ற புஞ்சிகஸ்தலை என்னும் அமர மகளை இராவணன் வலியக் கற்பழித்தான். அவள் வாயிலாக உண்மை அறிந்த பிரமன், 'இனி நீ அயல் மகளிரைத் தீண்டுவாயாயின் அப்பொழுதே உன் தலை சிதறி அழிவதாக' என்று இராவணனைச் சபித்தான். 100. ஆவத்து - ஆபத்து; கூவம் - கிணறு; 'கடலின் நீரைக் கிணறு கொள்ளாது' என்பது பழமொழி; 101. நல் தாயம் - செத்தாலும் பிள்ளை பெற்றாலும் தீட்டுக் காக்கும்படியுள்ள பங்காளித் தன்மை; தகைப் புலத்தோர் - அன்பு மிகுந்த தகுதியை உடையோர்; மிகைப் புலத்து விளைகின்றது ஒரு பொருள் - மேம்பாட்டுக்குரியதாய் விளைந்துள்ள ஒரு பொருள்; விளிஞர் - பகைப்பவர், கோபிப்பவர்.

'ஆதலால், ''இவன் வரவு நல் வரவே''
என உணர்ந்தேன், அடியேன்; உன்தன்
வேத நூல் எனத் தகைய திருவுளத்தின்
குறிப்பு அறியேன்' என்று விட்டான்—
காதல் நான்முகனுலும் கணிப்ப அரிய
கலை அனைத்தும் கதிரோன் முன் சென்று
ஓதினுன், ஓத நீர் கடந்து, பகை கடந்து,
உலகை உய்யக் கொண்டான். 102

அனுமன் கூறியன கேட்டு உவந்த இராமன் கூற்று

மாருதி அமுத வார்த்தை செவி மடுத்து, இனிது மாந்தி,
'பேர் அறிவாள! நன்று நன்று' எனப் பிறரை நோக்கி,
'சீரிது; மேல் இம் மாற்றம் தெளிவுறத் தேர்மின்' என்னு,
ஆரியன் உரைப்பதானுன்; அனைவரும் அதனைக் கேட்டார். 103

'கருத்து உற நோக்கிப் போந்த காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின் மேற்றே; அறிவினுக்கு அவதி இல்லை;
"பெருத்து உயர் தவத்திஞனும் பிழைப்பு இலன்" என்னும் பெற்றி
திருத்தியது ஆகும் அன்றே, நம்வயின் சேர்ந்த செய்கை? 104

'மற்று இனி உரைப்பது என்னே? மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி; அன்னது அன்றுஎனின், பிறிது ஒன்ருனும்,
வெற்றியே பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க,
பற்றுதல் அன்றி உண்டோ, அடைக்கலம் பகர்கின்ருனை? 105

'இன்று வந்தான் என்று உண்டோ? எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்று உண்டோ? அடைக்கலம் கூறுகின்ருன்;
துன்றி வந்து அன்பு செய்யும் துணைவனும் அவனே; பின்னைப்
பின்றும் என்ருலும், நம்பால் புகழ் அன்றிப் பிறிது உண்டாமோ? 106

'பிறந்த நாள் தொடங்கி, யாரும், துலை புக்க பெரியோன் பெற்றி
மறந்த நாள் உண்டோ? என்னைச் சரண் என வாழ்கின்ருனைத்
துறந்த நாட்கு இன்று வந்து துன்னினுன் சூழ்ச்சியாலே
இறந்த நாள் அன்ருே, என்றும் இருந்த நாள் ஆவது!' என்ருன்.

102. விட்டான் - முடித்தான்; 104. அருத்தி - பெருவிருப்பம்; அரசின் மேற்று - அரசைவிட மேம்பட்டது; அதாவது அரசினும் மேலாகிய வீட்டைப் பற்றியது; இன் - ஐந்தாம் வேற்றுமை உருபு, இலங்கை அரசின் மேலது என்பாரும் உண்டு; அவதி - எல்லை; 105. பெற்றி - காரியம், ஆலோசனை; 106. பின்றுதல் - மாறுபடுதல்; 107. துறந்த நாட்கு - கைவிடுகின்ற நாளைக்காட்டிலும்.

'இடைந்தவர்க்கு, "அபயம், யாம்!" என்று இரந்தவர்க்கு, எறி நீர் வேலை
கடைந்தவர்க்கு, ஆகி, ஆலம் உண்டவற் கண்டிலீரோ?
உடைந்தவர்க்கு உதவான் ஆயின், உள்ளது ஒன்று ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின், அறம் என் ஆம்? ஆண்மை என் ஆம்?

'பேடையைப் பிடித்து, தன்னைப் பிடிக்க வந்து அடைந்த பேதை
வேடனுக்கு உதவி செய்து, விறகிடை வெந் தீ மூட்டி,
பாடுறு பசியை நோக்கி, தன் உடல் கொடுத்த பைம் புள்
வீடு பெற்று உயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிது அன்றோ? **109**

'போதகம் ஒன்று, கன்றி இடங்கர் மாப் பொருத போரின்,
"ஆதிஅம் பரமே! யான் உன் அபயம்!" என்று அழைத்த அந் நாள்,
வேதமும் முடிவு காணா மெய்ப்பொருள் வெளி வந்து எய்தி,
மா துயர் துடைத்த வார்த்தை மறப்பரோ, மறப்பிலாதார்?

'மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன்,
தன் அன உலகம் எல்லாம் தருமமும் எவையும் தானே
என்னினும், அடைந்தோர் தம்மை ஏமுற இனிதின் ஓம்பி,
பின்னும் வீடு அளிக்கும்என்றால், பிறிது ஒரு சான்றும் உண்டோ? **111**

'நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன், "நாளும்
தஞ்சு" என, முன்னம், தானே தாதைபால் கொடுத்து, "சாதல்
அஞ்சினேன்; அபயம்!" என்ற அந்தணற்கு ஆகி, அந் நாள்,
வெஞ் சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை உண்டோ?

' "சரண் எனக்கு யார்கொல்?" என்று சானகி அழுது சாம்ப,
"அரண் உனக்கு ஆவென்; வஞ்சி! அஞ்சல்!" என்று அருளின் எய்தி,
முரணுடைக் கொடியோன் கொல்ல, மொய் அமர் முடித்து, தெய்வ
மரணம் என் தாதை பெற்றது என்வயின் வழக்கு அன்று ஆமோ?

'உய்ய, "நிற்கு அபயம்!" என்றான் உயிரைத் தன் உயிரின் ஓம்பாக்
கய்யனும், ஒருவன் செய்த உதவியில் கருத்திலானும்,
மய் அற, நெறியின் நோக்கி, மா மறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய் என்றானும், மீள்கிலா நரகில் வீழ்வார். **114**

108. ஆகி - உதவியாகி; 109. பாடுறு பசி - பெரும் பசி; 109. பைம் புள் - ஆண்புறா, பசுமை இங்குச் சிறுமையை உணர்த்தியது; 112. நாள் - வாழ்நாள்; தஞ்சு - எளிமைப்பட்டது, ஈண்டுக் குறைவானது; தாதை - மிருகண்டு முனிவர்; அந்தணன் - மார்க்கண்டேயன்; 114. கய்யன் - கீழ் மகன்; மெய் - கடவுள்.

'சீதையைக் குறித்ததேயோ, ''தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வேன்'' என்று பேணிய விரதப் பெற்றி?
வேதியர், "அபயம்!" என்றூர்க்கு, அன்று, நான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ் உரை கடக்கல் ஆமோ? 115

'காரியம் ஆக! அன்றே ஆகுக! கருணையோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின், இதனின்மேல் சிறந்தது உண்டோ?
பூரியரேனும் தம்மைப் புகல் புகுந்தோர்க்குப் பொன்ரு
ஆர் உயிர் கொடுத்துக் காத்தார், எண் இலா அரசர் அம்மா!

'ஆதலான், ''அபயம்!'' என்ற பொழுதத்தே, அபய தானம்
ஈதலே கடப்பாடு என்பது; இயம்பினீர், என்பால் வைத்த
காதலான்; இனி வேறு எண்ணக் கடவது என்? கதிரோன் மைந்த!
கோது இலாதவனை நீயே என்வயின் கொணர்தி' என்ருன். 117

சுக்கிரீவன், வீடணனை அழைத்துவரச் செல்லுதல்

ஐயுறவு எல்லாம் தீரும் அளவையாய் அமைந்தது அன்றே;
தெய்வ நாயகனது உள்ளம் தேறிய அடைவே தேறி,
கைபுகற்கு அமைவது ஆனுன், 'கடிதினின் கொணர்வல்' என்னு,
மெய்யினுக்கு உறையுள் ஆன ஒருவன்பால் விரைவின் சென்ருன். 118

சுக்கிரீவன் வரவு அறிந்து, வீடணன் எதிர் செல்லுதல்

வருகின்ற கவியின் வேந்தை, மயிந்தனுக்கு இளைய வள்ளல்,
' ''தருக!'' என்ருன்; அதனுல், உன்னை எதிர் கொளற்கு அருக்கன் [தந்த,
இரு குன்றம் அனைய தோளான் எய்தினன்' என்னலோடும்,
திரிகின்ற உள்ளத்தானும், அகம் மலர்ந்து, அவன் முன் சென்ருன்.

சுக்கிரீவனும் வீடணனும் தழுவிக் கொள்ளுதல்

தொல் அருங் காலம் எல்லாம் பழகினும், தூயர் அல்லார்
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவர், எதிர்ந்த ஞான்றே;
ஒல்லை வந்து உணர்வும் ஒன்ற, இருவரும், ஒரு நாள் உற்ற
எல்லியும் பகலும் போல, தழுவினர், எழுவின் தோளார். 120

வீடணனுக்கு இராமன் அடைக்கலம் அருளியதைச் சுக்கிரீவன் தெரிவித்தல்

தழுவினர் நின்ற காலை, 'தாமரைக்கண்ணன் தங்கள்
முழு முதல் குலத்திற்கு ஏற்ற முறைமையால் உவகை மூள,
வழுவல் இல் அபயம் உன்பால் வழங்கினன்; அவன் பொற் பாதம்
தொழுதியால், விரைவின்!' என்று கதிரவன் சிறுவன் சொன்னுன். 121

115. காதை - காதா, பாடல், ஈண்டுச் செய்தி; 116. பூரியர் - கீழ் மக்கள்; 118. அடைவு - முறைமை; அமைவது - உடன்படுவது; 119. மயிந்தனுக்கு இளைய வள்ளல் - துமிந்தன்; தருக என்றவன் இராமன்; 120. எல்லி - இரவு.

வீடணன் மகிழ்ச்சி

சிங்க ஏறு அனையான் சொன்ன வாசகம் செவி புகாமுன்,
கங்குலின் நிறத்தினான் தன் கண் மழைத் தாரை கான்ற;
அங்கமும் மனம்அது என்னக் குளிர்ந்தது; அவ் அகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னப் பொடித்தன, உரோமப் புள்ளி. 122

' "பஞ்சு" எனச் சிவக்கும் மென் கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை, "வருக!" என்று அருள் செய்தானோ?
தஞ்சு எனக் கருதினானோ? தாழ் சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச் சிறந்தேன் அன்றோ, நாயகன் அருளின் நாயேன்?

'மருளுறு மனத்தினான் என் வாய்மொழி மறுத்தான்; வானத்து
உருளுறு தேரினானும், இலங்கைமீது ஓடும் அன்றே?
தெருளுறு சிந்தை வந்த தேற்றம் ஈது ஆகின், செய்யும்
அருள் இது ஆயின், கெட்டேன்! பிழைப்பரோ அரக்கர் ஆனோர்?

'தீர்வு அரும் இன்னல் தம்மைச் செய்யினும், செய்ய சிந்தைப்
பேர் அருளாளர் தம்தம் செய்கையின் பிழைப்பது உண்டோ?—
கார் வரை நிறுவி, தன்னைக் கனல் எழக் கலக்கக் கண்டும்,
ஆர்கலி, அமரர் உய்ய, அமுது பண்டு அளித்தது அன்றே? 125

'துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை
உற உவந்து அருளி, மீளா அடைக்கலம் உதவினானே!
அற வினை இறையும் இல்லா, அறிவு இலா, அரக்கன் என்னும்
பிறவியின் பெயர்ந்தேன்; பின்னும், நரகினின் பிழைப்பதானேன்.'

இராமனிடம் விரைவில் செல்லுமாறு சுக்கிரீவன் கூறுதல்

திருத்திய உணர்வு மிக்க செங் கதிர்ச் செல்வன் செம்மல்,
'ஒருத்தரை நலனும் தீங்கும் தேரினும், உயிரின் ஓம்பும்
கருத்தினன் அன்றே, தன்னைக் கழல் அடைந்தோரை; காணும்
அருத்தியன், அமலன்; தாழாது ஏகுதி, அறிஞ!' என்றான். 127

மொய் தவழ் கிரிகள் மற்றும் பலவுடன் முடுகிச் செல்ல,
மை தவழ் கிரியும் மேருக் குன்றமும் வருவது என்ன,
செய் தவம் பயந்த வீரர், திரள் மரம் ஏழும் தீய
எய்தவன் இருந்த சூழல், இருவரும் எய்தச் சென்றார். 128

123. பஞ்சு எனச் சிவக்கும் - தோழியர் செம்பஞ்சுக் குழம்பு ஊட்ட வேணும் என்று சொன்னவுடன் பொறுமல் சிவக்கின்ற; 124. தேற்றம் - உறுதியான எண்ணம்; கெட்டேன் - அரக்கரது அழிவை நினைந்து இரங்கிக் கூறிய மொழி; 126. துறவியின் - துறவறத்தில்; துறவி - துறவு; 128. மொய் - வலிமை; தவழ்தல் - பொருந்துதல்; மை - கருமை, மேகமும் ஆம்; கிரி - மலை; மை தவழ் கிரியும் மேரு மலையும் முறையே வீடணன், சுக்கிரீவன் ஆகியோருக்கு உவமையாம்.

வீடணன். இராமன் திருவடிகளில் விழுந்து வணங்குதல்

மார்க்கடம் சூழ்ந்த வைப்பின் இளையவன் மருங்கு காப்ப,
நாற் கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன், நாமப்
பாற்கடல் சுற்ற, விற் கை வட வரை பாங்கு நிற்ப,
கார்க் கடல் கமலம் பூத்தது எனப் பொலிவானைக் கண்டான்.

அள்ளி மீது உலகை வீசும் அரிக் குலச் சேனை நாப்பண்,
தெள்ளு தண் திரையிற்று ஆகி, பிறிது ஒரு திறனும் சாரா
வெள்ளி வெண் கடலுள் மேல்நாள் விண்ணவர் தொழுது வேண்ட,
பள்ளி தீர்ந்து இருந்தான் என்னப் பொலிதரு பண்பினானை; 130

கோணுதற்கு அமைந்த கோலப் புருவம்போல் திரையும் கூட,
பூணுதற்கு இனிய முத்தின் பொலி மணல் பரந்த வைப்பில்,
காணுதற்கு இனிய நீள வெண்மையில் கருமை காட்டி,
வாணுதல் சீதை கண்ணின் மணி என வயங்குவானை; 131

படர் மழை சுமந்த காலைப் பருவ வான், அமரர் கோமான்
அடர் சிலை துறந்தது என்ன, ஆரம் தீர் மார்பினானை;
கடர் கடை மத்தின் பாம்பு கழற்றியது என்னக் காசின்
சுடர் ஒளி வலயம் தீர்ந்த சுந்தரத் தோளினானை; 132

கற்றை வெண் நிலவு நீக்கி, கருணைஆம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற்று ஆய முழுமதி முகத்தினானை;
பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெற, தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி பொலிகின்ற சென்னியானை; 133

வீரனை—நோக்கி, அங்கம் மென் மயிர் சிலிர்ப்ப, கண்ணீர்
வார, நெஞ்சு உருகி, 'செங் கண் அஞ்சன மலை! அன்றுஆகின்,
கார் முகில் கமலம் பூத்தது! அன்று, இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர் அருள் சுரக்கும் நீதி அற நிறம் கரிதோ?' என்றான். 134

'மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க,
செம் மணி மகுடம் நீக்கி, திருவடி புனைந்த செல்வன்
தம்முனார், கமலத்து அண்ணல் தாதையார், சரணம் தாழ,
எம்முனார் எனக்குச் செய்த உதவி' என்று ஏம்பலுற்றான். 135

129. மார்க்கடம் - மர்க்கடத்தின் தொகுதி; மர்க்கடம் - வானரம்; வைப்பு - இடம்; நாமம் - புகழ்; பாற்கடலுக்கு மார்க்கடமும், வில்லை ஏந்திய இளைய பெருமாளுக்கு விற் கை வட வரையும், இராமனுக்குக் கார்க் கடலும் உவமையாம்; 130. நாப்பண் - நடுவில்; 131. கோணுதல் - வளைதல்; புருவத்திற்கு அலை உவமை; 132. கடர் - கடல்; கரிய மேனியனாகிய இராமன் மார்பில் மணியாரம் அணியாமைக்குப் பருவ வான் சிலை துறந்த நிலை உவமை; 134. நீதி - தன்மை; 135. திருவடி புனைந்த செல்வன் - பரதன்; ஏம்பல் - களிப்பு.

'பெருந் தவம் இயற்றினோர்க்கும் பேர்வு அரும் பிறவி நோய்க்கு
மருந்து என நின்றான் தானே வடிக் கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன்; நின்றது, என்னும் இயம்புவது? எல்லை தீர்ந்த
அருந் தவம் உடையர் அம்மா, அரக்கர்!' என்று அகத்துள் கொண்டான்.

கரங்கள் மீச் சுமந்து செல்லும் கதிர் மணி முடியன், கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன், கருணை வள்ளல்
இரங்கினன் நோக்கும்தோறும், இரு நிலத்து இறைஞ்சுகின்றான்;
வரங்களின் வாரி அன்ன தாள் இணை வந்து வீழ்ந்தான். 137

இராமன், வீடணனுக்கு இலங்கை அரசை அளித்தல்

'அழிந்தது, பிறவி' என்னும் அகத்து இயல் முகத்துக் காட்ட,
வழிந்த கண்ணீரின் மண்ணில் மார்பு உற வணங்கினானை,
பொழிந்தது ஓர் கருணை தன்னால், புல்லினன் என்று தோன்ற,
'எழுந்து, இனிது இருத்தி' என்னா, மலர்க்கையால் இருக்கை ஈந்தான்.

ஆழியான் அவனை நோக்கி, அருள் சுரந்து, உவகை கூர,
'ஏழினோடு ஏழாய் நின்ற உலகும் என் பெயரும் எந் நாள்
வாழும் நாள், அன்றுகாறும், வாள் எயிற்று அரக்கர் வைகும்
தாழ் கடல் இலங்கைச் செல்வம் நின்னதே; தந்தேன்' என்றான்.

தீர்த்தன் நல் அருளை நோக்கிச் செய்ததோ? சிறப்புப் பெற்றான்
கூர்த்த நல் அறத்தை நோக்கிக் குறித்ததோ? யாது கொல்லோ?—
வார்த்தை அஃது உரைத்தலோடும், 'தனித் தனி வாழ்ந்தேம்' என்ன
ஆர்த்தன, உலகில் உள்ள சராசரம் அனைத்தும் அம்மா! 140

வீடணனுக்கு முடி சூட்ட இலக்குவனைப் பணித்தல்

'உய்ஞ்சனென் அடியனேன்' என்று ஊழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனியானை அழகனும் அருளின் நோக்கி,
'தஞ்ச நல் துணைவன் ஆன தவறு இலாப் புகழான் தன்னை,
துஞ்சல் இல் நயனத்து ஐய! சூட்டுதி மகுடம்' என்றான். 141

திருவடி சூட்டுமாறு வீடணன் வேண்டுதல்

விளைவினை அறியும் மேன்மை வீடணன், 'என்றும் வீயா
அளவு அறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின், ஐய!
களவு இயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர,
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான். 142

137. வாரி - கடல், வாயிலும் ஆம்; 139. இதன்கண் கூறப்படும் நிகழ்ச்சி, 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' என்னும் புறத்திணைத் துறையுள் அடங்கும்; இராமன் அருளே வீடணனுக்கு வேண்டுவது; இலங்கை அரசோ வந்தேறியானது என்பது பெரியோர் கருத்து; 140. தீர்த்தன் - தான் தூயனாய் இருப்பதோடு தன்னை அடைந்தாரையும் தூயராக்க வல்லவன்; 142. கடமை - தொடர்பு.

இராமன், வீடணனைத் தம்பியாகக் கொண்டு கூறுதல்

'குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும், அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.'

வீடணன், திருவடி நிலைகளைச் சூடிக்கொள்ளுதல்

'நடு இனிப் பகர்வது என்னே? நாயக! நாயினேனை,
"உடன் உதித்தவர்களோடும் ஒருவன்" என்று உரையாநின்றாய்;
அடிமையின் சிறந்தேன்' என்னா, அயிர்ப்பொடும் அச்சம் நீங்கி,
தொடு கழல் செம் பொன் மோலி சென்னியில் சூட்டிக் கொண்டான்.

திருவடி முடியின் சூடி, செங் கதிர் உச்சி சேர்ந்த
அரு வரை என்ன, நின்ற அரக்கர் தம் அரசை நோக்கி,
இருவரும் உவகை கூர்ந்தார்; யாவரும் இன்பம் உற்றார்;
பொரு அரும் அமரர் வாழ்த்தி, பூமழை பொழிவதானார். 145

ஆர்த்தன—பரவை ஏழும், அவனியும், அமரர் நாடும்,
வார்த் தொழில் புணரும் தெய்வ மங்கல முரசும் சங்கும்;
தூர்த்தன, கனக மாரி; சொரிந்தன, நறு மென் சுண்ணம்;
போர்த்தது வானத்து, அன்று, அங்கு, எழுந்தது துழனிப் பொம்மல்.

'மொழிந்த சொல் அமிழ்தம் அன்னாள் திறத்தினின் முறைமை நீங்கி
இழிந்த என் மரபும் இன்றே உயர்ந்தது' என்று ஏம்பலுற்றான்,
செழுந் தனி மலரோன்; பின்னை, 'இராவணன் தீமைச் செல்வம்
அழிந்தது' என்று, அறனும், தன் வாய் ஆவலம் கொட்டிற்று அன்றே.

வீடணனோடு பாடிவீட்டை வலம்வர இராமன் பணித்தல்

இன்னது ஓர் செவ்வித்து ஆக, இராமனும், 'இலங்கை வேந்தன்–
தன் நெடுஞ் செல்வம் தானே பெற்றமை பலரும் கேட்ப,
பல் நெடுந் தானை சூழ, பகலவன் சேயும் நீயும்,
மன் நெடுங் குமர! பாடிவீட்டினை வலம் செய்க!' என்றான். 148

அந்தம் இல் குணத்தினானை அடியிணை-முடியினோடும்
சந்தன விமானம் ஏற்றி, வானரத் தலைவர் தாங்க,
'இந்திரற்கு உரிய செல்வம் எய்தினன் இவன்' என்று ஏத்தி,
மந்தரத் தடந் தோள் வீரர், வலம் செய்தார், தானை வைப்பை.

143. அகன் அமர் காதல் - மனமார்ந்த நேயம்; 146. துழனிப் பொம்மல் - ஆரவாரத்தின் மிகுதி; 147. ஆவலம் கொட்டல் - ஆரவாரித்தல்; 149. சந்தன விமானம் - சந்தன மரத்தால் இயன்ற விமானம்.

பெரியோர் மகிழ்ச்சி

தேடுவார் தேட நின்ற சேவடி, தானும் தேடி
நாடுவான், அன்று கண்ட நான்முகன் கழீஇய நல் நீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கி, மேல் அமரர் ஆவார்;
சூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர்? சொல்லீர்.

'இற்றை நாள் அளவும், யாரும், இருடிகள், இமையோர், ஞானம்
முற்றினர், அன்பு பூண்டார், வேள்விகள் முடித்து நின்றார்,
மற்று மா தவரும், எல்லாம், வாள் எயிற்று இலங்கை வேந்தன்
பெற்றது ஆர் பெற்றார்!' என்று வியந்தனர், பெரியோர் எல்லாம்.

5 இலங்கை கேள்விப் படலம்

இராமன் வீடணனுக்கு இடமளித்தல்

வந்து அடி வணங்கிய நிருதர் மன்னவற்கு
அந்தம் இலாதது ஓர் உறையுள் அவ்வழித்
தந்தனன் விடுத்தபின், இரவி, 'தன் கதிர்
சிந்தின வெய்ய' என்று எண்ணி, தீர்ந்தனன். 1

அந்தி மாலையின் தோற்றம்

சந்தி வந்தனைத் தொழில் முடித்து தன் நெடும்
புந்தி நொந்து, இராமனும் உயிர்ப்ப, பூங் கணை
சிந்தி வந்து இறுத்தனன், மதனன்; தீ நிறத்து
அந்தி வந்து இறுத்தது; கறுத்தது அண்டமே. 2

மாத் தடந் திசைதொறும் மறைந்த வல் இருள்
கோத்தது, கருங் கடல் கொள்ளை கொண்டென;
நீத்த நீர்ப் பொய்கையில் நிறைந்த நாள்மலர்
பூத்தென, மீன் குலம் பொலிந்தது, அண்டமே. 3

சில் இயல் கோதையை நினைந்து தேம்பிய
வில்லியைத் திரு மனம் வெதுப்பும் வெம்மையால்,
எல்லியைக் காண்டலும் மலர்ந்த ஈட்டினால்,
மல்லிகைக் கானமும், வானமும் ஒத்ததே. 4

150. அன்று - திருவிக்கிரமாவதாரம் செய்த காலம்; நன்னீர் - நல்ல நீர், கங்கை.

5: 2. அண்டம் - வானம், உலகமும் ஆம்; 4. சில் இயல் கோதை - சீதை; முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என ஐம்பாலாகக் கூந்தல் புனையப் படுதல்பற்றிச் 'சில் இயல் கோதை' எனப்பட்டது; ஈட்டினால் - தன்மையால்; ஈடு - தன்மை.

ஒன்றும் உட் கறுப்பினோடு, ஒளியின் வாள் உரீஇ,
'தன் தனி முகத்தினால் என்னைத் தாழ்த்து அற
வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன்'
என்றது போல, வந்து எழுந்தது—இந்துவே. 5

'கண்ணினை அப்புறம் கரந்து போகினும்,
பெண் நிறம் உண்டுஎனின், பிடிப்பல் ஈண்டு' என,
உள் நிறை நெடுங் கடல் உலகம் எங்கணும்
வெண் நிற நிலவு எனும் வலையை வீசினான். 6

புடைக்கை வன் திரை எடுத்து ஆர்க்கும் போர்க் கடல்,
'உடைக் கருந் தனி நிறம் ஒளித்துக் கொண்டவன்,
அடைக்க வந்தான் எனை, அரியின் தானையால்:
கிடைக்க வந்தான்' எனக் கிளர்ந்தது ஒத்ததே. 7

மேல் உகத் தொகுதியால் முதிர்ந்த மெய் எலாம்
தோல் உகுத்தாலென, அரவத் தொல் கடல்
வாலுகத்தால் இடைப் பரந்த வைப்பு எலாம்
பால் உகுத்தாலென, நிலவு பாய்ந்ததால். 8

மன்றல்வாய் மல்லிகை எயிற்றின், வண்டுஇனம்
கன்றிய நிறத்தது, நறவின் கண்ணது,
குன்றின்வாய் முழையின்நின்று உலாய கொட்பது,
தென்றல் என்று ஒரு புலி உயிர்த்துச் சென்றதால். 9

கரத்தொடும் பாழி மாக் கடல் கடைந்துளான்
உரத்தொடும், கரனொடும், உருவ ஓங்கிய
மரத்தொடும் தொளைத்தவன் மார்பில், மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தது, நிலவின் தாரை வாள். 10

இராமன், சீதையை நினைந்து வருந்தும் நிலை

உடலினை நோக்கும்; இன் உயிரை நோக்குமால்;
இடரினை நோக்கும்; மற்று யாதும் நோக்கலன்;
கடலினை நோக்கும்; அக் கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்; தன் சிலையை நோக்குமால். 11

5. கறுப்பு - பகைமை, களங்கம்; 6. கண்ணினை - கண்ணுக்கு; 7. கிடைக்க வருதல் - கைக்கு அகப்படும்படி வருதல்; 8. மேல் - விசும்பு; விசும்பு தோல் உகுத்தால் எனவும், கடல் வாலுகத்தால் பால் உகுத்தால் எனவும் நிலவு பாய்ந்தது என இயையும். தோல் உகுத்தலாகிய குறிப்பால் வானமாகிய பாம்பு என்ற உருவகமும், பால் உகுத்தலாகிய குறிப்பால் கடலாகிய பெண் என்ற உருவகமும், வாலுகமாகிய நகில் என்ற உருவகமும் பெறப்படுகின்றன; 9. கன்றிய - கருகிய; நறவின் கண்ணது - தேனாகிய செந்நிறக் கண்களை உடையது; 11. திடர் - திட்டு, ஈண்டு இலங்கை.

பணி பழுத்து அமைந்த பூண் அல்குல் பண்பினுல்,
பிணி பழுத்து அமைந்தது ஓர் பித்தின் உள்ளத்தான்,
அணி பழுத்து அமைந்த முத்து அரும்பு செம்மணி
மணி பழுத்து அமைந்த வாய் மறக்க வல்லனே? 12

சுக்கிரீவன், இராமனை 'வீடணனேடு மேல் விளைவது குறித்து எண்ணுக' எனல்

ஆயது ஓர் அளவையின், அருக்கன் மைந்தன், 'நீ
தேய்வது என்? காரியம் நிரப்பும் சிந்தையை;
மேயவன்தன்னெடும் எண்ணி, மேல் இனித்
தூயது நினைக்கில' என்னச் சொல்லினன். 13

அவ்வழி, உணர்வு வந்து, அயர்வு நீங்கினன்,
'செவ் வழி அறிஞனைக் கொணர்மின், சென்று' என,
'இவ்வழி வருதி' என்று இயம்ப, எய்தினன்—
வெவ் வழி விலங்கி, நல் நெறியை மேவினன். 14

இலங்கையின் அரண் பற்றி இராமன் வினவ, வீடணன் விடை பகர்தல்

'ஆர்கலி இலங்கையின் அரணும், அவ் வழி
வார் கெழு கனை கழல் அரக்கர் வன்மையும்,
தார் கெழு தானையின் அளவும், தன்மையும்,
நீர் கெழு தன்மையாய்! நிகழ்த்துவாய்' என்ருன். 15

எழுதலும், 'இருத்தி' என்று இராமன் ஏயினன்,
முழுது உணர் புலவனை; முளரிக் கண்ணினன்
பழுது அற வினவிய பொருளைப் பண்பினுல்
தொழுது உயர் கையினன், தெரியச் சொல்லினன்: 16

இலங்கையின் அரண்

'நிலையுடை வட வரை குலைய நேர்ந்து, அதன்
தலை என விளங்கிய தமனியப் பெரு
மலையினை மும் முடி வாங்கி, ஓங்கு நீர்
அலை கடல் இட்டனன், அனுமன் தாதையே. 17

'ஏழு நூறு யோசனை அகலம்; இட்ட கீழ்
ஆழம் நூறு யோசனை; ஆழி மால் வரை,
வாழியாய்! உலகினை வளைந்த வண்ணமே
சூழும் மா மதில்; அது சுடர்க்கும் மேலதால். 18

12. பணி - வேலைப்பாடு; பழுத்து அமைதல் - நிரம்பிப் பொருந்துதல், அணி, மணி - அழகு.

‘மருங்குடை வினையமும், பொறியின் மாட்சியும்,
இருங் கடி அரணமும், பிறவும், எண்ணினால்,
சுருங்கிடும்; என், பல சொல்லி? சுற்றிய
கருங் கடல் அகழது; நீரும் காண்டிரால். 19

வாயில் முதலியவற்றைக் காப்போர்

‘வட திசை வயங்கு ஒளி வாயில் வைகுவோர்,
இடை இலர், எண்-இரு கோடி என்பரால்;
கடையுக முடிவினில் காலன் என்பது என்?
விடை வரு பாகனைப் பொருவும் மேன்மையோர். 20

‘மேல் திசை வாயிலின் வைகும் வெய்யவர்க்கு
ஏற்றமும் உள, அவர்க்கு இரண்டு கோடி மேல்;
கூற்றையும் கண்-பொறி குறுகக் காண்பரேல்,
ஊற்றுறு குருதியோடு உயிரும் உண்பரால். 21

‘தென் திசை வாயிலின் வைகும் தீயவர்
என்றவர் எண்-இரு கோடி என்பரால்;
குன்று உறழ் நெடியவர் கொடுமை கூறி என்?
வன் திறல் யமனையும் அரசு மாற்றுவார். 22

‘கீட்டிசை வாயிலின் வைகும் கீழவர்
ஈட்டமும் எண்-இரு கோடி என்பரால்;
கோட்டு இருந் திசை நிலைக் கும்பக் குன்றையும்
தாள் துணை பிடித்து, அகன் தரையின் எற்றுவார். 23

‘விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்
எண்-இரு கோடியின் இரட்டி என்பரால்;
மண்ணிடை வானவர் வருவர் என்று, அவர்
கண் இலர், கரை இலர், கரந்து போயினர். 24

‘பிறங்கிய நெடு மதில் பின்னும் முன்னரும்,
உறங்கலர், உண் பதம் உலவை ஆதலால்,
கறங்கு எனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்,
அறைந்துளது ஐ-இரு நூறு கோடியால். 25

20. இடைதல் - பின் வாங்குதல்; 22. அரசு மாற்றுவார் -அரசாட்சியை அழிக்கவல்லார்; 23. இருந் திசை - அகன்ற திக்கு; 24. கண் - கண்ணோட்டம், இரக்கம்; 25. உலவை - காற்று.

'இப்படி மதில் ஒரு மூன்று; வேறு இனி
ஒப்ப அரும் பெருமையும் உரைக்க வேண்டுமோ?
மெய்ப் பெருந் திரு நகர் காக்கும் வெய்யவர்
முப்பது கோடியின் மும்மை முற்றினர். 26

'சிறப்பு அவன் செய்திடச் செல்வம் எய்தினர்,
அறப் பெரும் பகைஞர்கள், அளவு இல் ஆற்றலர்,
உறப் பெரும் பகை வரின் உதவும் உண்மையர்,
இறப்பு இலர், எண்-இரு நூறு கோடியே. 27

கோயில் வாயிலின் காவலர்

'"விடம் அல, விழி'' எனும் வெகுளிக் கண்ணினர்,
"கடன் அல, இமைத்தலும்'' என்னும் காவலர்,
வட வரை புரைவன கோயில் வாயிலின்
இடம் வலம் வருபவர், எண்-எண் கோடியால். 28

'அன்றியும், அவன் அகன் கோயில் ஆய் மணி
முன்றிலின் வைகுவார் முறைமை கூறிடின்,
ஒன்றிய உலகையும் எடுக்கும் ஊற்றத்தார்;
குன்றினும் வலியவர்; கோடி கோடியால். 29

படைகளின் அளவு

'தேர் பதினாயிரம் பதுமம்; செம் முகக்
கார்வரை அவற்றினுக்கு இரட்டி; கால் வயத்து
ஊர் பரி அவற்றினுக்கு இரட்டி; ஒட்டகம்
தார் வரும் புரவியின் இரட்டி சாலுமே. 30

'பேயனேன், என், பல பிதற்றி? பேர்த்து அவன்
மா இரு ஞாலத்து வைத்த மாப் படை
தேயினும், நாள் எலாம் தேய்க்க வேண்டுவது,
ஆயிர வெள்ளம் என்று அறிந்தது—ஆழியாய்! 31

இராவணன் துணைவர் பெருமை

'இலங்கையின் அரண் இது; படையின் எண் இது;
வலங் கையில் வாள் சிவன் கொடுக்க வாங்கிய
அலங்கல் அம் தோளவன் துணைவர், அந்தம் இல்
வலங்களும் வரங்களும், தவத்தின் வாய்த்தவர். 32

28. கடன் அல - முறையல்ல; 30. பதுமம் - ஒரு பேரெண்; 31. வெள்ளம் - ஒரு பேரளவு, பதுமத்திற்கு மேற்பட்டது; 32. வலங்கள் - வலிமைகள்.

‘உகம் பல் காலமும் தவம் செய்து பெரு வரம் உடையான்,
சுகம் பல் போர் அலால் வேறு இலன், பெரும் படைத் தொகையான்,
நகம் பல் என்று இவை இல்லது ஓர் நரசிங்கம் அனையான்,
அகம்பன் என்று உளன்; அலை கடல் பருகவும் அமைவான். 33

‘பொருப்பை மீதிடும் புரவியும், பூட்கையும், தேரும்,
உருப்ப விற் படை, ஒன்பது கோடியும் உடையான்,
செருப் பெய் வானிடைச் சினக் கடாய் கடாய் வந்து செறுத்த
நெருப்பை வென்றவன், நிகும்பன் என்று உளன், ஒரு நெடியோன்.

‘தும்பி ஈட்டமும், இரதமும், புரவியும், தொடர்ந்த
அம் பொன் மாப் படை ஐ-இரு கோடி கொண்டு அமைந்தான்,
செம் பொன் நாட்டு உள சித்தரைச் சிறையிடை வைத்தான்,
கும்பன் என்று உளன்; ஊழி வெங் கதிரினும் கொடியான். 35

‘பேயை யாளியை யானையைக் கழுதையைப் பிணித்தது
ஆய தேர்ப் படை ஐ-இரு கோடி கொண்டு அமைந்தான்,
தாயைஆயினும் சலித்திடு வஞ்சனை தவிரா
மாயையான் உளன், மகோதரன் என்று ஒரு மறவோன். 36

‘குன்றில் வாழ்பவர் கோடி நால்-ஐந்தினுக்கு இறைவன்,
‘‘இன்று உளார் பினை நாளை இலார்’’ என எயிற்றால்
தின்றுளான், நெடும் பல் முறை தேவரைச் செருவின்
வென்றுளான், உளன், வேள்வியின்பகைஞன், ஓர் வெய்யோன்.

‘ ‘‘மண் உளாரையும் வானில் உள்ளாரையும் வகுத்தால்,
உண்ணும் நாள் ஒரு நாளின்’’ என்று ஒளிர் படைத் தானை
எண்ணின் நால்-இரு கோடியன், எரி அஞ்ச விழிக்கும்
கண்ணினன், உளன், சூரியன்பகை என்று ஓர் கழலான். 38

‘தேவரும், தக்க முனிவரும், திசைமுகன் முதலா
மூவரும், பக்கம் நோக்கியே மொழிதர, முனிவான்,
தாவரும் பக்கம் எண்-இரு கோடியின் தலைவன்,
மாபெரும்பக்கன் என்று உளன், குன்றினும் வலியான். 39

34. மீதிடும் - மேலிட்டுச் செல்லும், தாண்டும்; உருப்ப - சினத்தையுடைய; செருப் பெய் கடாய் - போர் புரிகின்ற ஆட்டுக்கடா; கும்ப நிகும்பர் என்பவர் கும்பகருணனுடைய புதல்வர் என்பது வால்மீகம்; 35. சித்தர் - தேவர்களில் ஒருவகைப் பிரிவினர்; 36. சலித்திடு வஞ்சன் - கலக்கம் செய்ய வல்ல வஞ்சன்; 39. பக்கம் நோக்கியே மொழிதர - பக்கம் பார்த்துப் பேசுமாறு.

'உச் சிரத்து எரி கதிர் என உருத்து எரி முகத்தன்,
நச் சிரப் படை நால்-இரு கோடிக்கு நாதன்,
முச் சிரத்து அயில் தலைவற்கும் வெலற்கு அரு மொய்ம்பன்,
வச்சிரத்துஎயிற்றவன், உளன், கூற்றுவன் மாற்றான். 40

'அசஞ்சலப் படை ஐ-இரு கோடியன், அமரின்
வசம் செயாதவன், தான் அன்றிப் பிறர் இலா வலியான்,
இசைந்த வெஞ் சமத்து இயக்கரை வேரொடும் முன் நாள்
பிசைந்து மோந்தவன், பிசாசன் என்று உளன், ஒரு பித்தன்.

'சில்லி மாப் பெருந் தேரொடும், கரி, பரி, சிறந்த
வில்லின் மாப் படை ஏழ்-இரு கோடிக்கு வேந்தன்,
கல்லி மாப் படி கலக்குவான், கனல் எனக் காந்திச்
சொல்லும் மாற்றத்தன், துன்முகன் என்று அறம் துறந்தோன்.

'இலங்கை நாட்டன்ன எறி கடல் தீவிடை உறையும்
அலங்கல் வேற் படை ஐ-இரு கோடிக்கும் அரசன்,
வலம் கொள் வாள் தொழில் விஞ்சையர் பெரும் புகழ் மறைத்தான்,
விலங்குநாட்டத்தன் என்று உளன், வெயில் உக விழிப்பான். 43

'நாமம் நாட்டிய சவம் எனின், நாள் என்றும் ஒருவர்
ஈம நாட்டிடை இடாமல், தன் எயிற்றிடை இடுவான்,
தாமம் நாட்டிய கொடிப் படைப் பதுமத்தின் தலைவன்,
தூமநாட்டத்தன் என்று உளன், தேவரைத் துரந்தான். 44

'போரின் மத்தனும், பொரு வயமத்தனும், புலவர்
நீரின் மத்து எனும் பெருமையர்; நெடுங் கடற் படையார்;
ஆரும் அத்தனை வலி உடையார் இலை; அவரால்
பேரும், அத்தனை எத்தனை உலகமும்; பெரியோய்! 45

சேனை காவலன் பிரகத்தன்

'இன்ன தன்மையர் எத்தனை ஆயிரர் என்கேன்—
அன்னவன் பெருந் துணைவராய், அமர்த் தொழிற்கு அமைந்தார்?
சொன்ன சொன்னவர் படைத் துணை இரட்டியின் தொகையான்,
பின்னை எண்ணுவான், பிரகத்தன் என்று ஒரு பித்தன்; 46

40. உச்சிரம் - தலைக்குமேல்; நச்சிரம் - சிறந்த தலைமை, 'ந' சிறப் புணர்த்தும் இடைச்சொல்; 41. அசஞ்சலப் படை - பகைவரைக் கண்டு நடுங் காத சேனை; 42. மாப் படி - பெரிய பூமி; 43. விலங்குநாட்டத்தன் - விருபாக்கன்; 45. புலவர் - தேவர்; நீர் - ஈண்டு பாற்கடல்.

'சேனை காவலன்; இந்திரன் சிந்துரச் சென்னி
யானை கால் குலைந்து ஆழி ஓர் ஏழும் விட்டு அகல,
ஏனை வானவர் இருக்கை விட்டு இரியலுற்று அலைய,
சோனை மாரியின் சுடு கணை பல முறை துரந்தான். 47

கும்பகருணன் வலிமை

'தம்பி, முற்பகல் சந்திரர் நால்வரின் தயங்கும்
கும்ப மாக் கிரிக் கோடு இரு கைகளால் கழற்றி,
செம் பொன் மால் வரை மதம் பட்டதாம் எனத் திரிந்தான்,
கும்பகன்னன் என்று உளன், பண்டு தேவரைக் குமைத்தான். 48

இராவணன் புதல்வர்களின் ஆற்றல்

'கோள் இரண்டையும் கொடுஞ் சிறை வைத்த அக் குமரன்
மூளும் வெஞ் சினத்து இந்திரசித்து என மொழிவான்;
ஆளும் இந்திரற்கு அன்னவன் பிணித்ததன் பின்னை,
தாளினும் உள, தோளினும் உள, இனம் தழும்பு. 49

'தன்னையும் தெறும் தருமம் என்று இறை மனம் தாழான்,
முன்னவன் தரப் பெற்றது ஓர் முழு வலிச் சிலையான்,
அன்னவன்தனக்கு இளையவன், அப் பெயர் ஒழித்தான்
பின் ஓர் இந்திரன் இலாமையின்; பேர் அதிகாயன். 50

'தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா என்னும்
மூவர் ஆம்,—"தகை முதல்வர் ஆம் தலைவரும் முனையின்,
போவராம்; தகை அழிவராம்" எனத் தனிப் பொருவார்
ஆவராம்—தகை இராவணற்கு அரும் பெறல் புதல்வர். 51

இராவணன் திறம்

'இனைய தன்மையர் வலி இஃது; இராவணன் என்னும்
அனையவன் திறம் யான் அறி அளவு எலாம் அறைவென்;
தனையன், நான்முகன் தகை மகன் சிறுவற்கு; தவத்தால்,
முனைவர் கோன் வரம், முக்கணன் வரத்தொடும் உயர்ந்தான்.

'எள் இல் ஐம் பெரும் பூதமும் யாவையும் உடைய
புள்ளிமான் உரி ஆடையன் உமையொடும் பொருந்தும்
வெள்ளி அம் பெருங் கிரியினை வேரொடும் வாங்கி,
அள்ளி விண் தொட எடுத்தனன், உலகு எலாம் அனுங்க. 53

52. முனைவர் கோன் - பிரமன்.

ஆன்ற எண் திசை உலகு எலாம் சுமக்கின்ற யானை
ஊன்று கோடு இற, திரள் புயத்து அழுத்திய ஒண்மை
தோன்றும் என்னவே, துணுக்கமுற்று இரிவர், அத் தொகுதி
மூன்று கோடியின்மேல் ஒரு முப்பத்து மூவர். 54

'குலங்களோடும் தம் குல மணி முடியொடும் குறைய,
அலங்கல் வாள்கொடு காலகேயரைக் கொன்ற அதன்பின்,
"இலங்கை வேந்தன்" என்று உரைத்தலும், இடி உண்ட அரவின்
கலங்குமால் இனம், தானவர் தேவியர் கருப்பம். 55

'குரண்டம் ஆடு நீர் அளகையின் ஒளித்து உறை குபேரன்,
திரண்ட மாடும், தன் திருவொடு நிதியமும், இழந்து,—
புரண்டு, மான் திரள் புலி கண்டது ஆம் என, போனான்—
இரண்டு மானமும், இலங்கை மா நகரமும் இழந்து. 56

' ''புண்ணும் செய்தது முதுகு'' என, புறங்கொடுத்து ஓடி,
''உண்ணும் செய்கை அத் தசமுகக் கூற்றம் தன் உயிர்மேல்
நண்ணும் செய்கையது'' எனக் கொடு, நாள்தொறும், தன் நாள்
எண்ணும் செய்கையன், அந்தகன், தன் பதம் இழந்தான். 57

'இருள் நன்கு ஆசு அற, எழு கதிரவன் நிற்க; என்றும்
அருணன் கண்களும் கண்டிலா இலங்கை, பண்டு அமரில்,
பருணன்தன் பெரும் பாசமும் பறிப்புண்டு, பயத்தால்
வருணன் உய்ந்தனன், மகர நீர் வெள்ளத்து மறைந்து. 58

'என்று உலப்புறச் சொல்லுகேன், இராவணன் என்னும்
குன்று உலப்பினும் உலப்பு இலாத் தோளினான் கொற்றம்?
இன்று உலப்பினும், நாளையே உலப்பினும், சில நாள்
சென்று உலப்பினும் நினக்கு அன்றி, பிறர்க்கு என்றும் தீரான்.

இலங்கையில் அனுமன் புரிந்த வீரச்செயல்கள்

'ஈடு பட்டவர் எண்ணிலர் தோரணத்து, எழுவால்;
பாடு பட்டவர் படு கடல் மணலினும் பலரால்;
சூடு பட்டது, தொல் நகர்; அடு புலி துரந்த
ஆடு பட்டது பட்டனர்; அனுமனால் அரக்கர். 60

54. ஒண்மை - செழுமை; 56. குரண்டம் - கொக்கு; இரண்டு மானம் - மானம் (பெருமை), விமானம் என்னும் இரு வகை மானங்கள்; 58. பருணன் - திறமுடையவன், ஈண்டு வருணன்; 60. தோரணம் - (அசோக வனத்தில் வெளியில் அமைந்த) கட்டுவாயில்; எழு - இருப்புத் தடி; பாடு - துன்பம், அழிவு; படு கடல் - ஆழமான கடல்.

எம் குலத்தவர், எண்பதிஞயிரர், இறைவர்,
கிங்கரப் பெயர் கிரி அன்ன தோற்றத்தர், கிளர்ந்தார்;
வெங் கரத்தினும் காலினும் வாலினும் வீக்கி,
சங்கரற்கு அழி முப்புரத்தவர் எனச் சமைந்தார். 61

'வெம்பு மாக் கடற் சேனை கொண்டு எதிர் பொர வெகுண்டான்,
அம்பும் ஆயிரத்து ஆயிரம் இவன் புயத்து அழுத்தி,
உம்பர் வானகத்து ஒரு தனி நமனைச் சென்று உற்ருன்,
சம்புமாலியும், வில்லினல் சுருக்குண்டு—தலைவ! 62

'சேனைக் காவலர் ஓர் ஐவர் உளர், பண்டு தேவர்
வானைக் காவலும் மானமும் மாற்றிய மறவர்,
தானைக் கார்க் கருங் கடலொடும், தமரொடும், தாமும்,
யானைக் கால் பட்ட செல் என, ஒல்லையின் அவிந்தார். 63

'காய்த்த அக் கணத்து, அரக்கர்தம் உடல் உகு கறைத் தோல்,
நீத்த எக்கரின், நிறைந்துள கருங் கடல்; நெருப்பின்
வாய்த்த அக்கனை, வரி சிலை மலையொடும் வாங்கி,
தேய்த்த அக் குழம்பு உலர்ந்தில, இலங்கையின் தெருவில். 64

'சொன்ன மா மதில் இலங்கையின் பரப்பினில் துகைத்துச்
சின்னம் ஆனவர் கணக்கு இலர்; யாவரே தெரிப்பார்?
இன்னம் ஆர் உளர், வீரர்? மற்று, இவன் சுட எரிந்த
அன்ன மா நகர் அவிந்தது, அக் குருதியால் அன்று. 65

இலங்கை எரிதலும், அதை அயன் மீண்டும் படைத்தலும்

'விலங்கல் வெந்தவா வேறு இனி விளம்புவது எவனே—
அலங்கல் மாலையும் சாந்தமும் அன்று தான் அணிந்த
கலங்களோடும், அச் சாத்திய துகிலொடும், கதிர் வாள்
இலங்கை வேந்தனும், ஏழு நாள் விசும்பிடை இருந்தான்! 66

'நொதுமல் திண் திறல் அரக்கனது இலங்கையை நுவன்றேன்;
அது மற்று அவ்வழி அரணமும் பெருமையும் அறைந்தேன்;
இது மற்று அவ்வழி எய்தியது; இராவணன் ஏவ,
பதுமத்து அண்ணலே பண்டுபோல் அந் நகர் படைத்தான். 67

வீடணன் தான் போந்த காரணம் உரைத்தல்

'காந்தும் வாளியின் கரன் முதல் வீரரும், கவியின்
வேந்தும், என்று இவர் விளிந்தவா கேட்டு அன்று; அவ் இலங்கை
தீந்தவா கண்டும், அரக்கரைச் செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டும், நான் இங்குப் புகுந்தது—புகழோய்!' 68

63. செல் - சிதல்; 64. நீத்த எக்கர் - வெள்ளத்தோடு கூடிய மணல் மேடுகள்; 65. சொன்னம் - சொர்ணம், பொன்; 67. நொதுமல் - வலிமை; 68. கவியின் வேந்து - வாலி.

இராமன், அனுமனைப் புகழ்ந்து உரைத்தல்

கேள் கொள் மேலையான் கிளத்திய பொருள் எலாம் கேட்டான்,
வாள் கொள் நோக்கியை, பாக்கியம் பழுத்தன்ன மயிலை,
நாள்கள் சாலவும் நீங்கலின், நலம் கெட மெலிந்த
தோள்கள் வீங்கி, தன் தூதனைப் பார்த்து, இவை சொன்னான்:

'கூட்டினார் படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்;
ஊட்டினாய், எரி ஊர் முற்றும்; இனி, அங்கு ஒன்று உண்டோ?
கேட்ட ஆற்றினால், கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும்
மீட்டிலாதது, என் வில் தொழில் காட்டவோ?—வீர! 70

'நின் செய் தோள் வலி நிரம்பிய இலங்கையை நேர்ந்தோம்;
பின் செய்தோம் சில; அவை இனிப் பீடு ஒன்று பெறுமோ?—
பொன் செய் தோளினாய்!—போர்ப் பெரும் படையொடும் புக்கோம்;
என் செய்தோம் என்று பெரும் புகழ் எய்துவான் இருந்தோம்?

'என்னது ஆக்கிய வலியொடு அவ் இராவணன் வலியும்
உன்னது ஆக்கினை; பாக்கியம் உருக் கொண்டது ஒப்பாய்!
முன்னது ஆக்கிய மூஉலகு ஆக்கிய முதலோன்
பின்னது ஆக்கிய பதம் நினக்கு ஆக்கினென்; பெற்றாய்.' 72

என்று கூறலும், எழுந்து, இரு நிலன் உற இறைஞ்சி,
ஒன்றும் பேசலன் நாணினன், வணங்கிய உரவோன்;
நின்ற வானரத் தலைவரும் அரசும், அந் நெடியோன்
வென்றி கேட்டலும், வீடு பெற்றார் என வியந்தார். 73

6 வருணனை வழி வேண்டு படலம்

கடல் கடக்க வீடணன் வழி கூறுதல்

'தொடக்கும் என்னில் இவ் உலகு ஒரு மூன்றையும் தோளால்
அடக்கும் வண்ணமும், அழித்தலும், ஒரு பொருள் அன்றால்;
கிடக்கும் வண்ண வெங் கடலினைக் கிளர் பெருஞ் சேனை
கடக்கும் வண்ணமும் எண்ணுதி—எண்ணு நூல் கற்றாய்!' 1

69. கேள் - நட்பு; மேலையான் - வீடணன்; 72. முதலோன் பின்னது ஆக்கிய பதம் - முதல்வனாகிய பிரமனுக்காக ஏற்பட்டுள்ள பதவி.

6: 1. தொடக்கும் என்னில் - இந்தக் கடல் கட்டுக்கு உட்படுமே எனில், போர் தொடங்குமேயானால் எனினும் ஆம்.

'கரந்து நின்ற நின் தன்மையை, அது, செலக் கருதும்;
பரந்தது, உன் திருக் குல முதல் தலைவரால்; பரிவாய்
வரம் தரும், இந்த மாக் கடல்; படை செல, வழி வேறு
இரந்து வேண்டுதி, எறி திரைப் பரவையை' என்றான். 2

இராமன் கடற் கரையை அடைதல்

'நன்று, இலங்கையர் நாயகன் மொழி' என நயந்தான்,
ஒன்று தன் பெருந் துணைவரும் புடை செல, உரவோன்,
சென்று வேலையைச் சேர்தலும், விசும்பிடை, சிவந்த
குன்றின் மேல்நின்று குதித்தன, பகலவன் குதிரை. 3

இராமன் புல்லில் அமர்ந்து, வருண மந்திரத்தைத் தியானித்தல்

கொழுங் கதிர்ப் பகைக் கோள் இருள் நீங்கிய கொள்கை,
செழுஞ் சுடர்ப் பனிக் கலை எலாம் நிரம்பிய திங்கள்
புழுங்கு வெஞ் சினத்து அஞ்சனப் பொறி வரி அரவம்
விழுங்கி நீங்கியது ஒத்தது, வேலை சூழ் ஞாலம். 4

'தருண மங்கையை மீட்பது ஓர் நெறி தருக!' என்னும்
பொருள் நயந்து, நல் நூல் நெறி அடுக்கிய புல்லில்,
கருணைஅம் கடல் கிடந்தனன், கருங் கடல் நோக்கி;
வருண மந்திரம் எண்ணினன், விதி முறை வணங்கி. 5

ஏழுநாள் சென்றும் வருணன் வாராமையால் இராமன் சினத்தல்

பூழி சென்று தன் திரு உருப் பொருந்தவும், பொறை தீர்
வாழி வெங் கதிர் மணி முகம் வருடவும், வளர்ந்தான்;
ஊழி சென்றன ஒப்பன, ஒரு பகல்; அவை ஓர்
ஏழு சென்றன; வந்திலன், எறி கடற்கு இறைவன். 6

'ஊற்றம் மீக் கொண்ட வேலையான், "உண்டு", "இலை", என்னும்
மாற்றம் ஈக்கவும் பெற்றிலம், யாம்' எனும் மனத்தால்,
ஏற்றம் மீக்கொண்ட புனலிடை எரி முளைத்தென்னச்
சீற்றம் மீக்கொண்டு சிவந்தன, தாமரைச் செங் கண். 7

'மாண்ட இல் இழந்து அயரும் நான், வழி, தனை வணங்கி,
வேண்ட, "இல்லை" என்று ஒளித்ததாம்' என, மனம் வெதும்பி,
நீண்ட வில்லுடை நெடுங் கனல் உயிர்ப்பொடும் நெடு நாண்
பூண்ட வில் எனக் குனிந்தன, கொழுங் கடைப் புருவம். 8

2. செல - முழுவதும், கடை போக; குல முதல் தலைவர் - சகரர்;
5. தருணம் - இளமை; 7. ஊற்றம் - செருக்கு, வலிமை; ஈக்கவும் - ஈகவும்,
ஏற்றம் - பெருக்கு, பொங்குதல்.

'ஒன்றும் வேண்டலர்ஆயினும், ஒருவர்பால் ஒருவர்
சென்று வேண்டுவரேல், அவர் சிறுமையின் தீரார்;
இன்று வேண்டியது எறி கடல் நெறிதனை மறுத்தான்;
நன்று, நன்று!' என, நகையொடும் புகை உக, நக்கான். 9

' ''பாரம் நீங்கிய சிலையினன், இராவணன் பறிப்பத்
தாரம் நீங்கிய தன்மையன், ஆதலின், தகைசால்
வீரம் நீங்கிய மனிதன்'' என்று இகழ்ச்சி மேல் விளைய,
ஈரம் நீங்கியது, எறி கடல் ஆம்' என இசைத்தான். 10

'புரந்து கோடலும், புகழொடு கோடலும், பொருது
துரந்து கோடலும், என்று இவை தொன்மையின்தொடர்ந்த;
இரந்து கோடலின், இயற்கையும் தருமமும் எஞ்சக்
கரந்து கோடலே நன்று; இனி நின்றது என், கழறி? 11

' ''கானிடைப் புகுந்து, இருங் கனி காயொடு நுகர்ந்த
ஊனுடைப் பொறை உடம்பினன்'' என்று கொண்டு உணர்ந்த
மீனுடைக் கடல் பெருமையும், வில்லொடு நின்ற
மானுடச் சிறு தன்மையும், காண்பரால், வானோர். 12

'ஏதம் அஞ்சி, நான் இரந்ததே, ''எளிது'' என இகழ்ந்த
ஓதம் அஞ்சினேடு இரண்டும் வெந்து ஒரு பொடி ஆக,
பூதம் அஞ்சும் வந்து அஞ்சலித்து உயிர்கொண்டு பொரும,
பாதம் அஞ்சலர் செஞ்செவே படர்வர், என் படைஞர். 13

'மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்,
வெறுமை கண்ட பின், யாவரும் யார் என விரும்பார்;
குறுமை கண்டவர் கொழுங் கனல் என்னினும் கூசார்;
சிறுமை கண்டவர் பெருமை கண்டு அல்லது தேரூர்.' 14

இராமன் கடலின்மேல் அம்பு விடுதல்

திருதி என்பது ஒன்று அழிதர, ஊழியில் சினவும்
பருதி மண்டிலம் எனப் பொலி முகத்தினன், பல கால்,
'தருதி, வில்' எனும் அளவையில், தம்பியும் வெம்பிக்
குருதி வெங் கனல் உமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான். 15

10. பாரம் - பெருமை; 11. துரந்து - துரத்திவிட்டு; 13. ஓதம் - கடல்; 14. மறுமை - முத்தி; வெறுமை - சிறப்பியல்பு இன்மை; 15. திருதி - மன வடக்கம்.

வாங்கி வெஞ் சிலை, வாளி பெய் புட்டிலும் மலைபோல்
வீங்கு தோள்வலம் வீக்கினன்; கோதையை விரலால்
தாங்கி, நாணினைத் தாக்கினன்; தாக்கிய தமரம்,
ஓங்கு முக்கணான் தேவியைத் தீர்த்துளது ஊடல். 16

மாரியின் பெருந் துளியினும் வரம்பு இல, வடித்த,
சீரிது என்றவை எவற்றினும் சீரிய, தெரிந்து,
பார் இயங்கு இரும் புனல் எலாம் முடிவினில் பருகும்
சூரியன் கதிர் அனையன சுடு சரம் துரந்தான். 17

பெரிய மால் வரை ஏழினும் பெரு வலி பெற்ற
வரி கொள் வெஞ் சிலை வளர் பிறையாம் என வாங்கி,
திரிவ நிற்பன யாவையும் முடிவினில் தீக்கும்
எரியின் மும் மடி கொடியன சுடு சரம் எய்தான். 18

கடல் பட்ட பாடு

மீனும் நாகமும் விண் தொடும் மலைகளும் விறகா,
ஏனை நிற்பன யாவையும் மேல் எரி எய்த,
பேன நீர் நெடு நெய் என, பெய் கணை நெருப்பால்
கூனை அங்கியின் குண்டம் ஒத்தது, கடற் குட்டம். 19

பாழி வல் நெடுங் கொடுஞ் சிலை வழங்கிய பகழி,
ஏழு வேலையும் எரியொடு புகை மடுத்து ஏகி,
ஊழி வெங் கனல் கொழுந்துகள் உருத்து எழுந்து ஓடி,
ஆழி மால் வரைக்கு அப் புறத்து இருளையும் அவித்த. 20

மரும தாரையின் எரியுண்ட மகரங்கள் மயங்கிச்
செரும, வானிடைக் கற்பக மரங்களும் தீய,
நிருமியா விட்ட நெடுங் கணை பாய்தலின், நெருப்போடு
உருமு வீழ்ந்தெனச் சென்றன, கடல்-துளி உம்பர். 21

கூடும் வெம் பொறிக் கொடுங் கனல் தொடர்ந்தெனக் கொளுந்த,
ஓடும் மேகங்கள் பொரிந்து இடை உதிர்ந்தன; உம்பர்
ஆடும் மங்கையர் கருங் குழல் விளர்த்தன—அளக்கர்க்
கோடு தீந்து எழ, கொழும் புகைப் பிழம்பு மீக் கொள்ள. 22

16. கோதை - கோதா, உடும்புத் தோல், ஈண்டு உடும்புத் தோலால் செய்து விரல்களுக்கு இடும் உறை; தமரம் - ஒலி; 18. வரை ஏழு - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன; 19. பேனம் - நுரை; கூனை - வளைவு; 20. ஏழு கடல்களுக்கு அப்பால் சக்கரவாள கிரியும், அக்கிரிக்கு அப்பால் இருள் சூழ்ந்த இடமும் உள்ளன என்பது புராணக் கொள்கை; 21. மரும தாரை - உயிர் நிலைபெற்ற இடம்; மகரங்கள் - சுறு மீன்கள்; செரும - நெருங்க; நிருமியாவிட்ட - தொடுத்துவிட்ட, சங்கற்பித்து விட்ட; 22. கோடு - கரை.

நிமிர்ந்த செஞ் சரம் நிறம்தொறும் படுதலும், நெய்த்தோர்
உமிழ்ந்து உலந்தன மகரங்கள் உலப்பு இல; உருவத்
துமிந்த துண்டமும் பல படத் துரந்தன, தொடர்ந்து
திமிங்கிலங்களும் திமிங்கிலகிலங்களும் சிதறி. 23

நீறு மீச்செல, நெருப்பு எழ, பொருப்பு எலாம் எரிய,
நூறும் ஆயிர கோடியும் கடுங் கணை நுழைய,
ஆறு கீழ்ப் பட, அளறு பட்டு அழுந்திய அளக்கர்
சேறு தீய்ந்து எழ, காந்தின சேடன்தன் சிரங்கள். 24

மொய்த்த மீன் குலம் முதல் அற முருங்கின, மொழியின்
பொய்த்த சான்றவன் குலம் என, பொரு கணை எரிய;
உய்த்த கூம்புடை நெடுங் கலம் ஓடுவ கடுப்ப,
தைத்த அம்பொடும் திரிந்தன, தாலமீன் சாலம். 25

சிந்தி ஓடிய குருதி வெங் கனலொடு செறிய,
அந்தி வானகம் கடுத்தது, அவ் அளப்ப அரும் அளக்கர்;
பந்தி பந்திகளாய் நெடுங் கடுங் கணை படர,
வெந்து தீந்தன, கரிந்தன, பொரிந்தன, சில மீன். 26

வைய நாயகன் வடிக் கணை குடித்திட, வற்றி,
ஐய நீர் உடைத்தாய், மருங்கு அருங் கனல் மண்ட,
கை கலந்து எரி கருங் கடல் கார் அகல் கடுப்ப,
வெய்ய நெய்யிடை வேவன ஒத்தன, சில மீன். 27

குணிப்ப அருங் கொடும் பகழிகள் குருதி வாய் மடுப்ப,
கணிப்ப அரும் புனல் கடையுறக் குடித்தலின், காந்தும்
மணிப் பருந் தடங் குப்பைகள் மறி கடல் வெந்து,
தணிப்ப அருந் தழல் சொரிந்தன போன்றன, தயங்கி. 28

எங்கும் வெள்ளிடை மடுத்தலின், இழுதுடை இன மீன்
சங்கமும், கறி கிழங்கு என, இடை இடை தழுவி,
அங்கம் வெந்து பேர் அளற்றிடை அடுக்கிய கிடந்த;
பொங்கு நல் நெடும் புனல் அறப் பொரித்தன போன்ற. 29

23. நெய்த்தோர் - குருதி; 25. தாலமீன் - பனைமீன்; சாலம் - வரிசை, கூட்டம்; 27. ஐய நீர் - சிறிதளவு நீர்; கார் அகல் - கரிய சட்டி, வாணலி; 28. குணித்தல் - அளவிடல்; குருதி வாய் - இரத்தம் தோய்ந்த வாய்; குப்பைகள் - குவியல்கள்; 29. வெள்ளிடை - வெற்றிடம், இழுது - நிணம்.

அதிரும் வெங் கணை ஒன்றை ஒன்று அடர்ந்து எரி உய்ப்ப,
வெதிரின் வல் நெடுங் கான் என வெந்தன, மீனம்;
பொதுவின் மன்னுயிர்க் குலங்களும் துணிந்தன பொழிந்த
உதிரமும் கடல் திரைகளும் பொருவன, ஒருபால். 30

அண்ணல் வெங் கணை அறுத்திட, தெறித்து எழுந்து அளக்கர்ப்
பண்ணை வெம் புனல் படப் பட, நெருப்பொடும் பற்றி,
மண்ணில் வேர் உறப் பற்றிய நெடு மரம், மற்றும்,
எண்ணெய் தோய்ந்தென எரிந்தன, கிரிக் குலம் எல்லாம். 31

தெய்வ நாயகன் தெரி கணை, 'திசை முகத்து ஒருவன்
வைவு இது ஆம்' என, பிழைப்பு இல மனத்தினும் கடுக,
வெய்ய அந் நெருப்பு இடை இடை பொறித்து எழ, வெறி நீர்ப்
பொய்கை தாமரை பூத்தெனப் பொலிந்தது, புணரி. 32

செப்பின், மேலவர் சீறினும் அது சிறப்பு ஆதல்
தப்புமே? அது கண்டனம், உவரியில்; 'தணியா
உப்பு வேலை' என்று உலகு உறு பெரும் பழி நீங்கி,
அப்பு வேலையாய் நிறைந்தது; குறைந்ததோ, அளக்கர்? 33

தாரை உண்ட பேர் அண்டங்கள் அடங்கலும் தானே
வாரி உண்டு அருள் செய்தவற்கு இது ஒரு வலியோ?—
பாரை உண்பது படர் புனல்; அப் பெரும் பரவை
நீரை உண்பது நெருப்பு எனும் அப் பொருள் நிறுத்தான்! 34

மங்கலம் பொருந்திய தவத்து மா தவர்,
கங்குலும் பகலும் அக் கடலுள் வைகுவார்,
அங்கம் வெந்திலர், அவன் அடிகள் எண்ணலால்;
பொங்கு வெங் கனல் எனும் புனலில் போயினர். 35

தென் திசை, குட திசை, முதல திக்கு எலாம்
துன்றிய பெரும் புகைப் படலம் சுற்றலால்,
கன்றிய நிறத்தன கதிரவன் பரி
நின்றன; சென்றில; நெறியின் நீங்கின. 36

'பிறிந்தவர்க்கு உறு துயர் என்னும் பெற்றியோர்
அறிந்திருந்து, அறிந்திலர் அனையர் ஆம்' என,
செறிந்த தம் பெடைகளைத் தேடி, தீக் கொள,
மறிந்தன, கரிந்தன—வானப் புள் எலாம். 37

30. வெதிர் - மூங்கில்; 31. அளக்கர்ப் பண்ணை - கடலாகிய நீர்நிலை; 33. அப்பு - நல்ல நீர். கணை என இரு பொருள் பட்டது; 34. தாரை உண்ட அண்டங்கள் - ஒன்றன்மேல் ஒன்றாய் ஒழுங்குபட்டுள்ள அண்டங்கள்.

கமை அறு கருங் கடல், கனலி கைபரந்து,
அமை வனம் ஒத்த போது, அறைய வேண்டுமோ?
சுமையுறு பெரும் புகைப் படலம் சுற்றலால்,
இமையவர் இமைத்தனர்; வியர்ப்பும் எய்தினர். 38

பூச் செலாதவள் நடை போல்கிலாமையால்,
ஏச்சு எலாம் எய்திய எகினம் யாவையும்,
தீச் செலா நெறி பிறிது இன்மையால், திசை
மீச் செலா; புனலவன் புகழின் வீந்தவால். 39

பம்புறு நெடுங் கடல் பறவை யாவையும்,
உம்பரின் செல்லலுற்று, உருகி வீழ்ந்தன;
அம்பரம் அம்பரத்து ஏகல் ஆற்றல,
இம்பரில் உதிர்ந்தன, எரியும் மெய்யன. 40

பட்டன படப் பட, படாத புட் குலம்,
சுட்டு வந்து எரிக் குலப் படலம் சுற்றலால்,
இட்டுழி அறிகில, இரியல் போவன,
முட்டை என்று எடுத்தன, வெளுத்த முத்து எலாம். 41

'வள்ளலை, பாவிகாள், ''மனிசன்'' என்று கொண்டு
எள்ளலுற்று அறைந்தனம்; எண் இலாம்' என
வெள்ளி வெண் பற்களைக் கிழித்து, விண் உறத்
துள்ளலுற்று இரிந்தன—குரங்கு சூழ்ந்தில. 42

தா நெடுந் தீமைகள் உடைய தன்மையார்,
மா நெடுங் கடலிடை மறைந்து வைகுவார்,
தூ நெடுங் குருதி வேல் அவுணர், துஞ்சினர்;
மீன் நெடுங் கிரி என மிதந்து, வீங்கினர். 43

தசும்பு இடை விரிந்தன என்னும் தாரைய
பசும் பொனின் மானங்கள் உருகிப் பாய்ந்தன;
அசும்பு அற வறந்தன, வான ஆறு எலாம்;
விசும்பிடை விளங்கிய மீனும் வெந்தவே. 44

39. புனலவன் - வருணன்; 40. பம்புதல் - பரவுதல்; அம்பரம் - முன்னது மேகங்கள், பின்னது ஆகாயம்; 42. எண் - அறிவு; குரங்கு - நீர்க் குரங்குகள்; 43. தா - வருத்தம்; தூ - தசை; 44. தசும்பு - நீர்க்குடம்; தாரைய - நீர்த்தாரைகளை உடையன; மானங்கள் - விமானங்கள்; நீர்க்குடங்கள் உடைந்தால் நீர் தாரை தாரையாய் ஒழுகுவதுபோல விமானம் உருகித் தாரைகளை உடையவாய்ப் பாய்ந்தன என்க.

செறிவுறு செம்மைய, தீயை ஓம்புவ,
நெறியுறு செலவின, தவத்தின் நீண்டன,
உறு சினம் உறப் பல உருவு கொண்டன,
குறுமுனி எனக் கடல் குடித்த—கூர்ங் கணை. 45

மோதல் அம் கணை கடல் முருக்கும் தீயினால்,
பூதலம் காவொடும் எரிந்த; பொன் மதில்
வேதலும், இலங்கையும், 'மீளப் போயின
தூதன் வந்தான்' எனத் துணுக்கம் கொண்டதால். 46

அருக்கனில் ஒளி விடும் ஆடகக் கிரி,
உருக்கு என உருகின, உதிரம் தோய்ந்தன,
முருக்கு எனச் சிவந்தன; முரிய வெந்தன,
கரிக் குவை நிகர்த்தன, பவளக் காடு எலாம். 47

பேருடைக் கிரி எனப் பெருத்த மீன்களும்,
ஓர் இடத்து, உயிர் தரித்து, ஒதுங்ககிற்றில,
நீரிடைப் புகும்; அதின் நெருப்பு நன்று எனாப்
பாரிடைக் குதித்தன, பதைக்கும் மெய்யன. 48

சுருள் கடல் திரைகளைத் தொலைய உண்டு, அனல்
பருகிடப் புனல் இல பகழி, பாரிடம்
மருள் கொளப் படர்வன, நாகர் வைப்பையும்
இருள் கெடச் சென்றன, இரவி போல்வன. 49

கரும் புறக் கடல்களோடு உலகம் காய்ச்சிய
இரும்பு உறச் செல்வன, இழிவ, கீழுற
அரும் புறத்து அண்டமும் உருவி, அப் புறம்,
பெரும் புறக் கடலையும் தொடர்ந்து பின் செல்வ. 50

திடல் திறந்து உகு மணித் திரள்கள், சேண் நிலம்
உடல் திறந்து உதிரம் வந்து உகுவ போன்றன;
கடல் திறந்து எங்கணும் வற்ற, அக் கடல்
குடல் திறந்தன எனக் கிடந்த, கோள் அரா. 51

45. செறிவுறு செம்மை முதலியன இராமனது கணைக்கும் குறுமுனிக்கும் செம்மொழிச் சிலேடைகள்; 47. முருக்கு - பலாசம் பூ; 48. பேருடை - பெருமையுடைய; 49. பாரிடம் - பூமியிலுள்ளார்; 50. கரும் புறக் கடல் - கறுத்துத் தோன்றும் மேற்புறத்தைக் கொண்ட கடல், கருங்கடல்; 51. சேண் நிலம் - பரந்த நிலம்.

ஆழியின் புனல் அற, மணிகள் அட்டிய
பேழையின் பொலிந்தன, பரவை; பேர்வு அறப்
பூழையின் பொரு கணை உருவப் புக்கன,
மூழையின் பொலிந்தன, முரலும் வெள் வளை. 52

நின்று நூறுயிரம் பகழி நீட்டலால்,
குன்று நூறுயிரம் கோடி ஆயின;—
சென்று தேய்வு உறுவரோ, புலவர் சீறினல்?—
ஒன்று நூறு ஆயின, உவரி முத்து எல்லாம். 53

சூடு பெற்று ஐயனே தொலைக்கும் மன்னுயிர்
வீடு பெற்றன; இடை மிடைந்த வேணுவின்
காடு பற்றிய பெருங் கனலின் கைபரந்து
ஓடி உற்றது நெருப்பு, உவரி நீர் எலாம். 54

கால வான் கடுங் கணை சுற்றும் கவ்வலால்,
நீல வான் துகிலினை நீக்கி, பூ நிறக்
கோல வான் களி நெடுங் கூறை சுற்றினள்
போல, மா நிலமகள் பொலிந்து தோன்றினள். 55

கற்றவர் கற்றவர் உணர்வு காண்கிலாக்
கொற்றவன் படைக்கலம் குடித்த வேலை விட்டு,
உற்று உயிர் படைத்து எழுந்து ஓடல் உற்றதால்,
மற்றொரு கடல் புக, வடவைத் தீஅரோ. 56

வாழியர் உலகினை வளைத்து, வான் உறச்
சூழ் இரும் பெருஞ் சுடர்ப் பிழம்பு தோன்றலால்,
ஊழியின் உலகு எலாம் உண்ண ஓங்கிய
ஆழியின் பொலிந்தது, அவ் ஆழி, அன்ன நாள். 57

ஏனையர் என்ன வேறு உலகின் ஈண்டினர்-
ஆனவர் செய்தன அறைய வேண்டுமோ—
மேல் நிமிர்ந்து எழு கனல் வெதுப்ப, மீதுபோய்,
வானவர் மலர் அயன் உலகின் வைகினர்? 58

52. அட்டுதல் - சேர்த்து வைத்தல்; பூழை - சங்கின் முகப்பில் உள்ள துளை; மூழை - அகப்பை; 54. வேணு - மூங்கில்; 56. கற்றவர் கற்றவர் - கற்றவருள்ளும் கற்றவராக விளங்கும் ஞானிகள்; கொற்றவன் - இராமன்; உயிர் - வலிமை; வடவைத் தீ குடித்த வேலை (கடலை) விட்டு மற்றொரு கடல் புக ஓடலுற்றது என இயையும்; 57. வாழியர் - அசை.

இராமன், சதுமுகன் கணை ஏவ, நிகழ்ந்த மாறுபாடுகள்

'இடுக்கு இனி எண்ணுவது என்னே? ஈண்டு இனி
முடுக்குவென் வருணனை' என்ன, மூண்டு எதிர்
தடுக்க அரும் வெகுளியான், சதுமுகன் படை
தொடுத்தனன்; அமரரும் துணுக்கம் எய்தினர். 59

மழைக் குலம் கதறின; வருணன் வாய் உலர்ந்து
அழைத்தனன்; உலகமும் அடைத்த, ஆறு எலாம்;
இழைத்தன நெடுந் திசை, யாதும் யார் இனிப்
பிழைப்பிலர் என்பது ஓர் பெரும் பயத்தினல். 60

அண்ட மூலத்துக்கு அப்பால் ஆழியும் கொதித்தது; ஏழு
தெண் திரைக் கடலின் செய்கை செப்பி என்? தேவன் சென்னிப்
பண்டை நாள் இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் குளுகுளு கொதித்தது அன்றே. 61

'இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து, உலகு எலாம் ஈன்று, மீளக்
கரக்கும் நாயகனைத் தானும் உணர்ந்திலன்; சீற்றம் கண்டும்,
வரக் கருதாது தாழ்த்த வருணனின் மாறு கொண்டார்
அரக்கரே? அல்லர்' என்ன, அறிஞரும் அலக்கண் உற்றார். 62

'உற்று ஒரு தனியே, தானே, தன் கணே, உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கான்; நடு இனிப் பிழைப்பது எங்ஙன்?
குற்றம் ஒன்று இலாதோர்மேலும் கோள் வரக் குறுகும்' என்ன,
மற்றைய பூதம் எல்லாம், வருணனை வைத மாதோ. 63

வருணன் தோன்றிப் பணிவுரை பகர்தல்

எழு சுடர்ப் படலையோடும் இரும் புகை நிரம்பி எங்கும்
வழி தெரிவு அறிவு இலாத நோக்கினன் வருணன் என்பான்,
அழுது அழி கண்ணன், அன்பால் உருகிய நெஞ்சன், அஞ்சித்
தொழுது எழு கையன், நொய்தின் தோன்றினன், வழுத்தும் சொல்
[லான்.

'நீ எனை நினைந்த தன்மை, நெடுங் கடல் முடிவில் நின்றேன்
ஆயினேன் அறிந்திலேன்' என்று அண்ணலுக்கு அயிர்ப்பு நீங்க,
காய் எரிப் படலை சூழ்ந்த கருங் கடல் தரங்கத்தூடே,
தீயிடை நடப்பான் போல, செறி புனற்கு இறைவன் சென்றான்.

59. இடுக்கு - துன்பம்; 60. அடைத்த - தூர்ந்து போயின; 61. ஆழி - ஆவரணக் கடல், பெரும்புறக் கடல்; 63. கோள் - தீங்கு.

வந்தனன் என்ப மன்னோ, மறி கடற்கு இறைவன்; வாயில்
சிந்திய மொழியன், தீந்த சென்னியன், திகைத்த நெஞ்சன்,
வெந்து அழிந்து உருகும் மெய்யன், விழுப் புகைப் படலம் விம்ம,
அந்தரின் அலமந்து, அஞ்சி, துயர் உழந்து, அலக்கண் உற்றான்.

வருணன் அடைக்கலம் வேண்டுதல்

'நவை அறும் உலகிற்கு எல்லாம் நாயக! நீயே சீறின்,
கவயம் நின் சரணம் அல்லால், பிறிது ஒன்று கண்டது உண்டோ?
இவை உனக்கு அரியவோதான்; எனக்கு என வலி வேறு உண்டோ?
அவயம், நின் அவயம்!' என்னா, அடுத்து அடுத்து அரற்றுகின்றான்: 67

'ஆழி நீ; அனலும் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே; அவற்று உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை மறப்பெனோ? வயங்கு செந் தீச்
சூழுற உலைந்து போனேன்; காத்தருள்—சுருதி மூர்த்தி! 68

'காட்டுவாய் உலகம்; காட்டிக் காத்து, அவை கடையில் செந் தீ
ஊட்டுவாய்; உண்பாய், நீயே; உனக்கும் ஒண்ணாதது உண்டோ?
தீட்டு வான் பகழி ஒன்றால் உலகங்கள் எவையும் தீய
வீட்டுவாய்; நினையின், நாயேற்கு இத்தனை வேண்டுமோதான்?

'சண்ட வான் கிரண வாளால் தயங்கு இருட் காடு சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி வள்ளலே! மறையின் வாழ்வே!
பண்டை நான்முகனே ஆதி சராசரத்து, உள்ளப் பள்ளப்
புண்டரீகத்து வைகும் புராதனா! போற்றி, போற்றி! 70

'"கள்ளமாய் உலகம் கொள்ளும் கருணையாய்! மறையில் கூறும்
எள்ளல் ஆகாத மூலத்து யாதுக்கும் முதலாய் உள்ள
வள்ளலே! காத்தி" என்ற மா கரி வருத்தம் தீர,
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனா! போற்றி, போற்றி!

'அன்னை நீ; அத்தன் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே; பேறும் நீ; இழவும் நீயே;
என்னை, "நீ இகழ்ந்தது" என்றது எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்! நாயேன் எங்ஙனம் உணர்வேன், உன்னை?'

பாய் இருள் சீய்க்கும் தெய்வப் பருதியைப் பழிக்கும் மாலை,
மா இருங் கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து,
'தீயன சிறியோர் செய்தால், பொறுப்பது பெரியோர் செய்கை;
ஆயிர நாமத்து ஐயா! சரணம்' என்று அடியில் வீழ்ந்தான். 73

66. அந்தர் - குருடர்; 67. கவயம் - கவசம், ஈண்டுப் பாதுகாவல்; 70. சண்டம் - கொடுமை; ஈண்டு வெப்பக் கொடுமை; 71. கள்ளமாய் - ஒருவரும் உணராதவாறு; மா கரி - பெருமையுடைய யானை; 73. அடியுறை - அடியின்கண் உறுவதாகிய காணிக்கைப் பொருள்.

இராமன் சினம் தணிந்து, காலத்தாழ்வுக்குக் காரணம் வினுதல்

பருப்பதம் வேவது என்னப் படர் ஒளி படராநின்ற
உருப் பெறக் காட்டி நின்று, 'நான் உனக்கு அபயம்' என்ன,
அருப்பு அறப் பிறந்த கோபம் ஆறினன், ஆரு ஆற்றல்
நெருப்பு உறப் பொங்கும் வெம் பால் நீர் உற்றது அன்ன நீரான். 74

'ஆறினும்; அஞ்சல்; உன்பால் அளித்தனம் அபயம், அன்பால்;
ஈறு இலா வணக்கம் செய்து, யாம் இரந்திட, எய்திடாதே,
சீறுமா கண்டு வந்த திறத்தினைத் தெரிவதாகக்
கூறுதி, அறிய' என்ருன்; வருணனும், தொழுது கூறும்: 75

'பார்த்தனில் பொறையின் மிக்க பத்தினிக்கு உற்ற பண்பு
வார்த்தையின் அறிந்தது அல்லால், தேவர்பால் வந்திலேன், நான்;
தீர்த்த! நின் ஆணை; ஏழாம் செறி திரைக் கடலில் மீனின்
போர்த் தொழில் விலக்கப் போனேன்; அறிந்திலேன் புகுந்தது ஒன்
[றும்.' 76

இராமன், அம்பிற்கு இலக்கம் யாது என, வருணன் கூறுதல்

என்றலும், இரங்கி, 'ஐயன், 'இத் திறம் நிற்க; இந்தப்
பொன்றல் இல் பகழிக்கு அப்பால் இலக்கம் என்? புகறி' என்ன,
'நன்று' என வருணன்தானும், 'உலகத்து நலிவு தீர,
குன்று என உயர்ந்த தோளாய்! கூறுவல்' என்று கூறும்: 77

'மன்னவ! மருகாந்தாரம் என்பது ஓர் தீவின் வாழ்வார்,
அன்னவர் சதகோடிக்கும் மேல் உளார், அவுணர் ஆயோர்,
தின்னவே உலகம் எல்லாம் தீந்தன; எனக்கும் தீயார்;
மின் உமிழ் கணையை வெய்யோர்மேல் செல விடுதி' என்ருன்.

இராமன் அம்பு அவுணரை அழித்து மீளல்

நேடி, நூல் தெரிந்துளோர்தம் உணர்விற்கும், நிமிர நின்ருன்,
'கோடி நூறு ஆய தீய அவுணரைக் குலங்களோடும்
ஒடி நூறு' என்று விட்டான்; ஓர் இமை ஒடுங்கா முன்னம்,
பாடி நூருக நூறி மீண்டது, அப் பகழித் தெய்வம். 79

ஆய்வினை உடையர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம்
ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ?
மாய் வினை இயற்றி, முற்றும் வருணன்மேல் வந்த சீற்றம்,
தீவினை உடையார்மாட்டே தீங்கினைச் செய்தது அன்றே. 80

74. உருப் பெறக் காட்டல் - வடிவத்தை நன்ருகக் காட்டல்; அருப்பு அற - சிறிதாக அல்லாமல் (மிகுதியாக); 75. தெரிவதாக - யாவரும் உணரும்படி; 76. பார்த்தனில் - பார்தனில், ஓசை இன்பம் நோக்கி வல்லெழுத்து மிக்கது; 79. நூறு - அழிப்பாய்; பாடி - ஊர், ஈண்டு மருகாந்தாரம்.

பாபமே இயற்றினரை, பல் நெடுங் காதம் ஓடி,
தூபமே பெருகும் வண்ணம், எரி எழச் சுட்டது அன்றே,
தீபமே அனைய ஞானத் திரு மறை முனிவர் செப்பும்
சாபமே ஒத்தது அம்பு;—தருமமே வலியது அம்மா! 81

இராமன் வழி வேண்ட, வருணன் சேது கட்டச் சொல்லுதல்

'மொழி உனக்கு அபயம் என்றாய்; ஆதலான், முனிவு தீர்ந்தேன்;
பழி எனக்கு ஆகும் என்று, பாதகர் பரவை என்னும்
குழியினைக் கருதிச் செய்த குமண்டையைக் குறித்து நீங்க,
வழியினைத் தருதி' என்றான், வருணனை நோக்கி, வள்ளல். 82

'ஆழமும் அகலம்தானும் அளப்ப அரிது எனக்கும், ஐய!
ஏழ் என அடுக்கி நின்ற உலகுக்கும் எல்லை இல்லை;
வாழியாய்! வற்றி நீங்கில், வரம்பு அறு காலம் எல்லாம்
தாழும்; நின் சேனை உள்ளம் தளர்வுறும்—தவத்தின் மிக்காய்!

'கல்லென வலித்து நிற்பின், கணக்கு இலா உயிர்கள் எல்லாம்
ஒல்லையின் உலந்து வீயும்; இட்டது ஒன்று ஒழுகா வண்ணம்
எல்லை இல் காலம் எல்லாம் ஏந்துவென், இனிதின்; எந்தாய்!
செல்லுதி, "சேது" என்று ஒன்று இயற்றி, என் சிரத்தின் மேலாய்.' 84

இராமன், சேது கட்டப் பணித்தல்

'நன்று, இது புரிதும் அன்றே; நளிர் கடல் பெருமை நம்மால்
இன்று இது தீரும் என்னில், எளிவரும் பூதம் எல்லாம்;
குன்று கொண்டு அடுக்கி, சேது குயிற்றுதிர்' என்று கூறிச்
சென்றனன், இருக்கை நோக்கி; வருணனும் அருளின் சென்றான். 85

7 சேது பந்தனப் படலம்

நளனை அழைத்தல்

அளவு அறும் அறிஞரோடு அரக்கர் கோமகற்கு
இளவலும் இனிது உடன் இருக்க, எண்ணினன்,
விளைவன விதி முறை முடிக்க வேண்டுவான்,
'நளன் வருக!' என்றனன்—கவிக்கு நாயகன். 1

82. குமண்டை - ஒருவகை மகிழ்ச்சிக் கூத்து; செருக்கால் செய்யும் செயலும் ஆம்; 84. ஒழுகுதல் - கீழ் விழுந்து ஆழ்தல்; 85. சேது - அணை.

சேது கட்ட நளன் உடன்பட்டு, 'உரியன கொணர்தி' எனல்

வந்தனன், வானரத் தச்சன்; 'மன்ன! நின்
சிந்தனை என்?' என, 'செறி திரைக் கடல்
பந்தனை செய்குதல் பணி நமக்கு' என,
நிந்தனை இலாதவன் செய்ய நேர்ந்தனன். 2

'காரியம் கடலினை அடைத்துக் கட்டலே;
சூரியன் காதல! சொல்லி என் பல;
மேருவும் அணுவும் ஓர் வேறு உருவகை
ஏர்வுற இயற்றுவென்; கொணர்தி' என்றனன். 3

சாம்பன், கடலை அடைக்க வருமாறு சேனைக்குக் கூறல்

'இளவலும், இறைவனும், இலங்கை வேந்தனும்,
அளவு அறு நம் குலத்து அரசும், அல்லவர்
வளைதரும் கருங் கடல் அடைக்க வம்' எனத்
தளம் மலி சேனையைச் சாம்பன் சாற்றினன். 4

வானர சேனை மலைகளைக் கொணர்தல்

கரு வரை காதங்கள் கணக்கு இலாதன
இரு கையில், தோள்களில், சென்னி, ஏந்தின,
ஒரு கடல் அடைக்க மற்று ஒழிந்த வேலைகள்
வருவன ஆம் என, வந்த வானரம். 5

பேர்த்தன மலை சில; பேர்க்கப் பேர்க்க, நின்று
ஈர்த்தன சில; சில சென்னி ஏந்தின;
தூர்த்தன சில; சில தூர்க்கத் தூர்க்க நின்று
ஆர்த்தன; சில சில ஆடிப் பாடின. 6

காலிடை ஒரு மலை உருட்டி, கைகளின்
மேலிடை மலையினை வாங்கி, விண் தொடும்
சூலுடை மழை முகில் சூழ்ந்து சுற்றிய,
வாலிடை, ஒரு மலை ஈர்த்து, வந்தவால். 7

நளன் மலைகளை அடுக்குதல்

முடுக்கினன், 'தருக' என, மூன்று கோடியர்
எடுக்கினும், அம் மலை ஒரு கை ஏந்தியிட்டு,
அடுக்கினன்; தன் வலி காட்டி, ஆழியை
நடுக்கினன்—நளன் எனும் நவையின் நீங்கினன். 8

7: 4. தளம் - கூட்டம்.

மஞ்சினில் திகழ்தரும் மலையை, மாக் குரங்கு,
எஞ்சுறக் கடிது எடுத்து எறியவே, நளன்
விஞ்சையில் தாங்கினன்—சடையன் வெண்ணெயில்,
'தஞ்சம்!' என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல். 9

சேது கட்டும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

சயக் கவிப் பெரும் படைத் தலைவர் தாள்களால்,
முயல் கறை மதி தவழ் முன்றில் குன்றுகள்
அயக்கலின், முகில் குலம் அலறி ஓடின;
இயக்கரும் மகளிரும் இரியல்போயினர். 10

வேருடை நெடுங் கிரி தலைவர் வீசின,
ஓர் இடத்து ஒன்றின்மேல் ஒன்று சென்றுக,
நீரிடை நிமிர் பொறி பிறக்க, 'நீண்ட ஈது
ஆருடை நெருப்பு?' என வருணன் அஞ்சினன். 11

ஆனிறக்கண்ணன் என்று ஒருவன், அங்கையால்,
கான் இற மலை கொணர்ந்து எறிய, கார்க் கடல்
தூ நிற முத்துஇனம் துவலையோடும் போய்,
வான் நிறை மீனொடு மாறு கொண்டவே. 12

சிந்துரத் தட வரை எறிய, சேணிடை
முந்துறத் தெறித்து எழு முத்தம் தொத்தலால்,
அந்தரத்து எழு முகில் ஆடையா, அகன்
பந்தர் ஒத்தது, நெடும் பருதி வானமே. 13

வேணுவின் நெடு வரை வீச, மீமிசைச்
சேண் உறு திவலையால் நனைந்த செந் துகில்,
பூண் உறும் அல்குலில் பொருந்திப் போதலால்,
நாணினர், வான நாட்டு உறையும் நங்கைமார். 14

தேன் இவர் தட வரை, திரைக் கருங் கடல்-
தான் நிமிர்தர, இடை குவியத் தள்ளும் நீர்-
மேல் நிமிர் திவலை மீச் சென்று மீடலால்,
வானவர் நாட்டினும் மழை பொழிந்தவால். 15

10. அயக்கல் - அசக்குதல், அசைத்தல்; 13. சிந்துரம் - யானை; ஆடை - மேற்கட்டியாகிய ஆடை; வானம் பந்தரையும், முகில் பந்தருக்குக் கட்டும் சீலையையும், அங்குத் தொத்திய முத்துகள் சீலையில் தொங்கவிடும் முத்துச் சரத்தையும் போன்றன; 15. இவர்தல் - பொருந்துதல்; நிமிர்தர - மேலோங்கும்படி.

மை உறு மலைகளோடும் மறி கடல் வந்து வீழ்ந்த,
வெய்ய வாய் மகரம் பற்ற வெருவின விளிப்ப,—மேல்நாள்,
பொய்கையின் இடங்கர் கவ்வ, 'புராதனா! போற்றி' என்று
கை எடுத்து அழைத்த யானை போன்றன—களி நல் யானை. 16

அசும்பு பாய் தேனும், பூவும், ஆரமும், அகிலும், மற்றும்,
விசும்பு எலாம் உலவும் தெய்வ வேரியின் மிடைந்து விம்ம,
தசும்பெலாம் வாசம் ஊட்டிச் சார்த்திய தண்ணீர் என்ன,
பசும் புலால் நாறும் வேலை பரிமளம் கமழ்ந்தது அன்றே. 17

தேம் முதல் கனியும் காயும், தேனினோடு ஊனும், தெய்வப்
பூ முதலாய எல்லாம், மீன் கொளப் பொலிந்த அன்றே,
மா முதல் தருவோடு ஓங்கும் வான் உயர் மானக் குன்றம்—
தாம் முதலோடும் கெட்டால் ஒழிவரோ, வண்மை தக்கோர்?

மண்ணுறச் சேற்றுள் புக்குச் சுரிகின்ற மாலைக் குன்றம்—
கள் நிறை போதும், காயும், கனிகளும், பிறவும், கவ்வி
வெண் நிற மீன்கள் எல்லாம், வறியவர் என்ன,—மேன்மேல்
உள் நிறை செல்வம் நல்காது ஒளிக்கின்ற உலோபர் ஒத்த. 19

கறங்கு எனத் திரியும் வேகக் கவிக் குலம் கதுவ வாங்கி,
பிறங்கு இருங் கடலில் பெய்த போழ்தத்தும், பெரிய பாந்தள்,
மறம் கிளர் மான யானை வயிற்றின ஆக, வாய் சோர்ந்து,
உறங்கின—கேடு உற்றாலும், உணர்வரோ உணர்வு இலாதார்?

இழை எனத் தகைய மின்னின் எயிற்றின, முழக்கம் ஏய்ந்த,
புழையுடைத் தடக் கை ஒன்றோடு ஒன்று இடை பொருந்தச் சுற்றி,
கழையுடைக் குன்றின் முன்றில், உருமொடு கலந்த கால
மழை எனப் பொருத—வேலை மகரமும் மத்த மாவும். 21

பொன்றின, சிறிய ஆய புண்ணியம் புரிந்தோர் போல,—
குன்றுகள் குரக்கு வீரர் குவித்தன நெருப்புக் கோப்ப,
ஒன்றின் மேல் ஒன்று வீழ, உகைத்து எழுந்து, உம்பர் நாட்டுச்
சென்று, மேல் நிலை பெறாது, திரிந்தன—சிகரச் சில்லி. 22

16. மகரம் - முதலை; 17. அசும்பு - கசிவு, ஊற்று; தசும்பு - குடம்; 18. தேம் முதல் கனி - இனிமையைத் தம்மிடத்தே கொண்ட பழம்; தேம் - இனிமை; முதல் - இடம்; முதலோடும் - அடியோடும்; 19. சுரிதல் - உள்ளே அழுந்துதல்; மாலை - வரிசை; 20. வாய் சோர்ந்து - வாயைத் திறந்தவண்ணம்; 22. சில்லி - சிறு துண்டுகள்.

கூருடை எயிற்றுக் கோள் மாச் சுறவுஇனம் எறிந்து கொல்ல,
போருடை அரியும், வெய்ய புலிகளும், யாளிப் போத்தும்,
நீரிடைத் தோற்ற அன்றே?—தம் நிலை நீங்கிச் சென்றால்,
ஆரிடைத் தோலார் மேலோர், அறிவிடை நோக்கின் அம்மா?

ஒள்ளிய உணர்வு கூட, உதவலர்எனினும் ஒன்றோ,
வள்ளியர் ஆயோர் செல்வம் மன்னுயிர்க்கு உதவும் அன்றே?—
துள்ளின, குதித்த, வானத்து உயர் வரைக் குவட்டில் தூங்கும்
கள்ளினை நிறைய மாந்தி, கவி எனக் களித்த, மீன்கள். 24

மூசு எரி பிறக்க, மீக்கொண்டு, இறக்கிய முடுக்கம்தன்னால்,
கோய் சொரி நறவம் என்னத் தண் புனல் உகுக்கும் குன்றின்
வேய் சொரி முத்துக்கு, அம்மா விருந்து செய்திருந்த—ஈண்ட
வாய் சொரி இப்பியோடும் வலம்புரி உமிழ்ந்த முத்தம். 25

விண்தலம் தொடு மால் வரை வேரொடும்
கொண்டு, அலம் கொள வீரர் குவித்தலால்,
திண் தலம், கடல், ஆனது; நீர் செல,
மண்தலம் கடல் ஆகி மறைந்ததே. 26

அய்யன் வேண்டின், அது இது ஆம் அன்றே—
வெய்ய சீயமும், யாளியும், வேங்கையும்,
மொய் கொள் குன்றின்முதலின, மொய்த்தலால்,
நெய்தல் வேலி குறிஞ்சி நிகர்த்ததால்! 27

'யான் உணாதன இங்கு இவை' என்னவே,
தீன் உணாதன; என் இது செய்யுமே?
மான் உணாத திரைக் கடல் வாழ்தரு
மீன் உணாதன இல்லை விலங்குஅரோ. 28

வவ் விலங்கு வளர்த்தவர்மாட்டு அருள்
செவ் விலங்கல் இல் சிந்தையின் தீர்வரோ—
'இவ் விலங்கல் விடேம்' இனி என்பபோல்,
எவ் விலங்கும் வந்து எய்தின வேலையே! 29

கனி தரும், நெடுங் காய் தரும், நாள்தொறும்—
இனிது அருந் தவம் நொய்தின் இயற்றலால்,—
பனி தருங் கிரி தம் மனம் பற்று அறு
முனிவரும் முனியார், முடிவு உன்னுவார். 30

25. மீக்கொண்டு - தலையின்மேல் தாங்கிக்கொண்டு வந்து; இறக்கிய முடுக்கம் - கடலில் போட்ட வேகம்; கோய் - கள் முகக்கும் பாத்திரம்; 26. அலம் கொள - உடல் வருத்தமுற; 28. தீன் - தீனி.

புலையின் வாழ்க்கை அரக்கர், பொருப்பு உளார்,
தலையின்மேல் வைத்த கையினர், சாற்றுவார்,
'மலை இலேம்; மற்று, மாறு இனி வாழ்வது ஓர்
நிலை இலேம்' என்று, இலங்கை நெருங்கினர். 31

முழுக்க நீரில் புகா, முழுகிச் செலா,
குழுக்களோடு அணை கோள் அரி, யாளிகள்,
இழுக்கு இல் பேர் அணையின் இரு பக்கமும்
ஒழுக்கின் மாலை வகுத்தன ஒத்தவே. 32

பளிக்கு மால் வரை முந்து படுத்தன
ஒளிக்கும் ஆழி கிடந்தன ஓர்கிலார்,
'வெளிக்கு மால் வரை வேண்டும்' எனக் கொணர்ந்து,
அளிக்கும் வானர வீரர் அநேகரால். 33

பாரினுள் முதுகும் நெடும் பாழ்பட,
மூரி வானரம் வாங்கிய மொய்ம் மலை
வேரின் ஆம் என, வெம் முழையின்னுழை
சோரும் நாகம் நிலன் உறத் தூங்குமால். 34

அருணச் செம் மணிக் குன்று அயலே சில
இருள் நற் குன்றம் அடுக்கின, ஏய்ந்தன—
கருணைக் கொண்டல், 'வறியன் கழுத்து' என
வருணற்கு ஈந்த வருண சரத்தையே. 35

ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம்
ஆய்ந்து கொள்ளும் அறிஞரின், ஆழ் கடல்
பாய்ந்து பண்டு உறையும் மலைப் பாந்தள்கள்,
போந்த மா மலையின் முழை, புக்கவே. 36

சேதுவின் பெருமைக்கு இணை செப்ப, ஓர்
ஏது வேண்டும் என்று எண்ணுவது என்கொலோ—
தூதன் இட்ட மலையின் துவலையால்,
மீது விட்டு-உலகு உற்றது, மீன் குலம்? 37

நீலன் இட்ட நெடு வரை நீள் நில
மூலம் முட்டலின், மொய் புனல் கைம்மிக,
கூலம் இட்டிய ஆர்கலி கோத்ததால்,
ஓலமிட்டு எழுந்து ஓடி, உலகு எலாம். 38

32. குழுக்கள் - கூட்டங்கள்; 35. அருணமணி - மாணிக்கம்; இருள் நற்குன்றம் - இருள் நிறம் வாய்ந்த நீல மலைகள்; 37. துவலையால் - துவலையோடு; மீது விட்டு உலகு - மேலதாகிய வீட்டுலகம்; 38. மூலம் - அடிப்பகுதி கூலம் - கரை.

ஒருவன் ஆயிரம் யோசனை ஓங்கிய
அருவி மால் வரை விட்டு எறிந்து ஆர்த்தலால்,
மருவு வான் கொடி மாடஇலங்கையில்
தெரு எலாம் புக்கு உலாய, தெண்ணீர்அரோ.* 39

மயிந்தன் இட்ட நெடு வரை வான் உற
உயர்ந்து முட்டி விழ, எழுந்து ஓத நீர்
தியந்தம் முட்ட, திசை நிலை யானையும்,
பெயர்ந்து விட்டவை, யாவும் பிளிறுவ. 40

இலக்கு வன் சரம்ஆயினும், ஏன்று எதிர்
விலக்கினல், விலங்காத விலங்கலால்,
அலக்கண் எய்த,—அமுது எழ ஆழியைக்
கலக்கினன் மகன்—மீளக் கலக்கினன். 41

மருத்தின் மைந்தன் மணி நெடுந் தோள் எனப்
பெருத்த குன்றம், கரடிப் பெரும் படை
விருத்தன் இட்ட விசையினின், வீசிய
திருத்தம், வானவர் சென்னியில் சென்றதால். 42

குமுதன் இட்ட குல வரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரியும் திரைக் கடல்
துமி தம் ஊர் புக, வானவர் துள்ளினர்—
அமுதம் இன்னம் எழும் எனும் ஆசையால். 43

கன சினத்து உருமின் கடுங் கார் வரை
பனசன் இட்டன யாவும் பரிக்கிலன்,
மன சினத்த அனந்தனும், வாழ்வு இகந்து,
அனசனத்தொழில் மேற்கொள்வது ஆயினன். 44

எண் இல் எண்குஇனம் இட்ட கிரிக் குலம்,
உண்ண உண்ணச் சென்று, ஒன்றினெடு ஒன்று உற,
சுண்ண நுண் பொடி ஆகித் தொலைந்தன,
புண்ணியம் பொருந்தாத முயற்சிபோல். 45

40. தியந்தம் - திக் அந்தம், திசையின் எல்லையான இடம்; 41. விலங்காத - அசையாத; விலங்கல் - மலை; 42. திருத்தம் - தீர்த்தம், எதுகை நோக்கித் திரிந்தது; 43. துமி - துளி; இச் சொல்லுக்கு இப் பொருள் உண்மையை ஆயமகள் கூற்றுல் கம்பர் விளக்கினர் என்பது ஒரு கதைக் குறிப்பு; 44. பரிக்கிலன் - தாங்க இயலாதவன்; அனசனத் தொழில் - உண்ணுமையாகிய தொழில்; அசனம் - உணவு; அன் அசனம் - உண்ணு திருத்தல்.

ஆர ஆயிர யோசனை ஆழமும்
தீர நீண்டு பரந்த திமிங்கிலம்,
பார மால் வரை ஏறப் பதைத்து, உடல்
பேரவே, குன்றும் வேலையும் பேர்ந்தவால். 46

நளன் சேதுவை அமைத்த வகை

குலை கொளக் குறி நோக்கிய கொள்கையான்,
சிலைகள் ஒக்க முறித்துச் செறித்து, நேர்
மலைகள் ஒக்க அடுக்கி, மணற் படத்
தலைகள் ஒக்கத் தடவும், தடக் கையால். 47

தழுவி, ஆயிர கோடியர் தாங்கிய
குழுவின் வானரம் தந்த கிரிக் குலம்,
எழுவின் நீள் கரத்து ஏற்றிட, இற்று இடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான். 48

மலை சுமந்து வரும் வானரங்கள்

மலை சுமந்து வருவன வானரம்,
நிலையில் நின்றன, செல்ல நிலம் பெறா—
அலை நெடுங் கடல் அன்றியும், ஆண்டுத் தம்
தலையின்மேலும் ஓர் சேது தருவ போன்ம். 49

பருத்த மால் வரை ஏந்திய பல் படை
நிரைத்தலின், சில செல்ல நிலம் பெறா,
கரத்தின் ஏந்திய கார் வரை, கண் அகன்
சிரத்தின் மேற்கொண்டு, நீந்தின சென்றவால். 50

ஆய்ந்து நீளம், அரிது சுமந்தன
ஓய்ந்த கால, பசியின் உலர்ந்தன,
ஏந்து மால் வரை வைத்து, அவற்று ஈண்டு தேன்
மாந்தி மாந்தி, மறந்து, துயின்றவால். 51

போதல் செய்குநரும், புகுவார்களும்,
மாதிரம்தொறும் வானர வீரர்கள்,
'சேது எத்துணைச் சென்றது?' என்பார் சிலர்;
'பாதி சென்றது' எனப் பகர்வார் சிலர். 52

47. குலை - அணை; 50. நிரைத்தல் - வரிசையாக நிற்றல்; 51. நீளம் ஆய்ந்து - செல்லவேண்டிய தூரத்தை ஆராய்ந்து; 52. போதல் செய்குநர் - மலைகளை மீண்டும் கொணரச் செல்பவர்கள்; புகுவார் - மலையைக் கொண்டு புகுபவர்.

மலைகளும் மரங்களும் கடலில் மூழ்குதலால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

குறைவு இல் குங்குமமும், குகைத் தேன்களும்,
நிறை மலர்க் குலமும், நிறைந்து எங்கணும்,
துறைதொறும் கிரி தூக்கின தோய்தலால்,
நறை நெடுங் கடல் ஒத்தது, நாம நீர். 53

நெடும் பல் மால் வரை தூர்த்து நெருக்கவும்,
துடும்பல் வேலை துளங்கியது இல்லையால்—
இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும்,
குடும்பம் தாங்கும் குடிப் பிறந்தாரினே. 54

கொழுந்துடைப் பவளக் கொடியின் குலம்
அழுந்த உய்த்த அடுக்கல் தகர்ந்து, அயல்
விழுந்த பல் மணியின் ஒளி, மீமிசை
எழுந்த எங்கணும், இந்திர வில்லினே. 55

பழுமரம் பறிக்க, பறவைக் குலம்,
தழுவி நின்று ஒருவன் தனித் தாங்குவான்
விழுதலும், புகல் வேற்று இடம் இன்மையால்,
அழுது அரற்றும் கிளை என ஆனவால். 56

'தர வலோம், மலர்' என்று, உயிர் தாங்கிய
மரம் எலாம் கடல் வீழ்தலும், வண்டு எலாம்,
கரவு இலாளர் விழ, களைகண் இலா
இரவலாளரின், எங்கும் இரிந்தவால். 57

தொக்கு அடங்கல ஓடும் துவலைகள்
மிக்கு அடங்கலும் போவன—மீன் குலம்,
அக் கருங் கடல் தூர, அயற் கடல்
புக்கு அடங்கிடப் போவன போன்றவே. 58

மூசு வண்டுஇனம், மும் மத மாவின்பின்
ஆசை கொண்டனபோல் தொடர்ந்து ஆடிய,
ஓசை ஒண் கடல் குன்றொடு அவை புக,
வேசை மங்கையர் ஆம் என, மீண்டவே. 59

நிலம் அரங்கிய வேரொடு நேர் பறித்து,
அலமரும் துயர் எய்தியஆயினும்,
வல மரங்களை விட்டில, மாசு இலாக்
குல மடந்தையர் என்ன, கொடிகளே.* 60

53. நாம நீர் - அச்சத்தைச் செய்யும் உவர்க்கடல்; 54. துடும்பல் வேலை - பேரொலி படைத்த கடல், அசையும் கடலும் ஆம்; 57. களைகண் - பற்றுக் கோடு; 60. அரங்கிய - அழுந்திய; வல மரங்கள் - உறுதியான மரங்கள், சுற்றியுள்ள மரங்களும் ஆம்.

துப்பு உறக் கடல் தூய துவலையால்,
அப் புறக் கடலும் சுவை அற்றன;
எப் புறத்து உரும்ஏறும் குளிர்ந்தன;
உப்பு உறைத்தன, மேகம் உகுத்த நீர். 61

முதிர் நெடுங் கிரி வீழ, முழங்கு நீர்
எதிர் எழுந்து நிரந்தரம் எய்தலால்,
மதியவன் கதிரின் குளிர் வாய்ந்தன—
கதிரவன் கனல் வெங் கதிர்க் கற்றையே. 62

நன்கு ஒடித்து, நறுங் கிரி சிந்திய
பொன் கொடித் துவலைப் பொதிந்து ஓடுவ,
வன் கொடிப் பவளங்கள் வயங்கலால்,
மின் பொடித்தது போன்றன, விண் எலாம். 63

ஓடும் ஒட்டரின், ஒன்றின் முன் ஒன்று போய்,
காடும் நாடும், மரங்களும் கற்களும்,
நாடும்; நாட்டும்; நளிர் கடல் நாட்டில், ஓர்
பூடும் ஆட்டல் இலாய, இப் பூமியில். 64

வரைப் பரப்பும், வனப் பரப்பும், உவர்
தரைப் பரப்புவது என்ன, தனித் தனி
உரைப் பரப்பும் உறு கிரி ஒண் கவி;
கரைப் பரப்பும், கடற் பரப்பு ஆனதால்.† 65

உற்றதால் அணை ஓங்கல் இலங்கையை,
முற்ற மூன்று பகலிடை; முற்றவும்,
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்;
மற்று இவ் வானம் பிறிது ஒரு வான்கொலோ? 66

சேதுவின் தோற்றம்

நாடுகின்றது என், வேறு ஒன்று?—நாயகன்
தோடு சேர் குழலாள் துயர் நீக்குவான்,
'ஓடும், என் முதுகிட்டு' என, ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது, சேதுவே! 67

61. உரும் ஏறு - பேரிடி; 63. பொடித்தல் - தோன்றுதல்; 64. ஒட்டர் - ஒட்டக்காரர், விரைந்தோடும் தூதர்; நளிர் கடல் நாடு - குளிர்ந்த கடல் சூழ்ந்த நெய்தல் நிலம்; ஆட்டல் இலாய - ஆடுதல் இல்லையாயின, காணப் படவில்லை; 65. உவர்த்தரை - கடற்பகுதி; உரை - புகழ்; 66. ஓங்கல் - மலை, ஈண்டுத் திரிகூடமலை; 67. சேடன் - ஆதிசேடன்.

மெய்யின் ஈட்டத்து இலங்கை ஆம் மென் மகள்,
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாது,
ஐயன் ஈட்டிய சேனை கண்டு, அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால். 68

கான யாறு பரந்த கருங் கடல்,
ஞான நாயகன் சேனை நடத்தலால்,
'ஏனை யாறு, இனி, யான் அலது ஆர்?' எனா,
வான யாறு, இம்பர் வந்தது மானுமால். 69

கல் கிடந்து ஒளிர் காசுஇனம் காந்தலால்,
மற்கடங்கள் வகுத்த வயங்கு அணை,
எல் கடந்த இருளிடை, இந்திரன்
வில் கிடந்தது என்ன விளங்குமால். 70

சேது அமைத்த பின், சுக்கிரீவன் முதலியோர் இராமனுக்குத் தெரிவித்தல்

ஆன பேர் அணை அன்பின் அமைத்தனர்,
கான வாழ்க்கைக் கவிக் குல நாதனும்,
மான வேற் கை இலங்கையர் மன்னனும்,
ஏனையோரும், இராமனை எய்தினார். 71

எய்தி, 'யோசனை ஈண்டு ஒரு நூறு இவை
ஐ-இரண்டின் அகலம் அமைந்திடச்
செய்ததால் அணை' என்பது செப்பினார்—
வைய நாதன் சரணம் வணங்கியே. 72

8 ஒற்றுக் கேள்விப் படலம்

இராமன் சேது காணச் செல்லுதல்

ஆண்தகையும், அன்பினொடு, காதல்அமிழ்து ஊற
நீண்ட கையினால் அவரை நெஞ்சினொடு புல்லி,
'ஈண்ட எழுக' என்றனன்—இழைத்த படி எல்லாம்
காண்டல்அதன்மேல் நெடிய காதல் முதிர்கின்றான். 1

68. மெய்யின் ஈட்டத்து - வாய்மையாகிய செல்வத்தையுடைய; ஈட்டம் - செல்வம்; பொய்யன் - இராவணன்; 69. ஏனை யாறு - மற்றைய வழி, நதி; 70. கடல் கரிய வானம்போல் தோன்ற, அணை இந்திர வில் போல விளங்கியது.

8 : 1. ஈண்ட எழுக - விரைந்து புறப்படுக.

பண்டை உறையுட்கு எதிர் படைக் கடலின் வைகும்
கொண்டல் என வந்து அவ் அணையைக் குறுகி நின்றான்—
அண்ட முதல்வன் ஒரு தன் ஆவி அனையாளைக்
கண்டனன் எனப் பெரிய காதல் முதிர்கின்றான். 2

நின்று, நெடிது உன்னினன், 'நெடுங் கடல் நிரம்பக்
குன்றுகொடு அடைத்து, அணை குயிற்றியது ஓர் கொள்கை,
அன்று உலகு தந்த முதல் அந்தணன் அமைத்தான்
என்ற பொழுதின்கணும் இது என்று இயலும்?' என்றான். 3

ஊழி முதல் நாயகன் வியப்பினொடு உவந்தான்,
'ஆழம் உரைசெய்யும் அளவே! இனி அது ஒன்றோ?
ஆழியில் இலங்கை பெரிது அத்திசையது ஆமேல்,
ஏழு கடலும் கடிது அடைப்பர், இவர்' என்றான். 4

இராமன் படையொடு அணைவழிக் கடல் கடந்து போதல்

நெற்றியின் அரக்கர்பதி செல்ல, நிறை நல் நூல்
கற்று உணரும் மாருதி கடைக் குழை வர, தன்
வெற்றி புனை தம்பி ஒரு பின்பு செல, வீரப்
பொன் திரள் புயக் கரு நிறக் களிறு போனான். 5

இருங் கவி கொள் சேனை, மணி ஆரம் இடறி, தன்
மருங்கு வளர் தெண் திரை வயங்கு பொழில் மான,
ஒருங்கு நனி போயின—உயர்ந்த கரையூடே
கருங் கடல் புகப் பெருகு காவிரி கடுப்ப. 6

ஓதிய குறிஞ்சி முதலாய நிலன் உள்ள
சோது இல அருந்துவன கொள்ளையின் முகந்துற்று,
யாதும் ஒழியா வகை சுமந்து, கடல் எய்தப்
போதலினும், அன்ன படை பொன்னி எனல் ஆகும். 7

ஆயது நெருங்க, அடி இட்டு, அடி இடாமல்,
தேயும் நெறி மாடு, திரை ஊடு, விசை செல்ல,
போய சில பொங்குதொறு பொங்குதொறு பூசல்
பாய் புரவி விண் படர்வபோல், இனிது பாய்வ. 8

2. பண்டை உறையுள் - பழைய வாழிடமான கடல்; 5. நெற்றி - படையின் முன்னணி; கடைக் குழை - கடைக்கூழை, படையின் பின்னணி; 8. நெறி மாடு - வழியில்.

மெய்யிடை நெருங்க, வெளியற்று அயலில் வீழும்
பொய் இடம் இலாத, புனலின் புகல் இலாத,
உய்விடம் அளிக்கும் அருளாளர் முறை உய்த்தார்
கையினிடை சென்று, கரை கண்ட கரை இல்லை. 9

இழைத்தனைய வெங் கதிரின் வெஞ் சுடர், இராமன்
மழைத்த முகில் அன்ன மணி மேனி வருடாமல்,
தழைத்த நிழல் உற்ற குளிர் சந்தனம், உயர்ந்த
வழைத் தரு, எடுத்து அருகு வந்தனர், அநேகர். 10

ஓம நெறி வாணர் மறை வாய்மை ஒரு தானே
ஆம் அரசன்-மைந்தர் திரு மேனி அலசாமே,
பூ மரன் இறுத்து, அவை பொருத்துவ பொருத்தி,
சாமரையின் வீசினர், படைத் தலைவர்தாமே. 11

அருங் கடகம் அம் கையில் அகற்றி, அயர்வோடும்
மருங்கு அட வளர்ந்த முலை மங்கை மணம் முன்னா,
ஒருங்கு அடல் உயர்ந்த படர் தானையொடும் ஓதத்து
இருங் கடல் கடந்து, கரை ஏறினன்—இராமன். 12

இராமன், சுவேல மலையில் தங்குதல்

பெருந் தவம் முயன்று அமரர் பெற்றிடும் வரத்தால்,
மருந்து அனைய தம்பியொடும், வன் துணைவரோடும்,
அருந்ததியும் வந்தனை செய் அம் சொல் இள வஞ்சி
இருந்த நகரின் புறன் ஓர் குன்றிடை இறுத்தான். 13

இராமன், படைவீடு அமைக்கும்படி பணித்தல்

நீலனை இனிது நோக்கி, நேமியோன், 'விரைய, நீ நம்
பால் வரு சேனைக்கு எல்லாம் இழைத்தியால் பாடி' என்னா,
கால்வரை வணங்கிப் போனான், கல்லினால் கடலைக் கட்டி,
நூல் வரை வழி செய்தானுக்கு அந் நிலை நொய்தின் சொன்னான்.

9. பொய் இடம் - வெற்றிடம்; முறை - தன்மை; கரை இல்லை - கணக்கில் அடங்கா; 10. வெங்கதிர் - சூரியன்; வருடுதல் - பரிசித்தல்; சந்தனம் - சந்தன மரம்; வழைத் தரு - சுர புன்னை மரம்; 11. ஓமம் - வேள்வி; வாய்மை ஒரு தானே ஆம் அரசன் - மெய்ம்மையின் வடிவம் தான் ஒருவனேயான தயரதன்; 12. கடகம் - வளை; ஓதம் - அலை, நீர்ப்பெருக்கு; 13. மருந்து - அமுதம்; அருந்ததி - வசிட்ட முனிவன் மனைவி; குன்று - சுவேல மலை; 14. பாடி - பாசறை; கால்வரை - அடிகளில்; நூல் வரை - நூல்களில் கூறும் முறை; வழி செய்தான் - நளன்.

நளன் பாசறை அமைத்தல்

பொன்னினும் மணியினானும் நான்முகன் புனைந்த பொற்பின்
நல் நலம் ஆக வாங்கி, நால் வகைச் சதுரம் நாட்டி,
இன்னார் என்னாத வண்ணம், இறைவர்க்கும் பிறர்க்கும் எல்லாம்
நல் நகர் நொய்தின் செய்தான்; தாதையும் நாண உட்கொண்டான். 15

வில்லினாற்கு இருக்கை செய்யும் விருப்பினால், பொருப்பின் வீங்கும்
கல்லினால் கல்லை ஒக்கக் கடாவினான்; கழைகள் ஆன
நெல்லினால் அலக்கும் காலும் நிரப்பினான்; தருப்பை என்னும்
புல்லினால் தொடுத்து, வாசப் பூவினால் வேய்ந்துபோனான். 16

வாயினும் மனத்தினாலும் வாழ்த்தி, மன்னுயிர்கட்கு எல்லாம்
தாயினும் அன்பினானைத் தாள் உற வணங்கி, தம் தம்
ஏயின இருக்கை நோக்கி, எண் திசை மருங்கும் யாரும்
போயினர்; பன்னசாலை இராமனும் இனிது புக்கான். 17

சூரியன் மறைவும், சந்திரன் தோற்றமும்

பப்பு நீர் ஆய வீரர், பரு வரை கடலில் பாய்ச்ச,
துப்பு நீர் ஆய தூய சுடர்களும் கறுக்க வந்திட்டு,
உப்பு நீர் அகத்துத் தோய்ந்த ஒளி நிறம் விளங்க, அப் பால்
அப்பு நீராடுவான்போல், அருக்கனும் அத்தம் சேர்ந்தான். 18

மால் உறு குடக வானின் வயங்கிய வந்து தோன்றும்
பால் உறு பசு வெண் திங்கள், பங்கய நயனத்து அண்ணல்
மேல் உறு பகழி தூர்க்க வெகுண்டனன் விரைவின் வாங்கி,
கால் உற வளைத்த காமன் வில் என, காட்டிற்று அன்றே. 19

நூற்று இதழ்க் கமலம் தந்த நுண் நறுஞ் சுண்ணம் உண்ணத்
தீற்றி மென் பனி நீர் தோய்ந்த சீகரத் தென்றல் என்னும்
காற்றினும், மாலை ஆன கனலினும், காமன் வாளிக்
கூற்றினும், வெம்மை காட்டி கொதித்தது—அக் குளிர் வெண் திங்கள்.

15. நலம் - அழகு; சதுரம் - சிற்ப நூல் கூறும் கட்டட அமைதியில் ஒரு வகை; இன்னார் என்னாதவண்ணம் - கட்டட அமைதி கொண்டு இஃது இன்னார் இருக்கை என்று அறிய முடியாதபடி; 16. அலக்கு - வரிச்சு; கால் - தறி, தூண்; 18. பப்பு நீர் - பரவும் தன்மை; துப்பு நீர் ஆய - பவளத்தின் ஒளியுடைய; வந்திட்டு - வந்து; அகம் - மார்பு, ஈண்டு உடல்; 19. மால் - பெருமை; குடக வான் - மேற்றிசை வானம்; வயங்கிய - விளங்கும் படி; 20 - உண்ணத் தீற்றுதல் - தன்மீது படியப் பூசுதல்.

செயிர்ப்பினும் அழகு செய்யும் திரு முகத்து அணங்கைத் தீர்ந்து,
துயிற் சுவை மறந்தான் தோள்மேல் தூ நிலாத் தவழும் தோற்றம்—
மயிற் குலம் பிரிந்தது என்ன, மரகத மலைமேல், வன்னி
உயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை வாள் அரா ஊர்வ போன்ற.

மன் நெடு நகரம் மாடே வரவர, வயிரச் செங் கைப்
பொன் நெடுந் திறள் தோள் ஐயன் மெய் உறப் புழுங்கி நைந்தான்;
பல் நெடுங் காதத்தேயும் சுட வல்ல, பவளச் செவ் வாய்,
அந் நெடுங் கருங் கண், தீயை அணுகினல் தணிவது உண்டோ?

இராவணன் ஒற்றரை வீடணன் காணுதல்

இற்றிது காலம் ஆக, இலங்கையர் வேந்தன் ஏவ,
ஒற்றர் வந்து அளவு நோக்கி, குரங்கு என உழல்கின்ருரைப்
பற்றினன் என்ப மன்னே—பண்டு தான் பல நாள் செய்த
நல் தவப் பயன் தந்து உய்ப்ப, முந்துறப் போந்த நம்பி. 23

பேர்வுறு கவியின் சேனைப் பெருங் கடல் வெள்ளம்தன்னுள்,
ஓர்வுறும் மனத்தன் ஆகி, ஒற்றரை உணர்ந்து கொண்டான்,
சேர்வுறு பாலின் வேலைச் சிறு துளி தெறித்தவேனும்,
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனுன்; 24

பெருமையும் சிறுமைதானும் முற்றுறு பெற்றி ஆற்ற
அருமையின் அகன்று, நீண்ட விஞ்சையுள் அடங்கி, தாமும்
உருவமும் தெரியாவண்ணம் ஒளித்தனர், உறையும் மாயத்து
இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னல் ஆனுன். 25

ஒற்றர் நிலை கண்ட இராமன், 'அவர்களை விடுக' எனல்

கூட்டிய விரல் திண் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி,
மீட்டு ஒரு வினை செயாமல் மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர், வாயால் குருதியே பொழிகின்ருரைக்
காட்டினன், 'கள்வர்' என்னு; கருணைஅம் கடலும் கண்டான்.

பாம்பு இழைப் பள்ளி வள்ளல், பகைஞர் என்று உணரான், 'பல்லோர்
நோம் பிழை செய்தகொல்லோ குரங்கு?' என இரங்கி நோக்கி,
'தாம் பிழை செய்தாரேனும், "தஞ்சம்!" என்று அடைந்தோர்தம்மை
நாம் பிழை செய்யலாமோ? நலியலீர்; விடுதிர்!' என்ருன். 27

21. வன்னி - நெருப்பு; உயிர்ப்பு - மூச்சுக் காற்று; 23. நம்பி - வீடணன்; 24. ஓர்வு - ஆராய்ச்சி; 25. ஒற்றரான சுக சாரருடைய உண்மை நிலை கண்ட வீடணனுக்குச் சீவாத்தும பரமாத்துமாக்களைக் கண்ட யோகி உவமை; ஒளித்தனர் - மறைந்து வாழ்கின்றவராகிய சிவன், ஈசுவரன்.

இராவணன் ஒற்றர் என்பதை வீடணன் விளக்குதல்

அகன் உறப் பொலிந்த வள்ளல் கருணையால் அமுத கண்ணன்,
'நகம் நிறை கானின் வைகும் நம் இனத்தவரும் அல்லர்;
தகை நிறைவு இல்லா உள்ளத்து இராவணன் தந்த ஒற்றர்;
சுகன், இவன்; அவனும் சாரன்' என்பது தெரியச் சொன்னான். 28

ஒற்றரின் உண்மை வடிவை வீடணன் வெளிப்படுத்தல்

கல்விக்கண் மிக்கோன் சொல்ல, கரு மன நிருதக் கள்வர்,
'வல் விற் கை வீர! மற்று இவ் வானரர் வலியை நோக்கி,
வெல்விக்கை அரிது என்று எண்ணி, வினையத்தால் எம்மை எல்லாம்
கொல்விக்க வந்தான்; மெய்ம்மை; குரங்கு நாம்; கொள்க!' என்றார்.

'கள்ளரே! காண்டி' என்னா மந்திரம் கருத்துள் கொண்டான்;
தெள்ளிய தெரிக்கும் தெவ்வர், தீர் வினை சேர்தலோடும்,
துள்ளியின் இரதம் தோய்ந்து, தொல் நிறம் கரந்து, வேறு ஆய்
வெள்ளி போன்று இருந்த செம்பும் ஆம் என, வேறுபட்டார்.

இராமன் அபயம் அளித்து, உண்மை கூறப் பணித்தல்

மின் குலாம் எயிற்றர் ஆகி, வெருவந்து, வெற்பில் நின்ற
வன்கணார் தம்மை நோக்கி, மணி நகை முறுவல் தோன்ற,
புன்கணார் புன்கண் நீக்கும் புரவலன், 'போந்த தன்மை
என்கொலாம்? தெரிய எல்லாம் இயம்புதிர்; அஞ்சல்!' என்றான்.

ஒற்றர் உண்மை உரைத்தல்

'தாய் தெரிந்து உலகு காத்த தவத்தியை, தன்னைக் கொல்லும்
நோய் தெரிந்து உணரான், தேடிக் கொண்டனன் நுவல, யாங்கள்,
வாய் தெரிந்து, உணராவண்ணம் கழறுவார், வணங்கி, மாய
வேய் தெரிந்து உரைக்க வந்தோம், வினையினால்—வீர!' என்றார்.

இராமன் ஒற்றரிடம் கூறுதல்

'எல்லை இல் இலங்கைச் செல்வம் இளையவற்கு ஈந்த தன்மை
சொல்லுதிர்; மகர வேலை கவிக் குல வீரர் தூர்த்துக்
கல்லினின் கடந்தவாறும் கழறுதிர்; காலம் தாழ்த்த
வில்லினர் வந்தார் என்றும் விளம்புதிர்—வினையம் மிக்கீர்! 33

28. நகம் - மலை; 30. தீர் வினை - மாயத்தை நீக்குதற்குரிய மாற்று உபாயம்; துள்ளி - துளி; இரதம் - பாதரசம்; 32. வாய் தெரிந்து - உண்மை கண்டு; வேய் - ஒற்று; 33. தாழ்த்த - தாமதித்த.

'கொத்துறு தலையான் வைகும் குறும்புடை இலங்கைக் குன்றம்
தத்துறு தட நீர் வேலைதனின் ஒரு சிறையிற்று ஆதல்
ஒத்து உற உணர்ந்திலாமை, உயிரொடும் உறவினோடும்
இத்துணை இருந்தது என்னும் தன்மையும் இயம்புவீரால். 34

' "சண்டம் கொள் வேகமாகத் தனி விடை உவணம் தாங்கும்,
துண்டம் கொள் பிறையான், மௌலித் துளவினோனோடும், தொல்லை
அண்டங்கள் எவையும் தாங்கிக் காப்பினும், அறம் இலாதாற்
கண்டங்கள் பலவும் காண்பென்'' என்பதும் கழறுவீரால். 35

' "தீட்டுறு மழு வாள் வீரன் தாதையைச் செற்றோன் சுற்றம்
மாட்டிய வண்ணம் என்ன, வருக்கமும் மற்றும் முற்றும்
வீட்டி, என் தாதைக்காக மெய்ப் பலி விசும்புளோரை
ஊட்டுவென் உயிர்கொண்டு" என்னும் வார்த்தையும் உணர்த்துவீரால்.

' "தாழ்வு இலாத் தவத்து ஓர் தையல் தனித்து ஒரு சிறையிற்று ஆக,
சூழ்வு இலா வஞ்சம் சூழ்ந்த தன்னைத் தன் சுற்றத்தோடும்,
வாழ்வு எலாம் தம்பி கொள்ள, வயங்கு எரி நரகம் என்னும்
வீழ்வு இலாச் சிறையின் வைப்பென்''என்பதும் விளம்புவீரால்.

ஒற்றர் திரும்பிச் செல்லுதல்

'நோக்கினிர், தானை எங்கும் நுழைந்தனிர்; இனி, வேறு ஒன்றும்
ஆக்குவது இல்லைஆயின் அஞ்சல்' என்று, அஃது உண்டு அன்றே?
'வாக்கினின், மனத்தின், கையின், மற்று இனி வலியா வண்ணம்,
போக்குமின் விரைவின்' என்றான்; 'உய்ந்தனம்' என்று போனார். 38

இரவில் இராவணன் மந்திராலோசனை செய்தல்

அரவ மாக் கடல் அஞ்சிய அச்சமும்,
உரவு நல் அணை ஒட்டிய ஊற்றமும்,
வரவும் நோக்கி, இலங்கையர் மன்னவன்,
இரவின், எண்ணிட, வேறு இருந்தான்அரோ. 39

வார் குலாம் முலை மாதரும், மைந்தரும்,
ஆரும் நீங்க, அறிஞரொடு ஏகினான்—
'சேர்க' என்னின் அல்லால், இளந் தென்றலும்
சார்கிலா நெடு மந்திர சாலையே. 40

34. தத்துறுதல் - தாவி வருதல், தடுமாறுதல்; ஒத்துற - பொருந்த; 35. சண்டம் - வேகம், கொடுமையும் ஆம்; 36. வீரன் - பரசுராமன்; தாதை - யமதங்கி முனிவர்; செற்றோன் - கார்த்தவீரியன்; என் தாதை - என் தந்தையாகிய சடாயு; 37. வீழ்வு இலா - அழியாத; 38. வலியா வண்ணம் - துன்புறுத்தாதவாறு; 39. அரவம் - ஒலி; 40. குலாம் - குலாவும், விளங்கும்.

உணர்வு இல் நெஞ்சினர், ஊமர், உரைப் பொருள்
புணரும் கேள்வியர் அல்லர், பொறி இலர்,
கொணரும் கூனர், குறளர், கொழுஞ் சுடர்
துணரும் நல் விளக்கு ஏந்தினர், சுற்றினர். 41

இராவணன் வினா

'நணியர், வந்து மனிதர்; நமக்கு இனித்
துணியும் காரியம் யாது?' எனச் சொல்லினன்—
பணியும் தானவர் ஆதியர் பல் முடி
மணியினல் விளங்கும் மணித் தாளினன்.* 42

மாலியவான் கூற்று

'கால வெங் கனல் போலும் கணைகளால்
வேலை வெந்து, நடுங்கி, வெயில் புரை
மாலை கொண்டு வணங்கினவாறு எலாம்
சூலம் என்ன என் நெஞ்சைத் தொளைக்குமால். 43

' ''கிழி படக் கடல் கீண்டதும், மாண்டது,
மொழி படைத்த வலி'' என, மூண்டது ஓர்
பழி படைத்த பெரும் பயத்து, அன்னவன்
வழி கொடுத்தது என் உள்ளம் வருத்துமால். 44

'படைத்த மால் வரை யாவும் பறித்து, வேர்
துடைத்த வானர வீரர், தம் தோள்களைப்
புடைத்தவாறும், புணரியைப் போக்கு அற
அடைத்தவாறும், என் உள்ளத்து அடைத்தவால். 45

'காந்து வெஞ் சின வீரர், கணக்கு இலார்,
தாம் தம் ஆற்றலுக்கு ஏற்ற தரத் தர,
வேந்த! வெற்பை ஒருவன் விரல்களால்
ஏந்தி இட்டது என் உள்ளத்தின் இட்டதால். 46

'சுட்டவா கண்டும், தொல் நகர் வேலையைத்
தட்டவா கண்டும், தா அற்ற தெவ்வரைக்
கட்டவா கண்டும், கண் எதிரே வந்து
விட்டவா கண்டும், மேல் எண்ண வேண்டுமோ?' 47

41. துணர்தல் - கொத்தாய் அமைதல்; 42. மனிதர் வந்து நணியர் என மாற்றுக; நணியர் - நெருங்கினர்; 44. மொழி படைத்த - பாராட்டப் பட்ட ஆற்றல்; என - என்று உலகம் கூற; அன்னவன் - அந்தக் கடலரசனை வருணன்; 45. வேர் துடைத்தல் - வேர் அறும்படி செய்தல்; 46. ஒருவன் - நளன்; 47. தட்டவா - தட்டவாறு. (அணைக்கட்டித்) தடுத்தவாறு.

இராவணன் மாலியவானைச் சினத்தல்

என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்,
தின்று வாயை, விழிவழித் தீ உக,
'நன்று, நன்று! நம் மந்திரம் நன்று!' எனு,
'என்றும் வாழ்தி, இளவலொடு; ஏகு' என்றான். 48

சேனைத் தலைவன் பேச்சு

'ஈனமேகொல், இதம்?' என எண்ணுறு,
மோனம் ஆகி இருந்தனன், முற்றினன்.
ஆன காலை, அடியின் இறைஞ்சிய
சேனை நாதன் இனையன செப்பினன்: 49

'கண்மை இந் நகர் வேலை கடந்த அத்
திண்மை ஒன்றும் அலால், திசை காவலர்
எண்மரும் இவற்கு ஏவல் செய்கின்ற அவ்
உண்மை ஒன்றும் உணர்ந்திலைபோல்!' என்றான். 50

'"கூசி வானரர் குன்று கொடு இக் கடல்
வீசினர்" எனும் வீரம் விளம்புவாய்;
ஊசி வேரொடும் ஓங்கலை, ஓங்கிய
ஈசனோடும், எடுத்ததும் இல்லையோ? 51

'அது கொடு என் சில? ஆர் அமர் மேல் இனி,
மதி கெடுந் தகையோர், வந்து நாம் உறை
பதி புகுந்தனர்; தம்மைப் படுப்பது ஓர்
விதி கொடு உந்த விளைந்ததுதான்' என்றான். 52

ஒற்றர் வர, இராவணன் அவரிடம் செய்தி அறிதல்

முற்றும் மூடிய கஞ்சுகன், மூட்டிய
வெற்று அனல் பொறிக் கண்ணினன், வேத்திரம்
பற்றும் அங்கையினன், படிகாரன், 'இன்று
ஒற்றர் வந்தனர்' என்ன, உணர்த்தினன். 53

வாயில் காவலன் கூற, வயங்கு எரி
மேய வெங் கண் விறல் கொள் இராக்கதர்-
நாயகன், 'புகுத்து, இங்கு' என, 'நன்று' எனப்
போய், அவன் புகுத்த, புகுந்தார்அரோ. 54

48. இளவல் - வீடணன்; 50. கண்மை - காட்சி (கண்ணுக்கு எதிராக); 51. ஊசி வேர் - மூல வேர்; ஓங்கல் - மலை, கயிலாயம்; 53. கஞ்சுகன் - மெய்ப்பையுடையவன், சட்டை அணிந்தவன்; வேத்திரம் - பிரம்பு; படிகாரன் - வாயில் காவலன்.

மனைக்கண் வந்து, அவன் பாதம் வணங்கினார்—
பனைக் கை வன் குரங்கின் படர் சேனையை
நினைக்கும்தோறும் திடுக்கிடும் நெஞ்சினர்,
கனைக்கும்தோறும் உதிரங்கள் கக்குவார். 55

'வெள்ள வாரி விரிவொடு, அவ் வீடணத்
தள்ளவாரி நிலைமையும், தாபதர்
உள்ளவாறும், உரைமின்' என்றான்—உயிர்
கொள்ள வாய் வெருவும் கொடுங் கூற்று அனான். 56

என்னச் சாரர் இசைத்தனர், வேலையைக்
கன்னல் ஒன்றில் கடந்து, கவிக் குலம்
துன்னு பாசறைச் சூழல்கள் தோறுமே
அன்னர் ஆகி, அரிதின் அடைந்தனம்.* 57

'அடியம் அந் நெடுஞ் சேனையை ஆசையால்
முடிய நோக்கலுற்றேம்; முது வேலையின்
படியை நோக்கி, எப் பாலும் படர்குறும்
கடிய வேகக் கலுழனின் கண்டிலம். 58

'நுவல, யாம் வர வேண்டிய நோக்கதோ?
கவலை-வேலை எனும், கரை காண்கிலாது
அவலம் எய்தி அடைத்துழி, ஆர்த்து எழும்
துவலையே வந்து சொல்லியது இல்லையோ? 59

' "எல்லை நோக்கவும் எய்திலதாம்" எனும்
சொல்லை நோக்கிய மானுடன், தோள் எனும்
கல்லை நோக்கி, கணைகளை நோக்கி, தன்
வில்லை நோக்கவும், வெந்தது வேலையே. 60

'தார் உலாம் மணி மார்ப! நின் தம்பியே,
தேர் உலாவு கதிரும், திருந்து தன்
பேர் உலாவும் அளவினும், பெற்றனன்,
நீர் உலாவும் இலங்கை நெடுந் திரு. 61

'சேது பந்தனம் செய்தனன் என்றது இப்
போது வந்த புது வலியோ—ஒரு
தூது வந்தவன் தோள் வலி சொல்லிய
ஏது அந்தம் இலாத இருக்கவே? 62

56. வெள்ள வாரி - கடல்; ஈண்டுக் கடல் போலும் படை; தள்ளவாரி - சோம்பேறி; தாபதர் - இராம இலக்குவர்; 59. நோக்கதோ? - நோக்கத்தை உடையதோ? 60. எல்லை - இடம், ஈண்டுக் கடற்பரப்பு.

'மருந்து தேவர் அருந்திய மாலைவாய்,
இருந்த தானவர் தம்மை இரவி முன்
பெருந் திண் மாயற்கு உணர்த்திய பெற்றியின்,
தெரிந்து காட்டினன், நும்பி சினத்தினான். 63

'பற்றி, வானர வீரர் பனைக் கையால்,
எற்றி எங்களை, ஏண் நெடுந் தோள் இறச்
சுற்றி, ஈர்த்து அலைத்து, சுடர்போல் ஒளிர்
வெற்றி வீரற்குக் காட்டி, விளம்பினான். 64

'"சரங்கள் இங்கு இவற்றால் பண்டு தானுடை
வரங்கள் சிந்துவென்" என்றனன்; மற்று எமைக்
குரங்கு அலாமை தெரிந்தும், அக் கொற்றவன்
இரங்க, உய்ந்தனம்; ஈது எங்கள் ஒற்று' என்றார். 65

மற்றும் யாவையும், வாய்மைய வானவன்
சொற்ற யாவையும் சோர்வு இன்றிச் சொல்லினார்;
'குற்றம் யாவையும் கோளொடு நீங்குக!
இற்றை நாள் முதல் ஆயு உண்டாக!' என்றார். 66

சேனை காவலன் பேச்சு

'"**வை**தெனக் கொல்லும் விற் கை மானிடர், மகர நீரை
நொய்தினின் அடைத்து, மானத் தானையான் நுவன்ற நம் ஊர்
எய்தினர்" என்ற போதின் வேறு இனி எண்ண வேண்டும்
செய் திறன் உண்டோ?' என்னச் சேனை காப்பாளன் செப்பும்:

'விட்டனை மாதை என்ற போதினும், "வெருவி, வேந்தன்
பட்டது" என்று இகழ்வர் விண்ணோர்; பற்றி, இப் பகையைத் தீர
ஒட்டல்ஆம் போரில், ஒன்னார் ஒட்டினும், உம்பி ஒட்டான்;
கிட்டிய போது, செய்வது என் இனிக் கிளத்தல் வேண்டும்? 68

63. மாலை - சமயம்; திருமால் தேவர்க்கு அமுதம் வழங்குதல் கண்ட சைம்மிகேயன் என்னும் அசுரன் தேவர் உருக்கொண்டு அமுதுண்டான்; சூரிய சந்திரர் அவனைக் காட்டினர்; திருமால் அமுது பகிர்ந்து அளித்த அகப்பையால் தாக்கினார்; அவன் தலை வேறு உடல் வேறு ஆயினன்; எனினும் இறவா நிலை எய்தி இரண்டுடல் பெற்று இராகு கேது என்னும் இருவராய்ச் சூரிய சந்திரரை நலியலாயினர் என்பது புராணம்; 65. தான் - இராவணன்; 66. கோள் - தீமை; 67. வைதல் - சபித்தல்; தானையான் - சேனையோடு; 68. ஒட்டல் ஆம் போர் - தாக்கிப் பொரும் போர்; ஒட்டினும் - சமாதானம் செய்துகொள்ள இசைந்தாலும்.

'ஆண்டுச் சென்று, அரிகளோடும் மனிதரை அமரில் கொன்று,
மீண்டு, நம் இருக்கை சேர்தும் என்பது மேற்கொண்டேமேல்,
ஈண்டு வந்து இறுத்தார் என்னும் ஈது அலாது, உறுதி, உண்டோ?
வேண்டியது எய்தப் பெற்ருல், வெற்றியின் விழுமிது அன்ருே?

'ஆயிரம் வெள்ளம் ஆன அரக்கர்தம் தானை, ஐய!
தேயினும், ஊழி நூறு வேண்டுமால்; சிறுமை என்னே?
நாய்இனம் சீயம் கண்டதாம் என நடப்பது அல்லால்,
நீ உருத்து எழுந்த போது, குரங்கு எதிர் நிற்பது உண்டோ?

'வந்தவர் தானையோடு மறிந்து, மாக் கடலில் வீழ்ந்து,
சிந்தினர் இரிந்து போக, சேனையும் யானும் சென்று,
வெந் தொழில் புரியுமாறு காணுதி; விடை ஈக!' என்ன,
இந்திரன் முதுகு கண்ட இராவணற்கு ஏயச் சொன்னன். 71

மாலியவான் பேச்சு

மதி நெறி அறிவு சான்ற மாலியவான், 'நல் வாய்மை
பொது நெறி நிலையது ஆகப் புணர்த்துதல் புலமைத்து' என்ன,
'விதி நெறி நிலையது ஆக விளம்புகின்ருேரும், மீண்டு
செது நெறி நிலையினரே' என்பது தெரியச் சொல்லும்: 72

"பூசற்கு முயன்று நம்பால், பொரு திரைப் புணரி வேலித்
தேசத்துக்கு இறைவன் ஆன தசரதன் சிறுவனாக,
மாசு அற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான்'' என்பதோர் வார்த்தை இட்டார்.

'அன்னவற்கு இளவல்தன்னை, ''அரு மறை, 'பரம்' என்று ஓதும்
நல் நிலை நின்று தீர்ந்து, நவை இலா உயிர்கள்தோறும்
தொல் நிலை பிரிந்தான் என்னப் பல வகை நின்ற தூயோன்
இன் அணை'' என்ன யாரும் இயம்புவர்; ஏது யாதோ? 74

'"அவ்வவர்க்கு அமைந்த வில்லும், குல வரை அவற்றின் ஆன்ற
வெவ் வலி வேறு வாங்கி, விரிஞ்சனே விதித்த, மேல்நாள்;
செவ் வழி நாணும், சேடன்; தெரி கணை ஆகச் செய்த
கவ்வு அயில், கால நேமிக் கணக்கையும் கடந்தது'' என்பார்.

72. மதி - இயற்கை அறிவு; அறிவு - நூலறிவு; பொது நெறி நிலையது ஆகப் புணர்த்துதல் - தன் கூற்ருகக் கூருமல் உலகத்தார் தம்முட் கூறும் மொழிகளாக அவர்தம் கூற்றில் வைத்து உணர்த்துதல்; செது நெறி - சிதையும் கெடுநெறி; 73. பூசல் - போர்; 74. நல் நிலை - பரத்துவ நிலை; அணை - படுக்கை; 75. கால நேமிக் கணக்கு - காலச் சக்கரத்தின் ஆற்றல்.

‘“வாலி மா மகன் வந்தானை, “வானவர்க்கு இறைவன்” என்றார்;
நீலனை, ‘‘உலகம் உண்ணும் நெருப்பினுக்கு அரசன்’’ என்றார்;
காலனை ஒக்கும் தூதன், ‘‘காற்று எனும் கடவுள்’’ என்றார்;
மேலும் ஒன்று உரைத்தார், “அன்னான் விரிஞ்சன் ஆம், இனிமேல்”
[என்றார். 76

‘‘‘அப் பதம் அவனுக்கு ஈந்தான், அரக்கர் வேர்அறுப்பதாக
இப் பதி எய்தினான் அவ் இராமன்’’ என்று எவரும் சொன்னார்;
ஒப்பினால் உரைக்கின்றாரோ? உண்மையே உணர்த்தினாரோ?
செப்பி என்? “குரங்காய் வந்தார் தனித் தனி தேவர்” என்றார்.

‘ஆயது தெரிந்தோ? தங்கள் அச்சமோ? அறிவோ?—யார்க்கும்
சேயவள்; எளியள் என்னா, சிந்தையின் இகழல் அம்மா!—
‘‘தூயவள் அமிர்தினோடும் தோன்றினாள்’’ என்றும், “தோன்றாத்
தாய் அவள், உலகுக்கு எல்லாம்’’ என்பதும், சாற்றுகின்றார்.

‘‘‘கானிடை வந்ததேயும் வானவர் கடாவவே ஆம்;
மீனுடை அகழி வேலை விலங்கல்மேல் இலங்கை வேந்தன்
தானுடை வரத்தை எண்ணி, தருமத்தின் தலைவர்தாமே
மானுட வடிவம் கொண்டார்” என்பது ஓர் வார்த்தை இட்டார். 79

‘‘‘ஆயிரம் உற்பாதங்கள் ஈங்கு வந்து அடுத்த’’ என்றார்;
‘‘தாயினும் உயிர்க்கு நல்லாள் இருந்துழி அறிய, தக்கோன்
ஏயின தூதன் எற்ற, பற்று விட்டு, இலங்கைத் தெய்வம்
போயினது” என்றும் சொன்னார்; “புகுந்தது, போரும்” என்றார். 80

‘‘‘அம்பினுக்கு இலக்கம் ஆவார் அரசொடும் அரக்கர் என்ன,
நம் பரத்து அடங்கும் மெய்யன், நாவினில் பொய் இலாதான்,
உம்பர் மந்திரிக்கும் மேலா ஒரு முழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனான்’’ என்பதும் சமையச் சொன்னார்.

‘ஈது எலாம் உணர்ந்தேன் யானும்; என் குலம் இறுதி உற்றது
ஆதியின் இவனால் என்றும், உன்தன்மேல் அன்பினாலும்,
வேதனை நெஞ்சின் எய்த, வெம்பி, யான் விளைவ சொன்னேன்;
சீதையை விடுதிஆயின், தீரும் இத் தீமை’ என்றான். 82

77. ஒப்பினால் உரைத்தல் - உபசரித்துக் கூறுதல்; 79. வந்ததேயும் - வந்ததும்; 80. உற்பாதம் - தீய நிமித்தம்; 81. நம் பரத்து அடங்கும் மெய்யன் - அரக்கர்களாகிய நமது சார்பில் தோன்றியவன்; உம்பர் மந்திரி - பிருகற்பதி; 82. இவன் - திருமால்; முற்காலத்தில் தேவர்க்குத் துயர் விளைத்த மாலியவான், சுமாலி, மாலி ஆகியோருள் திருமால் மாலியைக் கொன்றார்; ஏனைய இருவரும் தப்பியோடிப் பாதாளத்தில் குடிபுகுந்தனர்; பிற்றை நாளில் மாலியவானுடைய பெண்வழிப் பேரனான இராவணன் தவத்தால் குபேரனை வென்று, இலங்கையில் அரசினை நிறுவியபோது மாலியவான், சுமாலி முதலியோர் மீண்டும் இலங்கையில் குடி புகுந்தனர்.

மாலியவான் பேச்சை இராவணன் இகழ்தல்

'மற்று எலாம் நிற்க, அந்த மனிதர் வானரங்கள், வானில்
இற்றை நாள் அளவும் நின்ற இமையவர் என்னும் தன்மை
சொற்றவாறு அன்றியேயும், "தோற்றி நீ" என்றும் சொன்னாய்;
கற்றவா நன்று! போ' என்று, இனையன கழறலுற்றான்: 83

'பேதை மானிடவரோடு குரங்கு அல, பிறவே ஆக,
பூதல வரைப்பின் நாகர் புரத்தின் அப் புறத்தது ஆக,
காது வெஞ் செரு வேட்டு, என்னைக் காந்தினர் கலந்த போதும்,
சீதைதன் திறத்தின்ஆயின், அமர்த் தொழில் திறம்புவேனோ?

'ஒன்று அல, பகழி, என் கைக்கு உரியன; உலகம் எல்லாம்
வென்றன; ஒருவன் செய்த வினையினும் வலிய; ''வெம் போர்
முன் தருக'' என்ற தேவர் முதுகு புக்கு அமரில் முன்னம்
சென்றன; இன்று வந்த குரங்கின்மேல் செல்கலாவோ? 85

'சூலம் வய் தடக் கை அண்ணல்தானும், ஓர் குரங்காய்த் தோன்றி
ஏலுமேல், இடைவது அல்லால், என் செய வல்லன் என்னை?
வேலை நீர் கடைந்த மேல்நாள், உலகு எலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க, என் கை அயில் முகப் பகழி? அம்மா!* 86

'அறிகிலை போலும், ஐய! அமர் எனக்கு அஞ்சிப் போன
எறி சுடர் நேமியான் வந்து எதிர்ப்பினும், என் கை வாளி
பொறி பட, சுடர்கள் தீயப் போவன; போக்கிலாத
மறி கடல் கடைய, வந்த மணிகொலாம், மார்பில் பூண? 87

'கொற்றவன், இமையோர் கோமான், குரக்கினது உருவம் கொண்டால்,
அற்றை நாள், அவன்தான் விட்ட அயிற்படை அறுத்து மாற்ற,
இற்ற வான் சிறைய ஆகி விழுந்து, மேல் எழுந்து வீங்காப்
பொற்றை மால் வரைகளோ, என் புய நெடும் பொருப்பும்? அம்மா!'

கதிரவன் தோற்றம்

உள்ளமே தூது செல்ல, உயிர் அனார் உறையுள் நாடும்
கள்ளம் ஆர் மகளிர் சோர, நேமிப்புள் கவற்சி நீங்க,
கொள்ளை பூண்டு அமரர் வைகும் குன்றையும் கோட்டில் கொண்ட
வெள்ள நீர் வடிந்தது என்ன, வீங்கு இருள் விடிந்தது அன்றே.

84. திறம்புதல் - பின்னடைதல்; 86. ஏலுதல் - போரில் எதிர்த்து நிற்றல்; இடைவது - தோற்பது; 89. கொள்ளை - கூட்டம்; குன்று - மேரு மலை; கோட்டில் கொண்ட - உச்சி வரையில் மூடிக்கொண்டிருந்த.

இன்னது ஓர் தன்மைத்து ஆம் என்று எட்டியும் பார்க்க அஞ்சி,
பொன் மதில் புறத்து நாளும் போகின்றான்,—'போர் மேற்கொண்டு
மன்னவர்க்கு அரசன் வந்தான்; வலியமால்' என்று, தானும்
தொல் நகர் காண்பான் போல,—கதிரவன் தோற்றம் செய்தான். 90

9 இலங்கை காண் படலம்

இராமன் பரிவாரங்களுடன் மலைமேல் ஏறுதல்

அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல் தூண்ட, பொன் நகர் காண்பான் போல,
பெருந் துணை வீரர் சுற்ற, தம்பியும் பின்பு செல்ல,
இருந்த மால் மலையின் உச்சி ஏறினன் இராமன், இப்பால். 1

செரு மலி வீரர் எல்லாம் சேர்ந்தனர் மருங்கு செல்ல,
இரு திறல் வேந்தர் தாங்கும் இணை நெடுங் கமலக் கையான்,
பொரு வலி வய வெஞ் சீயம் யாவையும் புலியும் சுற்ற,
அரு வரை இவர்வது ஆங்கு ஓர் அரிஅரசு அனையன் ஆனான்.

கதம் மிகுந்து இரைத்துப் பொங்கும் கனை கடல் உலகம் எல்லாம்
புதைவு செய் இருளின் பொங்கும் அரக்கர்தம் புரமும், பொற்பும்,
சிதைவு செய் குறியைக் காட்டி, வட திசைச் சிகரக் குன்றின்,
உதயம்அது ஒழியத் தோன்றும், ஒரு கரு ஞாயிறு ஒத்தான். 3

துமிலத் திண் செருவின் வாளிப் பெரு மழை சொரியத் தோன்றும்
விமலத் திண் சிலையன், ஆண்டு ஓர் வெற்பினை மேய வீரன்,
அமலத் திண் கரமும் காலும் வதனமும் கண்ணும் ஆன,
கமலத் திண் காடு பூத்த காள மா மேகம் ஒத்தான். 4

மல் குவடு அனைய திண் தோள் மானவன், வானத்து ஓங்கும்
கல் குவடு அடுக்கி வாரிக் கடலினைக் கடந்த, காட்சி
நல் குவடு அனைய, வீரர் ஈட்டத்தின் நடுவண் நின்றான்.
பொன் குவட்டு இடையே தோன்றும் மரகதக் குன்றம் போன்றான். 5

9: 1. மலை - சுவேல மலை; 2. அரி அரசு - அரச சிங்கம்; 4. துமிலம் - பேராரவாரம்; 5. மல் குவடு - வலிமை பொருந்திய மலைச் சிகரம்.

இராமன், இலங்கையின் சிறப்பை இளவலுக்குக் கூறுதல்

அணை நெடுங் கடலில் தோன்ற, ஆறிய சீற்றத்து ஐயன்,
பிணை நெடுங் கண்ணி என்னும் இன் உயிர் பிரிந்த பின்னை,
துணை பிரிந்து அயரும் அன்றிற் சேவலின் துளங்குகின்றான்,
இணை நெடுங் கமலக் கண்ணால் இலங்கையை எய்தக் கண்டான். 6

'நம் திரு நகரே ஆதி வேறு உள நகர்கட்கு எல்லாம்
வந்த பேர் உவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை,
இந்திரன் இருக்கை என்பர்; இலங்கையை எடுத்துக் காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார், அருங் கவிப் புலவர் அம்மா! 7

'பழுது அற விளங்கும் செம் பொன் தலத்திடைப் பரிதி நாண
முழுது எரி மணியின் செய்து முடிந்தன, முனிவராலும்
எழுத அருந் தகைய ஆய, மாளிகை இசையச் செய்த
தொழில் தெரிகிலவால், தங்கண் சுடர் நெடுங் கற்றை சுற்ற. 8

'விரிகின்ற கதிர ஆகி, மிளிர்கின்ற மணிகள் வீச,
சொரிகின்ற சுடரின் சும்மை விசும்புறத் தொடரும் தோற்றம்
அரி வென்ற வெற்றி ஆற்றல் மாருதி அமைத்த தீயால்
எரிகின்றதாயே காண், இக் கொடி நகர் இருந்தது இன்னும்! 9

'மாசு அடை பரந்த மான மரகதத் தலத்து வைத்த
காசு அடை சமைந்த மாடம், கதிர் நிறக் கற்றை சுற்ற,
ஆசு அறக் குயின்ற வெள்ளி அகல் மனை அன்னம் ஆக,
பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப, பாராய்! 10

'தீச் சிகை சிவணும் சோதிச் செம் மணிச் செய்த தூணின்
தூச் சுடர் மாடம் ஈண்டித் துறுதலால், கருமை தோன்றா
மீச் செலும் மேகம் எல்லாம், விரி சுடர் இலங்கை வேவ,
காய்ச்சிய இரும்பு மானச் சேந்து ஒளி கஞல்வ, காணாய்! 11

'வில் படி திரள் தோள் வீர! நோக்குதி—வெங் கண் யானை
அல் படி நிறத்தவேனும், ஆடகத் தலத்தை, ஆழ,
கல் படி வயிரத் திண் கால் நகங்களின் கல்லி, கையால்
பொற் பொடி என்ன வீசி, பொன்மலை என்னப் போவ! 12

6. பிணை - பெண் மான்; 7. இந்திரன் இருக்கை - அமராவதி நகரம்; அந்தரம் - வேறுபாடு; 8. முனிவர் - முதிர்ந்த அறிவினர்; 9. அரி - பகைவர்; 10. மரகதத்தலம் பொய்கையினையும், மாளிகைகள் தாமரை மலர்களையும், வெள்ளி மாடங்கள் அன்னப் பறவைகளையும் ஒத்துத் தோன்றின; 11. கஞலு தல் - விளங்குதல்.

'பூசல் விற் குமர! நோக்காய்—புகர் அற விளங்கும் பொற்பின்
காசுடைக் கதிரின் கற்றைக் கால்களால் கதுவுகின்ற
வீசு பொன் கொடிகள் எல்லாம், விசும்பினின் விரிந்த மேக-
மாசு அறத் துடைத்து, அவ் வானம் விளக்குவ போல்வ மாதோ!

'நூல் படத் தொடர்ந்த பைம் பொன் சித்திரம் நுனித்த பத்திக்
கோல் படு மணிகள் ஆய குல மணி எவையும் கூட்டி,
சால்பு அடுத்து, அரக்கன் மாடத் தனி மணி நடுவண் சார்த்தி,
மால் கடற்கு இறைவன் பூண்ட மாலை போன்று உளது—இம் மூதூர்.

'நல் நெறி அறிஞ! நோக்காய்—நளி நெடுந் தெருவின் நாப்பண்
பல் மணி மாடப் பத்தி நிழல் படப் படர்வ, பண்பால்
தம் நிறம் தெரிகிலாத, ஒரு நிறம் சார்கிலாத,
இன்னது ஓர் குலத்த என்று புலப்படா, புரவி எல்லாம். 15

'வீர! நீ பாராய்—மெல்லென் பளிங்கினால் விளங்குகின்ற,
மாரனும் மருளச் செய்த மாளிகை, மற்றோர் சோதி
சேர்தலும் தெரிவ; அன்றேல், தெரிகில; தெரிந்த காட்சி
நீரினால் இயன்ற என்ன நிழல் எழுகின்ற நீர்மை. 16

'கோல் நிறக் குனி வில் செங் கைக் குமரனே! குளிர் வெண் திங்கள்
கால் நிறக் கதிரின் கற்றை தெற்றிய ஆய காட்சி
வால் நிறத் தரளப் பந்தர், மரகதம் நடுவண் வைத்த,
பால் நிறப் பரவை வைகும் பரமனை நிகர்ப்ப, பாராய்! 17

'கோள் அவாவு அரி ஏறு அன்ன குரிசிலே! கொள்ள நோக்காய்—
நாள் அவாம் மின் தோய் மாடத்து உம்பர், ஓர் நாகர் பாவை,
காளம் வார் உறையின் வாங்கும் கண்ணடி, விசும்பில் கவ்வி
வாள் அரா விழுங்கிக் காலும் மதியினை நிகர்த்த வண்ணம்! 18

'கொற்ற வான் சிலைக் கை வீர! கொடி மிடை மாடக் குன்றை
உற்ற வான் கழுத்தவான ஒட்டகம், அவற்றது உம்பர்ச்
செற்றிய மணிகள் ஈன்ற சுடரினைச் செக்காரத்தின்
கற்றை அம் தளிர்கள் என்னக் கவ்விய நிமிர்வ, காணாய்! 19

'வாகை வெஞ் சிலைக் கை வீர! மலர்க் குழல் புலர்த்த, மாலைத்
தோகையர் இட்ட தூமத்து அகிற் புகை முழுதும் சுற்ற,
வேக வெங் களிற்றின் வன் தோல் மெய்யுறப் போர்த்த தையல்—
பாகனின் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய்!

13. புகர் - குற்றம்; கால்கள் - கொடிக் கம்பங்கள்; 15. நளி - பெருமை; 17. கோல் - அம்பு; நிறம் - ஒளி; தெற்றுதல் - இடையிட்டுப் பின்னுதல்; 18. நாள் - விண்மீன்கள்; காளம் - கருமை; வார் உறை - நீண்ட உறை; 19. செக்காரம் - தேமாமரம்; கவ்விய - கவ்வுதற்கு.

'காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறே! கற்ற
தேவர்தம் தச்சன் நீலக் காசினால் திருந்தச் செய்தது,
ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த
பாவ பண்டாரம் அன்ன, செய்குன்றம் பலவும், பாராய்! 21

'பிணை மதர்த்தனைய நோக்கம் பாழ்பட, பிடியுண்டு, அன்பின்
துணைவரைப் பிரிந்து போந்து, மருங்கு எனத் துவளும் உள்ளப்
பண்ணம் அயிர்ப்பு எய்தும் அல்குல் பாவையர், பருவம் நோக்கும்
கண மயில் குழுவின், நம்மைக் காண்கின்றார் தம்மைக் காணாய்!

'நாள்மலர்த் தெரியல் மார்ப! நம் பலம் காண்பான், மாடத்து
யாழ் மொழித் தெரிவைமாரும் மைந்தரும் ஏறுகின்றார்,
"வாழ்வு இனிச் சமைந்தது அன்றே" என்று மா நகரை எல்லாம்
பாழ்படுத்து இரியல் போவார் ஒக்கின்ற பரிசு பாராய்!' 23

இராவணன் வானர சேனையைக் காண, கோபுரத்தின் மேல் ஏறுதல்

இன்னவாறு இலங்கைதன்னை இளையவற்கு இராமன் காட்டி,
சொன்னவா சொல்லாவண்ணம் அதிசயம் தோன்றும் காலை,
அன்ன மா நகரின் வேந்தன், அரிக் குலப் பெருமை காண்பான்,
சென்னி வான் தடவும் செம் பொற் கோபுரத்து உம்பர்ச் சேர்ந்தான்.

10 இராவணன் வானரத் தானை காண் படலம்

கோபுரத்தின்மேல் இராவணன் நின்ற நிலை

கவடு உகப் பொருத காய் களிறு அன்னான்,
அவள் துயக்கின் மலர் அம்பு உற வெம்பும்
சுவடுடைப் பொரு இல் தோள்கொடு, அனேகம்
குவடுடைத் தனி ஓர் குன்று என, நின்றான். 1

21. ஈவது - ஈதல் தொழில்; பாவ பண்டாரம் - பாவங்களாகிய பொருட் குவியல்; 22. பிடியுண்ணல் - சிறைப்படல்; 23. நாழ் - நாள், எதுகை நோக்கித் திரிந்தது; பாழ்படுத்தல் - வெறுமையடையும்படி விட்டு நீங்குதல்; 24. சொன்னவா சொல்லாவண்ணம் - முன் சொன்னதையே மீண்டும் சொல்லாதவாறு.

10 : 1. கவடு - (தன்னைக் கட்டிய) மரக்கிளை; துயக்கு - ஆசை.

பொலிந்ததாம் இனிது போர் எனலோடும்,
நலிந்த நங்கை எழிலால் வலி நாளும்
மெலிந்த தோள்கள் வடமேருவின் மேலும்
வலிந்து செல்ல, மிசை செல்லும் மனத்தான். 2

செம் பொன் மௌலி சிகரங்கள் தயங்க,
அம் பொன் மேரு வரை கோபுரம் ஆக,
வெம்பு காலினை விழுங்கிட, மேல்நாள்,
உம்பர் மீதில் நிமிர் வாசுகி ஒத்தான். 3

தொக்க பூதம்அவை ஐந்தொடு துன்னிட்டு
ஒக்க நின்ற திசை ஒன்பதொடு ஒன்றும்,
பக்கமும், நிழல் பரப்பி, வியப்பால்
மிக்கு நின்ற குடை மீது விளங்க. 4

கைத் தரும் கவரி வீசிய காலால்,
நெய்த்து இருண்டு உயரும் நீள் வரை மீதில்
தத்தி வீழ் அருவியின் திரள் சால,
உத்தரீகம் நெடு மார்பின் உலாவ, 5

வானகத்தினில் உருப்பசி, வாசத்
தேன் அகத் திரு திலோத்தமை, செவ் வாய்
மேனகைக் குல அரம்பையர், யாரும்
சானகிக்கு அழகு தந்து, அயல் சார, 6

வீழியின் கனி இதழ், பணை மென் தோள்,
ஆழி வந்த அர மங்கையர், ஐஞ்ஞூற்று-
ஏழ் இரண்டினின் இரண்டு பயின்றோர்,
சூழ் இரண்டு புடையும் முறை சுற்ற, 7

முழை படிந்த பிறை முள் எயிறு, ஒள் வாள்
இழை படிந்த இள வெண் நிலவு ஈன,
குழை படிந்தது ஒரு குன்றில், முழங்கா
மழை படிந்தனைய தொங்கல் வயங்க, 8

ஓத நூல்கள் செவியின்வழி, உள்ளம்
சீதை சீதை என ஆர் உயிர் தேய,
நாத வீணை இசை நாரதனார் தம்
வேத கீத அமுது அள்ளி விழுங்க, 9

2. மிசை செல்லும் - (போர்) மேல் செல்லும்; 3. மௌலி - கலசங்கள்; வாசுகி - ஈண்டு ஆதிசேடன்; 7. ஆழி - திருப்பாற்கடல்; ஐஞ்ஞூற்று ஏழ் இரண்டினின் இரண்டு - 7×500×2×2=14,000; 8. குழை - குண்டலம்; தொங்கல் - நீல மணி மாலை.

வெங் கரத்தர், அயில் வாளினர், வில்லோர்,
சங்கரற்கும் வலி சாய்வு இல் வலத்தோர்,
அங்கு அரக்கர் சதகோடி அமைந்தோர்,
பொங்கு அரத்த விழியோர் புடை சூழ, 10

கல்லில் அம் கை உலகம் கவர்கிற்போர்,
நல் இலங்கை முதலோர், நவை இல்லோர்,
சொல்லில் அங்கு ஓர் சதகோடி தொடர்ந்தோர்,
வில் இலங்கு படையோர், புடை விம்ம, 11

பார் இயங்குநர், விசும்பு படர்ந்தோர்,
வார் இயங்கு மழையின் குரல் மானும்
பேரி, அங்கண் முருடு, ஆகுளி, பெட்கும்
தூரியம், கடலின் நின்று துவைப்ப, 12

நஞ்சும் அஞ்சும் விழி நாகியர் நாண
வஞ்சி அஞ்சும் இடை மங்கையர், வானத்து
அம் சொல் இன் சுவை அரம்பையர், ஆடி,
பஞ்சமம் சிவணும் இன் இசை பாட, 13

நஞ்சு கக்கி எரி கண்ணினர், நாமக்
கஞ்சுகத்தர், கதை பற்றிய கையர்,
மஞ்சு உகக் குமுறு சொல்லினர், வல் வாய்க்
கிஞ்சுகத்த கிரி ஒத்தனர், சுற்ற, 14

கூய் உரைப்ப குல மால் வரையேனும்,
சாய் உரைப்ப அரியவாய தடந் தோள்-
வாய் உரைத்த கலவைக் களி வாசம்,
வேய் உரைப்பது என, வந்து விளம்ப, 15

வேத்திரத்தர், எரி வீசி விழிக்கும்
நேத்திரத்தர், இறை நின்றுழி நில்லாக்
காத்திரத்தர், மனை காவல் விரும்பும்
சூத்திரத்தர், பதினாயிரர் சுற்ற, 16

12. வார் - நீர்; ஆகுளி - சிறுபறை; தூரியம் - வாச்சியம்; 13. பஞ்சமம் - ஒருவகைப் பண்; சிவணும் - நிகர்க்கும்; 14. வாய்க் கிஞ்சுகர் - வாயாகிய முள்முருக்க மலரை உடையவர்; 15. கூய் உரைப்ப - (உவமையாதற்கு ஏற்றன என்று) தெளிவாகச் சொல்லுதற்கு; சாய் - சாயல், ஈண்டு ஒப்பு; வேய் - ஒற்று; 16. காத்திரம் - உடம்பு; சூத்திரத்தர் - சூட்சுமத் தன்மை அமைந்தவர்.

இராவணன், இராமனைக் காணுதல்

தோரணத்த மணி வாயில்மிசை, சூல்
நீர் அணைத்த முகில் ஆம் என நின்றான்;
ஆரணத்தை, அரியை, மறை தேடும்
காரணத்தை, நிமிர் கண் கொடு கண்டான். 17

மடித்த வாயினன்; வழங்கு எரி வந்து
பொடித்து இழிந்த விழியன்; அதுபோழ்தின்,
இடித்த வன் திசை; எரிந்தது நெஞ்சம்;
துடித்த, கண்ணினொடு இடத் திரள் தோள்கள். 18

ஆக, ராகவனை அவ்வழி கண்டான்;
மாக ராக நிறை வாள் ஒளியோனை
ஏக ராசியினின் எய்த எதிர்க்கும்
வேக ராகு என, வெம்பி வெகுண்டான். 19

இராவணன் வினவும், சாரன் விடையும்

'ஏனையோன் இவன் இராமன் எனத் தன்
மேனியே உரைசெய்கின்றது; வேறு இச்
சேனை வீரர் படையைத் தெரி' என்று
தான் வினவ, எதிர், சாரன் விளம்பும்: 20

'இங்கு இவன், ''படை இலங்கையர் மன்னன்
தங்கை'' என்றலும், முதிர்ந்த சலத்தால்,
அங்கை வாள்கொடு அவள் ஆகம் விளங்கும்
கொங்கை, நாசி, செவி, கொய்து குறைத்தான். 21

'அறக்கண் அல்லது ஒரு கண் இலன் ஆகி,
நிறக் கருங் கடலுள் நேமியின் நின்று,
துறக்கம் எய்தியவரும் துறவாத
உறக்கம் என்பதனை ஒட முனிந்தான். 22

'கை அவன் தொட அமைந்த கரத்தான்,
ஐய! வாலியொடு இவ் அண்டம் நடுங்கச்
செய்த வன் செருவினின் திகழ்கின்றான்
வெய்யவன் புதல்வன்; யாரினும் வெய்யான். 23

19. ராகம் - செந்நிறம்; ஒளியோன் - சூரியன்; மாக நிறை ராக வாள் ஒளியோன் எனக் கூட்டுக; ஏக ராசி - அமாவாசை, சூரியனும் சந்திரனும் ஒருங்கு சேர்தல் பற்றி அமாவாசை ஏகராசி எனப்பட்டது; 22. அறக்கண் - தருமத்தினிடம்; கண்ணிலன் - கண்ணைச் செலுத்தாதவன்; கடலுள் நேமியின் நின்று - கடலுக்குப் பாதுகாப்பாக நிற்கும் சக்கரவாள கிரியைப் போல நின்று.

'தந்தை மற்றையவன் சார்வு இல் வலத்தோர்
அந்தரத்தர் அமுது ஆர்கலி காண,
மந்தரத்தினொடும் வாசுகியோடும்,
சுந்தரப் பெரிய தோள்கள் திரித்தான்.† 24

'நடந்து நின்றவன், நகும் கதிர் முன்பு
தொடர்ந்தவன்; உலகு, சுற்றும் எயிற்றின்
இடந்து எழுந்தவனை ஒத்தவன்; வேலை
கடந்தவன் சரிதை கண்டனை அன்றே? 25

'நீலன், நின்றவன்; நெருப்பின் மகன்; திண்
சூலமும் கயிறும் இன்மை துணிந்தும்,
ஆலம் உண்டவன் அடுந் திறல் மிக்கான்;
''காலன்'' என்பர், இவனைக் கருதாதார். 26

'வேறாக நின்றான், நளன் என்னும் விலங்கல் அன்னான்;
ஏறா, வருணன் வழி தந்திலன் என்று இராமன்
சீறாத உள்ளத்து எழு சீற்றம் உகுத்த செந் தீ
ஆறாதமுன்னம், அகன் வேலையை ஆறு செய்தான். 27

'முக் காலமும் மொய்ம் மதியால் முறையின் உணர்வான்,
புக்கு ஆலம் எழப் புணரிப் புலவோர் கலக்கும்
அக் காலம் உள்ளான், கரடிக்கு அரசு ஆகி நின்றான்,
இக் காலம் நின்றும் உலகு ஏழும் எடுக்க வல்லான். 28

'சேனாபதிதன் அயலே, இருள் செய்த குன்றின்
ஆனா மருங்கே, இரண்டு ஆடகக் குன்றின் நின்றார்,
ஏனோரில் இராமன் இலக்குவன் என்னும் ஈட்டார்;
வானோர்தம் மருத்துவர் மைந்தர்; வலிக்கண் மிக்கார். 29

'உவன்காண் குமுதன்; குமுதாக்கனும் ஊங்கு அவன்காண்,
இவன்காண் கவயன்; கவயாக்கனும் ஈங்கு இவன்காண்;
சிவன்காண் அயன்காண் எனும் தூதனைப் பெற்ற செல்வன்
அவன்காண், நெடுங் கேசரி என்பவன், ஆற்றல் மிக்கான். 30

'மூரபன், நகு தோளவன், மூரி மடங்கல் என்னக்
கர பல் நகம் அன்னவை மின் உகக் காந்துகின்றான்;
வர பல் நகம்தன்னையும் வேரொடு வேண்டின் வாங்கும்
சரபன் அவன்; இவன் சதவலி ஆய தக்கோன். 31

25. சரிதை - ஒழுகலாறு, செயல்; 29. சேனாபதி - நீலன்; வானோர்தம் மருத்துவர் - தேவ மருத்துவரான அசுவினி தேவர்; 30. குமுதாக்கன் - அல்லி மலர் போன்ற கண்ணையுடையவன்; கவயாக்கன் - பசுவின் கண்ணைப் போன்ற கண்ணையுடையவன்; 31. வரம் - மேன்மை.

'மூன்று கண் இலன் ஆயினும், மூன்று எயில் எரித்தோன்
போன்று நின்றவன் பனசன்; இப் போர்க்கு எலாம் தானே
ஏன்று நின்றவன் இடபன்; மற்று இவன்தனக்கு எதிரே
தோன்றுகின்றவன் சுடேணன், மூதறிவொடு தொடர்ந்தோன்.

'வெதிர் கொள் குன்று எலாம் வேரொடும் வாங்கி, மேதினியை
முதுகு நொய்து எனச் செய்தவன், கனலையும் முனிவோன்,
கதிரவன் மகற்கு இட மருங்கே நின்ற காளை,
ததிமுகன்; அவன், சங்கன் என்று உரைக்கின்ற சிங்கம். 33

'அண்ணல்! கேள்: இதற்கு அவதியும் அளவும் ஒன்று உளதோ?
விண்ணின் மீனினைக் குணிப்பினும், வேலையுள் மீனை
எண்ணி நோக்கினும், இக் கடல் மணலினை எல்லாம்
கண்ணி நோக்கினும், கணக்கு இலது' என்றனன், காட்டி. 34

இராவணன், வானரப் படையை இகழ்தல்

சினம் கொள் திண் திறல் அரக்கனும், சிறு நகை செய்தான்,
'புனம் கொள் புன் தலைக் குரங்கினைப் புகழுதி போலாம்;
வனங்களும் படர் வரைதொறும் திரிதரு மானின்
இனங்களும் பல என் செயும், அரியினை?' என்றான். 35

11 மகுட பங்கப் படலம்

'அரக்கரை இனையர் எனத் தெரிவி' என்று, இராமன் கேட்டல்

என்னும் வேலையின், இராவணற்கு இளவலை, இராமன்
'கன்னி மா மதில் நகர்நின்று நம் வலி காண்பான்
முன்னி, வானினும் மூடி நின்றார்களை, முறையால்,
இன்ன நாமத்தர், இனையர், என்று இயம்புதி' என்றான். 1

வீடணன், இராவணனைக் காட்டுதல்

'நாறு தன் குலக் கிளை எலாம் நரகத்து நடுவான்
சேறு செய்து வைத்தான், உம்பர் திலோத்தமை முதலாக்
கூறும் மங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்து
ஏறி நின்றவன், புன் தொழில் இராவணன்' என்றான். 2

33. நொய்து - பாரம் அற்றது.

11 : 2. கிளை நாற்றாகவும், நரகம் சேறாகவும் உருவகம் செய்யப்பட்டன.

சுக்கிரீவன், இராவணன்மேல் பாய்தல்

கருதி மற்றொன்று கழறுதல்முனம், விழிக் கனல்கள்
பொருது புக்கன முந்துற, சூரியன் புதல்வன்,—
சுருதி அன்னவன், 'சிவந்த நல் கனி' என்று சொல்ல,
பருதிமேல் பண்டு பாய்ந்தவன் ஆம் என,—பாய்ந்தான். 3

சுதையத்து ஓங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து,
சிதையத் திண் திறல் இராவணக் குன்றிடைச் சென்றான்,
ததையச் செங் கரம் பரப்பிய தன் பெருந் தாதை
உதையக் குன்றின்நின்று உகு குன்றில் பாய்ந்தவன் ஒத்தான்.

பள்ளம் போய்ப் புகும் புனல் எனப் படியிடைப் படிந்து
தள்ளும் பொற் கிரி சலிப்புறக் கோபுரம் சார்ந்தான்,
வெள்ளம்போல் கண்ணி அழுதலும், இராவணன்மேல் தன்
உள்ளம்போல் செலும் கழுகினுக்கு அரசனும் ஒத்தான்.* 5

கரிய கொண்டலை, கருணை அம் கடலினை, காணப்
பெரிய கண்கள் பெற்று உவக்கின்ற அரம்பையர், பிறரும்,
உரிய குன்றிடை உரும் இடி வீழ்தலும், உலைவுற்று
இரியல்போயின மயிற் பெருங் குலம் என இரிந்தார். 6

இருவரும் கை கலத்தல்

கால இருள் சிந்து கதிரோன்-மதலை கண்ணுற்று,
ஏல எதிர் சென்று அடல் இராவணனை எய்தி,
நீல மலை முன் கயிலை நின்றது என, நின்றான்;
ஆலவிடம் அன்று வர, நின்ற சிவன் அன்னான். 7

'இத் திசையின் வந்த பொருள் என்?' என, இயம்பான்,
தத்தி எதிர் சென்று, திசை வென்று உயர் தடந் தோள்
பத்தினொடு பத்துடையவன் உடல் பதைப்ப,
குத்தினன் உரத்தில், நிமிர் கைத் துணை குளிப்ப. 8

3. பொருது - போட்டியிட்டுக்கொண்டு; பொருது முந்துறப் புக்கன எனக் கூட்டுக; 4. சுதையத்து ஓங்கிய - நட்சத்திர மண்டிலம் வரை உயர்ந்த, வெண்ணிறத்தோடு உயர்ந்த எனலும் ஆம்; உகு குன்று - சூரியன் மறையும் குன்று; 5. பொற் கிரி - திரிகூட மலை, மேருவினின்று பிரிந்தது ஆதலின் அப் பெயர் பெற்றது; 7. கால இருள் - நெடுங்காலமாகச் செறிந்து நிற்கும் புற இருள், இராப்பொழுதின் மிக்கு இருக்கும் இருள்; ஏல - பொருந்த; 8. குளிப்ப - அழுந்த.

திருகிய சினத்தொடு செறுத்து எரி விழித்தான்,
ஒருபது திசைக்கணும் ஒலித்த ஒலி ஒப்ப,
தரு வனம் எனப் புடை தழைத்து உயர் தடக் கை
இருபதும் எடுத்து, உரும் இடித்தென அடித்தான். 9

அடித்த விரல் பட்ட உடலத்துழி இரத்தம்
பொடித்து எழ, உறுக்கி எதிர் புக்கு, உடல் பொருந்தி,
கடுத்த விசையின் கடிது எழுந்து, கதிர் வேலான்
முடித் தலைகள் பத்தினும் முகத்தினும் உதைத்தான். 10

உதைத்தவன் அடித் துணை பிடித்து, ஒரு கணத்தில்,
பதைத்து உலைவுறப் பல திறத்து இகல் பரப்பி,
மதக் கரியை உற்று அரி நெரித்தென மயக்கி,
சுதைத் தலனிடை, கடிது அடிக்கொடு துகைத்தான். 11

துகைத்தவன் உடற் பொறை சுறுக்கொள இறுக்கி,
தகைப் பெரு வலத்தொடு தலத்திடை அமுக்கி,
வகைப் பிறை நிறத்து எயிறுடைப் பொறி வழக்கிக்
குகைப் பொழி புதுக் குருதி கைக்கொடு குடித்தான். 12

கைக்கொடு குடித்தவன் உடல் கனக வெற்பை,
பைக் கொடு விடத்து அரவு எனப் பல கை பற்றி,
மைக் கொடு நிறத்தவன் மறத்தொடு, புறத்தில்
திக்கொடு, பொருப்பு உற நெருப்பொடு திரித்தான். 13

திரித்தவன் உரத்தின் உகிர் செற்றும் வகை குத்தி,
பெருத்து உயர் தடக் கைகொடு அடுத்து இடை பிடித்து,
கருத்து அழிவுற,—திரி திறத்து எயில், கணத்து அன்று
எரித்தவனை ஒத்தவன்,—எடுத்து அகழி இட்டான். 14

இட்டவனை இட்ட அகழில் கடிதின் இட்டான்,
தட்ட உயரத்தினில் உறும் தசமுகத்தான்;
ஒட்ட உடனே அவனும் வந்து, அவனை உற்றான்;
விட்டிலர் புரண்டு இருவர், ஓர் அகழின் வீழ்ந்தார். 15

9. ஒலித்த ஒலி ஒருபது திசைக்கணும் ஒப்ப, உரும் இடித்தென, தடக் கை இருபதும் எடுத்து அடித்தான் என இயையும்; 11. சுதைத்தலன் - சுண்ணாம்பு தீற்றப்பட்ட தரை; அடிக்கொடு - கால்களால்; 13. இராவணன் இருபது கைகளாலும் சுக்கிரீவன் உடம்பினைப் பற்றினமை, அனந்தன் பல படங்களால் மேரு மலையினைப் பற்றியது போன்று தோன்றியது; 15. ஒட்டுதல் - இணைந்து பொருதல்.

விழுந்தனர், சுழன்றனர்; வெகுண்டனர், திரிந்தார்;
அழுந்தினர், அழுந்திலர்; அகன்றிலர், அகன்றார்;
எழுந்தனர், எழுந்திலர்; எதிர்ந்தனர் முதிர்ந்தார்;
ஒழிந்தனர், ஒழிந்திலர்; உணர்ந்திலர்கள், ஒன்றும். 16

அந்தர அருக்கன் மகன்,—ஆழி அகழ் ஆக,
சுந்தரமுடைக் கரம் வலிப்பது ஓர் சுழிப்பட்டு,
எந்திரம் எனத் திரி இரக்கம் இல் அரக்கன்
மந்தரம் என,—கடையும் வாலியையும் ஒத்தான். 17

ஊறு படு செம்புனல், உடைத்த கரை உற்ற
ஆறு படர்கின்றன எனப் படர, அன்னார்,
பாறு, பொருகின்றன பருந்து, இவை எனப் போய்,
ஏறினர் விசும்பிடை; இரிந்த, உலகு எல்லாம். 18

தூர நெடு வானின் மலையும் சுடரவன் சேய்,
காரினெடு மேரு நிகர் காய் சின அரக்கன்
தாருடைய தோள்கள் பலவும் தழுவ நின்றான்,
ஊரினெடு கோள் கதுவு தாதையையும் ஒத்தான். 19

பொங்கு அமர் விசும்பிடை உடன்று பொரு போழ்தில்,
செங் கதிரவன் சிறுவனை, திரள் புயத்தால்,
மங்கல வயங்கு ஒளி மறைத்த வல் அரக்கன்,
வெங் கதிர் கரந்தது ஒரு மேகம் எனல் ஆனான். 20

நூபுர மடந்தையர் கிடந்து அலற, நோனார்
மா புரம் அடங்கலும் இரிந்து அயர, வன் தாள்
மீ புர மடங்கல் என, வெங் கதிரவன் சேய்,
கோபுரம் அடங்க இடிய, தனி குதித்தான். 21

ஒன்றுற விழுந்த உருமைத் தொடர ஓடா,
மின் தெரி எயிற்றின் ஒரு மேகம் விழும் என்ன,
'தின்றிடுவென்' என்று எழு சினத் திறல் அரக்கன்
பின் தொடர வந்து, இரு கரத் துணை பிடித்தான். 22

வந்தவனை நின்றவன் வலிந்து, எதிர் மலைந்தான்,
அந்தகனும் அஞ்சிட, நிலத்திடை அரைத்தான்;
எந்திரம் எனக் கடிது எடுத்து, அவன் எறிந்தான்;
கந்துகம் எனக் கடிது எழுந்து, எதிர் கலந்தான். 23

16. இப் போர்ச் செயல் உழிஞைத் திணையுள், 'நீர்ச் செரு வீழ்ந்த பாசி' என்னும் துறையின்பாற்படும்; 19. ஊரினெடு கோள் - ஊர்கோள், பரிவேடம்; 20. மங்கல வயங்கு ஒளி - நலத்துடன் விளங்கும் (மேனியின்) ஒளி; 21. மீ புரம்-உடலின் மேற்பகுதி; மடங்கல் - சிங்கம்; 23. கந்துகம் - பந்து.

படிந்தனர், பரந்தனர், பரந்தது ஓர் நெருப்பின்
கொடுஞ் சினம் முதிர்ந்தனர், உரத்தின்மிசை குத்த,
நெடுஞ் சுவர் பிளந்தன; நெரிந்த நிமிர் குன்றம்;
இடிந்தன, தகர்ந்தன, இலங்கை மதில் எங்கும். 24

செறிந்து உழல் கறங்கு அனையர் மேனி நிலை தேரார்,
பிறிந்தனர் பொருந்தினர் எனத் தெரிதல் பேணார்,
எறிந்தனர்கள், எய்தினர்கள், இன்னர் என, முன் நின்று
அறிந்திலர், அரக்கரும்; அமர்த் தொழில் அயர்ந்தார். 25

சுக்கிரீவனைக் காணாது, இராமன் இரங்கி உரைத்தல்

இன்னது ஓர் தன்மை எய்தும் அளவையின், எழிலி வண்ணன்,
மன்னுயிர் அனைய காதல் துணைவனை வரவு காணான்,
'உன்னிய கருமம் எல்லாம் உன்னொடு முடிந்த' என்னா,
தன் உணர்வு அழிந்து, சிந்தை அலமந்து, தளர்ந்து, சாய்ந்தான். 26

'ஒன்றிய உணர்வே ஆய ஓர் உயிர்த் துணைவ! உன்னை
இன்றி யான் உளனாய் நின்று, ஒன்று இயற்றுவது இயைவது அன்றால்;
அன்றியும், துயரத்து இட்டாய், அமரரை; அரக்கர்க்கு எல்லாம்
வென்றியும் கொடுத்தாய்; என்னைக் கெடுத்தது உன் வெகுளி' என்
[றான்.

'தெய்வ வெம் படையும், தீரா மாயமும், வல்ல தீயோன்
கையிடைப் புக்காய்; நீ வேறு எவ்வணம் கடத்தி, காவல்?
வையம் ஓர் ஏழும் பெற்றால், வாழ்வெனோ? வாராய்ஆகில்,
உய்வெனோ?—தமியனேனுக்கு உயிர் தந்த உதவியோனே! 28

'ஒன்றாக நினைய, ஒன்றாய் விளைந்தது, என் கருமம்; அந்தோ!
என்றானும், யானோ வாழேன்; "நீ இலை" எனவும் கேளேன்;
இன்று ஆய பழியும் நிற்க, நெடுஞ் செருக் களத்தின் என்னைக்
கொன்றாய் நீ அன்றோ? நின்னைக் கொல்லுமேல், குணங்கள் தீயோன்.

'இறந்தனை என்ற போதும் இருந்து, யான் அரக்கர்என்பார்
திறம்தனை உலகின் நீக்கி, பின் உயிர் தீர்வெனேனும்,
"புறந்தரு பண்பின் ஆய உயிரொடும் பொருந்தினானை
மறந்தனன்; வலியன்" என்பார்; ஆதலால், அதுவும் மாட்டேன். 30

'அழிவது செய்தாய், ஐய! அன்பினால்; அளியத்தேனுக்கு
ஒழிவு அரும் உதவி செய்த உன்னை யான் ஒழிய வாழேன்;
எழுபது வெள்ளம் தன்னின் ஈண்டு ஓர் பேர் எஞ்சாது ஏகி,
செழு நகர் அடையின் அன்றோ, இத் துயர் தீர்வது உண்டோ?'

27. ஒன்றிய உணர்வு - ஒத்த உணர்ச்சி; 28. தமியனேன் - கதியற்றவன்.

சுக்கிரீவன் இராவணன் மகுடத்துடன் இராமனை அடைதல்

என்று அவன் இரங்கும் காலத்து, இருவரும் ஒருவர்தம்மின்
வென்றிலர் தோற்றிலாராய், வெஞ் சமம் விளைக்கும் வேலை,
வன் திறல் அரக்கன் மௌலி மணிகளை வலியால் வாங்கி,
"பொன்றினென் ஆகின், நன்று" என்று அவன் வெள்க, இவனும் [போந்தான்.
கொழு மணி முடிகள்தோறும் கொண்ட நல் மணியின் கூட்டம்
அழுது அயர்வுறுகின்றான்தன் அடித்தலம் அதனில் சூட்டி,
தொழுது, அயல் நாணி நின்றான்; தூயவர் இருவரோடும்
எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஓர் உயிர் எய்திற்று அன்றே. 33

இராமன் சுக்கிரீவனைத் தழுவி, தன் அன்பை வெளியிடுதல்

என்பு உறக் கிழிந்த புண்ணின் இழி பெருங் குருதியோடும்
புன் புலத்து அரக்கன்தன்னைத் தீண்டிய தீமை போக;
அன்பனை அமரப் புல்லி, மஞ்சனம் ஆட்டி விட்டான்,
தன் பெரு நயனம் என்னும் தாமரை சொரியும் நீரால். 34

'ஈர்கின்றது அன்றே, என்றன் உள்ளத்தை; இங்கும் அங்கும்
பேர்கின்றது ஆவி; யாக்கை பெயர்கின்றது இல்லை; பின்னை,
தேர்கின்ற சிந்தை அன்றோ திகைத்தனை?' என்று', தெண் நீர்
சோர்கின்ற அருவிக் கண்ணன் துணைவனை நோக்கிச் சொல்லும்:

'கல்லினும் வலிய தோளாய்! நின்னை அக் கருணை இல்லோன்
கொல்லுதல் செய்தான் ஆகின், கொடுமையால் கொற்றம் பேணி,
பல் பெரும் பகழி மாரி வேரொடும் பறிய நூறி,
வெல்லினும், தோற்றேன் யானே அல்லெனோ, விளிந்திலாதேன்?

'பெருமையும் வண்மைதானும், பேர் எழில் ஆண்மைதானும்,
ஒருமையின் உணர நோக்கின், பொறையினது ஊற்றம் அன்றே!
அருமையும், அடர்ந்து நின்ற பழியையும் அயர்ந்தாய் போல
இருமையும் கெடுக்கலுற்றாய்; என் நினைந்து, என் செய்தாய் நீ!

'இந் நிலை விரைவின் எய்தாது, இத் துணை தாழ்த்தி ஆயின்,
நல் நுதல் சீதையால் என்? ஞாலத்தால் பயன் என்? நம்பி!
உன்னை யான் தொடர்வல்; என்னைத் தொடரும் இவ் உலகம்; என்றால்,
பின்னை என், இதனைக் கொண்டு? விளையாடி, பிழைப்ப செய்தாய்!'

34. தீமை - தீட்டு; 35. தேர்கின்ற சிந்தை - எதனையும் ஆராய்ந்து துணியவல்ல தெளிவுடைய மனம்; 36. கொடுமையால் - கொடுமையோடு; 37. பெருமை - செயற்கரிய செய்தலாகிய பெருந்தகைமை.

சுக்கிரீவன் மறு மொழி

‘காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன்;
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்கமாட்டேன்;
கேட்டிலேன் இன்று கண்டும், கிளி மொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள் பத்தும் கொணர்ந்திலேன், வெறுங் கை வந்
[தேன்.

‘வன் பகை நிற்க, எங்கள் வானரத் தொழிலுக்கு ஏற்ற
புன் பகை காட்டும் யானோ புகழ்ப் பகைக்கு ஒருவன் போலாம்?
என் பகை தீர்த்து, என் ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன் பகை உனக்குத் தந்தேன்; உயிர் சுமந்து உழலா நின்றேன்.

‘செம்புக்கும் சிவந்த செங் கண் திசை நிலைக் களிற்றின் சீற்றக்
கொம்புக்கும் குறைந்த அன்றே, என்னுடைக் குரக்குப் புன் தோள்?
“அம்புக்கு முன்னம் சென்று, உன் அரும் பகை முடிப்பல்” என்று
வெம்புற்ற மனமும், யானும், தீது இன்றி, மீள வந்தேன். 41

‘நூல் வலி காட்டும் சிந்தை நும் பெருந் தூதன், வெம் போர்
வேல் வலி காட்டுவார்க்கும், வில் வலி காட்டுவார்க்கும்,
வால் வலி காட்டிப் போந்த வள நகர் புக்கு, மற்று என்
கால் வலி காட்டிப் போந்தேன்; கை வலிக்கு அவதி உண்டோ?’

வீடணன், சுக்கிரீவனது வீரத்தைப் பாராட்டுதல்

இன்னன பலவும் பன்னி, இறைஞ்சிய முடியன் நாணி,
மன்னவர் மன்னன் முன்னர், வானர மன்னன் நிற்ப,
அன்னவன் தன்னை நோக்கி, அழகனை நோக்கி, ஆழி
மின் என விளங்கும் பைம் பூண் வீடணன் விளம்பலுற்றான்:

‘வாங்கிய மணிகள், அன்னான் தலைமிசை மௌலி மேலே
ஓங்கிய அல்லவோ? மற்று, இனி அப்பால் உயர்ந்தது உண்டோ?
தீங்கினன் சிரத்தின் மேலும், உயிரினும், சீரிது அம்மா!
வீங்கிய புகழை எல்லாம் வேரொடும் வாங்கி விட்டாய்! 44

‘பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின்,
வார் கழல் காலினாலே கல்ல வல்லவனை முன்னா,
தார் கெழு மௌலி பத்தின் தனி மணி வலிதின் தந்த
வீரதை விடைவலோற்கும் முடியுமோ? வேறும் உண்டோ? 45

39. இராமன்மீது பரிவுகொண்டு உதவி புரிந்தமையினாலேயே சடாயுவும் குகனும் முறையே பெரியவுடையார் என்றும், குகப்பெருமாள் என்றும் வைணவ மரபில் பாராட்டிக் கூறப்படுவர்; 41. செம்புக்கும் - தாமிரத்தைக் காட்டிலும்; 42. நூல் வலி - நூல்களின் பெருமை; சிந்தை - ஆராய்ச்சி; கால் வலி காட்டல் - காலால் விரைந்து ஓடி மீளுதல்; 45. முன்னா - முற்பட்டு; வீரதை - வீரத்தன்மை.

'கரு மணி கண்டத்தான் தன் சென்னியில் கறை வெண் திங்கள்,
பரு மணி வண்ணன் மார்பின் செம் மணி, பறித்திட்டாலும்,—
தரு மணி இமைக்கும் தோளாய்!—தசமுகன் முடியில் தைத்த
திரு மணி பறித்துத் தந்த வென்றியே சீரிது அன்றோ? 46

'தொடி மணி இமைக்கும் தோளாய்;—சொல் இனி வேறும் உண்டோ?
வடி மணி வயிர ஒள் வாள் சிவன்வயின் வாங்கிக் கொண்டான்
முடி மணி பறித்திட்டாயோ? இவன் இனி முடிக்கும் வென்றிக்கு
அடி மணி இட்டாய் அன்றே?—அரிக் குலத்து அரச!' என்றான்.

இராமன், சுக்கிரீவன் பெற்ற வெற்றியைப் போற்றுதல்

'வென்றி அன்று என்றும், வென்றி வீரர்க்கு விளம்பத்தக்க
நன்றி அன்று என்றும், அன்று; நானிலம் எயிற்றில் கொண்ட
பன்றி அன்றுஆகின், ஈது ஆர் இயற்றுவார் பரிவின்?' என்னா,
'இன்று இது வென்றி' என்று என்று, இராமனும் இரங்கிச் சொன்னான்.

கதிரவன் மறைவு

தன் தனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின் தளிர்த்தனைய பல் மா மணியினை வெளியில் கண்டான்;
'ஒன்று ஒழித்து ஒன்று ஆம்' என்று, அவ் அரக்கனுக்கு ஒளிப்பான்போல,
வன் தனிக் குன்றுக்கு அப்பால், இரவியும் மறையப் போனான்.

இராமனும் இராவணனும் தத்தம் இருக்கை சேர்தல்

கங்குல் வந்து இறுத்த காலை, கை விளக்கு எடுப்ப, காவல்
வெங் கழல் அரக்கன் மௌலிமிசை மணி விளக்கம் செய்ய,
செங் கதிர் மைந்தன் செய்த வென்றியை நிறையத் தேக்கிப்
பொங்கிய தோளினானும், இழிந்து போய், இருக்கை புக்கான்.

என்றானும் இனைய தன்மை எய்தாத இலங்கை வேந்தன்,
நின்றார்கள் தேவர் கண்டார் என்பது ஓர் நாணம் நீள,
அன்று ஆய மகளிர் நோக்கம் ஆடவர் நோக்கம் ஆக
பொன்றாது பொன்றினான், தன் புகழ் என இழிந்து, போனான்.

46. தரு மணி - புனையப் பெற்று ஒளிரும் மணியணி; தருதல் - புனைதல்; 47. சொல் - புகழ்; வடி மணி - ஆராய்ந்து எடுத்த மணி; 51. ஆய மகளிர் - பலராய்க் குழுமி வந்த அந்தப்புர மகளிர்; ஆடவர் நோக்கம் ஆதல் - ஆடவர் பார்வை போலக் காதலை உண்டாக்காமல் தோன்றல்.

12 அணி வகுப்புப் படலம்

இராவணன் மானத்தால் வருந்தி, துயில முயலுதல்

மானத்தான் ஊன்றப்பட்ட மருமத்தான், வதனம் எல்லாம்
கூனல் தாமரையின் தோன்ற, வான் தொடும் கோயில் புக்கான்.
பானத்தான் அல்லன்; தெய்வப் பாடலான் அல்லன்; ஆடல்
தானத்தான் அல்லன்; மெல்லென் சயனத்தான்; உரையும் தாரான்.

வை எயிற்றாலும், நேரா மணி இழந்து இரங்கலாலும்,
பையுயிர்த்து அயரும் பேழ் வாய்ப் பல் தலைப் பரப்பினாலும்,
மெய்யனை, திரையின் வேலை மென் மலர்ப் பள்ளி ஆன
ஐயனை, பிரிந்து வைகும் அனந்தனே—அரக்கர் வேந்தன். 2

தாயினும் பழகினார்க்கும் தன் நிலை தெரிக்கல் ஆகா
மாய வல் உருவத்தான் முன் வருதலும், வாயில் காப்பான்,
' ''சேயவர் சேனை நண்ணி, செய் திறம் தெரித்தி நீ'' என்று
ஏயவன் எய்தினான்' என்று அரசனை இறைஞ்சிச் சொன்னான்.

இராவணன் வினாவும், ஒற்றன் சார்த்தூலன் மறுமொழியும்

'அழை' என, எய்தி, பாதம் வணங்கிய அறிஞன் தன்னை,
'பிழை அற அறிந்த எல்லாம் உரைத்தி' என்று அரக்கன் பேச,
முழை உறு சீயம் அன்னான் முகத்தினால் அகத்தை நோக்கி,
குழையுறு மெய்யன், பைய, வரன்முறை கூறலுற்றான்: 4

'வீரிய! விதியின் எய்தி, பதினெழு வெள்ளத்தோடும்,
மாருதி, மேலை வாயில் உழிஞைமேல் வருவதானான்;
ஆரியன், அமைந்த வெள்ளம் அத்தனையோடும், வெற்றிச்
சூரியன் மகனைத் தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னான். 5

'அன்றியும், பதினேழ் வெள்ளத்து அரியொடும் அரசன் மைந்தன்,
தென் திசை வாயில் செய்யும் செரு எலாம் செய்வதானான்;
ஒன்று பத்து ஆறு வெள்ளத்து அரியொடும் துணைவரோடும்
நின்றனன், நீலன் என்பான், குண திசை வாயில் நெற்றி. 6

12: 1. பானம் - தேறல் முதலியவற்றைப் பருகுதலாகிய நுகர்ச்சி; ஆடல் தானம் - நாடக அரங்கம்; 2. பையுயிர்த்து - மெல்லப் பெருமூச்சு விட்டு; 5. உழிஞை - பகைவரது மதிலை வளைத்தலாகிய போர்ச்செயல்; 6. அரசன் மைந்தன் - அங்கதன்; நெற்றி - முகப்பு.

'இம்பரின் இயைந்த காயும் கனியும் கொண்டு, இரண்டு வெள்ளம்
வெம்பு வெஞ் சேனைக்கு எல்லாம் உணவு தந்து உழலவிட்டான்;
உம்பியை, வாயில்தோறும் நிலை தெரிந்து உணரச் சொன்னான்;
தம்பியும் தானும் நிற்பதாயினான்; சமைவு ஈது' என்றான். 7

இராவணன், அமைச்சரோடு ஆலோசனை நிகழ்த்தல்

சார்த்தூலன் இதனைச் சொல்ல, தழல் சொரி தறுகணானும்,
பார்த்து, ஊழி வடவை பொங்க, 'படுவது படுமா பார்த்தி;
போர்த் தூளி துடைப்பென் நாளை, அவர் உடற்பொறையின்நின்றும்
தேர்த்து ஊறு குருதிதன்னால்' என்றனன், எயிறு தின்னா. 8

மா அணை நீலக் குன்றத்து இள வெயில் வளர்ந்தது என்ன,
தூ அணை குருதிச் செக்கர்ச் சுவடு உறப் பொலிந்த தோளான்,
ஏ அணை வரி வில் காமன் கணை பட எரியாநின்ற
பூ அணை மாறி, வேறு ஓர் புனை மணி இருக்கை புக்கான். * 9

செய்வன முறையின் எண்ணி, திறத்திறம் உணர்வின் தேர,
மை அறு மரபின் வந்த அமைச்சரை, 'வருக!' என்றான்—
பொய் எனப் பளிங்கின் ஆய இருக்கையின் புறத்தைச் சுற்றி,
ஐ-இரண்டு ஆய கோடிப் பேய்க் கணம் காப்பது ஆக்கி. 10

இராவணனது வினா

அளந்து அறிவு அரியர் ஆய அமைச்சரை அடங்க நோக்கி,
'வளைந்தது குரங்கின் சேனை, வாயில்கள்தோறும் வந்து;
விளைந்தது பெரும் போர் என்று விட்டது; விடாது, நம்மை;
உளைந்தனம்; என்ன எண்ணி, என் செயற்கு உரிய?' என்றான்.

நிகும்பன் எதிரியை இகழ்ந்து கூறுதல்

'எழுபது வெள்ளத்து உற்ற குரக்கினம் எயிலை முற்றும்
தழுவின என்று செய்யத் தக்கது சமைதி போலாம்;
அழுவ நீர் வேலை அன்னது ஆயிர வெள்ளம் அன்றே?
உழிஞையைத் துடைக்க, நொச்சி உச்சியில் கொண்டது, உன் ஊர். 12

7. சமைவு - ஏற்பாடு; 8. தேர்த்து ஊறு - தேரின் கண்ணவாய் ஊறிப் பெருகும்; 9. மா அணை - பெருமை பொருந்திய; 11. விட்டது - ஆகி விட்டது; 12. அழுவ நீர் வேலை - ஆழமான நீர்ப்பரப்பையுடைய கடல்; நொச்சி - மாற்றார்க்கு எதிரூன்றித் தம் மதில் காப்போர் சூடும் மாலை; உச்சியில் கொண்டது - தலையில் சூடியுள்ளதாகிய படை.

'எழு, மழு, தண்டு, வேல், வாள், இலை நெடுஞ் சூலம் என்று இம்
முழு முதற் படைகள் ஏந்தி, இராக்கதர் முனைந்த போது,
தொழுது தம் படைகள் முன் இட்டு, ஓடுவார் சுரர்கள் என்றால்,
விழுமிது, குரங்கு வந்து வெறுங் கையால் கொள்ளும் வென்றி!

மாதுலத் தலைவனான மாலி கூறுதல்

'ஈது இவண் நிகழ்ச்சி' என்னா, எரி விழித்து, இடியின் நக்கு,
பூதலத்து அடித்த கையன், நிகும்பன் என்று ஒருவன் பொங்க,
'வேதனைக் காமம் அந்தோ வேரொடும் கெடுத்தது' என்னா,
மாதுலத் தலைவன் பின்னும் அன்பின் ஓர் மாற்றம் சொன்னான்:

'புக்கு எரி மடுத்து, இவ் ஊரைப் பொடி செய்து போயினாற்குச்
சக்கரம் உண்டோ, கையில்? தசமுகன் தலைகள் ஆன
இக் கிரி பத்தின் மௌலி இன மணி இடந்து கொண்ட
சுக்கிரீவற்கும் உண்டோ, சூலமும் வேலும் வாளும்? 15

'தொடைக் கலத்து இராமன் வாளி தோன்றுதல் முன்னம், தோன்று
இடைக்கு அலமருதல் செய்யும் முலையினாள்தன்னை ஈந்து,
படைக்கலம் உடைய நாம், அப் படை இலாப் படையை, ஈண்ட
அடைக்கலம் புகுவது அல்லால், இனிப் புகும் அரணும் உண்டோ?' 16

இராவணன், மாலியைக் கடிந்து கூற, அவன் பேசாதிருத்தல்

என்புழி மாலிதன்னை எரி எழ நோக்கி, 'என்பால்
வன் பழி தருதி போலாம்; வரன்முறை அறியா வார்த்தை,
அன்பு அழி சிந்தைதன்னால், அடாதன அறையல்' என்றான்,
பின் பழி எய்த நின்றான்; அவன் பின்னைப் பேச்சு விட்டான். 17

இராவணன், சேனையை அணிவகுக்குமாறு கட்டளையிடுதல்

'காட்டிய காலகேயர் கொழு நிணக் கற்றை காலத்
தீட்டிய படைக் கை வீரச் சேனையின் தலைவ! தெள்ளி
ஈட்டிய அரக்கர் தானை இருநூறு வெள்ளம் கொண்டு,
கீட்டிசை வாயில் நிற்றி, நின் பெருங் கிளையினோடும். 18

'காலன்தன் களிப்புத் தீர்த்த மகோதர! காலையே போய்,
மால் ஒன்றும் மனத்து வீரன் மாபெரும்பக்கனோடும்
சூலம் கொள் குரங்கை எல்லாம் கொல்லுதி—வெள்ளம் ஆன
நால்-ஐம்பதோடும் சென்று, நமன் திசை வாயில் நண்ணி. 19

14. மாதுலத் தலைவன் - இராவணனுடைய மாமன்மார்களுள் தலைவனாகிய மாலி; 19. நமன் திசை - தென் திசை.

'எற்றம் என், சொல்லின் என்பால்? இந்திரன்பகைஞ!—அந் நாள்
காற்றினுக்கு அரசன் மைந்தன் கடுமை நீ கண்டது அன்றோ?
நூற்று-இரண்டு ஆய வெள்ள நுன் பெரும் படைஞர் சுற்ற,
மேல் திசை வாயில் சேர்தி, விடிவதன் முன்னம்—வீர! 20

'இந் நெடுங் காலம் எல்லாம் இமையவர்க்கு இறுதி கண்டாய்;
புன் நெடுங் குரங்கின் சேரல் புல்லிது; புகழும் அன்றால்;
அந் நெடு மூலத்தானைஅதனொடும், அமைச்சரோடும்,
தொல் நெடு நகரி காக்க—விருபாக்க!' என்னச் சொன்னான்.

'கட கரி புரவி ஆள் தேர், கமலத்தோன் உலகுக்கு இப்பால்
புடை உள பொருது, கொண்டு, போர் பெருப் பொங்குகின்ற
இடை இடை மிடைந்த சேனை இருநூறு வெள்ளம் கொண்டு,
வட திசை வாயில் காப்பேன் யான்' என வகுத்து விட்டான்.

கங்குல் நீங்க, கதிரவன் தோன்றுதல்

கலங்கிய கங்குல் ஆகி நீங்கிய கற்பம்—காணும்
நலம் கிளர் தேவர்க்கேயோ, நான்மறை முனிவர்க்கேயோ,
பொலம் கெழு சீதைக்கேயோ, பொரு வலி இராமற்கேயோ,
இலங்கையர் வேந்தற்கேயோ,—எல்லார்க்கும் செய்தது இன்பம். 23

அளித் தகவு இல்லா ஆற்றல் அமைந்தவன் கொடுமை அஞ்சி,
வெளிப்படல் அரிது என்று உன்னி, வேதனை உழக்கும் வேலை,
களித்தவற் களிப்பு நீக்கி, காப்பவர்தம்மைக் கண்ணுற்று,
ஒளித்தவர் வெளிப்பட்டென்ன,—கதிரவன் உதயம்செய்தான்.

வானர சேனை இலங்கையை வளைத்தல்

உளைப்புறும் ஓத வேலை ஓங்கு அலை ஒடுங்கத் தூர்ப்ப,
அளப்ப அருந் தூளிச் சுண்ணம் ஆசைகள் அலைக்க, பூசல்
இளைப்ப அருந் தலைவர், முன்னம் ஏவலின், எயிலை முற்றும்
வளைத்தனர், விடிய, தத்தம் வாயில்கள்தோறும் வந்து. 25

தந்திரம் இலங்கை மூதூர் மதிலினைத் தழுவித் தாவி,
அந்தரக் குல மீன் சிந்த, அண்டமும் கிழிய ஆர்ப்ப,
செந் தனிச் சுடரோன் சேயும் தம்பியும் முன்பு செல்ல,
இந்திரன் தொழுது வாழ்த்த, இராமனும் எழுந்து சென்றான்.

20. இந்திரன் பகைஞன் - இந்திரசித்தன்; 23. கற்பம் - ஊழி; 24. அளித் தகவு - கருணையாகிய நற்குணம்; 26. தந்திரம் - சேனை, இங்கு வானரப்படை.

நூற் கடல் புலவராலும் நுனிப்ப அரும் வலத்தது ஆய
வேற் கடல்-தானை ஆன விரி கடல் விழுங்கிற்றேனும்,
கார்க் கடல் புறத்தது ஆக, கவிக் கடல் வளைந்த காட்சி,
பாற்கடல் அழுவத்து உள்ளது ஒத்தது, அப் பதகன் மூதூர்.

அலகு இலா அரக்கன் சேனை அகப்பட, அரியின் தானை,
வலைகொலாம் என்ன, சுற்றி வளைத்ததற்கு உவமை கூறின்,
கலை குலாம் பரவை ஏழும் கால் கிளர்ந்து எழுந்த காலத்து
உலகு எலாம் ஒருங்கு கூடி, ஒதுங்கினவேயும் ஒக்கும். 28

13 அங்கதன் தூதுப் படலம்

இராமன் தூது விடுத்தல்பற்றி வீடணனிடம் பேசுதல்

வள்ளலும் விரைவின் எய்தி, வட திசை வாயில் முற்றி,
வெள்ளம் ஓர் ஏழு-பத்துக் கணித்த வெஞ் சேனையோடும்,
கள்ளனை வரவு நோக்கி, நின்றனன், காண்கிலாதான்,
'ஒள்ளியது உணர்ந்தேன்' என்ன, வீடணற்கு உரைப்பதானான்:

'தூதுவன் ஒருவன்தன்னை இவ் வழி விரைவில் தூண்டி,
"மாதினை விடுதியோ?" என்று உணர்த்தவே, மறுக்கும்ஆகின்,
காதுதல் கடன் என்று உள்ளம் கருதியது; அறனும் அஃதே;
நீதியும் அஃதே' என்றான்—கருணையின் நிலயம் அன்னான். 2

வீடணன் முதலியோர் வரவேற்க, இலக்குவன் மறுத்தல்

அரக்கர் கோன் அதனைக் கேட்டான், 'அழகிற்றே ஆகும்' என்றான்;
குரக்கினத்து இறைவன் நின்றான், 'கொற்றவர்க்கு உற்றது' என்றான்;
'இரக்கமது இழுக்கம்' என்றான், இளையவன்; 'இனி, நாம் அம்பு
துரக்குவது அல்லால், வேறு ஓர் சொல் உண்டோ?' என்னச் சொன்னான்.

'தேசியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்;
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்றான்;
ஆசையின் அளவும், எல்லா உலகமும் தானே ஆள்வான்,
வாசவன் திருவும் கொண்டான்; வழி அலா வழிமேல் செல்வான். 4

13: 2. காதுதல் - கொல்லுதல்: 4. தேசி - (கற்பின் திறமாகிய) ஒளியினைத் தனக்குரிய வடிவமாகப் பெற்றவள், சீதை; வாசவன் - இந்திரன்.

'வாழியாய்! நின்னை அன்று வரம்பு அறு துயரின் வைக,
சூழ்வு இலா மாயம் செய்து, உன் துணைவியைப் பிரிவுசூழ்ந்தான்;
ஏழைபால் இரக்கம் நோக்கி, ஒரு தனி இகல்மேல் சென்ற,
ஊழி காண்கிற்கும் வாழ்நாள், உந்தையை உயிர் பண்டு உண்டான்.

'அன்னவன் தனக்கு, மாதை விடில், உயிர் அருளுவாயேல்,
"என்னுடை நாமம் நிற்கும் அளவு எலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே" என்று, வந்து அடைந்தவற்கு வாயால்
சொன்ன சொல் என் ஆம்? முன்னம் சூளுறவு என் ஆம்?—தோன்றல்!

'அறம் தரு தவத்தை ஆயும் அறிவினால், அவற்றை முற்றும்
மறந்தனைஎனினும், மற்று இவ் இலங்கையின் வளமை நோக்கி,
"இறந்து இது போதல் தீது" என்று இரங்கினை எனினும், எண்ணின்,
சிறந்தது போரே' என்றான்; சேவகன் முறுவல் செய்தான். 7

இராமன், 'தூது விடுப்பது நீதி நூல் முறை' எனல்

'அயர்த்திலென்; முடிவும் அஃதே; ஆயினும், அறிஞர் ஆய்ந்த
நயத் துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ?
புயத் துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத் துறை; அறனும் அஃதே' என்று இவை சமையச் சொன்னான்.

அங்கதனைத் தூது செல்லுமாறு இராமன் பணித்தல்

மாருதி இன்னம் செல்லின், மற்று இவன் அன்றி வந்து
சாருநர் வலியோர் இல்லை என்பது சாரும் அன்றே;
ஆர், இனி ஏகத் தக்கார்? அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்பரேனும், தீது இன்றி மீள வல்லான்.' 9

'நன்று' என, அவனைக் கூவி, 'நம்பி! நீ நண்ணலார்பால்
சென்று, இரண்டு உரையின் ஒன்றைச் செப்பிலை: திரிதி' என்றான்;
அன்று அவன் அருளைப் பெற்ற ஆண்தகை அலங்கல் பொன் தோள்
குன்றினும் உயர்ந்ததுஎன்றால், மன நிலை கூறலாமோ? 10

'என் அவற்கு உரைப்பது?' என்ன, '"ஏந்திழையாளை விட்டுத்
தன் உயிர் பெறுதல் நன்றோ? அன்றுஎனின், தலைகள் பத்தும்
சின்னபின்னங்கள் செய்ய, செருக்களம் சேர்தல் நன்றோ?
சொன்னவை இரண்டின் ஒன்றே துணிக!" எனச் சொல்லிடு' என்றான்.

5. உந்தை - உன் தந்தை, சடாயு; 10. திரிதி - மீண்டு வருவாய்.

'அறத் துறை அன்று, வீரர்க்கு அழகும் அன்று, ஆண்மை அன்று,
மறத் துறை அன்று, சேமம் மறைந்து உறைந்து ஒதுங்கி வாழ்தல்;
நிறத்து உற வாளி கோத்து, நேர் வந்து நிற்கும்ஆகின்,
புறத்து உற எதிரே வந்து போர் தரப் புகல்தி' என்றான். 12

அங்கதன் அரக்கனது இருக்கை புகுதல்

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதேபோல்,
வீரன் வெஞ் சிலையில் கோத்த அம்பு என, விசையின் போனான்,
' ''மாருதி அல்லன்ஆகின், நீ'' எனும் மாற்றம் பெற்றேன்;
யார் இனி என்னோடு ஒப்பார்?' என்பதோர் இன்பம் உற்றான்.

அயில் கடந்து எரிய நோக்கும் அரக்கரைக் கடக்க, ஆழித்
துயில் கடந்து அயோத்தி வந்தான் சொல் கடவாத தூதன்,
வெயில் கடந்திலாத காவல், மேருவின் மேலும் நீண்ட,
எயில் கடந்து, இலங்கை எய்தி, அரக்கனது இருக்கை புக்கான்.

இராவணன் ஆற்றலை அங்கதன் வியத்தல்

அழுகின்ற கண்ணர் ஆகி, 'அனுமன்கொல்?' என்ன அஞ்சித்
தொழுகின்ற சுற்றம் சுற்ற, சொல்லிய துறைகள்தோறும்
மொழிகின்ற வீரர் வார்த்தை முகம்தொறும் செவியின் மூழ்க,
எழுகின்ற சேனை நோக்கி, இயைந்து இருந்தானைக் கண்டான்.

'கல் உண்டு; மரம் உண்டு; எழைக் கடல் ஒன்றும் கடந்தேம் என்னும்
சொல் உண்டே; இவனை வெல்லத் தோற்றும் ஓர் கூற்றம் உண்டே?
எல்லுண்ட படை கைக் கொண்டால் எதிர் உண்டே? இராமன் கையில்
வில் உண்டேல், உண்டு' என்று எண்ணி, ஆற்றலை வியந்து நின்றான்.

'இன்று இவன் தன்மை எய்த நோக்கினேற்கு எதிர்ந்த போரில்
வென்ற என் தாதை மார்பின் வில்லின்மேல் கணை ஒன்று ஏவிக்
கொன்றவன்தானே வந்தான் என்று உடன் குறிப்பின் அல்லால்,
ஒன்று இவன்தன்னைச் செய்ய வல்லரோ, உயிர்க்கு நல்லார்?17

'அணி பறித்து அழகு செய்யும் அணங்கின்மேல் வைத்த ஆசைப்
பிணி பறித்து, இவனை யாவர் முடிப்பவர், படிக்கண்? பேழ் வாய்ப்
பணி பறித்து எழுந்த மானக் கலுழனின், இவனைப் பற்றி,
மணி பறித்து எழுந்த எந்தை யாரினும் வலியன்' என்றான். 18

12. சேமம் - பாதுகாவலான இடம்; 14. கடத்தல் - வெல்லுதல், நீங்குதல், தாண்டுதல்; 18. பணி - பாம்பு.

நெடுந்தகை விடுத்த தூதன் இனையன நிரம்ப எண்ணி,
கடுங் கனல் விடமும் கூற்றும் கலந்து கால் கரமும் காட்டி,
விடும் சுடர் மகுடம் மின்ன, விரி கடல் இருந்தது அன்ன
கொடுந் தொழில் மடங்கல் அன்னான் எதிர் சென்று, குறுகி நின்றான்.

இராவணன்-அங்கதன் உரையாடல்

நின்றவன் தன்னை, அன்னான் நெருப்பு எழ நிமிரப் பார்த்து, 'இங்கு,
இன்று, இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் என்னை?
கொன்று இவர் தின்னாமுன்னம் கூறுதி, தெரிய' என்றான்;
வன் திறல் வாலி சேயும், வாள் எயிறு இலங்க நக்கான். 20

'பூத நாயகன், நீர் சூழ்ந்த புவிக்கு நாயகன், அப் பூமேல்
சீதை நாயகன், வேறு உள்ள தெய்வ நாயகன், நீ செப்பும்
வேத நாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன், தான் விட்ட
தூதன் யான்; பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்' என்றான்.

'அரன்கொலாம்? அரிகொலாம்? மற்று அயன்கொலாம்? என்பார் [அன்றி,
குரங்கு எலாம் கூட்டி, வேலைக் குட்டத்தைச் சேது கட்டி,
"இரங்குவான்ஆகில், இன்னம் அறிதி" என்று உன்னை ஏவும்
நரன்கொலாம், உலக நாதன்' என்று கொண்டு, அரக்கன் நக்கான். 22

'கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்த மால், மற்று இந் நகர் தன்னைச் சாரார்;
அங்கு அவர் தன்மை நிற்க, மனிசனுக்காக, அஞ்சாது,
இங்கு வந்து இதனைச் சொன்ன தூதன் நீ யாவன்?' என்றான்.

'இந்திரன் செம்மல், பண்டு, ஓர் இராவணன் என்பான் தன்னை
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றி,
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன், தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான், மைந்தன்' என்றான்.

'உந்தை என் துணைவன் அன்றே? ஓங்கு அறச் சான்றும் உண்டால்;
நிந்தனை இதன்மேல் உண்டோ, நீ அவன் தூதன் ஆதல்?
தந்தனென் நினக்கு யானே வானரத் தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய், என்னுடை மைந்த!' என்றான். 25

21. பூத நாயகன் - ஐம்பெரும் பூதங்களுக்குத் தலைவன்; 24. சிந்துரம் - யானைகள்; 25. அறச் சான்று - அறத்தெய்வம் ஆகிய சாட்சி; தாழா - தாழாது, காலந்தாழ்க்காமல்.

'"தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்து, இரு கை நாற்றி,
பேதையன் என்ன வாழந்தாய்" என்பது ஓர் பிழையும் தீர்ந்தாய்;
சீதையைப் பெற்றேன்; உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்;
ஏது எனக்கு அரியது?' என்றான்—இறுதியின் எல்லை கண்டான்.

'அந் நரர் இன்று, நாளை, அழிவதற்கு ஐயம் இல்லை;
உன் அரசு உனக்குத் தந்தேன்; ஆளுதி, ஊழி காலம்;
பொன் அரி சுமந்த பீடத்து, இமையவர் போற்றி செய்ய,
மன்னவன் ஆக, யானே சூட்டுவென், மகுடம்' என்றான். 27

அங்கதன் அதனைக் கேளா, அங்கையோடு அங்கை தாக்கி,
துங்க வன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க, நக்கான்;
' "இங்கு நின்றார்கட்கு எல்லாம் இறுதியே" என்பது உன்னி,
உங்கள்பால்நின்றும் எம்பால் போந்தனன், உம்பி' என்றான். 28

'வாய் தரத்தக்க சொல்லி, என்னை உன் வசஞ்செய்வாயேல்,
ஆய்தரத் தக்கது அன்றோ, தூது வந்து அரசது ஆள்கை?
நீ தரக் கொள்வென் யானோ? இதற்கு இனி நிகர் வேறு எண்ணின்,
நாய் தரக் கொள்ளும் சீயம், நல் அரசு!' என்று நக்கான். 29

'அடுவெனே' என்னப் பொங்கி ஓங்கிய அரக்கன், 'அந்தோ!
தொடுவெனோ, குரங்கைச் சீறிச் சுடர்ப் படை?' என்று, தோனறு
நடுவனே செய்யத்தக்க நாள் உலந்தார்க்குத் தூத!
படுவதே துணிந்தாய்ஆகில், வந்தது பகர்தி' என்றான். 30

'கூவி இன்று என்னை, நீ போய், "தன் குலம் முழுதும் கொல்லும்
பாவியை, அமருக்கு அஞ்சி அரண் புக்குப் பதுங்கினானை,
தேவியை விடுக! அன்றேல், செருக் களத்து எதிர்ந்து, தன்கண்
ஆவியை விடுக!" என்றான், அருள் இனம் விடுகிலாதான். 31

'"பருந்து உணப் பாட்டி யாக்கை படுத்த நாள், படைஞரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்த நாள், வனத்துள் வைகி
இருந்துழி வந்த நங்கை இருஞ்செவி முலையும் மூக்கும்
அரிந்துழி, வந்திலாதான் இனிச் செய்யும் ஆண்மை உண்டோ?

'"கிளையொடும் படைஞரோடும், கேடு இலா உயிர்கட்கு எல்லாம்
களை என, தம்பிமாரை வேரொடும் களையக் கண்டும்,
இளையவன் பிரிய மாயம் இயற்றி, ஆயிழையை வெளவும்
வளை எயிற்று அரக்கன், வெம் போர்க்கு, இனி எதிர் வருவது உண்டோ?

30. நடுவன் - கூற்றுவன்; 32. பாட்டி - தாடகை; மாமன் - சுபாகு, இவன் தாடகையின் மகன்; 33. தம்பிமார் - கரன், தூடணன் முதலியோர்.

' ''ஏந்திழைதன்னைக் கண்ணுற்று, எதிர்ந்தவர்தம்மை எற்றி,
சாந்து எனப் புதல்வன்தன்னைத் தரையிடைத் தேய்த்து, தன் ஊர்
காந்து எரி மடுத்து, தானும் காணவே, கடலைத் தாவிப்
போந்த பின், வந்திலாதான் இனிப் பொரும் போரும் உண்டோ? 34

' ''உடைக் குலத்து ஒற்றர்தம்பால் உயிர் கொடுத்து உள்ளக் கள்ளம்
துடைத்துழி, வருணன் வந்து தொழுதுழி, தொழாத கொற்றக்
குடைத் தொழில் உம்பி கொள்ளக் கொடுத்துழி, வேலை கோலி
அடைத்துழி, வந்திலாதான் இனி வர ஐயம் உண்டோ? 35

' ''மறிப்புண்ட தேவர் காண, மணி வரைத் தோளின் வைகும்
நெறிப் புண்டரீகம் அன்ன முகத்தியர்முன்னே, நென்னல்,
பொறிப் புண்டரீகம் போலும் ஒருவனால், புனைந்த மௌலி
பறிப்புண்டும், வந்திலாதான் இனிப் பொரும் பான்மை உண்டோ?''36

' ''என்று இவை இயம்பி வா'' என்று ஏவினன் என்னை; எண்ணி
ஒன்று உனக்கு உறுவது உன்னித் துணிந்து உரை; உறுதி பார்க்கின்,
துன்று இருங் குழலை விட்டு, தொழுது வாழ்; சுற்றத்தோடும்
பொன்றுதிஆயின், என் பின், வாயிலில் புறப்படு' என்றான். 37

'நீரிலே பட்ட, சூழ்ந்த நெருப்பிலே பட்ட, நீண்ட
பாரிலே பட்ட, வானப் பரப்பிலே பட்ட, எல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருத நீ, ''ஒளித்துப் புக்கு, உன்
ஊரிலே பட்டாய்'' என்றால், பழி' என, உளையச் சொன்னான்.

இராவணன், அங்கதனை எற்றப் பணித்தல்

சொற்ற வார்த்தையைக் கேட்டலும், தொல் உயிர்
முற்றும் உண்பது போலும் முனிவினான்,
'பற்றுமின், கடிதின்; நெடும் பார்மிசை
எற்றுமின்' என, நால்வரை ஏவினான். 39

அங்கதன் நால்வரையும் அழித்து, எச்சரிக்கை விடுத்தல்

ஏவினார் பிடித்தாரை எடுத்து எழத்
தாவினான், அவர்தம் தலை போய் அறக்
கூவினான், அவன், கோபுர வாயிலில்
தூவினான், துகைத்தான், இவை சொல்லினான்: 40

34. புதல்வன் - அட்சகுமாரன்; 36. மறிப்புண்ட - (தன்னால் சிறையிலே) மடக்கப்பட்ட; நெறிப்புண்ணுதல் - கட்டுவிட்டு அலரப் பெறுதல்; புண்டரீகம் - முன்னது தாமரை, பின்னது புலி; 38. பட்ட - தோன்றியவை; படுதல் - மூன்றும் அடியில் அழிதல்; நான்காம் அடியில் பொருந்தியுறைதல்; 39. எற்றுதல் - மோதித் தாக்குதல்.

'ஏமம் சார, எளியவர் யாவரும்,
தூமம் கால்வன, வீரன் சுடு சரம்,
வேம் மின் போல்வன, வீழ்வதன் முன்னமே,
போமின் போமின், புறத்து' என்று போயினன். 41

அங்கதன் வந்து, இராமன் அடி பணிந்து, இராவணன் உள்ளக் கருத்தை உரைத்தல்

அந்தரத்திடை ஆர்த்து எழுந்தான், அவர்
சிந்து ரத்தம் துதைந்து எழும் செச்சையான்,
இந்து விண்நின்று இழிந்துளதாம் என,
வந்து, வீரன் அடியில் வணங்கினன். 42

உற்ற போது, 'அவன் உள்ளக் கருத்து எலாம்,'
கொற்ற வீரன், 'உணர்த்து' என்று கூறலும்,
'முற்ற ஓதி என்? மூர்க்கன், முடித் தலை
அற்றபோது அன்றி, ஆசை அறான்' என்றான். 43

14 முதற் போர் புரி படலம்

வானர சேனைக்கு இராமன் இட்ட கட்டளை

' ''பூசலே; பிறிது இல்லை'' என, புறத்து
ஆசைதோறும் முரசம் அறைந்து, என
பாசறைப் படையின்னிடம் பற்றிய
வாசல்தோறும் முறையின் வகுத்திரால். 1

'மற்றும் நின்ற மலையும் மரங்களும்
பற்றி,—வீரர்!—பரவையின் மும் முறை,
கற்ற கைகளினல், கடி மா நகர்
சுற்றும் நின்ற அகழியைத் தூர்த்திரால். 2

'இடுமின் பல் மரம்; எங்கும் இயக்கு அறத்
தடுமின்; ''போர்க்கு வருக!'' எனச் சாற்றுமின்;
கடுமின், இப்பொழுதே கதிர் மீச்செலாக்
கொடி மதில் குடுமித்தலைக்கொள்க!' என்றான். 3

42. செச்சை - செஞ்சந்தனக் குழம்பு; 43. மூர்க்கன் - பிடிவாத குணம் உடையவன்.

14 : 1. பிறிது - வேறு, ஈண்டுச் சமாதானம்; 3. இயக்கு - போக்குவரவு; கடுமின் - விரைந்தவர்களாய்.

வானரப்படை அகழியைத் தூர்த்தல்

தடங் கொள் குன்றும் மரங்களும் தாங்கியே,
மடங்கல் அன்ன அவ் வானர மாப் படை,
இடங்கர் மா இரிய, புனல் ஏறிட,
தொடங்கி, வேலை அகழியைத் தூர்த்ததால். 4

ஏய வெள்ளம் எழுபதும், எண் கடல்
ஆய வெள்ளத்து அகழியைத் தூர்த்தலும்,
தூய வெள்ளம் துணை செய்வது ஆம் என
வாயிலூடு புக்கு, ஊரை வளைந்ததே. 5

விளையும் வென்றி இராவணன் மெய்ப் புகழ்
முளையினோடும் களைந்து முடிப்பபோல்,
தளை அவிழ்ந்த கொழுந் தடந் தாமரை
வளையம், வன் கையில், வாங்கின—வானரம். 6

இகழும் தன்மையன் ஆய இராவணன்
புகழும் மேன்மையும் போயினவாம் என,
நிகழும் கள் நெடு நீலம் உகுத்தலால்,
அகழிதானும் அழுவது போன்றதே. 7

தண்டு இருந்த பைந் தாமரை தாள் அற,
பண் திரிந்து சிதைய, படர் சிறை
வண்டு இரிந்தன; வாய்தொறும் முட்டையைக்
கொண்டு இரிந்தன, அன்னக் குழாம் எலாம். 8

ஈளி தாரம் இயம்பிய வண்டுகள்
பாளை தாது உகு நீர் நெடும் பண்ணைய;
தாள தாமரை அன்னங்கள் தாவிட,
வாளை தாவின, வானரம் தாவவே. 9

தூறு மா மரமும், மலையும் தொடர்
நீறு, நீர்மிசைச் சென்று நெருக்கலான்,
ஏறு பேர் அகழ்நின்றும் எனைப் பல
ஆறு சென்றன, ஆர்கலிமீதுஅரோ. 10

5. எண் கடல் ஆய - எட்டாவது கடல் போன்றதாகிய; 6. இராவணன் வென்றியால் விளையும் புகழ் என இயையும்; தளை - முறுக்கு; தாமரை வளையம் - தாமரைத் தண்டின் அடிப்பகுதி; 9. ஈளி - இளி, எதுகை நோக்கி விகாரமாயிற்று, மந்த ஓசையுடையது; தாரம்- எடுத்தலோசை; 10. தூறு மா மரம் - புதர் போல அடர்ந்த பெரிய மரங்கள்.

இழுகு மாக் கல் இடும்தொறு இடும்தொறும்,
சுழிகள்தோறும் சுரித்து இடை தோன்று தேன்
ஒழுகு தாமரை ஒத்தன, ஓங்கு நீர்
முழுகி மீது எழு மாதர் முகத்தையே.* 11

தன்மைக்குத் தலையாய தசமுகன்
தொன்மைப் பேர் அகழ் வானரம் தூர்த்ததால்;
இன்மைக்கும், ஒன்று உடைமைக்கும், யாவர்க்கும்
வன்மைக்கும், ஓர் வரம்பும் உண்டாம்கொலோ?* 12

தூர்த்த வானரம், கள்ளி பறித்து இடை,
சேர்த்த பேர் அணை தன்னையும் சிந்தின;
வார்த்தது அன்ன மதிலின் வரம்புகொண்டு
ஆர்த்த, ஆர்கலி காரொடும் அஞ்சவே. 13

வட்ட மேரு இது என, வான் முகடு
எட்ட நீண்ட மதில்மிசை ஏறி, விண்
தொட்ட வானரம், தோன்றின—மீத் தொக
விட்ட வெண் கொடி வீங்கின என்னவே. 14

இறுக்க வேண்டுவது இல்லை; எண் தீர் மணி
வெறுக்கை ஓங்கிய மேரு விழுக் கலால்
நிறுக்க, நேர்வரும் வீரர் நெருக்கலால்,
பொறுக்கலாது, மதிள் தரை புக்கதால். 15

அரக்கர் சேனையின் எழுச்சி

அறைந்த மா முரசு; ஆனைப் பதாகையால்
மறைந்தவால், நெடு வானகம்; மாதிரம்
குறைந்த, தூளி குழுமி; விண்ணூடு புக்கு
உறைந்தது, ஆங்கு அவர் போர்க்கு எழும் ஓதையே. 16

கோடு அலம்பின; கோதை அலம்பின;
ஆடல் அம் பரித் தாரும் அலம்பின;
மாடு அலம்பின, மா மணித் தேர்; மணி
பாடு அலம்பின, பாய் மத யானையே. 17

11. இழுகு மாக் கல் - வீசிய பெரிய கற்கள்; சுரித்து - புதைந்து; 12. தன்மை - ஈண்டு வீரத்தன்மை, மேம்பாடும் ஆம்; 13. வரம்பு - உச்சி; 15. இறுத்தல் - இடித்தல்; எண் தீர் மணி - விலை மதிப்புச் சொல்ல முடியாத மணி; 17. கோடு - ஊது கொம்புகள்; அலம்புதல் - ஒலித்தல்; மாடு - பக்கம்; பாடு - பெருமை.

வானர சேனையும் அரக்கர் சேனையும் பொருதல்

அரக்கர் தொல் குலம் வேர்அற, அல்லவர்
வருக்கம் யாவையும் வாழ்வுற, வந்தது ஓர்
கருக் கொள் காலம் விதிகொடு காட்டிட,
தருக்கி உற்று, எதிர் தாக்கின—தானையே. 18

பல் கொடும், நெடும் பாதவம் பற்றியும்,
கல் கொடும், சென்றது—அக் கவியின் கடல்.
வில் கொடும், நெடு வேல்கொடும், வேறு உள
எல் கொடும் படையும் கொண்டது—இக் கடல். 19

அம்பு கற்களை அள்ளின; அம்பு எலாம்
கொம்புடைப் பணை கூறு உற நூறின;
வம்புடைத் தட மா மரம் மாண்டன,
செம் புகர்ச் சுடர் வேல்-கணம் செல்லவே. 20

மாக் கை வானர வீரர் மலைந்த கல்
தாக்கி, வஞ்சர் தலைகள் தகர்த்தலால்,
நாக்கினூடும், செவியினும், நாகம் வாழ்
மூக்கினூடும், சொரிந்தன, மூளையே. 21

அற்கள் ஓடும் நிறத்த அரக்கர்தம்
விற்கள் ஓடு சரம் பட, வெம் புணீர்
பற்களோடும் சொரிதர, பற்றிய
கற்களோடும் உருண்ட, கவிகளே. 22

நின்று மேரு நெடு மதில் நெற்றியின்
வென்றி வானர வீரர் விசைத்த கல்
சென்று, தீயவர் ஆர் உயிர் சிந்தின,
குன்றின் வீழும் உருமின் குழுவினே. 23

எதிர்த்த வானரம் மாக் கையொடு இற்றன;
மதில் புறங் கண்டு, மண்ணில் மறைந்தன;—
கதிர்க் கொடுங் கண் அரக்கர் கரங்களால்
விதிர்த்து எறிந்த விளங்கு இலை வேலினே. 24

18. கருக் கொள் காலம் - நன்னிமித்தத்தை உள்ளீடாகக் கொண்ட காலம்; 19. பாதவம் - மரங்கள்; 20. டணை - பருமை, ஈண்டு மரம்; வம்பு - நறுமணம்; 22. அற்கள் - இருள். இருள் தங்கும் இடம் பலவாதலின் அற்கள் எனப்பட்டது; அல் - இருள்; 24. மதில் புறங் காணுதல் - மதிலின் புறத்தே வீழ்தல்.

கடித்த, குத்தின, கையின் கழுத்து அறப்
பிடித்த, வள் உகிரால் பிளவு ஆக்கின,
இடித்த, எற்றின, எண் இல் அரக்கரை
முடித்த—வானரம், வெஞ் சினம் முற்றின. 25

எறிந்தும், எய்தும், எழு முளைத் தண்டு கொண்டு
அறைந்தும், வெவ் அயில் ஆகத்து அழுத்தியும்,
நிறைந்த வெங் கண் அரக்கர் நெருக்கலால்,
குறைந்த—வானர வீரர் குழுக்களே. 26

போர்க்களத்தின் அவலக் காட்சி

செப்பின் செம் புனல் தோய்ந்த செம் பொன் மதில்,
துப்பின் செய்தது, போன்றது, சூழ் வரை;
குப்புற்று ஈர் பிணக் குன்று சுபந்துகொண்டு
உப்பின் சென்றது, உதிரத்து ஒழுக்கமே. 27

வந்து இரைத்த பறவை மயங்கின,
அந்தரத்தில் நெருங்கலின், அங்கு ஒரு
பந்தர் பெற்றது போன்றது—பற்றுதல்
இந்திரற்கும் அரிய இலங்கையே. 28

தங்கு வெங் கனல் ஒத்துத் தயங்கிய
பொங்கு வெங் குருதிப் புனற் செக்கர்முன்,
கங்குல் அன்ன கவந்தமும் கையெடுத்து,
அங்கும் இங்கும் நின்று, ஆடினவாம்அரோ. 29

கொன் நிறக் குருதிக் குடை புட்களின்
தொல் நிறச் சிறையில் துளி தூவலால்,
பல் நிறத்த பதாகைப் பரப்பு எலாம்
செந் நிறத்தனவாய், நிறம் தீர்ந்தவே. 30

வானரங்கள் மதிலினின்று இறங்குதலும், அரக்கர் நிரம்புதலும்

பொழிந்த சோரிப் புதுப் புனல் பொங்கி மீ
வழிந்த மா மதில் கைவிட்டு, வானரம்,
ஒழிந்த, மேருவின் உம்பர்விட்டு இம்பரின்
இழிந்த மாக் கடல் என்ன, இழிந்ததே. 31

30. கொன் நிறக் குருதி - அச்சம் விளைக்கும் செந்நிற இரத்தம்.

பதனமும், மதிலும், படை நாஞ்சிலும்,
கதன வாயிலும், கட்டும் அட்டாலையும்,
முதல யாவையும் புக்குற்று முற்றின—
விதன வெங் கண் இராக்கதர் வெள்ளமே. 32

பாய்ந்த சோரிப் பரவையில் பற்பல
நீந்தி ஏகும், நெருக்கிடைச் செல்வன;
சாய்ந்து சாய்ந்து, சரம் படத் தள்ளலுற்று
ஓய்ந்து வீழ்ந்த; சில சில ஓடின. 33

அரக்கர் சேனையின் ஆரவாரம்

தழிய வானர மாக் கடல் சாய்தலும்,
பொழியும் வெம் படைப் போர்க் கடல் ஆர்த்தவால்—
ஒழியும் காலத்து உலகு ஒரு மூன்றும் ஒத்து
அழியும் மாக் கடல் ஆர்ப்பு எடுத்தென்னவே. 34

முரசும், மா முருடும், முரல் சங்கமும்,
உரை செய் காளமும், ஆகுளி ஓசையும்,
விரைசும் பல் இயம், வில் அரவத்தொடும்,
திரை செய் வேலைக்கு ஓர் ஆகுலம் செய்தவே. 35

இராவணனது படை வெளிவருதல்

ஆய காலை, அனைத்து உலகும் தரும்
நாயகன் முகம் நாலும் நடந்தென,
மேய சேனை விரி கடல், விண் குலாம்
வாயிலூடு புறப்பட்டு வந்ததே. 36

நெடிய காவதம் எட்டும் நிரம்பிய,
படிய வாயில் பருப்பதம் பாய்ந்தென,
கொடியொடும் கொடி சுற்றக் கொடுத்த தண்டு
ஒடிய ஊன்றின, மும் மத ஓங்கலே. 37

சூழி யானை மதம் படு தொய்யலின்,
ஊழி நாள் நெடுங் கால் என ஓடுவ,
பாழி ஆள் வயிரப் படி பல் முறை
பூழி ஆக்கின, பொன் நெடுந் தேர்களே. 38

32. பதனம் - பதணம், மதிலினுள் மேடை; படை நாஞ்சில் - அம்பாகிய படை விடுதற்குரிய ஏவறையையுடைய முடக்கு; கதன வாயில் - பகைவர் கலங்குதற்குரிய கோபுர வாயில்; அட்டாலை - கோட்டை மதிலின் மேல் மண்டலம்; விதனம் - துன்பம், அச்சமும் ஆம்; 34. தழிய - தழுவிய, மதிலைத் தழுவி ஏறிய; 35. முருடு - மத்தளம்; ஆகுளி - சிறு பறை; ஆகுலம் - துன்பம்; 36. முகம் - வாய்; 37. படிய வாயில் - படியோடும் கூடிய கோபுர வாயில்; 38. தொய்யல் - சேறு; வயிரப் படி - வயிரம் போன்ற உறுதியுடைய பூமி.

பிடித்த வானரம் பேர் எழில் தோள்களால்
இடித்த மா மதில் ஆடை இலங்கையாள்,
மடுத்த மாக் கடல் வாவும் திரை எலாம்
குடித்துக் கால்வன போன்ற, குதிரையே. 39

கேள் இல் ஞாலம், கிளத்திய தொல் முறை
நாளும் நாளும் நடந்தன நள் இரா,
நீளம் எய்தி, ஒரு சிறை நின்றன,
மீளும் மாலையும் போன்றனர்—வீரரே. 40

பத்தி வன் தலைப் பாம்பின் பரம் கெட,
முத்தி நாட்டின் முகட்டினை முற்றுற,
பித்தி பிற்பட, வன் திசை பேர்வுற,
தொத்தி, மீண்டிலவால்—நெடுந் தூளியே. 41

சேனை நிலைகுலைய, சுக்கிரீவன் சினந்து பொருதல்

நெருக்கி வந்து நிருதர் நெருங்கலால்,
குரக்குஇனப் பெருந் தானை குலைந்து போய்,
அருக்கன் மா மகன், ஆர் அமர் ஆசையால்
செருக்கி நின்றவன், நின்றுழிச் சென்றவால். 42

சாய்ந்த தானைத் தளர்வும், சலத்து எதிர்
பாய்ந்த தானைப் பெருமையும், பார்த்து, உறக்
காய்ந்த நெஞ்சன், கனல் சொரி கண்ணினன்,
ஏய்ந்தது அங்கு ஓர் மராமரம் ஏந்தினன். 43

வாரணத்து எதிர், வாசியின் நேர், வயத்
தேர் முகத்தினில், சேவகர்மேல், செறுத்து,
ஓர் ஒருத்தர்க்கு ஒருவரின் உற்று, உயர்
தோரணத்து ஒருவன் எனத் தோன்றினன். 44

களிறும், மாவும், நிருதரும், கால் அற,
ஒளிறு மா மணித் தேரும் உருட்டி, வெங்
குளிறு சோரி ஒழுக; கொதித்து, இடை
வெளிறு இலா மரமே கொண்டு, வீசினன். 45

40. கேள் - கேழ், ஒப்பு, எதுகை நோக்கி ழகரம் திரிந்தது; 41. பித்தி - (அண்டத்தின்) சுவர்; 43. மராமரம் - வெண் கடம்ப மரம்; 44. தோரணத்து ஒருவன் - தோரணக் கம்பத்திலிருந்து போர் செய்த ஒப்பற்ற அனுமன்; 45. வெளிறு இலா - திண்மையின்மை இல்லாத, வயிரமுள்ள.

அன்ன காலை, அரிக் குல வீரரும்
மன்னன் முன் புக, வன்கண் அரக்கரும்
முன் உழந்த முழங்கு பெருஞ் செருத்
தன்னில் வந்து, தலைமயக்குற்றனர். 46

கல் துரந்த களம் பட, வஞ்சகர்
இற்று உலந்து முடிந்தவர் எண் இலர்;
வில் துரந்தன வெங் கணையால் உடல்
அற்று உலந்த குரங்கும் அனந்தமே. 47

கற்கள் தந்து, நிமிர்ந்து, கடுஞ் செரு
மற்கடங்கள் வலிந்து மலைந்திட,
தற்கு அடங்கி உலந்தவர்தம் உயிர்
தெற்கு அடங்க நிறைந்து செறிந்தவால். 48

பாடுகின்றன, பேய்க் கணம்; பல் விதத்து
ஆடுகின்ற, அறு குறை; ஆழ் கடற்கு
ஓடுகின்ற, உதிரம்; புகுந்து, உடல்
நாடுகின்றனர், கற்புடை நங்கைமார். 49

யானை பட்ட அழி புனல் யாறு எலாம்
பானல் பட்ட; பல கணை மாரியின்
சோனை பட்டது; சொல்ல அரும் வானரச்
சேனை பட்டது; பட்டது, செம் புண்ணீர். 50

அரக்கர் சேனையின் அழிவு கண்டு, வச்சிரமுட்டி வந்து பொருதல்

காய்ந்த வானர வீரர் கரத்திறைல்
தேய்ந்த ஆயுளர் ஆனவர் செம் புண்ணீர்
பாய்ந்த தானைப் படு களம் பாழ்படச்
சாய்ந்ததால், நிருதக் கடல்-தானையே. 51

தங்கள் மாப் படை சாய்தலும், தீ எழ
வெங் கண் வாள் அரக்கன், விரை தேரினை,
கங்க சாலம் தொடரக் கடற் செலூஉம்
வங்கம் ஆம் என வந்து, எதிர் தாக்கினான். 52

47. துரந்த கல் என மாற்றுக; 48. தற்கு - தருக்கு. எதுகை நோக்கித் திரிந்தது; 50. பானல் - கடல்; 51. தேய்ந்த ஆயுளர் - ஆயுள் தேய்ந்தவர் எனப் பிரித்துக் கூட்டுக; 52. கங்க சாலம் - பருந்துக்கூட்டம்.

வந்து தாக்கி, வடிக் கணை மா மழை
சிந்தி, வானரச் சேனை சிதைத்தலும்,
இந்திராதியரும் திகைத்து ஏங்கினார்;
நொந்து, சூரியன் கான்முளை நோக்கினான். 53

வச்சிரமுட்டியைச் சுக்கிரீவன் அழித்தல்

நோக்கி, வஞ்சன் நொறில் வய மாப் பரி
வீக்கு தேரினின் மீது எழப் பாய்ந்து, தோள்
தூக்கு தூணியும் வில்லும் தொலைத்து, அவன்
யாக்கையும் சிதைத்திட்டு, எழுந்து ஏகினான். 54

மலை குலைந்தென, வச்சிரமுட்டி தன்
நிலை குலைந்து விழுதலின், நின்றுளார்
குலைகுலைந்து கொடி நகர் நோக்கினார்;
அலை கிளர்ந்தென, வானரம் ஆர்த்தவே. 55

கீழை வாசலில் நிகழ்ந்த போர்

வீழி வெங் கண் இராக்கதர் வெம் படை,
ஊழி ஆழி கிளர்ந்தென ஓங்கின,
கீழை வாயிலில் கிட்டலும், முட்டினர்,
சூழும் வானர வீரர் துவன்றியே. 56

சூலம், வாள், அயில், தோமரம், சக்கரம்,
வாலம், வாளி, மழையின் வழங்கியே,
ஆலம் அன்ன அரக்கர் அடர்த்தலும்,
காலும் வாலும் துமிந்த, கவிக் குலம். 57

வென்றி வானர வீரர் விசைத்து எறி
குன்றும் மா மரமும், கொடுங் காலனின்
சென்று வீழ, நிருதர்கள் சிந்தினார்;
பொன்றி வீழ்ந்த, புரவியும் பூட்கையும். 58

தண்டு, வாள், அயில், சக்கரம், சாயகம்,
கொண்டு, சீறி, நிருதர் கொதித்து எழ,
புண் திறந்து குருதி பொழிந்து உக,
மண்டி ஓடினர், வானர வீரரே. 59

54. நொறில் - விரைவு; 55. குலைகுலைந்து - நடுநடுங்கி; 56. வீழி வெங் கண் - வீழிப்பழம் போன்ற சிவந்த வெவ்விய கண்; 57. வாலம் - பிண்டிபாலம், இது தலையில் பீலி கட்டப்பட்டு எறிவதொரு படை; 59. சாயகம் - அம்பு.

நீலன் நிகழ்த்திய போர்

எரியின் மைந்தன், இரு நிலம் கீழுற,
விரிய நின்ற மராமரம் வேரொடும்
திரிய வாங்கி, நிருதர் வெஞ் சேனை போய்
நெரிய, ஊழி நெருப்பு என வீசினன். 60

தேரும், பாகரும், வாசியும், செம் முகக்
காரும், யாளியும், சீயமும், காண் தகு
பாரின் வீழப் புடைப்ப, பசும் புணின்
நீரும் வாரிஅதனை நிறைத்ததே. 61

அரக்கன் கும்பானுவும், கரடி இடும்பனும், விளைத்த போர்

அரக்கர் சேனை அடு களம் பாழ்பட
வெருக்கொண்டு ஓடிட, வெம் படைக் காவலர்
நெருக்க, நேர்ந்து, கும்பானு நெடுஞ் சரம்
துரக்க, வானரச் சேனை துணிந்தவே. 62

கண்டு நின்ற கரடியின் காவலன்,
எண் திசாமுகம் எண்ணும் இடும்பன், ஓர்
சண்டமாருதம் என்ன, தட வரை
கொண்டு சீறி, அவன் எதிர் குப்புற, 63

தொடுத்த வாளிகள் வீழும் முன், சூழ்ந்து எதிர்
எடுத்த குன்றை இடும்பன் எறிதலும்,
ஒடித்த வில்லும் இரதமும், ஒல்லெனப்
படுத்த, வாசியும் பதாகையும் பாழ்பட.* 64

தேர் அழிந்து, சிலையும் அழிந்து உக,
கார் இழிந்த உரும் எனக் காய்ந்து, எதிர்
பார் கிழிந்து உகப் பாய்ந்தனன்—வானவர்
போர் கிழிந்து புறம் தர, போர் செய்தான். 65

தத்தி, மார்பின் வயிரத் தடக் கையால்
குத்தி நின்ற கும்பானுவை, தான் எதிர்
மொத்தி நின்று, முடித் தலை கீழ் உற,
பத்தி வன் தடந் தோள் உறப் பற்றுவான். 66

60. எரியின் மைந்தன் - நெருப்பின் மகனான நீலன்; 66. பத்தி - ஒழுங்கு.

கடித்தலத்து இரு கால் உற, கைகளால்
பிடித்துத் தோளை, பிறங்கலின் கோடு நேர்
முடித்தலத்தினைக் கவ்வுற, மூளைகள்
வெடித்து வீழ்தர, வீழ்த்தினனும்அரோ. 67

பிரகத்தனும் நீலனும் பொருதல்

தன் படைத்தலைவன் படத் தன் எதிர்,
துன்பு அடைத்த மனத்தன், சுமாலி சேய்,
முன் படைத்த முகில் அன்ன காட்சியன்,
வன்பு அடைத்த வரி சிலை வாங்கினான். 68

வாங்கி வார் சிலை, வானர மாப் படை
ஏங்க நாண் எறிந்திட்டு, இடையீடு இன்றி,
தூங்கு மாரி என, சுடர் வாளிகள்,
வீங்கு தோளினன், விட்டனனும்அரோ. 69

நூறும் ஆயிரமும் கணை நொய்தினின்
வேறு வேறு படுதலின், வெம்பியே,
ஈறு இல் வானர மாப் படை எங்கணும்
பாற, நீலன் வெகுண்டு, எதிர் பார்ப்புறு, 70

குன்றம் நின்றது எடுத்து, எதிர் கூற்று எனச்
சென்று எறிந்து, அவன் சேனை சிதைத்தலும்,
வென்றி வில்லின் விடு கணை மாரியால்,
ஒன்று நூறு உதிர்வுற்றது, அக் குன்றமே. 71

மீட்டும், அங்கு ஓர் மராமரம் வேரொடும்
ஈட்டி, வானத்து இடி என எற்றலும்,
கோட்டும் வில்லும், கொடியும், வயப் பரி
பூட்டும் தேரும், பொடித் துகள் ஆயவே. 72

தேர் இழந்து, சிலையும் இழந்திட,
கார் இழிந்த உரும் எனக் காந்துவான்,
பார் இழிந்து, பரு வலித் தண்டொடும்,
ஊர் இழந்த கதிர் என, ஓடினான். 73

67. கடித்தலம் - உடம்பின் நடுப் பகுதியான மறைவிடம்; கவ்வுற - கவ்வுற்று, வாயால் கடித்து; 68. சுமாலி சேய் - சுமாலியின் மகன் பிரகத்தன்; 69. தூங்கு மாரி - பொழிகின்ற மழை; 70. பாற - சிதறிப் போக; 72. கோட்டும் வில் - வளைக்கும் தன்மையுள்ள வில்; 73. ஊர் - ஊர்தி; ஊர் கோள் என்பாரும் உண்டு.

வாய் மடித்து அழல் கண்தொறும் வந்து உக,
போய் அடித்தலும், நீலன் புகைந்து, எதிர்
தாய் அடுத்து, அவன்தன் கையின் தண்டொடும்
மீ எடுத்து விசும்பு உற வீசினன். 74

அம்பரத்து எறிந்து, ஆர்ப்ப, அரக்கனும்,
இம்பர் உற்று, எரியின் திரு மைந்தன்மேல்,
செம்புனல் பொழியக் கதை சேர்த்தினன்,
உம்பர் தத்தமது உள்ளம் நடுங்கவே. 75

அடித்தலோடும், அதற்கு இளையாதவன்,
எடுத்த தண்டைப் பறித்து எறியா, 'இகல்
முடித்தும்' என்று, ஒரு கைக்கொடு மோதினன்,
குடித்து உமிழ்ந்தெனக் கக்கக் குருதியே. 76

குருதி வாய்நின்று ஒழுகவும் கூசலன்,
நிருதன், நீலன் நெடு வரை மார்பினில்
கருதலாத முன் குத்தலும், கைத்து, அவர்
பொருத பூசல் புகல ஒண்ணுததே. 77

மற்று, நீலன், அரக்கனை மாடு உறச்
சுற்றி வால்கொடு, தோளினும், மார்பினும்,
நெற்றி மேலும், நெடுங் கரத்து எற்றலும்,
இற்று, மால் வரை என்ன, விழுந்தனன். 78

'இறந்து வீழ்ந்தனனே பிரகத்தன்' என்று
அறிந்து, வானவர் ஆவலம் கொட்டினர்;
வெறிந்த செம் மயிர் வெள் எயிற்று ஆடவர்
முறிந்து, தம்தம் முது நகர் நோக்கினர்.* 79

தெற்கு வாயிலில் அங்கதன் நிகழ்த்திய போர்

தெற்கு வாயிலில் சென்ற நிசாசரர்
மல் குலாவு வயப் புயத்து அங்கதன்
நிற்கவே, எதிர் நின்றிலர் ஓடினர்,
பொன் குலாவு சுபாரிசன் பொன்றவே. 80

74. தாய் - தழுவி; 78. கரத்து - கையினல்; 79. ஆடவர் - வெற்றியையுடைய வீரர், இகழ்ச்சிக் குறிப்பு; 80. பொன் - அழகு.

மேலை வாயிலில் அனுமன் நிகழ்த்திய போர்

நூற்று-இரண்டு எனும் வெள்ளமும், நோன் கழல்
ஆற்றல் சால் துன்முகனும், அங்கு ஆர்த்து எழ,
மேல் திண் வாயிலில் மேவினர் வீடினர்,—
காற்றின் மா மகன் கை எனும் காலனால். 81

நால்திசைப் போர் பற்றித் தூதுவர் இராவணனுக்குச் சொல்லுதல்

அன்ன காலை, அயிந்திர வாய் முதல்
துன்னு போர் கண்ட தூதுவர் ஓடினர்,
'மன்ன! கேள்' என, வந்து வணங்கினர்;
சென்னி தாழ்க்க, செவியிடைச் செப்பினர்: 82

'வடக்கு வாய்தலில் வச்சிரமுட்டியும்,
குடக்கு வாயிலில் துன்முகக் குன்றமும்,
அடக்க அரும் வலத்து ஐம்பது வெள்ளமும்,
படச் சிதைந்தது, நம் படை' என்றனர். 83

'வென்றி வேற் கை நிருதர் வெகுண்டு எழ,
தென் திசைப் பெரு வாயிலில் சேர்ந்துழி,
பொன்றினன், அச் சுபாரிசன்; போயினர்
இன்று போன இடம் அறியோம்' என்றார்.* 84

'கீழை வாயில், கிளர் நிருதப் படை,
ஊழி நாளினும் வெற்றி கொண்டு உற்ற நின்
ஆழி அன்ன அனீகத் தலைமகன்
பூழியான்; உயிர் புக்கது விண்' என்றார். 85

இராவணன் பெருஞ் சினம் கொள்ளல்

என்ற வார்த்தை, எரி புகு நெய் எனச்
சென்று, சிந்தை புகுதலும், சீற்றத் தீ
கன்று கண்ணின்வழிச் சுடர் கான்றிட,
நின்று நின்று, நெடிது உயிர்த்தான்அரோ. 86

மறித்தும், 'ஆர் அவன் ஆர் உயிர் வவ்வினன்?
இறுத்துக் கூறும்' என்றான்; 'இசை எங்கணும்
நிறுத்தும் நீலன், நெடும் பெருஞ் சேனையை
ஒறுத்து, மற்று அவனோடும் வந்து உற்றனன்; 87

85. பூழியான் - புழுதியின்கண் விழுந்தனன்; 87. அவன் - பிரகத்தன்.

‘உற்ற போதின் இருவரும், ஒன்று அல,
கற்ற போர்கள் எலாம் செய்த காலையில்,
நெற்றிமேல், மற்று அந் நீலன் நெடுங் கையால்
எற்ற, வீந்தனன்’ என்ன இயம்பினார். 88

‘அன்னவனொடும் போன அரக்கரில்
நல் நகர்க்கு வந்தோம், ஐய! நாங்களே’
என்ன என்ன, எயிற்று, இகல் வாய்களைத்
தின்னத் தின்ன, எரிந்தன திக்கு எலாம். 89

இராவணன் தானே போருக்குச் செல்லத் துணிந்து எழல்

மாடு நின்ற நிருதரை, வன்கணான்
ஓட நோக்கி, ‘உயர் படையான் மற்று அக்
கோடு கொண்டு பொருத குரங்கினால்
வீடினான்!’ என்று, மீட்டும் விளம்பினான்: 90

‘ ‘‘கட்டது, இந்திரன் வாழ்வை; கடைமுறை
பட்டது, இங்கு ஓர் குரங்கு படுக்க’’ என்று
இட்ட வெஞ் சொல் எரியினில், என் செவி
சுட்டது; என்னுடை நெஞ்சையும் சுட்டதால்; 91

‘கருப்பைபோல் குரங்கு எற்ற, கதிர் சுழல்
பொருப்பை ஒப்பவன்தான் இன்று பொன்றினான்;
அருப்பம் என்று பகையையும், ஆர் அழல்
நெருப்பையும், இகழ்ந்தால், அது நீதியோ?’ 92

நிற்க அன்னது, நீர் நிறை கண்ணினான்,
‘வற்கம் ஆயின மாப் படையோடும் சென்று,
ஒற்கம் வந்து உதவாமல் உறுக!’ என,
விற் கொள் வெம் படை வீரரை ஏவியே, 93

மண்டுகின்ற செருவின் வழக்கு எலாம்
கண்டு நின்று, கயிலை இடந்தவன்,
புண் திறந்தன கண்ணினன், பொங்கினான்,
திண் திறல் நெடுந் தேர் தெரிந்து ஏறினான்— 94

89. மீண்டவர் நாங்களே என்பதால் மற்றவர் இறந்தனர் என்பது பெற வைத்தமை பாரிசேட அளவை; 91. கட்டது - அழித்தது; 92. கருப்பை - எலி; அருப்பம் - அற்பம், சிறியது; 93. வற்கம் - பெருந் திரள்; ஒற்கம் - தளர்ச்சி.

ஆயிரம் பரி பூண்டது; அதிர் குரல்
மா இருங் கடல் போன்றது; வானவர்
தேயம் எங்கும் திரிந்தது; திண் திறல்
சாய, இந்திரனே பண்டு தந்தது. 95

ஏற்றி, எண்ணி இறைஞ்சி, இடக் கையால்
ஆற்றினன், தன் அடு சிலை; அன்னதின்
மாற்றம் என் நெடு நாண் ஒலி வைத்தலும்,
கூற்றினுரையும் ஆர் உயிர் கொண்டதே. 96

மற்றும், வான் படை, வானவர் மார்பிடை
இற்றிலாதன, எண்ணும் இலாதன,
பற்றினன்; கவசம் படர் மார்பிடைச்
சுற்றினன்; நெடுந் தும்பையும் சூடினன். 97

பேரும் கற்றைக் கவரிப் பெருங் கடல்
நீரும் நீர் நுரையும் என நின்றவன்,
ஊரும் வெண்மை உவா மதிக் கீழ் உயர்
காரும் ஒத்தனன், முத்தின் கவிகையான். 98

போர்த்த சங்கப் படகம் புடைத்திட,
சேர்த்த சங்கக் கடல் உக, தேவர்கள்
வேர்த்து அசங்கிட, அண்டம் வெடித்திட,
ஆர்த்த சங்கம், அறைந்த, முரசமே. 99

தேரும் மாவும் படைஞரும் தெற்றிட,
மூரி வல் நெடுந் தானையில் முற்றினன்;
நீர் ஓர் ஏழும் முடிவில் நெருக்கும் நாள்,
மேரு மால் வரை என்ன, விளங்கினன். 100

ஏழ் இசைக் கருவி வீற்றிருந்ததுஎன்னினும்,
சூழ் இருந் திசைகளைத் தொடரும் தொல் கொடி,
வாழிய உலகு எலாம் வளைத்து வாய் இடும்
ஊழியின் அந்தகன் நாவின், ஓங்கவே; 101

95. சாய. தோற்றதால்; 96. ஆற்றுதல் - தாங்குதல்; அன்னதின் மாற்றம் என - அந்த வில்லின் சொல் என்று சொல்லத்தக்க; 99. போர்த்த - தோல் போர்த்த; சங்கப் படகம் - திரளான படகம் என்னும் போர்ப்பறைகள்; சங்கம் - திரள்; 100. தெற்றிட - நெருங்கிட; 101. ஏழ் இசைக் கருவி - வீணை.

'வேணு உயர் நெடு வரை அரக்கர் வேலைக்கு ஓர்
தோணி பெற்றனர்' எனக் கடக்கும் தொல் செருக்
காணிய வந்தவர், கலக்கம் கைம்மிக,
சேண் உயர் விசும்பிடை அமரர், சிந்தவே; 102

கண் உறு கடும் புகை கதுவ, கார் நிறத்து
அண்ணல் வாள் அரக்கர்தம் அரத்தப் பங்கிகள்
வெண் நிறம் கோடலின், உருவின் வேற்றுமை,
நண்ணினர் நோக்கவும், அயிர்ப்பு நல்கவே; 103

கால் நெடுந் தேர் உயர் கதலியும், கரத்து
ஏனையர் ஏந்திய பதாகை ஈட்டமும்,
ஆனையின் கொடிகளும், அளவித் தோய்தலால்,
வான யாறொடு மழை ஒற்றி வற்றவே; 104

ஆயிரம் கோடி பேய், அங்கை ஆயுதம்
தூயன சுமந்து, பின் தொடர, சுற்று ஒளிர்
சேயிரு மணி நெடுஞ் சேமத் தேர் தெரிந்து,
ஏயின ஆயிரத்து இரட்டி எய்தவே; 105

ஊன்றிய பெரும் படை உலைய, உற்று உடன்
ஆன்ற போர் அரக்கர்கள் நெருங்கி ஆர்த்து எழ,
தோன்றினன்—உலகு எனத் தொடர்ந்து நின்றன
மூன்றையும் கடந்து, ஒரு வெற்றி முற்றினான். 106

இராவணன் வருகையினை ஒற்றர் இராமனுக்கு அறிவித்தல்

'ஓது று கருங் கடற்கு ஒத்த தானையான்,
தீது உறு சிறு தொழில் அரக்கன், சீற்றத்தால்,
போது உறு பெருங் களம் புகுந்துளான்' எனத்
தூதுவர் நாயகற்கு அறியச் சொல்லினார். 107

இராமன் மகிழ்ந்து. போர்க் கோலம் பூண்டு புறப்படுதல்

ஆங்கு, அவன் அமர்த் தொழிற்கு அணுகினான் என,
'வாங்கினென், சீதையை' என்னும் வன்மையால்,
தீங்குறு பிரிவினால் தேய்ந்த தேய்வு அற
வீங்கின, இராகவன் வீரத் தோள்களே. 108

103. பங்கி - மயிர்க்குடுமி; நண்ணினர் - உறவினர்; புகை கதுவலால் மயிர் வெண்ணிறமாகத் தோன்றியது; 104. கால் - சக்கரங்கள்; கதலி - கொடி; 105. சேயிரு மணி - சிவந்த பெரிய மணிகள்; 108. வாங்கினென் - பெற்றுவிட்டேன்.

தொடையுறு வற்கலை ஆடை சுற்றி, மேல்
புடை உறு வயிர வாள் பொலிய வீக்கினன்—
இடை உறு கருமத்தின் எல்லை கண்டவர்,
கடை உறு நோக்கினின், காணும் காட்சியான். 109

ஒத்து இரு சிறு குறட் பாதம் உய்த்த நாள்,
வித்தக அரு மறை உலகை மிக்கு, மேல்
பத்து உள விரல் புடை பரந்த பண்பு என,
சித்திரச் சேவடிக் கழலும் சேர்த்தினன். 110

பூ உயர் மீன் எலாம் பூத்த வான் நிகர்
மேவரும் கவசம் இட்டு இறுக்கி வீக்கினன்—
தேவியைத் திரு மறு மார்பின் தீர்ந்தனன்;
'நோ இலள்' என்பது நோக்கினன்கொலோ? 111

நல் புறக் கோதை, தன் நளினச் செங்கையின்
நிற்புறச் சுற்றிய காட்சி, நேமியான்—
கற்பகக் கொம்பினைக் கரிய மாசுணம்
பொற்புறத் தழுவிய தன்மை போன்றதால். 112

புதை இருட் பொழுதினும் மலரும் பொங்கு ஒளி
சிதைவு அரு நாள் வரச் சிவந்த தாமரை
இதழ்தொறும் வண்டு வீற்றிருந்ததாம் என,
ததைவுறு நிரை விரற் புட்டில் தாங்கினன். 113

பல் இயல் உலகு உறு பாடை பாடு அமைந்து,
எல்லை இல் நூற் கடல் ஏற நோக்கிய,
நல் இயல், நவை அறு, கவிஞர் நா வரும்
சொல் எனத் தொலைவு இலாத் தூணி தூக்கினன். 114

109. தொடையுறு வற்கலை - தொடுத்தல் அமைந்த மரவுரி; இடை உறு கருமம் - (பரம்பொருளை அடைதற்குத்) தடையாகப் பொருந்தியுள்ள இருவினை; கடை உறு நோக்கு - இறுதியாகப் பொருந்திய ஞானக் கண்; 110. குறட் பாதம் - வாமன மூர்த்தியின் திருவடி; பத்து உள விரல் - ஞானியரின் பக்தியோடு கூடிய விரல்கள்; பத்து - பக்தி, பத்தாக உள்ள விரல்கள் எனலும் ஆம்; 111. பூ - பொலிவு; நோக்கினன் - மனத்தால் நோக்குதல், நினைத்தல்; 112. கோதை - உடும்பின் தோலால் செய்து முன்கையில் அணியும் உறை; 113. வாரம் - மேன்மை; விரற் புட்டில் - விரற் செறி, விரலில் பூணும் கவசம்; 114. அம்பறாத் தூணிக்கு உவமை கூறுமுகத்தால் நல்ல கவிஞரின் சிறப்பியல்பு புலப்படுத்தியவாறு; ஏற நோக்கிய - நன்கு உணர்ந்த.

கிளர் மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின் என
அளவு அறு செஞ் சுடர்ப் பட்டம் ஆர்த்தனன்;
இள வரிக் கவட்டிலை ஆரொடு ஏர் பெறத்
துளவொடு தும்பையும் சுழியச் சூடினன். 115

ஓங்கிய உலகமும், உயிரும், உட்புறம்
தாங்கிய பொருள்களும், தானும், தான் என
நீங்கியது யாவது? நினைக்கிலோம்; அவன்
வாங்கிய வரி சிலை மற்றென்றேகொலாம்? 116

நாற் கடல் உலகமும், விசும்பும், நாள்மலர்
தூர்க்க, வெஞ் சேனையும் தானும் தோன்றினன்—
மால் கடல் வண்ணன், தான் வளரும் மால் இரும்
பாற்கடலோடும் வந்து, எதிரும் பான்மைபோல். 117

இராமன் பின்னணியில் நின்ற இலக்குவனைச் சேர்தல்

ஊழியின் உருத்திரன் உருவுகொண்டு, தான்,
ஏழ் உயர் உலகமும் எரிக்கின்றான் என,
வாழிய வரி சிலைத் தம்பி, மாப் படைக்
கூழையின் நெற்றி நின்றானை, கூடினன். 118

அரக்கரும் வானரரும் கைகலத்தல்

என்புழி, நிருதராம் ஏழு வேலையும்,
மின் பொழி எயிறுடைக் கவியின் வெள்ளமும்,
தென் புலக் கிழவனும் செய்கை கீழ்ப்பட,
புன் புலக் களத்திடைப் பொருத போலுமால். 119

துமிந்தன தலை; குடர் சொரிந்த; தேர்க் குலம்
அவிந்தன; புரவியும் ஆளும் அற்றன;
குவிந்தன, பிணக் குவை; சுமந்து கோள் நிலம்
நிமிர்ந்தது; பரந்தது, குருதி நீத்தமே. 120

கடுங் குரங்கு இரு கையால் எற்ற, கால் வயக்
கொடுங் குரம் துணிந்தன, புரவி; குத்தினால்
ஒடுங்கு உரம் துணிந்தனர், நிருதர்; ஓடின,
நெடுங் குரம்பு என நிறை குருதி நீத்தமே. 121

115. இள வரிக் கவட்டிலை - இளைய வரிகளையுடைய கிளையிற் பொருந்திய இலை; ஆர் - ஆத்தி; ஈண்டு அதன் மாலை; 118. கூழையின் நெற்றி - பின்னணியின் தலைப்பு; 121. நெடுங் குரம்பு - நெடிய நீர்த் தேக்கம்.

'தெற்கு இது; வடக்கு இது' என்னத் தேர்கிலார்,
பற் குவை பரந்தன; குரக்குப் பல் பிணம்
பொற் குவை நிகர்த்தன; நிருதர் போர்ச் சவம்
கற் குவை நிகர்த்தன; மழையும் காட்டின. 122

இராவணன் வில் நாண் ஒலி கேட்டு, வானரம் இரிதல்

அவ்வழி, இராவணன் அமரர் அஞ்ச, தன்
வெவ் விழி நெருப்பு உக, வில்லின் நாணினைச்
செவ் வழிக் கோதையின் தெறிக்க, சிந்தின,
எவ்வழி மருங்கினும் இரிந்த, வானரம். 123

உரும் இடித்துழி உலைந்து ஒளிக்கும் நாகம் ஒத்து
இரியலுற்றன, சில; இறந்தவால், சில;
வெருவலுற்றன, சில; விம்மலுற்றன;
பொரு களத்து உயிரொடும் புரண்டு போம் சில. 124

பொர, கரு நிற நெடு விசும்பு போழ்பட,
இரக்கம் இல் இராவணன் எறிந்த நாணினல்,
குரக்கினம் உற்றது என், கூறின்? தன் குலத்து
அரக்கரும் அனையது ஓர் அச்சம் எய்தினர். 125

வீடணன் ஒருவனும், இளைய வீரனும்,
கோடு அணை குரங்கினுக்கு அரசும், கொள்கையால்
நாடினர் நின்றனர்; நாலு திக்கினும்
ஓடினர், அல்லவர்; ஒளித்தது, உம்பரே. 126

'எடுக்கின், நானிலத்தை ஏந்தும் இராவணன் எறிந்த நாணல்
நடுக்கினன், உலகை' என்பார்; 'நல்கினன்' என்னற்பாற்றே?
மிடுக்கினல் மிக்க வானோர், மேக்கு உயர் வெள்ளம், மேல்நாள்,
கெடுக்கும் நாள், உருமின் ஆர்ப்புக் கேட்டனர் என்னக் கேட்டார். 127

இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் நிகழ்ந்த போர்

ஏந்திய சிகரம் ஒன்று, அங்கு இந்திரன் குலிசம் என்ன,
காந்திய உருமின் விட்டான், கவிக் குலத்து அரசன்; அக் கல்
நீந்த அரு நெருப்புச் சிந்தி நிமிர்தலும், நிருதர்க்கு எல்லாம்
வேந்தனும், பகழி ஒன்றால், வெறுந் துகள் ஆக்கி, வீழ்த்தான்.

அண்ணல் வாள் அரக்கன் விட்ட அம்பினல் அழிந்து, சிந்தி,
திண் நெடுஞ் சிகரம், நீறுய்த் திசை திசை சிந்தலோடும்,
கண் நெடுங் கடுந் தீக் கால, கவிக் குலத்து அரசன், கையால்,
மண்மகள் வயிறு கீற, மரம் ஒன்று வாங்கிக் கொண்டான். 129

கொண்ட மா மரத்தை அம்பின் கூட்டத்தால், காட்டத் தக்க
கண்டம் ஆயிரத்தின் மேலும் உள என, கண்டம் கண்டான்;
விண்ட வாள் அரக்கன்மீது, விசும்பு எரி பறக்க, விட்டான்,
பண்டை மால் வரையின் மிக்கது ஒரு கிரி, பரிதி மைந்தன். 130

அக் கிரிதனையும் ஆங்கு ஓர் அம்பினால் அறுத்து மாற்றி,
திக்கு இரிதரப் போர் வென்ற சிலையினை வளைய வாங்கி,
சுக்கிரீவன்தன் மார்பில் புங்கமும் தோன்றாவண்ணம்
உக்கிர வயிர வாளி ஒன்று புக்கு ஒளிக்க, எய்தான். 131

சுக்கிரீவன் தளர்ந்த நிலையில் அனுமன் வருதல்

சுடு கணை படுதலோடும் துளங்கினான்; துளங்காமுன்னம்,
குட திசை வாயில் நின்ற மாருதி, புகுந்த கொள்கை
உடன் உறைந்து அறிந்தான் என்ன, ஓர் இமை ஒடுங்காமுன்னர்,
வட திசை வாயில் வந்து, மன்னவன் முன்னர் ஆனான். 132

பரிதி சேய் தேருமுன்னம், 'பரு வலி அரக்க! பல் போர்
புரிதியோ என்னோடு?' என்னா, புகை எழ விழித்துப் பொங்கி,
'வருதியேல், வா, வா!' என்பான்மேல் மலை ஒன்று வாங்கி,
சுருதியே அனைய தோளால் வீசினான், காலின் தோன்றல். 133

மீ எழு மேகம் எல்லாம் வெந்து, வெங் கரியின் சிந்தித்
தீ எழ, விசும்பினூடு செல்கின்ற செயலை நோக்கி,
காய் கணை ஐந்தும் ஐந்தும் கடுப்புறத் தொடுத்துக் கண்டித்து,
ஆயிரம் கூறு செய்தான், அமரரை அலக்கண் செய்தான். 134

மீட்டு ஒரு சிகரம் வாங்கி, வீங்கு தோள் விசையின் வீசி,
ஓட்டினான்; ஓட்ட, வானத்து உருமினும் கடுக ஓடி,
கோட்டு வெஞ் சிலையின் வாளி முன் சென்று, கொற்றப் பொன் தோள்
பூட்டிய வலயத்தோடும், பூழியாய்ப் போயிற்று அன்றே. 135

மெய் எரிந்து அழன்று பொங்கி, வெங் கணான் விம்மி, மீட்டு ஓர்
மை வரை வாங்குவானை, வரி சிலை வளைய வாங்கி,
கையினும் தோளின்மேலும் மார்பினும் கரக்க, வாளி
ஐ-இரண்டு அழுந்த எய்தான்; அவன் அவை ஆற்றி நின்றான்.

130. காட்டத்தக்க கண்டம் - செய்யத்தக்க துண்டம்; வாள் அரக்கன் - கொடிய இராவணன்; 131. புங்கம் - அம்பின் அடிப்பகுதி; உக்கிரம் - கொடுமை; 132. புகுந்த கொள்கை - நேர்ந்த தன்மை; மன்னவன் - இராவணன்; 135. பூழி - பொடி; 136. கரக்க - புக்கு மறையுமாறு.

'யார் இது செய்யகிற்பார்?' என்று கொண்டு இமையோர் ஏத்த,
மாருதி, பின்னும், அங்கு ஓர் மராமரம் கையின் வாங்கி,
வேரொடும் சுழற்றி விட்டான்; விடுதலும், இலங்கை வேந்தன்
சாரதி தலையைத் தள்ளிச் சென்றது, நிருதர் சாய. 137

மாறி ஓர் பாகன் ஏற, மறி திரைப் பரவை பின்னும்
சீறியது அனையன் ஆன செறி கழல் அரக்கன், தெய்வ
நூறு கோல் நொய்தின் எய்தான்; அவை உடல் நுழைதலோடும்,
ஆறுபோல் சோரி சோர, அனுமனும் அலக்கணுற்றான். 138

இராவணன் வீரவுரை

'கல் கொண்டும், மரங்கள் கொண்டும், கைக் கொண்டும், களித்து, நும் வாய்ச்
சொல் கொண்டும், மயிரின் புன் தோல் தோள் கொண்டும் தள்ளி, வெள்ளிப்
பல் கொண்டும், மலையின்றாரின் பழி கொண்டு பயந்தது; யான் ஓர்
வில் கொண்டு நின்ற போது, விறல் கொண்டு மீள்திர் போலாம்.' 139

என்று உரைத்து, எயிற்றுப் பேழ் வாய் எரி உக நகை செய்து, யாணர்ப்
பொன் தொடர் வடிம்பின் வாளி கடை உகத்து உருமுப் போல,
ஒன்றின் ஒன்று அதிகம் ஆக, ஆயிர கோடி உய்த்தான்;
சென்றது குரக்குச் சேனை, கால் எறி கடலின் சிந்தி. 140

இலக்குவன், இராவணனுடன் பொர வந்து, நாண் ஒலி செய்தல்

கலக்கிய அரக்கன் வில்லின் கல்வியும், கவிகள் உற்ற
அலக்கணும், தலைவர் செய்த தன்மையும், அமையக் கண்டான்,
இலக்குவன், 'என் கை வாளிக்கு இலக்கு இவன்; இவனை இன்று
விலக்குவென்' என்ன வந்தான், வில்லுடை மேரு என்ன. 141

தேயத்தின் தலைவன் மைந்தன் சிலையை நாண் எறிந்தான்; தீய
மாயத்தின் இயற்கை வல்லார் நிலை என்னை? 'முடிவின் மாரி
ஆயத்தின் இடி இது' என்றே அஞ்சின, உலகம்; யானை
சீயத்தின் முழக்கம் கேட்டல் போன்றனர், செறுநர் எல்லாம்.

ஆற்றல் சால் அரக்கன்தானும், அயல் நின்ற வயவர் நெஞ்சம்
வீற்று வீற்று ஆகி உற்ற தன்மையும், வீரன் தம்பி
கூற்றின் வெம் புருவம் அன்ன சிலை நெடுங் குரலும் கேளா,
ஏற்றினன் மகுடம், 'என்னே! இவன் ஒரு மனிசன்' என்னா.

138. கோல் - அம்பு; 140. வடிம்பு - விளிம்பு; 141. தன்மை - சண்டுப் போர்த்தன்மை; விலக்குதல் - தடுத்தல்; 142. தேயத்தின் தலைவன் - நாட்டிற்கெல்லாம் தலைவனாகிய தயரத மன்னன்; ஆயம் - மேகம், கூட்டமும் ஆம்; 143. வயவர் - வீரர்; வீற்று வீற்று ஆகி - வேறு வேறாகி; ஏற்றினன் - உயர்த்திப் பார்த்தான்.

இலக்குவனுக்கும் இராவணனுக்கும் கடும் போர்

கட்டு அமை தேரின்மேலும், களி நெடுங் களிற்றின்மேலும்,
விட்டு எழு புரவிமேலும், வெள் எயிற்று அரக்கர்மேலும்,
முட்டிய மழையின் துள்ளி முறை இன்றி மொய்க்குமாபோல்
பட்டன பகழி; எங்கும் பரந்தது, குருதிப் பவ்வம். 144

நகங்களின் பெரிய வேழ நறை மத அருவி காலும்
முகங்களில் புக்க வாளி அபரத்தை முற்றி, மொய்ம்பர்
அகங்களைக் கழன்று, தேரின் அச்சினை உருவி, அப்பால்
உகங்களின் கடை சென்றாலும், ஓய்வு இல ஓடலுற்ற. 145

நூக்கிய களிறும், தேரும், புரவியும், நூழில்செய்ய,—
ஆக்கிய அரக்கர் தானை, ஐ-இரு கோடி, கையொத்து
ஊக்கிய படைகள் வீசி உடற்றிய—உலகம் செய்த
பாக்கியம் அனைய வீரன் தம்பியைச் சுற்றும் பற்றி. 146

'உறு பகை மனிதன், இன்று, எம் இறைவனை உறுகிற்பானேல்,
வெறுவிது, நம்தம் வீரம்' என்று ஒரு மேன்மை தோன்ற,
எறி படை அரக்கர் ஏற்றார்—'ஏற்ற கைம் மாற்றான்' என்ன,
வறியவர், ஒருவன், வண்மை பூண்டவன்மேல் சென்றென்ன.

அறுத்தனன், அரக்கர் எய்த எறிந்தன; அறுத்து, அறாத
பொறுத்தனன்; பகழி மாரி பொழிந்தனன்; உயிரின் போகம்
வெறுத்தனன், நமனும்; வேலை உதிரத்தின் வெள்ளம் மீள
மறித்தன; மறிந்த எங்கும், பிணங்கள் மா மலைகள் மான.

தலை எலாம் அற்ற; முற்றும் தாள் எலாம் அற்ற; தோளாம்
மலை எலாம் அற்ற; பொன்-தார் மார்பு எலாம் அற்ற; சூலத்து
இலை எலாம் அற்ற; வீரர் எயிறு எலாம் அற்ற; கொற்றச்
சிலை எலாம் அற்ற; கற்ற செரு எலாம் அற்ற, சிந்தி. 149

தேர் எலாம் துமிந்த; மாவின் திறம் எலாம் துமிந்த; செங் கண்
கார் எலாம் துமிந்த; வீரர் கழல் எலாம் துமிந்த; கண்டத்
தார் எலாம் துமிந்த; நின்ற தனு எலாம் துமிந்த; தம்தம்
போர் எலாம் துமிந்த; கொண்ட புகழ் எலாம் துமிந்து போய.

144. முட்டிய - நெருங்கிய; 145. நகம் - மலை; நறை - மணம்; அபரம் - பின்பாகம்; அகம் - மார்பு; 146. நூக்கியவாய் நூழில் செய்ய என இயையும்; நூக்குதல் - தள்ளுதல்; நூழில் செய்தல் - கொன்று குவித்தல்; ஒக்கிய - உயர்த்திய; 147. வெறுவிது - பயனற்றது; இலக்குவன் ஒருவன்மேல் அரக்கர் பலர் எதிர்த்துச் சென்றது, ஒரு வள்ளலிடம் இரவலர் பலர் ஏற்கச் சென்றது போன்றது; 148. போகம் - நுகர்ச்சி; 150. போர் எலாம் - போர்த் திறங்கள் எல்லாம்.

அரவு இயல் தறுகண் வன் தாள் ஆள் விழ, ஆள்மேல் வீழ்ந்த
புரவிமேல் பூட்கை வீழ்ந்த; பூட்கைமேல் பொலன் தேர் வீழ்ந்த,
நிரவிய தேரின் மேன்மேல் நெடுந் தலை கிடந்த; நெய்த்தோர்
விரவிய களத்துள் எங்கும் வெள்ளிடை அரிது, வீழ. 151

கடுப்பின்கண், அமரரேயும், 'கார்முகத்து அம்பு கையால்
தொடுக்கின்றான், துரக்கின்றான்' என்று உணர்ந்திலர்; துரந்த வாளி
இடுக்கு ஒன்றும் காணார்; காண்பது, எய்த கோல் நொய்தின் எய்திப்
படுக்கின்ற பிணத்தின் பம்மல் குப்பையின் பரப்பே; பல் கால்.

கொற்ற வாள், கொலை வேல், சூலம், கொடுஞ் சிலை முதல ஆய
வெற்றி வெம் படைகள் யாவும் வெந் தொழில் அரக்கர் மேற்கொண்டு,
உற்றன, கூற்றும் அஞ்ச ஒளிர்வன, ஒன்று நூறு ஆய்
அற்றன அன்றி, ஒன்றும் அறாதன இல்லை அன்றே. 153

குன்று அன யானை, மானக் குரகதம், கொடித்தேர், கோப
வன் திறல் ஆளி, சீயம், மற்றைய பிறவும், முற்றும்
சென்றன எல்லை இல்லை; திரிந்தில; சிறிது போதும்
நின்றன இல்லை; எல்லாம் கிடந்தன, நெளிந்து, பார்மேல்.

சாய்ந்தது நிருதர் தானை; தமர் தலை இடறித் தள்ளுற்று
ஒய்ந்தது; ஒழிந்தது ஒடி உலந்ததும் ஆக, அன்றே
வேய்ந்தது வாகை, வீரற்கு இளையவன் வரி வில்; வெம்பிக்
காய்ந்தது, அவ் இலங்கை வேந்தன் மனம் எனும் காலச் செந் தீ.

இராவணன், இலக்குவனை நெருங்கிப் பொருதல்

காற்று உறழ் கலின மான் தேர் கடிதினின் கடாவி, கண்ணுற்று
ஏற்றனன், இலங்கை வேந்தன்; எரி விழித்து, இராமன் தம்பி,
கூற்று மால் கொண்டது என்னக் கொல்கின்றான், குறுகச் சென்றான்;
சீற்றமும் தானும் நின்றான்; பெயர்ந்திலன், சிறிதும் பாதம்.

'காக்கின்ற என் நெடுங் காவலின் வலி நீக்கிய கள்வா!
போக்கு இன்று உனக்கு அரிது ஆல்' எனப் புகன்றான்; புகை உமிழ்ப்
கோக்கின்றன, தொடுக்கின்றன, கொலை அம்புகள், தலையோடு [பாண்,
ஈர்க்கின்றன, கனல் ஒப்பன, எய்தான்; இகல் செய்தான். 157

151. நிரவிய தேர் - வரிசைப்பட நிற்கின்ற தேர்கள்; நெய்த்தோர் - குருதி: வெள்ளிடை - வெற்றிடம்; 152. இடுக்குதல் - கவ்வுதல்; பம்மல் குப்பை - நெருங்கிய குவியல்; 154. குரகதம் - குதிரை; 156. மால் - பித்து.

‘எய்தான் சரம் எய்தாவகை இற்றீக’ என, இடையே,
வைதாலென ஐதாயின வடி வாளியின் அறுத்தான்;
‘ஐது ஆதலின் அறுத்தாய்; இனி, அறுப்பாய்!’ என, அழிகார்
பெய்தாலெனச் சர மாரிகள் சொரிந்தான், துயில் பிரிந்தான்.

ஆம் குஞ்சரம் அனையான் விடும் அயில் வாளிகள் அவைதாம்
வீங்கும் சரம் பருவத்து இழி மழை போல்வன விலக்கா,
தூங்குஞ் சர நெடும் புட்டிலின், சுடர் வேலவற்கு இளையான்,
வாங்குஞ் சரம் வாங்காவகை அறுத்தான், அறம் மறுத்தான்.

அயர்வு நீங்கிய அனுமன் இராவணனோடு வீரவுரை நிகழ்த்தல்

அப்போதையின் அயர்வு ஆறிய அனுமான், அழல் விழியா,
‘பொய்ப் போர் சில புரியேல், இனி’ என வந்து, இடை புகுந்தான்,
கைப் போதகம் என, முந்து, அவன் கடுந் தேர் எதிர் நடந்தான்,
‘இப் போர் ஒழி; பின் போர் உள; இவை கேள்’ என இசைத்தான்:

‘வென்றாய் உலகு ஒரு மூன்றையும், மெலியா நெடு வலியால்;
தின்றாய் செறி கழல் இந்திரன் இசையை; திசை திரித்தாய்;
என்றாலும், இன்று அழிவு உன்வயின் எய்தும்’ என இசையா,
நின்றான் அவன் எதிரே, உலகு அளந்தான் என நிமிர்ந்தான்.

எடுத்தான் வலத் தடக் கையினை; இது போய், உலகு எல்லாம்
அடுத்தான் குறள் அளந்தான் திருவடியின் வரவு அன்னான்,
மடுத்து ஆங்கு உற வளர்ந்தாலென வளர்கின்றவன் உருவம்
கடுத்தான் என, கொடியாற்கு எதிர், ‘காண்பாய்’ எனக் காட்டா, **162**

‘வில் ஆயுதம் முதல் ஆகிய வய வெம் படை மிடலோடு
எல்லாம் இடை பயின்றாய்; புயம் நால்–ஐந்தினொடு இயைந்தாய்;
வல்லாய்; செரு வலியாய்; திறல் மறவோய்! இதன் எதிரே
நில்லாய்’ என நிகழ்த்தா, நெடு நெருப்பு ஆம் என உயிர்ப்பான்.

‘நீள் ஆண்மையினுடனே எதிர் நின்றாய்; இஃது ஒன்றோ?
வாள் ஆண்மையும், உலகு ஏழினொடு உடனே உடை வலியும்,
தாளாண்மையும், நிகர் ஆரும் இல் தனி ஆண்மையும், இனி நின்
தோளாண்மையும், இசையோடு உடன் துடைப்பேன், ஒரு புடைப்பால்;

158. இற்றீக - இற்றுப்போக; வைது - கூர்மை; வடிவாளி - வடிக்கப்பட்ட அம்பு; ஐது - சிறிது, மெல்லிது; 159. சரம் - சரற் காலம், கூதிர்ப் பருவம், ஐப்பசி கார்த்திகை மாதங்கள் கூடிய காலம்; 160. போதகம் - யானை; 162. கடுத்தான் என - நஞ்சுதான் என்னுமாறு; 164. நீள் ஆண்மை - பெரிய துணிவு; தாளாண்மை - முயற்சி; புடைப்பு - குத்து.

'பரக்கப் பல உரைத்து என்? படர் கயிலைப் பெரு வரைக்கும்,
அரக்குற்று எரி பொறிக் கண் திசைக் கரிக்கும், சிறிது அனுங்கா
உரக் குப்பையின் உயர் தோள் பல உடையாய்! உரன் உடையாய்!
குரக்குத் தனிக் கரத்தின் புடைப் பொறை ஆற்றுவை கொல்லாம்? 165

'என் தோள் வலிஅதனல் எடுத்து யான் எற்றவும், இறவா-
நின்ருய்எனின், நீ பின் எனே, நின் கைத் தல நிரையால்,—
குன்றே புரை தோளாய்!—மிடல்கொடு குத்துதி; குத்தப்
பொன்றேன்எனின், நின்னேடு எதிர் பொருகின்றிலென்' என்ருன்.

அனுமன் கூற்றினை வியந்து, இராவணன் மொழிதல்

காரின் கரியவன், மாருதி கழற, கடிது உகவா,
'வீரற்கு உரியது சொற்றனை;—விறலோய்!—ஒரு தனியேன்
நேர் நிற்பவர் உளரோ, பிறர் நீ அல்லவர்? இனி, நின்
பேருக்கு உலகு அளவே; இனி உளவோ பிற?' என்ருன். 167

'ஒன்று ஆயுதம் உடையாய்அலை; ஒரு நீ எனது உறவும்
கொன்ருய்; உயர் தேர்மேல் நிமிர் கொடு வெஞ் சிலை கோலி,
வன் தானையினுடன் வந்த என் எதிர் வந்து, நின் வலியால்
நின்ருயொடு நின்ருர் இனி நிகரோ? உரை, நெடியோய்! 168

'முத் தேவர்கள் முதலாயினர்; முழு மூன்று உலகிடையே
எத் தேவர்கள், எத் தானவர், எதிர்வார் இகல், என் நேர்,
பித்து ஏறினர் அல்லால்? இடை பேராது, எதிர், ''மார்பில்
குத்தே'' என நின்ருய்; இது கூறும் தரம் அன்ருல். 169

'பொரு கைத்தலம் இருபத்துள; புகழும் பெரிது உளதால்;
வரு கைத்தல மத வெங் கரி வலி கெட்டென வருவாய்!
இரு கைத்தலம் உடையாய்; எதிர் இவை சொற்றனை; இனிமேல்,
தருகைக்கு உரியது ஓர் கொற்றம் என்? அமர் தக்கதும் அன்ருல். 170

'திசை அத்தனையையும் வென்றது சிதைய, புகழ் தெறும் அவ்
வசை மற்று இனி உளதே? எனது உயிர்போல் வரும் மகனை
அசையத் தரை அரைவித்தனை; அழி செம் புனல்அதுவோ
பசையற்றிலது; ஒரு நீ, எனது எதிர் நின்று, இவை பகர்வாய்.

165. அரக்குற்று - செந்நிறம் பொருந்தி; உரக்குப்பை - வலிமை, மிகுதி; அனுங்கா - கெடாத, பின்வாங்காத; 167. பேருக்கு உலகு அளவே - புகழுக்கு உலகு உள்ள அளவும் அளவாம்; 168. 'ஆயுதம் ஒன்றும்' என மாற்றி உம்மை விரிக்க; 170. தருகைக்கு உரியது - விளைதற்கு உரியது; 171. மகன் - அட்சய குமாரன்.

'பூணித்து இவை உரைசெய்தனை; அதனால், உரை பொதுவே;
பாணித்தது; பிறிது என் சில பகர்கின்றது? பழியால்
நாணித் தலை இடுகின்றிலென்; நனி வந்து, உலகு எவையும்
காண, கடிது எதிர் குத்துதி' என்றான், வினை கடியான். 172

அனுமன் இராவணனைக் குத்துதலும், அதன் விளைவும்

'வீரத் திறம் இது நன்று!' என வியவா, மிக விளியா,
தேரின் கடிது இவரா, முழு விழியின் பொறி சிதற,
ஆரத்தொடு கவசத்து உடல் பொடி பட்டு உக, அவன் மா
மார்பில் கடிது எதிர் குத்தினன், வயிரக் கரம்அதனால். 173

அயிர் உக்கன, நெடு மால் வரை; அனல் உக்கன, விழிகள்;
தயிர் உக்கன, முழு மூளைகள்; தலை உக்கன; தரியா
உயிர் உக்கன, நிருதக் குலம்; உயர் வானரம் எவையும்,
மயிர் உக்கன, எயிறு உக்கன; மழை உக்கன, வானம். 174

வில் சிந்தின நெடு நாண்; நிமிர் கரை சிந்தின, விரி நீர்;
கல் சிந்தின, குல மால் வரை; கதிர் சிந்தின, சுடரும்;
பல் சிந்தின, மத யானைகள்; படை சிந்தினர், எவரும்;
எல் சிந்திய எரி சிந்தின, இகலோன் மணி அகலம். 175

கைக் குத்துஅது படலும், கழல் நிருதர்க்கு இறை கறை நீர்
மைக் குப்பையின் எழில் கொண்டு ஒளிர் வயிரத் தட மார்பில்,
திக்கில் சின மத யானைகள் வய வெம் பணை செருவில்
புக்கு இற்றன, போகாதன, புறம் உக்கன, புகழின். 176

அள் ஆடிய கவசத்து அவிர் மணி அற்றன, திசை போய்
விள்ளா நெடு முழு மீன் என; விழி வெம் பொறி எழ நின்று,
உள் ஆடிய நெடுங் கால் பொர ஒடுங்கா, உலகு உலைய,
தள்ளாடிய வட மேருவின் சலித்தான், அறம் வலித்தான். 177

ஆர்த்தார், விசும்பு உறைவோர்; நெடிது அனுமான்மிசை அதிகம்
தூர்த்தார், நறு முழு மென் மலர்; இசை ஆசிகள் சொன்னார்;
வேர்த்தார் நிருதர்கள்; வானரர் வியந்தார், 'இவன் விசயம்
தீர்த்தான்' என உவந்து ஆடினர், முழு மெய்ம்மயிர் சிலிர்த்தார். 178

172. பூணித்தல் - சூளுறுதல், இதனை 'வஞ்சினக் காஞ்சி' என்பர்; பாணித்தது - காலம் தாழ்த்தது; 173. விளித்தல் - ஆரவாரித்தல்; இவர்தல்- ஏறுதல்; 174. அயிர் - நுண்மணல்; 176. கறை நீர் - இரத்தம்; மைக் குப்பை - கரிய மேகத் திரள்; பணை - கொம்புகள்; இரத்தத்தைக் கொண்ட கரிய மேகத்திரள், இரத்த நீர் நிரம்பிக் கருந் தோல் போர்த்துள்ள இராவணன் உடம்பிற்கு உவமம்; 177. அள் ஆடுதல் - பற்று விடுதல்; விள்ளா - பிளவுறாத; 178. தீர்த்தல் - நீக்குதல், ஒழித்தல்.

இராவணன் உணர்வு பெற்று அனுமனுடன் உரையாடல்

கற்று, அங்கியின் நெடு வாயுவின் நிலை கண்டவர், கதியால்
மற்று அங்கு ஒரு வடிவு உற்று, அது மாறுறு காலை,
பற்று அங்கு அருமையின், அன்னது பயில்கின்றது ஓர் செயலால்,
உற்று அங்கு அது புறம் போய், உடல் புகுந்தால் என உணர்ந்தான்.

உணரா, நெடிது உயிரா, உரை உதவா, எரி உமிழா,
இணை ஆரும் இல் அவன் நேர் வரவு எய்தா, 'வலி செய்தாய்!
அணையாய்; இனி, எனது ஊழ்' என அடரா, எதிர் படரா,
பணை ஆர் புயம் உடையானிடை, சில இம் மொழி பகர்வான்:

'வலி என்பதும் உளதே? அது நின் பாலது; மறவோய்!
அலி என்பவர், புறம் நின்றவர்; உலகு ஏழினும் அடைத்தாய்;
'சலி' என்று எதிர் மலரோன் உரைதந்தால், இறை சலியேன்;
மெலிவு என்பதும் உணர்ந்தேன்; எனை வென்றாய், இனி, விறலோய்!

'ஒன்று உண்டு இனி உரை நேர்குவது; உன் மார்பின், என் ஒரு கை,
குன்றின்மிசை கடை நாள் விழும் உரும்ஏறு எனக் குத்த,
நின்று, உன் நிலை தருவாய்எனின், நின் நேர் பிறர் உளரோ?
இன்றும் உளை; என்றும் உளை; இலை, ஓர் பகை' என்றான். 182

இராவணனைப் புகழ்ந்து, அனுமன் தன் மார்பு காட்டுதல்

என்றான் எதிர் சென்றான், இகல் அடு மாருதி; 'எனை நீ
வென்றாய் அலையோ? உன் உயிர் வீடாது, உரை செய்தாய்;
நன்றாக நின் நிலை நன்று' என நல்கா, எதிர் நடவா,
குன்று ஆகிய திரள் தோளவன், 'கடன் கொள்க' எனக் கொடுத்தான்.*

இராவணன் குத்துதலால் அனுமன் சலித்தல்

உறுக்கி, தனி எதிர் நின்றவன் உரத்தில், தனது ஒளிர் பல்
இறுக்கி, பல நெடு வாய் மடித்து, எரி கண்தொறும் இழிய,
முறுக்கிப் பொதி நிமிர் பல் விரல் நெரிய, திசை முரியக்
குறுக்கிக் கரம், நெடுந் தோள் புறம் நிமிரக் கொடு குத்த, 184

179. கற்று - ஈண்டு யோக நெறி பயின்று; அங்கியின் நிலை - குண்டலியில் எழுப்பிய ஓமாக்கினியின் நிலை; நெடு வாயு நிலை - இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்ற நாடிகளில் இயங்கும் பிராணவாயுவின் நிலை; வடிவு - உடம்பு; மாறுறு காலை - மாறும்போது, பிறிதோர் உடம்பில் நுழையப் புறம் போகிய யோகியர் மீட்டும் தம் உடம்பில் நுழைவது போல இராவணனுக்குப் போய உணர்வு மீண்டும் வந்தது என்றவாறு. 180. வலி - துன்பம்; ஊழ் - முறை; பணை - மரக்கிளை, பருமை எனலும் ஆம்; 181. அடைத்தல் - (ஆண்மை) நிரம்புதல்; 184. உறுக்குதல் - அதட்டுதல்; பொதி - திரட்சி, விரலுக்கு அடை.

பள்ளக் கடல் கொள்ளப் படர் படி பேரினும் பதையா
வள்ளல், பெரு வெள்ளத்து எறுழ் வலியாரினும் வலியான்,
கள்ளக் கறை உள்ளத்து அதிர் கழல் வெய்யவன் கரத்தால்
தள்ள, தளர் வெள்ளிப் பெருங் கிரி ஆம் எனச் சலித்தான். 185

சலித்த காலையின், இமையவர் உலகு எலாம் சலித்த;
சலித்ததால் அறம்; சலித்தது, மெய்ம் மொழி; தகவும்
சலித்தது; அன்றியும், புகழொடு சுருதியும் சலித்த;
சலித்த நீதியும்; சலித்தன கருணையும் தவமும். 186

வானரத் தலைவர் மலைகளை எடுத்து, இராவணனுடன் மலைதல்

அனைய காலையின், அரிக் குலத் தலைவர், அவ் வழியோர்
எனையர் அன்னவர் யாவரும், ஒரு குவடு ஏந்தி,
நினைவின் முன் நெடு விசும்பு ஒரு வெளி இன்றி நெருங்க,
'வினை இது' என்று அறிந்து, இராவணன்மேல் செல விட்டார்.

ஒத்த கையினர், ஊழியின் இறுதியின் உலகை
மெத்த மீது எழு மேகத்தின் விசும்பு எலாம் மிடைய,
பத்து நூறு கோடிக்கு மேல் பனி படு சிகரம்,
எத்த, மேல் செல எறிந்தனர்; பிறிந்தனர், இமையோர். 188

தருக்கி வீசிட, விசும்பு இடம் இன்மையின், தம்மின்
நெருக்குகின்றன, நின்றன, சென்றில, நிறைந்த;
அருக்கனும் மறைந்தான்; இருள் விழுங்கியது, அண்டம்;
'சுருக்கம் உற்றனர், அரக்கர்' என்று, இமையவர் சூழ்ந்தார்.

ஒன்றின் ஒன்று பட்டு உடைவன, இடித்து உரும் அதிரச்
சென்ற வன் பொறி மின் பல செறிந்திட, தெய்வ
வென்றி வில் என விழு நிழல் விரிந்திட, மேன்மேல்
கன்றி ஓடிட, கல்-மழை நிகர்த்தன—கற்கள். 190

இரிந்து நீங்கியது இராக்கதப் பெரும் படை; எங்கும்
விரிந்து சிந்தின, வானத்து மீனொடு விமானம்;
சொரிந்த வெம் பொறி பட, கடல் சுவறின; தோற்றம்
கரிந்த, கண்டகர் கண்-மணி; என் பல கழறி? 191

186. சலித்தல் - தளர்தல்; 188. மெத்த - அழிப்பதற்கு; எத்த - எற்ற, மோதித் தாக்குதற்கு; பிறிந்தனர் - பிரிந்தனர், எதுகை நோக்கி ரகரம் றகரமாயிற்று; 191. கண்டகர் - முள்ளைப் போலத் துன்பம் செய்கின்ற அரக்கர்கள்.

இறுத்தது இன்று உலகு என்பது ஓர் திமிலம் வந்து எய்த,
கறுத்த சிந்தையன் இராவணன் அனையது கண்டான்;
ஒறுத்து, வானவர் புகழுண்ட பார வில், உளைய
அறுத்து நீக்கினன், ஆயிர கோடி மேல் அம்பால். 192

காம்பு எலாம் கடுந் துகள் பட, களிறு எலாம் துணிய,
பாம்பு எலாம் பட, யாளியும் உழுவையும் பாற,
கூம்பல் மா மரம் எரிந்து உக, குறுந் துகள் நுறுங்க,
சாம்பர் ஆயின, தட வரை—சுடு கணை தடிய. 193

'உற்றவாறு!' என்றும், 'ஒன்று நூறு ஆயிரம் உருவா
இற்றவாறு!' என்றும், 'இடிப்புண்டு பொடிப் பொடி ஆகி
அற்றவாறு!' என்றும், அரக்கனை, 'அடு சிலை கொடியோன்
கற்றவாறு!' என்றும்,—வானவர் கைத்தலம் குலைந்தார். 194

'அடல் துடைத்தும்' என்று அரிக் குல வீரர் அன்று எறிந்த
திடல் துடைத்தன, தசமுகன் சரம்; அவை திசை சூழ்
கடல் துடைத்தன; களத்தின்நின்று உயர்தரும் பூழி
உடல் துடைத்தன; உதிரமும் துடைத்தது, ஒண் புடவி. 195

இராவணன் சரமழை பொழிய, வானரர் நிலைகுலைதல்

'கொல்வென், இக் கணமே மற்று இவ் வானரக் குழுவை;
வெல்வென், மானிடர் இருவரை' எனச் சினம் வீங்க,
வல் வன் வார் சிலை பத்து உடன் இடக் கையின் வாங்கி,
தொல் வன் மாரியின் தொடர்வன சுடு சரம் துரந்தான். 196

அய்-இரண்டு கார்முகத்தினும், ஆயிரம் பகழி,
கய்கள் ஈர்-ஐந்தினுலும், வெங் கடுப்பினில் தொடுத்துற்று
எய்ய, எஞ்சின, வானமும் இரு நில வரைப்பும்;
மொய் கொள் வேலையும் திசைகளும் சரங்களாய் முடிந்த. 197

அந்தி வானகம் ஒத்தது, அவ் அமர்க் களம்; உதிரம்
சிந்தி, வேலையும் திசைகளும் நிறைந்தன; சரத்தால்
பந்தி பந்தியாய் மடிந்தது, வானரப் பகுதி;
வந்து மேகங்கள் படிந்தன, பிணப் பெரு மலைமேல். 198

192. இறுத்தது - அழிந்தது, திமிலம் - பேரொலி, குழப்பமும் ஆம்; 193. காம்பு - மூங்கில்; கூம்பல் - குவிந்து தோன்றுதல்; சுடு கணை தடிய, தடவரை சாம்பர் ஆயின எனக் கூட்டுக; 194. உற்றவாறு! - (இராவணன்) அம்புகள் பட்ட விதம் என்னே!; 196. வல் வன் சிலை - மிக்க வலிமையுள்ள வில்; தொல் வன் மாரி - ஊழிக் கடையில் பெய்யும் வலிய மழை; 197. கார் முகம் - வில்.

நீலன் அம்பொடு சென்றிலன்; நின்றிலன், அனிலன்;
காலனூர் வயத்து அடைந்திலன், ஏவுண்ட கவயன்;
ஆலம் அன்னது ஓர் சரத்தொடும் அங்கதன் அயர்ந்தான்;
சூலம் அன்னது ஓர் வாளியால் சோம்பினன், சாம்பன். 199

வானரர் நிலை கண்டு, இலக்குவன் உருத்துப் பொருதல்

மற்றும் வீரர்தம் மருமத்தின் அயில் அம்பு மடுப்ப,
கொற்ற வீரமும் ஆண்தொழில் செய்கையும் குறைந்தார்;
சுற்றும் வானரப் பெருங் கடல் தொலைந்தது; தொலையாது
உற்று நின்றவர் ஓடினர்; இலக்குவன் உருத்தான். 200

நூறு கோடிய, நூறு நூறுயிர கோடி,
வேறு வேறு எய்த சரம் எலாம் சரங்களால் விலக்கி,
ஏறு சேவகன் தம்பி, அவ் இராவணன் எடுத்த
ஆறு நாலு வெஞ் சிலையையும் கணைகளால் அறுத்தான். 201

ஆர்த்து, வானவர் ஆவலம் கொட்டினர்; அரக்கர்
வேர்த்து, நெஞ்சமும் வெதும்பினர்; வினை அறு முனிவர்
தூர்த்து, நாள்மலர் சொரிந்தனர்; இராவணன், தோளைப்
பார்த்து உவந்தனன்; குனித்தது, வானரம் படியில். 202

இலக்குவனைப் புகழ்ந்து, வேற் படையை அவன்மேல் இராவணன் எறிதல்

'நன்று, போர் வலி; நன்று, போர் ஆள் வலி; வீரம்
நன்று; நோக்கமும் நன்று; கைக் கடுமையும் நன்று;
நன்று, கல்வியும்; நன்று, நின் திண்மையும் நலனும்'
என்று கைம் மறித்து, இராவணன், 'ஒருவன் நீ' என்றான். 203

'கானின் அன்று இகல் கரன் படை படுத்த அக் கரியோன்-
தானும், இந்திரன்தன்னை ஓர் தனு வலம்தன்னால்
வானில் வென்ற என் மதலையும், வரி சிலை பிடித்த
யானும், அல்லவர் யார் உனக்கு எதிர்?' என்றும் இசைத்தான்.

'வில்லினால் இவன் வெலப்படான்' எனச் சினம் வீங்க,
'கொல்லும் நாளும் இன்று இது' எனச் சிந்தையில் கொண்டான்,
பல்லினால் இதழ் அதுக்கினன்; பரு வலிக் கரத்தால்
எல்லின் நான்முகன் கொடுத்தது ஓர் வேல் எடுத்து எறிந்தான்.

199. சென்றிலன் - செல்லாது கிடந்தான்; நின்றிலன் - நிற்க இயலாதவனானான்; 204. கரியோன் - இராமன்; 205. எல்லின் வேல் என இயைக்க.

இலக்குவன் அயர, இராவணன் அவனை எடுக்க முயலுதல்

எறிந்த கால வேல், எய்த அம்பு யாவையும் எரித்துப்
பொறிந்து போய் உக, தீ உக, விசையினின் பொங்கி,
செறிந்த தாரவன் மார்பிடைச் சென்றது; சிந்தை
அறிந்த மைந்தனும், அமர் நெடுங் களத்திடை அயர்ந்தான்.

இரியலுற்றது வானரப் பெரும் படை; இமையோர்
பரியலுற்றனர், உலைந்தனர்; முனிவரும் பதைத்தார்;
விரி திரைக் கடற்கு இரட்டி கொண்டு ஆர்த்தனர், விரவார்;
திரிகை ஒத்தது மண்தலம்; கதிர் ஒளி தீர்ந்த. 207

'அஞ்சினான்அலன்; அயன் தந்த வேலினும் ஆவி
துஞ்சினான்அலன்; துளங்கினான்' என்பது துணியா,
'எஞ்சு இல் யாக்கையை எடுத்துக்கொண்டு அகல்வென்' என்று எண்ணி,
நஞ்சினால் செய்த நெஞ்சினான் பார்மிசை நடந்தான். 208

உள்ளி, வெம் பிணத்து உதிர நீர் வெள்ளத்தின் ஓடி,
அள்ளி அம் கைகள் இருபதும் பற்றி, பண்டு அரன் மா
வெள்ளிஅம் கிரி எடுத்தது வெள்கினான் என்ன,
எள் இல் பொன் மலை எடுக்கலுற்றான் என, எடுத்தான். 209

இலக்குவனை இராவணன் எடுக்க இயலாதவனாய் நிற்றல்

அடுத்த நல் உணர்வு ஒழிந்திலன், அம்பரம் செம் பொன்
உடுத்த நாயகன் தான் என உணர்தலின்; ஒருங்கே
தொடுத்த எண் வகை மூர்த்தியைத் துளக்கி, வெண் பொருப்பை
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன்—இராமனுக்கு இளையான்.

தலைகள் பத்தொடும் தழுவிய தசமுகத் தலைவன்
நிலை கொள் மாக் கடல் ஒத்தனன்; கரம் புடை நிமிரும்
அலைகள் ஒத்தன; அதில் எழும் இரவியை ஒத்தான்,
இலை கொள் தண் துழாய் இலங்கு தோள் இராமனுக்கு இளையான். 211

இலக்குவனை அனுமன் எடுத்துச் செல்லுதல்

எடுக்கல் உற்று, அவன் மேனியை ஏந்துதற்கு ஏற்ற
மிடுக்கு இலாமையின், இராவணன் வெய்துயிர்ப்பு உற்றான்;
இடுக்கில் நின்ற அம் மாருதி புகுந்து எடுத்து ஏந்தி,
தடுக்கலாதது ஓர் விசையினின் எழுந்து, அயல் சார்ந்தான். 212

207. பரியல் - வருத்தம்; திரிகை - குயவனது சக்கரம்; 210. அம்பரம் - ஆடை; செம் பொன் அம்பரம் உடுத்த நாயகன் என்க; எண் வகை மூர்த்தி - எண் வகை வடிவினன் ஆகிய சிவபிரான்; 212. இடுக்கு - மூலை; 213 அகவு காதல் - தழைத்த பக்தி.

தொக ஒருங்கிய ஞானம் ஒன்று எவரினும் தூயான்,
தகவு கொண்டது ஓர் அன்பு எனும் தனித் துணை அதனால்,
அகவு காதலால், ஆண்தகை ஆயினும், அனுமன்
மகவு கொண்டு போய் மரம் புகும் மந்தியை நிகர்த்தான். 213

மையல் கூர் மனத்து இராவணன் படையினால் மயங்கும்
செய்ய வாள் அரிஏறு அனான் சிறிதினில் தேற,
கையும் கால்களும் நயனமும் கமலமே அனைய
பொய் இலாதவன் நின்ற இடத்து, அனுமனும் போனான். 214

இராமன் போர்க்குப் புகுதல்

போன காலையில், புக்கனன் புங்கவன், போர் வேட்டு
யானைமேல் செலும் கோள் அரிஏறு இவன் என்ன;
வானுளோர் கணம் ஆர்த்தனர்; தூர்த்தனர் மலர், மேல்;
தூ நவின்ற வேல் அரக்கனும், தேரினைத் துரந்தான். 215

இராமன், அனுமன் தோள்மேல் ஏறிச் செல்லுதல்

தேரில் போர் அரக்கன் செல, சேவகன் தனியே
பாரில் செல்கின்ற வறுமையை நோக்கினன், பரிந்தான்,
'சீரில் செல்கின்றது இல்லை இச் செரு' எனும் திறத்தால்,
வாரின் பெய் கழல் மாருதி கதுமென வந்தான். 216

'நூறு பத்துடை நொறில் பரித் தேரின்மேல் நுன்முன்
மாறு இல் பேர் அரக்கன் பொர, நிலத்து நீ மலைதல்
வேறு காட்டும், ஓர் வெறுமையை; மெல்லிய எனினும்,
ஏறு நீ, ஐய! என்னுடைத் தோளின்மேல்' என்றான். 217

'நன்று, நன்று!' என, நாயகன் ஏறினன், நாமக்
குன்றின்மேல் இவர் கோள் அரிஏறு என; கூடி,
அன்று வானவர் ஆசிகள் இயம்பினர்; ஈன்ற
கன்று தாங்கிய தாய் என மாருதி களித்தான். 218

மாணியாய் உலகு அளந்த நாள், அவனுடை வடிவை
ஆணியாய் உணர் மாருதி அதிசயம் உற்றான்;
காணி ஆகப் பண்டு உடையனும் ஒரு தனிக் கலுழன்
நாணினான்; மற்றை அனந்தனும், தலை நடுக்குற்றான். 219

215. துரந்தான் - செலுத்தினான்; 216. சீர் - சமம், ஒப்பு; 216. வேறு காட்டும் - தனியே எடுத்துக் காட்டும்; 219. மாணி - பிரமசாரி, வாமன மூர்த்தி; ஆணி - ஆதாரம்; காணி - தனக்கே உரிய பொருள்; இறைவனைத் தானை தன்மையில் தாங்கிச் செல்வதால் கருடனுக்குப் 'பெரிய திருவடி' என்றும், இராமாவதாரத்தில் இராமன் திருவடியைத் தாங்கியதால் அனுமனுக்குத் 'திருவடி' என்றும் வைணவ மரபில் பெயர் வழங்குகின்றது.

ஓதம் ஒத்தனன் மாருதி; அதன் அகத்து உறையும்
நாதன் ஒத்தனன் என்னினோ, துயில்கிலன் நம்பன்;
வேதம் ஒத்தனன் மாருதி; வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன்; வேறு இதின் இலை பொருவே. 220

தகுதியாய் நின்ற வென்றி மாருதி தனிமை சார்ந்த
மிகுதியை வேறு நோக்கின், எவ் வண்ணம் விளம்பும் தன்மை?
புகுதி கூர்ந்துள்ளார் வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை ஒத்தான்; வீரன், மேலைத் தன் பதமே ஒத்தான். 221

மேருவின் சிகரம் போன்றது என்னினும், வெளிறு உண்டாமால்—
மூரி நீர் அண்டம் எல்லாம் வயிற்றிடை முன்னம் கொண்ட
ஆரியற்கு, அனேக மார்க்கத்தால், இடம் வலமது ஆகச்
சாரிகை திரியல் ஆன மாருதி தாமப் பொன்-தோள். 222

ஆசி சொல்லினர் அருந் தவர்; அறம் எனும் தெய்வம்
காசு இல் நல் நெடுங் கரம் எடுத்து ஆடிட, கயிலை
ஈசன், நான்முகன் என்று இவர் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர், அந்தரம் புகுந்தார். 223

இராம–இராவணப் போர்

அண்ணல், அஞ்சன வண்ணனும், அமர் குறித்து அமைந்தான்;
எண்ண அரும் பெருந் தனி வலிச் சிலையை நாண் எறிந்தான்;
மண்ணும் வானமும், மற்றைய பிறவும், தன் வாய்ப் பெய்து,
உண்ணும் காலத்து, அவ் உருத்திரன் ஆர்ப்பு ஒத்தது ஓதை.

ஆவி சென்றிலர், நின்றிலர், அரக்கரோடு இயக்கர்;
நா உலர்ந்தனர்; கலங்கினர், விலங்கினர்; நடுங்கி;
கோவை நின்ற பேர் அண்டமும் குலைந்தன; குலையாத்
தேவதேவனும், விரிஞ்சனும், சிரதலம் குலைந்தார். 225

ஊழி வெங் கனல் ஒப்பன, துப்பு அன உருவ,
ஆழி நீரையும் குடிப்பன, திசைகளை அளப்ப,
வீழின் மீச்செலின், மண்ணையும் விண்ணையும் தொளைப்ப,
ஏழு வெஞ் சரம், உடன் தொடுத்து, இராவணன் எய்தான்.

220. ஓதம் - கடல், ஈண்டுப் பாற்கடல்; போதம் - ஞானம்; 221. மிகுதி - சிறப்பு; பகுதி - மூலப் பகுதி; மேலைத் தன் பதம் - மேலே உள்ள தன் பரமபதம்; 222. வெளிறு - குற்றம்; அனேக மார்க்கம் - பல வழிகள்; சாரிகை திரியல் - இடமும் வலமுமாகத் திரிதல்; தாமம் - மாலை; 225. தேவ தேவன் - சிவபிரான்.

எய்த வாளியை, ஏழினால், ஏழினோடு ஏழு
செய்து, வெஞ் சரம் ஐந்து ஒரு தொடையினில் சேர்த்தி,
வெய்து கால வெங் கனல்களும் வெள்குற, பொறிகள்
பெய்து போம் வகை, இராகவன் சிலைநின்று பெயர்த்தான். 227

வாளி ஐந்தையும் ஐந்தினால் விசும்பிடை மாற்றி,
ஆளி மொய்ம்பின் அவ் அரக்கனும், ஐ-இரண்டு அம்பு
தோளில் நாண் உற வாங்கினன், துரந்தனன்; சுருதி
ஆளும் நாயகன் அவற்றையும் அவற்றினால் அறுத்தான். 228

அறுத்து, மற்று அவன் அயல் நின்ற அளப்ப அரும் அரக்கர்
செறுத்து விட்டன படை எல்லாம் கணைகளால் சிந்தி,
இறுத்து வீசிய கிரிகளை எரி உக நூறி,
ஒறுத்து, மற்று அவர் தலைகளால் சில மலை உயர்த்தான். 229

மீனுடைக் கருங் கடல் புரை இராக்கதர் விட்ட
ஊனுடைப் படை, இராவணன் அம்பொடும் ஓடி,
வானரக் கடல் படா வகை, வாளியால் மாற்றி,
தானுடைச் சரத்தால் அவர் தலைமலை தடிந்தான். 230

இம்பரான் எனில், விசும்பினன் ஆகும், ஓர் இமைப்பில்;
தும்பை சூடிய இராவணன் முகம்தொறும் தோன்றும்;
வெம்பு வஞ்சகர் விழிதொறும் திரியும்;—மேல் நின்றான்
அம்பின் முன் செலும், மனத்திற்கும் முன் செலும், அனுமன்.

போர்க்களக் காட்சிகள்

ஆடுகின்றன, கவந்தமும்; அவற்றொடும் ஆடிப்
பாடுகின்றன, அலகையும்; நீங்கிய பனைக் கைக்
கோடு துன்றிய கரிகளும் பரிகளும் தலைக்கொண்டு
ஓடுகின்றன, உலப்பு இல, உதிர ஆறு உவரி. 232

அற்ற ஆழிய, அறுப்புண்ட அச்சின, அம்போடு
இற்ற கொய் உளைப் புரவிய, தேர்க் குலம் எல்லாம்;
ஒற்றை வாளியோடு உருண்டன, கருங் களிற்று ஓங்கல்;
சுற்றும் வாசியும் துமிந்தன, அமர்க் களம் தொடர்ந்த. 233

231. மேல் நின்றான் - தன் மேல் நின்ற இராமன்; 233. அற்ற ஆழிய - அற்றுப் போன சக்கரங்களை உடையன; வாசி - குதிரை.

தேர் இழந்து, வெஞ் சிலைகளும் இழந்து, செந் தறுகண்
கார் இழந்து, வெங் கலின மாக் கால்களும் இழந்து,
சூர் இழந்து, வன் கவசமும் இழந்து, துப்பு இழந்து,
தார் இழந்து, பின் இழந்தனர் நிருதர், தம் தலைகள். 234

அரவ நுண் இடை அரக்கியர்; கணவர்தம் அற்ற,
சிரமும் அன்னவை ஆதலின், வேற்றுமை தெரியா,
புரவியின் தலை பூட்கையின் தலை இவை பொருத்தி,
கரவு இல் இன் உயிர் துறந்தனர், கவவுறத் தழுவி. 235

ஆர்ப்பு அடங்கின, வாய் எலாம்; அழற் கொழுந்து ஒழுகும்
பார்ப்பு அடங்கின, கண் எலாம்; பல வகைப் படைகள்
தூர்ப்பு அடங்கின, கை எலாம்; தூளியின் படலைப்
போர்ப்பு அடங்கின உலகு எலாம்; முரசு எலாம் போன. 236

இராவணன் தனித்து நின்று, பொருதல்

ஒன்று நூற்றினோடு ஆயிரம் கொடுந் தலை உருட்டி,
சென்று தீர்வு இல, எனைப் பல கோடியும் சிந்தி,
நின்ற தேரொடும் இராவணன் ஒருவனும் நிற்க,
கொன்று வீழ்த்தினது—இராகவன் சரம் எனும் கூற்றம். 237

தேரும் யானையும் புரவியும் அரக்கரும் தெற்றி,
பேரும் ஓர் இடம் இன்று எனத் திசைதொறும் பிறங்கி,
காரும் வானமும் தொடுவன பிணக் குவை கண்டான்,—
மூரி வெஞ் சிலை இராவணன்—அரா என முனிந்தான். 238

முரண் தொகுஞ் சிலை இமைப்பினில் முறையுற வாங்கி,
புரண்டு தோள் உறப் பொலன் கொள் நாண் வலம்படப் போக்கி,
திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்து
இரண்டு தோளினும் இரண்டு புக்கு அழுந்திட, எய்தான். 239

முறுவல் எய்திய முகத்தினன், முளரி அம் கண்ணன்,
மறு இலாதது ஓர் வடிக் கணை தொடுத்து, உற வாங்கி,
இறுதி எய்தும் நாள், கால் பொர, மந்தரம் இடையிட்டு
அறுவது ஆம் என, இராவணன் சிலையினை அறுத்தான். 240

234. சூர் - சூரத்தன்மை; 235. அரவ நுண் இடை - பாம்பு போலத் துவளுகின்ற சிறிய இடை; 236. பார்ப்பு - பார்த்தல்; 239. பொலன் - அழகு; 240. இடையிட்டு அறுவது - நடுவிலே முரிவது.

மாற்று வெஞ் சிலை வாங்கினன், வடிம்புடை நெடு நாண்
ஏற்றுரு முனம், இடை அறக் கணைகளால் எய்தான்;
காற்றினும் கடிது ஆவன, கதிர் மணி நெடுந் தேர்
ஆற்று, கொய் உளைப் புரவியின் சிரங்களும் அறுத்தான். 241

மற்றும் வெம் படை வாங்கினன் வழங்குறுமுன்னம்,
இற்று அவிந்துக எரி கணை இடை அற எய்தான்;
கொற்ற வெண்குடை கொடியொடும் துணிபடக் குறைத்தான்;
கற்றை அம் சுடர்க் கவசமும் கட்டு அறக் கழித்தான். 242

மாற்றுத் தேர் அவண் வந்தன வந்தன வாரா,
வீற்று வீற்று உக, வெயில் உமிழ் கடுங் கணை விட்டான்;
சேற்றுச் செம் புனல் படு களப் பரப்பிடைச் செங் கண்
கூற்றும் கை எடுத்து ஆடிட, இராவணன் கொதித்தான். *

மின்னும் பல் மணி மவுலிமேல் ஒரு கணை விட்டான்;
அன்ன காய் கதிர் இரவிமேல் பாய்ந்த போர் அனுமன்
என்னல் ஆயது ஓர் விசையினின் சென்று, அவன் தலையில்
பொன்னின் மா மணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த, 244

செறிந்த பல் மணிப் பெருவனம் திசை பரந்து எரிய,
பொறிந்தவாய், வயக் கடுஞ் சுடர்க் கணை படும் பொழுதின்,
எறிந்த கால் பொர, மேருவின் கொடு முடி இடிந்து,
மறிந்து வீழ்ந்ததும் ஒத்தது, அவ் அரக்கன்தன் மகுடம். 245

அண்டர் நாயகன் அடு சிலை உதைத்த பேர் அம்பு
கொண்டு போகப் போய்க் குரை கடல் குளித்த அக் கொள்கை,
மண்டலம் தொடர் வயங்கு வெங் கதிரவன், தன்னை
உண்ட கோளொடும், ஒலி கடல் வீழ்ந்ததும் ஒக்கும். 246

இராவணன் மகுடம் இழந்து, நாணி நின்ற நிலை

சொல்லும் அத்தனை அளவையில் மணி முடி துறந்தான்;
எல் இமைத்து எழு மதியமும் ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன்; பகலும் ஒத்தனன்; அமர் பொருமேல்,
வெல்லும் அத்தனை அல்லது, தோற்றிலா விறலோன். 247

241. ஆற்றுதல் - நடத்துதல்; 245. பெருவனம் - பெரிய திரள்; 246. கோள் - கேது என்னும் கோள்; 247. மதியமும் ஞாயிறும் இழந்த அல்லும் ஒத்தனன் பகலும் ஒத்தனன் என்பது நிரல்நிறை; ஞாயிறு இழந்த பகல் இன்மையின் அஃது இல்பொருள் உவமை.

மாற்ற அருந் தட மணி முடி இழந்த வாள் அரக்கன்,—
ஏற்றம் எவ் உலகத்தினும் உயர்ந்துளன்எனினும்,
ஆற்றல் நல் நெடுங் கவிஞன் ஓர் அங்கதம் உரைப்ப,
போற்ற அரும் புகழ் இழந்த பேர் ஒருவனும்—போன்றான். 248

'அறம் கடந்தவர் செயல் இது' என்று, உலகு எலாம் ஆர்ப்ப,
நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைத்திட, நின்றான்—
இறங்கு கண்ணினன், எல் அழி முகத்தினன், தலையன்,
வெறுங் கை நாற்றினன், விழுதுடை ஆல் அன்ன மெய்யன்.

இராமன் அறிவுரை கூறி, 'இன்று போய், நாளை வா' எனல்

நின்றவன் நிலை நோக்கிய நெடுந்தகை, இவனைக்
கொன்றல் உன்னிலன், 'வெறுங் கை நின்றான்' எனக் கொள்ளா;
'இன்று அவிந்தது போலும், உன் தீமை' என்று, இசையோடு
ஒன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான்: 250

'அறத்தினால் அன்றி, அமரர்க்கும் அருஞ் சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி;
பறத்தி, நின் நெடும் பதி புகக் கிளையொடும்; பாவி!
இறத்தி; யான் அது நினைக்கிலென், தனிமை கண்டு இரங்கி.

'உடைப் பெருங் குலத்தினரொடும், உறவொடும், உதவும்
படைக்கலங்களும், மற்றும் நீ தேடிய பலவும்,
அடைத்து வைத்தன திறந்துகொண்டு ஆற்றுதிஆயின்,
கிடைத்தி; அல்லையேல், ஒளித்தியால்; சிறு தொழில் கீழோய்!

'சிறையில் வைத்தவள்தன்னை விட்டு, உலகினில் தேவர்
முறையில் வைத்து, நின் தம்பியை இராக்கதர் முதல் பேர்
இறையில் வைத்து, அவற்கு ஏவல் செய்து இருத்தியேல், இன்னும்,
தறையில் வைக்கிலென், நின் தலை வாளியின் தடிந்து. 253

'அல்லையாம்எனின், ஆர் அமர் ஏற்று நின்று ஆற்ற
வல்லையாம்எனின், உனக்கு உள வலி எலாம் கொண்டு,
"நில், ஐயா!" என நேர் நின்று பொன்றுதிஎனினும்,
நல்லை ஆகுதி; "பிழைப்பு இனி உண்டு" என நயவேல். 254

'ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்று போய், போர்க்கு
நாளை வா' என நல்கினன்—நாகு இளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல். 255

248. அங்கதம் - வசைச் செய்யுள்; 251. பறத்தி - விரைவாய்; 252. கிடைத்தி - நெருங்குதல், ஈண்டுப் போர்க்கு வருதல்; 255. பூளை - பூளைப்பூ; நாகு இளங் கமுகு - மிக்க இளமையான கமுகு.

15 கும்பகருணன் வதைப் படலம்

இராவணன் இலங்கை மீளுதல்

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற்கு ஏற்ப நயம் பட உரைத்த நாவும்,
தார் அணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும், களத்தே போட்டு, வெறுங் கையே மீண்டு போனான். 1

கிடந்த போர் வலியார்மாட்டே கெடாத வானவரை எல்லாம்
கடந்து போய், உலகம் மூன்றும் காக்கின்ற காவலாளன்,
தொடர்ந்து போம் பழியினோடும், தூக்கிய கரங்களோடும்,
நடந்து போய், நகரம் புக்கான்; அருக்கனும் நாகம் சேர்ந்தான்.

மாதிரம் எவையும் நோக்கான், வள நகர் நோக்கான், வந்த
காதலர் தம்மை நோக்கான், கடல் பெருஞ் சேனை நோக்கான்,
தாது அவிழ் கூந்தல் மாதர் தனித் தனி நோக்க, தான் அப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான். 3

நாள் ஒத்த நளினம் அன்ன முகத்தியர் நயனம் எல்லாம்
வாள் ஒத்த; மைந்தர் வார்த்தை இராகவன் வாளி ஒத்த;—
கோள் ஒத்த சிறை வைத்து ஆண்ட கொற்றவற்கு, அற்றைநாள், தன்
தோள் ஒத்த துணை மென் கொங்கை நோக்கு அங்குத் தொடர்கிலாமை.

மந்திரச் சுற்றத்தாரும், வாணுதல் சுற்றத்தாரும்,
தந்திரச் சுற்றத்தாரும், தன் கிளைச் சுற்றத்தாரும்,
எந்திரப் பொறியின் நிற்ப, யாவரும் இன்றி, தான் ஓர்
சிந்துரக் களிறு கூடம் புக்கென, கோயில் சேர்ந்தான். 5

இராவணன். தூதரை அழைத்து வர. கஞ்சுகியை ஏவுதல்

ஆண்டு ஒரு செம் பொன் பீடத்து இருந்து, தன் வருத்தம் ஆறி,
நீண்டு உயர் நினைப்பன் ஆகி, கஞ்சுகி அயல் நின்றானை,
'ஈண்டு, நம் தூதர் தம்மை இவ்வழித் தருதி' என்றான்.
பூண்டது ஓர் பணியன், வல்லை, நால்வரைக் கொண்டு புக்கான்.

15 : 1. வாரணம் - யானை; 3. காதலர் - புதல்வர்; 4. கோள் - நவக்கிரகங்கள்; ஒத்த - பொருத்தமான; துணை மென் கொங்கை - இரட்டையான மெல்லிய தனங்களையுடைய கொற்றவை; 5. தந்திரம் - சேனை; சிந்துரம் - நெற்றியில் அணியும் செம்பொடி; கூடம் - யானை நிற்கும் கொட்டாரம்; 6. கஞ்சுகி - சட்டை அணிந்த மெய்காப்பாளன்.

தூதரிடம், எட்டுத் திக்கிலும் உள்ள அரக்கர் சேனையைக் கொணரப் பணித்தல்

மனகதி, வாயுவேகன், மருத்தன், மாமேகன் என்று இவ்
வினை அறி தொழிலர் முன்னு, ஆயிரர் விரவினுரை,
'நினைவதன் முன்னம், நீர் போய் நெடுந் திசை எட்டும் நீந்தி,
கனை கழல் அரக்கர் தானை கொணருதிர், கடிதின்' என்றான். 7

'ஏழ் பெருங் கடலும், சூழ்ந்த ஏழ் பெருந் தீவும், எண் இல்
பாழி அம் பொருப்பும், கீழ்பால் அடுத்த பாதாளத்துள்ளும்,
ஆழி அம் கிரியின் மேலும், அரக்கர் ஆனவரை எல்லாம்,
தாழ்வு இலிர் கொணர்திர்' என்றான்; அவர் அது தலைமேல்கொண்டார்.

பின், அமளியில் சேர்ந்து, இராவணன் வருந்தி இருத்தல்

மூவகை உலகுளோரும் முறையில் நின்று ஏவல் செய்வார்,
பாவகம் இன்னது என்று தெரிகிலர், பதைத்து விம்ம,
தூ அகலாத வை வாய் எஃகு உறத் தொளைக் கை யானை
சேவகம் அமைந்தது என்ன, செறி மலர் அமளி சேர்ந்தான். 9

பண் நிறை பவளச் செவ் வாய், பைந் தொடி, சீதை என்னும்
பெண் இறைகொண்ட நெஞ்சில் நாண் நிறைகொண்ட பின்னர்,
கண் இறை கோடல் செய்யான், கையறு கவலை சுற்ற,
உள் நிறை மானம்தன்னை உமிழ்ந்து, எரி உயிர்ப்பதானான். 10

வான் நகும்; மண்ணும் எல்லாம் நகும்;—நெடு வயிரத் தோளான்—
நான் நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்று, அதற்கு நாணான்;
வேல் நகு நெடுங் கண், செவ் வாய், மெல் இயல், மிதிலை வந்த,
சானகி நகுவள்—என்றே நாணத்தால் சாம்புகின்றான். 11

மாலியவான், 'உற்றது என்?' என, இராவணனிடம் வினவுதல்

ஆங்கு, அவன்தன் மூதாதை ஆகிய, மூப்பின் யாக்கை
வாங்கிய வரி வில் அன்ன, மாலியவான் என்று ஓதும்
பூங் கழல் அரக்கன் வந்து, பொலங் கழல் இலங்கை வேந்தைத்
தாங்கிய அமளிமாட்டு, ஓர் தவிசுடைப் பீடம் சார்ந்தான். 12

9. பாவகம் - கருத்து; எஃகு - வேல்; சேவகம் - யானைக்கூடம்; 10. இறை கொண்ட - தங்கியிருக்கின்றன; கண் கோடல்; கண் இமை பொருந்தப் பெறுதல்; 11. சாம்புதல் - வாடுதல்; 12. அமளி - படுக்கை; தவிசு - மெத்தை இட்ட இருக்கை.

இருந்தவன், இலங்கை வேந்தன் இயற்கையை எய்த நோக்கி,
பொருந்த வந்துற்ற போரில் தோற்றனன் போலும் என்னு,
'வருந்தினை, மனமும்; தோளும் வாடினை;—நாளும் வாடாப்
பெருந் தவம் உடைய ஐயா!—என், உற்ற பெற்றி?' என்ருன்.

நிகழ்ந்தவற்றை இராவணன் உரைத்தல்

கவை உறு நெஞ்சன், காந்திக் கனல்கின்ற கண்ணன், பத்துச்
சிவையின் வாய் என்னச் செந் தீ உயிர்ப்பு உறத் திறந்த மூக்கன்,
நவை அறு பாகை அன்றி அமுதினை நக்கினுலும்
சுவை அறப் புலர்ந்த நாவான், இனையன சொல்லலுற்ருன்:

'சங்கம் வந்து உற்ற கொற்றத் தாபதர்தம்மோடு எம்மோடு
அங்கம் வந்து உற்றது ஆக, அமரர் வந்து உற்ருர் அன்றே;
கங்கம் வந்து உற்ற செய்ய களத்து, நம் குலத்துக்கு ஒவ்வாப்
பங்கம் வந்துற்றது அன்றி, பழியும் வந்துற்றது' அன்றே? 15

'முளை அமை திங்கள் சூடும் முக்கணுன் முதல்வர் ஆக,
கிளை அமை புவனம் மூன்றும் வந்து உடன் கிடைத்தவேனும்,
வளை அமை வரி வில் வாளி மெய் உற வழங்கும்ஆயின்,
இளையவன்தனக்கும் ஆற்ருது, என் பெருஞ் சேனை—நம்ப! 16

'எறித்த போர் அரக்கர் ஆவி எண் இலா வெள்ளம் எஞ்சப்
பறித்த போது, என்னை அந்தப் பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்த போது, அன்னுன் அந்தக் கூனி கூன் போக உண்டை
தெறித்த போது ஒத்தது அன்றி, சினம் உண்மை தெரிந்தது இல்லை.

'மலை உறப் பெரியர் ஆய வாள் எயிற்று அரக்கர் தானை
நிலையுறச் செறிந்த வெள்ளம் நூற்று-இரண்டுஎனினும், நேரே
குலை உறக் குளித்த வாளி, குதிரையைக் களிற்றை ஆளைத்
தலை உறப் பட்டதுஅல்லால், உடல்களில் தங்கிற்று உண்டோ?

'போய பின், அவன் கை வாளி உலகு எலாம் புகுவது அல்லால்,
ஓயும் என்று உரைக்கலாமோ, ஊழி சென்ருலும்? ஊழித்
தீயையும் தீயகும்; செலலும் திசையையும் தீய்க்கும்; சொல்லும்,
வாயையும் தீய்க்கும்; முன்னின், மனத்தையும் தீய்க்கும் மன்னே.19

14. கவை - கவ்வை, துன்பம்; சிவை - துருத்தி; 15. சங்கம் - கூட்டம்; தாபதர் - தவக்கோலத்தினராகிய இராம இலக்குவர்; அங்கம் - போர்; கங்கம் - பருந்து; பங்கம் - தோல்வி; 16. கிளை - கிளைத்தல், மேன்மேலும் வளரும் தன்மை; இளையவன் - இலக்குவன்; 17. எறித்த - எறிந்த (படைக் கலங்களை வீசி) எறியப்பெற்ற; 18. குலை உற - கூட்டமாக.

'மேருவைப் பிளக்கும் என்றால், விண் கடந்து ஏகும் என்றால்,
பாரினை உருவும் என்றால், கடல்களைப் பருகும் என்றால்,
ஆருமே, அவற்றின் ஆற்றல்; ஆற்றுமேல், அனந்தகோடி,
மேருவும், விண்ணும், மண்ணும், கடல்களும் வேண்டும் அன்றே? 20

'வரி சிலை நாணில் கோத்து வாங்குதல் விடுதல் ஒன்றும்
தெரிகிலர், அமரரேயும்; ஆர் அவன் செய்கை தேர்வார்?
''பொரு சினத்து அரக்கர் ஆவி போகிய போக'' என்று
கருதவே, உலகம் எங்கும் சரங்களாய்க் காட்டும் அன்றே. 21

'நல் இயல் கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாமச்
சொல் என, செய்யுள் கொண்ட தொடை என, தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசை என, பழுது இலாத
பல் அலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ. 22

'இந்திரன் குலிச வேலும், ஈசன் கை இலை மூன்று என்னும்
மந்திர அயிலும், மாயோன் வளை எஃகின் வரவும் கண்டேன்;
அந்தரம் நீளிது, அம்மா! தாபதன் அம்புக்கு ஆற்றா
நொந்தனென் யான் அலாதார் யார் அவை நோற்ககிற்பார்? 23

'பேய் இருங் கணங்களோடு சுடு களத்து உறையும் பெற்றி
ஏயவன் தோள்கள் எட்டும், இந்திரன் இரண்டு தோளும்,
மா இரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும், அன்னான் விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்றா. 24

'சீர்த்த வீரியராய் உள்ளார், செங் கண் மால் எனினும், யான் அக்
கார்த்தவீரியனை நேர்வார் உளர் எனக் கருதல் ஆற்றேன்;
பார்த்த போது, அவனும், மற்று அத் தாபதன் தம்பி பாதத்து
ஆர்த்தது ஓர் துகளுக்கு ஒவ்வான்; ஆர் அவற்கு ஆற்றகிற்பார்?

'முப்புரம் ஒருங்கச் சுட்ட மூரி வெஞ் சிலையும், வீரன்
அற்புத வில்லுக்கு, ஐய! அம்பு எனக் கொளலும் ஆகா;
ஒப்பு வேறு உரைக்கல் ஆவது ஒரு பொருள் இல்லை; வேதம்
தப்பின போதும், அன்னான் தனு உமிழ் சரங்கள் தப்பா. 26

'உற்பத்தி அயனே ஒக்கும்; ஓடும்போது அரியே ஒக்கும்;
கற்பத்தின் அரனே ஒக்கும், பகைஞரைக் கலந்த காலை;
சிற்பத்தின் நம்மால் பேசச் சிறியவோ? என்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த என்றால், பிறிது ஒரு சான்றும் உண்டோ? 27

20. ஆற்றுமேல் - (அந்த அம்புகளின் ஆற்றலைத்) தாங்க வேண்டுமாயின்; 21. போகிய - போகும்படி; 23. அந்தரம் - வேற்றுமை; நோற்ககிற்பார் - எதிர்த்துத் தாங்க வல்லார்; 27. கற்பம் - உலகம் அழியும் காலம்; சிற்பம் - தொழில் திறமை; தற்பம் - தர்ப்பம், செருக்கு.

'குடக்கதோ? குணக்கதேயோ? கோணத்தின் பாலதேயோ?
தடத்த பேர் உலகத்தேயோ? விசும்பதோ? எங்கும்தானோ?
வடக்கதோ? தெற்கதோ? என்று உணர்ந்திலன்;—மனிதன் வல் வில்—
இடத்ததோ? வலத்ததோ? என்று உணர்ந்திலேன், யானும் இன்னும்.

'ஏற்றம் ஒன்று இல்லை என்பது ஏழைமைப் பாலது அன்றே?
ஆற்றல் சால் கலுழனேதான் ஆற்றுமே, அமரின் ஆற்றல்!—
காற்றையே மேற்கொண்டானோ? கனலையே கடாவினானோ?
கூற்றையே ஊர்கின்றானோ?—குரங்கின்மேல் கொண்டு நின்றான்.

'போய் இனித் தெரிவது என்னே? பொறையினால் உலகம் போலும்
வேய் எனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கி,
தீ எனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்,
நாய் எனத் தகுதும் அன்றே, காமனும் நாமும் எல்லாம். 30

'வாசவன், மாயன், மற்றை மலருளோன், மழு வாள் அங்கை
ஈசன் என்று இனைய தன்மை இளிவரும் இவரால் அன்றி,
நாசம் வந்து உற்ற போதும், நல்லது ஓர் பகையைப் பெற்றேன்;—
பூசல் வண்டு உறையும் தாராய்!—இது இங்குப் புகுந்தது' என்றான். 31

மாலியவான் அறிவுரை

''முன் உரைத்தேனை வாளா முனிந்தனை; முனியா உம்பி
இன் உரைப் பொருளும் கேளாய்; ஏது உண்டுஎனினும், ஓராய்;
நின் உரைக்கு உரை வேறு உண்டோ?— நெருப்பு உரைத்தாலும், நீண்ட
மின் உரைத்தாலும், ஒவ்வா விளங்கு ஒளி அலங்கல் வேலோய்!

'உளைவன எனினும், மெய்ம்மை உற்றவர், முற்றும் ஓர்ந்தார்,
விளைவன சொன்னபோதும், கொள்கிலை; விடுதி கண்டாய்;
கிளைதரு சுற்றம், வெற்றி, கேண்மை, நம் கல்வி, செல்வம்,
களைவு அருந் தானையோடும் கழிவது காண்டி' என்றான். 33

மகோதரன் இராவணனுக்குச் சொல்லிய உறுதிமொழிகள்

ஆயவன் உரைத்தலோடும், அப் புறத்து இருந்தான், ஆன்ற
மாயைகள் பலவும் வல்ல, மகோதரன் கடிதின் வந்து,
தீ எழ நோக்கி, 'என் இச் சிறுமை நீ செப்பிற்று?' என்னா,
ஓய்வுறு சிந்தையானுக்கு உறாத பேர் உறுதி சொன்னான்: 34

28. தடத்த - அகன்ற; 29. ஏற்றம் - ஊர்தி, வாகனம்; 30. சேவகம் - வீரம்; வீரச் சேவகம் - மிகுந்த வீரம்; 31. இளிவருதல் - இகழ்ச்சிக்கு ஆளாதல்; பூசல் - ஆரவாரம்; 32. ஏது - (நந்தி நவின்ற சாபமும், தீக் குளித்த வேதவதி 'நோய் உனக்கு யான்' என்று கூறிய சாபமும் ஆகிய) காரணங்கள்; 33. விடுதி கண்டாய் - விட்டிடுதலைச் செய்தாய்; 34. ஆன்ற - நிறைந்த.

' ''நன்றி ஈது'' என்று கொண்டால், நயத்தினை நயந்து, வேறு
வென்றியே ஆக, மற்றுத் தோற்று உயிர் விடுதல் ஆக,
ஒன்றிலே நிற்றல் போலாம், உத்தமர்க்கு உரியது; ஒல்கிப்
பின்றுமேல், அவனுக்கு அன்றோ, பழியொடு நரகம் பின்னை?

'திரிபுரம் எரிய, ஆங்கு ஓர் தனிச் சரம் துரந்த செல்வன்,
ஒருவன் இப் புவனம் மூன்றும் ஓர் அடி ஒடுக்கிக் கொண்டோன்,
பொருது, உனக்கு உடைந்து போனார்; மானிடர் பொருத போர்க்கு
வெருவுதி போலும்; மன்ன! கயிலையை வெருவல் கண்டாய்!

' ''வென்றவர் தோற்பர்; தோற்றோர் வெல்குவர்; எவர்க்கும் மேலாய்
நின்றவர் தாழ்வர்; தாழ்ந்தோர் உயர்குவர்; நெறியும் அஃதே''
என்றனர் அறிஞர் அன்றே! ஆற்றலுக்கு எல்லை உண்டோ?
புன் தவர் இருவர் போரைப் புகழ்தியோ?—புகழ்க்கு மேலோய்!

'தேவியை விடுதிஆயின், திறல்அது தீரும் அன்றே;
ஆவியை விடுதல் அன்றி, அல்லது ஒன்று ஆவது உண்டோ?
தா அரும் பெருமை அம்மா நீ இனித் தாழ்த்தது என்னே?
காவல! விடுதி, இன்று இக் கையறு கவலை, நொய்தின். 38

'இனி இறை தாழ்த்தி ஆயின், இலங்கையும் யாமும் எல்லாம்
கனியுடை மரங்கள் ஆக, கவிக் குலம் கடக்கும் காண்டி;
பனியுடை வேலைச் சில் நீர் பருகினன் பரிதி என்னத்
துனி உழந்து அயர்வது என்னே? துறத்தியால் துன்பம்' என்றான்.

'முன், உனக்கு, இறைவர் ஆன மூவரும் தோற்றார்; தேவர்
பின், உனக்கு ஏவல் செய்ய, உலகு ஒரு மூன்றும் பெற்றாய்;
புல் நுனைப் பனி நீர் அன்ன மனிசரைப் பொருள் என்று உன்னி,
என், உனக்கு இளைய கும்பகருணனை இகழ்ந்தது?—எந்தாய்!

'ஆங்கு அவன்தன்னைக் கூவி, ஏவுதிஎன்னின், ஐய!
ஓங்கலே போல்வான் மேனி காணவே ஒளிப்பர் அன்றே;
தாங்குவர் செரு முன் என்னின், தாபதர் உயிரைத் தானே
வாங்கும்' என்று இனைய சொன்னான்; அவன் அது மனத்துக் கொண்
[டான்.

35. நன்றி - நல்லது; நயத்தினை நயந்து - இனியதைப் பெற விரும்பி;
36. வெருவல் - அஞ்சுதல்; 37. புன் தவர் - எளிய தவத்தையுடையவர்;
41. தாங்குதல் - எதிர்த்து நிற்றல்.

மகோதரனை இராவணன் புகழ்தல்

'பெறுதியே, எவையும் சொல்லி;—பேர் அறிவாளா!—சீரிற்று
அறிதியே; என்பால் வைத்த அன்பினுக்கு அவதி உண்டோ?
உறுதியே சொன்னாய்' என்னா, உள்ளமும் வேறுபட்டான்;—
இறுதியே இயைவது ஆனால், இடை, ஒன்றால் தடை உண்டாமோ? 42

இராவணன் ஏவ, வீரர்கள் கும்பகருணனைத் துயில் எழுப்புதல்

'நன்று இது கருமம்' என்னா, 'நம்பியை நணுக ஓடிச்
சென்று இவண் தருதிர்' என்றான்; என்றலும், நால்வர் சென்றார்;
தென் திசைக் கிழவன் தூதர் தேடினர் திரிவர் என்ன,
குன்றினும் உயர்ந்த தோளான் கொற்ற மாக் கோயில் புக்கார்.

கிங்கரர் நால்வர் சென்று, அக் கிரி அனான் கிடந்த கோயில்
மங்குல் தோய் வாயில் சார்ந்து, 'மன்ன! நீ உணர்தி' என்ன,
தம் கையின் எழுவினாலே தலை செவி தாக்க, பின்னும்
வெங்கணான் துயில்கின்றானை வெகுளியால் இனைய சொன்னார்:†

'உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வு எலாம்
இறங்குகின்றது! இன்று காண்; எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,
உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்'!† 45

என்று சொல்ல, அன்னவன் எழுந்திராமை கண்டு போய்,
'மன்றல் தங்கு மாலை மார்ப! வன் துயில் எழுப்பலம்.'
அன்று, 'கொள்கை கேண்மின்' என்று மாவொடு ஆளி ஏவினான்,
'ஒன்றன்மேல் ஓர் ஆயிரம் உழக்கிவிட்டு எழுப்புவீர்.'† 46

'அனைய தானை அன்று செல்ல, ஆண்டு நின்று பேர்ந்திலன்;
இனைய சேனை மீண்டது' என்று இராவணற்கு இயம்பலும்
'வினையம் வல்ல நீங்கள் உங்கள் தானையோடு சென்மின்' என்று,
இனைய மல்லர் ஆயிராரை ஏவி நின்று இயம்பினான்.† 47

சென்றனர் பத்து நூற்றுச் சீரிய வீரர் ஓடி
'மன்றல் அம் தொங்கலான்தன் மனம்தனில் வருத்தம் மாற
இன்று இவன் முடிக்கும்' என்னா, எண்ணினர்; எண்ணி, ஈண்ட,
குன்று என உயர்ந்த தோளான் கொற்றமாக் கோயில் புக்கார்.†

44. கிங்கரர் - பணியாளர்; 46. அன்று - அப்பொழுது; கொள்கை - கோட்பாடு, ஈண்டு எழும்பும் வழி; 47. வினையம் - தொழில் திறம்.

திண் திறல் வீரன் வாயில் திறத்தலும், சுவாத வாதம்
மண்டுற, வீரர் எல்லாம் வருவது போவதாக,
கொண்டுறு தடக் கை பற்றி, குலமுடை வலியினாலே
கண் துயில் எழுப்ப எண்ணி, கடிது ஒரு வாயில் புக்கார். 49

ஓதநீர் விரிந்ததென்ன உறங்குவான் நாசிக் காற்றால்
கோது இலா மலைகள் கூடி, வருவது போவதாக,
ஈது எலாம் கண்ட வீரர் ஏங்கினர், துணுக்கமுற்றார்;
போதுவான் அருகு செல்லப் பயந்தனர், பொறி கொள் கண்ணார். 50

'இங்கு இவன் தன்னை யாம் இன்று எழுப்பல் ஆம் வகை எது?' என்று,
துங்க வெவ் வாயும் மூக்கும் கண்டு, மெய் துணுக்கமுற்றார்;
அங்கைகள் தீண்ட அஞ்சி, ஆழ் செவிஅதனினூடு,
சங்கொடு தாரை, சின்னம், சமைவுறச் சாற்றலுற்றார். 51

கோடு, இகல் தண்டு, கூடம், குந்தம், வல்லோர்கள் கூடி,
தாடைகள், சந்து, மார்பு, தலை எனும் இவற்றில் தாக்கி,
வாடிய கையர் ஆகி, மன்னவற்கு உரைப்ப, 'பின்னும்
நீடிய பரிகள் எல்லாம் நிரைத்திடும், விரைவின்' என்றான். 52

கட்டுறு கவன மா ஓர் ஆயிரம் கடிதின் வந்து,
மட்டு அற உறங்குவான்தன் மார்பிடை, மாலை மான
விட்டு உற நடத்தி, ஓட்டி, விரைவு உள சாரி வந்தார்;
தட்டுறு குறங்கு போலத் தடந் துயில் கொள்வதானான். 53

கொய்ம் மலர்த் தொங்கலான்தன் குரை கழல் வணங்கி, 'ஐய!
உய்யலாம் வகைகள் என்று, அங்கு எழுப்பல் ஆம் வகையே செய்தும்;
கய் எலாம் வலியும் ஓய்ந்த; கவன மா காலும் ஓய்ந்த;
செய்யலாம் வகை வேறு உண்டோ? செப்புதி, தெரிய' என்றார்.

'இடை பேரா இளையானை, இணை ஆழி மணி நெடுந் தேர்
படை பேரா வரும்போதும், பதையாத உடம்பானை,
மடை பேராச் சூலத்தால், மழு வாள் கொண்டு, எறிந்தானும்,
தொடை பேராத் துயிலானை, துயில் எழுப்பிக் கொணர்க!' என்றான்.

என்றலுமே அடி இறைஞ்சி, ஈர்-ஐஞ்ஞூற்று இராக்கதர்கள்,
வன் தொழிலால் துயில்கின்ற மன்னவன்தன் மாடு அணுகி,
நின்று இரண்டு கதுப்பும் உற, நெடு முசலம் கொண்டு அடிப்ப,
பொன்றினவன் எழுந்தாற்போல், புடைபெயர்ந்து அங்கு எழுந்திருந்
[தான்.

49. சுவாத வாதம் - மூச்சுக் காற்று; 52. கூடம் - சம்மட்டி; குந்தம் - ஈட்டி; சந்து - மூட்டுகள், உடற்பொருத்துகள்; 53. குறங்கு - தொடை; தொடை தட்டுதல் - உலக வழக்கு; 55. மடை பேரா - வாய் மழுங்காத; 56. முசலம் - உலக்கை.

மூவகை உலகும் உட்க, முரண் திசைப் பணைக் கை யானை
தாவரும் திசையின்நின்று சலித்திட, கதிரும் உட்க,
பூவுளான், புணரி மேலான், பொருப்பினுன், முதல்வர் ஆய
யாவரும் துணுக்குற்று ஏங்க, எளிதினின் எழுந்தான், வீரன்.

விண்ணினை இடறும் மோலி; விசும்பினை நிறைக்கும் மேனி;
கண்ணெனும் அவை இரண்டும் கடல்களின் பெரிய ஆகும்;
எண்ணினும் பெரியன் ஆன இலங்கையர் வேந்தன் பின்னோன்,
மண்ணினை அளந்து நின்ற மால் என வளர்ந்து நின்றான். 58

எழுந்த கும்பகருணன் உணவு முதலியன உட்கொள்ளுதல்

உறக்கம் அவ் வழி நீங்கி, உணத் தகும்
வறைக்கு அமைந்தன ஊனொடு, வாக்கிய
நறைக் குடங்கள் பெறான், கடை நக்குவான்,
இறக்க நின்ற முகத்தினை எய்துவான்; 59

ஆறு நூறு சகடத்து அடிசிலும்,
நூறு நூறு குடம் களும், நுங்கினுன்;
ஏறுகின்ற பசியை எழுப்பினுன்—
சீறுகின்ற முகத்து இரு செங்கணுன். 60

எருமை ஏற்றை ஓர் ஈர்-அறுநூற்றையும்
அருமை இன்றியே தின்று, இறை ஆறினுன்,
பெருமை ஏற்றது கோடும் என்றே—பிறங்கு
உருமைஏற்றைப் பிசைந்து, எரி ஊதுவான். 61

கும்பகருணன் தோற்றம்

இருந்த போதும், இராவணன் நின்றெனத்
தெரிந்த மேனியன், திண் கடலின் திரை
நெரிந்தது அன்ன புருவத்து நெற்றியான்,
சொரிந்த சோரி தன் வாய் வர, தூங்குவான்; 62

உதிர வாரியொடு ஊனொடு எலும்பு தோல்
உதிர, வாரி நுகர்வது ஓர் ஊணினுன்;
கதிர வாள் வயிரப் பணைக் கையினுன்;
கதிர வாள் வயிரக் கழற் காலினுன்; 63

59. வறை - வறுத்தல்; வாக்குதல் - வார்த்தல், ஊற்றுதல்; இறக்க - தாழ, இறங்க என்பது வலித்து நின்றது; 60. சகடம் - வண்டி; 61. பெருமை ஏற்றது - பெருமை பெற்றதாகிய உணவு. பேருண்டி; கோடும் - உட்கொள்வோம்; உருமை - இடி, ஐ சாரியை; 63. கதிர வாள் வயிரக் கழல் - சந்திரனுடைய ஒளி போன்ற வயிரக் கற்கள்.

இரும் பசிக்கு மருந்து என, எஃகினோடு
இரும்பு அசிக்கும் அருந்தும் எயிற்றினன்;
வரும் களிற்றினைத் தின்றனன்; மால் அரு
அருங் களில் திரிகின்றது ஓர் ஆசையான்; 64

சூலம் ஏகம் திருத்திய தோளினன்;
சூல மேகம் எனப் பொலி தோற்றத்தான்;
காலன்மேல் நிமிர் மத்தன்; கழல் பொரு
காலன்; மேல் நிமிர் செம் மயிர்க் கற்றையான்; 65

எயில் தலைத் தகர, தலத்து இந்திரன்
எயிறு அலைத்த கர தலத்து, எற்றினன்;
அயில் தலைத் தொடர் அங்கையன்; சிங்க ஊன்
அயிறலைத் தொடர் அங்கு அகல் வாயினன். 66

உடல் கிடந்துழி, உம்பர்க்கும் உற்று, உயிர்,
குடல் கிடந்து அடங்கா நெடுங் கோளினன்;
கடல் கிடந்தது நின்றதன்மேல் கதழ்
வட கடுங் கனல்போல் மயிர்ப் பங்கியான்; 67

திக்கு அடங்கலும் வென்றவன் சீறிட,
மிக்கு அடங்கிய வெங் கதிர் அங்கிகள்
புக்கு அடங்கிய மேருப் புழை என,
தொக்கு அடங்கித் துயில்தரு கண்ணினன்; 68

காம்பு இறங்கும் கன வரைக் கைம்மலை
தூம்பு உறங்கும் முகத்தின துய்த்து, உடல்
ஓம்புறும் முழை என்று உயர் மூழ்கினன்;
பாம்பு உறங்கும் படர் செவிப் பாழியான்; 69

இராவணன்முன் சென்று கும்பகருணன் வணங்குதல்

'கூயினன் நும் முன்' என்று அவர் கூறலும்,
போயினன், நகர் பொம்மென்று இரைத்து எழ;
வாயில் வல்லை நுழைந்து, மதி தொடும்
கோயில் எய்தினன், குன்று அன கொள்கையான். 70

64. அருந்தும் எயிற்றினன், அசிக்கும் எயிற்றினன் எனத் தனித்தனி இயையும்; அசித்தல் - அவமதித்துச் சிரித்தல்; 65. சூல மேகம் - சூல் கொண்ட முகில்; மத்தன் - செருக்குடையவன், உடற் கொழுப்பு உடையவன்; 66. எயில் தலைத் தகர - மதில் தலையுடைத்திடும்படி; 67. முதல் இரண்டடிகளால் தேவர்களையும் அஞ்சச் செய்யும் உருவத்தையுடையவன் என்பது பெறப்படும்; 69. காம்பு - மூங்கில்; தூம்பு - துளை.

நிலை கிடந்த நெடு மதிள் கோபுரத்து
அலை கிடந்த இலங்கையர் அண்ணலைக்
கொலை கிடந்த வேல் கும்பகருணன், ஓர்
மலை கிடந்தது போல, வணங்கினான். 71

தம்பியைத் தழுவி, உணவு அளித்துப் போர்க்கோலம் செய்தல்

வன் துணைப் பெருந் தம்பி வணங்கலும்,
தன் திரண்ட தோள் ஆரத் தழுவினான்—
நின்ற குன்று ஒன்று, நீள் நெடுங் காலொடும்
சென்ற குன்றைத் தழீஇயன்ன செய்கையான். 72

உடன் இருத்தி, உதிரத்தொடு ஒள் நறைக்
குடன் நிரைத்தவை ஊட்டி, தசைக் கொளீஇ,
கடல் நுரைத் துகில் சுற்றி, கதிர்க் குழாம்
புடை நிரைத்து ஒளிர் பல் கலன் பூட்டினான்.* 73

பேர விட்ட பெரு வலி இந்திரன்
ஊர விட்ட களிற்றொடும் ஓடு நாள்,
சோர விட்ட சுடர் மணி ஓடையை
வீரபட்டம் என, நுதல் வீக்கினான். 74

மெய் எலாம் மிளிர் மின் வெயில் வீசிட,
தொய்யில் வாசத் துவர் துதைந்து ஆடிய
கையின் நாகம் என, கடல் மேனியில்,
தெய்வம் நாறு செஞ் சாந்தமும் சேர்த்தினான். 75

விடம் எழுந்ததுபோல், நெடு விண்ணினைத்
தொட உயர்ந்தவன் மார்பிடைச் சுற்றினான்,
இடபம் உந்தும், எழில் இரு-நான்கு தோள்,
கடவுள் ஈந்த கவசமும் கட்டினான். 76

'போர்க் கோலம் செய்தது ஏன்?' என, கும்பகருணன் வினவுதல்

அன்ன காலையின், 'ஆயத்தம் யாவையும்
என்ன காரணத்தால்?' என்று இயம்பினான்—
மின்னின் அன்ன புருவமும், விண்ணினைத்
துன்னு தோளும், இடம் துடியாநின்றான். 77

73. குடன் - குடம்; 74. ஓடை - யானையினுடைய முகபடாம்; 77. ஆயத்தம் - ஏற்பாடுகள்.

கும்பகருணனைப் போர் செய்ய இராவணன் ஏவுதல்

'வானரப் பெருந் தானையர், மானிடர்,
கோ நகர்ப் புறம் சுற்றினர்; கொற்றமும்
ஏனை உற்றனர்; நீ அவர் இன் உயிர்
போனகத் தொழில் முற்றுதி, போய்' என்றான். 78

கும்பகருணன் அறிவுரை

'ஆனதோ வெஞ் சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான் புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே? 79

'கிட்டியதோ, செரு? கிளர் பொன் சீதையைச்
சுட்டியதோ? முனம், சொன்ன சொற்களால்,
திட்டியின்விடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வண்ணமே! 80

'கல்லலாம் உலகினை; வரம்பு கட்டவும்
சொல்லலாம்; பெரு வலி இராமன் தோள்களை
வெல்லலாம் என்பது, சீதை மேனியைப்
புல்லலாம் என்பது போலுமால்—ஐயா! 81

'புலத்தியன் வழிமுதல் வந்த பொய் அறு
குலத்து இயல்பு அழிந்தது; கொற்றம் முற்றுமோ?
வலத்து இயல் அழிவதற்கு ஏது; மை அறு
நிலத்து இயல் நீர் இயல் என்னும் நீரதால். 82

'கொடுத்தனை, இந்திரற்கு உலகும் கொற்றமும்;
கெடுத்தனை, நின் பெருங் கிளையும்; நின்னையும்
படுத்தனை; பல வகை அமரர் தங்களை
விடுத்தனை; வேறு இனி வீடும் இல்லையால். 83

'அறம் உனக்கு அஞ்சி, இன்று ஒளித்ததால்; அதன்
திறம் முனம் உழத்தலின், வலியும் செல்வமும்
நிறம் உனக்கு அளித்தது; அங்கு அதனை நீக்கி, நீ
இற, முன் அங்கு, யார் உனை எடுத்து நாட்டுவார்? 84

78. ஏனை - எனை, என்னை; போனகத் தொழில் - உண்ணுகின்ற செயல்; 79. சமம் - போர்; 80. திட்டியின்விடம் - திட்டிவிடம், இன் சாரியை, கண்ணில் நஞ்சு உடைய பாம்பு; 82. முற்றுதல் - முடிதல்; 83. வீடு - விடுதலை. 84. அதன் திறம் - அந்த அறத்தின் கூறுபாடு; நிறம் - புகழ்.

'தஞ்சமும் தருமமும் தகவுமே, அவர்
நெஞ்சமும் கருமமும் உரையுமே; நெடு
வஞ்சமும் பாவமும் பொய்யும் வல்ல நாம்
உஞ்சுமோ? அதற்கு ஒரு குறை உண்டாகுமோ? 85

'காலினின் கருங் கடல் கடந்த காற்றது
போல்வன குரங்கு உள; சீதை போகிலள்;
வாலியை உரம் கிழித்து ஏக வல்லன
கோல் உள; யாம் உளேம்; குறை உண்டாகுமோ?' 86

என்று கொண்டு இனையன இயம்பி, 'யான் உனக்கு
ஒன்று உளது உணர்த்துவது; உணர்ந்து கோடியேல்,
நன்று அது; நாயக! நயக்கிலாய்எனின்,
பொன்றினை ஆகவே கோடி; போக்கு இலாய்! 87

'தையலை விட்டு, அவன் சரணம் தாழ்ந்து, நின்
ஐயறு தம்பியோடு அளவளாவுதல்
உய் திறம்; அன்று எனின், உளது, வேறும் ஓர்
செய் திறம்; அன்னது தெரியக் கேட்டியால்: 88

'பந்தியில் பந்தியில் படையை விட்டு, அவை
சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல்
மந்திரம் அன்று; நம் வலி எலாம் உடன்
உந்துதல் கருமம்' என்று உணரக் கூறினன். 89

இராவணன் சினமொழி

'உறுவது தெரிய அன்று, உன்னைக் கூயது;
சிறு தொழில் மனிதரைக் கோறி, சென்று; எனக்கு
அறிவுடை அமைச்சன் நீ அல்லை, அஞ்சினை;
வெறுவிது, உன் வீரம்' என்று இவை விளம்பினன்: 90

'மறம் கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை;
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை;
இறங்கிய கண் முகிழ்த்து, இரவும் எல்லியும்
உறங்குதி, போய்' என, உளையக் கூறினன். 91

85. தஞ்சம் - அடைக்கலம் புகுந்தோரைத் தாங்குதல்; தகவு - நடுவு நின்று உண்மை கூறுதல்; 86. காலினின் - (தன்னுடைய) பாதங்களினால்; காற்றது - து பகுதிப் பொருள் விகுதி; 88. ஐயறு தம்பி - நின்னால் ஐயப்படத் தகாத தம்பி வீடணன்; 89. பந்தியில் பந்தியில் - பகுதி பகுதியாக; 91. உரிமை மாண்டனை - தகுதி இல்லாதவனாயினாய்.

'மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு, உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யான் அது புரிகிலேன்; எழுக போக!' என்றான். 92

'தருக, என் தேர், படை; சாற்று, என் கூற்றையும்;
வருக, முன் வானமும் மண்ணும் மற்றவும்;
இரு கை வன் சிறுவரோடு ஒன்றி என்னொடும்
பொருக, வெம் போர்' எனப் போதல்மேயினான். 93

'இது பொறுத்தி' என்று கூறி, கும்பகருணன் போருக்கு எழுதல்

அன்னது கண்டு, அவன் தம்பியானவன்
பொன் அடி வணங்கி, 'நீ பொறுத்தியால்' என,
வல் நெடுஞ் சூலத்தை வலத்து வாங்கினான்,
'இன்னம் ஒன்று உரை உளது' என்னக் கூறினான்: 94

'வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்; விதி
நின்றது; பிடர் பிடித்து உந்த நின்றது;
பொன்றுவென்; பொன்றினால், பொலன் கொள் தோளியை,
''நன்று'' என, நாயக விடுதி; நன்றுஅரோ. 95

'இந்திரன் பகைஞனும், இராமன் தம்பி கை
மந்திர அம்பினால் மடிதல் வாய்மையால்;
தந்திரம் காற்றுறு சாம்பல்; பின்வரும்
அந்தரம் உணர்ந்து, உனக்கு உறுவது ஆற்றுவாய். 96

'என்னை வென்றுளர்எனில், இலங்கை காவல!
உன்னை வென்று உயருதல் உண்மை; ஆதலால்,
பின்னை நின்று எண்ணுதல் பிழை; அப் பெய்வளை-
தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே. 97

'இற்றைநாள் வரை, முதல், யான் முன் செய்தன
குற்றமும் உள எனின் பொறுத்தி; கொற்றவ!
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய!
பெற்றனென் விடை' என, பெயர்ந்து போயினான். 98

96. அந்தரம் - முடிவு.

கும்பகருணனேடு பெரும் படை செல்லுமாறு இராவணன் பணித்தல்

அவ் வழி இராவணன் அனைத்து நாட்டமும்
செவ் வழி நீரொடும் குருதி தேக்கினன்;
எவ் வழியோர்களும் இரங்கி ஏங்கினர்;
இவ் வழி அவனும் போய், வாயில் எய்தினன். 99

'இரும் படை கடிப்பு எடுத்து எற்றி ஏகுக!
பெரும் படை இளவலோடு' என்ற பேச்சினல்,
வரும் படை வந்தது, வானுளோர்கள்தம்
சுரும்பு அடை மலர் முடி தூளி தூர்க்கவே. 100

படைகளின் பெருக்கம்

தேர்க் கொடி, யானையின் பதாகை, சேண் உறு
தார்க் கொடி என்று இவை தகைந்து வீங்குவ—
போர்க் கொடுந் தூளி போய்த் துறக்கம் பண்புற,
ஆர்ப்பன துடைப்பன போன்ற ஆடுவ. 101

எண்ணுறு படைக்கலம் இமுக எற்றிட
நண்ணுறு பொறிகளும், படைக்கு நாயகர்
கண்ணுறு பொறிகளும், கதுவ, கண் அகல்
விண்ணுறு மழை எலாம் கரிந்து, வீழ்ந்தவால். 102

தேர் செல, கரி செல, நெருக்கிச் செம் முகக்
கார் செல, தேர் செல, புரவிக் கால் செல,
தார் செல, கடை செல, சென்ற தானையும்,
'பார் செலற்கு அரிது' என, விசும்பில் பாய்ந்ததால். 103

கும்பகருணன் தேரில் ஏறுதல்

ஆயிரம் கோள் அரி, ஆளி ஆயிரம்,
ஆயிரம் மத கரி, பூதம் ஆயிரம்,
மா இரு ஞாலத்தைச் சுமப்ப வாங்குவது
ஏய் இருஞ் சுடர் மணித் தேர் ஒன்று ஏறினன். 104

99. எவ் வழியோர்கள் - எல்லாப் பக்கங்களிலும் உள்ளவர்கள்; 100. கடிப்பு - குறுந்தடி; பேச்சு - ஆணை; 102. இமுகுதல் - உராய்தல்; எற்றுதல் - ஈண்டு மோதுதல்; 103. தார் - முன் செல்லும் படை, தூசிப் படை; கடை - பின்னணிப் படை, கூழைப் படை; தானை (இடைவெளியில் சென்ற) சேனை.

ஆயுதங்களும் உணவு முதலியனவும் சேனைகள் சுமந்து செல்லுதல்

தோமரம், சக்கரம், சூலம், கோல், மழு,
நாம வேல், உலக்கை, வாள், நாஞ்சில், தண்டு, எழு,
வாம வில், வல்லையம், கணையம், மற்று உள
சேம வெம் படை எலாம் சுமந்து, சென்றவால். 105

நறையுடைத் தசும்பொடு நறிதின் வெந்த ஊன்
குறைவு இல் நல் சகடம் ஓர் ஆயிரம் கொடு,
பிறையுடை எயிற்றவன் பின்பு சென்றனர்,
முறை முறை கைக்கொடு முடுகி நீட்டுவார். 106

ஒன்று அல பற்பலர் உதவும் ஊன் நறை
பின்ற அரும் பிலனிடைப் பெய்யுமாறுபோல்,
வன் திறல் இரு கரம் வாங்கி மாந்தியே,
சென்றனன், யாவரும் திடுக்கம் எய்தவே.* 107

'கணம் தரு குரங்கொடு கழிவதுஅன்று, இது;
நிணம் தரு நெடுந் தடிக்கு உலகு நேருமோ?
பிணம் தலைப்பட்டது; பெயர்வது, எங்கு இனி;
உணர்ந்தது கூற்றம்' என்று, உம்பர் ஓடினர். 108

கும்பகருணனை, 'இவன் யார்?' என, வீடணனிடம் இராமன் வினவல்

பாந்தளின் நெடுந் தலை வழுவி, பாரொடும்
வேந்து என விளங்கிய மேரு மால் வரை
போந்ததுபோல் பொலந் தேரில் பொங்கிய
ஏந்தலை, ஏந்து எழில் இராமன் நோக்கினன். 109

'வீணை என்று உணரின், அஃது அன்று; விண் தொடும்
சேண் உயர் கொடியது, வய வெஞ் சீயமால்;
காணினும், காலின் மேல் அரிய காட்சியன்;
பூண் ஒளிர் மார்பினன்; யாவன் போலுமால்? 110

105. வல்லையம் - எறி ஈட்டி; கணையம் - வளைதடி; சேமப் படை - கையில் உள்ள படைக்கலங்கள் அழிந்தபோது உதவுதற்காகச் சேமித்து வைக்கப்பட்டுள்ள படைக்கலங்கள்; 106. நறிதின் - நன்றாக; பிறையுடை எயிற்றவன் - பிறைபோலும் பற்களையுடைய கும்பகருணன்; 107. பின்றுதல் - மீளுதல்; 108. நெடுந்தடி - மிக்க மாமிசம்; 109. பாரொடும் மேரு மால் வரை வந்தது போலத் தேரொடு கும்பகருணன் வந்தான் என்க;

'தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின்,
நாள் பல கழியுமால்; நடுவண் நின்றது ஓர்
தாளுடை மலைகொலாம்; சமரம் வேட்டது ஓர்
ஆள் என உணர்கிலேன்; ஆர்கொலாம் இவன்? 111

'எழும் கதிரவன் ஒளி மறைய, எங்கணும்
விழுங்கியது இருள், இவன் மெய்யினால்; வெரீஇ,
புழுங்கும் நம் பெரும் படை இரியல்போகின்றது;
அழுங்கல் இல் சிந்தையாய்! ஆர் கொலாம் இவன்?* 112

'அரக்கன் அவ் உரு ஒழித்து, அரியின் சேனையை
வெருக் கொளத் தோன்றுவான், கொண்ட வேடமோ?
தெரிக்கிலேன் இவ் உரு; தெரியும் வண்ணம், நீ
பொருக்கென, வீடண! புகறியால்' என்றான். 113

வீடணன், கும்பகருணனது தன்மையை எடுத்துரைத்தல்

ஆரியன் அனைய கூற, அடி இணை இறைஞ்சி, 'ஐய!
பேர் இயல் இலங்கை வேந்தன் பின்னவன்; எனக்கு முன்னோன்;
கார் இயல் காலன் அன்ன கழல் கும்பகருணன் என்னும்
கூரிய சூலத்தான்' என்று, அவன் நிலை கூறலுற்றான்: 114

'தவன் நுணங்கியரும் வேதத் தலைவரும் உணரும் தன்மைச்
சிவன் உணர்ந்து, அலரின் மேலைத் திசைமுகன் உணரும் தேவன்-
அவன் உணர்ந்து எழுந்த காலத்து, அசுரர்கள் படுவது எல்லாம்,
இவன் உணர்ந்து எழுந்த காலத்து இமையவர் படுவர், எந்தாய்!

'ஆழியாய்! இவன் ஆகுவான்,
ஏழை வாழ்வுடை எம்முனோன்
தாழ்வு இலா ஒரு தம்பியோன்;
ஊழி நாளும் உறங்குவான், 116

'காலனார் உயிர்க் காலனால்;
காலின் மேல் நிமிர் காலினான்;
மாலினார் கெட, வாகையே,
சூலமே கொடு, சூடினான்; 117

111. சமரம் - போர்; 115. தவன் நுணங்கியர் - தவத்தால் உடல் சுருங்கி அறிவுக் கூர்மையை அடையப் பெற்றவர்; உணர்தல் - தியானித்தல்; தேவன் - திருமால்; 117. காலின் - காற்றைக் காட்டிலும்.

‘தாங்கு கொம்பு ஒரு நான்கு கால்
ஓங்கல் ஒன்றினை, உம்பர்கோன்
வீங்கு நெஞ்சன் விழுந்திலான்
தூங்க, நின்று சுழற்றினான்; 118

‘கழிந்த தீயொடு காலையும்
பிழிந்து சாறு கொள் பெற்றியான்;
அழிந்து மீன் உக, ஆழி நீர்
இழிந்து, காலினின் எற்றுவான்; 119

‘ஊன் உயர்ந்த உரத்தினான்,
மேல் நிமிர்ந்த மிடுக்கினான்;
தான் உயர்ந்த தவத்தினான்,
வான் உயர்ந்த வரத்தினான்; 120

‘திறம் கொள் சாரி திரிந்த நாள்,
கறங்கு அலாது கணக்கு இலான்;
இறங்கு தாரவன் இன்றுகாறு
உறங்கலால், உலகு உய்ந்ததால்; 121

‘சூலம் உண்டு; அது சூர் உளோர்
காலம் உண்டது; கைக் கொள்வான்;
ஆலம் உண்டவன் ஆழிவாய்,
ஞாலம் உண்டவ! நல்கினான்; 122

‘மின்னின் ஒன்றிய விண்ணுளோர்,
‘முன் நில்’ என்று, அமர் முற்றினார்-
என்னில், என்றும் அவ் எண்ணிலார்
வென்னில் அன்றி, விழித்திலான்; 123

‘ ‘‘தருமம் அன்று இதுதான்; இதால்
வரும், நமக்கு உயிர் மாய்வு’’ எனா,
உருமின் வெய்யவனுக்கு உரை
இருமை மேலும் இயம்பினான். 124

‘மறுத்த தம்முனை, வாய்மையால்
ஒறுத்தும், ஆவது உணர்த்தினான்;
வெறுத்தும், ‘மாள்வது மெய்’ எனா
இறுத்து, நின் எதிர் எய்தினான். 125

118. தூங்க - தொங்கிக்கொண்டிருக்க; 121. கணக்கு இலான் - (பிறிது ஒன்றின்) தன்மை இல்லாதவன்; 122. சூர் - வீரம்; 123. வென் - வெரிந், முதுகு; இவன் முன் நின்று பொருதார் யாரும் இலர் என்றபடி; 125. ஒறுத்தல் - வன்மொழியால் கடிதல்; ஆவது - மேல் நிகழ்வது.

' "நன்று இது அன்று நமக்கு" எனா,
ஒன்று நீதி உணர்த்தினான்;
இன்று காலன் முன் எய்தினான்'
என்று சொல்லி, இறைஞ்சினான். 126

சுக்கிரீவன், கும்பகருணனை உடன் சேர்த்துக் கொள்ளுதல் நலம் எனல்

என்று அவன் உரைத்தலோடும், இரவி சேய், 'இவனை இன்று
கொன்று ஒரு பயனும் இல்லை; கூடுமேல், கூட்டிக்கொண்டு
நின்றது புரிதும்; மற்று இந் நிருதர்கோன் இடரும் நீங்கும்;
"நன்று" என நினைந்தேன்' என்றான்; நாதனும், 'நயன் இது' என்றான்.

கும்பகருணனை அழைத்துவர வீடணன் செல்லுதல்

'ஏகுதற்கு உரியார் யாரே?' என்றலும், இலங்கை வேந்தன்,
'ஆகின், மற்று அடியனே சென்று, அறிவினால், அவனை உள்ளம்
சேகு அறத் தெருட்டி, ஈண்டுச் சேருமேல், சேர்ப்பென்' என்றான்;
மேகம் ஒப்பானும், 'நன்று, போக!' என்று விடையும் ஈந்தான்.

தந்திரக் கடலை நீந்தி, தன் பெரும் படையைச் சார்ந்தான்;
வெந் திறலவனுக்கு, 'ஐய! வீடணன் விரைவில் உன்பால்
வந்தனன்' என்னச் சொன்னார்; வரம்பு இலா உவகை கூர்ந்து,
சிந்தையால் களிக்கின்றான் தன் செறிகழல் சென்னி சேர்த்தான்.

கும்பகருணன், 'வந்தது தகுதி அன்று' என வீடணனுக்குக் கூறுதல்

முந்தி வந்து இறைஞ்சினானை, முகந்து, உயிர் மூழ்கப் புல்லி,
'உய்ந்தனை, ஒருவன் போனாய்' என மனம் உவக்கின்றேன் தன்
சிந்தனை முழுதும் சிந்த, தெளிவு இலார் போல மீள
வந்தது என், தனியே?' என்றான், மழையின் நீர் வழங்கு கண்ணான்.

'அவயம் நீ பெற்றவாறும், அமரரும் பெறுதல் ஆற்றா,
உவய லோகத்தினுள்ள சிறப்பும், கேட்டு உவந்தேன், உள்ளம்;
கவிஞரின் அறிவு மிக்காய்! காலன் வாய்க் களிக்கின்றேம்பால்
நவை உற வந்தது என், நீ? அமுது உண்பாய் நஞ்சு உண்பாயோ?

' "குலத்து இயல்பு அழிந்ததேனும், குமர! மற்று உன்னைக் கொண்டே
புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற்று" என்னா,
வலத்து இயல் தோளை நோக்கி மகிழ்கின்றேன்; மன்ன! வாயை
உலத்தினை, திரிய வந்தாய்; உளைகின்றது உள்ளம், அந்தோ!

127. நின்றது - மேல் நிகழ வேண்டிய செயல்; 128. சேகு - ஐயம்; 132. வலம் - வெற்றி; உலத்தினை - வாய் ஈரம் உலரச் செய்தனை; திரிய - திரும்பி.

'அறப் பெருந் துணைவர், தம்மை அபயம் என்று அடைந்த நின்னைத்
துறப்பது துணியார், தங்கள் ஆர் உயிர் துறந்த போதும்;
இறப்பு எனும் பதத்தை விட்டாய்; இராமன் என்பளவும் மற்று இப்
பிறப்பு எனும் புன்மை இல்லை; நினைந்து, என்கொல் பெயர்ந்த வண்
[ணம்?

'அறம் என நின்ற நம்பற்கு அடிமை பெற்று, அவன்தனாலே
மறம் என நின்ற மூன்றும் மருங்கு அற மாற்றி, மற்றும்,
திறம் என நின்ற தீமை இம்மையே தீர்ந்த செல்வ!
பிறர் மனை நோக்குவேமை உறவு எனப் பெறுதி போலாம்? 134

'நீதியும், தருமம் நின்ற நிலைமையும், புலமைதானும்,
ஆதி அம் கடவுளாலே அருந் தவம் ஆற்றிப் பெற்றாய்;
வேதியர் தேவன் சொல்லால், விளிவு இலா ஆயுப் பெற்றாய்;
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும்,—தக்கோய்!

ஏற்றிய வில்லோன், யார்க்கும் இறையவன், இராமன் நின்றான்;
மாற்ற அருந் தம்பி நின்றான்; மற்றையோர் முற்றும் நின்றார்;
கூற்றமும் நின்றது, எம்மைக் கொல்லிய; விதியும் நின்ற;
தோற்ற எம் பக்கல், ஐய! வெவ் வலி தொலைய வந்தாய். 136

'ஐய! நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி, ஆங்கே
உய்கிலைஎன்னின், மற்று இவ் அரக்கராய் உள்ளோர் எல்லாம்
எய் கணை மாரியாலே இறந்து, பாழ் முழுதும் பட்டால்,
கையினால் எள் நீர் நல்கி, கடன் கழிப்பாரைக் காட்டாய். 137

'வருவதும், இலங்கை மூதூர்ப் புலை எலாம் மாண்ட பின்னை;
திருவுறை மார்பனோடும் புகுந்து, பின் என்றும் தீராப்
பொருவ அருஞ் செல்வம் துய்க்கப் போதுதி, விரைவின்' என்றான்.
'கருமம் உண்டு உரைப்பது' என்றான்; 'உரை' என, கழறலுற்றான்: 138

இராமனைச் சரண்புகுமாறு வீடணன் கும்பகருணனுக்கு உரைத்தல்

'இருள் உறு சிந்தையேற்கும் இன் அருள் சுரந்த வீரன்
அருளும், நீ சேரின்; ஒன்றோ, அவயமும் அளிக்கும்; அன்றி,
மருள் உறு பிறவி நோய்க்கு மருந்தும் ஆம்; மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை ஒழித்து, வீடு அளிக்கும் அன்றே. 139

134. மறம் என நின்ற மூன்று - பாவத்திற்குக் காரணம் என்னுமாறு நின்ற காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று; அறியாமை, திரிபு உணர்ச்சி, ஐய உணர்வு எனினும் ஆம்; 135. வேதியர் தேவன் - பிரமன்; 136. வெவ் வலி - மிக்க வலிமை; 138. புலை - புலைத் தொழிலையுடையோர்.

'எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவென்; தந்து, உன் ஏவலின் நெடிது நிற்பென்;
உனக்கு இதின் உறுதி இல்லை; உத்தம! உன் பின் வந்தேன்
மனக்கு நோய் துடைத்து, வந்த மரபையும் விளக்கு வாழி! 140

'போதலோ அரிது; போனால், புகலிடம் இல்லை; வல்லே,
சாதலோ சரதம்; நீதி அறத்தொடும் தழுவி நின்றாய்
ஆதலால், உளதாம் ஆவி அநாயமே உகுத்து என்? ஐய!
வேத நூல் மரபுக்கு ஏற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும். 141

'தீயவை செய்வர் ஆகின், சிறந்தவர், பிறந்த உற்றார்,
தாய்அவை, தந்தைமார் என்று உணர்வரோ, தருமம் பார்ப்பார்?
நீ அவை அறிதி அன்றே? நினக்கு நான் உரைப்பது என்னோ?
தூயவை துணிந்த போது, பழி வந்து தொடர்வது உண்டோ?

'மக்களை, குரவர் தம்மை, மாதரை, மற்றுளோரை,
ஒக்கும் இன் உயிர் அன்னாரை, உதவி செய்தாரோடு ஒன்ற,
"துக்கம், இத் தொடர்ச்சி" என்று, துறப்பரால், துணிவு பூண்டோர்;
மிக்கது நலனே ஆக, வீடுபேறு அளிக்கும் அன்றே! 143

'தீவினை ஒருவன் செய்ய, அவனொடும் தீங்கு இலாதோர்
வீவினை உறுதல், ஐய! மேன்மையோ? கீழ்மைதானோ?
ஆய் வினை உடையை அன்றே? அறத்தினை நோக்கி, ஈன்ற
தாய் வினை செய்ய அன்றோ, கொன்றனன், தவத்தின் மிக்கான்?

'கண்ணுதல், தீமை செய்ய, கமலத்து முளைத்த தாதை
அண்ணல்தன் தலையின் ஒன்றை அறுக்க அன்று அமைந்தான் அன்றே?
புண் உறு புலவு வேலோய்! பழியொடும் பொருந்தி, பின்னை,
எண்ணுறு நரகின் வீழ்வது அறிஞரும் இயற்றுவாரோ? 145

141. போதல் - உயிர் தப்பிப் போதல்; அநாயம் - வீண்; 142. தாய் அவை - இருபெயரொட்டு, அவ்வை என்பது அவை எனக் குறைந்து நின்றது; 144. வீவினை உறுதல் - இறத்தல்; ஆய் வினை - ஆராய்ச்சி செய்யும் திறமை; தாய் - ஈண்டுப் பரசுராமன் தாயாகிய இரேணுகை; அவள் தண்ணீர் கொண்டு வர நீர்த்துறைக்குச் சென்ற போது, அங்குப் புனல் விளையாட்டு அயர்ந்த சித்திரரதன் என்னும் கந்தருவனைக் கண்டு மனம் நெகிழ்ந்தாள். அதனை ஞானக் கண்ணால் அறிந்த அவள் கணவன் சமதக்கினி அவளைக் கொல்லப் பரசுராமனை ஏவ, அவன் அவளைக் கொன்றனன் என்பது இதிகாசக் கதை; 145. பிரமன் தனக்கு உரிய நான்கு தலைகளோடு ஐந்தாவதாக ஒரு தலையினைப் படைத்துக் கொண்டு சிவனோடு ஒப்பத் தன்னையும் எண்ணிச் செருக்கு உற்றான். சிவன், அவன் தலைகளுள் ஒன்றைக் கிள்ளி ஆணவத்தை அடக்கினர் என்பது புராணச் செய்தி.

'உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து, அதன் உதிரம் ஊற்றி,
சுடல் உறச் சுட்டு, வேறு ஓர் மருந்தினால், துயரம் தீர்வர்;
கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமம் அன்றால்,
மடலுடை அலங்கல் மார்ப! மதி உடையவர்க்கு மன்னனே! 146

'காக்கலாம் நும்முன் தன்னை எனின், அது கண்டது இல்லை;
ஆக்கலாம் அறத்தை வேறே என்னினும், ஆவது இல்லை;
தீக் கலாம் கொண்ட தேவர் சிரிக்கலாம்; செருவில் ஆவி
போக்கலாம்; புகலாம், பின்னை நரகு; அன்றிப் பொருந்திற்று உண்டோ?

'மறம் கிளர் செருவில் வென்று வாழ்ந்திலை; மண்ணின்மேலா
இறங்கினை; இன்றுகாறும் இளமையும் வறிதே ஏக,
உறங்கினை என்பது அல்லால், உற்றது ஒன்று உளதோ? என், நீ
அறம் கெட உயிரை நீந்து மேற்கொள்வான் அமைந்தது?—ஐயா! 148

'திரு மறு மார்பன் நல்க, அனந்தரும் தீர்ந்து, செல்வப்
பெருமையும் எய்தி, வாழ்தி; ஈறு இலா நாளும் பெற்றாய்;
ஒருமையே அரசு செய்வாய்; உரிமையே உனதே; ஒன்றும்
அருமையும் இவற்றின் இல்லை; காலமும் அடுத்தது, ஐயா! 149

'தேவர்க்கும் தேவன் நல்க, இலங்கையில் செல்வம் பெற்றால்,
ஏவர்க்கும் சிறியை அல்லை; யார், உனை நலியும் ஈட்டார்?—
மூவர்க்கும் தலைவர் ஆன மூர்த்தியார், அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றார், காகுத்த வேடம் காட்டி! 150

'உன் மக்கள் ஆகி உள்ளார், உன்னொடும் ஒருங்கு தோன்றும்
என் மக்கள் ஆகி உள்ளார், இக் குடிக்கு இறுதி சூழ்ந்தான்-
தன் மக்கள் ஆகி உள்ளார், தலையொடும் திரிவர் அன்றே—
புன்மக்கள் தருமம் பூணாப் புல மக்கள் தருமம் பூண்டால்? 151

'முனிவரும் கருணை வைப்பர்; மூன்று உலகத்தும் தோன்றி
இனி வரும் பகையும் இல்லை; "ஈறு உண்டு" என்று இரங்க வேண்டா;
துனி வரும் செறுநர் ஆன தேவரே துணைவர் ஆவர்;—
கனி வரும் காலத்து, ஐய! பூக் கொய்யக் கருதலாமோ? 152

146. கோட்டம் - ஒருவகை மணப்பொருள்; 147. தீக் கலாம் - கொடிய மன்றுபாடு; 149. ஒருமையே - பொதுமையின்றித் தனியாகவே, இணையின்றி; 151. புல மக்கள் - அறிவுடையோர்.

'வேத நாயகனே உன்னைக் கருணையால் வேண்டி, விட்டான்;
காதலால், என்மேல் வைத்த கருணையால், கருமம் ஈதே;
ஆதலால், அவனைக் காண, அறத்தொடும் திறம்பாது, ஐய!
போதுவாய் நீயே' என்னப் பொன் அடி இரண்டும் பூண்டான்.

கும்பகருணன் மறுப்புரை

தும்பி அம் தொடையல் மாலைச் சுடர் முடி படியில் தோய,
பம்பு பொற் கழல்கள் கையால் பற்றினன் புலம்பும் பொன் தோள்
தம்பியை எடுத்து, மார்பில் தழுவி, தன் தறுகணூடு
வெம் புணீர் சொரிய நின்றான், இனையன விளம்பலுற்றான்: 154

'நீர்க் கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது, அங்குப் போகேன்;
தார்க் கோல மேனி மைந்த! என் துயர் தவிர்த்திஆகின்,
கார்க் கோல மேனியானைக் கூடுதி, கடிதின் ஏகி. 155

'மலரின்மேல் இருந்த வள்ளல் வழு இலா வரத்தினால், நீ
உலைவு இலாத் தருமம் பூண்டாய்; உலகு உளதனையும் உள்ளாய்;
தலைவன் நீ, உலகுக்கு எல்லாம்; உனக்கு அது தக்கதேயால்;
புலை உறு மரணம் எய்தல் எனக்கு இது புகழதேயால். 156

'கருத்து இலா இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம்ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராதுஆயின்,
பொருத்து உறு பொருள் உண்டாமோ? பொரு தொழிற்கு உரியர் ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியது அம்மா.

'தும்பி அம் தொடையல் வீரன் சுடு கணை துரப்ப, சுற்றும்
வெம்பு வெஞ் சேனையோடும், வேறு உள கிளைஞரோடும்,
உம்பரும் பிறரும் போற்ற, ஒருவன் மூவுலகை ஆண்டு,
தம்பியை இன்றி மாண்டு கிடப்பனோ, தமையன் மண்மேல்? 158

'அணை இன்றி உயர்ந்த வென்றி அஞ்சினார் நகையது ஆக,
பிணை ஒன்று கண்ணாள் பங்கன் பெருங் கிரி நெருங்கப் பேர்த்த
பணை ஒன்று திரள் தோள் காலபாசத்தால் பிணிப்ப, கூசி,
துணை இன்றிச் சேரல் நன்றோ, தோற்றுள கூற்றின் சூழல்? 159

'செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திரு நகர்ச் செல்வம் தேறி,
வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர் கொண்ட பகையை வாழ்த்தி,
அம்பு இட்டுத் துன்னம் கொண்ட புண்ணுடை நெஞ்சோடு, ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான்—கூற்றையும், ஆடல் கொண்டேன்! 160

158. தும்பி - வண்டு; 159. அணை - தடை; 160. இஞ்சி - மதில்; துன்னம் கொள்ளல் - துளைபடுதல்.

'அனுமனை, வாலி சேயை, அருக்கன் சேய்தன்னை, அம் பொன்
தனு உடையவரை, வேறு ஓர் நீலனை, சாம்பன்தன்னை,
கனி தொடர் குரங்கின் சேனைக் கடலையும், கடந்து, மூடும்
பனி துடைத்து உலகம் சுற்றும் பரிதியின் திரிவென்; பார்த்தி!

'ஆலம் கண்டு அஞ்சி அமரர்போல் அரிகள் ஓட,
சூலம் கொண்டு ஓடி, வேலை தொடர்வது ஓர் தோற்றம் தோன்ற,
நீலம் கொள் கடலும் ஓட, நெருப்பொடு காலும் ஓட,
காலம் கொள் உலகும் ஓட, கறங்கு எனத் திரிவென்; காண்டி!

'செருவிடை அஞ்சார் வந்து, என் கண் எதிர் சேர்வர்ஆகின்,
கரு வரை, கனகக் குன்றம், என்னல் ஆம் காட்சி தந்த
இருவரும் நிற்க, மற்று அங்கு யார் உளர், அவரை எல்லாம்,
ஒருவரும் திரிய ஒட்டேன், உயிர் சுமந்து உலகில்' என்றான். 163

'தாழ்க்கிற்பாய்அல்லை; என் சொல் தலைக்கொளத் தக்கது என்று
கேட்கிற்பாய்ஆகின், எய்தி, அவரொடும் கெழீஇய நட்பை
வேட்கிற்பாய்; ''இனி, ஓர் மாற்றம் விளம்பினால் விளைவு உண்டு'' என்று,
சூழ்க்கிற்பாய்அல்லை; யாரும் தொழ நிற்பாய்!' எனச் சொன்னான்.

'போதி நீ, ஐய! பின்னைப் பொன்றினார்க்கு எல்லாம் நின்ற
வேதியர் தேவன்தன்னை வேண்டினை பெற்று, மெய்ம்மை
ஆதி நூல் மரபினாலே, கடன்களும் ஆற்றி, ஏற்றி,
மா துயர் நரகம் நண்ணாவண்ணமும் காத்தி மன்னோ. 165

'ஆகுவது ஆகும், காலத்து; அழிவதும், அழிந்து சிந்திப்
போகுவது; அயலே நின்று போற்றினும், போதல் திண்ணம்;
சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம் செய்யாது,
ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை; என்றும் உள்ளாய்!' 166

வீடணன் விடைபெறுதல்

என்று, அவன்தன்னை மீட்டும் எடுத்து, மார்பு இறுகப் புல்லி,
நின்று நின்று, இரங்கி ஏங்கி, நிறை கணால் நெடிது நோக்கி,
'இன்றொடும் தவிர்ந்தது அன்றே, உடன்பிறப்பு' என்று விட்டான்;
வென்றி வெந் திறலினானும், அவன் அடித்தலத்து வீழ்ந்தான்.

வணங்கினான்; வணங்கி, கண்ணும் வதனமும் மனமும் வாயும்
உணங்கினான்; உயிரோடு யாக்கை ஒடுங்கினான்; 'உரைசெய்து இன்னும்
பிணங்கினால் ஆவது இல்லை; பெயர்வது; என்று உணர்ந்து பேர்ந்தான்.
குணங்களால் உயர்ந்தான், சேனைக் கடல் எலாம் கரங்கள் கூப்ப. 168

வீடணன் செல்லுதல் கண்டு, கும்பகருணன் கண்ணீர் உதிர்த்து நிற்றல்

'கள்ள நீர் வாழ்க்கையேமைக் கைவிட்டு, காலும் விட்டான்;
பிள்ளைமை துறந்தான்' என்னாப் பேதுறும் நிலையன் ஆகி,
வெள்ள நீர் வேலைதன்னில் வீழ்ந்த நீர் வீழ, வெங் கண்
உள்ள நீர் எல்லாம் மாறி, உதிர நீர் ஒழுக, நின்றான். 169

வீடணன் உரையைக் கேட்ட இராமன் கூற்று

எய்திய நிருதர் கோனும், இராமனை இறைஞ்சி, 'எந்தாய்!
உய் திறம் உடையார்க்கு அன்றோ, அறன் வழி ஒழுகும் உள்ளம்?
பெய் திறன் எல்லாம் பெய்து பேசினேன்; பெயருந் தன்மை
செய்திலன்; குலத்து மானம் தீர்ந்திலன், சிறிதும்' என்றான்.

கொய் திறச் சடையின் கற்றைக் கொந்தளக் கோலக் கொண்டல்
நொய்தினில் துளக்கி, 'ஐய! ''நுன் எதிர், நும்முனோனை
எய்து இறத் துணித்து வீழ்த்தல் இனிது அன்று'' என்று இளைய சொன்னேன்;
செய் திறன் இனி வேறு உண்டோ? விதியை யார் தீர்க்கிற்பார்?' 171

அரக்கர் சேனை வானர சேனையை வளைத்தல்

என இனிது உரைக்கும் வேலை, இராக்கதர் சேனை என்னும்
கனை கடல், கவியின் தானைக் கடலினை வளைந்து கட்டி,
முனை தொழில் முயன்றதாக, மூவகை உலகும் முற்றத்
தனி நெடுந் தூளி ஆர்த்தது; ஆர்த்தில, பரவை தள்ளி, 172

ஓடின புரவி; வேழம் ஓடின; உருளைத் திண் தேர்
ஓடின; மலைகள் ஓட, ஓடின உதிரப் பேர் ஆறு;
ஆடின கவந்த பந்தம்; ஆடின அலகை; மேல்மேல்
ஆடின பதாகை; ஓங்கி ஆடின, பறவை அம்மா! 173

மூளையும், தசையும், என்பும், குருதியும், நிணமும், மூரி
வாளொடும் குழம்பு பட்டார், வாள் எயிற்று அரக்கர்; மற்றுஅவ்
ஆள் அழி குருதி வெள்ளத்து அழுந்தின கவிகள்;—அம் பொன்
தோளொடு மரனும் கல்லும் சூலமும் வேலும் தாக்க. 174

169. கை விடுதல் - விட்டுவிடுதல்; கால் விடுதல் - தொடர்பு அறுதல்; 170. குலத்து மானம் - குலப் பற்று; 171. கொய் திறச் சடையின் கற்றைக் கொந்தளம் - கொய்து விடுதற்கு உரிய சடைத் தொகுதியினைக்கொண்ட மயிர் முடி; கொந்தளம் - குந்தலம், மயிர்முடி.

எய்தனர், நிருதர்; கல்லால் எறிந்தனர், கவிகள்; ஏந்திப்
பெய்தனர், அரக்கர்; பற்றிப் பிசைந்தனர் அரிகள்; பின்று
வைதனர், யாதுதானர்; வலித்தனர், வானரேசர்;
செய்தனர், பிறவும் வெம் போர்; திகைத்தனர், தேவர் எல்லாம். 175

கும்பகருணன் போர் தொடங்குதல்

நீரினை ஓட்டும் காற்றும், காற்று எதிர் நிற்கும் நீரும்,
போர் இணை ஆக ஏன்று பொருகின்ற பூசல் நோக்கி,
தேரினை ஓட்டி வந்தான்—திருவினைத் தேவர் தங்கள்
ஊரினை நோக்கா வண்ணம், உதிர வேல் நோக்கியுள்ளான். 176

ஊழியில் பட்ட காலின் உலகங்கள் பட்டால் ஒப்ப,
பூழியில் பட்டு, செந்நீர்ப் புணரியில் பட்டு, பொங்கும்
சூழியின் பட்ட நெற்றிக் களிற்றொடும், துரந்த தேரின்
ஆழியில் பட்ட அன்றே—அவனியில் பட்ட எல்லாம். 177

குன்று கொண்டு எறியும்; பாரில் குதிக்கும்; வெங் கூலம் பற்றி
ஒன்று கொண்டு ஒன்றை எற்றும்; உதைக்கும்; விட்டு உழக்கும்; வாரித்
தின்று தின்று உமிழும்; பற்றிச் சிரங்களைத் திருகும்; தேய்க்கும்;
மென்று மென்று இழிச்சும்; விண்ணில் வீசும்; மேல் பிசைந்து பூசும்.

வாரியின் அமுக்கும்; கையால் மண்ணிடைத் தேய்க்கும்; வாரி
நீரிடைக் குவிக்கும்; அப்பால், நெருப்பிடை நிமிர வீசும்;
தேரிடை எற்றும்; எட்டுத் திசையினும் செல்லச் சிந்தும்;
தூரிடை மரத்து மோதும்; மலைகளில் புடைக்கும், சுற்றி. 179

பறைந்தனர், அமரர் அஞ்சி; பல் பெரும் பிணத்தின் பம்மல்
நிறைந்தன, பறவை எல்லாம்; நெடுந் திசை நான்கும் நான்கும்
மறைந்தன; பெருமை தீர்ந்த, மலைக் குலம்; வற்றி வற்றிக்
குறைந்தன, குரக்கு வெள்ளம்; கொன்றனன், கூற்றும் கூச.

'மற்று இனி ஒருவர்மேல் ஓர் மரனொடும் கற்கள் வீசப்
பெற்றிலம் ஆதும் அன்றே; இன்றொடும் பெறுவது ஆமே;
அற்றன, தீங்கும்' என்னா, அரிக் குலத் தலைவர் பற்றி,
எற்றின, எறிந்த, எல்லாம் இணை நெடுந் தோளின் ஏற்றான்.

175. யாதுதானர் - அரக்கர்; 177. ஊழியில் பட்ட - ஊழி இறுதியில் தோன்றிய; 178. வெங் கூலம் - கொடிய வால்; இழிச்சுதல் - துப்புதல்; 179. தூர் - மரத்தின் அடிப்பகுதி; 180. பறைந்தனர் - பறந்தனர்; பம்மல் - தொகுதி.

கல்லொடு மரனும், வேரும், கட்டையும், காலில் தீண்டும்
புல்லொடு பிறவும், எல்லாம், பொடிப் பொடி ஆகிப் போன;
'இல்லை, மற்று எறியத் தக்க, எற்றுவ, சுற்றும்' என்ன,
பல்லொடு பல்லு மென்று பட்டன, குரங்கும் உட்கி. 182

குன்றின் வீழ் குரீஇக் குழாத்தின் குழாம் கொடு குதித்துக் கூடி,
சென்று மேல் எழுந்து பற்றி, கைத்தலம் தேயக் குத்தி,
வன் திறல் எயிற்றால் கவ்வி, வள் உகிர் மடியக் கீளா,
'ஒன்றும் ஆகின்றது இல்லை' என்று, இரிந்து ஓடிப் போன. 183

நீலன் பொருது தோற்றல்

மூலமே மண்ணில் மூழ்கிக் கிடந்தது ஓர் பொருப்பை, முற்றும்
காலம் மேல் எழுந்த கால்போல், கையினால் கடிதின் வாங்கி,
நீலன், மேல் நிமிர்ந்தது ஆங்கு ஓர் நெருப்பு எனத் திரித்து விட்டான்;
சூலமே கொண்டு நூறி, முறுவலும் தோன்ற நின்றான். 184

'பெயர்ந்து ஒரு சிகரம் தேடின், அச்சம் ஆம் பிறர்க்கும்' என்னா,
புயங்களே படைகள் ஆகத் தேர் எதிர் ஓடிப் புக்கான்,
இயங்களும் கடலும் மேகத்து இடிகளும் ஒழிய, யாரும்
பயம் கொள, கரங்கள் ஓச்சிக் குத்தினான், உதைத்தான், பல் கால். 185

கைத்தலம் சலித்து, காலும் குலைந்து, தன் கருத்து முற்றான்,
நெய்த்தலை அழலின் காந்தி எரிகின்ற நீலன்தன்னை,
எய்த்து உயிர் குடிப்பல் என்னா எற்றினான், இடது கையால்;
மெய்த்தலை, சூலம் ஓச்சான், வெறுங் கையான் என்று வெள்கி.

நீலன் தளர்ந்தது கண்டு, அங்கதன் வந்து பொருதல்

ஆண்டு, அது நோக்கி நின்ற அங்கதன், ஆண்டுச் சால
நீண்டது ஓர் நெடுந் திண் குன்றம் நில முதுகு ஆற்ற வாங்கி,
'மாண்டனன் அரக்கன் தம்பி' என்று உலகு ஏழும் வாழ்த்தத்
தூண்டினன்; அதனை அன்னான் ஒரு தனித் தோளின் ஏற்றான்.

ஏற்ற போது, அனைய குன்றம் எண்ண அருந் துகளது ஆகி,
வீற்று வீற்று ஆகி, ஓடி விழுதலும், கவியின் வெள்ளம்,
'ஊற்றம் ஏது, எமக்கு!' என்று எண்ணி, உடைந்தது; குமரன் உற்ற
சீற்றமும் தானும் நின்றான்; பெயர்ந்திலன், சென்று பாதம்.

183. கீளா - கிழித்து; 184. மூலமே - அடிப்பகுதி முழுமையும்; 188. ஊற்றம் - வலிமை.

இடக் கையால் அரக்கன் ஆங்கு ஓர் எழு முனை வயிரத் தண்டு,
தடுக்கல் ஆம் தரத்தது அல்லா வலியது, தருக்கின் வாங்கி,
'மடக்குவாய் உயிரை' என்று, வீசினன்; அதனை மைந்தன்
தடக் கையால் பிடித்துக் கொண்டான், வானவர் தன்னை வாழ்த்த.

பிடித்தது சுழற்றி, 'மற்று அப் பெரு வலி அரக்கன்தன்னை,
இடித்து, உரும்ஏறு, குன்றத்து எரி மடுத்து, இயங்குமாபோல்,
அடித்து, உயிர் குடிப்பென்' என்று, அனல் விழித்து, ஆர்த்து, மண்டி,
கொடித் தடந் தேரின் முன்னர்க் குதித்து, எதிர் குறுகி, நின்றான்.

கும்பகருணன்–அங்கதன் உரையாடல்

நின்றவன்தன்னை அன்னான் நெருப்பு எழ நிமிர நோக்கி,
'பொன்ற வந்து அடைந்த தானைப் புரவலன் ஒருவன்தானோ?
அன்று, அவன் மகனோ? எம் ஊர் அனல் மடுத்து அரக்கர்தம்மை
வென்றவன்தானோ? யாரோ? விளம்புதி, விரைவின்' என்றான்.

'நும்முனை வாலின் சுற்றி, நோன் திசை நான்கும் தாவி,
மும் முனை நெடு வேல் அண்ணல் முளரி அம் சரணம் தாழ்ந்த
வெம் முனை வீரன் மைந்தன்; நின்னை என் வாலின் வீக்கி,
தெம் முனை இராமன் பாதம் வணங்கிட, செல்வென்' என்றான்.

'உந்தையை, மறைந்து, ஓர் அம்பால் உயிருண்ட உதவியோற்குப்
பந்தனைப் பகையைச் செற்றுக் காட்டலை என்னின், பாரோர்
நிந்தனை நின்னைச் செய்வர்; நல்லது நினைந்தாய்; நேரே
வந்தனை புரிவர் அன்றே, வீரராய் வசையின் தீர்ந்தார்? 193

'இத்தலை வந்தது, என்னை இராமன்பால், வாலின் ஈர்த்து
வைத்தலைக் கருதி அன்று; வானவர் மார்பின் தைத்த
முத் தலை அயிலின் உச்சி முதுகு உற, மூரி வால்போல்
கைத்தலம் காலும் தூங்க, கிடத்தலைக் கருதி' என்றான். 194

அங்கதன் எறிந்த தண்டு பல துண்டமாதல்

அற்று அவன் உரைத்தலோடும், அனல் விழித்த, அசனி குன்றத்து
உற்றது போலும் என்னும் ஒலிபட, உலகம் உட்க,
பொன் தடந் தோளின் வீசிப் புடைத்தனன்; பொறியின் சிந்தி,
இற்றது நூறு கூறாய், எழு முனை வயிரத் தண்டு. 195

189. எழு முனை வயிரத் தண்டு - ஏழு முனைகளை உடைய வயிரத்தால் ஆகிய ஒரு தண்டாயுதம்; மடக்குவாய் - ஒழிப்பாய்; 191. தானைப் புரவலன் - சுக்கிரீவன்; 193. பந்தனைப் பகை - கட்டாக உள்ள பகை; 194. தூங்க - தொங்க.

அங்கதன் தோல்வியுற, அனுமன் அங்கு வந்து எதிர்த்தல்

தண்டு இற, தடக் கை ஓச்சி, 'தழுவி அத் தறுகணானைக்
கொண்டு இறப்புறுவென்' என்னா, தலையுறக் குனிக்குங் காலை,
புண் திறப்புற வலாளன் கையினால் புகைந்து குத்த,
மண் திறப்பு எய்த வீழ்ந்தான்; மாருதி இமைப்பின் வந்தான்.

மறித்து அவன் அவனைத் தன் கை வயிர வான் சூலம் மார்பில்
குறித்துற எறியலுற்ற காலையில், குன்றம் ஒன்று
பறித்து, அவன் நெற்றி முற்றப் பரப்பிடை, பாகம் உள்ளே
செறித்தெனச் சுரிக்க வீசி, தீர்த்தனை வாழ்த்தி ஆர்த்தான்.

தலையினில் தைத்து வேறு ஓர் தலை என நின்றதன்ன
மலையினைக் கையின் வாங்கி, மாருதி வயிர மார்பின்,
உலை உற வெந்த பொன் செய் கம்மியர் கூடம் ஒப்ப,
குலை உறு பொறிகள் சிந்த, வீசி, தோள் கொட்டி ஆர்த்தான்.

அனுமன் போர் செய்துநிற்க, அங்கதனை வானரர் எடுத்துச் செல்லுதல்

அவ்வழி வாலி சேயை அரிகுல வீரர் அஞ்சார்
வவ்வினர் கொண்டு போனார்; மாருதி வானை முற்றும்
கவ்வியது அனையது ஆங்கு ஓர் நெடு வரை கடிதின் வாங்கி,
எவ்வம் இல் ஆற்றலானை நோக்கி நின்று, இனைய சொன்னான்:

அனும-கும்பகருணர் வஞ்சினம்

'எறிகுவென் இதனை நின்மேல்; இமைப்புறும் அளவில் ஆற்றல்
மறிகுவது அன்றி, வல்லை மாற்றினை என்னின், வன்மை
அறிகுவர் எவரும்; பின்னை யான் உன்னோடு அமரும் செய்யேன்;
பிறிகுவென்; உலகில், வல்லோய்! பெரும் புகழ் பெறுதி' என்றான்.

மாற்றம் அஃது உரைப்பக் கேளா, மலை முழை திறந்தது என்னக்
கூற்று உறழ் பகுவாய் விள்ள நகைத்து,' நீ கொணர்ந்த குன்றை
ஏற்றனென்; ஏற்ற காலத்து, இறை அதற்கு ஒற்கம் எய்தின்,
தோற்றனென், உனக்கு; என் வன்மை சுருங்கும்' என்று அரக்கன்
[சொன்னான்.

196. இறப்புறுவென் - இறப்புறச் செய்வேன், செல்வேன் எனலும் ஆம்; வலாளன் - வல்லவனாகிய கும்பகருணன்; மண் திறப்பு எய்தல் - பூமி பிளத்தல்; 197. பாகம் - (மலையின்) பகுதி; சுரிக்க - உள்ளே பதிய; தீர்த்தன் - தூயவனாகிய இராமன்; 198. பொன் - உலோகம், ஈண்டு இரும்பு; கூடம் - சம்மட்டி; குலை - திரள்; 199. எவ்வம் - குற்றம், துன்பம்; 201. ஒற்கம் - தளர்ச்சி.

கும்பகருணன் வலிமை கண்டு, அனுமன் அப்பால் போதல்

மாருதி, 'வல்லைஆகின், நில், அடா! மாட்டாய்ஆகின்,
பேருதி, உயிர்கொண்டு' என்று, பெருங் கையால் நெருங்க விட்ட
கார் உதிர் வயிரக் குன்றைக் காத்திலன், தோள்மேல் ஏற்றான்;
ஓர் உதிர் நூறு கூறாய் உக்கது, எவ் உலகும் உட்க. 202

இளக்கம் ஒன்று இன்றி நின்ற இயற்கை பார்த்து, 'இவனது ஆற்றல்
அளக்குறற்பாலும் ஆகா; குலவரை அமரின் ஆற்றா;
துளக்குறும் நிலையன் அல்லன்; சுந்தரத் தோளன் வாளி
பிளக்குமேல், பிளக்கும்' என்னா, மாருதி பெயர்ந்து போனான்.

குரக்குச் சேனையின் அழிவு

'எழுபது வெள்ளத்துள்ளார் இறந்தவர் ஒழிய, யாரும்
முழுவதும் மாள்வர், இன்றே இவன் வலத்து அமைந்த முச் சூல்
கழுவினில்' என்று வானோர் கலங்கினார், நடுங்கினாரால்—
'பொழுதினின் உலகம் மூன்றும் திரியும்' என்று உள்ளம் பொங்கி.

தாக்கினார்; தாக்கினார்தம் கைத்தலம் சலித்தது அன்றி,
நூக்கினார் இல்லை; ஒன்றும் நோவு செய்தாரும் இல்லை-
ஆக்கினான்; களத்தின் ஆங்கு ஓர் குரங்கினது அடியும் இன்றிப்
போக்கினான்; ஆண்மையாலே புதுக்கினான், புகழை அம்மா!

'சங்கத்து ஆர் குரங்கு சாய, தாபதர் என்னத் தக்கார்
இங்கு உற்றார் அல்லரோ தான்? வேறும் ஓர் இலங்கை உண்டோ?
எங்குற்றார் எங்குற்றார்?' என்று எடுத்து அழைத்து, இமையோர் அஞ்ச,
துங்கத் தோள் கொட்டி, ஆர்த்தான்—கூற்றையும் துணுக்கம் கொண்
[டான்.

பறந்தலைஅதனின் வந்த பல் பெருங் கவியின் பண்ணை
இறந்தது கிடக்க, நின்ற இரிதலின், யாரும் இன்றி
வறந்தது; சோரி பாய வளர்ந்தது, மகர வேலை—
குறைந்துளது, உவாவுற்று ஓதம் கிளர்ந்து மீக்கொண்டது என்ன. 207

இலக்குவன் கும்பகருணனுடன் போரிடுதல்

குன்றும் கற்களும் மரங்களும் குறைந்தன; குரங்கின்
வென்றி அம் பெருஞ் சேனை ஓர் பாதியின் மேலும்
அன்று தேய்ந்தது' என்று உரைத்தலும், அமரர் கண்டு உவப்பச்
சென்று தாக்கினன், ஒரு தனிச் சுமித்திரை சிங்கம். 208

203. இளக்கம் - தளர்ச்சி; 204. சூல் - சூலம்; 205. நூக்குதல் - அசைத்துத் தள்ளுதல்; 206. துங்கம் - உயர்ச்சி, வலிமையும் ஆம்; 207. பறந்தலை - போர்க்களம்; உவா - நிறைமதி; ஓதம் - கடல்.

நாண் எறிந்தனன், சிலையினை; அரக்கியர் நகு பொன்
பூண் எறிந்தனர்; படியிடை இடி பொடித்தென்னச்
சேண் எறிந்து எழு திசை செவிடு எறிந்தன; அலகை,
தூண் எறிந்தன கையெடுத்து, ஆடின துணங்கை. 209

இலக்குவன் கடிது ஏவின, இரை பெறுது இரைப்ப,
சிலைக் கடுங் கணை நெடுங் கணம் சிறையுடன் செல்வ,
உலைக் கொடுங் கனல் வெதும்பிட வாய் எரிந்து ஓடி,
குலக் கயங்களில் குளித்தன; குடித்தன, குருதி. 210

அலை புடைத்த வாள் அரக்கரைச் சில கழுத்து அரிவ;
சில, சிரத்தினைத் துணித்து, அவை திசைகொண்டு செல்வ;
கொலை படைத்த வெங் களத்திடை விழா, கொடு போவ;
தலை படைத்தன போன்றனவால், நெடுஞ் சரங்கள். 211

உருப் பதங்கனை ஒப்பன சில கணை, ஓடைப்
பொருப்பதங்களை உருவி, மற்று அப்புறம் போவ,
செருப் பதம் பெறு அரக்கர்தம் தலை பல சிந்தி,
பருப்பதங்கள் புக்கு ஒளிப்பன, முழை புகு பாம்பின். 212

மின் புகுந்தன பல் குழுவாம் என மிளிர்வ,
பொன் புகுந்து ஒளிர் வடிம்பின கடுங் கணை போவ,
முன்பு நின்றவர் முகத்திற்கும், கடைக் குழை முதுகின்
பின்பு நின்றவர் பிடர்க்கும், இவ் விசை ஒக்கும், பிறழா. 213

போர்த்த பேரியின் கண்ணன, காளத்தின் பொகுட்ட,
ஆர்த்த வாயன, கையன, ஆனையின் கழுத்த,
ஈர்த்த தேரன, இவுளியின் தலையன, எவர்க்கும்
பார்த்த நோக்கன, கலந்தன—இலக்குவன் பகழி. 214

மருப்பு இழந்தன;—களிறு எலாம்—வால் செவி இழந்த;
நெருப்பு உகும் கண்கள் இழந்தன; நெடுங் கரம் இழந்த;
செருப் புகும் கடுங் காத்திரம் இழந்தன; சிகரப்
பொருப்பு உருண்டனவாம் எனத் தலத்திடைப் புரண்ட. 215

209. பொன் பூண் - பொற்றூலி; துணங்கை - முடக்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றியடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து; 210. குலக் கயம் - திசை யானை; 212. உரு - உருவம்; பதங்கம் - சூரியன்; செருப் பதம் - போர் செய்யும் செவ்வி; 213. வடிம்பு - விளிம்பு; 214. பொகுட்டு - தாமரைப் பூவில் உள்ள கொட்டை, ஈண்டு அந்தக் கொட்டை போன்ற காளத்தின் முனையைக் குறித்தது; 215. காத்திரம் - யானையின் முன்னங் கால்கள்.

நிரந்தரம் தொடை நெகிழ்த்தலின், திசை எங்கும் நிறைந்த
சரம் தலைத்தலை படப் பட மயங்கின சாய்ந்த;
உரம் தலத்துற உழைத்தவால்; பிழைத்தது ஒன்று இல்லை—
குரம் தலத்தினும் விசும்பினும் மிதித்திலாக் குதிரை. 216

பல்லவக் கணை பட, படு புரவிய, பல் கால்
வில்லுடைத் தலையாளொடு சூதரை வீழ்த்த,
எல்லை அற்ற செங் குருதியின் ஈர்ப்புண்ட அல்லால்,
செல்லகிற்றில, நின்றில—கொடி நெடுந் தேர்கள். 217

பேழை ஒத்து அகல் வாயன பேய்க் கணம் முகக்கும்
மூழை ஒத்தன—கழுத்து அற வீழ்ந்தன, முறை சால்
ஊழை ஒத்தன ஒரு கணை தைத்தன, உதிரத்
தாழி ஒத்த வெங் குருதியில் மிதப்பன, தலைகள். 218

ஒட்டி நாயகன் வென்றி நாள் குறித்து ஒளிர் முளைகள்
அட்டி வைத்தன பாலிகை நிகர்த்தன—அழிந்து
நட்டவாம் என வீழ்ந்தன, துடிகளின் நவை தீர்
வட்ட வான்கணில், வதிந்தன வருண சாமரைகள். 219

எரிந்த வெங் கணை நெற்றியில் படுதொறும், யானை,
அரிந்த அங்குசத்து அங்கையின் கல்வியின் அமைவால்,
திரிந்த வேகத்த, பாகர்கள் தீர்ந்தன, செருவில்
புரிந்த வானரத் தானையில் புக்கன, புயலின். 220

வேனிலான் அன்ன இலக்குவன் கடுங் கணை விலக்க,
மான வெள் எயிற்று அரக்கர்தம் படைக்கல வாரி
போன போன வன் திசைதொறும் பொறிக் குலம் பொடிப்ப,
மீன் எலாம் உடன் விசும்பின்நின்று உதிர்ந்தென வீழ்ந்த. 221

கரம் குடைந்தன, தொடர்ந்து போய்க் கொய் உளைக் கடு மாக்
குரம் குடைந்தன, வெரிநுறக் கொடி நெடுங் கொற்றத்
தரம் குடைந்தன, அணி நெடுந் தேர்க் குலம் குடைந்த,—
அரம் குடைந்தன அயில் நெடு வாளிகள் அம்மா! 222

216. உரம் - மார்பு; குரம் - குளம்பு; 217. பல்லவக் கணை - தளிர் போன்ற அம்பு; தலையாள் - தேரில் இருந்து போர் செய்யும் தேர் வீரர்; சூதர் - தேர்ப்பாகர்; 218. பேழை - பெட்டி; மூழை - அகப்பை; ஊழ் - ஊழ்வினை; தாழி - மிடா; 219. குத்திட்டாற்போல் வீழ்ந்த துடிகளின் கண்களில் சாமரைகள் பதிந்து வீழ்ந்திருப்பது முளைப் பாலிகை போலக் காட்சியளிக்ின்றது; வருணம் - நல்ல நிறம்; 221. படைக்கல வாரி - படைக்கலங்களாகிய கடல்.

'துரக்கும், மெய்யுணர்வு இரு வினைகளை எனும் சொல்லின்,
கரக்கும் வீரதை தீமையை' எனும் இது கண்டோம்;
இரக்கம் நீங்கினர், அறத்தொடும் திறம்பினர்எனினும்,
அரக்கர் ஆக்கையை அரம்பையர் தழுவினர், விரும்பி. 223

மறக் கொடுந் தொழில் அரக்கர்கள், மறுக்கிலா மழைபோல்
நிறக் கொடுங் கணை நெருப்பொடு நிகர்வன நிமிர,
இறக்கம் எய்தினர் யாவரும், எய்தினர் எனின், அத்
துறக்கம் என்பதின் பெரியது ஒன்று உளது எனச் சொல்லேம்.

ஒருவரைக் கரம், ஒருவரைச் சிரம், மற்று அங்கு ஒருவர்
குரை கழல் துணை, தோள் இணை, பிற மற்றும் கொளலால்,
விரவலர்ப் பெரு வெறுமைய ஆயின; வெவ்வேறு
இரவு கற்றன போன்றன—இலக்குவன் பகழி. 225

சிலவரைக் கரம், சிலவரைச் செவி, சிலர் நாசி,
சிலவரைக் கழல், சிலவரைக் கண், கொளும் செயலால்,
நில வரைத் தரு பொருள்வழித் தண் தமிழ் நிரப்பும்
புலவர் சொல் துறை புரிந்தவும் போன்றன—சரங்கள். 226

அறத்தின் இன் உயிர் அனையவன் கணை பட, அரக்கர்,
'இறத்தும், இங்கு இறை நிற்பின்' என்று இரியலின் மயங்கி,
திறத்திறம் படத் திசைதொறும் திசைதொறும் சிந்திப்
புறத்தின் ஓடினர், ஓடின குருதியே போல. 227

இலக்குவன் வில் ஆண்மையைக் கும்பகருணன் வியத்தல்

செருவில் மாண்டவர் பெருமையும், இலக்குவன் செய்த
வரி வில் ஆண்மையும், நோக்கிய புலத்தியன் மருமான்,
'திரிபுரஞ் செற்ற தேவனும் இவனுமே செருவின்
ஒரு விலாளர்' என்று ஆயிரம் கால் எடுத்து உரைத்தான். 228

படர் நெடுந் தடந் தட்டிடைத் திசைதொறும் பாகர்
கடவுகின்றது, காற்றினும் மனத்தினும் கடியது,
அடல் வயங் கொள் வெஞ் சீயம் நின்று ஆர்க்கின்றது, அம் பொன்
வட பெருங் கிரி பொருவு தேர் ஓட்டினன் வந்தான். 229

223. கரக்கும் - மறைத்துவிடும்; வீரதை - வீரம்; மெய்யுணர்வு இரு வினைகளை ஒழிக்கும் என்பதை உரை அளவையால் கண்டது போல, வீரப் பண்பு பாவத்தைப் போக்கும் என்பதைக் காட்சி அளவையால் கண்டோம் என்பது முதல் ஈரடிகளின் கருத்து; 224. இறக்கம் - இறப்பு; 225. இரவு - இரத்தல் தொழில்; 226. பொருள்வழி - பொருளுக்கு ஏற்ப; தமிழ் - ஈண்டுத் தமிழ்ச் செய்யுள், செல்வரிடத்துப் பொருள் பெற்றுத் தமிழ் பாடும் புன் புலவர் அவர் தந்த பொருள் அளவுக்கு ஏற்பப் பாடி நிரப்பும் தன்மை போல, இலக்குவன் அம்பு இடைத்த அளவுக்கு ஏற்பத் தமக்கு உரிய அறுத்தல் தொழிலைச் செய்தன; 228. மருமான் - வழித் தோன்றல்.

அனுமன் தோள்மேல் இலக்குவன் ஏறிச் சென்று, பொருதல்

தொளை கொள் வான் நுகச் சுடர் நெடுந் தேர் மிசைத் தோன்றி,
வளை கொள் வெள் எயிற்று அரக்கன் வெஞ் செருத் தொழில் மலைய,
'கிளை கொளாது, இகல்' என்று எண்ணி, மாருதி கிடைத்தான்,
'இளைய வள்ளலே! ஏறுதி தோள்மிசை' என்றான். 230

ஏறினான், இளங் கோளரி; இமையவர் ஆசி
கூறினார்; எடுத்து ஆர்த்தது, வானரக் குழுவும்;
நூறு பத்துடைப் பத்தியின் நொறில் பரி பூண்ட
ஆறு தேரினும் அகன்றது, அவ் அனுமன்தன் தடந் தோள்.

தன்னின் நேர் பிறர் தான் அலாது இல்லவன் தோள்மேல்,
துன்னு பேர் ஒளி இலக்குவன் தோன்றிய தோற்றம்,
பொன்னின் மால் வரை வெள்ளி மால் வரை மிசைப் பொலிந்தது
என்னுமாறு அன்றி, பிறிது எடுத்து இயம்புவது யாதோ? 232

ஆங்கு, வீரனோடு அமர் செய்வான் அமைந்த வாள் அரக்கன்,
தாங்கு பல் கணைப் புட்டிலும் தகை பெறக் கட்டி,
வீங்கு தோள் வலிக்கு ஏயது, விசும்பில் வில் வெள்க,
வாங்கினான், நெடு வடவரை புரைவது ஓர் வரி வில். 233

கும்பகருணன் வீரவார்த்தையும், இலக்குவன் மறுமொழியும்

'இராமன் தம்பி நீ; இராவணன் தம்பி நான்; இருவேம்
பொரா நின்றேம்; இது காணிய வந்தனர், புலவோர்;
பராவும் தொல் செரு முறை வலிக்கு உரியன பகர்ந்து,
விராவு நல் அமர் விளைக்குதும், யாம்' என விளம்பா, 234

'பெய் தவத்தினோர் பெண்கொடி, எம்முடன் பிறந்தாள்,
செய்த குற்றம் ஒன்று இல்லவள், நாசி வெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ! மற்று அவள் கூந்தல் தொட்டு ஈர்த்த
கை தலத்திடைக் கிடத்துவென்; காக்குதி' என்றான். 235

அல்லினால் செய்த நிறத்தவன் அனையது பகர,
மல்லினால் செய்த புயத்தவன், 'மாற்றங்கள் நும்பால்
வில்லினால் சொல்லின் அல்லது, வெந் திறல் வெள்கச்
சொல்லினால் சொலக் கற்றிலம், யாம்' எனச் சொன்னான். 236

230. நுகம் - நுகத்தடி; கிளை - இனம், ஈண்டு ஒப்பு.

இருவரும் செய்த பெரும் போர்

'விண் இரண்டு கூறு ஆயது; பிளந்தது வெற்பு;
மண் இரண்டு உறக் கிழிந்தது' என்று இமையவர் மறுக,
கண் இரண்டினும் தீ உக, கதிர் முகப் பகழி
எண்—இரண்டினோடு இரண்டு ஒரு தொடை தொடுத்து எய்தான். 237

கொம்பு நாலுடைக் குலக் கரிக் கும்பத்தில் குளித்த,
உம்பர் ஆற்றலை ஒதுக்கிய, உரும் எனச் செல்வ,
வெம்பு வெஞ் சினத்து இராவணற்கு இளையவன் விட்ட
அம்பு பத்தினோடு எட்டையும் நான்கினால் அறுத்தான். 238

அறுத்த காலையின், அரக்கனும் அமரரை நெடு நாள்
ஒறுத்தது, ஆயிரம் உருவது, திசைமுகன் உதவப்
பொறுத்தது, ஆங்கு ஒரு புகர் முகக் கடுங் கணைப் புத்தேள்,
'இறுத்து மாற்று, இது வல்லையேல்' என்று, கோத்து, எய்தான்.

புரிந்து நோக்கிய திசைதொறும், பகழியின் புயலால்,
எரிந்து செல்வதை நோக்கிய இராமனுக்கு இளையான்,
தெரிந்து, மற்ற அதுதன்னை ஓர் தெய்வ வெங் கணையால்
அரிந்து வீழ்த்தலும், ஆயிரம் உருச் சரம் அற்ற.* 240

ஆறு-இரண்டு வெங் கடுங் கணை அனுமன்மேல் அழுத்தி,
ஏறு வெஞ் சரம் இரண்டு இளங் குமரன்மேல் ஏற்றி,
நூறும் ஐம்பதும் ஒரு தொடை தொடுத்து, ஒரு நொடியில்,
கூறு திக்கையும் விசும்பையும் மறைத்தனன், கொடியோன்.

மறைத்த வாளிகள் எவற்றையும், அவற்றினால் மாற்றி,
துறைத் தலம்தொறும் தலம்தொறும் நின்று தேர் சுமக்கும்
பொறைக்கு அமைந்த வெங் கரி, பரி, யாளி, மாப் பூதம்,
திறத் திறம் படத் துணித்து, அவன் தேரையும் சிதைத்தான்.

தேர் அழிந்தது, செங் கதிர்ச் செல்வனைச் சூழ்ந்த
ஊர் அழிந்ததுபோல்; துரந்து ஊர்பவர் உலந்தார்;
நீர் அழிந்திடா நெடு மழைக் குழாத்திடை நிமிர்ந்த
பார வெஞ் சிலை அழிந்தெனத் துமிந்தது, அப் பரு வில். 243

செய்த போரினை நோக்கி, இத் தேரிடைச் சேர்ந்த
கொய் உளைக் கடுங் கோள் அரி முதலிய குழுவை
எய்து கொன்றனனோ? நெடு மந்திரம் இயம்பி,
வைது கொன்றனனோ?' என, வானவர் மயர்ந்தார். 244

239. பொறுத்தது - தாங்கப் பெற்றது; புத்தேள் - தெய்வம்;
243. ஊர் - ஊர்கோள், பரிவேடம்; துரத்தல் - செலுத்துதல்.

கும்பகருணனும் இலக்குவனும் தரையில் நின்று பொருதல்

ஊன்று தேரொடு சிலை இலன், கடல் கிளர்ந்து ஒப்பான்,
'ஏன்று, மற்று அவன் இன் உயிர் குடிப்பென்' என்று, உலகம்
மூன்றும் வென்றமைக்கு இடு குறி என்ன முச் சிகைத்தாய்த்
தோன்றும் வெஞ் சுடர்ச் சூல வெங் கூற்றினைத் தொட்டான்.

இழியப் பாய்ந்தனன், இரு நிலம் பிளந்து இரு கூறு,—
கிழியப் பாய் புனல் கிளர்ந்தெனக் கிளர் சினத்து அரக்கன்;
'பழி, அப்பால்; இவன் பதாதி' என்று, அனுமன்தன் படர் தோள்
ஒழியப் பார்மிசை இழிந்து சென்று, இளவலும் உற்றான். 246

உற்ற காலையின், இராவணன், தம்பி மாடு உதவ,
இற்ற தானையின் இரு மடி இகல் படை ஏவ,
முற்றி அன்னது, முழங்கு முந்நீர் என முடுகிச்
சுற்றி ஆர்த்தது, சுமித்திரை சிங்கத்தைத் தொடர்ந்து.* 247

இரிந்து வானவர் இரியலின், மயங்கினர் எவரும்;
சொரிந்த வெம் படை துணிந்திட, தடுப்ப அருந் தொழிலால்
பரிந்த அண்ணலும், பரிவிலன் ஒரு புடை படர,
புரிந்த அந் நெடுஞ் சேனை அம் கருங் கடல் புக்கான்.* 248

முருக்கின் நாள்மலர் முகை விரிந்தாலன முரண் கண்
அரக்கர் செம் மயிர்க் கருந் தலை அடுக்கலின் அணைகள்
பெருக்கினான்—பெருங் கனலிடைப் பெய்து பெய்து, எருவை
உருக்கினால் அன்ன குருதி நீர் ஆறுகள் ஓட.* 249

கரியின் கைகளும், புரவியின் கால்களும், காலின்
திரியும் தேர்களின் சில்லியும், அரக்கர்தம் சிரமும்,
சொரியும் சோரியின் துறைதொறும் துறைதொறும் சுழிப்ப,
நெரியும் பல் பிணப் பெருங் கரை கடந்தில, நீத்தம்.* 250

கொற்ற வாள், எழு, தண்டு, வேல், கோல், மழு, குலிசம்,
மற்றும் வேறு உள படைக்கலம், இலக்குவன் வாளி
சுற்றும் ஓடுவ தொடர்ந்து இடை துணித்திட, தொகையாய்
அற்ற துண்டங்கள் படப் பட, துணிந்தன அனந்தம்.* 251

குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை,
தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன, தறுகண்
கண்ட கண்டங்களொடும் கணை துரந்தன, கதிர் சூழ்
மண்டலங்களை மாறுகொண்டு இமைத்தன, வானில்.* 252

246. பதாதி - (ஊர்தியின்றித்) தரையில் நிற்பவன்: 249. எருவை - செம்பு; 252. தறுகண் கண்ட - அஞ்சாமையோடு செய்த.

பரந்த வெண்குடை சாமரை, நெடுங் கொடி, பதாகை,
சரம் தரும் சிலை, கேடகம், பிச்சம், மொய் சரங்கள்
துரந்து செல்வன, குருதி நீர் ஆறுகள்தோறும்
நிரந்த பேய்க்கணம் கரைதொறும் குவித்தன, நீந்தி.* 253

கும்பகருணன் சுக்கிரீவனோடு போர் விளைத்தல்

ஈண்டு வெஞ் செரு இனையன நிகழ்வுழி எவர்க்கும்,
நீண்ட வெள் எயிற்று அரக்கன், மற்றொரு திசை நின்றான்,
பூண்ட வெஞ் செரு இரவி கான்முளையொடு பொருதான்;
'காண்தகும்' என, இமையவர் குழுக்கொண்டு, கண்டார்.*

பொறிந்து எழு கண்ணினன், புகையும் வாயினன்,—
செறிந்து எழு கதிரவன் சிறுவன்—சீறினான்,
'முறிந்தன அரக்கன் மா முரண் திண் தோள்' என,
எறிந்தனன், விசும்பில், மா மலை ஒன்று ஏந்தியே.* 255

அம் மலைநின்று வந்து அவனி எய்திய
செம் மலை அனைய வெங் களிறும், சேனையின்
வெம் மலை வேழமும், பொருத; வேறு இனி
எம் மலை உள, அவற்கு எடுக்க ஒணாதன?* 256

இவ்வகை நெடு மலை இழிந்த மாசுணம்
கவ்விய, நிருதர்தம் களிறும் கட்டு அற;
அவ் வகை மலையினை ஏற்று, ஓர் அங்கையால்
வவ்வினன், அரக்கன், வாள் அவுணர் வாழ்த்தினார். 257

ஏற்று ஒரு கையினால், 'இதுகொல், நீ, அடா!
ஆற்றிய குன்றம்?' என்று, அளவு இல் ஆற்றலான்,
நீற்று இயல் நுணுகுறப் பிசைந்து, 'நீங்கு' எனா,
தூற்றினன்; இமையவர் துணுக்கம் எய்தினார். 258

சுக்கிரீவன்மேல் கும்பகருணன் எறிந்த சூலத்தை அனுமன் முறித்தல்

'செல்வேனோ, நெடுங் கிரி இன்னும் தேர்ந்து?' எனா,
எல்லவன் கான்முளை உணரும் எல்லையில்,
'கொல்!' என எறிந்தனன், குறைவு இல் நோன்பினோர்
சொல் எனப் பிழைப்பு இலாச் சூலம், சோர்வு இலான். 259

253. பிச்சம் - பீலிக் குடை; 257. மாசுணம் - மலைப்பாம்புகள்; கட்டு - உடற்கட்டு, உடல்வலிமை.

'பட்டனன் பட்டனன்' என்று, பார்த்தவர்
விட்டு உலம்பிட, நெடு விசும்பில் சேறலும்,
எட்டினன் அது பிடித்து, இறுத்து நீக்கினான்;
ஒட்டுமோ, மாருதி, அறத்தை ஓம்புவான்? 260

சித்திர வன முலைச் சீதை செவ்வியால்
முத்தனார், மிதிலை ஊர், அறிவு முற்றிய
பித்தன் வெஞ் சிலையினை இறுத்த பேர் ஒலி
ஒத்தது, சூலம் அன்று இற்ற ஓசையே. 261

கும்பகருணன், அனுமனைப் போருக்கு அறைகூவ, அனுமன் மறுத்தல்

நிருதனும் அனையவன் நிலைமை நோக்கியே,
'கருதவும் இயம்பவும் அரிது, உன் கை வலி;
அரியன முடிப்பதற்கு அனைத்து நாட்டினும்
ஒரு தனி உளை; இதற்கு உவமை யாது?' என்றான். 262

'என்னொடு பொருதியேல், இன்னும், யான் அமர்
சொன்னன புரிவல்' என்று, அரக்கன் சொல்லலும்,
'முன், ''இனி எதிர்க்கிலேன்'' என்று முற்றிய
பின், இகல் பழுது' என, பெயர்ந்து போயினான். 263

மீண்டும் சுக்கிரீவனும் கும்பகருணனும் பொருதல்

அற்றது காலையில், அரக்கன், ஆயுதம்
பெற்றிலன், பெயர்ந்திலன்; அனைய பெற்றியில்,
பற்றினன், பாய்ந்து எதிர், பருதி கான்முளை
எற்றினன், குத்தினன், எறுழ் வெங் கைகளால். 264

அரக்கனும்,—'நன்று, நின் ஆண்மை; ஆயினும்,
தருக்கு இனி இன்றொடும் சமையும்தான்' என,
நெருக்கினன், பற்றினன், நீங்கொணாவகை;—
உருக்கிய செம்பு அன உதிரக் கண்ணினான். 265

திரிந்தனர் சாரிகை; தேவர் கண்டிலர்;
புரிந்தனர், நெடுஞ் செரு; புகையும் போர்த்து எழ
எரிந்தன, உரும் எலாம்; இருவர் வாய்களும்
சொரிந்தன, குருதி; தாம் இறையும் சோர்ந்திலார். 266

260. உலம்புதல் - ஆரவாரித்தல், சண்டுக் கதறுதல்; ஒட்டுதல் - உடன்படுதல்; 261. முத்தனார் - முத்தி உலகத்திற்கு உரிய திருமாலின் அவதாரமாகிய இராமபிரான்; பித்தன் - சிவபெருமான்.

உறுக்கினர், ஒருவரை ஒருவர்; உற்று இகல்
முறுக்கினர், முறை முறை; அரக்கன் மொய்ம்பினுல்
பொறுக்கிலாவகை நெடும் புயங்களால் பிணித்து
இறுக்கினுன்; இவன் சிறிது உணர்வும் எஞ்சினுன். 267

உணர்வு இழந்த சுக்கிரீவனைக் கும்பகருணன் எடுத்துச் செல்லுதல்

'மண்டு அமர் இன்றொடு மடங்கும்; மன் இலாத்
தண்டல் இல் பெரும் படை சிந்தும்; தக்கது ஓர்
எண்தரு கருமம் மற்று இதனின் இல்' என,
கொண்டனன் போயினன், நிருதர்கோ நகர். 268

உரற்றின பறவையை ஊறு கொண்டு எழ,
சிரற்றின பார்ப்பினின் சிந்தை சிந்திட,
விரல் துறு கைத்தலத்து அடித்து, வெய்துயிர்த்து,
அரற்றின, கவிக் குலம்; அரக்கர் ஆர்த்தனர், 269

நடுங்கினர் அமரரும்; நா உலர்ந்து வேர்த்து
ஒடுங்கினர், வானரத் தலைவர்—உள் முகிழ்த்து,
இடுங்கின கண்ணினர், எரிந்த நெஞ்சினர்,
'மடங்கினவாம் உயிர்ப்பு' என்னும் அன்பினுர். 270

புழுங்கிய வெஞ் சினத்து அரக்கன் போகுவான்,
அழுங்கல் இல் கோள் முகத்து அரவம் ஆயினுன்;
எழும் கதிர் இரவிதன் புதல்வன், எண்ணுற
விழுங்கிய மதி என, மெலிந்து தோன்றினுன். 271

திக்கு உற விளக்குவான் சிறுவன், தீயவன்
மைக் கரு நிறத்திடை மறைந்த தன் உரு
மிக்கதும் குறைந்ததும் ஆக, மேகத்துப்
புக்கதும் புறத்தும் ஆம் மதியும் போன்றனன். 272

அநுமன் கைபிசைந்து கும்பகருணன் பின் போதல்

'ஒருங்கு அமர் புரிகிலேன், உன்னெடு யான்' என,
நெருங்கிய உரையினை நினைந்து, நேர்கிலன்,
கருங் கடல் கடந்த அக் காலன், காலன் வாழ்
பெருங் கரம் பிசைந்து, அவன் பின்பு சென்றனன். 273

269. உரற்றின பறவை - கூவிக் கொண்டிருந்த தாய்ப் பறவை; ஊறு - வல்லூறு; சிரற்றுதல் - துன்பத்தால் அரற்றுதல்; பார்ப்பு - குஞ்சு; 270. மடங்கின - நின்றுவிட்டன; 271. கோள் முகத்து அரவம் - கோளாகிய முகம் மட்டுமாக உள்ள இராகு என்னும் பாம்பு. பற்றும் தன்மையுடைய முகத்தைக் கொண்ட இராகு என்னும் பாம்பு எனினும் ஆம்; 273. கடல் கடந்த காலன் - கடலைக் கடந்த கால்களையுடைய அநுமன்.

ஆயிரம் பெயரவன் அடியில் வீழ்ந்தனர்,
'நாயகர் எமக்கு இனி யாவர், நாட்டினில்?
காய் கதிர்ப் புதல்வனைப் பிணித்த கையினன்,
போயினன், அரக்கன்' என்று இசைத்த பூசலார். 274

இராமன், கும்பகருணன் செல்லும் வாயிலை அடைத்தல்

தீயினும் முதிர்வுறச் சிவந்த கண்ணினான்,
காய் கணை சிலையொடும் கவர்ந்த கையினான்,
'ஏ' எனும் அளவினில், இலங்கை மா நகர்
வாயில் சென்று எய்தினான்—மழையின் மேனியான். 275

'உடைப் பெருந் துணைவனை உயிரின் கொண்டு போய்,
கிடைப்ப அருங் கொடி நகர் அடையின், கேடு' என,
'தொடைப் பெரும் பகழியின் மாரி தூர்த்து, உற
அடைப்பென்' என்று, அடைத்தனன், விசும்பின் ஆறு எலாம்.

மாதிரம் மறைந்தன; வயங்கு வெய்யவன்
சோதியின் கிளர் நிலை தொடர்தல் ஓவின;
யாதும் விண் படர்கில; இயங்கு கார் மழை
மீது நின்று அகன்றன—விசும்பு தூர்த்தலால். 277

கும்பகருணன் இராமனைக் காணுதல்

மனத்தினும் கடியது ஓர் விசையின் வான் செல்வான்,
இனக் கொடும் பகழியின் மதிலை எய்தினான்;
'நினைத்து அவை நீக்குதல் அருமை, இன்று' என,
சினக் கொடுந் திறலவன் திரிந்து நோக்கினான். 278

கண்டனன்—வதனம், வாய், கண், கை, கால் எனப்
புண்டரீகத் தடம் பூத்து, பொன் சிலை
மண்டலம் தொடர்ந்து, மண் வயங்க வந்தது ஓர்
கொண்டலின் பொலிதரு கோலத்தான்தனை. 279

கும்பகருணன் இராமனை இடித்துரைத்தல்

மடித்த வாய் கொழும் புகை வழங்க, மாறு இதழ்
துடித்தன; புருவங்கள் சுறுக்கொண்டு ஏறிட,
பொடித்த தீ, நயனங்கள்; பொறுக்கலாமையால்,
இடித்த வான் தெழிப்பினால், இடிந்த, குன்று எலாம். 280

277. கிளர் நிலை - விளங்கும் கதிர்கள்; ஓவின - நீங்கின.

' ''மாக் கவந்தனும், வலி தொலைந்த வாலி ஆம்
பூக் கவர்ந்து உண்ணியும், போலும்'' என்று, எனைத்
தாக்க வந்தனை; இவன்தன்னை இன் உயிர்
காக்க வந்தனை; இது காணத் தக்கதால். 281

'உம்பியை முனிந்திலேன், அவனுக்கு ஊர்தியாம்
தும்பியை முனிந்திலேன், தொடர்ந்த வாலிதன்
தம்பியை முனிந்திலேன், சமரம்தன்னில் யான்—
அம்பு இயல் சிலையினாய்!—புகழ் அன்று ஆதலால்.* 282

'தேடினென் திரிந்தனென் நின்னை; திக்கு இறந்து
ஓடியது உன் படை; உம்பி ஓய்ந்து, ஒரு
பாடு உற நடந்தனன்; அனுமன் பாறினன்;
ஈடுறும் இவனைக் கொண்டு, எளிதின் எய்தினேன். 283

'காக்கிய வந்தனை என்னின், கண்ட என்
பாக்கியம் தந்தது, நின்னை; பல் முறை
ஆக்கிய செரு எலாம் ஆக்கி, எம்முனைப்
போக்குவென், மனத்துறு காதல் புன்கண் நோய். 284

'ஏதி வெந் திறலினோய்! இமைப்பிலோர் எதிர்,
பேது உறு குரங்கை யான் பிணித்த கைப் பிணி,
கோதை வெஞ் சிலையினால், கோடி வீடு எனின்,
சீதையும் பெயர்ந்தனள், சிறை நின்றும்' என்றான். 285

இராமன் வஞ்சினம்

என்றலும், முறுவலித்து, இராமன், 'யானுடை
இன் துணை ஒருவனை எடுத்த தோள் எனும்
குன்றினை அரிந்து யான் குறைக்கிலேன் எனின்,
பின்றினென் உனக்கு; வில் பிடிக்கிலேன்' என்றான். 286

மீட்டு அவன், சரங்களால் விலங்கலானையே
மூட்டு அற நீக்குவான் முயலும் வேலையில்,
வாள் தலை பிடர்த்தலை வயங்க, வாளிகள்,
சேட்டு அகல் நெற்றியின், இரண்டு சேர்த்தினான். 287

281. பூக் கவர்ந்து உண்ணி - பூவைக் கவர்ந்து உண்ணும் இயல்புள்ள குரங்கு; 282. தும்பி - யானை போன்ற அனுமன்; 283. பாடு - பக்கம்; பாறுதல் - ஓடுதல்; ஈடு உறுதல் - போர் செய்ய வருதல்; 285. ஏதி - வாள், ஈண்டுப் படைக்கலம்; வீடு கோடி எனின் என இயையும்; 286. பின்றுதல் - பின்னிடுதல், தோற்றல்; 287. சேட்டு அகல் - உயர்ந்து அகன்ற. சேடு - பெருமை.

கும்பகருணன் குருதியால் சுக்கிரீவன் மயக்கம் தெளிதல்

சுற்றிய குருதியின் செக்கர் சூழ்ந்து எழ,
நெற்றியின் நெடுங் கணை ஒளிர நின்றவன்,
முற்றிய கதிரவன் முளைக்கும் முந்து வந்து,
உற்று எழும் அருணனது உதயம் போன்றனன். 288

குன்றின் வீழ் அருவியின் குதித்துக் கோத்து இழி
புன் தலைக் குருதி நீர் முகத்தைப் போர்த்தலும்,
இன் துயில் உணர்ந்தென, உணர்ச்சி எய்தினான்;
வன் திறல் தோற்றிலான் மயக்கம் எய்தினான். 289

சுக்கிரீவன், கும்பகருணன் மூக்கையும் காதையும் கடித்துச் செல்லுதல்

நெற்றியில் நின்று ஒளி நெடிது இமைப்பன
கொற்றவன் சரம் எனக் குறிப்பின் உன்னினான்;
சுற்றுற நோக்கினன், தொழுது வாழ்த்தினான்—
முற்றிய பொருட்கு எலாம் முடிவுளான்தனை. 290

கண்டனன் நாயகன்தன்னை, கண்ணுரூ,
தண்டல் இல் மானமும் நாணும் தாங்கினான்,
விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டனன், எழுந்து போய்த் தமரைக் கூடினான். 291

சுக்கிரீவனைக் கண்டு, யாவரும் மகிழ்தல்

வானரம் ஆர்த்தன; மறையும் ஆர்த்தன;
தான் அர மகளிரும் தமரும் ஆர்த்தனர்;
மீன் நரல் வேலையும் வெற்பும் ஆர்த்தன;
வானவரோடு நின்று அறமும் ஆர்த்ததே. 292

காந்து இகல் அரக்கன் வெங் கரத்துள் நீங்கிய
ஏந்தலை அகம் மகிழ்ந்து, எய்த நோக்கிய
வேந்தனும், சானகி இலங்கை வெஞ் சிறைப்
போந்தனளாம் என, பொருமல் நீங்கினான். 293

மத்தகம் பிளந்து பாய் உதிரம் வார்ந்து எழ,
வித்தகன் சரம் தொட, மெலிவு தோன்றிய
சித்திரம் பெறுதலின், செவியும் மூக்கும் கொண்டு
அத் திசைப் போயினன் அல்லது, ஒண்ணுமோ? 294

291. விண்டவன் - பகைவன்; 292. நரல் வேலை - ஒலிக்கின்ற கடல்;
294. சித்திரம் - தக்க சமயம்.

உணர்வு பெற்ற கும்பகருணன் வாட்போர் புரிதல்

அக் கணத்து அறிவு வந்து அணுக, அங்கை நின்று
உக்கனன் கவி அரசு என்னும் உண்மையும்,
மிக்கு உயர் நாசியும் செவியும் வேறு இடம்
புக்கதும், உணர்ந்தனன்—உதிரப் போர்வையான். 295

தாது ராகத் தடங் குன்றம், தாரை சால்
கூதிர் கால் நெடு மழை சொரிய, கோத்து இழி
ஊதையோடு அருவிகள் உமிழ்வது ஒத்தனன்—
மீது உறு குருதி யாறு ஒழுகும் மேனியான். 296

எண்ணுடைத் தன்மையன், இனைய எண் இலாப்
பெண்ணுடைத் தன்மையன் ஆய பீடையால்,
புண்ணுடைச் செவியொடு மூக்கும் பொன்றலால்,
கண்ணுடைச் சுழிகளும் குருதி கால்வன. 297

ஏசியுற்று எழும் விசும்பினரைப் பார்க்கும்; தன்
நாசியைப் பார்க்கும்; முன் நடந்த நாளுடை
வாசியைப் பார்க்கும்; இம் மண்ணைப் பார்க்குமால்—
'சீ சி, உற்றது!' எனத் தீயும் நெஞ்சினன். 298

'என் முகம் காண்பதன் முன்னம், யான் அவன்-
தன் முகம் காண்பது சரதம்தான்' என,
பொன் முகம் காண்பது ஓர் தோலும், போரிடை
வல் முகம் காண்பது ஓர் வாளும், வாங்கினான். 299

விதிர்த்தனன், வீசினன், விசும்பின் மீன் எலாம்
உதிர்த்தனன்; உலகினை அனந்தன் உச்சியோடு
அதிர்த்தனன்; ஆர்த்தனன்—ஆயிரம் பெருங்
கதிர்த் தலம் சூழ் வடவரையின் காட்சியான். 300

வீசினன் கேடகம்; முகத்து வீங்கு கால்,
கூசின குரக்கு வெங் குழுவைக் கொண்டு எழுந்து,
ஆசைகள்தோறும் விட்டு எறிய, ஆர்த்து எழும்
ஓசை ஒண் கடலையும் திடர் செய்து ஓடுமால். 301

296. தாது ராகக் குன்றம் - காவிக் கல்லினால் ஆகிய சிவந்த மலை; கோத்து - சேர்ந்து; ஊதை - வாடைக்காற்று; 297. எண் - அறிவு, ஆராய்ச்சி எனலும் ஆம்; எண் இலாப் பெண் - சூர்ப்பணகை; 298. வாசி - வேறுபாடு; 299. தோல் - கேடகம்; வன் முகம் - வலிய வாய்; 300. ஆயிரம் பெருங் கதிர்த்தலம் - ஆயிரம் கதிர்களையுடைய பெரிய சூரிய மண்டிலம்.

தோல் இடைத் துரக்கவும், துகைக்கவும், சுடர்
வேலுடைக் கூற்றினுல் துணிய வீசவும்,
காலிடைக் கடல் எனச் சிந்தி, கை கெட,
வாலுடை நெடும் படை இரிந்து மாய்ந்ததால். 302

ஏறுபட்டதும், இடை எதிர்ந்துளோர் எலாம்
கூறுபட்டதும், கொழுங் குருதி கோத்து இழிந்து
ஆறு பட்டதும், நிலம் அனந்தன் உச்சியும்
சேறு பட்டதும், ஒரு கணத்தில் தீர்ந்தவால். 303

குரக்குச் சேனையின் அழிவைச் சாம்பன் இராமனுக்குப் புலப்படுத்துதல்

'இடுக்கு இலை; எதிர் இனி இவனை இவ் வழித்
தடுக்கிலையாம்எனின், குரங்கின் தானையை
ஒடுக்கினை, அரக்கரை உயர்த்தினுய்' என
முடுக்கினன், இராமனைச் சாம்பன் முன்னியே. 304

இராமன், கும்பகருணனுடன் பொருதல்

அண்ணலும் தானையின் அழிவும், ஆங்கு அவன்
திண் நெடுங் கொற்றமும், வலியும், சிந்தியா,
நண்ணினன்—நடந்து எதிர், 'நமனை இன்று இவன்
கண்ணிடை நிறுத்துவென்'என்னும் கற்பினுன். 305

ஆறிஞேடு ஏழு கோல், அசனி ஏறு என,
ஈறு இலா விசையன இராமன் எய்தனன்;
பாறு உகு சிறை என விசும்பில் பாறிட
நூறினுன் வாளினுல், நுணங்கு கல்வியான். 306

ஆடவர்க்கு அரசனும், தொடர, அவ் வழி,
கோடையின் கதிர் எனக் கொடிய கூர்ங் கணை
ஈடு உறத் துரந்தனன்; அவையும் இற்று உக,
கேடகப் புறத்தினுல் கிழிய வீசினுன். 307

சிறுத்தது ஓர் முறுவலும் தெரிய, செங் கணுன்,
மறித்து ஒரு வடிக் கணை தொடுக்க, மற்று அவன்
ஒறுத்து ஒளிர் வாள் எனும் உரவு நாகத்தை
அறுத்தது கலுழனின், அமரர் ஆர்க்கவே. 308

302. காலிடைக் கடல் - பெருங் காற்ருல் அலையும் கடல்; கை கெட - செயல் அற; 303. ஏறு - ஏறுதல், வடுப்படுதல், அதற்குக் கருவியாதலால் படைக்கலம் ஏறு எனப்பட்டது; 304. இடுக்கு - நெருக்கடியான நிலை; 306. பாறு - பருந்து; 307. ஈடு - வலிமை.

'அற்றது தடக் கை வாள் அற்றது இல்' என,
மற்று ஒரு வயிர வாள் கடிதின் வாங்கினான்,
'முற்றினென் முற்றினென்' என்று, முன்பு வந்து,
உற்றனன்—ஊழித் தீ அவிய ஊதுவான். 309

அந் நெடு வாளையும் துணித்த ஆண்தகை,
பொன் நெடுங் கேடகம் புரட்டி, போர்த்தது ஓர்
நல் நெடுங் கவசத்து, நாம வெங் கணை
மின்னொடு நிகர்ப்பன, பலவும் வீசினான். 310

இராவணன் அனுப்பிய பெரும் படை உதவிக்கு வருதல்

அந்தரம் அன்னது நிகழும் அவ் வழி,
இந்திரன் தமரொடும் இரியல் எய்திட,
சிந்துவும் தன் நிலை குலைய, சேண் உற
வந்தது, தசமுகன் விடுத்த மாப் படை. 311

வில் வினை ஒருவனும், 'இவனை வீட்டுதற்கு
ஒல் வினை இது' எனக் கருதி, ஊன்றினான்;
பல் வினை தீயன பரந்த போது ஒரு
நல்வினை ஒத்தது, நடந்த தானையே.* 312

வந்த சேனையை இராமன் எதிர்த்தலும், கும்பகருணன் பொருது தனித்து நிற்றலும்

கோத்தது புடைதொறும் குதிரை தேரொடு ஆள்
பூத்து இழி மதமலை மிடைந்த போர்ப் படை
காத்தது கருணனை; கண்டு, மாய மாக்
கூத்தனும், 'வருக!' எனக் கடிது கூவினான். 313

சூழி வெங் கட கரி, புரவி, தூண்டு தேர்,
ஆழி வெம் பெரும் படை, மிடைந்த ஆர்கலி
ஏழ்-இரு கோடி வந்து எய்திற்று என்பரால்;
ஊழியின் ஒருவனும், எதிர் சென்று, ஊன்றினான். 314

காலமும், காலனும், கணக்கு இல் தீமையும்,
மூலம் மூன்று இலை என வகுத்து முற்றிய,
ஞாலமும் நாகமும் விசும்பும் நக்குறும்,
சூலம் ஒன்று அரக்கனும் வாங்கித் தோன்றினான். 315

309. முற்றினென் - முடித்துவிட்டேன்; 311. அந்தரம் - கேடு, முடிவு; சிந்து - கடல்; சேண் - செம்மை; உற வந்தது - நெருங்க வந்தது; 313. பூத்து - தோன்றி; மாய மாக் கூத்தன் - பெரிய மாயக் கூத்தனாகிய திருமால் (இராமன்); 314. ஆர்கலி - கடலாகிய படை; ஊழியின் ஒருவன் - ஊழிக் காலத்திலும் அழியாது நிற்பவனாகிய திருமால் (இராமன்).

‘அரங்கு இடந்தன, அறு குறை நடிப்பன
அல்ல’ என்று இமையோரும்,
‘மரம் கிடந்தன, மலைக் குவை கிடந்தன
வாம்’ என மாறுடி,
கரம் கிடந்தன காத்திரம் கிடந்தன,
கறை படும்படி கவ்விச்
சிரம் கிடந்தன, கண்டனர்; கண்டிலர்,
உயிர்கொடு திரிவாரை. 316

இற்ற அல்லவும், ஈர்ப்புண்ட அல்லவும்,
இடை இடை முறிந்து எங்கும்
துற்ற அல்லவும், துணிபட்ட அல்லவும்,
சுடு பொறித் தொகை தூவி
வெற்ற வெம் பொடி ஆயின அல்லவும்,
வேறு ஒன்று நூறு ஆகி
அற்ற அல்லவும், கண்டிலர் படைக்கலம்—
அடு களம் திடர் ஆக. 317

படர்ந்த கும்பத்துப் பாய்ந்தன பகழிகள்
பாகரைப் பறிந்து ஓடி,
குடைந்து, வையகம் புக்குறத் தேக்கிய
குருதியால் குடர் சோரத்
தொடர்ந்து, நோயொடும் துணை மருப்பு இழந்து, தம்
காத்திரம் துணி ஆகிக்
கிடந்த அல்லது, நடந்தன கண்டிலர்—
கிளர் மதகிரி எங்கும். 318

வீழ்ந்த வாளன, விளிவுற்ற பதாகைய,
வெயில் உமிழ் அயில் அம்பு
போழ்ந்த பல் நெடும் புரவிய, முறை முறை
அச்சொடும் பொறி அற்று,
தாழ்ந்த வெண் நிணம் தயங்கு வெங் குழம்பிடைத்
தலைத்தலை மாறுடி,
ஆழ்ந்த அல்லது, பெயர்ந்தன கண்டிலர்—
அதிர் குரல் மணித் தேர்கள். 319

316. அரங்கு - கவந்தம் நடிப்பதற்கு இடமாக உள்ள போர்க்களம்; காத்திரம் - உடம்பு; 318. நோய் - மரண நோய்; 319. பொறி - மூட்டு வாய், இணைப்பு; தலைத்தலை - இடந்தோறும் இடந்தோறும்.

ஆடல் தீர்ந்தன, வளை கழுத்து அற்றன,
அதிர் பெருங் குரல் நீத்த,
தாள் துணிந்தன, தறுகண் வெங் கரி நிரை
தாங்கிய பிணத்து ஓங்கல்
கோடு அமைந்த வெங் குருதி நீர் ஆறுகள்
சுழிதொறும் கொணர்ந்து உந்தி,
ஓடல் அன்றி, நின்று உகள்வன கண்டிலர்—
உரு கெழு பரி எல்லாம். 320

வேதநாயகன் வெங் கணை வழக்கத்தின்
மிகுதியை வெவ்வேறு இட்டு
ஓதுகின்றது என்? உம்பரும், அரக்கர் வெங்
களத்து வந்து உற்றுரைக்
காதல் விண்ணிடைக் கண்டனர்; அல்லது,
கணவர்தம் உடல் நாடும்
மாதர் வெள்ளமே கண்டனர்; கண்டிலர்,
மலையினும் பெரியாரை. 321

பனிப் பட்டாலெனக் கதிர் வரப் படுவது
பட்டது, அப் படை; பற்றுர்
துனிப்பட்டார் எனத் துளங்கினர் இமையவர்;
'யாவர்க்கும் தோலாதான்
இனிப் பட்டான்' என, வீங்கின அரக்கரும்
ஏங்கினர்; 'இவன், அந்தோ,
தனிப்பட்டான்!' என, அவன் முகம் நோக்கி ஒன்று
உரைத்தனன், தனி நாதன்: 322

கும்பகருணனை நோக்கி, இராமன் வினவும், அவன் விடையும்

'ஏதியோடு எதிர் பெருந் துணை இழந்தனை;
எதிர் ஒரு தனி நின்றாய்;
நீதியோனுடன் பிறந்தனை ஆதலின்,
நின் உயிர் நினக்கு ஈவென்;
போதியோ? பின்றை வருதியோ? அன்று எனின்,
போர் புரிந்து இப்போதே
சாதியோ? உனக்கு உறுவது சொல்லுதி,
சமைவுறத் தெரிந்து, அம்மா! 323

320. கோடு - கரை; 322. துளங்குதல் - மகிழ்ச்சியால் விளக்கம் பெறுதல்.

'இழைத்த தீவினை இற்றிலது ஆகலின்,
　　யான் உனை இளையோனால்
அழைத்த போதினும் வந்திலை, அந்தகன்
　　ஆணையின் வழி நின்றாய்;
பிழைத்ததால் உனக்கு அருந் திரு, நாளொடு;
　　பெருந் துயில் நெடுங் காலம்
உழைத்து வீடுவது ஆயினை; என் உனக்கு
　　உறுவது ஒன்று? உரை' என்றான். 324

'மற்று எலாம் நிற்க: வாசியும், மானமும்,
　　மறத்துறை வழுவாத
கொற்ற நீதியும், குலமுதல் தருமமும்
　　என்று இவை குடியாகப்
பெற்ற நுங்களால், எங்களைப் பிரிந்து, தன்
　　பெருஞ் செவி மூக்கோடும்
அற்ற எங்கைபோல், என் முகம் காட்டி நின்று
　　ஆற்றலென் உயிர் அம்மா! 325

'நோக்கு இழந்தனர் வானவர், எங்களால்;
　　அவ் வகை நிலை நோக்கி,
''தாக்கு அணங்கு அனையவள், பிறர் மனை'' எனத்
　　தடுத்தனென்; ''தக்கோர் முன்
வாக்கு இழந்தது'' என்று அயர்வுறுவேன் செவி-
　　தன்னொடு மாற்றாரால்
மூக்கு இழந்தபின் மீளல் என்றால், அது
　　முடியுமோ?—முடியாதாய்! 326

'உங்கள் தோள் தலை வாள்கொடு துணித்து, உயிர்
　　குடித்து, எம்முன் உவந்து எய்த
நங்கை நல் நலம் கொடுக்கிய வந்த நான்,
　　வானவர் நகை செய்ய,
செங்கை தாங்கிய சிரத்தொடும் கண்ணின் நீர்
　　குருதியினொடு தேக்கி,
எங்கைபோல் எடுத்து அழைத்து, நான் வீழ்வெனோ,
　　இராவணன் எதிர் அம்மா? 327

324. வீடுவது - அழிவது; 325. வாசி - சிறப்பு, தகுதி; 326. நோக்கு - பெருமை; 327. 'இராமன் தோள்களை வெல்லலாம் என்பது, சீதை மேனியைப் புல்லலாம் என்பது போலுமால் ஐயா' என்ற கும்பகருணன், இங்கு இவ்வாறு கூறியது போர்வீரர் கூறும் மரபு பற்றிய கூற்று.

'ஒருத்தன், நீ தனி உலகு ஒரு மூன்றிற்கும்
ஆயினும், பழி ஒரும்
கருத்தினால் வரும் சேவகன் அல்லையோ?
சேவகர் கடன் ஒராய்?
செருத் திண் வாளினால் திறத் திறன் உங்களை
அமர்த் துறைச் சிரம் கொய்து
பொருத்தினால், அது பொருந்துமோ? தக்கது
புகன்றிலைபோல்' என்றான். 328

கும்பகருணனுக்கும் இராமனுக்கும் பெரும் போர் நிகழ்தல்

என்று, தன் நெடுஞ் சூலத்தை இடக்கையின்
மாற்றினன்; வலக் கையால்
குன்று நின்றது பேர்த்து எடுத்து, இரு நிலக்
குடர் கவர்ந்தெனக் கொண்டான்,
சென்று விண்ணொடும் பொறியொடும் தீச்செல,
சேவகன் செனி நேரே,
'வென்று தீர்க!' என விட்டனன்; அது வந்து
பட்டது மேல் என்ன, 329

அனைய குன்று எனும் அசனியை, யாவர்க்கும்
அறிவு அரும் தனி மேனி
புனையும் நல் நெடு நீறு என நூறிய
புரவலன் பொர வென்று
நினையும் மாத்திரத்து ஒரு கைநின்று ஒரு கையின்
நிமிர்கின்ற நெடு வேலை,
தினையின் மாத்திரை துணிபட, முறை முறை
சிந்தினன், சரம் சிந்தி. 330

அண்ணல் வில் கொடுங் கால் விசைத்து உகைத்தன,
அலை கடல் வறளாக
உண்ணகிற்பன, உருமையும் சுடுவன,
மேருவை உருவிப் போய்
விண்ணகத்தையும் கடப்பன, பிழைப்பு இலா
மெய்யன, மேல் சேர்ந்த
கண்ணுதல் பெருங் கடவுள்தன் கவசத்தைக்
கடந்தில கதிர் வாளி. 331

329. செனி - சென்னி, தலை; 330. பொர - தாக்குதற்கு.

தாக்குகின்றன நுழைகில; தலையது,
தாமரைத் தடங் கண்ணன்
நோக்கி, 'இங்கு இது சங்கரன் கவசம்' என்று
உணர்வுற நுனித்து உன்னி,
ஆக்கி அங்கு அவன் அடு படை தொடுத்து விட்டு
அறுத்தனன்; அது சிந்தி
வீக்கு இழந்தது வீழ்ந்தது, வரை சுழல்
விரி சுடர் வீழ்ந்தென்ன. 332

காந்து வெஞ் சுடர்க் கவசம் அற்று உகுதலும்,
கண்தொறும் கனல் சிந்தி,
ஏந்து வல் நெடுந் தோள் புடைத்து ஆர்த்து, அங்கு ஓர்
எழு முனை வயிரப் போர்
வாய்ந்த வல் நெடுந் தண்டு கைப்பற்றினன்;
'வானரப் படை முற்றும்
சாந்து செய்குவனும்' என முறை முறை
அரைத்தனன், தரையோடும். 333

பறப்ப ஆயிரம், படுவன ஆயிரம்,
பகட்டு எழில் அகல் மார்பம்
திறப்ப ஆயிரம், திரிவன ஆயிரம்,
சென்று புக்கு உருவாது
மறைப்ப ஆயிரம், வருவன ஆயிரம்,
வடிக் கணை என்றாலும்,
பிறப்ப ஆயிடைத் தெழித்துறத் திரிந்தனன்,
கறங்கு எனப் பெருஞ் சாரி. 334

'தண்டு கைத்தலத்து உளதுஎனின், உளதன்று
தானே' என்று, அது சாயக்
கொண்டல் ஒத்தவன், கொடுங் கணை பத்து ஒரு
தொடையினில் கோத்து எய்தான்;
கண்டம் உற்றது மற்று அது; கருங் கழல்
அரக்கனும், கனன்று, ஆங்கு ஓர்
மண்டலச் சுடராம் எனக் கேடகம்
வாங்கினன், வாளோடும். 335

332. அவன் - ஈண்டுச் சிவன், சிவனது படை பாசுபதக் கணை எனப்படும்;
வீக்கு - கட்டுக்கோப்பு.

வாள் எடுத்தலும், வானர வீரர்கள்
மறுகினர், வழிதோறும்
தாள் எடுத்தனர், சமழ்த்தனர்; வானவர்
தலை எடுத்திலர், தாழ்ந்தார்;
'கோள் எடுத்தது, மீள' என்று உரைத்தலும்,
கொற்றவன், 'குன்று ஒத்த
தோள் எடுத்தது துணித்தி' என்று, ஒரு சரம்
துரந்தனன், சுரர் வாழ்த்த. 336

கும்பகருணன் கை அறுபடல்

அலக்கணுற்றது தீவினை; நல்வினை
ஆர்த்து எழுந்தது; வேர்த்துக்
கலக்கமுற்றனர், இராக்கதர்—'கால வெங்
கருங் கடல் திரை போலும்
வலக் கை அற்றது, வாளொடும்; கோளுடை
வான மா மதி போலும்;
இலக்கை அற்றது, அவ் இலங்கைக்கும் இராவணன்
தனக்கும்' என்று எழுந்து ஓடி. 337

மற்றும், வீரர்கள் உளர் எனற்கு எளிதுஅரோ,
மறத்தொழில் இவன் மாடு
பெற்று நீங்கினர் ஆம் எனின் அல்லது—
பேர் எழில் தோளோடும்
அற்று வீழ்ந்த கை அறுத வெங் கையினால்
எடுத்து, அவன் ஆர்த்து ஓடி
எற்ற, வீழ்ந்தன, எயிறு இளித்து ஓடின
வானரக் குலம் எல்லாம்? 338

வள்ளல் காத்து உடன் நிற்கவும், வானரத்
தானையை மறக் கூற்றம்
கொள்ளை கொண்டிட, பண்டையின் மும்மடி
குமைக்கின்ற படி நோக்கி,
'வெள்ளம் இன்றொடும் வீந்துறும்' என்பதோர்
விம்மலுற்று உயிர் வெம்ப,
உள்ள கையினும் அற்ற வெங் கரத்தையே
அஞ்சின, உலகு எல்லாம். 339

336. தாள் எடுத்தனர் - கால் விசைத்து ஓடினர்; கோள் எடுத்தது - உயிர்க்கொள்ளை தொடங்கிற்று; 339. குமைக்கின்ற படி - அழிக்கின்ற தன்மை; வெள்ளம் - வானர சேனையாகிய வெள்ளம்.

மாறு வானரப் பெருங் கடல் ஓட, தன்
      தோள்நின்று வார் சோரி
ஆறு விண் தொடும் பிணம் சுமந்து ஓட, மேல்
      அமரரும் இரிந்து ஓட,
கூறு கூறு பட்டு இலங்கையும் விலங்கலும்
      பறவையும் குலைந்து ஓட,
ஏறு சேவகன்மேல் எழுந்து ஓடினன்,
      மழைக் குலம் இரிந்து ஓட. 340

'ஈற்றுக் கையையும் இக் கணத்து அரிதி' என்று
      இமையவர் தொழுது ஏத்த,
தோற்றுக் கையகன்று ஒழிந்தவன் நாள்அவை
      தொலையவும், தோன்றாத
கூற்றுக்கு ஐயமும் அச்சமும் கெட, நெடுங்
      கொற்றவன் கொலை அம்பால்,
வேற்றுக் கையையும் வேலையில் இட்டனன்,
      வேறும் ஓர் அணை மான. 341

சந்திரப் பெருந் தூணொடுஞ் சார்த்தியது.
      அதில் ஒன்றும் தவறு ஆகாது,
அந்தரத்தவர் அலை கடல் அமுது எழக்
      கடைவுறும் அந் நாளில்,
சுந்தரத் தடந் தோள் வளை மாசுணம்
      சுற்றிய தொழில் காட்ட,
மந்தரத்தையும் கடுத்தது,—மற்று அவன்
      மணி அணி வயிரத் தோள். 342

சிவண வண்ண வான் கருங் கடல் கொண்டு வந்த
      செயலினும், செறி தாரை
சுவண வண்ண வெஞ் சிறையுடைக் கடு விசை
      முடுகிய தொழிலானும்,
அவண அண்ணலது ஏவலின் இயற்றிய
      அமைவினும், அயில் வாளி
உவண அண்ணலை ஒத்தது; மந்தரம்
      ஒத்தது, அவ் உயர் பொன் தோள். 343

340. ஏறுசேவகன் - சிங்க ஏறு போன்ற வீரனாகிய இராமன்; 342. சந்திரப் பெருந் தூணொடுஞ்சார்த்தியது மந்தரத்தையும் கடுத்தது என இயையும்; கடலிடை வீழ்ந்த தோள்வளை பூண்ட கும்பகருணன் கை பாற்கடலிடையே வாசுகி என்னும் பாம்பாகிய கடை கயிறு சுற்றிய மந்தர மலை போன்று இருந்தது; சந்திரப் பெருந் தூணொடு சார்த்தியது என்பது கடல் கடைந்த காலத்து மந்தரத்துக்கு இயற்கை அடைமொழி; 343. உவண அண்ணல் - கருடன், திருமால் பாற்கடலைக் கடைதற்பொருட்டுக் கருடனை அனுப்பி மந்தர மலையைக் கொணரச் செய்தான் என்னும் வரலாறு உண்டு என்பது இச் செய்யுளால் புலனாகிறது.

கும்பகருணன் கால்களை இழத்தல்

பழக்க நாள் வரும் மேருவை உள்ளுறத்
தொளைத்து, ஒரு பணை ஆக்கி,
வழக்கினுல் உலகு அளந்தவன் அமைத்தது ஓர்
வான் குணில் வலத்து ஏந்தி,
முழக்கினுலென, முழங்கு பேர் ஆர்ப்பினுன்,
வானர முந்நீரை
உழக்கினுன், தசை தோல் எலும்பு எனும் இவை
குருதியொடு ஒன்ருக. 344

நிலத்த கால், கனல், புனல், விசும்பு, இவை முற்றும்
நிருதனது உரு ஆகி,
கொலத் தகாதது ஓர் வடிவு கொண்டாலென
உயிர்களைக் குடிப்பானை,
சலத்த காலனை, தறுகணர்க்கு அரசனை,
தருக்கினின் பெரியானை,
வலத்த காலையும், வடித்த வெங் கணையினுல்
தடிந்தனன்—தனு வல்லான். 345

பந்தி பந்தியின் பற் குலம் மீன் குலம்
பாகுபாடு உற, பாகத்து
இந்து வெள் எயிறு இமைத்திட, குருதி யாறு
ஒழுக்கல் கொண்டு எழு செக்கர்
அந்தி வந்தென, அகல் நெடு வாய் விரித்து,
அடி ஒன்று கடிது ஓட்டி,
குந்தி வந்தனன், நெடு நிலம் குழி பட,
குரை கடல் கோத்து ஏற. 346

மாறு கால் இன்றி வானுற நிமிர்ந்து, மாடு
உள எலாம் வளைத்து ஏந்தி,
சூறை மாருதம் ஆம் எனச் சுழித்து, மேல்
தொடர்கின்ற தொழிலானை,
ஏறு சேவகன், எரி முகப் பகழியால்,
இரு நிலம் பொறை நீங்க,
வேறு காலையும் துணித்தனன், அறத்தொடு
வேதங்கள் கூத்தாட. 347

344. பணை - முரசம்; குணில் - குறுந்தடி.

கை இரண்டொடு கால்களும் துணிந்தன;
 கரு வரை பொருவும் தன்
மெய் இரண்டு நூறுயிரம் பகழியால்
 வெரிந் உறத் தொளே போய;
செய்ய கண் பொழி தீச் சிகை இரு மடி
 சிறந்தன; தெழிப்போடும்,
வய்யம் வானிடை மழையினும் பெருத்தது,
 வளர்ந்தது, பெருஞ் சீற்றம். 348

கும்பகருணன், மலேகளைக் கவ்வி, வானரங்களை அழித்தல்

பாதம் கைகளோடு இழந்தனன், படியிடை
 இருந்து, தன் பகு வாயால்,
காதம் நீளிய மலேகளைக் கடித்து இறுத்து
 எடுத்து, வெங் கனல் பொங்கி,
மீது மீது தன் அகத்து எழு காற்றினுல்
 விசைகொடு திசை செல்ல
ஊத ஊதப்பட்டு, உலந்தன வானரம்,
 உருமின் வீழ் உயிர் என்ன. 349

தீயினுல் செய்த கண்ணுடையான், நெடும்
 சிகையினுல் திசை தீய
வேயினுல் திணி வெற்பு ஒன்று நாவினுல்
 விசும்புற வளேத்து ஏந்தி,
பேயின் ஆர்ப்புடைப் பெருங் களம் எரிந்து எழ,
 பிலம் திறந்தது போலும்
வாயினுல் செல, வீசினன்; வள்ளலும்
 மலர்க் கரம் விதிர்ப்புற்முன். 350

உள் உணர்வு தோன்றிய கும்பகருணன் உரை

'அய்யன் வில் தொழிற்கு ஆயிரம் இராவணர்
 அமைவிலர்; அந்தோ! யான்
கய்யும் கால்களும் இழந்தனென்; வேறு இனி
 உதவல் ஆம் துணே காணேன்;
மய்யல் நோய்கொடு முடிந்தவன் நாள் என்று,
 வரம்பு இன்றி வாழ்ந்தானுக்கு
உய்யுமாறு அரிது' என்று, தன் உள்ளத்தின்
 உணர்ந்து, ஒரு துயருற்முன். 351

351. மய்யல் நோய் - காம நோய்.

சிந்துரச் செம் பசுங் குருதி திசைகள்தொறும் திரை ஆறு,
எந்திரத் தேர், கரி, பரி, ஆள், ஈர்த்து ஓடப் பார்த்திருந்த
கந்தரப் பொன்-கிரி ஆண்மைக் களிறு அனையான், கண் நின்ற
சுந்தரப் பொன்-தோளானை முகம் நோக்கி, இவை சொன்னான்:

'புக்கு அடைந்த புறவு ஒன்றின் பொருட்டாகத் துலை புக்க
மைக் கடங் கார் மத யானை வாள் வேந்தன் வழி வந்தீர்!
இக் கடன்கள் உடையீர்! நீர் எம் வினை தீர்த்து, உம்முடைய
கைக்கு அடைந்தான் உயிர் காக்கக் கடவீர், என் கடைக்கூட்டால்.

'நீதியால் வந்தது ஒரு நெடுந் தரும நெறி அல்லால்,
சாதியால் வந்த சிறு நெறி அறியான், என் தம்பி;
ஆதியாய்! உனை அடைந்தான்; அரசர் உருக்கொண்டு அமைந்த
வேதியா! இன்னம் உனக்கு அடைக்கலம் யான் வேண்டினேன்.

'வெல்லுமா நினைக்கின்ற வேல் அரக்கன், ''வேரோடும்
கல்லுமா முயல்கின்றான், இவன்'' என்னும் கறுவுடையான்;
ஒல்லுமாறு இயலுமேல், உடன்பிறப்பின் பயன் ஓரான்;
கொல்லுமால், அவன் இவனை; குறிக்கோடி, கோடாதாய்! 355

'தம்பி என நினைந்து, இரங்கித் தவிரான், அத் தகவு இல்லான்;
நம்பி! இவன்தனைக் காணின் கொல்லும்; இறை நல்கானல்;
உம்பியைத்தான், உன்னைத்தான், அனுமனைத்தான், ஒரு பொழுதும்
எம்பி பிரியானாக அருளுதி; யான் வேண்டினேன். 356

தலையைக் கடலில் இடுமாறு வேண்ட, இராமனும் உடன்படல்

' ''மூக்கு இலா முகம்'' என்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை, நுன் கணையால் என் கழுத்தை
நீக்குவாய்; நீக்கியபின், நெடுந் தலையைக் கருங் கடலுள்
போக்குவாய்; இது நின்னை வேண்டுகின்ற பொருள்' என்றான்.

'வரம் கொண்டான்; இனி மறுத்தல் வழக்கு அன்று' என்று, ஒரு வாளி
உரம் கொண்ட தடஞ் சிலையின் உயர் நெடு நாணுள் கொளுவா,
சிரம் கொண்டான்; கொண்டதனைத் திண் காற்றின் கடும் படையால்,
அரம் கொண்ட கருங் கடலின் அழுவத்துள் அழுத்தினான். 358

352. கந்தரம் - தலை; 353. கடைக்கூட்டு - கடைசி விருப்பம்; 355. கறு - உள்ளடக்கிய கோபம்; ஒல்லுமாறு இயலுமேல் - வாய்ப்பு நேருமானால்; 356. நல்குதல் - அருளுதல்; 358. அரம் - அரவம், ஒலி; எதுகை நோக்கி அரம் என வந்தது.

கும்பகருணன் தலை கடலில் மூழ்குதல்

மாக் கூடு படர் வேலை மறி மகரத் திரை வாங்கி,
மேக்கூடு, கிழக்கூடு, மிக்கு இரண்டு திக்கூடு,
போக்கூடு கவித்து, இரு கண் செவியூடும் புகை உயிர்க்கும்
மூக்கூடும் புகப் புக்கு மூழ்கியது, அம் முகக் குன்றம். 359

ஆடினார் வானவர்கள்; அரமகளிர் அமுத இசை
பாடினார்; மா தவரும் வேதியரும் பயம் தீர்ந்தார்;
கூடினார் படைத்தலைவர், கொற்றவனை; குடர் கலங்கி
ஓடினார், அடல் அரக்கர், இராவணனுக்கு உணர்த்துவான்.

16　　மாயா சனகப் படலம்

மகோதரனிடம் இராவணன் சீதையை அடையும் வழி கேட்டல்

அவ்வழி, கருணன் செய்த பேர் எழில் ஆண்மை எல்லாம்
செவ்வழி உணர்வு தோன்றச் செப்பினம்; சிறுமை தீரா
வெவ் வழி மாயை ஒன்று, வேறு இருந்து எண்ணி, வேட்கை,
இவ்வழி இலங்கை வேந்தன் இயற்றியது இயம்புவுற்றும்: 1

மாதிரம் கடந்த தோளான், மந்திர இருக்கை வந்த
மோதரன் என்னும் நாமத்து ஒருவனை முறையின் நோக்கி,
'சீதையை எய்தி, உள்ளம் சிறுமையின் தீரும் செய்கை
யாது? எனக்கு உணர்த்தி, இன்று, என் இன் உயிர் ஈதி' என்றான்.

'மருத்தனைச் சனகனாக உரு மாற்றிச் சீதைக்குக் காட்டுக' என மகோதரன் கூறுதல்

'உணர்த்துவென், இன்று நன்று; ஓர் உபாயத்தின் உறுதி மாயை
புணர்த்துவென், சீதை தானே புணர்வது ஓர் வினையம் போற்றி;
கணத்து, வன் சனகன்தன்னைக் கட்டினென் கொணர்ந்து காட்டின்—
மணத் தொழில் புரியும் அன்றே—மருத்தனை உருவம் மாற்றி?'

359. மாக் கூடு படர் வேலை - கரு நிறம் பொருந்திய பரவிய கடல்; மூக்கூடும் புக - மூக்கின் உள்ளேயும் கடல் நீர் புகுதலால்.

16: 1. சிறுமை - அளவிறந்த காமம்; வெம்மை - பிறர்க்கு இன்னா செய்தலாகிய கொடுமை; மாயை - வஞ்சனைச் செயல்; 2. சிறுமை - துன்பம்.

என அவன் உரைத்தலோடும், எழுந்து மார்பு இறுகப் புல்லி,
'அனையவன் தன்னைக் கொண்டு ஆங்கு அனுகுதி, அன்ப!' என்று,
புனை மலர்ச் சரளச் சோலை நோக்கினன், எழுந்து போனான்,
வினைகளைக் கற்பின் வென்ற விளக்கினை வெருவல் காண்பான்.

மின் ஒளிர் மகுட கோடி வெயில் ஒளி விரித்து வீச,
துன் இருள் இரிந்து தோற்ப, சுடர் மணித் தோளில் தோன்றும்
பொன்னரி மாலை நீல வரையின் வீழ் அருவி பொற்ப,
நல் நெடுங் களி மால் யானை நாணுற, நடந்து வந்தான். 5

'விளக்கு ஒரு விளக்கம் தாங்கி, மின் அணி அரவின் சுற்றி,
இளைப்புறும் மருங்குல் நோவ, முலை சுமந்து இயங்கும்' என்ன,
முளைப் பிறை நெற்றி வான மடந்தையர், முன்னும் பின்னும்,
வளைத்தனர் வந்து சூழ, வந்திகர் வாழ்த்த, வந்தான். 6

இராவணன் பீடத்தில் வீற்றிருந்து, சீதையை நோக்கிப் பேசுதல்

பண்களால் கிளவி செய்து, பவளத்தால் அதரம் ஆக்கி,
பெண்கள் ஆனார்க்குள் நல்ல உறுப்பு எலாம் பெருக்கின் ஈட்ட,
எண்களால் அளவு ஆம் மானக் குணம் தொகுத்து இயற்றினாளை,
கண்களால் அரக்கன் கண்டான், அவளை ஓர் கலக்கம் காண்பான்.

இட்டதோர் இரண பீடத்து, அமரரை இருக்கைநின்றும்
கட்ட தோள்-கானம் சுற்ற, கழல் ஒன்று கவானின் தோன்ற,
வட்ட வெண் கவிகை ஓங்க, சாமரை மருங்கு வீச,
தொட்டது ஓர் சுரிகையாளன் இருந்தனன், இனைய சொன்னான்:

'என்றுதான், அடியனேனுக்கு இரங்குவது? இந்து என்பான்,
என்றுதான், இரவியோடும் வேற்றுமை தெரிவது என்பால்?
என்றுதான், அனங்க வாளிக்கு இலக்கு அலாதிருக்கலாவது?'
என்று, தான் உற்றது எல்லாம் இயம்புவான் எடுத்துக் கொண்டான்.

'வஞ்சனேன் எனக்கு நானே, மாதரார் வடிவு கொண்ட
நஞ்சு தோய் அமுதம் உண்பான் நச்சினேன்; நாளும் தேய்ந்த
நெஞ்சு நேரானது; உம்மை நினைப்பு விட்டு, ஆவி நீக்க
அஞ்சினேன்; அடியனேன் நும் அடைக்கலம், அமுதின் வந்தீர்!

6. அரவின் சுற்றி - பாம்பொடு சுற்றி. இடைக்கு அரவை உவமை கூறுவது தமிழ் மரபு ஆதலால் இடையினை 'அரவு' என்றே கூறினார்; அரவு சுற்றி மின் அணிந்து என இயையும்; வந்திகர் - பரவி வாழ்த்துவோர்; 8. இரண பீடம் - பொன் ஆசனம்; கட்டல் - களைதல்; கானம் - தொகுதி; சுரிகை - குற்றுடைவாள்.

'தோற்பித்தீர்; மதிக்கு மேனி சுடுவித்தீர்; தென்றல் தூற்ற
வேர்ப்பித்தீர்; வயிரத் தோளை மெலிவித்தீர்; வேனில் வேளை
ஆர்ப்பித்தீர்; என்னை இன்னல் அறிவித்தீர்; அமரர் அச்சம்
தீர்ப்பித்தீர்; இன்னம், என் என் செய்வித்துத் தீர்திர் அம்மா!

'பெண் எலாம் நீரே ஆக்கி, பேர் எலாம் உமதே ஆக்கி,
கண் எலாம் நும் கண் ஆக்கி, காமவேள் என்னும் நாமத்து
அண்ணல் எய்வானும் ஆக்கி, ஐங் கணை அரியத் தக்க
புண் எலாம் எனக்கே ஆக்கி, விபரீதம் புணர்த்துவிட்டீர்.* 12

'ஈசனே முதலா மற்றை மானிடர் இறுதி ஆகக்
கூச, மூன்று உலகும் காக்கும் கொற்றத்தென்; வீரக் கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவி தோற்றிலென்; பெண்பால் வைத்த
ஆசை நோய் கொன்றதுஎன்றால், ஆண்மைதான் மாசுறாதோ?

'நோயினை நுகரவேயும், நுணங்கி நின்று உணங்கும் ஆவி
நாய் உயிர் ஆகும் அன்றே, நாள் பல கழித்த காலை?
பாயிரம் உணர்ந்த நூலோர், ''காமத்துப் பகுத்த பத்தி''—
ஆயிரம் அல்ல போன—''ஐ-இரண்டு'' என்பர் பொய்யே.* 14

'அறம் தரும் செல்வம் அன்னீர்! அமிழ்தினும் இனியீர்! என்னைப்
பிறந்திலன் ஆக்க வந்தீர்; பேர் எழில் மானம் கொல்ல,
''மறந்தன பெரிய; போன வரும்'' எனும் மருந்துதன்னால்,
இறந்து இறந்து உய்கின்றேன் யான்; யார், இது தெரியும் ஈட்டார்? 15

'அந்தரம் உணரின், மேல்நாள், அகலிகை என்பாள், காதல்
இந்திரன் உணர்த்த, நல்கி எய்தினாள், இழுக்குற்றாளோ?
மந்திரம் இல்லை, வேறு ஓர் மருந்து இல்லை, மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ் வாய் அமுது அலால்;—அமுதச் சொல்லீர்!

சீதையின் முன், நிலத்தில் விழுந்து, இராவணன் வணங்குதல்

என்று உரைத்து, எழுந்து சென்று, அங்கு, இருடது என்று உரைக்கும்
குன்று உரைத்தாலும் நேராக் குவவுத் தோள் நிலத்தைக் கூட, [நீலக்
மின் திரைத்து, அருக்கன்தன்னை விரித்து, முன் தொகுத்த போலும்
நின்று இமைக்கின்றது அன்ன முடி படி நெடிதின் வைத்தான். 17

11. மதிக்கு - சந்திரனால்; 13. வீரக் கோட்டி - வீரர் வரிசை; 14. பாயிரம் - நூலின் வரலாறு: பத்தி - அவத்தை நிலைகள்; ஐ இரண்டு - பத்து; அவை: காட்சி, வேட்கை, உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணு வரையிறத்தல், நோக்குவவெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பன. 15. பெரிய - பெருஞ் செயல்கள்; போன - மறந்து விட்டன; பேர் எழில் மானம் கொல்ல (அதனால்) பெரிய மறந்தன போன என இயையும்; 16. அந்தரம் - நடுவு நிலைமை.

சீதை இராவணனுக்குத் தன் கருத்தை உரைத்தல்

வல்லியம் மருங்கு கண்ட மான் என மறுக்கமுற்று,
மெல்லியல் ஆக்கை முற்றும் நடுங்கினள், விம்முகின்றாள்,
'கொல்லிய வரினும், உள்ளம் கூறுவென், தெரிய' என்னா,
புல்லிய கிடந்தது ஒன்றை நோக்கினள், புகல்வதானாள்: 18

' ''பழி இது; பாவம்'' என்று பார்க்கிலை; ''பகரத் தக்க
மொழி இவை அல்ல'' என்பது உணர்கிலை; முறைமை நோக்காய்;
கிழிகிலை நெஞ்சம்; வஞ்சக் கிளையொடும் இன்றுகாறும்
அழிகிலை என்றபோது, என் கற்பு என் ஆம்? அறம்தான் என் ஆம்?

'வான் உள அறத்தின் தோன்றும் சொல்வழி வாழு மண்ணின்
ஊன் உள உடம்புக்கு எல்லாம் உயிர் உள; உணர்வும் உண்டால்;
தான் உள, பத்துப் பேழ் வாய், தகாதன உரைக்கத் தக்க;
யான் உளென் கேட்க என்றால், என் சொலாய்? யாது செய்யாய்?

'வாசவன், மலரின் மேலான், மழுவலான் மைந்தன், மற்று அக்
கேசவன் சிறுவர் என்ற இந்தத் தன்மையோர்தம்மைக் கேளாய்;
'பூசலின் எதிர்ந்தேன்' என்றாய்; போர்க்களம் புக்கபோது, என்
ஆசையின் கனியைக் கண்ணின் கண்டிலை போலும், அஞ்சி. 21

'ஊண் இலா யாக்கை பேணி, உயர் புகழ் சூடாது, உன் முன்
நாண் இலாது இருந்தேன் அல்லேன்; நவை அறு குணங்கள் என்னும்
பூண் எலாம் பொறுத்த மேனிப் புண்ணியமூர்த்திதன்னைக்
காணலாம் இன்னும் என்னும் காதலால் இருந்தேன் கண்டாய்.

'சென்று சென்று அழியும் ஆவி திரிக்குமால்—செருவில், செம் பொன்
குன்று நின்றனைய தம்பி புறக்கொடை காத்து நிற்ப,
கொன்று, நின் தலைகள் சிந்தி, அரக்கர்தம் குலத்தை முற்றும்
வென்றுநின்றருளும் கோலம் காணிய கிடந்த வேட்கை. 23

'எனக்கு உயிர் பிறிதும் ஒன்று உண்டு என்று இரேல்,—இரக்கம் அல்லால்
தனக்கு உயிர் வேறு இன்றாகி, தாமரைக் கண்ணது ஆகி,
கனக் கரு மேகம் ஒன்று கார்முகம் தாங்கி, ஆர்க்கும்
மனக்கு இனிது ஆகி, நிற்கும் அஃது அன்றி—வரம்பு இலாதாய்!'

21. ஆசையின் கனி - பேரார்வத்தின் முதிர்ந்த கனி, ஈண்டு இராமன்; 22. ஊண் இலா யாக்கை - உணவு இன்றி இளைத்த உடம்பு; 23. திரித்தல் - திரும்பச் செய்தல், புறத்தே செல்ல ஒட்டாமல் தடுத்து நிறுத்துதல்.

இராவணன், 'இராமனை வெல்வது மட்டும் அன்று: அயோத்திக்கும் மிதிலைக்கும் அரக்க வீரர் சென்றுள்ளார்' என்று உரைத்தல்

என்றனள்: என்றலோடும், எரி உகு கண்ணன், தன்னைக்
கொன்றன மானம் தோன்ற, கூற்று எனச் சீற்றம் கொண்டான்,
'வென்று எனை, இராமன் உன்னை மீட்டபின், அவனோடு ஆவி,
ஒன்று என வாழ்திபோல்' என்று, இடி உரும் ஒக்க நக்கான்.

'இனத்துளார் உலகத்து உள்ளார், இமையவர் முதலினார், என்
சினத்துளார் யாவர் தீர்ந்தார்? தயரதன் சிறுவன் தன்னை,
புனத் துழாய் மாலையான் என்று உவக்கின்ற ஒருவன் புக்கு உன்
மனத்துளான் எனினும், கொல்வென்; வாழுதி, பின்னை மன்னோ!

' "வளைத்தன மதிலை, வேலை வகுத்தன வரம்பு, வாயால்
உளைத்தன குரங்கு பல் கால்" என்று அகம் உவந்தது உண்டேல்,
இளைத்த நுண் மருங்குல் நங்காய்! என் எதிர் எய்திற்று எல்லாம்,
விளக்கு எதிர் வீழ்ந்த விட்டில் பான்மைய; வியக்க வேண்டா.

'கொற்ற வாள் அரக்கர்தம்மை, "அயோத்தியர் குலத்தை முற்றும்
பற்றி நீர் தருதிர்; அன்றேல், பசுந் தலை கொணர்திர்; பாரித்து
உற்றது ஒன்று இயற்றுவீர்" என்று உந்தினேன்; உந்தை மேலும்,
வெற்றியர்தம்மைச் செல்லச் சொல்லினென். விரைவின்' என்றான். 28

மகோதரன், மாயா சனகனை அங்குக் கொண்டு வருதல்

என்று அவன் உரைத்தகாலை, 'என்னை இம் மாயம் செய்தாற்கு
ஒன்றும் இங்கு அரியது இல்லை' என்பது ஓர் துணுக்கம் உந்த,
நின்று நின்று உயிர்த்து நெஞ்சம் வெதும்பினாள், நெருப்பை மீளத்
தின்று தின்று உமிழ்கின்றாரின், துயருக்கே சேக்கை ஆனாள். 29

'இத் தலை இன்ன செய்த விதியினார், என்னை, இன்னும்
அத் தலை அன்ன செய்யச் சிறியரோ? வலியர் அம்மா!
பொய்த்தலை உடையது எல்லாம் தருமமே போலும்' என்னாக்
கைத்தனள் உள்ளம், வெள்ளக் கண்ணின் நீர்க் கரை இலாதாள். 30

ஆயது ஓர் காலத்து, ஆங்கண், மருத்தனைச் சனகன் ஆக்கி,
வாய் திறந்து அரற்றப் பற்றி, மகோதரன் கடிதின் வந்து,
காய் எரி அனையான் முன்னர்க் காட்டினன்; வணங்கக் கண்டாள்,
தாய் எரி விழக் கண்ட பார்ப்பு எனத் தரிக்கிலாதாள். 31

26. தீர்ந்தார் - உயிர் தப்பிப் பிழைத்தார்; 27. உளைத்தல் - உரப்பிப் பேரொலி செய்தல்; 29. சேக்கை - தங்குமிடம், நிலைக்களம்; 30. கைத்தல் - வெறுத்தல்; 31. பார்ப்பு - பறவைக் குஞ்சு.

மாயா சனகனைக் கண்டு, சீதை வாய் விட்டு அரற்றுதல்

கைகளை நெரித்தாள்; கண்ணில் மோதினுள்; கமலக் கால்கள்
நெய் எரி மிதித்தாலென்ன, நிலத்திடைப் பதைத்தாள்; நெஞ்சம்
மெய் என எரிந்தாள்; ஏங்கி விம்மினுள்; நடுங்கி வீழ்ந்தாள்;
பொய் என உணராள், அன்பால் புரண்டனள், பூசலிட்டாள்.

'தெய்வமோ!' என்னும்; 'மெய்ம்மை சிதைந்ததோ?' என்னும்; 'தீய
வைவலோ, உலகை?' என்னும்; 'வஞ்சமோ, வலியது?' என்னும்;
'உய்வலோ, இன்னம்?' என்னும்; ஒன்று அல துயரம் உற்ருள்;
தையலோ? தருமமேயோ? யார், அவள் தன்மை தேர்வார்? 33

'எந்தையே! எந்தையே! இன்று என் பொருட்டு உனக்கும் இக் கோள்
வந்ததே! என்னைப் பெற்று வாழ்ந்தவாறு இதுவோ? மண்ணோர்
தந்தையே! தாயே! செய்த தருமமே! தவமே!' என்னும்;
வெந் துயர் வீங்கி, தீ வீழ் விறகு என வெந்து, வீழ்ந்தாள்.

'இட்டு, உண்டாய்; அறங்கள் செய்தாய்; எதிர்ந்துளோர் இருக்கை எல்லாம்
சுட்டுண்டாய்; உயர்ந்த வேள்வித் துறை எலாம் கரையும் கண்டாய்;
மட்டு உண்டார், மனிசர்த் தின்ற வஞ்சரால் வயிரத் திண் தோள்
கட்டுண்டாய்; எண்னே, யானும் காண்கின்றேன் போலும் கண்ணல்.'

என்று, இன பலவும் பன்னி, எழுந்து வீழ்ந்து இடரில் தோய்ந்தாள்,
'பொன்றினள் போலும்' என்ன, பொறை அழிந்து, உயிர்ப்புப் போவாள்,
மின் தனி நிலத்து வீழ்ந்து புரள்கின்றது அனைய மெய்யாள்,
அன்றில் அம் பேடை போல, வாய் திறந்து அரற்றலுற்ருள்:

'பிறையுடை நுதலார்க்கு ஏற்ற பிறந்த இற் கடன்கள் செய்ய,
இறையுடை இருக்கை மூதூர் என்றும் வந்து இருக்கலாதீர்;
சிறையிடைக் காண, நீரும் சிறையொடும் சேர்ந்தவாறே—
மறையுடை வரம்பு நீங்கா வழி வந்த மன்னர் நீரே? 37

' ''வன் சிறைப் பறவை ஊரும் வானவன், வரம்பு இல் மாயப்
புன் சிறைப் பிறவி தீர்ப்பான் உளன்'' எனப் புலவர் நின்ருர்;
என் சிறை தீர்க்குவாரைக் காண்கிலேன்; என்னின் வந்த
உன் சிறை விடுக்கற்பாலார் யார் உளர், உலகத்து உள்ளார்?*

'பண் பெற்ருரொடு கூடாப் பகை பெற்ருய்; பகழி பாய
விண் பெற்ருய்எனினும், நன்ருல்; வேந்தராய் உயர்ந்த மேலோர்
எண் பெற்ருய்; பழியும் பெற்ருய்; இது நின்னல் பெற்றது அன்ருல்;
பெண் பெற்ருய்; அதனுல், பெற்ருய்; யார் இன்ன பேறு பெற்ருர்? 39

33. தீய - தீய்ந்து போம்படி; 35. பகைவர் இருக்கையை எரித்தல் புறத்திணையில் 'மழபுல வஞ்சி' எனப்படும்; 37. இறை - நாயகன், இராமன்; 39. பண் - பண்பு, நற்குணம்,

சுற்றுண்ட பாச நாஞ்சில் சுமையொடும் சூடுண்டு, ஆற்ற
எற்றுண்டும், அளற்று நீங்கா, விழு சிறு குண்டை என்ன,
பற்றுண்ட நாளே மாளாப் பாவியேன், உம்மை எல்லாம்
விற்று உண்டேன்; எனக்கு மீளும் விதி உண்டோ, நரகில் வீழ்ந்தால்?*

‘இருந்து நான் பகையை எல்லாம் ஈறு கண்டு, அளவு இல் இன்பம்
பொருந்தினேன்அல்லேன்; எம்கோன் திருவடி புனைந்தேன் அல்லேன்;
வருந்தினேன், நெடு நாள்; உம்மை வழியொடு முடித்தேன்; வாயால்
அருந்தினேன், அயோத்தி வந்த அரசர்தம் புகழை அம்மா! 41

‘ “கொல்” எனக் கணவற்கு ஆங்கு ஓர் கொடும் பகை கொடுத்தேன்;
கல் எனத் திரண்ட தோளைப் பாசத்தால் கட்டக் கண்டேன்; [எந்தை
இல் எனச் சிறந்து நின்ற இரண்டுக்கும் இன்னல் சூழ்ந்தேன்-
அல்லெனோ? எளியெனோ, யான்? அளியத்தேன், இறக்கலாதேன்!

‘இணை அறு வேள்வி மேல்நாள் இயற்றி, ஈன்று எடுத்த எந்தை
புணை உறு திரள் தோள் ஆர்த்து, பூழியில் புரளக் கண்டேன்;
மணவினை முடித்து, என் கையை மந்திர மரபின் தொட்ட
கணவனை இனைய கண்டால் அல்லது, கழிகின்றேனோ? 43

‘அன்னைமீர்! ஐயன்மீர்! என் ஆர் உயிர்த் தங்கைமீரே!
என்னை ஈன்று எடுத்த எந்தைக்கு எய்தியது யாதும் ஒன்று
முன்னம் நீர் உணர்ந்திலீரோ? உமக்கு வேறு உற்றது உண்டோ?
துன்ன அரு நெறியின் வந்து, தொடர்ந்திலீர்; துஞ்சினீரோ?

‘மேருவின் உம்பர்ச் சேர்ந்து, விண்ணினை மீக்கொண்டாலும்,
நீருடைக் காவல் மூதூர் எய்தலாம் நெறியிற்று அன்றால்;
போரிடைக் கொண்டாரேனும், வஞ்சனை புணர்த்தாரேனும்,
ஆர் உமக்கு அறையற்பாலார்? அனுமனும் உளனோ, நும் பால்?

‘சரதம்; மற்று இவனைத் தந்தார், தவம் புரிந்து ஆற்றல் தாழ்ந்த
பரதனைக் கொணர்தற்கு ஏதும் ஐயுறவு இல்லை; பல் நாள்
வரதனும் வாழ்வான்அல்லன்; தம்பியும் அனையன் வாழான்;
விரதம் உற்று, அறத்தில் நின்றார்க்கு, இவைகொலாம் விளைவ மேன்
[மேல்? 46

40. பாசம் சுற்றுண்ட நாஞ்சில் - கயிற்றினால் கட்டப்பட்டுள்ள கலப்பை; சூடுண்ணல் - சூட்டுக்கோலால் சுடப்படுதல்; அளறு - சேறு; குண்டை - எருது; 43. புணை உறு திரள் தோள் - பகைவராகிய கடலைக் கடத்தற்குப் புணைபோல் நின்று உதவும் இயல்பு அமைந்த வலிய திரண்ட தோள்கள்: 46. சரதம் - உண்மை, நிச்சயம்.

"அடைத்தது கடலை; மேல் வந்து அடைந்தது, மதிலை; ஆவி
துடைத்தது பகையை, சேனை" எனச் சிலர் சொல்லச் சொல்ல,
படைத்தது ஓர் உவகைதன்னை, வேறு ஒரு வினயம் பண்ணி,
உடைத்தது விதியே' என்று என்று, உளைந்தனள், உணர்வு தீர்வாள்.

மீண்டும், இராவணன் சீதையை இணங்குமாறு வேண்டுதல்

ஏங்குவாள் இனைய பன்ன, இமையவர் ஏற்றம் எல்லாம்
வாங்கும் வாள் அரக்கன் ஆற்ற மனம் மகிழ்ந்து, இனிதின் நோக்கி,
'தாங்குவாள் அல்லள் துன்பம்; இவளையும் தாங்கி, தானும்
ஓங்குவான்' என்ன உன்னி, இனையன உரைக்கலுற்றான்: 48

'காரிகை! நின்னை எய்தும் காதலால், கருதலாகாப்
பேர் இடர் இயற்றலுற்றேன்; பிழை இது பொறுத்தி; இன்னும்,
வேர் அற மிதிலையோரை விளிகிலேன்; விளிந்த போதும்,
ஆர் உயிர் இவனை உண்ணேன்; அஞ்சலை, அன்னம் அன்னாய்!

'இமையவர் உலகமேதான், இவ் உலகு ஏழுமேதான்,
அமைவரும் புவனம் மூன்றில் என்னுடை ஆட்சியேதான்,
சமைவுறத் தருவென், மற்று இத் தாரணி மன்னற்கு; இன்னல்
சுமையுடைக் காம வெந் நோய் துடைத்தியேல், தொழுது வாழ்வேன்.

'இலங்கை ஊர் இவனுக்கு ஈந்து, வேறு இடத்து இருந்து வாழ்வேன்;
நலம் கிளர் நிதி இரண்டும் நல்குவென்; நாமத் தெய்வப்
பொலம் கிளர் மானம்தானே பொது அறக் கொடுப்பென்; புத்தேள்
வலம் கிளர் வாளும் வேண்டில், வழங்குவென்; யாதும் மாற்றேன்.

'இந்திரன் கவித்த மௌலி, இமையவர் இறைஞ்சி ஏத்த,
மந்திர மரபின் சூட்டி, வானவர் மகளிர் யாரும்
பந்தரின் உரிமை செய்ய, யான் இவன் பணியில் நிற்பேன்—
சுந்தரப் பவள வாய் ஓர் அருள் மொழி சிறிது சொல்லின். 52

'எந்தைதன் தந்தை தாதை, இவ் உலகு ஈன்ற முன்னோன்,
வந்து இவன்தானே வேட்ட வரம் எலாம் வழங்கும்; மற்றை
அந்தகன் அடியார் செய்கை ஆற்றுமால்; அமிழ்தின் வந்த
செந் திரு நீர் அல்லீரேல், அவளும் வந்து, ஏவல் செய்யும். 53

47. வினயம் - சூழ்ச்சி; 49. விளிதல் - கோபித்தல்; 50. தாரணி மன்னன் - விதேக நாட்டு மன்னனாகிய சனகன்; 51. மாற்றுதல் - மறுத்துரைத்தல்; 52. பந்தர் - பந்தல்; உரிமை - உரிய பணிகள்.

'தேவரே முதலா, மற்றைத் திண் திறல் நாகர், மண்ணோர்,
யாவரும் வந்து, நுந்தை அடி தொழுது, ஏவல் செய்வார்;
பாவை! நீ இவனின் வந்த பயன் பழுது ஆவது அன்றால்;
மூஉலகு ஆளும் செல்வம் கொடுத்து, அது முடித்தி' என்றான்.

இராவணன் உரை கேட்டு, சீதை சினந்து மொழிதல்

'இத் திருப் பெறுகிற்பானும், இந்திரன்; இலங்கை நுங்கள்
பொய்த் திருப் பெறுகிற்பானும், வீடணன்; புலவர் கோமான்
கைத் திருச் சரங்கள் உன்தன் மார்பிடைக் கலக்கற்பால;
மைத் திரு நிறத்தான் தாள் என் தலைமிசை வைக்கற்பால. 55

'நகுவன நின்னோடு, ஐயன் நாயகன் நாம வாளி,
புகுவன போழ்ந்து, உன் மார்பில் திறந்தன புண்கள் எல்லாம்
தகுவன இனிய சொல்லத் தக்கன; சாப நாணின்,
உகுவன மலைகள் எஞ்ச, பிறப்பன ஒலிகள் அம்மா! 56

'சொல்லுவ மதுர மாற்றம், துண்டத்தால் உண்டு, உன் கண்ணைக்
கல்லுவ, காகம்; வந்து கலப்பன, கமலக் கண்ணன்
வில் உமிழ் பகழி; பின்னர், விலங்கு எழில் அலங்கல் மார்பம்
புல்லுவ, களிப்புக் கூர்ந்து, புலவு நாறு அலகை எல்லாம். 57

'விரும்பி நான் கேட்பது உண்டால், நின்னுழை வார்த்தை: "வீரன்
இரும்பு இயல் வயிர வாளி இடறிட, எயிற்றுப் பேழ் வாய்ப்
பெரும் பியல் தலைகள் சிந்திப் பிழைப்பிலை முடிந்தாய்" என்ன,
அரும்பு இயல் துளவப் பைந் தார் அனுமன் வந்து அளித்த அந் நாள்.

'புன் மகன்! கேட்டி, கேட்டற்கு உரியது; புகுந்த போரின்,
உன் மகன் உயிரை எம்மோய் சுமித்திரை உய்ய ஈன்ற
நன் மகன் வாளி நக்க, நாய் அவன் உடலை நக்க,
"என் மகன் இறந்தான்" என்ன, நீ எடுத்து அரற்றல்' என்றாள்.* 59

இராவணன் சினந்து சீதையினிடம் விரைந்து செல்ல, மகோதரன், 'தந்தை வேண்ட இவள் இணங்குவாள்' என்று கூறி, அவனைத் தடுத்தல்

வெய்யவன் அனைய கேளா, வெயில் உக விழித்து, வீரக்
கை பல பிசைந்து, பேழ் வாய் எயிறு புக்கு அழுந்தக் கவ்வி,
தையல்மேல் ஓடலோடும், மகோதரன் தடுத்தான்; 'ஈன்ற
மொய் கழல் தாதை வேண்ட, இசையும்; நீ முனியல்' என்றான்.

57. துண்டம் - மூக்கு, அலகு; 58. பியல் - பிடர்.

மாயா சனகன் சீதையை, 'இராவணன் கருத்திற்கு இசைக' எனல்

அன்று அவன் விலக்க மீண்டான் ஆசனத்து இருக்க, 'ஆவி
பொன்றினன் ஆகும்' என்னத் தரையிடைக் கிடந்த பொய்யோன்,
'இன்று இது நேராய்என்னின், என்னை என் குலத்தினோடும்
கொன்றனை ஆதி' என்னா, இனையன கூறலுற்றான்: 61

'பூவின்மேல் இருந்த தெய்வத் தையலும் பொதுமை உற்றாள்;
பாவி! யான் பயந்த நங்கை! நின் பொருட்டாகப் பட்டேன்;
ஆவி போய் அழிதல் நன்றோ? அமரர்க்கும் அரசன் ஆவான்
தேவியாய் இருத்தல் தீதோ? சிறையிடைத் தேம்புகின்றாய்! 62

'என்னை என் குலத்தினோடும் இன் உயிர் தாங்கி, ஈண்டு
நல் நெடுஞ் செல்வம் துய்ப்பேன் ஆக்கினை நல்கி, நாளும்
உன்னை வெஞ் சிறையின் நீக்கி, இன்பத்துள் உய்ப்பாய்' என்னா,
பொன் அடி மருங்கு வீழ்ந்தான், உயிர் உகப் பொருமுகின்றான்.

சீதை, மாயா சனகனைக் கடிந்து கூறுதல்

அவ் உரை கேட்ட நங்கை, செவிகளை அமையப் பொத்தி,
வெவ் உயிர்த்து, ஆவி தள்ளி, வீங்கினள், வெகுளி பொங்க,
'இவ் உரை எந்தை கூறான், இன் உயிர் வாழ்க்கை பேணி;
செவ்வுரை அன்று இது' என்னாச் சீறினள், உளையச் செப்பும்:

'அறம் கெட, வழக்கு நீங்க, அரசர்தம் மரபிற்கு ஆன்ற
மறம் கெட, மெய்ம்மை தேய, வசை வர, மறைகள் ஓதும்
திறம் கெட, ஒழுக்கம் குன்ற, தேவரும் பேணத் தக்க
நிறம் கெட, இனைய சொன்னாய்; சனகன்கொல், நினையின்? ஐயா! 65

'வழி கெட வரினும், தம் தம் வாழ்க்கை தேய்ந்து இறினும், மார்பம்
கிழிபட அயில் வேல் வந்து கிடைப்பினும், ஆன்றோர் கூறும்
மொழிகொடு வாழ்வது அல்லால், முறை கெடப் புறம் நின்று ஆர்க்கும்
பழி பட வாழ்கிற்பாரும் பார்த்திவர் உளரோ? பாவம்!* 66

'நீயும், நின் கிளையும், மற்று இந் நெடு நில வரைப்பும், நேரே
மாயினும், முறைமை குன்ற வாழ்வெனோ?—வயிரத் திண் தோள்
ஆயிர நாமத்து ஆழி அரியினுக்கு அடிமை செய்வேன்—
நாயினை நோக்குவேனோ, நாண் துறந்து, ஆவி நச்சி? 67

65. நிறம் - புகழ்த்திறமாகிய ஒளி; 66. கிடைத்தல் - எதிர்ப்படல்.

'வரி சிலை ஒருவன் அல்லால், மைந்தர் என் மருங்கு வந்தார்
எரியிடை வீழ்ந்த விட்டில் அல்லரோ? அரசுக்கு ஏற்ற
அரியொடும் வாழ்ந்த பேடை, அங்கணத்து அழுக்குத் தின்னும்
நரியொடும் வாழ்வது உண்டோ—நாயினும் கடைப்பட்டோனே! 68

'அல்லையே எந்தை; ஆனாய் ஆகதான்; அலங்கல் வீரன்
வில்லையே வாழ்த்தி, மீட்கின் மீளுதி; மீட்சி என்பது
இல்லையேல், இறந்து தீர்தி; இது அலால், இயம்பல் ஆகாச்
சொல்லையே உரைத்தாய்; என்றும் பழி கொண்டாய்' என்னச் சொன்
[னாள். 69

இராவணன் மாயா சனகனைக் கொல்லுதற்கு வாள் உருவுதல்

வன் திறல் அரக்கன், அன்ன வாசகம் மனத்துக் கொள்ளா,
'நின்றது நிற்க; மேன்மேல் நிகழ்ந்தவா நிகழ்க; நின்முன்
நின்றவன் அல்லன் போலாம் சனகன்; இக் கணத்தினின் முன்
கொன்று உயிர் குடிப்பென்' என்னா, சுரிகை வாள் உருவிக் கொண்டான்.

'உன்னால் ஒன்றும் இயலாது' எனச் சீதை கூறுதல்

'என்னையும் கொல்லாய்; இன்னே இவனையும் கொல்லாய்; இன்னும்
உன்னையும் கொல்லாய்; மற்று, இவ் உலகையும் கொல்லாய்; யானோ
இன் உயிர் நீங்கி, என்றும் கெடாப் புகழ் எய்துகின்றேன்;
பின்னையும், எம் கோன் அம்பின் கிளையொடும் பிழையாய்' என்றாள்.

மாயா சனகனைக் கொல்லச் சென்ற இராவணனை மகோதரன் தடுத்தல்

'இரந்தனன் வேண்டிற்று அல்லால், இவன் பிழை இழைத்தது உண்
புரந்தரன் செல்வத்து ஐய! கொல்கை ஓர் பொருளிற்றோ தான்; [டோ?
பரந்த வெம் பகையை வென்றால், நின்வழிப் படரும் நங்கை;
அரந்தையள் ஆகும்அன்றே, தந்தையை நலிவதாயின்?' 72

கும்பகருணன் இறந்தமையை இராவணன் அறிய நேரிடல்

என்று அவன் விலக்க, மீண்டு, ஆண்டு இருந்தது ஓர் இறுதியின் கண்,
குன்று என நீண்ட கும்பகருணனை இராமன் கொல்ல,
வன் திறல் குரங்கின் தானை வான் உற ஆர்த்த ஓதை,
சென்றன செவியினூடு, தேவர்கள் ஆர்ப்பும் செல்ல. 73

'உகும் திறல் அமரர் நாடும், வானர யூகத்தோரும்,
மிகும் திறம் வேறொன்று இல்லா இருவர் நாண் ஒலியும், விஞ்ச,
தகும் திறன் நினைந்தேன்; எம்பிக்கு அமரிடைத் தனிமைப்பாடு
புகுந்துளது உண்டு' என்று உள்ளம் பொருமல் வந்து உற்ற போழ்தின்,

68. அங்கணம் - தூய்மையில்லாத முற்றம், புழைக்கடை; 72. அரந்தை - துன்பம்; 74. திறல் உகும் அமரர் என மாற்றுக.

புறந்தரு சேனை முந்நீர் அருஞ் சிறை போக்கி, போதப்
பறந்தனர் அனைய தூதர் செவி மருங்கு எய்தி, பைய,
'திறம் திறம் ஆக நின்ற கவிப் பெருங் கடலைச் சிந்தி,
இறந்தனன், நும்பி; அம்பின் கொன்றனன், இராமன்' என்றார்.

இராவணன் அழுது அரற்றுதல்

ஊரொடும் பொருந்தித் தோன்றும் ஒளியவன் என்ன, ஒண் பொன்
தாரொடும் புனைந்த மௌலி தரையொடும் பொருந்த, தள்ளி,
பாரொடும் பொருந்தி நின்ற மராமரம், பணைகளோடும்
வேரொடும் பறிந்து, மண்மேல் வீழ்வதே போல, வீழ்ந்தான்.

பிறிவு எனும் பீழை தாங்கள் பிறந்த நாள் தொடங்கி என்றும்
உறுவது ஒன்று இன்றி, ஆவி ஒன்றென நினைந்து நின்றான்,
எறி வரும் செருவில் தம்பி தன்பொருட்டு இறந்தான் என்ன
அறிவு அழிந்து, அவசன் ஆகி, அரற்றினன், அண்டம் முற்ற.

'தம்பியோ! வானவர் ஆம் தாமரையின் காடு உழக்கும்
தும்பியோ! நான்முகத்தோன் சேம்மதலை தோன்றாலோ!
நம்பியோ! இந்திரனை நாமப் பொறி துடைத்த
எம்பியோ! யான் உன்னை இவ் உரையும் கேட்டேனே! 78

'மின் இலைய வேலோனே! யான் உன் விழி காணேன்,
நின் நிலை யாது என்னேன், உயிர் பேணி நிற்கின்றேன்;
உன் நிலைமை ஈதுஆயின், ஓடைக் களிறு உந்திப்
பொன்னுலகம் மீளப் புகாரோ, புரந்தரனார்? 79

'வல் நெஞ்சின் என்னை நீ நீத்துப் போய், வான் அடைந்தால்,
இன்னம் சிலரோடு ஒரு வயிற்றின் யார் பிறப்பார்?
மின் அஞ்சும் வேலோய்! விழி அஞ்ச வாழ்கின்றார்,
தம் நெஞ்சம் தாமே தடவாரோ, தானவர்கள்? 80

'கல் அன்றோ, நீராடும் காலத்து, உன் கால் தேய்க்கும்,—
மல் ஒன்று தோளாய்!—வட மேரு? மானுடவன்
வில் ஒன்று நின்னை விளிவித்துளது என்னும்
சொல் அன்றோ என்னைச் சுடுகின்றது, தோன்றால்! 81

75. புறந்தருதல் - பாதுகாத்தல்; போத - விரைவாக; 76. ஒளியவன் - சூரியன்; 77. பிறிவு - பிரிவு; பீழை - துன்பம்; 78. நாமப் பொறி - புகழுக்குக் காரணமாகிய நல்வினைப் பயன்.

'மாண்டனவாம், சூலமும், சக்கரமும், வச்சிரமும்;
தீண்டினவா ஒன்றும் செயல் அற்றவாம்; தெறித்து,
மீண்டனவாம்; மானிடவன் மெல் அம்பு மெய் உருவ,
நீண்டனவாம்; தாம் இன்னம் நின்றாராம், தோள் நோக்கி! 82

'நோக்கு அறவும் எம்பியர்கள் மாளவும், இந் நொய்து இலங்கை
போக்கு அறவும், மாதுலனார் பொன்றவும், என் பின் பிறந்தாள்
மூக்கு அறவும், வாழ்ந்தேன்—ஒருத்தி முலைக் கிடந்த
ஏக்கறவால்; இன்னம் இரேனோ, உனை இழந்தும்? 83

'தன்னைத்தான், தம்பியைத்தான், தானைத் தலைவனைத்தான்,
மன்னைத்தான், மைந்தனைத்தான், மாருதத்தின் காதலைத்தான்,
பின்னைக் கரடிக்கு இறையைத்தான், பேர் மாய்த்தாய்
என்னத்தான் கேட்டிலேன்; என் ஆனவாறு இதுவே! 84

'ஏழை மகளிர் அடி வருட, ஈர்ந் தென்றல்
வாழும் மணி அரங்கில், பூம் பள்ளி வைகுவாய்!
சூழும் அலகை துணங்கைப் பறை துவைப்ப,
பூழி அணைமேல் துயின்றனையோ, போர்க்களத்தே? 85

'செந் தேன் பருகித் திசை திசையும் நீ வாழ,
உய்ந்தேன்; இனி, இன்று நானும் உனக்கு ஆவி
தந்தேன், பிரியேன், தனி போகத் தாழ்க்கிலேன்,
வந்தேன் தொடர; மதக் களிறே! வந்தேனால்.' 86

இராவணன் கதற, சீதை மகிழ்ச்சியடைதல்

அண்டத்து அளவும் இனைய பகர்ந்து அழைத்து,
பண்டைத் தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்;
தொண்டைக் கனி வாய் துடிப்ப, மயிர் பொடிப்ப,
கெண்டைத் தடங் கண்ணாள் உள்ளே கிளுகிளுத்தாள். 87

வீங்கினாள் கொங்கை; மெலிந்த மெலிவு அகல
ஓங்கினாள்; உள்ளம் உவந்தாள்; உயிர் புகுந்தாள்;
தீங்கு இலாக் கற்பின் திருமடந்தை சேடி ஆம்
பாங்கினாள் உற்றதனை யாரே பகர்கிற்பார்? 88

82. மாண்டனவாம் - மழுங்கின; 83. மாதுலனார் - மாமனாகிய மாரீசனார்; ஏக்கறவு - ஆசையால் தாழ்தல்; 87. பண்டைத் தன் நாமம் - முன்னாளில் சிவபெருமானால் அளிக்கப்பெற்ற இராவணன் என்ற பெயர். அதன் காரணமாவது அப் பெயரைப் பெறுதற்குக் காரணமாக அமைந்த அழுகை; இராவணம் - அழுகை; பாரித்தல் - வளர்த்தல்.

கண்டாள், கருணனை, தன் கண் கடந்த தோளானை;
கொண்டாள், ஒரு துணுக்கம்; அன்னவனைக் கொற்றவனார்
தண்டாத வாளி தடிந்த தனி வார்த்தை
உண்டாள், உடல் தடித்தாள்; வேறு ஒருத்தி ஒக்கின்றாள். 89

இராவணன் சீறுதலும், மந்திரிமார் தேற்ற அவன் அகல்தலும்

'தாவ அரிய பேர் உலகத்து எம்பி சவத்தோடும்
யாவரையும் கொன்று அருக்கி, என்றும் இறவாத
மூவரையும், மேலை நாள் மூவா மருந்து உண்ட
தேவரையும், வைப்பேன் சிறை' என்னச் சீறினான். 90

அக் கணத்து, மந்திரியர் ஆற்ற, சிறிது ஆறி,
'இக் கணத்து மானிடவர் ஈரக் குருதியால்
முக் கைப் புனல் உகுப்பென், எம்பிக்கு' என முனியா,
திக்கு அனைத்தும் போர் கடந்தான், போயினான், தீ விழியான்.

'மாயா சனகனைச் சிறையில் வையுங்கள்' என்று பணித்து, மகோதரன் போதல்

'கூறோம், இனி நாம்; அக் கும்பகருணனார்
பாறு ஆடு வெங் களத்துப் பட்டார்' எனப் பதையா,
'வேறு ஓர் சிறை இவனை வைம்மின், விரைந்து' என்ன,
மாறு ஓர் திசை நோக்கிப் போனார், மகோதரனார். 92

திரிசடை தேற்ற, சீதை துயரம் நீங்குதல்

வரி சடை நறு மலர் வண்டு பாடு இலாத்
துரிசு அடை புரி குழல் சும்மை சுற்றிய
ஒரு சடை உடையவட்கு, உடைய அன்பினாள்,
திரிசடை தெருட்டுவாள், இனைய செப்புவாள்: 93

'உந்தை என்று, உனக்கு எதிர் உருவம் மாற்றியே,
வந்தவன், மருத்தன் என்று உளன் ஓர் மாயையான்;
அந்தம் இல் கொடுந் தொழில் அரக்கன் ஆம்' எனா,
சிந்தையின் உணர்த்தினள், அமுதின் செம்மையாள். 94

நங்கையும் அவள் உரை நாளும் தேறுவாள்,
சங்கையும் இன்னலும் துயரும் தள்ளினாள்;
இங்கு நின்று ஏகிய இலங்கை காவலன்
அங்கு நின்று இயற்றியது அறைகுவாம்அரோ. 95

89. தண்டாத - தவறாமல் அழிக்கவல்ல; 90. தாவ அரிய - கடத்தற்கு அரிய; 91. முக் கைப் புனல் - மூன்று முறை கையால் நீர் இறைத்தலாகிய கடன்; 92. பாறு - பருந்து.

17 அதிகாயன் வதைப் படலம்

இராவணன் அமைச்சரைக் கடிதல்

கொழுந்து விட்டு அழன்று எரி மடங்கல் கூட்டு அற,
எழுந்து எரி வெகுளியான், இரு மருங்கினும்
தொழும் தகை அமைச்சரைச் சுளித்து நோக்குறா,
மொழிந்தனன், இடியொடு முகிலும் சிந்தவே: 1

'ஏகுதிர், எம் முகத்து எவரும்—என்னுடை
யோக வெஞ் சேனையும், உடற்றும் உம்முடைச்
சாகரத் தானையும், தழுவச் சார்ந்து, அவர்
வேக வெஞ் சிலைத் தொழில் விலக்கி வீட்டிரால். 2

' ''எடுத்தவர் இருந்துழி எய்தி, யாரையும்
படுத்து, இவண் மீடும்'' என்று உரைத்த பண்பினீர்!
தடுத்திலீர் எம்பியை; தாங்ககிற்றிலீர்;
கொடுத்திலீர், உம் உயிர்; வீரக் கோட்டியீர். 3

'உம்மையின் நின்று, நான் உலகம் மூன்றும் என்
வெம்மையின், ஆண்டது; நீர் என் வென்றியால்
இம்மையில் நெடுந் திரு எய்தினீர்; இனிச்
செம்மையின் இன் உயிர் தீர்ந்து தீர்திரால். 4

' ''ஆற்றலம்'' என்றிரேல் என்மின்; யான், அவர்
தோற்று, அலம்வந்து உகத் துரந்து, தொல் நெடுங்
கூற்று அலது உயிர் அது குடிக்கும், கூர்த்த என்
வேல் தலை மானுடர் வெரிநில் காண்பெனால். 5

'அல்லதும் உண்டு, உமக்கு உரைப்பது: ''ஆர் அமர்
வெல்லுதும்'' என்றிரேல், மேல் செல்வீர்; இனி,
வல்லது மடிதலே என்னின், மாறுதிர்;
சொல்லும், நும் கருத்து' என முனிந்து சொல்லினான். 6

அதிகாயன் தனது வீரத்தை மிகுத்துக் கூறுதல்

நதி காய் நெடு மானமும் நாணும் உறா,
மதி காய் குடை மன்னனை வைது உரையா,
விதி காயினும் வீரம் வெலற்கு அரியான்
அதிகாயன் எனும் பெயரான் அறைவான்: 7

17 : 1. மடங்கல் - ஊழித் தீ; 2. யோகம் - உபாயம், சூழ்ச்சி; 3. எடுத்தல் - படையுடன் மேற்செல்லுதல்; வீரக் கோட்டி - வீரர் வரிசை; 4. உம்மையின் நின்று - நெடுங் காலத்திற்கு முன்னிருந்து; 5. அலம் வருதல் - வருந்துதல்; வெரிந் - முதுகு; 6. வல்லது - இயல்வது; மாறுதிர் - மீள்வீராக; 7. நெடுமானம் - பெரிய அவமானம், ஈண்டு அதனால் தோன்றிய கடுஞ் சினம்.

'வான் அஞ்சுக; வையகம் அஞ்சுக; மா-
லான், அஞ்சு முகத்தவன், அஞ்சுக; ''மேல்,
நான் அஞ்சினென்'' என்று, உனை நாணுக; போர்
யான் அஞ்சினென் என்றும் இயம்புவதோ? 8

'வெம்மைப் பொரு தானவர் மேல் வலியோர்-
தம்மைத் தனையில் கொடு தந்திலெனோ?
உம்மைக் குலையப் பொரும் உம்பரையும்
கொம்மைக் குய வட்டணை கொண்டிலெனோ? 9

'காய்ப்புண்ட நெடும் படை கை உளதாத்
தேய்ப்புண்டவனும், சில சில் கணையால்
ஆய்ப்புண்டவனும், அவர் சொல் வலதால்
ஏய்ப்புண்டவனும், என எண்ணினையோ? 10

அதிகாயன் வஞ்சினம் கூறி, போருக்குச் செல்லல்

'உம்பிக்கு உயிர் ஈறு செய்தான் ஒருவன்
தம்பிக்கு உயிர் ஈறு சமைத்து, அவனைக்
கம்பிப்பது ஓர் வன் துயர் கண்டிலனேல்,
நம்பிக்கு ஒரு நன் மகனோ, இனி நான்? 11

'கிட்டிப் பொருது, அக் கிளர் சேனை எலாம்
மட்டித்து, உயர் வானரர் வன் தலையை
வெட்டித் தரை இட்டு, இரு வில்லினரைக்
கட்டித் தருவென்; இது காணுதியால். 12

' ''சேனைக் கடலோடு இடை செல்க'' எனினும்,
யான் இப்பொழுதே, ''தனி ஏகு'' எனினும்,
தான் ஒத்தது சொல்லுதி; தா விடை' என்-
றான்; இத் திறம் உன்னி அரக்கர் பிரான், 13

'சொன்னாய், இது நன்று துணிந்தனை; நீ
அன்னான் உயிர் தந்தனையாம்எனின், யான்,
பின் நாள், அவ் இராமன் எனும் பெயரான்-
தன் ஆர் உயிர் கொண்டு சமைக்குவெனால். 14

8. அஞ்சு முகத்தவன் - சிவன்; 9. கொம்மை - திரட்சி; குயம் - வாள், மார்பும் ஆம்; வட்டணை கொள்ளுதல் - இடம் வலமாகச் சாரி திரிந்து பொருது வெற்றிகொள்ளுதல், சுழல அடித்தலும் ஆம்; 10. தேய்ப்புண்டவன் - அனுமனால் தரையில் தேய்க்கப்பட்ட அட்சகுமாரன்; ஆய்ப்புண்டவன் - உயிரொடுங்கியவனாகிய கும்பகருணன்; சொல் வலதால் - புகழின் வல்லமையால்; ஏய்ப்புண்டவன் - ஏய்க்கப்பட்டவனாகிய வீடணன்; 11. அதிகாயனது இக்கூற்று 'வஞ்சினக் காஞ்சி' என்னும் புறத்துறையின் பாற்படும்; 12. மட்டித்தல் - பிசைதல், அழித்தல்.

'போவாய் இதுபோது—பொலங் கழலோய்!—
மூவாயிர கோடியரோடு, முரண்
கா ஆர் கரி, தேர், பரி காவலின்' என்று,
ஏவாதன யாவையும் ஏவினனால். 15

'கும்பக் கொடியோனும், நிகும்பனும், வேறு
அம் பொன் கழல் வீரன் அகம்பனும்,—உன்
செம் பொன் பொலி தேர் அயல் செல்குவரால்—
உம்பர்க்கும் வெலற்கு அரியார் உரவோர். 16

'ஓர் ஏறு சிவற்கு உளது ஒப்பு உளவாம்
வார் ஏறு வயப் பரி ஆயிரம், வன்
போர் ஏறிட ஏறுவ, பூணுறு திண்
தேர் ஏறுதி; தந்தனென்—வெந் திறலோய்! 17

'ஆம் அத்தனை மாவுடை அத்தனை தேர்
சேமத்தன பின் புடை செல்ல, அடும்
கோ மத்த நெடுங் கரி கோடியொடும்,
போம், அத்தனை வெம் புரவிக் கடலே.' 18

என்றே விடை நல்க, இறைஞ்சி எழா,
வன் தாள் வயிரச் சிலை கைக் கொடு, வாள்
பொன் தாழ் கவசம் புகுதா, முகிலின்
நின்றான்; இமையோர்கள் நெளிந்தனரால். 19

பல் வேறு படைக்கலம், வெம் பகலோன்
எல் வேறு தெரிப்ப, கொடு ஏகினனால்,
சொல் வேறு தெழிக்குநர் சுற்றுற,—மா-
வில் வேறு தெரிப்புறும் மேனியினான். 20

அதிகாயனுடன் சென்ற படைகள்

இழை, அஞ்சன, மால் களிறு, எண் இல் அரி
முழை அஞ்ச முழங்கின; மும் முறை நீர்
குழை அஞ்ச முழங்கின, நாண் ஒலி; கோள்
மழை அஞ்ச முழங்கின, மா முரசே. 21

15. கா - காத்தல், ஆர் - பொருந்திய; 16. கும்பன், நிகும்பன் என்னும் இருவரும் கும்பகருணனுடைய புதல்வர்கள்; அகம்பன் - இவன் சுமாலி என்னும் அரக்கனுடைய மகன்; 17. சிவற்கு உளது ஓர் ஏறு ஒப்பு உளவாம் பரி எனவும், வன்போர் ஏறிட ஏறுவ வார் ஏறு வயப் பரி எனவும், பரி ஆயிரம் பூணுறு திண் தேர் எனவும் இயைக்க; 19. நெளிதல் - நடுங்கி உடல் தளர்தல்; 20. மாவில் வேறு தெரிப்புறும் மேனியினன் - யானையினும் வேறாக (பெரிதாக)த் தோன்றும் உடலையுடையவனான அதிகாயன்; அதிகாயன் - பெரிய உடம்பினை உடையவன்; 21. மும் முறை நீர் - முந்நீர், கடல்; குழை அஞ்ச - குழைந்து அஞ்சும்படி.

ஆர்த்தார், நெடு வானம் நடுங்க; அடிப்
பேர்த்தார், நிலமாமகள் பேர்வள் என;
தூர்த்தார் நெடு வேலைகள், தூளியினால்;
வேர்த்தார், அது கண்டு, விசும்பு உறைவோர். 22

அடியோடு மதக் களி யானைகளின்
பிடியோடு நிகர்த்தன, பின் புறம், முன்—
தடியோடு துடக்கிய தாரைய, வெண்
கொடியோடு துடக்கிய, கொண்மு எலாம். 23

தாறு ஆடின மால் கரியின்புடை தாழ்
மாறாடின மா மதம் மண்டுதலால்,
ஆறு ஆடின, பாய் பரி, யானைகளும்;
சேறு ஆடின, சேண் நெறி சென்ற எலாம். 24

தேர் சென்றன, செங் கதிரோனொடு சேர்
ஊர் சென்றனபோல்; ஒளி ஓடைகளின்
கார் சென்றன, கார் நிரை சென்றனபோல்;
பார் சென்றில, சென்றன பாய் பரியே. 25

அதிகாயன், கும்பகருணனது உடல் கண்டு வருந்துதல்

மேருத்தனை வெற்புஇனம் மொய்த்து, நெடும்
பாரில் செலுமாறு படப் படரும்
தேர் சுற்றிடவே, கொடு சென்று முரண்
போர் முற்று களத்திடைப் புக்கனனால். 26

கண்டான், அவ் இராமன் எனும் களி மா
உண்டாடிய வெங் களன் ஊடுருவ;
புண்தான் உறு நெஞ்சு புழுக்கம் உறத்
திண்டாடினன், வந்த சினத் திறலோன். 27

மலை கண்டனபோல் வரு தோளொடு தாள்
கலை கண்ட கருங் கடல் கண்டு, உளவாம்,
நிலை கண்டன கண்டு, ஒரு தாதை நெடுந்
தலை கண்டிலன், நின்று, சலித்தனனால். 28

23. அடி ஒடுதல் - அடிச் சுவட்டின் வழியே தொடர்ந்து விரைதல்; தடி - தடித்து, மின்னல்; கொண்மு - கொண்மூ, மேகம்; 24. தாறு ஆடுதல் - அங்குசத்தால் பலமுறை குத்தப்படுதல்; தாறு - அங்குசம்; மதம் மாறாடுதல் - ஒன்றின் ஒன்று மிக்குப் பெருகுதல்; ஆறு ஆடின - ஆற்றின் கண்ணே குளித்தன; 25. பார் சென்றில - பூமியில் அடிவைத்துச் செல்லாமல் தாவிச் சென்றன; 26. மேருத்தனை - மேருவை, தன் என்பது சாரியை; செலுமாறு பட - செல்லும் தன்மை ஒப்ப; 28. கலை கண்ட கடல் - கலைதல் பொருந்திய கடல்; ஈண்டுக் கும்பகருணன் உடல்.

'மிடல் ஒன்று சரத்தொடு மீது உயர் வான்
திடல் அன்று; திசைக் களிறு அன்று; ஒரு திண்
கடல் அன்று; இது என் எந்தை கடக் கரியான்
உடல்' என்று, உயிரோடும் உருத்தனனால். 29

'எல்லே! இவை காணிய எய்தினெனே!
வல்லே உளராயின மானுடரைக்
கொல்லேன், ஒரு நான், உயிர் கோள் நெறியில்
செல்லேன், எனின், இவ் இடர் தீர்குவெனே?' 30

அதிகாயன், இலக்குவன்பால் தூது அனுப்புதல்

என்னா முனியா, 'இது இழைத்துளவன்
பின்னானையும் இப்படிச் செய்து பெயர்ந்து,
அன்னான் இடர் கண்டு, இடர் ஆறுவென்' என்று
உன்னா, ஒருவற்கு இது உணர்த்தினனால்: 31

'வா நீ, மயிடன்! ஒரு வல் விசையில்
போ! நீ அவ் இலக்குவனில் புகல்வாய்;
நான் ஈது துணிந்தனென், நண்ணினெனால்;
மேல் இது உணர்ந்து விளம்பிடுவாய். 32

' ''அம் தார் இளவற்கு அயர்வு எய்தி அழும்
தம் தாதை மனத்து இடர் தள்ளிடுவான்,
உந்து ஆர் துயரோடும் உருத்து எரிவான்
வந்தான்'' என, முன் சொல் வழங்குதியால்; 33

'கோளுற்றவன், நெஞ்சு சுடக் குழைவான்,
நாள் உற்ற இருக்கையில், யான், ஒருதன்
தாள் அற்று உருளக் கணை தள்ளிடுவான்,
சூளுற்றதும் உண்டு; அது சொல்லுதியால்; 34

'தீது என்று அது சிந்தனை செய்திலெனால்;
ஈது என்று அறம் மன் நெறி ஆம்' என, 'நீ
தூது என்று இகழாது, உன சொல் வலியால்,
''போது'' என்று, உடனே கொடு, போதுதியால். 35

'செரு ஆசையினார், புகழ் தேடுறுவார்,
இருவோரையும், நீ வலி உற்று, ''எதிரே
பொருவோர் நமனார் பதி புக்கு உறைவோர்;
வருவோரை எலாம் வருக!'' என்னுதியால். 36

30. எல்லே - அந்தோ; 34. நாள் உற்ற இருக்கை - நாளோலக்கமாகிய சபை; 36. இருவோர் - இராம இலக்குவர்.

'சிந்தாகுலம் எந்தை திரித்திடுவான்,
''வந்தான்'' என என் எதிரே, மதியோய்!
தந்தாய்எனின், யான் அலது, யார் தருவார்,
உம் தாரிய உள்ள உயர்ந்த எலாம்? 37

'வேறே அவ் இலக்குவன் என்ன விளம்பு
ஏறே வருமேல், இமையோர் எதிரே,
கூறே பல செய்து, உயிர் கொண்டு, உனையும்,
மாறே, ஒரு மன் என வைக்குவெனால். 38

'விண் நாடியர், விஞ்சையர், அம் சொலினார்
பெண், ஆர் அமுது அன்னவர், பெய்து, எவரும்
உண்ணாதன கூர் நறவு உண்ட தசும்பு
எண்ணாயிரம்ஆயினும், ஈகுவெனால். 39

'உறைதந்தன செங் கதிரோன் உருவின்
பொறை தந்தன, காசு ஒளிர் பூண், இமையோர்
திறை தந்தன, தெய்வ நிதிக் கிழவன்
முறை தந்தன, தந்து முடிக்குவெனால். 40

'மாறு மத வாரிய, வண்டிநெடும்
பாறு ஆடு முகத்தன, பல் பகலும்
தேறாதன, செங் கண வெங் களி மா
நூறாயிரம்ஆயினும் நுந்துவெனால். 41

'செம் பொன்னின் அமைந்து சமைந்தன தேர்,
உம்பர் நெடு வானினும் ஒப்பு உறழாப்
பம்பும் மணி தார் அணி பாய் பரிமா,
இம்பர் நடவாதன, ஈகுவெனால். 42

'நிதியின் நிரை குப்பை நிறைத்தனவும்,
பொதியின் மிளிர் காசு பொறுத்தனவும்,
மதியின் ஒளிர் தூசு வகுத்தனவும்,
அதிகம் சகடு ஆயிரம் ஈகுவெனால். 43

37. உம் தாரிய - உம்மால் தாங்குதற்கும் முடியாத (மிகுதியான); 38. மாறு - கைம்மாறு; 40. உறைதந்தன - பொருந்தியன; பொறை தந்தன - பாரம் உள்ளன; முறை தந்தன - முறைமை பற்றித் தந்தன; 41. நுந்துதல் - வழங்குதல்; 42. பம்புதல் - நிறைதல்; 43. தூசு - ஆடை; வைத்தல் - வகைவகையாக வைத்தல்; சகடு - வண்டி.

'மற்றும், ஒரு தீது இல் மணிப் பணி தந்து,
உற்று உன் நினைவு யாவையும் உந்துவெனால்;
பொன் திண் கழலாய்! நனி போ' எனலோடு,
எற்றும் திரள் தோளவன் ஏகினனால். 44

மயிடன் இராமனை அடைதலும், வானரர் அவனைப் பற்றுதலும்

ஏகி, தனி சென்று, எதிர் எய்தலுறும்
காகுத்தனை எய்திய காலையின்வாய்,
வேகத்தொடு வீரர் விசைத்து எழலும்,
'ஓகைப் பொருள் உண்டு' என, ஓதினனால். 45

இராமன், வானரரை விலக்கி, 'வந்தது ஏன்?' என, மயிடன், 'இலக்குவனிடமே சொல்லவேண்டும்' எனல்

போதம் முதல், 'வாய்மொழியே புகல்வான்;
ஏதும் அறியான்; வறிது ஏகினனால்;
தூதன்; இவனைச் சுளியன்மின்' எனா,
வேதம் முதல் நாதன் விலக்கினனால். 46

'என், வந்த குறிப்பு? அது இயம்பு' எனலும்,
மின் வந்த எயிற்றவன், 'வில் வல! உன்
பின் வந்தவனே அறி பெற்றியதால்,
மன் வந்த கருத்து' என, 'மன்னர்பிரான்!' 47

இலக்குவன் வினவ, தூதன் தான் வந்த செய்தி உரைத்தல்

'சொல்லாய்; அது சொல்லிடு, சொல்லிடு' எனா,
வில்லாளன் இளங்கிளையோன் வினவ,
'பல் ஆயிர கோடி படைக் கடல் முன்
நில்லாய்' என, நின்று நிகழ்த்தினனால்: 48

'உன்மேல் அதிகாயன் உருத்துளனாய்,
நல் மேருவின் நின்றனன்; நாடி அவன்-
தன்மேல் எதிரும் வலி தக்குளையேல்,
பொன் மேனிய! என்னொடு போதுதியால். 49

44. எற்றுதல் - தாக்குதல்; 45. ஓகைப் பொருள் - மகிழ்ச்சிச் செய்தி; 46. போதம் முதல் - மெய்யுணர்வுக்கு முதலாய் இருப்பவன்; சுளிதல் - வெகுளுதல்; போதம் முதலாகிய வேதம் முதல் நாதன் விலக்கினன் என முடிக்க; 48. நில்லாய் - நிற்பாயாக; 49. தக்குளையேல் - தகுதியைப் பெற்றுள்ளாயானால்.

'சையப் படிவத்து ஒரு தந்தையை முன்
மெய் எப்படிச் செய்தனன் நும் முன், விரைந்து,
ஐயப்படல், அப்படி இப் படியில்
செய்யப்படுகிற்றி; தெரித்தனெனுல். 50

' ''கொன்ருன் ஒழிய, கொலே கோள் அறியா
நின்ருெடு நின்றது என், நேடி?'' எனின்,
தன் தாதை படும் துயர், தந்தையை முன்
வென்ருனே இயற்றுறும் வேட்கையினுல். 51

'வானேர்களும், மண்ணினுளோர்களும், மற்று
ஏனேர்களும், இவ் உரை கேண்மின்: இவன்-
தானே பொருவான்; அயலே தமர் வந்து
ஆனேரும் உடன் பொருவான், அமைவான். 52

இராமன், இலக்குவனைப் போர்க்குச் செல்லுமாறு பணித்தல்

'எழுவாய், இனி என்னுடன்' என்று, எரியும்
மழு வாய் நிகர் வெஞ் சொல் வழங்குதலும்,
தழுவா, 'உடன் ஏகுதி; தாழல்!' எனத்
தொழுவார் தொழு தாள் அரி சொல்லுதலும், 53

வீடணன், அதிகாயனது திறத்தைக் குறித்துக் கூறியவை

'எல்லாம் உடன் எய்திய பின், இவனே
வில்லாெனாடு போர் செய வேண்டும்' என,
நல்லாறுடை வீடணன், நாரணன்முன்
சொல்லாடினன்; அன்னவை சொல்லுதுமால்: 54

'வார் ஏறு கழற் சின வாள் அரி எம்
போர் ஏறொடு போர் புரிவான் அமையா,
தேர் ஏறு சினக் கடு வெந் தறுகண்
கார் ஏறு என வந்த கதத் தொழிலோன். 55

'ஓவா நெடு மா தவம் ஒன்று உடையான்,
தேவாசுரர் ஆதியர் செய் செருவில்,
சாவான் இறையும், சலியா வலியான்,
மூவா முதல் நான்முகனார் மொழியால்; 56

50. சையப் படிவம் - மலே போலும் வடிவம்; இப் படி - இப் பூமி; 51. தன் தாதை - அதிகாயனுகிய தன்னைப் பெற்ற தந்தையாகிய இராவணன்; 52. பொருவான் - போர் புரிதற்கு; 53. தாழல் - கால தாமதம் செய்யற்க; அரி - திருமாலாகிய இராமன்; 54. நல்லாறு - நல்ல வழி; 56. ஓவா - ஒழியாத; மூவா - கெடாத.

'கடம் ஏய் கயிலைக் கிரி, கண்ணுதலோடு
இடம் ஏற எடுத்தனம் என்று இவனை,
திடமே உலகில் பல தேவரொடும்
வட மேரு எடுக்க, வளர்த்தனனால்; 57

'மாலாரொடு மந்தரம் மாசுணமும்
மேலாகிய தேவரும் வேண்டும் எனா,
ஆலாலமும் ஆர் அமிழ்தும் அமைய,
காலால் நெடு வேலை கலக்கிடுமால்; 58

'ஊழிக்கும் உயர்ந்து, ஒரு நாள் ஒருவாப்
பாழித் திசை நின்று சுமந்த, பணைச்
சூழிக் கரி தள்ளுதல் தோள் வலியோ?
ஆழிக் கிரி தள்ளும், ஓர் அங்கையினால்; 59

'காலங்கள் கணக்கு இற, கண் இமையா
ஆலம் கொள் மிடற்றவன், ஆர் அழல்வாய்
வேல் அங்கு எறிய, கொடு, 'விட்டது நீள்
சூலம்கொல்?' எனப் பகர் சொல் உடையான்; 60

'பகை ஆடிய வானவர் பல் வகை ஊர்
புகை ஆடிய நாள், புனை வாகையினான்,
''மிகை ஆர் உயிர் உண்'' என வீசிய வெந்
தகை ஆழி தகைந்த தனுத் தொழிலான்; 61

'உயிர் ஒப்புறு பல் படை உள்ள எலாம்,
செயிர் ஒப்புறும் இந்திரர், சிந்திய நாள்,
அயிர் ஒப்பன நுண் துகள்செய்து, அவர்தம்
வயிரப் படை தள்ளிய வாளியினான்; 62

'கற்றான், மறை நூலொடு கண்ணுதல்பால்;
முற்றாதன தேவர் முரண் படைதாம்,
மற்று ஆரும் வழங்க வலார் இலவும்,
பெற்றான்; நெடிது ஆண்மை பிறந்துடையான்; 63

57. கடம் - காடு; 58. மாலார் - திருமால்; 59. ஆழிக் கிரி - சக்கரவாள மலை; 61. பல் வகை ஊர் - பல பகுப்புகளைக் கொண்ட ஊர்; 62. வயிரப் படை - வச்சிராயுதம்; 63. முற்றாதன - பழகாதன; தேவர் முற்றாதன என இயைக்க.

'அறன் அல்லது நல்லது மாறு அறியான்;
மறன் அல்லது பல் பணி மாறு அணியான்;
திறன் அல்லது ஓர் ஆர் உயிரும் சிதையான்;
''உறல் நல்லது, பேர் இசை'' என்று உணர்வான்; 64

'காயத்து உயிரே விடு காலையினும்,
மாயத்தவர் கூடி மலைந்திடினும்,
தேயத்தவர் செய்குதல் செய்திடினும்,
மாயத் தொழில் செய்ய மதித்திலனால். 65

வீடணன் உரைத்த அதிகாயனது பூர்வ சரிதம்

'மது கைடவர் என்பவர், வானவர்தம்
பதி கைகொடு கட்டவர், பண்டு ஒரு நாள்,
அதி கைதவர், ஆழி அனந்தனையும்,
விதி கைம்மிக, முட்டிய வெம்மையினர். 66

'நீர் ஆழி இழிந்து, நெடுந்தகையை,
''தாராய் அமர்'' என்றனர், தாம் ஒரு நாள்;
ஆர் ஆழிய அண்ணலும், அஃது இசையா,
''வாரா, அமர் செய்க!'' என வந்தனனால். 67

'வல்லார் உரு ஆயிரம் ஆய் வரினும்,
நல்லார் முறை வீசி, நகும் திறலார்
மல்லால் இளகாது, மலைந்தனன் மால்;
அல் ஆயிரம் ஆயிரம் அஃகினவால். 68

'தன் போல்பவர் தானும் இலாத தனிப்
பொன்போல் ஒளிர் மேனியனை, ''புகழோய்!
என் போல்பவர் சொல்லுவது, எண் உடையார்
உன் போல்பவர் யார் உளர்?'' என்று உரையா, 69

' ''ஒருவோம் உலகு ஏழையும் உண்டு உமிழ்வோம்;
இருவோமொடு நீ தனி இத்தனை நாள்
பொருவோமொடு நேர் பொருதாய்; புகழோய்!
தருவோம் நின் மனத்தது தந்தனமால்; 70

64. அறன் அல்லது - அறநெறி அன்றி; மாறு - வேறு; திறன் அல்லது ஓர் உயிர் - வலிமையற்றதாகிய ஓர் உயிர்; 66. அதி - மிகுதிப் பொருளை உணர்த்தும் ஒரு வடமொழி இடைச் சொல்; கைதவர் - வஞ்சனையுடையவர்; ஆழி அனந்தன் - பாற்கடலில் உள்ள திருமால்; 67. வாரா - இதுவரையில் நிகழ்ந்திராத; 68. நல்லார் முறை வீசி - மகளிர் எனக் கண்டோர் கருதும் முறையில் வீசி, நன்மை மிகுந்த போர் முறையால் வீசி எனலும் ஆம்; அல் - நாள்; அஃகின - கழிந்துபோயின; 69. ஒளிர் மேனியன் - ஒளிரும் திரு மேனியை உடைய திருமால்.

' ''ஒல்லும்படி நல்லது உனக்கு உதவச்
சொல்லும்படி'' என்று, அவர் சொல்லுதலும்,
''வெல்லும்படி நும்மை விளம்பும்'' எனக்
கொல்லும்படியால் அரி கூறுதலும், 71

' ''இடையில் படுகிற்கிலம் யாம்; ஒரு நின்
தொடையில் படுகிற்றும்'' எனத் துணியா,
''அடையச் செயகிற்றி; அது ஆணை'' என,
நடையில் படு நீதியர் நல்குதலும், 72

'விட்டான், உலகு யாவையும், மேலொடு கீழ்,
எட்டா ஒருவன் தன் இடந் தொடையை;
ஒட்டாதவர் ஒன்றினர், ஊழ்வலியால்
பட்டார்; இது பட்டது பண்டு ஒருநாள்.* 73

'தனி நாயகன், வன் கதை தன் கை கொளா,
நனி சாட, விழுந்தனர், நாள் உலவா;
பனியா மது மேதை படப் படர் மே-
தினி ஆனது, பூவுலகு எங்கணுமே. 74

'விதியால், இவ் உகம் தனில், மெய் வலியால்
மது ஆனவன் எம்முன் மடிந்தனனால்;
கதிர் தான் நிகர் கைடவன் இக் கதிர் வேல்
அதிகாயன்; இது ஆக அறைந்தனனால்.' 75

இராமன், இலக்குவனது வலிமையைத் தெரிவித்தல்

என்றான், அவ் இராவணனுக்கு இளையான்;
'நன்று ஆகுக!' என்று, ஒரு நாயகனும்,
மின் தான் உமிழ் வெண் நகை வேறு செயா-
நின்றான், இது கூறி நிகழ்த்தினனால்: 76

'எண்ணாயிர கோடி இராவணரும்,
விண் நாடரும், வேறு உலகத்து எவரும்,
நண்ணா ஒரு மூவரும், நண்ணிடினும்,
கண்ணால் இவன் வில் தொழில் காணுதியால்; 77

72. இடையில் படுகிற்கிலம் - வேறு இடத்தில் சாகமாட்டோம்; 74. பனியா - நடுங்கி; மது மேதை - மது என்பவன் உடம்பின் எழுவகைத் தாதுக்களில் ஒன்றாகிய மேதக; மது மேதை எங்கணும் படப் படர் பூவுலகு மேதினி ஆனது என இயைக்க; 75. மது ஆனவன் எம்முன் - மது என்பவனை என் தமையன் (கும்பகருணன்); மது, கைடவன் என்னும் இருவரும் இந்த யுகத்தில் கும்பகருணன் ஆகவும் அதிகாயன் ஆகவும் முறையே பிறந்தார்கள்.

'வான் என்பது என்? வையகம் என்பது என்? மால்-
தான் என்பது என்? வேறு தனிச் சிலேயோர்,
யான் என்பது என்? ஈசன் என்று இமையோர்
கோன் என்பது என்?—எம்பி கொதித்திடுமேல்!* 78

'தெய்வப் படையும், சினமும், திறலும்,
மய் அற்று ஒழி மா தவம், மற்றும், எலாம்,
எய்தற்கு உளவோ—இவன் இச் சிலேயில்
கய் வைப்பு அளவே? இறல் காணுதியால். 79

'என் தேவியை வஞ்சனே செய்து எழுவான்
அன்றே முடிவான்; இவன், ''அன்னவள் சொல்
குன்றேன்'' என ஏகிய கொள்கையினுல்
நின்ருன் உளன் ஆகி;—நெடுந் தகையாய்! 80

வீடணனே உடன் சென்று, போரைக் காண, இராமன் ஏவுதல்

'ஏகாய், உடன் நீயும்; எதிர்த்துளனும்
மாகாயன் நெடுந் தலே வாளியொடும்
ஆகாயம் அளந்து விழுந்ததனேக்
காகாதிகள் நுங்குதல் காணுதியால். 81

'நீரைக் கொடு நீர் எதிர் நிற்க ஒணுமே?
தீரக் கொடியாரொடு தேவர் பொரும்
போரைக் கொடு வந்து புகுந்தது நாம்
ஆரைக் கொடு வந்தது? அயர்த்தனேயோ? 82

'சிவன்; அல்லன்எனில், திருவின் பெருமான்;
அவன் அல்லன்எனில், புவி தந்தருளும்
தவன்; அல்லன்எனில், தனியே வலியோன்
இவன்; அல்லன்எனில், பிறர் யார் உளரோ? 83

'ஒன்ருயிர வெள்ளம் ஒருங்கு உள ஆம்
வன் தானேயர் வந்து வளேந்த எலாம்
கொன்ருன் இவன் அல்லது, கொண்டு உடனே
நின்ருர் பிறர் உண்மை நினேந்தனேயோ? 84

'கொல்வானும் இவன்; கொடியோரை எலாம்
வெல்வானும் இவன்; அடல் விண்டு என
ஒல்வானும் இவன்; உடனே ஒரு நீ
செல்வாய்' என ஏவுதல் செய்தனனுல். 85

83. இவன் - இலக்குவன்.

இலக்குவன், வீடணனும் உடன் வர, போர்க்களம் புகுதல்

அக் காலை இலக்குவன் ஆரியனை
முக் காலும் வலம் கொடு, மூதுணர்வின்
மிக்கான், அடல் வீடணன் மெய் தொடரப்
புக்கான், அவன் வந்து புகுந்த களம். 86

இரு பக்கத்துச் சேனைகளும் நெருங்கிப் பொருதல்

சேனைக் கடல் சென்றது, தென் கடல்மேல்
ஏனைக் கடல் வந்தது எழுந்தது என;
ஆனைக் கடல், தேர், பரி, ஆள், மிடையும்
தானைக் கடலோடு தலைப்படலும், 87

பசும் படு குருதியின் பண்டு சேறுபட்டு,
அசும்பு உற உருகிய, உலகம் ஆர்த்து எழ,
குசும்பையின் நறு மலர்ச் சுண்ணக் குப்பையின்
விசும்பையும் கடந்தது, விரிந்த தூளியே. 88

தாம் இடித்து எழும் பணை முழக்கும், சங்கு இனம்
ஆம் இடிக் குமுறலும், ஆர்ப்பின் ஓதையும்,
ஏமுடைக் கொடுஞ் சிலை இடிப்பும், அஞ்சி, தம்
வாய் மடித்து ஒடுங்கின—மகர வேலையே.* 89

உலைதொறும் குருதி நீர் அருவி ஒத்து உக,
இலை துறு மரம் எனக் கொடிகள் இற்று உக,
மலைதொறும் பாய்ந்தென, மான யானையின்
தலைதொறும் பாய்ந்தன, குரங்கு தாவியே. 90

கிட்டின கிளை நெடுங் கோட்ட, கீழ் உகு
மட்டின அருவியின் மதத்த, வானரம்
விட்டன நெடு வரை, வேழம் வேழத்தை
முட்டின ஒத்தன, முகத்தின் வீழ்வன. 91

இடித்தன; உறுக்கின; இறுக்கி ஏய்ந்தன;
தடித்தன; எயிற்றினுல் தலைகள் சந்து அறக்
கடித்தன;—கவிக் குலம். கால்கள் மேற்படத்
துடித்தன குருதியில், துரக ராசியே. 92

88. பசும் படு குருதி - பச்சை இரத்தம்; அசும்பு உற - நீர்க்கசிவு பொருந்தியதனுல்; உருகிய - குழைந்த; குசும்பையின் மலர் - செந்துருக்க மலர்; சுண்ணக் குப்பை - மகரந்தப் பொடிகளின் தொகுதி; 90. உலைதொறும் - அழியும்போதெல்லாம்; இலை துறு மரம் - இலை நெருங்கிய மரம்; 91. மட்டின - தேனையுடையன; 92. தடித்தன - தடிந்தன, வெட்டின.

அடைந்தன கவிக் குலம் எற்ற, அற்றன,
குடைந்து எறி கால் பொர, பூட்கைக் குப்பைகள்;
இடைந்தன முகிற் குலம் இரிந்து சாய்ந்தென
உடைந்தன; குல மருப்பு உகுத்த, முத்தமே. 93

தோல் படத் துதைந்து எழு வயிரத் தூண் நிகர்
கால் பட, கை பட, கால பாசம்போல்
வால் பட, புரண்டனர் நிருதர்; மற்று அவர்
வேல் படப் புரண்டனர், கவியின் வீரரே. 94

மரவமும், சிலையோடு மலையும், வாள் எயிற்று
அரவமும், கரிகளும், பரியும், அல்லவும்,
விரவின கவிக் குலம் வீச, விம்மலால்,
உர வரும் கான் எனப் பொலிந்தது, உம்பரே. 95

தட வரை, கவிக் குலத் தலைவர், தாங்கின,
அடல் வலி நிருதர்தம் அனிக ராசிமேல்
விட விட, விசும்பிடை மிடைந்து வீழ்வன,
படர் கடல் இன மழை படிவ போன்றவே. 96

இழுக்கினர் அடிகளின், இங்கும் அங்குமா,
மழுக்களும், அயில்களும், வாளும், தோள்களும்,
முழுக்கினர், உழக்கினர் மூரி யாக்கையை,
ஒழுக்கினர் நிருதரை, உதிர ஆற்றினே. 97

மிடலுடைக் கவிக் குலம், குருதி வெள்ள நீர்
இடை இடை நீந்தின, இயைந்த யானையின்
திடரிடைச் சென்று, அவை ஒழுக்கச் சேர்ந்தன,
கடலிடைப் புக்கன, கரையும் காண்கில. 98

கால் பிடித்து ஈர்த்து இழி குருதிக் கண்ண, கண்
சேல் பிடித்து எழு திரை ஆற்றில், திண் நெடுங்
கோல் பிடித்து ஒழுகுறு குருடர் கூட்டம்போல்,
வால் பிடித்து ஒழுகின—கவியின் மாலையே.* 99

93. குடைந்து எறி கால் - பெருங் காற்று, சண்டமாருதம்; 94. தோல் - யானை; 95. சிலை - கல்; 97. முழுக்கினர் - முழுகச் செய்தனர்; 99. கண் சேல் - கண்ணை ஒத்த சேல் மீன்.

சிதறிய வானரர்க்குத் தேறுதல் கூறி, இலக்குவன் விற்போர் விளைத்தல்

பாய்ந்தது நிருதர்தம் பரவை; பல் முறை
காய்ந்தது, கடும் படை கலக்கி; கைதொறும்
தேய்ந்தது, சிதைந்தது, சிந்திச் சேண் உறச்
சாய்ந்தது—தகைப் பெருங் கவியின் தானையே. 100

அத் துணை, இலக்குவன், 'அஞ்சல், அஞ்சல்!' என்று,
எத் துணை மொழிகளும் இயம்பி, ஏற்றினன்,
கைத்துணை வில்லினை, காலன் வாழ்வினை,
மொய்த்து எழு நாண் ஒலி முழங்கத் தாக்கினான். 101

நூல் மறைந்து ஒளிப்பினும், நுவன்ற பூதங்கள்
மேல் மறைந்து ஒளிப்பினும், விரிஞ்சன் வீயினும்,
கால் மறைந்து ஒளிப்பு இலாக் கடையின், கண் அகல்
நான்மறை ஆர்ப்பென நடந்தது, அவ் ஒலி. 102

துரந்தன சுடு சரம்; துரந்த, தோன்றல
கரந்தன, நிருதர்தம் கரை இல் யாக்கையின்;
நிரந்தன நெடும் பிணம், விசும்பின் நெஞ்சு உற;
பரந்தன குருதி, அப் பள்ள வெள்ளத்தின். 103

யானையின் கரம் துரந்த, இரத வீரர்தம்
வான் உயர் முடித் தலை தடிந்து, வாசியின்
கால் நிரை அறுத்து, வெங் கறைக்கண் மொய்ம்பரை
ஊனுடை உடல் பிளந்து, ஓடும்—அம்புகள்; 104

வில் இடை அறுத்து, வேல் துணித்து, வீரர்தம்
எல்லிடு கவசமும் மார்பும் ஈர்ந்து, எறி
கல் இடை அறுத்து, மாக் கடிந்து, தேர் அழீஇ,
கொல் இயல் யானையைக் கொல்லும், கூற்றினே. 105

இலக்குவன் அம்பினால் அழிந்துபட்ட படுகளத்தின் நிலை

வெற்றி வெங் கரிகளின் வளைந்த வெண் மருப்பு,
அற்று எழு திசைகளின் உம்பர் அண்மின,
முற்று அரு முப் பகல் திங்கள் வெண் முளை
உற்றன விசும்பிடைப் பலவும் ஒத்தன. 106

101. அத் துணை - அவ்வளவில்; 102. கால் மறைந்து ஒளிப்பு இலாக் கடை - கால தத்துவம் மட்டும் ஒடுங்காது உள்ள ஊழி முடிவு; 103. விசும்பின் நெஞ்சு - வானத்தின் நடுவிடம்; பள்ள வெள்ளம் - கடல் நீர்.

கண்டகர் நெடுந் தலை, கனலும் கண்ணன,—
துண்ட வெண் பிறைத் துணை கவ்வி, தூக்கிய
குண்டல மீன் குலம் தழுவி, கோள் மதி
மண்டலம் விழுந்தன போன்ற மண்ணினே. 107

கூர் மருப்பு இணையன, குறைந்த கையன,
கார் மதக் கன வரை கவிழ்ந்து வீழ்வன—
போர்முகக் குருதியின் புணரி புக்கன,
பார் எடுக்குறு நெடும் பன்றி போன்றன. 108

புண் உற உயிர் உகும் புரவி பூட்டு அற,
கண் அகன் தேர்க் குலம், மறிந்த காட்சிய—
எண் உறு பெரும் பதம் வினையின் எஞ்சிட,
மண் உற, விண்ணின் வீழ் மானம் போன்றன. 109

அட, கருங் கவந்தம் நின்று ஆடுகின்றன—
விடற்கு அரும் வினை அறச் சிந்தி, மெய் உயிர்
கடக்க அருந் துறக்கமே கலந்தவாம் என,
உடற் பொறை உவகையின் குனிப்ப ஒத்தன. 110

'ஆடுவ கவந்தம் ஒன்று, ஆறு எண்ணுயிரம்
வீடிய பொழுது' எனும் பனுவல் மெய்யதேல்,
கோடியின் மேல் உள, குனித்த; கொற்றவன்
பாடு இனி ஒருவரால் பகரற்பாலதோ? 111

ஆனையின் குருதியும், அரக்கர் சோரியும்,
ஏனை வெம் புரவியின் உதிரத்து ஈட்டமும்,
கானினும் மலையினும் பரந்த கால் புனல்
வான யாறு ஆம் எனக் கடல் மடுத்தவே. 112

தாக்கிய சரங்களின் தலைகள் நீங்கிய
ஆக்கைய, புரசையோடு அணைந்த தாளன,
மேக்கு உயர் அங்குசக் கைய, வெங் கரி
நூக்குவ, கணிப்பு இல—அரக்கர் நோன் பிணம். 113

கோளுடைக் கணை பட, புரவி கூத்தன,
தோளுடை நெடுந் தலை துமிந்தும், தீர்கில
ஆளுடைக் குறைத்தலை அதிர ஆடுவ—
வாளுடைத் தடக் கைய, வாசி மேலன. 114

109. பெரும் பதம் - பெரிய (துறக்கப்) பதவி; எஞ்சிட - தீர்ந்தொழிய.

வய்வன முனிவர் சொல் அனைய வாளிகள்
கொய்வன தலைகள் தோள்; குறைத்தலைக் குழாம்,
கய் வளை வரி சிலைக் கடுப்பின் கைவிடா
எய்வன எனைப் பல, இரத மேலன. 115

தாதையை, தம்முனை, தம்பியை, தனிக்
காதலை, பேரனை, மருகனை, களத்து
ஊதையின் ஒரு கணை உருவ, மாண்டனர்—
சீதை என்று ஒரு கொடுங் கூற்றம் தேடினர்.* 116

தூண்டு அருங் கணை படத் துமிந்து, துள்ளிய
திண்ட அரு நெடுந் தலை தழுவிச் சேர்ந்தன,
பூண்டு எழு கரதலம் பொறுக்கலாதன
ஆண்டலை நிகர்த்தன, எருவை ஆடுவ. 117

ஆயிர ஆயிர கோடியாய் வரும்
தீ உமிழ் நெடுங் கணை மனத்தின் செல்வன,
பாய்வன, புகுவன; நிருதர் பல் உயிர்
ஓய்வன, நமன் தமர் கால்கள் ஓயவே. 118

விளக்கு வான் கணைகளால் விளிந்து, மேருவைத்
துளக்குவார் உடற் பொறை துணிந்து, துள்ளுவார்;
இளக்குவார், அமரர் தம் சிரத்தை; ஏன்? முதுகு
உளுக்குவாள் நிலமகள், பிணத்தின் ஓங்கலால். 119

தாருகன் என்பவன் இலக்குவனுடன் பொருது இறத்தல்

தாருகன் என்று உளன் ஒருவன்—தான் நெடு
மேருவின் பெருமையான், எரியின் வெம்மையான்,
போர் உவந்து உழக்குவான், புகுந்து தாங்கினன்—
தேரினன், சிலையினன், உமிழும் தீயினன். 120

துரந்தனன் நெடுஞ் சரம், நெருப்பின் தோற்றத்த;
பரந்தன, விசும்பிடை ஒடுங்க; பண்டுடை
வரம்தனின் வளர்வன அவற்றை, வள்ளலும்,
கரந்தனன் கணைகளால், முனிவு காந்துவான். 121

116. காதல் - அன்புக்குரிய மைந்தன்; 117. ஆண்டலை - ஆண்மகனது தலை போன்ற தலையினையுடையதோர் பறவை; எருவை - பருந்து; 119. விளக்கு வான் கணை - ஒளி விடுகின்ற சிறந்த அம்பு.

அண்ணல்தன் வடிக் கணை துணிப்ப, அற்று அவன்
கண் அகல் நெடுந் தலை, விசையின் கார் என,
விண்ணிடை ஆர்த்தது, விரைவில் மெய் உயிர்
உண்ணிய வந்த வெங் கூற்றும் உட்கவே. 122

இலக்குவன், காலன் முதலிய ஐவரைக் கொல்லுதல்

காலனும், குலிசனும், காலசங்கனும்,
மாலியும், மருத்தனும் மருவும் ஐவரும்,
சூலமும் கணிச்சியும் கடிது சுற்றினர்;
பாலமும், பாசமும், அயிலும் பற்றுவார். 123

அன்னவர் எய்தன எறிந்த ஆயிரம்
துன்ன அரும் படைக்கலம் துணித்து, தூவினன்,
நல் நெடுந் தலைகளைத் துணித்து; நால் வகைப்
பல் நெடுந் தானையைப் பாற நூறினன். 124

இலக்குவன், அதிகாயன் படையுடன் பொருதல்

ஆண்டு அதிகாயன்தன் சேனை ஆடவர்,
ஈண்டின மதகிரி ஏழ்-எண்ணாயிரம்
தூண்டினர், மருங்கு உறச் சுற்றினர், தொகை
வேண்டிய படைக்கலம் மழையின வீசுவார். 125

போக்கு இலா வகை புறம் வளைத்துப் பொங்கினர்,
தாக்கினர் திசைதொறும், தடக் கை மால் வரை;
நூக்கினர் படைகளால் நுறுக்கினர்; குழம்பு
ஆக்கினர், கவிகள்தம் குழுவை; ஆர்ப்பினர். 126

எறிந்தன, எய்தன, எய்தி, ஒன்றொடு ஒன்று
அறைந்தன, அசனியின் விசையின் ஆசைகள்
நிறைந்தன; மழை என நெருக்கி நிற்றலால்,
மறைந்தன, உலகொடு திசையும் வானமும். 127

அப் படை அனைத்தையும் அறுத்து வீழ்த்து, அவர்
துப்புடைத் தடக் கைகள் துணித்து, சுற்றிய
முப் புடை மதமலைக் குலத்தை முட்டினன்—
எப் புடை மருங்கினும் எரியும் வாளியான். 128

குன்று அன மதகரி கொம்பொடு கரம் அற,
வன் தலை துமிதர, மஞ்சு என மறிவன
ஒன்று அல; ஒருபதும் ஒன்பதும்,—ஒரு கணை
சென்று அரிதர,—மழை சிந்துவ மதமலை. 129

ஒரு தொடை விடுவன உரும் உறழ் கணை பட,
இரு தொடை புரசையொடு இறுபவர், எறி படை
விருதுடை நிருதர்கள், மலை என விழுவர்கள்;
பொருது உடைவன, மத மழையன புகர் மலை. 130

பருமமும், முதுகு இடு படிகையும், வலி படர்
மருமமும், அழிபட, நுழைவன வடி கணை,
உருமினும் வலியன, உருள்வன திசை திசை,
கரு மலை நிகர்வன;—கதமலை கனல்வன. 131

இறுவன கொடியவை, எரிவன இடை இடை
துறுவன சுடு கணை, துணிவன மதகரி;
அறுவன, அவை அவை கடவினர் தடி தலை;
வெறுமைகள் கெடுவன, விழி குழி கழுதுகள். 132

மிடலொடு விடு கணை மழையினும் மிகை உள
படலொடும், உரும் எறி பரு வரை நிலையன,
உடலொடும் உருள் கரி உதிரமது, உரு கெழு
கடலொடு பொருதது, கரியொடு கரி என. 133

மேலவர் படுதலின், விடும் முறை இல, மிடல்
ஆலமும் அசனியும் அனையன, அடு கரி
மால் உறு களியன, மறுகின, மதம் மழை
போல்வன, தம தம எதிர் எதிர் பொருவன. 134

கால் சில துணிவன; கரம் அறுவன; கதழ்
வால் சில துணிவன; வயிறுகள் வெளி பட,
நால் சில குடர் அன; நகழ்வன சில—வரு
தோல் சில, கணை பல சொரிவன மழை என. 135

முட்டின முட்டு அற, முரண் உறு திசை நிலை
எட்டினும் எட்ட அரு நிலையன எவை? அவன்
விட்டன விட்டன விடு கணை படுதொறும்,
பட்டன பட்டன, படர் பணை குவிவன. 136

131. பருமம் - யானையின் கழுத்தில் இடப்படும் கயிறு: படிகை - யானையின் முதுகில் மேல் இடப்படும் தவிசு; அம்பாரி; மருமம் - உயிர்நிலை; 132. துறுதல் - நெருங்கிச் செறிதல்; 133. இரத்தவெள்ளம் யானையுடன் யானை முட்டிப் பொருது நிற்பதனையொத்துக் கடல் நீருடன் எதிர்த்து நின்றது; 134. மேலவர் - மேலே ஏறியமர்ந்து செலுத்தும் யானை வீரர்; 135. நகழ்வன - அழுத்தி வருத்தின; தோல் - யானை; 136. பணை - தந்தம்.

அறுபதின் முதல் இடை நால் ஒழி ஆயிரம்
இறுதிய மத கரி இறுதலும், எரி உமிழ்
தறுகணர், தகை அறு நிலையினர், சலம் உறு
கறுவினர், அவன் எதிர் கடவினர், கடல் என. 137

எல்லை இல் மத கரி, இரவினது இனம் நிகர்
செல்வன, முடிவு இல, தெறு தொழில் மறவனை,
வில்லியை, இனிது உற விடு கணை மழையினர்,
'கொல்லுதி' என, எதிர் கடவினர்—கொடியவர். 138

வந்தன மத கரி வளைதலின், மழை பொதி
செந் தனி ஒரு சுடர் என மறை திறலவன்,
இந்திரதனு என, எழு சிலை குனிவுழி,
தந்தியின் நெடு மழை சிதறின, தரையின. 139

மய்யல் தழை செவி முன் பொழி மழை பெற்றன, மலையின்
மெய் பெற்றன, கடல் ஒப்பன, வெயில் உக்கன விழியின்,—
மொய் பெற்று உயர் முதுகு இற்றன, முகம் உக்கன, முரண் வெங்
கய் அற்றன; மதம் முற்றிய கணிதத்து இயல்,—கத மா. 140

உள் நின்று அலை கடல் நீர் உக, இறுதிக் கடை உறு கால்
எண்ணின் தலை நிமிர்கின்றன, இகல் வெங் கணை, இரணப்
பண்ணின் படர் தலையில் பட, மடிகின்றன பல ஆம்,
மண்ணின் தலை உருள்கின்றன—மழை ஒத்தன மதமா. 141

பிறை பற்றிய எனும் நெற்றிய, பிழை அற்றன பிறழ,
பறை அற்றம் இல் விசை பெற்றன, பரியக் கிரி, அமரர்க்கு
இறை, அற்றைய முனிவில் படை எறியப் புடை எழு பொன்
சிறை அற்றன என, இற்றன—சினம் முற்றிய மதமா. 142

கதிர் ஒப்பன கணை பட்டுள, கதம் அற்றில, கதழ் கார்
அதிரத் தனி அதிர்கைக் கரி அளவு அற்றன உளவா,
எதிர்பட்டு அனல் பொழிய, கிரி இடறி, திசை எழு கார்
உதிரத்தொடும் ஒழுகி, கடல் நடு உற்றவும் உளவால். 143

137. அறுபதின் முதலினோடு ஆறு அமை ஆயிரம் - அறுபத்தாறாயிரம்; 139. குனிவுழி - வளைத்தபொழுது; தந்தியின் நெடு மழை - யானைகளாகிய நீண்ட மேகங்கள்; 140. மய்யல் - மதமயக்கம்; 141. இரணப் பண்ணின் படர் தலை - பொன்னாலியன்ற அலங்காரத்தை உடைய பரந்த மத்தகம்; 142. பறை - பறத்தல், பறவை எனலும் ஆம்; அற்றம் - சோர்வு; 143. கதழ் - விரைவு.

கண்ணின்தலை அயில் வெங் கணை பட நின்றன, காணு
எண்ணின்தலை நிமிர் வெங் கதம் முதிர்கின்றன, இனமா
மண்ணின் தலை நெரியும்படி திரிகின்றன, மலைபோல்
உள் நின்று அலை நிருதக் கடல் உலறிட்டன உளவால். 144

ஓர் ஆயிரம் அயில் வெங் கணை, ஒரு கால் விடு தொடையின்,
கார் ஆயிரம் விடு தாரையின் நிமிர்கின்றன, கதுவுற்று,
ஈராயிரம் மத மால் கரி விழுகின்றன; இனி மேல்
ஆராய்வது என்? அவன் வில் தொழில் அமரேசரும் அறியார்!

தேரும், தெறு கரியும், பொரு சின மள்ளரும், வய வெம்
போரின்தலை உகள்கின்றன புரவிக் குலம் எவையும்,
பேரும் திசை பெறுகின்றில—பணையின் பிணை மத வெங்
காரின் தரு குருதிப் பொரு கடல் நின்றன கடவா. 146

இராவணன் அனுப்பிய யானைப் படையை இலக்குவன் அழித்தல்

நூறுயிரம் மத வெங் கரி, ஒரு நாழிகை நுவல,
கூறு ஆயின; பயமுற்று ஒரு குலைவு ஆயின; உலகம்
தேருதன, மலை நின்றன, தெரியாதன, சின மா
வேறு ஆயின, அவை யாவையும் உடனே வர விட்டான். 147

ஒரு கோடிய மத மால் கரி, உள வந்தன உடன் முன்
பொரு கோடியில் உயிர் உக்கன ஒழிய, பொழி மத யாறு
அருகு ஓடுவ, வர உந்தினர்—அசனிப் படி கணை கால்
இரு கோடுடை மத வெஞ் சிலை இள வாள் அரி எதிரே. 148

உலகத்து உள மலை எத்தனை, அவை அத்தனை உடனே
கொல நிற்பன, பொருகிற்பன, புடை சுற்றின; குழுவாய்
அலகு அற்றன, சினம் முற்றிய, அனல் ஒப்பன, அவையும்,
தலை அற்றன, கரம் அற்றன, தனி வில் தொழில்அதனுல். 149

நாலாயின, நவ யோசனை நனி வன் திசை எவையும்,
மால் ஆயின மத வெங் கரி திரிகின்றன வரலும்,
'தோல் ஆயின, உலகு எங்கணும்' என அஞ்சினர்; துகளே-
போல் ஆயின, வய வானமும்; ஆருனது, புவியே. 150

144. இனமா - யானைகள்; 145. கதுவுற்று - கவ்வப்பட்டு: அமரேசர் - அமர ஈசர், தேவர்களில் தலைவர்; 146. பணை - தந்தம்; பணையின் மதம் பிணை வெங்கார் என்க; 149. அலகு - அளவு; 150. நாலாயின நவ யோசனை- முப்பத்தாறு யோசனை; நவம் - ஒன்பது.

கடை கண்டில, தலை கண்டில, கழுதின் திரள், பிணமா
இடை கண்டன, மலை கொண்டென எழுகின்றன; திரையால்
புடை கொண்டு எறி குருதிக் கடல் புணர்கின்றன, பொறி வெம்
படை கொண்டு இடை படர்கின்றன மத யாறுகள் பலவால்.

ஒற்றைச் சரம்அதனோடு ஒரு கரி பட்டு உக, ஒளிர் வாய்
வெற்றிக் கணை, உரும் ஒப்பன, வெயில் ஒப்பன, அயில்போல்
வற்றக் கடல் சுடுகிற்பன, மழை ஒப்பன பொழியும்
கொற்றக் கரி பதினாயிரம் ஒரு பத்தியில் கொல்வான். 152

மலை அஞ்சின; மழை அஞ்சின; வனம் அஞ்சின; பிறவும்
நிலை அஞ்சின, திசை வெங் கரி; நிமிர்கின்றன கடலின்
அலை அஞ்சின; பிறிது என், சில? தனி ஐங் கர கரியும்,
கொலை அஞ்சுதல் புரிகின்றது—கரியின் படி கொளலால். 153

கால் ஏறின சிலை நாண் ஒலி, கடல் ஏறுகள் பட, வான்-
மேல் ஏறின, மிசையாளர்கள் தலை மெய்தொறும் உருவ,
கோல் ஏறின—உரும்ஏறுகள் குடியேறின எனலாய்,
மால் ஏறின களி யானைகள் மழைஏறு என மறிய. 154

அனுமன், யானைப் படையை அழித்தல்

இவ் வேலையின், அனுமான்,—முதல் எழு வேலையும் அனையார்,
வெவ் வேலவர், செல ஏவிய கொலை யானையின் மிகையைச்
செவ்வே உற நினையா, 'ஒரு செயல் செய்குவென்' என்பான்,
தவ்வேலென வந்தான்,—அவன் தனி வேல் எனத் தகையான்.

ஆர்த்து அங்கு அனல் விழியா, முதிர் மத யானையை அனையான்,
தீர்த்தன் கழல் பரவா, முதல் அரிபோல் வரு திறலான்,
வார்த் தங்கிய கழலான்,—ஒரு மரன், நின்றது, நமனார்
போர்த் தண்டினும் வலிது ஆயது, கொண்டான்—புகழ் கொண்டான்.

151. கடை - இறுதி: தலை - தொடக்கம்; 152. அயில் - வேல், ஈண்டு உக்கிரகுமார பாண்டியன் கடல் சுவறவிட்ட வேற்படை; உக்கிரகுமார பாண்டியனுடன் இகல் கொண்ட இந்திரன் வருணனைக்கொண்டு கடலைப் பொங்கி எழச் செய்து மதுரை நகரத்தை அழிக்கத் தொடங்குகையில், சிவபெருமான் கனவில் தோன்றிப் பணித்தவாறு பாண்டியன் வேற்படையை ஏவிக் கடல் நீரை வற்றச் செய்து வருணனை அடக்கினன் என்பது புராணம். 153. ஐங் கர கரி - ஐந்து கரங்களையுடைய கணபதியாகிய யானை; 154. கால் ஏறின சிலை நாண் - இருமுனைகளிலும் பொருந்திய வில் நாண்; கடல் ஏறு - கடலிடத்தே வாழும் சுரு, மகரம் முதலிய பெரு மீன்கள்; மிசையாளர்கள் - யானைமேலுள்ள வீரர்கள்; 155. தவ்வேலென - தாவிக் குதியற்க, திமரென்று எனினும் ஆம்; 156. முதல் அரி - முழுமுதற் பொருளாகிய நரசிங்கமூர்த்தி.

கருங் கார் புரை நெடுங் கையன களி யானைகள் அவை சென்று
ஒருங்கு ஆயின, உயிர் மாய்ந்தன; பிறிது என், பல உரையால்?—
வரும் காலனும், பெரும் பூதமும், மழை மேகமும், உடனாப்
பொரும்காலையில் மலைமேல் விழும் உரும்ஏறு எனப் புடைத்தான். 157

மிதியால் பல, விசையால் பல, மிடலால் பல, இடறும்
கதியால் பல, தெழியால் பல, காலால் பல, வாலின்
நுதியால் பல, நுதலால் பல, நொடியால் பல, பயிலும்
குதியால் பல, குமையால் பல, கொன்றான்—அறம் நின்றான்.

பறித்தான் சில, பகிர்ந்தான் சில, வகிர்ந்தான் சில, பனை போன்று
இறுத்தான் சில, இடந்தான் சில, பிளந்தான் சில, எயிற்றால்
கறித்தான் சில, கவர்ந்தான் சில, கரத்தால் சில பிடித்தான்,
முறித்தான் சில, திறத்து ஆனையின் நெடுங் கோடுகள்—முனிந்தான்.

வாரிக் குரை கடலில் புக விலகும்; நெடு மரத்தால்
சாரித்து அலைத்து உருட்டும்; நெடுத் தலத்தில் படுத்து அரைக்கும்;
பாரில் பிடித்து அடிக்கும்; குடர் பறிக்கும்; படர் விசும்பின்
ஊரில் செல, எறியும்; மிதித்து உழக்கும்; முகத்து உதைக்கும்;

வாலால் வர வளைக்கும், நெடு மலைப் பாம்பு என; வளையா,
மேல் ஆளொடு பிசையும்; முழு மலைமேல் செல, விலக்கும்;
ஆலாலம் உண்டவனே என, அகல் வாயின் இட்டு அதுக்கும்;
தோல் ஆயிரம் இமைப்போதினின் அரிஏறு எனத் தொலைக்கும்;

சய்யத்தினும் உயர்வுற்றன தறுகண் களி மதமா,
நொய்தின் கடிது எதிர் உற்றன, நூறாயிரம், மாறா
மய்யல் கரி உகிரின் சில குழை புக்கு உரு மறைய,
தொய்யல் படர் அழுவக் கொழுஞ் சேறாய் உகத் துகைப்பான்.

வேறாயின மத வெங் கரி ஒரு கோடியின், விறலோன்,
நூறாயிரம் படுத்தான்; இது நுவல்காலையின், இளையோன்,
கூறாயின என அவ்வவை கொலை வாளியின் கொன்றான்;
தேறாதது ஓர் பயத்தால் நெடுந் திசை காவலர் இரிந்தார். 163

158. இடறும் கதி - இடறிக்கொண்டு நடக்கும் நடை: நொடி - கைவிரல் இரண்டை முறுக்கித் தெறித்தல்; 159. பறித்தல் - வேருடன் பிடுங்குதல்; பகிர்தல் - பிளத்தல்; வகிர்தல் - கூறுபடுத்தல்; கறித்தல் - கடித்தல்; 160. விலகும் - எறியும்; சாரித்து - சாரி திரிந்து: 162. குழை புக்கு உரு மறைய - தழைகளைப் போன்று உள்ளே அழுந்தி உருவம் மறைய; 163. தேறாதது ஓர் பயம் - தேறுதல் கூறித் தெளிவிக்க ஒண்ணாத ஒப்பற்ற பயம்.

தேவாந்தகன் அனுமனோடு பொருது இறத்தல்

இரிந்தார், திசை திசை எங்கணும் யானைப் பிணம் எற்ற,
நெரிந்தார்களும்; நெரியாது உயிர் நிலைத்தார்களும் நெருக்கால்
எரிந்தார்; நெடுந் தடந் தேர் இழிந்து எல்லாரும் முன் செல்ல,
திரிந்தான் ஒரு தனியே, நெடுந் தேவாந்தகன், சினத்தான். 164

உதிரக் கடல், பிண மால் வரை, ஒன்று அல்லன பலவாய்
எதிர, கடு நெடும் போர்க் களத்து ஒரு தான் புகுந்து ஏற்றான்,
கதிர் ஒப்பன சில வெங் கணை அனுமான் உடல் கரந்தான்,
அதிரக் கடல்—நெடுந் தேரினன்—மழைஏறு என ஆர்த்தான்.

அப்போதினின், அனுமானும் ஓர் மரம் ஓச்சி நின்று ஆர்த்தான்,
'இப்போது இவன் உயிர் போம்' என, உரும்ஏறு என எறிந்தான்;
வெப்போ என வெயில் கால்வன அயில் வெங் கணை, விசையால்,
'துப்போ?' என, துணியாம் வகை, தேவாந்தகன் துரந்தான்.

மாறு ஆங்கு ஒரு மலை வாங்கினன், வய வானரக் குலத்தோர்க்கு
ஏறு; ஆங்கு அதும் எறியாதமுன், முறியாய் உக எய்தான்;
கோல் தாங்கிய சிலையானுடன் நெடு மாருதி கொதித்தான்,
பாறு ஆங்கு எனப் புகப் பாய்ந்து, அவன் நெடு வில்லினைப் பறித்தான்.

பறித்தான் நெடும் படை, வானவர் பலர் ஆர்த்திட, பலவா
முறித்தான்; அவன் வலி கண்டு, உயர் தேவாந்தகன் முனிந்தான்,
மறித்து ஆங்கு ஒரு சுடர்த் தோமரம் வாங்கா, மிசை ஓங்கா,
செறித்தான், அவன் இடத் தோள்மிசை; இமையோர்களும் திகைத்தார்.

சுடர்த் தோமரம் எறிநது ஆர்த்தலும், கனல் ஆம் எனச் சுளித்தான்,
அடல் தோமரம் பறித்தான், திரிந்து உரும்ஏறு என ஆர்த்தான்,
புடைத்தான்; அவன் தடந் தேரொடு நெடுஞ் சாரதி புரண்டான்;—
மடல் தோகையர் வலி வென்றவன்—வானோர் முகம் மலர்ந்தார். 169

சூலப் படை தொடுவான்தனை இமையாதமுன் தொடர்ந்தான்;
ஆலத்தினும் வலியானும் வந்து, எதிரே புகுந்து அடர்த்தான்;
காலற்கு இரு கண்ணான் தன கையால் அவன் கதுப்பின்
மூலத்திடைப் புடைத்தான், உயிர் முடித்தான், சிரம் மடித்தான். 170

166. வெப்போ - கொடிய நெருப்போ; துணியாம் வகை - துண்டுபட்டுச் சிதறுமாறு; 169. மடல் தோகையர் வலி - மடப்பம் பொருந்திய மகளிர் ஏதுவாக உண்டாகும் காமமாகிய அகப் பகை.

அதிகாயன்-அனுமன் வீர உரை

கண்டான் எதிர் அதிகாயனும், கனல் ஆம் எனக் கனன்றான்,
புண்தான் எனப் புனலோடு இழி உதிரம் விழி பொழிவான்,
'உண்டேன் இவன் உயிர் இப்பொழுது; ஒழியேன்' என உரையா,
'திண் தேரினைக் கடிது ஏவு' என, சென்றான்; அவன் நின்றான்.

அன்னான் வரும் அளவின்தலை, நிலைநின்றன அனிகம்;
பின் ஆனதும் முன் ஆனது; பிறிந்தார்களும் செறிந்தார்;
பொன்னால் உயர் நெடு மால் வரை போல்வான் எதிர் புக்கான்,
சொன்னான் இவை, அதிகாயனும், வட மேருவைத் துணிப்பான்: 172

'தேய்த்தாய், ஒரு தனி எம்பியைத் தலத்தோடு ஒரு திறத்தால்;
போய்த் தாவினை நெடு மா கடல், பிழைத்தாய்; கடல் புகுந்தாய்,
வாய்த்தானையும் மடித்தாய்; அது கண்டேன், எதிர் வந்தேன்;
ஆய்த்து ஆயது முடிவு, இன்று உனக்கு; அஃது ஆக வந்து, அடுத்தாய்.

'இன்று அல்லது, நெடு நாள் உனை ஒரு நாளினும் எதிரேன்;
ஒன்று அல்லது செய்தாய் எமை; இளையோனையும் உனையும்
வென்று அல்லது மீளாத என் மிடல் வெங் கணை மழையால்
கொன்று அல்லது செல்வேன்; இது கொள்' என்றனன், கொடியோன்.

அனுமன், 'திரிசிரனையும் அழை' என்று கூறல்

'பிழையாது; இது பிழையாது' என, பெருங் கைத்தலம் பிசையா,
மழை ஆம் எனச் சிரித்தான்—வட மலை ஆம் எனும் நிலையான்—
'முழை வாள் அரி அனையானையும் எனையும் மிக முனிவாய்;
அழையாய் திரிசிரத்தோனையும், நிலத்தோடும் இட்டு அரைப்பான்.' 175

திரிசிரத்தான் வர, அனுமன் அவனோடு பொருதல்

'ஆம், ஆம்!' என, தலை மூன்றுடையவன் ஆர்த்து வந்து, அடர்த்தான்;
கோமான் தனிப் பெருந் தூதனும், எதிரே செருக் கொடுத்தான்,
'காமாண்டவர், கல்லாதவர், வல்லீர்!' எனக் கழறா,
நா மாண்டு அற, அயல் நின்று உற நடுவே புக நடந்தான். 176

திரிசிரத்தானை அழித்து, அனுமன் மேல் திசை வாயில் சேருதல்

தேர்மேல் செலக் குதித்தான், திரிசிரத்தானை ஓர் திறத்தால்,
கார் மேல் துயில் மலை போலியைக் கரத்தால் பிடித்து எடுத்தான்,
பார்மேல் படுத்து அரைத்தான், அவன் பழி மேற்படப் படுத்தான்,
'போர் மேல்திசை நெடு வாயிலின் உளது ஆம்' என, போனான். 177

173. வாய்த்தான் - பொருதற்குக் கிடைத்தவன், தேவாந்தகன்; ஆய்த்து ஆயது - ஆயிற்று ஆயிற்று, விரைவு பற்றிய அடுக்கு; 176. காமாண்டவர் - காமத்தினால் மிக்கவர்; நா மாண்டு அற - நாக்கு வற்றி ஒழிய.

அதிகாயன், இலக்குவனுடன் பொரத் தேரைச் செலுத்துதல்

இமையிடையாகச் சென்றான்; இகல் அதிகாயன் நின்றான்,
அமைவது ஒன்று ஆற்றல் தேற்றான், அருவியோடு அழல் கால் கண்ணன்,
'உமையொருபாகனேயும், இவன் முனிந்து உருத்த போது,
கமையிலன் ஆற்றல்' என்னா, கதத்தொடும் குலைக்கும் கையான், 178

'பூணிப்பு ஒன்று உடையன் ஆகிப் புகுந்த நான், புறத்து நின்று,
பாணித்தல் வீரம் அன்றால்; பரு வலி படைத்தோர்க்கு எல்லாம்
ஆணிப்பொன் ஆனான்தன்னைப் பின்னும் கண்டு அறிவென்' என்னா,
தூணிப் டொன் புறத்தான், திண் தேர் இளவல்மேல் தூண்டச் சொன்
[னான்.

தேர் ஒலி கடலைச் சீற, சிலை ஒலி மழையைச் சீற,
போர் ஒலி முரசின் ஓதை திசைகளின் புறத்துப் போக,
தார் ஒலி கழற் கால் மைந்தன் தானையும் தானும் சென்றான்;
வீரனும் எதிரே நின்றான், விண்ணவர் விசையம் வேண்ட. 180

அங்கதன் தோள்மேல் நின்று இலக்குவன் பொருதல்

வல்லையின் அணுக வந்து வணங்கினன், வாலி மைந்தன்;
'சில்லி அம் தேரின் மேலான், அவன் அமர் செவ்விது அன்றால்;
வில்லியர் திலதம் அன்ன நின் திருமேனி தாங்கப்
புல்லியன் எனினும், என் தோள் ஏறுதி, புனித!' என்றான். 181

'ஆம்' என, அமலன் தம்பி அங்கதன் அலங்கல் தோள்மேல்
தாமரைச் சரணம் வைத்தான்; கலுழனின் தாங்கி நின்ற
கோமகன் ஆற்றல் நோக்கி, குளிர்கின்ற மனத்தர் ஆகி,
பூ மழை பொழிந்து வாழ்த்திப் புகழ்ந்தனர், புலவர் எல்லாம்.

ஆயிரம் புரவி பூண்ட அதிர் குரல் அசனித் திண் தேர்
போயின திசைகள் எங்கும், கறங்கு எனச் சாரி போமால்;
மீ எழின் உயரும்; தாழின் தாழும்; விண் செல்லின் செல்லும்;—
தீ எழ உவரி நீரைக் கலக்கினன் சிறுவன் அம்மா! 183

அத் தொழில் நோக்கி, ஆங்கு வானரத் தலைவர் ஆர்த்தார்;
'இத் தொழில் கலுழற்கேயும் அரிது' என, இமையோர் எல்லாம்
கைத்தலம் குலைத்தார் ஆக, களிற்றினும் புரவிமேலும்
தைத்தன, இளைய வீரன் சரம் எனும் தாரை மாரி. 184

179. பூணிப்பு - மேற்கோள், தீர்மானம்; பாணித்தல் - காலத்தை நீட்டித்தல்; 184. கைத்தலம் குலைத்தல் - கைகளை விதிர்விதித்தல்.

முழங்கின முரசம்; வேழம் முழங்கின; மூரித் திண் தேர்
முழங்கின; முகரப் பாய்மா முழங்கின; முழு வெண் சங்கம்
முழங்கின; தனுவின் ஓதை முழங்கின; கழலும் தாரும்
முழங்கின; தெழிப்பும் ஆர்ப்பும் முழங்கின, முகிலின் மும்மை.

கரி பட, காலாள் வெள்ளம் களம் பட, கலினக் காலப்
பரி பட, கண்ட கூற்றும் பயம் பட, பைம் பொன் திண் தேர்
எரிபட, பொருத பூமி இடம் பட, எதிர்ந்த எல்லாம்
முரிபட, பட்ட, வீரன் முரண் கணை மூரி மாரி. 186

இலக்குவன் வினவும், அதிகாயன் மறுமொழியும்

மன்னவன் தம்பி, மற்று அவ் இராவணன் மகனை நோக்கி,
'என் உனக்கு இச்சை? நின்ற எறி படைச் சேனை எல்லாம்
சின்னபின்னங்கள் பட்டால், பொருதியோ? திரிந்து நீயே
நல நெடுஞ் செருச் செய்வாயோ? சொல்லுதி, நயந்தது' என்றான்.

'யாவரும் பொருவர் அல்லர், எதிர்ந்துள யானும் நீயும்,
தேவரும் பிறரும் காண, செருவது செய்வ எல்லாம்;
'காவல் வந்து உன்னைக் காப்பார் காக்கவும் அமையும்; வேறே
கூவியது அதனுக்கு அன்றோ?' என்றனன்—கூற்றின் வெய்யோன்.

'உமையனே காக்க; மற்று அங்கு உமை ஒரு கூறன் காக்க;
இமையவர் எல்லாம் காக்க; உலகம் ஓர் ஏழும் காக்க;
சமையும் உன் வாழ்க்கை, இன்றோடு' என்று, தன் சங்கம் ஊதி,
அமை உருக் கொண்ட கூற்றை நாண் எறிந்து, உருமின் ஆர்த்தான்.

இலக்குவன் புன்முறுவலுடன் அதிகாயனோடு பொருதல்

அன்னது கேட்ட மைந்தன், அரும்பு இயல் முறுவல் தோன்ற,
'சொன்னவர் வாரார்; யானே தோற்கினும், தோற்கத் தக்கேன்;
என்னை நீ பொருது வெல்லின், அவரையும் வென்றி' என்னா,
மின்னினும் மிளிர்வது ஆங்கு ஓர் வெஞ் சரம் கோத்து விட்டான்.

விட்ட வெம் பகழிதன்னை, வெற்பினை வெதுப்பும் தோளான்,
சுட்டது ஓர் பகழிதன்னால் விசும்பிடைத் துணித்து நீக்கி,
எட்டினோடு எட்டு வாளி, 'இலக்குவ! விலக்காய்' என்னா,
திட்டியின் விடத்து நாகம் அனையன, சிந்தி, ஆர்த்தான். 191

185. முகரம் - கனைத்தல்; 188. வேறே கூவுதல் - தனி நின்று போர்செய்தற்கு அறைகூவி அழைத்தல்; 189. உமையன் - உம் தமையனாகிய இராமன்.

ஆர்த்து அவன் எய்த வாளி அனைத்தையும் அறுத்து மாற்றி,
வேர்த்து, ஒலி வயிர வெங் கோல், மேருவைப் பிளக்கற்பால,
தூர்த்தனன், இராமன் தம்பி; அவை எலாம் துணித்துச் சிந்தி,
கூர்த்தன பகழி கோத்தான், குபேரனை ஆடல் கொண்டான்.

எய்தனன் எய்த எல்லாம், எரி முகப் பகழியாலே,
கொய்தனன் அகற்றி, ஆர்க்கும் அரக்கனைக் குரிசில் கோபம்
செய்தனன், துரந்தான் தெய்வச் செயல் அன்ன கணையை; வெங்கோல்
நொய்து அவன் கவசம் கீறி நுழைவன, பிழைப்பு இலாத. 193

நூறு கோல் கவசம் கீறி நுழைதலும், குழைவு தோன்றத்
தேறல் ஆம் துணையும், தெய்வச் சிலை நெடுந் தேரின் ஊன்றி,
ஆறினான்; அதுகாலத்து அங்கு அவனுடை அனிகம் எல்லாம்
கூறுகூறாக்கி அம்பால், கோடியின் மேலும் கொன்றான். 194

புடை நின்றார் புரண்டவாறும், போகின்ற புங்க வாளி
கடைநின்று கணிக்க ஆங்கு ஓர் கணக்கு இலாவாறும் கண்டான்;
இடைநின்ற மயக்கம் தீர்ந்தான்; ஏந்திய சிலையன் காந்தி,
தொடை நின்ற பகழி மாரி, மாரியின் மும்மை தூர்த்தான். 195

வான் எலாம் பகழி, வானின் வரம்பு எலாம் பகழி, மண்ணும்
தான் எலாம் பகழி, குன்றின் தலை எலாம் பகழி, சார்ந்தோர்
ஊன் எலாம் பகழி, நின்றோர் உயிர் எலாம் பகழி, வேலை
மீன் எலாம் பகழி, ஆக வித்தினன்—வெகுளி மிக்கோன். 196

மறைந்தன திசைகள் எல்லாம்; வானவர் மனமே போலக்
குறைந்தன, சுடரின் மும்மைக் கொழுங் கதிர்; குவிந்து, ஒன்று ஒன்றை
அறைந்தன, பகழி; வையம் அதிர்ந்தது; விண்ணும் அஃதே;
நிறைந்தன, பொறியின் குப்பை; நிமிர்ந்தன, நெருப்பின் கற்றை. 197

'முற்றியது இன்றே அன்றோ, வானர முழங்கு தானை?
மற்று இவன்தன்னை வெல்ல வல்லனோ, வள்ளல் தம்பி?
கற்றது காலனோடோ, கொலை இவன்? ஒருவன் கற்ற
வில் தொழில் என்னே!' என்னா, தேவரும் வெருவலுற்றார். 198

அங்கதன் நெற்றிமேலும், தோளினும், ஆகத்துள்ளும்,
புங்கமும் தோன்றாவண்ணம், பொரு சரம் பலவும் போக்கி,
வெங் கணை இரண்டும் ஒன்றும் வீரன்மேல் ஏவி, மேகச்
சங்கமும் ஊதி, விண்ணோர் தலை பொதிரெறிய ஆர்த்தான். 199

192. வயிர வெங் கோல் - திண்ணிய கொடிய அம்பு; ஆடல் - வெற்றி; 194. குழைவு - வருத்தம், மயக்கம்; தேறல் ஆம்; துணை - தெளிவு பெறும் அளவும்; 195. புங்கம் - கூர்மை; 198. முற்றியது - தீர்ந்து ஒழிந்தது; 199. பொதிரெறிதல் - நடுக்கமுறுதல்.

வாலி சேய் மேனிமேலும், மழை பொரு குருதி வாரி,
கால் உயர் வரையின் செங் கேழ் அருவிபோல் ஒழுகக் கண்டான்;
கோல் ஒரு பத்து-நூற்றால் குதிரையின் தலைகள் கொய்து,
மேலவன் சிரத்தைச் சிந்தி, வில்லையும் துணித்தான்—வீரன்.

மாற்று ஒரு தடந் தேர் ஏறி, மாறு ஒரு சிலையும் வாங்கி,
ஏற்ற வல் அரக்கன்தன்மேல், எரி முகக் கடவுள் என்பான்
ஆற்றல் சால் படையை விட்டான், ஆரியன்; அரக்கன் அம்மா,
வேற்றுள, 'தாங்க!' என்று, வெய்யவன் படையை விட்டான்.

பொரு படை இரண்டும் தம்மில் பொருதன; பொருதலோடும்,
எரி கணை, உருமின் வெய்ய, இலக்குவன் துரந்த, மார்பை
உருவின, உலப்பு இலாத; உளைகிலன், ஆற்றல் ஓயான்,
சொரி கணை மழையின் மும்மை சொரிந்தனன், தெழிக்கும் சொல்லான்.

பின் நின்றார் முன் நின்றாரைக் காணலாம் பெற்றித்து ஆக,
மின் நின்ற வயிர வாளி திறந்தன, மேனி முற்றும்;
அந் நின்ற நிலையின், ஆற்றல் குறைந்திலன், ஆவி நீங்கான்.
பொன் நின்ற வடிம்பின் வாளி மழை எனப் பொழியும் வில்லான்.

காற்றரசன், 'இவன் நான்முகன் படையால் இறப்பான்' எனலும், இலக்குவன் அப்படையால் அதிகாயன் தலையை அறுத்தலும்

கோல் முகந்து, அள்ளி அள்ளி, கொடுஞ் சிலை நாணில் கோத்து,
கால்முகம் குழைய வாங்கி, சொரிகின்ற காளை வீரன்-
பால் முகம் தோன்ற நின்று, காற்றினுக்கு அரசன், 'பண்டை
நான்முகன் படையால் அன்றிச் சாகிலன், நம்ப!' என்றான்.

'நன்று' என உவந்து, வீரன், நான்முகன் படையை வாங்கி,
மின் தனி திரண்டது என்னச் சரத்தொடும் கூட்டி விட்டான்,
குன்றினும் உயர்ந்த தோளான் தலையினைக் கொண்டு, அவ் வாளி
சென்றது, விசும்பினூடு; தேவரும் தெரியக் கண்டார். 205

பூ மழை பொழிந்து, வானோர், 'போயது, எம் பொருமல்' என்றார்;
தாம் அழைத்து அலறி, எங்கும் இரிந்தனர், அரக்கர் தள்ளி;
திமையும் தகைப்பும் நீங்கித் தெளிந்தது, குரக்குச் சேனை;
கோமகன் தோளின்நின்றும் குதித்தனன், கொற்ற வில்லான்.

200. கால் உயர் வரை - அடிப்பரப்பு உயர்ந்தோங்கிய தாழ்வரை; 204. நம்பன் - விரும்பத்தக்க குணங்களையுடையோன்; 206. தகைப்பு - தடை.

வீடணன், 'இந்திரசித்தும் இறப்பது உறுதியே' என்று எண்ணுதல்

வெந் திறல் சித்தி கண்ட வீடணன், வியந்த நெஞ்சன்,
அந்தரச் சித்தர் ஆர்க்கும் அமலேயும் கேட்டான்; 'ஐயன்
மந்திரசித்தி அன்ன சிலேத் தொழில் வலி இதுஆயின்,
இந்திரசித்தனுர்க்கும் இறுதியே இயைவது' என்ருன். 207

நராந்தகன் அங்கதனுடன் பொருது, வீழ்தல்

' ''ஏந்து எழில் ஆகத்து எம்முன் இறந்தனன்'' என்று, நீ நின்
சாந்து அகல் மார்பு, திண் தோள், நோக்கி, நின் தனுவை நோக்கி,
போம் தகைக்கு உரியது அன்ருல்; போகலே; போகல்!' என்னு,
நாந்தகம் மின்ன, தேரை நராந்தகன் நடத்தி வந்தான். 208

தேரிடைநின்று, கண்கள் தீ உக, சீற்றம் பொங்க,
பாரிடைக் கிழியப் பாய்ந்து, பகலிடைப் பரிதி என்பான்
ஊரிடை நின்ருன் என்ன, கேடகம் ஒரு கை தோன்ற,
நீருடை முகிலின் மின்போல், வாளொடு நிமிர வந்தான். 209

வீசின மரமும் கல்லும் விலங்கலும், வீற்று வீற்ரு,
ஆசைகள்தோறும் சிந்த, வாளினுல் அறுத்து மாற்றி,
தூசியும், இரண்டு கையும், நெற்றியும், சுருண்டு, நீர்மேல்
பாசியின் ஒதுங்க, வந்தான்; அங்கதன் அதனைப் பார்த்தான்.

மரம் ஒன்று விரைவின் வாங்கி, வாய் மடித்து உருத்து, வள்ளல்
சரம் ஒன்றின் கடிது சென்று, தாக்கினுன்; தாக்கினுன் தன்
கரம் ஒன்றில் திரிவது ஆரும் காண்கிலாது அதனைத் தன் கை
அரம் ஒன்று வயிர வாளால் ஆயிரம் கண்டம் கண்டான். 211

அவ் இடை வெறுங் கை நின்ற அங்கதன், 'ஆண்மை அன்ருல்
இவ் இடை பெயர்தல்' என்னு, இமையிடை ஒதுங்கா முன்னர்,
வெவ் விடம் என்னப் பொங்கி, அவனிடை எறிந்த வீச்சுத்
தவ்விட, உருமின் புக்கு, வாளொடும் தழுவிக் கொண்டான்.

அத் தொழில் கண்ட வானேர் ஆவலம் கொட்டி ஆர்த்தார்;
'இத் தொழில் இவனுக்கு அல்லால், ஈசற்கும் இயலாது' என்பார்;
குத்து ஒழித்து, அவன் கைவாள் தன் கூர் உகிர்த் தடக்கைகொண்டான்,
ஒத்து இரு கூருய் விழ வீசி, வான் உலேய ஆர்த்தான். 213

207. சித்தி - நற்செயலின் முற்றிய பயன்; அந்தரச் சித்தர் - வானத்திலே உலவும் சித்தர்கள்; 208. நாந்தகம் - வாள்; 210. தூசி - முன்னணிப் படை; இரண்டு கை - இரு பக்கத்திலும் உள்ள சேனைகள், கைகோட் படை; நெற்றி - நடுவில் நின்று பொரும் படை; சுருண்டு - வாட்டமுற்று; 211. வள்ளல் சரம் - இராமபாணம்; 212. தவ்விட - தவறிட, ஒழியுமாறு.

போர்மத்தன் நீலனுடன் பொருது மாள்தல்

கூர்மத்தின் வெரிநின் வைத்து வானவர் அமுதம் கொண்ட
நீர் மத்தின் நிமிர்ந்த தோளான், நிறை மத்த மதுவைத் தேக்கி
ஊர்மத்தம் உண்டாலன்ன மயக்கத்தான், உருமைத் தின்பான்,
போர்மத்தன் என்பான், வந்தான்—புகர் மத்தப் பூட்கை மேலான்.

காற்று அன்றேல், கடுமை என் ஆம்? கடல் அன்றேல் முழக்கம் என் ஆம்?
கூற்று அன்றேல், கொலை மற்று என் ஆம்? உரும் அன்றேல், கொடுமை என்
சீற்றம்தான் அன்றேல், சீற்றம் வேறு ஒன்று தெரிப்பது எங்கே? [ஆம்?
மாற்று அன்றே மலை; மற்று என்னே?—மத்தன்தன் மத்த யானை.

வேகமாக் கவிகள் வீசும் வெற்பினம் விழுவ, மேன்மேல்,
பாகர் கால் சிலையின் தூண்டும் உண்டை ஆம் எனவும் பற்ற;
மாக மா மரங்கள் எல்லாம், கடாத்திடை வண்டு சோப்பி
ஆகினும் ஆம்; அது அன்றேல், கரும்பு என்றே அறையலாமால்.

காலிடைப்பட்டும், மானக் கையிடைப்பட்டும், கால
வாலிடைப்பட்டும், வெய்ய மருப்பிடைப்பட்டும், மாண்டு,
நாலிடைப்பட்ட சேனை, நாயகன் தம்பி எய்த
கோலிடைப்பட்டது எல்லாம் பட்டது—குரக்குச் சேனை. 217

தன் படை உற்ற தன்மை நோக்கினன், தரிக்கிலாமை,
அன்பு அடை உள்ளத்து அண்ணல் அனலின்தன் புதல்வன், ஆழி
வன் படை அனையது ஆங்கு ஓர் மராமரம் சுழற்றி வந்தான்—
பின் படை செல்ல, நள்ளார் பெரும் படை இரிந்து பேர.*

சேறலும், களிற்றின் மேலான், திண் திறல் அரக்கன், செவ்வே,
ஆறு-இரண்டு அம்பினால் அந் நெடு மரம் அறுத்து வீழ்த்தான்;
வேறு ஒரு குன்றம் நீலன் வீசினான்; அதனை விண்ணில்,
நூறு வெம் பகழி தன்னால், நுறுக்கினான், களிறு நூக்கி. 219

பின், நெடுங் குன்றம் தேடிப் பெயர்குவான் பெயரா வண்ணம்,
பொன் நெடுங் குன்றம் சூழ்ந்த பொறி வரி அரவம் போல,
அந் நெடுங் கோப யானை, அமரரும் வெயர்ப்ப, அங்கி-
தன் நெடு மகனைப் பற்றிப் பிடித்தது, தடக் கை நீட்டி. 220

214. கூர்மம் - ஆமை; ஊர்மத்தம் - ஊமத்தங்காய்; 215. மாற்று - ஒப்பு; 216. உண்டை - வில்லுருண்டைகள்; வண்டு சோப்பி - வண்டுகளை ஓட்டு தற்குரிய ஈயோட்டி; மலைகள் களிமண் உருண்டைகள் போலவும், மரங்கள் ஈயோட்டி போலவும் கரும்பு போலவும் பயனற்றன; 217. நாலிடைப்பட்ட சேனை - நாலாகப் பொருந்திய படை; 218. அனலின் தன் புதல்வன் - அக்கினி குமாரனாகிய நீலன்; நள்ளார் - பகைவர்.

‘ஒடுங்கினன், உரமும், ஆற்றல் ஊற்றமும், உயிரும்’ என்ன,
கொடும் படை வயிரக் கோட்டால் குத்துவான் குறிக்கும் காலை,
நெடுங் கையும் தலையும் பிய்யா, நொய்தினின் நிமிர்ந்து போனான்;
நடுங்கினர், அரக்கர்; விண்ணோர், ‘நன்று, நன்று!’ என்ன நக்கார். 221

‘தறைத்தலை உற்றான் நீலன்’ என்பது ஓர் காலம்தன்னில்,
நிறைத் தலை வழங்கும் சோரி நீத்தத்து நெடுங் குன்று என்னக்
குறைத் தலை வேழம் வீழ, விசும்பின்மேல் கொண்டு நின்றான்,
பிறைத் தலை வயிர வாளி மழை எனப் பெய்யும் கையான். 222

வாங்கிய சிரத்தின் மற்றை வயிர வான் கோட்டை வவ்வி,
வீங்கிய விசையின் நீலன் அரக்கன்மேல் செல்ல விட்டான்;
ஆங்கு அவன் அவற்றை ஆண்டு ஓர் அம்பினால் அறுத்து, ஓர் அம்பால்,
ஓங்கல்போல் புயத்தினான்தன் உரத்திடை ஒளிக்க, எய்தான்.

எய்த அது காலமாக, விளிந்திலது யானை என்ன,
கையுடை மலை ஒன்று ஏறி, காற்று எனக் கடாவி வந்தான்;
வெய்யவன், அவனைத்தானும் மேற்கொளா, வில்லினோடு
மொய் பெருங் களத்தின் இட்டான், மும் மதக் களிற்றின் முன்னர். 224

இட்டவன் அவனிநின்றும் எழுவதன் முன்னம், யானை
கட்டு அமை வயிரக் கோட்டால் களம் பட வீழ்த்தி, காலால்
எட்டி, வன் தடக் கைதன்னால் எடுத்து, எங்கும் விரைவின் வீச,
பட்டிலன், தானே தன் போர்க் கரியினைப் படுத்து வீழ்த்தான்.

தன் கரி தானே கொன்று, தடக் கையால் படுத்து வீழ்த்தும்
மின் கரிது என்ன மின்னும் எயிற்றினான் வெகுளி நோக்கி,
பொன் கரிது என்னும் கண்கள் பொறி உக, நீலன் புக்கான்,
வன் கரம் முறுக்கி, மார்பில் குத்தினன்; மத்தன் மாண்டான்.

வயமத்தன்-இடபன் போர்

உன்மத்தன் வயிர மார்பின் உரும் ஒத்த கரம் சென்று உற்ற
வன்மத்தைக் கண்டும், மாண்ட மத மத்தமலையைப் பார்த்தும்,
சன்மத்தின் தன்மையானும், தருமத்தைத் தள்ளி வாழ்ந்த
கன்மத்தின் கடைக்கூட்டானும், வயமத்தன் கடிதின் வந்தான்.

222. தறை - தரை; நிறைத் தலை - நிறையினை உடைய தலை, கனமான யானைத் தலை; பிறைத் தலை வயிர வாளி - அர்த்த சந்திர பாணம்; 225. இட்டவன் - இடப்பட்டவன், கீழே தள்ளப்பட்டவன்; கட்டு அமை வயிரக் கோடு - பூண் கட்டுப் பொருந்திய இம்புரிக் கோடு; 227. சன்மத்தின் தன்மை - (உடன்பிறப்பாகிய) பிறவியின் தன்மை.

பொய்யினும் பெரிய மெய்யான்; பொருப்பினைப் பழித்த தோளான்;
'வெய்யன்' என்று உரைக்கச் சாலத் திண்ணியான்; வில்லின் செல்வன்;
பெய் கழல் அரக்கன் சேனை ஆர்த்து எழ, பிறங்கு பல் பேய்
ஐ-இருநூறு பூண்ட ஆழி அம் தேரின் மேலான்; 228

ஆர்க்கின்றான், உலகை எல்லாம் அதிர்க்கின்றான், உருமும் அஞ்சப்
பார்க்கின்றான், பொன்றினாரைப் பழிக்கின்றான், பகழி மாரி
தூர்க்கின்றான், குரங்குச் சேனை துரக்கின்றான், துணிபை நோக்கி,
'ஏற்கின்றார் இல்லை' என்னா, இடபன் வந்து, அவனோடு ஏற்றான். 229

சென்றவன் தன்னை நோக்கி, சிரித்து, 'நீ சிறியை; உன்னை
வென்று அவம்; உம்மை எல்லாம் விளிப்பெனோ? விரிஞ்சன் தானே
என்றவன் எதிர்ந்த போதும், இராவணன் மகனை இன்று [றான்.
கொன்றவன் தன்னைக் கொன்றே குரங்கின்மேல் கொதிப்பென்' என்

'வாய்கொண்டு சொற்றற்கு ஏற்ற வலி கொண்டு, பலி உண் வாழ்க்கைப்
பேய் கொண்டு, வெல்ல வந்த பித்தனே! மிடுக்கைப் பேணி
நோய் கொண்டு மருந்து செய்யா ஒருவ! நின் நோன்மை எல்லாம்
ஓய்கின்றாய் காண்டி!' என்னா, உரைத்தனன், இடபன் ஒல்கான். 231

' ''ஓடுதி'' என்ன, ஓடாது உரைத்தியேல், உன்னோடு இன்னே
ஆடுவென் விளையாட்டு' என்னா, அயில் எயிற்று அரக்கன், அம் பொன்
கோடு உறு வயிரப் போர் வில் காலொடு புருவம் கோட்டி,
ஈடு உற, இடபன் மார்பத்து ஈர்-ஐந்து பகழி எய்தான். 232

அசும்புடைக் குருதி பாயும் ஆகத்தான், வேகத்தால் அத்
தசும்புடைக் கொடுந் தேர்தன்னைத் தடக் கையால் எடுத்து வீச,
பசுங் கழல் கண்ண பேயும் பறந்தன, பரவை நோக்கி;
விசும்பிடைச் செல்லும் காரின் தாரைபோல் நான்ற மெய்யான், 233

தேரொடும் கடலின் வீழ்ந்து, சிலையும் தன் தலையும் எல்லாம்
நீரிடை அழுந்தி, பின்னும் நெருப்பொடு நிமிர வந்தான்
பாரிடைக் குதியாமுன்னம், இடபனும், 'பதக! நீ போய்
ஆரிடைப் புகுதி!' என்னா, அந்தரத்து ஆர்த்துச் சென்றான். 234

அல்லினைத் தழுவி நின்ற பகல் என, அரக்கன்தன்னை,
கல்லினும் வலிய தோளால், கட்டியிட்டு இறுக்கும் காலை,
பல்லுடைப் பில வாயூடு பசும் பெருங் குருதி பாய,
வில்லுடை மேகம் என்ன, விழுந்தனன், உயிர் விண் செல்ல.

228. பொய் - மாயம், வஞ்சனை; 231. பலி - பிறர் தரப் பெறும் உணவு; 233. அசும்பு - ஊற்றுப்பெருக்கு; பசுங் கழல் கண் - பசிய கழற்சிக்காய் போலும் கண்; பேயின் கண்களுக்குக் கழற்சிக்காயினை உவமை கூறுதல் மரபு; 234. பதகன் - பாதகன்.

சுக்கிரீவனும் கும்பனும் பொருதல்

குரங்கினுக்கு அரசும், வென்றிக் கும்பனும், குறித்த வெம் போர்
அரங்கினுக்கு அழகு செய்ய, ஆயிரம் சாரி போந்தார்,
மரம் கொடும், தண்டு கொண்டும், மலை என மலையாநின்றார்;
சிரங்களும் கரமும் எல்லாம் குலைந்தனர், கண்ட தேவர். 236

கிடைத்தார், உடலில் கிழி சோரியை வாரித்
துடைத்தார், விழியில் தழல் மாரி சொரிந்தார்,
உடைத் தாரொடு பைங் கழல் ஆர்ப்ப உலாவிப்
புடைத்தார், பொருகின்றனர்—கோள் அரி போல்வார். 237

தண்டம் கையின் வீசிய தக்க அரக்கன்,
அண்டங்கள் வெடிப்பன என்ன, அடித்தான்;
கண்டு, அங்கு, அது மா மரமே கொடு காத்தான்;
விண்டு அங்கு அது தீர்ந்தது; மன்னன் வெகுண்டான். 238

'பொன்றப் பொருவேன், இனி' என்று, பொருதான்,
ஒன்றப் புகுகின்றது ஓர் காலம் உணர்ந்தான்,
நின்று அப் பெரியோன் நினையாதமுன், நீலன்
குன்று ஒப்பது ஓர் தண்டு கொணர்ந்து கொடுத்தான். 239

அத் தண்டு கொடுத்தது கைக்கொடு அடைந்தான்,
ஒத்து அண்டமும் மண்ணும் நடுங்க உருத்தான்.
பித்தன் தட மார்பொடு தோள்கள் பிளந்தான்;
சித்தங்கள் நடுங்கி, அரக்கர் திகைத்தார். 240

அடியுண்ட அரக்கன், அருங் கனல் மின்னு
இடியுண்டது ஓர் மால் வரை என்ன, விழுந்தான்;
'முடியும் இவன்' என்பது ஓர் முன்னம், வெகுண்டான்,
'ஒடியும் உன தோள்' என, மோதி உடன்றான். 241

தோளில் புடையுண்டு அயர் சூரியன் மைந்தன்,
தாளில் தடுமாறல் தவிர்ந்து, தகைந்தான்,
வாளிக் கடு வல் விசையால் எதிர் பண்டி,
ஆளித் தொழில் அன்னவன் மார்பின் அறைந்தான். 242

அடி ஆயிர கோடியின் மேலும் அடித்தார்;
'முடிவு ஆனவன் யார்?' என, வானவர் மொய்த்தார்;
இடியோடு இடி கிட்டியது என்ன, இரண்டும்
பொடியாயின தண்டு; பொருந்தினர் புக்கார். 243

236. கும்பன் - கும்பகருணன் மைந்தர் இருவருள் ஒருவன்; மற்றொருவன் நிகும்பன்; 241. ஓர் முன்னம் - சிறிது முன்னம், ஓர்தற்கு முன்னே.

மத்தச் சின மால் களிறு என்ன மலைந்தார்;
பத்துத் திசையும் செவிடு எய்தின; பல் கால்
தத்தித் தழுவி, திரள் தோள்கொடு தள்ளி,
குத்தி, 'தனிக் குத்து' என, மார்பு கொடுத்தார். 244

நிலையில் சுடரோன் மகன் வன் கை நெருங்க,
கலையில் படு கம்மியர் கூடம் அலைப்ப
உலையில் படு இரும்பு என வன்மை ஒடுங்க,
மலையின் பிளவுற்றது, தீயவன் மார்பம். 245

'செய்வாய் இகல்?' என்று அவன் நின்று சிரித்தான்;
ஐ வாய் அரவம் முழை புக்கென, ஐயன்
கை வாய் வழி சென்று, அவன் ஆர் உயிர் கக்க,
பை வாய் நெடு நாவை முனிந்து பறித்தான். 246

கும்பன் மாண்டதும், நிகும்பன் உருத்து வர, அங்கதன் எதிர்த்தல்

அக்காலை, நிகும்பன், அனல் சொரி கண்ணன்,
புக்கான், 'இனி, எங்கு அட போகுவது?' என்னா,
மிக்கான் எதிர், அங்கதன் உற்று வெகுண்டான்;
எக்காலமும் இல்லது ஓர் பூசல் இழைத்தார். 247

சூலப் படையானிடை வந்து தொடர்ந்தான்,
ஆலத்தினும் வெய்யவன் அங்கதன், அங்கு ஓர்
தாலப் படை கைக் கொடு சென்று தடுத்தான்,
நீலக் கிரிமேல் நிமிர் பொற்கிரி நேர்வான். 248

நிகும்பன் எடுத்த சூலத்தைத் தடுத்து, அனுமன் கொல்லுதல்

எறிவான் உயர் சூலம் எடுத்தலும், 'இன்னே
முறிவான் இகல் அங்கதன்' என்பதன்முன்னே,
அறிவான் அடல் மாருதி அற்றம் உணர்ந்தான்,
பொறி வான் உகு தீ என வந்து புகுந்தான். 249

தடை ஏதும் இல் சூலம் முனிந்து, சலத்தால்,
விடையே நிகர் அங்கதன்மேல் விடுவானை,
இடையே தடைகொண்டு, தன் ஏடு அவிழ் அம் கைப்
புடையே கொடு கொன்று, அடல் மாருதி போனான். 250

245. கலையில் படுதல் - தமக்கு உரிய தொழிலில் நன்கு பயின்றிருத்தல்; கூடம் - சம்மட்டி; 248. சூலப்படையான் - சூலப்படையை உடையவனாகிய நிகும்பன்; தாலப் படை - பனைமரம் ஆகிய படை; 249. அற்றம் - மெலிவு, வந்த எல்லை.

நின்றார்கள் தடுப்பவர் இன்மை நெளிந்தார்,
பின்றுதவர் பின்றி இரிந்து பிரிந்தார்;
வன் தாள் மரம் வீசிய வானர வீரர்
கொன்றார்; மிகு தானை அரக்கர் குறைந்தார். 251

ஓடிப் புகு வாயில் நெருக்கின் உலந்தார்,
கோடிக்கு அதிகத்தினும் மேல் உளர்; குத்தால்
பீடிப்புறு புண் உடலோடு பெயர்ந்தார்,
பாடித்தலை உற்றவர், எண் இலர் பட்டார். 252

'தண்ணீர் தருக' என்றனர் தாவுற ஓடி,
உண் நீர் அற, ஆவி உலந்தனர், உக்கார்;
கண்ணீரொடும் ஆவி கலுழ்ந்தனர்; காலால்
மண் ஈரம் உற, கடிது ஊர் புக வந்தார். 253

விண்மேல் நெடிது ஓடினர், ஆர் உயிர் விட்டார்,
மண்மேல் நெடு மால் வரை என்ன மறிந்தார்;
எண் மேலும் நிமிர்ந்துளர், ஈருள் தயங்கப்
புண் மேலுடை மேனியினார், திசை போனார். 254

அறியும்மவர் தங்களை, 'ஐய! இவ் அம்பைப்
பறியும்' என வந்து, பறித்தலும், ஆவி
பிறியும் அவர் எண் இலர்; தம் மனை பெற்றார்,
குறியும் அறிகின்றிலர், சிந்தை குறைந்தார். 255

பரி பட்டு விழ, சிலர் நின்று பதைத்தார்;
கரி பட்டு உருள, சிலர் கால்கொடு சென்றார்;
நெரி பட்டு அழி தேரிடையே பலர் நின்றார்,
எரி பட்ட மலைக்கண் இருந்தவர் என்ன. 256

மண்ணின் தலை வானர மேனியர் வந்தார்,
புண் நின்ற உடற் பொறையோர் சிலர் புக்கார்,
'கண் நின்ற குரங்கு கலந்தன' என்னா.
உள் நின்ற அரக்கர் மலைக்க, உலந்தார். 257

இரு கணும் திறந்து நோக்கி, அயல் இருந்து இரங்குகின்ற
உருகு தம் காதலோரை, 'உண்ணும் நீர் உதவும்' என்றார்,
வருவதன் முன்னம் மாண்டார் சிலர்; சிலர் வந்த தண்ணீர்
பருகுவார் இடையே பட்டார்; சிலர் சிலர் பருகிப் பட்டார்.

252. பாடி - பாசறை; 254. ஈருள் தயங்குதல் - ஈரல் வெளியே தெரிதல்; ஈருள் - ஈரல்; 255. அறியும்மவர் - தமக்கு அறிமுகமாயிருப்பவர்; குறி - அடையாளம்; 257. வானர மேனியர் - குரங்கின் உருவினை மேற்கொண்டவர்.

மக்களைச் சுமந்து செல்லும் தாதையர், வழியின் ஆவி
உக்கனர் என்ன வீசி, தம்மைக் கொண்டு ஓடிப் போனார்;
கக்கினர் குருதி வாயால், கண்மணி சிதற, காலால்
திக்கொடு நெறியும் காணார், திரிந்து சென்று, உயிரும் தீர்ந்தார்.

அதிகாயனும் பிறரும் இறந்தமையைத் தூதர் இராவணனுக்கு அறிவித்தல்

இன்னது ஓர் தன்மை எய்தி, இராக்கதர் இரிந்து சிந்தி,
பொன் நகர் புக்கார்; இப்பால், பூசல் கண்டு ஓடிப் போன
துன்ன அருந் தூதர் சென்றார், தொடு கழல் அரக்கர்க்கு எல்லாம்
மன்னவன் அடியில் வீழ்ந்தார், மழையின் நீர் வழங்கு கண்ணார்.

நோக்கிய இலங்கை வேந்தன், 'உற்றது நுவல்மின்' என்றான்;
'போக்கிய சேனை தன்னில் புகுந்துள இறையும் போதா;
ஆக்கிய போரின், ஐய! அதிகாயன் முதல்வர் ஆய
கோக் குலக் குமரர் எல்லாம் கொடுத்தனர், ஆவி' என்றார்.

இராவணன் நிலையும் செயலும்

ஏங்கிய விம்மல் மானம், இரங்கிய இரக்கம் வீரம்,
ஓங்கிய வெகுளி துன்பம் என்று இவை ஒன்றற்கு ஒன்று
தாங்கிய தரங்கம் ஆகக் கரையினைத் தள்ளித் தள்ளி,
வாங்கிய கடல்போல் நின்றான்—அருவி நீர் வழங்கு கண்ணான்.

திசையினை நோக்கும்; நின்ற தேவரை நோக்கும்; வந்த
வசையினை நோக்கும்; கொற்ற வாளினை நோக்கும்; பற்றிப்
பிசையுறும் கையை; மீசை சுறுக்கொள உயிர்க்கும்; பேதை
நசையிடைக் கண்டான் என்ன, நகும், அழும், முனியும், நாணும். 263

மண்ணினை எடுக்க எண்ணும்; வானினை இடிக்க எண்ணும்;
எண்ணிய உயிர்கள் எல்லாம் ஒரு கணத்து எற்ற எண்ணும்;
'பெண் எனும் பெயர எல்லாம் பிளப்பென்' என்றும் எண்ணும்;
புண்ணிடை எரி புக்கென்ன, மானத்தால் புழுங்கி நையும். [எண்ணி,

தானியமாலி, இராவணன் அடியில் விழுந்து அரற்றுதல்

ஒருவரும் உரையார் வாயால், உயிர்த்திலர், உள்ளம் ஒய்வார்,
வெருவரும் தகையர் ஆகி, விம்மினர் இருந்த வேலை,
தரு வனம் அனைய தோளான்தன் எதிர் தானிமாலி
இரியலிட்டு அலறி, ஓயாப் பூசலிட்டு, ஏங்கி வந்தாள்; 265

263. பேதை நசையிடைக் கண்டான் என்ன - ஆசையினால் பித்தேறியவன் போல; 265. தானிமாலி - தாந்யமாலிநீ என்னும் வடமொழிப் பெயரின் தமிழாக்கம்.

மலைக் குவட்டு இடி வீழ்ந்தென்ன, வளைகளோடு ஆரம் ஏங்க,
முலைக் குவட்டு எற்றும் கையாள்; முழை திறந்தன்ன வாயாள்;
தலைக் குவட்டு அணைந்த செக்கர் சரிந்தன குழல்கள் தத்தி,
உலைக்கு வட்டு உருகு செம்பு ஒத்து உதிர நீர் ஒழுகும் கண்ணுள்; 266

வீழ்ந்தனள் அரக்கன் தாள்மேல், மென்மைத் தோள் நிலத்தை மேவ;
போழ்ந்தனள், பெரும்பாம்பு என்னப் புரண்டனள்; பொருமிப் பொங்கி,
'சூழ்ந்தனை, கொடியாய்!' என்னு, துடித்து, அருந் துயர வெள்ளத்து
ஆழ்ந்தனள், புலம்பலுற்றுள, அழக் கண்டும் அறிந்திலாதாள்: 267

'மாட்டாயோ, இக் காலம் வல்லோர் வலி தீர்க்க?
மீட்டாயோ, வீரம்? மெலிந்தாயோ, தோள் ஆற்றல்?
கேட்டாய் உணர்ந்திலையோ? என் உரையும் கேளாயோ?
காட்டாயோ, என்னுடைய கண்மணியைக் காட்டாயோ? 268

' ''இந்திரற்கும் தோலாத நன் மகனை ஈன்றுள்'' என்று,
அந்தரத்து வாழ்வாரும் ஏத்தும் அளியத்தேன்
மந்தரத் தோள் என் மகனை மாட்டா மனிதன்தன்
உந்து சிலைப் பகழிக்கு உண்ணக் கொடுத்தேனே! 269

'அக்கன் உலந்தான்; அதிகாயன்தான் பட்டான்;
மிக்க திறத்து உள்ளார்கள் எல்லாரும் வீடினர்;
மக்கள் இனி நின்று உளான், மண்டோதரி மகனே;
திக்குவிசயம், இனி, ஒருகால் செய்யாயோ? 270

'ஏது ஐயா சிந்தித்து இருக்கின்றுய்' என்ன் இறந்த
கோதை ஆர் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ?
பேதை ஆய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ?
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ? 271

'உம்பி, உணர்வுடையான், சொன்ன உரை கேளாய்;
நம்பி குலக் கிழவன் கூறும் நலம் ஓராய்;
கும்பகருணனையும் கொல்வித்து, என் கோமகனை
அம்புக்கு இரை ஆக்கி, ஆண்டாய் அரசு, ஐய!' 272

266. உலைக்கு - உலைக்களத்தின்கண்; வட்டு - திரண்ட பொருள்;
272. குலக்கிழவன் - அரக்கர்குலத் தலைவனாகிய மாலியவான், வீடணன் என்பாரும் உண்டு.

தானியமாலியை உருப்பசியும் மேனகையும் அரண்மனைக்குக் கொண்டு போதல்

என்று, பலப்பலவும் பன்னி எடுத்து அழைத்து,
கன்று படப் பதைத்த தாய்போல் கவல்வாளை,
நின்ற உருப்பசியும் மேனகையும் நேர்ந்து எடுத்து,
குன்று புரையும் நெடுங் கோயில் கொண்டு அணைந்தார். 273

இலங்கையிலுள்ளார் யாவரும் வருந்துதல்

தானை நகரத்துத் தளரத் தலைமயங்கி,
போன மகவுடையார் எல்லாம் புலம்பினார்;—
ஏனை மகளிர் நிலை என் ஆகும்?—போய் இரங்கி,
வான மகளிரும் தம் வாய் திறந்து மாழ்கினார். 274

தார் அகலத்து அண்ணல் தனிக் கோயில் தாசரதி
பேர, உலகு உற்றது உற்றதால், பேர் இலங்கை;
ஊர் அகலம் எல்லாம், அரந்தை, உவா உற்ற
ஆர்கலியே ஒத்தது, அழுத குரல் ஓசை. 275

18 நாகபாசப் படலம்

அரக்கியர் அழுவது கண்டு, இந்திரசித்தன் எழுதல்

'குழுமி, கொலை வாட் கண் அரக்கியர், கூந்தல் தாழ,
தழுவித் தலைப்பெய்து, தம் கைகொடு மார்பின் எற்றி,
அழும் இத் தொழில் யாதுகொல்?' என்று, ஓர் அயிர்ப்பும் உற்றான்,
எழிலித் தனி ஏறு என இந்திரசித்து எழுந்தான். 1

'எட்டு ஆகிய திக்கையும் வென்றவன் இன்றும் ஈடு-
பட்டான்கொல்? அது அன்று எனின், பட்டு அழிந்தான்கொல்? பண்டு
சுட்டான் இவ் அகன் பதியைத் தொடு வேலையோடும்
கட்டான்கொல்? இதற்கு ஒரு காரணம் என்கொல்?' என்றான்.

இந்திரசித்தன்–இராவணன் உரையாடல்

கேட்டான், 'இடை உற்றது என்?' என்று, கிளத்தல் யாரும்
மாட்டாது நடுங்கினர், மாற்றம் மறந்து நின்றார்.
ஓட்டா நெடுந் தேர் கடிது ஓட்டி, இமைப்பின் உற்றான்,
காட்டாதன காட்டிய தாதையைச் சென்று கண்டான். 3

275. தாசரதி - தசரதன் மைந்தன், இராமன்; அரந்தை - துன்பம்.

18: 2. கட்டல் - பெயர்த்தல்.

கண்டான், இறை ஆறிய நெஞ்சினன், கைகள் கூப்பி,
'உண்டாயது என், இவ்வுழி?' என்றலும், 'உம்பிமாரைக்
கொண்டான் உயிர் காலனும்; கும்ப நிகும்பரோடும்
விண்தான் அடைந்தான், அதிகாயனும்—வீர!' என்றான். 4

சொல்லாத முன்னம், சுடரைச் சுடர் தூண்டு கண்ணன்,
பல்லால் அதரத்தை அதுக்கி, விண்மீது பார்த்தான்;
'எல்லாரும் இறந்தனரோ!' என ஏங்கி நைந்தான்;—
வில்லாளரை எண்ணின், விரற்கு முன் நிற்கும் வீரன். 5

'ஆர் கொன்றவர்?' என்றலுமே, 'அதிகாயன் என்னும்
பேர் கொன்றவன் வென்றி இலக்குவன்; பின்பு நின்றார்
ஊர் கொன்றவனால், பிறரால்' என, உற்ற எல்லாம்,
தார் கொன்றையினான் கிரி சாய்த்தவன்தான் உரைத்தான். 6

'கொன்றார் அவரோ? ''கொலை சூழ்க!'' என நீ கொடுத்தாய்;
வன் தானையர் மானிடர் வன்மை அறிந்தும், மன்னா!
என்றாலும் எனைச் செல ஏவலை; இற்றது' என்னா,
நின்றான், நெடிது உன்னி, முனிந்து, நெருப்பு உயிர்ப்பான். 7

'அக்கப் பெயரோனை நிலத்தொடு அரைத்துளானை,
விக்கல் பொரு, வெவ் உரைத் தூதுவன் என்று விட்டாய்;
புக்கத் தலைப்பெய்தல் நினைந்திலை; புந்தி இல்லாய்!
மக்கள்-துணை அற்றனை; இற்றது உன் வாழ்க்கை மன்னோ! 8

'என், இன்று நினைந்தும், இயம்பியும், எண்ணியும்தான்?
கொன் நின்ற படைக்கலத்து எம்பியைக் கொன்றுளானை,
அந் நின்ற நிலத்து அவன் ஆக்கையை நீக்கி அல்லால்,
மன் நின்ற நகர்க்கு இனி வாரலென்; வாழ்வும் வேண்டேன். 9

'வெங் கண் நெடு வானரத் தானையை வீற்று வீற்றாய்ப்
பங்கம் உற நூறி, இலக்குவனைப் படேனேல்,
அங்கம் தர அஞ்சி என் ஆணை கடக்கலாத
செங் கண் நெடு மால் முதல் தேவர் சிரிக்க, என்னை! 10

'மாற்றா உயிர் எம்பியை மாற்றிய மானுடன்தன்
ஊற்று ஆர் குருதிப் புனல் பார்மகள் உண்டிலாளேல்,
ஏற்றான் இகல் இந்திரன் ஈர்-இரு கால், எனக்கே
தோற்றான்தனக்கு என் நெடுஞ் சேவகம் தோற்க' என்றான். 11

6. பின்பு நின்றார் - பின்பு நின்றவர்களாகிய கும்ப நிகும்பர் முதலியோர்; ஊர் கொன்றவன் - அநுமன்; கிரி - ஈண்டுக் கயிலாய மலை; 8. விக்கல் பொரு - எச்சிலுக்குச் சமமானவன், தாழ்ந்தவன்; 10. அங்கம் தர - உடம்பைக் கொண்டு எதிரில் வருவதற்கு; அங்கம் - உடம்பு, மார்பு எனினும் ஆம்; 11. மாற்றிய - உயிர் வாங்கிய; ஈர் இரு கால் - நான்கு முறை.

'பாம்பின் தரு வெம் படை, பாசுபதத்தினோடும்,
தேம்பல் பிறை சென்னி வைத்தான் தரு தெய்வ ஏதி,
ஓம்பித் திரிந்தேன் எனக்கு இன்று உதவாது போமேல்,
சோம்பித் துறப்பென்; இனிச் சோறும் உவந்து வாழேன். 12

'மருந்தே நிகர் எம்பிதன் ஆர் உயிர் வவ்வினானை
விருந்தே என அந்தகற்கு ஈகிலென், வில்லும் ஏந்தி,
பொரும் தேவர் குழாம் நகைசெய்திடப் போந்து, பாரின்
இருந்தேன்எனின், நான் அவ் இராவணி அல்லென்' என்றான்.

'ஏகா, இது செய்து, எனது இன்னலை நீக்கிடு; எந்தைக்கு
ஆகாதனவும் உளவோ? எனக்கு ஆற்றலார்மேல்
மா கால் வரி வெஞ் சிலையோடும் வளைத்த போது
சேகு ஆகும் என்று எண்ணி, இவ் இன்னலில் சிந்தைசெய்தேன்.'

இந்திரசித்தன் போர்க்கோலம் பூண்டு, களம் புகுதல்

என்றானை வணங்கி, இலங்கு அயில் வாளும் ஆர்த்திட்டு,
ஒன்றானும் அறா, உருவா, உடற்காவலோடும்,
பொன் தாழ் கணையின் நெடும் புட்டில் புறத்து வீக்கி,
வன் தாள் வயிரச் சிலை வாங்கினன்—வானை வென்றான். 15

வயிரந் நெடு மால் வரை கொண்டு, மலர்க்கண் வந்தான்,
செயிர் ஒன்றும் உறா வகை, இந்திரற்கு என்று செய்த
உயர் வெஞ் சிலை; அச் சிலை பண்டு அவன்தன்னை ஒட்டி,
துயரின்தலை வைத்து, இவன் கொண்டது; தோற்றம் ஈதால்.

தோளில் கணைப் புட்டிலும், இந்திரன் தோற்ற நாளே
ஆளித் திறல் அன்னவன் கொண்டன; ஆழி ஏழும்
மாள, புனல் வற்றினும் வாளி அறாத; வன்கண்
கூளிக் கொடுங் கூற்றினுக்கு ஆவது ஓர் கூடு போல்வ. 17

பல்லாயிர கோடி படைக்கலம், பண்டு, தேவர்
எல்லாரும் முனைத்தலை யாவரும் ஈந்த, மேரு
வில்லாளன் கொடுத்த, விரிஞ்சன் அளித்த, வெம்மை
அல்லால் புரியாதன, யாவையும் ஆய்ந்து, கொண்டான். 18

12. தேம்பல் பிறை - குறைந்த கலையினையுடைய பிறை; 14. மா கால் வரி வெஞ் சிலை - பெரிய தண்டினையுடைய கட்டமைந்த கொடிய வில்; சேகு - வயிரம், உறுதி; 15. உடற்காவல் - கவசம்; 16. தோற்றம் - வரலாறு; 18. மேரு வில்லாளன் - மேருவை வில்லாகக் கொண்ட சிவபிரான்.

நூறுயிரம் யாளியின் நோன்மை தெரிந்த சியத்து
ஏறும் அவை அன்னவை ஆயிரம் பூண்டது என்ப;
மாருய் ஓர் இலங்கை நிகர்ப்பது; வானுளோரும்
தேருதது—மற்று அவன் ஏறிய தெய்வ மாத் தேர். 19

பொன் சென்று அறியா உவணத் தனிப் புள்ளினுக்கும்,
மின் சென்று அறியா மழுவாளன் விடைக்கும், மேல்நாள்,
பின் சென்றது அல்லது ஒரு பெருஞ் சிறப்பு உற்ற போதும்,
முன் சென்று அறியாதது, மூன்று உலகத்தினுள்ளும். 20

'ஏயாத் தனிப் போர் வலி காட்டிய இந்திரன்தன்
சாயாப் பெருஞ் சாய் கெட, தாம்புகளால் தடந் தோள்
போய் ஆர்த்தவன் வந்தனன், வந்தனன்' என்று பூசல்
பேய் ஆர்த்து எழுந்து ஆடு நெடுங் கொடி பெற்றது அம்மா!

செதுகைப் பெருந் தானவர் ஊனொடும் தேய்த்த நேமி-
யது;—'கைத் திசை யானையை ஓட்டியது' என்னலாமே?—
மதுகைத் தடந் தோள் வலி காட்டிய வான வேந்தன்
முதுகைத் தழும்பு ஆக்கிய மொய் ஒளி மொட்டது அம்மா! 22

அத் தேரினை ஏறியது ஒப்பன ஆயிரம் தேர்
ஒத்து ஏய்வன சேமமதாய் வர, 'உள்ளம் வெம் போர்ப்
பித்து ஏறினன்' என்ன, நடந்தனன்— பின்பு அலால், மற்று
எத் தேவரையும் முகம் கண்டு அறியாத ஈட்டான். 23

அன்னொடு போயின தானை அளந்து கூற
என்னல் அரிதேனும், இயம்பு வான்மீகன் என்னும்
நல் நான்மறையான், 'அது நாற்பது வெள்ளம்' என்னச்
சொன்னன்; பிறர் யார், அஃது உணர்ந்து தொகுக்க வல்லார்?

தூமக் கண் அரக்கனும், தொல் அமர் யார்க்கும் தோலா
மாபக்கனும், அந் நெடுந் தேர் மணி ஆழி காக்க,
தாமக் குடை மீது உயர, பெருஞ் சங்கம் விம்ம,
நாமக் கடற் பல் இயம் நாற்கடல் மேலும் ஆர்ப்ப, 25

தேர் ஆயிரம் ஆயிர கோடி தன் மாடு செல்ல,
போர் ஆனை புறத்தின் அவற்றின் இரட்டி போத,
தார் ஆர் புரவிக் கடல் பின் செல, தானை வீரப்
பேர் ஆழி முகம் செல, சென்றனன்—பேர்ச்சி இல்லான். 26

20. பொன் - பொன் வண்ணம்; சென்று அறியா - நீங்காத; 21. ஏயா - ஒப்பில்லாத; 22. செதுகை - பொருதல்; தானவர் - அசுரர்கள்; 25. நாம் - அச்சம், அது ஈறு திரிந்து நாம என நின்றது; 26. வீரப் பேர் ஆழி - வீரப் பெருங் கடல்.

'வருபவன் யார்' என இலக்குவன் வினவலும், வீடணன் விடையும்

நின்றனன் இலக்குவன், களத்தை நீங்கலன்—
'பொன்றினன், இராவணன் புதல்வன்; போர்க்கு இனி,
அன்று அவன், அல்லனேல் அமரர் வேந்தனை
வென்றவன், வரும்' என விரும்பும் சிந்தையான். 27

'யார், இவன் வருபவன்? இயம்புவாய்!' என,
வீர வெந் தொழிலினன் வினவ, வீடணன்,
'ஆரிய! இவன் இகல் அமரர் வேந்தனைப்
போர் கடந்தவன்; இன்று வலிது போர்' என்றான். 28

'எண்ணியது உணர்த்துவது உளது, ஒன்று—எம்பிரான்!—
கண் அகன் பெரும் படைத் தலைவர் காத்திட,
நண்ணின துணையொடும் பொருதல் நன்று; இது
திண்ணிதின் உணர்தியால், தெளியும் சிந்தையால். 29

'மாருதி, சாம்பவன், வானரேந்திரன்,
தாரை சேய், நீலன் என்று இனைய தன்மையார்,
வீரர், வந்து உடன் உற,—விமல!—நீ நெடும்
போர் செயத் தகுதியால்—புகழின் பூணினாய்! 30

'பல் பதினாயிரம் தேவர் பக்கமா,
எல்லை இல் சேனை கொண்டு எதிர்ந்த இந்திரன்
ஒல்லையின் உடைந்தனன், உயிர் கொண்டு உய்ந்துளான்—
மல்லல் அம் தோளினாய்!—அமுதின் வன்மையால். 31

'இனி அவை மறையுமோ, இந்திரன் புயப்
பனி வரை உள நெடும் பாசப் பல் தழும்பு?
அனுமனைப் பிணித்துளன் ஆனபோது, இவன்
தனு மறை வித்தகம் தடுக்கற்பாலதோ?' 32

அனுமன் இலக்குவனை அடைதல்

என்று, அவன் இறைஞ்சினன்; இளைய வள்ளலும்,
'நன்று' என மொழிதலும், நணுகினான் அரோ—
வன் திறல் மாருதி, 'இலங்கைக் கோ மகன்
சென்றனன் இளவல்மேல்' என்னும் சிந்தையான். 33

30. வானரேந்திரன் - சுக்கிரீவன். 31. பக்கமா - பக்கபலமாய் வர;
32. தனு மறை வித்தகம் - வில் வேதத் திறமை.

கூற்றமும் கட்புலம் புதைப்ப, கோத்து எழு
தோற்றமும், இராவணி துணிபும், நோக்குறு,
மேல் திசை வாயிலை விட்டு, வெங் கடுங்
காற்று என அணுகினன், கடிதின் வந்துஅரோ. 34

சுக்கிரீவன் முதலியோர் இலக்குவனுக்குத் துணையாக வருதல்

அங்கதன் முன்னரே ஆண்டையான்; அயல்
துங்க வன் தோளினர் எவரும் சுற்றினர்;
செங் கதிரோன் மகன் முன்பு சென்றனன்,
சங்க நீர்க் கடல் எனத் தழீஇய தானையே. 35

இரு திறப் படைகளும் பொருதல்

இரு திரைப் பெருங் கடல் இரண்டு திக்கினும்
பொரு தொழில் வேட்டு எழுந்து ஆர்த்துப் பொங்கின
வருவன போல்வன—மனத்தினால் சினம்
திருகின எதிர் எதிர் செல்லும் சேனையே. 36

'கண்ணினால் மனத்தினால் கருத்தினால் தெரிந்து,
எண்ணினால் பெறு பயன் எய்தும், இன்று' என,
நண்ணினர் இமையவர் நங்கைமாரொடும்—
விண்ணின் நாடு உறைவிடம் வெறுமை கூரவே. 37

ஒத்து இரு தானையும் உடற்ற உற்றுழி,
அத்தனை வீரரும் ஆர்த்த அவ் ஒலி,
நத்து ஒலி, முரசு ஒலி, நடுக்கலால், தலை-
பொத்தினர் செவிகளை—புரந்தராதியர். 38

'எற்றுமின், பற்றுமின், எறிமின், எய்ம்மின்' என்று,
உற்றன உற்றன உரைக்கும் ஓதையும்,
முற்றுறு கடை யுகத்து இடியின் மும் மடி
பெற்றன, பிறந்தன, சிலையின் பேர் ஒலி. 39

கல் பட, மரம் பட, கால வேல் பட,
வில் படு கணை பட, வீழும் வீரர்தம்
எல் படும் உடல் பட, இரண்டு சேனையும்
பிற்பட, நெடு நிலம் பிளந்து பெருமால். 40

35. சங்க நீர்க் கடல் - சங்குகள் நிறைந்த நீரையுடைய கடல்; 36. திருகுதல் - முதிர்தல்; 38. நத்து - சங்கு; தலை பொத்தினர் - மூடிக் கொண்டனர்.

எழுத் தொடர் மரங்களால் எற்ற முற்றிய
விழுத் தலை முழுவதும் சிதறி வீழ்ந்தன,
அழுத்திய பெருஞ் சினத்து அரக்கர் ஆக்கைகள்
கழுத்து உள, தலை இல, களத்தின் ஆடுவ. 41

வெட்டிய தலையன, நரம்பு வீச மேல்
முட்டிய குருதிய, குரங்கின் மொய் உடல்—
சுட்டு உயர் நெடு வனம் தொலைந்தபின், நெடுங்
கட்டைகள் எரிவன போன்று காட்டுவ. 42

பிடித்தன நிருதரை, பெரிய தோள்களை
ஒடித்தன, கால் விசைத்து உதைத்த உந்தின,
கடித்தன கழுத்து அற, கைகளால் எடுத்து
அடித்தன, அரைத்தன, ஆர்த்த—வானரம். 43

வாள்களின் கவிக் குல வீரர் வார் கழல்
தாள்களைத் துணித்தனர், தலையைத் தள்ளினர்,
தோள்களைத் துணித்தனர், உடலைத் துண்ட வன்
போழ்களின் புரட்டினர், நிருதர் பொங்கினர். 44

மரங்களின், அரக்கரை மலைகள் போன்று உயர்
சிரங்களைச் சிதறின; உடலைச் சிந்தின;
கரங்களை, கழல்களை, ஒடியக் காதின—
குரங்கு எனப் பெயர் கொடு திரியும் கூற்றமே. 45

சுடர்த்தலை நெடும் பொறி சொரியும் கண்ணன,
அடர்த்து அலை நெடு மரம் அற்ற கையன,
உடர்த்தலை வைர வேல் உருவ, உற்றவர்
மிடற்றினைக் கடித்து, உடன் விளிந்து போவன. 46

அடர்ந்தன கிரிகளை அசனிஏறு எனத்
தொடர்ந்தன, மழை பொழி தும்பிக் கும்பங்கள்
இடந்தன, மூளைகள் இனிதின் உண்டன,
கடந்தன, பசித் தழல்—கரடி, காதுவ. 47

கொலை மதக் கரியன, குதிரை மேலன,
வல மணித் தேரன, ஆளின் மேலன,
சிலைகளின் குடுமிய, சிரத்தின் மேலன,—
மலைகளின் பெரியன குரங்கு—வாவுவ. 48

41. எழுத் தொடர் மரங்கள் - இரும்புத் தூண் போன்ற மரங்கள்; தொடர் - உவமவுருபு; 42. மொய் உடல் - வலிமை மிக்க உடம்பு; 45. மரங்களில் - மரங்களினால்; காதின - மோதின; 47. தும்பிக் கும்பங்கள் - யானைகளின் மத்தகங்கள்.

தண்டு கொண்டு அரக்கர் தாக்க, சாய்ந்து உகு நிலைய, சந்தின்
துண்டங்கள் ஆக வாளின் துணிந்த பேர் உடலைத் தூவி,
கொண்டு எழும் அலைகளோடும் குரக்குஇனப் பிணத்தின் குப்பை
மண்டு வெங் குருதி ஆறு அம் மறி கடல் மடுத்த மாதோ. 49

பனி வென்ற பதாகை என்றும், பல் உலை.ப் பரிமா என்றும்,
தனு என்றும், வாளி என்றும், தண்டு என்றும், தனி வேல் என்றும்,
சின வென்றி மதமா என்றும், தேர் என்றும், தெரிந்தது இல்லை—
அனுமன் கை வயிரக் குன்றால் அரைப்புண்ட அரக்கர் தானை.

பொங்கு தேர், புரவி, யானை, பொரு கழல் நிருதர் என்னும்
சங்கையும் இல்லா வண்ணம், தன் உளே தழுவி, கூற்றம்,
'எங்கு உள, உயிர்?' என்று எண்ணி, இணைக் கையால் கிளைத்தது என்ப—
அங்கதன் மரம் கொண்டு எற்ற, அளறுபட்டு அழிந்த தானை.

தாக்கிய திசைகள்தோறும் தலைத்தலை மயங்கி, தம்மில்
நூக்கிய களிறும், தேரும், புரவியும், நூழில் செய்ய,
ஆக்கிய செருவை நோக்கி, அமரரோடு அசுரர் போரைத்
தூக்கினர், முனிவர்; 'என்னை? இதற்கு அது தோற்கும்' என்றார்.

எடுத்தது நிருதர் தானை; இரிந்தது குரங்கின் ஈட்டம்;
தடுத்தனர், முகங்கள் தாங்கி, தனித் தனி தலைவர் தள்ளி;
படுத்தனர் அரக்கர், வேலை பட்டதும்; படவும், பாரார்
கடுத்தனர்; கடுத்த பின்னும், காத்தனர் கவியின் வீரர். 53

நீலன் முதலிய வானர வீரர் போர்த் திறம்

சூலமும் மழுவும் தாங்கித் தோள் இரு நான்கும் தோன்ற
மூலம் வந்து உலகை உண்ணும் உருத்திர மூர்த்தி என்ன,
நீலன் நின்றுழியே நின்றான்; நிரந்தரம், கணங்களோடும்,
காலன் என்று ஒருவன், யாண்டும் பிரிந்திலன், பாசக் கையான்.

காற்று அலன்; புனலோ அல்லன்; கனல் அல்லன்; இரண்டு கையால்,
ஆற்றலன், ஆற்றுகின்ற அருஞ் சமம் இதுவே ஆகில்,
ஏற்றம் என் பலவும் சொல்லி? 'என் பதம் இழந்தேன்' என்னா,
கூற்றமும் குலுங்கி அஞ்ச, வெங் கதக் குமுதன் கொன்றான்.

50. பனி வென்ற - வெண்ணிறத்தால் பனியை ஒத்த; பதாகை - பெருங் கொடி; 51. சங்கை - அச்சம்; 52. நூழில் செய்தல் - கொன்று குவித்தல்; 53. முகங்கள் - முன்னணிப் படை.

மறி கடல் புடை சூழ் வைப்பின் மானவன் வாளி போன
செறி பணை மரமே நின்ற, மரங்களில்; தெரியச் செப்பும்
குறியுடை மலைகள்தம்மில் குல வரைக் குலமே—கொள்ளா,
எறிதலோடு அறைதல் வேட்ட, இடவன் அன்று இடந்திலாத.

'வாம் பரி, மத மா, மான் தேர், வாள் எயிற்று அரக்கர் மாய,
பாம்பினும் வெய்யோர் சாலப் படுகுவர்; பயம் இன்று, இன்றே;
தூம்பு உறழ் குருதி மண்ட, தொடர் நெடு மரங்கள் சுற்றிச்
சாம்பவன் கொல்ல, சாம்பும்' என்று கொண்டு அமரர் ஆர்த்தார்.

பொரும் குலப் புரவி ஆன திரைகளும், கலம் பொன் தேரும்,
இருங் களி யானை ஆன மகரமும், இரியல் போக,
நெருங்கிய படைகள் ஆன மீன் குலம் நெரிந்து சிந்த,
கருங் கடல் கலக்கும் மத்தின், பனசனும் கலக்கிப் புக்கான்.

மயிந்தனும் துமிந்தன்தானும், மழைக் குலம் கிழித்து, வானத்து
உயர்ந்து எழும் எருவை வேந்தர் உடன்பிறந்தவரை ஒத்தார்;
கயம் குடைந்து ஆடும் வீரக் களிறு ஒத்தான், கவயன்; காலின்
பெயர்ந்திலன், உற்றது அல்லால், கேசரி பெரும் போர் பெற்றான்.

பெரும் படைத் தலைவர் யாரும் பெயர்ந்திலர், பிணத்தின் குப்பை
வரம்பு இல பரப்பி ஆர்த்து மலைகின்ற பொழுதின் வந்துற்று,
இரிந்தன கவியும் கூடி எடுத்தன; எடுத்தலோடும்,
சரிந்தது நிருதர் தானை; தாக்கினன் அரக்கன், தானே. 60

இந்திரசித்தன் பெரும் போர்

பூண் எறிந்த குவடு அனைய தோள்கள் இரு
    புடை பரந்து உயர, அடல் வலித்
தூண் எறிந்தனைய விரல்கள் கோதையொடு
    சுவடு எறிந்தது ஒரு தொழில் பட,
சேண் எறிந்து நிமிர் திசைகளோடு மலை
    செவிடு எறிந்து உடைய,—மிடல் வலோன்—
நாண் எறிந்து, முறை முறை தொடர்ந்து, கடல்
    உலகம் யாவையும் நடுக்கினான். 61

57. தூம்பு - நீர் விழும் மதகு வாயில்; மதகு வாயில் நீர் வீழ்தல் போல அரக்கர் உடம்பில் குருதி மண்டப் படுகுவர் என்க; 58. மகரம் - மகர மீன்கள்; 59. எருவை வேந்தர் - கழுகு அரசர்; உடன் பிறந்தவர் - சடாயு, சம்பாதி என்போர்; 60. அரக்கன் - ஈண்டு இந்திரசித்தன்; 61. கோதை - உடும்புத்தோலால் ஆகிய விரல் அணி, விரற்செறி.

சிங்கஏறு, கடல்போல் முழங்கி, 'நிமிர்
தேர் கடாய் நெடிது செல்க' என,
அங்கதாதியர் அனுங்க, வானவர்கள்
அஞ்ச, வெஞ் சின அனந்தன் மாச்
சங்கபால குளிகாதி வால் எயிறு
தந்த தீ விடம் உமிழ்ந்து சார்
வெங் கண் நாகம் என, வேகமாய், உருமு
வெள்க, வெங் கணைகள் சிந்தினன். 62

சுற்றும் வந்து, கவி வீரர் வீசிய
சுடர்த் தடங் கல் வரை, தொல் மரம்
இற்று ஒடிந்து பொடியாய் உதிர்ந்தன;
எழுந்து சேணிடை இழிந்தபோல்,
வெற்றி வெங் கணை படப் பட, தலைகள்
விண்ணினூடு திசைமீது போய்,
அற்று எழுந்தன விழுந்து, மண்ணிடை
அழுந்துகின்றன அனந்தமால். 63

சிலைத் தடம் பொழி வயக் கடும் பகழி
செல்ல, ஒல்கினர், சினத்தினல்
உலைத்து எறிந்திட எடுத்த குன்றுதொறு
உடல் பரங்கள் கொடு ஒதுங்கினர்,
நிலைத்து நின்று, சினம் முந்து செல்ல, எதிர்
சென்று சென்று, உற நெருக்கலால்,
மலைத் தடங்களொடு உரத் தலம் கழல,
ஊடு சென்ற, பல வாளியே. 64

முழுத்தம் ஒன்றில், ஒரு வெள்ள வானரம்
முடிந்து மாள்வன, தடிந்து போய்,
கழுத்த, கைய, நிமிர் கால, வால, பல
கண்டமானபடி கண்டு, நேர்
எழுத் தொடர்ந்த படர் தோள்களால் எறிய,
எற்ற, அற்றன எழுந்து மேல்,
விழுத்த பைந் தலைய வேணு மால் வரைகள்
வீசி வீசி, உடன் வீழுமால். 65

62. அனந்தன், சங்கபாலன், குளிகன் என்பன எட்டு நாகங்களுள் மூன்றின் பெயர்; 64. உரத்தலம் - மார்பிடம்.

அற்ற பைந் தலை அரிந்து சென்றன
அயில் கடுங் கணை, வெயில்கள்போல்,
புற்று அடைந்த கொடு வெவ் அராவின் நெடு
நாகலோகம்அது புக்கவால்;
வெற்ற வெள்ளிடை விரைந்து போவது, ஒரு
மேடு பள்ளம் வெளி இன்மையால்,
உற்ற செங் குருதி வெள்ளம், உள்ள திரை
ஓத வேலையொடும் ஒத்ததால்.* 66

விழிக்குமேல் விழிய, நிற்கின் மார்பிடைய,
மீளுமேல் முதுக, மேனிய
கழிக்குமேல், உயர ஓடுமேல் நெடிய
கால, வீசின் நிமிர் கைய, வாய்த்
தெழிக்குமேல் அகவும் நாவ, சிந்தையின்
உன்னுமேல்—சிகரம் யாவையும்
பழிக்கும் மேனிய குரங்கின்மேல், அவன்
விடும் கொடும் பகழி பாயவே. 67

மொய் எடுத்த கணை மாரியால், இடை
முடிந்தது ஒன்றும் முறை கண்டிலார்;
எய்விடத்து எறியும் நாணின் ஓசையலது
யாதும் ஒன்று செவி உற்றிலார்;
'மெய் எடுத்த கவி வெள்ளம் யாவையும்
விழுந்து போன' எனும் விம்மலால்,
கை எடுத்தன குரங்கின் ஓடும் முறை
கண்டு,—தேவர்கள்—கலங்கினர். 68

சுக்கிரீவன் எதிர்த்தல்

கண்ட வானரம் அனந்த கோடி முறை
கண்டமானபடி கண்ட அக்
கண்டன், மாறு ஒருவர் இன்மை கண்டு, கணை
மாறினன், விடுதல் இன்மையாய்;
கண்ட காலையில், விலங்கினன் இரவி
காதல், காதுவது ஓர் காதலால்,
கண்ட கார் சிதைய மீது உயர்ந்து ஒளிர்
மராமரம் சுலவு கையினன். 69

67. சிகரம் - மலை; 68. மொய் எடுத்த - வலிமை மிக்க; மெய் எடுத்த - உடம்பு எடுத்த; 69. அக் கண்டன் - அந்தக் கொடியவனாகிய இந்திரசித்தன்; சுலவு கை - சுழற்றுகின்ற கை.

உடைந்து, தன் படை உலைந்து சிந்தி, உயிர்
ஒல்க, வெல் செரு உடற்றலால்,
கடைந்து தெள் அமுது கொள்ளும் வள்ளல் என
மேல் நிமிர்ந்தது ஓர் கறுப்பினன்,
இடைந்து சென்றவனை எய்தி, எய்த அரிய
காவல் பெற்று இகல் இயற்றுவான்
மிடைந்து நின்ற படை வேலை கால் தளர,
வீசினன்; நிருதர் கூசினர். 70

சுற்றும் நின்ற படை சிந்தி ஓட, ஒரு
மராமரம் கொடு துகைத்துளான்
வெற்றி கண்டு, 'வலி நன்று, நன்று!' என
வியந்து, வெங் கணை தெரிந்து, அவன்
நெற்றியின்தலை இரண்டு, மார்பிடை
ஓர் அஞ்சு, நஞ்சு என நிறுத்தினன்;
பற்றி வந்த மரம் வேறு வேறு உற
நொறுக்கி, நுண் பொடி பரப்பினன். 71

அனுமன் குன்று எறிதல்

அக் கணத்து, அனுமன் ஆலகாலம் என-
லாயது ஓர் வெகுளி ஆயினன்;
புக்கு, அனைத்து உலகமும் குலுங்க நிமிர்
தோள் புடைத்து உருமுபோல் உரு,
'இக் கணத்து அவன் இறக்கும்' என்பது ஒரு
குன்று எடுத்து, மிசை ஏவினன்;
உக்கது அக் கிரி, சொரிந்த வாளிகளின்,
ஊழ் இலாத சிறு பூழியாய். 72

இந்திரசித்தன்-அனுமன் வீர உரை

'நில், அடா! சிறிது நில், அடா! உனை
நினைந்து வந்தனென், முனைக்கு நான்;
வில் எடாமை நினது ஆண்மை பேசி, உயி-
ரோடு நின்று விளையாடினாய்;
கல் அடா, நெடு மரங்களோ, வரு
கருத்தினேன் வலி கடக்கவோ?
சொல், அடா!' என இயம்பினன், இகல்
அரக்கன். ஐயன், இவை சொல்லினன்: 73

72. ஊழ் இலாத - முறைமை இல்லாத.

'வில் எடுக்க உரியார்கள், வெய்ய சில
வீரர், இங்கும் உளர்; மெல்லியோய்!
கல் எடுக்க உரியானும் நின்றனன்;
அது இன்று நாளையிடை காணலாம்;
எல் எடுத்த படை இந்திராதியர் உனக்கு
இடைந்து உயிர் கொடு ஏகுவார்;
புல் எடுத்தவர்கள் அல்லம்; வேறு சில
போர் எடுத்து, எதிர் புகுந்துளோம். 74

'என்னொடே பொருதியோ? அது அன்று எனின்,
இலக்குவப் பெயரின் எம்பிரான்-
தன்னொடே பொருதியோ? உன் உந்தை தலை
தள்ள நின்ற தனி வள்ளலாம்
மன்னொடே பொருதியோ? உரைத்தது
மறுக்கிலோம்' என, வழங்கினன்—
பொன்னொடே பொருவின் அல்லது ஒன்றொடு
பொருப் படா உயர் புயத்தினன். 75

'எங்கு நின்றனன் இலக்குவப் பெயர் அவ்
ஏழை, எம்பி அதிகாயனும்
சிங்கம் வந்தவனை வென்று, தன் உயிர்
எனக்கு வைத்தது ஓர் சிறப்பினன்?
அங்கு அவன்தனை மலைந்து கொன்று, முனிவு
ஆற வந்தனென்; அது அன்றியும்,
உங்கள் தன்மையின் அடங்குமோ, உலகு
ஒடுக்கும் வெங் கணை தொடுக்கினே? 76

'யாரும் என் படைஞர் எய்தல் இன்றி அயல்
ஏக, யானும், இகல் வில்லும், ஓர்
தேரின் நின்று, உமை அடங்கலும் திரள்
சிரம் துணிப்பென்; இது திண்ணமால்;
வாரும்; உங்களுடன் வானுளோர்களையும்
மண்ணுளோரையும் வரச் சொலும்;
போரும், இன்று ஒரு பகற்கணே பொருது,
வெல்வென்; வென்று அலது போகலேன்.' 77

74. புல் எடுத்தவர் - புல்லை வாயினுற் கவ்வினவர், போரில் தோற்றவர் வாயினுல் புல்லைக் கவ்வுதல் மரபு.

இந்திரசித்து-அனுமன் போர்

என்று, வெம் பகழி, ஏழு நூறும், இரு நூறும்,
வெஞ் சிலைகொடு ஏவினான்;
குன்று நின்றனைய வீர மாருதிதன்
மேனிமேல் அவை குழுக்களாய்ச்
சென்று சென்று உருவலோடும், வாள் எயிறு
தின்று சீறி, ஒரு சேம வன்
குன்று நின்றது பறித்து எடுத்து, அவனை
எய்தி, நொய்தின் இது கூறினான்: 78

'தும்பி என்று உலகின் உள்ள யாவை, அவை
ஏவையும் தொகுபு துள்ளு தாள்,
வெம்பு வெஞ் சின மடங்கல் ஒன்றின் வலி-
தன்னை நின்று எளிதின் வெல்லுமோ?
நம்பி தம்பி, எனது எம்பிரான், வரு
துணைத் தரிக்கிலை நலித்தியேல்,
அம்பின் முந்தி உனது ஆவி உண்ணும் இது;
கா, அடா! சிலை வல் ஆண்மையால்.' 79

செருப் பயிற்றிய தடக் கை ஆளி செல
விட்ட குன்று, திசை யானையின்
மருப்பை உற்ற திரள் தோள் இராவணன்
மகன்தன் மார்பின், நெடு வச்சிரப்
பொருப்பை உற்றது ஓர் பொருப்பு எனக் கடிது
ஒடிந்து இடிந்து, திசை போயதால்;
நெருப்பை உற்றது ஓர் இரும்பு கூடம் உற,
நீறு பட்டது நிகர்த்ததால். 80

விலங்கல்மேல் வர விலங்கல் வீசிய
விலங்கல் நீறு படு வேலையில்,
சலம் கைமேல் நிமிர, வெஞ் சினம் திருகி,
வஞ்சன் மேல் நிமிர் தருக்கினான்,
வலம் கொள் பேர் உலகம் மேருவோடு உடன்
மறிக்கும் மாருதிதன் வாசம் நாறு
அலங்கல் மார்பும் உயர் தோளும் ஊடுருவ,
ஆயிரம் சரம் அழுத்தினான். 81

78. சேமக் குன்று - தக்க சமயத்தில் உதவ வேண்டும் என்பதை நோக்கிப் பாதுகாவலாக வைத்திருந்த மலை; 79. தொகுபு - ஒன்று கூடி; கா - பாது காத்துக்கொள்; 80. ஆளி - ஆளி போன்ற அனுமன்; கூடம் - சம்மட்டி; 81. விலங்கல்மேல் - தன் மலை போன்ற மார்பின் மேல்; விலங்கல் வீசிய விலங்கல் - மலைபோன்ற அனுமன் வீசிய மலை; சலம் - மாறுபாடு.

ஒன்று போல்வன ஓராயிரம் பகழி
　　ஊடு போய் உருவ, ஆடகக்
குன்று கால் குடைய மேல் உயர்ந்து இடை
　　குலுங்கநின்றனைய கொள்கையான்,
மன்றல் நாறு தட மேனிமேல் உதிர
　　வாரி சோர வரும் மாருதி,
நின்று தேறும் அளவின்கண், வெங் கண் அடல்
　　நீலன் வந்து, இடை நெருக்கினன். 82

நீலன் போர்

நீலன், நின்றது ஒரு நீல மால் வரை
　　நெடுந் தடக் கையின் இடந்து, நேர்
மேல் எழுந்து, எரி விசும்பு செல்வது ஒரு
　　வெம்மையோடு வர வீசலும்,
சூலம் அந்தகன் எறிந்தது அன்னது
　　துணிந்து சிந்த, இடை சொல்லுறும்
காலம் ஒன்றும் அறியாமல், அம்பு கொடு
　　கல்லினன், நெடிய வில்லினன். 83

ஊகம் எங்கும் உயிரோடு நின்றனவும்
　　ஓட, வானவர்கள் உள்ளமும்
மோகம் எங்கும் உள ஆக, மேருவினும்
　　மும் மடங்கு வலி திண்மை சால்
ஆகம் எங்கும் வெளி ஆக, வெங் குருதி
　　ஆறு பாய, அனல் அஞ்சு வாய்,
நாக வெங் கண் நகு, வாளி பாய்தொறும்
　　நடுங்கினன், மலை பிடுங்கினன். 84

அங்கதன் போர்

'மேரு, மேரு' என, 'அல்ல, அல்ல' என
　　வேரினோடு நெடு வெற்பு எலாம்,
மார்பின்மேலும் உயர் தோளின்மேலும் உற,
　　வாலி காதலன் வழங்கினன்;
சேருமே அவை, தனுக் கை நிற்க? எதிர்
　　செல்லுமே? கடிது செல்லினும்,
பேருமே? கொடிய வாளியால் முறி
　　பெறுக்கலாவகை நுறுக்கினன். 85

83. கல்லுதல் - தோண்டுதல், சண்டுச் சினத்தல்; 84. ஊகம் - வானரங்கள்; மோகம் - திகைப்பு; ஆகம் - உடம்பு; 85. முறி - துண்டம்; பெறுக்கலாவகை - பெறுகலாவகை.

நெற்றிமேலும், உயர் தோளின்மேலும், நெடு
மார்பின்மேலும், நிமிர் தாளினும்,
புற்றினூடு நுழை நாகம் அன்ன, புகை
வேக வாளிகள் புகப் புக,
தெற்றி வாள் எயிறு தின்று, கைத்துணை
பிசைந்து, கண்கள் எரி தீ உக,
வற்றி ஓடு உதிர வாரி சோர்வுற,
மயங்கினன், நிலம் முயங்கினன். 86

இலக்குவன் உரை

மற்றை வீரர்கள்தம் மார்பின்மேலும், உயர்
தோளின்மேலும், மழை மாரிபோல்,
கொற்ற வெங் கணை உலக்க, எய்தவை
குளிப்ப நின்று, உடல் குலுங்கினர்;
இற்று அவிந்தன, பெரும் பதாதி; உயிர்
உள்ள எங்கணும் இரிந்த; அப்
பெற்றி கண்டு, இளைய வள்ளல், ஒள் எரி
பிறந்த கண்ணன், இவை பேசினன்: 87

'பிழைத்தது, கொள்கை போத; பெரும் படைத் தலைவர் யாரும்
உழைத்தனர், குருதி வெள்ளத்து; உலந்ததும் உலப்பிற்று அன்றே;
அழைத்து இவன்தன்னை, யானே ஆர் உயிர் கொளப்படாதே?
இழைத்தது பழுதே அன்றே?—வீடண!' என்னச் சொன்னான்.

இலக்குவன் கருத்திற்கு வீடணன் இசைதல்

'ஐய! ஈது அன்னதேயால்; ஆயிர கோடித் தேவர்
எய்தினர்; எய்தினார்கள் ஈடுபட்டு இரிந்தது அல்லால்,
செய்திலர் இவனை ஒன்றும்; நீ இது தீர்ப்பின் அல்லால்,
உய் திறன் உண்டோ, வேறு இவ் உலகினுக்கு உயிரோடு?' என்றான்.

என்பது சொல்லக் கேட்ட, இந்திரவில்லினோடும்
பொன் புரை மேகம் ஒன்று வருவது போல்கின்றானை,
முன்பனை, முன்பு நோக்கி, 'இவன்கொலாம், பரதன் முன்னோன்—
தன் பெருந் தம்பி?' என்றான்; 'ஆம்' எனச் சாரன் சொன்னான்.

88. போத - மிகவும்; உலப்பு - அளவு; 89. இது - இத் துன்பத்தை. இத்தகைய இவனுடைய வலிமையை எனலும் ஆம்.

அரக்கர் இலக்குவனை எதிர்த்தல்

தீயவன் இளவல்தன்மேல் செல்வதன் முன்னம், 'செல்க!' என்று
ஏயினர் ஒருவர் இன்றி, இராக்கதத் தலைவர், 'எங்கள்
நாயகன் மகனைக் கொன்றாய்! நண்ணினை, நாங்கள் காண;
போய் இனி உய்வது எங்கே?' என்று, எரி விழித்துப் புக்கார்.

அரக்கர் படையின் அழிவு

கோடி நூறு அமைந்த கூட்டத்து இராக்கதர், கொடித் திண் தேரும்,
ஆடல் மாக் களிறும், மாவும், கடாவினர் ஆர்த்து மண்டி,
மூடினார்; மூடினாரை முறை முறை துணித்து, வாகை
சூடினான், இராமன் பாதம் சூடிய தோன்றல் தம்பி. 92

அதிர்ந்தன, உலகம் ஏழும்; அனற் பொறி, அசனி என்னப்
பிதிர்ந்தன; மலையும் பாரும் பிளந்தன; பிணத்தின் குன்றத்து
உதிர்ந்தன, தலைகள்; மண்டி ஓடின, உதிர நீத்தம்;
விதிர்ந்தன, அமரர் கைகள்; விளைந்தது, கொடிய வெம் போர்.

விட்டனன், விசிகம் வேகம் விடாதன, வீரன்; மார்பில்
பட்டன; உலகம் எங்கும் பரந்தன; பதாகைக் காட்டைச்
சுட்டன; துரக ராசி துணித்தன; பனைக் கைம்மாவை
அட்டன; கூற்றம் என்ன அடர்ந்தன, அனந்தம் அம்மா! 94

உலக்கின்றார்; உலக்கின்றாரை எண்ணுவான் உற்ற விண்ணோர்,
கலக்குறு கண்ணர் ஆகி, கடையுறக் காணல் ஆற்றார்,
விலக்க அரும் பகழி மாரி விளைக்கின்ற விளைவை உன்னி,
'இலக்குவன் சிலை கொடேகொல், எழு மழை பயின்றது!' என்றார். 95

ஒளி ஒண் கணைகள்தோறும் உந்திய வேழம், ஒற்றை
வாளியின் தலைய, பாரில் மறிவன, மலையின் சூழ்ந்த;
ஆளியின் துப்பின் வீரர் பொரு களத்து, ஆர்த்த ஆழித்
தூளியின் தொகைய, வள்ளல் சுடு கணைத் தொகையும் அம்மா!

'பிறவியில் பெரிய நோக்கின் பிசிதம் உண்டு, உழலும் பெற்றிச்
சிறையன' என்ன நோக்கி, தேவரும் திகைப்ப, தேற்றி,
துறைதொறும் தொடர்ந்து, வானம் வெளி அறத் துவன்றி, வீழும்
பறவையின் பெரிது பட்டார் பிணத்தின்மேல் படிவ மாதோ. 97

94. விசிகம் - அம்புகள்; கைம்மா - யானை; 95. கடையுற - கடைசிவரை; 96. ஒளி - வரிசை; ஆழித் தூளி - கடலில் உள்ள மணல்கள்; 97. பிசிதம் - ஊன்; சிறையன - இறகுகளையுடைய பறவைகள்.

திறம் தரு கவியின் சேனே, செறி கழல் நிருதன் சீற,
இறந்தன கிடந்த வெள்ளம் எழுபதின் பாதி மேலும்,
பறந்தலே முழுதும் பட்ட வஞ்சகர் படிவம் மூட,
மறைந்தன; குருதி ஓடி, மறி கடல் மடுத்திலாத. 98

கை அற்ருர்; கால்கள் அற்ருர்; கழுத்து அற்ருர்; கவசம் அற்ருர்;
மெய் அற்ருர்; குடர்கள் சோர, விசை அற்ருர்; விளிவும் அற்ருர்;
மையல் தார்க் கரியும், தேரும், வாசியும், மற்றும் அற்ருர்;
உய்யச் சாய்ந்து ஓடிச் சென்ருர், உயிர் உள்ளார் ஆகி உள்ளார்.

இலக்குவன்-இந்திரசித்தன் போர்

வற்றிய கடலுள் நின்ற மலே என, மருங்கின் யாரும்
சுற்றினர் இன்றி, தோன்றும் தசமுகன் தோன்றல், துள்ளித்
தெற்றின புருவத்தோன், தன் மனம் எனச் செல்லும் தேரான்,
உற்றனன், இளேய கோவை; அனுமனும் உடன் வந்து உற்ருன்.

'தோளின்மேல் ஆதி, ஐய!' என்று அடி தொழுது நின்ருன்;
ஆளிபோல் மொய்ம்பினுனும் ஏறினன்; அமரர் ஆர்த்தார்;
காளியே அனேய காலன் கொலே அன, கனலின் வெய்ய,
வாளிமேல் வாளி தூர்த்தார், மழையின்மேல் மழை வந்தன்னர்.

இடித்தன, சிலேயின் நாண்கள்; இரிந்தன, திசைகள் இற்று;
வெடித்தன, மலேகள் விண்டு; பிளந்தது, விசும்பு மேன்மேல்;
பொடித்த, இவ் உலகம் எங்கும்; பொழிந்தன, பொறிகள் பொங்கி;
கடித்தன, கணேகளோடு கணேகள் தம் அயில் வாய் கவ்வி. 102

அம்பினேடு அம்பு ஒன்று ஒன்றை அறுக்க, மற்று அறுக்கிலாத,
வெம் பொறி கதுவ, விண்ணில் வெந்தன, கரிந்து வீழ்ந்த;
உம்பரும் உணர்வு சிந்தி ஒடுங்கினுர்; உலகம் யாவும்
கம்பமுற்று உலேந்த; வேலேக் கலம் எனக் கலங்கிற்று, அண்டம்.

அரிஇனம் பூண்ட தேரும், அனுமனும், அனந்த சாரி
புரிதலின், இலங்கை ஊரும் திரிந்தது; புலவரேயும்,
எரி கணேப் படலம் மூட, 'இலர், உளர்' என்னும் தன்மை
தெரிகிலர்; செவிடு செல்லக் கிழிந்தன, திசைகள் எல்லாம். 104

98. திறம் தரு - திறம் பொருந்திய; பறந்தலே - போர்க்களம்; 99. விளிவு - விளிக்கும் தன்மை, கூப்பிடும் சக்தி; 101. காளியே அனேய காலன் - காளி போன்ற கரு நிறமுடைய எமன்; 103. கம்பம் - நடுக்கம்; 104. அனந்த - பலப்பல.

'என் செய்தார்! என் செய்தார்!' என்று இயம்புவார்; 'இனைய தன்மை
முன் செய்தார் யாவர்?' என்பார்; 'முன் எது? பின் எது?' என்பார்;
கொன் செய்தார் வீரர் இன்ன திசையினர் என்றும் கொள்ளார்;—
பொன் செய் தார் மவுலி விண்ணோர்—உணர்ந்திலர், புகுந்தது ஒன்றும்.

'நாண் பொரு வரி வில் செங் கை, நாம நூல் நவின்ற கல்வி
மாண்பு ஒரு வகையிற்று அன்று; வலிக்கு இலை அவதி; வானம்
சேண் பெரிது' என்று, சென்ற தேவரும், 'இருவர் செய்கை
காண்பு அரிது' என்று, காட்சிக்கு ஐயுறவு எய்திற்று அன்றே!

ஆயிர கோடி பல்லம், அயில் எயிற்று அரக்கன், எய்தான்;
ஆயிர கோடி பல்லத்து அவை துணித்து அறுத்தான், ஐயன்;
ஆயிர கோடி நாகக் கணை தொடுத்து, அரக்கன் எய்தான்;
ஆயிர கோடி நாகக் கணைகளால் அறுத்தான், அண்ணல். 107

கோட்டியின் தலைய கோடி கோடி அம்பு அரக்கன் கோத்தான்;
கோட்டியின் தலைய கோடி கோடியால் குறைத்தான், கொண்டல்;
மீட்டு, ஒரு கோடி கோடி வெஞ் சினத்து அரக்கன் விட்டான்;
மீட்டு, ஒரு கோடி கோடி கொண்டு, அவை தடுத்தான், வீரன்.

கங்கபத்திரம் ஓர் கோடி கை விசைத்து, அரக்கன் எய்தான்;
கங்கபத்திரம் ஓர் கோடி கணை தொடுத்து, இளவல் காத்தான்.
திங்களின் பாதி கோடி, இலக்குவன் தெரிந்து விட்டான்;
திங்களின் பாதி கோடி தொடுத்து, அவை அரக்கன் தீர்த்தான்.

கோரையின் தலைய கோடி கொடுங் கணை அரக்கன் கோத்தான்;
கோரையின் தலைய கோடி தொடுத்து, அவை இளவல் கொய்தான்;
பாரையின் தலைய கோடி பரப்பினன் இளவல், பல் கால்;
பாரையின் தலைய கோடி, அரக்கனும், பதைக்க எய்தான். 110

தாமரைத் தலைய வாளி, தாமரைக் கணக்கின் சார்ந்த,
தாம் வரத் துரந்து, முந்தி, தசமுகன் தனயன் ஆர்த்தான்;
தாமரைத் தலைய வாளி, தாமரைக் கணக்கின் சார்ந்த,
தாம் வரத் தடுத்து வீழ்த்தான், தாமரைக்கண்ணன் தம்பி.

105. பொன் செய் தார் - பொன் மயமான (கற்பக மலர்) மாலை; 107. பல்லம் - ஒருவகை அம்பு; 108. கோட்டியின் தலைய - துன்பம் செய்யும் இயல்பினைக் கொண்டன; 109. கங்க பத்திரம் - கழுகின் சிறகுகள் பொருந்திய அம்புகள்; 110. கோரையின் தலைய - கோரை போன்ற நுனியினை உடையன; பாரையின் தலைய - பாரை மீன் போன்ற தலையை உடையன; 111. தாமரைக் கணக்கு - பதுமம் என்னும் பேரெண் அளவு.

வச்சிரப் பகழி கோடி வளை எயிற்று அரக்கன் எய்தான்;
வச்சிரப் பகழி கோடி துரந்து, அவை அனகன் மாய்த்தான்;
முச் சிரப் பகழி கோடி இலக்குவன் முடுக விட்டான்;
முச் சிரப் பகழி கோடி தொடுத்து, அவை தடுத்தான், முன்பன்.

அஞ்சலி அஞ்சு கோடி தொடுத்து, இகல் அரக்கன் எய்தான்;
அஞ்சலி அஞ்சு கோடி தொடுத்து, அவை அறுத்தான், ஐயன்;
குஞ்சரக்கன்னம் கோடி இலக்குவன் சிலையில் கோத்தான்;
குஞ்சரக்கன்னம் கோடி தொடுத்து, அவை அரக்கன் கொய்தான். 113

எய்யவும், எய்த வாளி விலக்கவும், உலகம் எங்கும்
மொய் கணைக் கானம் ஆகி முடிந்தது; முழங்கு வேலை
பெய் கணைப் பொதிகளாலே வளர்ந்தது; பிறந்த கோபம்
கைம்மிகக் கனன்றது அல்லால், தளர்ந்திலர், காளை வீரர். 114

வீழியின் கனிபோல் மேனி கிழிபட, அனுமன் வீரச்
சூழ் எழு அனைய தோள்மேல் ஆயிரம் பகழி தூவி,
ஊழியின் நிமிர்ந்த செந் தீ உருமினை உமிழ்வது என்ன,
ஏழ்-இரு நூறு வாளி இலக்குவன் கவசத்து எய்தான். 115

'முற்கொண்டான், அரக்கன்' என்று, முளரி வாள் முகங்கள், தேவர்,
பின் கொண்டார்; இளைய கோவைப் பியல் கொண்டான் பெருந் தோள்
கல்கொண்டு ஆர் கிரியின் நாலும் அருவிபோல், குருதி கண்டார், [நின்றும்,
'வில் கொண்டான், இவனே'! என்று, வெருக் கொண்டார், முனிவர் எல் [லாம்.

சீறும் நூல் தெரிந்த சிந்தை இலக்குவன், சிலைக் கை வாளி
நூறு நூறு ஏவி, வெய்தின், நுடங்கு உளை மடங்கல் மாவும்
வேறு வேறு இயற்றி, வீரக் கொடியையும் அறுத்து வீழ்த்தி,
ஆறு நூறு அம்பு செம் பொன் கவசம் புக்கு அழுந்த எய்தான்.

காளமேகத்தைச் சார்ந்த கதிரவன் என்னக் காந்தி,
தோளின்மேல் மார்பின்மேலும், சுடர் விடு கவசம் சூழ,
நீள நீள் பவள வல்லி நிரை ஒளி நிமிர்வ என்ன,
வாளிவாய்தோறும் வந்து பொடித்தன, குருதி வாரி. 118

112. வச்சிரப் பகழி - பல தலைகளையுடைய வச்சிரத்தின் வடிவமானதோர் அம்பு; முச் சிரப் பகழி - மூன்று முனைகளையுடையதோர் அம்பு; 113. குஞ்சரக் கன்னம் - யானையின் காது போன்ற தோற்றம் உடையதோர் அம்பு; 114. பொதி - கூட்டம்; 116. பியல் கொண்டான் - பிடரியின்மேல் கொண்டுள்ள அனுமன்; 117. சீறும் நூல் - சீறிச் செய்யும் போர்த்துறைக்கு உரிய நூல்.

பொன் உறு தடந் தேர் பூண்ட மடங்கல் மாப் புரண்ட போதும்,
மின் உறு பதாகையோடு சாரதி வீழ்ந்த போதும்,
தன் நிறத்து உருவ, வாளி தடுப்பு இல சார்ந்த போதும்,
இன்னது என்று அறியான், அன்னான், இனையது ஓர் மாற்றம் சொன்[னான்: *

'அந் நரன்; அல்லன் ஆகின், நாரணன் அனையன்; அன்றேல்,
பின், அரன், பிரமன் என்பார்ப் பேசுக; பிறந்து வாழும்
மன்னர், நம் பதியின் வந்து, வரி சிலை பிடித்த கல்வி
இந் நரன்தன்னோடு ஒப்பார் யார் உளர், ஒருவர்?' என்றான்.

இந்திரசித்தன் தேர் அழிதல்

வாயிடை நெருப்புக் கால, உடல் நெடுங் குருதி வார,
தீயிடை நெய் வார்த்தன்ன வெகுளியான்,—உயிர் தீர்ந்தாலும்,
ஓய்விடம் இல்லான்—வல்லை, ஓர் இமை ஒடுங்காமுன்னம்,
ஆயிரம் புரவி பூண்ட ஆழி அம் தேரன் ஆனான். 121

ஆசை எங்கணும் அம்பு உக, வெம்பு போர்
ஓசை விம்ம, உருத்திரரும் உடல்
கூச, ஆயிர கோடி கொலைக் கணை
வீசி, விண்ணை வெளி இலது ஆக்கினான். 122

அத் திறத்தினில், அனகனும், ஆயிரம்
பத்தி பத்தியின் எய்குவ பல் கணை
சித்திரத்தினில் சிந்தி, இராவணன்
புத்திரற்கும், ஓர் ஆயிரம் போக்கினான். 123

ஆயிரம் கணை பாய்தலும், ஆற்ற அருங்
காய் எரித்தலை நெய் எனக் காந்தினான்;
தீயவன் பெருஞ் சேவகன் சென்னிமேல்
தூய வெங் கணை நூறு உடன் தூண்டினான்.* 124

நெற்றிமேல் ஒரு நூறு நெடுங் கணை
உற்ற போதினும், யாதும் ஒன்று உற்றிலன்,
மற்று அவ் வன் தொழிலோன் மணி மார்பிடை
முற்ற, வெங் கணை நூறு முடுக்கினான். 125

123. அனகன் - பாவச் செயல் இல்லாதவன், ஈண்டு இலக்குவன்; சித்திரம் - விசித்திரம், வியக்கத்தக்க நிலை; 125. முற்ற - ஊடு உருவுமாறு.

நூறு வெங் கணை மார்பின் நுழைதலின்,
ஊறு சோரியொடு உள்ளமும் சோர்தர,
தேறல் ஆம் துணையும், சிலை ஊன்றியே
ஆறி நின்றனன்—ஆற்றலில் தோற்றிலான். 126

புதையும் நல் மணி, பொன் உருள், அச்சொடும்
சிதைய, ஆயிரம் பாய் பரி சிந்திட,—
வதையின் மற்றொரு கூற்று என மாருதி—
உதையினால் அவன் தேரை உருட்டினான். 127

பேய் ஓர் ஆயிரம் பூண்டது, பெய்ம் மணி
ஏய தேர் இமைப்பின்னிடை ஏறினான்;
தூயவன் சுடர்த் தோள்இணைமேல் சுடர்த்
தீய வெங் கணை ஐம்பது சிந்தினான். 128

ஏறி ஏறி இழிந்தது அல்லால், இகல்
வேறு செய்திலன், வெய்யவன்; வீரனும்,
ஆறு கோடி பகழியின் ஐ-இரு
நூறு தேர் ஒரு நாழிகை நூறினான். 129

ஆசி கூறினர்; ஆர்த்தனர்; ஆய் மலர்
வீசி வீசி, வணங்கினர்;—விண்ணவர்—
ஊசல் நீங்கினர்; உத்தரிகத்தொடு
தூசு வீசினர்;—நல் நெறி துன்னினார். 130

அக் கணத்தின், ஓர் ஆயிரம் ஆயிரம்
மிக்க வெங் கண் அரக்கர், அவ் வீரனோடு
ஒக்க வந்துற்று ஒருவழி நண்ணினார்,
புக்கு முந்தினர், போரிடைப் பொன்றுவான். 131

தேரர், தேரின் இவுளியர், செம் முகக்
காரர்,—காரின் இடிப்பினர், கண்டையின்
தாரர், தாரணியும் விசும்பும் தவழ்
பேரர், பேரி முழக்கு அன்ன பேச்சினார். 132

பார்த்த பார்த்த திசைதொறும், பல் மழை
போர்த்த வானம் என இடி போர்த்து எழ,
ஆர்த்த ஓதையும், அம்பொடு வெம் படை
தூர்த்த ஓதையும், விண்ணினைத் தூர்த்தவால். 133

127. வதையின் - கொலைத் தொழிலில்; 130. ஊசல் - மனத் தடுமாற்றம்; உத்தரிகம் - மேலாடை; 132. கண்டையின் தாரர் - கண்டை மாலை அணிந்தவர். இன் சாரியை.

ஆளி ஆர்த்தன; வாள் அரி ஆர்த்தன;
கூளி ஆர்த்தன; குஞ்சரம் ஆர்த்தன;
வாளி ஆர்த்தன; தேர், இவர் மண்தலம்
தூளி ஆர்த்திலதால், பிணம் துன்னலால். 134

வந்து அணைந்தது ஓர், வாள் அரி வாவு தேர்,
இந்திரன்தனை வென்றவன் ஏறினன்;
சிந்தினன் சர மாரி, திசை திசை;
அந்திவண்ணனும் அம்பின் அகற்றினன். 135

சுற்றும் வந்து படர்ந்து தொடர்ந்தவர்
எற்றுகின்றன, எய்த, எறிந்தன,
அற்று உதிர்ந்தன; ஆயிரம் வன் தலை,
ஒற்றை வெங் கணையோடும் உருண்டவால். 136

குடர் கிடந்தன, பாம்பு என; கோள் மதத்
திடர் கிடந்தன; சிந்தின, தேர்த் திரள்;
படர் கிடந்தனர், பல் படைக் கையினர்—
கடர் கிடந்தன போன்ற களத்தினே. 137

குண்டலங்களும், ஆரமும், கோவையும்,
கண்டநாணும், கழலும், கவசமும்,
சண்டமாருதம் வீச, தலத்து உகும்
விண் தலத்தினின் மீன் என, வீழ்ந்தவால்.† 138

அரக்கன் மைந்தனை, ஆரியன் அம்பினல்,
கரக்க நூறி, எதிர் பொரு கண்டகர்
சிரக் கொடுங் குவைக் குன்று திரட்டினன்—
இரக்கம் எய்தி, வெங் காலனும் எஞ்சவே. 139

அநுமன் விளைத்த போர்

சுற்றும் வால்கொடு; தூவும்; துவைக்கும்; விட்டு
எற்றும்; வானின் எடுத்து எறியும்; எதிர்
உற்று மோதும்; உதைக்கும்; உறுக்குமால்—
கொற்ற வில்லி அன்று ஏறிய கூற்றமே. 140

பார்க்கும் அஞ்ச; உறுக்கும்; பகட்டினல்
தூர்க்கும், வேலையை; தோள் புடை கொட்டி நின்று
ஆர்க்கும்; ஆயிரம் தேர் பிடித்து அம் கையால்
ஈர்க்கும்—ஐயன் அன்று ஏறிய யானையே. 141

140. கொற்ற வில்லி - இலக்குவன்; கூற்றம் - அனுமனாகிய எமன்;
141. பகடு - யானை.

மாவும் யானையும் வாளுடைத் தானையும்,
பூவும் நீரும் புனை தளிரும் என,
தூவும்; அள்ளிப் பிசையும்; துகைக்குமால்—
சேவகன் தெரிந்து ஏறிய சீயமே. 142

உரகம் பூண்ட உருளை பொருந்தின
இரதம் ஆயிரம், 'ஏ' எனும் மாத்திரை,
சரதம் ஆகத் தரைப் படச் சாடுமால்—
வரதன் அன்று உவந்து ஏறிய வாசியே. † 143

அவ் இடத்தினில், ஆய் மருந்தால், அழல்
வெவ் விடத்தினை உண்டவர் மீண்டென,
எவ் இடத்தினும் வீழ்ந்த இனத்தலைத்
தெவ் அடக்கும் அவ் வலியவர் தேறினர். 144

தேறினர் கண் நெருப்பு உகச் சீறினர்;
ஊறினர் வந்து, இளவலை ஒன்றினர்;
மாறு மாறு, மலையும் மரங்களும்,
நூறும் ஆயிரமும் கொடு நூறினர். 145

விகடம் உற்ற மரனொடு வெற்புஇனம்
புகட, உற்ற பொறுத்தன போவன,
துகள் தவத் தொழில் செய் துறைக் கம்மியர்
சகடம் ஒத்தன, தார் அணி தேர் எலாம். 146

வாலி மைந்தன் ஓர் மால் வரை வாங்கினன்,
காலின் வந்த அரக்கனை; 'கா; இது
போலும் உன் உயிர் உண்பது, புக்கு' என,
மேல் நிமிர்ந்து, நெருப்பு உக, வீசினன். 147

'ஏர் அழித்தது செய்தவன் ஈண்டு எழில்
சீர் அழித்தவன் ஆம்' என, தேவர்கள்
ஊர் அழித்த உயர் வலித் தோளவன்
தேர் அழித்து, ஓர் இமைப்பிடைச் சென்றதால். 148

143. வாசி-குதிரை போன்ற அனுமன்; 144. இனத்தலைத் தெவ் - இனத்தில் (வானரக் கூட்டத்தில்) உள்ளவர்களான பகை; 146. விகடம் - வேறுபாடு; புகட - வீச; உற்ற பொறுத்தன - உளவான ஊறுபாடுகளைத் தாங்கின; 147. காலின் வந்த - தேரில் வந்த, காற்றுப்போல் விரைந்து வந்த எனினும் ஆம்; 148. ஏர் அழித்தது - அழகு கெட்டது. தீத் தொழில்.

அந்த வேலையின், ஆர்த்த எழுந்து ஆடினார்,
சிந்தை சால உவந்தனர், தேவர்கள்—
'தந்தை தந்தை பண்டு உற்ற சழக்கு எலாம்
எந்தை தீர்த்தனன்' என்பது ஓர் ஏம்பலால். 149

அழிந்த தேரின்நின்று, அந்தரத்து, அக் கணத்து,
எழுந்து, மற்று ஓர் இரதம் உற்று ஏறினான்,—
'கழிந்து போகலை, நில்!' என, கைக் கணை
பொழிந்து சென்றனன்—தீ எனப் பொங்கினான். 150

இந்திரன் மகன் மைந்தனை, 'இன் உயிர்
தந்து போக!' எனச் சாற்றலுற்றான்தனை,
வந்து, மற்றைய வானர வீரரும்,
முந்து போர்க்கு முறை முறை முற்றினார். 151

மரமும், குன்றும், மடிந்த அரக்கர்தம்
சிரமும், தேரும், புரவியும், திண் கரிக்
கரமும், ஆளியும் வாரிக் கடியவன்
சரமும் தாழ்தர, வீசினர், தாங்கினார். 152

அனைய காலையில், ஆயிரம் ஆயிரம்
வினைய வெங் கண் அரக்கரை, விண்ணவர்
நினையும் மாத்திரத்து, ஆர் உயிர் நீக்கினான்—
மனையும், வாழ்வும், உறக்கமும் மாற்றினான். 153

ஆனையும், தடந் தேரும், தன் ஆர் உயிர்த்
தானையும், பரியும், படும் தன்மையை,
மான வெங் கண் அரக்கன் மனக் கொளா,
போன வென்றியன், தீ எனப் பொங்கினான். 154

சீர்த் தடம் பெருஞ் சில்லி அம் தேரினைக்
காத்து நின்ற இருவரைக் கண்டனன்—
ஆர்த்த தம் பெருஞ் சேனை கொண்டு, அண்டமேல்
ஈர்த்த சோரிப் பரவை நின்று ஈர்த்தலால்.† 155

149. தந்தை தந்தை - பாட்டன், அங்கதன் தந்தையாகிய வாலிக்கு இந்திரன் தந்தையாவன்; சழக்கு - அவமானம்; ஏம்பல் - களிப்பு; 152. கடியவன் - கொடியவனாகிய இந்திரசித்து; 153. மனை - மனைவி; 154. போன வென்றியன் - வெற்றி இல்லாதவன்; 155. காத்து நின்ற இருவர் - புகை நிறக் கண்ணன் (தூம்ராக்ஷன்), மாபக்கன் (மகா பார்சுவன்) என்னும் இருவர்.

நேர் செலாது, இடை நின்றனர்—நீள் நெடுங்
கார் செலா; இருள் கீறிய கண் அகல்
தேர் செலாது; விசும்பிடைச் செல்வது ஓர்
பேர் செலாது;—பிணத்தின் பிறக்கமே.† 156

அன்று தன் அயல் நின்ற அரக்கரை
ஒன்று வாள் முகம் நோக்கி, 'ஒரு விலான்
நன்று நம் படை நாற்பது வெள்ளமும்
கொன்று நின்றபடி!' எனக் கூறினன். 157

ஆய வீரரும், 'ஐய! அமர்த்தலை,
நீயும், நாற்பது வெள்ள நெடும் படை
மாய, வெங் கணை மாரி வழங்கினை;
ஒய்வு இல் வெஞ் செரு ஒக்கும்' என்று ஓதினர். 158

வந்து நேர்ந்தனர்; மாருதிமேல் வரும்
அந்திவண்ணனும், ஆயிரம் ஆயிரம்
சிந்தினன், கணை; தேவரை வென்றவன்
நுந்த நுந்த, முறை முறை நூறினன். 159

ஆறும் ஏழும், அறுபதும் ஐம்பதும்,
நூறும் ஆயிரமும், கணை நூக்கி, வந்து
ஊறினரை உணர்வு தொலைத்து, உயிர்
தேறினரை நெடு நிலம் சேர்த்தினன். 160

கதிரின் மைந்தன் முதலினர், காவலார்,
உதிர வெள்ளத்தின் ஒல்கி ஒதுங்கலும்,
எதிரில் நின்ற இராவணி ஈடுற.
வெதிரின் காட்டு எரிபோல், சரம் வீசினன். 161

உளைவு தோன்ற, இராவணி ஒல்கினன்;
கிளையின் நின்ற இருவர் கிளைத்தலும்,
அளவு இல் சேனை அவிதர, ஆரியற்கு
இளைய வீரன் சுடு சரம் ஏவினன். 162

தெரி கணை மாரி பெய்ய, தேர்களும், சிலைக் கைம்மாவும்,
பரிகளும், தாமும், அன்று பட்டன கிடக்கக் கண்டார்,
இருவரும் நின்றார்; மற்றை இராக்கதர் என்னும் பேர்கள்
ஒருவரும் நின்றார் இல்லை; உள்ளவர் ஓடிப் போனார். 163

156. ஓர் பேர் - ஓர் உயிர்; 162. உளைவு - வருத்தம்; கிளைத்தல் - மனக் கிளர்ச்சியுற்றுப் போர்க்கு எழுதல்.

ஓடினர் அரக்கர், தண்ணீர் உண் நசை உலர்ந்த நாவர்,
தேடினர், தெரிந்து கையால் முகிலினை முகந்து தேக்கி,
பாடு உறு புண்கள்தோறும் பசும் புனல் பாயப் பாய,
வீடினர் சிலவர்; சில்லோர், பெற்றிலர்; விளிந்து வீழ்ந்தார்.

வெங் கணை திறந்த மெய்யர், விளிந்திலர், விரைந்து சென்றார்,
செங் குழல் கற்றை சோரத் தெரிவையர் ஆற்ற, தெய்வப்
பொங்கு பூம் பள்ளி புக்கார், அவர் உடல் பொருந்தப் புல்லி,
அங்கு அவர் ஆவியோடும் தம் உயிர் போக்கி அற்றார். 165

பொறிக் கொடும் பகழி மார்பர், போயினர், இடங்கள் புக்கார்,
மறிக் கொளும் சிறுவர் தம்மை, மற்று உள சுற்றம் தம்மைக்
'குறிக்கொளும்' என்று கூறி, அவர் முகம் குழைய நோக்கி,
நெறிக் கொளும் கூற்றை நோக்கி, ஆர் உயிர் நெடிது நீத்தார்.

'தாமரைக்கண்ணன் தம்பி தன்மை ஈது ஆகின், மெய்யே
வேம், அரைக் கணத்தின் இவ் ஊர்; இராவணி விளிதல் முன்னம்,
மா மரக் கானில், குன்றில், மறைந்திரும்; மறைய, வல்லே
போம்' எனத் தமரைச் சொல்லி, சிலர் உடல் துறந்து போனார்.

வரை உண்ட மதுகை மேனி மருமத்து, வள்ளல் வாளி
இரை உண்டு துயில, சென்றார், 'வாங்கிடின், இறப்பம்' என்பார்,
பிரை உண்ட பாலின் உள்ளம் பிறிதுற, பிறர் முன் சொல்லா
உரையுண்ட நல்லோர் என்ன, உயிர்த்து உயிர்த்து, உழைப்பதானார்.

தேரிடைச் செல்லார், மானப் புரவியில் செல்லார், செங் கண்
காரிடைச் செல்லார், காலின் கால் எனச் செல்லார், காவல்
ஊரிடைச் செல்லார், நாணால் உயிரின்மேல் உடைய அன்பால்,
போரிடைச் செல்லார், நின்று நடுங்கினர், புறத்தும் போகார்.

இந்திரசித்தன் கவசத்தை இலக்குவன் பிளத்தல்

நொய்தினின் சென்று கூடி, இராவணி உளைவை நோக்கி,
'வெய்தினின் கொன்று வீழ்ப்பல்' என்பது ஓர் வெகுளி விங்கி,—
பெய்துழிப் பெய்யும் மாரி அனையவன்—பிணங்கு கூற்றின்
கையினின் பெரிய அம்பால், கவசத்தைக் கழித்து வீழ்த்தான்.

166. பொறிப் பகழி - நெருப்புப் பொறி பறக்கும் அம்பு; மறிக் கொளும் சிறுவர் - மான்மறி போலத் துள்ளி விளையாடும் புதல்வர்; குழைய நோக்குதல் - பரிவொடு பார்த்தல்; 168. வரை உண்ட - மலை போன்ற; உண்ட - உவம உருபு; மருமம் - மார்பு; பிறர் முன் சொல்லா உரை - பிறரிடத்துச் சொல்லாத சொற்கள் (மௌன விரதம்). பிறர்முன் சொல்லத் தகாத பழிச்சொல் எனலும் ஆம்; 170. பெய்துழிப் பெய்யும் - பெய்த இடத்திலேயே பெய்யும்.

கவசத்தைக் கழித்து வீழ்ப்ப, காப்புறு கடன் இன்று ஆகி,
அவசத்தை அடைந்த வீரன் அறிவுறும் துணையின் வீரத்
'துவசத்தின் புரவித் திண் தேர் கடிதுறத் தூண்டி, யாம் இத்
திவசத்தின் முடித்தும், வெம் போர்' எனச் சினம் திருகிச் சென்றார்.*

மாருதிமேலும், ஐயன் மார்பினும் தோளின்மேலும்,
தேரினர் இருவர் சென்றார், செந் தழல் பகழி சிந்தி;
ஆரியன், வாகை வில்லும், அச்சுடைத் தேரும், அத் தேர்
ஊர்குவார் உயிரும், கொண்டான்; புரவியின் உயிரும் உண்டான்.

இருவரும் இழந்த வில்லார், எழு முனை வயிரத் தண்டார்,
உரும் எனக் கடிதின் ஓடி, அனுமனை இமைப்பின் உற்றார்,
பொரு கனல் பொறிகள் சிந்தப் புடைத்தனர்; புடைத்தலோடும்,
பரு வலிக் கரத்தினால் தண்டு இரண்டையும் பறித்துக் கொண்டான்.

தண்டு அவன் கையது ஆன தன்மையைத் தறுகணாளர்
கண்டனர்; கண்டு, செய்யலாவது ஒன்றானும் காணார்;
'கொண்டனன் எறிந்து நம்மைக் கொல்லும்' என்று, அச்சம் கொண்டார்,
உண்ட செஞ்சோறும் நோக்கார், உயிருக்கே உதவி செய்தார்.

இந்திரசித்தன் வானர வீரர்களைச் சின்னபின்னம் செய்தல்

காற்று வந்து அசைத்தலாலும், காலம் அல்லாமையாலும்,
கூற்று வந்து உயிரைக் கொள்ளும் கூறி இன்மை குறித்தலாலும்,
தேற்றம் வந்து எய்தி, நின்ற மயக்கமும் நோவும் தீர்ந்தார்;
ஏற்றமும் வலியும் பெற்றார்; எழுந்தனர்—வீரர் எல்லாம்.

அங்கதன், குமுதன், நீலன், சாம்பவன், அருக்கன் மைந்தன்,
பங்கம் இல் மயிந்தன், தம்பி, சதவலி, பனசன் முன்னாச்
சிங்க ஏறு அனைய வீரர் யாவரும், சிகரம் ஏந்தி,
மங்கலம் வானோர் சொல்ல, மழை என ஆர்த்து, வந்தார்.

அத்தனையோரும், குன்றம் அளப்பு இல, அசனி ஏற்றோடு
ஒத்தன, நெருப்பு வீசும் உரும் என ஒருங்க உய்த்தார்;
'இத்தனை போலும் செய்யும் இகல்' என, முறுவல் எய்தி,
சித்திர வில்லோனும் சின்ன பின்னங்கள் செய்தான். 177

171. அவசம் - தன்னை இழந்த நிலை; திவசம் - நாள்; 172. ஆரியன் - இலக்குவன்; 174. உயிருக்கு உதவி செய்தல் - புறமுதுகு காட்டி ஓடி ஒளிதல்; 175. காலம் - உயிர் போதற்குரிய காலம்; 176. மயிந்தன் தம்பி - துமிந்தன்; 177. சித்திரம் - விசித்திரம், அதிசயம்.

மரங்களும் மலையும் கல்லும் மழை என வழங்கி, வந்து
நெருங்கினர்; நெருங்கக் கண்டும்; ஒரு தனி நெஞ்சும், வில்லும்,
சரங்களும், துணையாய் நின்ற நிசாசரன் தனிமை நோக்கி,
இரங்கினன் என்ன, மேல்பால் குன்று புக்கு, இரவி நின்றான்.

'வாழிய வேதம் நான்கும், மனு முதல் வந்த நூலும்,
வேள்வியும், மெய்யும், தெய்வ வேதியர் விழைவும் அஃதே,
ஆழி அம் கமலக் கையான் ஆதிஅம் பரமன்' என்ற
ஏழையர் உள்ளம் என்ன இருண்டன—திசைகள் எல்லாம்.†

வீடணன் தூண்டுதலால் இலக்குவன் இந்திரசித்தைக் கொல்ல முயல்தல்

'நாகமே அனைய நம்ப! நாழிகை ஒன்று நான்கு
பாகமே காலம் ஆகப் படுத்தியேல், பட்டான்; அன்றேல்,
வேக வாள் அரக்கர் காலம் விளைந்தது; விசும்பின் வஞ்சன்
ஏகுமேல், வெல்வன்' என்பது, இராவணற்கு இளவல் சொன்னான்.

அத்தனை வீரர்மேலும், ஆண் தகை அனுமன்மேலும்,
எத்தனை கோடி வாளி மழை என எய்யாநின்ற
வித்தக வில்லினானைக் கொல்வது விரும்பி, வீரன்,
சித்திரத் தேரைத் தெய்வப் பகழியால் சிதைத்து வீழ்த்தான்.

நாகபாசத்தை விடுக்க இந்திரசித்தன் வானில் மறைதல்

அழித்த தேர் அழுந்தாமுன்னம், 'அம்பொடு கிடந்து வெம்பி,
உழைத்து உயிர் விடுவது அல்லால், உறு செரு வென்றேம் என்று
பிழைத்து இவர் போவர் அல்லர்; பாசத்தால் பிணிப்பன்' என்னா,
விழித்து இமையாத முன்னம், வில்லொடும் விசும்பில் சென்றான்.

'பொன் குலாம்மேனி மைந்தன் தன்னொடும் புகழ்தற்கு ஒத்த,
வன் கலாம் இயற்றி நின்றான், மற்றொரு மனத்தன் ஆகி,
மின் குலாம் கழல் கால் வீரன் விண்ணிடை விரைந்த தன்மை
என்கொலாம்!' என்ன அஞ்சி, வானவர் இரியல்போனார். 183

தாங்கு வில் கரத்தன், தூணி தழுவிய புறத்தன், தன்னுள்
ஓங்கி உற்று எரியாநின்ற வெகுளியன், உயிர்ப்பன், தீயன்,
தீங்கு இழைப்பவர்கட்கு எல்லாம் சிரியன், மாயச் செல்வன்,
வீங்கு இருட் பிழம்பின், உம்பர் மேகத்தின் மீதின் ஆனான். 184

180. நாழிகை ஒன்று நான்கு - கால் நாழிகை; அரக்கர் காலம் - அரக்கர்க்குரிய இராக்காலம்; 182. உறு செரு - பெரும் போர்; 184. புறத்தன் - முதுகையுடையவன்; சிரியன் - தலைசிறந்தவன்.

தணிவு அறப் பண்டு செய்த தவத்தினும், தருமத்தானும்,
பிணி அறுப்பவரில் பெற்ற வரத்தினும், பிறப்பினானும்,—
மணி நிறத்து அரக்கன்—செய்த மாய மந்திரத்தினானும்,
அணு எனச் சிறியது, ஆங்கு, ஓர் ஆக்கையும் உடையன் ஆனான்.

வாங்கினான்—மலரின் மேலான், வானக மணி நீர்க் கங்கை
தாங்கினான், உலகம் தாங்கும் சக்கரத்தவன் என்றாலும்,
வீங்கு வான் தோளை வீக்கி வீழ்த்துஅலால் மீள்கிலாத
ஓங்கு வாள் அரவின் நாமத்து ஒரு தனிப் படையை உன்னி. 186

ஆயின காலத்து, ஆர்த்தார், 'அமர்த்தொழில் அஞ்சி, அப்பால்
போயினன்' என்பது உன்னி, வானர வீரர் போல்வார்;
நாயகற்கு இளைய கோவும் அன்னதே நினைந்து, நக்கான்;
மாயையைத் தெரிய உன்னார், போர்த்தொழில் மாற்றி நின்றார்.

அது கணத்து, அனுமன் தோள்நின்று ஐயனும் இழிந்து, வெய்ய
கது வலிச் சிலையை வென்றி அங்கதன் கையது ஆக்கி,
முதுகு உறச் சென்று நின்ற கணை எலாம் முறையின் வாங்கி,
விதுவிதுப்பு ஆற்றலுற்றான், விளைகின்றது உணர்ந்திலாதான்.

இந்திரசித்தன் நாகபாசம் இலக்குவனைப் பிணித்தல்

விட்டனன் அரக்கன் வெய்ய படையினை; விடுத்தலோடும்,
எட்டினோடு இரண்டு திக்கும் இருள் திரிந்து இரிய ஓடி,
கட்டினது என்ப மன்னோ, காகுத்தற்கு இளைய காளை
வட்ட வான் வயிரத் திண் தோள் மலைகளை உளைய வாங்கி. 189

இறுகுறப் பிணித்தலோடும், யாவையும் எதிர்ந்த போதும்
மறுகுறக் கடவான்அல்லன்; மாயம் என்று உணர்வான்அல்லன்;
உறுகுறைத் துன்பம் இல்லான்; ஒடுங்கினன்; செய்வது ஓரான்,
அறுகுறைக் களத்தை நோக்கி, அந்தரம் அதனை நோக்கும். 190

அனுமன் முதலிய ஏனையோரையும் நாகபாசம் பிணித்தல்

மற்றையோர்தமையும் எல்லாம் வாள் எயிற்று அரவம் வந்து,
சுற்றின; வயிரத் தூணின், மலையினின், பெரிய தோள்கள்,
'இற்றன, இற்ற' என்ன, இறுக்கின; இளகா உள்ளம்
தெற்றென உடைய வீரர் இருந்தனர், செய்வது ஓரார். 191

185. பிணி அறுப்பவர் - பாசப் பிணிப்பை ஒழிப்பவர்களான பிரமன் முதலியோர்; 188. வலி கதுவு சிலை என இயைக்க; விதுவிதுப்பு - விறுவிறுப்பு; 190. அந்தரம் - வானம்.

காலுடைச் சிறுவன், 'மாயக் கள்வனைக் கணத்தின்காலை
மேல் விசைத்து எழுந்து நாடிப் பிடிப்பென்' என்று உறுக்கும் வேலை,
ஏல்புடைப் பாசம், மேல்நாள், இராவணன் புயத்தை வாலி
வால் பிணித்தென்ன, சுற்றிப் பிணித்தது, வயிரத் தோளை. 192

நாகபாசத்தால் கட்டுண்டவரின் நிலை

மலை என எழுவர்; வீழ்வர்; மண்ணிடைப் புரள்வர்; வானில்
தலைகளை எடுத்து நோக்கி, தழல் எழ விழிப்பர்; தாவி
அலை கிளர் வாலால் பாரின் அடிப்பர்; வாய் மடிப்பர்; ஆண்மைச்
சிலையவற்கு இளைய கோவை நோக்குவர்; உள்ளம் தீவர்; 193

வீடணன் முகத்தை நோக்கி, 'வினை உண்டே, இதனுக்கு?' என்பர்;
மூடின கங்குல் மாலை இருளினை முனிவர்; 'மொய்ம்பின்
ஈடுறத் தக்க போலாம் நம் எதிர்' என்னா, ஏந்தல்
ஆடகத் தோளை நோக்கி, நகை செய்வர்; விழுவர்; அஞ்சார்.

'ஆர், இது தீர்க்க வல்லார்? அஞ்சனை பயந்த வள்ளல்,
மாருதி, பிழைத்தான்கொல்லோ?' என்றனர், மறுகி நோக்கி,
வீரனைக் கண்டு, 'பட்டது இதுகொலாம்!' என்று விம்மி,
'வார் கழல் தம்பி தன்மை காணுமோ, வள்ளல்?' என்பார்.

என், சென்ற தன்மை சொல்லி? ஏறும் வலி அரக்கன் எய்தான்,
மின் சென்றது அன்ன; வானத்து உரும்இனம் வீழ்வ என்ன,
பொன் சென்ற வடிம்பின் வாளி, புகையொடு பொறியும் சிந்தி,
முன் சென்ற முதுகில் பாய, பின் சென்ற மார்பம் உற்ற. 196

மலைத்தலைக் கால மாரி; மறித்து எறி வாடை மோத,
தலைத்தலை மயங்கி வீழும் தன்மையின் தலைகள் சிந்தும்;
கொலைத்தலை வாளி பாயக் குன்று அன குவவுத் தோளார்
நிலைத்திலர் உலைந்து சாய்ந்தார்; நிமிர்ந்தது, குருதி நீத்தம்.

ஆயிர கோடி மேலும் அம்பு தன் ஆகத்தூடு
போயின போதும், ஒன்றும் துடித்திலன், பொடித்து, மானத்
தீ எரி சிதறும் செங் கண் அஞ்சனை சிங்கம், தெய்வ
நாயகன் தம்பிக்கு உற்ற துயர் சுட, நடுங்குகின்றான். 198

192. ஏல்புடைப் பாசம் - எதிர்த்தலையுடைய நாகபாசம்; 193. அலை கிளர் வால் - அலைகின்ற எழுச்சியையுடைய வால்; 194. வினை - பரிகாரமான செயல்.

வேறு உள வீரர் எல்லாம் வீழ்ந்தனர், உருமின் வெய்ய
நூறும் ஆயிரமும் வாளி உடலிடை நுழைய, சோரி
ஆறுபோல் ஒழுக; அண்ணல் அங்கதன் அனந்த வாளி
ஏறிய மெய்யனேனும், இருந்தனன், இடைந்திலாதான். 199

கதிரவன் காதல் மைந்தன், கழல் இளம் பசுங் காய் அன்ன,
எதிர் எதிர் பகழி தைத்த, யாக்கையன்; எரியும் கண்ணன்;
வெதிர் நெடுங் கானம் என்ன வேகின்ற மனத்தன், மெய்யன்;
உதிர வெங் கடலுள், தாதை உதிக்கின்றான் தனையும் ஒத்தான்.

இலக்குவன் நிலை

வெப்பு ஆரும் பாசம் வீக்கி, வெங் கணை துளைக்கும் மெய்யன்,—
ஒப்பு ஆரும் இல்லான் தம்பி—உணர்ந்திருந்து இன்னல் உய்ப்பான்,
'இப் பாசம் மாய்க்கும் மாயம், யான் வல்லென்' என்பது ஓர்ந்தும்,
அப் பாசம் வீச ஆற்றாது, அழிந்த நல் அறிவு போன்றான். 201

அம்பு எலாம் கதிர்கள் ஆக, அழிந்து அழிந்து இழியும் ஆகச்
செம் புனல் வெயிலின் தோன்ற, திசை இருள் இரிய, சீறிப்
பம்பு பேர் ஒளிய நாகம் பற்றிய படிவத்தோடும்,
உம்பர் நாடு இழிந்து வீழ்ந்த ஒளியவனேயும் ஒத்தான். 202

இராவணன் அரண்மனைக்கு இந்திரசித்தன் செல்லுதல்

மயங்கினான் வள்ளல் தம்பி; மற்றையோர் முற்றும் மண்ணை
முயங்கினார்; மேனி எல்லாம் மூடினான், அரக்கன் மூரித்
தயங்கு பேர் ஆற்றலானும், தன் உடல் தைத்த வாளிக்கு
உயங்கினான், உளைந்தான், வாயால் உதிர நீர் உமிழாநின்றான்.

'சொற்றது முடித்தேன்; நாளை, என் உடற் சோர்வை நீக்கி,
மற்றது முடிப்பென்' என்னா, எண்ணினான், 'மனிசன் வாழ்க்கை
இற்றது; குரங்கின் தானை இறந்தது' என்று, இரண்டு பாலும்
கொற்ற மங்கலங்கள் ஆர்ப்ப, இராவணன் கோயில் புக்கான்.

ஈர்க்கு அடைப் பகழி மாரி இலக்குவன் என்ன நின்ற
நீர்க் கடை மேகம்தன்னை நீங்கியும், செருவின் நீங்கான்,
வார்க் கடை மதுகைக் கொங்கை, மணிக் குறு முறுவல், மாதர்
போர்க் கடைக் கருங் கண் வாளி புயத்தொடு பொழியப் புக்கான். 205

201. இப் பாசம் - இந்த உலக பாசம்; நல் அறிவு - நல்ல ஆன்மா;
205. ஈர்க்கு அடைப் பகழி மாரி - இறகுகளை உடைய அம்பாகிய மழை.

ஐ-இரு கோடி செம் பொன் மணி விளக்கு அம் கை ஏந்தி,
மை அறு வான நாட்டு மாதரும், மற்றை நாட்டுப்
பை அரவு அல்குலாரும், பலாண்டு இசை பரவ, தங்கள்
தையலர் அறுகு தூவி வாழ்த்தினர் தழுவ, சார்ந்தான். 206

தந்தையை எய்தி, அன்று ஆங்கு உற்றுள தன்மை எல்லாம்
சிந்தையின் உணரக் கூறி, 'தீருதி, இடர் நீ; எந்தாய்!
நொந்தனென் ஆக்கை; நொய்தின் ஆற்றி, மேல் நுவல்வென்' என்னு,
புந்தியில் அனுக்கம் தீர்வான், தன்னுடைக் கோயில் புக்கான்.

இலக்குவன் முதலியோர் நிலை கண்டு, வீடணன் புலம்பல்

இத் தலை, இன்னல் உற்ற வீடணன் இழைப்பது ஓரான்,
மத்து உறு தயிரின் உள்ளம் மறுகினன், மயங்குகின்றான்,
'அத் தலைக் கொடியன் என்னை அட்டிலன்; அளியத்தேன் நான்;
செத்திலென்; வலியென் நின்றேன்' என்று போய், வையம் சேர்ந்தான்.

பாசத்தால் ஐயன் தம்பி பிணிப்புண்டபடியைக் கண்டு,
'நேசத்தார் எல்லாம் வீழ்ந்தார்; யான் ஒரு தமியென் நின்றேன்;
தேசத்தார், என்னை என் என் சிந்திப்பார்!' என்று, தீயும்
வாசத் தார் மாலை மார்பன் வாய் திறந்து அரற்றலுற்றான்: 209

'"கொல்வித்தான், உடனே நின்று, அங்கு" என்பரோ? "கொண்டு போ
வெல்வித்தான், மகனை" என்று பகர்வரோ? "விளைவிற்கு எல்லாம் [னான்,
நல் வித்தாய் நடந்தான், முன்னே" என்பரோ? நயந்தோர் தம்தம்
கல்வித்து ஆம் வார்த்தை' என்று கரைவித்தான் உயிரைக் கண்போல்.

'போர் அவன் புரிந்த போதே, பொரு அரு வயிரத் தண்டால்,
தேரொடும் புரண்டு வீழச் சிந்தி, என் சிந்தை செப்பும் [ஞான்று
வீரம் முன் தெரித்தேன் அல்லேன்; விளிந்திலேன்; மெலிந்தேன்; இஞ்
ஆர் உறவு ஆகத் தக்கேன்? அளியத்தேன், அழுந்துகின்றேன்!

'ஒத்து அலைத்து, ஒக்க வீடி, உய்வினும் உய்வித்து, உள்ளம்
கைத்தலை நெல்லி போலக் காட்டிலேன்; கழிந்தும் இல்லேன்; [நின்ற
அத் தலைக்கு அல்லேன்; யான், ஈண்டு, "அபயம்!" என்று அடைந்து
இத் தலைக்கு அல்லேன்; அல்லேன்! இரு தலைச் சூலம் போல்வேன்!'

207. புந்தியில் அனுக்கம் - மனத் துன்பம்; 212. உய்வின் - உய்யும் நெறிகள்.

நிகழ்ந்தவை அறிந்து, இராமன் வருந்துதல்

அனையன பலவும் பன்னி, ஆகுலித்து அரற்றுவானை,
'வினை உள பலவும் செய்யத்தக்கன;—வீர!—நீயும்
நினைவு இலார் போல நின்று நெகிழ்தியோ? நீத்தி!' என்னா,
இனையன சொல்லித் தேற்றி, அனலன் மற்று இனைய செய்தான்:

'நீ இவனை இருத்தி; யான் போய் நெடியவற்கு உரைப்பென்' என்னா,
போயினன், அனலன்; போய், அப் புண்ணியன் பொலன் கொள் பாதம்
மேயினன் வணங்கி, உற்ற வினை எலாம் இயம்பி நின்றான்;
ஆயிரம் பெயரினானும், அருந் துயர்க் கடலுள் ஆழ்ந்தான். 214

உரைத்திலன் ஒன்றும்; தன்னை உணர்ந்திலன்; உயிரும் ஓடக்
கரைத்திலன் கண்ணின் நீரை; கண்டிலன் யாதும் கண்ணால்;
அரைத்திலன் உலகம் எல்லாம் அம் கையால்; பொங்கிப் பொங்கி
இரைத்திலன்; 'உளன்' என்று எண்ண இருந்தனன், விம்மி ஏங்கி. 215

விம்மினன், வெதும்பி வெய்துற்று ஏங்கினன், இருந்த வீரன்,
'இம் முறை இருந்து செய்வது யாவதும் இல்' என்று எண்ணி,
பொம்மென விம்மலோடும் பொருக்கென விசையின் போனான்,
தெவ் முறை துறந்து, வென்ற செங்கள மருங்கில் சேர்ந்தான்.

இராமன் போர்க்களம் காணல்

இழிந்து எழும் காளமேகம், எறி கடல், அனைய மற்றும்
ஒழிந்தன, நீல வண்ணம் உள்ளன எல்லாம் ஒக்கப்
பிழிந்து அது காலம் ஆகக் காளிமைப் பிழம்பு போதப்
பொழிந்தது போன்றது அன்றே—பொங்கு இருட் கங்குற் போர்வை.

ஆர் இருள் அன்னது ஆக, ஆயிர நாமத்து அண்ணல்,
சீரிய அனலித் தெய்வப் படைக்கலம் தெரிந்து வாங்கி,
பாரிய விடுத்தலோடும், பகை இருள் இரிந்து பாற,
சூரியன் உச்சி உற்றாலொத்தது, அவ் உலகின் சூழல். 218

படை உறு பிணத்தின் பம்மல் பருப்பதம் துவன்றி, பல்வேறு
இடை உறு குருதி வெள்ளத்து, எறி கடல் எழு நீர் பொங்கி,
உடை உறு தலைக் கை அண்ணல் உயிர் எலாம் ஒருங்க உண்ணும்
கடை உறு காலத்து, ஆழி உலகு அன்ன, களத்தைக் கண்டான்.

217. காளிமைப் பிழம்பு - கருமையின் வடிவம்; 218. பாரிய - அழித்தொழிய.

தம்பியைக் கண்டு, இராமன் அடைந்த துயரம்

பிணப் பெருங் குன்றினூடும், குருதி நீர்ப் பெருக்கினூடும்,
நிணப் பெருஞ் சேற்றினூடும், படைக்கல நெருக்கினூடும்,
மணப் பெருங் களத்தில், மோடி மங்கல வாழ்க்கை வைப்பில்,
கணத்தினும் பாதிப் போதில், தம்பியைச் சென்று கண்டான்.

அய் அவன் ஆக்கைதன்மேல் விழுந்து மார்பு அழுந்தப் புல்லி,
'உய்யலன்' என்று, ஆவி உயிர்த்து உயிர்த்து, உருகுகின்றான்;
பெய் இரு தாரைக் கண்ணீர்ப் பெருந் துளி பிறங்க, வானின்
வெய்யவன்தன்னைச் சேர்ந்த நீல் நிற மேகம் ஒத்தான். 221

உழைக்கும்; வெய்து உயிர்க்கும்; ஆவி உருகும்; போய் உணர்வு, சோரும்;
இழைக்குவது அறிதல் தேற்றான், 'இலக்குவா! இலக்குவா!' என்று,
அழைக்கும்; தன் கையை வாயின், மூக்கின் வைத்து, அயர்க்கும்; 'ஐயா!
பிழைத்தியோ!' என்னும்—மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான்.

தாமரைக் கையால் தாளைத் தைவரும்; குறங்கைத் தட்டும்;
தூ மலர்க் கண்ணை நோக்கும்; 'மார்பிடைத் துடிப்பு உண்டு' என்னா,
ஏமுறும்; விசும்பை நோக்கும்; எடுக்கும்; தன் மார்பின் ஏற்றும்;
பூமியில் வளர்த்தும்; 'கள்வன் போய் அகன்றானோ?' என்னும்.

வில்லினை நோக்கும்; பாச வீக்கினை நோக்கும்; வீயா
அல்லினை நோக்கும்; வானத்து அமரரை நோக்கும்; 'பாரைக்
கல்லுவென், வேரோடு' என்னும்; பவள வாய் கறிக்கும்; கற்றோர்
சொல்லினை நோக்கும்; தன் போல் புகழினை நோக்கும்—தோளான்.

வீரரை எல்லாம் நோக்கும்; விதியினைப் பார்க்கும்; வீரப்
பார வெஞ் சிலையை நோக்கும்; பகழியை நோக்கும்; 'பாரில்
யார் இது பட்டார், என்போல் எளி வந்த வண்ணம்?' என்னும்;
'நேரிது, பெரிது' என்று ஓதும்—அளவையின் நிமிர நின்றான்.

இராமன் வீடணனை நோதல்

' "எடுத்த போர், இலங்கை வேந்தன் மைந்தனோடு இளைய கோவுக்கு
அடுத்தது" என்று, என்னை வல்லை அழைத்திலை, அரவின் பாசம்
தொடுத்த கை தலையினோடும் துணித்து, உயிர் குடிக்க; என்னைக்
கெடுத்தனை; வீடணா! நீ' என்றனன்—கேடு இலாதான். 226

220. மணம் - புலால் நாற்றம்; மோடி - துர்க்கை; 222. பிறந்திலாதான் - வினை வயத்தால் பிறவாதவனாகிய இராமன்; 223. கள்வன் - கள்வனாகிய இந்திரசித்தன்; 224. பாச வீக்கு - நாகபாசத்தின் கட்டு.

நிகழ்ந்தவற்றை வீடணன் உரைத்தல்

அவ் உரை அருளக் கேட்டான், அழுகின்ற அரக்கன் தம்பி,
'இவ் வழி, அவன் வந்து ஏற்பது அறிந்திலம்; எதிர்ந்தபோதும்,
''வெவ் வழியவனே தோற்கும்'' என்பது விரும்பி நின்றேன்.
தெய்வ வன் பாசம் செய்த செயல், இந்த மாயச் செய்கை. 227

'அற்று அதிகாயன் ஆக்கை, தலை இலது ஆக்கி, ஆண்ட
வெற்றியன் ஆய வீரன் மீண்டிலன், ''இலங்கை மேல்நாள்
பெற்றவன் எய்தும்'' என்னும் பெற்றியை உன்னி; பிற்போது
உற்றனன், மைந்தன், தானை நாற்பது வெள்ளத்தோடும். 228

'ஈண்டு, நம் சேனை வெள்ளம் இருபதிற்று-இரட்டி மாள,
தூண்டினன், பகழி மாரி; தலைவர்கள் தொலைந்து சோர,
மூண்டு எழு போரில், பாரில் முறை முறை முடித்தான்; பின்னர்,
ஆண்தகையோடும் ஏற்றான், ஆயிரம் மடங்கல்-தேரான். 229

'அனுமன்மேல் நின்ற ஐயன் ஆயிரம் தேரும் மாய,
தனு வலம் காட்டி, பின்னை, நாற்பது வெள்ளத் தானை
பனி எனப் படுவித்து, அண்ணன் பலத்தையும் தொலைத்து, ''பட்டான்
இனி'' என, வயிர வாளி, எண் இல, நிறத்தின் எய்தான். 230

'ஏ உண்ட பகு வாயோடும் குருதி நீர் இழிய நின்றான்,
தூவுண்ட தானை முற்றும் பட, ஒரு தமியன் சோர்வான்;
''போவுண்டது என்னின், ஐய! புணர்க்குவன் மாயம்'' என்று,
பாவுண்ட கீர்த்தியானுக்கு உணர்த்தினென்; பரிதி பட்டான்.

'மாயத்தால் இருண்டது ஆழி உலகு எலாம்; வஞ்சன், வானில்
போய், அத் தானுடைய வஞ்ச வரத்தினால் ஒளித்து, பொய்யின்
ஆயத்தார்ப் பாசம் வீசி அயர்வித்தான், அம்பின் வெம்பும்
காயத்தான்' என்னச் சொல்லி, வணங்கினான், கலுழும் கண்ணான். 232

வீடணன். 'யாரும் இறந்திலர்' என்னல்

பின்னரும் எழுந்து, பேர்த்தும் வணங்கி, 'எம் பெரும! யாரும்
இன் உயிர் துறந்தார் இல்லை; இறுக்கிய பாசம் இற்றால்
புல் நுனைப் பகழிக்கு ஒயும் தரத்தரோ? புலம்பி உள்ளம்
இன்னலுற்று அயரல்; வெல்லாது, அறத்தினைப் பாவம்' என்றான்.* 233

228. பிற்போது - பின்பு; 231. பாவுண்ட - பரவுதல் பொருந்திய.

நாகபாச வரலாறு

'யார், இது கொடுத்த தேவன்? என்னை ஈது? இதனைத் தீர்க்கும்
காரணம் யாது? நின்னால் உணர்ந்தது கழறிக் காண்' என்று,
ஆரியன் வினவ, அண்ணல் வீடணன், 'அமல! சாலச்
சீரிது' என்று, அதனை, உள்ள பரிசு எலாம், தெரியச் சொன்னான்:

'ஆழிஅம் செல்வ! பண்டு இவ் அகலிடம் அளித்த அண்ணல்
வேள்வியில் படைத்தது; ஈசன் வேண்டினன் பெற்று, வெற்றித்
தாழ்வு உறு சிந்தையோற்குத் தவத்தினால் அளித்தது; ஆணை!
ஊழியின் நிமிர்ந்த காலத்து உருமினது; ஊற்றம் ஈதால்; 235

'அன்னதன் ஆற்றல் அன்றே ஆயிரம் கண்ணினானைப்
பின் உற வயிரத் திண் தோள் பிணித்தது;—பெயர்த்து ஒன்று எண்ணி
என், இனி?—அனுமன் தோளை இறுக்கியது; இதனால் ஆண்டும்
பொன்னுலகு ஆளும் செல்வம் துறந்தது, புலவர் எல்லாம். 236

தான் விடின் விடும், இது ஒன்றே; சதுமுகன் முதல்வர் ஆய
வான் விடின், விடாது; மற்று, இம் மண்ணினை எண்ணி என்னே!
ஊன் விட, உயிர் போய் நீங்க, நீங்கும்; வேறு உய்தி இல்லை;
தேன் விடு துளவத் தாராய்! இது இதன் செய்கை' என்றான்.

இராமன் சினமும் சிந்தனையும்

'ஈந்துள தேவர்மேலே எழுகெனோ? உலகம் யாவும்
தீந்து உக நூறி, யானும் தீர்கெனோ? இலங்கை சிந்தப்
பாய்ந்து, அவர் சுற்றம் முற்றும் படுப்பெனோ? இயன்ற பண்போடு
ஏய்ந்தது பகர்தி' என்றான், இமையவர் இடுக்கண் தீர்ப்பான்.

'வரம் கொடுத்து இனைய பாசம் வழங்கினான் தானே நேர் வந்து
இரங்கிடத் தக்கது உண்டேல், இகழ்கிலென்; இல்லைஎன்னின்,
உரம் கெடுத்து, உலகம் மூன்றும், ஒருவன் ஓர் அம்பின் சுட்ட
புரங்களின் தீய்த்து, காண்பென் பொடி, ஒரு கடிகைப் போழ்தின். 239

'எம்பியே இறக்கும் என்னில், எனக்கு இனி, இலங்கை வேந்தன்
தம்பியே! புகழ்தான் என்னை? பழி என்னை? அறம்தான் என்னை?
நம்பியே என்னைச் சேர்ந்த நண்பரின் நல்ல ஆமே,
உம்பரும் உலகத்து உள்ள உயிர்களும், உதவி பார்த்தால்?' 240

234. உணர்ந்தது - உணரப்பட்டு உள்ளது: 237. தான் விடின் விடும் - நாகபாசம் தானே விட்டால்தான் விடும்.

என்று கொண்டு இயம்பி, 'ஈண்டு இங்கு ஒருவன் ஓர் இடுக்கண் செய்ய,
வென்று, இவண் உலகை மாய்த்தல் விதி அன்றால்' என்று விம்மி,
நின்று நின்று, உன்னி உன்னி, நெடிது உயிர்த்து அலக்கணுற்றான்,—
தன் துணைத் தம்பிதன்மேல், துணைவர்மேல், தாழ்ந்த அன்பான்.

மீட்டும் வந்து, இளைய வீரன் வெற்பு அன்ன விசயத் தோளைப்
பூட்டுறு பாசம்தன்னைப் பல் முறை புரிந்து நோக்கி,
'வீட்டியதுஎன்னின், பின்னை வீவென்' என்று எண்ணும்—வேதத்
தோட்டியின் தொடக்கில் நிற்கும் துணைக் கைம் மால் யானை அன்னான்.

கருடன் வருகை

இத் தன்மை எய்தும் அளவின்கண், நின்ற
இமையோர்கள் அஞ்சி, 'இது போய்
எத் தன்மை எய்தி முடியும்கொல்?' என்று
குலைகின்ற எல்லைஇதன்வாய்,
அத் தன்மை கண்டு, புடை நின்ற அண்ணல்-
கலுழன் தன் அன்பின் மிகையால்,
சித்தம் நடுங்கி இது தீர, மெள்ள,
இருளூடு வந்து தெரிவான்,— 243

அசையாத சிந்தை அரவால் அனுங்க,
அழியாத உள்ளம் அழிவான்,—
இசையா இலங்கை அரசோடும் அண்ணல்
அருள் இன்மை கண்டு நயவான்,—
விசையால் அனுங்க வட மேரு, வையம்
ஒளியால் விளங்க, இமையாத்
திசை யானை கண்கள் முகிழா ஒடுங்க,
நிறை கால் வழங்கு சிறையான்,— 244

காதங்கள் கோடி கடை சென்று காணும்
நயனங்கள் வாரி கலுழ,
கேதங்கள் கூர, அயர்கின்ற வள்ளல்
திரு மேனி கண்டு, கிளர்வான்,—
சீதம் கொள் வேலை அலை சிந்த, ஞாலம்
இருள் சிந்த, வந்த சிறையான்,
வேதங்கள் பாட; உலகங்கள் யாவும்
வினை சிந்த; நாகம் மெலிய; 245

242. வேதத் தோட்டி - வேதமாகிய அங்குசம்; தொடக்கு - கட்டுப்பாடு; துணை - இரண்டு: 245. கேதங்கள் - துன்பங்கள்.

அல்லைச் சுருட்டி, வெயிலைப் பரப்பி,
அகல் ஆசை எங்கும் அழியா
வில்லைச் செலுத்தி, நிலவைத் திரட்டி,
விரிகின்ற சோதி மிளிர;
எல்லைக் குயிற்றி எரிகின்ற மோலி,
இடைநின்ற மேரு எனும் அத்
தொல்லைப் பொருப்பின் மிசையே விளங்கு
சுடரோனின் மும்மை சுடர; 246

நன் பால் விளங்கு மணி கோடியோடு,
நளிர் போது, செம் பொன், முதலாத்
தன்பால் இயைந்த நிழல் கொண்டு அமைந்த
தழுவாது வந்து தழுவ;
மின்பால் இயன்றது ஒரு குன்றம் வானின்
மிளிர்கின்றது என்ன, வெயிலோன்
தென்பால் எழுந்து, வடபால் நிமிர்ந்து,
வருகின்ற செய்கை தெரிய; 247

பல் நாகர் சென்னி மணி கோடி கோடி
பல கொண்டு செய்த வகையால்
மின்னால் இயன்றது எனலாய் விளங்கு
மிளிர் பூண் வயங்க; வெயில் கால்
பொன்னால் இயன்ற நகை ஓடை பொங்க;
வன மாலை மார்பு புரள;
தொல் நாள் பிரிந்த துயர் தீர, அண்ணல்
திரு மேனி கண்டு, தொழுவான்,— 248

முடிமேல் நிமிர்ந்து முகிழ் ஏறு கையன்,
முகில்மேல் நிமிர்ந்த ஒளியான்,
அடிமேல் விழுந்து பணியாமல் நின்ற
நிலை உன்னி உன்னி அழிவான்,
கொடிமேல் இருந்து, இவ் உலகு ஏழொடு ஏழு
தொழ நின்ற கோனும் இலனாய்,
படிமேல் எழுந்து வருவான், விரைந்து,
பல கால் நினைந்து, பணிவான்,— 249

246. வில் - ஒளி; எல்லைக் குயிற்றி - பகலை உண்டாக்கி; 247. நன் பால் - அழகிய (கழுத்தின்) இடத்தில்; நிழல் - ஒளி; 248. பல் நாகர் சென்னி மணி - பலவாய நாகங்களின் தலையில் உள்ள மாணிக்கம்.

கருடன் துதி

'வந்தாய் மறைந்து; பிரிவால் வருந்தும்,
மலர்மேல் அயன்தன் முதலோர்-
தம் தாதை தாதை இறைவா! பிறந்து
விளையாடுகின்ற தனியோய்!
சிந்தாகுலங்கள் களைவாய்! தளர்ந்து
துயர் கூரல் என்ன செயலோ?
எந்தாய்! வருந்தல்; உடையாய்! வருந்தல்'
என, இன்ன பன்னி மொழிவான்: 250

'தேவாதிதேவர் பலராலும் முந்து
திருநாமம் ஓது செயலோய்,
மூவாது எந் நாளும் உலகு ஏழொடு ஏழும்
அரசாளும் மேன்மை முதல்வா!
மேவாத இன்பம் அவை மேவி, மேவ
நெடு வீடு காட்டு அம் முடியாய்!
ஆவாய்! வருந்தி அழிவாய்கொல்!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 251

'எழுவாய், எவர்க்கும் முதல் ஆகி, ஈறுடு
இடை ஆகி; எங்கும் உளையாய்,
வழுவாது எவர்க்கும் வரம் ஈய வல்லை;
அவரால் வரங்கள் பெறுவாய்;
தொழுவாய், உணர்ச்சி தொடராத தன்மை
உருவாய் மறைந்து; துயரால்
அழுவாய் ஒருத்தன் உளைபோலும்!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 252

'உன் ஒக்க வைத்த இருவர்க்கும் ஒத்தி;
ஒருவர்க்கும் உண்மை உரையாய்;
முன் ஒக்க நிற்றி; உலகு ஒக்க ஒத்தி;
முடிவு ஒக்கின், என்றும் முடியாய்;
''என் ஒக்கும், இன்ன செயலோ இது?'' என்னில்,
இருள் ஒக்கும் என்று விடியாய்;
அந் நொப்பமேகொல்? பிறிதேகொல்?—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 253

251. நெடு வீடு - பெரிய முத்தியுலகம்; அதிரேகம் - மிகுதி; 252. உணர்ச்சி - முற்றுணர்வு; உருவாய் - மனித வடிவாகி; 253. நொப்பம் - நொய்ப்பம், (புத்தியின்) சிறுமை.

'வாணாள் அளித்தி, முடியாமல்; நீதி
வழுவாமல் நிற்றி;—மறையோய்!
பேணாய், உனக்கு ஓர் பொருள் வேண்டும் என்று;
பெறுவான் அருத்தி பிழையாய்;
ஊண் ஆய், உயிர்க்கும் உயிர் ஆகி நிற்றி;
உணர்வு ஆய பெண்ணின் உரு ஆய்,
ஆண் ஆகி, மற்றும் அலி ஆதி!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 254

' ''தான் அந்தம் இல்லை; பல'' என்னும், ஒன்று;
''தனி'' என்னும், ஒன்று; ''தவிரா
ஞானம் தொடர்ந்த சுடர்'' என்னும், ஒன்று;
''நயனம் தொடர்ந்த ஒளியால்,
வானம் தொடர்ந்த பதம்'' என்னும், ஒன்று; மறை
நாலும் அந்தம் அறியாது,
''ஆனந்தம்'' என்னும்; ''அயல்'' என்னும்!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 255

'மீளாத வேதம், முடிவின்கண், நின்னை
மெய்யாக மெய்யின் நினையும்;
''கேளாத'' என்று, ''பிற'' என்று, சொன்ன
கெடுவார்கள் சொன்ன கடவான்,
மாளாத நீதி இகழாமை நின்கண்
அபிமானம் இல்லை, வறியோர்;
ஆளாயும் வாழ்தி; அரசாள்தி!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 256

'சொல் ஒன்று உரைத்தி; பொருள் ஆதி; தூய
மறையும் துறந்து, திரிவாய்;
வில் ஒன்று எடுத்தி; சரம் ஒன்று எடுத்தி;
மிளிர் சங்கம் அங்கை உடையாய்;
''கொல்'' என்று உரைத்தி; கொலையுண்டு நிற்றி;
கொடியாய்! உன் மாயை அறியேன்;
அல் என்று, நிற்றி; பகல் ஆதி!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 257

256. மெய்யாக - மெய்ப்பொருளாக; மெய்யின் - மெய்யுணர்விஞல்.

'மறந்தாயும் ஒத்தி; மறவாயும் ஒத்தி;
மயல், ஆரும் யானும் அறியேம்;
துறந்தாயும் ஒத்தி; துறவாயும் ஒத்தி;
ஒரு தன்மை சொல்ல அரியாய்;
பிறந்தாயும் ஒத்தி, பிறவாயும் ஒத்தி,
பிறவாமல் நல்கு பெரியோய்!
அறம்தான் நிறுத்தல் அரிது ஆக!—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 258

'வினை வர்க்கம் முற்றும் உடனே படைத்தி;
அவை எய்தி, என்றும் விளையா,
நினைவர்க்கு, நெஞ்சின் உறு காமம் முற்றி,
அறியாமை நிற்றி, மனமா;
முனைவர்க்கும் ஒத்தி, அமரர்க்கும் ஒத்தி,
முழு மூடர் என்னும் முதலோர்
அனைவர்க்கும் ஒத்தி, அறியாமை—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 259

'எறிந்தாரும், ஏறுபடுவாரும், இன்ன
பொருள் கண்டு இரங்குபவரும்,
செறிந்தாரின் உண்மை எனல் ஆய தன்மை
தெரிகின்றது, உன்னது இடையே;
பிறிந்தார் பிறிந்த பொருளோடு போதி;
பிறியாது நிற்றி; பெரியோய்!
அறிந்தார் அறிந்த பொருள் ஆதி—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்? 260

'பேர் ஆயிரங்கள் உடையாய்; பிறந்த
பொருள்தோறும் நிற்றி; பிரியாய்;
தீராய்; பிரிந்து திரிவாய்; திறம்தொறு
அவை தேறும் என்று தெளியாய்;
கூர் ஆழி அம் கை உடையாய்; திரண்டு ஓர்
உரு ஆதி; கோடல் உரிபோல்,
ஆராயின், ஏதும் இலையாதி—ஆர், இவ்
அதிரேக மாயை அறிவார்?' 261

258. மயல் - மாயை; 261. கோடல் உரிபோல் - வெண் காந்தள் கிழங்கினை உரிப்பது போல.

நாகபாசம் நீங்குதல்

என்று, இன்ன பன்னி அழிவான், எறிந்த
எரி சோதி கீற, இருள் போய்,
பொன் துன்னி அன்ன வெயில் வீசுகின்ற
பொருள் கண்டு, நின்ற புகழோன்
நின்று உன்னி உன்னி, 'இவன் யாவன்?'
என்று நினைகின்ற எல்லை, நிமிரச்
சென்று, உன்னும்முன்னர், உடன் ஆயினான். இவ்
உலகு ஏழும் மூடு சிறையான். 262

வாசம் கலந்த மரை நாள நூலின்
வகை என்பது என்னை?—மழை என்று
ஆசங்கை கொண்ட கொடை மீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்,
தேசம் கலந்த மறைவாணர், செஞ் சொல்
அறிவாளர், என்று இம் முதலோர்
பாசம் கலந்த பசிபோல், அகன்ற—
பதகன் துரந்த உரகம். 263

பல்லாயிரத்தின் முடியாத பக்கம்
அவை வீச, வந்து படர் கால்
செல்லா நிலத்தின் இருள்ஆதல் செல்ல,
உடல் நின்ற வாளி சிதறுற்று,
எல்லா விதத்தும் உணர்வோடு நண்ணி
அறனே இழைக்கும் உரவோன்
வல்லான் ஒருத்தன் இடையே படுத்த
வடு ஆன, மேனி வடுவும். 264

வானரர் முதலியோர் உயிர் பெற்று எழுதல்

தருமத்தின் ஒன்றும் ஒழுகாத செய்கை
தழுவிப் புணர்ந்த தகையால்,
உரும் ஒத்த வெங் கண், வினை தீய, வஞ்சர்
உடல் உய்ந்தது இல்லை; உலகின்
கருமத்தின் நின்ற கவி சேனை வெள்ளம்,
மலர்மேல் அவ் வள்ளல் கடை நாள்
நிருமித்த என்ன, உயிரோடு எழுந்து
நிலை நின்ற, தெய்வ நெறியால். 265

263. மரை நாள நூல் - தாமரைத் தண்டின் உள்ளேயுள்ள மெல்லிய நூல்; ஆசங்கை - ஐயம்; மீளி அண்ணல் - வலிமை மிக்க பெரியோன்; சரராமன் - சடையப்பர்க்கு உரிய வேறு பெயர்; வெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர்; பாசம் கலந்த பசி - சுற்றத்தார்கள் அடைந்துள்ள பசி; 264. வடு ஆன - பழி நெடிது நில்லாது அழிவது போல அழிந்தனவாயின; 265. கடை நாள் நிருமித்த - ஊழி முடிவான பிற்காலத்தில் படைத்த.

இராமன் தம்பியைத் தழுவிக் கருடனுக்கு முகமன் கூறல்

இளையான் எழுந்து தொழுவானை, அன்பின்,
இணை ஆர மார்பின் அணையா,
'விளையாத துன்பம் விளைவித்த தெய்வம்
வெளி வந்தது' என்ன வியவா,
கிளையார்கள் அன்ன துணையோரை, ஆவி
கெழுவா, எழுந்து தழுவா,
முளையாத திங்கள் உகிரான் முன் வந்து,
முறை நின்ற வீரன் மொழிவான்: 266

'ஐய! நீ யாரை? எங்கள் அருந் தவப் பயத்தின் வந்து, இங்கு
எய்தினை; உயிரும் வாழ்வும் ஈந்தனை; எம்மனோரால்
கையுறை கோடற்கு ஒத்த காட்சியை அல்லை; மீட்சி
செய் திறம் இலையால்' என்றான்—தேவர்க்கும் தெரிக்க ஒணாதான்.

'பொருளினை உணர வேறு புறத்தும் ஒன்று உண்டோ, புந்தித்
தெருளினை உடையர் ஆயின்? செயல் அருங் கருணைச் செல்வ!
மருளினில் வரவே, வந்த வாழ்க்கை ஈது ஆகின், வாயால்
அருளினை என்னின், எய்த அரியன உளவோ?—ஐய! 268

'கண்டிலை, முன்பு; சொல்லக் கேட்டிலை; கடன் ஒன்று எம்பால்
கொண்டிலை; கொடுப்பது அல்லால், குறை இலை; இது நின் கொள்கை;
''உண்டு, இலை'' என்ன நின்ற உயிர் தந்த உதவியோனே!
பண்டு இலை நண்பு; நாங்கள் செய்வது என்? பகர்தி!' என்றான்.

கருடன் இராமனிடம் விடை பெறல்

பறவையின் குலங்கள் காக்கும் பாவகன், 'பழைய நின்னோடு
உறவு உள தன்மைஎல்லாம் உணர்த்துவென்; அரக்கனோடு அம்
மற வினை முடித்த பின்னர், வருவென்' என்று உணர்த்தி, 'மாயப்
பிறவியின் பகைஞ! நல்கு, விடை' எனப் பெயர்ந்து போனான்.

இராமன் கருடனைப் புகழ்தலும் அனுமன் ஆரவாரம் செய்தலும்

ஆரியன் அவனை நோக்கி, 'ஆர் உயிர் உதவி, யாதும்
காரியம் இல்லான் போனான்; கருணையோர் கடமை ஈதால்;
பேர் இயலாளர், ''செய்கை ஊதியம் பிடித்தும்'' என்னார்;
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ, வையம்?' என்றான்.

266. வெளிவந்தது - கருடன் வடிவில் வெளிவந்தது; திங்கள் உகிரான் - சந்திரனைப் போன்ற நகங்களையுடைய கருடன்; 267. மீட்சி - கைம்மாறு; 270. பாவகன் - தூயவன், கலுழன்; 271. ஊதியம் - பயன்.

' "இறந்தனன், இளவல்" என்னா, இறைவியும் இடுக்கண் எய்தும்;
மறந்தனர் உறங்குகின்ற வஞ்சரும் மறுகி, "மீளப்
பிறந்தனர்" என்று கொண்டு, ஓர் பெரும் பயம் பிடிப்பர் அன்றே;
அறம் தரு சிந்தை ஐய! ஆர்த்தும்' என்று அனுமன் சொன்னான்.

'அழகிது' என்று அண்ணல் கூற, ஆர்த்தனர்—கடல்கள் அஞ்சிக்
குழைவுற, அனந்தன் உச்சிக் குன்றின்நின்று அண்டகோளம்
எழ மிசை, உலகம் மேல் மேல் ஏங்கிட, இரிந்து சிந்தி
மழை விழ, மலைகள் கீற, மாதிரம் பிளக்க மாதோ. 273

இராவணன் ஆரவாரத்தைக் கேட்டல்

பழிப்பு அறு மேனியாள்பால் சிந்தனை படர, கண்கள்
விழிப்பு இலன், மேனி சால வெதும்பினன், ஈசன் வேலும்
குழிப்ப அரிது ஆய மார்பை மன்மதன் கொற்ற வாளி
கிழிப்புற, உயிர்ப்பு வீங்கிக் கிடந்த வாள் அரக்கன் கேட்டான்.

தாதை சொல் தலைமேல் கொண்ட தாபதன், தரும மூர்த்தி
ஈதைகள் தீர்க்கும் நாமத்து இராமனை எண்ணி ஏங்கும்
சீதையும், அவளை உன்னிச் சிந்தனை தீர்ந்தும் தீராப்
பேதையும், அன்றி, அவ் ஊர் யார் உளர், துயில் பெறாதார்?

சிங்கஏறு, அசனிஏறு கேட்டலும், 'சீற்றச் சேனை
பொங்கியது' என்ன, மன்னன் பொருக்கென எழுந்து, '"போரில்
மங்கினர் பகைஞர்" என்ற வார்த்தையே வலியது!' என்னா,
அங்கையோடு அங்கை கொட்டி, அலங்கல் தோள் குலுங்க நக்கான். 276

'இடிக்கின்ற அசனி என்ன இரைக்கின்றது, இராமன் போர் வில்;
வெடிக்கின்றது அண்டம் என்ன, படுவது தம்பி வில் நாண்;
அடிக்கின்றது என்னை வந்து, செவிதொறும் அனுமன் ஆர்ப்பு;
பிடிக்கின்றது உலகம் எங்கும், பரிதி சேய் ஆர்ப்பின் பெற்றி.*

'அங்கதன் அவனும் ஆர்த்தான்; அந்தரம் ஆர்க்கின்றானும்,
வெங் கத நீலன்; மற்றை வீரரும், வேறு வேறு,
பொங்கினர் ஆர்த்த ஓசை அண்டத்தும் புறத்தும் போன;
சங்கை ஒன்று இன்றித் தீர்ந்தார் பாசத்தை, தருமம் நல்க.*

இராவணன், இந்திரசித்தன் மாளிகைக்கு ஏகுதல்

என்பது சொல்லி, பள்ளிச் சேக்கைநின்று இழிந்து, வேந்தன்,
ஒன்பது கோடி வாட் கை அரக்கர் வந்து உழையின் சுற்ற,
பொன் பொதி விளக்கம் கோடிப் பூங் குழை மகளிர் ஏந்த,
தன் பெருங் கோயில்நின்றும் மகன் தனிக் கோயில் சார்ந்தான்.*

275. தாபதன் - தவ வேடத்தன்; ஈதைகள் - துன்பங்கள்; 276. மன்னன் சிங்க ஏறு எனக் கூட்டுக; வலியது - இகழ்ச்சிக் குறிப்பு.

தாங்கிய துகிலார், மெள்ளச் சரிந்து வீழ் குழலார், தாங்கி
வீங்கிய உயிர்ப்பார், விண்ணை விழுங்கிய முலையார், மெல்லத்
தூங்கிய விழியார், தள்ளித் துளங்கிய நடையார்,—வல்லி
வாங்கிய மருங்குல் மாதர்,—அனந்தரால் மயங்கி வந்தார்.

பானமும், துயிலும், கண்ட கனவும், பண் கனிந்த பாடல்
கானமும், தள்ளத் தள்ள, களியொடும் கள்ளம் கற்ற,
மீனினும் பெரிய, வாட் கண் விழிப்பது முகிழ்ப்பது ஆக,
வானவர் மகளிர் போனார், மழலை அம் சதங்கை மாழ்க.* 281

மழையினை நீலம் ஊட்டி, வாசமும் புகையும் ஆட்டி,
உழை உழை சுருட்டி, மென் பூக் குவித்து, இடைக்கு இடையூறு என்னு,
பிழையுடை விதியார் செய்த பெருங் குழல், கருங் கண், செவ் வாய்,
இழை அணி, மகளிர் சூழ்ந்தார், அனந்தரால், இடங்கள்தோறும். 282

தேனிடை, கரும்பில், பாலில், அமுதினில், கிளவி தேடி,
மானிடை, கயலில், வாளில், மலரிடை, நயனம் வாங்கி,
மேல் நடை அனைய மற்றும் நல் வழி நல்க வேண்டி,
வானுடை அண்ணல் செய்த மங்கையர் மருங்கு சென்றார். 283

தொடங்கிய ஆர்ப்பின் ஓசை செவிப்புலம் தொடர்தலோடும்,
இடங்கரின் வயப் போத்து அன்ன எறுழ் வலி அரக்கர் யாரும்,
மடங்கலின் முழக்கம் கேட்ட வான் கரி ஒத்தார்; மாதர்
அடங்கலும், அசனி கேட்ட அளை உறை அரவம் ஒத்தார். 284

இந்திரசித்தன் நிலையை இராவணன் காணல்

அரக்கனும், மைந்தன் வைகும் ஆடகத்து அமைந்த மாடம்
பொருக்கெனச் சென்று புக்கான், புண்ணினில் குமிழி பொங்கத்
தரிக்கிலன், மடங்கல்ஏற்றால் தொலைப்புண்டு சாய்ந்து போன,
கருக் கிளர் மேகம் அன்ன, களிறு அனையானைக் கண்டான். 285

எழுந்து அடி வணங்கல் ஆற்றான், இரு கையும் அரிதின் ஏற்றித்
தொழும் தொழிலானை நோக்கித் துணுக்குற்ற மனத்தன், 'தோன்றல்!
அழுங்கினை; வந்தது என்னை அடுத்தது?' என்று எடுத்துக் கேட்டான்;
புழுங்கிய புண்ணினானும், இனையன புகலலுற்றான்: 286

280. அனந்தர் - தூக்க மயக்கம்; 281. பானம் - (அருந்திய) மது பானம்; 282. பிழையுடை விதியார் - பிழையையுடைய பிரமதேவர், 283. வானுடை அண்ணல் - சத்திய லோகத்தைத் தனக்கு உரிமையாக உடைய பிரமன்; 284. இடங்கரின் வயப் போத்து - ஆண் முதலை.

இந்திரசித்தனின் மறுமொழி

'உருவின உரத்தை முற்றும் உலப்பு இல உதிரம் வற்றப்
பருகின அளப்பிலாத பகழிகள்; கவசம் பற்று அற்று
அருகின; பின்னை, சால அலசினென்; ஐய! கண்கள்
செருகின அன்றே, யானும் மாயையின் தீர்ந்திலேனேல்? 287

இந்திரன், விடையின் பாகன், எறுழ் வலிக் கலுழன் ஏறும்
சுந்தரன், அருக்கன் என்று இத் தொடக்கத்தார் தொடர்ந்த போரில்,
நொந்திலென்; இனையது ஒன்றும் நுவன்றிலென்; மனிதன் நோன்மை,
மந்தரம் அனைய தோளாய்! வரம்பு உடைத்து அன்று மன்னோ.

'இளையவன் தன்மை ஈதால்; இராமனது ஆற்றல் எண்ணின்,
தளை அவிழ் அலங்கல் மார்ப! நம்வயின் தங்கிற்று அன்றால்;
விளைவு கண்டு உணர்தல் அல்லால், வென்றி மேல் விளையும் என்ன
உளை; அது அன்று' என்னச் சொன்னான், உற்றுளது உணர்ந்திலாதான்.

'வென்றது, பாசத்தாலும், மாயையின் விளைவினாலும்;
கொன்றது, குரக்கு வீரர் தம்மொடு அக் கொற்றத்தோனை;
நின்றனன், இராமன் இன்னும்; நிகழ்ந்தவா நிகழ்க, மேன்மேல்'
என்றனன்; என்னக் கேட்ட இராவணன் இதனைச் சொன்னான்:

இராவணன் உரையும் இந்திரசித்தன் பேச்சும்

'வார் கழல் கால! மற்று அவ் இலக்குவன் வயிர வில்லின்
பேர் ஒலி அரவம் விண்ணைப் பிளந்திட, குரங்கு பேர்ந்த,
கார் ஒலி மடங்க, வேலை கம்பிக்க, களத்தின் ஆர்த்த
போர் ஒலி ஒன்றும், ஐய! அறிந்திலை போலும்!' என்றான். 291

'ஐய! வெம் பாசம் தன்னால் ஆர்ப்புண்டார்; அசனி என்னப்
பெய்யும் வெஞ் சரத்தால் மேனி பிளப்புண்டார்; உணர்வு பேர்ந்தார்;
''உய்யுநர்'' என்று உரைத்தது உண்மையோ? ஒழிக்க ஒன்றோ?
"செய்யும்" என்று எண்ண, தெய்வம் சிறிது அன்றோ தெரியின்
[அம்மா.'

தூதுவர் களத்தில் நிகழ்ந்தவை கூறல்

ஈது உரை நிகழும் வேலை, எய்தியது அறியப் போன
தூதுவர், விரைவின் வந்தார், புகுந்து, அடி தொழுதலோடும்,
'யாது அவண் நிகழ்ந்தது?' என்ன இராவணன் இயம்ப, ஈறு இன்று
ஓதிய கல்வியாளர் புகுந்துளது உரைக்கலுற்றார்: 293

293. கல்வியாளர் - கல்வியறிவுடைய தூதர்கள்.

'பாசத்தால் பிணிப்புண்டாரை, பகழியால் களப்பட்டாரை,
தேசத்தார் அரசன் மைந்தன் இடை இருள் சேர்ந்து நின்றே,
ஏசத் தான் இரங்கி, ஏங்கி, "உலகு எலாம் எரிப்பென்" என்றான்;—
வாசத் தார் மாலை மார்ப!—வான் உறை கலுழன் வந்தான்;

'அன்னவன் வரவு காணா, அயில் எயிற்று அரவம் எல்லாம்
சின்னபின்னங்கள் ஆன; புண்ணொடும் மயர்வு தீர்ந்தார்;
முன்னையின் வலியர் ஆகி, மொய்க் களம் நெருங்கி, மொய்த்தார்;
இன்னது நிகழ்ந்தது' என்றார். அரக்கன் ஈது எடுத்துச் சொன்னான்:

இராவணன், கருடனைக் குறித்து எள்ளி நகையாடுதல்

''ஏத்த அருந் தடந் தோள் ஆற்றல் என் மகன் எய்த பாசம்
காற்றிடைக் கழித்துத் தீர்த்தான், கலுழனும்; காண்மின், காண்மின்!
வார்த்தை ஈதுஆயின், நன்றால், இராவணன் வாழ்ந்த வாழ்க்கை!
மூத்தது, கொள்கை போலாம்? என்னுடை முயற்சி எல்லாம்?

'உண்டு உலகு ஏழும் ஏழும் உமிழ்ந்தவன் என்னும் ஊற்றம்
கொண்டவன், என்னோடு ஏற்ற செருவினில், மறுக்கம் கொண்டான்;
மண்டலம் திரிந்த போதும், மறி கடல் மறைந்த போதும்,
கண்டிலன்போலும், சொற்ற கலுழன், அன்று, என்னைக் கண்ணால்?

'கரங்களில் நேமி சங்கம் தாங்கிய கரியோன் காக்கும்
புரங்களும் அழியப் போன பொழுதில், என் சிலையின் பொங்கி,
உரங்களில், முதுகில், தோளில், உறையுறு சிறையில், உற்ற
சரங்களும் நிற்கவேகொல், வந்தது, அவ் அருணன் தம்பி? 298

இந்திரசித்து, 'நாளைப் போர் புரிவேன்' எனல்

'ஈண்டு அது கிடக்க; மேன்மேல் இயைந்தவாறு இயைக! எஞ்சி
மீண்டவர் தம்மைக் கொல்லும் வேட்கையே வேட்கும் அன்றே;
ஆண்தகை! நீயே இன்னும் ஆற்றுதி, அருமைப் போர்கள்;
காண்டலும், நாணும்' என்றான்; மைந்தனும் கருத்தைச் சொன்னான்:

'இன்று ஒருபொழுது தாழ்த்து, என் இகல் பெருஞ் சிரமம் நீங்கி,
சென்று, ஒரு கணத்தில், நாளை, நான்முகன் படைத்த தெய்வ
வென்றி வெம் படையினால், உன் மனத் துயர் வீட்டுவென்' என்றான்;
'நன்று' என, அரக்கன் போய், தன் நளிமலர்க் கோயில் புக்கான். 300

294. மைந்தன் - இராமன்; 295. மொய்க் களம் - போர்க்களம்; 296. கொள்கை மூத்தது - முயற்சி எல்லாம் கருத்துவகையால் முதுமை அடைந்துவிட்டது; 297. மறுக்கம் - கலக்கம்; மண்டலம் திரிதல் - (தோற்றுச்) சுற்றித் திரிதல்; 298. சிறை - சிறகு; அருணன் தம்பி - அருணன் தம்பியாகிய கருடன்.

19 படைத் தலைவர் வதைப் படலம்

படைத் தலைவர் போரிட இசைவு

ஆர்த்து எழும் ஓசை கேட்ட அரக்கரும், முரசம் ஆர்ப்ப,
போர்த் தொழில் வேட்கை பூண்டு, பொங்கினர், புகுந்து மொய்த்தார்;
தார்த் தட மார்பன்தன்னை, 'தா, விடை' என்னச் சார்ந்தார்;
பார்த்தனன், முனிந்து மன்னன், இனையன பகர்வது ஆனான்: 1

மாபெரும்பக்கனோடு வான் புகைக்கண்ணன் வந்தான்;
'ஏவுதி எம்மை' என்பார்; தம் முகம் இனிதின் நோக்கி,
'போவது புரிதிர்' என்னப் புகறலும், பொருத தூதர்,
'தேவ! மற்று இவர்கள் செய்கை கேள்!' எனத் தெரியச் சொன்னார்: 2

'ஆனையும் பரியும் தேரும் அரக்கரும் அமைந்த ஆழித்
தானைகள் வீய, நின்ற தலைமகன் தனிமை ஓரார்,
''மானவன் வாளி, வாளி!'' என்கின்ற மழலை வாயார்,
போனவர் மீள வந்து புகுந்தனர் போலும்!' என்றார். 3

அற்று அவர் கூறலும், ஆர் அழலிற்றாய்
முற்றிய கோபம் முருங்க முனிந்தான்,—
'இற்றிதுவோ இவர் சேவகம்?' என்னா,
'பற்றுமின்!' என்றனன்—வெம்மை பயின்றான். 4

என்றலும், எய்தினர், கிங்கரர் என்பார்,
பின்றலினோரை வலிந்து பிடித்தார்,
நின்றனர்; ஆயிடை, நீல நிறத்தான்,
'கொன்றிடுவீர்அலிர்; கொண்மின், இது' என்றான். 5

'ஏற்றம் இனிச் செயல் வேறு இலை; ஈர்வீர்,
நாற்றம் நுகர்ந்து உயர் நாசியை; நாமக்
கோல் தரு திண் பணை கொட்டினிர், கொண்டு, ஊர்
சாற்றுமின், ''அஞ்சினர்'' என்று உரைதந்தே.' 6

அக் கணனே, அயில் வாளினர் நேரா,
மிக்கு உயர் நாசியை ஈர விரைந்தார்,
புக்கனர்; அப் பொழுதில், 'புகழ் தக்கோய்!
தக்கிலது' என்றனன், மாலி, தடுத்தான். 7

19 : 3. மானவன் - மனிதன், ஈண்டு இலக்குவன்; 5. பின்றலினோர் - (போர்க்களத்தினின்றும்) ஓடி வந்தவர்கள்; நீல நிறத்தான் - கரு நிறமுடைய இராவணன்; 4. ஏற்றம் - உயர்வு, ஈண்டு மிகுதி; 6. நாமக் கோல் - சிறந்த கோல்.

'அம் சமம் அஞ்சி அழிந்துளர் ஆனார்,
வெஞ் சமம் வேறலும், வென்றியது இன்றாய்த்
துஞ்சலும் என்று இவை தொல்லைய அன்றே?
தஞ்சு என ஆர் உளர், ஆண்மை தகைந்தார்? 8

'அந்தரம் ஒன்றும் அறிந்திலை அன்றே;
வந்தன நம்வயின் எத்தனை, மன்னா!
தந்திரம், வானவர் தானவர் என்னும்,
இந்திரன் அஞ்சினன்; எண்ணுதி அன்றே! 9

'வருணன் நடுங்கினன், வந்து வணங்கிக்
கருணை பெறும் துணையும், உயிர் கால்வான்;
இருள் நிற வஞ்சகர் எங்கு உளர்? எந்தாய்!
பருணிதர் தண்டம் இது அன்று, பகர்ந்தால். 10

'பத்து-ஒரு நாலு பகுத்த பரப்பின்
அத்தனை வெள்ளம் அரக்கர் அவிந்தார்;
ஒத்து ஒரு மூவர் பிழைத்தனர், உய்ந்தார்;
வித்தக! யார் இனி வீரம் விளைப்பார்? 11

'பாசமும் இற்றது; பாதியின் மேலும்
நாசமும் உற்றது; நம்பி! நடந்தாய்;
பூசல் முகத்து ஒரு கான்முளை போதா,
நீசரை ஈருதியோ, நெடு நாசி? 12

' ''வாழி இலக்குவன்'' என்ன, மறுக்குற்று
ஆழி அரக்கர் தம் வாயில் அடைப்பார்;
ஏழு கடல் துணையோ? இனி, நாசி
ஊழி அறுத்திடினும், உலவாதால். 13

'தூது நடந்தவனைத் தொழுது, அந் நாள்,
ஓது நெடுஞ் செரு அஞ்சி உடைந்தார்,
தீது இலர் நின்றவர், சேனையின் உள்ளார்
பாதியின் மேலுளர், நாசி படைத்தார்! 14

8. ஆண்மை தஞ்சு எனத் தகைந்தார் ஆர் உளர்? எனக் கூட்டுக; தஞ்சு - நிலையாக, தன்னிடத்திலேயே அடைக்கலமாக; 9. அந்தரம் - வேறுபாடு, நடுவுநிலையும் ஆம்; 10. பருணிதர் தண்டம் - அறிவுடையோர் கொடுக்கும் தண்டனை; 11. பத்து ஒரு நாலு - நாற்பது; மூவர் - புகைக்கண்ணன், மாபெரும்பக்கன், இந்திரசித்து என்னும் மூவர்; 12. கான்முளை - புதல்வனோடு.

'விட்டிலை சீதையை ஆம்எனின், வீரர்
ஒட்டிய போரினில் ஆர் உளர், ஓடார்?
''வெட்டுதி நாசியை, வெந் தொழில் வல்லோர்
பட்டிலர்'' என்றிலை' என்று பகர்ந்தான். 15

இராவணன் சினம் தணியக் கண்டு, மாபெரும்பக்கனும் புகைக்கண்ணனும் பேசுதல்

ஆறினன் என்பது அறிந்தனர், அன்னார்
தேறினர், அன்னது சிந்தை உணர்ந்தார்,
சீறிய நெஞ்சினர், செங் கணர், ஒன்றோ
கூறினர்? தம் நிலை செய்கை குறித்தார்: 16

'உன் மகன் ஒல்கி ஒதுங்கினன் அன்றோ?
மின் நகு வானிடை ஏக, விரைந்தான்,
அன்னதின் மாயை இயற்றி அகன்றான்;
இந் நகர் எய்தினன், உய்ந்தனன்—எந்தாய்! 17

'இப் பகல், அன்றுஎனின் நாளையின், அல்லால்,
முப் பகல் தீர்கிலம்; ஆவி முடிப்போம்,
வெப்பு அகலா எரி வெந் தழல் வெந்த
செப்பு அகல் வெண்ணெயின்—நோன்மை தெரிந்தோய்! 18

'விட்டனை எம்மை, விடுத்து, இனி, வெம் போர்
பட்டனர் ஒன்று, படுத்தனர் ஒன்றோ,
கெட்டனர் என்பது கேளலை' என்னா,
ஒட்டினர், ஆவி முடிக்க உவந்தார். 19

இராவணன் பெரும் படையை அவர்களோடு அனுப்புதல்

அன்னவர்தம்மொடும் ஐ-இரு வெள்ளம்
மின்னு படைக் கை அரக்கரை விட்டான்;
சொன்ன தொகைக்கு அமை யானை, சுடர்த் தேர்,
துன்னு வயப் பரியோடு தொகுத்தான். 20

நெய் அழல் வேள்வி நெடும் பகை, நேர் விண்
தைவரு சூரியசத்துரு என்பான்,
பெய் கழல் மாலி, பிசாசன் எனும் பேர்
வெய்யவன், வச்சிரம் வென்ற எயிற்றான், 21

18. முப் பகல் - மூன்றாம் நாள்; தீர்கிலம் - போகவிடோம், தவற மாட்டோம்: 19. ஒட்டினர் - சூள் உரைத்தனர்.

என்றவரோடும் எழுந்து, உலகு ஏழும்
வென்றவன் ஏவலின், முன்னம் விரைந்தார்;
சென்றன, மால் கரி, தேர், பரி; செல்லக்
குன்றுஇனம் என்ன நடந்தனர், கோட்பால். 22

விண்ணை விழுங்கிய தூளியின் விண்ணோர்
கண்ணை விழுங்குதலின், கரை காணார்;
எண்ணை விழுங்கிய சேனையை, யாரும்,
பண்ணை விழுங்க உணர்ந்திலர், பண்பால். 23

கால் கிளர் தேரொடு, கால் வரையோடும்,
மேல் கிளர் பல் கொடி வெண் திரை வீச,—
மால் கடலானது, மாப் படை—வாள்கள்
பால் கிளர் மீனிடை ஆடிய பண்பால். 24

பேரி கலித்தன, பேர் உலகைச் சூழ்
ஏரி கலித்தன ஆம் என; யானை
கார் இகலிக் கடலோடு கலித்த;
மாரி கலித்தென, வாசி கலித்த. 25

சென்றன சென்ற சுவட்டொடு செல்லா
நின்று பிணங்கிய, கல்வியின் நில்லா,
ஒன்றினை ஒன்று தொடர்ந்தன, ஓடைக்
குன்று நடந்தனபோல்—கொலை யானை. 26

மாக நெடுங் கரம் வானின் வழங்கா,
மேக நெடும் புனல் வாரின, மேன்மேல்,
போக விலங்கின, உண்டன போலாம்—
காக நெடுங் களி யானை களிப்பால். 27

எரிந்து எழு பல் படையின் ஒளி, யாணர்
அருங் கல மின் ஒளி, தேர் பரி யானை
பொருந்திய பண் ஒளி, தார் ஒளி, பொங்க,
இரிந்தது பேர் இருள், எண் திசைதோறும். 28

22. கோட்பு - கொள்கை; 24. கால் வரை - கால் படைத்த மலை போன்ற யானை; 25. உலகைச் சூழ் ஏரி - உலகைச் சூழ்ந்த கடல்; வாசி - குதிரை; 26. கல்வி - பாகரின் சொல்; 27. மாக வான் எனக் கூட்டி, இரு பெயரொட்டாக்குக; மாகவான் - உயர்ந்த வானம்; போக விலங்கின - போதலைத் தவிர்ந்தன; காக நெடுங் களி யானை - காகங்கள் சூழப் பெற்ற மதத்தையுடைய யானை; 28. பண் ஒளி - அலங்காரங்களின் ஒளி.

வீடணன், வருபவர்பற்றி இராமனுக்கு உரைத்தல்

எய்திய சேனையை, ஈசன் எதிர்ந்தான்,
'வெய்து இவண் வந்தவன், மாயையின் வெற்றி
செய்தவனேகொல்? தெரித்தி இது' என்றான்;
ஐயம் இல் வீடணன் அன்னது உரைத்தான்: 29

'முழைக் குலச் சீயம் வெம் போர் வேட்டது முனிந்தது என்ன,
புழைப் பிறை எயிற்றுப் பேழ் வாய், இடிக் குலம் பொடிப்ப, ஆர்த்து,
தழைப் பொறி வாளிப் புட்டில் கட்டி, வில் தாங்கி, சார்வான்,
மழைக் குரல் தேரின் மேலான், மாபெரும்பக்கன் மன்னோ. 30

'சிகை நிறக் கனல் பொழி தெறு கண் செக்கரான்,
பகை நிறத்தவர் உயிர் பருகும் பண்பினான்,
நகை நிறப் பெருங் கடைவாயை நக்குவான்,
புகைநிறக்கண்ணவன், பொலம் பொன் தேரினன். 31

'பிச்சரின் திகைத்தன பெற்றிப் பேச்சினன்,
முச் சிரத்து அயிலினன், மூரித் தேரினன்,
''இச் சிரம் உம்மதே?'' என வந்து எய்துவான்,
வச்சிரத்து எயிற்றவன், மலையின் மேனியான். 32

'காலையும் மனத்தையும் பிறகு காண்பது ஓர்
வாலை உளைப் புரவியன், மடித்த வாயினன்,
வேலையின் ஆர்ப்பினன், விண்ணை மீக்கொளும்
சூலம் ஒன்று உடையவன், பிசாசன், தோன்றுவான். 33

'சூரியன்பகைஞன், அச் சுடர் பொன் தேரினன்,
நீரினும் முழக்கினன், நெருப்பின் வெம்மையான்;
ஆரிய! வேள்வியின்பகைஞன் ஆம்அரோ,
சோரியும் கனலியும் சொரியும் கண்ணினன். 34

'சாலி வண் கதிர் நிகர் புரவித் தானையான்,
மூல வெங் கொடுமையின் தவத்தின் முற்றினன்,
சூலியும் வெருக்கொளத் தேரில் தோன்றுவான்,
மாலி' என்று, அடி முறை வணங்கிக் கூறினன். 35

29. ஈசன் - தலைவனாகிய இராமன்; வெய்து - கோபம் கொண்டு; 30. பேழ் வாய் - பிளந்த வாயினால்; பொறி தழை வாளி - நெருப்புப் பொறி மிகுதியாகக் கக்குகின்ற அம்பு; 31. பகை நிறம் - பகைத் தன்மை; நகை - சிரிப்பினால்; 32. பெற்றி - தன்மை; 33. கால் - காற்று; பிறகு காண்பது - பின்னிடச் செய்வது; 34. நீர் - கடல்; சோரி - இரத்தம்; 35. மூல வெங் கொடுமையின் - பழைமையாக உள்ள வெவ்விய கொடுமையோடு; சூலி - சிவன்.

வானரர் – அரக்கர் போர்

ஆர்த்து எதிர் நடந்தது, அவ் அரியின் ஆர்கலி
தீர்த்தனை வாழ்த்தி; உற்று இரண்டு சேனையும்
போர்த் தொழில் புரிந்தன; புலவர் போக்கு இலார்;
வேர்த்து உயிர் பதைத்தனர், நடுங்கி விம்மியே. 36

கல் எறிந்தன, கடை உருமின்; கார் என
வில் எறிந்தன, கணை; விசும்பின் மேகத்துச்
செல் எறிந்தன எனச் சிதறி வீழ்ந்தன,
பல்; எறிந்தன தலை, மலையின் பண்பு என. 37

கடம் படு கரி பட, கலின மாப் பட,
இடம் படு சில்லியின் ஈர்த்த தேர் பட,
உடம்பு அடும் அரக்கரை, அனந்தன் உச்சியில்
படம் படும் என, படும் கவியின் கல் பல. 38

கொலை ஒடுங்கா நெடும் புயத்தின் குன்றொடும்,
நிலை நெடுங் காலொடும், நிமிர்ந்த வாலொடும்,
மலையொடும், மரத்தொடும், கவியின் வல் நெடுந்
தலையொடும், போம்—விசைத்து எறிந்த சக்கரம். 39

ஆண் தகைக் கவிக் குலத் தலைவர் ஆக்கையைக்
கீண்டன; புவியினைக் கிழித்த—மாதிரம்
தாண்டுவ, குலப் பரி, மனத்தின் தாவுவ,
தூண்டினர் கை விசைத்து எறிந்த தோமரம்.* 40

சில்லி அம் தேர்க் கொடி சிதைய, சாரதி
பல்லொடு நெடுந் தலை மடிய, பாதகர்
வில்லொடு கழுத்து இற, பகட்டை வீட்டுமால்—
கல்லெனக் கவிக்குலம் வீசும் கல்அரோ. 41

கரகம் உந்திய மலை முழையில், கட் செவி
உரகம் முந்தின என ஒளிக்கும், ஒள் இலை
அரகம் முந்தின நெடுங் கவியின் ஆக்கையில்—
துரகம் உந்தினர் எடுத்து எறியும் சூலமே. 42

41. பகடு - யானை; கல்லென - கல்லென்ற ஒலி தோன்ற; 42. கரகம் உந்திய - நீர்க்குடத்தைப் போன்று வெளிப்பட்டுத் தோன்றும்; கட் செவி உரகம் - கண்ணை செவியாக உடைய பாம்புகள்; அரகம் - அரங்கம், போர்க் களம்.

வால் பிடித்து அடிக்கும் வானரத்தை, மால் கரி;
கால் பிடித்து அடிக்கும், அக் கரியினைக் கவி;
தோல் பிடித்து அரக்கரை எறியும், சூர் முசு;
வேல் பிடித்து எறிவர், அம் முசுவை வெங் கணார்.* 43

முற்படு கவிக்குலம் முடுக வீசிய
கல் பட, களம் படும், அரக்கர் கார்க் கடல்;
பல் படு தலை படப் படுவ, பாதகர்
வில் படு கணை பட, குரங்கின் வேலையே. 44

கிச்சு உறு கிரி பட, கிளர் பொன் தேர் நிரை
அச்சு இற, செல்கில, ஆடல் வாம் பரி—
எச்சு உறு துயரிடை எய்த, ஈத்து உணா
முச்சு இறு வாழ்க்கையின் மூண்டுளோர் என. 45

மீயவர் யாவரும் வீய, வெங் கரி
சேயிருங் குருதியில் திரிவ, சோர்வு இல,—
நாயகர் ஆளொடும் அவிய, நவ்விதம்
பாயொடும் வேலையில் திரியும் பண்பன. 46

படையொடு மேலவர் மடிய, பல் பரி,
இடை இடைதர விழுந்து இழிந்த பண்ணன,
கடல் நெடுங் குருதிய,—கனலி காலுறு
வடவையை நிகர்த்தன—உதிர வாயன. 47

எயிற்றொடு நெடுந் தலை, இட்ட கல்லொடும்
வயிற்றிடைப் புக, பல பகலும் வைகிய
பயிற்றியர் ஆயினும், தெரிக்கும் பண்பு இலார்,
அயிர்ப்பர், தம் கணவரை அணுகி அந் நலார். 48

தூமக்கண்ணனும் அனுமனும் எதிர் எதிர் தொடர்ந்தார்;
தாமத்து அங்கதன் மாபெரும்பக்கனைத் தடுத்தான்;
சேமத் திண் சிலை மாலியும் நீலனும் செறுத்தார்;
வாமப் போர் வயப் பிசாசனும் பனசனும் மலைந்தார். 49

43. தோல் - யானை, கிடுகுப் படை எனினும் ஆம்; சூர் முசு - அச்சத்தைச் செய்யும் குரங்கு; 44. பல் படு தலை - பற்களைக் காட்டுகின்ற தலை; 45. கிச்சு உறு கிரி - நெருப்பைக் கொண்ட மலைகள்; கிச்சு - நெருப்பு; எச்சு உறு துயர் - இளைத்தலை உண்டாக்கும் வறுமைத் துயர்; எச்சு - எய்த்து; முச்சு இறு வாழ்க்கை - மூச்சு அற்றுப் போகும் உலக வாழ்க்கை; வறுமை உற்றோர்க்கு இல்வாழ்க்கை இனிது நடவாதது போலக் குதிரைகட்கு அச்சிற்ற தேரை ஈர்த்துச் செல்லுகை இயலாததாயிற்று; 46. மீயவர் - மேலே உள்ள வீரர்; நவ்வி - கப்பல்; 48. பயிற்றியர் - பழக்கத்தையுடையவர்.

சூரியன் பெரும்பகைஞனும் சூரியன் மகனும்
நேர் எதிர்ந்தனர்; நெருப்புடை வேள்வியின்பகையும்
ஆரியன் தனித் தம்பியும் எதிர் எதிர் அடர்ந்தார்;
வீர வச்சிரத்துஎயிற்றனும் இடபனும் மிடைந்தார். 50

வெங் கண் வெள் எயிற்று அரக்கரில், கவிக் குல வீரச்
சிங்கம் அன்ன போர்த்தலைவரில், தலைவராய்த் தெரிந்தார்,
அங்கு அமர்க்களத்து ஒருவரோடு ஒருவர் சென்று அடர்ந்தார்;
பொங்கு வெஞ் செருத் தேவரும் நடுக்குறப் பொருதார். 51

இன்ன காலையின், ஈர்-ஐந்து வெள்ளம், வந்து ஏற்ற
மின்னும் வெள் எயிற்று அரக்கர்தம் சேனையில், வீரன்
அன்ன வெஞ் சமத்து ஆறு வெள்ளத்தையும் அவித்தான்;
சொன்ன நாலையும் இலக்குவன் பகழியால் தொலைத்தான். 52

உப்புடைக் கடல் மடுத்தன உதிர நீர் ஓதம்
அப்பொடு ஒத்தன கடுத்தில; ஆர்கலி முழுதும்
செப்பு உருக்கு எனத் தெரிந்தது; மீன் குலம் செருக்கித்
துப்பொடு ஒத்தன, முத்துஇனம் குன்றியின் தோன்ற. 53

தத்து நீர்க் கடல் முழுவதும் குருதியாய்த் தயங்க,
சித்திரக் குலப் பல் நிற மணிகளும் சேந்த;
ஒத்து வேறு உருத் தெரியல, உயர் மதத்து ஓங்கல்
மத்தகத்து உகு தரளமும், வளை சொரி முத்தும்.* 54

அதிரும் வெஞ் செரு அன்னது ஒன்று அமைகின்ற அளவில்,
கதிரவன், செழுஞ் சேயொளிக் கற்றை அம் கரத்தால்,
எதிரும் வல் இருட் கரி இறுத்து, எழு முறை மூழ்கி,
உதிர வெள்ளத்தின் எழுந்தவன் ஆம் என, உதித்தான். 55

அரக்கர் என்ற பேர் இருளினை இராமன் ஆம் இரவி
துரக்க, வெஞ் சுடர்க் கதிரவன் புறத்து இருள் தொலைக்க,
புரக்கும் வெய்யவர் இருவரை உடையன போல,
நிரக்கும் நல் ஒளி பரந்தன, உலகு எலாம் நிமிர. 56

படுகளக் காட்சி

நிலை கொள் பேர் இருள் நீங்கலும், நிலத்திடை நின்ற
மலையும் வேலையும் வரம்பு இல வயின்தொறும் பரந்து,
தொலைவு இல் தன்மைய தோன்றுவ போன்றன—சோரி
அலை கொள் வேலையும், அரும் பிணக் குன்றமும் அணவி. 57

53. துப்பு - பவளம்; 54. வளை - சங்கு; 56. வெய்யவர் - சூரியர்; நிரக்கும் - நிரம்பிய; 57. விடியற்காலத்தில் கடலும் மலையும் வெளிப்பட்டுத் தோன்றுவன போல, இரத்தப் பெருக்கும் யானைகளும் விளங்கிக் காணப் பட்டன.

நிலம் தவாத செந்நீரிடை, நிணக் கொழுஞ் சேற்றில்,
புலர்ந்த காலையில், பொறி வரி அம்பு எனும் தும்பி
கலந்த தாமரைப் பெரு வனம், கதிரவன் கரத்தால்,
மலர்ந்தது ஆம் எனப் பொலிந்தன, உலந்தவர் வதனம். 58

தேரும் யானையும் புரவியும் விரவின,—தேவர்
ஊரும் மானமும் மேகமும் உலகமும் மலையும்
பேரும் மான வெங் காலத்துக் கால் பொர, பிணங்கிப்
பாரின் வீழ்ந்தன போன்றன—கிடந்தன பரந்த. 59

போர்க்களம் போந்த அரக்கியர் நிலை

எல்லி சுற்றிய மதி நிகர் முகத்தியர், எரி வீழ்
அல்லி சுற்றிய கோதையர், களம் புகுந்து அடைந்தார்,
புல்லி முற்றிய உயிரினர் பொருந்தினர் கிடந்தார்,
வல்லி சுற்றிய மா மரம் நிகர்த்தனர் வயவர். 60

வணங்கு நுண் இடை, வன முலை, செக்கர் வார் கூந்தல்,
அணங்கு வெள் எயிற்று, அரக்கியர் களத்து வந்து அடைந்தார்,
குணம் கொளும் துணைக் கணவர்தம் பசுந் தலை கொடாது
பிணங்கு பேய்களின் வாய்களைப் பிளந்தனர், பிடித்தே. 61

சுடரும் வெள் வளைத் தோளி, தன் கொழுநனைத் தொடர்வாள்,
உடரும் அங்கமும் கண்டு, கொண்டு ஒரு வழி உய்ப்பாள்,
குடரும், ஈரலும், கண்ணும், ஓர் குறு நரி கொள்ள,
தொடர ஆற்றலள், நெடிது உயிர்த்து, ஆர் உயிர் துறந்தாள்.

பெரிய வாள் தடங் கண்ணியர், கணவர்தம் பெருந் தோள்
நரிகள் ஈர்த்தன, வணங்கவும் இணங்கவும் நல்கா
இரியல்போவன தொடர்ந்து, அயல் இனப் படை கிடைந்த
அரிய, நொந்திலர், அலத்தகச் சீறடி அயர்ந்தார். 63

நலம் கொள் நெஞ்சினர், தம் துணைக் கணவரை நாடி,
விலங்கல் அன்ன வான் பெரும் பிணக் குப்பையின் மேலார்,
அலங்கல் ஓதியர்,—அருந் துணை பிரிந்து நின்று அயரும்,
பொலம் கொள், மா மயில் வரையின்மேல் திரிவன போன்றார்.

58. நிலம் தவாத - நிலத்தினின்று நீங்காத; பொறி - தீப் பொறி, புள்ளி; தும்பி - வண்டு; 59. மானம் - விமானம்; 60. எல்லி சுற்றிய - இரவில் சுற்றி வருகின்ற; அல்லி - அகவிதழ், சண்டுப் பூமாலை; கோதையர் - கூந்தலையுடையவர்; முற்றிய - முடிந்த; 63. அரிய - அறுத்திடவும்; 64. பொலம் - அழகு.

சிலவர்—தம் பெருங் கணவர்தம் செருத் தொழில் சினத்தால்,
பலரும், வாய் மடித்து, உயிர் துறந்தார்களைப் பார்த்தார்,
'அலைவு இல் வெள் எயிற்றால் இதழ் மறைத்துளது, அயலாள்
கலவியின் குறி காண்டும் என்று ஆம்' எனக் கனன்றார். 65

நவை செய் வன் தலை இழந்த தம் அன்பரை நணுகி,
அவசம் எய்திய மடந்தையர் உருத் தெரிந்து அறியார்,
துவசம் அன்ன தம் கூர் உகிர்ப் பெருங் குறி, தோள்மேல்
கவசம் நீக்கினர், கண்டு கண்டு, ஆர் உயிர் கழிந்தார்.* 66

மாரி ஆக்கிய கண்ணியர், கணவர்தம் வயிரப்
போர் யாக்கைகள் நாடி, அப் பொரு களம் புகுந்தார்,
பேர் யாக்கையின் பிணப் பெருங் குன்றிடைப் பிறந்த
சோரி ஆற்றிடை அழுந்தினர், இன் உயிர் துறந்தார்.* 67

அனுமன் - புகைக்கண்ணன் போர்

வகை நின்று உயர் தாள் நெடு மாருதியும்,
புகையின் பொரு கண்ணவனும் பொருவார்;
மிகை சென்றிலர், பின்றிலர், வென்றிலரால்;
சிகை சென்று நிரம்பிய தீ உமிழ்வார். 68

ஐ-அஞ்சு அழல் வாளி, அழற்கொடியோன்,
மெய் அஞ்சனை கான்முளை மேனியின்மேல்,
வை அம் சிலை ஆறு வழங்கினனால்,
மொய் அஞ்சன மேகம் முனிந்தனையான். 69

பாழிப் புயம் அம்பு உருவப் படலும்,
வீழிக் கனிபோல் புனல் வீச, வெகுண்டு,
ஆழிப் பெருந் தேரை அழித்தனனால்,—
ஊழிப் பெயர் கார் நிகர் ஒண் திறலான். 70

சில்லிப் பொரு தேர் சிதைய, சிலையோடு
எல்லின் பொலி விண்ணின் விசைத்து எழுவான்,
வில் இற்றது, இலக்குவன் வெங் கணையால்;
புல்லித் தரை இட்டனன், நேர் பொருவான். 71

65. அலைவு - அசைவு; கலவியின் குறி - கூடற்காலத்தில் வாயிதழில் செய்த பற்குறிகள்; 66. துவசம் அன்ன குறி என இயைக்க; துவசம் - கொடி; 68. வகை நின்று உயர் தாள் - அழகாக ஓங்கி நின்ற கால்கள்; 69. அழற்கொடியோன் - புகைக்கண்ணன்; அழற்கொடி - புகை; 70. ஒண் திறலான் - பெருந் திறமையுடைய அனுமன்; 71. எல்லின் - சூரியனால்.

மலையின் பெரியான் உடல் மண்ணிடை இட்டு,
உலையக் கடல் தாவிய கால் கொடு உதைத்து,
அலையின், பருகிப் பரு வாய் அனல் கால்
தலை கைக்கொடு எறிந்து, தணிந்தனனால். 72

மாபக்கன் – அங்கதன் போர்

மாபக்கனும் அங்கதனும் மலைவார்,
தீபத்தின் எரிந்து எழு செங் கணினார்,
கோபத்தினர், கொல்ல நினைந்து அடர்வார்,
தூபத்தின் உயிர்ப்பர், தொடர்ந்தனரால். 73

ஐம்பத்தொரு வெங் கணை அங்கதன் மா
மொய்ம்பில் புக உய்த்தனன், மொய் தொழிலான்—
வெம்பி, களியோடு விளித்து எழு திண்
கம்பக் கரி, உண்டை கடாய் எனவே. 74

ஊரோடு மடுத்து ஒளியோனை உறும்
கார் ஒடும்நிறக் கத நாகம் அனான்,
தேரோடும் எடுத்து, உயர் திண் கையினால்,
பாரோடும் அடுத்து எறி பண்பிடையே, 75

வில்லைச் செல வீசி, விழுந்து அழியும்,
எல்லின் பொலி தேரிடை நின்று இழியா,
சொல்லின் பிழையாதது ஓர் சூலம், அவன்
மல்லின் பொலி மார்பின் வழங்கினனால். 76

'சூலம் எனின், அன்று; இது தொல்லை வரும்
காலம்' என உன்னு கருத்தினனாய்;
ஞாலம் உடையான், அது நாம் அற, ஓர்
ஆலம் முக அம்பின் அறுத்தனனால். 77

உளம்தான் நினையாதமுன், உற்று, உதவாக்
கிளர்ந்தானை, இரண்டு கிழித் துணையாய்ப்
பிளந்தான்—உலகு ஏழினொடு ஏழு பெயர்ந்து
அளந்தான், 'வலி நன்று' என,—அங்கதனே. 78

72. அலையின் எறிந்து எனக் கூட்டுக; அலையின் - கடலின்கண்; 74. மொய் தொழிலான் - மாபக்கன் (மகா பாரிசுவன்); உண்டை - மண் உருண்டை; 75. ஊரோடு மடுத்து - ஊர்கோளைப் பொருந்தி; தேரைப் பற்றுமாறு சென்ற அங்கதனுக்குச் சூரியனைப் பற்றுமாறு செல்லும் காரும் பாம்பும் உவமைகள்; 77. நாம் - நாமம், பெயர்; ஆலம் முக அம்பு - நஞ்சு தோய்ந்த முனையினை யுடைய அம்பு.

மாலி – நீலன் போர்

மா மாலியும் நீலனும், வானவர்தம்
கோமானொடு தானவர்கோன் இகலே
ஆமாறு, மலைந்தனர் என்று இமையோர்
பூ மாரி பொழிந்து, புகழ்ந்தனரால். 79

கல் ஒன்று கடாவிய காலை, அவன்
வில் ஒன்று இரு கூறின் விழுந்திடலும்,
அல் ஒன்றிய வாளொடு தேரினன் ஆய்,
'நில்'! என்று இடை சென்று, நெருக்கினனால். 80

அற்று, அத் தொழில் எய்தலும், அக் கணமே,
மற்றப் புறம் நின்றவன், வந்து அணுகா,
கொற்றக் குமுதன், ஒரு குன்று கொளா,
எற்ற, பொரு தேர் பொடி எய்தியதால். 81

தாள் ஆர் மரம் நீலன் எறிந்ததனை
வாளால் மடிவித்து, வலித்து அடர்வான்
தோள் ஆசு அற, வாளி துரந்தனனால்—
மீளா வினை நூறும் விடைக்கு இளையான். 82

மின்போல் மிளிர் வாளொடு தோள் விழவும்
தன் போர் தவிராதவனை, சலியா,
'என் போலியர் போர்எனின், நன்று; இது ஓர்
புன் போர்' என, நின்று அயல் போயினனால். 83

நீர் வீரை அனான் எதிர் நேர் வரலும்,
பேர் வீரனை, வாசி பிடித்தவனை,
'யார், வீரதை இன்ன செய்தார்கள்?' எனா,
போர் வீரர் உவந்து, புகழ்ந்தனரால். 84

வேள்விப்பகைஞன் முதலியோர் அழிதல்

வேள்விப்பகையோடு வெகுண்டு அடரும்
தோள் வித்தகன், அங்கு ஓர் சுடர்க் கணையால்,
'வாழ்வு இத்தனை' என்று, அவன் மார்பு அகலம்
போழ்வித்தனன்; ஆர் உயிர் போயினனால். 85

82. மீளா வினை நூறும் விடை - போக்குதற்கு அரிய வினைகளைப் போக்குபவனாகிய இடபம் போன்ற இராமன்; 83. போர் தவிராதவன் - மாலி; அயல் போயினவன் - இலக்குவன்; 84. நீர் வீரை அனான் - இராமன்; வீரை - கடல்; வீரன் - இலக்குவன்; வாசி - அம்பு, போர்; வேறுபாடு என்பாரும் உண்டு; 85. தோள் வித்தகன் - தோள் வலியையுடைய இலக்குவன்.

மல்லல் தட மார்பன் வடிக் கணையால்
எல்லுற்று உயர் வேள்விஇரும்பகைஞன்
வில் அற்றது, தேரொடு மேல் நிமிரும்
கல் அற்ற, கழுத்தொடு கால்களொடும். 86

தன் தாதையை முன்பு தடுத்து, ஒருநாள்,
வென்றானை, விலங்கலின் மேனியனை,
பின்றாத வலத்து உயர் பெற்றியனை,
கொன்றான்—கவியின்குலம் ஆளுடையான். 87

இடபன்,—தனி வெஞ் சமம் உற்று எதிரும்
விட வெங் கண் எயிற்றவன், விண் அதிரக்
கடவும் கதழ் தேர், கடவு ஆளினொடும்
பட,—அங்கு ஒரு குன்று படர்த்தினனால். 88

திண் தேர் அழிய, சிலை விட்டு, ஒரு தன்
தண்டோடும் இழிந்து, தலத்தினன் ஆய்,
'உண்டோ உயிர்?' என்ன உருத்து, உருமோடு
எண் தோளனும் உட்கிட, எற்றினனால். 89

'அடியுண்டவன் ஆவி குலைந்து அயரா,
இடியுண்ட மலைக் குவடு இற்றதுபோல்
முடியும்' எனும் எல்லையில் முந்தினனால்—
'நெடியன், குறியன்' எனும் நீர்மையினான். 90

கிடைத்தான் இகல் மாருதியை, கிளர் வான்
அடைத்தான் என மீது உயர் ஆக்கையினைப்
படைத்தானை, நெடும் புகழ்ப் பைங்கழலான்
புடைத்தான், அகல் மார்பு பொடிச் சிதற. 91

எற்றிப் பெயர்வானை இடக் கையினால்
பற்றி, கிளர் தண்டு பறித்து எறியா,
வெற்றிக் கிளர் கைக்கொடு, மெய் வலி போய்
முற்ற, தனிக் குத்த, முடிந்தனனால். 92

காத்து, ஓர் மரம் வீசுறு கைக் கதழ் வன்
போத்து ஓர் புலிபோல் பனசன் புரள,
கோத்து ஓட நெடுங் குருதிப் புனல், திண்
மாத் தோமரம் மார்பின் வழங்கினனால். 93

88. கடவு ஆள் - ஓட்டும் பாகன்;　90. 'நெடியன், குறியன்' எனும் நீர்மையினான் - அனுமன்.

கார் மேலினனோ? கடல் மேலினனோ?
பார் மேலினனோ? பகல் மேலினனோ?
யார் மேலினனோ? இன என்று அறியாம்—
போர் மேலினன், வாசி எனும் பொறியான். 94

'நூறுயிர கோடிகொல்? அன்றுகொல்?' என்று
ஆறுயிர வானவரும், அறிவின்
தேறு வகை நின்று, திரிந்துளதால்—
பாறு ஆடு களத்து, ஒரு பாய் பரியே. 95

கண்ணின் கடுகும்; மனனின் கடுகும்;
விண்ணில் படர் காலின் மிகக் கடுகும்;
உள் நிற்கும் எனின், புறன் நிற்கும்; உலாய்,
மண்ணில் திரியாத வயப் பரியே. 96

மாப் புண்டரவாசியின் வட்டணைமேல்
ஆப்புண்டவன் ஒத்தவன், ஆர் அயிலால்
பூப் புண் தர,—ஆவி புறத்து அகல,
கோப்புண்டன, வானர வெங் குழுவே. 97

'நூறும் இரு நூறும், நொடிப்பு அளவின்,
ஏறும்; நுதி வேலின், இறைப்பொழுதில்,
சீறும் கவி சேனை சிதைக்கும்?' எனா,
ஆறும் திறல் உம்பரும் அஞ்சினரால். 98

தோற்றும் உரு ஒன்று எனவே துணியா,
கூற்றின் கொலையால் உழல் கொள்கையனை,
ஏற்றும் சிலை ஆண்மை இலக்குவன், வெங்
காற்றின் படை கொண்டு கடந்தனனால். 99

குலையப் பொரு சூலன் நெடுங் கொலையும்
உலைவுற்றில, உய்த்தலும் ஒய்வு இலன், ஒண்
தலை அற்று உகவும், தரை உற்றிலனால்—
இலையப் பரிமேல் கொள் இருக்கையினான். 100

94. வாசி எனும் பொறியான் - குதிரை எனப்படுகின்ற எந்திரத்தை உடையவன், பிசாசன்; 96. உள் - போர்க்களத்தின் உள்ளே; 97. புண்டர வாசி - கழுகினை ஒத்த குதிரை; வட்டணை - விரைந்த நடை; 98. திறல் ஆறும் உம்பர் - வலிமை ஒய்ந்த தேவர்; 99. துணியா - துணிய முடியாத; கொலையால் - கொலையொடு; 100. இலையப் பரி - தாளத்திற்கேற்ப அடியிட்டு நடக்கும் குதிரை; இலையம் - இலயம், தாளத்தின் கால அளவு.

20 மகரக்கண்ணன் வதைப் படலம்

தூதுவர் நகருக்கு ஏகி, இராவணனுக்கு அறிவித்தல்

'இன்று ஊதியம் உண்டு' என இன்னகைபால்
சென்று ஊதின தும்பிகள்; தென் திசையான்
வன் தூதரும் ஏகினர், வஞ்சனையான்-
தன் தூதரும் ஏகினர், தம் நகர்வாய். 1

ஏகி, தனி மன்னன் இருந்துழி புக்கு,
'ஓகைப் பொருள் இன்று' என, உள் அழியா,
வேகத்து அடல் வீரர் விளிந்த எலாம்
சோகத்தொடு, இறைஞ்சினர், சொல்லினரால். 2

சொன்னார்; அவர் சொல் செவியில் தொடர்வோன்,
இன்னாத மனத்தின் இலங்கையர்கோன்,
வெந் நாக உயிர்ப்பினன், விம்மினனால்;
அன்னான் நிலை கண்டு, அயல் நின்று அறைவான்: 3

மகரக்கண்ணன் போர்க்குச் செல்லல்

'முந்தே, என தாதையை மொய் அமர்வாய்,
அந்தோ! உயிர் உண்டவன் ஆர் உயிர்மேல்
உந்தாய்; எனை யாதும் உணர்ந்திலையோ?
எந்தாய்! ஒரு நீ இடர் கூருதியோ? 4

'யானே செல எண்ணுவென்; எய்த அவன்
தான் நேர்வது தீது எனவே தணிவேன்;
வானே, நிலனே, முதல் மற்றும் எலாம்,
கோனே! எனை வெல்வது ஓர் கொள்கையதோ? 5

'அருந் துயர்க் கடலுளாள் என் அம்மனை, அழுத கண்ணள்,
பெருந் திருக் கழித்தல் ஆற்றாள், "கணவனைக் கொன்று போந்தோன்
கருந் தலைக் கலத்தின் அல்லால், கடனது கழியேன்" என்றாள்;
பருந்தினுக்கு இனிய வேலாய்! இன் அருள் பணித்தி' என்றான்.

அவ் உரை மகரக்கண்ணன் அறைதலும், அரக்கன், 'ஐய!
செவ்விது; சேறி! சென்று, உன் பழம் பகை தீர்த்தி!' என்றான்.
வெவ் வழியவனும், பெற்ற விடையினன், தேர் மேற்கொண்டான்,
வவ்விய வில்லன் போனான், வரம் பெற்று வளர்ந்த தோளான்.

20: 1. தென் திசையான் - இயமன்; 2. ஓகை - மகிழ்ச்சி; 4. என தாதை - என்னுடைய தந்தையாகிய கரன்; 6. அம்மனை - தாய்; பெருந் திரு - பெருமை பெற்ற மங்கல நாண்.

தன்னுடைச் சேனை கோடி ஐந்து உடன் தழுவ, தானை
மன்னுடைச் சேனை வெள்ளம் நால்-ஐந்து மழையின் பொங்கிப்
பின்னுடைத்தாக, பேரி கடல் பட, பெயர்ந்த தூளி
பொன்னுடைச் சிமயத்து உச்சிக்கு உச்சியும் புதைய, போனான்.

'சோணிதக்கண்ணனோடு, சிங்கனும், துரகத் திண் தேர்த்
தாள்முதல் காவல் பூண்டு செல்க' என, 'தக்கது' என்னா,
ஆள் முதல் தானையோடும், அனைவரும் தொடரப் போனான்,
நாள் முதல் திங்கள்தன்னைத் தழுவிய அனைய நண்பான். 9

பல்பெரும் பதாகைப் பத்தி மீமிசைத் தொடுத்த பந்தர்
எல்லவன், சுடர் ஒண் கற்றை முற்ற இன் நிழலை ஈய,
தொல் சின யானை அம் கை விலாழி நீர்த் துவலை தூற்ற,
செல் பெருங் கவியின் சேனை அமர்த் தொழில் சிரமம் தீர்ந்த.

'முழங்கின யானை; வாசி ஒலித்தன; முரசின் பண்ணை,
தழங்கின; வயவர் ஆர்த்தார்' என்பதோர் முறைமை தள்ள,
வழங்கின, பதலை ஓதை, அண்டத்தின் வரம்பின்காறும்;
புழுங்கின உயிர்கள் யாவும், கால் புகப் புரை இன்றாக. 11

அரக்கர்க்கும் வானரர்க்கும் போர் நிகழ்தல்

வெய்தினின் உற்ற தானை முறை விடா நூழில் வெம் போர்
செய்தன; செருக்கிச் சென்று நெருக்கினர், தலைவர் சேர்த்தி;
கையொடு கைகள் உற்றுக் கலந்தன; கல்லும் வில்லும்
எய்தன எறிந்த; யானை ஈர்த்தன, கோத்த சோரி. 12

வானர வீரர் விட்ட மலைகளை அரக்கர் வவ்வி,
மீனொடு மேகம் சிந்த விசைத்தனர் மீட்டும் வீச,
கானகம் இடியுண்டென்னக் கவிக்குலம் மடியும்—கவ்வி,
போனகம் நுகரும் பேய்கள் வாய்ப் புறம் புடைப்போடு ஆர்ப்ப. 13

மைந் நிற அரக்கர் வன் கை வயிர வாள் வலியின் வாங்கி,
மெய்ந் நிறத்து எறிந்து கொல்வர், வானர வீரர்; வீரர்
கைந் நிறைத்து எடுத்த கல்லும் மரனும் தம் கரத்தின் வாங்கி,
மொய்ந் நிறத்து எறிவர்; எற்றி முருக்குவர், அரக்கர் முன்பர்.

9. தாள்முதல் - சக்கரத்தின் இடத்து; நாள் முதல் - விண்மீன்கள் முதலியவை; 10. எல்லவன் - சூரியன்; 11. பதலை - ஒருவகைத் தோற்கருவி; புரை - இடம்; 12. நூழில் - கொன்று குவித்தல்; 13. போனகம் - உணவு.

மகரக்கண்ணன் வஞ்சினம்

வண்டு உலாம் அலங்கல் மார்பன் மகரக்கண், மழை ஏறு என்ன,
திண் திறல் அரக்கன் கொற்றப் பொன் தடஞ் சில்லித் தேரை,
தண்டலை மருத வைப்பின் கங்கை நீர் தழுவும் நாட்டுக்
கொண்டல்மேல் ஓட்டிச் சென்றான்; குரங்கு இனப் படையைக் கொன்
[றான். 15

'இந்திரன் பகைஞனேகொல்?' என்பது ஓர் அச்சம் எய்தித்
தந்திரம் இரிந்து சிந்த, படைப் பெருந் தலைவர், தாக்கி
எந்திரம் எறிந்த என்ன, ஏவுண்டு புரண்டார்; எய்தி;
சுந்தரத் தோளினானை நோக்கி நின்று, இனைய சொன்னான்: 16

' "என்னுடைத் தாதைதன்னை இன் உயிர் உண்டாய்" என்னும்
முன் உடைத்தாய தீய முழுப் பகை மூவர்க்கு அன்றி,
நின்னுடைத்து ஆயது அன்றே; இன்று அது நிமிர்வென்' என்றான்—
பொன்னுடைத் தாதை வண்டு குடைந்து உணும் பொலம் பொன் தா
[ரான்.

தீயவன் பகர்ந்த மாற்றம் சேவகன் தெரியக் கேட்டான்,—
'நீ கரன் புதல்வன்கொல்லோ? நெடும் பகை நிமிர வந்தாய்;
ஆயது கடனே அன்றே, ஆண் பிறந்து அமைந்தார்க்கு? ஐய!
ஏயது சொன்னாய்' என்றான்,—இசையினுக்கு இசைந்த தோளான். 18

மகரக்கண்ணன் – இராமன் போர்

உரும் இடித்தென்ன வில் நாண் ஒலி படுத்து, 'உன்னோடு எந்தை
செரு முடித்து, என்கண் நின்ற சினம் முடித்து அமைவென்' என்னா,
கரு முடித்து அமைந்த மேகம், கால் பிடித்து எழுந்த காலம்,
பெரு முடிக் கிரியில் பெய்யும் தாரைபோல், பகழி பெய்தான்.

சொரிந்தன பகழி எல்லாம் சுடர்க் கடுங் கணைகள் தூவி,
அரிந்தனன் அகற்றி, மற்றை ஆண்தகை அலங்கல் ஆகத்து,
தெரிந்து ஒரு பகழி பாய எய்தனன், இராமன்; ஏவ
நெரிந்து எழு புருவத்தான்தன் நிறத்து உற்று நின்றது அன்றே.

ஏவுண்டு துளக்கம் எய்தா, இரத்தகப் பரிதி ஈன்ற
பூவுண்ட கண்ணன், வாயின் புகை உண்டது உமிழ்வான் போல்வான்
தேவுண்ட கீர்த்தி அண்ணல் திரு உண்ட கவசம் சேர,
தூவுண்ட வயிர வாளி ஆயிரம் தூவி ஆர்த்தான். 21

16. தந்திரம் - சேனை; 17. மூவர் - மும்மூர்த்திகள்; நிமிர்வென் - நீக்கித் தலையெடுப்பேன்; 18. நிமிர - தீர்த்துக் கொள்ளுதற்கு; 19. கரு முடித்து - கருவை நிரம்பப் பெற்றுள்ள; கால் பிடித்து - காற்றோடு கூடி; 21. இரத்தகம் - செந்நிறம்; தூவுண்ட - மாமிசத்தில் படிந்த.

அன்னது கண்ட வானோர் அதிசயம் உற்றார்: ஆழி
மன்னனும், முறுவல் எய்தி, வாய் அம்பு ஓர் ஆறு வாங்கி,
பொன் நெடுந் தடந் தேர் பூண்ட புரவியின் குரங்கள் போக்கி,
வில் நடு அறுத்து, பாகன் தலையையும் நிலத்தில் வீழ்த்தான்.

மார்பிடை நின்ற வாளிவாயிடை வெயிலின் வாரும்
சோரியன், விசும்பினூடு ஓர் இமைப்பிடைத் தோன்றுநின்றான்,
கார் உரும்ஏறும், காற்றும், கனலியும், கடைநாள் வையம்
பேர்வுறு காலம் என்ன, பெருக்கினன், தவத்தின் பெற்றான்.

உரும் முறை அனந்த கோடி உதிர்ந்தன; ஊழி நாளின்,
இரு முறை காற்றுச் சீறி எழுந்தது; விழுந்தது, எங்கும்
கரு முறை நிறைந்த மேகம்; கான்றன, கல்லின் மாரி;
பொரு முறை மயங்கி, சுற்றும் இரியலின் கவிகள் போன. 24

போயின திசைகள் எங்கும் புகையொடு நெருப்புப் போர்ப்ப,
தீஇனம் அமையச் செல்லும் மாய மா மாரி சிந்த,
ஆயிர கோடி மேலும் அவிந்தன, கவிகள்; ஐயன்,
'மாயமோ? வரமோ?' என்றான்; வீடணன் வணங்கிச் சொல்வான்: 25

'நோற்றுடைத் தவத்தின் நோன்மை நோக்கினர், கருணை நோக்கி,
காற்றுடைச் செல்வன்தானும், மழையுடைக் கடவுள்தானும்,
மாற்றலர், ஈந்த தெய்வ வரத்தினால் வந்தது' என்றான்; [றான்.
நூற்று இதழ்க் கமலக் கண்ணன், 'அகற்றுவென், நொடியில்' என்

காலவன் படையும், தெய்வக் கடலவன் படையும், காலக்
கோல வன் சிலையில் கோத்து கொடுங் கணையோடும் கூட்டி,
மேலவன் துரத்தலோடும், விசும்பின்நின்று எரிந்து, வெய்தின்
மால் இருங் கடலின் வீழ்ந்து மறைந்தன, மழையும் காற்றும்.

அத் துணை, அரக்கன் நோக்கி, அந்தர வானம் எல்லாம்
ஒத்தன உருவே ஆக்கி, தான் மறைந்து ஒளித்து, சூலப்
பத்திகள் கோடி கோடி பரப்பினன்; அதனைப் பார்த்த
வித்தகன், 'ஒருவன் செய்யும் வினையம்!' என்று இனைய சொன்னான்:

22. வாய் - கூர்மை; குரங்கள் - குளம்புகள்; 23. தவத்தின் பெற்றான் - தவத்தினால் சித்தி பெற்றவன், மகரக்கண்ணன்; 26. நோக்கினர் - பார்த்து; 27. காலவன் - வாயுதேவன்; கடலவன் - வருணதேவன்.

மகரக்கண்ணன் மடிதலும் மாயை அகல்தலும்

'மாயத்தால் வகுத்தான், யாண்டும் வரம்பு இலா உருவம்; தான் எத்
தேயத்தான் என்னுவண்ணம் கரந்தனன்; தெரிந்திலாதான்;
காயத்தால் இனையன் என்று நினையல் ஆம் கருத்தன்அல்லன்;
தீ ஒத்தான் திறத்தில் என்னே செயல்?' எனச் சிந்தை நொந்தான். 29

அம்பின்வாய் ஆறு சோரும் அரக்கன்தன் அருள் இல் யாக்கை
உம்பரில் பரப்பி, தான் வேறு ஒளித்தனன் என்ன ஓர்வான்,
செம்புனல் சுவடு நோக்கி, 'இது நெறி' என்று, தேவர்
தம்பிரான் பகழி தூண்ட, தலை அற்றுத் தலத்தன் ஆனன். 30

அயில் படைத்து உருமின் செல்லும் அம்பொடும், அரக்கன் யாக்கை,
புயல் படக் குருதி வீசி, படியிடைப் புரள்தலோடும்,
வெயில் கெடுத்து இருளை ஓட்டும் காலத்தின் விளைவினேடும்,
துயில் கெடக் கனவு மாய்ந்தால் ஒத்தது—சூழ்ந்த மாயை. 31

குருதிக்கண்ணன், சிங்கன் வீழ்ச்சி

குருதியின்கண்ணன், வண்ணக் கொடி நெடுந் தேரன், கோடைப்
பருதியின் நடுவண் தோன்றும் பசுஞ் சுடர் மேகப் பண்பன்,
எரி கணை சிந்தி, காலின் எய்தினன்தன்னேடு ஏற்றான்—
விரி கடல் தட்டான், கொல்லன், வெஞ் சினத் தச்சன், வெய்யோன். 32

அன்று, அவன் நாம வில் நாண் அலங்கல் தோள் இலங்க வாங்கி,
ஒன்று அல பகழி மாரி, ஊழித் தீ என்ன, உய்த்தான்;
நின்றவன்,—நெடியது ஆங்கு ஓர் தருவினல் அகல நீக்கி,
சென்றனன்—கரியின் வாரிக்கு எதிர் படர் சீயம் அன்னன். 33

கரத்தினில் திரியாநின்ற மரத்தினைக் கண்டமாகச்
சரத்தினின் துணித்து வீழ்த்த தறுகணன்தன்னை நோக்கி,
உரத்தினைச் சுருக்கிப் பாரில் ஒடுங்கினன், தன்னை ஒப்பான்
சிரத்தினில் குதித்தான்; தேவர் திசைமுகம் கிழிய ஆர்த்தார்.

எரியும் வெங் குன்றின் உம்பர், இந்திரவில் இட்டென்ன,
பெரியவன் தலைமேல் நின்ற பேர் எழிலாளன், சோரி
சொரிய, வன் கண்ணின் மூக்கின் செவிகளின், மூளை தூங்க,
நெரிய, வன் தலையைக் காலால் உதைத்து, மா நிலத்தில் இட்டான். 35

29. தேயம் - இடம்; 30. தேவர் தம்பிரான் - தேவர்களுக்குத் தலைவன், இராமன்; 32. தட்டான் - தடுத்து அணை கட்டியவன்; தச்சன் - தச்சுத் தொழில் புரியும் நளன்.

அங்கு அவன் உலத்தலோடும், அழற் கொழுந்து ஒழுகும் கண்ணன்,
சிங்கன், வெங் கணையன், வில்லன், தார் அணி தேரின் மேலான்,
'எங்கு, அடா! போதி?' என்ன, எய்தினன்; எதிர் இலாத,
பங்கம் இல் மேரு ஆற்றல், பனசன் வந்து, இடையில் பாய்ந்தான். 36

பாய்ந்தவன் தோளில், மார்பில், பல்லங்கள் நல்ல பண்போடு
ஆய்ந்தன, அசனி போல, ஐ-இரண்டு அழுந்த எய்தான்;
காய்ந்தனன், கனலி நெய்யால் கனன்றது போலக் காந்தி;
ஏய்ந்து எழு தேரினோடும், இமைப்பிடை எடுத்துக் கொண்டான். 37

தேரொடும் எடுத்தலோடு, நிலத்திடைக் குதித்த செங் கண்
மேருவின் தோற்றத்தான்தன் உச்சிமேல் அதனை வீச;
பாரிடை விழுதலோடும், தானவன் உம்பர் பாய்ந்து
சோரியும் உயிரும் சோர, துகைத்தனன், வயிரத் தோளன். 38

தராதல வேந்தன் மைந்தர் சரத்தினும், கவியின் தானை
மராமரம், மலை என்று இன்ன வழங்கவும், வளைந்த தானை,
பராவ அரும் வெள்ளம் பத்தும் பட்டன; பட்டிலாதார்,
இராவணன் தூதர் போனார், படைக்கலம் எடுத்திலாதார். 39

21 பிரமாத்திரப் படலம்

இராவணன் இந்திரசித்தை அழைத்தல்

கரன் மகன் பட்டவாறும், குருதியின்கண்ணன் காலின்
சிரன் நெரிந்து உக்கவாறும், சிங்கனது ஈறும், சேனைப்
பரம் இனி உலகுக்கு ஆகாது என்பதும், பகரக் கேட்டான்;
வரன்முறை துறந்தான், 'வல்லைத் தருதிர், என் மகனை!' என்றான். 1

'கூயினன், நுந்தை' என்றார்; குன்று எனக் குவிந்த தோளான்,
'போயின நிருதர் யாரும் பொன்றினர் போலும்!' என்றான்;
'ஏயின பின்னை, மீள்வார் நீ அலாது யாவர்?' என்ன,
மேயது சொன்னார், தூதர்; தாதைபால் விரைவின் வந்தான். 2

37. பல்லம் - ஒருவகை அம்பு.

21: 1. சேனைப் பரம் - சேனைக் கூட்டம்; 2. மேயது - நிகழ்ந்தது.

தந்தையைத் தேற்றி, இந்திரசித்தன் போர்க்களம் செல்லுதல்

வணங்கி, 'நீ, ஐய! ''நொய்தின் மாண்டனர் மக்கள்'' என்ன
உணங்கலை; இன்று காண்டி, உலப்பு அறு குரங்கை நீக்கி,
பிணங்களின் குப்பை; மற்றை நரர் உயிர் பிரிந்த யாக்கை
கணங் குழைச் சீதைதானும், அமரரும் காண்பர்' என்றான். 3

வலங்கொண்டு வணங்கி, வான் செல் ஆயிரம் மடங்கல் பூண்ட
பொலங் கொடி நெடுந் தேர் ஏறி, போர்ப் பணை முழங்கப் போனான்;
அலங்கல் வாள் அரக்கர் தானை அறுபது வெள்ளம், யானைக்
குலங்களும், தேரும் மாவும், குழாம் கொளக் குழீஇய அன்றே.

கும்பிகை, திமிலை, செண்டை, குறடு, மாப் பேரி கொட்டி,
பம்பை, தார் முரசம், சங்கம், பாண்டில், போர்ப் பணவம், தூரி,
கம்பலி, உறுமை, தக்கை, கரடிகை, துடி, வேய், கண்டை,
அம்பலி, கணுவை, ஊமை, சகடையோடு ஆர்த்த அன்றே. 5

யானைமேல் பறைசால் ஈட்டத்து அறை மணி ஆர்த்தது ஆழி,
மான மாப் புரவிப் பொன்-தார், மாக் கொடி கொண்ட மானச்
சேனையோர் கழலும் தாரும், சேண் தரப் புலம்ப, மற்றை
வானகத்தோடும் ஆழி அலை என, வளர்ந்த அன்றே. 6

சங்கு ஒலி, வயிரின் ஓசை, ஆகுளி, தழங்கு காளம்
பொங்கு ஒலி, வரி கண் பீலிப் பேர் ஒலி, வேயின் பொம்மல்,
சிங்கத்தின் முழக்கம், வாசிச் சிரிப்பு, தேர் இடிப்பு, திண் கைம்
மங்குலின் அதிர்வு,—வான மழையொடு மலைந்த அன்றே. 7

பண் தரு கிளவிச் செவ்விப் பல்லியத்து ஒழுகு தீம் தேன்,
கண்டினின் குயின்ற வீணை நரம்பொடு கமழும் தேறல்,
வண்டினின் பொலியும் நல் யாழ் வழியுறு நறவம், வானத்து
அண்டர்தம் செவியின் உண்ணும் அமிழ்து எனல் ஆய அன்றே. 8

வில் ஒலி, வயவர் ஆர்க்கும் விளி ஒலி, தெழிப்பின் ஓங்கும்
ஒல்லொலி, வீரர் பேசும் உரை ஒலி, உரப்பில் தோன்றும்
செல் ஒலி, திரள் தோள் கொட்டும் சேண் ஒலி, நிலத்தில் செல்லும்
கல்லொலியோடும் கூடக் கடல் ஒலி கரந்தது அன்றே. 9

4. வலங்கொண்டு வணங்குதல் - வலமாகச் சுற்றி வந்து வீழ்ந்து பணிதல்; 5. கொட்டி - கொடு கொட்டி என்னும் பறை; பாண்டில் - கஞ்ச தாளம்; 7. வயிர் - ஊது கொம்பு; காளம் - எக்காளம்; மங்குல் - மேகம், ஈண்டு யானை; 8. கண்டினின் குயின்ற வீணை - கற்கண்டு போன்ற இன்சுவையுடையதாய் அமைந்த வீணை; 9. தெழித்தல் - அதட்டுதல்; உரப்புதல் - கனைத்தல்; செல் - இடி.

நாற் கடல் அனைய தானை நடந்திட, கிடந்த பாரின்-
மேல் கடந்து எழுந்த தூளி விசும்பின்மேல் கொழுந்து வீச,
மால் கடல் சேனை காணும் வானவர் மகளிர், மானப்
பாற்கடல் அனைய, வாட் கண் பனிக் கடல் படைத்தது அன்றே.

ஆயிர கோடித் திண் தேர், அமரர்கோன் நகரம் என்ன
மேயின சுற்ற, தான் ஓர் கொற்றப் பொன் தேரின் மேலான்,
தூய அச் சுடர்கள் எல்லாம் சுற்றுற, நடுவண் தோன்றும்
நாயகப் பரிதி போன்றான்—தேவரை நடுக்கம் கண்டான். 11

இந்திரசித்து நாண் ஒலி செய்தல்

சென்று வெங் களத்தை எய்தி, சிறையொடு துண்டம், செங் கண்,
ஒன்றிய கழுத்து, மேனி, கால், உகிர், வாலோடு ஒப்ப,
பின்றல் இல் வெள்ளத் தானை முறை படப் பரப்பி, பேழ் வாய்
அன்றிலின் உருவம் ஆய அணி வகுத்து, அமைந்து நின்றான்.

புரந்தரன் செருவில் தந்து போயது, புணரி ஏழும்
உரம் தவிர்த்து, ஊழி பேரும் காலத்தின் ஒலிக்கும் ஓதை
கரந்தது வயிற்றில், கால வலம்புரி கையின் வாங்கி,
சிரம் பொதிர்ந்து அமரர் அஞ்ச, ஊதினான், திசைகள் சிந்த. 13

சங்கத்தின் முழக்கம் கேட்ட கவிப் பெருந் தானை, தள்ளி
சிங்கத்தின் நாதம் வந்து செவிப் புக விலங்கு சிந்தி,
'எங்கு உற்ற?' என்னாவண்ணம் இரிந்த போல் இரிந்த; ஏழை-
பங்கத்தன் மலை வில் அன்ன சிலை ஒலி பரப்பி, ஆர்த்தான். 14

வானர சேனையின் ஓட்டம்

கீண்டன, செவிகள்; நெஞ்சம் கிழிந்தன; கிளர்ந்து செல்லா
மீண்டன, கால்கள்; கையின் விழுந்தன, மரனும் வெற்பும்;
பூண்டன, நடுக்கம்; வாய்கள் புலர்ந்தன; மயிரும் பொங்க,
'மாண்டனம் அன்றோ?' என்ற—வானரம் எவையும் மாதோ.

செங் கதிர்ச் செல்வன் சேயும், சமீரணன் சிறுவன்தானும்,
அங்கதப் பெயரினானும், அண்ணலும், இளைய கோவும்,
வெங் கதிர் மௌலிச் செங் கண் வீடணன், முதல வீரர்
இங்கு இவர் நின்றார் அல்லது, இரிந்தது, சேனை எல்லாம். 16

10. படைத்தது - தோற்றுவித்தது; 12. துண்டம் - மூக்கு; அன்றில் - கிரவுஞ்சம் என்னும் பறவை; 13. சிரம் பொதிர்தல் - தலை நடுக்குறுதல்; 14. என்னாவண்ணம் - என்று அறிந்துகொள்ள முடியாதவாறு; ஏழை பங்கத்தன் - பெண்ணொரு பாகத்தனாகிய சிவபெருமான்; மலை வில் - மேருமலையாகிய வில்; 16. சமீரணன் - வாயுதேவன்.

படைப் பெருந் தலைவர் நிற்க, பல் பெருந் தானை வேலை,
உடைப்புறு புனலின் ஓட, ஊழிநாள் உவரி ஓதை
கிடைத்திட முழங்கி ஆர்த்துக் கிளர்ந்தது; நிருதர் சேனை,
அடைத்தது, திசைகள் எல்லாம்; அன்னவர் அகத்தர் ஆனார்.

அனுமன்–அங்கதர் தோள்களில் முறையே இராம–இலக்குவர்

மாருதி அலங்கல் மாலை மணி அணி வயிரத் தோள்மேல்
வீரனும், வாலி சேய்தன் விறல் கெழு சிகரத் தோள்மேல்
ஆரியற்கு இளைய கோவும், ஏறினர்; அமரர் வாழ்த்தி,
வேரி அம் பூவின் மாரி சொரிந்தனர், இடைவிடாமல். 18

விடையின்மேல், கலுழன்தன்மேல், வில்லினர் விளங்குகின்ற
கடை இல் மேல் உயர்ந்த காட்சி இருவரும் கடுத்தார்—கண்ணுற்று
அடையின் மேருவையும் சாய்க்கும் அனுமன் அங்கதன் என்று இன்னார்,
தொடையின் மேல் மலர்ந்த தாரர், தோளின்மேல் தோன்றும் வீரர். 19

நீலனை முதலாய் உள்ள நெடும் படைத் தலைவர் நின்றார்,
தாலமும் மலையும் ஏந்தி, தாக்குவான் சமையும் காலை,
ஞாலமும் விசும்பும் காத்த நானிலக் கிழவன் மைந்தன்
மேல் அமர் விளைவை உன்னி, விலக்கினன், விளம்பலுற்றான்:

'கடவுளர் படைகள் நும்மேல் வெய்யவன் துரந்தகாலை,
தடை உளஅல்ல; தாங்கும் தன்மையிர் அல்லீர்; தாக்கிற்கு
இடை உளது எம்பால் நல்கி, பின் நிரை நிற்றிர்; ஈண்டு இப்
படை உளதனையும், இன்று, எம் வில் தொழில் பார்த்திர்' என்றான். 21

இராம–இலக்குவரின் போர்த் திறன்

அருள்முறை அவரும் நின்றார்; ஆண் தகை வீரர், ஆழி
உருள் முறை தேரின், மாவின், ஓடை மால் வரையின், ஊழி
இருள் முறை நிருதர்தம்மேல், ஏவினர்—இமைப்பிலோரும்,
'மருள் முறை எய்திற்று' என்பர்—சிலை வழங்கு அசனி மாரி.

இமைப்பதன் முன்னம் வந்த இராக்கத வெள்ளம் தன்னைக் [மால்
குமைத்தொழில் புரிந்த வீரர் தனுத் தொழில் குறித்து இன்று எம்
அமைப்பது என்? பிறிது ஒன்று உண்டோ? மேரு என்று அமைந்த
உமைக்கு ஒருபாகன், எய்த புரங்களின் ஒருங்கி வீழ்ந்த. [வில்லான்,

17. அகத்தர் - உள்ளிடத்தவர்; 18. வேரி - தேன்; 19. வில்லினர் - வில்லை ஏந்திய சிவனும் திருமாலும் ஆகிய இருவர்; பினாகம் சிவனது வில், சார்ங்கம் திருமாலது வில்; 20. தாலம் - பனை; நானிலக் கிழவன் - தசரதன்; 21. வெய்யவன் - கொடியோனாகிய இந்திரசித்தன்; 22. அருள் முறை - இராமன் பணித்தருளிய முறை; 23. குமைத்தொழில் - அழிக்கும் தொழில்; ஒருங்குதல் - அழிதல்.

தேரின்மேல் சிலையின் நின்ற இந்திரசித்து என்று ஓதும்
வீரருள் வீரன் கண்டான்—விழுந்தன விழுந்த என்னும்
பாரின்மேல் நோக்கின் அன்றேல், பட்டனர் பட்டார் என்னும்
போரின்மேல் நோக்கு இலாத இருவரும் பொருத பூசல். 24

'யானை பட்டனவோ!' என்றான்; 'இரதம் இற்றனவோ!' என்றான்;
'மான மா வந்த எல்லாம் மறிந்து ஒழிந்தனவோ!' என்றான்;
'ஏனை வாள் அரக்கர் யாரும் இல்லையோ, எடுக்க!' என்றான்—
வான் உயர் பிணத்தின் குப்பை மறைத்தலின், மயக்கம் உற்றான். 25

'செய்கின்றார் இருவர், வெம் போர்; சிதைகின்ற சேனை நோக்கின்,
''அய்யம்தான் இல்லா வெள்ளம் அறுபதும் அவிக!'' என்று,
வய்கின்றார்; அல்லர் ஆக, வரி சிலை வலத்தால் மாள
எய்கின்றார் அல்லர்; ஈது எவ் இந்திரசாலம்?' என்றான். 26

போர் நிகழ்ச்சியை இந்திரசித்தன் வியந்து நோக்குதல்

அம்பின் மா மழையை நோக்கும்; உதிரத்தின் ஆற்றை நோக்கும்;
உம்பரின் அளவும் சென்ற பிணக் குன்றின் உயர்வை நோக்கும்;
கொம்பு அற உதிர்ந்த முத்தின் குப்பையை நோக்கும்; கொன்ற
தும்பியை நோக்கும்; வீரர் சுந்தரத் தோளை நோக்கும்; 27

மலைகளை நோக்கும்; மற்று அவ் வான் உறக் குவிந்த வன் கண்
தலைகளை நோக்கும்; வீரர் சரங்களை நோக்கும்; தாக்கி,
உலை கொள் வெம் பொறியின் உக்க படைக்கலத்து ஒழுக்கை நோக்கும்;
சிலைகளை நோக்கும்; நாண் ஏற்று இடியினைச் செவியின் ஏற்கும்;

ஆயிரம் தேரை, ஆடல் ஆனையை, அலங்கல் மாவை,
ஆயிரம் தலையை, ஆழிப் படைகளை, அறுத்தும், அப்பால்
போயின பகழி வேகத் தன்மையைப் புரிந்து நோக்கும்;
பாயும் வெம் பகழிக்கு ஒன்றும் கணக்கு இலாப் பரப்பைப் பார்க்கும்; 29

அறுபது வெள்ளம் ஆய அரக்கர்தம் ஆற்றற்கு ஏற்ற,
எறிவன, எய்வ, பெய்வ, எற்றுறு படைகள் யாவும்,
பொறி வனம் வெந்த போலச் சாம்பராய்ப் போயதுஅல்லால்,
செறிவன இல்லா ஆற்றைச் சிந்தையால் தெரிய நோக்கும்; 30

25. மான மா - மானமுள்ள குதிரைகள்; 27. கொம்பு - யானைக்கோடு; தும்பி - யானை; 30. பொறி - தீப் பொறி.

வயிறு அலைத்து ஓடி வந்து கொழுநர்மேல் மகளிர் மாழ்கி,
குயில் தலத்து உக்க என்னக் குழைகின்ற குழைவை நோக்கும்;
எயிறு அலைத்து இடிக்கும் பேழ் வாய்த் தலை இலா ஆக்கை ஈட்டம்
பயிறலை, பறவை பாரில் படிகிலாப் பரப்பை, பார்க்கும்; 31

'அங்கதர் அனந்த கோடி உளர்' எனும்; 'அனுமன் என்பாற்கு
இங்கு இனி உலகம் யாவும் இடம் இலை போலும்' என்னும்;
'எங்கும் இம் மனிதர் என்பார் இருவரேகொல்!' என்று உன்னும்;—
சிங்கஏறு அனைய வீரர் கடுமையைத் தெரிகிலாதான். 32

ஆர்க்கின்ற அமரர்தம்மை நோக்கும்; அங்கு அவர்கள் அள்ளித்
தூர்க்கின்ற பூவை நோக்கும்; துடிக்கின்ற இடத் தோள் நோக்கும்;
பார்க்கின்ற திசைகள் எங்கும் படும் பிணப் பரப்பை நோக்கும்;
ஈர்க்கின்ற குருதி ஆற்றின் யானையின் பிணத்தை நோக்கும். 33

ஆயிர கோடித் தேரும் அரக்கரும் ஒழிய, வல்ல
மா இருஞ் சேனை எல்லாம் மாய்ந்தவா கண்டும், வல்லை
போயின குரக்குத் தானை புகுந்திலது அன்றே, பொன் தேர்த்
தீயவன்தன்மேல் உள்ள பயத்தினால் கலக்கம் தீரா. 34

தளப் பெருஞ் சேனை வெள்ளம் அறுபதும் தலத்தது ஆக,
அளப்ப அருந் தேரின் உள்ள ஆயிர கோடி ஆக,
துளக்கம் இல் ஆற்றல் வீரர் பொருத போர்த் தொழிலை நோக்கி,
அளப்ப அருந் தோளைக் கொட்டி, அஞ்சனை மதலை ஆர்த்தான்.

ஆர் இடை அனுமன் ஆர்த்த ஆர்ப்பு ஒலி அசனி கேளா,
தேரிடைநின்று வீழ்ந்தார் சிலர்; சிலர் படைகள் சிந்தி,
பாரிடை கிழிந்து போகப் பாரித்தார்; பைம் பொன் இஞ்சி
ஊரிடை நின்றுளாரும், உயிரினோடு உதிரம் கான்றார். 36

இந்திரசித்தன் தனியனாகப் பொருதல்

'அஞ்சினிர், போமின்; இன்று, ஓர் ஆர்ப்பு ஒலிக்கு அழியற்பாலிர்
வெஞ் சமம் விளைப்பது என்னோ? நீரும் இவ் வீரரோடு
துஞ்சினிர் போலும் அன்றோ?' என்று அவர்ச் சுளித்து நோக்கி,—
மஞ்சினும் கரிய மெய்யான்—இருவர்மேல் ஒருவன் வந்தான்.

31. பயிறல் - பழகுதல், ஈண்டுக் கூத்தாடுதல்; 34. தீயவன் - இந்திர சித்தன்; 35. தளம் - கூட்டம்; 36. ஆர் இடை - அரிய போர்க்களத்தில்; பாரித்தல் - பரபரப்படைதல்; இஞ்சி ஊர் - மதிலால் சூழப்பட்ட இலங்கை; 37. கரிய மெய்யான் - இந்திரசித்தன்.

அக் கணத்து, ஆர்த்து மண்டி, ஆயிர கோடித் தேரும்
புக்கன—நேமிப் பாட்டில் கிழிந்தன புவனம் என்ன,
திக்கிடை நின்ற யானை சிரம் பொதிர் எறிய, சிந்தி
உக்கன விசும்பின் மீன்கள் உதிர்ந்திட, தேவர் உட்க. 38

இலக்குவன் வஞ்சினம்

மாற்றம் ஒன்று, இளையவன் வளை வில் செங் கரத்து
ஏற்றினை வணங்கி நின்று, இயம்புவான்: ' ''இகல்-
ஆற்றலன் அரவு கொண்டு அசைப்ப, ஆர் அமர்
தோற்றனென்'' என்று கொண்டு உலகம் சொல்லுமால்; 39

' ''காக்கவும் கற்றிலன், காதல் நண்பரை;
போக்கவும் கற்றிலன், ஒருவன்; போய்ப் பிணி
ஆக்கவும் கற்றிலன்; அமரில் ஆர் உயிர்
நீக்கவும் கற்றிலன்'' என்று நின்றதால்; 40

'இந்திரன்பகை எனும் இவனை, என் சரம்
அந்தரத்து அருந் தலை அறுக்கலாது எனின்,
வெந் தொழிற் செய்கையன் விருந்தும் ஆய், நெடு
மைந்தரில் கடை எனப் படுவன், வாழியாய்! 41

'நின்னுடை முன்னர், இந் நெறி இல் நீர்மையான்-
தன்னுடைச் சிரத்தை என் சரத்தின் தள்ளினுல்,—
பொன்னுடை வளை கழல் பொலம் பொன் தோளினுய்!—
என்னுடை அடிமையும் இசையிற்று ஆம்அரோ. 42

'கடிதினில் உலகு எலாம் கண்டு நிற்க, என்
சுடு சரம் இவன் தலை துணிக்கலாதுஎனின்,
முடிய ஒன்று உணர்த்துவென்; உனக்கு நான் முயல்
அடிமையின் பயன் இகந்து அறுக, ஆழியாய்!' 43

இராமன் பாராட்டு

வல்லவன் அவ் உரை வழங்கும் எல்வையுள்,
'அல்லல் நீங்கினம்' என, அமரர் ஆர்த்தனர்;
எல்லை இல் உலகங்கள் யாவும் ஆர்த்தன;
நல் அறம் ஆர்த்தது; நமனும் ஆர்த்தனன். 44

38. நேமிப் பாடு - சக்கரம் ஆழப்பதிதல்; 41. வெந் தொழிற் செய்கையன் - கொடுந்தொழில் புரியும் யமன்; நெடு மைந்தர் - பெருமை பெற்ற வீரர்கள்; 43. முடிய உணர்த்துதல் - முடிந்த முடிபாகத் தனது துணிவினை எடுத்துரைத்தல்.

முறுவல் வாள் முகத்தினன், முளரிக்கண்ணனும்,
'அறிவ! நீ, ''அடுவல்'' என்று அமைதி ஆம்எனின்,
இறுதியும் காவலும் இயற்றும் ஈசரும்
வெறுவியர்; வேறு இனி விளைவது யாது?' என்றான். 45

இராமனைத் தொழுது, இலக்குவன் போருக்கு எழுதல்

சொல் அது கேட்டு, அடி தொழுது, 'சுற்றிய
பல் பெருந் தேரொடும் அரக்கர் பண்ணையைக்
கொல்வல்; இங்கு அன்னது காண்டிகொல்' என,
ஒல்லையில் எழுந்தனன்—உவகை உள்ளத்தான். 46

அங்கதன் ஆர்த்தனன், அசனி ஏறு என,
மங்குல்நின்று அதிர்ந்தன வய வன் தேர் புனை
சிங்கமும் நடுக்குற; திருவின் நாயகன்
சங்கம் ஒன்று ஒலித்தது, கடலும் தள்ளுற. 47

எழு, மழு, சக்கரம், ஈட்டி, தோமரம்,
முழு முரண் தண்டு, வேல், முசுண்டி, மூவிலை,
கழு, அயில் கப்பணம், கவண் கல், கன்னகம்,
விழு மழைக்கு இரட்டி விட்டு, அரக்கர் வீசினர். 48

மீன் எலாம் விண்ணின்நின்று ஒருங்கு வீழ்ந்தென,
வான் எலாம் மண் எலாம் மறைய வந்தன;
தான் எலாம் துணிந்து போய்த் தகர்ந்து காந்தின;—
வேனிலான் அனையவன் பகழி வெம்மையால். 49

ஆயிரம் தேர், ஒரு தொடையின், அச்சு இறும்;
பாய் பரிக் குலம் படும்; பாகர் பொன்றுவர்;
நாயகர் நெடுந் தலை துமியும், நாம் அற;
தீ எழும், புகை எழும், உலகும் தீயுமால். 50

அடி அறும் தேர்; முரண் ஆழி அச்சு இறும்;
கடி நெடுஞ் சிலை அறும்; கவச மார்பு இறும்;
கொடி அறும்; குடை அறும்; கொற்ற வீரர்தம்
முடி அறும்; முரசு அறும்; முழுதும் சிந்துமால். 51

45. வெறுவியர் - ஒன்றுமில்லாதவர்; 46. பண்ணை - கூட்டம்; 47. திருவின் நாயகன் - இராமன்; 50. ஒரு தொடையின் - ஒரு முறை தொடுத்து எய்த அம்பினால்.

‘இன்னது ஓர் உறுப்பு; இவை இனைய தேர் பரி;
மன்னவர் இவர்; இவர் படைஞர், மற்றுளோர்’
என்ன ஓர் தன்மையும் தெரிந்தது இல்லையால்—
சின்னபின்னங்களாய் மயங்கிச் சிந்தலால். 52

தந்தையர் தேரிடைத் தனயர் வன் தலை
வந்தன; தாதையர் வயிர வான் சிரம்
சிந்தின, காதலர்க்கு இயைந்த தேரிடை—
அந்தரத்து அம்பொடும் அற்று எழுந்தன. 53

செம் பெருங் குருதியின் திகழ்ந்த, செங் கண் மீன்
கொம்பொடும் பரவையில் திரியும் கொட்பு என—
தும்பை அம் தொடையலர் தடக் கை, தூணி வாங்கு
அம்பொடும் துணிந்தன சிலையொடு அற்றன. 54

தடிவன கொடுஞ் சரம் தள்ள, தள்ளுற
மடிவன கொடிகளும், குடையும், மற்றவும்,
வெடி படு பெரும் பிணக் களத்தில் மொய்த்தன,
படிவன, ஒத்தன, பறவைப் பான்மையா. 55

சிந்துரங்களின் பருமமும், பகழியும், தேரும்,
குந்து வல் நெடுஞ் சிலை முதல் படைகளும், கொடியும்,
இந்தனங்களாய், இறந்தவர் விழிக் கனல் இலங்க,
வெந்த வெம் பிணம் விழுங்கின, கழுதுகள் விரும்பி. 56

சில்லி ஊடு அறச் சிதறின சில; சில, கோத்த
வல்லி ஊடு அற, மறிந்தன; புரவிகள் மடியப்
புல்லி மண்ணிடைப் புரண்டன சில; சில, போர் ஆள்
வில்லி சாரதியொடும் பட, திரிந்தன வெறிய. 57

அலங்கு பல் மணிக் கதிரன, குருதியின் அழுந்தி,
விலங்கு செஞ் சுடர் விடுவன, வெளி இன்றி மிடைந்த,—
குலம் கொள் வெய்யவர் அமர்க் களத் தீயிடைக் குளித்த
இலங்கை மா நகர் மாளிகை நிகர்த்தன—இரதம். 58

ஆன காலையில், இராமனும், அயில் முகப் பகழி
சோனை மாரியின் சொரிந்தனன், அனுமனைத் தூண்டி;
வான மானங்கள் மறிந்தெனத் தேர் எலாம் மடிய,
தானும் தேருமே ஆயினன், இராவணன் தனயன். 59

53. காதலர் - புதல்வர்; அந்தரம் - விசும்பு; 56. சிந்துரம் - யானை; பருமம் - யானைமேல் இடும் தவிசு; குந்துதல் - ஊன்றுதல், வளைதல்; இந்தனம் - விறகு; கழுது - பேய்; 57. வல்லி - குசைக் கயிறு.

பல் விலங்கொடு புரவிகள் பூண்ட தேர்ப் பரவை
வல் விலங்கல்போல் அரக்கர்தம் குழாத்தொடு மடிய,
வில் இலங்கிய வீரரை நோக்கினன், வெகுண்டான்,
சொல், விலங்கலன், சொல்லினன்—இராவணன் தோன்றல்.

'இருவிர் என்னெடு பொருதிரோ? அன்றுஎனின், ஏற்ற
ஒருவிர் வந்து, உயிர் தருதிரோ? உம் படையோடும்
பொருது பொன்றுதல் புரிதிரோ? உறுவது புகலும்;
தருவல், இன்று உமக்கு ஏற்றுளது யான்' எனச் சலித்தான். 61

இலக்குவன் தன் வஞ்சினம் பற்றிக் கூறுதல்

'வாளின், திண் சிலைத் தொழிலினின், மல்லினின், மற்றை
ஆளுற்று எண்ணிய படைக்கலம் எவற்றினும், அமரில்
கோளுற்று, உன்னெடு குறித்து, அமர் செய்து, உயிர் கொள்வான்
சூளுற்றேன்; இது சரதம்' என்று, இலக்குவன் சொன்னன். 62

இந்திரசித்தன் மறுமொழி

'முன் பிறந்த உன் தம்முனை முறை தவிர்த்து, உனக்குப்
பின்பு இறந்தவன் ஆக்குவென்; பின் பிறந்தோயை
முன்பு இறந்தவன் ஆக்குவென்; இது முடியேனேல்,
என், பிறந்ததனல் பயன் இராவணற்கு?' என்ருன். 63

'இலக்குவன் எனும் பெயர் உனக்கு இயைவதே என்ன,
இலக்கு வன் கணைக்கு ஆக்குவென்; ''இது புகுந்து இடையே
விலக்குவன்'' என விடையவன் விலக்கினும், வீரம்
கலக்குவன்; இது காணும், உன் தமையனும் கண்ணல். 64

'அறுபது ஆகிய வெள்ளத்தின் அரக்கரை அம்பால்,
இறுவது ஆக்கிய இரண்டு வில்லீரும் கண்டு இரங்க,
மறுஅது ஆக்கிய எழுபது வெள்ளமும் மாள,
வெறுவிது ஆக்குவென், உலகை இக் கணத்தின் ஓர் வில்லால்.

'கும்பகன்னன் என்று ஒருவன், நீர் அமரிடைக் கொன்ற
தம்பி, அல்லன் நான்; இராவணன் மகன்; ஒரு தமியேன்;
எம்பிமாருக்கும், என் சிறு தாதைக்கும், இருவீர்
செம் புணீர்கொடு கடன் கழிப்பேன்' எனத் தீர்ந்தான். 66

60. பரவை - கடல், ஈண்டுத் தொகுதி; 62. ஆளுற்று - ஆளுதல் பொருந்தி; கோளுற்று - வலிமை பொருந்தி; 64 விடையவன் - சிவபெருமான்; 65. மறு - பழி; 66. தீர்ந்தான் - சொல்லி முடித்தான்.

இலக்குவன் மாற்றுரை

'அரக்கர் என்பது ஓர் பெயர் படைத்தீர்க்கு எலாம் அடுத்த,
புரக்கும் நன் கடன் செய உளன், வீடணன் போந்தான்;
கரக்கும் நுந்தைக்கு நீ செயக் கடவன கடன்கள்,
இரக்கம் உற்று, உனக்கு அவன் செயும்' என்றனன், இளையோன்.

இந்திரசித்தன் – இலக்குவன் கடும் போர்

ஆன காலையின், அயில் எயிற்று அரக்கன் நெஞ்சு அழன்றான்,
வானும் வையமும் திசைகளும் யாவையும் மறைய,
பால் நல் வேலையைப் பருகுவ சுடர் முகப் பகழி,
சோனை மாரியின் இரு மடிமும் மடி சொரிந்தான். 68

அங்கதன்தன்மேல் ஆயிரம்; அவற்றினுக்கு இரட்டி,
வெங் கண் மாருதி மேனிமேல்; வேறு உள வீரச்
சிங்கம் அன்னவர் ஆக்கைமேல் உலப்பு இல செலுத்தி,
எங்கும் வெங் கணை ஆக்கினன்—இராவணன் சிறுவன். 69

இளைய மைந்தன்மேல், இராமன்மேல், இராவணி இகலி,
விளையும் வன் தொழில் வானர வீரர்மேல், மெய் உற்று
உளையும் வெஞ் சரம் சொரிந்தனன்; நாழிகை ஒன்று,
வளையும் மண்டலப் பிறை என நின்றது, அவ் வரி வில். 70

பச்சிமத்தினும், மருங்கினும், முகத்தினும், பகழி,
உச்சி முற்றிய வெய்யவன் கதிர் என உமிழ,
கச்சம் உற்றவன் கைத் துணைக் கடுமையைக் காண,
அச்சம் உற்றனர், கண் புதைத்து ஒடுங்கினர், அமரர். 71

மெய்யில் பட்டன பட, படாதன எலாம் விலக்கி,
தெய்வப் போர்க் கணைக்கு அத்துணைக்கு அத்துணைச் செலுத்தி,
ஐயற்கு ஆங்கு இளங் கோளரி, அறிவு இலான் அறைந்த
பொய்யின் போம்படி ஆக்கினன், கடிதினின் புக்கான். 72

பிறகின் நின்றனன் பெருந்தகை, இளவலைப் பிரியான்;
'அறன் இது அன்று' என, அரக்கன்மேல் சரம் துரந்து அருளான்;
இறவு கண்டிலர் இருவரும்; ஒருவரை ஒருவர்;
விறகின் வெந்தன, விசும்பிடைச் செறிந்தன விசிகம். 73

68. சோனை மாரி - பெரு மழை; 71. பச்சிமம் - மேல்திசை, ஈண்டு மேற்புறம்; கச்சம் உற்றவன் - ஆடையை இறுக உடுத்தவனாகிய இந்திர சித்தன்; 73. பிறகின் - பின்புறத்தில்; இறவு - இறத்தல்; விசிகம் - அம்பு.

மாடு எரிந்து எழுந்து, இருவர் தம் கணைகளும் வழங்க,
காடு எரிந்தன; கன வரை எரிந்தன; கனக
வீடு எரிந்தன; வேலைகள் எரிந்தன; மேகம்
ஊடு எரிந்தன; ஊழியின் எரிந்தன, உலகம். 74

படம் கொள் பாம்பு-அணை துறந்தவற்கு இளையவன், பகழி,
விடம் கொள் வெள்ளத்தின்மேலன வருவன விலக்கி,
இடங்கர்ஏறு அன எறுழ் வலி அரக்கன் தேர் ஈர்க்கும்
மடங்கல் ஐ-இருநூற்றையும் கூற்றின்வாய் மடுத்தான். 75

தேர் அழிந்திட, சேமத் தேர் பிறிது இலன், செறிந்த
ஊர் அழிந்திடத் தனி நின்ற கதிரவன் ஒத்தான்;
'பார் அழிந்தது, குரங்கு எனும் பெயர்' எனப் பகைத்த
சூர் அழிந்திடத் துரந்தனன், சுடு சரம் சொரிந்தான். 76

அற்ற தேர்மிசை நின்று, போர் அங்கதன் அலங்கல்
கொற்றத் தோளினும், இலக்குவன் புயத்தினும், குளித்து
முற்ற, எண் இலா முரண் கணை தூர்த்தனன்; முரண் போர்,
ஒற்றைச் சங்கு எடுத்து ஊதினன், உலகு எலாம் உலைய. 77

சங்கம் ஊதிய தசமுகன் தனி மகன் தரித்த
கங்கணத்தொடு கவசமும் மூட்டு அறக் கழல,
வெங் கடுங் கணை ஐ-இரண்டு உரும் என வீசி,
சிங்கஏறு அன்ன இலக்குவன் சிலையை நாண்எறிந்தான். 78

இலக்குவன் வெற்றிக்கு வானரர் ஆர்த்தல்

கண்ட கார் முகில் வண்ணனும், கமலக்கண் கலுழ,
துண்ட வெண் பிறை நிலவு என முறுவலும் தோன்ற,
அண்டம் உண்ட தன் வாயினல், 'ஆர்மின்' என்று அருள,
'விண்டது அண்டம்' என்று, உலைந்திட ஆர்த்தனர், வீரர். 79

இலக்குவன், அயன் படை தொடப்புக, இராமன் தடுத்தல்

கண் இமைப்பதன் முன்பு போய் விசும்பிடைக் கரந்தான்;
அண்ணல், மற்றவன் ஆக்கை கண்டறிகிலன் ஆகி,
பண்ணவற்கு, 'இவன் பிழைக்குமேல், படுக்கும் நம் படையை;
எண்ணம் மற்று இலை; அயன் படை தொடுப்பென்' என்று இசைத்தான்.

76. சூர் - சூரத்தன்மை; 78. சிலையை நாண் எறிதல் - வில்லின் நாணைத் தெறித்துப் பேரொலி உண்டாக்குதல்; 80. பண்ணவன் - தேவன், ஈண்டு இராமன்.

ஆன்றவன் அது பகர்தலும், 'அறநிலே வழாதாய்!
ஈன்ற அந்தணன் படைக்கலம் தொடுக்கில், இவ் உலகம்
மூன்றையும் சுடும்; ஒருவனல் முடிகலது' என்முன்,
சான்றவன்; அது தவிர்ந்தனன், உணர்வுடைத் தம்பி. 81

இந்திரசித்தன் தெய்வப்படையை விட எண்ணி மறைதல்

மறைந்துபோய் நின்ற வஞ்சனும், அவருடை மனத்தை
அறிந்து, தெய்வ வான் படைக்கலம் தொடுப்பதற்கு அமைந்தான்,
'பிறிந்து போவதே கருமம், இப்பொழுது' எனப் பெயர்ந்தான்,
செறிந்த தேவர்கள் ஆவலம் கொட்டினர், சிரித்தார். 82

செஞ் சரத்தொடு செம்மழை விசும்பின்மேல் செல்ல,
மஞ்சின் மா மழை போயினது ஆம் என மாற,
'அஞ்சினன் அகன்முன்' என்பது அறிந்தனர் ஆர்த்தார்—
வெஞ் சினம் தரு களிப்பினர், வானர வீரர். 83

உடைந்த வானரச் சேனேயும், ஓத நீர் உவரி
அடைந்தது ஆம் என வந்து, இரைத்து, ஆர்த்து, எழுந்து ஆடி,
தொடர்ந்து சென்றது; தோற்றவன், யாவர்க்கும் தோற்முன்
கடைந்த வேலேபோல் கலங்குறும் இலங்கையில் கரந்தான். 84

இராவணி கருத்து உணராத இராம–இலக்குவர் போர்க்கோலம் களேதல்

'எல் கொள் நான்முகன் படைக்கலம், இவர் என்மேல் விடா முன்,
முற்கொல்வேன்' எனும் முயற்சியன், மறை முறை மொழிந்த
சொல் கொள் வேள்வி போய்த் தொடங்குவான் அமைந்தவன் துணிவை
மல் கொள் தோளவர் உணர்ந்திலர்; அமர்த் தொழில் மறந்தார். 85

அனுமன் அங்கதன் தோளின்நின்று இழிந்தனர் ஆகி,
தனுவும், வெங் கணேப் புட்டிலும், கவசமும், தடக் கைக்கு
இனிய கோதையும், துறந்தனர், இருந்தனர், இமையோர்
பனி மலர் பொழிந்து ஆர்த்தனர்; வாழ்த்தினர் பல்கால்.* 86

ஆர்த்த சேனேயின் அமலே போய் விசும்பினே அலேக்க,
ஈர்த்த தேரொடும் கடிது சென்முன், அகன்று இரவி;
'தீர்த்தன்மேல் அவன் திசைமுகன் படைக்கலம் செலுத்தப்
பார்க்கிலேன்; முந்திப் படுவல் என்பான்' எனப் பட்டான். 87

82. ஆவலம் கொட்டுதல் - செருக்குத் தோன்றக் கை கொட்டுதல்; 84. யாவர்க்கும் தோற்முன் - யாவர் கண்ணுக்கும் புலப்படாதவனுகி; 85. மறை முறை மொழிந்த சொல் - மந்திரம்; 87. தீர்த்தன் - இலக்குவன்: அவன் - இந்திரசித்தன்.

'இரவும் நன் பகலும் பெரு நெடுஞ் செரு இயற்றி,
உரவு நம் படை மெலிந்துளது; அருந்துதற்கு உணவு
வரவு தாழ்த்தது; வீடண! வல்லையின் ஏகி,
தரவு வேண்டினென்' என்றனன், தாமரைக்கண்ணன். 88

'இன்னதே கடிது இயற்றுவென்' எனத் தொழுது எழுந்தான்,
பொன்னின் மௌலியன் வீடணன், தமரொடும், போனான்;
கன்னல் ஒன்றில் ஓர் காலினின் வேலையைக் கடந்தான்;
அன்ன வேலையின் இராமன் ஈது இளையவற்கு அறைந்தான். 89

'தெய்வ வான் பெரும் படைகட்கு வரன்முறை திருந்து
மெய் கொள் பூசனை இயற்றினம் விடும் இது விதியால்;
ஐய! நான் அவை ஆற்றினென் வருவது ஓர் அளவும்,
கை கொள் சேனையைக் கா' எனப் போர்க்களம் கடந்தான். 90

இந்திரசித்தன் இராவணனுக்குத் தன் திட்டத்தைக் கூறல்

தந்தையைக் கண்டு, புகுந்துள தன்மையும், தன்மேல்
முந்தை நான்முகன் படைக்கலம் தொடுக்குற்ற முறையும்,
சிந்தையுள் புகச் செப்பினன்; அனையவன் திகைத்தான்;
'எந்தை! என், இனிச் செயத் தக்கது? இசை' என, இசைத்தான். 91

' "தன்னைக் கொல்வது துணிவரேல், தனக்கு அது தகுமேல்,
முன்னர்க் கொல்லிய முயல்க!" என்று அறிஞரே மொழிந்தார்;
அன்ன போர் அவர் அறிவுருவகை மறைந்து, அயன் தன்
வெல் நற் போர்ப் படை விடுதலே நலம்; இது விதியால். 92

'தொடுக்கின்றேன் என்பது உணர்வரேல், அப் படை தொடுத்தே,
தடுப்பர்; காண்பரேல், கொல்லவும் வல்லர், அத் தவத்தோர்;
இடுக்கு ஒன்று ஆகின்றது இல்லை; நல் வேள்வியை இயற்றி,
முடிப்பன், அன்னவர் வாழ்வை, ஓர் கணத்து' என முடித்தான்.

'என்னை அன்னவர் மறந்தனர் நின்று இகல் இயற்ற,
துன்னு போர்ப் படை முடிவு இலாது அவர்வயின் தூண்டின்,
பின்னை, நின்றது புரிவென்' என்று அன்னவன் பேச,
மன்னன், முன் நின்ற மகோதரற்கு இம் மொழி வழங்கும்: 94

88. உரவு - வலிமை; தரவு - தருதல்; 89. கன்னல் - நாழிகை; காலினின் - காற்றைப் போன்று; 91. தொடுக்குற்ற முறை - (பகைவர்) தொடுத்தற்கு எண்ணிய முறைமை; 92. தகுமேல் - இயல்வதாயின்; 94. அன்னவன் - அவ் இந்திரசித்தன்.

'வெள்ளம் நூறுடை வெஞ் சினச் சேனையை, வீர!
அள் இலைப் படை அகம்பனே முதலிய அரக்கர்
எள் இல் எண் இலர் தம்மொடு விரைந்தனை ஏகி,
கொள்ளை வெஞ் செரு இயற்றுதி, மனிதரைக் குறுகி. 95

'மாயை என்றன, வல்லவை யாவையும், வழங்கி,
தீ இருட் பெரும் பரப்பினைச் செறிவு உறத் திருத்தி,
நீ ஒருத்தனே உலகு ஒரு மூன்றையும் நிமிர்வாய்;
போய் உருத்து, அவர் உயிர் குடித்து உதவு' எனப் புகன்றான்.

மகோதரன் போர்க்குச் செல்லல்

என்ற காலையின், 'என்றுகொல் ஏவுவது?' என்று,
நின்ற வாள் எயிற்று அரக்கனும் உவகையின் நிமிர்ந்தான்;
சென்று தேர்மிசை ஏறினன்; இராக்கதர் செறிந்தார்,
குன்று சுற்றிய மத கரிக் குலம் அன்ன குறியார். 97

கோடி கோடி நூறாயிரம் ஆயிரம் குறித்த
ஆடல் ஆனைகள், அணிதொறும் அணிதொறும் அமைந்த;
ஓடு தேர்க் குலம், உலப்பு இல, ஓடி வந்து உற்ற;
கேடு இல் வாம் பரி, கணக்கையும் கடந்தன, கிளர்ந்த. 98

படைக்கலங்களும், பரு மணிப் பூண்களும், பகு வாய்
இடைக் கலந்தன எயிற்று இளம் பிறைகளும், எறிப்ப,
புடைப் பரந்தன வெயில்களும் நிலாக்களும் புரள,
விடைக் குலங்கள்போல், இராக்கதப் பதாதியும் மிடைந்த. 99

கொடிக் குழீஇயின கொழுந்து எடுத்து எழுந்து மேற்கொள்ள,
இடிக் குழீஇ எழு மழைப் பெருங் குலங்களை இரித்த;
அடிக் குழீஇயிடும் இடம்தொறும் பிதிர்ந்து எழுந்து ஆர்த்த
பொடிக் குழீஇ, அண்டம் படைத்தவன் கண்ணையும் புதைத்த.

ஆனை என்னும் மா மலைகளின் இழி மத அருவி
வான யாறுகள், வாசி வாய் நுரையொடு மயங்கி,
கான மா மரம் கல்லொடும் ஈர்த்தன, கடிதில்
போன, போக்க அரும் பெருமைய, புணரியுள் புக்க. 101

95. அள் - கூர்மை; 96. நிமிர்வாய் - வெல்லவல்லாய்; 97. குறியார் - நிலையினர்; 99. பதாதி - காலாட்படை; 101. பெருமைய - பெருக்கத்தை யுடையன.

தடித்து மீன்குலம் விசும்பிடைத் தயங்குவ—சலத்தின்
மடித்த வாயினர், வாள் எயிற்று அரக்கர், தம் வலத்தின்
பிடித்த திண் படை விதிர்த்திட விதிர்த்திடப் பிறழ்ந்து,
பொடித்த வெம் பொறி கொதித்து மேல் போவன—போன்ற.

சொன்ன நூறுடை வெள்ளம், அன்று இராவணன் துரந்த
அன்ன சேனையை வாயிலூடு உமிழ்கின்ற அமைதி,
முன்னம் வேலையை முழுவதும் குடித்தது, 'முறை ஈது'
என்ன, மீட்டு உமிழ் தமிழ்முனி ஒத்தது, அவ் இலங்கை. 103

சங்கு பேரியும், காளமும், தாளமும், தலைவர்
சிங்க நாதமும், சிலையின் நாண் ஒலிகளும், சின மாப்
பொங்கும் ஓதையும், புரவியின் அமலையும், பொலந் தேர்
வெங் கண் ஓலமும், மால் என, விழுங்கிய உலகை. 104

அரக்கர்க்கும் வானரர்க்கும் நிகழ்ந்த பெரும் போர்

புக்கதால் பெரும் போர்ப் படை, பறந்தலைப் புறத்தில்;
தொக்கதால், நெடு வானரத் தானையும் துவன்றி,
ஒக்க ஆர்த்தன, உறுக்கின, தெழித்தன, உருமின்
மிக்க வான் படை விடு கணை மா மழை விலக்கி. 105

குன்று கோடியும் கோடிமேல் கோடியும் குறித்த
வென்றி வானர வீரர்கள், முகம்தொறும் வீச,
ஒன்றின், நால்வரும் ஐவரும் இராக்கதர் உலந்தார்;
பொன்றி வீழ்ந்தன, பொரு கரி, பாய் பரி, பொலந் தேர். 106

மழுவும், சூலமும், வலயமும், நாஞ்சிலும், வாளும்,
எழுவும், ஈட்டியும், தோட்டியும், எழு முனைத் தண்டும்,
தழுவும் வேலொடு கணையமும், பகழியும், தாக்க,
குழுவினோடு பட்டு உருண்டன, வானரக் குலங்கள். 107

முற்கரங்களும், முசலமும், முசுண்டியும், முளையும்,
சக்கரங்களும், பிண்டிபாலத்தொடு தண்டும்,
கப்பணங்களும், வளையமும், கவண் உமிழ் கல்லும்,
வெற்புஇனங்களை நுறுக்கின; கவிகளை வீழ்த்த. 108

102. தடித்து மீன்குலம் - மின்னலும் விண்மீன் தொகுதிகளும்; 103. அமைதி - தன்மை; தமிழ் முனி - அகத்திய முனிவர்; 104. சின மா - கறுக் கொள்ளும் தன்மையுள்ள விலங்காகிய யானை; 107. வலயம் - சக்கரப்படை.

கதிர் அயில் படைக் குலம் வரன்முறை முறை கடாவ,
அதிர் பிணப் பெருங் குன்றுகள் படப் பட, அழிந்த
உதிரம் உற்ற பேர் ஆறுகள் திசை திசை ஓட,
எதிர் நடக்கில, குரக்குஇனம்; அரக்கரும் இயங்கார். 109

யாவர் ஆங்கு இகல் வானரம் ஆயினர், எவரும்
தேவர் ஆதலின், அவரொடும் விசும்பிடைத் திரிந்தார்;
மேவு காதலின் மெலிவுறும் அரம்பையர் விரும்பி,
ஆவி ஒன்றிடத் தழுவினர், பிரிவு நோய் அகன்றார். 110

கரக்கும் மாயமும், வஞ்சமும், களவுமே, கடனா,
இரக்கமே முதல் தருமத்தின் நெறி ஒன்றும் இல்லா,
அரக்கரைப் பெருந் தேவர்கள் ஆக்கின அமலன்
சரத்தின், வேறு இனிப் பவித்திரம் உள எனத் தகுமே? 111

அந்தகன் பெரும் படைக்கலம் மந்திரத்து அமைந்தான்,
இந்து வெள் எயிற்று அரக்கரும், யானையும், தேரும்,
வந்த வந்தன, வானகம் இடம் பெறாவண்ணம்
சிந்தினான் சரம், இலக்குவன், முகம்தொறும் திரிந்தான். 112

கும்பகருணன் களத்தில் இட்ட தண்டைக் கொண்டு அனுமன் பொருதல்

கும்பகன்னன் ஆண்டு இட்டது, வயிர வான் குன்றின்
வெம்பு வெஞ் சுடர் விரிப்பது, தேவரை மேல்நாள்
தும்பையின் தலைத் துரந்தது, சுடர் மணித் தண்டு ஒன்று,
இம்பர் ஞாலத்தை நெளிப்பது, மாருதி எடுத்தான். 113

'காற்று அன்று, இது கனல் அன்று' என இமையோரிடை காணா
ஏற்றம் கடு விசையோடு உயர் கொலை நீடிய இயல்பால்,
சீற்றம் தனி உருவாய், இடை தேராதது ஓர் மாறு ஆய்க்
கூற்றம் கொடு முனை வந்தெனக் கொன்றான், இகல் நின்றான்.

வெங் கண் மதமலைமேல், விரை பரிமேல், விடு தேர்மேல்,
சங்கம் தரு படை வீரர்கள் உடல்மேல், அவர் தலைமேல்,
''எங்கும் உளன் ஒருவன்'' என இரு நாள் மறை தெரிக்கும்
செங் கண்ணவன் இவனே' எனத் திரிந்தான்—கலை தெரிந்தான்.

110. தேவர்களே வானரராய்ப் பிறந்தனர் ஆதலின், அவர்கள் போரில் இறந்து தேவ உடம்பினராய் விண் புக, அவர்தம் மனைவியரான அரம்பையர் தழுவிப் பிரிவுத் துயர் தவிர்ந்தனர் என்பதாம்; 111. பவித்திரம் - தூய்மை; 112. அந்தகன் பெரும்படைக்கலம் - இயமாத்திரம்; மந்திரத்து அமைத்தல் - மந்திரத்தால் படைக்கலமாக அமைத்துக் கொள்ளுதல்; 113. தும்பையின் தலை - போரில்; 115. சங்கம் - தொகுதி.

கிளர்ந்தாரையும் கிடைத்தாரையும் கிழித்தான், கனல் விழித்தான்;
களம்தான் ஒரு குழம்பு ஆம் வகை அரைத்தான், உருக் கரைத்தான்;
வளர்ந்தான் நிலை உணர்ந்தார், 'உலகு ஒரு மூன்றையும் வலத்தால்
அளந்தானும் முன் இவனே?' என இமையோர்களும் அயிர்த்தார். 116

மத்தக் கரி நெடு மத்தகம் வகிர்பட்டு உக மணி மேல்
முத்தின் பொலி முழு மேனியன், முகில் விண் தொடு மெய்யான்,
ஒத்தக் கடையுகம் உற்றுழி, உறு கால் பொர, உடு மீன்
தொத்தப் பொலி கனகக் கிரி வெயில் சுற்றியது ஒத்தான். 117

இடித்தான் நிலம் விசும்போடு என, இட்டான் அடி, எழுந்தான்;
பொடித்தான், கடற் பெருஞ் சேனையை; பொலந் தண்டு தன் வலத்தால்
பிடித்தான்; மத கரி, தேர், பரி, பிழம்பு ஆனவை குழம்பா
அடித்தான்; உயிர் குடித்தான்; எடுத்து ஆர்த்தான்; பகை தீர்த்தான்.

நூறுயிரம் மத மால் கரி, ஒரு நாழிகை நுவல்போது,
ஆறுய், நெடுங் கடுஞ் சோரியின் அளறு ஆம் வகை அரைப்பான்,
ஏறு ஆயிரம் எனலாய் எழு வய வீரரை இடறி,
தேருது உறு கொலை மேவிய திசை யானையின் திரிந்தான். 119

தேர் ஏறினர், பரி ஏறினர், விடை ஏறினர், சின வெங்
கார் ஏறினர், மழை ஏறினர், கலை ஏறினர், பல வெம்
போர் ஏறினர், புகழ் ஏறினர், புகுந்தார் புடை வளைந்தார்;
நேர் ஏறினர் விசும்பு ஏறிட, நெரித்தான், கதை திரித்தான்.

அரி குல மன்னன், நீலன், அங்கதன், குமுதன், சாம்பன்,
பரு வலிப் பனசன் என்று இப் படைத் தலை வீரர் யாரும்,
பொரு சினம் திருகி, வென்றிப் போர்க் கள மருங்கில் புக்கார்;
ஒருவரை ஒருவர் காணார்; உயர் படைக் கடலின் உள்ளார். 121

அனுமன் – அகம்பன் போர்

தொகும் படை அரக்கர் வெள்ளம் துறைதொறும் அள்ளித் தூவி,
நகம் படை ஆகக் கொல்லும் நரசிங்கம் நடந்தது என்ன,
மிகும் படைக் கடலுள் செல்லும் மாருதி, வீர வாழ்க்கை
அகம்பனைக் கிடைத்தான், தண்டால் அரக்கரை அரைக்கும் கையான்.

116. கிளர்தல் - (சினத்தால்) பொங்கி எழுதல்; கிடைத்தல் - எதிர்த்தல், கையில் அகப்படலும் ஆம்; 117. மத்தம் - மதம்; 122. நகம் படை ஆக - நகத்தையே படையாகக் கொண்டு.

மலைப் பெருங் கழுதை ஐஞ்ஞூற்று இரட்டியான், மனத்தின் செல்லும்
தலைத் தடந் தேரன், வில்லன், தாருகன் என்னும் தன்மைக்
கொலைத் தொழில் அவுணன்; பின்னை, இராக்கத வேடம் கொண்டான்,
சிலைத் தொழில் குமரன் கொல்ல, தொல்லை நாள் செருவில் தீர்ந்தான்.

'பாகசாதனனும், மற்றைப் பகை அடும் திகிரி பற்றும்
ஏக சாதனனும், மூன்று புரமும் பண்டு எரித்துளோனும்
போக; தாம் ஒருவர் மற்று இக் குரங்கொடு பொரக் கற்றுரே,
ஆக; கூற்று ஆவி உண்பது இதனின் மேற்று ஆகும்' என்றான்.

'யான் தடேன்என்னின், மற்று இவ் எழு திரை வளாகம் என் ஆம்?
வான் தடாது; அரக்கர் என்னும் பெயரையும் மாய்க்கும்' என்ன,
ஊன் தடாநின்ற வாளி மழை துரந்து, உருத்துச் சென்றான்;
மீன் தொடாநின்ற திண் தோள் அனுமனும், விரைவின் வந்தான்.

தேரொடு களிறும் மாவும் அரக்கரும் நெருக்கித் தெற்ற,
காரொடு கனலும் காலும் கிளர்ந்தது ஓர் காலம் என்ன,
வாரொடு தொடர்ந்த பைம் பொற் கழலினன் வருதலோடும்,
சூரொடும் தொடர்ந்த தண்டைச் சுழற்றினன், வயிரத் தோளான். 126

எற்றின, எறிந்த, வல்லை ஏயின, எய்த, பெய்த,
முற்றின படைகள் யாவும், முறை முறை முறிந்து சிந்த,
சுற்றின வயிரத் தண்டால் துகைத்தனன், அமரர் துள்ள;
கற்றிலன் அன்று கற்றான், கதையினல் வதையின் கல்வி. 127

அகம்பனும் காணக் காண, ஐ-இரு கோடிக் கைம்மா,
முகம் பயில் கலினப் பாய்மா, முனை எயிற்று அரக்கர், மூரி
நுகம் பயில் தேரினோடும் நுறுக்கினன்; நூழில் தீர்த்தான்;—
உகம் பெயர் ஊழிக் காற்றின் உலைவு இலா மேரு ஒப்பான். 128

'இன்று இவன்தன்னை விண்ணுடு எற்றி, வாள் இலங்கை வேந்தை
வென்றியன் ஆக்கி, மற்றை மனிதரை வெறியர் ஆக்கி,
நின்று உயர் நெடிய துன்பம் அமரர்பால் நிறுப்பல்' என்னச்
சென்றனன் அரக்கன்; 'நன்று, வருக!' என அனுமன் சேர்ந்தான்.*

123. முருகக் கடவுளால் அழிக்கப்பட்ட தாருகாசுரனே இப்பொழுது அகம்பன் என்னும். அரக்கனுய்ப் பிறந்துள்ளான் என்றவாறு; 124. பாகசாதனன் - பாகன் என்னும் அசுரனைக் கொன்றவனாகிய இந்திரன்; ஏகசாதனன் - ஒப்பற்ற கருவியையுடையவன்; 125. ஊன் தடா நின்ற வாளி - ஊனுடம்பினையுடைய உயிர்களைத் தடுத்து அழிக்கவல்ல அம்பு; 126. தெற்ற - செறிந்து உடன் வர; 128. முகம் பயில் கலினம் - முகத்தில் பொருந்திய கடிவாளம்.

படுகளப் பரப்பை நோக்கி, பாழி வாய் அதுக்கி, நாழில்
சுடு கனற் பொறிகள் வெங் கண் தோன்றிட, கொடித் தேர் தூண்டி,
விடு கனல் பகழி மாரி மழையினும் மும்மை வீசி,
முடுகுறச் சென்று, குன்றின் முட்டினன், முகிலின் ஆர்ப்பான்.

சொரிந்தன பகழி மாரி தோளினும் மார்பின்மேலும்
தெரிந்தன—அசனி போலத் தெறு பொறி பிதிர்வ திக்கின்,
வரிந்தன எருவை மானச் சிறைகளால், அமரர் மார்பை
அரிந்தன, வடிம்பு பொன் கொண்டு அணிந்தன, வாங்கு கண்ண. 131

மார்பினும் தோளின்மேலும், வாளி வாய் மடுத்த வாயில்,
சோர் பெருங் குருதி சோரத் துளங்குவான், தேருமுன்னம்,
தேர் இரண்டு அருகும் பூண்ட கழுதையும் அச்சும் சிந்த,
சாரதி, புரள, வீரத் தண்டினல் கண்டம் செய்தான். 132

'வில்லினல் இவனை வெல்லல் அரிது' என, நிருதன்—வெய்ய
மல்லினல் இயன்ற தோளின், வளியினல், வானத் தச்சன்
கொல்லினல் அமைந்தது, ஆங்கு, ஓர் கொடுமுனைத் தண்டு கொண்டான்,
அல்லினல் வகுத்தது அன்ன மேனியான், கடலின் ஆர்ப்பான்.

தாக்கினர்; வலத்து மற்றை இடத்தினும் திரிந்தார் சாரி;
ஓக்கினர்; ஊழின் ஆர்ப்புக் கொட்டினர்; கிட்டினர்; கீழ்த்
தூக்கினர்; சுழற்றினர், மேல்; சுற்றினர், எற்றி வெற்றி;
நீக்கினர்; நெருக்கினர் போய்; நீங்கினர், ஏங்கினர் மேல். 134

தட்டினர்; தழுவினர்; மேல் தாவினர்; தரையினேடும்
கிட்டினர்; கிடைத்தார்; வீசிப் புடைத்தனர் கீழும் மேலும்
கட்டினர்; காத்தார்; ஒன்றும் காண்கிலார், இறவு; கண்ணுற்று,
ஒட்டினர்; மோதி வட்டம் ஓடினர்; ஆதி போனர். 135

மய்யொடும் பகைத்து நின்ற நிறத்தினன் வயிர மார்பில்,
பொய்யொடும் பகைத்து நின்ற குணத்தினன் புகுந்து மோத,
வெய்யவன், அதனைத் தண்டால் விலக்கினன்; விலக்கலோடும்,
கய்யொடும் இற்று, மற்று அக் கதை களம் கண்டது அன்றே. *

கய்யொடு தண்டு நீங்க, கடல் எனக் கலக்கம் உற்ற
மெய்யொடு நின்ற வெய்யோன், மிடலுடை இடக் கை ஓச்சி,
அய்யனை அலங்கல் ஆகத்து அடித்தனன், அடித்த ஓசை,
ஒய்யென வயிரக் குன்றத்து உருமின்ஏறு இடித்தது ஒத்த. *

131. எருவை மானச் சிறைகளால் வரிந்தன எனக் கூட்டுக; 132. வாயில் - இடங்கள்; 133. வானத் தச்சன் - விசுவகருமா; கொல் - கொற்றொழில்; 134. ஒக்கினர் - ஓங்குவித்தார்; 135. வட்டம் ஓடுதல் - வட்டமாகச் சுற்றி ஓடுதல், சாரி போதல்; ஆதி போதல் - நேராக ஓடுதல்.

அடித்தவன்தன்னை நோக்கி, அசனிஏறு அனைய தண்டு
பிடித்து நின்றேயும் எற்றான், 'வெறுங்கையான்; பிழையிற்று' என்னா,
மடித்து வாய், இடத்த கையால் மார்பிடைக் குத்த, வாயால்
குடித்து நின்று உமிழ்வான் என்னக் கக்கினன், குருதி வெள்ளம். 138

மீட்டும் அக் கையால் வீசி, செவித்தலத்து எற்ற, வீழ்ந்தான்;
கூட்டினான் உயிரை, விண்ணோர் குழாத்திடை; அரக்கர் கூட்டம்
காட்டில் வாழ் விலங்கு மாக்கள் கோள் அரி கண்ட என்ன,
ஈட்டம் உற்று எதிர்ந்த எல்லாம் இரிந்தன, திசைகள் எங்கும்.

அனுமன் முதலியோர் ஒருவரை ஒருவர் காணாது திகைத்தல்

ஆர்க்கின்ற குரலும் கேளான்; இலக்குவன் அசனி ஏற்றைப்
பேர்க்கின்ற சிலையின் நாணின் பேர் ஒலி கேளான்; வீரன்
யார்க்கு இன்னல் உற்றது என்பது உணர்ந்திலன்; இசைப்போர் இல்லை;
போர்க் குன்றம் அனைய தோளான் இனையது ஓர் பொருமல் உற்றான்.

வீசின நிருதர் சேனை வேலையில் தென்மேல் திக்கின்
யோசனை ஏழு சென்றான் அங்கதன்; அதனுக்கு அப்பால்,
ஆசையின் இரட்டி சென்றான் அரி குலத்து அரசன்; அப்பால்,
ஈசனுக்கு இளைய வீரன் இரட்டிக்கும் இரட்டி சென்றான். 141

மற்றையோர் நாலும் ஐந்தும் யோசனை மலைந்து புக்கார்;
கொற்ற மாருதியும் வள்ளல் இலக்குவன் நின்ற சூழல்
முற்றினன்—இரண்டு மூன்று காவதம் ஒழிய, பின்னும்
சுற்றிய சேனை நீர்மேல் பாசிபோல் மிடையும் துள்ளி. 142

'இளையவன் நின்ற சூழல் எய்துவென், விரைவின்' என்று ஓர்
உளைவு வந்து உள்ளம் தூண்ட, ஊழி வெங் காலின் செல்வான்,
களைவு அருந் துன்பம் நீங்கக் கண்டனன் என்ப மன்னோ—
விளைவன செருவில் பல் வேறு ஆயின குறிகள் மேய. 143

ஆனையின் கோடும், பீலித் தழைகளும், ஆரத்தோடு
மான மா மணியும், பொன்னும், முத்தமும், கொழித்து வாரி,
மீன் என அங்கும் இங்கும் படைக்கலம் மிளிர, வீசும்
பேன வெண் குடைய ஆய, குருதிப் பேர் ஆறு கண்டான். 144

138. பிடித்து நின்றேயும் - பிடித்திருந்தும்; 139. செவித்தலம் - கன்னம், காதும் ஆம்; 140. பொருமல் - பெருந் துயரம்; 141. வீசின - வெகு தூரம் பரவியிருந்த; 143. உளைவு - வருத்தம்; 144. பேனம் - நுரை.

ஆசைகள்தோறும் சுற்றி அலைக்கின்ற அரக்கர்தம்மேல்
வீசின பகழி, அற்ற தலையொடும் விசும்பை முட்டி,
ஓசையின் உலகம் எங்கும் உதிர்வுற, ஊழி நாளில்
காசு அறு கல்லின் மாரி பொழிவபோல், விழுவ கண்டான்.*

மான வேல் அரக்கர் விட்ட படைக்கலம், வான மாரி
ஆன வன் பகழி சிந்த, திசைதொறும் பொறியோடு அற்று
மீன் இனம் விசும்பின்நின்றும் இருள் உக விழுவ போல,
கானகம் தொடர்ந்த தீயின் சுடுவன பலவும் கண்டான். 146

அருளுடைக் குரிசில் வாளி, அந்தரம் எங்கும் தாம் ஆய்,
தெருள் உறத் தொடர்ந்து வீசிச் செல்வன, தேவர் காண
இருளிடைச் சுடலை ஆடும் எண் புயத்து அண்ணல் வண்ணச்
சுருளுடைச் சடையின் கற்றைச் சுற்று எனச் சுடர்வ, கண்டான்.

நெய் உறக் கொளுத்தப்பட்ட நெருப்பு என, பொருப்பின் ஓங்கும்
மெய் உறக் குருதித் தாரை விசும்பு உற, விளங்குகின்ற—
அய்யனை, கங்குல் மாலை, அரசு என அறிந்து, காலம்,
கய் விளக்கு எடுத்தது என்ன—கவந்தத்தின் காடு கண்டான்.

ஆள் எலாம் இழந்த தேரும் ஆனையும் ஆடல் மாவும்,
நாள் எலாம் எண்ணினாலும் தொலைவு இலர் நாதர் இன்றி,
தாள் எலாம் குலைய ஒடித் திரிவன, தாங்கல் ஆற்றும்
கோள் இலா மன்னன் நாட்டுக் குடி எனக் குலைவ கண்டான்.

மிடல் கொளும் பகழி மாரி, வானினும் மும்மை வீசி,
மடல் கொளும் அலங்கல் மார்பன் மலைந்திட, உலைந்து மாண்டார்
உடல்களும், உதிர நீரும், ஒளிர் படைக்கலமும், உற்ற
கடல்களும், நெடிய கானும், கார் தவழ் மலையும், கண்டான்.

சுழித்து எறி ஊழிக் காலின் துருவினன் தொடரும் தோன்றல்,
தழிக் கொண்ட குருதி வேலை தாவுவான், 'தனிப் பேர் அண்டம்
கிழித்தது, கிழித்தது' என்னும் நாண் உரும்ஏறு கேட்டான்;
அழித்து ஒழி காலத்து ஆர்க்கும் ஆர்கலிக்கு இரட்டி ஆர்த்தான். 151

147. சுடலை - சுடுகாடு; எண் புயத்து அண்ணல் - சிவபெருமான், இரவில் ஒளிரும் வாளிகட்குச் சிவன் சடைக்கற்றையின் ஒளிவட்டம் உவமை; 148. கங்குல் மாலைக் காலம் - கங்குல் எனப்படுகின்ற இராக்காலம்; காடு - மிகுதி; 149. தாங்கல் - காத்தல்; கோள் - கொள்கை; 151. தாவுவான் - கடந்து செல்பவனாகிய அனுமன்.

அனுமனைத் தழுவி, இலக்குவன் சேனையின் நிலைமை உசாவுதல்

ஆர்த்த பேர் அமலை கேளா, அணுகினன் அனுமன்; 'எல்லா
வார்த்தையும் கேட்கல் ஆகும்' என்று, அகம் மகிழ்ந்து, வள்ளல்
பார்ப்பதன் முன்னம் வந்து வணங்கினன், விசயப் பாவை
தூர்த்தனை; இளைய வீரன் தழுவினன், இனைய சொன்னான்: 152

'அரி குல வீரர், ஐய! யாண்டையர்? அருக்கன் மைந்தன்
பிரிவு உனைச் செய்தது எவ்வாறு? அங்கதன் பெயர்ந்தது எங்கே?
விரி இருள் பரவைச் சேனை வெள்ளத்து விளைந்தது ஒன்றும்
தெரிகிலென்; உரைத்தி' என்றான். சென்னிமேல் கையன் சொல்வான்.

அனுமன் மறுமொழி

'போயினார் போயவாறும், போயினது அன்றிப் போரில்
ஆயினார் ஆயது ஒன்றும், அறிந்திலென், ஐய! யாரும்
மேயினார் மேய போதே தெரிவது, விளைந்தது' என்றான்—
தாயினான் வேலையோடும் அயிந்திரப் பரவைதன்னை. 154

'மந்திரம் உளதால், ஐய! உணர்வுறும் மாலைத்து; அஃது உன்
சிந்தையின் உணர்ந்து, செய்யற்பாற்று எனின், செய்தி; தெவ்வர்
தந்திரம்அதனைத் தெய்வப் படையினால் சமைப்பின் அல்லால்,
எந்தை! நின் அடியர் யாரும் எய்தலர், நின்னை' என்றான். 155

இலக்குவன், சிவன் படை தொடுத்தல்

'அன்னது புரிவென்' என்னா, ஆயிர நாமத்து அண்ணல்-
தன்னையே வணங்கி வாழ்த்தி, சரங்களைத் தெரிந்து தாங்கி,
பொன் மலை வில்லினான்தன் படைக்கலம் பொருந்தப் பற்றி,
மின் எயிற்று அரக்கர்தம்மேல் ஏவினான்—வில்லின் செல்வன்.

முக்கணான் படையை மூட்டி விடுதலும், மூங்கில் காட்டில்
புக்கது, ஓர் ஊழித் தீயின், புறத்தின் ஓர் உருவும் போகாது
அக் கணத்து எரித்து வீழ்த்தான், அரக்கர்தம் சேனை; ஆழித்
திக்கு எலாம் இருளும் தீர்ந்த; தேவரும் மயக்கம் தீர்ந்தார்.

தேவர்தம் படையை விட்டான் என்பது சிந்தை செய்யா,
மா பெருந் தேரில் நின்ற மகோதரன் மறையப் போனான்;
யாவரும் இரிந்தார் எல்லாம், இன மழை கழிய ஆர்த்து,
கோ இளங் களிற்றை வந்து கூடினார்; ஆடல் கொண்டார். 158

152. வார்த்தை - செய்தி; விசயப் பாவை தூர்த்தன் - வெற்றி மங்கையின் ஆசை நாயகனாகிய அனுமன்; 154. மேயினார் - சென்றவர்; மேய போது - மீண்டு வந்தபோது; அயிந்திரப் பரவை - ஐந்திர வியாகரணமாகிய நூற் கடல்; 155. சமைத்தல் - அழித்தல், போக்குதல்.

யாவர்க்கும் தீது இலாமை கண்டு கண்டு, உவகை ஏற,
தேவர்க்கும் தேவன் தம்பி திரு மனத்து ஐயம் தீர்ந்தான்;
காவல் போர்க் குரங்கின் சேனைக் கடல் எனக் கலந்து புல்ல,
பூ வர்க்கம் இமையோர் தூவ, பொலிந்தனன்; தூதர் போனார்.

தூதர், இராவணனுக்கும் இந்திரசித்திற்கும் செய்தி கூறுதல்

இலங்கையர் கோனை எய்தி, எய்தியது உரைத்தார், 'நீவிர்
விலங்கினிர் போலும்; வெள்ளம் நூற்றை ஓர் வில்லின்,வேழக்
குலங்களினோடும் கொல்லக் கூடுமோ?' என்ன, 'கொன்றை
அலங்கலான் படையின்' என்றார். 'அன்னதேல், ஆகும்' என்றான். 160

'வந்திலன் இராமன்; வேறு ஓர் மலை உளான்; உந்தை, மாயம்
தந்தன தீர்ப்பான் போனான், உண்பன தாழ்க்க; தாழா
எந்தை! ஈது இயன்றது' என்றார். 'மகோதரன் யாண்டை?' என்ன,
'அந்தரத்திடையன்' என்றார். இராவணி, 'அழகிற்று!' என்றான். 161

இந்திரசித்தன் பிரமாத்திரம் ஏவ வேள்வி செய்தல்

'காலம் ஈது' எனக் கருதிய இராவணன் காதல்,
ஆல மா மரம் ஒன்றினை விரைவினில் அடைந்தான்;
மூல வேள்விக்கு வேண்டுவ கலப்பைகள் முறையால்
கூலம் நீங்கிய இராக்கதப் பூசுரர் கொணர்ந்தார். 162

அம்பினால் பெருஞ் சமிதைகள் அமைத்தனன்; அனலில்
தும்பை மா மலர் தூவினன்; காரி எள் சொரிந்தான்;
கொம்பு பல்லொடு, கரிய வெள்ளாட்டு இருங் குருதி,
வெம்பு வெந் தசை, முறையின் இட்டு, எண்ணெயால் வேட்டான். 163

பிரமாத்திரத்துடன் வானில் மறைந்திருத்தல்

வலம் சுழித்து வந்து எழுந்து எரி, நறு வெறி வயங்கி,
நலம் சுரந்தன பெருங் குறி முறைமையின் நல்க,
குலம் சுரந்து எழு கொடுமையான், முறையினில் கொண்டே,
'நிலம் சுரந்து எழு வென்றி' என்று உம்பரில் நிமிர்ந்தான். 164

161. உந்தை - உன் சிறிய தந்தையாகிய வீடணன்; இயன்றது - நிகழ்ந்தது; 162. இராவணன் காதல் - இராவணன் மகனாகிய இந்திரசித்து; கலப்பைகள் - வேள்வி செய்தற்கு வேண்டப்படும் சாதனங்கள்; கூலம் - ஒழுக்கநெறி; 163. காரி எள் - கருமை நிறமுடைய எள்; வேட்டான் - ஓமஞ் செய்தான்; 164. நறு வெறி - நறு மணம்.

விசும்பு போயினன், மாயையின் பெருமையான்; மேலைப்
பசும் பொன் நாட்டவர் நாட்டமும் உள்ளமும் படரா,
அசும்பு விண்ணிடை அடங்கினன், முனிவரும் அறியாத்
தசும்பு நுண் நெடுங் கோளொடு காலமும் சார. 165

மகோதரன் இந்திர வடிவுடன் வந்து பொருதல்

அனையன் நின்றனன்; அவ் வழி, மகோதரன் அறிந்து, ஓர்
வினையம் எண்ணினன், இந்திர வேடத்தை மேவி,
துனை வலத்து அயிராவதக் களிற்றின்மேல் தோன்றி,
முனைவர் வானவர் எவரொடும் போர் செய மூண்டான். 166

'அரக்கர், மானிடர், குரங்கு, எனும் அவை எலாம் அல்லா
உருக்கள் யா உள, உயிர் இனி உலகத்தின் உழல்வ,
தருக்கும் போர்க்கு வந்தனவாம்' எனச் சமைத்தான்;
வெருக்கொளப் பெருங் கவிப் படை குலைந்தது, விலங்கி. 167

'கோடு நான்குடைப் பால் நிறக் களிற்றின்மேல் கொண்டான்
ஆடல் இந்திரன்; அல்லவர் யாவரும் அமரர்,
சேடர், சிந்தனை முனிவர்கள்; அமர் பொரச் சீறி,
ஊடு வந்து உற்றது என்கொலோ, நிபம்?' என உலைந்தார். 168

இலக்குவன் அனுமனை முனிவர் முதலியோர் பொரும் காரணம் வினவல்

அனுமன் வாள் முகம் நோக்கினன், ஆழியை அகற்றித்
தனு வலம் கொண்ட தாமரைக் கண்ணவன் தம்பி,
'முனிவர் வானவர் முனிந்து வந்து எய்த, யாம் முயன்ற
துனி இது என்கொலோ? சொல்லுதி, விரைந்து' எனச் சொன்னான்.

இந்திரசித்தன் பிரமாத்திரத்தை இலக்குவன்மேல் விடுதலும் அதன் விளைவுகளும்

இன்ன காலையின் இலக்குவன் மேனிமேல் எய்தான்,
முன்னை நான்முகன் படைக்கலம்; இமைப்பதன்முன்னம்,
பொன்னின் மால் வரைக் குரீஇஇனம் மொய்ப்பது போல,
பன்னல் ஆம் தரம் அல்லன சுடர்க் கணை பாய்ந்த. 170

165. அசும்பு விண் - நீர்த்திவலையையுடைய வானம்; தசும்பு கோள் - அசையும் கிரகங்கள்; காலம் - வெற்றி பெறுதற்குரிய நற்காலம்; 166. துனை வலத்து அயிராவதம் - விரைவும் வன்மையும் உடைய வெள்ளை யானை; முனைவர் - முனிவர்; 168. சேடர் - எஞ்சியோர்; 169. துனி - வெறுப்பு, சண்டுக் குற்றம்; 170. பன்னல் - சொல்லல்.

கோடி கோடி நூறாயிரம் சுடர்க் கணைக் குழாங்கள்
மூடி மேனியை முற்றுறச் சுற்றின மூழ்க,
ஊடு செய்வது ஒன்று உணர்ந்திலன், உணர்வு புக்கு ஒடுங்க,
ஆடல் மாக் கரி சேவகம் அமைந்தென, அயர்ந்தான். 171

அனுமன், 'இந்திரன் வந்தவன் என்கொல், ஈது அமைந்தான்?
இனி என்? எற்றுவென் களிற்றினோடு எடுத்து' என எழுந்தான்;
தனுவின் ஆயிர கோடி வெங் கடுங் கணை தைக்க,
நினைவும் செய்கையும் மறந்துபோய், நெடு நிலம் சேர்ந்தான்.

அருக்கன் மா மகன், ஆடகக் குன்றின்மேல் அலர்ந்த
முருக்கின் கானகம் ஆம் என, குருதி நீர் முடுக
தருக்கி, வெஞ் சரம் தலைத்தலை மயங்கின தைக்க,
உருக்கு செம்பு என கண்ணினன், நெடு நிலம் உற்றான். 173

அங்கதன், பதினாயிரம் அயில் கணை அழுந்த,
சிங்கஏறு இடியுண்டென நெடு நிலம் சேர்ந்தான்;
சங்கம் ஏறிய பெரும் புகழ்ச் சாம்பனும் சாய்ந்தான்,
துங்க மார்பையும் தோளையும் வடிக் கணை துளைக்க. 174

நீலன், ஆயிரம் வடிக் கணை நிறம் புக்கு நெருங்க,
காலனார் முகம் கண்டனன்; இடபன் விண் கலந்தான்;
ஆலமே அன்ன பகழியால், பனசனும் அயர்ந்தான்;
கோலின் மேவிய கூற்றினால், குமுதனும் குறைந்தான். 175

வேலை கட்டவன், ஆயிரம் பகழியால், வீழ்ந்தான்;
வாலி நேர் வலி மயிந்தனும் துமிந்தனும் மடிந்தார்;
கால வெந் தொழில் கவயனும் வானகம் கண்டான்;
மாலை வாளியின் கேசரி மண்ணிடை மடிந்தான். 176

கனகன் ஆயிரம் கணை பட, விண்ணிடைக் கலந்தான்;
அனகன் ஆயின சங்கனும் அக் கணத்து அயர்ந்தான்;
முனையின் வாளியின் சதவலி என்பவன் முடிந்தான்;
புனையும் அம்பினில் தம்பனும் பொருப்பு எனப் புரண்டான். †

விந்தம் அன்ன தோள் சதவலி, சுசேடணன், வினதன்,
கெந்தமாதனன், இடும்பன், வன் ததிமுகன், கிளர,
உந்து வார் கணை கோடி தம் உடலம் உற்று ஒளிப்ப,
தம்தம் நல் உணர்வு ஒடுங்கினர், மண் உறச் சாய்ந்தார். † 178

171. சேவகம் - யானை துயிலும் இடம்; 173. அருக்கன் மாமகன் - சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவன்; 174. சங்கம் - (வீரர்) கூட்டம், அறிஞர் கூடிய அவை; 176. வேலை கட்டவன் - கடலை அணை கட்டித் தடுத்தவனாகிய நளன்; மாலை வாளி - மாலை போலத் தொடர்ச்சியாக வந்த அம்பு.

மற்றை வீரர்கள் யாவரும் வடிக் கணை மழையால்
முற்றும் வீந்தனர்; முழங்கு பேர் உதிரத்தின் முந்நீர்
எற்று வான் திரைக் கடலொடும் பொருது சென்று ஏற,
ஒற்றை வான் கணை ஆயிரம் குரங்கினை உருட்ட. 179

தளைத்து வைத்தது, சதுமுகன் பெரும் படை தள்ளி;
ஒளிக்க, மற்றொரு புகலிடம் உணர்கிலர்; உருமின்
வளைத்து வித்திய வாளியால், மண்ணொடும் திண்ணம்
முளைப் புடைத்தன ஒத்தன; வானரம் முடிந்த. 180

குவளைக் கண்ணினை வான் அர மடந்தையர் கோட்டித்
துவள, பாரிடைக் கிடந்தனர்; குருதி நீர் சுற்றித்
திவள, கீழொடு மேல் புடை பரந்து இடை செறிய,
பவளக் காடுடைப் பாற்கடல் ஒத்தது, அப் பரவை. 181

விண்ணில் சென்றது, கவிக் குலப் பெரும் படை வெள்ளம்;
கண்ணில் கண்டனர் வானவர், விருந்து எனக் கலந்தார்,
உள் நிற்கும் பெருங் களிப்பினர், அளவளாய் உவந்தார்;
'மண்ணில் செல்லுதிர், இக் கணத்தே' எனும் மனத்தார். 182

'பார் படைத்தவன் படைக்கு ஒரு பூசனை படைத்தீர்;
நீர் படக் கடவீர்அலீர்;—வரி சிலை நெடியோன்
பேர் படைத்தவற்கு அடியவருக்கு அடியரும் பெறுவார்,
வேர் படைத்த வெம் பிறவியில் துவக்குறு, வீடு. 183

'நங்கள் காரியம் இயற்றுவான் உலகிடை நடந்தீர்;
உங்கள் ஆர் உயிர் எம் உயிர்; உடல் பிறிது உற்றீர்;
செங் கண் நாயகற்காக வெங் களத்து உயிர் தீர்ந்தீர்;
எங்கள் நாயகர் நீங்கள்' என்று இமையவர் இசைத்தார். 184

இந்திரசித்தன் தந்தையின் இருப்பிடம் சென்று செய்தி சொல்லுதல்

'வெங் கண் வானரக் குழுவொடும், இளையவன் விளிந்தான்;
இங்கு வந்திலன், இராமன் இப்போது' என இகழ்ந்தான்;
சங்கம் ஊதினன்; தாதையை வல்லையில் சார்ந்தான்;
பொங்கு போரிடைப் புகுந்துள பொருள் எலாம் புகன்றான். 185

180. முளைப் புடைதல் - முளையடித்து நிறுத்துதல்; 181. கோட்டி - தலை சாய்த்து; திவளுதல் - விளங்குதல்; 185. புகுந்துள பொருள் - விளைந்துள்ள நிகழ்ச்சிகள்.

'இராமன் இறந்திலனே?' என்ற இராவணன் வினவும் இந்திரசித்தன் விடையும்

'இறந்திலன்கொலாம் இராமன்?' என்று இராவணன் இசைத்தான்;
'துறந்து நீங்கினன்; அல்லனேல், தம்பியைத் தொலைத்து,
சிறந்த நண்பரைக் கொன்று, தன் சேனையைச் சிதைக்க,
மறந்து நிற்குமோ, மற்று அவன் திறன்?' என்றான், மதலை. 186

'அன்னதே' என, அரக்கனும் ஆதரித்து அமைந்தான்;
சொன்ன மைந்தனும், தன் பெருங் கோயிலைத் தொடர்ந்தான்;
மன்னன் ஏவலின் போயினன், மகோதரன் வந்தான்;
என்னை ஆளுடை நாயகன் வேறு இடத்து இருந்தான். 187

இராமன் தெய்வப் படைகளுக்கு வழிபாடு இயற்றிப் போர்க்களம் புகுதல்

செய்ய தாமரை நாள்மலர்க் கைத் தலம் சேப்ப,
துய்ய தெய்வ வான் படைக்கு எலாம் வரன்முறை துரக்கும்
மெய்கொள் பூசனை விதிமுறை இயற்றி, மேல், வீரன்,
'மொய்கொள் போர்க் களத்து எய்துவாம் இனி' என முயன்றான். 188

கொள்ளியின் சுடர் அனலிதன் பகழி கைக்கொண்டான்;
அள்ளி நுங்கலாம் ஆர் இருட் பிழம்பினை அழித்தான்;
வெள்ள வெங் களப் பரப்பினைப் பொருக்கென விழித்தான்;
தள்ளி, தாமரைச் சேவடி நுடங்குறச் சார்ந்தான். 189

இராமன், வீழ்ந்து கிடக்கும் சுக்கிரீவன் முதலியோரைத் தனித் தனி கண்டு வருந்துதல்

நோக்கினான் பெருந் திசைதொறும்; முறை முறை நோக்கி,
ஊக்கினான்; தடந் தாமரைத் திரு முகத்து உதிரம்
போக்கினான்; நிணப் பறந்தலை அழுவத்துள் புக்கான்;
காக்கும் வன் துணைத் தலைவரைத் தனித் தனி கண்டான். 190

சுக்கிரீவனை நோக்கி, தன் தாமரைத் துணைக் கண்
உக்க நீர்த்திரள் ஒழுகிட, நெடிது நின்று உயிர்த்தான்;
'தக்கதோ, இது நினக்கு!' என்று, தனி மனம் தளர்ந்தான்;
பக்கம் நோக்கினன்; மாருதி தன்மையைப் பார்த்தான். 191

'கடல் கடந்து புக்கு, அரக்கரைக் கருவொடும் கலக்கி,
இடர் கடந்து நான் இருக்க, நீ நல்கியது இதற்கோ?
உடல் கடந்தனவோ, உனை அரக்கன் வில் உதைத்த
அடல் கடந்த போர் வாளி?' என்று, ஆகுலித்து அழுதான். 192

188. துய்ய - தூய; 189. நுங்குதல் - உண்ணுதல்; 192. ஆகுலித்தல்- துன்புறுத்தல்.

'முன்னைத் தேவர்தம் வரங்களும், முனிவர்தம் மொழியும்,
பின்னைச் சானகி உதவியும், பிழைத்தன; பிறந்த
புன்மைச் செய் தொழில் என் வினைக் கொடுமையால் புகழோர்
என்னைப் போல்பவர் ஆர் உளர், ஒருவர்?' என்று இசைத்தான்.

'புன் தொழில் புலை அரசினை வெஃகி, என் பூண்டேன்?
கொன்று ஒருக்கினேன், எந்தையை; சடாயுவைக் குறைத்தேன்;
இன்று ஒருக்கினேன், இத்தனை வீரரை; இருந்தேன்!
வன் தொழிற்கு ஒரு வரம்பும் உண்டாய் வரவற்றோ? 194

'தமையனைக் கொன்று, தம்பிக்கு வானரத் தலைமை
அமைய நல்கினென், அடங்கலும் அவிப்பதற்கு அமைந்தேன்;
கமை பிடித்து நின்று, உங்களை இத்துணைக் கண்டேன்;
சுமை உடல் பொறை சுமக்க வந்தேன்' எனச் சொன்னான். 195

விடைக் குலங்களின் நடுவண் ஓர் விடை கிடந்தென்ன,
கடைக்கண் தீ உக, அங்கதக் களிற்றினைக் கண்டான்;
'படைக்கலங்களைச் சுமக்கின்ற பதகனேன், பழி பார்த்து,
அடைக்கலப் பொருள் காத்தவாறு அழகிது' என்று அழுதான்.

இலக்குவனைக் கண்டு இராமன் அடைந்த துயரம்

உடரிடைத் தொடர் பகழியின் ஒளிர் கதிர்க் கற்றைச்
சுடருடைப் பெருங் குருதியில், பாம்பு எனச் சுமந்த
மிடருடைப் பண மீமிசை, தான் பண்டை வெள்ளக்
கடரிடைத் துயில்வான் அன்ன தம்பியைக் கண்டான். 197

பொருமினான், அகம்; பொங்கினான்; உயிர் முற்றும் புகைந்தான்;
குரு மணித் திரு மேனியும், மனம் எனக் குலைந்தான்;
தருமம் நின்று தன் கண் புடைத்து அலமர, சாய்ந்தான்;
உருமினால் இடியுண்டது ஓர் மராமரம் ஒத்தான். 198

உயிர்த்திலன் ஒரு நாழிகை; உணர்ந்திலன் ஒன்றும்;
வியர்த்திலன், உடல்; விழித்திலன், கண் இணை; விண்ணோர்,
'அயிர்த்து இலன் கொல்?' என்று அஞ்சினர்; அங்கையும் தாளும்
பெயர்த்திலன்; உயிர் பிரிந்திலன்—கருணையால் பிறந்தான்.

தாங்குவார் இல்லை; தம்பியைத் தழீஇக்கொண்ட தடக் கை
வாங்குவார் இல்லை; வாக்கினால் தெருட்டுவார் இல்லை;
பாங்கர் ஆயினர் யாவரும் பட்டனர்; பட்ட
தீங்குதான் இது; தமியனை யார் துயர் தீர்ப்பார்? 200

194. வரவற்றோ - அமைய வல்லதோ; 195. கமை - பொறுமை.

கவந்த பந்தமும், கழுதும், தம் கணவரைக் காணார்
சிவந்த பண்ணியர் தேடினர் திரிபவர் திரளும்,
உவந்த சாதகர் ஈட்டமும், ஓரியின் ஒழுங்கும்,
நிவந்த; அல்லது, பிறர் இல்லை, களத்திடை நின்றார். 201

வான நாடியர் வயிறு அலைத்து அழுது, கண் மழை நீர்
சோனை மாரியின் சொரிந்தனர்; தேவரும் சோர்ந்தார்;
ஏனை நிற்பவும் திரிபவும் இரங்கின, எவையும்
ஞான நாயகன் உருவமே ஆதலின், நடுங்கி. 202

முகையின் நாள்மலர்க் கிழவற்கும், முக்கணான் தனக்கும்,
நகையும் நீங்கிய; திருமுகம், கருணையும் நலிந்த;
தொகையுள் நின்றவர்க்கு உள்ளது சொல்லி என்? தொடர்ந்த
பகையும் பார்க்கின்ற பாவமும் கலுழ்ந்தது, பரிவால். 203

அண்ணலும், சிறிது உணர்விேனாடு அயாவுயிர்ப்பு அணுகிக்
கண் விழித்தனன்; தம்பியைத் தெரிவுறக் கண்டான்;
'விண்ணை உற்றனன்; மீள்கிலன்' என்று, அகம் வெதும்பா,
புண்ணின் உற்றது ஓர் எரி அன்ன துயரினன் புலம்பும்: 204

சிறிது உணர்வு பெற்ற இராமன் இலக்குவனைக் குறித்துப் புலம்புதல்

'எந்தை இறந்தான்'' என்றும் இருந்தேன்; உலகு எல்லாம்
தந்தனென் என்னும் கொள்கை தவிர்ந்தேன்; தனி அல்லேன்;
கந்தன் இருந்தாய் நீ என நின்றேன்; உரை காணேன்;
வந்தனென், ஐயா! வந்தனென், ஐயா! இனி வாழேன்! 205

'தாயோ நீயே; தந்தையும் நீயே; தவம் நீயே;
சேயோ நீயே; தம்பியும் நீயே; திரு நீயே;
போயோ நின்றாய்; என்னை இகந்தாய்; புகழ் பாராய்,
நீயோ; யானோ, நின்னினும் நெஞ்சம் வலியேனோ? 206

'ஊறு நின்ற புண்ணுடையாய்பால் உயிர் காணேன்;
ஆறுநின்றேன், ஆவி சுமந்தேன்; அழிகின்றேன்;
ஏறே! இன்னும் உய்யினும் உய்வேன்; இரு கூறாக்
கீறா நெஞ்சம் பெற்றனென் அன்றோ, கெடுவேனே? 207

201. சாதகர் - பூதங்கள்; ஓரி - நரி; 202. ஞான நாயகன் - ஞானத் திணையே தன் உண்மை உருவாகக் கொண்டுள்ள இறைவன்; ஈண்டு இராமன்; 205. கந்தன் - முருகன்; 206. இகந்தாய் - நீங்கினவன் ஆனாய்.

'பயிலும் காலம் பத்தொடு நாலும் படர் கானத்து
அயில்கின்றேனுக்கு ஆவன நல்கி, அயிலாதாய்!
வெயில் என்று உன்னை, நின்று தளர்ந்தே மெலிவு எய்தி,
துயில்கின்றாயோ இன்று? இவ் உறக்கம் துறவாயோ? 208

அயிரா நெஞ்சும் ஆவியும் ஒன்றே எனும் அச் சொல்
பயிரா எல்லைப் பாதகனேற்கும் பரிவு உண்டோ?
செயிரோ இல்லா உன்னை இழந்தும், திரிகின்றேன்;
உயிரோ, நானோ, ஆர் இனி உன்னோடு உறவு, ஐயா! 209

'வேள்விக்கு ஏகி, வில்லும் இறுத்து, ''ஓர் விடம் அம்மா
வாழ்விக்கும்!'' என்று எண்ணினென், முன்னே வருவித்தேன்;
சூழ்வித்து, என்னைச் சுற்றினரோடும் சுடுவித்தேன்;
தாழ்வித்தேனோ, இத்தனை கேடும் தருவித்தேன்? 210

'மண்மேல் வைத்த காதலின், மாதா முதலோர்க்கும்
புண்மேல் வைத்த தீ நிகர் துன்பம் புகுவித்தேன்;
பெண்மேல் வைத்த காதலின், இப் பேறுகள் பெற்றேன்;
எண்மேல் வைத்தேன், என் புகழ்; யான்தான் எளியேனோ! 211

'மாண்டாய் நீயோ; யான் ஒருபோதும் உயிர் வாழேன்;
ஆண்டான்அல்லன் நானிலம், அந்தோ, பரதன்தான்!
பூண்டார் எல்லாம் பொன்றுவர், துன்பப் பொறையாற்றார்;
வேண்டாவோ, நான் நல் அறம் அஞ்சி, மெலிவுற்றால்? 212

'அறம், தாய், தந்தை, சுற்றமும், மற்றும், எனை அல்லால்,
துறந்தாய்! என்றும் என்னை மறாதாய்! துணை வந்து
பிறந்தாய்! என்னைப் பின்பு தொடர்ந்தாய்! பிரிவு அற்றாய்!
இறந்தாய்; உன்னைக் கண்டும் இருந்தேன், எளியேனோ? 213

'சான்றோர் மாதைத் தக்க அரக்கன் சிறை தட்ட,
ஆன்றோர் சொல்லும் நல் அறம் அன்னான் வயமானால்,
மூன்று ஆய் நின்ற பேர் உலகு ஒன்றாய் முடியாவேல்,
தோன்றாவோ, என் வில் வலி வீரத் தொழில் அம்மா? 214

'வேலைப் பள்ளக் குண்டு அகழிக்கும், விராதற்கும்,
காலின் செல்லும் கவந்தன் உயிர்க்கும், கரனுக்கும்,
மூலப் பொத்தல் செத்த மரத்து ஏழ் முதலுக்கும்,
வாலிக்கும்மே ஆயினவாறு என் வலி அம்மா? 215

209. அயிரா நெஞ்சு - ஐயுறாத தெளிந்த நெஞ்சம்; செயிர் - குற்றம்;
210. ஓர் விடம் - ஒரு நஞ்சு, ஈண்டுச் சீதை; 214. தட்ட - வைக்க.

'இருந்தேனுனல், இந்திரசித்தே முதலாய
பெருந் தேராரைக் கொன்று பிழைக்கப் பெறுவேனு?
வருந்தேன்; ''நீயே வெல்லுதி'' என்னும் வலி கொண்டேன்;
பொருந்தேன், நான், இப் பொய்ப் பிறவிக்கும் பொறை அல்லேன்! 216

'மாதாவும், நம் சுற்றமும், நாடும் மறையோரும்,
''ஏது ஆனுரோ?'' என்று தளர்ந்தே இறுவாரை,
தாதாய்! காணச் சால நினைந்தேன்; தரை ஆள்வேம்;
போதாய்; ஐயா, பொன் முடி என்னைப் புனைவிப்பான்! 217

'பாசமும் முற்றச் சுற்றிய போதும், பகையாலே
நாசமும் முற்ற இப்போதும், நடந்தேன், உடன் அல்லேன்;
நேசமும் அற்ருர் செய்வன செய்தேன்; நிலை நின்றேன்;
தேசமும் மற்று, என் கொற்ற நலத்தைத் தெரியாதோ? 218

'கொடுத்தேன் அன்றே, வீடணனுக்குக் குலம் ஆள
முடித்து ஓர் செல்வம்; யான் முடியாதே முடிகின்றேன்;
படித்தேன் அன்றே, பொய்ம்மை? குடிக்குப் பழி பெற்றேன்;
ஒடித்தேன் அன்றே என் புகழ் நானே, உணர்வு அற்றேன்?' 219

என்று என்று ஏங்கும், விம்மும், உயிர்க்கும், இடை அஃகி,
சென்று ஒன்று ஒன்ருேடு இந்தியம் எல்லாம் சிதைவு எய்த,
பொன்றும் என்னுத் தம்பியை ஆர்வத்தொடு புல்லி,
ஒன்றும் பேசான்; தன்னை மறந்தான், துயில்வுற்ருன். 220

தேவர்கள் இராமனுக்கு உண்மை உணர்த்துதல்

கண்டார் விண்ணேர்; கண்கள் புடைத்தார், கலுழ்கின்ருர்;
கொண்டார், துன்பம்; 'என் முடிவு?' என்னுக் குலைகின்ருர்;
'அண்டா! ஐயா! எங்கள் பொருட்டால் அயர்கின்ருய்;
உண்டோ, உன்பால் துன்பு?' என அன்பால் உரை செய்தார்.

'உன்னை உள்ளபடி அறியோம்; உலகை உள்ள திறம் உள்ளோம்;
பின்னை அறியோம்; முன் அறியோம்; இடையும் அறியோம், பிறழாமல்;
நின்னை வணங்கி, நீ வகுத்த நெறியில் நிற்கும் இது அல்லால்,
என்னை, அடியோம் செயற்பால?—இன்ப-துன்பம் இல்லோனே!

' ''அரக்கர் குலத்தை வேர் அறுத்து, எம் அல்லல் நீக்கி அருளாய்''
இரக்க, எம்மேல் கருணையினுல், ஏயா உருவம் இவை எய்தி, [என்று
புரக்கும் மன்னர் குடிப் பிறந்து போந்தாய்! அறத்தைப் பொறை
கரக்க நின்றே, நெடு மாயம் எமக்கும் காட்டக்கடவாயோ? [தீர்ப்பான்,

217. தாதாய் - அப்பனே, ஈண்டு முறையைக் குறியாது அன்புபற்றி நின்றது; 219. ஒடித்தல் - சிதைத்து அழித்தல்; 221. அண்டா - தேவனே.

'ஈன்று, எம் இடுக்கண் துடைத்து அளிப்பான் இரங்கி, அரசர் இல் பிறந்
"மூன்று ஆம் உலகம் துயர் தீர்த்தி" என்னும் ஆசை முயல்கின்றோம்; [தாய்!
ஏன்றும் மறந்தோம், "அவன் அல்லன்; மனிதன்" என்றே; இது மாயம்
போன்றது இல்லை; ஆளுடையாய்! பொய்யும் புகலப் புக்காயோ? 224

'அண்டம் பலவும், அனைத்து உயிரும், அகத்தும் புறத்தும் உள ஆக்கி,
உண்டும் உமிழ்ந்தும், அளந்து இடந்தும், உள்ளும் புறத்தும் உளை ஆகிக்
கொண்டு, சிலம்பி தன் வாயின் கூர் நூல் இயையக் கூடு இயற்றி,
பண்டும் இன்றும் அமைக்கின்ற படியை ஒருவாய்—பரமேட்டி!

'துன்ப விளையாட்டு இதுவேயும், உன்னைத் துன்பம் தொடர்பு இன்மை,
இன்ப விளையாட்டு ஆம்; எனினும், அறியாதேமுக்கு இடர் உற்றால்,
அன்பு விளையும், அருள் விளையும், அறிவு விளையும், அவை எல்லாம்,—
முன்பு, பின்பு, நடு, இல்லாய்!—முடித்தால் அன்றி, முடியாவே. 226

'வருவாய் போல வாராதாய்! வந்தாய் என்று மனம் களிப்ப,
வெருவாதிருந்தே நீ இடையே துன்பம் விளைக்க, மெலிகின்றேம்;
கரு ஆய் அளிக்கும் களைகண்ணே! நீயே இதனைக் காவாயேல்,
திரு வாழ் மார்ப! நின் மாயை எம்மால் தீர்க்கத் தீருமோ?'

'அம்பரீடற்கு அருளியதும், அயனார் மகனுக்கு அளித்ததுவும்,
எம்பிரானே! எமக்கு இன்று பயந்தாய் என்றே ஏமுறுவேம்;
வெம்பு துயரம் நீ உழக்க, வெளி காணாது மெலிகின்றேம்;
தம்பி துணைவா! நீ இதனைத் தவிர்த்து, எம் உணர்வைத் தாராயோ?'†

225. படி - தன்மை; 227. வெருவுதல் - அஞ்சுதல்; 228. அம்பரீடன் ஏகாதசி நோன்பு மேற்கொண்டு அடுத்த நாள் பாரணை (பட்டினிக்குப்பின் உண்ணுதல்) செய்ய இருக்கையில், விருந்தினராக வந்த துருவாச முனிவர் நாட்கடனை முடிக்கச் சென்றார். அவர் திரும்பு முன்னே, பாரணை முடித்தற்குரிய காலம் கடத்தலால் அம்பரீடன் இறைவனை வழிப்பட்ட தீர்த்தத்தை உட்கொண்டு பாரணை முடித்தான். முனிவர் அதனை அறிந்து வெகுண்டு தன் சடை மயிரில் ஒன்றை மண்ணில் எறிந்தார். அதிலிருந்து பூதம் ஒன்று தோன்ற, மன்னன் திருமாலைத் தியானித்தான். சக்கரப் படை தோன்றி அதனை அழித்து முனிவனைத் துரத்தியது. முனிவன் திரிமூர்த்திகளிடமும் அடைக்கலம் பெறாது மன்னனை அடைய, அவன் அவரைக் காத்தான். அயனார் மகன் - சிவன்; பஸ்மாசூரன் சிவனிடம் தான் எவர் தலைமீது கை வைத்தாலும் அவர் சாம்பராய்ப் போகும்படி வரம் பெற்று, அதனைச் சிவனிடமே சோதிக்கத் தொடங்கினான். அந்நிலையில் சிவன் மறையத் திருமால் ஒரு பெண்ணாகத் தோன்றவும், அசுரன் காமுற்று அணைய வர, அப் பெண், 'நீராடித் தூயோனாக வருக' என்ன, அசுரன் நீரில் முழுகித் தன் தலையைத் துவட்டியபொழுது பெற்ற வரத்தின்படி சாம்பராய் அழிந்தான்.

இராவணனிடம் தூதர், 'உன் பகை முடிந்தது' என அறிவித்தல்

என்ப பலவும் எடுத்து இயம்பி, இமையாதோரும் இடர் உழந்தார்;
அன்பு மிகுதியால், ஐயன் ஆவி உள்ளே அடங்கினன்,
துன்ப மனிதர் கருமமே புரிய முன்பு துணிந்தமையால்;
புன்கண் நிருதர் பெருந் தூதர் போனார், அரக்கனிடம் புகுந்தார். 229

'என் வந்தது, நீர்?' என்று அரக்கர்க்கு இறைவன் இயம்ப, 'எறி செருவில்,
நின் மைந்தன்தன் நெடுஞ் சரத்தால், துணைவர் எல்லாம் நிலம் சேர,
பின்வந்தவனும் முன் மடிந்த பிழையை நோக்கி, பெருந்துயரால், [தார்.
முன்வந்தவனும் முடிந்தான்; உன் பகை போய் முடிந்தது' என மொழிந்

22 சீதை களம் காண் படலம்

வெற்றிவிழாக் கொண்டாட இராவணன் கட்டளையிடுதல்

பொய்யார் தூதர் என்பதனால்,
பொங்கி எழுந்த உவகையன் ஆய்,
மெய் ஆர் நிதியின் பெரு வெறுக்கை
வெறுக்க வீசி, 'விளைந்தபடி
கய் ஆர் வரைமேல் முரசு ஏற்றி,
சாற்றி, ''நகரம் களி சிறப்ப,
நெய் ஆர் ஆடல் கொள்க!'' என்று,
நிகழ்த்துக' என்றான்;—நெறி இல்லான். 1

மாய்ந்த அரக்கர் உடலைக் கடலில் தள்ளல்

அந்த நெறியை அவர் செய்ய,
அரக்கன் மருத்தன்தனைக் கூவி,
'முந்த நீ போய், அரக்கர் உடல்
முழுதும் கடலில் முடுக்கிடு; நின்
சிந்தை ஒழியப் பிறர் அறியின்,
சிரமமும் வரமும் சிந்துவென்' என்று
உந்த, அவன் போய் அரக்கர் உடல்
அடங்கக் கடலினுள் இட்டான். 2

22: 1. நிதியின் பெரு வெறுக்கை - நிதியாகிய பெரிய செல்வம்: கய் ஆர் வரை - துதிக்கை பொருந்திய மலை போன்ற யானை: நெய் ஆர் ஆடல் - எண்ணெயிட்டு முழுகுகின்ற நீராடல்.

சீதையைக் களத்திற்குக் கொணர்தல்

'தெய்வ மானத்திடை ஏற்றி
மனிசர்க்கு உற்ற செயல் எல்லாம்
தய்யல் காணக் காட்டுமின்கள்;
கண்டால் அன்றி, தனது உள்ளத்து
அய்யம் நீங்காள்' என்று உரைக்க,
அரக்கர் மகளிர் இரைத்து ஈண்டி,
உய்யும் உணர்வு நீத்தாளை
நெடும் போர்க் களத்தின்மிசை உய்த்தார். 3

இராமனைக் கண்ட சீதையின் துயர்

கண்டாள் கண்ணால் கணவன் உரு;
அன்றி, ஒன்றும் காணாதாள்;
உண்டாள் விடத்தை என, உடலும்
உணர்வும் உயிர்ப்பும் உடன் ஓய்ந்தாள்;
தண் தாமரைப் பூ நெருப்புற்ற
தன்மை உற்றாள்; தரியாதாள்;
பெண்தான் உற்ற பெரும் பீழை
உலகுக்கு எல்லாம் பெரிது அன்றோ! 4

மங்கை அழலும்—வான் நாட்டு
மயில்கள் அழுதார்; மழ விடையோன்
பங்கின் உறையும் குயில் அழுதாள்;
பதுமத்து இருந்த மாது அழுதாள்;
கங்கை அழுதாள்; நாமடந்தை
அழுதாள்; கமலத் தடங் கண்ணன்
தங்கை அழுதாள்; இரங்காத
அரக்கிமாரும் தளர்ந்து அழுதார். 5

பொன் தாழ் குழையாள்தனை ஈன்ற
பூ மா மடந்தை புரிந்து அழுதாள்;
குன்றா மறையும், தருமமும், மெய்
குழைந்து குழைந்து, விழுந்து அழுத;
பின்றாது உடற்றும் பெரும் பாவம்
அழுத; பின் என் பிறர் செய்கை?
நின்றார் நின்றபடி அழுதார்;
நினைப்பும் உயிர்ப்பும் நீத்திட்டாள்.* 6

5. பதுமத்து இருந்த மாது - செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்; கமலத் தடங் கண்ணன் தங்கை - திருமாலின் தங்கையான கொற்றவை;
6. உடற்றுதல் - துன்புறுதல்.

சீதை தெளிந்து, துன்புற்று ஏங்குதல்

நினைப்பும் உயிர்ப்பும் நீத்தாளை
நீரால் தெளித்து, நெடும் பொழுதின்
இனத்தின் அரக்கர் மடவார்கள்
எடுத்தார்; உயிர் வந்து ஏங்கினாள்;
கனத்தின் நிறத்தான்தனைப் பெயர்த்தும்
கண்டாள்; கயலைக் கமலத்தால்
சினத்தின் அலைப்பாள் என, கண்ணைச்
சிதையக் கையால் மோதினாள். 7

அடித்தாள் முலைமேல்; வயிறு அலைத்தாள்;
அழுதாள்; தொழுதாள்; அனல் வீழ்ந்த
கொடித்தான் என்ன, மெய் சுருண்டாள்;
கொதித்தாள்; பதைத்தாள்; குலைவுற்றாள்;
துடித்தாள், மின்போல்; உயிர் கரப்பச்
சோர்ந்தாள்; சுழன்றாள்; துள்ளினாள்;
குடித்தாள் துயரை, உயிரோடும்
குழைத்தாள்; உழைத்தாள்,—குயில் அன்னாள். 8

விழுந்தாள்; புரண்டாள்; உடல் முழுதும்
வியர்த்தாள்; அயர்த்தாள்; வெதும்பினாள்;
எழுந்தாள்; இருந்தாள்; தளிர்க் கரத்தை
நெரித்தாள்; சிரித்தாள்; ஏங்கினாள்;
'கொழுந்தா!' என்றாள்; 'அயோத்தியர்தம்
கோவே!' என்றாள்; 'எவ் உலகும்
தொழும் தாள் அரசேயோ!' என்றாள்;
சோர்ந்தாள்; அரற்றத் தொடங்கினாள்: 9

சீதை அரற்றுதல்

'உற மேவிய காதல் உனக்கு உடையார்,
புறம் ஏதும் இலாரொடு, பூண்முலையார்;
மறமே புரிவார் வசமாயினையோ—
அறமே!—கொடியாய், இதுவோ, அருள்தான்? 10

'முதியார் உணர் வேதம் மொழிந்த அலால்,
கதி ஏதும் இலார் துயர் காணுதியோ?
மதியேன் மதியேன் உனை—வாய்மை இலா
விதியே!—கொடியாய், விளையாடுதியோ? 11

7. கனம் - மேகம்; 10. புறம் - பாவச் செயல், புறம்பானார் எனலும் ஆம்.

‘கொடியேன் இவை காணகிலேன்; உயிர் கோள்
முடியாய், நமனே! முறையோ! முறையோ!
விடியா இருள்வாய் எனை வீசினையே?—
அடியேன் உயிரே! அருள் நாயகனே! 12

‘எண்ணு, மயலோடும் இருந்தது நின்
புண் ஆகிய மேனி பொருந்திடவோ?—
மண்ணோர் உயிரே! இமையோர் வலியே!
கண்ணே! அமிழ்தே! கருணாகரனே! 13

‘மேவிக் கனல் முன், மிதிலைத்தலை, என்
பாவிக் கை பிடித்தது, பண்ணவ! நின்
ஆவிக்கு ஒரு கோள் வரவோ?—அலர் வாழ்
தேவிக்கு அமிழ்தே! மறையின் தெளிவே! 14

‘உய்யாள், உயர் கோசலை தன் உயிரோடு;
அய்யா! இளையோர் அவர் வாழ்கிலரால்;
மெய்யே, வினை எண்ணி, விடுத்த கொடுங்
கய்கேசி கருத்து இதுவோ?—களிறே! 15

‘ “தகை வான் நகர் நீ தவிர்வாய்” எனவும்,
வகையாது, தொடர்ந்து, ஒரு மான் முதலா,
புகை ஆடிய காடு புகுந்து, உடனே
பகை ஆடியவா! பரிவு ஏதும் இலேன்! 16

‘ “இன்று ஈகிலையேல், இறவு இவ் இடை; மான்
அன்று, ஈ” எனவும் பிரிவோடு அடியேன்
நின்று ஈவது, நின்னை நெடுஞ் செருவில்,
கொன்று ஈவது ஓர் தீமை குறித்தலினோ? 17

‘நெய் ஆர் பெரு வேள்வி நிரப்பி, நெடுஞ்
செய் ஆர் புனல் நாடு திருத்துதியால்;
மெய் ஆகிய வாசகமும் விதியும்
பொய் ஆன, என் மேனி பொருந்துதலால். 18

12. விடியா இருள் - முடிவு இல்லாத துன்பம்; 14. பண்ணவன் - கடவுள்; கோள் - தீங்கு; 15. இளையோர் - பரத சத்துருக்கனர்; 16. வகையாது - பிரியாது; 17. ஈகிலையேல் - (மானைப் பிடித்துக்) கொடுக்கவில்லையானால்; இறவு - இறப்பு.

'மேதா! இளையோய்! விதியார் விளைவால்,
போதா நெறி எம்மொடு போதுறுநாள்,
''மூது ஆனவன் முன்னம் முடிந்திடு'' எனும்,
மாதா உரையின்வழி நின்றனையோ? 19

'பூவும் தளிரும் தொகு பொங்கு அணைமேல்
கோவும் துயில, தவிர்வாய்! கொடியார்
ஏவின்தலை வந்த இருங் கணையால்
மேவும் குளிர் மெல் அணை மேவினையோ? 20

திரிசடை சீதையின் மயக்கம் தீர்த்தல்

'மழு வாள் வரினும் பிளவா மனன் உண்டு
அழுவேன்; இனி, இன்று இடர் ஆறிட, யான்
விழுவேன், அவன் மேனியின்மீதில்' என,
எழுவாளை விலக்கி இயம்பினளால்: 21

'மாடு உற வளைந்து நின்ற வளை எயிற்று அரக்கிமாரைப்
பாடு உற நீக்கி, நின்ற பாவையைத் தழுவிக் கொண்டு,
கூடினள் என்ன நின்று, செவியிடை, குறுகிச் சொன்னாள்—
தேடிய தவமே என்னத் திரிசடை, மறுக்கம் தீர்ப்பாள். 22

'மாய மான் விடுத்தவாறும், சனகனை வகுத்தவாறும்,
போய நாள் நாகபாசம் பிணித்தது போனவாறும்,
நீ அமா! நினையாய்; மாள நினைதியோ? நெறி இலாரால்
ஆய மா மாயம்; ஒன்றும் அறிந்திலை, அன்னம் அன்னாய்! 23

'கண்ட அக் கனவும், பெற்ற நிமித்தமும், நினது கற்பும்,
தண்ட வாள் அரக்கர் பாவச் செய்கையும், தருமம் தாங்கும்
அண்டர் நாயகர் தம் வீரத் தன்மையும், அயர்க்கலாமோ?
புண்டரீகற்கும் உண்டோ, இறுதி, இப் புலையர்க்கு அல்லால்?

ஆழியான் ஆக்கைதன்னில் அம்பு ஒன்றும் உறுகிலாமை,
ஏழை! நீ காண்டி அன்றே? இளையவன் வதனம் இன்னும்
ஊழி நாள் இரவி என்ன ஒளிர்கின்றது; உயிருக்கு இன்னல்
வாழியார்க்கு இல்லை; வாளா மயங்கலை—மண்ணில் வந்தாய்!

19. மேதா - அறிவு நிரம்பியவனே; 19. போதா நெறி - மக்கள் போக்கு வரவு புரியாத காட்டுவழி; மூது ஆனவன் - மூத்தவன்; 20. பொங்கு அணை - சிறந்த படுக்கை; 23. அமா - அம்மா; 24. தண்ட வாள் - தண்டாயுதமும் வாளும்; 25. ஆழியான் - சக்கரப்படைக்கு உரியவனான இராமன்; வாழியார் - நெடிது நாள் வாழும் தன்மையுள்ளவர் (இராம - இலக்குவர்).

'ஒய்ந்துளன், இராமன், என்னின், உலகம் ஓர் ஏழும் ஏழும்
தீய்ந்துறும்; இரவி பின்னும் திரியுமோ? தெய்வம் என் ஆம்?
வீய்ந்துறும், விரிஞ்சன் முன்னு உயிர் எலாம்; வெருவல், அன்னே!
ஆய்ந்தவை உள்ள போதே, அவர் உளர்; அறமும் உண்டால்.

'மாருதிக்கு இல்லே அன்றே, மங்கை நின் வரத்தினுலே
ஆர் உயிர் நீங்கல்! நின்பால் கற்புக்கும் அழிவு உண்டாமே?
சிரியது அன்று, இது ஒன்றும்; திசைமுகன் படையின் செய்கை
பேரும், இப்பொழுதே; தேவர் எண்ணமும் பிழைப்பது உண்டோ? 27

'தேவரைக் கண்டேன்; பைம் பொன் செங் கரம் சிரத்தில் சேர்த்தி,
மூவரைக் கண்டாலென்ன, இருவரை முறையின் நோக்கி,
ஆவலிப்பு எய்துகின்றுர்; அயர்த்திலர்; அஞ்சல்; அன்னே!
''கூவலில் புக்கு, வேலே கோட்படும்'' என்று கொள்ளேல். 28

'மங்கலம் நீங்கினுரை, ஆர் உயிர் வாங்கினுரை,
நங்கை! இக் கடவுள் மானம் தாங்குறும் நவையிற்று அன்றுல்;
இங்கு, இவை அளவை ஆக, இடர்க் கடல் கடத்தி' என்றுள்;
சங்கையள் ஆய தையல் சிறிது உயிர் தரிப்பதானுள். 29

சீதையின் மறுமொழி

'அன்னே! நீ உரைத்தது ஒன்றும் அழிந்திலது; ஆதலானே
உன்னேயே தெய்வமாக் கொண்டு, இத்தனே காலம் உய்ந்தேன்;
இன்னம், இவ் இரவு முற்றும் இருக்கின்றேன்; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்தது அன்றே?' என்றனள்—முளரி நீத்தாள். 30

'நாண் எலாம் துறந்தேன், இல்லின் நன்மையின் நல்லார்க்கு எய்ந்த;
பூண் எலாம் ஆகி நின்ற என் தன் பொரு சிலே மேகம் தன்னேக்
காணலாம் என்றும் ஆசை தடுக்க, என் ஆவி கார்த்தேன்;
ஏண் இலா உடல்ம் நீக்கல் எளிது, எனக்கு' எனவும் சொன்னுள்.

சீதையை மீண்டும் அசோகவனத்திற்குச் செலுத்துதல்

தய்யலே, இராமன் மேனி தைத்த வேல் தடங் கணுளே,
கய்களின் பற்றிக் கொண்டார், விமானத்தைக் கடாவுகின்றுர்,—
மெய் உயிர் உலகத்து ஆக, விதியையும் வலித்து, விண்மேல்
பொய் உடல் கொண்டு செல்லும் நமனுடைத் தூதர் போன்றுர். 32

28. ஆவலிப்பு - செருக்கு; கூவல் - கிணறு; 29. சங்கை - ஐயம்; 30. அழிந்திலது - பழுதுபட்டதில்லே; 31. ஏண் - வலிமை, பெருமை; 32. தைத்த - பதிந்த; வலித்து - வலிமையால் கடந்து.

23 மருத்துமலைப் படலம்

உணவு கொணர்ந்து, பாசறையில் சேர்த்த வீடணன் களங்கண்டு மயங்கி வீழ்தல்

போயினள் தையல்; இப்பால், 'புரிக' எனப் புலவர் கோமான்
ஏயின கருமம் நோக்கி, எய்திய இலங்கை வேந்தன்,
மேயின உணவு கொண்டு, மீண்டு, அவை உறையுள் விட்ட
ஆயின ஆக்கி, தான் வந்து, அமர்ப் பெருங் களத்தன் ஆனான்.

நோக்கினான்; கண்டான், பண்டு, இவ் உலகினைப் படைக்க நோற்றான்
வாக்கினால் மாண்டார் என்ன, வானர வீரர் முற்றும்
தாக்கினார் எல்லாம் பட்ட தன்மையை; விடத்தைத் தானே
தேக்கினான் என்ன நின்று, தியங்கினான், உணர்வு தீர்ந்தான். 2

விளைந்தவாறு உணர்கிலாதான், ஏங்கினான்; வெதும்பினான்; மெய்
உளைந்து உளைந்து உயிர்த்தான், 'ஆவி உண்டு, இலை' என்ன, ஓய்ந்தான்;
வளைந்த பேய்க் கணமும் நாயும் நரிகளும் இரிய, வந்தான்;
இளங் கிளையோடும் சாய்ந்த இராமனை இடையில் கண்டான்.

வீடணன், இராமன் மேனியில் வடு இன்மை கண்டு துயரம் தணிதல்

'என்பு என்பது, யாக்கை என்பது, உயிர் என்பது, இவைகள் எல்லாம்,
பின்பு என்ப அல்ல; என்றும் தம்முடை நிலையின் பேரா;
முன்பு என்றும் உளது என்றாலும், முழுவதும் தெரிந்தவாற்றால்,
அன்பு என்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்தது அன்றே.

'ஆயினும், இவருக்கு இல்லை அழிவு' எனும் அதனால் ஆவி
போயினது இல்லை; வாயால் புலம்பலன், பொருமி; பொங்கித்
தீயினும் எரியும் நெஞ்சன் வெருவலால், தெரிய நோக்கி,
'நாயகன் மேனிக்கு இல்லை வடு' என நடுக்கம் தீர்ந்தான். 5

வீடணன், துயர் தீர்க்கும் வழி ஆராய்தல்

அந்தணன் படையால் வந்தது என்பதும், ஆற்றல் சான்ற
இந்திரசித்தே எய்தான் என்பதும், இளவற்கு ஆக
நொந்தனன் இராமன் என்னும் நுண்மையும், நொய்தின் நோக்கி,
சிந்தையின் எண்ணி எண்ணி, தீர்வது ஓர் உபாயம் தேர்வான்.

23: 2. தியங்குதல் - மயங்குதல்.

'உள்ளுறு துன்பம் ஊன்ற, உற்றனன் உறக்கம் அன்றோ?
தெள்ளிதின் உணர்ந்த பின்னை, சிந்தனை தெரிவென் அன்றே;
வள்ளலோ, தம்பி மாள வாழ்கிலன்; மாய வாழ்க்கைக்
கள்ளனோ வென்றான்?' என்றான், மழை எனக் கலுழும் கண்ணான். 7

'பாசம் போய் இற்றாற் போலப் பதுமத்தோன் படையும் இன்னே
நாசம் போய் எய்தும்; நம்பி தம்பிக்கு நடுக்கம் இல்லை;
வீசும் போர்க் களத்து வீழ்ந்த சேனையும் மீளும்; வெய்ய
நீசன் போர் வெல்வது உண்டோ?' என்று உளம் நிலையில் நின்றான். 8

'இறவாதவர் இருப்பரோ?' என வீடணன் தேடுதல்

'உணர்வதன்முன்னம், இன்னே உற்றுழி உதவற்கு ஒத்த
துணைவர்கள், துஞ்சல் இல்லார், உளர்எனின், துருவித் தேடிக் [டான்
கொணர்குவென், விரைவின்' என்னா, கொள்ளி ஒன்று அம் கைக்கொண்
புணரியின் உதிர வெள்ளத்து, ஒரு தனி விரைவின் போனான். 9

வீடணன், அனுமனைக் காணல்

வாய் மடித்து, இரண்டு கையும் முறுக்கி, தன் வயிரச் செங்கண்
தீ உக, கனகக் குன்றின் திரண்ட தோள் மழையைத் தீண்ட
ஆயிர கோடி யானைப் பெரும் பிணத்து அமளி மேலான்,
காய் சினத்து அனுமன் என்னும் கடல் கடந்தானைக் கண்டான்.

கண்டு, தன் கண்களூடு மழை எனக் கலுழி வார,
'உண்டு உயிர்' என்பது உன்னி, உடற் கணை ஒன்று ஒன்று ஆக,
விண்டு உதிர் புண்ணின்நின்று மெல்லென விரைவின் வாங்கி,
கொண்டல் நீர் கொணர்ந்து, கோல முகத்தினைக் குளிரச் செய்தான். 11

உணர்வு பெற்ற அனுமன், இராமனைப்பற்றி உசாவி அறிதல்

உயிர்ப்பு முன் உதித்த பின்னர், உரோமங்கள் சிலிர்ப்ப ஊறி
வியர்ப்பு உளதாக, கண்கள் விழித்தன, மேனி மெல்லப்
பெயர்த்து, வாய் புனல் வந்து ஊற, விக்கலும் பிறந்ததாக,
அயர்த்திலன் இராம நாமம், வாழ்த்தினன்; அமரர் ஆர்த்தார்.

அழுகையோடு உவகை உற்ற வீடணன் ஆர்வம் கூர,
தழுவினன் அவனை, தானும் அன்பொடு தழுவி, 'தக்கோய்!
வழு இலன் அன்றே, வள்ளல்?' என்றனன்; 'வலியன்' என்றான்;
தொழுதனன், உலகம் மூன்றும் தலையின்மேல் கொள்ளும் தூயான்.

7. கள்ளன் - கள்வன், ஈண்டு இராவணன்.

இருவரும் சாம்பனைச் தேடிச் சென்று அடைதல்

அன்பு தன் தம்பிமேல் ஆத்து, அறிவினை மயக்க, ஐயன்,
துன்பொடும் துயிலன் ஆனான்; உணர்வு இனித் தொடர்ந்த பின்னே
என் புகுந்து எய்தும் என்பது அறிகிலென்!' என்றலோடும்,
'தன் பெருந் தகைமைக்கு ஒத்த சாம்பன் எத் தலையன்?' என்றான். 14

'அறிந்திலென் அவனை; யாண்டும் கண்டிலென்; "ஆவி யாக்கை [என்று
பிறந்திலன், உளன்" என்று ஒன்றும் தெரிந்திலென், பெயர்ந்தேன்'
செறிந்த தார் நிருதர் வேந்தன் உரைசெய, காலின் செம்மல்,
'இறும் திறம் அவனுக்கு இல்லை; நாடுதும், ஏகி' என்றான். 15

'அன்னவன் தன்னைக் கண்டால், ஆணையே, அரக்கர்க்கு எல்லாம்
மன்னவ! நம்மை ஈண்டு வாழ்விக்கும் உபாயம் வல்லன்'
என்னலும், 'உய்ந்தோம், ஐய! ஏகுதும் விரைவின்' என்றான்;
சில் நெறி இருளில் சென்றார்; சாம்பனை விதியில் சேர்ந்தார். 16

எரிகின்ற மூப்பினாலும், ஏவுண்ட நோவினாலும்,
அரிகின்ற துன்பத்தாலும், ஆர் உயிர்ப்பு அடங்கி, ஒன்றும்
தெரிகின்றது இல்லா மம்மர்ச் சிந்தையன்எனினும், வீரர்
வருகின்ற சுவட்டை ஓர்ந்தான், செவிகளால்—வயிரத் தோளான். 17

'அரக்கனோ? என்னை ஆளும் அண்ணலோ? அனுமன்தானோ?
இரக்கம் உற்று அருள வந்த தேவரோ? முனிவரேயோ?
வரக் கடவார்கள், அல்லர்; மாற்றலர், மலைந்து போனார்;
புரக்க உள்ளாரே!' என்னாக் கருதினன், பொருமல் தீர்ந்தான்.

அனுமன் வருகையால் சாம்பன் மகிழ்தல்

வந்து அயல் நின்று, குன்றின் வார்ந்து வீழ் அருவி மானச்
சிந்திய கண்ணின் நீரர் ஏங்குவார்தம்மைத் தேற்றி,
'அந்தம் இல் குணத்திர்! யாவிர், அணுகினிர்?' என்றான்; 'ஐய!
உய்ந்தனம்; உய்ந்தோம்!' என்ற வீடணன் உரையைக் கேட்டான். 19

'மற்று அயல் நின்றான் யாவன்?' என்ன, மாருதியும், 'வாழி!
கொற்றவ! அனுமன் நின்றேன்; தொழுதனென்' என்று கூற,
'இற்றனம், ஐய! எல்லோம் எழுந்தனம், எழுந்தேம்!' என்னா,
உற்ற பேர் உவகையாலே, ஓங்கினான், ஊற்றம் மிக்கான். 20

14. துயிலன் - துயில் உடையவன் (மூர்ச்சித்தவன்); 16. சில் நெறி - சிறிது தொலைவு; 17. எரிதல் - வருந்துதல்.

சாம்பன், மருத்துமலை கொணர வழி கூறி, அனுமனை ஏவுதல்

'விரிஞ்சன்தன் படை என்றாலும், வேதத்தின் வேதம் அன்ன
அரிந்தமன்தன்னை ஒன்றும் ஆற்றிலது என்னும் ஆற்றல் [றான்;
தெரிந்தனென்; முன்னே, அன்னான் செய்தது என்? தெரித்தி' என்
'பெருந்தகை துன்ப வெள்ளத் துயில் உளான், பெரும!' என்றான். 21

'அன்னவன்தன்மை கண்டால் ஆற்றுமோ? ஆக்கை வேறே;
இன் உயிர் ஒன்றே; மூலத்து இருவரும் ஒருவரேயால்;
இன்னது கிடைப்பத் தாழாது, இங்கு இனி இமைப்பின்முன்னம்,
கொன் இயல் வயிரத் தோளாய்! மருந்து போய்க் கொணர்தி' என்றான்.

'எழுபது வெள்ளத்தோரும், இராமனும், இளைய கோவும்,
முழுதும் இவ் உலகம் மூன்றும், நல் அற மூர்த்திதானும்,
வழு இலா மறையும், உன்னால் வாழ்ந்தன ஆகும்; மைந்த!
பொழுது இறை தாழாது, என் சொல் நெறி தரக் கடிது போதி. 23

'பின்பு உளது இக் கடல் என்னப் பெயர்ந்ததற்பின்
யோசனைகள் பேச நின்ற
ஒன்பதினாயிரம் கடந்தால், இமயம் எனும்
குலவரையை உறுதி; உற்றால்,
தன் பெருமை ஓர் இரண்டாயிரம் உளது
யோசனை; பின் தவிரப் போனால்,
முன்பு உள யோசனை எல்லாம் முற்றினை, பொற்-
கூடம் சென்று உறுதி, மொய்ம்ப! 24

'அம் மலைக்கும் ஒன்பதினாயிரம் உளதால்,
யோசனையின் நிடதம் என்னும்
செம் மலையம்; உளவாய அத்தனை யோசனை
கடந்தால், சென்று காண்டி,
எம் மலைக்கும் பெரிது ஆய வடமலையை;
அம் மலையின் அகலம் எண்ணின்,
மொய்ம் மலைந்த திண் தோளாய்! முப்பத்து ஈர்-
ஆயிரம் யோசனையின் முற்றும்; 25

21. அரிந்தமன் - பகைவரை அழிக்கவல்ல இராமன்; 22. அன்னவன் - அந்த இலக்குவன்; கொன் - வலிமை; 24. தன் பெருமை - (அது) தன் பரப்பு; பொற்கூடம் - ஏமகூடம்; ஏமம் - பொன்; 25. வடமலை - மேருமலை.

மேருவினைக் கடந்து, அப்பால் ஒன்பதினாயிரம்
உள ஓசனையை விட்டால்,
நேர் அணுகும் நீலகிரிதான் இரண்டா-
யிரம் உள யோசனையின் நிற்கும்;
மாருதி! மற்று அதற்கு யோசனை
நாலாயிரத்தின் மருந்து வைகும்,
கார் வரையைக் காணுதி; மற்று, அது காண,
இத் துயர்க்குக் கரையும் காண்டி; 26

'மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்றும்,
உடல் வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்,
படைக்கலங்கள் கிளைப்பது ஒன்றும்,
மீண்டேயும் தம் உருவை அருளுவது ஓர் மெய்ம்
மருந்தும், உள; நீ, வீர!
ஆண்டு ஏகி, கொணர்தி' என அடையாளத்தொடும்
உரைத்தான், அறிவின் மிக்கான். 27

'இன்ன மருந்து ஒரு நான்கும், பயோததியைக்
கலக்கிய ஞான்று, எழுந்த; தேவர்
உன்னி அமைத்தனர்; மறைக்கும் எட்டாத
பரஞ்சுடர், இவ் உலகம் மூன்றும்
தன் இரு தாள் உள் அடக்கிப் பொலி போழ்தின்,
யான் முரசம் சாற்றும் வேலை,
அன்னவை கண்டு, உயாவுதலும், தொல் முனிவர்
அவற்று இயல் எற்கு அறிவித்தரால்;† 28

'இம் மருந்து காத்து உறையும் தெய்வங்கள் எண் இலவால்;
இரங்கா, யார்க்கும்;
நெய்ம் மருங்கு படரகில்லா நெடு நேமிப்
படையும் அவற்றுடனே நிற்கும்;
பொய்ம் மருங்கின் நில்லாதாய்! புரிகின்ற
காரியத்தின் பொதுமை நோக்கி,
கைம் மருங்கு உண்டாம்; நின்னைக் காவாய் என்று;
அப்புறம் போய்க் கரக்கும்' என்றான். 29

27. வகிர்கள் - பிளவுகள்; கிளைப்பது - அகற்றுவது; தம் உரு - தம் முன்னைய வடிவம்; 28. பயோததி - பாற்கடல்; உன்னல் - நினைத்தல், ஈண்டு பயனை நோக்குதல்; 29. நெய்ந் நேமி, மருங்கு படரகில்லா நேமி எனக் கூட்டுக; மருங்கு படரகில்லா - பக்கத்தில் செல்வதற்கும் முடியாத.

அனுமன் மருந்து கொணரப் பெரு வடிவு கொண்டு எழுதல்

'ஈங்கு இதுவே பணி ஆகில், இறந்தோரும்
பிறந்தோரே; எம் கோற்கு யாதும்
தீங்கு இடையூறு எய்தாமல், தெருட்டுதிர், போய்'
எனச் சொல்லி, அவரைத் தீர்ந்தான்—
ஓங்கினன் வான் நெடு முகட்டை உற்றனன்; பொன்
தோள் இரண்டும் திசையோடு ஒக்க
வீங்கின; ஆகாயத்தை விழுங்கினனே
என வளர்ந்தான்—வேதம் போல்வான். 30

கோளோடு தாரகைகள், கோத்து அமைந்த
மணி ஆரக் கோவை போன்ற;
தோளோடு தோள் அகலம் ஆயிரம்
யோசனை அளவு சொல்ல ஒண்ணு;
தாளோடு தாள் பெயர்க்க, இடம் இலது-
ஆயின இலங்கை; தடக் கை வீச,
நீளோடு திசை போதா; விசைத்து எழுவான்
உருவத்தின் நிலை ஈது அம்மா! 31

வால் விசைத்து, கைந் நிமிர்த்து, வாயினையும்
சிறிது அகல வகுத்து, மானக்
கால் நிலத்திினிடை ஊன்றி, உரம் நெருக்கி,
கழுத்தினையும் சுருக்கிக் காட்டி,
தோல் மயிர்க் குந்தளம் சிலிர்ப்ப, விசைத்து எழுந்தான்,
அவ் இலங்கை, துளங்கிச் சூழ்ந்த
வேலையில் புக்கு அழுந்தியது ஓர் மரக்கலம்போல்,
சுரித்து உலைய,—விசையத் தோளான். 32

அனுமன் வேகத்தால் நிகழ்ந்தவை

கிழிந்தன, மா மழைக் குலங்கள்; கீண்டது, நீண்டு
அகல் வேலை; கிழக்கும் மேற்கும்
பொழிந்தன, மீன்; தொடர்ந்து எழுந்த, பொருப்புஇனமும்,
தருக் குலமும், பிறவும், பொங்கி;
அழிந்தன, வானவர் மானம், ஆகாயத்து
இடையன பேர் அசனி என்ன
விழுந்தன, நீர்க் கடல் அழுந்த; ஏறின மேல்,
கீறின போய்த் திசைகள் எல்லாம். 33

31. நீளோடு திசை - நீளமாக ஓடுகின்ற திசை; 32. மயிர்க் குந்தளம் - மயிர்ச் செறிவுகள்; 33. மானம் - விமானம்.

பாய்ந்தனன், அங்கு அப்பொழுதத்தே; பரு வரைகள்
      ஏனைப் பலவும் வடபாகத்துச்
சாய்ந்தன; 'பேர் உடல் பிறந்த சண்டமா-
      ருதம் வீச, தாதை சால
ஓய்ந்தனன்' என்று உரைசெய்ய, விசும்பூடு
      படர்கின்றான், உரு வேகத்தால்,
காய்ந்தன வேலைகள்; மேகம் கரிந்தன; வெந்து
      எரிந்த, பெருங் கானம் எல்லாம். 34

கடல் முன்னே நிமிர்ந்து ஓட, கால் பின்னே
      தொடர்ந்து ஓட, கடிதின் செல்வான்
உடல் முன்னே செல, உள்ளம் கடைக் குழையாய்ச்
      செல, செல்வான் உருவை நோக்கி,
'அடல் முன்னே தொடங்கிய நாள், ஆழ் கடல் சூழ்
      இலங்கை எனும் அரக்கர் வாழும்
திடல் முந்நீர்க்கிடை அறிந்தான்; முரிந்தது நம்
      துயர்' என்றார், தேவர் எல்லாம். 35

விரைந்து செல்லும் அனுமனைக் கண்ட வானவர் கூற்று

மேகத்தின் பதம் கடந்து, வெங் கதிரும்
      தண் கதிரும் விரைவில் செல்லும்
மாகத்தின் நெறிக்கு அப்பால், வானமீன்
      குலம் விளங்கும் வரம்பு நீங்கி,
போகத்தின் நெறி கடந்தார் புகலிடங்கள்
      பிற்படப் போய், 'பூவின் வந்த
ஏகத்து அந்தணன் இருக்கை இனிச் சேய்த்து அன்-
      றாம்' என்ன, எழுந்து சென்றான். 36

வான நாட்டு உறைகின்றார், 'வயக் கலுழன்
      வல் விசையால், மாயன் வைகும்
தான நாட்டு எழுகின்றான்' என்று உரைத்தார்,
      சிலர்; சிலர்கள், 'விரிஞ்சன்தான் தன்
ஏனை நாட்டு எழுகின்றான்' என்று உரைத்தார்;
      சிலர் சிலர்கள், 'ஈசன் அல்லால்,
போன நாட்டிடை போக வல்லாரோ?
      இவன் முக் கண் புனிதன்' என்றார். 37

35. கடைக் குழை - கடைக்கூழை, பின்னணி இறுதி வரிசை; 36. போகத்தின் நெறி கடந்தார் - சிற்றின்ப நெறியைக் கடந்தவர்களான தவத்தினர்; புகலிடங்கள் - இருப்பிடங்கள்; 37. மாயன் வைகும் தான நாடு - வைகுந்தம்; ஏனை நாடு - (பிரமன் தான் படைத்த பூமண்டலம் அல்லாத) வேறு உலகு.

'வேண்டு உருவம் கொண்டு எழுந்து, விளையாடு-
கின்றான்; மெய் வேதம் நான்கும்
தீண்டு உருவன் அல்லாத திருமாலே
இவன்' என்றார்; ' ''தெரிய நோக்கிக்
காண்டும்'' என இமைப்பதன்முன், கட் புலமும்
கடந்து அகலும்; இன்னும் காண்மின்;
மீண்டு வரும் தரம் அல்லான் வீட்டுலகம்
புகும்' என்றார், மேன்மேல் உள்ளார். 38

'உரு' என்றார், சிலர் சிலர்கள்; 'ஒளி' என்றார்,
சிலர் சிலர்கள்; 'ஒளிரும் மேனி
அரு' என்றார், சிலர் சிலர்கள்; 'அண்டத்துக்கு
அப் புறம் நின்று, உலகம் ஆக்கும்
கரு' என்றார், சிலர் சிலர்கள்; 'மற்று' என்றார்,
சிலர் சிலர்கள்; கடலைத் தாவிச்
செரு வென்றான் நிலை ஒன்றும் தெரியகிலார்—
உலகு அனைத்தும் தெரியும் செல்வர். 39

வாச நாள் மலரோன்தன் உலகு அளவும்
நிமிர்ந்தன, மேல் வானம் ஆன
காசம் ஆயின எல்லாம் கரந்த தனது
உருவிடையே கனகத் தோள்கள்
வீச, வான் முகடு உரிஞ்ச, விசைத்து எழுவான்
உடல் பிறந்த முழக்கம் விம்ம,
ஆசை காவலர் தலைகள் பொதிர் எறிந்தார்;
விதிர் எறிந்தது, அண்டகோளம். 40

தொடுத்த நாள்மாலை வானோர், முனிவரே முதல தொல்லோர்,
அடுத்த நான்மறைகள் ஓதி வாழ்த்தலால், அவுணர் வேந்தன்
கொடுத்த நாள், அளந்து கொண்ட குறளனார் குறிய பாதம்
எடுத்த நாள் ஒத்தது—அண்ணல் எழுந்த நாள், உலகுக்கு எல்லாம்.

தேவரும் முனிவர்தாமும், சித்தரும் தெரிவைமாரும்,
மூவகை உலகினுள்ளார், உவகையால் தொடர்ந்து மொய்த்தார்;
தூவின மணியும் சாந்தும் சுண்ணமும் மலரும் தொத்த,
பூவுடை அமரர் தெய்வத் தரு என, விசும்பில் போனான். 42

39. கரு - காரணப் பொருள்; 40. வானம் ஆன காசம் - மேல் வானமான ஆகாயம்; பொதிர் எறிதல் - நடுக்கங் கொள்ளுதல்; 41. அவுணர் வேந்தன் - மாபலி; குறளனார் - வாமனமூர்த்தி.

கயிலையைக் கண்டு வணங்கி, அனுமன் செல்லுதல்

இமய மால் வரையை உற்றான்; அங்கு உள இமைப்பிலோரும்,
கமையுடை முனிவர், மற்றும் அறன் நெறி கலந்தோர், எல்லாம்,
'அமைக, நின் கருமம்!' என்று வாழ்த்தினர்; அதனுக்கு அப்பால்,
உமையொருபாகன் வைகும் கயிலை கண்டு, உவகை உற்றான்.*

வட குண திசையில் தோன்றும், மழுவலான் ஆண்டு வைகும்
தட வரை அதனை நோக்கி, தாமரைக் கைகள் கூப்பி,
படர்குவான்தன்னை, அன்பால் பரமனும் விசும்பில் பார்த்தான்;
தட முலை உமைக்குக் காட்டி, 'வாயுவின் தனயன்' என்றான்.

உமையின் வினாவும், ஈசனது உரையும்

'என், இவன் எழுந்த தன்மை?' என்று, உலகு ஈன்றாள் கேட்ப,
'மன்னவன் இராமன் தூதன் மருந்தின்மேல் வந்தான்; வஞ்சர்
தென் நகர் இலங்கைத் தீமை தீர்வது திண்ணம்; சேர்ந்து,
நன்னுதல்! நாமும் வெம் போர் காணுதும், நாளை' என்றான்.

ஏமகூடத்தைத் தாண்டி, அனுமன் மேரு மலையின்மீது போதல்

நாம யோசனைகள் கொண்டது ஆயிரம் நடுவு நீங்கி,
ஏமகூடத்தின் உம்பர் எய்தினன், இறுதி இல்லாக்
காமமே நுகரும் செல்வக் கடவுளர் ஈட்டம் கண்டான்;—
நேமியின் விசையின் செல்வான்—நிடதத்தின் நெற்றி உற்றான்.

எண்ணுக்கும், அளவு இலாத அறிவினோர் இருந்து நோக்கும்
கண்ணுக்கும், கருதும் தெய்வ மனத்திற்கும், கடியன் ஆனான்,
மண்ணுக்கும், திசைகள் வைத்த வரம்பிற்கும், மலரோன் வைகும்
விண்ணுக்கும், அளவை ஆன மேருவின்மீது சென்றான். 47

பிரமன் முதலிய தேவர்களை வணங்கிச் செல்லுதல்

'யாவதும் நிலைமைத் தன்மை இன்னது' என்று, இமையா நாட்டத்
தேவரும் தெரிந்திலாத வடமலைக்கு உம்பர்ச் சென்றான்;
நாவலம் பெருந் தீவு என்னும் நளிர் கடல் வளாக வைப்பில்,
காவல் மூன்று உலகும் ஓதும் கடவுள் மா மரத்தைக் கண்டான்.† 48

அன்ன மா மலையின் உம்பர், உலகு எலாம் அமைத்த அண்ணல்
நல் நெடு நகரம் நோக்கி, அதன் நாடு நாப்பண் நாம
பொன் மலர்ப் பீடம்தன்மேல் நான்முகன் பொலியத் தோன்றும்
தன்மையும் கண்டு, கையால் வணங்கினான்—தருமம் போல்வான்.† 49

43. கமை - பொறுமை; 46. நாம யோசனைகள் - பேர் பெற்ற (ஒன்பதின்) ஆயிரம் யோசனைகள்; நேமியின் - சக்கரப்படை போல; நிடதத்தின் நெற்றி - நிடத மலையின் உச்சி; 47. கடியன் - விரைவுடையவன்.

தரு வனம் ஒன்றில், வானோர் தலைத்தலை மயங்கித் தாழ,
பொரு அரு முனிவர் வேதம் புகழ்ந்து உரை ஓதை பொங்க,
மரு விரி துளவ மோலி, மா நிலக் கிழத்தியோடும்
திருவொடும் இருந்த, மூலத் தேவையும் வணக்கம் செய்தான்.†

ஆயதன் வட கீழ்ப் பாகத்து, ஆயிரம் அருக்கர் ஆன்ற
காய் கதிர் பரப்பி, ஐந்து கதிர் முகக் கமலம் காட்டி,
தூய பேர் உலகம் மூன்றும் தூவிய மலரின் சூழ்ந்த
சேயிழை பாகத்து, எண் தோள் ஒருவனை வணக்கம் செய்தான்.

சந்திரன் அனைய கொற்றத் தனிக் குடை தலையிற்று ஆக,
சுந்தர மகளிர் அங்கைச் சாமரை தென்றல் தூற்ற,
அந்தர வான நாடர் அடி தொழ, முரசம் ஆர்ப்ப,
இந்திரன் இருந்த தன்மை கண்டு உவந்து, இறைஞ்சிப் போனான்.†

பூ அலர் மரத்தைப் போர்ப்ப அந்தரம் விரிந்து பொங்கும்
தேவர்தம் இருக்கையான மேருவின் சிகர வைப்பில்,
மூவகை உலகும் சூழ்ந்த முரண் திசை முறையின் காக்கும்
காவலர் எண்மர் நின்ற தன்மையும் தெரியக் கண்டான்.† 53

அத் தடங் கிரியை நீங்கி, அத் தலை அடைந்த வள்ளல்,
உத்தரகுருவை உற்றான்; ஒளியவன் கதிர்கள் ஊன்றி,
செத்திய இருள் இன்றாக, விளங்கிய செயலை நோக்கி,
வித்தகன், 'விடிந்தது!' என்னா, 'முடிந்தது, என் வேகம்!' என்றான்.

'ஆதியான் உணராமுன்னம் அரு மருந்து உதவி, அல்லின்
பாதியால், அனைய துன்பம் அகற்றுவான் பாவித்தேற்குச்
சோதியான் உதயம் செய்தான்; உற்றது ஓர் துணிதல் ஆற்றேன்;
ஏது யான் செய்வது?' என்னா, இடர் உற்றான், இணை இலாதான். 55

கால் திசை சுருங்கச் செல்லும் கடுமையான்,—'கதிரின் செல்வன்
மேல் திசை எழுவான்அல்லன்; விடிந்ததும் அன்று; மேரு
மாற்றினன், வடபால் தோன்றும் என்பது மறைகள் வல்லோர்
சாற்றினர்' என்ன, துன்பம் தவிர்ந்தனன்—தவத்து மிக்கான்.

54. வித்தகன் - எடுத்துக்கொண்ட செயலைத் திறம்படச் செய்பவன்; 55. ஆதியான் - ஆதி மூர்த்தியாகிய இராமன்; அல்லின் பாதியால் - பாதி இரவுக்குள்; 56. கால் திசை - காற்றும் திசையும்; மேருமலைக்குத் தெற்கில் கீழ்த்திசையில் உதயமாகும் சூரியன் அவ்வியல்பை மாற்றி அதன் வடதிசையில் மேல்திசையில் உதயமாவான் என்பது புராணக் கொள்கை.

உத்தரகுரு நாட்டைக் கண்டு, அனுமன் அப்பால் போதல்

இருவரே தோன்றி, என்றும் ஈறு இலா ஆயுள் எய்தி,
ஒருவரோடு ஒருவர், உள்ளம் உயிரொடும் ஒன்றே ஆகி,
பொரு அரும் இன்பம் துய்த்து, புண்ணியம் புரிந்தோர் வைகும்,
திரு உறை கமலம் அன்ன, நாட்டையும் தெரியக் கண்டான்.

வன்னி நாட்டிய பொன் மௌலி வானவன், மலரின் மேலான்,
கன்னி நாள் திருவைச் சேரும் கண்ணனும், ஆளும் காணி,
சென்னி நாள் தெரியல் வீரன், தியாக மா விநோதன் தெய்வப்
பொன்னி நாட்டு உவமை வைப்பை, புலன் கொள, நோக்கிப்போனான்.*

நீலமலைக்கு அப்பால் மருத்துமலையை அனுமன் காணுதல்

விரிய வன் மேரு என்னும் வெற்பினின் மீது செல்லும்
பெரியவன், அயனார் செல்வம் பெற்றவன், பிறப்பும் பேர்ந்தான்,
அரியவன், உலகம் எல்லாம் அளந்த நாள் வளர்ந்து தோன்றும்
கரியவன் என்ன நின்ற, நீல மால் வரையைக் கண்டான். 59

அல் குன்ற அலங்கு சோதி அம் மலை அகலப் போனான்,
பொன் குன்றம் அனைய தோளான் நோக்கினான், புலவன் சொன்ன
நல் குன்றம் அதனைக் கண்டான், உணர்ந்தனன்—'நாகம் முற்ற
எல் குன்ற எறியும் தெய்வ மருந்து அடையாளம்' என்ன. 60

மருத்துமலையை அனுமான் பெயர்த்து எடுத்து மீளுதல்

பாய்ந்தனன்; பாய்தலோடும், அம் மலை பாதலத்துச்
சாய்ந்தது; காக்கும் தெய்வம் சலித்தன, கடுத்து வந்து,
காய்ந்தது, 'நீதான் யாவன்? கருத்து என்கொல்? கழறுக!' என்ன,
ஆய்ந்தவன் உற்ற தன்மை அவற்றினுக்கு அறியச் சொன்னான். 61

கேட்டு அவை, 'ஐய! வேண்டிற்று இயற்றி, பின் கெடாமல் எம்பால்
காட்டு' என உரைத்து, வாழ்த்திக் கரந்தன; கமலக்கண்ணன்
வாள் தலை நேமி தோன்றி, மறைந்தது; மண்ணின் நின்றும்
தோட்டனன், அனுமன், மற்று அக் குன்றினை, வயிரத் தோளால். 62

57. நாடு - ஈண்டு உத்தரகுரு நாடு; 58. வன்னி நாட்டிய பொன் மௌலி - நெருப்பை நாட்டினாற் போன்ற பொன்னிறச் சடை, வன்னியிலை சூடியுள்ள பொன்னிறச் சடை எனலும் ஆம்; வன்னி - ஒரு மரம், ஈண்டு அதன் இலை; நாள் கன்னி - செவ்வி மாறாத கன்னிப் பருவம்; தியாக விநோதன் - சோழனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று; தியாகத்தையே பெரும் போதுபோக்காகக் கொண்டவன்; 59. அயனார் செல்வம் - பிரமபதம்; பெற்றவன் - பெறப்போகிறவன், தெளிவு பற்றி இறந்த காலத்தில் கூறினார்; 60. நாகம் - விண்ணுலகம்; எல் - ஒளி; 61. ஆய்ந்தவன் - ஆராய்ந்தறியும் தன்மையுடையவனான அனுமன்; 62. வாள் தலை - கூரிய முனை; தோட்டல் - தோண்டுதல், பெயர்த்தல்.

'இங்கு நின்று, இன்னன மருந்து என்று எண்ணினால்,
சிங்குமால் காலம்' என்று உணரும் சிந்தையான்,
அங்குஅது வேரொடும் அங்கை தாங்கினான்,
பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான். 63

ஆயிரம் யோசனை அகன்று மீ உயர்ந்து,
ஆயிரம் யோசனை ஆழ்ந்தது அம் மலை,
'ஏ' எனும் மாத்திரத்து, ஒரு கை ஏந்தினான்.
தாயினன்—உலகு எலாம் தவழ்ந்த சீர்த்தியான். 64

அனுமனை அனுப்பிய பின், சாம்பனும் வீடணனும் இராமனைச் சென்று காணுதல்

அத் தலை, அன்னவன் அனையன் ஆயினான்;
இத் தலை, இருவரும் விரைவின் எய்தினார்,
கைத் தலத்தால் அடி வருடும் காலையில்,
உத்தமற்கு உற்றதை உணர்த்துவாம் அரோ. 65

வண்டு அன மடந்தையர் மனத்தை வேரொடும்
கண்டன, கொள வரும் கருணைதாம் எனக்
கொண்டன, கொடுப்பன வரங்கள், கோள் இலாப்
புண்டரீகத் துணை தருமம் பூத்தென; 66

நோக்கினன்—கரடிகட்கு அரசும், நோன் புகழ்
ஆக்கிய நிருதனும், அழுத கண்ணினர்,
தூக்கிய தலையினர், தொழுத கையினர்,
ஏக்கமுற்று, அருகு இருந்து, இரங்குவார்களை. 67

இராமன் அவர்களை உசாவுதல்

'ஏவிய காரியம் இயற்றி எய்தினை?
நோவிலை? வீடணா!' என்று நோக்கி, பின்,
தா அரும் பெரும் புகழ்ச் சாம்பன்தன்னை, 'நீ
'ஆவி வந்தனைகொல்?' என்று அருளினான்அரோ. 68

'ஐயன்மீர்! நம் குலத்து அழிவு இது ஆதலின்,
செய்வகை பிறிது இலை; உயிரின் தீர்ந்தவர்
உய்கிலர்; இனிச் செயற்கு உரியது உண்டுஎனின்,
பொய் இலீர்! புகலுதிர், புலமை உள்ளத்தீர்! 69

63. சிங்குதல் - குறைதல், ஈண்டுக் கழிதல்; பொங்கிய - விரிந்த; 65. இருவர் - வீடணன், சாம்பன் என்னும் இருவர்; 66. கோள் இலாப் புண்டரீகத் துணை - குற்றமற்ற தாமரைகளாகிய இரு கண்கள்; தாமரைக்குக் குற்றமாவது பனிக்குத் தேம்புதல்.

'சீதை என்று ஒருத்தியால் உள்ளம் தேம்பிய
பேதையேன், சிறுமையால் உற்ற பெற்றியை
யாது என உணர்த்துகேன்! உலகொடு ஈர்வுறுக்
காதை, வன் பழியொடும் நிறுத்திக் காட்டினேன். 70

' ''மாயை இம் மான்'' என, எம்பி, வாய்மையான்,
தூயன உறுதிகள் சொன்ன சொல் கொளேன்,
போயினென்; பெண் உரை மருது போகலால்,
ஆயது, இப் பழியுடை மரணம்—அன்பினீர்! 71

'கண்டனென், இராவணன்தன்னைக் கண்களால்;
மண்டு அமர் புரிந்தனென், வலியின்; ஆர் உயிர்
கொண்டிலென், உறவு எலாம் கொடுத்து, மாள, நான்,
பண்டுடைத் தீவினை பயந்த பண்பினால். 72

' ''தேவர்தம் படைக்கலம் தொடுத்து, தீயவன்
சாவது காண்டும்'' என்று இளவல் சாற்றவும்,
ஆவதை இசைந்திலென்,—அழிவது என்வயின்
மேவுதல் உறுவது ஓர் விதியின் வெம்மையால். 73

'நின்றிலென் உடன், நெறி படைக்கு நீதியால்
ஒன்றிய பூசனை இயற்ற உன்னினேன்;
பொன்றினர் நமர் எலாம்; இளவல் போயினான்;
வென்றிலென் அரக்கனை, விதியின் மேன்மையால்.* 74

'ஈண்டு, இவண் இருந்து, இவை இயம்பும் ஏழைமை
வேண்டுவது அன்று; இனி, அமரின் வீடிய
ஆண் தகை அன்பரை அமரர் நாட்டிடைக்
காண்டலே நலம்; பிற கண்டது இல்லையால். 75

'எம்பியைத் துணைவரை இழந்த யான், இனி,
வெம்பு போர் அரக்கரை முருக்கி, வேர்அறுத்து,
அம்பினின் இராவணன் ஆவி பாழ்படுத்து,
உம்பருக்கு உதவி, மேல் உறுவது என்அரோ? 76

'இளையவன் இறந்தபின், எவரும் என் எனக்கு?
அளவு அறு சீர்த்தி என்? அறன் என்? ஆண்மை என்?
கிளை உறு சுற்றம் என்? அரசு என்? கேண்மை என்?
விளைவுதான் என்? மறை விதி என்? மெய்ம்மை என்? 77

70. காதை - (என்) கதை.

‘இரக்கமும் பாழ்பட எம்பி ஈறு கண்டு,
அரக்கரை வென்று நின்று, ஆண்மை ஆள்வெனேல்,
மரக் கண் வன் கள்வனே, வஞ்சனேன்; இனி,
கரக்குமது அல்லது, ஓர் கடன் உண்டாகுமோ? 78

‘ “தாதையை இழந்தபின், சடாயு இற்றபின்,
காதலின் துணைவரும் மடிய, காத்து உழல்
கோது அறு தம்பியும் விளிய, கோள் இலன்,
சீதையை உவந்துளான்” என்பர், சீரியோர். 79

‘வென்றனென், அரக்கரை வேரும் வீய்ந்து அறக்
கொன்றனென், அயோத்தியைக் குறுகினேன், குணத்து
இன் துணை எம்பியை இன்றி, யான் உளேன்;
நன்று அரசு ஆளுமா, சால நன்றுஅரோ. 80

‘படி இனது ஆதலின், யாதும் பார்க்கிலென்,
முடிகுவென், உடன்’ என முடியக் கூறலும்,
அடி இணை வணங்கிய சாம்பன், ‘ஆழியாய்!
நொடிகுவது உளது’ என நுவல்வதாயினன்: 81

‘உன்னை நீ உணர்கிலை; அடியனேன் உனை
முன்னமே அறிகுவேன்; மொழிதல் தீது, அது;
என் எனில், இமையவர் எண்ணுக்கு ஈனம் ஆம்;
பின்னரே தெரிகுதி;—தெரிவு இல் பெற்றியோய்! 82

‘அம்புயத்து அயன் படை ஆதல் தேறினேன்,
உம்பியை, உலப்பு அரும் உருவை ஊன்றிட,
வெம்பு போர்க் களத்திடை வீழ்த்த வென்றியால்;
எம் பெருந் தலைவ! ஈது எண்ணம் உண்மையால்; 83

‘அன்னவன் படைக்கலம், அமரர் தானவர்-
தன்னையும், விடின் உயிர் குடிக்கும்; தற்பர!
உன்னை ஒன்று இழைத்திலது, ஒழிந்து நீங்கியது;
இன்னமும் உவமை ஒன்று எண்ண வேண்டுமோ? 84

‘பெருந் திறல் அனுமன், ஈண்டு உணர்வு பெற்றுளான்,
அருந் துயர் முடிக்குறும் அளவு இல் ஆற்றலான்,
மருந்து இறைப் பொழுதினில் கொணரும் வாய்மொழி
பொருந்தினன், வட திசைக் கடிது போயினன்.* 85

78. கரத்தல் - உயிர் போய் ஒளித்தல்; 79. கோள் இலன் - நல்ல கொள்கை இல்லாதவன்; 81. படி இனது - (என்) நிலைமை இவ்வாறு உளது; இனது - இன்னது; 84. தற்பரன் - மேலானவன்.

'பனி வரை கடந்தனன், பருப்பதங்களின்
தனி அரசு அதன்புறம் தவிர்ந்து சார்ந்துளான்,
இனி ஒரு கணத்தின் வந்து எய்தும்; ஈண்டுறும்
துனி வரு துன்பம் நீ துறத்தி, தொல்லையோய்! 86

'யான் அலால், எந்தையாய் உலகை ஈன்றுளான்-
தான் அலால், சிவன் அலால், நேமி தாங்கிய
கோன் அலால், எனவரும் உணரும் கோள் இலர்,—
வேனிலான் மேனியாய்!—மருந்தை மெய் உற. 87

'ஆர்கலி கடைந்த நாள், அமிழ்தின் வந்தன;
கார் நிறத்து அண்ணல்தன் நேமி காப்பன;
மேருவின் உத்தரகுருவின்மேல் உள;
யாரும் மற்று உணர்கிலா அரணம் எய்தின;* 88

'தோன்றிய நாள் முதல் யாரும் தொட்டில;
ஆன்ற பேர் அண்ணலே! அவற்றின் ஆற்றல் கேள்:
மூன்று என ஒன்றிய உலகம், முன்னை நாள்,
ஈன்றவன் இறப்பினும், ஆவி ஈயுமால். 89

'சல்லியம் அகற்றுவது ஒன்று; சந்துகள்
புல்லுறப் பொருத்துவது ஒன்று; போயின
நல் உயிர் நல்குவது ஒன்று; நல் நிறம்
தொல்லையது ஆக்குவது ஒன்று;—தொல்லையோய்! 90

'வருவது திண்ணம்; நீ வருந்தல்; மாருதி,
தரு நெறி தருமமே காட்ட, தாழ்க்கிலன்;
அருமையது அன்று' என, அடி வணங்கினன்;
இருமையும் துடைப்பவன் ஏம்பல் எய்தினன். 91

அனுமன் மலை கொண்டு வருதல்

' ''பொன்மலைமீது போய், போக பூமியின்
நல் மருந்து உதவும்'' என்று உரைத்த நல் உரைக்கு
அன்வயம் இல்லை என்று அயிர்க்கின்றேன்அலேன்'
என்னலும், விசும்பிடை எழுந்தது, அங்கு ஒலி, 92

86. பருப்பதங்களின் தனி அரசு - மேருமலை; 87. வேனிலான் - மன்மதன்; 88. அரணம் - பாதுகாவல்; 90. சல்லியம் - அம்பு; சந்துகள் - மூட்டுவாய்கள்; அம்புகளை உடலினின்றும் நீக்கும் மருந்து விசல்லிய கரணி என்றும், மூட்டுகளைப் பொருத்துவது சந்தான கரணி என்றும், போன உயிரைத் தருவது சஞ்சீவி கரணி என்றும், வடு நீக்கி முன்னைய உடலைத் தருவது சாவர்ணிய கரணி என்றும் பெயர் பெறும் என்பர்; 91. ஏம்பல் - மகிழ்ச்சி.

கடல் கிளர்ந்து எழுந்து மேல் படர, கார் வரை
இடை இடை பறிந்து விண் ஏற, இற்று இடை
தடை இலது உடற்றுறு சண்டமாருதம்
வட திசை தோன்றிய மறுக்கம் வந்ததால். 93

மீன் குலம் குலைந்து உக, வெயிலின் மண்டிலம்
தான் குலைந்து உயர் மதி தழுவ, தன்னுழை
மான் குலம் வெருக் கொள, மயங்கி, மண்டி, வான்,
தேன் குலம் கலங்கிய நறவின், சென்றவால். 94

வேர்த்துள தூரொடு விசும்பை மீச் செலப்
போர்த்தன, மலையொடு மரனும், முன்புபோல்
தூர்த்தன, வேலையை; காலின் தோன்றலும்,
ஆர்த்தனன், அனையவர் அரந்தை ஆற்றுவான். 95

மழைகளும் கடல்களும், மற்றும் முற்றும், மண்-
உழையவும் விசும்பவும் ஒலித்தற்கு ஒத்துள,
குழீஇயின, குமுறின கொள்கை கொண்டதால்—
உழுவையின் சினத்தவன் ஆர்த்த ஓசையே. 96

எறி திரைப் பெருங் கடல் கடைய ஏற்ற நாள்,
'செறி சுடர் மந்தரம் தருதி, சென்று' என,
'வெறிதுகொல்!' எனக் கொடு, விசும்பின் மீச்செலும்
உறு வலிக் கலுழனே ஒத்துத் தோன்றினன். 97

பூதலத்து, அரவொடு மலைந்து போன நாள்,
ஓதிய வென்றியன், உடற்றும் ஊற்றத்தன்,
ஏதம் இல் இலங்கை அம் கிரிகொடு எய்திய
தாதையும் ஒத்தனன், உவமை தற்கு இலான்.* 98

'வந்தான்' என்பதற்குள்ளாக, அனுமன் வந்து, நிலத்தில் அடி இடுதல்

'தோன்றினன்' என்னும் அச் சொல்லின் முன்னம் வந்து
ஊன்றினன், நிலத்து அடி; கடவுள் ஓங்கல்தான்
வான்தனில் நின்றது, வஞ்சர் ஊர் வர
ஏன்றிலது ஆதலின்; அனுமன் எய்தினன். 99

93. மறுக்கம் - கலக்கம்; 94. தன்னுழை -(சந்திரனிடத்து) தன்னிடத்து; நறவு - தேன், ஈண்டுத் தேன் கூடு; 96. உழுவை - புலி; 97. வெறிது - உள்ளீடு இல்லாதது.

மருத்துமலையின் காற்றால் யாவரும் உயிர் பெற்று எழுதல்

காற்று வந்து அசைத்தலும்,—கடவுள் நாட்டவர்
போற்றினர் விருந்து உவந்திருந்த புண்ணியர்—
ஏற்றமும் பெரு வலி அழகொடு எய்தினார்,
கூற்றினை வென்று, தம் உருவும் கூடினார். 100

அரக்கர்தம் ஆக்கைகள் அழிவு இல் ஆழியில்
கரக்கலுற்று ஒழிந்தன ஒழிய, கண்டன
மரக்குலம் முதலவும் உய்ந்து வாழ்ந்தன;
குரக்குஇனம் உய்ந்தது கூற வேண்டுமோ? 101

கழன்றன, நெடுங் கணை; கரந்த புண்; கடுத்து
அழன்றில குளிர்ந்தன, அங்கம்; செங் கண்கள்
சுழன்றன; உலகு எலாம் தொழுவ; தொங்கலின்
குழன்ற பூங் குஞ்சியான் உணர்வு கூடினான். 102

யாவரும் எழுந்தனர்; ஆர்த்த ஏழ் கடல்
தாவரும் பேர் ஒலி செவியில் சார்தலும்,—
தேவர்கள் வாழ்த்து ஒலி கேட்ட செங் கணான்
யோகம் நீங்கினன் என,—இளவல் ஓங்கினான். 103

இராமன் தம்பியைத் தழுவித் துயர் தீர்தல்

ஓங்கிய தம்பியை, உயிர் வந்து உள் உற
வீங்கிய தோள்களால் தழுவி, வெந் துயர்
நீங்கினன், இராமனும்; உலகில் நின்றில,
தீங்கு உள; தேவரும் மறுக்கம் தீர்ந்தனர். 104

அரம்பையர் ஆடினர்; அமிழ்த ஏழ் இசை,
நரம்பு இயல் கின்னரம் முதல நன்மையே
நிரம்பின; உலகு எலாம் உவகை நெய் விழா
பரம்பின; முனிவரும் வேதம் பாடினார். 105

வேதம் நின்று ஆர்த்தன; வேத வேதியர்
போதம் நின்று ஆர்த்தன; புகழும் ஆர்த்தன;
ஓதம் நின்று ஆர்த்தன; ஓத வேலையின்
சீதம் நின்று ஆர்த்தன, தேவர் சிந்தனை. 106

101. மரக்குலம் - (வானரர்களால் பறிக்கப்பட்டுப் பட்டுப்போன) மரங்கள்; 102. பூங் குஞ்சியான் - அழகிய மயிர் முடியை உடைய இலக்குவன்; 105. பரம்புதல் - பரவுதல்; 106. ஓதம் - அலை.

அயன் படை அகல்தல்

‘உந்தின பின் கொலை ஒழிவு இல் உண்மையும்
தந்தனை நீ; அது நினக்குச் சான்று’ என,
சுந்தரவில்லியைத் தொழுது, சூழ வந்து,
அந்தணன் படையும் நின்று, அகன்று போயதால். 107

ஆய காலையின், அமரர் ஆர்த்து எழ,
தாயின் அன்பனைத் தழுவினன்,—தனி
நாயகன், பெருந் துயரம் நாம் அற,
தூய காதல் நீர் துளங்கு கண்ணினன். 108

எழுது குங்குமத் திருவின் ஏந்து கோடு
உழுத மார்பினன், உருகி, உள் உறத்
தழுவி நிற்றலும், தாழ்ந்து, தாள் உறத்
தொழுத மாருதிக்கு, இனைய சொல்லினன்: 109

இராமன் அனுமனைப் புகழ்ந்து, வாழ்த்துக் கூறுதல்

‘முன்னின் தோன்றினோர் முறையின் நீங்கலாது,
என்னின் தோன்றிய துயரின், ஈறு சேர்
மன்னின் தோன்றினேம் முன்னம்; மாண்டுளோம்;
நின்னின் தோன்றினேம், நெறியின் தோன்றினாய்! 110

‘அழியுங்கால் தரும் உதவி, ஐயனே!
மொழியுங்கால், தரும் உயிரும் முற்றுமே?
பழியும் காத்து, அரும் பகையும் காத்து, எமை
வழியும் காத்தனை; நம் மறையும் காத்தனை. 111

‘தாழ்வில் இங்கு இறைப்பொழுது தக்கதே,
வாழி எம்பிமேல் அன்பு மாட்ட, வான்
ஏழும் வீயும்; என் பகர்வது?—எல்லை நாள்
ஊழி காணும் நீ, உதவினாய்அரோ! 112

‘இன்று வீகலாது, எவரும் எம்மொடு
நின்று வாழுமா நெடிது நல்கினாய்;
ஒன்றும் இன்னல் நோய் உறுகிலாது, நீ
என்றும் வாழ்தியால் இனிது, என் ஏவலால்!’ 113

107. உந்தின பின் - செலுத்தின பின்பு; 108. நாம் அற - பெயரும் அற்றதாய் ஒழிய; 109. திரு - சீதை; கோடு - யானைக்கொம்பு போன்ற கொங்கைகள்.

மற்றையோர்களும், அனுமன் வண்மையால்,
பெற்ற ஆயுளார், பிறந்த காதலார்,
சுற்றும் மேவினர்; தொழுது வாழ்த்தினர்;
உற்றவாறு எலாம் உணரக் கூறினன். 114

மருத்துமலையுடன் அனுமன் மீண்டு போதல்

'உய்த்த மா மருந்து உதவ, ஒன்னலார்,
பொய்த்த சிந்தையார், இறுதி பொய்க்குமால்;
மொய்த்த குன்றை அம் மூல ஊழிவாய்
வைத்து, மீடியால்—வரம்பு இல் ஆற்றலாய்!' 115

என்று சாம்பன் ஆண்டு இயம்ப, 'ஈதுஅரோ
நன்று, சால!' என்று, உவந்து, 'ஓர் நாழிகைச்
சென்று மீள்வென்' என்று எழுந்து, தெய்வ மாக்
குன்று தாங்கி, அக் குரிசில் போயினன். 116

24 களியாட்டுப் படலம்

பகை ஒழிந்தது என்று உவந்த இராவணன், மகளிரின் களியாட்டம் காணுதல்

இன்னது இத் தலையது ஆக, இராவணன் எழுந்து பொங்கி,
தன்னையும் கடந்து நீண்ட உவகையன், சமைந்த கீதம்
கின்னரர் முதலோர் பாட, முகத்திடைக் கிடந்த கெண்டைக்
கன்னி நன் மயில் அன்னாரை நெடுங் களியாட்டம் கண்டான். 1

அரம்பையர், விஞ்சை மாதர், அரக்கியர், அவுணர் மாதர்,
குரும்பை அம் கொங்கை நாகர் கோதையர், இயக்கர் கோது இல்
கரும்பினும் இனிய சொல்லார், சித்தர்தம் கன்னிமார்கள்,
வரம்பு அறு சும்மையோர்கள், மயில்-குலம் மருள, வந்தார். 2

மேனகை, விசய வாட்கண் திலோத்தமை, அரம்பை, மெல்லென்
தேன் நகு மழலை இன் சொல் உருப்பசி, முதலாம் தெய்வ
வானக மகளிர் வந்தார்—சில் அரிச் சதங்கை பம்ப,
ஆனகம், முரசம், சங்கம், முருட்டொடும் இரட்ட, ஆடி. 3

115. மூல ஊழி - பழமையான இடம்; ஊழி - இடம்; மீடி - மீள்தி.

24: 2. சும்மை - திரள், கூட்டம்; 3. ஆனகம் - படகம், ஒருவகை இசைக்கருவி; முருடு - மத்தளம்.

தோடு உண்ட சுருளும், தூங்கும் குழைகளும், சுருளின் தோய்ந்த
ஏடு உண்ட பசும் பொன் பூவும், திலதமும், இலவச் செவ் வாய்
மூடுண்ட முறுவல் முத்தும், முள்ளுண்ட முளரிச் செங்கண்,
காடு உண்டு புகுந்தது என்ன, முனிந்தது—கறை வெண் திங்கள். 4

முளைக் கொழுங் கதிரின் கற்றை முறுவல் வெண் நிலவும், மூரி
ஒளிப் பிழம்பு ஒழுகும் பூணின் உமிழ் இள வெயிலும், ஒண் பொன்
விளக்கையும் விளக்கும் மேனி மிளிர் கதிர்ப் பரப்பும், வீச,
வளைத்த பேர் இருளும், கண்டோர் அறிவு என, மருளும் மாதோ. 5

கள்ளுண்டார் நிலை

நல் பெருங் கல்விச் செல்வம் நவை அறு நெறியை நண்ணி,
முன் பயன் உணர்ந்த தூயோர் மொழியொடும் பழகி, முற்றி,
பின் பயன் உணர்தல் தேற்றுப் பேதைபால், வஞ்சன் செய்த
கற்பனை என்ன ஓடிக் கலந்தது, கள்ளின் வேகம். 6

பல பட முறுவல் வந்து பரந்தன; பனித்த, மெய் வேர்;
இலவு இதழ் துடித்த; முல்லை எயிறு வெண் நிலவை ஈன்ற;
கொலை பயில் நயன வேல்கள் கொழுங் கடை சிவந்த; கொற்றச்
சிலை நிகர் புருவம் நெற்றிக் குனித்தன; விளர்த்த செவ் வாய்.

கூந்தல் அம் பாரக் கற்றைக் கொந்தளக் கோலக் கொண்டல்
ஏந்து அகல் அல்குல் தேரை இகந்துபோய் இறங்க, யாணர்ப்
பூந் துகிலோடும் பூசல் மேகலை, சிலம்பு பூண்ட
மாந் தளிர் எய்த, நொய்தின் மயங்கினர்—மழலைச் சொல்லார்.

கோத்த மேகலையினோடும் துகில் மணிக் குறங்கைக் கூட,
காத்தன, கூந்தற் கற்றை, அற்றம், அத் தன்மை கண்டு—
வேத்தவை, 'கீழ் உளோர்கள் கீழ்மையே விளைத்தார்; மேலோர்
சீர்த்தவர் செய்யத் தக்க கருமமே செய்தார்' என்ன. 9

4. தோடு உண்ட சுருள் - பனந்தோட்டின் தன்மை பொருந்திய காதணி; சுருளில் தோய்ந்த பூ - ஐம்பால் முடிவகையில் ஒன்றான சுருளில் அமைந்த பூ; 6. செல்வம் - செல்வத்தால்; பேதைபால் வஞ்சன் செய்த கற்பனை, அப்பேதையின் உள்ளத்தில் விரைந்து பதிவதுபோலக் கள்ளின் மயக்கம் பெண்டிர்பால் விரைந்து கலந்தது; 8. கொந்தளக் கொண்டல் - பொங்கி எழுதலையுடைய மேகம்; மாந்தளிர் - மாந்தளிர் போன்ற அடிகள்; 9. அற்றம் - மறைவிடம்; வேத்தவை - அரசவை; ஈண்டு இராவணனுடைய அவை எனக் கோடலும் ஆம்; சீர்த்தவர் - சிறந்த குணமுடையோர்.

பாணியின் தள்ளி, கால மாத்திரைப் படாது பட்ட
நாணியின் முறையின் கூடாது, ஒரு வழி நடையின் செல்லும்
ஆணியின் அழிந்த பாடல் நவின்றனர்—அனங்க வேள்தன்
தூணியின் அடைத்த அம்பின் கொடுந் தொழில் துறந்த கண்ணார். 10

வங்கியம் வகுத்த கானம் வயங்கிய மழலை வாயர்,
சங்கை இல் பெரும் பாண் உற்ற நிறத்துறை நிரம்பித் தள்ள,
சிங்கல் இல் அமுதினோடும் புளி அளாம் தேறல் என்ன,
வெங் குரல் எடுத்த பாடல் விளித்தனர், மயக்கம் வீங்க. 11

ஏனைய பிறவும் கண்டார்க்கு இந்திரசாலம் என்ன,—
தான் அவை உருவில் தோன்றும் பாவனைத் தகைமை சான்றோர்,—
மான் அமர் நோக்கினாரை மைந்தரைக் காட்டி, வாயால்
ஆனையை விளம்பி, தேரை அபிநயத்து இயற்றி உற்றார். 12

அழுகுவர்; நகுவர்; பாடி ஆடுவர்; அயல் நின்றாரைத்
தொழுகுவர்; துயில்வர்; துள்ளித் தூங்குவர்; துவர் வாய் இன் தேன்
ஒழுகுவர்; ஒல்கி ஒல்கி, ஒருவர்மேல் ஒருவர் புக்கு,
முழுகுவர், குருதி வாட் கண் முகிழ்த்து, இடை, மூரி போவர்.

உயிர்ப்புறத்து உற்ற தன்மை உணர்த்தினார், 'உள்ளத்து உள்ளது
அயிர்ப்பினில் அறிதிர்' என்றே; அது களியாட்டம் ஆக,
செயிர்ப்பு அறு தெய்வச் சிந்தைத் திரு மறை முனிவர்க்கேயும்,
மயிர்ப்புறம்தோறும் வந்து பொடித்தது, காம வாரி. 14

மாப் பிறழ் நோக்கினார்தம் மணி நெடுங் குவளை வாட் கண்
சேப்புற, அரத்தச் செவ் வாய்ச் செங் கிடை வெண்மை சேர,
காப்பு உறு படைக் கைக் கள்வ நிருதர்க்கு ஓர் இறுதி காட்டி,
பூப் பிறழ்ந்து உருவம் வேறாய்ப் பொலிந்தது ஓர் தன்மை போன்ற. 15

கயல், வரு காலன் வை வேல், காமவேள் கணை, என்றாலும்,
இயல் வருகிற்கிலாத நெடுங் கண்ணார், இணை மென் கொங்கைத்
துயல்வரு கனக நாணும், காஞ்சியும், துகிலும், வாங்கி,
புயல் வரு கூந்தல் பாரக் கற்றையின் புனையலுற்றார். 16

10. பாணி - தாளமுறை; கால மாத்திரை - கால அளவு; நாணியின் முறை - நரம்பு ஒலிக்கும் முறை; ஆணி - வரம்பு; 11. வங்கியம் - புல்லாங்குழல்; சங்கை - குற்றம்; பெரும் பாண் உற்ற - பெரும் பாணர்கள் கண்டறிந்த; நிறத் துறை - விளக்கமான துறை; நிரம்பித் தள்ள - மிக்கு மாறுபட்டுப் போக; சிங்கல் - குறைதல்; 12. தான் - அசைநிலை; அவை உருவில் தோன்றும் பாவனை - அவ்வப் பொருள்களைத் தம் உருவில் தோற்றுவிக்கும் அபிநயம்; 13. மூரி போதல் - சோம்பல் முறித்தல்; 14. உயிர்ப்புறம் - உடம்பு; காம வாரி - காம உணர்ச்சியாகிய வெள்ளம்; 15. மாப் பிறழ் நோக்கினார் - வண்டுகள் பிறழ்வது போலும் கண்ணினர்; செங் கிடை - சிவந்த நெட்டி; 16. காஞ்சி - மேகலை என்னும் இடையணி.

வானரர் ஆர்ப்பொலியும் அதன் விளைவும்

முத்து அன்மை மொழியல் ஆகா முகிழ் இள முறுவல் நல்லார்,
இத் தன்மை எய்த நோக்கி, அரசு வீற்றிருந்த எல்லை,
அத் தன்மை அரியின் சேனை ஆர்கலி ஆர்த்த ஓசை
மத்தன் மெய் மயங்க வந்து, செவிதொறும் மடுத்தது அன்றே.

ஆடலும், களியின் வந்த அமலையும், அமிழ்தின் ஆன்ற
பாடலும், முழவின் தெய்வப் பாணியும், பவள வாயார்
ஊடலும், கடைக்கண் நோக்கும், மழலை வெவ் உரையும், எல்லாம்
வாடல் மென் மலரே ஒத்த—ஆர்ப்பு ஒலி வருதலோடும். 18

தறி பொரு களி நல் யானை சேவகம் தள்ளி ஏங்க,
துறு சுவல் புரவி தூங்கித் துணுக்குற, அரக்கர் உட்க,
செறி கழல் இருவர் தெய்வச் சிலை ஒலி பிறந்தது அன்றே—
எறி கடல் கடைந்த மேல்நாள், எழுந்த பேர் ஓசை என்ன. 19

முத்து வாள் முறுவல் மூரல் முகத்தியர், முழுக் கண் வேலால்
குத்துவார், கூட்டம் எல்லாம் வானரக் குழுவின் தோன்ற,
மத்து வார் கடலின் உள்ளம் மறுகுற, வதனம் என்னும்
பத்து வாள் மதிக்கும், அந் நாள், பகல் ஒத்தது இரவும், பைய.

ஈது இடை ஆக, வந்தார், அலங்கல்மீது ஏறினர்போய்
ஊதினர், வேய்கள், வண்டின் உருவினர், உற்ற எல்லாம்;
'தீது இலர், பகைஞர்' என்ன, திட்கென்ற மனத்தன், தெய்வப்
போது உகு பந்தர்நின்று, மந்திரத்து இருக்கை புக்கான். 21

25

மாயா சீதைப் படலம்

இந்திரசித்து முதலியோர்க்கு இராவணன் நிலைமையைக் கூறுதல்

மைந்தனும், மற்றுளோரும், மகோதரன் முதலோர் ஆய
தந்திரத் தலைமையோரும், முதியரும், தழுவத் தக்க
மந்திரர் எவரும், வந்து, மருங்கு உறப் படர்ந்தார்; பட்ட
அந்தரம் முழுதும் தானே அனையவர்க்கு அறியச் சொன்னான்.

17. அரி - குரங்கு; மத்தன் - காமப் பித்தனாகிய இராவணன்; 18. வெவ் உரை - விருப்பமூட்டும் சொல்; 19. சேவகம் - யானைக் கூடம்; தள்ளி ஏங்க - சோர்ந்து ஏங்க; துறு சுவல் - நெருங்கிய பிடரி மயிர்; 20. மத்து - மந்தரமலையாகிய மத்து; 21. வேய்கள் - ஒற்றர்கள்.

25: 1. தந்திரம் - சேனை.

மாலியவான் அறிவுரை

'நம் கிளை உலந்தது எல்லாம் உய்ந்திட, நணுகும் அன்றே,
வெங் கொடுந் தீமைதன்னால் வேலையில் இட்டிலேமேல்?
இங்கு உள எல்லாம் மாள்தற்கு இனி வரும் இடையூறு இல்லை,
பங்கயத்து அண்ணல் மீளாப் படை பழுதுற்ற பண்பால். 2

'இலங்கையின்நின்று, மேரு பிற்பட, இமைப்பில் பாய்ந்து,
வலம் கிளர் மருந்து, நின்ற மலையொடும், கொணர வல்லான்
அலங்கல் அம் தடந் தோள் அண்ணல் அனுமனே ஆதல் வேண்டும்—
கலங்கல் இல் உலகுக்கு எல்லாம் காரணம் கண்ட ஆற்றால். 3

'நீரினைக் கடக்க வாங்கி, இலங்கையாய் நின்ற குன்றைப்
பாரினில் கிழிய வீசின், ஆர் உளர், பிழைக்கற்பாலார்?
போர் இனிப் பொருவது எங்கே? போயின அனுமன், பொன் மா
மேருவைக் கொணர்ந்து, இவ் ஊர்மேல் விடும் எனின், விலக்கல் ஆமோ?

'முறை கெட வென்று, வேண்டின் நினைந்ததே முடிப்பன்; முன்னின்,
குறை இலை குணங்கட்கு; என்னோ, கோள் இலா வேதம் கூறும்
இறைவர்கள் மூவர் என்பது? எண் இலார் எண்ணமே தான்;
அறை கழல் அனுமனோடும் நால்வரே முதல்வர் அம்மா. 5

'இறந்தவர் இறந்து தீர; இனி ஒரு பிறவி வந்து
பிறந்தனம்ஆகின், உள்ளேம்; உய்ந்தனம், பிழைக்கும் பெற்றி
மறந்தனம்; எனினும், இன்னம் சனகியை மரபின் ஈந்து, அவ்
அறம் தரு சிந்தையோரை அடைக்கலம் புகுதும், ஐய! 6

'வாலியை வாளி ஒன்றால் வானிடை வைத்து, வாரி
வேலையை வென்று, கும்பகருணனை வீட்டினானை,
ஆலியின் மொக்குள் அன்ன அரக்கரோ, அமரின் வெல்வார்?—
சூலியைப் பொருப்பினோடும் தூக்கிய விசயத் தோளாய்! 7

'மறி கடல் குடித்து, வானை மண்ணொடும் பறிக்க வல்ல
எறி படை அரக்கர் எல்லாம் இறந்தனர்; இலங்கை ஊரும்,
சிறுவனும் நீயும் அல்லால், ஆர் உளர், ஒருவர் தீர்ந்தார்?
வெறிது, நம் வென்றி' என்றான், மாலி, மேல் விளைவது ஓர்வான். 8

4. விலங்கல் - தடுத்தல்; 5. எண் இலார் - ஆராயும் வன்மை இல்லாதவர்; 7. ஆலி - மழை நீர்; சூலி - சிவபிரான்; 8. சிறுவன் - இந்திரசித்தன்,

சீதையை விட ஒருப்படாது, இராவணன் வீரம் பேசுதல்

கட்டுரை அதனைக் கேளா, கண் எரி கதுவ நோக்கி,
'பட்டனர் அரக்கர் என்னின், படைக்கலம் படைத்த எல்லாம்
கெட்டன எனினும், வாழ்க்கை கெடாது; இனி, கிளி அனாளை
விட்டிட எண்ணியோ நான் பிடித்தது, வேட்கை வீய? 9

'மைந்தன் என்? மற்றையோர் என்? அஞ்சினிர்; வாழ்வு வேட்டிர்!
உய்ந்து நீர் போமின்; நாளை, ஊழி வெந் தீயின் ஓங்கி,
சிந்திய மனித்தரோடு, அக் குரங்கினைத் தீர்ப்பென்' என்றான்,
வெந் திறல் அரக்கர் வேந்தன். மகன் இவை விளம்பலுற்றான்:

நிகும்பலை வேள்வி குறித்து இந்திரசித்தன் கூறுதல்

'உளது நான் உணர்த்தற்பாலது, உணர்ந்தனை கோடல் உண்டேல்;
தள மலர்க் கிழவன் தந்த படைக்கலம் தழலின் சார்த்தி,
அளவு இலது அமைய விட்டது, இராமனை நீக்கி அன்றால்;
விளைவு இலது, அனையன் மேனி தீண்டில, மீண்டது அம்மா! 11

'மானிடன் அல்லன்; தொல்லை வானவன் அல்லன்; மற்றும்,
மேல் நிமிர் முனிவன் அல்லன்; வீடணன் மெய்யின் சொன்ன,
யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் என்றே,—
தேன் உகு தெரியல் மன்னா!—சேகு அறத் தெரிந்தது அன்றே.

'அனையது வேறு நிற்க; அன்னது பகர்தல் ஆண்மை
வினையன அன்று; நின்று வீழ்ந்தது வீழ்க! வீர!
இனையல் நீ; மூண்டு யான் போய், நிகும்பலை விரைவின் எய்தி,
துனி அறு வேள்வி வல்லை இயற்றினால், முடியும், துன்பம். 13

இராவணன், நிகும்பலை வேள்வி முடிக்கும் உபாயம் வினவல்

'அன்னது நல்லதேயால்; அமைதி' என்று அரக்கன் சொன்னான்;
நல் மகன், 'உம்பி கூற, நண்ணலார் ஆண்டு நண்ணி,
முன்னிய வேள்வி முற்றாவகை செரு முயல்வர்' என்னா,
'என், அவர் எய்தாவண்ணம் இயற்றலாம் உறுதி?' என்றான்.

இந்திரசித்தன் விடை

'சானகி உருவமாகச் சமைத்து, அவள் தன்மை கண்ட
வான் உயர் அனுமன் முன்னே, வாளினால் கொன்று மாற்றி,
யான் நெடுஞ் சேனையோடும் அயோத்திமேல் எழுந்தேன் என்னப்
போனபின், புரிவது ஒன்றும் இலாது அவர் துயரம் பூண்பார்.

11. தளம் - இதழ்; விளைவு இலது - பயன் இல்லாததாய்; 12. சேகு - ஐயம்; 14. அமைதி - அவ்வாறே செய்வாய்.

' "இத் தலைச் சீதை மாண்டாள்; பயன் இவண் இல்லை" என்பார்,
அத் தலை, தம்பிமாரும், தாயரும், அடுத்துளோரும்,
உத்தம நகரும், மாளும் என்பது ஓர் வருத்தம் ஊன்ற,
பொத்திய துன்பம் மூள, சேனையும் தாமும் போவார். 16

'போகலர் என்ற போதும், அனுமனை ஆண்டுப் போக்கி,
ஆகியது அறிந்தால் அன்றி, அருந் துயர் ஆற்றல் ஆற்றார்;
ஏகிய கருமம் முற்றி, யான் இவண் விரைவின் எய்தி,
வேக வெம் படையின் கொன்று, தருகுவென் வென்றி' என்றான். 17

மாயா சீதை அமைக்க மேகநாதனும், இலங்கையை எரியூட்ட வானரங்களும் செல்லுதல்

'அன்னது புரிதல் நன்று' என்று அரக்கனும் அமைய, அம் சொல்
பொன் உரு அமைக்கும் மாயம் இயற்றுவான் மைந்தன் போனான்;
இன்னது இத் தலையது ஆக, இராமனுக்கு, இரவி செம்மல்,
'தொல் நகர்அதனை வல்லைக் கடி கெடச் சுடுதும்' என்றான்.

'அத் தொழில் புரிதல் நன்று' என்று அண்ணலும் அமைய, எண்ணி,
தத்தினன், இலங்கை மூதூர்க் கோபுரத்து உம்பர்ச் சார்ந்தான்;
பத்துடை ஏழு சான்ற வானரப் பரவை பற்றிக்
கைத்தலத்து ஓர் ஓர் கொள்ளி எடுத்தது, எவ் உலகும் காண.

எண்ணின கோடிப் பல் படை யாவும்,
மண்ணுறு காவல் திண் மதில் வாயில்,
வெண் நிற மேகம் மின்இனம் வீசி
நண்ணின போல்வ, தொல் நகர் நாண. 20

ஆசைகள்தோறும் அள்ளின கொள்ளி,
மாசு அறு தானை மர்க்கட வெள்ளம்,
'நாசம் இவ் ஊருக்கு உண்டு' என, நள்ளின்
வீசின, வானின் மீன் விழும் என்ன. 21

வஞ்சனை மன்னன் வாழும் இலங்கை,
குஞ்சரம் அன்னார் வீசிய கொள்ளி,
அஞ்சன வண்ணன் ஆழியில் ஏவும்
செஞ் சரம் என்னச் சென்றன மென்மேல்.* 22

16. பொத்திய துன்பம் - கலந்த துயரம்; 18. பொன் உரு - சீதையின் உருவம்; 19. எண்ணி அமைய என மாற்றுக.

இலங்கையில் தீ பரவுதல்

கை அகல் இஞ்சிக் காவல் கலங்க,
செய்ய கொழுந் தீ சென்று நெருங்க,
ஐயன் நெடுங் கார் ஆழியை அம்பால்
எய்ய எரிந்தால் ஒத்தது, இலங்கை. 23

பரல் துறு தொல் பழுவத்து எரி பற்ற,
நிரல் துறு பல் பறவைக் குலம், நீளம்
உரற்றின, விண்ணின் ஒலித்து எழும் வண்ணம்
அரற்றி எழுந்தது, அடங்க இலங்கை.* 24

மூஉலகத்தவரும், முதலோரும்
மேவின வில் தொழில் வீரன் இராமன்,
தீவம் எனச் சில வாளி செலுத்த,
கோவுரம் இற்று விழுந்தது, குன்றின். 25

மீண்ட அனுமன் ஆர்ப்பொலியால் இலங்கை நடுங்குதல்

இத் தலை, இன்ன நிகழ்ந்திடும் எல்லை,
கைத்தலையில் கொடு காலின் எழுந்தான்,
உய்த்த பெருங் கிரி மேருவின் உப்பால்
வைத்த, நெடுந் தகை மாருதி வந்தான். 26

அறை அரவக் கழல் மாருதி ஆர்த்தான்;
உறை அரவம் செவி உற்றுளது, அவ் ஊர்;
சிறை அரவக் கலுழன் கொடு சீறும்
இறை அரவக் குலம் ஒத்தது, இலங்கை. 27

அனுமன் முன்னிலையில், இந்திரசித்தன் மாயாசீதையைக் 'கொல்வேன்' எனல்

மேல் திசை வாயிலை மேவிய வெங் கண்
காற்றின் மகன்தனை வந்து கலந்தான்—
மாற்றல் இல் மாயை வகுக்கும் வலத்தான்,
கூற்றையும் வென்று உயர் வட்டணை கொண்டான். 28

23. கை அகல் இஞ்சி - இடம் அகன்ற மதில்; 24. நீளம் - கூடு; எழும் வண்ணம் - எழுதல் போல; 25. தீவம் - தீபம்; கோவுரம் - கோபுரம், எதுகை நோக்கித் திரிந்தது; 27. உறை அரவம் - (அங்குத்) தோன்றிய அரவம்; இறை அரவக் குலம் - தலைமையுடைய பாம்பின் கூட்டம்; 28. வட்டணை கொள்ளல் - பெருந்தாளம் இடுதல்.

சானகி ஆம்வகை கொண்டு சமைத்த
மான் அனையாளை வடிக் குழல் பற்றா,
ஊன் நகு வாள் ஒரு கைக்கொடு உருத்தான்,
ஆனவன் இன்னன சொற்கள் அறைந்தான்: 29

'வந்து, இவள் காரணம் ஆக மலைந்தீர்;
எந்தை இகழ்ந்தனன்; யான் இவள் ஆவி
சிந்துவென்' என்று செறுத்து, உரை செய்தான்;
அந்தம் இல் மாருதி அஞ்சி அயர்ந்தான். 30

அனுமன் இந்திரசித்தனுக்கு நீதி கூறுதல்

'கண்டவளே இவள்' என்பது கண்டான்,
'விண்டதுபோலும், நம் வாழ்வு' என வெந்தான்;
கொண்டு, இடை தீர்வது ஓர் கோள் அறிகில்லான்,
'உண்டு உயிரோ!' என, வாயும் உலர்ந்தான். 31

'யாதும் இனிச் செயல் இல்' என எண்ணா,
'நீதி உரைப்பது நேர்' என, ஓரா,
'கோது இல் குலத்து ஒரு நீ குணம் மிக்காய்!
மாதை ஒறுத்தல் வசைத் திறம் அன்றோ? 32

'நான்முகனுக்கு ஒரு நால்வரின் வந்தாய்;
நூல்முகம் முற்றும் நுணங்க உணர்ந்தாய்;
பால் முகம் உற்ற பெரும் பழி அன்றோ,
மால் முகம் உற்று, ஒரு மாதை வதைத்தல்? 33

'மண் குலைகின்றது; வானும் நடுங்கிக்
கண் குலைகின்றது; காணுதி, கண்ணால்;
எண் குலைகின்றது இரங்கல் துறந்தாய்!
பெண் கொலை செய்கை பெரும் பழி அன்றோ? 34

'என்வயின் நல்கினை ஏகுதி என்றால்,
நின் வயம் ஆம், உலகு யாவையும்; நீ நின்
அன்வயம் ஏதும் அறிந்திலை; ஐயா!
புன்மை தொடங்கல்; புகழ்க்கு அழிவு' என்றான்.* 35

30. செறுத்து - சினந்து; 33. நான்முகனுக்கு ஒரு நால்வரின் - பிரமனுக்கு ஒரு நாலாம் தலைமுறையில்; பால் முகம் உற்ற - (விலக்கப்பட்ட) பகுதிகளில் முதன்மை பெற்ற; மால் முகம் உற்று - அறிவு மயங்கி; 35. அன்வயம் - குலம், ஈண்டுக் குலப் பெருமை.

இந்திரசித்தன் மறுமொழி

'எந்தையும் இந்த இலங்கை உளோரும்,
உய்ந்திட, வானவர் யாவரும் ஓடச்
சிந்துவென் வாளினில்' என்று செறுத்தான்,
இந்திரசித்தவன் இன்ன இசைத்தான்: 36

'போமின், அடா! வினை போயது போலாம்;
ஆம் எனில், இன்னும் அயோத்தியை அண்மி,
காமின்; அது இன்று கனல் கரி ஆக
வேம்; அது செய்து, இனி மீள்குவென்' என்றான். 37

'தம்பியர் தம்மொடு தாயரும் ஆயோர்,
உம்பர் விலக்கிடினும், இனி உய்யார்;
வெம்பு கடுங் கனல் வீசிடும் என் கை
அம்புகளோடும் அவிந்தனர் அம்மா! 38

'இப்பொழுதே கடிது ஏகுவென், யான்; இப்
புட்பக மானம்அதில் புக நின்றேன்;
தப்புவரே அவர், சங்கை இலா என்
வெப்பு உறு வாளிகள் ஓடி விரைந்தால்? 39

மாயா சீதையை வெட்டி, இந்திரசித்தன் படையுடன் வடக்கு நோக்கி எழுதல்

'ஆளுடையாய்! அருளாய், அருளாய்!' என்று
ஏழை வழங்குறு சொல்லின் இரங்கான்,
வாளின் எறிந்தனன்; மா கடல் போலும்
நீள் உறு சேனையினோடு நிமிர்ந்தான். 40

தென் திசைநின்று வடாது திசைக்கண்
பொன் திகழ் புட்பகம்மேல்கொடு போனான்;
ஒன்றும் உணர்ந்திலன், மாருதி, உக்கான்,
வென்றி நெடுங் கிரி போல விழுந்தான். 41

இந்திரசித்தன் நிகும்பலை புகுதல்

போய், அவன் மாறி நிகும்பலை புக்கான்;
தூயவன் நெஞ்சு துயர்ந்து சுருண்டான்;
ஓய்வொடு நெஞ்சம் ஒடுங்க உலர்ந்தான்;
ஏயன பன்னினன், இன்னன சொன்னான்: 42

39. சங்கை - எண்ணிக்கை; வெப்புறு வாளிகள் - வெப்பம் பொருந்திய அம்புகள்: 42. துயர்ந்து - வருந்தி, துயர் என்ற பெயரினடியாகப் பிறந்த வினையெச்சம்.

அனுமன் அரற்றல்

'அன்னமே!' என்னும்; 'பெண்ணின் அருங் குலக் கலமே!' என்னும்;
'என் அமே!' என்னும்; 'தெய்வம் இல்லையோ, யாதும்?' என்னும்;
'சின்னமே செய்யக் கண்டும், தீவினை நெஞ்சம் ஆவி
பின்னமே ஆயதுஇல்லை' என்னும்—பேர் ஆற்றல் பேர்ந்தான்.

எழுந்து, அவன்மேலே பாய எண்ணும்; பேர் இடரில் தள்ளி
விழுந்து, வெய்து உயிர்த்து, விம்மி, வீங்கும்; போய் மெலியும்; வெந்தீக்
கொழுந்துகள் உயிர்க்கும்; யாக்கை குலைவுறும்; தலையே கொண்டுற்று
உழும் தரைதன்னை; பின்னும் இனையன உரைப்பதானன்: 44

' ''முடிந்தது நம்தம் எண்ணம்; மூஉலகிற்கும் கங்குல்
விடிந்தது'' என்று இருந்தேன்; மீள வெந் துயர் இருளின் வெள்ளம்
படிந்தது; வினையச் செய்கை பயந்தது; பாவி! வாளால்
தடிந்தனன் திருவை! அந்தோ, தவிர்ந்தது தருமம் அம்மா! 45

'பெருஞ் சிறைக் கற்பினாளைப் பெண்ணினைக் கண்ணின் கொல்ல,
இருஞ் சிறகு அற்ற புள் போல், யாதும் ஒன்று இயற்றல் ஆற்றேன்;
இருஞ் சிறை அழுந்துகின்றேன்; எம்பிரான் தேவி பட்ட
அருஞ் சிறை மீட்ட வண்ணம் அழகிது பெரிதும், அம்மா! 46

'பாதக அரக்கன், தெய்வப் பத்தினி, தவத்துளாளை,
பேதையை, குலத்தின் வந்த பிழைப்பு இலாதாளை, பெண்ணை,
சீதையை, திருவை, தீண்டிச் சிறை வைத்த தீயோன் சேயே
காதவும், கண்டு நின்ற கருமமே கருணைத்து அம்மா! 47

'கல்விக்கும் நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதன் ஆகி,
சொல்விக்க வந்து போனேன், ஆய இத் துயர் செய்தாரை
வெல்விக்க வந்து, நின்னை மீட்பிக்க அன்று; வெய்தின்
கொல்விக்க வந்தேன் உன்னை; கொடும் பழி சூட்டிக் கொண்டேன்.* 48

'வஞ்சியை எங்கும் காணாது, உயிரினை மறந்தான் என்ன,
செஞ் சிலை உரவோன் தேடித் திரிகின்றான் உள்ளம் தேற, [கொல்லத்
''அம் சொலாள் இருந்தாள்; கண்டேன்'' என்ற யான், ''அரக்கன்
துஞ்சினாள்'' என்றும் சொல்லத் தோன்றினேன்; தோற்றம் ஈதால்! 49

43. அமே - அம்மையே! 45. வினையச் செய்கை - வஞ்சகச் செய்கை; 46. பெருஞ் சிறைக் கற்பு - பெரிய காவலாகிய கற்பு; 47. கருணைத்து - குறிப்பு மொழி, கருணையற்றது என்பது பொருள்.

'அருங் கடல் கடந்து, இவ் ஊரை அள் எரி மடுத்து, வெள்ளக்
கருங் கடல் கட்டி, மேருக் கடந்து ஒரு மருந்து காட்டி,
''குரங்கு இனி உன்னோடு ஒப்பது இல்'' என, களிப்புக் கொண்டேன்;
பெருங் கடல் கோட்டம் தேய்த்தது ஆயது, என் அடிமைப் பெற்றி! 50

'விண்டு நின்று ஆக்கை சிந்தப் புல் உயிர் விட்டிலாதேன்,
கொண்டு நின்றானைக் கொல்லக் கூசினேன்! எதிரே கொல்லக்
கண்டு நின்றேனே நன்று; என் கையினின், கலத்தின் வெண் சோறு
உண்டு நின்று, உய்ய வல்லேன்; எளியனோ? ஒருவன் உள்ளேன்!'

என்ன நின்று இரங்கி, 'கள்வன் ''அயோத்திமேல் எழுவென்'' என்று
சொன்னதும் உண்டு; போன சுவடு உண்டு; தொடர்ந்து செல்லின்,
மன்னன் இங்கு உற்ற தன்மை உணர்கிலன்; வருவது ஓரேன்;
பின் இனி முடிப்பது யாது?' என்று இரங்கினான், உணர்வு பெற்றான்.

அனுமன், இராமனிடம் செய்தி கூறல்

'உற்றதை உணர்த்தி, பின்னை உலகுடை ஒருவனோடும்,
இற்று உறின், இற்று மாள்வென்; அன்று; எனின், எண்ணம் எண்ணி,
சொற்றது செய்வென்; வேறு ஓர் பிறிது இலன் துணிவிற்று' என்னா,
பொன் தடந் தோளன், வீரன் பொன் அடி மருங்கில், போனான். 53

சிங்க ஏறு அனைய வீரன் செறி கழல் பாதம் சேர்ந்தான்,
அங்கமும் மனமும் கண்ணும் ஆவியும் அலக்கணுற்றான்,
பொங்கிய பொருமல் வீங்கி, உயிர்ப்பொடு புரத்தைப் போர்ப்ப,
வெங் கண் நீர் அருவி சோர, மால் வரை என்ன வீழ்ந்தான்.

வீழ்ந்தவன்தன்னை, வீரன், 'விளைந்தது விளம்புக!' என்னா,
தாழ்ந்து, இரு தடக் கை பற்றி எடுக்கவும், தரிக்கிலாதான்,
'ஆழ்ந்து எழு துன்பத்தானை, அரக்கன், இன்று, அயில் கொள் வாளால்
போழ்ந்தனன்' என்னக் கூறி, புரண்டனன், பொருமுகின்றான்.

இராமனும் வானரர் முதலியோரும் உற்ற துயரம்

துடித்திலன்; உயிர்ப்பும் இல்லன்; இமைத்திலன்; துள்ளிக் கண்ணீர்
பொடித்திலன்; யாதும் ஒன்றும் புகன்றிலன்; பொருமி, உள்ளம்
வெடித்திலன்; விம்மிப் பாரின் வீழ்ந்திலன்; வியர்த்தான் அல்லன்;
அடுத்து உள துன்பம் யாவும் அறிந்திலர், அமரரேயும். 56

50. கோட்டம் - ஒரு வாசனைப் பண்டம்; 54. அலக்கண் - பெருந் துன்பம்; 56. துள்ளி - துளி.

சொற்றது கேட்டலோடும், துணுக்குற, உணர்வு சோர,
நல் பெரு வாடை உற்ற மரங்களின் நடுக்கம் எய்தா,
கற்பகம் அனைய வள்ளல் கருங் கழல் கமலக் கால்மேல்,
வெற்புஇனம் என்ன வீழ்ந்தார், வானர வீரர் எல்லாம்.　57

சித்திரத் தன்மை உற்ற சேவகன், உணர்வு தீர்ந்தான்,
மித்திரர் வதனம் நோக்கான், இளையவன் வினவப் பேசான்,
பித்தரும் இறை பொருத பேர் அபிமானம் என்னும்
சத்திரம் மார்பில் தைக்க, உயிர் இலன் என்னச் சாய்ந்தான்.

நாயகன் தன்மை கண்டும், தமக்கு உற்ற நாணம் பார்த்தும்,
ஆயின கருமம் மீள அழிவுற்ற அதனைப் பார்த்தும்,
வாயொடு மனமும் கண்ணும் யாக்கையும் மயர்ந்து சாம்பி,
தாயினை இழந்த கன்றின், தம்பியும் தலத்தன் ஆனான்.　59

வீடணன் கொண்ட ஐயம்

தொல்லையது உணரத் தக்க வீடணன், துளக்கம் உற்றான்,
எல்லை இல் துன்பம் ஊன்ற, இடை ஒன்றும் தெரிக்கிலாதான்,
' ''வெல்லவும் அரிது; நாசம் இவள்தனால் விளைந்தது'' என்னா,
கொல்வது அடுக்கும்' என்று மனத்தின் ஓர் ஐயம் கொண்டான்.

சீத நீர் முகத்தின் அப்பி, சேவகன் மேனி தீண்டி,
போதம் வந்து எய்தற்பால யாவையும் புரிந்து, பொன் பூம்
பாதமும் கையும் மெய்யும் பற்றினன் வருடலோடும்,
வேதமும் காணா வள்ளல் விழித்தனன், கண்ணை மெல்ல.　61

இலக்குவன் பேச்சு

'ஊற்று வார் கண்ணீரோடும் உள் அழிந்து, உற்றது எண்ணி,
ஆற்றுவான் அல்லன் ஆகி, அயர்கின்றான் எனினும், ஐயன்,
மாற்றுவான் அல்லன்; மானம் உயிர் உக வருந்தும்' என்னா,
தேற்றுவான் நினைந்து, தம்பி இவை இவை செப்பலுற்றான்:　62

'முடியும் நாள் தானே வந்து முற்றினால், துன்ப முந்நீர்
படியுமாம், சிறியோர் தன்மை; நினக்கு இது பழியிற்றாமால்;
குடியும் மாசு உண்டது என்னின், அறத்தொடும் உலகைக் கொன்று,
கடியுமாறு அன்றி, சோர்ந்து கழிதியோ, கருத்து இலார்போல்?

58. மித்திரர் - நண்பர், ஈண்டு வானரத் தலைவர்கள்; சத்திரம் - படைக் கலம்; 60. தொல்லையது - அரக்கரின் இயல்பான மாயச் செயல்; தொல்லை - இயல்பு; 62. மாற்றுதல் - பகைவரை அழித்தல்.

'தையலை, துணை இலாளை, தவத்தியை, தருமக் கற்பின்
தெய்வதம்தன்னை, மற்று உன் தேவியை, திருவை, தீண்டி,
வெய்யவன் கொன்றான்என்றால், வேதனை உழப்பது, இன்னம்
உய்யவோ? கருணையாலோ? தருமத்தோடு உறவும் உண்டோ?

'அரக்கர் என், அமரர்தாம் என், அந்தணர்தாம் என், அந்தக்
குருக்கள் என், முனிவர்தாம் என், வேதத்தின் கொள்கைதான் என்;
செருக்கினர் வலியர் ஆகி, நெறி நின்றார் சிதைவர்என்றால்,
இருக்குமிது என்னும், இம் மூன்று உலகையும் எரி மடாதே? 65

'முழுவது எழ் உலகம் இன்ன முறை முறை செய்கை மேல் மூண்டு,
எழுவதே! அமரர் இன்னம் இருப்பதே! அறம் உண்டு என்று
தொழுவதே! மேகம் மாரி சொரிவதே! சோர்ந்து நாம் வீழ்ந்து
அழுவதே! நன்று, நம்தம் வில் தொழில் ஆற்றல் அம்மா! 66

'புக்கு, இவ் ஊர் இமைப்பின் முன்னம் பொடிபடுத்து, அரக்கன் போன
திக்கு எலாம் சுட்டு, வானோர் உலகு எலாம் தீத்து, தீரத்
தக்க நாம், கண்ணீர் ஆற்றி, தலை சுமந்து இரு கை நாற்றி,
துக்கமே உழப்பம்என்றால், சிறுமையாய்த் தோன்றும் அன்றே?

'அங்கும், இவ் அறமே நோக்கி, அரசு இழந்து, அடவி எய்தி,
மங்கையை வஞ்சன் பற்ற, வரம்பு அழியாது வாழ்ந்தோம்;
இங்கும், இத் துன்பம் எய்தி இருத்துமேல், எளிமை நோக்கி,
பொங்கு வன் தளையில் பூட்டி, ஆட்செயப் புகல்வர் அன்றே?

'மன்றல் அம் கோதையாளைத் தம் எதிர் கொணர்ந்து, வாளின்
கொன்றவர்தம்மைக் கொல்லும் கோள் இலர், நாணம் கூரப்
பொன்றினர்' என்பர், ஆவி போக்கினால்; பொதுமை பார்க்கின்,
அன்று, இது கருமம்; என், நீ அயர்கின்றது, அறிவு இல்லார்போல்?'

சுக்கிரீவன், 'அரக்கனைத் தாக்குவோம்' எனல்

அனையன இளவல் கூற, அருக்கன் சேய், அயர்கின்றான், ஓர்
கனவு கண்டனனே என்னக் கதுமென எழுந்து, 'காணும்
வினை இனி உண்டே? வல்லை, விளக்கின் வீழ் விட்டில் என்ன,
மனை உறை அரக்கன் மார்பில் குதித்தும், நாம்; வம்மின்' என்றான். 70

'இலங்கையை இடந்து, வெங் கண் இராக்கதர் என்கின்றாரைப்
பொலங் குழை மகளிரோடும், பால் நுகர் புதல்வரோடும்,
குலங்களோடு அடங்கக் கொன்று, கொடுந் தொழில் குறித்து, நம்மேல்
விலங்குவார் என்னின், தேவர் விண்ணையும் மண்ணில் வீழ்த்தும்.

71. வீழ்த்தும் - வீழ்த்துவோம்.

'அறம் கெடச் செய்தும் என்றே அமைந்தனம் ஆகின், ஐய!
புறம் கிடந்து உழைப்பது என்னே? பொழுது இறை புவனம் மூன்றும்
கறங்கு எனத் திரிந்து, தேவர் குலங்களைக் கட்டும்' என்னா,
மறம் கிளர் வயிரத் தோளான் இலங்கைமேல் வாவலுற்றான்.

அனுமன், இந்திரசித்தன் அயோத்தி சென்றமை தெரிவித்தல்

மற்றைய வீரர் எல்லாம் மன்னனின் முன்னம் தாவி,
'எற்றுதும், அரக்கர் தம்மை இல்லொடும் எடுத்து' என்று, ஏகல்
உற்றனர்; உறுதலோடும், 'உணர்த்துவது உளது' என்று உன்னா,
சொற்றனன் அனுமன், வஞ்சன் அயோத்திமேல் போன சூழ்ச்சி. 73

இராமன் மனம் அழிதல்

தாயரும் தம்பிமாரும் தவம் புரி நகரம் சாரப்
போயினன் என்ற மாற்றம் செவித் துளை புகுதலோடும்,
மேயின அடியின் நின்ற வேதனை களைய, வெந்த
தீயிடைத் தணிந்தது என்ன, சீதைபால் துயரம் தீர்ந்தான். 74

அழுந்திய பாலின் வெள்ளத்து ஆழிநின்று, அனந்தர் நீங்கி
எழுந்தனன் என்ன, துன்பக் கடலின்நின்று ஏறி, ஆறுக்
கொழுந்து உறு கோபத் தீயும் நடுக்கமும் மனத்தைக் கூட,
உழுந்து உருள் பொழுதும் தாழா விரைவினன், மறுக்கம் உற்றான். 75

'தீரும் இச் சீதையோடும் என்கிலது அன்று, என் தீமை;
வேரொடு முடிப்பது ஆக விளைந்தது; வேறும் இன்னும்
யாரொடும் தொடரும் என்பது அறிகிலேன்; இதனை, ஐய!
பேரிட அவதி உண்டோ? எம்பியர் பிழைக்கின்றாரோ? 76

'நினைவதன் முன்னம் செல்லும் மானத்தில் நெடிது போனான்,
வினை ஒரு கணத்தின் முற்றி மீள்கின்றான்; வினையேன் வந்த
மனை பொடி பட்டது, அங்கு; மாண்டது, தாரம் ஈண்டும்;
எனையன தொடரும் என்பது உணர்கிலேன்! இறப்பும் காணேன்! 77

'தாதைக்கும், சடாயுவான தந்தைக்கும், தமியள் ஆய
சீதைக்கும், கூற்றம் காட்டித் தீர்ந்திலது, ஒருவன் தீமை;
பேதைப் பெண் பிறந்து, பெற்ற தாயர்க்கும், பிழைப்பு இலாத
காதல் தம்பியர்க்கும், ஊர்க்கும், நாட்டிற்கும், காட்டிற்று அன்றே. 78

72. வாவல் - பாய்தல்; 74. அடியின் உற்ற வேதனை - அடிபட்டதனால் உண்டான துன்பம்; 76. பேரிட - பேர்த்திடுமாறு செய்கை; அவதி - வகை.

'உற்றது ஒன்று உணரகில்லார்; உணர்ந்து வந்து, உருத்தாரேனும்,
வெற்றி வெம் பாசம் வீசி விசித்து, அவன் கொன்று வீழ்த்தால்,
மற்றை வெம் புள்ளின் வேந்தன் வருகிலன்; மருந்து நல்கக்
கொற்ற மாருதி அங்கு இல்லை; யார் உயிர் கொடுக்கற்பாலார்?

'அயோத்திக்கு விரைய வழி உண்டோ?' என இராமன் வினவுதல்

'மாக ஆகாயம் செல்ல, வல்லையின், வயிரத் தோளாய்!
ஏகுவான் உபாயம் உண்டேல், இயம்புதி; நின்ற எல்லாம்
சாக; மற்று, இலங்கைப் போரும் தவிர்க; அச் சழக்கன் கண்கள்
காகம் உண்டதற்பின், மீண்டும் முடிப்பென் என் கருத்தை' என்றான்.

பரதனைப்பற்றிய இலக்குவன் கணிப்பு

அவ் இடத்து, இளவல், 'ஐய! பரதனை அமரின் ஆர்க்க,
எவ் விடற்கு உரியான் போன இந்திரசித்தே அன்று;
தெவ் இடத்து அமையின், மும்மை உலகமும் தீந்து அருவோ?
வெவ் இடர்க் கடலின் வைகல்; கேள்' என, விளம்பலுற்றான்: 81

'தீக் கொண்ட வஞ்சன் வீச, திசைமுகன் பாசம் தீண்ட,
வீக் கொண்டு வீழ, யானோ பரதனும்? வெய்ய கூற்றைக்
கூய்க்கொண்டு, குத்துண்டு அண்ணன் குலத்தொடு நிலத்தன் ஆதல்,
போய்க் கண்டு கோடி அன்றே?' என்றனன், புழுங்குகின்றான்.

இராம–இலக்குவர் அயோத்தி செல்லத் தன் தோள்மேல் ஏறுமாறு அனுமன் வேண்டுதல்

அக் கணத்து அனுமன் நின்றான், 'ஐய! என் தோளின் ஆதல்,
கைத் துணைத் தலத்தே ஆதல், ஏறுதிர்; காற்றும் தாழ,
இக் கணத்து அயோத்தி மூதூர் எய்துவென்; இடம் உண்டு என்னின்,
திக்கு அனைத்தினிலும் செல்வென்; யானே போய்ப் பகையும் தீர்வென்;

'கொல்ல வந்தானை நீதி கூறினென், விலக்கிக் கொள்வான்,
சொல்லவும் சொல்லி நின்றேன்; கொன்றபின், துன்பம் என்னை
வெல்லவும், தரையின் வீழ்வுற்று உணர்ந்திலென்; விரைந்து போனான்;
இல்லை என்று உளனேல், தீயோன் பிழைக்குமோ? இழுக்கம் உற்றான்!

'மனத்தின் முன் செல்லும் மானம் போனது வழியது ஆக,
நினைப்பின் முன் அயோத்தி எய்தி, வரு நெறி பார்த்து நிற்பென்;
இனி, சில தாழ்ப்பது என்னே? ஏறுதிர், இரண்டு தோளும்,
புனத் துழாய் மாலை மார்பீர்! புட்பகம் போதல் முன்னம்.' 85

79. புள்ளின் வேந்தன் - கலுழன்; 80. மாக ஆகாயம் - மாகம் எனப்படும் ஆகாய வழி; 81. வைகல் - தங்க வேண்டா; 82. கண்டு கோடி அன்றே - கண்டு கொள்வாய் அல்லவா?

வீடணன், 'இது மாயம்' எனல்

'ஏறுதும்' என்று, வீரர் எழுதலும், இறைஞ்சி, 'ஈண்டுக்
கூறுவது உளது: துன்பம் கோளுறக் குலுங்கி, உள்ளம்
தேறுவது அரிது; செய்கை மயங்கினென்; திகைத்து நின்றேன்;
ஆறினென்; அதனை, ஐய! மாயம் என்று அயிர்க்கின்றேனல். 86

'பத்தினிதன்னைத் தீண்டிப் பாதகன் படுத்தபோது,
முத் திறத்து உலகும் வெந்து சாம்பராய் முடியும் அன்றே?
அத் திறம் ஆனதேனும், அயோத்திமேல் போன வார்த்தை
சித்திரம்; இதனை எல்லாம் தெரியலாம், சிறிது போழ்தின். 87

வீடணன் வண்டு உருக் கொண்டு சென்று, சீதையைக் காணுதல்

'இமை இடையாக யான் சென்று, ஏந்திழை இருக்கை எய்தி,
அமைவுற நோக்கி, உற்றது அறிந்து வந்து அறைந்த பின்னைச்
சமைவது செய்வது' என்று வீடணன் விளம்ப, 'தக்கது;
அமைவது' என்று இராமன் சொன்னான்; அந்தரத்து அவனும் சென்
[றான்.

வண்டினது உருவம் கொண்டான், மானவன் மனத்தின் போனான்;
தண்டலை இருக்கைதன்னைப் பொருக்கெனச் சார்ந்து, தானே
கண்டனன் என்ப மன்னோ, கண்களால்—கருத்தில், 'ஆவி
உண்டு, இலை' என்ன நின்ற, ஓவியம் ஒக்கின்றாளை. 89

வீடணன், இந்திரசித்தின் சூழ்ச்சியை உணர்தல்

'தீர்ப்பது துன்பம், யான் என் உயிரொடு' என்று உணர்ந்த சிந்தை
பேர்ப்பன செஞ் சொலாள், அத் திரிசடை பேசப் பேர்ந்தாள்,
கார்ப் பெரு மேகம் வந்து கடையுகம் கலந்தது என்ன
ஆர்ப்பு ஒலி அமுதம் ஆக, ஆர் உயிர் ஆற்றினாளை, 90

வஞ்சனை என்பது உன்னி, வான் உயர் உவகை வைகும்
நெஞ்சினன் ஆகி, உள்ளம் தள்ளுறல் ஒழிந்து நின்றான்,
'வெஞ் சிலை மைந்தன் போனான், நிகும்பலை வேள்வியான்' என்று,
எஞ்சல் இல் அரக்கர் சேனை எழுந்து, எழுந்து, ஏகக் கண்டான்.

'வேழ்விக்கு வேண்டற்பால கலப்பையும், விறகும், நெய்யும்,
வாழ்விக்கும் தாழ்வில்' என்னும் வானவர் மறுக்கம் கண்டான்,
சூழ்வித்த வண்ணம் ஈதோ நன்று!' எனத் துணிவு கொண்டான்,
தாழ்வித்த முடியன், வீரன் தாமரைச் சரணம் தாழ்ந்தான். 92

86. கோளுற - கவர்ந்துகொண்டதனால்; 87. சித்திரம் - விசித்திரம், அதிசயம்; 88. இமை இடையாக - இமைப் பொழுதிற்குள்ளாக; 91. தள்ளுறல் - தடுமாற்றம்; 92. தாழ்வில் வாழ்விக்கும் என மாற்றுக.

வீடணன் வந்து இராமனை வணங்கி நிலைமையை எடுத்துரைத்தல்

'இருந்தனள், தேவி; யானே எதிர்ந்தனென், என் கண் ஆர;
அருந்ததிக் கற்பினளுக்கு அழிவு உண்டோ? அரக்கன் நம்மை
வருந்திட மாயம் செய்து, நிகும்பலை மருங்கு புக்கான்;
முருங்கு அழல் வேள்வி முற்றி, முதல் அற முடிக்க மூண்டான்.'

என்றலும், 'உலகம் ஏழும், ஏழு மாத் தீவும், எல்லை
ஒன்றிய கடல்கள் ஏழும், ஒருங்கு எழுந்து ஆர்க்கும் ஓதை
அன்று' என, 'ஆகும்' என்ன, அமரரும் அயிர்க்க, ஆர்த்து,
குன்றுஇனம் இடியத் துள்ளி, ஆடின—குரக்கின் கூட்டம். 94

26 நிகும்பலை யாகப் படலம்

இராமன் வீடணனைப் புகழ்தல்

வீரனும் ஐயம் தீர்ந்தான்; வீடணன்தன்னை மெய்யோடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத் தழுவி, 'ஐய!
தீர்வது பொருளோ, துன்பம்? நீ உளை; தெய்வம் உண்டு;
மாருதி உளன்; நாம் செய்த தவம் உண்டு; மறையும் உண்டால்.

என்றலும், இறைஞ்சி, 'யாகம் முற்றுமேல், யாரும் வெல்லார்;
வென்றியும் அரக்கர் மேற்றே; விடை அருள்; இளவலோடும்
சென்று, அவன் ஆவி உண்டு, வேள்வியும் சிதைப்பென்' என்றான்;
'நன்று அது; புரிதிர்!' என்னா, நாயகன் நவில்வதானான்: 2

இராமன் இலக்குவனுக்கு அம்பு விடுவதுபற்றி அறிவுறுத்தல்

தம்பியைத் தழுவி, 'ஐய! தாமரைத் தவிசின் மேலான்
வெம் படை தொடுக்கும்ஆயின், விலக்குமது அன்றி, வீர!
அம்பு நீ துரப்பாய்அல்லை; அனையது துரந்த காலை,
உம்பரும் உலகும் எல்லாம் விளியும்; அஃது ஒழிதி' என்றான். 3

'முக்கணான் படையும், ஆழி முதலவன் படையும், முன் நின்று
ஒக்கவே விடுமே; விட்டால், அவற்றையும், அவற்றால் ஓயத்
தக்கவாறு இயற்றி, மற்று, உன் சிலை வலித் தருக்கினாலே,
புக்கவன் ஆவி கொண்டு, போதுதி—புகழின் மிக்கோய்! 4

26 : 1. பொருளோ? - அரிய செயலோ; 2. புரிதிர் - செய்யுங்கள்.

'வல்லன மாய விஞ்சை வகுத்தன அறிந்து, மாள,
கல்லுதி, தருமம் என்னும் கண் அகன் கருத்தைக் கண்டு;
பல் பெரும் போரும் செய்து வருந்தலை; அற்றம் பார்த்து,
கொல்லுதி, அமரர்தங்கள் கூற்றினை—கூற்றம் ஒப்பாய்! 5

'பதைத்து அவன், வெம்மை ஆடி, பல் பெரும் பகழி மாரி
விதைத்தவன் விதையாநின்று விலக்கினை, மெலிவு மிக்கால்,
உதைத்த வன் சிலையின் வாளி மருமத்தைக் கழிய ஓட்டி,
வதைத் தொழில் புரிதி—சாப நூல் நெறி மறப்பிலாதாய்! 6

'தொடுப்பதன்முன்னம், வாளி தொடுத்து, அவை துறைகள்தோறும்
தடுப்பன தடுத்தி; எண்ணம் குறிப்பினால் உணர்ந்து, தக்க
கடுப்பினும், அளவு இலாத கதியினும், கணைகள் காற்றின்
விடுப்பன அவற்றை நோக்கி, விடுதியால்—விரைவு இலாதாய். 7

திருமாலின் வில் முதலியன இராமன் கொடுத்தல்

என்பன முதல் உபாயம் யாவையும் இயம்பி, ஏற்ற
முன்பனை நோக்கி, 'ஐய! மூவகை உலகும் தான் ஆய்,
தன் பெருந் தன்மை தானும் அறிகிலா ஒருவன் தாங்கும்
வன் பெருஞ் சிலை ஈது ஆகும்; வாங்குதி; வலமும் கொள்வாய்!

'இச் சிலை இயற்கை மேல்நாள்; தமிழ் முனி இயம்பிற்று எல்லாம்
அச்செனக் கேட்டாய் அன்றே? ஆயிரம் மௌலி அண்ணல்
மெய்ச் சிலை; விரிஞ்சன் தானே வேள்வியின் வேட்டுப் பெற்ற
கைச் சிலை கோடி' என்று கொடுத்தனன், கவசத்தோடும். 9

ஆணி, இவ் உலகுக்கு, ஆன அழியான் புறத்தின் ஆர்த்த
தூணியும் கொடுத்து, மற்றும் உறுதிகள் பலவும் சொல்லி,
தாணுவின் தோற்றத்தானைத் தழுவினன்; தழுவலோடும்,
சேண் உயர் விசும்பில் தேவர், 'தீர்ந்தது எம் சிறுமை' என்றார்.

5. மாளக் கல்லுதல் - முற்றும் கெட்டொழியுமாறு வேருடன் பெயர்த்து எறிதல்; அற்றம் - தளர்ச்சியுற்ற சமயம்; 6. வெம்மை ஆடி - வெகுளியை மேற்கொண்டு; மருமம் - மார்பு; கழிய ஓட்டுதல் - துளைத்து ஊடுருவிச் செல்லுமாறு செலுத்துதல்; சாப நூல் - வில் வேதம்; 7. கடுப்பு - விரைவு; 8. முன்பன் - வலிமையுடையோன், ஈண்டு இலக்குவன்; 9. அச்சென - மனத்திற்படியும் விதமாக, உறுதியுடைய சொல்லாக; 10. ஆணி - ஆதாரம்; தாணு - சிவபெருமான்; சிறுமை - துன்பம்.

நிகும்பலை செல்லுதல்

மங்கலம் தேவர் கூற, வானவ மகளிர் வாழ்த்தி,
பங்கம் இல் ஆசி கூறி, பலாண்டு இசை பரவ,—பாகத்
திங்களின் மோலி அண்ணல் திரிபுரம் தீக்கச் சீறிப்
பொங்கினன் என்ன, தோன்றிப் பொலிந்தனன்—போர்மேல் போவான்.

'மாருதி முதல்வர் ஆய வானரர் தலைவரோடும்,
வீர! நீ சேறி' என்று விடை கொடுத்தருளும் வேலை,
ஆரியன் கமல பாதம், அகத்தினும் புறத்தும் ஆக,
சீரிய சென்னி சேர்த்து, சென்றனன், தருமச் செல்வன். 12

பொலங் கொண்டல் அனைய மேனிப் புரவலன், பொருமி, கண்ணீர்
நிலம் கொண்டு படர நின்று, நெஞ்சு அழிவானை, தம்பி
வலம் கொண்டு, வயிர வல் வில் இடம் கொண்டு, வஞ்சன்மேலே,
சலம் கொண்டு, கடிது சென்றான், 'தலை கொண்டு வருவென்' என்றே.

தான் பிரிகின்றிலாத தம்பி வெங் கடுப்பின் செல்வான்,
ஊன் பிரிகின்றிலாத உயிர் என, மறைதலோடும்,
வான் பெரு வேள்வி காக்க, வளர்கின்ற பருவ நாளில்
தான் பிரிந்து ஏகக் கண்ட தயரதன்தன்னை ஒத்தான். 14

நிகும்பலையில் வானரர் அரக்கர் சேனையைக் காணுதல்

சேனாதிபதியே முதல் சேவகர்தாம்
ஆனார், நிமிர் கொள்ளி கொள் அங்கையினார்,
கான் ஆர் நெறியும் மலையும் கழியப்
போனார்கள், நிகும்பலை புக்கனரால். 15

உண்டாயது ஓர் ஆல், உலகுள் ஒருவன்
கொண்டான் உறைகின்றதுபோல் குலவி,
விண்தானும் விழுங்க விரிந்ததனைக்
கண்டார்—அவ் அரக்கர் கருங் கடலை, 16

நேமிப் பெயர் யூகம் நிரைத்து, நெடுஞ்
சேமத்தது நின்றது, தீவினையோன்
ஓமத்து அனல் வெவ் வடவைக்கு உடனே
பாமக் கடல் நின்றது ஓர் பான்மையதை, 17

12. சீரிய - சிறப்புடைய; 13. பொலம் - அழகு; 15. நிகும்பலை - இந்திரசித்தன் யாகம் செய்கின்ற வேள்விக் களம்; 17. பாமக் கடல் - பரவிய கடல்; பாம் - பரவும்; ஒளியை உடைய கடல் என்பாரும் உண்டு.

கார் ஆயின காய் கரி, தேர், பரிமா,
தார் ஆயிர கோடி தழீஇயதுதான்,
நீர் ஆழியொடு ஆழி நிறீஇயதுபோல்,
ஓர் ஆயிரம் யோசனை உள்ளதனை, 18

பொன்-தேர், பரிமா, கரிமா, பொரு தார்
எற்றே? படை வீரரை எண்ணிலமால்!
உற்று ஏவிய யூகம் உலோகமுடைச்
சுற்று ஆயிரம் ஊடு சுலாயதனை, 19

வண்ணக் கரு மேனியின்மேல் மழை வாழ்
விண்ணைத் தொடு செம் மயிர் வீசுதலால்,
அண்ணல் கரியான் அனலம்பு அட, வெம்
பண்ணைக் கடல் போல்வது ஓர் பான்மையதை. 20

வழங்கா சிலை நாண் ஒலி, வானில் வரும்
பழங் கார்முகம் ஒத்த; பணைக் குலமும்
தழங்கா, கடல் வாழ்வனபோல்; தகை சால்
முழங்கா முகில் ஒத்தன, மா முரசே. 21

வலியான இராகவன் வாய்மொழியால்
சலியாத நெடுங் கடல்தான் எனலாய்
ஒலியாது உறு சேனையை உற்று, ஒரு நாள்
மெலியாதவர் ஆர்த்தனர், விண் கிழிய. 22

அரக்கர் சேனையுடன் வானரர் பொருதல்

ஆர்த்தார் எதிர், ஆர்த்த, அரக்கர் குலம்;
போர்த் தார் முரசங்கள் புடைத்த; புகத்
தூர்த்தார் இவர், கற் படை; சூல் முகிலின்
நீர்த் தாரையின், அம்பு அவர் நீட்டினரால். 23

மின்னும் படை வீசலின், வெம் படைமேல்
பன்னும் கவி சேனை படிந்துளதால்—
துன்னும் துறை நீர் நிறை வாவி தொடர்ந்து
அன்னங்கள் படிந்தனவாம் எனலாய். 24

18. தார் - காலாள்; 19. எற்றே - எவ்வளவோ?; யூகம் - சேனை அணி; உலோகம் - உலகம்; சுலாயது - சூழ்ந்து நிற்பது; 20. பண்ணைக் கடல் - நீர்த்திரளையுடைய கடல்; 21. கார்முகம் - வில்; பணைக் குலம் - போர்ப் பறை; 23. கற் படை - கல்லாகிய படைக்கலங்கள்; 24. பன்னும் - பாராட்டிக் கூறப்படும்.

வில்லும், மழுவும், எழுவும், மிடலோர்,
பல்லும், தலையும், உடலும், படியில்
செல்லும்படி சிந்தின, சென்றனவால்—
கல்லும் மரமும் கரமும் கதுவ. 25

வாளும் தலையும், உடலும் வயிறும்,
காலும் கரமும், தரை கண்டனவால்—
கோலும், மழுவும், எழுவும், கொழுவும்,
வேலும், கணையும், வளையும் விசிற. 26

உடனே வேள்வியைச் சிதைக்குமாறு வீடணன் இலக்குவனுக்கு உரைத்தல்

வென்றிச் சிலை வீரனை, வீடணன், 'நீ
நின்று இக் கடை தாழுதல் நீதியதோ?
சென்று, இக் கடி வேள்வி சிதைத்திலையேல்,
என்று, இக் கடல் வெல்குதும் யாம்?' எனலும், 27

தேவர் முதலியோரும் வியந்து காண, இலக்குவன் அரக்கர் சேனையை அழித்தல்

தேவாசுரரும், திசை நான்முகனும்,
மூவா முதல் ஈசனும், மூஉலகின்
கோ ஆகிய கொற்றவனும், முதலோர்
மேவாதவர் இல்லை, விசும்பு உறைவோர்.* 28

பல்லார் படை நின்றது; பல் அணியால்,
பல் ஆர் படை நின்றது; பல் பிறை வெண்
பல்லார் படை நின்றது; பல்லியம் உம்-
பல் ஆர் படை நின்றது—பல் படையே.* 29

அக் காலை, இலக்குவன், அப் படையுள்
புக்கான், அயில் அம்பு பொழிந்தனனால்;
உக்கார் அவ் அரக்கர்தம் ஊர் ஒழிய,
புக்கார், நமனார் உறை தென் புலமே. 30

27. இக் கடை - இவ்விடம்; 28. மூவா முதல் ஈசன் - சிவன், திருமால் எனலும் ஆம்; மூஉலகின் கோ - இந்திரன்; 29. பல்லார் படை - பல வீரர் ஏறிய தேர்ப்படை; பல் ஆர் படை - பலவாகப் பொருந்திய குதிரைப் படை; பிறை வெண் பல்லார் படை - பிறை போலும் வெண்மையான பற்களை உடைய அரக்கர் சேனை; உம்பல் ஆர் படை - யானைகள் நிரம்பிய படை.

தேறு மத மால் கரி, தேர், பரிமா,
நூறாயிர கோடியின் நூழில்பட,
சேறு ஆர் குருதிக் கடலில், திடராய்க்
கூறு ஆய் உக, ஆவி குறைத்தனனால். 31

வாமக் கரிதான் அழி வார் குழி, வன்
தீ மொய்த்த அரக்கர்கள் செம் மயிரின்
தாமத் தலை உக்க, தழங்கு எரியின்
ஓமத்தை நிகர்த்த; உலப்பு இலவால். 32

சிலையின் கணையூடு திறந்தன, திண்
கொலை வெங் களி மால் கரி செம் புனல் கொண்டு,
உலைவு இன்று கிடந்தன, ஒத்தனவால்,
மலையும் சுனையும், வயிறும் உடலும். 33

வில் தொத்திய வெங் கணை, எண்கின் வியன்
பல் தொத்தியபோல் படியப் பலவும்,
முற்றச் சுடர் மின்மினி மொய்த்துள வன்
புற்று ஒத்த—முடித் தலை பூழியன. 34

படு மாரி நெடுங் கணை பாய்தலினால்,
விடும் ஆறு உதிரப் புனல் வீழ்வனவால்;
தடுமாறு நெடுங் கொடி, தாழ் கடல்வாய்
நெடு மா முகில் வீழ்வ நிகர்த்தனவால். 35

மின் ஆர் கணை தாள் அற வீச, விழுந்து,
அன்னார் உதிரத்துள் அழுந்துதலால்,
ஒன்னார் முழு வெண் குடை ஒத்தனவால்,
செந் நாகம் விழுங்கிய திங்களினை. 36

கொடு நீள் கரி, கையொடு தாள் குறைய,
படு நீள் குருதிப் படர்கின்றனவால்,
அடு நீள் உயிர் இன்மையின் ஆழ்கிலவால்,
நெடு நீரின் இடங்கர் நிகர்த்தனவால். 37

32. வாமம் - அழகு; வார் குழி - நீண்ட குழி; தாமத் தலை - மாலை அணிந்த தலைகள்; 34. வில் தொத்திய - வில்லினின்று வெளிப்பட்டுத் தொடர்ந்த; அம்புகள் தைத்துப் புழுதியில் கிடக்கும் முடித்தலைகள் மின்மினிப் பூச்சிகள் மொய்த்துள்ள புற்றுகள் போலக் காட்சியளித்தன; 36. தாள் - காம்பு; செந் நாகம் - செந்நிறப் பாம்பு, கேது; 37. இடங்கர் - முதலை.

கரி உண்ட களத்திடை உற்றன, கார்
நரி உண்டி உகப்பன நட்டனவால்;
இரியுண்டவர் இன் இயம் இட்டிடலால்,
மரியுண்ட உடற் பொறை மானினவால். 38

வாயில் கனல் வெங் கடு வாளிஇனம்
பாய, பருமக் குலம் வேவனவால்,
வேய் உற்ற நெடுங் கிரி மீ வெயில் ஆம்
தீ உற்றன ஒத்த—சினக் கரியே. 39

அலை வேலை அரக்கரை, எண்கின் உகிர்,
தலைமேல் முடியைத் தரை தள்ளுதலால்,
மலைமேல் உயர் புற்றினை, வள் உகிரால்,
நிலை பேர, மறிப்ப நிகர்த்தனவால். 40

மா வாளிகள் மா மழைபோல் வரலால்,
மா ஆளிகள் போர் தெறு மா மறவோர்,
மா ஆளிகள் வன் தலையின் தலை வாம்
மா ஆளிகளோடு மறிந்தனரால். 41

அங்கம் கிழியத் துணி பட்டதனால்,
அங்கு அங்கு, இழிகுற்ற அமர்த் தலைவர்,
அம் கங்கு இழி செம்புனல் பம்ப, அலைந்து,
அம் கங்கள் நிரம்பி அலம்பியதால். 42

வன் தானையை, வார் கணை மாரியினால்,
முன், தாதை ஓர் தேர்கொடு, மொய் பல தேர்ப்
பின்றா எதிர் தானவர் பேர் அணியைக்
கொன்றான் என, எய்து குறைத்தனனால். 43

இந்திரசித்தன் யாகம் சிதைதல்

மலைகளும், மழைகளும், வான மீன்களும்,
அலைய வெங் கால் பொர, அழிந்த ஆம் என,
உலை கொள் வெங் கனல் பொதி ஓமம் உற்றவால்,
தலைகளும் உடல்களும் சரமும் தாவுவ. 44

38. கரி உண்ட களம் - யானைகளைத் தன்பால் கொண்ட போர்க்களம்; நட்டன - விரும்பிச் சேர்ந்தன; மரியுண்ட - இறத்தலையுற்ற; மானின - ஒத்தன; 39. பருமக் குலம் - யானையின் கழுத்திலிடும் மெத்தையின் தொகுதிகள்; 40. எண்கு - கரடி, சாம்பன் தலைமையில் வானர சேனையிலுள்ள கரடிப்படை; 41. மா ஆளிகள் - இரண்டாம் அடியில் பெரிய சிங்கங்கள்; மூன்றாம் அடியில் யானை குதிரை ஆகிய விலங்குகளைப் போரில் செலுத்தும் யானை, குதிரை வீரர்கள்; நான்காம் அடியில் கரிய வண்டுகள் (மா அளிகள்); வன் தலையின் தலை - வலிய தலையினிடத்து. 42. அம் கங்கு - அழகிய பருந்து; அம் கங்கள் - கிடக்கின்ற தலைகள்; 43. தாதை - தந்தையாகிய தயரதன்.

வாரணம் அனையவன் துணிப்ப, வான் படர்
தார் அணி முடிப் பெருந் தலைகள் தாக்கலால்,
ஆரண மந்திரம் அமைய ஓதிய
பூரண மணிக் குடம் உடைந்து போயதால். 45

தாறு கொள் மதகரி சுமந்து, தாமரை
சீறிய முகத் தலை உருட்டி, செந் நிறத்து
ஊறுகள் சொரிந்த பேர் உதிரத்து ஓங்கு அலை
யாறுகள் எழுங் கனல் அவியச் சென்றவால். 46

தெரி கணை விசும்பிடைச் சுமந்து, செம் மயிர்
வரி கழல் அரக்கர்தம் தடக் கை வாளொடும்
உரும் என வீழ்தலின், அனலுக்கு ஒக்கிய
எருமைகள் மறிந்தன; மறியும் ஈர்ந்தவால். 47

அம் கடம் கழிந்த பேர் அருவிக் குன்றின்நின்று
அம் கடம் கிழிந்திலர், அழிந்த ஆடவர்,
அங்கு அடங்கலும் படர் குருதி ஆழியின்
அங்கு அடங்கினர், தொடர் பகழி அஞ்சினர். 48

கால் தலத்தொடு துணிந்து அழிய, காய் கதிர்க்
கோல் தலைத்தலை உற, மறுக்கம் கூடினர்,
வேல் தலத்து ஊன்றினர், துளங்கு மெய்யினர்,
நாறு அலைக் குடலினர், பலரும் நண்ணினர்.* 49

பொங்கு உடல் துணிந்த தம் புதல்வர்ப் போக்கிலார்,
தொங்கு உடல் தோள்மிசை இருந்து சோர்வுற,—
அங்கு உடல் தம்பியைத் தழுவி அண்மினர்—
தம் குடர் முதுகிடைச் சொரியத் தள்ளுவார். 50

மூடிய நெய்யொடு நறவம் முற்றிய
சாடிகள், பொரியொடு தகர்ந்து தள்ளுற,
கோடிகள் பல படும் குழாம் குழாங்களாய்
ஆடின, அறு குறை அறுக்கும் ஆக்கைகள். 51

45. ஆரணம் - வேதம்; 46. தாறு - தாற்றுக் கோலாகிய அங்குசம்; ஊறுகள் - புண்கள்; 47. அனலி - அக்கினியாகிய தெய்வம்; ஒக்குதல் - வரைந்து வைத்தல், உரிமை செய்து வைத்தல்; 48. அம் கடம் - முதலடியில் அழகிய கன்னம்; இரண்டாம் அடியில் அழகிய உடம்பு; 49. நாறு அலைக் குடல் - (புறத்தே வெளிப்பட்டுத்) தோன்றிய அலைதலையுடைய குடர்; 50. உடல் தம்பி - பொருது நிற்கும் தம்பி, இலக்குவன் எனினும் ஆம். 51. அறு குறை - குறையுடலாகிய கவந்தம்; அறுக்கும் ஆக்கைகள் - (தலை) அறுபட்ட உடம்பு.

கால் என, கடு என, கலிங்கக் கம்மியர்
நூல் என, உடற் பொறை தொடர்ந்த நோய் என,
பால் உறு பிரை என, கலந்து, பல் முறை
வேல் உறு சேனையைத் துணித்து வீழ்த்தினன். 52

கண்டனன்—திசைதொறும் நோக்கி, கண் அகல்
மண்தலம், மறி கடல் அன்ன மாப் படை,
விண்டு எறி கால் பொர மறிந்து வீற்றுறும்
தண்டலை ஆம் எனக் கிடந்த தன்மையே. 53

மிடலின் வெங் கட கரிப் பிணத்தின் விண் தொடும்
திடலும், வெம் புரவியும், தேரும், சிந்திய
உடலும், வன் தலைகளும், உதிரத்து ஓங்கு அலைக்
கடலும், அல்லாது, இடை ஒன்றும் கண்டிலன். 54

நூறு நூறுயிர கோடி நோன் கழல்
மாறு இல் போர் அரக்கரை, ஒருவன் வாட் கணை
கூறு கூறு ஆக்கிய குவையும், சோரியின்
ஆறுமே, அன்றி, ஓர் ஆக்கை கண்டிலன். 55

நஞ்சினும் வெய்யவர் நடுங்கி, நா உலர்ந்து,
அஞ்சினர், சிலர் சிலர் அடைகின்றார்; சிலர்
வெஞ் சின வீரர்கள், மீண்டிலாதவர்,
துஞ்சினர், துணை இலர் எனத் துளங்கினர். 56

வேள்வித் தீ அவிதல் கண்டு, இந்திரசித்தன் வெதும்புதல்

ஓம வெங் கனல் அவிந்து, உழைக் கலப்பையும்
காமர் வண் தருப்பையும் பிறவும் கட்டு அற,
வாம மந்திரத் தொழில் மறந்து, நந்துறு
தூம வெங் கனல் எனப் பொலிந்து தோன்றினன். 57

அக் கணத்து, அடு களத்து, அப்பு மாரியால்
உக்கவர் ஒழிதர, உயிர் உளோர் எலாம்
தொக்கனர், அரக்கனைச் சூழ்ந்து சுற்றுற,
புக்கது, கவிப் பெருஞ் சேனைப் போர்க் கடல். 58

52. கலிங்கம் - ஆடை; கம்மியர் - ஆடை நெய்வோராகிய காருகர்; 53. தண்டலை - சோலை; 55. சோரி - இரத்தம்; 57. உழைக் கலப்பை - (வேள்வியில்) பயன்படுதற்குரிய பொருளைத் தன்னகத்தே கொண்ட பை; காமர் - அழகு; வாம மந்திரத் தொழில் - வாம மார்க்கத்திற்குரிய மந்திரங்களை எண்ணி உருவேற்றும் தொழில்.

ஆயிரம் மலருடை ஆழி மாப் படை
'ஏ' எனும் மாத்திரத்து இற்ற கொற்றமும்,
தூயவன் சிலை வலித் தொழிலும், துன்பமும்
மேயின வெகுளியும், கிளர வெம்பினன். 59

மெய் குலைந்து, இரு நில மடந்தை விம்முற,
செய் கொலைத் தொழிலையும், சென்ற தீயவர்
மொய் குலத்து இறுதியும், முனிவர் கண்டவர்
கை குலைக்கின்றதும், கண்ணின் நோக்கினன். 60

இந்திரசித்தன் நியமம் குலைந்து, வருந்திப் புலம்புதல்

மானமும் பாழ்பட, வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட, முடிவு இலா முரண்
சேனையும் பாழ்பட, சிறந்த மந்திரத்து
ஏனையும் பாழ்பட, இனைய செப்பினன்: 61

'வெள்ளம் ஐ-ஐந்துடன் விரிந்த சேனையின்
உள்ளது அக்குரோணி ஈர்-ஐந்தொடு ஒயுமால்;
எள்ள அரு வேள்வி நின்று, இனிது இயற்றுதல்
பிள்ளைமை; அனையது சிதைந்து பேர்ந்ததால். 62

'தொடங்கிய வேள்வியின் தூம வெங் கனல்
அடங்கியது அவிந்துளது, அமையுமாம் அன்றே?
இடம் கொடு வெஞ் செரு வென்றி இன்று எனக்கு
அடங்கியது என்பதற்கு ஏது ஆகுமால். 63

'அங்கு அது கிடக்க: நான் மனிதற்கு ஆற்றலென்
சிங்கினென் என்பது ஓர் எளிமை; தேய்வுற,
இங்கு நின்று, இவை இவை நினைக்கிலேன்; இனி,
பொங்கு போர் ஆற்றல் என் தோளும் போனதோ? 64

' ''மந்திர வேள்வி போய் மடிந்ததாம்'' எனச்
சிந்தையின் நினைந்து, நான் வருந்தும் சிற்றியல்,
அந்தரத்து அமரரும், ''மனிதர்க்கு ஆற்றலன்;
இந்திரர்க்கே இவன் வலி!'' என்று ஏசவோ?' 65

59. மலர் - தாமரை, தாமரை என்பது ஒரு பேரெண்; 60. சென்ற - பொரச் சென்ற; 62. வெள்ளம் - பேரெண்; 57 தானங்களைக் கொண்டது; 63. ஏது - நிமித்தம், அறிகுறி; 65. சிற்றியல் - சிறுமைத் தன்மை.

என்று அவன் பகர்கின்ற எல்லை, வல் விசை,
குன்றொடு மரங்களும், பிணத்தின் கூட்டமும்,
பொன்றின கரிகளும், கவிகள் போக்கின;
சென்றன பெரும் படை இரிந்து சிந்தின. 66

ஒதுங்கினர், ஒருவர் கீழ் ஒருவர் புக்குறப்
பதுங்கினர், நடுங்கினர்; பகழி பாய்தலின்,
பிதுங்கினர்; குடர் உடல் பிளவு பட்டனர்;
மதம் புலர் களிறு எனச் சீற்றம் மாறினர். 67

வீரன் வெங் கணையொடும் கவிகள் வீசிய
கார் வரை அரக்கர்தம் கடலின் வீழ்ந்தன,
போர் நெடுங் கால் பொர, பொழியும் மா மழைத்
தாரையும் மேகமும் படிந்த தன்மைய. 68

அனுமன் இந்திரசித்தனை எள்ளி நகையாடுதல்

திரைக் கடற் பெரும் படை இரிந்து சிந்திட
மரத்தினின் புடைத்து அடர்த்து உருத்த மாருதி,
அரக்கனுக்கு அணித்து என அணுகி, அன்னவன்
வரக் கதம் சிறப்பன மாற்றம் கூறுவான்: 69

'தடந் திரைப் பரவை அன்ன சக்கர யூகம் புக்குக்
கிடந்தது கண்டது உண்டோ? நாண் ஒலி கேட்டிலோமே?
தொடர்ந்து போய் அயோத்திதன்னைக் கிளையொடும் துணிய நூறி,
நடந்தது எப்பொழுது? வேள்வி முடிந்ததே? கருமம் நன்றே!

'வந்து அகல் ஞாலம் எல்லாம் இனிது உறைந்து, இயற்கை தாங்கும்
பாந்தளின் பெரிய திண் தோள் பரதனை, பழியின் தீர்ந்த
வேந்தனை, கண்டு, நீ நின் வில் வலி காட்டி, மீண்டு
போந்ததோ, உயிரும் கொண்டே ஆயினும், புதுமை அன்றே! 71

'அம்பரத்து அமைந்த வல் வில் சம்பரன் ஆவி வாங்கி,
உம்பருக்கு உதவி செய்த ஒருவனுக்கு உதயம் செய்த
நம்பியை, முதல்வர் ஆன மூவர்க்கும் நால்வர் ஆன
தம்பியை, கண்டு, நின் தன் தனு வலம் காட்டிற்று உண்டோ?

66. போக்குதல் - வீசி எறிதல்; 68. போர் நெடுங் கால் - பொருது அலைத் தலையுடைய பெருங்காற்று; 69. சிறத்தல் - மிகுதல்; 71. பாந்தள் - பாம்பு. ஆதிசேடன்; 72. ஒருவன் - தயரதன்; தம்பி - சத்துருக்கனன்.

'தீ ஒத்த வயிர வாளி உடல் உற, சிவந்த சோரி
காயத்தின் செவியினூடும், வாயினும், கண்களூடும்,
பாய, போய், இலங்கை புக்கு, வஞ்சனை பரப்பச் செய்யும்
மாயப் போர் ஆற்றல் எல்லாம் இன்றொடு மடியும் அன்றே! 73

'பாசமோ, மலரின் மேலான் பெரும் படைக்கலமோ, பண்டை
ஈசனார் படையோ, மாயோன் நேமியோ, யாதோ, இன்னம்
வீச, நீர் விரும்புகின்றீர்? அதற்கு நாம் வெருவி, சாலக்
கூசினோம்; போதும், போதும்; கூற்றினார் குறுக வந்தார். 74

'வரங்கள் நீர் உடையவாறும், மாயங்கள் வல்லவாறும்,
பரம் கொள் வானவரின் தெய்வப் படைக்கலம் படைத்தவாறும்,
உரங்களோடு உன்னி அன்றோ, உம்மை நாம், ''உயிரினோடும்
சிரங்கொளத் துணித்தும்'' என்னக் கண்டது? திறம்பினோமோ?

'விடம் துடிக்கின்ற கண்டத்து அண்ணலும், விரிஞ்சன்தானும்,
படம் துடிக்கின்ற நாகப் பாற்கடல் பள்ளியானும்,
சடம் துடிக்கிலராய் வந்து தாங்கினும், சாதல் திண்ணம்;
இடம் துடிக்கின்றது உண்டே? இருத்திரோ? இயம்புவீரே! 76

' ''கொள்வென்'' என்று, உன்னைத்தானே குறித்து, ஒரு சூளும் கொண்ட
வில்லி வந்து அருகு சார்ந்து, உன் சேனையை முழுதும் வீட்டி,
''வல்லை நீ பொருவாய்'' என்று, விளிக்கின்றான்; வரி வில் நாணின்
ஒல்லொலி, ஐய! செய்யும் ஒமத்துக்கு உறுப்பு ஒன்று ஆமோ?

'மூவகை உலகும் காக்கும் முதலவன் தம்பி பூசல்,
தேவர்கள், முனிவர், மற்றும் திறத்திறத்து உலகம் சேர்ந்தார்,
யாவரும், காண நின்றார்; இனி, இறை தாழ்ப்பது என்னோ?
சாவது சரதம் அன்றோ?' என்றனன், தருமம் காப்பான். 78

அனுமன் முதலியோரை இந்திரசித்தன் இகழ்தல்

அன்ன வாசகங்கள் கேளா, அனல் உயிர்த்து, அலங்கல் பொன்-தோள்
மின் நகு பகு வாயூடு வெயில் உக, நகை போய் வீங்க,
'முன்னரே வந்து, இம் மாற்றம் ஆற்றலின் மொழிந்தவாறே?
என்னதோ, நீயிர் என்னை இகழ்ந்தது?' என்று இனைய சொன்னான்: 79

75. உரங்கள் - உடல் உள்ள உரன்கள்; உரம் - வலிமை; 76. சடம் துடித்தல் - உடல் நடுக்குறுதல்; இடம் துடித்தல் - ஆடவர்க்கு இடப் பக்கத்துத் தோளும் கண்ணும் துடித்தல், இது தீ நிமித்தம்; 79. என்னதோ - என்ன பொருளுடையதோ?

'மூண்ட போர்தோறும் பட்டு முடிந்த நீர், முறையின் தீர்ந்து
மீண்ட போது, அதனை எல்லாம் மறத்திரோ? விளிதல் வேண்டி,
''ஈண்ட வா!'' என்னுநின்றீர்; இத்தனை பேரும் இன்னம்
மாண்ட போது, உயிர் தந்தீயும் மருந்து வைத்தனையோ மான?

'இலக்குவன் ஆக, மற்றை இராமனே ஆக, ஈண்டு,
விலக்குவர் எல்லாம் வந்து விலக்குக; குரக்கின் வெள்ளம்
குலக் குலம் ஆக மாளும் கொற்றமும், மனிதர் கொள்ளும்
அலக்கணும், முனிவர்தாமும் அமரரும் காண்பர் அன்றே. 81

'யானுடை வில்லும், என் பொன்–தோள்களும், இருக்க, இன்னும்,
ஊனுடை உயிர்கள் யாவும் உய்யுமோ, ஒளிப்பு இலாமல்?
கூனுடைக் குரங்கினோடு மனிதரைக் கொன்று, சென்று, அவ்
வானினும் தொடர்ந்து கொல்வென்; மருந்தினும் உய்யமாட்டீர். 82

'வேட்கின்ற வேள்வி இன்று பிழைத்தது; ''வென்றோம்'' என்று
கேட்கின்ற வீரம் எல்லாம் கிளத்துவீர்! கிளத்தல் வேண்டா;
தாழ்க்கின்றது இல்லை; உம்மைத் தனித் தனி தலைகள் பாறச்
சூழ்க்கின்ற வீரம் என் கைச் சரங்களாய்த் தோன்றும் அன்றே.

'மற்று எலாம் நும்மைப் போல வாயினால் சொல்ல மாட்டேன்;
வெற்றிதான் இரண்டும் தந்தீர்; விரைவது வெல்லற்கு ஒல்லாம்;
உற்று நான் உருத்த காலத்து, ஒரு முறை எதிரே நிற்கக்
கற்றிரோ? இன்னம் மாண்டு கிடத்திரோ? நடத்திரோதான்?

இந்திரசித்தன் சங்கு முழக்கி வருதல்

'நின்மின்கள்; நின்மின்!' என்னா, நெருப்பு எழ விழித்து, நீண்ட
மின்மின்கொள் கவசம் இட்டான்; வீக்கினான், தூணி; வீரப்
பொன் மின்கொள் கோதை கையில் பூட்டினான்; பொறுத்தான், போர்
எல் மின்கொள் வயிரத் திண் தேர் ஏறினான்; எறிந்தான், நாணி; [வில்;

ஊதினான் சங்கம்; வானத்து ஒண் தொடி மகளிர் ஒண் கண்
மோதினார்; 'கணத்தின் முன்னே முழுவதும் முருக்கி முற்றக்
காதினான்' என்ன, வானோர் கலங்கினார்; கயிலையானும்,
போதினன்தானும், 'இன்று புகுந்தது, பெரும் போர்' என்றார்.

80. ஈண்ட வா - நெருங்க வா; 83. பிழைத்தது - நிறைவேறாமல் தவறியது; சூழ்க்கின்ற - சூழ்கின்ற, எதுகை நோக்கி வல்லொற்று மிக்கது; 84. இரண்டு - இருமுறை, நாகபாசம் விடுத்தபோதும் பிரமாத்திரம் விடுத்த போதும் என்க; 85. கோதை - அம்பு எய்தற்பொருட்டு விரல்களில் செறித்துக் கொள்ளும் விரல் உறை; எல் - சூரியன்; மின் - ஒளி; 86. போதினன் - பிரமன்.

'இழைத்த பேர் யாகம்தானே, யாம் செய்த தவத்தினாலே,
பிழைத்தது; பிழைத்ததேனும், வானரம் பிழைக்கல் ஆற்றா;
அழைத்தது, விதியேகொல்?' என்று அஞ்சினார்; 'அம்பினோடும்
உழைத்தது காண்கின்றோம்' என்று, உணங்கினார், உம்பர் உள்ளார். 87

நாண்தொழில் ஓசை வீசிச் செவிதொறும் நடத்தலோடும்,
ஆண்தொழில் மறந்து, கையின் அடுக்கிய மரனும் கல்லும்
மீண்டன மறிந்து சோர விழுந்தன; விழுந்த, 'மெய்யே
மாண்டனம்' என்றே உன்னி, இரிந்தன குரங்கின் மாலை. 88

படைப் பெருந் தலைவர் நின்றார்; அல்லவர், இறுதி பற்றும்
அடைப்ப அருங் காலக் காற்றால் ஆற்றலது ஆகிக் கீறிப்
புடைத்து இரிந்து ஓடும் வேலைப் புனல் என, இரியலுற்றார்;
கிடைத்த பேர் அனுமன், ஆண்டு, ஓர் நெடுங் கிரி கிழித்துக் கொண்டான்.

இந்திரசித்தன் – அனுமன் போர்

'நில், அடா! நில்லு நில்லு! நீ, அடா! வாசி பேசிக்
கல் எடாநின்றது என்னைப் போர்க்களத்து, அமரர் காண,
கொல்லலாம் என்றோ? நன்று; குரங்கு என்றால் கூடும் அன்றே?
நல்லை; போர், வா வா!' என்றான்—நமனுக்கும் நமனாய் நின்றான்.

வில் எடுத்து உருத்து நின்ற வீரருள் வீரன் நேரே,
கல் எடுத்து, எறிய வந்த அனுமனைக் கண்ணின் நோக்கி,
'மல் எடுத்து உயர்ந்த தோளாற்கு என்கொலோ வலியது?' என்னா,
சொல் எடுத்து, அமரர் சொன்னார்; தாதையும் துணுக்கமுற்றான்.

வீசினன் வயிரக் குன்றம், வெம் பொறிக் குலங்கள் விண்ணின்
ஆசையின் நிமிர்ந்து செல்ல; 'ஆயிரம் உரும் என்று ஆகப்
பூசின பிழம்பு இது' என்ன வரும் அதன் புரிவை நோக்கி,
கூசின உலகம் எல்லாம்; குலைந்தது, அவ் அரக்கர் கூட்டம். 92

குண்டலம் நெடு வில் வீச, மேருவின் குவிந்த தோளான்,
அண்டமும் குலுங்க ஆர்த்து, மாருதி, அசனி அஞ்ச,
விண் தலத்து எறிந்த குன்றம் வெறுந் துகள் ஆகி வீழக்
கண்டனன்; எய்த தன்மை கண்டிலர், இமைப்பு இல் கண்ணார்.

87. உழைத்தது - வருந்துவது; 89. கிடைத்த - எதிர்ப்பட்டு நின்ற;
90. வாசி - வேறுபட்ட மொழி; 91. தாதை - தந்தையாகிய வாயுதேவன்;
92. பூசுதல் - இயைதல்; புரிவு - செயல்.

மாறு ஒரு குன்றம் வாங்கி மறுகுவான் மார்பில், தோளில்,
கால் தரு காலில், கையில், கழுத்தினில், நுதலில், கண்ணில்,
ஏறின என்ப மன்னோ—எரி முகக் கடவுள் வெம்மை
சீறின பகழி மாரி, தீக் கடு விடத்தின் தோய்ந்த. 94

வெதிர் ஒத்த சிகரக் குன்றின் மருங்கு உற விளங்கலாலும்,
எதிர் ஒத்த இருளைச் சீறி எழுகின்ற இயற்கையாலும்,
கதிர் ஒத்த பகழிக் கற்றை கதிர் ஒளி காட்டலாலும்,
உதிரத்தின் செம்மையாலும், உதிக்கின்ற கதிரோன் ஒத்தான்.* 95

இந்திரசித்தன், 'இலக்குவன் எங்குள்ளான்?' எனல்

ஆயவன் அயர்தலோடும், அங்கதன் முதல்வர் ஆனோர்,
காய் சினம் திருகி, வந்து கலந்துளார்தம்மைக் காணா,
'நீயிர்கள் நின்மின், நின்மின்; இரு முறை நெடிய வானில்
போயவன் எங்கே நின்றான்?' என்றனன், பொருள் செயாதான்.

வெம்பினர் பின்னும் மேன்மேல் சேறலும், வெகுண்டு, 'சீயம்
தும்பியைத் தொடர்வது அல்லால், குரங்கினைச் சுளிவது உண்டோ?
அம்பினை மாட்டி, என்னே சிறிது போர் ஆற்ற வல்லான்
தம்பியைக் காட்டித் தாரீர்; சாதிரோ, சலத்தின்?' என்றான்.

'அனுமனைக் கண்டிலீரோ? அவனினும் வலியிரோ? என்
தனு உளதன்றோ? தோளின் அவ் வலி தவிர்ந்தது உண்டோ?
இனும், முனை நீர் அலீரோ, எவ் வலி ஈட்டி வந்தீர்?
மனிசனைக் காட்டி, நும்தம் மலைதொறும் வழிக்கொளீரே.'

என்று உரைத்து, இளவல்தன்மேல் எழுகின்ற இயற்கை நோக்கி,
குன்றமும் மரமும் வீசிக் குறுகினார்; குழாங்கள்தோறும்
சென்றன பகழி மாரி, மேருவை உருவித் தீர்வ,
ஒன்று அல கோடி கோடி நுழைந்தன; வலியும் ஓய்ந்தார். 99

'படுகின்றது அன்றோ, மற்று உன் பெரும் படை? பகழி மாரி
விடுகின்றது அன்றோ, வென்றி அரக்கனும் காள மேகம்?
இடுகின்ற வேள்வி மாண்டது; இனி, அவன் பிழைப்புறுமே
முடுகு' என்றான் அரக்கன் தம்பி; நம்பியும் சென்று மூண்டான்.

96. வானில் போயவன் - விசும்பாகிய துறக்கத்தை அடைந்தவன், இலக்குவன்; 97. தும்பி - யானை; 98. வழிக்கொள்ளுதல் - வந்த வழியே திரும்புதல்; 100. முடுகு - விரைவாய்.

வந்தான் நெடுந் தகை மாருதி, மயங்கா முகம் மலர்ந்தான்,
'எந்தாய்! கடிது ஏறாய், எனது இரு தோள்மிசை' என்றான்;
'அந்தாக' என்று உவந்து, ஐயனும் அமைவு ஆயினன்; இமையோர்
சிந்தாகுலம் துறந்தார்; அவன் நெடுஞ் சாரிகை திரிந்தான். 101

இந்திரசித்தன் – இலக்குவன் பெரும் போர்

'கார் ஆயிரம் உடன் ஆகியது' எனல் ஆகிய கரியோன்,
ஓர் ஆயிரம் பரி பூண்டது ஓர் உயர் தேர்மிசை உயர்ந்தான்;
நேர் ஆயினர் இருவோர்களும்; நெடு மாருதி, நிமிரும்
பேர் ஆயிரம் உடையான் என, திசை எங்கணும் பெயர்ந்தான்.

தீ ஒப்பன, உரும் ஒப்பன, உயிர் வேட்டன, திரியும்
பேய் ஒப்பன, பசி ஒப்பன, பிணி ஒப்பன, பிழையா
மாயக் கொடு வினை ஒப்பன, மனம் ஒப்பன, கழுகின்
தாய் ஒப்பன, சில வாளிகள் துரந்தான்—துயில் துறந்தான்.

அவ் அம்பினை அவ் அம்பினின் அறுத்தான், இகல் அரக்கன்;
எவ் அம்பு இனி உலகத்து உளது என்னும்படி எய்தான்—
எவ் அம்பரம், எவ் எண் திசை, எவ் வேலைகள், பிறவும்,
வவ்வும் கடையுக மா மழை பொழிகின்றது மான. 104

ஆயோன், நெடுங் குருவிக் குலம் எனலாம் சில அம்பால்
போய் ஓடிடத் துரந்தான்; அவை, 'பொறியோ' என, மறிய,
தூயோனும், அத்துணை வாளிகள் தொடுத்தான், அவை தடுத்தான்;
தீயோனும், அக் கணத்து, ஆயிரம் நெடுஞ் சாரிகை திரிந்தான்.

கல்லும், நெடு மலையும், பல மரமும், கடை காணும்
புல்லும், சிறு கொடியும், இடை தெரியாவகை, புரியச்
செல்லும் நெறிதொறும், சென்றன—தெறு கால் புரை மறவோன்
சில்லின் முதிர் தேரும், சின வய மாருதி தாளும். 106

இரு வீரரும், 'இவன் இன்னவன், இவன் இன்னவன்' என்னச்
செரு வீரரும் அறியாவகை திரிந்தார், கணை சொரிந்தார்;
'ஒரு வீரரும் இவர் ஒக்கிலர்' என, வானவர் உவந்தார்;
பொரு வீரையும் பொரு வீரையும் பொருதாலெனப் பொருதார். 107

101. அந்தாக - அப்படியே ஆகுக, அந்து - கன்னடச் சொல்; 106. கடை காணும் புல் - தாவரங்களில் கடையாகிய புல்; 107. பொரு வீரை - அலை மோதும் கடல்.

'விண் செல்கில, செல்கின்றன, விசிகம்' என, இமையோர்
கண் செல்கில; மனம் செல்கில; கணிதம் உறும்எனின், ஓர்
எண் செல்கில; நெடுங் காலவன் இடை செல்கிலன்; உடல்மேல்
புண் செல்வன அல்லால், ஒரு பொருள் செல்வன தெரியா. 108

எரிந்து ஏறின, திசை யாவையும்; இடி ஆம் எனப் பொடியாய்
நெரிந்து ஏறின, நெடு நாண் ஒலி; படர் வான் நிறை உருமின்
சொரிந்து ஏறின, சுடு வெங் கணை; தொடுந் தாரகை முழுதும்
கரிந்து ஏறின, உலகு யாவையும் கனல் வெம் புகை கதுவ. 109

வெடிக்கின்றன திசை யாவையும், விழுகின்றன இடி வந்து
இடிக்கின்றன சிலை நாண் ஒலி; இரு வாய்களும் எதிராக்
கடிக்கின்றன, கனல் வெங் கணை; கலி வான் உற விசைமேல்
பொடிக்கின்றன, பொறி வெங் கனல்; இவை கண்டனர், புலவோர். 110

கடல் வற்றின; மலை உக்கன; பருதிக் கனல் கதுவுற்று
உடல் பற்றின; மரம், உற்றன கனல் பட்டன; உதிரம்
சுடர் வற்றின; சுறு மிக்கது; துணிபட்டு உதிர் கணையின்,
திடர் பட்டது, பரவைக் குழி; திரிவுற்றது புவனம். 111

எரிகின்றன அயில் வெங் கணை—இரு சேனையும் இரியத்
திரிகின்றன, புடை நின்றில, திசை சென்றன; சிதறிக்
கரி பொன்றின; பரி மங்கின; கவி சிந்தின; கடல்போல்
சொரிகின்றன, பொரு செம்புனல்; தொலைகின்றன, கொலையால். 112

புரிந்து ஓடின; பொரிந்து ஓடின; புகைந்து ஓடின; புகை போய்
எரிந்து ஓடின; கரிந்து ஓடின; இடம் ஓடின; வலமே
திரிந்து ஓடின; பிரிந்து ஓடின; செறிந்து ஓடின; திசைமேல்
சரிந்து ஓடின;—கருங் கோள் அரிக்கு இளையான் விடு சரமே.

நீர் ஒத்தன; நெருப்பு ஒத்தன; பொருப்பு ஒத்தன; நிமிரும்
கார் ஒத்தன; உரும் ஒத்தன; கடல் ஒத்தன; கதிரோன்
தேர் ஒத்தன; விடை மேலவன் சிரிப்பு ஒத்தன; உலகின்
வேர் ஒத்தன;—செரு ஒத்து இகல் அரக்கன் விடு விசிகம். 114

108. விசிகம் - அம்பு; எண் செல்கில - எண்கள் போதியனவாகச் செல்லவில்லை; நெடுங் காலவன் - நெடிய வாயுதேவன்; 110. கலி வான் - ஒலிக்கும் வானம்; 111. சுறு - மயிர் முதலியன தீயிற் பொசுங்குதலால் உண்டாகும் தீ நாற்றம்; 113. கருங் கோள் அரி - கரிய வலிய சிங்கம், ஈண்டு இராமன்.

ஏமத் தடங் கவசத்து இகல் அகலத்தன; இருவோர்
வாமப் பெருந் தோள் மேலன; வதனத்தன; வயிரத்
தாமத்தன; குறங்கோடு இரு சரணத்தன;—தம் தம்
காமக் குல மட மங்கையர் கடைக்கண் எனக் கணைகள். 115

'எந் நாளினின், எத் தேவர்கள், எத் தானவர், எவரே,
அன்னார் செரு விளைத்தார்?' என, இமையோர் எடுத்து அழைத்தார்;
பொன் ஆர் சிலை இரு கால்களும், ஒருகால் பொறை உயிரா,
முன்நாளினில் இரண்டாம் பிறை முளைத்தாலென வளைத்தார்.

வேகின்றன உலகு, இங்கு இவர் விடுகின்றன விசிகம்;
போகின்றன சுடர் வெந்தன; இமையோர்களும் புலர்ந்தார்;
'ஆகின்றது ஓர் அழிகாலம் இது ஆம், அன்று' என அயிர்த்தார்;
நோகின்றன திசை யானைகள், செவி நாண் ஒலி நுழைய. 117

மீன் உக்கது, நெடு வானகம்; வெயில் உக்கது, சுடரும்;
மான் உக்கது, முழு வெண் மதி; மழை உக்கது, வானம்;
தான் உக்கது, குல மால் வரை; தலை உக்கது, தகை சால்
ஊன் உக்க, எவ் உலகத்தினும் உளவாயின உயிரும். 118

அக் காலையின், அயில் வெங் கணை ஐ-ஐந்து புக்கு அழுந்த,
திக்கு ஆசு அற வென்றான் மகன், இளங்கோ உடல் செறித்தான்;
கைக் கார்முகம் வளையச் சில கனல் வெங் கணை, கவசம்
புக்கு, ஆகமும் கழன்று ஓடிட, இளங் கோளரி பொழிந்தான்.

தெரிந்தான் சில சுடர் வெங் கணை, தேவேந்திரன் சின மா
இரிந்து ஓடிடத் துரந்து ஓடின, இமையோரையும் முன் நாள்
அரிந்து ஓடின, எரிந்து ஓடின, அவை கோத்து, அடல் அரக்கன்
சொரிந்தான், உயர் நெடு மாருதி தோள் மேலினில் தோன்ற.

குருதிப் புனல் சொரிய, குணம் குணிப்பு இல்லவன், குணபால்
பருதிப்படி பொலிவுற்றதை இளங் கோளரி பார்த்தான்;
ஒரு திக்கிலும் பெயராவகை, அவன் தேரினை உதிர்த்தான்;
'பொருது இக் கணம் வென்றான்' என, சர மாரிகள் பொழிந்தான்.

115. இகல் அகலம் - வலிய மார்பு; 116. ஒரு கால் - ஒரேசமயத்தில்; பொறை உயிர்த்தல் - வெளிப்பட்டு முளைத்தல்; முன் நாள் - வளர் பிறை நாளாகிய முதற் பக்கம்; 118. ஊன் - உடம்பு; 121. குணம் குணிப்பு இல்லவன் - எண்ண முடியாத குணங்களையுடையவனாகிய அனுமன்.

அத் தேர் அழிந்தது நோக்கிய இமையோர் எடுத்து ஆர்த்தார்,
முத் தேவரும் உவந்தார்; அவன் உரும்ஏறு என முனிந்தான்;
தத்தா, ஒரு தடந் தேரினைத் தொடர்ந்தான், சரம் தலைமேல்
பத்து ஏவினன், அவை பாய்தலின், இளங் கோளரி பதைத்தான்.

பதைத்தான், உடல் நிலைத்தான், சில பகு வாய் அயில் பகழி
விதைத்தான்; அவன் விலக்காதமுன், விடைமேல் வரு விமலன்,
மதத்தால் எதிர் வரு காலனை, ஒரு கால் உற மருமத்து
உதைத்தாலென, தனித்து ஓர் கணை அவன் மார்பிடை உய்த்தான்.

கவசத்தையும் நெடு மார்பையும் கழன்று அக் கணை கழிய,
அவசத் தொழில் அடைந்தான்; அதற்கு இமையோர் எடுத்து ஆர்த்தார்;
திவசத்து எழு கதிரோன் எனத் தெரிகின்றது ஓர் கணையால்
துவசத்தையும் துணித்தே, அவன் மணித் தோளையும் துளைத்தான்.*

உள் ஆடிய உதிரப் புனல் கொழுந் தீ என ஒழுக,
தள்ளாடிய வட மேருவின் சலித்தான்; உடல் தரித்தான்,
தொள்ளாயிரம் கடும் போர்க் கணை துரந்தான்; அவை துறை போய்
விள்ளா நெடுங் கவசத்திடை நுழையாது உக, வெகுண்டான்.

மறித்து ஆயிரம் வடி வெங் கணை, மருமத்தினை மதியாக்
குறித்து, ஆயிரம் பரித் தேரவன் விடுத்தான்; அவை குறி பார்த்து
இறுத்தான் நெடுஞ் சரத்தால், ஒரு தனி நாயகற்கு இளையோன்;
செறித்தான் உடல் சில பொற் கணை, சிலை நாண் அறத் தெறித்தான்.

'வில் இங்கு இது, நெடு மால், சிவன் எனும் மேலவர் தனுவே-
கொல்?' என்று கொண்டு அயிர்த்தான்; நெடுங் கவசத்தையும் குலையாச்
செல்லுங் கொடுங் கணை யாவையும் சிதையாமையும் தெரிந்தான்;
வெல்லும் தரம் இல்லாமையும் அறிந்தான், அகம் மெலிந்தான்.

இந்திரசித்தன் மெலிவினை வீடணன் இலக்குவனுக்குக் கூறுதல்

அத் தன்மையை அறிந்தான் அவன் சிறுதாதையும், அணுகா,
முத்தன் முகம் நோக்கா, 'ஒரு மொழி கேள்' என மொழிவான்,
'எத் தன்மையும் இமையோர்களை வென்றான் இகல் கண்டால்,
பித்தன் மனம் தளர்ந்தான்; இனிப் பிழையான்' எனப் பகர்ந்தான்.

122. தத்தா - தத்தி, தாவிப் பாய்ந்து; 124. திவசம் - நாள்; சண்டுப் பகல்; 128. முத்தன் - பாசங்களினின்று விடுபட்ட தூயோனாகிய இலக்குவன்.

இந்திரசித்தன் படைகளை இலக்குவன் விலக்கல்

கூற்றின்படி கொதிக்கின்ற அக் கொலை வாள் எயிற்று அரக்கன்
ஏற்றும் சிலை நெடு நாண் ஒலி உலகு ஏழினும் எய்த,
சீற்றம் தலைத்தலை சென்று உற, 'இது தீர்' எனத் தெரியா,
காற்றின் படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு காத்தான்.

அனலின் படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு தடுத்தான்;
புனலின் படை தொடுத்தான்; அவன் அதுவே கொடு பொறுத்தான்;
கன வெங் கதிரவன் வெம் படை துரந்தான், மனம் கரியான்;
சின வெந் திறல் இளங் கோளரி அதுவே கொடு தீர்த்தான். 130

'இது காத்திகொல்?' என்னு, எடுத்து, இசிகப் படை எய்தான்;
அது காப்பதற்கு அதுவே உளது என்னு, தொடுத்து அமைந்தான்;
செதுகாப் படை தொடுப்பேன் என நினைந்தான், திசைமுகத்தோன்
முது மாப் படை துரந்தான், 'இனி முடிந்தாய்' என மொழிந்தான்.

வானின்தலை நிலைநின்றவர் மழுவாளியும், மலரோன்-
தானும், முனிவரரும், பிற தவத்தோர்களும், அறத்தோர்
கோனும், பிற பிற தேவர்கள் குழுவும், மனம் குலைந்தார்;
'ஊனம் இனி இலது ஆகுக, இளங்கோக்கு!' என உரைத்தார்.

ஊழிக்கடை இறும் அத்தலை, உலகு யாவையும் உண்ணும்
ஆழிப் பெருங் கனல்தன்னொரு சுடர் என்னவும் ஆகாப்
பாழிச் சிகை பரப்பித் தனி படர்கின்றது பார்த்தான்,—
ஆழித் தனி முதல் நாயகற்கு இளையான்—அது மதித்தான்.

' "மாட்டான் இவன், மலரோன் படை முதற் போது தன்வலத்தால்,
மீட்டான்அலன்; தடுத்தான்அலன்; முடிந்தான்" என, விட்டான்;
'காட்டாது இனிக் கரந்தால், அது கருமம் அலது' என்னு,
'தாள் தாமரை மலரோன்படை தொடுப்பேன்' எனச் சமைந்தான். 134

'நன்று ஆகுக, உலகுக்கு!' என, முதலோன் மொழி நவின்றான்;
'பின்றுதவன் உயிர்மேல் செலவு ஒழிக' என்பது பிடித்தான்;
'ஒன்றாக இம் முதலோன் படைதனை மாய்க்க' என்று உரைத்தான்,
நின்றான், அது துரந்தான்; அவன் நலம் வானவர் நினைந்தார்.

129. கூற்றின்படி - கூற்றுவனை ஒப்ப; இது தீர் - இதனை விலக்கிஅழிப்பாய்; 130. அனலின் படை - ஆக்கினேயாத்திரம்; புனலின் படை - வருணாத்திரம்; கதிரவன் படை - சூரியாத்திரம்; 131. இசிகப் படை - ஒரு வகை அம்பு, இஷீகாஸ்திரம்; 133. பாழிச் சிகை - வலிய தீக் கொழுந்துகள்; 135. முதலோன் மொழி - பிரமதேவனுக்குரிய மந்திரம்.

'தான் விட்டது மலரோன் படைஎனின், மற்று இடைதருமே?
வான் விட்டதும், மண் விட்டதும், மறவோன் உடல் அறுமே?
"தேன் விட்டிடு மலரோன் படை தீர்ப்பாய்" எனத் தெரிந்தான்;
ஊன் விட்டவன் மறம் விட்டிலன்' என, வானவர் உவந்தார்.

உரும்ஏறு வந்து எதிர்த்தால், அதன் எதிரே, நெருப்பு உய்த்தால்,
வரும் ஆங்கது தவிர்ந்தாலென, மலரோன் படை மாய,
திருமால்தனக்கு இளையான் படை உலகு ஏழையும் தீய்க்கும்
அரு மா கனல் என நின்றது, விசும்பு எங்கணும் ஆகி. 137

படை அங்கு அது படராவகை, பகலோன் குல மருமான்,
இடை ஒன்று அது தடுக்கும்படி செந் தீ உக எய்தான்,
தொடை ஒன்றினை; 'கணை மீமிசைத் துறுவாய், இனி' என்றான்!
விடம் ஒன்று கொண்டு ஒன்று ஈர்ந்ததுபோல் தீர்ந்தது, வேகம்.

விண்ணோர் அது கண்டார், 'வய வீரர்க்கு இனி மேன்மேல்
ஒண்ணாதன உளவோ?' என மனம் தேறினர், உவந்தார்;
கண் ஆர் நுதல் பெருமான், 'இவர்க்கு அரிதோ?' எனக் கடை பார்த்து,
'எண்ணாது இவை பகர்ந்தீர்; பொருள் கேளீர்!' என இசைத்தான்;

'நாராயண நரர் என்று இவர் உளராய், நமக்கு எல்லாம்
வேராய், முழு முதல் காரணப் பொருளாய், வினை கடந்தோர்;
ஆராயினும் தெரியாதது ஓர் நெடு மாயையின் அகத்தார்;
பாராயண மறை நான்கையும் கடந்தார்; இவர் பழையோர்;

' "அறத்தாறு அழிவு உளது ஆம்" என அறிவும் தொடர்ந்து அணு
புறத்தார், புகுந்து அகத்தார் எனப் புகுந்து, அன்னது புரப்பார், [காப்
மறத்தார் குலம் முதல் வேர்அற மாய்ப்பான், இவண் வந்தார்;
திறத்தால் அது தெரிந்து, யாவரும் தெரியாவகை திரிவார்;

' "உயிர்தோறும் உற்றுளன், தோத்திரத்து ஒருவன்" என உரைக்கும்
அயிரா நிலை உடையான் இவன்; அவன், இவ் உலகு அனைத்தும்
தயிர் தோய் பிரை எனல் ஆம் வகை கலந்து, ஏறிய தலைவன்;
பயிராதது ஓர் பொருள் இன்னது என்று உணர்வீர்; இது பரமால். 142

136. இடை தருமே? - பின்னடையுமோ?; விட்டது - அழிக்காமல் விட்
டது; மறவோன் - இந்திரசித்து; 138. மருமான் - வழித்தோன்றல், ஈண்டு
இலக்குவன்; 142. இவன் - இலக்குவன்; அவன் - இராமன்; பயிராதது -
(இத் தன்மையது என்று) சொல்லவொண்ணாதது.

'நெடும் பாற்கடல் கிடந்தாரும், பண்டு, இவர் நீர் குறை நேர,
விடும் பாக்கியம் உடையார்களைக் குலத்தோடு அற வீட்டி,
இடும் பாக்கியத்து அறம் காப்பதற்கு இசைந்தார்' என, இது எலாம்,
அடும்பு ஆக்கிய தொடைச் செஞ்சடை முதலோன் பணித்து அமைந்தான்.

'அறிந்தே இருந்து, அறியேம், அவன் நெடு மாயையின் அயர்ப்போம்;
பிறிந்தோம் இனி முழுது ஐயமும்; பெருமான் உரை பிடித்தோம்;
எறிந்தோம் பகை முழுதும்; இனித் தீர்ந்தோம் இடர், கடந்தோம்;
செறிந்தோர் வினைப் பகைவா!' எனத் தொழுதார், நெடுந் தேவர்.

மாயோன் படை இலக்குவனை விலகிப் போதல்

மாயோன் நெடும் படை வாங்கிய வளை வாள் எயிற்று அரக்கன்
'நீயோ இது தடுத்தாய்எனின், நினக்கு ஆர் எதிர் நிற்பார்?
போயோ விசும்பு அடைவாய்; இது பிழையாது' எனப் புகலா,
தூயோன்மிசை, உலகு யாவையும் தடுமாறிட, துரந்தான். 145

சேமித்தனர் இமையோர் தமை, சிரத்து ஏந்திய கரத்தால்;
ஆம் இத் தொழில், பிறர் யாவரும் அடைந்தார்; பழுது அடையாக்
காமிப்பது முடிவிப்பது படிகின்றது கண்டான்;
'நேமித் தனி அரி, தான்' என நினைந்தான், எதிர் நடந்தான்.

தீக்கின்றது இவ் உலகு ஏழையும் எனச் செல்வதும் தெரிந்தான்;
நீக்கும் தரம் அல்லா முழு முதலோன் என நினைத்தான்;
மீச் சென்றிலது, அயல் சென்று, அது விலங்கா, வலம் கொடு மேல்
போய்த்து; அங்கு அது கனல் மாண்டது, புகை வீய்ந்தது, பொதுவே.

ஏத்து ஆடினர், இமையோர்களும்; கவியின் குலம் எல்லாம்
கூத்து ஆடினர்; அர மங்கையர் குனித்து ஆடினர்; தவத்தோர்,
'காத்தாய் உலகு அனைத்தும்' எனக் களித்து ஆடினர்; கமலம்
பூத்தானும், அம் மழுவாளியும், முழு வாய்கொடு புகழ்ந்தார்.

சிவன் படையை இந்திரசித்து விடுத்தல்

அவன் அன்னது கண்டான்; 'இவன் ஆரோ?' என அயிர்த்தான்;
'இவன் அன்னது முதலே உடை இறையோன்' என வியவா,
'எவன் என்னினும் நன்று ஆகுக! இனி எண்ணலென்' என்னா,
'சிவன் நன் படை தொடுத்து, ஆர் உயிர் முடிப்பேன்' எனத் தெரிந்தான்;

143. பாக்கியம் - நற்பேறு; அடும்பு ஆக்கிய தொடை - அடப்ப மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை; 145. மாயோன் படை - சக்கராயுதம், நாராயணாத்திரம் எனினும் ஆம்; 146. சேமித்தனர் - (தம்மைப்) பாதுகாத்துக் கொண்டனர்; படிகின்றது - படிந்து போவது; 147. மீ - மேல்; போய்த்து - போயிற்று.

'பார்ப்பான் தரும் உலகு யாவையும், ஒரு கால், ஒரு பகலே,
தீர்ப்பான் படை தொடுப்பேன்' எனத் தெரிந்தான்; அது தெரியா,
மீப் பாவிய இமையோர் குலம் வெருவுற்றது; 'இப்பொழுதே
மாய்ப்பான்' என, உலகு யாவையும் மறுகுற்றன, மயங்கா.

'தானே சிவன் தரப் பெற்றது, தவம் நாள் பல உழந்தே;
தானே, ''பிறர் அறியாதது தந்தேன்'' எனச் சமைந்தான்;
ஆனால், இவன் உயிர் கோடலுக்கு ஐயம் இலை' என்னா,
மேல் நாளும் இதனை ஏவிடின் எதிர்நிற்பவர் இல்லை. 151

மனத்தால், மலர் புனல் சாந்தமொடு அவி தூபமும் வகுத்தான்;
நினைத்தான்; 'இவன் உயிர் கொண்டு இவண் நிமிர்வாய்' என நிமிர்த்
சினத்தால் நெடுஞ் சிலை நாண் தடந் தோள்மேல் உறச் செலுத்தா,[தான்;
எனைத்து ஆயது ஓர் பொருளால் இடை தடை இல்லதை விட்டான்.

சூலங்களும், மழுவும், சுடு கணையும், கனல் சுடரும்,
ஆலங்களும், அரவங்களும், அசனிக் குலம் எவையும்,
காலன் தனது உருவங்களும், கரும் பூதமும், பெரும் பேய்ச்
சாலங்களும், நிமிர்கின்றன, உலகு எங்கணும் தான் ஆய். 153

ஊழிக் கனல் ஒருபால் அதன் உடனே தொடர்ந்து உடற்றும்;
சூழிக் கொடுங் காற்று அதன் உடனே வர, தூர்க்கும்—
எழிற்கும் அப் புறத்தாய் உள பெரும் போர்க் கடல் இழிந்தாங்கு
ஆழித்தலைக் கிடந்தாலென நெடுந் தூங்கு இருள் அடைய. 154

இரிந்தார் குல நெடுந் தேவர்கள்; இருடிக் குலத்து எவரும்
பரிந்தார், 'இது பழுது ஆகிலது; இறுவான்' எனும் பயத்தால்;
நெரிந்து ஆங்கு அழி குரங்கு உற்றது; பகரும் துணை நெடிதே?
திரிந்தார், இரு சுடரோடு உலகு ஒரு மூன்று உடன் திரிய. 155

பார்த்தான் நெடுந் தகை வீடணன், உயிர் காலுற, பயத்தால்
வேர்த்தான், 'இது விலக்கும் தரம் உளதோ, முதல் வீரா!
தீர்த்தா!' என அழைத்தான்; அதற்கு இளங் கோளரி சிரித்தான்;
போர்த்தார் அடர் கவி வீரரும், அவன் தாள் நிழல் புகுந்தார்.

150. பார்ப்பான் - வேதங்களைப் பார்ப்பவன், ஈண்டுப் பிரமன்; பாவிய - பரவி நின்ற; 152. அவி - திருவமுது; 153. சாலங்கள் - தொகுதிகள்; 154. ஆழித்தலை - (சேனைக்) கடலிடத்தில்; 155. இருடிக் குலம் - முனிவர் கூட்டம்; 156. போர்த்தார் - போர் நிகழ்ச்சியில் அணிதற்குரிய அடையாள மாலை.

இலக்குவனும் சிவன் படையை விடுதல்

'அவயம்! உனக்கு அவயம்!' எனும் அனைவோரையும், 'அஞ்சேல்!
அவயம் உமக்கு அளித்தோம்' என, தன் கைத் தலத்து அமைத்தான்;
'உவயம் உறும் உலகின் பயம் உணர்ந்தேன், இனி ஒழியேன்;
சிவன், ஐம் முகம் உடையான், படை தொடுப்பேன்' எனத் தெளிந்தான்.

அப் பொன் படை மனத்தால் நினைந்து, அர்ச்சித்து, 'அதை அழிப்பாய்;
இப் பொன் படைதனை மற்றொரு தொழில் செய்கிலை' என்று,
துப்பு ஒப்பது ஓர் கணை கூட்டினன் துரந்தான்; இடைதொடரா,
எப் பொன் படை எவையும் விழுங்குற்றது, ஓர் இமைப்பின்.

விண் ஆர்த்தது; மண் ஆர்த்தது; மேலோர் மணி முரசின்
கண் ஆர்த்தது; கடல் ஆர்த்தது; மழை ஆர்த்தது; கலையோர்
எண் ஆர்த்தது; மறை ஆர்த்தது; 'விசயம்' என இயம்பும்
பெண் ஆர்த்தனள்; அறம் ஆர்த்தது; புறம் ஆர்த்தது, பெரிதால். 159

இறுகாலையின் உலகு யாவையும் அவிப்பான் இகல் படையை,
மறுகாவகை வலித்தான், அது வாங்கும்படி வல்லான்; [தான்;
தெறு காலனின் கொடியோனும், மற்று அது கண்டு, அகம் திகைத்
அறு கால் வயக் கவி வீரரும் அரி என்பதை அறிந்தார். 160

'தெய்வப் படை பழுது உற்றது எனக் கூசுதல் சிதைவால்;
எய் வித்தகம் உளது; அன்னது பிழையாது' என இசையா,
கை வித்தகம் அதனால் சில கணை வித்தினன்; அவையும்
மொய் வித்தகன் தடந் தோளினும் நுதற் சூட்டினும் மூழ்க.

வெய்யோன் மகன் முதல் ஆகிய விறலோர், மிகு திறலோர்,
கை ஒய்வு இலர், மலை மாரியின் நிருதக் கடல் கடப்பார்,
'உய்யார்' என, வடி வாளிகள் சத கோடிகள் உய்த்தான்;
செய்யோன் அயல் தனி நின்ற தன் சிறு தாதையைச் செறுத்தான்.

வீடணனை இந்திரசித்தன் சினத்தால் இகழ்தல்

'முரண் தடந் தண்டும் ஏந்தி, மனிதரை முறையைக் குன்றிப்
பிரட்டரின் புகழ்ந்து, பேதை அடியரின் தொழுது, பின்சென்று,
இரட்டுறும் முரசம் என்ன, இசைத்ததே இசைக்கின்றாயைப்
புரட்டுவென் தலையை, இன்று; பழியொடும் ஒழிவென் போலாம் 163

157. அவயம் - அபயம்; உவயம் - உபயம், இரண்டு; 158. துப்பு - வலிமை; 159. கலையோர் - கலை வல்ல அறிஞர்; எண் - உள்ளம்; 160. அறு கால் - நடக்கும் செயல் ஒய்ந்த கால்; அரி - திருமால்; 161. சிதைவு - குற்றம்; எய் வித்தகம் - எய்யும் திறமை; நுதற் சூடு - நெற்றியின் உச்சி; 162. வெய்யோன் மகன் - சூரியன் மகனாகிய சுக்கிரீவன்; செய்யோன் - செம் மேனியனாகிய இலக்குவன்; சிறு தாதை - சிறிய தந்தையாகிய வீடணன்; 163. பிரட்டர் - நெறியின் நீங்கினர், சாதி ஒழுக்கத்தில் தவறினர்.

'விழி பட, முதல்வர் எல்லாம் வெதும்பினர், ஒதுங்கி வீழ்ந்து
வழிபட, உலகம் மூன்றும் அடிப்பட வந்ததேனும்,
அழி படை தாங்கல் ஆற்றும் ஆடவர், யாண்டும் வெஃகாப்
பழி பட வந்த வாழ்வை யாவரே நயக்கற்பாலார்? 164

'நீர் உளதனையும் உள்ள மீன் என, நிருதர் எல்லாம்
வேர் உளதனையும் வீவர், இராவணனோடு; மீளார்;
ஊர் உளது; ஒருவன் நின்றாய் நீ உளை; உறைய; நின்னோடு
ஆர் உளர் அரக்கர் நிற்பார், அரசு வீற்றிருக்க? ஐயா! 165

'முந்தை நாள், உலகம் தந்த மூத்த வானோர்கட்கு எல்லாம்
தந்தையார் தந்தையாரைச் செருவிடைச் சாயத் தள்ளி,
கந்தனார் தந்தையாரைக் கயிலையோடு ஒரு கைக் கொண்ட
எந்தையார் அரசு செய்வது, இப் பெரும் பலம் கொண்டேயோ?

'பனி மலர்த் தவிசின் மேலோன் பார்ப்பனக் குலத்துக்கு எல்லாம்
தனி முதல் தலைவன் ஆன உன்னை வந்து அமரர் தாழ்வார்;
மனிதருக்கு அடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆள்வாய்;
இனி உனக்கு என்னோ, மானம்? எங்களோடு அடங்கிற்று அன்றே. 167

'சொல்வித்தும், பழித்தும் நுங்கை மூக்கினைத் துணிவித்தோர் ஆர்?
எல் வித்தும் படைக் கை உங்கள் தமையனை எங்களோடும்
கொல்வித்தும், தோற்று நின்ற கூற்றினர் குலத்தை எல்லாம்
வெல்வித்தும் வாழும் வாழ்வின் வெறுமையே விழுமிது அன்றோ? 168

'எழுதி வர் அணிந்த திண் தோள் இராவணன், இராமன் அம்பால்,
புழுதியே பாயல் ஆகப் புரண்ட நாள், புரண்டு மேல்வீழ்ந்து,
அழுதியோ? நீயும் கூட ஆர்த்தியோ? அவனை வாழ்த்தித்
தொழுதியோ? யாதோ, செய்யத் துணிந்தனை?—விசயத் தோளாய்!

'ஊனுடை உடம்பின் நீங்கி, மருந்தினால் உயிர் வந்து எய்தும்
மானிடர் இலங்கை வேந்தைக் கொல்வரே? நீயும் அன்னான்-
தானுடைச் செல்வம் துய்க்கத் தகுதியோ? சரத்தினோடும்
வானிடைப் புகுதி அன்றே, யான் பழி மறுக்கில்!' என்றான். 170

166. இப் பெரும் பலம் - (மனிதரின்) இந்தப் பெரிய வலிமை, பெரும் பலம் என்றது இகழ்ச்சிக் குறிப்பு; 170. பழி மறுத்தல் - தந்தையைக் கொல்லுதல் பழி என்னும் உண்மையை உடன்படாது கொல்லுதல்.

வீடணன் மறுமொழி

அவ் உரை அமையக் கேட்ட வீடணன், அலங்கல் மோலி
செவ்விதின் துளக்கி, மூரல் முறுவலும் தெரிவது ஆக்கி,
'வெவ்விது பாவம்; சாலத் தருமமே விழுமிது; ஐய!
இவ் உரை கேட்டி!' என்னு, இனையன விளம்பலுற்றான்: 171

'அறம் துணை ஆவது அல்லால், அரு நரகு அமைய நல்கும்
மறம் துணை ஆக, மாயாப் பழியொடும் வாழ மாட்டேன்;
துறந்திலேன் மெய்ம்மை, எய்தும் பொய்ம்மையே துறப்பது அல்லால்;
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்னவன், பிழைத்த போதே.

'உண்டிலென் நறவம்; பொய்ம்மை உரைத்திலென்; வலியால் ஒன்றும்
கொண்டிலென்; மாய வஞ்சம் குறித்திலென்; யாரும் குற்றம்
கண்டிலர் என்பால்; உண்டே? நீயிரும் காண்டிர் அன்றே?
பெண்டிரின் திறம்பினுரைத் துறந்தது பிழையிற்று ஆமே? 173

' ''மூவகை உலகும் ஏத்தும் முதலவன், எவர்க்கும் மூத்த
தேவர்தம் தேவன், தேவி கற்பினில் சிறந்துளாளை
நோவன செய்தல் தீது'' என்று உரைப்ப, நுன் தாதை சீறி,
''போ!'' எனப் போந்தேன்; இன்று நரகதில் பொருந்துவேனோ? 174

'வெம்மையின், தருமம் நோக்கா, வேட்டதே வேட்டு, வீயும்
உம்மையே புகழும் பூண்க; துறக்கமும் உமக்கே ஆக;
செம்மையில் பொருந்தி மேலோர் ஒழுக்கினோடு அறத்தைத் தேறும்
எம்மையே பழியும் பூண்க; நரகமும் எமக்கே ஆக. 175

' ''அறத்தினைப் பாவம் வெல்லாது'' என்னும் அது அறிந்து, ''ஞானத்
திறத்தினும் உறும்'' என்று எண்ணி, தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன்;
புறத்தினில் புகழே ஆக; பழியொடும் புணர்க; போகச்
சிறப்பு இனிப் பெறுக; தீர்க' என்றனன், சீற்றம் தீர்ந்தான்.

'பெறும் சிறப்பு எல்லாம் என் கைப் பிறை முகப் பகழி பெற்றால்,
இறும் சிறப்பு அல்லால், அப் பால் எங்கு இனிப் போவது?' என்னு,
தெறுஞ் சிறைக் கலுழன் அன்ன ஒரு கணை தெரிந்து, செம் பொன்
உறும் சுடர்க் கழுத்தை நோக்கி, நூக்கினன், உருமின் வெய்யோன்.

அக் கணை அசனி என்ன, அன்று என, ஆலம் உண்ட
முக்கணன் சூலம் என்ன, முடுகிய முடிவை நோக்கி,
'இக் கணத்து இற்றான், இற்றான்' என்கின்ற இமையோர்காண,
கைக் கணை ஒன்றால், வள்ளல், அக் கணை கண்டம் கண்டான்.

175. வெம்மையின் - கொடுமையினாலே; 176. ஞானத் திறத்தினும் உறும் - ஞானத்தின் கூறுபாட்டிலும் பொருந்தும்.

கோல் ஒன்று துணிதலோடும், கூற்றுக்கும் கூற்றம் அன்னான்,
வேல் ஒன்று வாங்கி விட்டான்; வெயில் ஒன்று விழுவது என்ன,
நால் ஒன்றும் மூன்றும் ஆன புவனங்கள் நடுங்கலோடும்,
நூல் ஒன்று வரி விலானும், அதனையும் நுறுக்கி வீழ்த்தான்.

'வேல்கொடு கொல்லல் உற்றான்' என்று, ஒரு வெகுளி பொங்க,
கால்கொடு காலின் கூடிக் கை தொடர் கனகத் தண்டால்,
கோல் கொளும் ஒருவனோடும், கொடித் தடந் தேரில் பூண்ட
பால் கொளும் புரவி எல்லாம் படுத்தினன், துடிப்பு மாற. 180

அழிந்த தேர்மீது நின்றான், ஆயிர கோடி அம்பு
பொழிந்து, அவன் தோளின்மேலும், இலக்குவன் புயத்தின்மேலும்
ஒழிந்தவர் உரத்தின்மேலும், உதிர நீர் வாரி ஓதம்
அழிந்து இழிந்து ஓட, நோக்கி, அண்டமும் இரிய ஆர்த்தான்.

இந்திரசித்து இராவணனிடம் போதல்

ஆர்த்தவன், அனைய போழ்தின், 'அழிவு இலாத் தேர் கொண்டு அன்றிப்
போர்த் தொழில் புரியலாகாது' என்பது ஓர் பொருளை உன்னி,
பார்த்தவர் இமையாமுன்னம், 'விசும்பிடைப் படர்ந்தான்' என்னும்
வார்த்தையை நிறுத்திப் போனான், இராவணன் மருங்கு புக்கான்.

27 இந்திரசித்து வதைப் படலம்

இராவணன் இந்திரசித்திடம், 'நிகழ்ந்தது உரை' எனல்

விண்ணிடைக் கரந்தான் என்பார், 'வஞ்சனை விளைக்கும்' என்பார்,
கண்ணிடைக் கலக்க நோக்கி, ஐயுறவு உழக்கும் காலை,
புண்ணிடை யாக்கைச் செந்நீர் இழிதர, புக்கு நின்ற
எண்ணுடை மகனை நோக்கி, இராவணன் இனைய சொன்னான்: 1

'தொடங்கிய வேள்வி முற்றுப் பெற்றிலாத் தொழில், நின் தோள்மேல்
அடங்கிய அம்பே என்னை அறிவித்தது; அழிவு இல் யாக்கை
நடுங்கினை போலச் சாலத் தளர்ந்தனை; கலுழன் நண்ணப்
படம் குறை அரவம் ஒத்தாய்; உற்றது பகர்தி' என்றான். 2

180. கோல் கொளும் ஒருவன் - தேர்ப்பாகன்.
27: 1. எண் - மதிப்பு; 2. என்னை - எனக்கு.

'சூழ் வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்க, சுற்றி,
வேள்வியைச் சிதைய நூறி, வெகுளியால் எழுந்து வீங்கி,
ஆள்வினை ஆற்றல்தன்னால் அமர்த் தொழில் தொடங்கி, யார்க்கும்
தாழ்வு இலாப் படைகள் மூன்றும் தொடுத்தலென்; தடுத்து விட்டான்.

'நிலம் செய்து, விசும்பும் செய்து, நெடிய மால் படை, நின்றானை
வலம் செய்து போயிற்று என்றால், மற்று இனி வலியது உண்டோ?
குலம் செய்த பாவத்தாலே கொடும் பகை தேடிக்கொண்டாய்;
சலம் செயின், உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன், தானே.

'முட்டிய செருவில், முன்னம் முதலவன் படையை என்மேல்
விட்டிலன், உலகை அஞ்சி; ஆதலால், வென்று மீண்டேன்;
கிட்டிய போதும் காத்தான்; இன்னமும் கிளர வல்லான்;
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான். 5

'ஆதலால், ''அஞ்சினேன்'' என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதிஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்' என்றான்—உலகு எலாம் கலக்கி வென்றான்.

இராவணன் இந்திரசித்தைக் கடிந்து பேசுதல்

இயம்பலும், இலங்கை வேந்தன், எயிற்று இள நிலவு தோன்ற,
புயங்களும் குலுங்க நக்கு, 'போர்க்கு இனி ஒழிதி போலாம்;
மயங்கினை; மனிசன் தன்னை அஞ்சினை; வருந்தல்; ஐய!
சயம் கொடு தருவென், இன்றே, மனிசரைத் தனு ஒன்றாலே. 7

'முன்னையோர், இறந்தார் எல்லாம், இப் பகை முடிப்பர் என்றும்,
பின்னையோர், நின்றோர் எல்லாம், வென்றனர் பெயர்வர் என்றும்,
உன்னை, "நீ அவரை வென்று தருதி" என்று உணர்ந்தும், அன்றால்;
என்னையே நோக்கி, யான் இந் நெடும் பகை தேடிக் கொண்டேன். 8

'பேதைமை உரைத்தாய்; பிள்ளாய்! உலகு எலாம் பெயர, பேராக்
காதை என் புகழினோடு நிலைபெற, அமரர் காண,
மீது எழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்,
சீதையை விடுவது உண்டோ, இருபது திண் தோள் உண்டால்?

3. உம்பி - உன் தம்பி, வீடணன்; படைகள் மூன்று - பிரமாத்திரம், நாராயணாத்திரம், பாசுபதம் என்பன; 4. சலம் - வெகுளி; 5. கிளர்தல் - ஆர்வங்கொண்டு போர் செய்தல்; சுட்டிய வலி - மதித்தற்குக் காரணமான வில் வலிமை; சுட்டுதல் - மதித்தல்.

'வென்றிலென் என்ற போதும், வேதம் உள்ளளவும், யானும்
நின்றனென் அன்றோ, மற்று அவ் இராமன் பேர் நிற்கும் ஆயின்?
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ? பொதுமைத்து அன்றோ?
இன்று உளார் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி உண்டோ?

'"விட்டனென், சீதைதன்னை" என்றலும், விண்ணோர் நண்ணி,
கட்டுவது அல்லால், என்னை யான் எனக் கருதுவாரோ?
"பட்டனென்" என்ற போதும், எளிமையின் படுகிலேன் யான்,
எட்டினோடு இரண்டும் ஆன திசைகளை எறிந்து வென்றேன். 11

'சொல்லி என், பலவும்? நீ நின் இருக்கையைத் தொடர்ந்து, தோளில்
புல்லிய பகழி வாங்கி, போர்த் தொழில் சிரமம் போக்கி,
எல்லியும் கழித்தி' என்னா, எழுந்தனன்; எழுந்து, பேழ் வாய்
வல்லியம் முனிந்தாலன்னான், 'வருக, தேர் தருக!' என்றான்.

இராவணனைத் தடுத்து, இந்திரசித்துப் போர்க்குச் செல்லுதல்

எழுந்தவன்தன்னை நோக்கி, இணை அடி இறைஞ்சி, 'எந்தாய்!
ஒழிந்தருள், சீற்றம்; சொன்ன உறுதியைப் பொறுத்தி; யான் போய்க்
கழிந்தனென் என்ற பின்னர், நல்லவா காண்டி' என்னா
மொழிந்து, தன் தெய்வத் தேர்மேல் ஏறினன், முடியலுற்றான்.

படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவும், தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன் அளித்தன, தேர்மேல் ஆக்கி, [யோன் தன்னைக்
கொடைத் தொழில் வேட்டோர்க்கு எல்லாம் கொடுத்தனன், கொடி
கடைக்கணால் நோக்கி நோக்கி, இரு கண் நீர் கலுழப் போனான். 14

இலங்கையின் நிருதர் எல்லாம் எழுந்தனர், விரைவின் எய்தி,
'விலங்கல் அம் தோளாய்! நின்னைப் பிரிகலம்; விளிதும்' என்று,
வலங்கொடு தொடர்ந்தார் தம்மை, 'மன்னனைக் காமின்; யாதும்
கலங்கலிர்; இன்றே சென்று, மனிசரைக் கடப்பென்' என்றான்.

வணங்குவார், வாழ்த்துவார், தன் வடிவினை நோக்கித் தம் வாய்
உணங்குவார், உயிர்ப்பார், உள்ளம் உருகுவார் வெருவலுற்றுக்
கணங் குழை மகளிர் ஈண்டி இரைத்தவர், கடைக்கண் என்னும்
அணங்குடை நெடு வேல் பாயும் அமர் கடந்து, அரிதின் போனான். 16

ஏயினன் இன்னன் ஆக, இலக்குவன், எடுத்த வில்லான்,
சேய் இரு விசும்பை நோக்கி, 'வீடண! தீயோன் அப் பால்
போயினன் ஆதல் வேண்டும்; புரிந்திலன் ஒன்றும்' என்பான்,
ஆயிரம் புரவி பூண்ட தேரின் பேர் அரவம் கேட்டான். 17

10. பொன்றுதல் - இறத்தல்; 12. தொடர்ந்து - அடைந்து; எல்லி - இரவு; வல்லியம் - புலி; 13. நல்லவா - நல்லனவாக; 15. பிரிகலம் - பிரிய மாட்டோம்; 16. இரைத்தவர் - அரற்றினவர்.

குன்று இடை நெரிதர, வடவரையின்
　　குவடு உருள்குவது என முடுகுதொறும்,
பொன் திணி கொடியினது, இடி உருமின்
　　அதிர் குரல் முரல்வது, புனை மணியின்
மின் திரள் சுடரது, கடல் பருகும்
　　வடவனல் வெளி உற வருவது எனச்
சென்றது, திசை திசை உலகு இரிய,—
　　திரி புவனமும் உறு தனி இரதம். 18

கடல் மறுகிட, உலகு உலைய, நெடுங்
　　கரி இரிதர, எதிர் கவி குலமும்
குடர் மறுகிட, மலை குலைய, நிலம்
　　குழியொடு கிழிபட, வழி படரும்
இடம் மறுகிய பொடி முடுகிடவும்,
　　இருள் உளது என எழும் இகல் அரவின்
படம் மறுகிட, எதிர் விரவியது—அவ்
　　இருள் பகல் உற வரு பகை இரதம். 19

இந்திரசித்தும் இலக்குவனும் பொருதல்

ஆர்த்தது நிருதர்தம் அனிகம்; உடன்,
　　அமரரும் வெருவினர்; கவி குலமும்
வேர்த்தது, வெருவலொடு அலம்வரலால்;
　　விடு கணை சிதறினன், அடு தொழிலோன்;
தீர்த்தனும், அவன் எதிர் முடுகி, நெடுந்
　　திசை செவிடு எறிதர, விசை கெழு திண்
போர்த் தொழில் புரிதலும், உலகு கடும்
　　புகையொடு சிகை அனல் பொதுளியதால். 20

'இந்திரசித்தை உடனே கொல்க' என வீடணன் இலக்குவனுக்கு உரைத்தல்

வீடணன் அமலனை, 'விறல் கெழு போர்
　　விடலையை இனி இடை விடல் உளதேல்,
சூடலை, துறு மலர் வாகை' எனத்
　　தொழுதனன்; அவ் அளவில் அழகனும் அக்
கோடு அணை வரி சிலை உலகு உலைய,
　　குல வரை பிதிர்பட, நிலவரையில்
சேடனும் வெருவுற, உரும் உறழ் திண்
　　தெறு கணை முறை முறை சிதறினனால். 21

18. பொன் திணி - பொற்கம்பம்; 19. இருள் உளது என எழும் அரவு - இரவின் (இருளுக்கு மேலும்) இருள் உள்ளது என்னுமாறு நஞ்சு கக்கிக் கொண்டு எழும் ஆதிசேடனாகிய பாம்பு; 20. அனிகம் - சேனை; அலம்வரல் - வருந்துதல்; 21. தெறு கணை - அழிக்கும் அம்பு.

ஆயிர அளவின அயில் முக வாய்
அடு கணை அவன் விட, இவன் விட, அத்
தீயினும் எரிவன உயிர் பருக,
சிதறின கவிகளொடு இன நிருதர்,
போயின போயின திசை நிறையப்
புரள்பவர் முடிவு இலர்; பொரு திறலோர்
ஏயின, ஒருவரை ஒருவர் குறித்து,
எரி கணை, இரு மழை பொழிவனபோல். 22

அற்றன, அனல் விழி நிருதன் வழங்கு
அடு கணை இடை இடை; அடல் அரியின்
கொற்றவன் விடு கணை முடுகி, அவன்
உடல் பொதி குருதிகள் பருகின கொண்டு
உற்றன; ஒளி கிளர் கவசம் நுழைந்து
உறுகில; தெறுகில அனுமன் உடல்;
புற்றிடை அரவு என நுழைய, நெடும்
பொரு சரம் அவன் அவை உணர்கிலனால். 23

ஆயிடை, இளையவன், விடம் அனையான்
அவன் இடு கவசமும் அழிவுபட,
தூயினன், அயில் முக விசிகம்; நெடுந்
துளைபட, விழி கனல் சொரிய, முனிந்து,
ஏயின நிருதனது எரி கணைதான்
இடன் இல படுவன இடை இடை வந்து
ஒய்வுறுவன; அது தெரிவுறலால்,
உரறினர் இமையவர், உவகையினால். 24

'வில்லினின் வலி தரல் அரிது' எனலால்,
வெயிலினும் அனல் உமிழ் அயில், 'விரைவில்
செல்' என, மிடல் கொடு கடவினன்; மற்று
அது திசைமுகன் மகன் உதவியதால்;
எல்லினும் வெளி பட எதிர்வது கண்டு,
இளையவன் எழு வகை முனிவர்கள்தம்
சொல்லினும் வலியது ஓர் சுடு கணையால்,
நடு இரு துணிபட உரறினனால். 25

24. இடன் படுவன இல - குறித்த இடத்திலே படுதல் இல்லாதன; 25. திசை முகன் மகன் - பிரமன் மகனாகிய சிவன்; எல் - பகற்பொழுது; எழு வகை முனிவர் - அத்திரி, பிருகு, குச்சன், வசிட்டன், கௌதமன், காசியபன், ஆங்கிரீசன் என்பார்.

ஆணியின் நிலையன விசிகம் நுழைந்து,
ஆயிரம் உடல் புக, அழிபடு செஞ்
சோணிதம் நிலம் உற, உலறிடவும்,
தொடு கணை விடுவன மிடல் கெழு திண்
பாணிகள் கடுகின முடுகிடலும்,
பகலவன் மருமகன், அடு கணை வன்
தூணியை உரும் உறழ் பகழிகளால்
துணிபட, முறை முறை சிதறினனால். 26

'தேர் உளது எனின், இவன் வலி தொலையான்'
எனும் அது தெரிவுற, உணர் உறுவான்,
'போர் உறு புரவிகள் படுகிலவால்;
புனை பிணி துணிகில, பொரு கணையால்;
சீரிது, பெரிது, இதன் நிலைமை' எனத்
தெரிபவன் ஒரு சுடு தெறு கணையால்,
சாரதி மலை புரை தலையை நெடுந்
தரையிடை இடுதலும், முறை திரிய, 27

உய் வினை ஒருவன் தூண்டாது உலத்தலின், தவத்தை நண்ணி,
அய்வினை நலிய, நைவான் அறிவிற்கும் உவமை ஆகி
மெய் வினை அமைந்த காமம் விற்கின்ற விரகின் தோலாப்
பொய் வினை மகளிர் கற்பும் போன்றது—அப் பொலம் பொன் திண் தேர்.

துள்ளு பாய் புரவித் தேரும் முறை முறை தானே தூண்டி,
அள்ளினன் பறிக்கும் தன் பேர் ஆகமே ஆவம் ஆக,
வள்ளல்மேல், அனுமன் தன்மேல், மற்றையோர் மல் திண் தோள்மேல்,
உள்ளுறப் பகழி தூவி, ஆர்த்தனன், எவரும் உட்க. 29

இந்திரசித்தின் வீரம் கண்டு, தேவரும் இலக்குவனும் வியத்தல்

'வீரர் என்பார்கட்கு எல்லாம் முன் நிற்கும் வீரர் வீரன்;
பேரர் என்பார்கள் ஆகும் பெற்றியின் பெற்றித்து ஆமே?
சூரர் என்று உரைக்கற்பாலார், துஞ்சும் போது உணர்வின் சோராத்
தீரர்' என்று அமரர் செப்பி, சிந்தினர், தெய்வப் பொற் பூ. 30

26. சோணிதம் - இரத்தம்; பாணி - கை, திசைச்சொல்; 28. உய் வினை- தேரைச் செலுத்தும் செயல்; அய் வினை - ஐம்புலன்கள், ஈண்டு ஐம்பொறி; மெய்வினை அமைந்த காமம் - உடம்பின் செயலாக மட்டும் அமைந்த காம நுகர்ச்சி; பாகன் அற்றதனால் ஒருநிலைப்படாத தேருக்கு, தவத்தைத் தொடங்கிச் செய்தும் ஐம்பொறிகளை அடக்கமாட்டாதவனுடைய மனமும் விலைமகளின் கற்பும் உவமை.

'எய்த வன் பகழி எல்லாம் பறித்து, இவன் என்மேல் எய்யும்;
கய் தடுமாறாது; உள்ளம் உயிர் இனம் கலங்கா; யாக்கை
மொய் கணை கோடி கோடி மொய்க்கவும், இளைப்பு ஒன்று இல்லான்;'
அய்யனும், 'இவனோடு எஞ்சும் ஆண்தொழில் ஆற்றல்' என்றான். 31

இந்திரசித்தன் இரவில் இறவான் என இலக்குவனுக்கு வீடணன் இயம்புதல்

'தேரினைக் கடாவி, வானில் செல்லினும் செல்லும்; செய்யும்
போரினைக் கடந்து, மாயம் புணர்க்கினும் புணர்க்கும்; போய் அக்
காரினைக் கடந்தும் வஞ்சம் கருதினும் கருதும்; காண்டி,
வீர! மெய்; பகலின் அல்லால், விளிகிலன் இருளின், வெய்யோன்.' 32

என்று எடுத்து இலங்கை வேந்தற்கு இளையவன் இயம்ப, 'இன்னே
பொன்றுவது அல்லால், அப்பால் இனி ஒரு போக்கும் உண்டோ?
சென்றுழிச் செல்லும் அன்றே தெறு கணை; வலியின் தீர்ந்தான்;
வென்றி இப்போதே கோடும்; காண்' என விளம்பும் எல்லை, 33

செம் புனல் சோரிச் செக்கர் திசை உறச் செறிகையாலும்,
அம்பு என உற்ற கொற்றத்து ஆயிரம் கதிர்களாலும்,
வெம்பு பொன் தேரில் தோன்றும் சிறப்பினும், அரக்கன் மெய்யோடு
உம்பரில் செல்கின்றான் ஒத்து, உதித்தனன், அருக்கன் உப்பால்.

விடிந்தது பொழுதும்; வெய்யோன் விளங்கினன், உலகம் மீதாய்;
இடுஞ் சுடர் விளக்கம் என்ன அரக்கரின் இருளும் வீய,
'கொடுஞ் சின மாயச் செய்கை வலியொடும் குறைந்து குன்ற,
முடிந்தனன், அரக்கன்' என்னா, முழங்கினர், உம்பர் முற்றும்.

'சிவன் ஈந்த தேரும் சிலையும் இருக்கும்வரை அழியான்' என வீடணன் குறிப்பித்தல்

'ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த
தேர் அழியாத போதும், சிலை கரத்து இருந்த போதும்,
போர் அழியான், இவ் வெய்யோன்; புகழ் அழியாத பொன்–தோள்
வீர! இது ஆணை' என்றான்—வீடணன், விளைவது ஓர்வான். 36

31. அய்யன் - ஐயன், உயர்ந்தோனாகிய இலக்குவன்; 36. ஆர் அழியாத சூலம் - கூர்மை கெடாத சூலப்படை; ஆர் - கூர்மை, இலை என்பாரும் உண்டு.

இலக்குவன் இந்திரசித்தின் தேரைச் சிதைக்க, அவன் விண்ணில் மறைந்து ஆரவாரித்தல்

'பச்சை வெம் புரவி வீயா; பல்லியச் சில்லி பாரில்
நிச்சயம் அற்று நீங்கா' என்பது நினைந்து, வில்லின்
விச்சையின் கணவன் ஆனான், வின்மையால், வயிரம் இட்ட
அச்சினோடு ஆழி வெவ்வேறு ஆக்கினான், ஆணி நீக்கி. 37

மணி நெடுந் தேரின் கட்டு விட்டு, அது மறிதலோடும்,
அணி நெடும் புரவி எல்லாம் ஆற்றல ஆய அன்றே—
திணி நெடு மரம் ஒன்று, ஆழி வாள் மழுத் தாக்க, சிந்திப்
பணை நெடு முதலும் நீங்க, பாங்கு உறை பறவை போல. 38

அழிந்த தேர்த் தட்டின்நின்றும் அங்குள்ள படைகள் அள்ளிப்
பொழிந்தனன்; இளைய வீரன் கணைகளால் துணித்துப் போக்க,
மொழிந்து இருவகையில் விண்ணை முட்டினான், உலகம் மூன்றும்
கிழிந்தன என்ன ஆர்த்தான்; கண்டிலர், ஓசை கேட்டார். 39

இந்திரசித்தன் – இலக்குவன் போர்

மல்லின் மா மாரி அன்ன தோளினான், மழையின் வாய்ந்த
கல்லின் மா மாரி, பெற்ற வரத்தினால், சொரியுங்காலை,
செல்லும் வான் திசைகள் ஓரார், சிரத்தினோடு உடல்கள் சிந்தப்
புல்லினார் நிலத்தை, நின்ற வானர வீரர், போகார். 40

காண்கிலன், கல்லின் மாரி அல்லது, காளை வீரன்,
சேண் கலந்து ஒளித்து நின்ற செய்கையால், திசைகள் எங்கும்
மாண் கலந்து அளந்த மாயன் வடிவு என, முழுதும் வௌவ,
ஏண் கலந்து அமைந்த வாளி ஏவினான், இடைவிடாமல். 41

மறைந்தன திசைகள் எங்கும்; மாறு போய் மலையும் ஆற்றல்
குறைந்தனன்; இருண்ட மேகக் குழாத்திடைக் குருதிக் கொண்மூ
உறைந்துளது என்ன நின்றான் உருவினை, உலகம் எல்லாம்
நிறைந்தவன் கண்டான்; காணா, இனையது ஓர் நினைவது ஆனான்:

'சிலை அருது எனினும், மற்று அத் திண்ணியோன் திரண்ட தோளாம்
மலை அருது ஒழியாது' என்னா, வரி சிலை ஒன்று வாங்கி,
கலை அருத் திங்கள் அன்ன வாளியால், கையைக் கொய்தான்—
விலை அரு மணிப் பூணோடும், வில்லொடும், நிலத்து வீழ. 43

37. விச்சை - வித்தை, கல்வி; கணவன் - தலைவன்; ஆணி - கடையாணி;
38. ஆழிவாள் மழு - சக்கரப்படை போன்று கூர்மையுடைய கோடாலி;
42. மாறு போய் - எதிராகச் சென்று.

பாக வான் பிறைபோல் வெவ் வாய்ச் சுடு கணை படுதலோடும்,
வேக வான் கொடுங் கால் எற்ற முற்றும் போய் விளியும் நாளில்,—
மாக வான் தடக் கை மண்மேல் விழுந்தது மணிப் பூண் மின்ன—
மேகம் ஆகாயத்து இட்ட வில்லொடும் வீழ்ந்தது என்ன. 44

படித்தலம் சுமந்த நாகம் பாக வான் பிறையைப் பற்றிக்
கடித்தது போல, கோல விரல்களால் இறுகக் கட்டிப்
பிடித்த வெஞ் சிலையினோடும், பேர் எழில் வீரன் பொன்-தோள்
துடித்தது,—மரமும் கல்லும் துகள் பட, குரங்கும் துஞ்ச. 45

அந்தரம்அதனில் நின்ற வானவர், 'அருக்கன் வீழா,
சந்திரன் வீழா, மேரு மால் வரை தகர்ந்து வீழா,
இந்திரசித்தின் பொன்-தோள் இற்று இடைவிழுந்தது என்றால்,
எந்திரம் அனைய வாழ்க்கை இனிச் சிலர் உகந்து என்?' என்றார்.

மொய் அற மூர்த்தி அன்ன மொய்ம்பினன் அம்பினால், அப்
பொய் அறச் சிறிது என்று எண்ணும் பெருமையான் புதல்வன், பூத்த
மை அறக் கரிது என்று எண்ணும் மனத்தினான், வயிரம் அன்ன,
கை அற, தலை அற்றார் போல் கலங்கினார், நிருதர் கண்டார்.

அன்னது நிகழும் வேலை, ஆர்த்து எழுந்து, அரியின் வெள்ளம்
மின் எயிற்று அரக்கர் சேனை யாவரும் மீளாவண்ணம்,
கொல் நகக் கரத்தால், பல்லால்; மரங்களால், மானக் குன்றால்,
பொன் நெடு நாட்டை எல்லாம் புதுக் குடி ஏற்றிற்று அன்றே.

காலம் கொண்டு எழுந்த மேகக் கருமையான், 'செம்மை காட்டும்
ஆலம் கொண்டு இருண்ட கண்டத்து அமரர்கோன் அருளின் பெற்ற
சூலம் கொண்டு எறிவல்' என்று தோன்றினான், 'பகையின் தோற்ற
மூலம் கொண்டு உணரா நின்னை முடித்து அன்றி முடியேன்' என்றான்.

காற்று என, உரும்ஏறு என்ன, கனல் என, கடை நாள் உற்ற
கூற்றம் ஓர் சூலம் கொண்டு குறுகியது என்ன, கொல்வான்
தோற்றினன்; அதனைக் காணா, 'இனி, தலை துணிக்கும் காலம்
ஏற்றது' என்று, அயோத்தி வேந்தற்கு இளையவன் இதனைச் செய்தான்.

இலக்குவன் பிறை முக அம்பு எய்து, இந்திரசித்தின் தலையை அறுத்தல்

'மறைகளே தேறத் தக்க, வேதியர் வணங்கற்பால,
இறையவன் இராமன் என்னும் நல் அற மூர்த்திஎன்னின்,
பிறை எயிற்று இவனைக் கோறி' என்று, ஒரு பிறை வாய் வாளி
நிறை உற வாங்கி விட்டான்—உலகு எலாம் நிறுத்தி நின்றான்.

46. எந்திரம் அனைய வாழ்க்கை - தேர்ச் சக்கரம் போன்று மாறிமாறிச் செல்லும் உயிர்வாழ்க்கை; 48. மானக் குன்று - பெரிய குன்று; 49. காலம் கொண்டு - கார்காலத்து நீரைக்கொண்டு; தோற்ற மூலம் - பிறப்பு வரலாறு.

நேமியும், குலிச வேலும், நெற்றியின் நெருப்புக் கண்ணன்
நாம வேல்தானும், மற்றை நான்முகன் படையும், நாண,
தீ முகம் கதுவ ஓடிச் சென்று, அவன் சிரத்தைத் தள்ளி,
பூ மழை அமரர் சிந்த, பொலிந்தது—அப் பகழிப் புத்தேள். 52

அற்றவன் தலைமீது ஓங்கி, அண்டம் உற்று அணுகாமுன்னம்,
பற்றிய சூலத்தோடும், உடல் நிறை பகழியோடும்,
எற்றிய காலக் காற்றால், மின்னொடும் இடியினோடும்
சுற்றிய புயல் வீழ்ந்தென்ன, வீழ்ந்தது, சோரன் யாக்கை. 53

விண்தலத்து இலங்கு திங்கள் இரண்டொடும், மின்னு வீசும்
குண்டலத் துணைகளோடும், கொந்தளக் குஞ்சிச் செங் கேழ்ச்
சண்ட வெங் கதிரின் கற்றைத் தழையொடும், இரவிதான் அம்
மண்டலம் வீழ்ந்தது என்ன, வீழ்ந்தது, தலையும் மண்மேல். 54

உயிர் புறத்து உற்ற காலை, உள் நின்ற உணர்வினோடும்,
செயிர் அறு பொறியும் அந்தக்கரணமும் சிந்துமாபோல்,
அயில் எயிற்று அரக்கர் உள்ளார், ஆற்றலர் ஆகி, ஆன்ற
எயிலுடை இலங்கை நோக்கி, இரிந்தனர், படையும் விட்டார்.

வில்லாளர் ஆனார்க்கு எல்லாம் மேலவன் விளிதலோடும்,
'செல்லாது, அவ் இலங்கை வேந்தற்கு அரசு' எனக் களித்த தேவர்
எல்லாரும், தூசு நீக்கி ஏறிட ஆர்த்த போது,
கொல்லாத விரதத்தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார். 56

வரம் தரு முதல்வன், மற்றை மான் மறிக் கரத்து வள்ளல்,
புரந்தரன், முதல்வர் ஆய நான்மறைப் புலவர், பாரில்
நிரந்தரம் தோன்றி நின்றார்; அருளினால் நிறைந்த நெஞ்சர்
கரந்திலர்; அவரை யாக்கை கண்டன, குரங்கும், கண்ணால். 57

'அறம் தலை நின்றார்க்கு இல்லை அழிவு' எனும் அறிஞர் வார்த்தை
சிறந்தது—சரங்கள் பாயச் சிந்திய சிரத்த ஆகி,
பறந்தலைஅதனில் மற்று அப் பாதக அரக்கன் கொல்ல,
இறந்தன கவிகள் எல்லாம் எழுந்தன, இமையோர் ஏத்த. 58

52. நாம வேல் - அஞ்சத்தக்க சூல வேல்; 53. சோரன் - திருடன், இந்திரசித்தன்; 54. கொந்தளக் குஞ்சி - சுருண்ட குடுமி; கதிரின் தாழை கற்றை எனக் கூட்டுக; 55. சிந்துமாபோல் - அழிவது போல; 56. தூசு - தம் அரையில் உடுத்திருந்த ஆடை; கொல்லாத விரதத்தார் - அருக சமயத்தவர்; 57. முதல்வன் - திருமால்.

இந்திரசித்தின் தலையை ஏந்தி, அங்கதன் முன் செல்ல, இலக்குவன் பின் செல்லுதல்

ஆக்கையின்நின்று வீழ்ந்த அரக்கன்தன் தலையை அம் கை
தூக்கினன், உள்ளம் கூர்ந்த வாலி சேய் தூசி செல்ல,
மேக்கு உயர்ந்து அமரர் வெள்ளம் அள்ளியே தொடர்ந்து வீசும்
பூக் கிளர் பந்தர் நீழல், அனுமன்மேல் இளவல் போனான். 59

வீங்கிய தோளன், தேய்ந்து மெலிகின்ற பழியன், மீதுற்று
ஓங்கிய முடியன், திங்கள் ஒளி பெறு முகத்தன், உள்ளால்
வாங்கிய துயரன், மீப் போய் வளர்கின்ற புகழன், வந்துற்று
ஓங்கிய உவகையாளன், இந்திரன், உரைப்பதானான்: 60

' ''எல்லி வான் மதியின் உற்ற கறை என, என் மேல் வந்து
புல்லிய வடுவும் போகாது'' என்று அகம் புலம்புகின்றேன்,
வில்லியர் ஒருவர் நல்க, துடைத்துறும் வெறுமை தீர்ந்தேன்;
செல்வமும் பெறுதற்கு உண்டோ குறை? இனி, சிறுமை யாதோ? 61

தென்தலை ஆழி தொட்டோன் சேய் அருள் சிறுவன் செம்மல்,
வென்று அலைத்து என்னை ஆர்த்துப் போர்த் தொழில் கடந்த வெய்யோன்,
தன் தலை எடுப்பக் கண்டு, தானவர் தலைகள் சாய,
என் தலை உடுக்கலானேன்; இனிக் குடை எடுப்பென்' என்றான்.

வரதன், போய் மறுகாநின்ற மனத்தினன், 'மாயத்தோனைச்
சரதம் போர் வென்று மீளும், தருமமே தாங்க' என்பான்,
விரதம் பூண்டு, உயிரினோடும் தன்னுடை மீட்சி நோக்கும்
பரதன் போன்று இருந்தான், தம்பி வருகின்ற பரிசு பார்த்தான். 63

வன் புலம் கடந்து மீளும் தம்பிமேல் வைத்த மாலைத்
தன் புல நயனம் என்னும் தாமரை சொரியும் தாரை,
அன்புகொல்? அழு கணீர்கொல்? ஆனந்த வாரியேகொல்?
என்புகள் உருகிச் சோரும் கருணைகொல்? யார், அது ஓர்வார்?

இராமன் திருவடிகளில் இந்திரசித்தின் தலையை வைக்க, அவன் களிப்புக் கொள்ளுதல்

விழுந்து அழி கண்ணின் நீரும், உவகையும், களிப்பும், வீங்க,
எழுந்து எதிர் வந்த வீரன் இணை அடி முன்னர் இட்டான்—
கொழுந்து எழும் செக்கர்க் கற்றை வெயில் விட, எயிற்றின் கூட்டம்
அழுந்துற, மடித்த பேழ் வாய்த் தலை அடியுறை ஒன்று ஆக. 65

59. உள்ளம் கூர்தல் - மனமகிழ்ச்சி மிகுதல்; தூசி - முன்னணி; மேக்கு - மேலிடம், விண்; 62. தென்தலை ஆழி தொட்டோன் - தெற்குத் திசையில் ஆணைச் சக்கரம் செலுத்தியவன், இராவணன்; குடை எடுத்தல் - வெற்றி பெற்றதற்கு அடையாளமாக வெண்கொற்றக் குடையைப் பிடித்தல்; 63. சரதம் - நிச்சயம்; 64. வன் புலம் - வலிதாகிய பகைப் புலம்; தாமரை மாலை சொரியும் தாரை என இயையும்.

தலையினை நோக்கும்; தம்பி கொற்றவை தழீஇய பொன் தோள்
மலையினை நோக்கும்; நின்ற மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர் செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன், களிப்புக் கொண்டான்.

காள மேகத்தைச் செக்கர் கலந்தென, கரிய குன்றில்
நாள் வெயில் பரந்தது என்ன, நம்பிதன் தம்பி மார்பில்
தோளின்மேல் உதிரச் செங் கேழ்ச் சுவடு தன் உருவில் தோன்ற,
தாளின்மேல் வணங்கினனைத் தழுவினன், தனித்து ஒன்று இல்லான்.

'கம்ப மதத்துக் களி யானைக் காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் இனிவந்து குறுகினள் என்று அகம் குளிர்ந்தேன்;
வம்பு செறிந்த மலர்க் கோயில் மறையோன் படைத்த மா நிலத்தில்,
"தம்பி உடையான் பகை அஞ்சான்" என்னும் மாற்றம் தந்தனையால்.*

தூக்கிய தூணி வாங்கி, தோளொடு மார்பைச் சுற்றி
வீக்கிய கவச பாசம் ஒழித்து, அது விரைவின் நீக்கி,
தாக்கிய பகழிக் கூர் வாய் தடிந்த புண் தழும்பும் இன்றிப்
போக்கினன்—தழுவிப் பல்கால், பொன் தடந் தோளின் ஒற்றி.

வீடணனை இராமன் புகழ்ந்து பேசி, இனிது இருத்தல்

'ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி, ஈது' என விளம்பி மெய்ம்மை,
ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன், இனிதின், இப்பால்.

28 இராவணன் சோகப் படலம்

தூதர் இராவணனுக்கு இந்திரசித்து இறந்தமை தெரிவித்தல்

ஓத ரோதன வேலை கடந்துளார்,
பூதரோதரம் புக்கென, போர்த்து இழி
சீதரோதக் குருதித் திரை ஓரீஇ,
தூதர் ஓடினர், தாதையின் சொல்லுவார். 1

68. கம்பம் - கட்டுத்தறி, அசைந்தாடுதல் எனினும் ஆம்; வம்பு - மணம்; 69. கவச பாசம் - கவசத்தின் கயிறு; 70. சேடன் - சிரேட்டன், உயர்ந்த பண்பினன்.

28: 1. ரோதன ஓத வேலை - அழுகையாகிய அலை கடல்; பூதரோதரம் - பூதர உதரம், மலையின் வயிறு; சீதரோதக் குருதித் திரை - குளிர்ச்சியையும் கரையையும் உடைய இரத்தக் கடல்.

அன்றில் அம் கரும் பேடைகள் ஆம் என,
முன்றில் எங்கும் அரக்கியர் மொய்த்து அழ,
'இன்று இலங்கை அழிந்தது' என்று ஏங்குவார்,
சென்று, இலங்கு அயில் தாதையைச் சேர்ந்துளார். 2

பல்லும் வாயும் மனமும் தம் பாதமும்
நல் உயிர்ப் பொறையோடு நடுங்குவார்,—
'இல்லை ஆயினன், உன் மகன் இன்று' எனச்
சொல்லினர்—பயம் சுற்றத் துளங்குவார். 3

மாடு இருந்த வர மாதவர், வானவர்,
ஆடல் நுண் இடையார் மற்றும் யாவரும்,
'வீடும், இன்று, இவ் உலகு' என விம்முவார்,
ஓடி, எங்கணும் சிந்தி ஒளித்தனர். 4

தூதரை இராவணன் வாளால் வீசுதல்

சுடர்க் கொழும் புகை தீ விழி தூண்டிட,
தடற்று வாள் உருவி, தரும் தூதரை
மிடற்று வீசல் உறு, விழுந்தான்அரோ—
கடல் பெருந் திரைபோல் கரம் சோரவே. 5

இராவணன் புலம்பல்

'வாய்ப் பிறந்தும், உயிர்ப்பின் வளர்ந்தும், வான்
காய்ப்பு உறும்தொறும் கண்ணிடைக் காந்தியும்,
போய்ப் பிறந்து, இவ் உலகைப் பொதியும் வெந்
தீப் பிறந்துளது, இன்று' எனச் செய்ததால். 6

படம் பிறங்கிய பாந்தளும் பாரும் பேர்ந்து,
இடம் பிறங்கி, வலம்பெயர்ந்து ஈடு உற,
உடம்பு இறங்கிக் கிடந்து உழைத்து, ஓங்கு தீ
விடம் பிறந்த கடல் என வெம்பினன். 7

திருகு வெஞ் சினத் தீ நிகர் சீற்றமும்,
பெருகு காதலும், துன்பும், பிறழ்ந்திட,
இருபது என்னும் எரி புரை கண்களும்,
உருகு செம்பு என, ஓடியது ஊற்று நீர். 8

2. தாதை - (இந்திரசித்தன்) தந்தை, இராவணன்; 3. உயிர்ப் பொறை - உயிர்ப் பாரம்; 5. தடறு - உறை; 7. ஈடு - வலிமை.

கடித்த பற் குலம், கற் குலம் கண் அற
இடித்த காலத்து உரும் என எங்கணும்,
அடித்த கைத்தலம் அம் மலை, ஆழி நீர்,
வெடித்த வாய்தொறும் பொங்கின, மீச் செல. 9

'மைந்தவோ!' எனும்; 'மா மகனே!' எனும்;
'எந்தையோ!' எனும்; 'என் உயிரே!' எனும்;
'முந்தினேன் உனை; நான் உளெனோ!' எனும்;—
வெந்த புண்ணிடை வேல் பட்ட வெம்மையான். 10

'புரந்தரன் பகை போயிற்று அன்றோ!' எனும்;
'அரந்தை வானவர் ஆர்த்தனரோ!' எனும்;
'கரந்தை சூடியும், பாற்கடல் கள்வனும்,
நிரந்தரம் பகை நீங்கினரோ!' எனும். 11

'நீறு பூசியும் நேமியும் நீங்கினர்,
மாறு குன்றொடு வேலை மறைந்துளார்,
ஊறு நீங்கினராய், உவணத்தினோடு
ஏறும் ஏறி, உலாவுவார்' என்னுமால்.* 12

'வான மானமும், வானவர் ஈட்டமும்,
போன போன திசை இடம் புக்கன,
தானம் ஆனவை சார்கில; சார்குவது,
ஊன மானிடர் வென்றிகொண்டோ?' எனும். 13

'கெட்ட தூதர் கிளத்தினவாறு ஒரு
கட்ட மானிடன் கொல்ல, என் காதலன்
பட்டு ஒழிந்தனனே!' எனும்; பல் முறை
விட்டு அழைக்கும்; உழைக்கும்; வெதும்புமால். 14

எழும்; இருக்கும்; இரைக்கும்; இரக்கம் உற்று
அழும்; அரற்றும்; அயர்க்கும்; வியர்க்கும், போய்
விழும்; விழிக்கும்; முகிழ்க்கும்; தன் மேனியால்,
உழும் நிலத்தை; உருளும்; புரளுமால். 15

'அய்யனே!' எனும், ஓர் தலை; 'யான் இனம்
செய்வெனே அரசு!' என்னும், அங்கு ஓர் தலை;
'கய்யனேன், உனைக் காட்டிக் கொடுத்த நான்,
உய்வெனே!' என்று உரைக்கும், அங்கு ஓர் தலை. 16

9. கற் குலம் - மலைக்கூட்டம்; 11. கரந்தை சூடி - கரந்தையை அணிந்த சிவன்; 13. தானம் - இருப்பிடம்; 14. கட்ட மானிடன் - வருத்தம் மிக்க மானிடன்; 15. இரைத்தல் - பெருமூச்சுவிடுதல்; 16. கய்யன் - கீழ்மகன்.

‘எழுவின் கோலம் எழுதிய தோள்களால்
தழுவிக் கொள்கலையோ!’ எனும், ஓர் தலை;
‘உழுவைப் போத்தை உழை உயிர் உண்பதே!
செழு வில் சேவகனே!’ எனும், ஓர் தலை. 17

‘நீலம் காட்டிய கண்டனும், நேமியும்,
ஏலும் காட்டின் எறிந்த படை எலாம்
தோலும் காட்டி, துரந்தனை; மீண்டும் நின்
ஓலம் காட்டிலையோ!’ எனும், ஓர் தலை.* 18

‘துஞ்சினுய்கொல், துணை பிரிந்தேன்’ எனும்;
‘வஞ்சமோ!’ எனும்; ‘வாரலையோ!’ எனும்;
‘நெஞ்சு நோவ, நெடுந் தனியே கிடந்து,
அஞ்சினேன்!’ என்று அரற்றும்;—அங்கு ஓர் தலை.* 19

‘காகம் ஆடு களத்திடைக் காண்பெனே,
யாகசாதனன் மௌலியொடும் பொறித்து
ஓகை மாதவர் உச்சியின் வைத்த நின்
வாகை நாள்மலர்?’ என்னும்—மற்று ஓர் தலை. 20

‘சேல் இயல் கண் இயக்கர்தம் தேவிமார்,
மேல் இனித் தவிர்கிற்பர்கொல், வீர! நின்
கோல வில் குரல் கேட்டுக் குலுங்கித் தம்
தாலியைத் தொடல்’ என்னும்—மற்று ஓர் தலை. 21

‘கூற்றம் உன் எதிர் வந்து, உயிர் கொள்வது ஓர்
ஊற்றம்தான் உடைத்து அன்று; எனையும் ஒளித்து
ஏற்ற எவ் உலகு உற்றனை? எல்லை இல்
ஆற்றலாய்!’ என்று உரைக்கும்—அங்கு ஓர் தலை. 22

இராவணன், மைந்தன் உடலைத் தேடிக் களம் புகுதல்

இன்னவாறு அழைத்து ஏங்குகின்றான் எழுந்து,
உன்னும் மாத்திரத்து ஓடினன், ஊழி நாள்
பொன்னின் வான் அன்ன போர்க்களம் புக்கனன்,
நன் மகன்தனது ஆக்கையை நாடுவான். 23

17. உழுவைப் போத்தை - ஆண்புலி; உழை - பெண்மான்; 18. ஏலும் - பொருந்திய; தோல் - தோல்வி; கேடகம் எனலும் ஆம்; ஓலம் - குரல்; 20. யாகசாதனன் - யாகத்தால் பதவி அடைந்தவன், இந்திரன்; ஓகை - உவகை; 22. எனையும் ஒளித்து - எனக்குத் தெரியாமல் மறைந்து.

தேவரே முதலாகிய சேவகர்
யாவரும் உடனே தொடர்ந்து ஏகினர்,
'மூவகைப் பேர் உலகின் முறைமையும்
ஏவது ஆகும்?' என்று எண்ணி இரங்குவார். 24

அழுதவால் சில; அன்பின போன்று, அடி
தொழுதவால் சில; தூங்கினவால் சில;
உழுத யானைப் பிணம் புக்கு ஒளித்தவால்—
கழுதும் புள்ளும், அரக்கனைக் காண்டலும்.* 25

கோடி கோடிக் குதிரையின் கூட்டமும்,
ஆடல் வென்றி அரக்கர்தம் ஆக்கையும்,
ஓடை யானையும், தேரும், உருட்டினன்,
நாடினன், தன் மகன் உடல், நாள் எலாம்.* 26

மெய் கிடந்த விழி வழி நீர் விழ,
நெய் கிடந்த கனல் புரை நெஞ்சினன்,
மொய் கிடந்த சிலையொடு மூரி மாக்
கய் கிடந்தது கண்டனன், கண்களால். 27

பொங்கு தோள்வளையும் கணைப் புட்டிலோடு
அங்கதங்களும் அம்பும் இலங்கிட,
வெங் கண் நாகம் எனப் பொலி வெய்ய கை
செங் கையால் எடுத்தான், சிரம் சேர்த்தினன். 28

கல் திண் மார்பில் தழுவும்; கழுத்தினில்
சுற்றும்; சென்னியில் சூட்டும்; சுழல் கணோடு
ஒற்றும்; மோந்திட்டு உருகும்; உளைக்குமால்;
முற்றும் நாளின் விடும் நெடு மூச்சினன். 29

கை கண்டான், பின் கருங் கடல் கண்டென,
மெய் கண்டான், அதன்மேல் விழுந்தான்அரோ—
பெய் கண் தாரை அருவிப் பெருந் திரை,
மொய் கண்டார் திரை வேலையை மூடவே. 30

அப்பு மாரி அழுந்திய மார்பைத் தன்
அப்பு மாரி அழுது இழி யாக்கையின்
அப்பும்; மார்பில் அணைக்கும்; அரற்றுமால்;
அப் புமான் உற்றது யாவர் உற்றார்அரோ! 31

24. சேவகர் - பணியாளர்;　25. கழுது - பேய்;　28. அங்கதங்கள் - வாகுவலயம், தோள் வளை; 29. முற்றும் நாள் - இறக்கும் நாள்; 31. புமான் - ஆடவன், ஈண்டு ஆண்மையுள்ள இராவணன்.

பறிக்கும், மார்பின் பகழியை; பல் முறை
முறிக்கும்; மூர்ச்சிக்கும்; மோக்கும்; முயங்குமால்;
'எறிக்கும் வெங் கதிரோடு உலகு ஏழையும்
கறிக்கும், வாயில் இட்டு, இன்று' எனக் காந்துமால். 32

தேவரோடு முனிவரும், சீரியோர்
ஏவரோடும், இடம் இன்றி நின்றவன்—
'மூவரோடும், உலகு ஒரு மூன்றொடும்
போவதேகொல், முனிவு?' எனும் பொம்மலான். 33

இந்திரசித்தின் தலை காணாது, இராவணன் அரற்றுதல்

கண்டிலன் தலை; 'காந்தி, அம் மானிடன்
கொண்டு இறந்தனன்' என்பது கொண்டவன்,
புண் திறந்தன நெஞ்சன், பொருமலன்,
விண் திறந்திட, விம்மி, அரற்றினான்: 34

'நிலையின் மாதிரத்து நின்ற யானையும், நெற்றிக் கண்ணன்
மலையுமே, எளியவோ, நான் பறித்தற்கு? மறு இல் மைந்தன்
தலையும் ஆர் உயிரும் கொண்டார்அவர் உடலோடும் தங்க,
புலையனேன் இன்னும் ஆவி சுமக்கின்றேன் போலும் போலும்!

'எரி உண அளகை மூதூர், இந்திரன் இருக்கை எல்லாம்
பொரி உவை, உலகம் மூன்றும் பொது அறப் புரந்தேன் போலாம்!
அரி உணும் அலங்கல் மௌலி இழந்த என் மதலை யாக்கை
நரி உணக் கண்டேன்; ஊணின், நாய் உணும் உணவு நன்றால்!

'பூண்டு, ஒரு பகைமேல் புக்கு, என் புத்திரனோடும் போனார்
மீண்டிலர் விளிந்து வீழ்ந்தார்; விரதியர் இருவரோடும்
ஆண்டு உள குரங்கும், ஒன்றும் அமர்க் களத்து, ஆரும் இன்னும்
மாண்டிலர்; இனி மற்று உண்டோ, இராவணன் வீர வாழ்க்கை?

'கந்தர்ப்பர், இயக்கர், சித்தர், அரக்கர்தம் கன்னிமார்கள்,
சிந்து ஒக்கும் சொல்லினார், உன் தேவியர், திருவின் நல்லார், [தால்,
வந்து உற்று, 'எம் கணவன்தன்னைக் காட்டு' என்று, மருங்கில் வீழ்ந்
அந்து ஒக்க அரற்றவோ, நான் கூற்றையும் ஆடல் கொண்டேன்!* 38

32. கறித்தல் - கடித்தல்; 33. பொம்மல் - மிகுதி; ஈண்டுச் சீற்ற மிகுதி;
36. அரி - வண்டு; ஊணின் - (யான் உண்ணும்) உணவைக் காட்டிலும்,
38. சிந்து - பண்; அந்து - அப்படி.

'சினத்தொடும் கொற்றம் முற்றி, இந்திரன் செல்வம் மேவி,
நினைத்தது முடித்து நின்றேன்; நேரிழை ஒருத்தி நீரால்,
எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம், ஏங்கி ஏங்கி,
உனக்கு நான் செய்வதானேன்! என்னின் யார் உலகத்து உள்ளார்?' 39

இந்திரசித்தின் உடலோடு இராவணன் இலங்கை புகல்

என்பன பலவும் பன்னி, எடுத்து அழைத்து, இரங்கி ஏங்கி,
அன்பினால் மகனைத் தாங்கி, அரக்கியர் அரற்றி வீழ,
பொன் புனை நகரம் புக்கான்; கண்டவர் புலம்பும் பூசல்,
ஒன்பது திக்கும், மற்றை ஒரு திக்கும், உற்றது அன்றே. 40

கண்களைச் சூல்கின்றாரும், கழுத்தினைத் தடிகின்றாரும்,
புண் கொளத் திறந்து, மார்பின் ஈருளைப் போக்குவாரும்,
பண்கள் புக்கு அலம்பும் நாவை உயிரொடு பறிக்கின்றாரும்,—
எண்களில் பெரிய ஆற்றார்—இருந் துயர் பொறுக்கல் ஆற்றார்.

மாதிரம் கடந்த திண் தோள் மைந்தன்தன் மகுடச் சென்னி
போதலைப் புரிந்த யாக்கை பொறுத்தனன் புகுதக் கண்டார்,
ஓத நீர் வேலை அன்ன கண்களால் உகுத்த வெள்ளக்
காதல் நீர் ஓடி, ஆடல் கருங் கடல் மடுத்தது அன்றே. 42

ஆவியின் இனிய காதல் அரக்கியர் முதல்வர் ஆய
தேவியர் குழாங்கள் சுற்றி, சிரத்தின்மேல் தளிர்க் கை சேர்த்தி,
ஓவியம் வீழ்ந்து வீழ்ந்து புரள்வன ஒப்ப, ஒல்லைக்
கோ இயல் கோயில் புக்கான், குருதி நீர்க் குமிழிக் கண்ணன்.

மண்டோதரி மைந்தன்மேல் வீழ்ந்து புலம்புதல்

கருங் குழல் கற்றைப் பாரம் கால் தொட, கமலப் பூவால்
குரும்பையைப் புடைக்கின்றாள்போல் கைகளால் முலைமேல் கொட்டி,
அருங் கலச் சும்மை தாங்க, 'அகல் அல்குல் அன்றி, சற்றே
மருங்குலும் உண்டு உண்டு' என்ன,—மயன் மகள்—மறுகி வந்தாள்.

தலையின்மேல் சுமந்த கையள், தழலின்மேல் மிதிக்கின்றாள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள், நேசத்தால் நிறைந்த நெஞ்சள்,
கொலையின் மேல் குறித்த வேடன் கூர்ங் கணை உயிரைக் கொள்ள,
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன, மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.*

39. நீரால் - காரணமாக; 40. நகரம் - இலங்கை நகரம்; 41. சூல்கின்றார் - தோண்டுகிறவர்கள்; ஈருள் - ஈரல்.

உயிர்த்திலள்; உணர்வும் இல்லள்; 'உயிர் இலள்கொல்லோ!' என்னப்
பெயர்த்திலள், யாக்கை; ஒன்றும் பேசலள்; விம்மி யாதும்
வியர்த்திலள்; நெடிது போது விம்மலள்; மெல்ல மெல்ல,
அயர்த்தனள் அரிதின் தேறி, வாய் திறந்து, அரற்றலுற்றாள்:

'கலையினால் திங்கள் என்ன வளர்கின்ற காலத்தே உன்,
சிலையினால் அரியை வெல்லக் காண்பது ஓர் தவம் முன் செய்தேன்;
தலை இலா ஆக்கை காண எத் தவம் செய்தேன்! அந்தோ!
நிலை இலா வாழ்வை இன்னும் நினைவெனோ, நினைவு இலாதேன்?

'ஐயனே! அழகனே! என் அரும் பெறல் அமிழ்தே! ஆழிக்
கையனே, மழுவனே, என்று இவர் வலி கடந்த கால
மொய்யனே!—முளரி அன்ன நின் முகம் கண்டிலாதேன்,
உய்வெனோ?—உலகம் மூன்றுக்கு ஒருவனே! செரு வலோனே!

'தாள் அரிச் சதங்கை ஆர்ப்பத் தவழ்கின்ற பருவம்தன்னில்,
கோள் அரி இரண்டு பற்றிக் கொணர்ந்தனை; கொணர்ந்து, கோபம்
மூளுறப் பொருத்தி, மாட முன்றிலில் முறையின் ஓடி
மீள அரு விளையாட்டு இன்னம் காண்பெனோ, விதியிலாதேன்!

'அம்புலி! அம்ம வா!' என்று அழைத்தலும், அமர் வெண் திங்கள்
இம்பர் வந்தானை அஞ்சல் என இரு கரத்தின் ஏந்தி,
வம்புறும் மறுவைப் பற்றி, 'முயல்' என வாங்கும் வண்ணம்,
எம் பெருங் களிறே! காண, ஏசற்றேன்; எழுந்திராயோ! 50

'இயக்கியர், அரக்கிமார்கள், விஞ்சையர் ஏழைமாதர்,
முயல் கறை பயிலாத் திங்கள் முகத்தியர், முழுதும் நின்னை
மயக்கிய முயக்கம்தன்னால், மலர் அணை அமளிமீதே
அயர்த்தனை உறங்குவாயோ? அமர் பொருது அலசினாயோ? 51

'முக்கணான் முதலினோரை, உலகு ஒரு மூன்றினோடும்,
புக்க போர் எல்லாம் வென்று நின்ற என் புதல்வன்போலாம்,
மக்களில் ஒருவன் கொல்ல, மாள்பவன்? மான மேரு
உக்கிட, அணு ஒன்று ஓடி உதைத்தது போலும் அம்மா! 52

'பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ் சின மனிதர் கொல்ல, விளிந்ததே; மீண்டது இல்லை;
அஞ்சினேன் அஞ்சினேன்; அச் சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத் தகையன் அன்றோ?'

47. அரி - இந்திரன்; 49. அரிச் சதங்கை - பரலோடு கூடிய சதங்கை; கோள் அரி - வலிமையுள்ள சிங்கம்; 52. உக்கிட - சிதறும்படி.

இராவணன் சீதையை வெட்டச் செல்லுதல்

என்று அழைத்து இரங்கி ஏங்க, 'இத் துயர் நமர்கட்கு எல்லாம்
பொன் தழைத்தனைய அல்குல் சீதையால் புகுந்தது' என்ன,
'வன் தழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத்தாளை, வாளால்
கொன்று இழைத்திடுவென்' என்னா, ஓடினன், அரக்கர் கோமான்.

மகோதரன் இராவணனைத் தடுத்தல்

ஓடுகின்றானை நோக்கி, 'உயர் பெரும் பழியை உச்சிச்
சூடுகின்றான்' என்று அஞ்சி, மகோதரன், துணிந்த நெஞ்சன்,
மாடு சென்று, அடியின் வீழ்ந்து, வணங்கி, 'நின் புகழ்க்கு மன்னா!
கேடு வந்து அடுத்தது' என்னா, இனையன கிளத்தலுற்றான்: 55

'நீர் உளதனையும், சூழ்ந்த நெருப்பு உளதனையும், நீண்ட
பார் உளதனையும், வானப் பரப்பு உளதனையும், காலின்
பேர் உளதனையும், பேராப் பெரும் பழி பிடித்தி போலாம்—
போர் உளதனையும் வென்று, புகழ் உளதனையும் உள்ளாய். 56

'தெள்ள அருங் காலகேயர் சிரத்தொடும், திசைக் கை யானை
வெள்ளிய மருப்புச் சிந்த வீசிய விசயத்து ஒள் வாள்,
வள்ளி அம் மருங்குல், செவ் வாய், மாதர்மேல் வைத்த போது,
கொள்ளுமே ஆவி தானே, நாணத்தால் குறைவது அல்லால்? 57

'மங்கையை, குலத்துளாளை, தவத்தியை, முனிந்து, வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால், "குலத்துக்கே தக்கான்" என்று,
கங்கை அம் சென்னியானும், கண்ணனும், கமலத்தோனும்,
செங் கையும் கொட்டி, உன்னைச் சிரிப்பரால், "சிறியன்" என்னா. 58

'நிலத்து இயல்பு அன்று; வானின் நெறி அன்று; நீதி அன்று;
தலத்து இயல்பு அன்று மேலோர் தருமமேல், அதுவும் அன்று;
புலத்தியன் மரபின் வந்து, புண்ணிய விரதம் பூண்டாய்!
வலத்து இயல்பு அன்று; மாயாப் பழி கொள மறுகுவாயோ? 59

'இன்று நீ இவளை வாளால் எறிந்துபோய், இராமன்தன்னை
வென்று மீண்டு, இலங்கை மூதூர் எய்தினை வெதும்புவாயோ?
பொன்றினள் சீதை; இன்றே, புரவல! புதல்வன்தன்னைக்
கொன்றவர்தம்மைக் கொல்லக் கூசினை போலும்!' என்றான்.

54. வன் தழைக் கல்லின் நெஞ்சு - வன்மை தழைத்தலைக் கொண்ட கல் நெஞ்சம்; 57. காலகேயர் - காசிபருக்குக் கலை என்பாளிடம் பிறந்த அசுரர்கள், கடலில் இருந்தவர்கள்; குறைவது - குன்றுவது; 58. குலத்துக்கே தக்கான் - அரக்கர் குலத்துக்கு ஏற்ற செயலைச் செய்தான்; 59. நிலம் - மண்ணுலகம்; தலம் - பாதலம்.

இந்திரசித்தின் உடலைத் தைலத் தோணியில் இடப் பணித்தல்

என்னலும், எடுத்த கூர் வாள் இரு நிலத்து இட்டு, மீண்டு,
மன்னவன், 'மைந்தன் தன்னை மாற்றலார் வலியால் கொண்ட
சின்னமும், அவர்கள் தங்கள் சிரமும் கொண்டு அன்றிச் சேர்கேன்;
துன்னரும் தயிலத்தோணி வளர்த்துமின்' என்னச் சொன்னான்.

29 படைக் காட்சிப் படலம்

அரக்கர் சேனை இலங்கையில் நிறைதல்

அத் தொழில் அவரும் செய்தார்; ஆயிடை, அனைத்துத் திக்கும்
பொத்திய நிருதர் தானை கொணரிய போய தூதர்,
ஒத்தனர் அணுகி வந்து வணங்கினர், 'இலங்கை உன் ஊர்ப்
பத்தியின் அடைந்த தானைக்கு இடம் இலை; பணி என்?' என்றார்.

ஏம்பலுற்று எழுந்த மன்னன், 'எவ் வழி எய்திற்று?' என்றான்;
கூம்பலுற்று உயர்ந்த கையர், 'ஒரு வழி கூறலாமோ?
வாம் புனல் பரவை ஏழும் இறுதியின் வளர்ந்தது என்னத்
தாம் பொடித்து எழுந்த தானைக்கு உலகு இடம் இல்லை' என்றார். 2

மண் உற நடந்த தானை வளர்ந்த மாத் தூளி மண்ட,
விண் உற நடக்கின்றாரும் மிதித்தனர் ஏக, மேல் மேல்,
கண்ணுற அருமை காணக் கற்பத்தின் முடிவில் கார்போல்,
எண்ணுற அரிய சேனை எய்தியது, இலங்கை நோக்கி. 3

வாள்தனின் வயங்க மின்னா; மழை அதின் இருளமாட்டா;
ஈட்டிய முரசின் ஆர்ப்பை, இடிப்பொடு முழக்கமாட்டா;
மீட்டு இனி உவமை இல்லை, வேலை மீச் சென்ற என்னின்—
தீட்டிய படையும் மாவும் யானையும் தேரும் செல்ல. 4

உலகினுக்கு உலகு போய்ப் போய், ஒன்றின் ஒன்று ஒதுங்கலுற்ற,
தொலைவு அருந் தானை மேன்மேல் எழுந்தது தொடர்ந்து சுற்ற;
நிலவினுக்கு இறையும் மீனும் நீங்கின, நிமிர்ந்து; நின்றான்,
அலரியும், முந்து செல்லும் ஆறு நீத்து, அஞ்சி, அப்பால். 5

61. சின்னம் - துண்டிக்கப்பட்டது. ஈண்டு இந்திரசித்தின் தலை; தயிலத் தோணி - எண்ணெய்த்தாழி.

29: 1. பொத்திய - நிரம்பியுள்ள; பத்தி - வரிசை; 2. ஏம்பல் - மகிழ்ச்சி; 5. அலரி - சூரியன்.

மேற்பட விசும்பை முட்டி, மேருவின் விளங்கி, விண்ட
நாற் பெரு வாயிலூடும், இலங்கை ஊர், நடக்கும் தானை,—
கார்க் கருங் கடலை, மற்றோர் இடத்திடை, காலன்தானே
சோர்ப்பது போன்றது, யாண்டும் சுமை பொறுது உலகம் என்ன. 6

'நெருக்குடை வாயிலூடு புகும் எனின், நெடிது காலம்
இருக்கும் அத்தனையே' என்று, மதிலினுக்கு உம்பர் எய்தி,
அரக்கனது இலங்கை உற்ற—அண்டங்கள் அனைத்தின் உள்ள
கருக் கிளர் மேகம் எல்லாம் ஒருங்கு உடன் கலந்தது என்ன. 7

இராவணன் சேனைகளை நோக்குதல்

அதுபொழுது, அரக்கர்கோனும், அணிகொள் கோபுரத்தின் எய்தி,
பொதுவுற நோக்கலுற்றான், ஒரு நெறி போகப் போக,
விதி முறை காண்பென் என்னும் வேட்கையான், வேலை ஏழும்
கதுமென ஒருங்கு நோக்கும் பேதையின் காதல் கொண்டான். 8

மாதிரம் ஒன்றின்நின்று, மாறு ஒரு திசைமேல் மண்டி,
ஓத நீர் செல்வது அன்ன தானையை, உணர்வு கூட்டி,
வேத வேதாந்தம் கூறும் பொருளினை விரிக்கின்றார்போல்,
தூதுவர் அணிகள்தோறும் வரன்முறை காட்டிச் சென்றார்: 9

'சாகத் தீவினின் உறைபவர், தானவர் சமைத்த
யாகத்தில் பிறந்து இயைந்தவர், தேவரை எல்லாம்
மோகத்தின் பட முடித்தவர், மாயையின் முதல்வர்,
மேகத்தைத் தொடும் மெய்யினர், இவர்' என விரித்தார். 10

'குசையின் தீவினின் உறைபவர், கூற்றுக்கும் விதிக்கும்
வசையும் வன்மையும் வளர்ப்பவர், வான நாட்டு உறைவார்
இசையும் செல்வமும் இருக்கையும் இழந்தது, இங்கு, இவரால்;
விசையம்தாம் என நிற்பவர், இவர்—நெடு விறலோய்! 11

'இலவத் தீவினின் உறைபவர், இவர்கள்; பண்டு இமையாப்
புலவர்க்கு இந்திரன் பொன்னகர் அழிதரப் பொருதார்;
நிலவைச் செஞ் சடை வைத்தவன் வரம் தர, நிமிர்ந்தார்;
உலவைக் காட்டு உறு தீ என வெகுளி பெற்றுடையார். 12

7. உம்பர் - மேல்; 9. வேத வேதாந்தங்கள் கூறும் பரம்பொருளின் தன்மையை ஞானாசிரியன் மாணாக்கனுக்கு விளக்கிக் கூறுவது போலத் தூதுவர் இராவணனுக்குப் பரந்த சேனையை அணி அணியாகப் பிரித்துக் கூறினர்; 11. விசையம் - வெற்றி; 12. உலவை - உலர்ந்த மரம்.

'அன்றில் தீவினின் உறைபவர், இவர்; பண்டை அமரர்க்கு
என்றைக்கும் இருந்து உறைவிடம் என்றிட மேருக்
குன்றைக் கொண்டு போய், குரை கடல் இட, அறக் குலைந்தோர்
சென்று, 'இத் தன்மையைத் தவிரும்' என்று இரந்திடத் தீர்ந்தோர். 13

'பவளக் குன்றினின் உறைபவர்; வெள்ளி பண்பு அழிந்து, ஓர்
குவளைக் கண்ணி, அங்கு, இராக்கதக் கன்னியைக் கூட,
அவளின் தோன்றினர், ஐ-இரு கோடியர்; நொய்தின்
திவளப் பாற்கடல் வறள்படத் தேக்கினர், சில நாள். 14

'கந்தமாதனம் என்பது, இக் கருங் கடற்கு அப் பால்
மந்தமாருதம் ஊர்வது ஓர் கிரி; அதில் வாழ்வோர்,
அந்த காலத்து அவ் ஆலகாலத்துடன் பிறந்தோர்;
இந்த வாள் எயிற்று அரக்கர் எண் இறந்தவர்—இறைவ! 15

'மலயம் என்பது பொதிய மாமலை; அதில் மறவோர்
நிலயம் அன்னது சாகரத் தீவிடை நிற்கும்;
''குலையும் இவ் உலகு'' எனக் கொண்டு, நான்முகன் கூறி,
''உலைவிலீர்! இதில் உறையும்'' என்று இரந்திட, உறைந்தார்.

'முக்கரக் கையர்; மூ இலை வேலினர்; முசுண்டி
சக்கரத்தினர்; சாபத்தர்; இந்திரன் தலைவர்;
நக்கரக் கடல் நால் ஒரு மூன்றுக்கும் நாதர்;
புக்கரப் பெருந் தீவிடை உறைபவர்—புகழோய்! 17

'மறலியை, பண்டு, தம் பெருந் தாய் சொல, வலியால்,
புற நிலைப் பெருஞ் சக்கர மால் வரைப் பொருப்பின்,
விறல் கெடச் சிறையிட்டு, அயன் இரந்திட, விட்டோர்;
இறலி அப் பெருந் தீவிடை உறைபவர்—இவர்கள். 18

'வேதாளக் கரத்து இவர், ''பண்டு புவியிடம் விரிவு
போதாது உம்தமக்கு; எழு வகையாய் நின்ற புவனம்,
பாதாளத்து உறைவீர்'' என, நான்முகன் பணிப்ப,
நாதா! புக்கு இருந்து, உனக்கு அன்பினுல், இவண் நடந்தார்.

14. வெள்ளி - சுக்கிரன்; திவளப் பாற்கடல் - வெண்ணிறமுடைய பாற்கடல்; தேக்குதல் - நிரம்பப் பருகுதல்; 15. அந்த காலம் - அந்தக் காலம், எதுகை நோக்கி ஒற்று மிகாமல் நின்றது; 17. முசுண்டி சக்கரம் - ஒருவகைச் சக்கரப் படை; நக்கரம் - முதலை; 19. வேதாளம் - பேய்.

'நிருதி தன் குலப் புதல்வர்; நின் குலத்துக்கு நேர்வர்;
''பருதி தேவர்கட்கு'' எனத் தக்க பண்பினர்; பானக்
குருதி பெற்றிலரேல், கடல் ஏழையும் குடிப்பார்;
இருள் நிறத்தவர்; ஒருத்தர் ஏழ் மலையையும் எடுப்பார். 20

'பார் அணைத்த வெம் பன்றியை அன்பினுல் பார்த்த
காரணத்தின், ஆதியின் பயந்த பைங் கழலோர்;
பூரணத் தடந் திசைதொறும் இந்திரன் புலரா
வாரணத்தினை நிறுத்தியே, சூடினர் வாகை. 21

'மறக் கண் வெஞ் சின மலை என இந் நின்ற வயவர்,
இறக்கம் கீழ் இலாப் பாதலத்து உறைகின்ற இகலோர்;
அறக் கண் துஞ்சிலன், ஆயிரம் பணந் தலை அனந்தன்,
உறக்கம் தீர்ந்தனன், உறைகின்றது, இவர் தொடர்ந்து ஒறுக்க.

'காளியைப் பண்டு கண்ணுதல் காட்டியகாலை,
மூள முற்றிய சினக் கடுந் தீயிடை முளைத்தோர்;
கூளிகட்கு நல் உடன்பிறந்தார்;—பெருங் குழுவாய்
வாள் இமைக்கவும், வாள் எயிறு இமைக்கவும், வருவார். 23

'பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்;
தீவம் தோன்றிய முழைத் துணை எனத் தறுகண்ணர்;
கோவம் தோன்றிடின், தாயையும் உயிர் உணும் கொடியோர்;—
சாவம் தோன்றிட, வட திசைமேல் வந்து சார்வார். 24

'சீற்றம் ஆகிய ஐம்முகன், உலகு எலாம் தீப்பான்,
ஏற்ற மா நுதல் விழியிடைத் தோன்றினர், இவரால்;
கூற்றம் ஆகிய கொம்பின் ஐம்பாலுடை, கொடுமைக்கு
ஊற்றம் ஆகி, பண்டு உதித்தனர் என்பவர், உவரால். 25

'காலன் மார்பிடைச் சிவன் கழல் பட, பண்டு கான்ற
வேலை ஏழ் அன்ன குருதியில் தோன்றிய வீரர்,
சூலம் ஏந்தி முன் நின்றவர்; இந் நின்ற தொகையார்,
ஆலகாலத்தின், அமிழ்தின், முன் பிறந்த போர் அரக்கர். 26

20. நிருதி - தென்மேற்குத் திசைக்குக் காவலன்: இவன் மனைவி தீர்க்கா தேவியின் வயிற்றுப் பிறந்த மக்கள் இப் படையினர் ஆவர்; 21. பூரணத் தடந் திசை - நிறைவுடைய பெரிய திசைகள்; 23. காளியை நடனத்தில் வெல்லச் சிவன் காலைத் தலைவரையிலும் தூக்கி ஊர்த்துவ தாண்டவம் புரிய, அவள் அதனைப் புரிய நாணிச் சிவன் செய்த வஞ்சகச் செயலுக்காகச் சினந்தாள்; அச் சினத் தீயில் தோன்றியவர்கள் இவர்கள். கூளி - பேய்; 24. தீவம் - தீபம்; சாவம் - சாபம், வில்; 25. ஐம்முகன் - சிவன்.

'வடவைத் தீயினை, வாசுகி கான்ற மாக் கடுவை
இட, அத் தீயிடை எழுந்தவர், இவர்; இன மழையைத்
தடவ, தீ நிகர் குஞ்சியர் இவர்; உவர், தனித் தேர்
கடவ, தீந்த வெம் புரத்திடைத் தோன்றிய கழலோர். 27

'இனையர் இன்னவர் என்பது ஓர் அளவு இலர்—ஐய!—
நினையவும், குறித்து உரைக்கவும், அரிது; இவர் நிறைந்த
வினையமும் பெரு வரங்களும் தவங்களும் விளம்பின்,
அனைய பேர் உகம் ஆயிரத்து அளவினும் அடங்கா. 28

'ஒருவரே சென்று, அவ் உறு திறல் குரங்கையும், உரவோர்
இருவர் என்றவர்தம்மையும், ஒரு கையோடு எற்றி,
வருவர்; மற்று இனிப் பகர்வது என்?—வானவர்க்கு அரிய
திருவ!' என்றனர், தூதுவர். இராவணன் செப்பும்: 29

'எத் திறத்து இதற்கு எண் எனத் தொகை வகுத்து, இயன்ற
அத் திறத்தினை அறைதிர்' என்று உரைசெய, அவர்கள்,
'ஒத்த வெள்ளம் ஓர் ஆயிரம் உளது' என உரைத்தார்,
பித்தர்; இப் படைக்கு 'எண் சிறிது' என்றனர், பெயர்ந்தார். 30

'படைப் பெருங் குலத் தலைவரைக் கொணருதிர், என்பால்—
கிடைத்து, நான் அவர்க்கு உற்றுள பொருள் எலாம் கிளத்தி,
அடைத்த நல் உரை விளம்பினென் அளவளாய், அமைவுற்று,
உடைத்த பூசனை வரன்முறை இயற்ற' என்று உரைத்தான். 31

தூதர் கூறிட, திசைதொறும் திசைதொறும் தொடர்ந்தார்,
ஓத வேலையின் நாயகர் எவரும் வந்து உற்றார்;
போது தூவினர், வணங்கினர், இராவணன் பொலன் தாள்
மோதும் மோலியின் பேர் ஒலி வானினை முட்ட. 32

அனையர் யாவரும் அருகு சென்று, அடி முறை வணங்கி,
வினையம் மேவினர், இனிதின் அங்கு இருந்தது ஓர் வேலை,
'நினையும் நல் வரவு ஆக, நும் வரவு!' என நிரம்பி,
'மனையும் மக்களும் வலியரே?' என்றனன், மறவோன். 33

31. உடைத்த பூசனை - உரித்தான பூசனை; பூசனை - வீரர்க்குச் செய்ய வேண்டிய பெருஞ்சோறு அளித்தல், பரிசு நல்கல் முதலியன; 33. வினையம் - வினயம், வணக்கம், பணிவு.

'பெரிய திண் புயன் நீ உளே; தவ வரம் பெரிதால்;
உரிய வேண்டிய பொருள் எலாம் முடிப்பதற்கு ஒன்றோ?
இரியல் தேவரைக் கண்டனம்; பகை பிறிது இல்லே;
அரியது என் எமக்கு?' என்றனர், அவன் கருத்து அறிவார். 34

'மாதரார்களும் மைந்தரும் நின் மருங்கு இருந்தார்
பேது உறுதவர் இல்லே; நீ வருந்திணே, பெரிதும்;
யாது காரணம்? அருள்' என, அணயவர் இசைத்தார்;
சீதை காதலின் புகுந்துள பரிசு எலாம் தெரித்தான். 35

'கும்பகன்னனேடு இந்திரசித்தையும், குலத்தின்
வெம்பு வெஞ் சினத்து அரக்கர்தம் குழுவையும், வென்றுர்
அம்பினல், சிறு மனிதரே! நன்று, நம் ஆற்றல்!
நம்ப! சேஃனயும் வானரமே!' என நக்கார். 36

உலகைச் சேடன்தன் உச்சிநின்று எடுக்க அன்று, ஓர் ஏழ்
மலேயை வேரொடும் வாங்க அன்று, அங்கையால் வாரி
அலேகொள் வேலேயைக் குடிக்க அன்று, அழைத்தது; மலரோடு
இலேகள் கோதும் அக் குரங்கின்மேல் ஏவக்கொல், எம்மை?' 37

என்ன, கை எறிந்து, இடி உரும்ஏறு என நக்கு,
மின்னும் வாள் எயிற்று அரக்கரை அம் கையால் விலக்கி,
வன்னி என்பவன், புட்கரத் தீவுக்கு மன்னன்,
'அன்ன மானுடர் ஆர் வலியாவது' என்று அறைந்தான். 38

மாலியவான் மனிதர் வலிமையை உரைத்தல்

மற்று அவ் வாசகம் கேட்டலும், மாலியவான் வந்து,
'உற்ற தன்மையும், மனிதரது ஊற்றமும், உடன் ஆம்
கொற்ற வானரத் தலேவர்தம் தகைமையும், கூறக்
கிற்றும், கேட்டிரால்' என்றனன், கிளத்துவான் துணிந்தான்:

'பரிய தோளுடை விராதன், மாரீசனும் பட்டார்;
கரிய மால் வரை நிகர் கர தூடணர், கதிர் வேல்
திரிசிரா, அவர் திரைக்கடல் அன பெருஞ் சேனே,
ஒரு விலால், ஒரு நாழிகைப் பொழுதினின், உலந்தார். 40

'ஆழி அன்ன நீர் அறிதிர் அன்றே, கடல் அனேத்தும்
ஊழிக் கால் எனக் கடப்பவன் வாலி என்போனே?
ஏழு குன்றமும் எடுக்குறும் மிடுக்கனே, இந் நாள்,
பாழி மார்புஅகம் பிளந்து, உயிர் குடித்தது, ஓர் பகழி. 41

34. ஒன்றோ? - ஒரு பொருளோ?; 39. கூறக்கிற்றும் - சொல்லும் வல்லமை யுடையேம்; 40. ஒரு விலால் - ஒரு வில்லால்.

'இங்கு வந்து நீர் வினையது என்? எறி திரைப் பரவை
அங்கு வெந்திலதோ? சிறிது அறிந்ததும் இலிரோ?
கங்கைசூடிதன் கடுஞ் சிலை ஒடித்த அக் காலம்,
உங்கள் வான் செவி புகுந்திலதோ, முழங்கு ஓதை? 42

'ஆயிரம் பெரு வெள்ளம் உண்டு, இலங்கையின் அளவில்,
தீயின் வெய்ய போர் அரக்கர்தம் சேனை; அச் சேனை
போயது, அந்தகன் புரம் புக நிறைந்தது போலாம்,
ஏயும் மும்மை நூல் மார்பினர் எய்த வில் இரண்டால். 43

'கொற்ற வெஞ் சிலைக் கும்பகன்னனும், நுங்கள் கோமான்
பெற்ற மைந்தரும், பிரகத்தன் முதலிய பிறரும்,
மற்றை வீரரும், இந்திரசித்தொடு மடிந்தார்;
இற்றை நாள் வரை, யானும் மற்று இவனுமே இருந்தேம். 44

'மூலத் தானை என்று உண்டு; அது மும்மை நூறு அமைந்த
கூலச் சேனையின் வெள்ளம்; மற்று அதற்கு இன்று குறித்த
காலச் செய்கை நீர் வந்துளீர்; இனி, தக்க கழலோர்
சீலச் செய்கையும், கவிப் பெருஞ் சேனையும், தெரிக்கில், 45

'ஒரு குரங்கு வந்து இலங்கையை மலங்கு எரியூட்டி,
திருகு வெஞ் சினத்து அக்கனை நிலத்தொடும் தேய்த்து,
பொருது, தூது உரைத்து, ஏகியது,—அரக்கியர் புலம்ப,
கருது சேனையாம் கடலையும் கடலையும் கடந்து. 46

'கண்டிலீர்கொலாம், கடலினை மலை கொண்டு கட்டி,
மண்டு போர் செய, வானரர் இயற்றிய மார்க்கம்?
உண்டு வெள்ளம் ஓர் எழுபது; மருந்து ஒரு நொடியில்
கொண்டு வந்தது, மேருவுக்கு அப்புறம் குதித்து. 47

'இது இயற்கை; ஓர் சீதை என்று இருந் தவத்து இயைந்தாள்,
பொது இயற்கை தீர் கற்புடைப் பத்தினி பொருட்டால்,
விதி விளைத்தது; அவ் வில்லியர் வெல்க! நீர் வெல்க!
முதுமொழிப் பதம் சொல்லினென்' என்று, உரை முடித்தான்.

வன்னி, 'பொருதலே தக்கது' எனல்

வன்னி, மன்னனை நோக்கி, 'நீ இவர் எலாம் மடிய,
என்ன காரணம், இகல் செயாதிருந்தது?' என்று, இசைத்தான்;
'புன்மை நோக்கினென்; நாணினல் பொருதிலேன்' என்றான்;
'அன்னதேல், இனி அமையும் எம் கடமைஅஃது' என்றான். 49

43. மும்மை நூல் - முந்நூல்; 45. கூலச் சேனை - தொகுதியான படை.

'மூது உணர்ந்த இம் முது மகன் கூறிய முயற்சி
சீதை என்பவள்தனை விட்டு, அம் மனிதரைச் சேர்தல்;
ஆதியின்தலை செயத்தக்கது; இனிச் செயல் அழிவால்,
காதல் இந்திரசித்தையும் மாய்வித்தல் கண்டும்?* 50

'விட்டம்ஆயினும் மாதினை, வெஞ் சமம் விரும்பிப்
பட்ட வீரரைப் பெறுகிலெம்; பெறுவது பழியால்;
முட்டி, மற்றவர் குலத்தொடு முடிக்குவது அல்லால்,
கட்டம், அத் தொழில்; செருத் தொழில் இனிச் செயும் கடமை' 51

என்று, எழுந்தனர் இராக்கதர், 'இருக்க நீ; யாமே
சென்று, மற்றவர் சில் உடல் குருதி நீர் தேக்கி,
வென்று மீளுதும்; வெள்குதுமேல், மிடல் இல்லாப்
புன் தொழில் குலம் ஆதும்' என்று உரைத்தனர், போனார். 52

30 மூலபல வதைப் படலம்

இராவணன் படைத்தலைவர்களுக்கு இட்ட கட்டளை

'வானரப் பெருஞ் சேனையை யான் ஒரு வழி சென்று,
ஊன் அறக் குறைத்து, உயிர் உண்பன்; நீயிர் போய், ஒருங்கே
ஆன மற்றவர் இருவரைக் கோறிர் என்று அறைந்தான்—
தானவப் பெருங் கரிகளை வாள் கொண்டு தடிந்தான். 1

என உரைத்தலும், எழுந்து, தம் இரதமேல் ஏறி,
கனை திரைக் கடல் சேனையைக் கலந்தது காணா,
'வினையம் மற்று இலை; மூல மாத் தானையை விரைவோடு
இனையர்முன் செல, ஏவுக!' என்று இராவணன் இசைத்தான். 2

ஏவி அப் பெருந் தானையை, தானும் வேட்டு எழுந்தான்,
தேவர் மெய்ப் புகழ் தேய்த்தவன், சில்லிஅம் தேர்மேல்,
காவல் மூவகை உலகமும் முனிவரும் கலங்க,
பூவை வண்ணத்தன் சேனைமேல் ஒரு புறம் போனான். 3

50. விடுதல் - சிறையிலிருந்து விடுதல்; 51. கட்டம் - வருத்தம் தருவது, செய்யத்தகாதது; 52. வெள்குதல் - நாணிப் பின் வாங்குதல்.

30: 1. தானவப் பெருங்கிரிகள் - அசுரர்களாகிய பெரிய மலைகள்; 2. வினையம் - செயல்; 3. பூவை - காயாமரம், ஈண்டுக் காயாம்பூ.

மூலபலப் படையின் இயல்பு

'எழுக, சேனை!' என்று, யானைமேல் மணி முரசு எற்றி,
வழு இல் வள்ளுவர் துறைதொறும் விளித்தலும், வல்லைக்
குழுவி ஈண்டியது என்பரால், குவலயம் முழுதும்
தழுவி, விண்ணையும் திசையையும் தடவும் மாத் தானை. 4

அடங்கும் வேலைகள், அண்டத்தின் அகத்து; அகல் மலையும்
அடங்கும், மன் உயிர் அனைத்தும்; அவ் வரைப்பிடை அவைபோல்,
அடங்குமே, மற்று அப் பெரும் படை அரக்கர்தம் யாக்கை,
அடங்கும் மாயவன் குறள் உருத் தன்மையின் அல்லால்? 5

அறத்தைத் தின்று, அருங் கருணையை பருகி, வேறு அமைந்த
மறத்தைப் பூண்டு, வெம் பாவத்தை மணம் புணர் மணாளர்,
நிறத்துக் கார் அன்ன நெஞ்சினர்; நெருப்புக்கு நெருப்பாய்,
புறத்தும் பொங்கிய பங்கியர், காலனும் புகழ்வார்; 6

நீண்ட தாள்களால் வேலையைப் புறம் செல நீக்கி,
வேண்டும் மீனெடு மகரங்கள் வாயிட்டு விழுங்கி,
தூண்டு வான் உரும்ஏற்றினைச் செவிதொறும் தூக்கி,
மூண்ட வான் மழை உரித்து உடுத்து, உலாவரும் மூர்க்கர்; 7

மால் வரைக் குலம் பரல் என, மழைக் குலம் சிலம்பா,
கால் வரைப் பெரும் பாம்பு கொண்டு அசைத்த பைங் கழலார்;
மேல் வரைப்பு அடர் கலுழன் வன் காற்று எனும் விசையோர்;
நால் வரைக் கொணர்ந்து உடன் பிணித்தால் அன்ன நடையார்;

உண்ணும் தன்மைய ஊன் முறை தப்பிடின், உடனே
மண்ணில் நின்ற மால் யானையை வாயிடும் பசியார்;
தண்ணின் நீர் முறை தப்பிடின், தடக் கையால் தடவி,
விண்ணின் மேகத்தை வாரி, வாய்ப் பிழிந்திடும் விடாயர்; 9

உறைந்த மந்தரம் முதலிய கிரிகளை உருவ
எறிந்து, வேல் நிலை காண்பவர்; இந்துவால் யாக்கை
சொறிந்து, தீர்வு உறு தினவினர்; மலைகளைச் சுற்றி
அறைந்து, கற்ற மாத் தண்டினர்; அசனியின் ஆர்ப்பர்; 10

4. வள்ளுவர் - அரசன் பணித்த செய்திகளைப் பறையறைந்து அறிவிப்போர்; 6. பங்கி - தலைமயிர்; 7. உரும் ஏறு - பேரிடி, ஈண்டு மின்னல்; 8. மழைக் குலம் - மேகங்கள்; மேல் வரை - மேல் எல்லை; நால் வரை - தொங்கும் (வாயினையுடைய) மலை போன்ற யானை; 9. முறை தப்புதல் - கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்காமல் தடைப்படுதல்; விடாயர் - நீர் வேட்கையுடையவர்; 10. வேல் நிலை - வேலின் கூர்மை.

சூலம் வாங்கிடின், சுடர் மழு எறிந்திடின், சுடர் வாள்
கோல வெஞ் சிலை பிடித்திடின், கொற்ற வேல் கொள்ளின்,
சால வன் தண்டு தரித்திடின், சக்கரம் தாங்கின்,
காலன், மால், சிவன், குமரன் என்று, இவரையும் கடப்பார்;

ஒருவரே வல்லர், ஓர் உலகத்தினை வெல்ல;
இருவர் வேண்டுவர், ஏழ் உலகத்தையும் இறுக்க;
திரிவரேல், உடன் திரிதரும், நெடு நிலம்; செவ்வே
வருவரேல், உடன், கடல்களும் தொடர்ந்து, பின் வருமால். 12

நால் வகைச் சேனை

மேகம் எத்தனை, அத்தனை மால் கரி; விரிந்த
நாகம் எத்தனை, அத்தனை தேர்; நனி நாளாப்
போகம் எத்தனை, அத்தனை புரவியின் ஈட்டம்;
ஆகம் உற்றன எத்தனை, அத்தனை அனிகம். 13

இன்ன தன்மைய யானை, தேர், இவுளி என்று இவற்றின்
பன்னு பல்லணம், பருமம், மற்று உறுப்பொடு பலவும்,
பொன்னும் நல் நெடு மணியும் கொண்டு அல்லது புனைந்த
சின்னம் உள்ளன இல்லன, மெய்ம் முற்றும் தெரிந்தால். 14

இப் பெரும் படை எழுந்து இரைத்து ஏக, மேல் எழுந்த
துப்பு உதிர்ந்தன தூளியின் படலம் மீத் தூர்ப்ப,
தப்பு இல் கார் நிறம் தவிர்ந்தது; கரி மதம் தழுவ,
உப்பு நீங்கியது, ஓங்கு நீர் வீங்கு அலை உவரி. 15

மலையும், வேலையும், மற்று உள பொருள்களும், வானோர்
நிலையும், அப் புறத்து உலகங்கள் யாவையும், நிரம்ப
உலைவுறுவகை உண்டு, பண்டு உமிழ்ந்த பேர் ஒருமைத்
தலைவன் வாய் ஒத்த—இலங்கையின் வாயில்கள் தருவ. 16

கடம் பொரூ மதக் களிறு, தேர், பரி, மிடை கடல்கள்,
படம் பொரூமையின் நனந் தலை அனந்தனும் பதைத்தான்;
விடம் பொருது இரி அமரர்போல் குரங்குஇனம் மிதிக்கும்
இடம் பொரூமையின், இரிந்து போய், வடதிசை இறுத்த. 17

11. கடத்தல் - போரில் வென்று மேம்படுதல்; 13. நாகம் - யானை; நனி நாளாப் போகம் - நீண்ட நாள்களாக விளைந்து முற்றிய நெற்கதிர்கள்; போகம் - விளைவு; 14. பன்னுதல் - சிறப்பித்துச் சொல்லுதல்; பல்லணம் - குதிரைக் கலன்; பருமம் - யானைமேல் இடும் தவிசு; 15. துப்பு உதிர்ந்தன - பவளத்தைப் பொடி செய்தால் ஒத்த; 16. ஒருமைத் தலைவன் - ஒப்பற்ற முதல்வனாகிய திருமால்; 17. கடம் - யானையின் கன்னம்; விடம் - ஆலகால நஞ்சு.

ஆழி மால் வரை வேலி சுற்றிட வகுத்து அமைத்த
ஏழு வேலையும், இடு வலை; அரக்கரே, இன மா;
வாழி காலனும் விதியும் வெவ் வினையுமே, மள்ளர்;
தோழம் மா மதில் இலங்கை; மால் வேட்டம் மேல் தொடர்ந்தார். 18

ஆர்த்த ஓசையோ? அலங்கு தேர் ஆழியின் அதிர்ப்போ?
கார்த் திண் மால் கரி முழக்கமோ? வாசியின் கலிப்போ?
போர்த்த பல் இயத்து அரவமோ?—நெருக்கினுல் புழுங்கி
வேர்த்த அண்டத்தை வெடித்திடப் பொடிந்தது, மேன்மேல்.

வழங்கு பல் படை மீனது; மத கரி மகரம்
முழங்குகின்றது; முரி திரைப் பரியது; முரசம்
தழங்கு பேர் ஒலி கலிப்பது; தறுகண் மா நிருதப்
புழுங்கு வெஞ் சினச் சுறவது—நிறைபடைப் புணரி. 20

தசும்பின் பொங்கிய திரள் புயத்து அரக்கர்தம் தானை
பசும் புல் தண் தலம் மிதித்தலின், கரி படு மதத்தின்
அசும்பின் சேறு பட்டு, அளறு பட்டு, அமிழுமால், அடங்க;
விசும்பின் சேறலின் கிடந்தது, அவ் விலங்கல்மேல் இலங்கை.

வானவர் சிவபெருமானிடம் முறையிடுதல்

படியைப் பார்த்தனர்; பரவையைப் பார்த்தனர்; படர் வான்
முடியைப் பார்த்தனர்; பார்த்தனர், நெடுந் திசை முழுதும்;
வெடியப் பார்ப்பது ஓர் வெள்ளிடை கண்டிலர்; மிடைந்த
கொடியைப் பார்த்தனர்; வேர்த்தனர், வானவர் குலைந்தார்.

'உலகில் நாம் அலா உரு எலாம் இராக்கத உருவா,
அலகு இல் பல் படை பிடித்து அமர்க்கு எழுந்தவோ? அன்றேல்,
விலகு நீர்த் திரை வேலை ஓர் ஏழும் போய் விதியால்
அலகு இல் பல் உருப் படைத்தனவோ?' என அயிர்த்தார். 23

நடுங்கி, நஞ்சு அடை கண்டனை, வானவர், 'நம்ப!
ஒடுங்கி யாம் கரந்து உறைவிடம் அறிகிலம்; உயிரைப்
பிடுங்கி உண்குவர்; யார், இவர் பெருமை பண்டு அறிந்தார்?
முடிந்தது, எம் வலி' என்றனர், ஓடுவான் முயல்வார். 24

18. ஆழி மால் வரை - சக்கரவாள மலை; தோழம் - தொழுவம், கொட்டில்; மால் - இராமன்; 19. பொடித்தல் - தோன்றுதல்; 20. படைப் புணரி - சேனையாகிய கடல்; 21. தசும்பின் - குடம் போன்று; அசும்பு - வழுக்கு நிலம், நீர் பொசியும் நிலம்; 22. வெடிதல் - படைக்கடல் இல்லாது இருத்தல்; வெள்ளிடை - வெற்றிடம்.

'ஒருவரைக் கொல்ல, ஆயிரம் இராமர் வந்து, ஒருங்கே
இருபதிற்றிரண்டு ஆண்டு நின்று அமர் செய்தால், என் ஆம்?
நிருதரைக் கொல்வது, இடம் பெற்று ஓர் இடையில் நின்று அன்றே?
பொருவது, இப் படை கண்டு, தம் உயிர் பொறுத்து அன்றே?'

என்று இறைஞ்சலும், மணி மிடற்று இறைவனும், 'இனி, நீர்
ஒன்றும் அஞ்சலிர்; வஞ்சனை அரக்கரை ஒருங்கே
கொன்று நீக்கும், அக் கொற்றவன்; இக் குலம் எல்லாம்
பொன்றுவிப்பது ஓர் விதி தந்ததாம்' எனப் புகன்றான். 26

மூலபலப் படையைக் கண்டு, வானரங்கள் அஞ்சி ஓடுதல்

புற்றின்நின்று வல் அரவுஇனம் புறப்பட, பொருமி,
'இற்றது, எம் வலி' என விரைந்து இரிதரும் எலிபோல்,
மற்ற வானரப் பெருங் கடல் பயம் கொண்டு மறுகி,
கொற்ற வீரரைப் பார்த்திலது; இரிந்தது, குலைவால். 27

அணையின்மேல் சென்ற, சில சில; ஆழியை நீந்தப்
புணைகள் தேடின, சில; சில நீந்தின போன;
துணைகளோடு புக்கு, அழுந்தின சில; சில தோன்றாப்
பணைகள் ஏறின; மலை முழை புக்கன, பலவால். 28

'அடைத்த பேர் அணை அளித்தது நமக்கு உயிர்; அடைய
உடைத்துப் போதுமால், அவர் தொடராமல்' என்று, உரைத்த;
'புடைத்துச் செல்குவர், விசும்பினும்' என்றன; 'போதோன்
படைத்த திக்கு எலாம் பரந்தனர்' என்றன, பயத்தால். 29

அரியின் வேந்தனும், அனுமனும், அங்கதன்அவனும்,
பிரியகிற்றிலர் இறைவனை, நின்றனர் பின்றார்;
இரியலுற்றனர் மற்றையோர் யாவரும்; எறி நீர்
விரியும் வேலையும் கடந்தனர்; நோக்கினன், வீரன். 30

இப் புதுப்படை பற்றி இராமன் வினவ, வீடணன் மூலபலம் பற்றிக் கூறுதல்

'இக் கொடும் படை எங்கு உளது? இயம்புதி' என்றான்;
மெய்க் கொடுந் திறல் வீடணன் விளம்புவான்: 'வீர!
திக்கு அனைத்தினும், ஏழு மாத் தீவினும், தீயோர்
புக்கு அழைத்திடப் புகுந்துளது, இராக்கதப் புணரி. 31

25. இருபதிற்றிரண்டு ஆண்டு - இரண்டு பன்னிரண்டாண்டு, இருபத்து நான்கு ஆண்டு, இரண்டு வியாழ வட்டம்; 28. பணை - கிளை.

'ஏழ் எனப்படும் சீழ் உள தலத்தின்நின்று ஏறி,
ஊழி முற்றிய கடல் எனப் புகுந்ததும் உளதால்;
வாழி மற்று அவன் மூல மாத் தானை முன் வருவ;
ஆழி வேறு இனி அப் புறத்து இல்லை, வாள் அரக்கர். 32

'ஈண்டு, இவ் அண்டத்துள் இராக்கதர் எனும் பெயர் எல்லாம்
மூண்டு வந்தது, தீவினை முன் நின்று முடுக்க;
மாண்டு வீழும் இன்று, என்கின்றது என் மதி; வலி ஊழ்
தூண்டுகின்றது' என்று, அடி மலர் தொழுது, அவன் சொன்னான். 33

வானர வீரரை அழைத்து வருமாறு அங்கதனை இராமன் ஏவுதல்

கேட்ட அண்ணலும், முறுவலும் சீற்றமும் கிளர,
'காட்டுகின்றனென்; காணுதி ஒரு கணத்து' என்னா,
ஓட்டின் மேற்கொண்ட தானையைப் பயம் துடைத்து, உரவோய்!
மீட்டிகொல்?' என, அங்கதன் ஓடினன் விரைந்தான். 34

அங்கதன், ஓடிய படை வீரரை அழைக்க, படைத் தலைவர்கள் பதிலுரைத்தல்

சென்று சேனையை உற்றனன், 'சிறை சிறை கெடுவீர்!
நின்று கேட்டபின், நீங்குமின்' எனச் சொல்லி நேர்வான்;
'ஒன்றும் கேட்கிலம்' என்றது அக் குரக்குஇனம்; உரையால்
வென்றி வெந் திறல் படைப் பெருந் தலைவர்கள் மீண்டார். 35

மீண்டு, வேலையின் வட கரை, ஆண்டு ஒரு வெற்பின்
ஈண்டினார்களை, 'என் குறித்து இரிவுற்றது?' என்றான்;
'ஆண்ட நாயக! கண்டிலை போலும், நீ அவரை?
மாண்டு செய்வது என்?' என்று உரை கூறினர், மறுப்பார். 36

'ஒருவன் இந்திரசித்து என உள்ளவன் உள நாள்,
செருவின் உற்றவை, கொற்றவ! மறத்தியோ? தெரியின்,
பொரு இல் மற்றவர் இற்றிலர், யாரொடும் பொருவார்;
இருவர் வில் பிடித்து, யாவரைத் தடுத்து நின்று எய்வார்? 37

'புரம் கடந்த அப் புனிதனே முதலிய புலவோர்
வரங்கள் தந்து, உலகு அளிப்பவர் யாவரும், மாட்டார்,
கரந்து அடங்கினர்; இனி, மற்று அவ் அரக்கரைக் கடப்பார்
குரங்கு கொண்டு வந்து, அமர் செயும் மானுடர்கொல்லாம்?

32. ஆழி அப்புறத்து அரக்கர் வேறு இல்லை என இயையும்; 34. ஓட்டு - ஓடுதல்; 35. சிறை சிறை கெடுவீர்! - பல பக்கங்களிலும் சிதறி ஓடுகின்றவர்களே!; 36. ஆண்ட நாயக - எம்மை ஆளாக உடைய தலைவ!; 38. புரம் - முப்புரம்.

'ஊழி ஆயிர கோடி நின்று, உருத்திரனோடும்
ஆழியானும் மற்று அயனொடு புரந்தரன் அவனும்,
சூழ ஓடினர்; ஒருவரைக் கொன்று, தம் தோளால்
வீழுமா செய்ய வல்லரேல், வென்றியின் நன்றே! 39

'என் அப்பா! மற்று, இவ் எழுபது வெள்ளமும், ஒருவன்
தின்னப் போதுமோ? தேவரின் வலியமோ, சிறியேம்?
முன் இப் பார் எலாம் படைத்தவன்; நாள் எலாம் முறை நின்று,
உன்னிப் பார்த்து நின்று, உறையிடப் போதுமோ, யூகம்? 40

' ''நாயகன் தலை பத்து உள; கையும் நால்-ஐந்து'' என்று
ஓயும் உள்ளத்தேம்; ஒருவன் மற்று அவன் வந்து, இங்கு உற்றான்
ஆயிரம் தலை; அதற்கு இரட்டிக் கையர்; ஐயா!
பாயும் வேலையின் கூலத்து மணலினும் பலரால்! 41

'கும்பகன்னன் என்று உளன், மற்று இங்கு ஒருவன், கைக்கொண்ட
அமபு தாங்கவும் மிடுக்கு இலம்; அவன் செய்தது அறிதி;
உம்பர் அன்றியே, உணர்வு உடையார் பிறர் உளரோ?
நம்பி? நீயும் உன் தனிமையை அறிந்திலை; நடந்தாய். 42

'அனுமன் ஆற்றலும், அரசனது ஆற்றலும், இருவர்
தனுவின் ஆற்றலும், தம் உயிர் தாங்கவும் சாலா;
கனியும் காய்களும் உணவு உள; முழை உள, கரக்க;
மனிதர் ஆளின் என், இராக்கதன் ஆளின் என், வையம்? 43

'தாம் உளார் அன்றே புகழினைத் திருவொடும் தரிப்பார்?
யாம் உளோம் எனின், எம் கிளை உள்ளது; எம் பெரும!
''போமின் நீர்'' என்று விடை தரத் தக்கனை, புரப்போய்!
''சாமின் நீர்'' என்றல் தருமம் அன்று' என்றனர், தளர்ந்தார்.

''சாம்பனை வதனம் நோக்கி, வாலிசேய், 'அறிவு சான்றோய்!
''பாம்புஅணை அமலனே மற்று இராமன்'' என்று, எமக்குப் பண்டே
ஏம்பல் வந்து எய்தச் சொல்லித் தேற்றினாய் அல்லையோ, நீ?
ஆம்பல் அம் பகைஞன் தன்னோடு அயிந்திரம் அமைந்தோன் அன்னாய்!

'தேற்றுவாய் தெரிந்து சொல்லால் தெருட்டுவாய் தெளிவிலோரை
ஆற்றுவாய் அல்லை; நீயும் அஞ்சினை போலும்! ஆவி
போற்றுவாய் என்ற போது, புகழ் என் ஆம்? புலமை என் ஆம்?
கூற்றின்வாய் உற்றால், வீரம் குறைவரே இறைமை கொண்டார்?

40. உறையிடுதல் - பேரளவுள்ள பொருளை எண்ணும்போது கணக்குத் தெரியுமாறு நூற்றுக்கு ஒன்று என இவ்வாறாகக் குறித்தல்; 41. கூலம் - கரை; 45. ஆம்பல் அம் பகைஞன் - அல்லி மலர்ப் பகைவனாகிய அழகிய சூரியன்; 46. இறைமை - தலைமைக் குணம்.

'அஞ்சினாம்; பழியும் பூண்டாம்; அம் புவி யாண்டும், ஆவி
துஞ்சுமாறு அன்றி, வாழ ஒண்ணுமோ, நாள்மேல் தோன்றின்?
நஞ்சு வாய் இட்டாலன்னது அமுது அன்றோ? நம்மை, அம்மா,
தஞ்சம் என்று அணைந்த வீரர் தனிமையின் சாதல் நன்றே! 47

'தானவரோடும், மற்றைச் சக்கரத் தலைவனோடும்,
வானவர் கடைய மாட்டா மறி கடல் கடைந்த வாலி-
ஆனவன் அம்பு ஒன்றாலே உலந்தமை அயர்த்தது என் நீ?
மீன் அலர் வேலை பட்டது உணர்ந்திலைபோலும்?—மேலோய்!

'எத்தனை அரக்கரேனும், தருமம் ஆண்டு இல்லை அன்றே;
அத்தனை அறத்தை வெல்லும் பாவம் என்று அறிந்தது உண்டோ?
பித்தரைப் போல நீயும் இவருடன் பெயர்ந்த தன்மை
ஒத்திலது' என்னச் சொன்னான், அவன் இவை உரைப்பதானான்:

சாம்பன் மறுமொழி

நாணத்தால் சிறிது போது நலங்கினன் இருந்து, பின்னர்,
'தூண் ஒத்த திரள் தோள் வீர! தோன்றிய அரக்கர் தோற்றம்
காணத்தான், நிற்கத்தான், அக் கறை மிடற்றவற்கும் ஆமே?
கோணற் பூ உண்ணும் வாழ்க்கைக் குரங்கின்மேல் குற்றம் உண்டோ?

'தேவரும் அவுணர்தாமும் செருப் பண்டு செய்த காலம்,
ஏவரே என்னால் காணப்பட்டிலர்? இருக்கை ஆன்ற
மூவகை உலகின் உள்ளார்; இவர் துணை ஆற்றல் முற்றும்
பாவகர் உளரே? கூற்றை அஞ்சினால், பழியும் உண்டோ? 51

'மாலியைக் கண்டேன்; பண்டை, மாலியவானைக் கண்டேன்;
கால நேமியையும் கண்டேன்; இரணியன்தனையும் கண்டேன்;
ஆல மா விடமும் கண்டேன்; மதுவினை அனுசனோடும்
வேலையைக் கலக்கக் கண்டேன்; இவர்க்கு உள மிடுக்கும் உண்டோ? 52

'வலி இதன் மேலே, பெற்ற வரத்தினர்; மாயம் வல்லார்;
ஒலி கடல் மணலின் மிக்க கணக்கினர்; உள்ளம் நோக்கின்,
கலியினும் கொடியர்; கற்ற படைக்கலக் கரத்தர்; என்றால்,
மெலிகுவது அன்றி உண்டோ, விண்ணவர் வெருவல் கண்டால்?

47. நாள்மேல் தோன்றல் - இயமன் நம்முடைய வாழ்நாளை முடித்தற்பொருட்டுத் தோன்றுதல்; போரில் மடியாது தப்பினோம் என்றால் அக் காலத்து நாம் நுகரும் இனிய அமுதும் இன்னாத நஞ்சினை வாயில் இட்டால் ஒத்த வெறுப்பினை விளைப்பதாகும் என்பது மூன்றாம் அடியின் கருத்து. 48. அலர்தல் - விளங்குதல். 50. கோணற் குரங்கு - கூன் உடைய குரங்கு; 51. பாவகர் - கொடியோர்; 52. கால நேமி - இரணியன் மகன், நூறு தலைகளையும் நூறு கைகளையும் படைத்தவன்; மது - ஓர் அசுரன்; அனுசன் - தம்பி; மதுவின் தம்பியாகிய கைடபன்; 53. கலி - கலி புருடன்.

'ஆகினும், ஐய! உண்டால், ஆர்க்கேனும் அமரின் அஞ்சிச்
சாகினும், பெயர்ந்த தன்மை பழி தரும்: நரகில் தள்ளும்;
ஏகுதும், மீள; இன்னும் இயம்புவது உளதால்; எய்தி,
மேகமே அனையான் கண்முன் எங்ஙனம் விழித்து நிற்றும்? 54

'எடுத்தலும், சாய்தல்தானும், எதிர்த்தலும் எதிர்ந்தோர்தம்மைப்
படுத்தலும், வீர வாழ்க்கை பற்றினர்க்கு உற்ற, மேல்நாள்;
அடுத்ததே அஃது; நிற்க, அன்றியும் ஒன்று கூறக்
கடுத்தது; கேட்டீர் நீரும் கருத்துளீர், கருதி நோக்கின். 55

'ஒன்றும் நீர் அஞ்சல், ஐய! யாம் எலாம் ஒருங்கு சென்று,
நின்றும், ஒன்று இயற்றல் ஆற்றேம்; நேமியான் தானே நேர்ந்து,
கொன்று போர் கடக்கும்ஆயின், கொள்ளுதும் வென்றி; அன்றேல்,
பொன்றுதும், அவனோடு' என்றான்; 'போதலோ' புகழ் அன்று என்றான்.

வானரப்படை மீளலும் அரக்கர் படைபற்றி இராமன் உரைத்தலும்

'ஈண்டிய தானை நீங்க, நிற்பது என்? யாமே சென்று,
பூண்ட வெம் பழியினோடும் போந்தனம்; போதும்' என்னா,
மீண்டனர் தலைவர் எல்லாம், அங்கதனோடும்; வீரன்
மூண்ட வெம் படையை நோக்கி, தம்பிக்கு மொழிவதானான்:

'அத்த! நீ உணர்தி அன்றே, அரக்கர்தான், அவுணரேதான்,
எத்தனை உளர்என்றாலும், யான் சிலை எடுத்தபோது,
தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்சு எனத் தொலையும் தன்மை!
ஒத்தது; ஓர் இடையூறு உண்டு என்று உணர்விடை உதிப்பது அன்றால்.

வானரச் சேனையைக் காக்குமாறு இராமன் தம்பிக்கு உரைத்தல்

'காக்குநர் இன்மை கண்ட கலக்கத்தால், கவியின் சேனை
போக்கு அறப் போகித் தம்தம் உறைவிடம் புகுதல் உண்டால்;
தாக்கி, இப் படையை முற்றும் தலை துமிப்பளவும், தாங்கி,
நீக்குதி, நிருதர் ஆங்கு நெருக்குவார் நெருங்காவண்ணம். 59

'இப் புறத்து இனைய சேனை ஏவி, ஆண்டு இருந்த தீயோன்,
அப் புறத்து அமைந்த சூழ்ச்சி அறிந்தவன், அயலே வந்து,
தப்பு அறக் கொன்று நீக்கில், அவனை யார் தடுக்கத் தக்கார்,—
வெப்புறுகின்றது உள்ளம்,—வீர! நீ அன்றி, வில்லோர்? 60

57. வீரன் - இராமன்; 58. தொத்துறு கனல் - திரளாகப் பொருந்திய நெருப்பு; 60. வெப்புறுதல் - வெதும்பி வருந்துதல்.

'மாருதியோடு நீயும், வானரக்கோனும், வல்லே,
பேருதிர் சேனை காக்க; என்னுடைத் தனிமை பேணிச்
சோருதிர்என்னின், வெம் போர் தோற்றும், நாம்' என்னச்சொன்னான்,
வீரன்; மற்று அதனைக் கேட்ட இளையவன் விளம்பலுற்றான்: 61

அனுமன் இராமனுக்கு அருகே இருக்க வேண்டுதல்

'அன்னதே கருமம்; ஐய! அன்றியும், அருகே நின்றால்,
என் உனக்கு உதவி செய்வது—இது படை என்ற போது,
சென்னியில் சுமந்த கையர், தேவரே போல, யாமும்
பொன்னுடை வரிவில் ஆற்றல் புறன் நின்று காண்டல் போக்கி?'

என்று அவன் ஏகலுற்ற காலையின், அனுமன், 'எந்தாய்!
''புன் தொழில் குரங்கு'' எனாது, என் தோளின்மேல் ஏறிப் புக்கால்,
நன்று எனக் கருதா நின்றேன்; அல்லது, நாயினேன் உன்
பின் தனி நின்றபோதும், அடித் தொழில் பிரியேன்' என்றான்.

அனுமன் முதலியோரை இலக்குவன் பின் செல்ல இராமன் ஏவுதல்

'ஐய! நிற்கு இயலாது உண்டோ? இராவணன் அயலே வந்துற்று,
எய்யும் வில் கரத்து வீரன் இலக்குவன்தன்னோடு ஏற்றால்,
மொய் அமர்க் களத்தின் உன்னைத் துணை பெறான்என்னின், முன்ப!
செய்யும் மா வெற்றி உண்டோ? சேனையும் சிதையும் அன்றே?

'ஏரைக் கொண்டு அமைந்த குஞ்சி இந்திரசித்து என்பான்தன்
போரைக் கொண்டு இருந்த முன்நாள், இளையவன் தன்னைப் போக்கிற்று
ஆரைக் கொண்டு? உன்னால் அன்றே, வென்றது அங்கு அவனை? இன்
வீரர்க்கும் வீர! நின்னைப் பிரிகலன், வெல்லும் என்பேன். [னம்,

'சேனையைக் காத்து, என் பின்னே திரு நகர் தீர்ந்து போந்த
யானையைக் காத்து, மற்றை இறைவனைக் காத்து, எண் தீர்ந்த
வானை இத் தலத்தினோடும் மறையொடும் வளர்த்தி' என்றான்;
ஏனை மற்று உரைக்கலாதான், இளவல்பின் எழுந்து சென்றான்.

'வீடண! நீயும் மற்று உன் தம்பியோடு ஏகி, வெம்மை
கூடினர் செய்யும் மாயம் தெரிந்தனை கூறி, கொற்றம்
நீடுறு தானை தன்னைத் தாங்கினை, நில்லாய்என்னின்,
கேடு உளது ஆகும்' என்றான்; அவன் அது கேட்பதானான். 67

65. ஏர் - அழகு; 66. எண் தீர்ந்த வான் - மன எல்லையைக் கடந்து நின்ற வானுலகு; ஏனை மற்று உரைக்கலாதான் - மாறாக வேறு உரைக்கமாட்டாத வணங்கிய அனுமன்.

சூரியன் சேயும், செல்வன் சொற்றதே எண்ணும் சொல்லன்,
ஆரியன் பின்பு போனான்; அனைவரும், 'அதுவே நல்ல
காரியம்' என்னக் கொண்டார்; கடற்படை காத்து நின்றார்;
வீரியன் பின்னர்ச் செய்த செயல் எலாம் விரிக்கலுற்றாம்: 68

இராமன் முன்னணியில் வந்து பொருதல்

வில்லினைத் தொழுது, வாங்கி, ஏற்றினான்; வில் நாண் மேருக்
கல் எனச் சிறந்ததேனும், கருணை அம் கடலே அன்ன
எல் ஒளி மார்பில் தீராக் கவசம் இட்டு, இழையா வேதச்
சொல் எனத் தொலையா வாளித் தூணியும் புறத்துத் தூக்கி,

ஓசனை நூற்றின் வட்டம் இடைவிடாது உறைந்த சேனைத்
தூசி வந்து அண்ணல்தன்னைப் போக்கு அற வளைந்து சுற்றி,
வீசின படையும் அம்பும் மிடைதலும், விண்ணோர் ஆக்கை
கூசின, பொடியால்; எங்கும் குமிழ்த்தன, வியோம கூடம். 70

'கண்ணனே! எளியேம் இட்ட கவசமே! கடலே அன்ன
வண்ணனே! அறத்தின் வாழ்வே! மறையவர் வலியே! மாறு து
ஒண்ணுமே, நீ அலாது, ஓர் ஒருவர்க்கு இப் படைமேல் ஊன்ற?
எண்ணமே முடித்தி!' என்னா, ஏத்தினர், இமையோர் எல்லாம்.

முனிவரே முதல்வர் ஆய அறத் துறை முற்றினோர்கள்,
தனிமையும், அரக்கர் தானைப் பெருமையும், தரிக்கலாதார்,
பனி வரு கண்ணர், விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர், 'பாவத்து,
அனைவரும் தோற்க! அண்ணல் வெல்க!' என்று ஆசி சொன்னார்.

இராமன் தனியே நின்று பொருதல்

'இரிந்து சேனை சிந்தி, யாரும் இன்றி ஏக, நின்று, நம்
விரிந்த சேனை கண்டு, யாதும் அஞ்சல் இன்றி, வெஞ் சரம்
தெரிந்த சேவகம் திறம்பல் இன்றி நின்ற செய்கையான்
புரிந்த தன்மை வென்றி மேலும் நன்று! மாவி பொய்க்குமோ?

'புரங்கள் எய்த புங்கவற்கும் உண்டு தேர்; பொருந்தினர்,
பரந்த தேவர்; மாயன் நம்மை வேர்அறுத்த பண்டை நாள்,
விரைந்து புள்ளின்மீது விண்ணுளோர்களோடு மேவினன்;
கரந்திலன், தனித்து ஒருத்தன் நேரும், வந்து, காலினன். 74

68. வீரியன் - இராமன்; 69. இழையா வேதம் - செய்யப்படாத வேதம்; 70. தூசி - முன்னணிப் படை; பொடி - புழுதித் துகள்; வியோம கூடம் - வானப் பரப்பு; 71. படைமேல் ஊன்றல் - தன் மேல் வந்த பகைப் படையினை எதிர்த்து நின்று பொருதல்; 73. சேவகம் - வீரர்க்குரிய கட்டுப்பாடு.

'தேரும், மாவும், யானையோடு சீயம், யாளி, ஆதியா
மேரு மானும் மெய்யர் நின்ற வேலை ஏழின் மேலவா;
"வாரும், வாரும்" என்று அழைக்கும் மானுடற்கு, இம் மண்ணிடைப்
பேருமாறும் நம்முழைப் பிழைக்குமாறும் எங்ஙனே?' 75

என்று சென்று, அடர்த்து இடைந்து, ஓர் சீய ஏறு அடர்ந்ததைக்
குன்று வந்து சூழ் வளைந்தபோல், தொடர்ந்து கூடலும்,
'நன்று இது!' என்று, ஞாலம் ஏழும் நாகம் ஏழும் மானும் தன்
வென்றி வில்லை வேத நாதன் நாண் எறிந்த வேலைவாய், 76

கதம் புலர்ந்த, சிந்தை வந்த, காவல் யானை; மாவொடு
மதம் புலர்ந்த; நின்ற வீரர் வாய் புலர்ந்த; மா எலாம்
பதம் புலர்ந்த; வேகம் ஆக, வாள் அரக்கர் பண்பு சால்
விதம் புலர்ந்தது; என்னின், வென்ற வென்றி சொல்ல வேணுமோ?

வெறித்து இரிந்த வாசியோடு, சீய மாவும் மீளியும்,
செறித்து அமைந்த சில்லி என்னும் ஆழி கூடு தேர் எலாம்
முறித்து எழுந்த முற்கை யானை வீசும் மூசு பாகரைப்
பிறித்து இரிந்து சிந்த, வந்து ஓர் ஆகுலம் பிறந்ததால். 78

'இந் நிமித்தம் இப் படைக்கு இடம் துடித்து அடுத்தது ஓர்
துன்னிமித்தம்' என்று கொண்டு, வானுளோர்கள் துள்ளினர்;
அந் நிமித்தம் உற்ற போது, அரக்கர் கண்அரங்க, மேல்
மின் நிமிர்த்தது அன்ன வாளி வேதநாதன் வீசினன். 79

ஆளி மேலும், ஆளின் மேலும், ஆனை மேலும், ஆடல் மா
மீளி மேலும், வீரர் மேலும், வீரர் தேரின் மேலும், வெவ்
வாளி மேலும், வில்லின் மேலும், மண்ணின்மேல் வளர்ந்த மாத்
தூளி மேலும் ஏற ஏற, வீரன் வாளி தூவினன். 80

மலை விழுந்தவா விழுந்த, மான யானை; மள்ளர் செந்
தலை விழுந்தவா விழுந்த, தாய வாசி; தாள் அறும்
சிலை விழுந்தவா விழுந்த, திண் பதாகை; திங்களின்
கலை விழுந்தவா விழுந்த, வெள் எயிற்ற காடு எலாம். 81

வாடை நாலு பாலும் வீச, மாக மேக மாலை வெங்
கோடை மாரி போல வாளி கூட, ஓடை யானையும்,
ஆடல் மாவும், வீரர் தேரும், ஆளும், மாள்வது ஆனவால்;
பாடு பேருமாறு கண்டு, கண் செல் பண்பும் இல்லையால். 82

75. பேருமாறு - தப்பிப் போகும் வகை; 76. நாகம் - மேலுலகம்; மானும் - ஒக்கும்; 77. பதம் - கால்கள்; 78. வாசி - குதிரை; மீளி - பேய்; மூசுதல் - மொய்த்தல்; 79. கண்அரங்க - கண் கலங்கி வருந்த; 81. தாய - தாவிய; தாள் அறும் சிலை - அடியற்ற விற்கள்.

விழித்த கண்கள், கைகள், விற்கள், வேல்கள், வாள்கள், விண்ணினுள்
தெழித்த வாய்கள், செல்லலுற்ற தாள்கள், தோள்கள், செல்லினைப்
பழித்த வாளி சிந்த, நின்று பட்ட அன்றி, விட்ட கோல்
கழித்த ஆயுதங்கள் ஒன்று செய்தது இல்லை கண்டதே. 83

தொடுத்த வாளியோடு வில் துணிந்து வீழும், முன்; துணிந்து
எடுத்த வாள்களோடு தோள்கள் இற்று வீழும்; மற்று உடன்
கடுத்த தாள்கள் கண்டம் ஆகும்; எங்ஙனே, கலந்து நேர்
தடுத்து வீரர்தாமும் ஒன்று செய்யுமா, சலத்தினல்? 84

குரம் துணிந்து, கண் சிதைந்து, பல்லணம் குலைந்து, பேர்
உரம் துணிந்து, வீழ்வது அன்றி, ஆவி ஓட ஒண்ணுமே—
சரம் துணிந்த ஒன்றை நூறு சென்று சென்று தள்ளலால்,
வரம் துணிந்த வீரர் போரின் முந்த உந்து வாசியே? 85

ஊர உன்னின், முன்பு பட்டு உயர்ந்த வெம் பிணங்களால்,
பேர ஒல்வது அன்று; பேரின், ஆயிரம் பெருஞ் சரம்
தூர, ஒன்று நூறு கூறுபட்டு உகும்; துயக்கு அலால்,
தேர்கள் என்று வந்த பாவி என்ன செய்கை செய்யுமே?* 86

எட்டு வன் திசைக்கண் நின்ற யாவும், வல்ல யாவரும்,
கிட்டின், உய்ந்து போகிலார்கள் என்ன நின்ற, கேள்வியால்;
முட்டும் வெங் கண் மான யானை, அம்பு உராய, முன்னமே
பட்டு வந்தபோல் விழுந்த; என்ன தன்மை பண்ணுமே?* 87

வாவி கொண்ட புண்டரீகம் அன்ன கண்ணன் வாளி ஒன்று
ஏவின், உண்டை நூறு கோடி கொல்லும் என்ன, எண்ணுவான்
பூவின் அண்டர் கோனும், எண் மயங்கும்; அன்ன போரின் வந்து
ஆவி கொண்ட காலனுர் கடுப்பும் அன்னது ஆகுமே? 88

கொடிக் குலங்கள், தேரின் மேல, யானை மேல, கோடை நாள்
இடிக் குலங்கள் வீழ வெந்த காடுபோல் எரிந்தவால்—
முடிக் குலங்கள் கோடி கோடி சிந்த, வேகம் முற்றுரு
வடிக் குலங்கள் வாளி ஓட வாயினூடு தீயினல்!* 89

85. குரம் - குளம்பு; பல்லணம் - குதிரைக் கலன்; துணிந்த ஒன்று - தனக்கு இலக்காகத் துணிந்த ஒன்று; 86. துயக்கு - மனச்சோர்வு; 87. கேள்வி - கேட்கப்படுவது, ஈண்டுப் புகழ்; 88. கடுப்பு - விரைவு; 89. வடி வாளிக் குலங்கள் என மாற்றுக.

அற்ற வேலும் வாளும் ஆதி ஆயுதங்கள் மீது எழுந்து,
உற்ற வேகம் உந்த ஓடி, ஓத வேலை ஊடுற,
துற்ற வெம்மை கைம்மிக, சுறுக்கொளச் சுவைத்ததால்,
வற்றி நீர் வறந்து, மீன் மறிந்து, மண் செறிந்தவால். 90

போர் அரிந்தமன் துரந்த புங்க வாளி, பொங்கினர்
ஊர் எரிந்த நாள் துரந்தது என்ன மின்னி ஓடலால்,
நீர் எரிந்த வண்ணமே, நெருப்பு எரிந்த, நீள் நெடுந்
தேர் எரிந்த, வீரர்தம் சிரம் பொடிந்து சிந்தவே. 91

பிடித்த வாள்கள் வேல்களோடு, தோள்கள் பேர் அரா எனத்
துடித்த; யானைமீது இருந்து போர் தொடங்கு சூரர்தம்
மடித்த வாய்ச் செழுந் தலைக் குலம் புரண்ட, வானின் மின்
இடித்த வாயின் இற்ற மா மலைக் குலங்கள் என்னவே. 92

கோர ஆளி, சீயம், மீளி, கூளியோடு ஞாளியும்,
போர வாளினோடு தேர்கள் நூறு கோடி பொன்றுமால்—
நார ஆளி, ஞால ஆளி, ஞான ஆளி, நாந்தகப்
பார ஆளி, வீர ஆளி, ஏக வாளி பாயவே. 93

ஆழி பெற்ற தேர் அழுந்தும்; ஆள் அழுந்தும்; ஆளொடும்
சூழி பெற்ற மா அழுந்தும்; வாசியும் சுரிக்குமால்;—
பூழி பெற்ற வெங் களம் குளம் பட, பொழிந்த பேர்
ஊழி பெற்ற ஆழி என்ன சோரி நீரினுள்அரோ. 94

அற்று மேல் எழுந்த வன் சிரங்கள்தம்மை அண்மி, மேல்
ஒற்றும் என்ன அங்கும் இங்கும் விண்ணுளோர் ஒதுங்குவார்;
'சுற்றும் வீழ் தலைக் குலங்கள் சொல்லு கல்லின் மாரிபோல்
எற்றும்' என்று, பாரின் எங்கும் வாழுவார்; இரங்குவார். 95

மழைத்த மேகம் வீழ்வ என்ன, வான மானம் வாடையின்
சுழித்து வந்து வீழ்வ என்ன, மண்ணின்மீது துன்னுமால்—
அழித்து ஒடுங்கு கால மாரி அன்ன வாளி ஒளியால்,
விழித்து எழுந்து, வானினூடு மொய்த்த டொய்யர் மெய் எல்லாம். 96

90. சுறுக்கொளல் - தீயிற்பட்டுப் பழுக்கக் காய்ந்த படைக்கலங்கள் கடல் நீரில் விழுந்தபொழுது உண்டாகிய சுறு என்னும் ஓசை; சுவைத்தல் - பருகுதல்; 91. அரிந்தமன் - பகைவரை அடக்குவோன்; 92. இடித்த வாய் - இடி தாக்கிய இடம்; 93. ஞாளி - நாய்; நார ஆளி - உயிர்கள்தோறும் கரந்து நின்று ஆள்பவன்; ஞான ஆளி - ஞானமே திருமேனியாகக் கொண்டு ஆள்பவன்; நாந்தகப் பார ஆளி - நாந்தகம் என்னும் பெருமை வாய்ந்த வாட் படையை உடையவன்; 95. எற்றுதல் - தாக்குதல்; 96. வான மானம் - வானிடத்தே செல்லும் விமானம்; வாளி ஒளி - அம்பின் தொகுதி.

தெய்வ நெடும் படைக் கலங்கள் விடுவர் சிலர்;
சுடு கணைகள் சிலையில் கோலி,
எய்வர் சிலர்; எறிவர் சிலர்; எற்றுவர்
சுற்றுவர், மலைகள் பலவும் ஏந்தி;
பெய்வர் சிலர்; 'பிடித்தும்' எனக் கடுத்து உறுவர்;
படைக் கலங்கள் பெறாது, வாயால்,
வைவர் சிலர்; தெழிப்பர் சிலர்; வருவர் சிலர்;
திரிவர் சிலர்—வயவர் மன்னோ. 97

ஆர்ப்பர் பலர்; அடர்ப்பர் பலர்; அடுத்து அடுத்தே,
படைக் கலங்கள் அள்ளி அள்ளித்
தூர்ப்பர் பலர்; மூவிலைவேல் துரப்பர் பலர்;
கரப்பர் பலர்; சுடு தீத் தோன்றப்
பார்ப்பர் பலர்; நெடு வரையைப் பறிப்பர் பலர்;—
பகலோனைப் பற்றிச் சுற்றும்
கார்ப் பருவ மேகம் என, வேக நெடும்
படை அரக்கர் கணிப்பு இலாதார். 98

எறிந்தனவும், எய்தனவும், எடுத்தனவும்,
பிடித்தனவும், படைகள் எல்லாம்
முறிந்தன, வெங் கணைகள் பட; முற்றின,
சுற்றின தேரும், மூரி மாவும்;
நெறிந்தன குஞ்சிகளோடும் நெடுந் தலைகள்
உருண்டன; பேர் இருளின் நீங்கி,
பிறிந்தனன் வெய்யவன் என்னப் பெயர்ந்தனன்—மீது
உயர்ந்த தடம் பெரிய தோளான். 99

சொல் அறுக்கும் வலி அரக்கர், தொடு கவசம்
துகள் படுக்கும்; துணிக்கும் யாக்கை;
வில் அறுக்கும்; தலை அறுக்கும்; மிடல் அறுக்கும்;
அடல் அறுக்கும்; மேல் மேல் வீசும்
கல் அறுக்கும்; மரம் அறுக்கும்; கை அறுக்கும்;
செய்ய மள்ளர் கமலத்தோடு
நெல் அறுக்கும் திரு நாடன் நெடுஞ் சரம்
என்றால், எவர்க்கும் நிற்கலாமோ? 100

100. சொல் அறுக்கும் வலி - சொல்ல முடியாத உடல் வலிமை; திரு நாடன் - கோசல நாட்டையுடையானாகிய இராமன்;

'கால் இழந்தும், வால் இழந்தும், கை இழந்தும்,
கழுத்து இழந்தும், பருமக் கட்டின்
மேல் இழந்தும், மருப்பு இழந்தும், விழுந்தன'
என்குநர் அல்லால், வேலை அன்ன
மால் இழந்து, மழை அனைய மதம் இழந்து;
வலி இழந்து, மலைபோல் வந்த
தோல் இழந்த தொழில் ஒன்றும் சொல்லினர்கள்
இல்லை—நெடுஞ் சுரர்கள் எல்லாம். 101

வேல் செல்வன, சத கோடிகள்; விண்மேல் நிமிர் விசிகக்
கோல் செல்வன, சத கோடிகள்; கொலை செய்வன, மலையை;
தோல் செல்வன, சத கோடிகள்; துரகம் தொடர் இரதக்
கால் செல்வன, சத கோடிகள்; ஒருவன், அவை கடிவான்! 102

ஒரு வில்லியை, ஒரு காலையின், உலகு ஏழையும் உடற்றும்
பெரு வில்லிகள், முடிவு இல்லவர், சர மா மழை பெய்வார்;
பொரு வில்லவர் கணை மாரிகள் பொடியாம் வகை பொழிய,
திருவில்லிகள் தலை போய் நெடு மலைபோல் உடல் சிதைவார்.

'நூறாயிர மத யானையின் வலியோர்' என நுவல்வோர்,
மாறு ஆயினர், ஒரு கோல் பட, மலை போல் உடல் மறிவார்;
ஆறு ஆயிரம் உளவாகுதல் அழி செம் புனல் அவை புக்கு,
ஏறுது, எறி கடல் பாய்வன, சின மால் கரி இனமால். 104

மழு அற்று உகும்; மலை அற்று உகும்; வளை அற்று உகும்; வயிரத்து
எழு அற்று உகும்; அயில் அற்று உகும்; இலை அற்று உகும்; எழு வேல்;
பழு அற்று உகும், மத வெங் கரி; பரி அற்று உகும்; இரதக்
குழு அற்று உகும்;— ஒரு வெங் கணை தொடை பெற்றது ஓர் குறியால்.

ஒரு காலையின், உலகத்து உறும் உயிர் யாவையும் உண்ண
வரு காலனும், அவன் தூதரும், நமன்தானும், அவ் வரைப்பின்
இரு கால் உடையவர் யாவரும் திரிந்தார் இளைத்திருந்தார்;
அருகு ஆயிரம் உயிர் கொண்டு தம் ஆறு ஏகலர், அயர்த்தார். 106

அடுக்குற்றன மத யானையும், அழி தேர்களும், பரியும்
தொடுக்குற்றன விசும்பூடு உறச் சுமந்து ஓங்கின எனினும்,
மிடுக்குற்றன கவந்தக் குலம் எழுந்து ஆடலின், எல்லாம்
நடுக்குற்றன, பிணக் குன்றுகள், உயிர் நண்ணின என்ன.* 107

101. பருமக் கட்டு - அம்பாரி; தோல் - யானை; 102. சதம் - நூறு;
துரகம் - குதிரை; 105. பழு - விலா எலும்பு.

பட்டார் உடல் படு செம்புனல் திருமேனியில் படலால்,
கட்டு ஆர் சிலைக் கரு ஞாயிறு புரைவான், கடையுகநாள்,
சுட்டு, ஆசு அறுத்து உலகு உண்ணும் அச் சுடரோன் எனப் பொலிந்தான்;
ஒட்டார் உடல் குருதிக் குளித்து எழுந்தானையும் ஒத்தான்.*

தீ ஒத்தன உரும் ஒத்தன சரம் சிந்திட, சிரம் போய்
மாய, தமர் மடிகின்றனர் எனவும், மறம் குறையா,
காயத்திடை உயிர் உண்டிட, உடன் மொய்த்து எழு களியால்
ஈ ஒத்தன நிருதக் குலம்; நறவு ஒத்தனன் இறைவன்.* 109

மொய்த்தாரை ஓர் இமைப்பின்தலை, முடுகத் தொடு சிலையால்
தைத்தான்; அவர், கழல்-திண் பசுங் காய் ஒத்தனர், சரத்தால்;
கைத்தார் நெடுந் தேரும், கடுங் களிறும், களத்து அழுந்தக்
குத்தான், அழி குழம்பு ஆம்வகை, வழுவாச் சரக் குழுவால்.*

பிரிந்தார் பலர்; இரிந்தார் பலர்; பிழைத்தார் பலர்; உழைத்தார்;
புரிந்தார் பலர்; நெரிந்தார் பலர்; புரண்டார் பலர்; உருண்டார்;
எரிந்தார் பலர்; கரிந்தார் பலர்; எழுந்தார் பலர்; விழுந்தார்;
சொரிந்தார் குடல்; துமிந்தார் தலை; கிடந்தார், எதிர் தொடர்ந்தார்.

மணி குண்டலம், வலயம், குழை, மகரம், சுடர் மகுடம்,
அணி கண்டிகை, கவசம், கழல், திலகம், முதல் அகலம்
துணியுண்டவர் உடல், சிந்தின; சுடர்கின்றன தொடரும்
திணி கொண்டலினிடை மின் குலம் மிளிர்கின்றன சிவண.*

முன்னே உளன்; பின்னே உளன்; முகத்தே உளன்; அகத்தின்-
தன்னே உளன்; மருங்கே உளன்; தலைமேல் உளன்; மலைமேல்
கொன்னே உளன்; நிலத்தே உளன்; விசும்பே உளன்; கொடியோர்,
'என்னே ஒரு கடுப்பு!' என்றிட, இருஞ் சாரிகை திரிந்தான்.

'என் நேரினன்; என் நேரினன்' என்று யாவரும் எண்ண,
பொன் நேர் வரு வரி வில் கரத்து ஒரு கோளரி பொருவான்,
ஒன்னார் பெரும் படைப் போர்க் கடல் உறை அன்று உளது எனினும்,
அல் நேரலர் உடனே திரி நிழலே எனல் ஆனான். 114

பள்ளம் படு கடல் ஏழினும், படி ஏழினும், பகையின்
வெள்ளம் பல உள என்னினும், வினையம் பல தெரியா,
கள்ளம் படர் பெரு மாயையின் கரந்தார், உருப் பிறந்தார்
உள் அன்றியும், புறத்தேயும் உற்று, உளனும் என உற்றான்.*

110. கழல்-திண் பசுங்காய் - பசிய கழற்சிக்காய்; கைத்தார் - தேரைச் செலுத்தி வந்த அரக்கர்; குத்தான் - உகுத்தான், முதற்குறை; 114. என் நேரினன் - என் நேரில் உள்ளான்; அல் நேரலர் - இருளை ஒத்த பகைவர்கள்.

நானுவிதப் பெருஞ் சாரிகை திரிகின்றது நவிலார்,
போனுன் இடை புகுந்தான், எனப் புலன் கொள்கிலர், மறந்தார்,
'தானுவதும் உணர்ந்தான், உணர்ந்து, உலகு எங்கணும் தானே
ஆனுன்; வினை துறந்தான்' என, இமையோர்களும் அயிர்த்தார்.

சண்டக் கடு நெடுங் காற்றிடை துணிந்து எற்றிட, தரைமேல்
கண்டப் படு மலைபோல், நெடு மரம்போல், கடுந் தொழிலோர்
துண்டப் பட, கடுஞ் சாரிகை திரிந்தான், சரம் சொரிந்தான்—
அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தான், நிமிர்ந்து அகன்ருன்.

களி யானையும், நெடுந் தேர்களும், கடும் பாய் பரிக் கணனும்,
தெளி யாளியும், முரட் சீயமும், சின வீரர்தம் திறமும்,
வெளி வானகம் இலதாம்வகை விழுந்து ஓங்கிய பிணப் பேர்
நளிர் மா மலை பல தாவினன், நடந்தான்—கடல் கிடந்தான்.

அம்பரங்கள் தொடும் கொடி ஆடையும்,
அம்பரங்களொடும் களி யானையும்,
அம்பு அரங்க, அழுந்தின, சோரியின்,
அம்பரம் கம் அருங் கலம் ஆழ்ந்தென. 119

கேட கங்கண அம் கையொடும் கிளர்
கேடகங்கள் துணிந்து கிடந்தன;
கேடு அகம் கிளர்கின்ற களத்த நன்கு
ஏட கங்கள் மறிந்து கிடந்தவே.* 120

அங்கதம் களத்து அற்று அழி தாரொடும்
அம் கதம் களத்து அற்று அழிவுற்றவால்—
புங்கவன் கணைப் புட்டில் பொருந்திய
புங்க வன் கணைப் புற்று அரவம் பொர.* 121

தம் மனத்தில் சலத்தர் மலைத் தலை
வெம்மை உற்று எழுந்து ஏறுவ மீளுவ,
தெம் முனைச் செரு மங்கை தன் செங் கையால்
அம்மனைக் குலம் ஆடுவ போன்றவே. 122

119. அம்பரங்கள் - முதலடியில் ஆகாயம்; இரண்டாம் அடியில் அம்பாரிகள்; நான்காம் அடியில் கடல்; கம் - நீர்; கலம் - நாவாய்; 120. கேட - அழித்தற்ருெழிலையுடைய; ஏட கங்கள் - (தும்பை) மலர் மாலையையுடைய தலைகள்; 121. அங்கதம் - தோள் வளை; அம் கதம் - வீரர்க்கு அழகினைத் தரும் வெகுளி; புங்க வன் கணை - கூரிய நுனியையுடைய வலிய கணை; 122. அம்மனைக் குலம் - அம்மனைக் காய்களின் தொகுதி.

கயிறு சேர் கழல் கார் நிறக் கண்டகர்
எயிறு வாளி படத் துணிந்து, யானையின்
வயிறுதோறும் மறைவன, வானிடைப்
புயல்தொறும் புகு வெண் பிறை போன்றவே.* 123

வென்றி வீரர் எயிறும், விடா மதக்
குன்றின் வெள்ளை மருப்பும், குவிந்தன—
என்றும் என்றும் அமைந்த இளம் பிறை
ஒன்றி மா நிலத்து உக்கவும் ஒத்தவால். 124

ஓவிலார் உடல் உந்து உதிரப் புனல்
பாவி வேலை உலகு பரத்தலால்,
தீவுதோறும் இனிது உறை செய்கையார்,
ஈவு இலாத நெடு மலை ஏறினர். 125

விண் நிறைந்தன, மெய் உயிர்; வேலையும்,
புண் நிறைந்த புனலின் நிறைந்தன;
மண் நிறைந்தன, பேர் உடல்; வானவர்
கண் நிறைந்தன, வில் தொழில் கல்வியே.* 126

செறுத்த வீரர் பெரும் படை சிந்தின,
பொறுத்த சோரி புகக் கடல் புக்கன,
இறுத்த நீரின் செறிந்தன, எங்கணும்
அறுத்து, மீனம் உலந்த அனந்தமே.* 127

வன்னி, வெகுண்டு பேசுதல்

'ஒல்வதே! இவ் ஒருவன், இவ் ஊகத்தைக்
கொல்வதே, நின்று! குன்று என யாம் எலாம்
வெல்வது ஏதும் இலாமையின், வெண் பலை
மெல்வதே!' என வன்னி விளம்பினன். 128

'கோல் விழுந்து அழுந்தாமுனம், கூடி யாம்
மேல் விழுந்திடினும், இவன் வீயுமால்;
கால் விழுந்த மழை அன்ன காட்சியீர்!
மால் விழுந்துளிர் போலும், மயங்கி, நீர்!* 129

124. என்றும் என்றும் - நாளும் நாளும்; 125. ஓவிலார் - பொருதல் தொழிலினின்றும் நீங்காத அரக்க வீரர்கள்; பாவி - பரவி; ஈவு - ஒழிதல், அழிதல்; 128. ஊகம் - வியூகம்; படை வகுப்பு; வன்னி - புட்கரத் தீவின் மன்னன், படையைத் தலைமை தாங்கி நடத்தியவன்; 129. மழை கால் விழுதல் - மழை பெய்தற்குக் கருமுகில் கால் கொண்டு இறங்குதல்.

'ஆயிரம் பெரு வெள்ளம் அரைபடத்
தேய நிற்பது; பின்பு, இனி என் செய?
பாயும், உற்று, உடனே' எனப் பன்னினான்.
நாயகற்கு ஓர் உதவியை நல்குவான்.* 130

உருத்து எழுந்த அரக்கர் படை இராம பாணத்தால் மடிதல்

உற்று, உருத்து எழு வெள்ளம் உடன்று எழா,
சுற்றும் முற்றும் வளைந்தன, தூவின—
ஒற்றை மால் வரைமேல் உயர் தாரைகள்
பற்றி மேகம் பொழிந்தென, பல் படை. 131

குறித்து எறிந்தன, எய்தன, கூறுறத்
தறித்த தேரும் களிறும் தரைப் பட,
மறித்த வாசி துணித்து, அவர் மாப் படை
தெறித்துச் சிந்த, சர மழை சிந்தினான். 132

வாய் விளித்து எழு பல் தலை வாளியில்
போய் விளித்த குருதிகள் பொங்கு உடல்,
பேய் விளிப்ப நடிப்பன, பெட்புறும்
தீ விளிப்புறு தீபம் நிகர்த்தவால்.* 133

நெய் கொள் சோரி நிறைந்த நெடுங் கடல்
செய்ய ஆடையள், அன்ன செஞ் சாந்தினள்,
வைய மங்கை பொலிந்தனள், மங்கலச்
செய்ய கோலம் புனைந்தன்ன செய்கையாள். 134

உப்பு, தேன், மது, ஒண் தயிர், பால், கரும்பு,
அப்புத்தான் என்று உரைத்தன ஆழிகள்
துப்புப்போல் குருதிப் புனல் சுற்றலால்,
தப்பிற்று அவ் உரை, இன்று ஓர் தனுவினால். 135

ஒன்றுமே தொடை; கோல் ஒரு கோடிகள்
சென்று பாய்வன; திங்கள் இளம் பிறை
அன்றுபோல் எனல் ஆகியது அச் சிலை;
என்று மாள்வர் எதிர்த்த இராக்கதர்? 136

130. உற்று உடனே பாயும் என இயையும்; 133. வாளியில் - அம்பினால்; விளிப்புறு தீபம் - கலங்கரை விளக்கம்; 135. அப்பு - நீர், ஈண்டுத் தூய நீர்க்கடல்; 136. தொடை - தொடுத்து விடுவது.

எடுத்தவர், இரைத்தவர், எறிந்தவர்,
செறிந்தவர், மறங்கொடு எதிரே
தடுத்தவர், சலித்தவர், சரிந்தவர்,
பிரிந்தவர், தனிக் களிறுபோல்
கடுத்தவர், கலித்தவர், கறுத்தவர்,
செறுத்தவர், கலந்து, சரம் மேல்
தொடுத்தவர், துணிந்தவர், தொடர்ந்தனர்,
கிடந்தனர்—துரந்த கணையால். 137

தொடுப்பது சுடர்ப் பகழி ஆயிரம்
நிரைத்தவை துரந்த துறை போய்ப்
படுப்பது, வயப் பகைஞர் ஆயிரரை
அன்று, பதினாயிரவரை;
கடுப்பு அது; கருத்தும் அது; கட்புலன்
மனம் கருதல் கல்வி இல; வேல்
எடுப்பது படப் பொருவது அன்றி, இவர்
செய்வது ஒரு நன்றி உளதோ? 138

தூசியொடு நெற்றி இரு கையினொடு
பேர் அணி கடைக் குழை தொகுத்து,
ஊசி நுழையா வகை சரத்து அணி
வகுக்கும்; அவை உண்ணும் உயிரை;
ஆசைகளை உற்று உருவும்; அப் புறமும்
ஓடும்; அதன் இப் புறம் உளார்,
ஈசன் எதிர் உற்று, உகுவது அல்லது, இகல்
முற்றுவது ஓர் கொற்றம் எவனோ? 139

ஊன் நகு வடிக் கணைகள் ஊழி அனல்
ஒத்தன; உலர்ந்த உலவைக்
கானகம் நிகர்த்தனர் அரக்கர்; மலை
ஒத்தன, களித்த மத மா;
மானவன் வயப் பகழி வீசு வலை
ஒத்தன; வளைப்புனலுள் வாழ்
மீன குலம் ஒத்தன, கடற் படை,
இனத்தொடும் விளிந்துறுதலால். 140

138. நன்றி - நற்செயல்; 139. தூசி, நெற்றி, கை (கைகோட் படை), பேரணி, கடைக் குழை (கூழை) என்பன படை வகைகள்; 140. நகுதல் - விளங்குதல்; மானவன் - மனுகுலத்தில் தோன்றியவன், இராமன்.

ஊழி இறுதிக் கடுகு மாருதமும்
ஒத்தனன், இராமன்; உடனே
பூழி என உக்கு உதிரும் மால் வரைகள்
ஒத்தனர், அரக்கர், பொருவார்;
ஏழ் உலகும் உற்று உயிர்கள் யாவையும்
முருக்கி, இறுதிக்கணின் எழும்
ஆழியையும் ஒத்தனன்; அம் மன்னுயிரும்
ஒத்தனர், அலேக்கும் நிருதர். 141

மூல முதல்ஆய், இடையும் ஆய், இறுதி
ஆய், எவையும் முற்றும் முயலும்
காலம் எனல் ஆயினன் இராமன்; அவ்
அரக்கர், கடைநாளில் விளியும்
கூலம் இல் சராசரம் அனைத்தினையும்
ஒத்தனர்; குரை கடல் எழும்
ஆலம் எனலாயினன் இராமன்; அவர்
மீனம் எனல் ஆயினர்களால். 142

வஞ்ச வினை செய்து, நெடு மன்றில் வளம்
உண்டு, கரி பொய்க்கும் மறம் ஆர்
நெஞ்சம் உடையோர்கள் குலம் ஒத்தனர்,
அரக்கர்; அறம் ஒக்கும் நெடியோன்;
நஞ்ச நெடு நீரினையும் ஒத்தனன்;
அடுத்து அதனை நக்குநரையும்,
பஞ்சம் உறு நாளில் வறியோர்களையும்,
ஒத்தனர், அரக்கர், படுவார். 143

வெள்ளம் ஒரு நூறு படும் வேலையின், அவ்
வேலையும் இலங்கை நகரும்,
பள்ளமொடு மேடு தெரியாதவகை
சோர் குருதி பம்பி எழலும்,
உள்ளும் மதிலும் புறமும் ஒன்றும் அறியாது
அலறி ஓடினர்களால்,
கள்ள நெடு மான் விழி அரக்கியர்
கலக்கமொடு கால்கள் குலேவார் 144

141. பூழி - புழுதி; 142. கூலம் - அளவு, எல்லே; சர அசரம் - இயங்குவன நிற்பனவாகிய உயிர்த்தொகுதிகள்; ஆலம் - ஆலகால நஞ்சு; 143. நெடு மன்று - பெருமை வாய்ந்த நீதிமன்றம்; வளம் உண்ணுதல் - கைக்கூலியாகிய பொருளேப் பெற்று உயிரோம்புதல்; கரி பொய்த்தல் - பொய்ச் சான்று பகர்தல்; 144. வேலே - முன்னது பொழுது, பின்னது கடல்.

நீங்கினர், நெருங்கினர் முருங்கினர்;
        உலைந்து உலகில் நீளும் மலைபோல்
வீங்கின, பெரும் பிணம் விசும்பு உற;
        அசும்பு படு சோரி விரிவுற்று,
ஓங்கின, நெடும் பரவை, ஒத்து உயர
        எத் திசையும் உற்று, எதிர் உற;
தாங்கினர், படைத் தலைவர், நூறு சத
        கோடியர், தடுத்தல் அரியார். 145

தேரும், மதமாவும், வரை ஆளியொடு
        வாசி, மிகு சீயம், முதலா
ஊரும் அவை யாவையும் நடாயினர்,
        கடாயினர்கள், உந்தினர்களால்;
காரும் உரும்ஏறும் எரிஏறும் நிகர்
        வெம் படையொடு அம்பு கடிதின்
தூரும்வகை தூவினர்; துரந்தனர்கள்,
        எய்தனர், தொடர்ந்தனர்களால். 146

'வம்மின், அட, வம்மின்! எதிர் வந்து, நுமது
        ஆர் உயிர் வரங்கள் பிறவும்
தம்மின்!' என இன்னன மொழிந்து, எதிர்
        பொழிந்தன, தடுப்ப அரியவாம்,
வெம் மின் என, வெம் பகழி, வேலை என
        ஏயினன்; அவ் வெய்ய வினையோர்
தம் இனம் அனைத்தையும் முனைந்து எதிர்
        தடுத்தனன், தனித் தனிஅரோ. 147

அக் கணையை அக் கணம் அறுத்தனர்
        செறுத்து, இகல் அரக்கர் அடைய,
புக்கு அணையலுற்றனர், மறைத்தனர்
        புயற்கு அதிகம் வாளி பொழிவார்,
திக்கு அணை வகுத்தனர் எனச் செல
        நெருக்கினர், செருக்கின் மிகையால்;
முக்கணனை உற்று அடி வணங்கி
        இமையோர் இவை மொழிந்தனர்களால்: 148

145. தடுத்தல் அரியார் - தடுத்து நிறுத்த ஒண்ணாதவர்; 146. எரி ஏறு - பெருந் தீ.

'படைத் தலைவர் உற்று ஒருவர் மும் மடி
இராவணன் எனும் படிமையோர்;
கிடைத்தனர் அவர்க்கு ஒரு கணக்கு இலை;
வளைத்தனர் கிளைத்து, உலகு எலாம்
அடைத்தனர், தெழித்தனர், அழித்தனர்;
தனித்து உளன் இராமன்; அவரோ,
''துடைத்தனர் எம் வெற்றி'' என உற்றனர்;
இனிச் செயல் பணித்தி—சுடரோய்! 149

'எய்த கணை எய்துவதன் முன்பு, இடை
அறுந்து, இவர்கள் ஏழ் உலகமும்
பெய்த கணை மா முகில் எனப் புடை
வளைத்தனர், பிடித்தனர்கள் போய்;
வைது அகலின் அல்லது மறப் படை,
கொடிப் படை, கடக்கும் வலிதான்
செய்ய திருமாலொடும் உனக்கும் அரிது'
என்றனர், திகைத்து விழுவார்.* 150

'அஞ்சி, அயரன்மின்! அவர் எத்தனையர்
ஆயிடினும், அத்தனைவரும்,
பஞ்சி எரி உற்றதென, வெந்து அழிவர்;
இந்த உரை பண்டும் உளதால்;
நஞ்சம் அமுதத்தை நனி வென்றிடினும்,
நல் அறம் நடக்கும்அதனை
வஞ்ச வினை பொய்க் கருமம் வெல்லினும்,
இராமனை இவ் வஞ்சர் கடவார். 151

'அரக்கர் உளர் ஆர் சிலர், அவ் வீடணன்
அலாது, உலகின் ஆவி உடையார்?
இரக்கம் உளதுஆகின், அது நல் அறம்
எழுந்து வளர்கின்றது; இனி நீர்
கரக்க, முழை தேடி உழல்கின்றிலிர்கள்;
இன்று ஒரு கடும் பகலிலே
குரக்கின் முதல் நாயகனை ஆளுடைய
கோள் உழுவை கொல்லும், இவரை.' 152

149. மும் மடி - மூன்று மடங்கு; 152. கோள் உழுவை - வலியுடைய புலி.

என்று பரமன் பகர, நான்முகனும்
　　அன்ன பொருளே இசைதலும்,
நின்று நிலை ஆறினர்கள், வானவரும்;
　　மானவனும் நேமி எனல் ஆம்
வென்றி நெடு வாளி மழை, மாரியினும்
　　மேலன துரந்து, விரைவின்
கொன்று, குல மால் வரைகள் மானு தலை
　　மா மலை குவித்தனன்அரோ.　　153

மகர மறி கடலின் வளையும் வய நிருதர்
சிகரம் அனைய உடல் சிதறி, இறுவர் உயிர்—
பகர அரிய பதம் விரவ, அமரர் பழ
நகரம் இடம் அருக, நவையர் நலிவு பட.　　154

உகளும், இவுளி தலை துமிய—உறு கழல்கள்
தகளி அற, வலிய தலைகள் அறு தலைவர்
துகளின் உடல்கள் விழ, உயிர்கள் சுரர் உலகின்
மகளிர் வன முலைகள் தழுவி அகம் மகிழ.　　155

மலையும், மறி கடலும், வனமும், வறு நிலனும்,
உலைவு இல் அமரர் உறை உலகும், உயிர்களொடு
தலையும் உடலும் இடை தழுவு தவழ் குருதி
அலையும் அரியது ஒரு திசையும் இலது, அணுக.　　156

இனைய செரு நிகழும் அளவின், எதிர் பொருத
வினையமுடை முதல்வர் எவரும் உடன் விளிய,
அனைய படை நெளிய, அமரர் சொரி மலர்கள்
நனைய விசையின் எழு துவலை மழை நலிய,　　157

இரியல் உறு படையை, நிருதர், இடை விலகி,
எரிகள் சொரியும் நெடு விழியர், 'இழுதையர்கள்!
திரிக, திரிக!' என உரறு தெழி குரலர்,
கரிகள், அரிகள், பரி, கடிதின் எதிர் கடவ.　　158

உலகு செவிடு பட, மழைகள் உதிர, உயர்
அலகு இல் மலை குலைய, அமரர் தலை அதிர,
இலகு தொடு படைகள் இடியொடு உரும் அனைய,
விலகியது, திமிலம் வளையும்வகை விளைய.　　159

154. மகர மறி கடல் - மகர மீன்கள் உலாவும் கடல்; பதம் - துறக்கப் பதவி; நவையர் - தீவினையாளர்; 155. இவுளி - குதிரை; தகளி - அகல் விளக்கு; 158. இழுதையர் - அறிவில்லாதவர்; 159. திமிலம் - பேரொலி.

‘அழகிது, அழகிது!’ என அழகன் உவகையொடு
பழகும் அதிதியரை எதிர்கொள் பரிசு பட,
விழைவின் எதிர அதிர் எரிகொள் விரி பகழி
மழைகள் முறை சொரிய, அமரர் மலர் சொரிய, 160

தினகரனை அணவு கொடிகள் திசை அடைவ,
சினவு பொரு பரிகள் செறிவ அணுக, உயர்
அனகனெடும் அமரின் முடுகி எதிர, எழு
கனக வரை பொருவ, கதிர் கொள் மணி இரதம்.* 161

பாறு, படு சிறகு கழுகு, பகழி பட,
நீறு படும் இரத நிரையின் உடல் தழுவி,
வேறு படர் படர, இரவி சுடர் வலையம்
மாறு பட, உலகின் மலைகள் அளறு பட.* 162

அருகு கடல் திரிய, அலகு இல் மலை குலைய,
உருகு சுடர்கள் இடை திரிய,—உரனுடைய
இரு கை ஒரு களிறு திரிய, விடு குயவர்
திரிகை என உலகு முழுதும் முறை திரிய.* 163

சிவனும், அயனும், எழு திகிரி அமரர் பதி
அவனும், அமரர் குலம் எவரும், முனிவரொடு
கவனம் உறு கரணம் இடுவர்—கழுதுஇனமும்,
நமனும், வரி சிலையும், அறனும், நடன் நவில. 164

தேவர் திரிபுவன நிலையர் செரு இதனை
ஏவர் அறிவுறுவர் இறுதி? முதல் அறிவின்
மூவர் தலைகள் பொதிர் எறிவர், ‘அற முதல்வ!
பூவை நிறவ!’ என வேதம் முறை புகழ. 165

எய்யும் ஒரு பகழி, ஏழு கடலும், இடு
வெய்ய களிறு பரியாளொடு இரதம் விழ,
ஒய்ய ஒரு கதியின் ஓட உணர் அமரர்
கைகள் என, அவுணர் கால்கள் கதி குலைவ. 166

160. அதிதியர் - விருந்தினர்கள்; 161. தினகரன் - சூரியன்; அணவுதல் - தீண்டுதல்; 162. பாறு - பருந்து; படர் - வழி; சுடர் வலையம் - ஒளி வட்டம்; 163. களிறு - களிறு போன்ற இராமன்; 164. கவனம் உறு கரணம் - விரைவு பொருந்திய குட்டிக் கரணம்.

அண்ணல் விடு பகழி, யானை, இரதம், அயல்
பண்ணு புரவி, படை வீரர், தொகு பகுதி
புண்ணின் இடு குறிகள் புள்ளி என, விரைவின்
எண்ணுவன அனைய எல்லை இல நுழைவ. 167

இராமன் சர மதில் அமைத்தல்

'சுருக்கம் உற்றது படை; சுருக்கத்தால் இனிக்
கரக்கம், உற்று ஒரு புறத்து' என்னும் கண்ணினல்,
அரக்கருக்கு அன்று செல்வு அரியதாம்வகை
சரக் கொடு நெடு மதில் சமைத்திட்டான்அரோ. 168

மாலியை, மாலியவானை, மால் வரை
போல் உயர் கயிடனை, மதுவை, போன்று உளார்,
சாலிகை யாக்கையர், தணப்பு இல் வெஞ் சர
வேலியைக் கடந்திலர், உலகை வென்றுளார். 169

மாண்டவர் மாண்டு அற, மற்றுளோர் எலாம்
மீண்டனர், ஒரு திசை—ஏழு வேலையும்
மூண்டு அற முருக்கிய ஊழிக் காலத்தில்
தூண்டுறு சுடர் சுட, சுருங்கித் தொக்கபோல். 170

'புரம் சுடு கடவுளும், புள்ளின் பாகனும்,
அரம் சுடு குலிச வேல் அமரர் வேந்தனும்,
உரம் சுடுகிற்கிலர்; ஒருவன் நாமுடை
வரம் சுடும்; வலி சுடும்; வாழும் நாள் சுடும். 171

'ஆயிர வெள்ளம் உண்டு; ஒருவர், ஆழி சூழ்
மா இரு ஞாலத்தை மறிக்கும் வன்மையோர்;
மேயின பெரும் படை இதனை, ஓர் விலால்
''ஏ'' எனும் மாத்திரத்து எய்து கொன்றனன். 172

'இடை, படும், படாதன இமைப்பிலோர் படை;
புடைபட, வலம்கொடு விலங்கிப் போகுமால்;
படை படும் கோடி ஓர் பகழியால் பழிக்
கடைபடும் அரக்கர்தம் பிறவி கட்டமால். 173

167. புள்ளி - எண்ணி அளவிடுங்கால் நூறு அல்லது ஆயிரம் ஆகிவிட்டமைக்கு அடையாளமாக இடும் குறி; 168. கண் - கருத்து; 169. சாலிகை - கவசம்; 173. இடை - போர்க்களமாகிய இடம்; பழிக் கடைபடுதல் - பழியின்கண்ணே பொருந்துதல்; கட்டம் - துன்பம்.

‘பண்டு உலகு அளித்தவனோடும், பண் அமை
குண்டையின் பாகனும், பிறரும் கூடினார்;
அண்டர்கள் விசும்பினின்று ஆர்க்கின்றாருழைக்
கண்டிலம்; இவன் நெடு மாயக் கள்வனால். 174

‘கொன்றனன், இனி ஒரு கோடி கோடி மேற்று;
அன்று எனின், பதுமம் அன்று; ஆயின் வெள்ளமா
நின்றது; நின்று இனி நினைவது என் பிற?
ஒன்று என நினைக’ என, வன்னி ஓதினான்: 175

ஒருமுகமாக இராமனை எதிர்க்குமாறு வன்னி அரக்கர்க்குக் கூறுதல்

‘விழித்துமோ, இராவணன் முகத்து மீண்டு, யாம்—
பழித்துமோ, நம்மை,—நாம் படுவது அஞ்சினால்?
அழித்தும் ஓர் பிறப்பு உறா நெறி சென்று அண்மம, யாம்
கழித்தும் இவ் ஆக்கையை, புகழைக் கண்ணுற. 176

‘இடுக்கு, இனிப் பெயர்ந்து உறை எண்ணுவேம்எனின்,
அடுத்த கூர் வாளியின் அரணம் நீங்கலோம்;
எடுத்து ஒரு முகத்தினால் எய்தி, யாம் இனிக்
கொடுத்தும் நம் உயிர்’ என, ஒருமை கூறினான். 177

இளக்க அரு நெடு வரை ஈர்க்கும் ஆறு எலாம்
அளக்கரின் பாய்ந்தென, பதங்கம் ஆர் அழல்
விளக்கினில் வீழ்ந்தென, விதிகொடு உந்தலால்,
வளைத்து இரைத்து அடர்த்தனர், மலையின் மேனியார். 178

மழு, எழுத் தண்டு, கோல், வலயம், நாஞ்சில், வாள்,
எழு, அயில், குந்தம், வேல், ஈட்டி, தோமரம்,
கழு, இகல் கப்பணம் முதல கைப் படை,
தொழுவினில் புலி அனான் உடலில் தூவினார். 179

காந்தருப்பம் எனும் கடவுள் மாப் படை,
வேந்தருக்கு அரசனும், வில்லின் ஊக்கினான்;
பாந்தளுக்கு அரசு என, பறவைக்கு ஏறு என,
போந்து உருத்தது, நெருப்பு அனைய போர்க் கணை. 180

174. பண் அமை குண்டை - தவிசு அமைந்த எருது; 177. இடுக்கு - சங்கடமான துயர் நிலை; உறை - உறைதல்; ஒருமை - ஒருதலையான முடிவு; 178. இளக்குதல் - அசைத்தல்; பதங்கம் - விட்டில்; 179. தொழுவினில் புலி - தொழுவத்திலே புக்க புலி. 180. பாந்தளுக்கு அரசு - ஆதிசேடன்; பறவைக்கு ஏறு - கருடன்.

மூன்று கண் அமைந்தன, ஐம் முகத்தன,
ஆன்ற மெய் தழலன, புனலும் ஆடின,
வான் தொட நிமிர்வன வாளி மா மழை
தோன்றின, புரம் சுடும் ஒருவன் தோற்றத்த. 181

அய்-இரு கோடியர் அரக்கர் வேந்தர்கள்
மொய் வலி வீரர்கள் ஒழிய முற்றுற,
'எய்' எனும் மாத்திரத்து, அவிந்தது என்பரால்—
செய் தவத்து இராவணன் மூலச் சேனையே. 182

மாப் பெருந் தீவுகள் ஏழும், மாதிரம்,
பாப்பு அரும் பாதலத்துள்ளும், பல் வகைக்
காப்பு அரு மலைகளும் பிறவும் காப்பவர்,
யாப்புறு காதலர் இராவணற்கு அவர். 183

மாத் தட மேருவை வளைந்த வான் சுடர்
கோத்து அகல் மார்பிடை அணியும் கொள்கையார்,
பூத் தவிசு உகந்தவன் புகன்ற பொய் அறு
நாத் தழும்பு ஏறிய வரத்தர், நண்ணினர். 184

'நம்முள் ஈண்டு ஒருவனை வெல்லும் நன்கு எனின்,
வெம் முனை, இராவணன்தனையும் வெல்லுமால்;
இம்மென உடன் எடுத்து எழுந்து சேறுமோ?
செம்மையில் தனித் தனி செய்துமோ செரு? 185

'எல்லோம் எல்லோம் ஒன்றி வளைந்து, இந் நெடியோனை
வல்லே வல்ல போர் வலி முற்றி மலையோமேல்,
வெல்லோம் வெல்லோம்!' என்றனன், வன்னி; மிடலோரும்,
'தொல்லோன் சொல்லே நன்று' என, அஃதே துணிவுற்றார்.

அன்னார்தாமும், ஆர்கலி ஏழும் என, ஆர்த்தார்;
'மின் ஆர் வானம் இற்று உறும்' என்றே, விளி சங்கம்
கொன்னே ஊதி, தோள் புடை கொட்டிக்கொடு சார்ந்தார்;
என் ஆம், வையம்? என்படும் வானம்? திசை ஏதாம்? 187

ஆர்த்தார் அன்னார்; அன்ன கணத்தே, அவர் ஆற்றல்
தீர்த்தானும் தன் வெஞ் சிலை நாணைத் தெறிப்புற்றான்;
பேர்த்தான் பொன்-தோள்; முற்றும் அளந்தான் பிறழ் சங்கம்
ஆர்த்தால் ஒத்தது, அவ் ஒலி, எல்லா உலகுக்கும். 188

183. பாப்பு - பாம்பு.

பல் ஆயிர கோடியர்; பல் படை நூல்
வல்லார்; அவர் மெய்ம்மை வழங்க வலார்;
எல்லா உலகங்களும் ஏறிய போர்
வில்லாளர்; அரக்கரின் மேதகையார். 189

வென்றார், உலகங்களை, விண்ணவரோடு
ஒன்று உயர் தானவர் யூகம் எலாம்;
கொன்றார் நிமிர் கூற்று என, எவ் உயிரும்
தின்றார்;—எதிர் சென்று, செறிந்தனரால். 190

வளைத்தார் மத யானையை, வன் தொழுவில்
தளைத்தார் என, வந்து, தனித் தனியே
உளைத்தார் உரும்ஏறு என; ஒன்று அல போர்
விளைத்தார்; இமையோர்கள் வெதும்பினரால். 191

விட்டுஎய வழங்கிய வெம் படையின்
சுட்டுஎய நிமிர்ந்த சுடர்ச் சுடரும்,
கண் தீயும், ஒருங்கு கலந்து எழலால்,
உள் தீ உற வெந்தன, ஏழ் உலகும். 192

தேர் ஆர்ப்பு ஒலி, வீரர் தெழிப்பு ஒலியும்,
தார் ஆர்ப்பு ஒலியும், கழல் தாக்கு ஒலியும்,
போர் ஆர் சிலை நாணி புடைப்பு ஒலியும்,
காரால் பொலியும் களிறு ஆர்ப்பு ஒலியும். 193

இராமன் அம்பு மழை பொழிய, அரக்கர் சேனை அழிந்துபடுதல்

'எல்லாரும் இராவணனே அனையார்;
வெல்லா உலகு இல்லவர்; மெய் வலியார்;
தொல்லார் படை வந்து தொடர்ந்தது' எனா,
நல்லானும் உருத்து, எதிர் நண்ணினனால். 194

ஊழிக் கனல் போல்பவர் உந்தின போர்
ஆழிப் படை அம்பொடும் அற்று அகல,
பாழிக் கடை நாள் விடு பல் மழைபோல்,
வாழிச் சுடர் வாளி வழங்கினனால். 195

190. யூகம் - சேனைகளின் அணி; 192. விட்டுஎய - (பகைவன் போர்க் களத்தை) விட்டொழியுமாறு; சுட்டுஎய - சுடும்படி; 193. காரால் - கரு நிறத்தோடு; 195. பாழி - வலிமை.

சூரோடு தொடர்ந்த சுடர்க் கணைதான்
தாரோடு அகலங்கள் தடிந்திடலும்,
தேரோடு மடிந்தனர், செங் கதிரோன்
ஊரோடு மறிந்தனன் ஒத்து, உரவோர். 196

கொல்லோடு சுடர்க் கணை கூற்றின் நிணப்
பல்லோடு தொடர்ந்தன பாய்தலினால்,
செல்லோடு எழு மா முகில் சிந்தினபோல்,
வில்லோடும் விழுந்த, மிடல் கரமே. 197

செம்போடு உதிரத் திரை ஆழியின்வாய்—
வெம்பு ஓடு அரவக் குலம் மேல் நிமிரும்
கொம்போடும் விழுந்தன ஒத்த—குறைந்து,
அம்போடும் விழுந்த அடல் கரமே. 198

முன் ஓடு உதிரப் புனல், மூதுலகைப்
பின் ஓடி வளைந்த பெருங் கடல்வாய்,
மின்னோடும் விழுந்தன மேகம் என,
பொன் ஓடை நெடுங் கரி புக்கனவால். 199

மற வெற்றி அரக்கர் வலக் கையொடும்,
நறவக் குருதிக் கடல் வீழ் நகை வாள்
சுறவு ஒத்தன; மீது துடித்து எழலால்,
இறவு ஒத்தன, வாவும் இனப் பரியே. 200

தாமச் சுடர் வாளி தடிந்து அகல,
பாமக் குருதிப் படிகின்ற படைச்
சேமப் படு கேடகம், மால் கடல் சேர்
ஆமைக் குலம் ஒத்தன அத்தனையால்! 201

காம்போடு பதாகைகள் கார், உதிரப்
பாம்போடு கடல் படிவுற்றனவால்—
வாம் போர் நெடு வாடை மலைந்து அகல,
கூம்போடு உயர் பாய்கள் குறைந்தனபோல். 202

196. சூர் - கொடுமை; ஊர் - ஊர்கோள்; 197. கொல்லோடு - கொல்லுதல் தொழிலில்; 198. செம்போடு - செந்நிறத்தோடு; கொம்பு - மரக்கிளை; 199. ஓடை - நெற்றிப்பட்டம்; 200. நறவக் குருதிக் கடல் - மணமுள்ள இரத்தக் கடல்; இறவு - இரு என்னும் ஒருவகை மீன்; 201. தாமச் சுடர் - பேரொளி, ஒரு பொருட் பன்மொழி; பாமக் குருதி - பரவிய குருதி; 202. கார் - கருமுகில் போலும் யானைகள்; பாம்போடு உதிரக் கடல் - பரவியோடுதலையுடைய குருதிக் கடல்.

மண்டப் படு சோரியின் வாரியின் வீழ்
கண்டத் தொகை கவ்விய காலொடு தோள்
முண்டத் திரி தண்டின் முரட்டு ஒருவன்
துண்டச் சுறவு ஒத்த, துடித்தனவால். 203

தெளிவுற்ற பளிங்கு உறு சில்லிகொள் தேர்
விளிவுற்றுக, வேறுற வீழ்வனதாம்,
அளி முற்றிய சோரியின் வாரியின் ஆழ்
ஒளி முற்றிய திங்களை ஒத்துளவால். 204

நிலை கோடல் இல் வென்றி அரக்கரை நேர்
கொலை கோடலின், மன் குறி கோளுறுமேல்,
சிலை கோடியதோறும் சிரத் திரள் வன்
மலை கோடியின் மேலும் மறிந்திடுமால்.* 205

திண் மார்பின்மிசைச் செறி சாலிகையின்-
கண், வாளி கடைச் சிறை காண நுழைந்து,
எண் வாய் உற மொய்த்தன, இன் நறை உற்று
உண் வாய் வரி வண்டுஇனம் ஒத்தனவால். 206

பாறு ஆடு களத்து, ஒருவன், பகலின்
கூறு ஆகிய நாலில் ஓர் கூறிடையே,
நூறு ஆயின யோசனை, நூழில்கள் அம்
மாருது உழல் சாரிகை வந்தனனால். 207

நின்றானுடன் நின்று, நிமிர்ந்து அயலே
சென்றார் எதிர் சென்று, சிதைத்திடலால்,
'தன் தாதையை ஓர்வு உறு தன் மகன் நேர்
கொன்றான் அவனே இவன்' என்று கொள்வார். 208

'இங்கே உளன்; இங்கு உளன்; இங்கு உளன்' என்று,
அங்கே உணர்கின்ற அலந்தலைவாய்,
வெங் கோப நெடும் படை வெஞ் சரம் விட்டு
எங்கேனும் வழங்குவர், ஏகுவரால். 209

203. முரட்டு - முரடான, பருமனான; 204. அளி முற்றிய சோரி - மதுவினைப் போலும் குருதி; பாணங்களினால் நிரம்பித் தோன்றிய குருதி என்பாரும் உளர்; 206. வாளி கடைச் சிறை - அம்புகளின் கடைப் பகுதியாகிய சிறகுகள்; 208. தாதை - தந்தையாகிய இரணியன்; மகன் - பிரகலாதன்; அவன் - நரசிங்கமூர்த்தி; 209. அலந்தலை - கலக்க நிலை.

ஒருவன் என உன்னும் உணர்ச்சி இலார்,
'இரவு அன்று இது; ஓர் பகல்' என்பர்களால்;
'கரவு அன்று இது; இராமர் கணக்கு இலரால்;
பரவை மணலின் பலர்' என்பர்களால். 210

ஒருவன் ஒருவன் மலைபோல் உயர்வோன்;
ஒருவன் படை வெள்ளம் ஓர் ஆயிரமே;
ஒருவன் ஒருவன் உயிர் உண்டது அலால்,
ஒருவன் உயிர் உண்டதும் உள்ளதுவோ?* 211

தேர்மேல் உளர்; மாவொடு செந் தறுகண்
கார்மேல் உளர்; மா கடல்மேல் உளர்; இப்
பார்மேல் உளர்; உம்பர் பரந்து உளரால்—
போர்மேலும் இராமர் புகுந்து அடர்வார். 212

என்னும்படி, எங்கணும் எங்கணுமாய்த்
துன்னும்; சுழலும்; திரியும்; சுடரும்;
பின்னும், அருகும், உடலும், பிரியான்—
மன்னன் மகன்! வீரர் மயங்கினரால். 213

இராமனது வில் திறம்

படு மத கரி, பரி, சிந்தின; பனி வரை இரதம் அவிந்தன;
விடு படை திசைகள் பிளந்தன; விரி கடல் அளறது எழுந்தன;
அடு புலி அவுணர்தம் மங்கையர் அலர் விழி அருவிகள் சிந்தின;—
கடு மணி நெடியவன் வெஞ் சிலை, 'கணகண, கணகண' எனும்தொறும்.

ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், அடல் பரி ஒரு கோடி;
சேனை காவலர் ஆயிரம் பேர் படின், கவந்தம் ஒன்று எழுந்தாடும்;
கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின், கவின் மணி கணில்என்
ஏனை அம் மணி எழரை நாழிகை ஆடியது இனிது அன்றே.*　　[னும்;

ஊன் ஏறு படைக் கை வீரர் எதிர் எதிர் ஊரும்தோறும்,
கூன் ஏறு சிலையும் தானும் குதிக்கின்ற கடுப்பின் கொட்பால்,
வான் ஏறினார்கள் தேரும், மலைகின்ற வயவர் தேரும்,
தான் ஏறி வந்த தேரே ஆக்கினான்—தனி ஏறு அன்னான். 216

211. ஒருவன் ஒருவன் - ஒவ்வொருவன்; 214. பனி வரை - இமயமலை; அவுணர் - அரக்கர்; நெடியவன் வெஞ்சிலை கடுமணி என மாற்றிக் கூட்டுக. 216. கொட்பு - சுழற்சி; வான் ஏறினார் - (போரில் மடிந்து) விண்ணுலகு அடைந்த அரக்கர்.

காய் இருஞ் சிலை ஒன்றேனும், கணைப் புட்டில் ஒன்றதேனும்,
தூய் எழு பகழி மாரி மழைத் துளித் தொகையின் மேல;
ஆயிரம் கைகள் செய்த செய்தன, அமலன் செங் கை;
ஆயிரம் கையும் கூடி, இரண்டு கை ஆனது அன்றே! 217

பொய்; ஒரு முகத்தன் ஆகி மனிதன் ஆம் புணர்ப்பு இது அன்றால்;
மெய்யுற உணர்ந்தோம்; வெள்ளம் ஆயிரம் மிடைந்த சேனை
செய்யுறு வினையம் எல்லாம் ஒரு முகம் தெரிவது உண்டே?
அய்-இருநூறும் அல்ல; அனந்தம் ஆம் முகங்கள் அம்மா! 218

கண்ணுதல்-பரமன்தானும், நான்முகக் கடவுள்தானும்,
'எண்ணுதும், தொடர எய்த கோல்' என, எண்ணலுற்றார்,
பண்ணையால் பகுக்க மாட்டார், தனித் தனி பார்க்கலுற்றார்,
'ஒண்ணுமோ, கணிக்க?' என்பார், உவகையின் உயர்ந்த தோளார்.*

'வெள்ளம் ஈர்-ஐந்து நூறே; விடு கணை அவற்றின் மெய்யே
உள்ளவாறு உளவாம்' என்று, ஓர் உரை கணக்கு உரைத்துமேனும்,
'கொள்ளை ஓர் உருவை நூறு கொண்டன பலவால்; கொற்ற
வள்ளலே வழங்கினனோ?' என்றனர், மற்றை வானோர். 220

'குடைக்கு எலாம், கொடிகட்கு எல்லாம், கொண்டன குவிந்த கொற்றப்
படைக்கு எலாம், பகழிக்கு எல்லாம், யானை தேர் பரிமா ஆதி
கடைக்கு எலாம், துரந்த வாளி கணித்ததற்கு அளவை காட்டி
அடைக்கலாம் அறிஞர் யாரே?' என்றனர் முனிவர், அப்பால்.

கண்டத்தும் கீழும் மேலும், கபாலத்தும், கடக்கல் உற்ற,
சண்டப் போர் அரக்கர்தம்மைத் தொடர்ந்து, கோல் புணரும் தன்மை—
பிண்டத்தில் கரு ஆம் தன் பேர் உருக்களைப் பிரமன் தந்த
அண்டத்தை நிறையப் பெய்து குலுக்கியது அனைய ஆன. 222

கோடி ஐ-இரண்டு தொக்க படைக்கல மள்ளர் கூவி,
ஓடி ஓர் பக்கம் ஆக, உயிர் இழந்து, உலத்தலோடும்,
'வீடி நின்று அழிவது என்னே! விண்ணவர் படைகள் வீசி,
மூடுதும் இவனை' என்று, யாவரும் மூண்டு மொய்த்தார். 223

விண்டுவின் படையே ஆதி வெய்யவன் படை ஈறாக,
கொண்டு ஒருங்கு உடனே விட்டார்; குலுங்கியது அமரர் கூட்டம்;
அண்டமும் கீழ் மேலாக ஆகியது; அதனை அண்ணல்
கண்டு, ஒரு முறுவல் காட்டி, அவற்றினை அவற்றால் காத்தான்.

218. புணர்ப்பு - தோற்றம்; 220. ஓர் உரு - ஓர் உடம்பு; 221. கடைக்கு எலாம் - சேனைகளின் எல்லை எல்லாவற்றிற்கும்.

'தான் அவை தொடுத்த போது, தடுப்ப அரிது; உலகம்தானே
பூ நனி வடவைத் தீயின் புக்கெனப் பொரிந்து போம்' என்று,
ஆனது தெரிந்த வள்ளல் அளப்ப அருங் கோடி அம்பால்
எனையர் தலைகள் எல்லாம் இடியுண்ட மலையின் இட்டான். 225

ஆயிர வெள்ளத்தோரும் அடு களத்து அவிந்து வீழ்ந்தார்;
மா இரு ஞாலத்தாள் தன் வன் பொறைப் பாரம் நீங்கி,
மீ உயர்ந்து எழுந்தாள் அன்றே, வீங்கு ஒலி வேலைநின்றும்
போய் ஒருங்கு அண்டத்தோடும் கோடி யோசனைகள் பொங்கி!

தேவர்கள் முதலியோர் துயர் தீர்ந்து. இராமனை வாழ்த்துதல்

'நினைந்தன முடித்தேம்' என்று, வானவர் துயரம் நீத்தார்;
'புனைந்தனென் வாகை' என்று, இந்திரன் உவகை பூத்தான்;
வனைந்தன அல்லா வேதம் வாழ்வு பெற்று உயர்ந்தமாதோ;
அனந்தனும் தலைகள் ஏந்தி, அயாவுயிர்த்து, அவலம் தீர்ந்தான்.

தாய், 'படைத்துடைய செல்வம் ஈக!' என, தம்பிக்கு ஈந்து,
வேய் படைத்துடைய கானம் விண்ணவர் தவத்தின் மேவி,
தோய் படைத் தொழிலால் யார்க்கும் துயர் துடைத்தானை நோக்கி,
வாய் படைத்துடையார் எல்லாம் வாழ்த்தினர், வணக்கம் செய்தார்.

தீ மொய்த்த அனைய செங் கண் அரக்கரை முழுதும் சிந்தி,
பூ மொய்த்த கரத்தர் ஆகி விண்ணவர் போற்ற, நின்றான்—
பேய் மொய்த்து, நரிகள் ஈண்டி, பெரும் பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற கறை மிடற்று இறைவன் ஒத்தான்.

அண்டம் மாக் களமும், வீந்த அரக்கரே உயிரும் ஆக,
கொண்டது ஓர் உருவம்தன்னால், இறுதிநாள் வந்து கூட,
மண்டு நாள், மறித்தும் காட்ட, மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன தன் ஒரு மூர்த்தி ஒத்தான். 230

இலக்குவன் இராவணனோடு பொரும் இடத்திற்கு.
இராமன் செல்லுதல்

ஆகுலம் துறந்த தேவர் அள்ளினர் சொரிந்த வெள்ளச்
சேகு அறு மலரும் சாந்தும் செருத் தொழில் வருத்தம் தீர்க்க,
மா கொலை செய்த வள்ளல், வாள் அமர்க் களத்தைக் கைவிட்டு
ஏகினன், இளவலோடும் இராவணன் ஏற்ற கைம்மேல். 231

226. ஞாலத்தாள் - பூமிதேவி; 227. முடித்தேம் - முடியப் பெற்றோம்; 228. தோய் படை - (உலைக்களத்தில்) தோய்த்து வடிக்கப் பெற்ற படைக் கலம்; 230. மாக் களம் - பெரிய போர்க்களம்: மண்டு நாள் - படைப்புக் காலம்; மறித்து - மீளவும்; 231. சேகு - குற்றம்; இராவணன் ஏற்ற கை - இராவணன் எதிர்த்துப் பொரும் போர்க்களம்.

இவ் வழி இயன்ற எல்லாம் இயம்பினும்; இரிந்து போன
தெவ் அழி ஆற்றல் வெற்றிச் சேனையின் செயலும், சென்ற
வெவ் வழி அரக்கர் கோமான் செய்கையும், இளைய வீரன்
எவ்வம் இல் ஆற்றல் போரும், முற்றும் நாம் இயம்பலுற்றும்.

31 வேல் ஏற்ற படலம்

குரக்குச் சேனை களத்திற்கு மீண்டு வருதல்

'பெரும் படைத் தலைவர் யாரும் பெயர்ந்திலர்; பெயர்ந்து போய், நாம்
விரும்பினம் வாழ்க்கை என்றால், யார் இடை விலக்கற்பாலார்;
வரும் பழி துடைத்தும்; வானின் வைகுதும், யாமும்' என்ன,
இருங் கடல் பெயர்ந்தது என்ன, தானையும் மீண்டது, இப்பால்.

இராவணன் போர்க்களம் செல்லுதல்

சில்லி ஆயிரம், சில் உளைப் பரியொடும் சேர்ந்த,
எல்லவன் கதிர் மண்டிலம் மாறு கொண்டு இமைக்கும்,
செல்லும் தேர்மிசைச் சென்றனன்—தேவரைத் தொலைத்த
வில்லும், வெங் கணைப் புட்டிலும், கொற்றமும், விளங்க. 2

நூறு கோடி தேர், நொறில் பரி நூற்று இரு கோடி,
ஆறுபோல் மத கரி ஐ-இரு கோடி,
ஏறு கோள் உறு பதாதியும் இவற்று இரட்டி,
சீறு கோள் அரிஏறு அனையனுடன் அன்று சென்ற. 3

'மூன்று வைப்பினும், அப் புறத்து உலகினும், முனையின்
ஏன்று கோளுறும் வீரர்கள் வம்மின்!' என்று இசைக்கும்
ஆன்ற பேரியும், அதிர் குரல் சங்கமும், அசனி
ஈன்ற காளமும், ஏழொடு ஏழ் உலகினும் இசைப்ப. 4

அனைய ஆகிய அரக்கர்க்கும் அரக்கனை, அவுணர்
வினைய வானவர் வெவ் வினைப் பயத்தினை, வீரர்
நினையும் நெஞ்சையும் சுடுவது ஓர் நெருப்பினை, நிமிர்ந்து
கனையும் எண்ணையும் கடப்பது ஓர் கடலினைக் கண்டார். 5

31 : 2. எல்லவன் - சூரியன்; மாறு - மாறுபாடு, ஒப்புமை எனினும் ஆம்;
3. ஏறு கோள் - ஆண் சிங்கத்தின் வலிமை.

கண்டு, கைகளோடு அணி வகுத்து, உரும் உறழ் கற்கள்
கொண்டு, கூற்றமும் நடுக்குறத் தோள் புடை கொட்டி,
அண்ட கோடிகள் அடுக்கு அழிந்து உலேவுற, ஆர்த்தார்—
'மண்டு போரிடை மடிவதே நலம்' என மதித்தார். 6

இரு படையும் கைகலத்தல்

அரக்கன் சேனையும், ஆர் உயிர் வழங்குவான் அமைந்த
குரக்கு வேலேயும், ஒன்ருெடு ஒன்று, எதிர் எதிர் கோத்து,
நெருக்கி நேர்ந்தன; நெருப்பு, இடை பொடித்தன; நெருப்பின்
உருக்கு செம்பு என, அம்பரத்து, ஓடினது, உதிரம். 7

அற்ற வன் தலே அறு குறை எழுந்து எழுந்து, அண்டத்து
ஒற்ற, வானகம் உதய மண்டிலம் என ஒளிர,
சுற்றும் மேகத்தைத் தொத்திய குருதி நீர் துளிப்ப,
முற்றும் வையகம் போர்க் களம் ஆம் என முயன்ற. 8

தூவி அம் பெடை அரிஇனம் மறிதர, சூழி
தூவி, அம்பு எடை சோர்ந்தன, சொரி உடல் சுரிப்ப,
மே வியம் படை படப் படர் குருதியின் வீழ்ந்த,
மேவி அம் படைக் கடலிடை, குடரொடு மிதந்த. 9

கண் திறந்தன கணவர்தம் முகத்து அவர் முறுவல்
கண்டு இறந்த அன மடந்தையர், உயிரொடும் கலந்தார்—
பண்டு இறந்தன பழம் புணர்வு அகம் புக, பன்னி,
பண் திறந்தன புலம்பு ஒலி, சிலம்பு ஒலி பனிப்ப. 10

ஏழும் ஏழும் என்று உரைக்கின்ற உலகங்கள் யாவும்
ஊழி பேர்வதே ஒப்பது ஓர் உலேவுற, உடற்றும்
நூழில் வெஞ் சமம் நோக்கி, அவ் இராவணன் நுவன்ருன்—
'தாழ் இல் என் படை தருக்கு அறும்' என்பது ஓர் தன்மை.

மரமும் கல்லுமே, வில்லொடு வாள், மழு, சூலம்,
அரமும், கல்லும், வேல் முதலிய அயில் படை அடக்கி,
சிரமும் கல் எனச் சிந்தலின், சிதைந்தது, என் சேனே;
உரமும் கல்வியும் உடையவன் செரு நின்றது ஒருபால். 12

9. தூவி - சிறகு; அரி - வண்டு; சூழி தூவி - (யானேகள்) முகபடாத்தை அப்பால் எறிந்து; எடை - எடுத்தல்; வியம் மே படை - பெருமை பொருந்திய படை; 10. இறந்தன - கழிந்தன; பழம் புணர்வு - பழைய கூடல் நிகழ்ச்சிகள்; அகம் புகுதல் - நெஞ்சில் நினேவுக்கு வருதல்.

அழலும் கண் களிறு அணியொடும் துணி படும்; ஆவி
சுழலும் பல் படைத் தொகுதியும்; அன்னதே சுடர்த் தேர்;
கழலும் சோரி நீர் ஆற்றெடும் கடலிடைக் கலக்கும்—
குழலும் நாலும்போல் அனுமனும் தானும் அக் குமரன். 13

'வில்லும் கூற்றுவற்கு உண்டு' என, திரிகின்ற வீரன்
கொல்லும் கூற்று எனக் குறைக்கும், இந் நிறை பெருங் குழுவை;
ஒல்லும் கோள் அரி, உரும், அன்ன குரங்கினது உகிரும்
பல்லும் கூர்க்கின்ற; கூர்க்கில அரக்கர்தம் படைகள். 14

இராவணன் கொதித்தல்

'கண்டு நின்று, இறைப் பொழுது, இனிக் காலத்தைக் கழிப்பின்,
உண்டு கைவிடும் கூற்றுவன், நிருதர் பேர் உயிரை;
மண்டு வெஞ் செரு நான் ஒரு கணத்திடை மடித்தே
கொண்டு மீள்குவென், கொற்றம்' என்று இராவணன் கொதித்தான்.

ஊதை போல்வன, உரும் உறழ் திறலன, உருவிப்
பூதலங்களைப் பிளப்பன, அண்டத்தைப் பொதுப்ப,
மாதிரங்களை அளப்பன, மாற்ற அருங் கூற்றின்
தூது போல்வன, சுடு கணை முறை முறை துரந்தான். 16

ஆளி போன்று உளன் எதிர்ந்த போது, அமர்க் களத்து அடைந்த
ஞாளி போன்று உள என்பது என்? நள் இருள் அடைந்த
காளி போன்றனன் இராவணன்; வெள்ளிடைக் கரந்த
பூளை போன்றது, அப் பொரு சினத்து அரிகள்தம் புணரி. 17

இலக்குவன் - இராவணன் போர்

இரியல் போகின்ற சேனையை இலக்குவன் விலக்கி,
'அரிகள்! அஞ்சன்மின், அஞ்சன்மின்' என்று அருள் வழங்கி,
திரியும் மாருதி தோள் எனும் தேர்மிசைச் சென்ருன்;
எரியும் வெஞ் சினத்து இராவணன் எதிர் புகுந்து ஏற்ருன்.

ஏற்றுக் கோடலும், இராவணன் எரி முகப் பகழி
நூற்றுக் கோடியின்மேல் செலச் சிலைகொடு நூக்க,
காற்றுக்கு ஓடிய பஞ்சு எனத் திசைதொறும் கரக்க,
வேற்றுக் கோல்கொடு விலக்கினன், இலக்குவன் விசையால். 19

16. பொதுத்தல் - துளைத்தல்; 17. ஞாளி - நாய்; வெள்ளிடை - வெற்றிடம்; 19. வேற்றுக் கோல் - வேறு அம்புகள்.

விலக்கினன் தடந் தோளினும் மார்பினும், விசிகம்
உலக்க உய்த்தனன், இராவணன்; ஐந்தொடு ஐந்து உருவக்
கலக்கம் உற்றிலன் இளவலும், உள்ளத்தில் கனன்றான்,
அலக்கண் எய்துவித்தான், அடல் அரக்கனை, அம்பால். 20

காக்கல் ஆகலாக் கடுப்பினில் தொடுப்பன கணைகள்
நூக்கினான்; கணை நுறுக்கினான், அரக்கனும், 'நூழில்
ஆக்கும் வெஞ் சமத்து அரிது இவன்தனை வெல்வது, அம்பால்;
நீக்கி, என் இனிச் செய்வது?' என்று இராவணன் நினைந்தான்.

இராவணன் மோகப் படையும் இலக்குவன் ஆழிப் படையும்

'கடவுள் மாப் படை தொடுக்கின், மற்று அவை முற்றும் கடக்க
விடவும் ஆற்றவும் வல்லனேல், யாரையும் வெல்லும்;
தடவும் ஆற்றலைக் கூற்றையும்; தமையனைப் போலச்
சுடவும் ஆற்றும் எவ் உலகையும்; எவனுக்கும் தோலான். 22

'மோகம் ஒன்று உண்டு, முதலவன் வகுத்தது முன்னாள்;
ஆகம் அற்றது; கொற்றமும் சிவன்தனை அழிப்பது;
ஏகம் முற்றிய விஞ்சையை இவன்வயின் ஏவி,
காகம் உற்று உழல் களத்தினில் கிடத்துவென் கடிதின்'— 23

என்பது உன்னி, அவ் விஞ்சையை மனத்திடை எண்ணி,
முன்பன்மேல் வரத் துரந்தனன்; அது கண்டு முடுகி,
அன்பின் வீடணன், 'ஆழியான் படையினின் அறுத்தி'
என்பது ஓதினன்; இலக்குவன் அது தொடுத்து எய்தான். 24

வீடணனால் படை வலி அழிய, இராவணன் அவன்மேல் வேல் எறிதல்

வீடணன் சொல, விண்டுவின் படைக்கலம் விட்டான்,
மூடு வெஞ் சின மோகத்தை நீக்கலும், முனிந்தான்,
'மாடு நின்றவன் உபாயங்கள் மதித்திட, வந்த
கேடு நம்தமக்கு' என்பது மனம்கொண்டு கிளர்ந்தான். 25

மயன் கொடுத்தது, மகளொடு; வயங்கு அனல் வேள்வி,
அயன் படைத்துளது; ஆழியும் குலிசமும் அனையது;
உயர்ந்த கொற்றமும் ஊழியும் கடந்துளது; உருமின்,
சயம்தனைப் பொரும் தம்பியை, உயிர் கொளச் சமைந்தான்.

23. ஆகம் - வடிவம்.

விட்ட போதினின் ஒருவனை வீட்டியே மீளும்,
பட்ட போது அவன் நான்முகன் ஆயினும் படுக்கும்,
வட்ட வேல்அது வலம்கொடு வாங்கினன், வணங்கி,
எட்ட நிற்கலாத் தம்பிமேல் வல் விசைத்து எறிந்தான். 27

வீடணன், 'ஈது என் உயிர் அழிக்கும்' என, இலக்குவன், 'போக்குவன், அஞ்சல் நீ!' எனல்

எறிந்த காலையில், வீடணன் அதன் நிலை எல்லாம்
அறிந்த சிந்தையன், 'ஐய! ஈது என் உயிர் அழிக்கும்;
பிறிந்து செய்யல் ஆம் பொருள் இலை' என்றலும், பெரியோன்,
'அறிந்து போக்குவல்; அஞ்சல், நீ!' என்று இடை அணைந்தான்.

எய்த வாளியும், ஏவின படைக்கலம் யாவும்,
செய்த மா தவத்து ஒருவனைச் சிறு தொழில் தீயோன்
வைத வைவினில் ஒழிந்தன; 'வீடணன் மாண்டான்;
உய்தல் இல்லை' என்று, உம்பரும் பெரு மனம் உலைந்தார். 29

இலக்குவன் வேலைத் தன் மார்பில் ஏற்க எதிர்தல்

''தோற்பென் என்னினும், புகழ் நிற்கும்; தருமமும் தொடரும்,
ஆர்ப்பர் நல்லவர்; அடைக்கலம் புகுந்தவன் அழியப்
பார்ப்பது என்? நெடும் பழி வந்து தொடர்வதன் முன்னம்,
ஏற்பென், என் தனி மார்பின்' என்று, இலக்குவன் எதிர்ந்தான்.

வேலை ஏற்கப் பலரும் முந்த, இறுதியில் இலக்குவன் ஏற்றல்

இலக்குவற்கு முன் வீடணன் புகும்; இருவரையும்
விலக்கி, அங்கதன் மேற்செலும்; அவனையும் விலக்கி,
கலக்கும் வானரக் காவலன்; அனுமன் முன் கடுகும்;
அலக்கண் அன்னதை இன்னது என்று உரை செயல் ஆமோ? 31

முன் நின்றார் எலாம் பின் உற, காலினும் முடுகி,
'நின்மின்; யான் இது விலக்குவென்' என்று உரை நேரா,
மின்னும் வேலினை, விண்ணவர் கண் புடைத்து இரங்க,
பொன்னின் மார்பிடை ஏற்றனன், முதுகிடைப் போக. 32

வீடணன், இராவணன் தேர்க் குதிரையையும் சாரதியையும் அழித்தல்

'எங்கு நீங்குதி நீ?' என வீடணன் எழுந்தான்,
சிங்கஏறு அன்ன சீற்றத்தான், இராவணன் தேரில்
பொங்கு பாய் பரி சாரதியொடும் படப் புடைத்தான்,
சங்க வானவர் தலை எடுத்திட, நெடுந் தண்டால். 33

31. அலக்கண் - துன்பம்; 33. சங்கம் - திரள்.

சேய் விசும்பினில் நிமிர்ந்து நின்று, இராவணன் சீறி,
பாய் கடுங் கணை பத்து அவன் உடல் புகப் பாய்ச்சி,
ஆயிரம் சரம் அனுமன்தன் உடலினில் அழுத்தி,
போயினன், 'செரு முடிந்தது' என்று, இலங்கை ஊர் புகுவான்.

'தேடிச் சேர்ந்த என் பொருட்டினால், உலகுடைச் செல்வன்
வாடிப் போயினன்; நீ இனி வஞ்சனை மதியால்
ஓடிப் போகுவது எங்கு? அடா! உன்னொடும் உடனே
வீடிப்போவென்' என்று அரக்கன்மேல் வீடணன் வெகுண்டான்.

வீடணனைக் கொல்லாது விடுத்து இராவணன் மீளுதல்

'வென்றி என் வயம் ஆனது; வீடணப் பசுவைக்
கொன்று இனிப் பயன் இல்லை' என்று, இராவணன் கொண்டான்;
நின்றிலன், ஒன்றும் நோக்கிலன், முனிவு எலாம் நீத்தான்;
பொன் திணிந்தன மதிலுடை இலங்கை ஊர் புக்கான். 36

வீடணன் ஆற்றாது அரற்றுதல்

அரக்கன் ஏகினன்; வீடணன் வாய் திறந்து அரற்றி,
இரக்கம்தான் என இலக்குவன் இணை அடித் தலத்தில்,
கரக்கல் ஆகலாக் காதலின் வீழ்ந்தனன் கலுழ்ந்தான்;
குரக்கு வெள்ளமும் தலைவரும் துயரிடைக் குளித்தார். 37

'பொன் அரும்பு உறு தார்ப் புயப் பொருப்பினன் பொன்ற,
என் இருந்து நான்? இறப்பென், இக் கணத்து; எனை ஆளும்
மன் இருந்து இனி வாழ்கிலன்' என்றனன் மறுக,
'நில், நில்' என்றனன், சாம்பவன் உரை ஒன்று நிகழ்த்தும்:

'அனுமன் நிற்க, நாம் ஆர் உயிர்க்கு இரங்குவது அறிவோ?
நினையும் அத்துணை மாத்திரத்து, உலகு எலாம் நிமிர்வான்,
வினையின் நல் மருந்து அளிக்கின்றான்; உயிர்க்கின்றான், வீரன்;
தினையும் அல்லல் உற்று அழுங்கன்மின்' என்று இடர் தீர்த்தான்.

அனுமன், மருந்து கொண்டு வந்து, இலக்குவனை உயிர்ப்பித்தல்

மருத்தின் காதலன் மார்பிடை அம்பு எலாம் வாங்கி,
'இருத்தியோ, கடிது ஏகலை? இளவலை இங்ஙன்
வருத்தம் காணுமோ மன்னவன்?' என்னலும், அன்னான்
கருத்தை உன்னி, அம் மாருதி உலகு எலாம் கடந்தான். 40

35. உலகுடைச் செல்வன் - இலக்குவன்; 38. பொன் - அழகு;
40. காதலன் - மகன்.

உய்த்து ஒரு திசைமேல் ஓடி, உலகு எலாம் கடக்கப் பாய்ந்து,
மெய்த் தகு மருந்துதன்னை, வெற்பொடும் கொணர்ந்த வீரன்,
பொய்த்தல் இல் குறி கெடாமே பொது அற நோக்கி, பொன்போல்
வைத்தது வாங்கிக் கொண்டு வருதலில், வருத்தம் உண்டோ?

தந்தனன், மருந்துதன்னை; தாக்குதல் முன்னே யோகம்
வந்தது, மாண்டார்க்கு எல்லாம்; உயிர் தரும் வலத்தது என்றால்,
நொந்தவர் நோவு தீர்க்கச் சிறிது அன்றோ? நொடிதல் முன்னே,
இந்திரன் உலகம் ஆர்க்க, எழுந்தனன் இளைய வீரன். 42

இலக்குவன் அனுமனைத் தழுவி, வீடணன் நலம் உசாவல்

எழுந்து நின்று, அனுமன் தன்னை இரு கையால் தழுவி, 'எந்தாய்!
விழுந்திலன் அன்றோ, மற்று அவ் வீடணன்!' என்ன, விம்மித்
தொழும் துணையவனை நோக்கி, துணுக்கமும் துயரும் நீக்கி,
'கொழுந்தியும் மீண்டாள்; பட்டான் அரக்கன்' என்று உவகை கொண்டான்.

வானரத் தலைவர் இராமன்பால் செல்ல, அவன் 'விளைந்தது என்?' எனல்

'"தருமம்" என்று அறிஞர் சொல்லும் தனிப் பொருள்தன்னை இன்னே
கருமம் என்ற அனுமன் ஆக்கிக் காட்டிய தன்மை கண்டால்,
அருமை என் இராமற்கு? அம்மா! அறம் வெல்லும், பாவம் தோற்கும்,
இருமையும் நோக்கின்' என்னா, இராமன்பால் எழுந்து சென்றார்.

ஒன்று அல பல என்று ஓங்கும் உயர் பிணத்து உம்பரோடும்
குன்றுகள் பலவும், சோரிக் குரை கடல் அனைத்தும், தாவிச்
சென்று அடைந்து, இராமன் தன்னைத் திருவடி வணக்கம் செய்தார்,
வென்றியின் தலைவர்; கண்ட இராமன், 'என் விளைந்தது?' என்றான்.

இராமன், அனுமனை வாழ்த்துதல்

உற்றது முழுதும் நோக்கி, ஒழிவு அற, உணர்வு உள் ஊற,
சொற்றனன் சாம்பன்; வீரன் அனுமனைத் தொடரப் புல்லி,
'பெற்றனென் உன்னை; என்னை பெறுதன? பெரியோய்! என்றும்
அற்ற இடையூறு செல்லா ஆயுளை ஆக!' என்றான். 46

இலக்குவனை இராமன் பாராட்டல்

புயல் பொழி அருவிக் கண்ணன், பொருமலன் பொங்குகின்றான்,
உயிர் புறத்து ஒழிய நின்ற உடல் அன்ன உருவத் தம்பி,
துயர் தமக்கு உதவி, மீளாத் துறக்கம் பெற்று, உயர்ந்த
தயரதற் கண்டால் ஒத்த தம்முனைத் தொழுது சார்ந்தான். 47

42. தாக்குதல் - உடல்மேல் படுதல்; யோகம் - நீங்கிய அறிவு வந்து சேர்தல்.

இளவலை நோக்கி, 'ஐய! இரவிதன் குலத்துக்கு ஏற்ற
அளவினம்; அடைந்தோர்க்கு ஆகி, மன் உயிர் கொடுத்த வண்மைத்
துளவு இயல் தொங்கலாய்! நீ அன்னது துணிந்தாய்என்றால்,
அளவு இயல் அன்று; செய்தற்கு அடுப்பதே ஆகும் அன்றே? 48

புறவு ஒன்றின் பொருட்டின் யாக்கை புண் உற அரிந்த புத்தேள்
அறவனும், ஐய! நின்னை நிகர்க்கிலன்; அப்பால் நின்ற
பிற வினை உரைப்பது என்னே? பேர் அருளாளர் என்பார்
கறவையும் கன்றும் ஒப்பார், தமர்க்கு இடர் காண்கில்' என்றான். 49

சாலிகை முதல ஆன போர்ப் பரம் தாங்கிற்று எல்லாம்
நீல் நிற ஞாயிறு அன்ன நெடியவன் முறையின் நீக்கி,
கோல் சொரி தனுவும் கொற்ற அனுமன் கைக் கொடுத்து, கொண்டல்
மேல் நிறை குன்றம் ஒன்றில் மெய்ம் மெலிவு ஆற்றலுற்றான்.

32 வானரர் களம் காண் படலம்

மூலபலப் படையின் அழிவு காணச் சுக்கிரீவனை இராமன் ஏவல்

ஆய பின், கவியின் வேந்தும், அளப்ப அருந் தானையோடும்,
மேயினன், இராமன் பாதம் விதி முறை வணங்கி; வீந்த
தீயவர் பெருமை நோக்கி, நடுக்கமும் திகைப்பும் உற்றார்,
ஓய்வுறு மனத்தார் ஒன்றும் உணர்ந்திலர், நாணம் உற்றார். 1

'மூண்டு எழு சேனை வெள்ளம் உலகு ஒரு மூன்றின் மேலும்
நீண்டு உள அதனை, ஐய! எங்ஙனம் நிமிர்ந்தது?' என்னத்
தூண் திரண்டனைய திண் தோள் சூரியன் சிறுவன் சொல்ல,
'காண்டி நீ, அரக்கர் வேந்தன்தன்னெடும் களத்தை' என்றான்.

தொழுதனர் தலைவர் எல்லாம்; தோன்றிய காதல் தூண்ட,
'எழுக' என விரைவின் சென்றார், இராவணற்கு இளவலோடும்;
கழுகொடு பருந்தும், பாறும், பேய்களும், கணங்கள் மற்றும்,
குழுவிய களத்தைக் கண்ணின் நோக்கினர், துணுக்கம் கொண்டார். 3

ஏங்கினார்; நடுக்கமுற்றார்; இரைத்து இரைத்து, உள்ளம் ஏற,
வீங்கினார்; வெருவலுற்றார்; விம்மினார்; உள்ளம் வெம்ப,
ஓங்கினார்; மெள்ள மெள்ள உயிர் நிலைத்து, உவகை ஊற,
ஆங்கு அவர் உற்ற தன்மை யார் அறிந்து அறையகிற்பார்? 4

48. அளவினம் - தன்மையுடையவரானோம்; 50. சாலிகை - கவசம்.
32: 2. நிமிர்ந்தது - வென்றது.

உயிர் இழந்து கிடக்கும் அரக்கர் சேனை குறித்து வீடணன் கூறுதல்

ஆயிரம் பருவம் கண்டால், காட்சிக்கு ஓர் கரையிற்று அன்றால்;
மேயின துறைகள்தோறும் விம்மினார் நிற்பது அல்லால்,
பாய் திரைப் பரவை ஏழும் காண்குறும் பதகர் என்ன,
'நீ இருந்து உரைத்தி' என்றார்; வீடணன் நெறியின் சொல்வான்: 5

'காகப் பந்தர்ச் செங் களம் எங்கும், செறி கால
ஓகத்து அம்பின் பொன்றினவேனும், உடல் ஒன்றி,
மேகச் சங்கம் தொக்கன, வீழும் வெளி இன்றி,
நாகக் குன்றின் நின்றன காண்மின்—நமரங்காள்! 6

'வென்றிச் செங் கண் வெம்மை அரக்கர் விசை ஊர்வ,
ஒன்றிற்கு ஒன்று உற்று அம்பு தலைப்பட்டு உயிர் நுங்க,
பொன்றி, சிங்கம் நாக அடுக்கல் பொலிகின்ற
குன்றில் துஞ்சும் தன்மை நிகர்க்கும் குறி காணீர். 7

'அளியின் பொங்கும் அங்கணன் ஏவும் அயில் வாளிக்
களியில் பட்டார் வாள் முகம், மின்னும் கரை இல்லாப்
புளினத் திட்டின் கண் அகன் வாரிக் கடல் பூத்த
நளினக் காடே ஒப்பன காண்மின்—நமரங்காள்! 8

'ஒழுகிப் பாயும் மும் மத வேழம் உயிரோடும்
எழுகிற்கில்லாச் செம்புனல் வெள்ளத்திடை இற்ற;
பழகிற்கில்லாப் பல் திரை தூங்கும் படர் வேலை
முழுகித் தோன்றும் மீன் அரசு ஒக்கும் முறை நோக்கீர்! 9

'பூ வாய் வாளிச் செல் எறி காலைப் பரி பொன்ற,
கோ ஆர் விண்வாய் வெண் கொடி திண் பாயொடு கூட,
மா வாய் திண் தேர் மண்டுதலால், நீர் மறி வேலை
நாவாய் மானச் செல்வன காண்மின்—நமரங்காள்! 10

'கடக் கார் என்னப் பொங்கு கவந்தத்தொடு கைகள்
தொடக்காநிற்கும் பேய், இலயத்தின் தொழில் பண்ணி,
மடக்கோ இல்லா வார் படிமக் கூத்து அமைவிப்பான்,
நடக் கால் காட்டும் கண்ணுளர் ஒக்கும்—நமரங்காள்! 11

5. பருவம் - ஆண்டு; பதகர் - பாதகர்; 6. காகப் பந்தர் - காகங்களின் பந்தல்; ஓகம் - பெருங்கூட்டம், தொடர்பு என்பாரும் உண்டு; நாகக் குன்று - யானைகளால் இயன்ற மலைகள்; நமரங்காள்! - நம்மவர்களே; 8. அளி - அருள்; களியில் - மதக் களிப்போடு; நளினக் காடு - தாமரைத் தொகுதி; 9. மீன் அரசு - மகர மீன்; 10. பூ - கூர்மை; வாளிச் செல் - அம்பாகிய இடி; கோ - சிறப்பு; மா வாய் திண் தேர் - அழகு பொருந்திய திண்ணிய தேர்; 11. இலயம் - தாள ஒற்று; மடக்கு - மடக்குதல், சோம்புதல்; படிமக் கூத்து - அபிநயக் கூத்து; நடக் கால் - நடனம் செய்யும் காலின் முறை; கண்ணுளர் - கூத்தர்.

'மழுவின் கூர் வாய் வன் பல் இடுக்கின் வய வீரர்
குழுவின் கொண்டந் நாடி தொடக்கப் பொறி கூட்டித்
தழுவிக் கொள்ள, கள்ள மனப் பேய் அவைதம்மை
நழுவிச் செல்லும் இயல்பின காண்மின்—நமரங்காள்! 12

'பொன்னின் ஓடை மின் பிறழ் நெற்றிப் புகர் வேழம்,
பின்னும் முன்னும் மாறின வீழ்வின் பிணையுற்ற,
தன்னின் நேரா மெய் இரு பாலும் தலை பெற்ற
என்னும் தன்மைக்கு ஏய்வன பல் வேறு இவை காணீர். 13

'நாமத் திண் போர் முற்றிய கோப நகை நாறும்,
பாமத் தொல் நீர் அன்ன நிறத்தோர் பகு வாய்கள்,
தூமத்தோடும் வெங் கனல் இன்னும் சுடர்கின்ற
ஓமக் குண்டம் ஒப்பன பல் வேறு இவை காணீர். 14

'மின்னும் ஓடை ஆடல் வயப் போர் மிடல் வேழக்
கன்னம் மூலத்து உற்றன வெண் சாமரை காணீர்;
மன்னும் மா நீர்த் தாமரை மானும் வதனத்த
அன்னம் மெல்லத் துஞ்சுவ ஒக்கின்றவை காணீர். 15

'ஒளிம் முற்ருது உற்று உயர் வேழத்து ஒளிர் வெண் கோடு,
ஆளின் முற்ருச் செம் புனல் வெள்ளத்தவை காணீர்;
கோளின் முற்ருச் செக்கருள் மேகக் குழுவின்கண்
நாளின் முற்ரு வெண் பிறை போலும்—நமரங்காள்! 16

'கொடியும் வில்லும், கோலொடு வேலும், குவி தேரும்,
துடியின் பாதக் குன்றின்மிசைத் தோல் விசியின் கட்டு
ஒடியும் வெய்யோர் கண் எரி செல்ல, உடன் வெந்த
தடி உண்டு ஆடிக் கூளி தடிக்கின்றன காணீர். 17

'சகரம் முந்நீர்ச் செம்புனல் வெள்ளம் தடுமாரு,
மகரம் தம்மின் வந்தன காணு, மனம் உட்கி,
''சிகரம் அன்ன! யானைகொல்?'' என்னச் சில நாணி,
நகரம் நோக்கிச் செல்வன காண்மின்—நமரங்காள்! 18

12. கொண்டந் நாடி - கொண்ட நாடி, விரித்தல் விகாரம்; நாடி - உடலின் நரம்புகள்; தொடக்கப் பொறி - தொடக்குதலை (கட்டுதலை) உடைய எந்திரம்; 14. பாமம் - பரவுதல்; 15. கன்னம் மூலத்து - செவிகளின்மேல்: 16. ஒளிம் முற்ருது - ஒழுங்காக முற்றுகை செய்யாது; 17. துடியின் பாதக் குன்று - துடி போன்ற கால்களையுடைய மலை, அதாவது யானை; தோல் விசியின் கட்டு - தோலால் கட்டப்பெற்ற அம்பாரியிலும்; தடி - மாமிசம்; தேரிலும் கட்டின்கண்ணும் கூளி ஆடித் தடிக்கின்றன என இயையும்.

'விண்ணில் பட்டார் வெற்பு உறழ் காயம் பல, மேன் மேல்,
மண்ணில் செல்வார் மேனியின் வீழ, மடிவுற்றார்,
எண்ணின் தீரா அன்னவை தீரும் மிடல் இல்லாக்
கண்ணில் தோன்றார், விம்மி உளைக்கும் படி காணீர். 19

'அச்சின் திண் தேர், ஆனையின், மாமேல், காலாளின்
மொய்ச்சுச் சென்றார் மொய் குருதித் தாரைகள் முட்ட,
உச்சிச் சென்றான் ஆயினும், வெய்யோன், உதயத்தின்
குச்சிச் சென்றான் ஒத்துளன் ஆகும் குறி காணீர். 20

'கால் தோய் மேனிக் கண்டகர் கண்டப்படு காலை,
''ஆறோ!'' என்ன, விண் படர் செஞ் சோரியது ஆகி,
வேறாய் நின்ற வெண் மதி செங் கேழ் நிறம் விம்மி,
மாறு ஓர் வெய்யோன் மண்டிலம் ஒக்கின்றது காணீர். 21

'வான் நனைய, மண் நனைய, வளர்ந்து எழுந்த
கொழுங் குருதி மகர வேலை-
தான் நனைவுற்று எழும் பறவைச் சிறை தெளித்து,
புது மழையின் துள்ளி தாங்கி,
மீன் அனைய நறும் போதும், விரை அரும்பும்,
சிறை வண்டும், நிறம் வேறு எய்தி,
கானகமும் கடி பொழிலும் முறி ஈன்ற
போன்று ஒளிர்வ காண்மின்! காண்மின்! 22

'வரை பொருத மத யானைத் துணை மருப்பும்,
கிளர் முத்தும், மணியும், வாரி,
திரை பொருது புறம் குவிப்பத் திறம் கொள் பணை
மரம் உருட்டி, சிறைப் புள் ஆர்ப்ப,
நுரை கொடியும் வெண் குடையும் சாமரையும்
எனச் சுமந்து, பிணத்தின் நோன்மைக்
கரை பொருது கடல் மடுக்கும் கடுங் குருதிப்
பேர் ஆறு காண்மின்! காண்மின்! 23

19. மடிவுற்றார் - உயிர் சோர்ந்தார்; 20. மொய்ச்சு - மொய்த்து, நெருங்கி; முட்டுதல் - பாய்தல்; உதயத்தின் குச்சி - உதய மலையின் முகடு; 22. முறி - செந்தளிர்.

'கய்க் குன்றப் பெருங் கரைய, நிருதர் புயக்
கல் செறிந்த, கதலிக் கானம்
மொய்க்கின்ற பரித் திரைய, முரண் கரிக் கைக்
கோள் மாவ, முளரிக் கானின்
நெய்க்கின்ற வாள் முகத்த, விழும் குடரின்
பாசடைய, நிணமேல் சேற்ற,
உய்க்கின்ற உதிர நிறக் களம் குளங்கள்,
உலப்பு இறந்த, உவையும் காண்மின்! 24

'நெடும் படை வாள் நாஞ்சில் உழு நிணச் சேற்றின்,
உதிர நீர் நிறைந்த காப்பின்,
கடும் பகடு படி கிடந்த கரும் பரம்பின்,
இன மள்ளர் பரந்த கையில்,
படுங் கமல மலர் நாறும் முடி பரந்த
பெருங் கிடக்கைப் பரந்த பண்ணை,
தடம் பணையின் நறும் பழனம் தழுவியதே
எனப் பொலியும் தகையும் காண்மின்! 25

'வெளில் தீர்த்த வரை புரையும் மிடல் அரக்கர்
உடல் விழவும், வீரன் வில்லின்
ஒளிறு ஈர்த்த முழு நெடு நாண் உரும்ஏறு
பல படவும், உலகம் கீண்டு
நளில் தீர்த்த நாகபுரம் புக்கு, இழிந்த
பகழி வழி நதியின் ஓடி,
களிறு ஈர்த்துப் புக மண்டும் கடுங் குருதித்
தடஞ் சுழிகள் காண்மின்! காண்மின்! 26

'கய்த்தலமும், காத்திரமும், கருங் கழுத்தும்,
நெடும் புயமும், உரமும், கண்டித்து
எய்த்தில போய், திசைகள்தொறும் இரு நிலத்தைக்
கிழித்து இழிந்தது என்னின் அல்லால்,
மத்த கரி வய மாவின், வாள் நிருதர்
பெருங் கடலின், மற்று இவ் வாளி
தய்த்து உளவாய் நின்றது என ஒன்றேயும்
காண்பு அரிய தகையும் காண்மின்! 27

24. கதலிக் கானம் - கொடிகளின் தொகுதி; கோள் மாவ - முதலைகளையுடையன; கோள் மா - முதலை; 25. வாள் நாஞ்சில் - வாளாகிய கலப்பை; காப்பு - தேக்கம்; கடும் பகடு - விரைவினையுடைய யானை, எருமை; மள்ளர் - வீரர், உழவர்; நாறும் முடி - மணம் நாறும் மகுடம், நாற்று முடி; 26. வெளில் தீர்த்த வரை - கட்டுத்தறியைப் போக்கிய மலை போன்ற யானை; ஒளிறு நாண் - விளங்குகின்ற வில்லின் நாண்; நளில் தீர்த்த நாகபுரம் - செறிவு இல்லாத பாதாளம்; 27. காத்திரம் - யானையின் முன்னங்கால்; எய்த்தல் - இளைத்தல்.

‘குமுதம் நாறும் மதத்தன, கூற்றன,
சமுதரோடு மடிந்தன, சார்தரும்
திமிர மா அன்ன செய்கைய, இத் திறம்
அமிர்தின் வந்தன, ஐ-இரு கோடியால். 28

‘ஏறு நான்முகன் வேள்வி எழுந்தன;
ஊறும் மாரியும், ஓங்கு அலை ஓதமும்,
மாறும் ஆயினும், மா மதமாய் வரும்
ஆறு மாறில, ஆறு-இரு கோடியால். 29

‘உயிர் வறந்தும், உதிரம் வறந்து தம்
மயர் வறந்தும், மதம் மறவாதன,
புயலவன் திசைப் போர் மத யானையின்
இயல் பரம்பரை ஏழ்-இரு கோடியால். 30

‘கொடாது நிற்றலின், கொற்ற நெடுந் திசை
எடாது நிற்பன, நாட்டம் இமைப்பு இல,
வடாது திக்கின் மதவரையின் வழிக்
கடாம் முகத்த, முளரிக் கணக்கவால். 31

‘வானவர்க்கு இறைவன் திறை தந்தன
ஆன வர்க்கம் ஓர் ஆயிர கோடியும்,
தானவர்க்கு இறைவன் திறை தந்தன
ஏனை வர்க்கம் கணக்கு இல, இவ் எலாம். 32

‘பாற்கடல் பண்டு அமிழ்தம் பயந்த நாள்,
ஆர்த்து எழுந்தன, ஆயிரம் ஆயிரம்
மால் கணப் பரி இங்கு இவை; மாறு இவை;
மேற்கின் வேலை வருணனை வென்றவால். 33

‘இரு நிதிக் கிழவன் இழந்து ஏகின
அரிய அப் பரி ஆயிரம் ஆயிரம்;
விரி சினத்து இகல் விஞ்சையர் வேந்தனைப்
பொருது பற்றிய, தாமரை போலுமால்.’ 34

28. சமுதர் - ஸம்மிதர், ஒத்தவர், ஈண்டு ஒத்துப் பழகும் பாகர்; திமிர மா - இருள் நிறமுடைய பன்றி, கரும்பன்றி; அமிர்தின் - (பாற்கடலில் தோன்றிய) அமுதத்தோடு; 29. ஏறு - பெருமை; 30. மயர் - மதமயக்கம்; புயலவன் - இந்திரன்; 31. வடாது திக்கின் மதவரை - வடதிசைக்குரிய சாருவபௌமம் என்னும் பெயரையுடைய யானை; வழி - மரபு; முளரி - தாமரை என்னும் பேரெண்; 33. மேற்கின் வேலை வருணன் - மேலைக் கடலில் உள்ள வருணபகவான்; வென்ற - வென்று பெற்றவை; 34. விஞ்சையர் - வித்தியாதரர்.

என்று, 'காணினும், காட்டினும், ஈது இறைக்
குன்று காணினும் கோள் இலது; ஆதலால்,
நின்று காணாதும்; நேமியினானுழைச்
சென்று காண்டும்' என்று ஏகினர், செவ்வியோர். 35

ஆரியன்-தொழுது, ஆங்கு அவன் பாங்கரும்,
போர் இயற்கை நினைந்து எழு பொம்மலார்,
பேர் உயிர்ப்பொடு இருந்தனர்; பின்பு உறும்
காரியத்தின் நிலைமை கழறுவாம்: 36

33 இராவணன் களம் காண் படலம்

போர் வீரர்க்கு விருந்து அளிக்க இராவணன் முனைதல்

பொருந்து பொன் பெருங் கோயிலுள், போர்த் தொழில்
வருந்தினர்க்கு, தம் அன்பினின் வந்தவர்க்கு,
அருந்துதற்கு அமைவு ஆயின ஆக்குவான்,
விருந்து அமைக்க மிகுகின்ற வேட்கையான், 1

வான நாட்டை 'வருக!' என, வல் விரைந்து,
ஏனை நாட்டவரோடும் வந்து எய்தினார்;
'மான நாட்டு அந்த போகம் அமைத்திர்; மற்று
ஊனம் நாட்டின், இழத்திர் உயிர்' என்றான். 2

நறவும் ஊனும், நவை அற நல்லன
பிறவும், ஆடையும், சாந்தமும், பெய்ம் மலர்த்
திறமும், நானப் புனலொடு சேக்கையும்,
புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால். 3

நானம் நெய் நன்கு உரைத்து, நறும் புனல்
ஆன கோது அற ஆட்டி, அமுதொடும்
பானம் ஊட்டி, சயனம் பரப்புவான்,
வான நாடியர் யாவரும் வந்தனர். 4

35. இறைக் குன்று - குன்றுக்கு இறை, மலையரசு, இமயமலை; நின்று - பொறுத்திருந்து; 36. பொம்மல் - மகிழ்ச்சி.

33: 3. நானப் புனல் - கத்தூரி கலந்த நீர்; 4. சயனம் பரப்புதல் - படுக்கை விரித்தல். இடக்கரடக்கலாய் உடனுறைவைக் குறித்தது.

பாடுவார்கள்; பயில் நடம் பாவகத்து
ஆடுவார்கள்; அமளியில் இன்புறக்
கூடுவார்கள்; முதலும் குறைவு அறத்
தேடினுன் என, பண்ணேயின் சேர்ந்ததால். 5

அரைசர் ஆதி, அடியவர் அந்தமா,
வரை செய் மேனி இராக்கதர் வந்துளார்,
விரைவின் இந்திர போகம் விழைதர,
கரை இலாத பெரு வளம் கண்ணினுர். 6

மூலபல அழிவினைத் தூதர் அறிவித்தல்

இன்ன தன்மை அமைந்த இராக்கதர்
மன்னன் மாடு வந்து எய்தி வணங்கினுர்,
அன்ன சேனே களப் பட்ட ஆறு எலாம்
துன்னு தூதர் செவியிடைச் சொல்லுவார்: 7

நடுங்குகின்ற உடலினர், நா உலர்ந்து
ஒடுங்குகின்ற உயிர்ப்பினர், உள் அழிந்து
இடுங்குகின்ற விழியினர், ஏங்கினுர்,
பிடுங்குகின்ற உரையினர், பேசுவார்: 8

'இன்று யார் விருந்து இங்கு உண்பார்?—இகல் முகத்து இமையோர்
வென்றியாய்!—ஏவச் சென்ற ஆயிர வெள்ளச் சேனே [தந்த
நின்றுளார் புறத்தது ஆக, இராமன் கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினுல், இரண்டு மூன்று கடிகையின் உலந்தது' என்ருர். 9

'வலிக் கடன் வான் உளோரைக் கொண்டு, நீ வகுத்த போகம்,
''கலிக் கடன் அளிப்பல்'' என்று நிருதர்க்குக் கருதினுயேல்,
பலிக் கடன் அளிக்கற்பாலே அல்லது, உன் குலத்தின்பாலோர்
ஒலிக் கடல் உலகத்து இல்லே; ஊர் உளார் உளரே உள்ளார்.*

இராவணன் தூதர் பேச்சை ஐயுற்றுக் கூறுதல்

ஈட்ட அரும் உவகை ஈட்டி இருந்தவன், இசைத்த மாற்றம்
கேட்டலும், வெகுளியோடு துணுக்கமும் இழவும் கிட்டி,
ஊட்டு அரக்கு அனேய செங் கண் நெருப்பு உக, உயிர்ப்பு வீங்க,
தீட்டிய படிவம் என்னத் தோன்றினன், திகைத்த நெஞ்சன்.

5. பாவகம் - பாவனே; பண்ணேயின் - மகளிர் கூட்டத்தால்; 9. புறம் - போர்க்களம்; 10. கலிக் கடன் - மகிழ்ச்சியின் முறைமை; 11. படிவம் - சித்திரம்.

'என்னினும் வலியர் ஆன இராக்கதர் யாண்டும் வீயார்;
உன்னினும், உலப்பு இலாதார்; உவரியின் மணலின் நீள்வார்;
''பின் ஒரு பெயரும் இன்றி மாண்டனர்'' என்று பேசும்
இந் நிலை இதுவோ? பொய்ம்மை விளம்பினிர் போலும்' என்றான். 12

மாலியவான், 'தூதர் பொய் உரையார்' எனல்

கேட்டு அயல் இருந்த மாலி, 'ஈது ஒரு கிழமைத்து ஆமோ?
ஒட்டு உறு தூதர் பொய்யே உரைப்பரோ? உலகம் யாவும்
வீட்டுவது இமைப்பின் அன்றே, வீங்கு எரி? விரித்த எல்லாம்
மாட்டுவன் ஒருவன் அன்றே, இறுதியில் மனத்தால்?'' என்றான்.

' ''அளப்ப அரும் உலகம் யாவும் அமைத்துக் காத்து அழிக்கின்றான் தன்
உளப் பெருந் தகைமைதன்னால் ஒருவன்'' என்று உண்மை வேதம்
கிளப்பது கேட்டும் அன்றே? ''அரவின்மேல் கிடந்து, மேல் நாள்,
முளைத்த பேர் இராமன்'' என்ற வீடணன் மொழி பொய்த்து ஆமோ?

'ஒன்று இடின் அதனை உண்ணும் உலகத்தின் உயிர்க்கு ஒன்றாத
நின்றன எல்லாம் பெய்தால், உடன் நுங்கு நெருப்பும் காண்டும்;
குன்றொடு மரனும், புல்லும், பல் உயிர்க் குழுவும், கொல்லும்
வன் திறல் காற்றும் காண்டும்; வலிக்கு ஒரு வரம்பும் உண்டோ?

'பட்டதும் உண்டே உன்னை, இந்திரச் செல்வம்; பற்று
விட்டதும் மெய்ம்மை; ஐய! மீட்டு ஒரு வினையும் இல்லை;
கெட்டது, உன் பொருட்டினாலே, நின்னுடைக் கேளிர் எல்லாம்;
சிட்டது செய்தி' என்றான்; அதற்கு அவன் சீற்றம் செய்தான்.

இராவணன் மறுமொழி

'இலக்குவன்தன்னை வேலால் எறிந்து, உயிர் கூற்றுக்கு ஈந்தேன்;
அலக்கணில் தலைவர் எல்லாம் அழுந்தினர்; அதனைக்கண்டால்,
உலக்குமால் இராமன்; பின்னர் உயிர்ப் பொறை உகவான்; உற்ற
மலக்கம் உண்டாகின் ஆக; வாகை என் வயத்தது' என்றான்.

தூதர், இலக்குவன் உயிர் பெற்றமை உரைத்தல்

ஆண்டு அது கண்டு நின்ற தூதுவர், ஐய! மெய்யே
மீண்டது, அவ் அளவின் ஆவி, மாருதி மருந்து மெய்யில்
தீண்டவும்; தாழ்த்தது இல்லை; யாரும் அச் செங்கணானைப்
பூண்டனர் தழுவிப் புக்கார்; காணுதி போதி' என்றார். 18

13. கிழமை - முறைமை; மாட்டுவன் - அழிக்கின்றவன், உருத்திரன்; 15. ஒன்றாத - உண்ணப் பொருந்தாதன; 16. பட்டதும் - பொருந்தி இருந்தகாலமும்; சிட்டது - சிறந்தது; 17. மலக்கம் - துன்பம்.

இராவணன் கோபுரத்தில் ஏறி, களம் காணுதல்

தேறிலன் ஆதலானே, மறுகுறு சிந்தை தேற,
ஏறினன், கனகத்து ஆரைக் கோபுரத்து உம்பர் எய்தி,
ஊறின சேனை வெள்ளம் உலந்த பேர் உண்மை எல்லாம்,
காறின உள்ளம் நோவ, கண்களால் தெரியக் கண்டான். 19

கொய் தலைப் பூசல் பட்டோர் குலத்தியர் குவளை தோற்று
நெய்தலை வென்ற வாள்-கண் குமுதத்தின் நீர்மை காட்ட,
கய் தலை உற்ற பூசல் கடலொடு நிமிரும்காலை,
செய்தலை உற்ற ஓசைச் செயலதும் செவியின் கேட்டான். 20

எண்ணும் நீர் கடந்த யானைப் பெரும் பிணம் ஏந்தி, யாணர்
மண்ணின் நீர் அளவும் கல்லி, நெடு மலை பறித்து, மண்டும்
புண்ணின் நீர் ஆறும், பல் பேய்ப் புதுப் புனல் ஆடும் பொம்மல்,
கண்ணின் நீர் ஆறும், மாறுக் கருங் கடல் மடுப்பக் கண்டான்.

குமிழி நீரோடும், சோரிக் கனலொடும், கொழிக்கும் கண்ணன்
தமிழ் நெறி வழக்கம் அன்ன தனிச் சிலை வழக்கில் சாய்ந்தார்
அமிழ் பெருங் குருதி வெள்ளம் ஆற்று வாய்முகத்தின் தேக்கி,
உமிழ்வதே ஒக்கும் வேலை ஓதம் வந்து உடற்றக் கண்டான். 22

விண்களில் சென்ற வன் தோள் கணவரை, அலகை வெய்ய
புண்களில் கைகள் நீட்டி, புது நிணம் கவர்வ நோக்கி,
மண்களில் தொடர்ந்து, வானில் பிடித்து, வள் உகிரின் மானக்
கண்களைச் சூன்று நீக்கும் அரக்கியர் குழாமும் கண்டான்.* 23

இராவணன் அரசவை அடைதல்

விண் பிளந்து ஒல்க ஆர்க்கும் வானரர் வீக்கம் கண்டான்;
மண் பிளந்து அழுந்த ஆடும் கவந்தத்தின் வருக்கம் கண்டான்;
கண் பிளந்து அகல நோக்கும் வானவர் களிப்பும் கண்டான்;
புண் பிளந்தனைய நெஞ்சன் கோபுரத்து இழிந்து போந்தான்.

நகை பிறக்கின்ற வாயன், நாக்கொடு கடை வாய் நக்கப்
புகை பிறக்கின்ற மூக்கன், பொறி பிறக்கின்ற கண்ணன்,
மிகை பிறக்கின்ற நெஞ்சன், வெஞ் சினத் தீமேல் வீங்கி,
சிகை பிறக்கின்ற சொல்லன், அரசியல் இருக்கை சேர்ந்தான்.

19. ஆரை - மதில், காறின உள்ளம் - வருந்திய மனம்; 20. குமுதம் - செவ்வாம்பல்; பூசல் - அழுகை ஒலி; 22. ஆற்று வாய்முகம் - ஆற்றின் முகத் துவாரம், சங்க முகமாகிய வாயில்; 25. மிகை - செருக்கு.

34 இராவணன் தேர் ஏறு படலம்

இராவணன் எஞ்சிய படையைத் திரட்டுதல்

பூதரம் அனைய மேனி, புகை நிறப் புருவச் செந் தீ,
மோதரன் என்னும் நாமத்து ஒருவனை முறையின் நோக்கி,
' ''ஏது உளது இறந்திலாதது இலங்கையுள் இருந்த சேனை
யாதையும் எழுக!'' என்று ஆனை மணி முரசு எற்றுக!' என்றான். 1

எற்றின முரசினோடும் ஏழ்-இரு நூறு கோடி
கொற்றவாள் நிருதர் சேனை குழீஇயது; கொடித் திண் தேரும்,
சுற்றுறு துளைக் கைம் மாவும், துரகமும், பிறவும் தொக்க,
வற்றிய வேலை என்ன, இலங்கை ஊர் வறளிற்று ஆக. 2

ஈசனை, இமையா முக் கண் ஒருவனை, இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின் செய்து, திரு மறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி, மற்றும் வேட்டன வேட்டோர்க்கு எல்லாம்
ஆசு அற நல்கி, ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவது ஆனான்.

இராவணன் போர்க்கோலம் பூணுதல்

அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம் அருக்கர்
உருவினோடும் வந்து உதித்தனர் ஆம் என ஒளிர,
கருவி நான்முகன் வேள்வியில் படைத்ததும், கட்டிச்
செருவில் இந்திரன் தந்த பொன் கவசமும், சேர்த்தான். 4

வாள் வலம் பட, மந்தரம் சூழ்ந்த மாசுணத்தின்
தாள் வலந்து ஒளிர் தமனியக் கச்சொடும் சார்த்தி;
கோள் வலந்தன குவிந்தன ஆம் எனும் கொள்கை
மீள்வு இல் கிம்புரி மணிக் கடி சூத்திரம் வீக்கி; 5

மறை விரித்தன்ன மாடுறு மான மாக் கலுழன்
சிறை விரித்தன்ன கொய்சகம் மருங்கு உறச் சேர்த்தி;
முறை விரித்தன்ன முறுக்கிய கோசிக மருங்கில்
பிறை விரித்தன்ன வெள் எயிற்று அரவமும் பிணித்து; 6

மழைக் குலத்தொடு வான் உரும்ஏறு எலாம் வாரி
இழைத் தொடுத்தன அனைய வாள் உடை மணி ஆர்த்து;
முழைக் கிடந்த வல் அரிஇனம் முழங்குவ போல்வ
தழைக்கும் மின் ஒளிப் பொன் மலர்ச் சதங்கையும் சாத்தி; 7

34: 1. மோதரன் - மகோதரன்; 4. கருவி நான்முகன் - உலகத் தோற்றத்துக்குக் காரணமான பிரமதேவன்; 5. வலத்தல் - சுற்றுதல்; 6. கோசிகம் - வெண்பட்டாடை.

உரும் இடித்த போது அரவு உறு மறுக்கம், வான் உலகின்
இரு நிலத்திடை, எவ் உலகத்திடை, யாரும்
புரிதரப் படும் பொலங் கழல் இலங்குறப் பூட்டி;
சரியுடைச் சுடர் சாய் நலம் சார்வுறச் சாத்தி; 8

நால்-அஞ்சு ஆகிய கரங்களில் நனந் தலை அனந்தன்
ஆலம் சார் மிடற்று அருங் கறை கிடந்தென, இலங்கும்
கோலம் சார் நெடுங் கோதையும் புட்டிலும் கட்டி;
தாலம் சார்ந்த மாசுணம் எனக் கங்கணம் தழுவ; 9

கடல் கடைந்த மால் வரையினைச் சுற்றிய கயிற்றின்
அடல் கடந்த தோள் அலங்கு போர் வலயங்கள் இலங்க;
உடல் கடைந்த நாள் ஒளியவன் உதிர்த்த பொன் கதிரின்
சுடர் தயங்குற, குண்டலம் செவியிடைத் தூக்கி; 10

உதயக் குன்றத்தோடு அத்தத்தின் உலாவுறு கதிரின்
துதையும் குங்குமத் தோளொடு தோளிடைத் தொடர;
புதை இருள் பகைக் குண்டலம் அனையவை பொலிய;
சிதைவு இல் திங்களும் மீனும்போல், முத்துஇனம் திகழ; 11

வேலைவாய் வந்து, வெய்யவர் அனைவரும் விடியும்
காலை உற்றனர் ஆம் எனக் கதிர்க் குலம் காலும்
மாலை பத்தின்மேல், மதியம் முன் நாளிடைப் பலவாய்
ஏல முற்றிய அனைய முத்தக் குடை இமைப்ப; 12

பகுத்த பல் வளக் குன்றினில் முழை அன்ன பகு வாய்
வகுத்த வான் கடைக் கடைதொறும் வளை எயிற்று ஈட்டம்,
மிகுத்த நீல வான் மேகம் சூழ் விசும்பிடை, தசும்பூடு
உகுத்த செக்கரின் பிறைக் குலம் முளைத்தன ஒக்க; 13

ஒத்த தன்மையின் ஒளிர்வன, தரளத்தின் ஓதம்
தத்துகின்றன, வீர பட்டத் தொகை தயங்க;
முத்த ஓடைய முரண் திசை முழு மத யானை
பத்து நெற்றியும் சுற்றிய பேர் எழில் படைக்க; 14

8. சரியுடை - சரிந்த உடையில்; சுடர் சாய் நலம் -(கழலின்) சுடர் காய்தலினாலான அழகு; 9. தாலம் - நாக்கு, பனை மரம் என்பாரும் உண்டு; 10. கயிறு - கடை கயிறு, ஈண்டு வாசுகி என்னும் பாம்பாகிய கடை கயிறு; ஒளியவன் - சூரியன்; துவட்டா என்பவன் மகளாகிய சஞ்சை தன் கணவனை சூரியனது வெம்மை ஒளியைத் தாங்க முடியாமல் தனது உடல் நிழலைத் தேவியாக அமைத்துத் தந்தை வீட்டை அடைந்தாள். பிறகு பலகாலம் சென்றபின் துவட்டாவின் விருப்பத்திற்கு இணங்கிச் சூரியன் தன் ஒளி குறையு மாறு சாணை பிடிக்க ஒருப்பட்டனன் என்பது புராண வரலாறு; 12. மாலை - வரிசை, ஈண்டு முடியின் வரிசை; 14. தரளத்தின் ஓதம் - முத்துக்களின் ஒலி அலை.

புலவி மங்கையர் பூஞ் சிலம்பு அரற்று அடி போக்கி,
தலைமை கண்ணினர்த் தாழ்கிலா மணி முடித் தலங்கள்
உலகம் ஒன்றினை விளக்குறும் கதிரினை ஒட்டி,
அலகுஇல் எவ் உலகத்தினும் வயங்கு இருள் அகற்ற; 15

நாகம் நானிலம் நான்முகன் நாடு என நயந்த
பாகம் மூன்றையும் வென்று கொண்டு, அமரர் முன்பு அணிந்த
வாகை மாலையும் மருங்கு உற, வரி வண்டொடு அளவி;
தோகை அன்னவர் விழி தொடர் தும்பையும் சூட்டி; 16

அகழும் வேலையை, காலத்தை, அளக்கர் நுண் மணலை,
நிகழும் மீன்களை, விஞ்சையை, நினைப்பது என்? நின்ற
இகழ்வு இல் பூதங்கள் இறப்பினும், இறுதிசெல்லாத
புகழ் என, சரம் தொலைவு இலாத் தூணி பின் பூட்டி; 17

'வருக, தேர்!' என, வந்தது—வையமும் வானும்
உரக தேயமும் ஒருங்கு உடன் இவரினும், உச்சிச்
சொருகு பூ அன்ன சுமையது; துரகம் இன்று எனினும்,
நிருதர் கோமகன் நினைந்துழிச் செல்வது, ஓர் இனைப்பில். 18

ஆயிரம் பரி அமுதொடு வந்தவும், அருக்கன்
பாய் வயப் பசுங் குதிரையின் வழியவும், படர் நீர்
வாய் மடுக்கும் மா வடவையின் வயிற்றின், வன் காற்றின்
நாயகற்கு, வந்து உதித்தவும், பூண்டது நலத்தின். 19

பாரில் செல்வது, விசும்பிடைப் படர்வது; பரந்த
நீரில் செல்வது; நெருப்பினும் செல்வது; நிமிர்ந்த
போரில் செல்வது; பொன் நெடு முகட்டிடை விரிஞ்சன்
ஊரில் செல்வது; எவ் உலகத்தும் செல்வது, ஓர் இமைப்பின்.

எண் திசைப் பெருங் களிற்றிடை மணி என இசைக்கும்
கண்டை ஆயிர கோடியின் தொகையது; கதிரோன்
மண்டிலங்களை மேருவில் குவித்தென வயங்கும்
அண்டம் விற்கும் நன் காசுஇனம் குயிற்றியது, அடங்க. 21

முனைவர் வானவர் முதலினர், அண்டத்து முதல்வர்
எனைவர் ஈந்தவும், இகலினில் இட்டவும், இயம்பா
வினையின் வெய்யன படைக்கலம், வேலை என்று இசைக்கும்
சுனையின் நுண் மணல் தொகையன சுமந்தது, தொக்க. 22

15. அடி போக்கி - பாதங்களைத் தவிர்த்து; தலைமை கண்ணினர் - தலைமையைக் கருதுகின்றவர்கள்; 16. நாகம் - பாதாளம்; அணிந்த - அணிவித்த; 18. இவர்தல் - ஏறி அமர்தல்; 21. கண்டை - ஒலிக்கும் மணி; அண்டம் விற்கும் காசு - அண்டத்தையே விலையாகக் கொள்ளும் சிறந்த இரத்தினம்.

கண்ணன் நேமியும், கண்ணுதல் கணிச்சியும், கமலத்து
அண்ணல் குண்டிகைக் கலசமும், அழியினும், அழியாத்
திண்மை சான்றது; தேவரும் உணர்வு அருஞ் செய்கை
உண்மை ஆம் எனப் பெரியது, வென்றியின் உறையுள். 23

முறைப்படி தேருக்கு வழிபாடு செய்து, இராவணன் தேர் ஏறுதல்

அனைய தேரினை அருச்சனை வரன்முறை ஆற்றி,
இனையர் என்பது ஓர் கணக்கு இலா மறையவர் எவர்க்கும்
வினையின் நல் நிதி முதலிய அளப்ப அரும் வெறுக்கை
நினையின் நீண்டது ஓர் பெருங் கொடை அருங் கடன் நேர்ந்தான். 24

ஏறினன் தொழுது; இந்திரன் முதலிய இமையோர்
தேறினர்களும் தியங்கினர், மயங்கினர், திகைத்தார்;
வேறு நாம் செயும் வினை இலை, மெய்யின் ஐம் புலனும்
ஆறினர்களும் அஞ்சினர், உலகு எலாம் அனுங்க. 25

இராவணன் வஞ்சினம்

'மன்றல் அம் குழல் சனகி தன் மலர்க் கையான் வயிறு
கொன்று, அலந்தலைக் கொடு, நெடுந் துயரிடைக் குளித்தல்;
அன்று இது என்றிடின், மயன் மகள் அத் தொழில் உறுதல்;
இன்று, இரண்டின் ஒன்று ஆக்குவென், தலைப்படின்' என்றான்.

பல களம் தலை மௌலியோடு இலங்கலின், பல் தோள்
அலகு அளந்து அறியா நெடும் படைகளோடு அலங்க,
விலகு அளம் தரு கடல் தரை விசும்பொடு வியப்ப,
உலகு அளந்தவன் வளர்ந்தனன் ஆம் என உயர்ந்தான். 27

விசும்பு விண்டு இரு கூறுற, கல் குலம் வெடிப்ப,
பசும் புண் விண்டெனப் புவி பட, பகலவன் பசும் பொன்
தசும்பு நின்று இடைந்து இரிந்திட, மதி தகை அமிழ்தின்
அசும்பு சிந்தி நொந்து உலைவுற, தோள் புடைத்து ஆர்த்தான்.

'நணித்து வெஞ் சமம்' என்பது ஓர் உவகையின் நலத்தால்,
திணித் தடங் கிரி வெடித்து உக, சிலையை நாண் தெறித்தான்;
மணிக் கொடுங் குழை வானவர், தானவர், மகளிர்
துணுக்கம் எய்தினர், மங்கல நாண்களைத் தொட்டார். 29

23. செய்கை - தொழில்நுட்பம்; 26. அலந்தலை - கலக்கம்; மயன் மகள் - மண்டோதரி; 27. களம் - கழுத்து; விலகு அளம் - விலகியுள்ள உப்பளம்; 29. குழை - குண்டலம்.

போர்க்களத்தில் இராவணன் தோன்றுதல்

சுரிக்கும் மண்டலம் தூங்கு நீர்ச் சுரிப்பு உற, வீங்க,
இரைக்கும் பல் உயிர் யாவையும் நடுக்கமுற்று இரிய,
'பரித்திலன் புவி, படர் சுடர் மணித் தலை பலவும்
விரித்து எழுந்தனன், அனந்தன்மீது' என்பது ஓர் மெய்யான்.

தோன்றினன் வந்து—சுரர்களோடு அசுரரே தொடங்கி
மூன்று நாட்டினும் உள்ளவர் யாவரும் முடிய,
'ஊன்றினன் செரு' என்று உயிர் உமிழ்தர, உதிரம்
கான்று, நாட்டங்கள் வடஅனற்கு இரு மடி கனல. 31

உலகில் தோன்றிய கலக்கம் கண்டு, சுக்கிரீவன் முதலியோர் துணுக்கமுறுதல்

உலகில் தோன்றிய மறுக்கமும், இமைப்பிலர் உலைவும்,
மலையும் வானமும் வையமும் மறுகுறு மறுக்கும்,
அலை கொள் வேலைகள் அஞ்சின சலிக்கின்ற அயர்வும்,
தலைவனே முதல் தண்டல் இலோர் எலாம் கண்டார். 32

'பீறிற்றும் அண்டம்!' என்பது ஓர் ஆகுலம் பிறக்க,
வேறிட்டு ஓர் பெருங் கம்பலை பம்பி மேல் வீங்க,
'மாறிப் பல் பொருள் வகுக்குறும் காலத்து மறுக்கம்
ஏறிற்று; உற்றுளது என்னைகொலோ?' என எழுந்தார். 33

கடல்கள் யாவையும், கல் மலைக் குலங்களும், காரும்,
திடல் கொள் மேருவும், விசும்பிடைச் செல்வன சிவண,
அடல் கொள் சேனையும், அரக்கனும், தேரும், வந்து ஆர்க்கும்
கடல் கொள் பேர் ஒலிக் கம்பலை என்பதும் கண்டார். 34

இராவணன் வருகையை வீடணன் இராமனுக்குக் கூறுதல்

'எழுந்து வந்தனன் இராவணன்; இராக்கதத் தானைக்
கொழுந்து முந்தி வந்து உற்றது; கொற்றவ! குலுங்குற்று
அழுந்துகின்றது, நம் பலம்; அமரரும் அஞ்சி,
விழுந்து சிந்தினர்' என்றனன், வீடணன், விரைவான். 35

30. சுரித்தல் - வளைந்து கிடத்தல், சுழலுதல்; பரித்தல் - தாங்குதல்; 32. தண்டல் இலோர் - தடுத்தற்கு அரிய வலிமையுடையோர்; 33. பல் பொருள் மாறி வகுக்குறும் காலம் - ஊழி முடிவுக் காலம்.

35 இராமன் தேர் ஏறு படலம்

இராமன் போர்க்கோலம் பூண்டு எழுதல்

தொழும் கையொடு, வாய் குழறி, மெய்ம் முறை துளங்கி,
விழுந்து கவி சேனை இடு பூசல் மிக, விண்ணோர்
அழுந்து படு பால் அமளி, 'அஞ்சல்' என, அந் நாள்,
எழுந்தபடியே கடிது எழுந்தனன், இராமன். 1

கடக் களிறு எனத் தகைய கண்ணன், ஒரு காலன்
விடக் கயிறு எனப் பிறழும் வாள் வலன் விசித்தான்,
'மடக்கொடி துயர்க்கும், நெடு வானின் உறைவோர்தம்
இடர்க் கடலினுக்கும், முடிவு இன்று' என இசைத்தான். 2

தன் அக வசத்து உலகு தங்க, ஒரு தன்னின்
பின்னக அசத்த பொருள் இல்லை; பெரியோனை
மன்ன கவ சத்து உற வரிந்தது என என்கோ?
இன்ன கவசத்தையும் ஓர் ஈசன் எனலாமால். 3

புட்டிலொடு கோதைகள், புழுங்கி எரி கூற்றின்
அட்டில் எனலாய மலர் அங்கையின் அடக்கிக்
கட்டி, உலகின் பொருள் எனக் கரை இல் வாளி
வட்டில் புறம் வைத்து, அயல் வயங்குற வரிந்தான். 4

இராமனுக்குத் தேர் அனுப்புமாறு, சிவபெருமான் தேவர்களிடம் கூறுதல்

'மூண்ட செரு இன்று அளவில் முற்றும்; இனி, வெற்றி
ஆண்தகையது; உண்மை; இனி அச்சம் அகல்வுற்றீர்,
பூண்ட மணி ஆழி வய மா நிமிர் பொலந் தேர்
ஈண்ட விடுவீர், அமரில்' என்று, அரன் இசைத்தான். 5

இந்திரன், மாதலிக்குக் கட்டளையிட அவன் தேர் கொணர்தல்

தேவர் அது கேட்டு, 'இது செயற்கு உரியது' என்றார்;
ஏவல் புரி இந்திரனும், அத் தொழில் இசைந்தான்;
'மூஉலகும் முந்தும் ஓர் கணத்தின்மிசை முற்றிக்
கோவில் புரிகேன்; பொரு இல் தேர் கொணர்தி' என்றான். 6

35: 3. தன் அக வசத்து - தன்னுள்ளே; பின்னகம் - வேறுபட்டது; அசத்தம் - அசக்தம், வலிமை பெறாதது; கவ - கவ்வ; சத்து - வலிமை; கடவுள் எல்லாப் பொருளிலும் தங்கி அவ்வப் பொருட்குச் சத்தியைத் தருகின்றான் என்பதும், அவனிலும் வேறாகி அவனால் வலிவு பெறாத ஒரு பொருளும் இல்லை என்பதும் நூற்கொள்கை; 4. வட்டில் - அம்பறாத் தூணி.

மாதலி கொணர்ந்த தேரின் சிறப்பு

மாதலி கொணர்ந்தனன், மகோததி வளாவும்
பூதலம் எழுந்து படர் தன்மைய பொலந் தேர்;
சீத மதி மண்டலமும் ஏனை உளவும் திண்
பாதம் என நின்றது, படர்ந்தது விசும்பில். 7

குலக் கிரிகள் ஏழின் வலி கொண்டு உயர் கொடிஞ்சும்,
அலைக்கும் உயர் பாரின் வலி ஆழியினின் அச்சும்,
கலக்கு அற வகுத்தது; கதத்து அரவம் எட்டின்
வலக் கயிறு கட்டியது; முட்டியது வானை. 8

ஆண்டினொடு நாள், இருது, திங்கள், இவை என்னு,
மீண்டனவும் மேலனவும் விட்டு, விரி தட்டில்
பூண்டு உளது; தாரகை மணிப் பொரு இல் கோவை
நீண்ட புனை தாரினது; நின்றுளது குன்றின். 9

மாதிரம் அனைத்தையும் மணிச் சுவர்கள் ஆகக்
கோது அற வகுத்தது; மழைக் குழுவை எல்லாம்
மீது உறு பதாகை என வீசியது; மெய்ம்மைப்
பூதம் அவை ஐந்தின் வலியின் பொலிவது அம்மா! 10

மரத்தொடு மருந்து உலகில் யாவும் உள வாரித்
தரத்தொடு தொடுத்த கொடி தங்கியது; சங்கக்
கரத்தொடு தொடுத்த கடல் மீது நிமிர் காலத்து,
உரத்தொடு கடுத்த கதழ் ஓதை அதன் ஓதை. 11

பண்டு அரிதன் உந்தி அயன் வந்த பழ முந்தைப்
புண்டரிக மொட்டு அனைய மொட்டினது; பூதம்
உண்டவை வயிற்றிடை ஒடுக்கி உமிழ்கிற்போன்,
அண்டச மணிச் சயனம் ஒப்பது, அகலத்தின்.* 12

வேதம் ஒரு நாலும், நிறை வேள்விகளும், வெவ் வேறு
ஓதம் அவை ஏழும், மலை ஏழும், உலகு ஏழும்,
பூதம் அவை ஐந்தும், எரி மூன்றும், நனி பொய் தீர்
மா தவமும், ஆவுதியும், ஐம் புலனும், மற்றும். 13

7. மகோததி - பெருங்கடல்; 9. மீண்டன - கழிந்தன; மேலன - இனி வர இருப்பன; 11. சங்கக் கரம் - தொகுதியான அலை; கதழ் - கடுமை; 12. அண்டசம் - முட்டையில் தோன்றியது, ஈண்டு ஆதிசேடனாகிய பாம்பு.

அருங் கரணம் ஐந்து, சுடர் ஐந்து, திசை நாலும்,
ஒருங்கு அரணம் மூன்றும், உழல் வாயு ஒரு பத்தும்,
பெரும் பகலும், நீள் இரவும் என்று இவை பிணிக்கும்
பொரும் பரிகள் ஆகி நனி பூண்டது, பொலந் தேர். 14

மாதலி இராமனிடம் தேர் கொணர்தல்

வந்ததனை வானவர் வணங்கி, 'வலியோய்! நீ
எந்தை தர வந்தனை; எமக்கு உதவுகிற்பாய்;
தந்தருள்வை வென்றி' என நின்று, தகை மென் பூச்
சிந்தினர்கள்; மாதலி கடாவி, நனி சென்றான். 15

'வினைப் பகை விசைக் கொடு விசும்பு உருவி, மான
மனத்தின் விசை பெற்றுளது வந்தது' என, வானோடு
அனைத்து உலகமும் தொழ, அடைந்தது, அமலன்பால்;
நினைப்பும் இடை பிற்பட, நிமிர்ந்தது நெடுந் தேர். 16

'அலரி தனி ஆழி புனை தேர் இது எனில், அன்றால்;
உலகின் முடிவில் பெரிய ஊழ் ஒளி இது அன்றால்;
நிலைகொள் நெடு மேரு கிரி அன்று; நெடிதுஅம்மா;
தலைவர் ஒரு மூவர் தனி மானம் இதுதானோ? 17

'என்னை இது நம்மை இடை எய்தல்?' என எண்ணா,
மன்னவர்தம் மன்னன் மகன், மாதலியை, 'வந்தாய்,
பொன்னின் ஒளிர் தேர் இது கொடு, ஆர் புகல?' என்றான்;
அன்னவனும் அன்னதனை ஆக உரை செய்தான்: 18

'முப் புரம் எரித்தவனும், நான்முகனும், முன்நாள்,
அப் பகல் இயற்றி உளது; ஆயிரம் அருக்கர்க்கு
ஒப்பு உடையது; ஊழி திரிகாறும் உலைவு இல்லா
இப் பொரு இல் தேர் வருவது இந்திரனது;—எந்தாய்! 19

'அண்டம் இது போல்வன அளப்பு இல அடுக்கிக்
கொண்டு பெயரும்; குறுகும்; நீளும்; அவை கோளுற்று
உண்டவன் வயிற்றினையும் ஒக்கும், உவமிக்கின்;
புண்டரிக! நின் சரம் எனக் கடிது போமால். 20

14. சுடர் ஐந்து - நாற்றிசையில் நான்கு தீயும் மேலே சூரியனும் ஆகிய பஞ்சாக்கினிகள்; வாயு ஒரு பத்து - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன; 16. வினைப் பகை - வினைக்குப் பகையாகிய மெய்ஞ்ஞானம்; 17. அலரி - சூரியன்; தனி ஆழி - ஒற்றைச் சக்கரம்; 18. ஆக - பொருந்துமாறு.

'கண்ணும் மனமும் கடிய காலும் இவை கண்டால்,
உண்ணும் விசையால்; உணர்வு பின் படர ஓடும்;
விண்ணும் நிலனும் என விசேடம் இலது; அஃதே,
எண்ணும் நெடு நீரினும், நெருப்பிடையும்—எந்தாய்! 21

'நீரும் உளவே, அவை ஓர் ஏழு? நிமிர்கிற்கும்
பாரும் உளவே, அதின் இரட்டி? அவை பண்பின்
பேரும் ஒரு காலே, ஒரு காலும் இடை பேராத்
தேரும் உளதே, இது அலால்?—உலகு செய்தோய்! 22

'தேவரும், முனித் தலைவரும், சிவனும், மேல்நாள்,
மூஉலகு அளித்த அவனும், முதல்வ! முன் நின்று
ஏவினர்; சுரர்க்கு இறைவன் ஈந்துள இது' என்றான்,
மாவின் மனம் ஒப்ப உணர் மாதலி, வலித்தான். 23

தேர் குறித்து இராமன் கொண்ட ஐயமும் தெளிவும்

ஐயன் இது கேட்டு, 'இகல் அரக்கர் அகல் மாயச்
செய்கைகொல்?' எனச் சிறிது சிந்தையில் நினைந்தான்;
மெய் அவன் உரைத்தது என வேண்டி, இடை பூண்ட
மொய் உளை வயப் பரி மொழிந்த, முது வேதம். 24

'இல்லை இனி, ஐயம்' என எண்ணிய இராமன்,
நல்லவனை, 'நீ உனது நாமம் நவில்க!' என்ன,
'வல் இதனை ஊர்வது ஒரு மாதலி எனப் பேர்
சொல்லுவர்' எனத் தொழுது, நெஞ்சினொடு சொன்னான். 25

மாருதியை நோக்கி, இள வாள் அரியை நோக்கி,
'நீர் கருதுகின்றதை நிகழ்த்தும்' என, நின்றான்
ஆரியன்; வணங்கி, அவர், 'ஐயம் இலை, ஐயா!
தேர் இது புரந்தரனது' என்றனர், தெளிந்தார். 26

விழுந்து புரள் தீவினை நிலத்தொடு வெதும்ப,
தொழும் தகைய நல்வினை களிப்பினொடு துள்ள,
அழுந்து துயரத்து அமரர் அந்தணர் கை முந்துற்று
எழுந்து தலை ஏற, இனிது ஏறினன்—இராமன். 27

21. விசையால் உண்ணும் - வேகத்தினால் (அவற்றை) உண்டு விடும் (வெல்லும்); உணர்வு - உயிரின் அறிவு; விசேடம் - வேறுபாடு; 23. சுரர்க்கு இறைவன் - தேவர் தலைவனாகிய இந்திரன்; மா - குதிரை.

36 இராவணன் வதைப் படலம்

இராமன் தேரில் செல்லுதல்

ஆழி அம் தடந் தேர், வீரன் ஏறலும், அலங்கல் சில்லி
பூழியில் சுரித்த தன்மை நோக்கிய புலவர் போத,
ஊழி வெங் காற்றின் வெய்ய கலுழனை ஒன்றும் சொல்லார்,
வாழிய அனுமன் தோளை ஏத்தினர், மலர்கள் தூவி. 1

'எழுக, தேர்; சுமக்க, எல்லோம் வலியும்; புக்கு இன்றே பொன்றி
விழுக, போர் அரக்கன்; வெல்க, வேந்தர்க்கு வேந்தன்; விம்மி
அழுக, பேர் அரக்கிமார்' என்று ஆர்த்தனர், அமரர்; ஆழி
முழுகி மீது எழுந்தது என்னச் சென்றது, மூரித் திண் தேர். 2

தேரை இராமன் எதிரே விடுமாறு இராவணன் சாரதிக்குக் கூறுதல்

அன்னது கண்ணின் கண்ட அரக்கனும், 'அமரர் ஈந்தார்
மன் நெடுந் தேர்' என்று உன்னி, வாய் மடித்து எயிறு தின்றான்;
பின், 'அது கிடக்க' என்னா, தன்னுடைப் பெருந் திண் தேரை,
மின் நகு வரி வில் செங் கை இராமன்மேல் விடுதி' என்றான். 3

இரிந்த வான் கவிகள் எல்லாம், 'இமையவர் இரதம் ஈந்தார்;
அரிந்தமன் வெல்லும் என்றற்கு ஐயுறவு இல்' என்று, அஞ்சார்,
திரிந்தனர்; மரமும் கல்லும் சிந்தினர்; 'திசையோடு அண்டம்
பிரிந்தனகொல்!' என்று எண்ணப் பிறந்தது, முழக்கின் பெற்றி.

வார்ப் பொலி முரசின் ஓதை, வாய்ப்புடை வயவர் ஓதை,
போர்த் தொழில் களத்து மற்றும் முற்றிய பொம்மல் ஓதை,
ஆர்த்தலின், யாரும் பார் வீழ்ந்து அடங்கினர், இருவர் ஆடல்
தேர்க் குரல் ஓதை பொங்க, செவி முற்றும் செவிடு செய்த. 5

இராமன் கருத்துக்கு இயைய மாதலி தேர் ஓட்டுதல்

மாதலி வதனம் நோக்கி, மன்னர்தம் மன்னன் மைந்தன்,
'காதலால் கருமம் ஒன்று கேட்டியால்; களித்த சிந்தை
ஏதலன் மிகுதி எல்லாம் இயற்றிய பின்றை, என்தன்
சோதனை நோக்கிச் செய்தி; துடிப்பு இலை' என்னச் சொன்னான்.

36: 2. ஆழி - சக்கரம்; 4. அரிந்தமன் - பகைவரை வெல்ல வல்லவன்; இராமன்; 5. ஆடல் தேர் - இயக்கம் உடைய தேர்; 6. காதலால் - அன்போடு.

'வள்ளல்! நின் கருத்தும், மாவின் சிந்தையும், மாற்றலார்தம்
உள்ளமும், மிகையும், உற்ற குற்றமும், உறுதிதானும்,
கள்ளம் இல் காலப் பாடும், கருமமும், கருதேன் ஆகில்,
தெள்ளிது என் விஞ்சை!' என்றான்; அமலனும், 'செவ்விது!' என்றான்.

மகோதரனை, இராவணன், 'இலக்குவனோடு போர் செய்' எனல்

'தோன்றினன் இராமன், ஈதால், புரந்தரன் துரகத் தேர்மேல்;
என்று இருவருக்கும் வெம் போர் எய்தியது; இடையே, யான் ஓர்
சான்று என நிற்றல் குற்றம்; தருதியால் விடை ஈண்டு' என்றான்—
வான் தொடர் குன்றம் அன்ன மகோதரன் இலங்கை மன்னை. 8

'அம்புயம் அனைய கண்ணன்தன்னை யான் அரியின் ஏறு
தும்பியைத் தொலைத்தது என்னத் தொலைக்குவென்; தொடர்ந்து நின்ற
தம்பியைத் தடுத்தியாயின், தந்தனை கொற்றம்' என்றான்; [டான்.
வெம்பு இகல் அரக்கன், 'அஃதே செய்வென்' என்று, அவனின் மீண்

மகோதரன் இராமனுடன் பொருது மடிதல்

மீண்டவன் இளவல் நின்ற பாணியின் விலங்கா முன்னம்,
ஆண்தகை தெய்வத் திண் தேர் அணுகியது; அணுகும்காலை,
மூண்டு எழு வெகுளியோடும், மகோதரன் முனிந்து, 'முட்டத்
தூண்டுதி தேரை' என்றான்; சாரதி தொழுது சொன்னான்: 10

'எண் அருங் கோடி வெங் கண் இராவணரேயும், இன்று
நண்ணிய பொழுது மீண்டு நடப்பரோ, கிடப்பது அல்லால்?
அண்ணல்தன் தோற்றம் கண்டால், ஐய! நீ கமலம் அன்ன
கண்ணனை ஒழிய, அப் பால் செல்வதே கருமம்' என்றான். 11

என்றலும், எயிற்றுப் பேழ் வாய் மடித்து, 'அடா! எடுத்து நின்னைத்
தின்றனென் எனினும் உண்டாம் பழி' என, சீற்றம் சிந்தும்
குன்று அன தோற்றத்தான்தன் கொடி நெடுந் தேரின் நேரே
சென்றது, அவ் இராமன் திண் தேர்; விளைந்தது, திமிலத் திண் போர்.

பொன் தடந் தேரும், மாவும், பூட்கையும், புலவு உண் வாட்கைக்
கல் தடந் திண் தோள் ஆளும், நெருங்கிய கடல்கள் எல்லாம்
வற்றின, இராமன் வாளி வடஅனல் பருக; வன் தாள்
ஒற்றை வன் தடந் தேரோடும் மகோதரன் ஒருவன் சென்றான்.

7. விஞ்சை - வித்தை, ஈண்டுத் தேரோட்டும் கலை; 10. இளவல் நின்ற பாணி - இலக்குவன் நின்ற இடம்; 13. பூட்கை - யானை; வன் தாள் - வலிய சக்கரம்.

அசனிஏறு இருந்த கொற்றக் கொடியின்மேல், அரவத் தேர்மேல்,
குசை உறு பாகன்தன்மேல், கொற்றவன் குவவுத் தோள்மேல்,
விசை உறு பகழி மாரி வித்தினன்; விண்ணினோடும்
திசைகளும் கிழிய ஆர்த்தான்; தீர்த்தனும், முறுவல் செய்தான்.

வில் ஒன்றால், கவசம் ஒன்றால், விறலுடைக் கரம் ஓர் ஒன்றால்,
கல் ஒன்று தோளும் ஒன்றால், கழுத்து ஒன்றால், கடிதின் வாங்கி,
செல் ஒன்று கணைகள், ஐயன் சிந்தினன்; செப்பி வந்த
சொல் ஒன்றாய்ச் செய்கை ஒன்றாய்த் துணிந்தனன், அரக்கன் துஞ்சி.

மகோதரன் இறந்தபின் இராவணன், இராமனொடு பொர விரைதல்

மோதரன் முடிந்த வண்ணம், மூவகை உலகத்தோடும்
மாதிரம் எவையும் வென்றவன் தொழில் அரக்கன் கண்டான்,
சேதனை உண்ணக் கண்டான்; 'செல விடு, செல விடு!' என்றான்;
சூதனும் முடுகித் தூண்ட, சென்றது, துரகத் திண் தேர். 16

'பனிப் படா நின்றது என்னப் பரக்கின்ற சேனை பாறித்
தனிப்படான்ஆகின் இன்னம் தாழ்கிலன்' என்னும் தன்மை
நுனிப் படா நின்ற வீரன், அவன் ஒன்றும் நோக்காவண்ணம்
குனிப் படா நின்ற வில்லால், ஒல்லையின் நூறிக் கொன்றான். 17

அடல் வலி அரக்கற்கு அப் போழ்து, அண்டங்கள் அழுந்த, மண்டும்
கடல்களும் வற்ற, வெற்றிக் கால் கிளர்ந்து உடற்றும்காலை,
வடவரை முதல ஆன மலைக் குலம் சலிப்ப மானச்,
சுடர் மணி வலயம் சிந்தத் துடித்தன, இடத்த பொன்-தோள்.

உதிர மாரி சொரிந்தது, உலகு எலாம்;
அதிர வானம் இடித்தது; அரு வரை
பிதிர வீழ்ந்தது, அசனி; ஒளி பெருக்
கதிரவன்தனை ஊரும் கலந்ததால். 19

வாவும் வாசிகள் தூங்கின; வாங்கல் இல்
ஏவும் வெஞ் சிலை நாண் இடை இற்றன;
நாவும் வாயும் உலர்ந்தன; நாள்மலர்ப்
பூவின் மாலை புலால் வெறி பூத்ததால்.* 20

எழுது வீணை கொடு ஏந்து பதாகைமேல்
கழுகும் காகமும் மொய்த்தன; கண்கள் நீர்
ஒழுகுகின்றன, ஓடு இகல் ஆடல் மா;
தொழுவில் நின்றன போன்றன, சூழி மா. 21

14. அசனி ஏறு - இடியேறு, இராமன் ஏறியிருந்த தேர் இந்திரனுக்கு உரியதாகலின் அவன் கொடியாகிய இடிக்கொடி கட்டப்பட்டிருந்தது; குசை - கடிவாளம்; 16. சேதனை உண்ணல் - பிளவுபடுதல்; சேதனை - பிளவு; 19. ஊர் - ஊர்கோள், பரிவேடம்.

இன்ன ஆகி, இமையவர்க்கு இன்பம் செய்
துன்னிமித்தங்கள் தோன்றின; தோன்றவும்,
அன்னது ஒன்றும் நினைந்திலன், 'ஆற்றுமோ,
என்னை வெல்ல, மனித்தன்?' என்று எண்ணுவான்.* 22

வீங்கு தேர் செலும் வேகத்து, வேலை நீர்
ஒங்கு நாளின் ஒதுங்கும் உலகுபோல்,
தாங்கல் ஆற்றகிலார், தடுமாறித் தாம்
நீங்கினர், இரு பாலும் நெருங்கினர். 23

எதிர் எதிரே நிற்கும் இராம – இராவணர் தோற்றம்

கருமமும் கடைக்கண் உறு ஞானமும்,
அருமை சேரும் அவிஞ்சையும் விஞ்சையும்,
பெருமை சால் கொடும் பாவமும் பேர்கலாத்
தருமமும் எனச் சென்று, எதிர் தாக்கினர். 24

சிரம் ஓர் ஆயிரம் தாங்கிய சேடனும்,
உரவு கொற்றத்து உவணத்து அரசனும்,
பொர உடன்றனர் போலப் பொருந்தினர்,
இரவும் நண்பகலும் என ஏற்றனர். 25

வென்றி அம் திசை யானை வெகுண்டன
ஒன்றை ஒன்று முனிந்தவும் ஒத்தனர்;
அன்றியும், நரசிங்கமும் ஆடகக்
குன்றம் அன்னவனும் பொரும் கொள்கையார். 26

துவனி வில்லின்பொருட்டு ஒரு தொல்லைநாள்,
'எவன் அவ் ஈசன்?' என்பார் பொர, ஏற்று, எதிர்
புவனம் மூன்றும் பொலங் கழலால் தொடும்
அவனும் அச் சிவனும் எனல் ஆயினர். 27

கண்ட சங்கரன் நான்முகன் கைத் தலம்
விண்டு அசங்க, தொல் அண்டம் வெடித்திட,
அண்ட சங்கத்து அமரர்தம் ஆர்ப்பு எலாம்
உண்ட சங்கம் இராவணன் ஊதினன். 28

24. கருமம் - வினை; கடைக்கண் உறு ஞானம் - நன்னெறியின் கடைசியில் உள்ள ஞானம்; 27. துவனி வில் - ஒலியுடைய வில்; 28. அசங்குதல் - நடுங்குதல்; சங்கத்து அமரர் - தொகுதியாய் உள்ள தேவர்கள்.

சொன்ன சங்கினது ஓசை துளக்குற,
'என்ன சங்கு?' என்று இமையவர் ஏங்குற,
அன்ன சங்கைப் பொருமையினுல், அரி-
தன்ன வெண் சங்கு தானும் முழங்கிற்ருல். 29

ஐயன் ஐம் படைதாமும் அடித் தொழில்
செய்ய வந்து அயல் நின்றன; தேவரில்
மெய்யன் அன்னவை கண்டிலன், வேதங்கள்
பொய் இல் தன்னைப் புலன் தெரியாமைபோல். 30

ஆசையும் விசும்பும் அலை ஆழியும்
தேசமும் மலையும் நெடுந் தேவரும்
கூச, அண்டம் குலுங்க, குலம் கொள் தார்
வாசவன் சங்கை மாதலி வாய்வைத்தான். 31

இராம – இராவணப் போர் தொடக்கம்

துமில வாளி அரக்கன் துரப்பன
விமலன் மேனியின் வீழ்வதன் முன்னமே,
கமல வான் முக நாடியர் கண் கணை
அமலன் மேனியில் தைத்த அனந்தமால். 32

சென்ற தேர் ஒர் இரண்டினும் சேர்த்திய
குன்றி வெங் கண் குதிரை குதிப்பன,
ஒன்றை ஒன்று உற்று, எரி உக நோக்கின;
தின்று தீர்வன போலும் சினத்தன. 33

கொடியின்மேல் உறை வீணையும், கொற்ற மா
இடியின் ஏறும், முறையின் இடித்தன—
படியும் விண்ணும் பரவையும் பண்பு அற
முடியும் என்பது ஒர் மூரி முழக்கினுல். 34

ஏழு வேலையும் ஆர்ப்பு எடுத்து என்னலாம்,
வீழி வெங் கண் இராவணன் வில் ஒலி;
ஆழி நாதன் சிலை ஒலி, அண்டம் விண்டு
ஊழி பேர்வுழி, மா மழை ஒத்ததால். 35

31. குலம் - சிறப்பு; 32. துமிலம் - ஆரவாரம்; 33. குன்றி - குன்றிமணி; 35. வீழி - விழுதி என்னும் ஒருவகைச் செடி, இங்கு வீழியின் கனி.

ஆங்கு நின்ற அனுமனை ஆதியாம்
வீங்கு வெஞ் சின வீரர் விழுந்தனர்—
ஏங்கி நின்றது அலால், ஒன்று இமைத்திலர்,
வாங்கு சிந்தையர், செய்கை மறந்துளார். 36

'ஆவது என்னை கொலாம்?' என்று அறிகிலார்,
'ஏவர் வெல்வர்?' என்று எண்ணலர் ஏங்குவார்,
போவர், மீள்வர், பதைப்பர், பொருமலால்,
தேவரும் தங்கள் செய்கை மறந்தனர். 37

சேண அந்தரம் நோக்கலும் திண் சரம்,
பூண முந்தின, சிந்தின பூ மழை,
காண வந்த கடவுளர் கை எலாம்—
ஆணவம் துணை யார் உளர் ஆவரோ? 38

நீண்ட மின்னொடு வான் நெடு நீல வில்
பூண்டு இரண்டு எதிர் நின்றன போன்றன—
ஆண்ட வில்லிதன் வில்லும், அரக்கன்தன்
தீண்ட வல்லர் இலாத சிலையுமே. 39

அரக்கன் அன்று எடுத்து ஆர்க்கின்ற ஆர்ப்பும், போர்ப்
பொருப்பு மெய் வில் தெழிப்பும் உண்டேகொலாம்—
குரைக்கும் வேலையும் மேகக் குழாங்களும்
இரைத்து இடிக்கின்ற, இன்றும் ஓர் ஈறு இல! 40

மண்ணில் செல்வன செல், இனும் மாசு அற
எண்ணின் சூல் மழை அல்ல; இராவணன்
கண்ணின் சிந்திய தீக் கடு வேகத்த
விண்ணில் செல்வன, மீண்டு இன்று வீழ்வன. 41

மால் கலங்கல் இல் சிந்தையன் மாதிரம்
நால் கலங்க நகும்தொறும், நாவொடு
கால் கலங்குவர், தேவர்; கண மழைச்
சூல் கலங்கும்; இலங்கை துளங்குமால். 42

இக் கணத்தும் எறிப்ப தடித்து என,
நெக்க மேகத்து உதிக்கும் நெருப்பு என,
பக்கம் வீசும் படைச் சுடர், பல் திசை
புக்குப் போக, பொடிப்பன போக்கு இல. 43

36. வாங்கு சிந்தையர் - பறிகொடுத்த சிந்தையர்; 39. நீல வில் - வான வில்; நீல நிறமே ஏனையவற்றினும் மேம்பட்டுத் தோன்றுதலின் நீல வில் எனப் பட்டது; 41. செல்வன - வீழ்வன; செல் - இடி; மழை அல்ல - மழை தந்தன அல்ல.

இராவணன் சின மொழி

'கொற்ற அம்பிற் கொடு கொல்லுதல் கோள் இலாச்
சிற்றையாளனைத் தேவர் தம் தேரொடும்
பற்றி வானில் சுழற்றி, படியின்மேல்
எற்றுவேன்' என்று உரைக்கும், இரைக்குமால். 44

'தடித்து வைத்தன்ன வெங் கணை தாக்கு அற,
வடித்து வைத்தது மானிடற்கே? வலி
ஒடித்து, தேரை உதிர்த்து, ஒரு வில்லொடும்
பிடித்துக் கொள்வென், சிறை' எனப் பேசுமால். 45

இராவணன் அம்பு எய்தலும், இராமன் தடுத்தலும்

பதைக்கின்றது ஓர் மனமும், இடை படர்கின்றது ஓர் சினமும்,
விதைக்கின்றன பொறி பொங்கின விழியும், உடை வெய்யோன்,
குதைக்கின்றன நிமிர் வெஞ் சிலை குழைய, கொடுங் கடுங் கால்
உதைக்கின்றன சுடர் வெங் கணை, உரும்ஏறு என, எய்தான்.

உரும் ஒப்பன, கனல் ஒப்பன, ஊற்றம் தரு கூற்றின்
மருமத்தினும் நுழைகிற்பன, மழை ஒப்பன, வானோர்
நிருமித்தன, படை பற்று அற நிமிர்வுற்றன, அமிழ்தப்
பெரு மத்தினை முறை சுற்றிய பெரும் பாம்பினும் பெரிய. 47

'துண்டப்பட நெடுமேருவைத் தொளைத்து, உள் உறை தொங்காது [தார்;
அண்டத்தையும் பொதுத்து ஏகும்' என்று இமையோர்களும் அயிர்த்
கண்டத் தெறு கணைக் காற்றினை, கருணைக் கடல், கனகச்
சண்டச் சர மழை கொண்டு, அவை இடையே அறத் தடுத்தான்.

உடையான் முயன்றுறு காரியம் உறு தீவினை உடற்ற,
இடையூறு உறச் சிதைந்தாங்கெனச் சரம் சிந்தின, விறலும்;
தொடை ஊறிய கணை மாரிகள் தொகை தீர்த்தன துரந்தான்—
கடை ஊறு உறு கண மா மழை கால் வீழ்த்தென, கடியான்.

விண் போர்த்தன; திசை போர்த்தன; மலை போர்த்தன; இமையோர்
கண் போர்த்தன; கடல் போர்த்தன; படி போர்த்தன; கலையோர்
எண் போர்த்தன; எரி போர்த்தன; இருள் போர்த்தன; 'என்னே,
திண் போர்த் தொழில்!' என்று, ஆனையின் உரி போர்த்தவன் திகைத்
[தான்.

44. சிற்றையாளன் - சிறு ஆளன்; சிறுமையை உடையவன்; 45. தடித்து - மின்னல்; 46. குதைக்கின்றன - குதையினின்று வெளிவருவனவாகிய அம்புகள்; 47. மருமம் - மார்பு; 48. கண்டத் தெறு - துண்டு துண்டாக அழிக்கவல்ல; கணைக் காற்று - கணைகளாகிய காற்று; கருணைக் கடல் - அருட் கடலாகிய இராமன்; தொடை ஊறிய - தொடுத்தல் பொருந்திய.

அல்லா நெடும் பெருந் தேவரும் மறைவாணரும் அஞ்சி,
எல்லார்களும் கரம் கொண்டு இரு விழி பொத்தினர், இருந்தார்;
செல் ஆயிரம் விழுங்கால் உகும் விலங்கு ஒத்தது சேனை;
வில்லாளனும் அது கண்டு, அவை விலக்கும் தொழில் வேட்டான்.

செந் தீ வினை மறைவாணனுக்கு ஒருவன், சிறுவிலை நாள்,
முந்து ஈந்தது ஓர் உணவின் பயன் எனல் ஆயின, முதல்வன்
வந்து ஈந்தன வடி வெங் கணை; அனையான் வகுத்து அமைத்த
வெந் தீவினைப் பயன் ஒத்தன, அரக்கன் சொரி விசிகம். 52

இராமனும் இராவணனும் ஒத்துச் செரு விளைத்தல்

நூறாயிரம் வடி வெங் கணை நொடி ஒன்றினின் விடுவான்,
ஆறு விறல் மறவோன்; அவை தனி நாயகன் அறுப்பான்;
கூறு ஆயின, கனல் சிந்துவ, குடிக்கப் புனல் குறுகி,
சேறு ஆயின, பொடி ஆயின, திடர் ஆயின, கடலும். 53

வில்லால் சரம் துரக்கின்றவற்கு, உடனே, மிடல் வெம் போர்
வல்லான், எழு, மழு, தோமரம், மணித் தண்டு, இருப்பு உலக்கை,
தொல் ஆர் மிடல் வளை, சக்கரம், சூலம், இவை தொடக்கத்து
எல்லாம் நெடுங் கரத்தால் எடுத்து எறிந்தான், செரு அறிந்தான்.

வேல் ஆயிரம், மழு ஆயிரம், எழு ஆயிரம், விசிகக்
கோல் ஆயிரம், பிற ஆயிரம், ஒரு கோல் படக் குறைவ—
கால் ஆயின, கனல் ஆயின, உரும் ஆயின, கதிய
சூல் ஆயின, மழை அன்னவன் தொடை பல் வகை தொடுக்க.

ஒத்துச் செரு விளைக்கின்றது ஓர் அளவின்தலை,—உடனே
பத்துச் சிலை எடுத்தான், கணை தொடுத்தான், பல முகிலா
தொத்துப் படு நெடுந் தாரைகள் சொரிந்தாலெனத் துரந்தான்—
குத்துக் கொடு நெடுங் கோல் படு களிறு ஆம் எனக் கொதித்தான். 56

ஈசன் விடு சர மாரியும், எரி சிந்துறு தறுகண்
நீசன் விடு சர மாரியும், இடை எங்கணும் நெருங்க,
தேசம் முதல் ஐம் பூதமும் செருக் கண்டனர் செருக்கி,
கூசிம் மயிர் பொடிப்பு அற்றன; அனல் ஆயின கொடிய. 57

52. சிறுவிலை நாள் - பெரு விலை கொடுத்துச் சிறு பொருளை வாங்கும் பஞ்ச காலம்; 56. தொத்து - தொகுதி, கொத்து.

மந்தரக் கிரி என, மருந்து மாருதி
தந்த அப் பொருப்பு என, புரங்கள்தாம் என,
கந்தருப்பந் நகர் விசும்பில் கண்டென
அந்தரத்து எழுந்தது, அவ் அரக்கன் தேர்அரோ. 58

எழுந்து உயர் தேர்மிசை இலங்கை காவலன்
பொழிந்தன சர மழை உருவிப் போதலால்,
ஒழிந்ததும் ஒழிகிலது என்ன, ஒல்லெனக்
கழிந்தது, கவிக் குலம், இராமன் காணவே. 59

'முழவு இடு தோளொடு முடியும் பல் தலை
விழ விடுவேன், இனி; விசும்பு சேமமோ?
மழ விடை அனைய நம் படைஞர் மாண்டனர்;
எழ விடு, தேரை' என்று இராமன் கூறினான். 60

'அந்து செய்குவென்' என அறிந்த மாதலி
உந்தினன், தேர் எனும் ஊழிக் காற்றினை;
இந்து மண்டிலத்தின்மேல் இரவி மண்டிலம்
வந்தென, வந்தது, அம் மானத் தேர்அரோ. 61

இரிந்தன மழைக் குலம், இழுகித் திக்கு எலாம்;
உரிந்தன உடுக் குலம், உதிர்ந்து சிந்தின;
நெரிந்தன நெடு வரைக் குடுமி; நேர் முறை
திரிந்தன சாரிகை, தேரும் தேருமே. 62

வலம் வரும்; இடம் வரும்; மறுகி வானொடு
நிலம் வரும்; இடம் வலம் நிமிரும்; வேலையும்,
அலம்வரு குல வரை அனைத்தும், அண்டமும்,
சலம் வரும், குயவன திகிரித் தன்மைபோல். 63

'எழும் புகழ் இராமன் தேர்; அரக்கன் தேர் இது' என்று
உழுந்து உருள் பொழுதின் எவ் உலகும் சேர்வன,
தழும்பிய தேவரும் தெரிவு தந்திலர்,
பிழம்பின திரிவன என்னும் பெற்றியார். 64

58. கந்தருப்பந் நகர் - கந்தருவ நகர், நகர ஒற்று விரித்தல் விகாரத்தால் மிக்கது; 59. ஒழிந்தது - எஞ்சி இருந்த வானரப்படை; ஒழிகிலது - இனி எஞ்சி நில்லாது; 60. சேமம் - பாதுகாப்பு; 61. அந்து - அவ்வாறே, கன்னடச் சொல் என்பர்; 62. சாரிகை திரிதல் - மாறிமாறிச் சுற்றி வருதல்; 63. அலம்வரு குல வரை - அமைதியாகப் பொருந்தியுள்ள குல மலைகள்; அலம் - அமைதி; சலம் வருதல் - சுழலுதல்; 64. தழும்பிய - பழகிய; தெரிவு - தெளிவு, அறிதல்.

உக்கிலா உடுக்களும், உருள்கள் தாக்கலின்,
நெக்கிலா மலைகளும், நெருப்புச் சிந்தலின்,
வக்கிலாத் திசைகளும், உதிரம் வாய் வழி
கக்கிலா உயிர்களும், இல்லை, காண்பன. 65

'இந்திரன் உலகத்தார்' என்பர்; 'ஏன்றவர்,
சந்திரன் உலகத்தார்' என்பர்; 'தாமரை
அந்தணன் உலகத்தார்' என்பர்; 'அல்லரால்,
மந்தர மலையினர்' என்பர்—வானவர். 66

'பாற்கடல் நடுவணர்' என்பர்; 'பல் வகை
மாக் கடலினுக்கும் அவ் வரம்பினர்' என்பர்;
'மேல் கடலார்' என்பர்; 'கிழக்கு உளார்' என்பர்;
'ஆர்க்கடை உரும்' என்பர்—அறியும் வானவர். 67

'மீண்டனவோ?' என்பர்; 'விசும்பு விண்டு உகக்
கீண்டனவோ?' என்பர்; 'கீழவோ?' என்பர்;
'பூண்டன புரவியோ? புதிய காற்று!' என்பர்;—
'மாண்டன உலகம்' என்று, உரைக்கும் வாயினர். 68

ஏழுடைக் கடலினும், தீவு ஓர் ஏழினும்,
ஏழுடை மலையினும், உலகு ஓர் ஏழினும்,
சூழுடை அண்டத்தின் சுவர்கள் எல்லையா,
ஊழியில் காற்று எனத் திரிந்த, ஓவில. 69

இராமன், அரக்கன் படைக்கலங்களைத் தடுத்தல் அன்றிப் போர் செய்யாமை

உடைக் கடல் ஏழினும், உலகம் ஏழினும்,
இடைப் படு தீவினும், மலை ஓர் ஏழினும்,
அடைக்கலப் பொருள் என அரக்கன் வீசிய
படைக்கலம், மழை படு துளியின் பான்மைய. 70

ஒறுத்து உலகு அனைத்தையும் உழலும், ஓட்டிடை
இறுத்தில; இராவணன் எறிந்த எய்தன
அறுத்ததும் தடுத்ததும் அன்றி, ஆரியன்
செறுத்து ஒரு தொழிலிடைச் செய்தது இல்லையால். 71

விலங்கலும் வேலையும், மேலும் கீழரும்,
அலங்கு ஒளி திரிதரும் உலகு அனைத்தையும்,
கலங்குறத் திரிந்தது ஓர் ஊழிக் காலக் காற்று,
இலங்கையை எய்தின, இமைப்பின் வந்துஅரோ. 72

65. வக்கிலாத் திசைகள் - பிளவாத திசைகள்; 71. ஓட்டு - ஓட்டம்.

உய்த்து உலகு அனைத்தினும் உழன்ற சாரிகை
மொய்த்தது, கடலிடை மணலின் மும்மையால்;
வித்தகர் கடவிய விசயத் தேர்ப் பரி,
எய்த்தில வியர்த்தில, இரண்டு பாலவும். 73

இராமன் தேர்க் கொடியை இராவணன் அறுத்தல்

இந்திரன் தேரின்மேல் உயர்ந்த, ஏந்து எழில்
உந்த அரும் பெரு வலி உருமின் ஏற்றினை,
சந்திரன் அனையது ஓர் சரத்தினால், தரைச்
சிந்தினன், இராவணன், எரியும் சிந்தையான். 74

சாய்ந்த வல் உருமு போய், அரவத் தாழ் கடல்
பாய்ந்த வெங் கனல் என முழங்கிப் பாய்தலும்,
காய்ந்த பேர் இரும்பின் வன் கட்டி காலுறத்
தோய்ந்த நீர் ஆம் எனச் சுருங்கிற்று, ஆழியே. 75

இராமனின் குதிரைகள்மீதும், மாதலிமீதும் இராவணன் சரம் விடுத்தல்

எழுத்து எனச் சிதைவு இலா இராமன் தேர்ப் பரிக்
குழுக்களைக் கூர்ங் கணைக் குப்பை ஆக்கி, நேர்
வழுத்த அரு மாதலி வயிர மார்பிடை
அழுத்தினன் கொடுஞ் சரம், ஆறொடு ஆறுஅரோ. 76

மாதலி மார்பில் அம்பு தைத்தமை கண்டு, இராமன் வருந்துதல்

நீல் நிற நிருதர்கோன் எய்த, நீதியின்
சால்புடை மாதலி மார்பில் தைத்தன
கோலினும் இலக்குவன் கோல மார்பின் வீழ்
வேலினும் வெம்மையே விளைத்த, வீரற்கு.* 77

இராமனை இராவணன் அம்புகள் மறைத்தல்

மண்டில வரி சிலை வானவில்லொடும்
துண்ட வெண் பிறை எனத் தோன்ற, தூவிய
உண்டை வெங் கடுங் கணை ஒருங்கு மூடலால்,
கண்டிலர் இராமனை, இமைப்பு இல் கண்ணினர். 78

'தோற்றனனே இனி' என்னும் தோற்றத்தால்
ஆற்றல் சால் அமரரும் அச்சம் எய்தினர்;
வேற்றவர் ஆர்த்தனர்; மேலும் கீழரும்
காற்று இயக்கு அற்றது; கலங்கிற்று அண்டமே. 79

73. வித்தகர் - திறமை மிக்கவர்; ஈண்டுத் தேர்ப்பாகர்; 76. எழுத்து - வேதம்; நேர் வழுத்தல் - உவமை சொல்லுதல், நேரே துதித்தலும் ஆம்.

அங்கியும் தன் ஒளி அடங்கிற்று; ஆர்கலி
பொங்கில திமிர்ந்தன; விசும்பில் போக்கு இல,
வெங் கதிர் தண்கதிர், விலங்கி மீண்டன;
மங்குலின் நெடும் புனல் மழை வறந்ததால். 80

திசை நிலைக் கட கரி செருக்குச் சிந்தின;
அசைவு இல வேலைகள், ஆர்க்க அஞ்சின;
விசை கொடு விசாகத்தை நெருக்கி ஏறினன்
குசன்; நெடு மேருவும் குலுக்கம் உற்றதே. 81

வானரத் தலைவனும், இளைய மைந்தனும்,
ஏனை, 'அத் தலைவனைக் காண்கிலேம்' எனக்
கானகக் கரி எனக் கலங்கினர்; கடல்
மீன் எனக் கலங்கினர், வீரர் வேறு உளார். 82

இராமன், இராவணன் தேர்க் கொடியை வீழ்த்தல்

எய்தன சரம் எலாம் இமைப்பின் முந்துறக்
கொய்தனன் அகற்றி, வெங் கோலின் கோவையால்
நொய்து என அரக்கனை நெருங்க நொந்தன
செய்தனன், இராகவன்; அமரர் தேறினர். 83

தூணுடை நிரை புரை கரம் அவைதொறும் அக்
கோணுடை மலை நிகர் சிலை இடை குறைய,
சேணுடை நிகர் கணை சிதறினன்—உணர்வொடு
ஊனுடை உயிர்தொறும் உறைவுறும் ஒருவன். 84

கயில் விரிவு அற வரு கவசமும் உருவிப்
பயில் விரி குருதிகள் பருகிட, வெயிலொடு
அயில் விரி சுடு கணை கடவினன்—அறிவின்
துயில்வுழி உணர்தரு சுடர் ஒளி ஒருவன். 85

திசை உறு துகிலது, செறி மழை சிதறும்
விசை உறு முகிழது, விரிதரு சிரனோடு
இசை உறு கருவியின் இனிது உறு கொடியைத்
தசை உறு கணைகொடு தரை உற விடலும், 86

80. திமிர்ந்தன - அசைவற்றுக் கிடந்தன; 81. விசாகம் - விசாக நட்சத்திரம்; குசன் - அங்காரகன், அங்காரகன் விசாகத்தில் நுழைந்தால் அரசர்க்குத் தீங்கு உண்டாகும் என்பது சோதிட நூற் கொள்கை; 84. கோணுடை மலை - வளைதலையுடைய மலை; குறைதல் - துண்டுபடுதல்; 85. கயில் - மூட்டுவாய்; ஒருவன் உருவிப் பருகிடக் கணை எய்தனன் என இயையும்; 86. துகில் - கொடிச் சீலை; முகிழ் - அரும்பு போன்ற உறுப்பு; இசை உறு கருவி - வீணை.

படை உக, இமையவர் பருவரல் கெட, வந்து
இடை உறு திசை திசை இழுகுற, இறைவன்
அடையுறு கொடிமிசை அணுகினன்—அளவு இல்
கடை உக முடிவு எழு கடல் புரை கலுழன். 87

பண்ணவன் உயர் கொடி என ஒரு பரவைக்
கண் அகன் உலகினை வலம் வரு கலுழன்
நண்ணலும், இமையவர், 'நமது உறு கருமம்
எண்ணலம், முனிவினின் இவறினன்' எனவே. 88

இராவணன், தாமதப் படையை விடுதலும், அதன் தன்மையும்

ஆயது ஓர் அமைதியின், அறிவினின் அறிவான்
நாயகன் ஒருவனை நலிகிலது உணர்வான்,
ஏயினன், இருள் உறு தாமதம் எனும் அத்
தீவினை தரு படை—தெறு தொழில் மறவோன். 89

தீ முகம் உடையன சில; முகம் உதிரம்
தோய் முகம் உடையன; சுரர் முகம் உடைய;
பேய் முகம் உடையன; பிலமுகம் நுழையும்
வாய்முகம் வரி அரவு அனையன வருவ. 90

ஒரு திசை முதல் கடை ஒரு திசை அளவும்,
இரு திசை எயிறு உற வருவன; பெரிய;
கருதிய கருதிய புரிவன; கனலும்
பருதியை மதியொடு பருகுவ—பகழி. 91

இருள் ஒரு திசை, ஒரு திசை வெயில் விரியும்;
சுருள் ஒரு திசை, ஒரு திசை மழை தொடரும்;
உருள் ஒரு திசை, ஒரு திசை உரும் முரலும்;
மருள் ஒரு திசை, ஒரு திசை சிலை வருடம். 92

இராமன், சிவன் படையை விட்டு, தாமதப் படையைத் தொலைத்தல்

இனையன நிகழ்வுற, எழு வகை உலகும்
கனை இருள் கதுவிட, உயிர் இடை கதற,
வினை உறு தொழிலிடை விரவலும், விமலன்
நினைவுறு தகையினன் நெறியுறு முறையின், 93

88. பண்ணவன் - தேவன், ஈண்டு இராமன்; இவறுதல் - குறைதல்; 92. சுருள் - சுழல் காற்று; சிலை வருடம் - கல் மழை; 93. வினை உறு தொழில் - தீவினையால் நேர்ந்தாற்போலும் செயல்.

கண்ணுதல் ஒருவனது அடு படை கருதிப்
பண்ணவன் விடுதலும், அது நனி பருக;
எண்ணுறு கனவினொடு உணர்வு என, இமையில்,
துண்ணெனும் நிலையினின் எறி படை தொலைய, 94

இராவணன் ஆசுரப் படையும், இராமன் அக்கினிப் படையும்

விரிந்த தன் படை மெய் கண்ட பொய் என வீய,
எரிந்த கண்ணினன், எயிற்றிடை மடித்த வாயினன், தன்
தெரிந்த வெங் கணை, கங்க வெஞ் சிறை அன்ன, திறத்த
அரிந்தமன் திரு மேனிமேல் அழுத்தி, நின்று ஆர்த்தான். 95

ஆர்த்து, வெஞ் சினத்து ஆசுரப் படைக்கலம், அமரர்
வார்த்தை உண்டது, இன் உயிர்களால் மறலிதன் வயிற்றைத்
தூர்த்தது, இந்திரன் துணுக்குறு தொழிலது, தொடுத்து,
தீர்த்தன்மேல் செலத் துரந்தனன், உலகு எலாம் தெரிய. 96

'நுங்குகின்றது, இவ் உலகை ஓர் நொடி வரை' என்ன,
எங்கும் நின்று நின்று அலமரும் அமரர் கண்டு இரைப்ப,
மங்குல் வல் உருமேற்றின்மேல் எரி மடுத்தென்ன
அங்கி தன் நெடும் படை தொடுத்து, இராகவன் அறுத்தான்.

கூற்றுக் கோடினும் கோடல, கடல் எலாம் குடிப்ப,
நீற்றுக் குப்பையின் மேருவை நூறுவ, நெடிய
காற்றுப் பின் செலச் செல்வன, உலகு எலாம் கடப்ப,
நூற்றுக் கோடி அம்பு எய்தனன், இராவணன், நொடியில்.

'என்ன கைக் கடுப்போ!' என்பர் சிலர்; சிலர், 'இவையும்
அன்ன மாயமே; அம்பு அல' என்பர்; 'அவ் அம்புக்கு
இன்னம் உண்டுகொல் இடம்!' என்பர் சிலர்; சிலர், 'இகல் போர்
முன்னம் இத்தனை முயன்றிலனும்' என்பர்—முனிவர். 99

மறைமுதல் தனி நாயகன், வானினை மறைத்த
சிறையுடைக் கொடுஞ் சரம் எலாம் இமைப்பு ஒன்றில் திரிய,
பொறை சிகைப் பெருந் தலைநின்றும் புங்கத்தின் அளவும்
பிறை முகத் தடங் கடுங் கொடுஞ்சரம் கொண்டு பிளந்தான்.

94. கனவினொடு உணர்வு என - கனவில் தோன்றிய பொருள் உணர்வு தோன்றியபோது மறைந்துவிடுதல்போல. 95. கங்கம் - பருந்து; 96. அமரர் வார்த்தை - தேவர்களின் புகழ்ச் சொல்; 98. கூற்றுக் கோடினும் - கூற்றுவன் தன் கொல்லுதல் தொழிலினின்று மாறுபட்டாலும்; 100. பொறை சிகைப் பெருந்தலை - பாரமான உச்சியைக் கொண்ட பெரிய அம்பின் அடிப்பாகம்; புங்கத்தின் அளவு - அம்பின் கூரிய நுனி.

மயன் படையும் கந்தருவக் கணையும்

அயன் படைத்த பேர் அண்டத்தின் அருந் தவம் ஆற்றி,
பயன் படைத்தவர் யாரினும் படைத்தவன், 'பல் போர்
வியன் படைக்கலம் தொடுப்பென் நான், இனி' என விரைந்தான்;
மயன் படைக்கலம் துரந்தனன், தயரதன் மகன்மேல். 101

'விட்டனன் விடு படைக்கலம் வேரொடும் உலகைச்
சுட்டனன்' எனத் துணுக்கமுற்று, அமரரும் சுருண்டார்;
'கெட்டனம்' என வானரத் தலைவரும் கிழிந்தார்;
சிட்டர்தம் தனித் தேவனும், அதன் நிலை தெரிந்தான். 102

'பாந்தள் பல் தலைப் பரப்பு அகன் புவியிடைப் பயிலும்
மாந்தர்க்கு இல்லையால் வாழ்வு' என வருகின்ற அதனைக்
காந்தர்ப்பம் எனும் கடுங் கொடுங் கணையினால் கடந்தான்—
ஏந்தல் பல் மணி எறும் வலித் திரள் புயத்து இராமன். 103

தண்டும் அம்பும்

'பண்டு நான்முகன் படைத்தது, கனகன் இப் பாரைத்
தொண்டு கொண்டது, மது எனும் அவுணன் முன் தொட்டது,
உண்டு இங்கு என்வயின்; அது துரந்து உயிர் உண்பென்' என்று,
தண்டு கொண்டு எறிந்தான், ஐந்தொடு ஐந்துடைத் தலையான்.

தாருகன் பண்டு தேவரைத் தகர்த்தது, தனி மா
மேரு மந்தரம் புரைவது, வெயில் அன்ன ஒளியது,
ஓர் உகம்தனின் உலகம் நின்று உருட்டினும் உருளாச்
சீர் உகந்தது, நெரித்தது, தானவர் சிரங்கள். 105

பசும் புனல் பெரும் பரவை பண்டு உண்டது, பனிப்புற்று
அசும்பு பாய்கின்றது, அருக்கனின் ஒளிர்கின்றது, அண்டம்
தசும்புபோல் உடைந்து ஒழியும் என்று அனைவரும் தளர,
விசும்பு பாழ்பட, வந்தது மந்தரம் வெருவ. 106

கண்டு, 'தாமரைக் கண்ணன் அக் கடவுள் மாக் கதையை
அண்டர் நாயகன் ஆயிரம் கண்ணினும் அடங்காப்
புண்டரீகத்தின் முகை அன்ன புகர் முகம் விட்டான்,
உண்டை நூறுடை நூறுபட்டுளது என உதிர்த்தான். 107

101. அருந் தவம் ஆற்றிப் பயன் படைத்தவர் யாரினும் படைத்தவன் - இராவணன்; 102. சிட்டர் - உயர்ந்தோர்; 104. தொண்டு கொண்டது - தன்னடிப்படுத்துதற்குக் கருவியாய் இருந்தது; 106. பனிப்புறல் - குளிர்ச்சி மிகுதல்; அசும்பு - நீர்க்கசிவு; தசும்பு - குடம்,

இராவணன் மாயையின் படையை விட, இறந்த அரக்கர் எழுந்து ஆரவாரித்தல்

‘தேய நின்றவன், சிலை வலம் காட்டினான்; தீராப்
பேயை என் பல துரப்பது? இங்கு இவன் பிழையாமல்
ஆய தன் பெரும் படையொடும் அடு களத்து அவிய
மாயையின் படை தொடுப்பென்’ என்று, இராவணன் மதித்தான். 108

பூசனைத் தொழில் புரிந்து, தான் முறைமையின் போற்றும்
ஈசனைத் தொழுது, இருடியும் சந்தமும் எண்ணி,
ஆசை பத்தினும் அந்தரப் பரப்பினும் அடங்கா
வீசினன் செல, வில் இடைத் தொடை கொடு விட்டான். 109

மாயம் பொத்திய வயப் படை விடுதலும், வரம்பு இல்
காயம் எத்தனை உள, நெடுங் காயங்கள் கதுவ,
ஆயம் உற்று எழுந்தார் என ஆர்த்தனர்—அமரில்
தூய கொற்றவர் சுடு சரத்தால் முன்பு துணிந்தார். 110

இந்திரற்கு ஒரு பகைஞனும், அவற்கு இளையோரும்,
தந்திரப் பெருந் தலைவரும், தலைத் தலையோரும்,
மந்திரச் சுற்றத்தவர்களும், வரம்பு இலர் பிறரும்,
அந்தரத்தினை மறைத்தனர், மழை உக ஆர்ப்பார். 111

குடப் பெருஞ் செவிக் குன்றமும், மற்றுள குழுவும்,
படைத்த மூல மாத் தானையும், முதலிய பட்ட,
விடைத்து எழுந்தன—யானை, தேர், பரி, முதல் வெவ்வேறு
அடைத்த ஊர்திகள் அனைத்தும் வந்து, அவ் வழி அடைத்த.

ஆயிரம் பெரு வெள்ளம் என்று அறிஞரே அறைந்த
காய் சினப் பெருங் கடற்படை களப் பட்ட எல்லாம்,
ஈசனின் பெற்ற வரத்தினால் எய்திய என்ன,
தேசம் முற்றவும் செறிந்தன, திசைகளும் திகைப்ப. 113

சென்ற எங்கணும், தேவரும் முனிவரும் சிந்த—
‘வென்றது எங்களைப்போலும்; யாம் விளிவதும் உளதே?
இன்று காட்டுதும்; எய்துமின், எய்துமின்’ என்னா,
கொன்ற கொற்றவர்தம் பெயர் குறித்து அறைகூவி. 114

109. இருடி - (மந்திரத்துக்கு உரிய) முனிவன்; சந்தம் - சந்தசு; மந்திரம்; 110. காயம் - முன்னது உடம்பு, பின்னது புண்; 112. குடப் பெருஞ் செவிக் குன்றம் - கும்பகருணன் என்னும் பெயரின் தமிழாக்கம்.

பார் இடந்து கொண்டு எழுந்தன பாம்பு எனும் படிய,
பாரிடம் துனைந்து எழுந்தன மலை அன்ன படிய,
'பேர் இடம் கதுவ அரிது, இனி விசும்பு' என, பிறந்த,
பேர் இடங்கரின் கொடுங் குழை அணிந்தன பேய்கள். 115

தாமசத்தினில் பிறந்தவர், அறம் தெறும் தகையர்,
தாம் அசத்தினில் செல்கிலாச் சதுமுகத்தவற்கும்
தாமசத்தினைச் செய்பவர், பரிந்தனர் தளரத்
தாம சத்திரம் சித்திரம் பொருந்தினர், தயங்க. 116

தாம் அவிந்து மீது எழுந்தவர்க்கு இரட்டியின் தகையர்,
தாம இந்துவின் பிளவு எனத் தயங்கு வாள் எயிற்றர்,
தாம் அவிஞ்சையர், கடல் பெருந் தகையினர், தரளத்
தாம விஞ்சையர் துவன்றினர், திசைதொறும் தருக்கி. 117

தாம் மடங்கலும், முடங்கு உளை யாளியும் தகுவார்,
தாம் அடங்கலும் நெடுந் திசை உலகொடும் தகைவார்,
தா மடங்கலும் கடலும் ஒத்து ஆர்தரும் தகையார்,
தாம் மடங்கலும் கொடுஞ் சுடர்ப் படைகளும் தரித்தார். 118

இனைய தன்மையை நோக்கிய இந்திரை கொழுநன்,
'வினையம் மற்று இது மாயமோ? விதியது விளைவோ?
வனையும் வன் கழல் அரக்கர்தம் வரத்தினோ? மற்றோ?
நினைதியாமெனின், பகர்' என, மாதலி நிகழ்த்தும்: 119

இராமன் ஞானக் கணை விடுத்தல்

'இருப்புக் கம்மியற்கு இழை நுழை ஊசி என்று இயற்றி,
விருப்பின், "கோடியால் விலைக்கு" எனும் பதடியின், விட்டான்—
கருப்புக் கார் மழை வண்ண!—அக் கடுந் திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய தோளவன் மீள அரு மாயம். 120

'வீக்கு வாயிலில் வெள் எயிற்று அரவின் வெவ் விடத்தை
மாய்க்குமா நெடு மந்திரம் தந்தது ஓர் வலியின்,—
நோய்க்கும், நோய் தரு வினைக்கும், நின் பெரும் பெயர் நொடியின்,
நீக்குவாய்!—நினை நினைக்குவார் பிறப்பு என, நீங்கும். 121

115. இடங்கரின் கொடுங்குழை - முதலைகளை ஒத்த வளைந்த குழை; 116. தாமசம் - முதலடியில் இருள்; மூன்றாமடியில் தாமத குணம்; அசத்து - நேர்மையற்ற வழி; தாம சத்திரம் - ஒளி வாய்ந்த படைக்கலம்; சித்திரம் - விசித்திரம், முதற்குறை; 117. தாம இந்து - ஒளி வாய்ந்த சந்திரன்; தரளத் தாமம் - முத்து மாலை; விஞ்சையர் - வித்தியாதரர்; 118. மடங்கல் - சிங்கம், ஊழித் தீ, இடி; 119. இந்திரை - திருமகள்; 120. பதடி - அறிவிலி.

'வரத்தின் ஆயினும், மாயையின் ஆயினும், வலியோர்
உரத்தின் ஆயினும், உண்மையின் ஆயினும், ஓடத்
துரத்தியால்' என, ஞான மாக் கடுங் கணை துரந்தான்—
சிரத்தின் நான்மறை இறைஞ்சவும் தொடரவும் சேயோன். 122

துறத்தல் ஆற்று உறு ஞான மாக் கடுங் கணை தொடர,
அறத்து அலாது செல்லாது, நல் அறிவு வந்து அணுக,
பிறத்தல் ஆற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை
மறத்தலால் தந்த மாயையின் மாய்ந்தது, அம் மாயை. 123

இராவணன் சூலம் கொண்டு வீசுதல்

நீலம் கொண்டு ஆர் கண்டனும், நேமிப் படையோனும்,
மூலம் கொண்டார், கண்டகர் ஆவி முடிவிப்பான்,
காலம் கொண்டார்; கண்டன முன்னே கழிவிப்பான்,
சூலம் கொண்டான், அண்டரை எல்லாம் தொழில் கொண்டான். 124

கண்டா குலம் முற்று ஆயிரம் ஆர்க்கின்றது, கண்ணில்
கண்டு ஆகுலம் உற்று உம்பர் அயிர்க்கின்றது, 'வீரர்-
கண் தா, குலம், முற்றும்' சுடும் என்று அக் கழல் வெய்யோன்,
கண் தாகுதல் முன், செல்ல விசைத்துள்ளது கண்டான்.* 125

எரியாநிற்கும் பல் தலை மூன்றும் எரி அஞ்ச,
திரியாநிற்கும் தேவர்கள் ஓட, திரள் ஓட,
இரியாநிற்கும் எவ் உலகும் தன் ஒளியே ஆய்,
விரியாநிற்கும்; நிற்கிலது, ஆர்க்கும் விழி செல்லா, 126

'செல்வாய்' என்னச் செல்ல விடுத்தான்; 'இது தீர்த்தற்கு
ஒல்வாய் நீயே; வேறு ஒருவர்க்கும் உடையாதால்;
வல் வாய் வெங் கண் சூலம் எனும் காலனை, வள்ளால்!
வெல்வாய், வெல்வாய்! என்றனர், வானோர், மெலிகின்றார்.

இராமன் அம்புகள் சூலப்படையை அழிக்க முடியாமல் போக,
அவன் உங்காரத்தால் அழித்தல்

துணையும் வேகத்தால் உரும்ஏறும் துண்ணென்ன
வனையும் காலின் செல்வன,—தன்னை மறவாதே
நினையும் ஞானக் கண் உடையார்மேல் நினையாதார்
வினையம் போலச் சிந்தின—வீரன் சரம் வெய்ய. 128

123. துறத்தல் - துரத்தல், விடுத்தல்; பிறத்தல் ஆற்றுறும் பேதைமை - பிறப்பிற்குக் காரணமான அறியாமை; தம்மை மறத்தல் - உயிர் தன்னை உணராது தளையில் அழுந்தியிருத்தல்; 125. கண்டா குலம் - கண்டா மணியின் கூட்டம்; தா - வலிமை; குலம் - சிறப்பு; கண் தாகுதல் - கண் தாக்குதல், கண்ணிமைத்தல்; 128. நினையாதார் வினையம் - இறைவனை நினையாத கீழ்மக்கள் செய்யும் தீங்குகள்.

எய்யும், எய்யும் தேவருடைத் திண் படை எல்லாம்;
பொய்யும் துய்யும் ஒத்து, அவை சிந்தும்; புவி தந்தான்
வய்யும் சாபம் ஒப்பு என வெப்பின் வலி கண்டான்,
அய்யன் நின்றான், செய் வகை ஒன்றும் அறிகில்லான். 129

'மறந்தான் செய்கை; மற்று எதிர் செய்யும் வகை எல்லாம்
துறந்தான்' என்னா, உம்பர் துணுக்கம் தொடர்வுற்றார்;
அறம்தான் அஞ்சிக் கால் குலைய, தான் அறியாதே,
பிறந்தான் நின்றான்; வந்தது சூலம், பிறர் அஞ்ச. 130

சங்காரத்தான் கண்டை ஒலிப்ப, தழல் சிந்த,
பொங்கு ஆரத்தான் மார்பு எதிர் ஓடிப் புகலோடும்,
வெங் காரத்தான் முற்றும் முனிந்தான்; வெகுளிப் பேர்
உங்காரத்தால் உக்கது, பல் நூறு உதிர் ஆகி. 131

ஆர்ப்பார் ஆனார்; அச்சமும் அற்றார்; அலர் மாரி
தூர்ப்பார் ஆனார்; துள்ளல் புரிந்தார்; தொழுகின்றார்,
'தீர்ப்பாய் நீயே தீ என வேறாய் வரு தீமை
பேர்ப்பாய் போலாம்!' என்றனர்—வானோர், உயிர் பெற்றார்.

இராமனை 'வேத முதல்வனோ?' என இராவணன் கருதுதல்

'வென்றான்' என்றே உள்ளம் வியந்தான், 'விடு சூலம்
பொன்றான்என்னின் போகலது' என்னும் பொருள் கொண்டான்;
ஒன்றுஆம் உங்காரத்திடை உக்கு, ஓடுதல் காணா
நின்றான், அந் நாள் வீடணனார் சொல் நினைவுற்றான். 133

'சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய் வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேத முதல் காரணன்?' என்றான். 134

நிருதிப் படையும் கருடக் கணையும்

'யாரேனும் தான் ஆகுக! யான் என் தனி ஆண்மை
பேரேன்; நின்றே வென்றி முடிப்பென்; புகழ்பெற்றேன்;
நேரே செல்லும் கொல்லும் எனில் தான் நிமிர்வென்றி,
வேரே நிற்கும்; மீள்கிலென்' என்னா, விடலுற்றான். 135

131. சங்காரத்தான் - அழிவினைச் செய்யும் எண்ணத்தோடு; வெங் காரத்தான் - கொடிய வெறுப்புணர்ச்சியோடு; 134. மெய் வரம் - இராவணன் பெற்றிருந்த உண்மையான வரம்; அடுதல் - பயன்படாமல் செய்தல்.

நிருதித் திக்கில் நின்றவன் வென்றிப் படை நெஞ்சில்
கருதி, தன்பால் வந்தது அவன் கைக்கொடு, காலன்
விருதைச் சிந்தும் வில்லின் வலித்து, செலவிட்டான்—
குருதிச் செங் கண் தீ உக, ஞாலம் குலைவு எய்த. 136

வய்யம் துஞ்சும் வன் பிடர் நாகம் மனம் அஞ்ச,
பய்யும் கோடிப் பல் தலையோடும் அளவு இல்லா
மெய்யும் வாயும் பெற்றன, மேருக் கிரி சால
நொய்து என்று ஓதும் தன்மைய ஆக நுழைகின்ற, 137

வாய் வாய்தோறும் மா கடல் போலும் விட வாரி
போய் வார்கின்ற, பொங்கு அனல் கண்ணின் பொழிகின்ற,
மீவாய் எங்கும் வெள்ளிடை இன்றி மிடைகின்ற,
பேய் வாய் என்ன வெள் எயிறு எங்கும் பிறழ்கின்ற, 138

'கடித்தே தீரும்; கண் அகன் ஞாலம் கடலோடும்
குடித்தே தீரும்' என்று உயிர் எல்லாம் குலைகின்ற,
'முடித்தான் அன்றே, வெங் கண் அரக்கன்? முழு முற்றும்
பொடித்தான் ஆகும், இப்பொழுது' என்னப் புகைகின்ற. 139

அவ்வாறு உற்ற ஆடு அரவம் தன் அகல் வாயால்
கவ்வாநின்ற மால் வரை முற்றும் அவை கண்டான்,
'எவ் வாய்தோறும் எய்தின' என்னா, எதிர் எய்தான்,
தவ்வா மெய்ம்மைக் காருடம் என்னும் படைதன்னால். 140

எவண் எத்தன்மைத்து ஏகின நாகத்துஇனம் என்ன,
பவணத்து அன்ன வெஞ் சிறை வேகத் தொழில் பம்ப,
சுவணக் கோலத் துண்டம் நகம் தொல் சிறை வெல் போர்
உவணப் புள்ளே ஆயின, வானோர் உலகு எல்லாம். 141

அளக்க அரும் புள்இனம் அடைய ஆர் அழல்
துளக்க அரும் வாய்தொறும் எரியத் தொட்டன,
'இளக்க அரும் இலங்கை தீ இடுதும், ஈண்டு' என
விளக்குஇனம் எடுத்தன போன்ற, விண் எலாம். 142

136. நிருதித் திக்கில் நின்றவன் - வடமேற்காகிய நிருதி திசையில் நின்ற திசை காவலன்; 140. காருடம் - கருடனது வடிவுடைய கணை; 141. பவணம் - பவனம், காற்று; சுவணம் - பொன்; துண்டம் - மூக்கு; 142. ஒவ்வொரு பாம்பினுக்கும் ஒவ்வொரு கருடனாக வாயில் நெருப்புக் கால அவற்றைப் பற்றிய தோற்றம் விண்ணக முழுமையும் விளக்குகளை ஏற்றினாற்போலத் தோன்றியது.

குயின்றன சுடர் மணி, கனலின் குப்பையின்
பயின்றன, சுடர் தரப் பதும நாளங்கள்
வயின்தொறும் கவர்ந்தென்ன, துண்ட வாள்களால்
அயின்றன, புள்இனம் உகிரின் அள்ளின. 143

ஆயிடை அரக்கனும், அழன்ற நெஞ்சினன்,
தீயிடைப் பொடிந்து எழும் உயிர்ப்பன், சீற்றத்தன்,
மா இரு ஞாலமும் விசும்பும் வைப்பு அறத்
தூயினன், சுடு சரம் உருமின் தோற்றத்த. 144

அங்கு அவ் வெங் கடுங் கணை அயிலின் வாய்தொறும்
வெங் கணை படப் பட, விசையின் வீழ்ந்தன;
புங்கமே தலை எனப் புக்க போலுமால்;
துங்க வாள் அரக்கனது உரத்தில் தோற்றல! 145

இராவணன் விஞ்சைகள் தளர்தலும், இராமன் வீரமும் வலியும் மிகுதலும்

ஒக்க நின்று எதிர் அமர் உடற்றும் காலையில்,
முக்கணன் தட வரை எடுத்த மொய்ம்பற்கு
நெக்கன, விஞ்சைகள், நிலையின் தீர்ந்தன;
மிக்கன, இராமற்கு வலியும் வீரமும். 146

இராமன், இராவணன் தலையை அறுத்தல்

வேதியர் வேதத்து மெய்யன், வெய்யவர்க்கு
ஆதியன் அணுகிய அற்றம் நோக்கினன்,
சாதியின் நிமிர்ந்தது ஓர் தலையைத் தள்ளினன்,
பாதியின் மதி முகப் பகழி ஒன்றினல். 147

மேருவின் கொடுமுடி, வீசு கால் எறி
போரிடை, ஒடிந்து போய், புணரி புக்கென
ஆரியன் சரம் பட அரக்கன் வன் தலை
நீரிடை விழுந்தது, நெருப்பொடு அன்று போய். 148

குதித்தனர் பாரிடை, குன்று கூறுற,
மிதித்தனர்; வடகமும் தூசும் வீசினர்;
துதித்தனர்; பாடினர்; ஆடித் துள்ளினர்;
மதித்தனர், இராமனை—வானுளோர் எலாம். 149

144. வைப்பு - இடம், வெற்றிடம்; 145. புங்கம் - அம்பின் அடிப் பகுதியாகிய குதை; 147. வெய்யவர்க்கு ஆதியன் - கொடிய அரக்கர்க்குத் தலைவனாகிய இராவணன்; 149. வடகம் - மேலாடை; தூசு - அரையாடை.

இறந்தது ஓர் உயிருடன் தருமத்து ஈட்டினால்
பிறந்துளதாம் எனப் பெயர்த்தும், ஓர் தலை
மறந்திலது எழுந்தது, மடித்த வாயது;—
சிறந்தது தவம் அலால், செயல் உண்டாகுமோ! 150

கொய்தது, 'கொய்திலது' என்னும் கொள்கையின்
எய்த வந்து, அக் கணத்து எழுந்தது ஓர் சிரம்,
செய்த வெஞ் சினத்துடன் சிறக்கும் செல்வனை
வைதது, தெழித்தது, மழையின் ஆர்ப்பது. 151

இடந்தது கிரிக் குவடு என்ன எங்கணும்
படர்ந்தது, குரை கடல் பருகும் பண்பது,
விடம் தரு விழியது, முடுகி, வேலையில்
கிடந்ததும், ஆர்த்தது, மழையின் கேழது. 152

இராவணனது கையை இராமன் அறுக்க, அது மீட்டும் முளைத்தல்

'விழுத்தினன் சிரம்' எனும் வெகுளி மீக்கொள,
வழுத்தின, உயிர்களின் முதலின் வைத்த ஓர்
எழுத்தினன், தோள்களின் ஏழொடு ஏழு கோல்
அழுத்தினன்—அசனிஏறு அயிர்க்கும் ஆர்ப்பினான். 153

'தலை அறின், தருவது ஓர் தவமும் உண்டு' என,
நிலை உறு நேமியான் அறிந்து, நீசனைக்
கலை உறு திங்களின் வடிவு காட்டிய
சிலை உறு கையையும் தலத்தில் சேர்த்தினான். 154

கொற்ற வெஞ் சரம் பட, குறைந்து போன கை
பற்றிய கிடந்தது சிலையைப் பாங்குற
மற்று ஓர் கை பிடித்தது போல வவ்வியது;
அற்ற கை, பிறந்த கை, யார் அது ஓர்குவார்? 155

இராவணன் மாதலியைத் தாக்குதல்

பொன் கையிற்று ஊர்தியான் வலியைப் போக்குவான்
முன்கையில் துறு மயிர் முள்ளின் துள்ளுற,
மின் கையில் கொண்டென வில்லை விட்டிலா
வன் கையைத் தன் கையின் வலியின் வாங்கினான். 156

151. ஈடு - பெருமை; 153. உயிர்களின் முதலின் வைத்த ஓர் எழுத்தினன் - உயிர் எழுத்துகளின் முதலில் வைக்கப்பட்டதாகிய அகரம் என்னும் எழுத்தாக இருப்பவனாகிய இராமன்.

விளங்கு ஒளி வயிர வாள் அரக்கன் வீசிய
தளம் கிளர் தடக் கை தன் மார்பில் தாக்கலும்,
உளம் கிளர் பெரு வலி உலைவு இல் மாதலி
துளங்கினன், வாய் வழி உதிரம் தூவுவான். 157

மா மரத்து ஆர் கையால் வருந்துவானை ஓர்
தோமரத்தால் உயிர் தொலைப்பத் தூண்டினன்—
தாம் அரத்தால் பொராத் தகை கொள் வாட் படை,
காமரத்தால், சிவன் கரத்து வாங்கினான். 158

'மாண்டது இன்றொடு மாதலி வாழ்வு' என,
மூண்ட வெந் தழல் சிந்த முடுக்கலும்,
ஆண்ட வில்லி ஓர் ஐம் முக வெங் கணை
தூண்டினான்; துகளானது, தோமரம். 159

இராவணன் தலைகள் அறுபட்டுச் சிதறி வீழ்தல்

ஒய்வு அகன்றது, ஒரு தலை நூறு உற,
போய் அகன்று புரள, பொரு கணை
ஆயிரம் தொடுத்தான்—அறிவின் தனி
நாயகன் கைக் கடுமை நடத்தியே. 160

நீர்த் தரங்கங்கள்தோறும், நிலம்தொறும்,
சீர்த்த மால் வரைதோறும், திசைதொறும்,
பார்த்த பார்த்த இடம்தொறும், பல் தலை
ஆர்த்து வீழ்ந்த—அசனிகள் வீழ்ந்தென. 161

தகர்ந்து மால் வரை சாய்வுறத் தாக்கின;
மிகுந்த வான்மிசை மீனம் மலைந்தன;
புகுந்த மா மகரக் குலம் போக்கு அற
முகந்த வாயின், புணரியை முற்றுற. 162

பொழுது நீட்டிய புண்ணியம் போன பின்,
பழுது செல்லும் அன்றே, மற்றைப் பண்பு எலாம்?—
தொழுது சூழ்வன முன், இன்று தோன்றவே,
கழுது சூன்ற, இராவணன் கண் எலாம். 163

157. தளம் - கனம், பருமை; 158. காமரம் - ஒருவகைப் பண்; 163. பொழுது நீட்டிய புண்ணியம் - நெடுநாளாக நுகர்ந்து வந்த புண்ணியப் பயன்.

வாளும், வேலும், உலக்கையும், வச்சிரக்
கோளும், தண்டும், மழு எனும் கூற்றமும்,
தோளின் பத்திகள்தோறும் சுமந்தன,
மீளி மொய்ம்பன் உரும் என வீசினன். 164

அனைய சிந்திட, ஆண்தகை வீரனும்
'வினையம் என் இனி? யாதுகொல் வெல்லுமா?
நினைவென்' என்ன, 'நிசாசரன் மேனியைப்
புனைவென், வாளியினல்' எனப் பொங்கினன். 165

இராவணன் மேனியை இராமன் முற்றும் அம்பினுல் மூடுதல்

மஞ்சு அரங்கிய மார்பினும், தோளினும்,
நஞ்சு அரங்கிய கண்ணினும், நாவினும்,
வஞ்சன் மேனியை, வார் கணை அட்டிய
பஞ்சரம் எனல் ஆம் படி பண்ணினன். 166

வாய் நிறைந்தன, கண்கள் மறைந்தன,
மீ நிறங்களின் எங்கும் மிடைந்தன,
தோய்வுறும் கணை, செம்புனல் தோய்ந்தில,
போய் நிறைந்தன, அண்டப் புறம் எலாம். 167

மயிரின் கால்தொறும் வார் கணை மாரி புக்கு,
உயிரும் தீர உருவின ஒடலும்,
செயிரும் சீற்றமும் நிற்க, திறல் திரிந்து,
அயர்வு தோன்ற, துளங்கி அழுங்கினன். 168

இராவணன் தேரில் உணர்வு இழந்து கிடக்க, சாரதி தேரினை விலக்கி நிறுத்தல்

வாரி நீர்நின்று எதிர் மகரம் படச்
சோரி சோர, உணர்வு துளங்கினன்;
தேரின்மேல் இருந்தான்— பண்டு தேவர்தம்
ஊரின்மேலும் பவனி உலாவுவான். 169

ஆர்த்துக்கொண்டு எழுந்து உம்பர்கள் ஆடினர்;
வேர்த்துத் தீவினை வெம்பி விழுந்தது;
'போர்த்துப் பொய்த்தனன்' என்று, பொலம் கொள் தேர்
பேர்த்துச் சாரதி போயினன், பின்றுவான். 170

164. மீளி மொய்ம்பன் - பெருவலி படைத்த இராவணன்; 166. அரங்குதல் - வருத்துதல்: பஞ்சரம் - கூடு, ஈண்டு அம்பறுத்தூணி; 167. நிறம் - மார்பு; 168. செயிர் - பகைமை.

கை துறந்த படையினன், கண் அகல்
மெய் துறந்த உணர்வினன், வீழ்தலும்,
எய் திறம் தவிர்ந்தான்—இமையோர்களை
உய் திறம் துணிந்தான், அறம் உன்னுவான். 171

மாதலி, இராவணனைக் கொல்லத் தூண்டலும், இராமன் நீதியன்று எனலும்

'தேறினல், பின்னை யாதும் செயற்கு அரிது;
ஊறுதான் உற்றபோதே உயிர்தனை
நூறுவாய்' என, மாதலி நூக்கினன்;
ஏறு சேவகனும், இது இயம்பினன்: 172

'படை துறந்து, மயங்கிய பண்பினன்
இடை பெறும் துயர் பார்த்து, இகல் நீதியின்
நடை துறந்து, உயிர் கோடலும் நன்மையோ?
கடை துறந்தது போர், என் கருத்து' என்றான். 173

உணர்வு பெற்ற இராவணன், சாரதியைச் சினத்தல்

கூவிரம் செறி பொன் கொடித் தேரொடும்
போவர் அஞ்சினர், அன்னது ஓர் போழ்தினின்,
ஏவர் அஞ்சலியாதவர்? எண்ணுடைத்
தேவர் அஞ்ச, இராவணன் தேறினன். 174

உறக்கம் நீங்கி உணர்ச்சியுற்றான் என,
மறக் கண் வஞ்சன், இராமனை வான் திசைச்
சிறக்கும் தேரொடும் கண்டிலன்; சீற்றத் தீப்
பிறக்க நோக்கினன், பின்னுற நோக்கினன். 175

'தேர் திரித்தனை, தேவரும் காணவே;
வீர விற்கை இராமற்கு வெண் நகை
பேர உய்த்தனையே; பிழைத்தாய்' என,
சாரதிப் பெயரோனைச் சலிப்புறா, 176

'தஞ்சம் நான் உனைத் தேற்ற, தரிக்கிலா
வஞ்ச! நீ பெருஞ் செல்வத்து வைகினை;
"அஞ்சினேன்" எனச் செய்தனை; ஆதலால்,
உஞ்சு போதிகொலாம்!' என்று உருத்து எழா, 177

174. கூவிரம் - தேர்த்தட்டின் எதிரில் நடப்பட்டதாய் வீரர் பற்றிக் கொள்ளுதற்குரிய தாமரை மொட்டுப்போன்ற ஓர் உறுப்பு; 176. பிழைத்தல்- பிழை செய்தல்; 177. தஞ்சம் - துணை.

சாரதி தந்த விளக்கம்

வாள் கடைக்கணித்து ஒச்சலும், வந்து, அவன்
தாள் கடைக்கு அணியாத் தலை தாழ்வுறா,
'மூள் கடைக் கடுந் தீயின் முனிவு ஒழி,
கோள் கடைக்கணித்து' என்று அவன் கூறுவான்: 178

'ஆண்தொழில் துணிவு ஒய்ந்தனை; ஆண்டு இறை
ஈண்ட நின்றிடின், ஐயனே! நின் உயிர்
மாண்டது இக் கணம் என்று, இடர் மாற்றுவான்,
மீண்டது, இத் தொழில்; எம் வினை மெய்ம்மையால். 179

'ஒய்வும் ஊற்றமும் நோக்கி, உயிர் பொறைச்
சாய்வு நீக்குதல் சாரதி தன்மைத்தால்,
மாய்வு நிச்சயம் வந்துழி; வாளினால்
காய்வு தக்கது அன்றால்; கடை காண்டியால்.' 180

என்று இறைஞ்சலும், எண்ணி இரங்கினான்,
'வென்றி அம் தடந் தேரினை மீட்க!' என,
சென்று எதிர்ந்தது, தேரும்; அத் தேர்மிசை
நின்ற வஞ்சன் இராமனை நேர்வுறா, 181

கூற்றின் வெங் கணை கோடியின் கோடிகள்
தூற்றினான், வலி மும் மடி தோற்றினான்;
வேற்று ஒர் வாள் அரக்கன் என, வெம்மையால்
ஆற்றினான் செரு; கண்டவர் அஞ்சினார். 182

இராமன், இராவணன் வில்லைத் துண்டித்தல்

' ''எல் உண்டாகின் நெருப்பு உண்டு'' எனும் இது ஒர்
சொல் உண்டாயதுபோல், இவன் தோளிடை
வில் உண்டாகின் வெலற்கு அரிது ஆம்' எனா,
செல் உண்டால் அன்னது ஒர் கணை சிந்தினான். 183

நாரணன் படை நாயகன் உய்ப்புறா,
பார் அணங்கினைத் தாங்குறும் பல் வகை
வாரணங்களை வென்றவன் வார் சிலை
ஆர் அணங்கை இரு துணி ஆக்கினான். 184

178. கடைக்கணித்தல் - நோக்குதல், ஆராய்தல்; கோள் - எண்ணம்; 179. ஆண் தொழில் - போர்த்தொழில்; 180. சாய்வு - வீழ்ச்சி; கடை காணுதல் - தீர ஆலோசித்தல்; 183. எல் - ஒளி; 184. சிலை ஆர் அணங்கு - வில் என்னும் அச்சுறுத்தும் தெய்வம்.

அயன் படைத்த வில், ஆயிரம் பேரினான்
வியன் படைக்கலத்தால் அற்று வீழ்தலும்,
உயர்ந்து உயர்ந்து குதித்தனர் உம்பரார்,
'பயன் படைத்தனம், பல் தவத்தால்' என்றார். 185

மாறி மாறி, வரி சிலை வாங்கினான்
நூறு நூறினொடு ஐ-இருநூறு அவை
வேறு வேறு திசை உற, வெங் கணை
நூறி நூறி, இராமன் நுறுக்கினான். 186

இருப்புலக்கை, வேல், தண்டு, கோல், ஈட்டி, வாள்,
நெருப்பு உலக்க வரும் நெடுங் கப்பணம்,
திருப் புலக்க உய்த்தான்—திசை யானையின்
மருப்பு உலக்க வழங்கிய மார்பினான். 187

அவை அனைத்தும் அறுத்து, அகன் வேலையில்
குவை அனைத்தும் எனக் குவித்தான், குறித்து,
'இவை அனைத்தும் இவனை வெல்லா' எனா,
நவை அனைத்தும் துறந்தவன் நாடினான். 188

'கண்ணினுள் மணியூடு கழிந்தன,
எண்ணின் நுண் மணலின் பல வெங்கணை;
புண்ணினுள் நுழைந்து ஓடிய, புந்தியோர்
எண்ணின் நுண்ணிய; என் செயற்பாற்று' எனா, 189

'நாரணன் திரு உந்தியில் நான்முகன்
பார வெம் படை வாங்கி, இப் பாதகன்
மாரின் எய்வென்' என்று எண்ணி, வலித்தனன்,
ஆரியன், அவன் ஆவி அகற்றுவான். 190

முந்தி வந்து உலகு ஈன்ற முதற் பெயர்
அந்தணன் படை வாங்கி அருச்சியா,
சுந்தரன் சிலை நாணில் தொடுப்புறா,
மந்தரம் புரை தோள் உற வாங்கினான். 191

புரம் சுடப் பண்டு அமைத்தது, பொன் பணை
மரம் துளைத்தது, வாலியை மாய்த்துளது,
அரம் சுடச் சுடர் நெஞ்சின் அரக்கர் கோன்
உரம் சுட, சுடரோன் மகன் உந்தினான். 192

190. மார் - மார்பு; 192. சுடரோன் மகன் - சூரிய குலத் தோன்றலாகிய இராமன்.

அயன் படையால் இராவணன் உயிர் இழத்தல்

காலும் வெங் கனலும் கடை காண்கிலா,
மாலும் கொண்ட வடிக் கணை, மா முகம்
நாலும் கொண்டு நடந்தது, நான்முகன்
மூல மந்திரம்தன்னொடு மூட்டலால். 193

ஆழி மால் வரைக்கு அப்புறத்து அப்புறம்,
பாழி மா கடலும் வெளி பாய்ந்ததால்—
ஊழி ஞாயிறு மின்மினி ஒப்புற,
வாழி வெஞ் சுடர் பேர் இருள் வாரவே. 194

அக் கணத்தின் அயன் படை ஆண்தகை
சக்கரப் படையோடும் தழீஇச் சென்று,
புக்கது, அக் கொடியோன், உரம்; பூமியும்,
திக்கு அனைத்தும், விசும்பும், திரிந்தவே. 195

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந் தவமும், முதல்வன் முன்நாள்,
'எக் கோடியாராலும் வெலப்படாய்'
எனக் கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகு அனைத்தும் செருக் கடந்த
புய வலியும், தின்று, மார்பில்
புக்கு ஓடி உயிர் பருகி, புறம் போயிற்று,
இராகவன்தன் புனித வாளி. 196

ஆர்க்கின்ற வானவரும், அந்தணரும்,
முனிவர்களும், ஆசி கூறித்
தூர்க்கின்ற மலர் மாரி தொடரப் போய்,
பாற்கடலில் தூய் நீர் ஆடி,
தேர்க் குன்ற இராவணன்தன் செழுங் குருதிப்
பெரும் பரவைத் திரைமேல் சென்று,
கார்க் குன்றம் அனையான்தன் கடுங் கணைப்
புட்டிலின் நடுவண் கரந்தது அம்மா. 197

193. மாலும் - உம்மை எதுகை நோக்கி வந்த அசை; 196. முதல்வன் - பிரமன்.

இறந்த இராவணன் முகப் பொலிவு

கார் நின்ற மழைநின்றும் உரும் உதிர்வ
என, திணி தோட் காட்டின்நின்றும்,
தார் நின்ற மலைநின்றும், பணிக் குலமும்
மணிக் குலமும் தகர்ந்து சிந்த,
போர் நின்ற விழிநின்றும் பொறிநின்று
புகையோடும் குருதி பொங்க,
தேர்நின்று நெடு நிலத்துச் சிரமுகம் கீழ்ப்
பட விழுந்தான், சிகரம் போல்வான். 198

வெம் மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க,
மனம் அடங்க, வினையம் வீய,
தெவ் மடங்க, பொரு தடக் கைச் செயல் அடங்க,
மயல் அடங்க, ஆற்றல் தேய,
தம் அடங்கு முனிவரையும் தலை அடங்கா,
நிலை அடங்கச் சாய்த்த நாளின்
மும் மடங்கு பொலிந்தன, அம் முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா! 199

இராமன், இராவணன் உடம்பைப் பார்த்தல்

'பூதலத்தது ஆக்குவாயாக, இனிப்
பொலந் தேரை' என்ற போதில்,
மாதலிப் பேரவன் கடவ, மண் தலத்தின்
அப் பொழுதே வருதலோடும்,
மீது அலைத்த பெருந் தாரை விசும்பு அளப்பக்
கிடந்தான்தன் மேனி முற்றும்
காதலித்த உரு ஆகி, அறம் வளர்க்கும்
கண்ணாளன் தெரியக் கண்டான். 200

'தேரினை நீ கொடு விசும்பில் செல்க' என்ன
மாதலியைச் செலுத்தி, பின்னர்,
பாரிடம்மீதினின் அணுகி, தம்பியொடும்
படைத்தலைவர் பலரும் சுற்ற,
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, உரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான். 201

199. தம் அடங்குதல் - தம் ஐம்பொறி அடங்க நிற்றல்; நிலை - தவநிலை;
200. பெருந் தாரை - பெரிய இரத்த தாரை.

புலைமேலும் செலற்கு ஒத்துப் பொது நின்ற
செல்வத்தின் புன்மைத் தன்மை
நிலைமேலும் இனி உண்டே? 'நீர் மேலைக்
கோலம்' எனும் நீர்மைத்து அன்றே
தலைமேலும் தோள்மேலும் தடமுதுகின்
படர்புறத்தும் தாவி ஏறி,
மலைமேல் நின்று ஆடுவபோல் ஆடினவால்
வானரங்கள், வரம்பு இலாத. 202

தோடு உழுத நறுந் தொடையல் தொகை உழுத
கிளை வண்டின் சுழியத் தொங்கல்
பாடு உழுத படர் வெரிநின் பணி உழுத
அணி நிகர்ப்ப, பணைக் கை யானைக்
கோடு உழுத நெடுந் தழும்பின் குவை தழுவி,
எழு மேகக் குழுவின் கோவைக்
காடு உழுத கொழும் பிறையின் கறை கழன்று
கிடந்தனபோல் கிடக்கக் கண்டான்: 203

இராவணன் புறப்புண் கண்ட இராமன் முறுவலித்தல்

தளிர்இயல் பொருட்டின் வந்த சீற்றமும், தருக்கினோன்தன்
கிளர் இயல் உருவினோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும்
வளர் இயல் வடுவின் செம்மைத் தன்மையும், மருவ நின்ற
முளரி அம் கண்ணன், மூரல் முறுவலன், மொழிவதானான்: 204

'வென்றியான் உலகம் மூன்றும் மெய்ம்மையால் மேவினாலும்,
பொன்றினான் என்று தோளைப் பொது அற நோக்கும் பொற்பும்
குன்றி ஆசுற்றதுஅன்றே—இவன் எதிர் குறித்த போரில்
பின்றியான் முதுகில் பட்ட பிழம்பு உள தழும்பின் அம்மா.

' ''கார்த்தவீரியன் என்பானால் கட்டுண்டான்'' என்னக் கற்கும்
வார்த்தை உண்டு; அதனைக் கேட்டு, நாணுறு மனத்தினேற்குப்
போர்த்தலை புறகிட்டு ஏற்ற புண்ணுடைத் தழும்பும் போலாம்
நேர்த்ததும் காணலுற்ற; ஈசனார் இருக்கை நிற்க! 206

'மாண்டு ஒழிந்து உலகில் நிற்கும் வயங்கு இசை முயங்க மாட்டாது,
ஊண்தொழில் உகந்து, தெவ்வர் முறுவல் என் புகழை உண்ண,
பூண் தொழில் உடைய மார்ப! போர்ப் புறங்கொடுத்தோர்ப் போன்ற
ஆண்தொழிலோரின் பெற்ற வெற்றியும் அவத்தம்' என்றான்.

202. புலை - இழ்மை; 203. பாடு உழுத - பெருமை பொருந்திய; பணி உழுத - வேலைப்பாடு அமைந்த; 207. அவத்தம் - பொய்.

வீடணன் வருந்திக் கூறுதல்

'அவ் உரைக்கு இறுதி நோக்கி, வீடணன், அருவிக் கண்ணன்,
வெவ் உயிர்ப்போடு நீண்ட விம்மலன், வெதும்பும் நெஞ்சன்,
'செவ்வியின் தொடர்ந்த அல்ல செப்பலே, செல்வ!' என்னு,
எவ் உயிர்ப் பொறையும் நீங்க இரங்கி நின்று, இனைய சொன்னுன்:

'ஆயிரம் தோளினுனும், வாலியும், அரிதின், ஐய!
மேயின வென்றி விண்ணோர் சாபத்தின் விளைந்த; மெய்ம்மை;
தாயினும் தொழத் தக்காள்மேல் தங்கிய காதல்-தன்மை
நோயும் நின் முனிவும் அல்லால், வெல்வரோ நுவலற்பாலார்?

'நாடு உளதனையும் ஓடி நண்ணலார்க் காண்கிலாமல்,
பீடு உள குன்றம் போலும் பெருந் திசை எல்லே யானைக்
கோடு உளதனையும் புக்குக் கொடும் புறத்து அழுந்து புண்ணின்
பாடு உளது அன்றி, தெவ்வர் படைக்கலம் பட்டு என் செய்யும்?

'அப் பணே அனைத்தும் மார்புக்கு அணி எனக் கிடந்த; வீரக்
கைப் பணே முழங்க, மேல்நாள், அமரிடைக் கிடைத்த காலன்
துப்பு அணே வயிர வாளி விசையினும், காலின் தோன்றல்
வெப்பு அணே குத்திஞலும், வெரிநிடைப் போய அன்றே.*

'அவ் வடு அன்றி, இந்த அண்டத்தும் புறத்தும் ஆன்ற
தெவ் அடு படைகள் அஞ்சாது இவன்வயின் செல்லின், தேவ!
வெவ் விடம் ஈசன்தன்னை விழுங்கினும், பறவை வேந்தை
அவ் விட நாகம் எல்லாம் அணுகினும், அணுகல் ஆற்ரு. 212

'வென்றியாய்! பிறிதும் உண்டே வேலே சூழ் ஞாலம், ஆண்டு, ஓர்
பன்றியாய் எயிற்றுக் கொண்ட பரம்பரன் முதல பல்லோர்,
"என்று யாம் இடுக்கண் தீர்வது?" என்கின்ருர்; "இவன் இன்று உன்னுல்
பொன்றினன்" என்றபோதும், புலப்படார், "பொய்கொல்?" என்பார்.'

இராவணனுக்கு இறுதிக் கடன் செய்ய வீடணனை ஏவுதல்

'அன்னதோ?' என்னு, வீரன் ஐயமும் நாணும் நீங்கி,
தன்ன தோள் இணையை நோக்கி, 'வீடணு! தக்கது அன்ருல்;
என்னதோ, இறந்துளான்மேல் வயிர்த்தல்? நீ இவனுக்கு, ஈண்டு
சொன்னது ஓர் விதியிஞலே கடன் செயத் துணிதி' என்ருன்.

209. தாயினும் தொழத்தக்காள் - சீதை; 211. பணே - யானைகளின் கொம்புகள்; கைப் பணே - சங்குகள்.

அவ் வகை அருளி, வள்ளல் அனைத்து உலகங்களோடும்
எவ் வகை உள்ள தேவர் யாவரும் இரைத்துப் பொங்கிக்
கவ்வையின் தீர்ந்தார் வந்து வீழ்கின்றார் தம்மைக் காண,
செவ்வையின் அவர் முன் சென்றான்; வீடணன் இதனைச் செய்தான்.

வீடணன், இராவணன் மேனிமேல் விழுந்து அரற்றுதல்

'போழ்ந்தென அரக்கன் செய்த புன் தொழில் பொறையிற்று ஆமால்;
வாழ்ந்த நீ இவனுக்கு ஏற்ற வழிக் கடன் வகுத்தி' என்ன,
தாழ்ந்தது ஓர் கருணைதன்னால், தலைமகன் அருள, தள்ளி,
வீழ்ந்தனன் அவன்மேல், வீழ்ந்த மலையின்மேல் மலை வீழ்ந்தென்ன.

ஏவரும் உலகத்து எல்லா உயிர்களும் எரியின் நெஞ்சின்
தேவரும் முனிவர்தாமும் சிந்தையின் இரக்கம் சேர,
தா அரும் பொறையினான்தன் அறிவினால் தகைக்க நின்ற
ஆவலும் துயரும் தீர, அரற்றினன் பகு வாய் ஆர, 217

வீடணன் புலம்பல்

உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு;
சனகி எனும் பெரு நஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே, போக்கியதே
உயிர்; நீயும் களப் பட்டாயே!
எண்ணாதேன் எண்ணிய சொல் இன்று இனித் தான்
எண்ணுதியோ?—எண் இல் ஆற்றல்
அண்ணாவோ! அண்ணாவோ! அசுரர்கள்தம்
பிரளயமே! அமரர் கூற்றே! 218

' ''ஓர் ஆசை ஒருவன்மேல் உயிர் ஆசைக்
குலமகள்மேல் உடைய காதல்
தீர்; ஆசை பழி'' என்றேன்; எனை முனிந்த
முனிவு ஆறித் தேறினாயோ?
போர் ஆசைப்பட்டு எழுந்தகுலம் முற்றும்
பொன்றவும்தான் பொங்கி நின்ற
பேர் ஆசை பெயர்ந்ததோ?—பெயர்ந்து ஆசைக்
கரி இரியப் புருவம் பேர்த்தாய்! 219

216. போழ்ந்தென - உடம்பைப் பிளந்தாற்போல; 218. எண்ணாதேன் - நின்னால் மதிக்கப்படாத யான்; 219. ஓர் ஆசை ஒருவன் - ஒருதிறப்பட்ட ஆசையை உடைய ஒப்பற்ற இராமன்; ஆசைக் கரி - திசை யானை.

‘ ‘‘அன்று எரியில் விழு வேதவதி இவள்காண்;
உலகுக்கு ஓர் அன்னை’’ என்று,
குன்று அனைய நெடுந் தோளாய்! கூறினேன்;
அது மனத்துள் கொள்ளாதே போய்,
உன்தனது குலம் அடங்க, உருத்து அமரில்
படக் கண்டும், உறவு ஆகாதே
பொன்றினையே! இராகவன்தன் புய வலியை
இன்று அறிந்து, போயினையோ!* 220

‘மன்றல் மா மலரானும், வடி மழு வாள்
படையானும், வரங்கள் ஈந்த
ஒன்று அலாதன உடைய முடியோடும்
பொடி ஆகி உதிர்ந்து போன;
அன்றுதான் உணர்ந்திலையே ஆனாலும்
அவன் நாட்டை அணுகாநின்ற
இன்றுதான் உணர்ந்தனையே, இராமன்தான்
யாவருக்கும் இறைவன் ஆதல்? 221

‘வீர நாடு உற்றாயோ? விரிஞ்சனும்
யாவருக்கும் மேலாம் முன்பன்
பேரன் நாடு உற்றாயோ? பிறை சூடும்
பிஞ்ஞகன்தன் புரம் பெற்றாயோ?
ஆர், ஐயா! உன் உயிரை, அஞ்சாதே,
கொண்டு அகன்றார்? அது எலாம் நிற்க,
மாரனார் வலி ஆட்டம் தவிர்ந்தாரோ?
குளிர்ந்தானோ, மதியம் என்பான்? 222

‘ ‘‘கொல்லாத மைத்துனனைக் கொன்றாய்’’ என்று,
அது குறித்துக் கொடுமை சூழ்ந்து,
பல்லாலே இதழ் அதுக்கும் கொடும் பாவி
நெடும் பாரப் பழி தீர்ந்தாளே!
நல்லாரும் தீயாரும் நரகத்தார்
துறக்கத்தார், நம்பி! நம்மோடு
எல்லாரும் பகைஞரே; யார் முகத்தே
விழிக்கின்றாய்? எளியை ஆனாய்! 223

222. பேரன் - பாட்டன், இங்குப் பிரம தேவன்; 223. இராவணன் நிவாத கவச கால கேயருடன் போர் செய்யும்போது சூர்ப்பணகையின் கணவனைத் தெரியாமல் கொன்றுவிட்டான். அதனையே,‘ மைத்துனனைக் கொன்றாய்’ என்ற தொடர் குறிக்கிறது. இதழ் அதுக்கல் - உதட்டைக் கடித்தல்.

'போர்மகளை, கலைமகளை, புகழ்மகளை,
தழுவிய கை பொருமை கூர,
சீர்மகளை, திருமகளை, தேவர்க்கும்
தெரிவு அரிய தெய்வக் கற்பின்
பேர்மகளை, தழுவுவான் உயிர் கொடுத்து,
பழி கொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ, திசை யானைப்
பணை இறுத்த பணைத்த மார்பால்?' 224

வீடணன் தேறுதல்

என்று ஏங்கி, அரற்றுவான்தனை எடுத்து,
சாம்பவனும் எண்கின் வேந்தன்,
'குன்று ஒங்கு நெடுந் தோளாய்! விதி நிலையை
மதியாத கொள்கைத்து ஆகிச்
சென்று ஓங்கும் உணர்வினையோ? தேருது
வருந்துதியோ?' என்ன, தேறி
நின்ருன், அப்புறத்து; அரக்கன் நிலை கேட்டாள்,
மயன் பயந்த நெடுங் கண் பாவை. 225

மண்டோதரியும் அரக்கியரும் இராவணன் கிடக்கும் இடம் அடைதல்

அனந்தம் நூருயிரம் அரக்கர் மங்கைமார்,
புனைந்த பூங் குழல் விரித்து அரற்றும் பூசலார்,
இனம் தொடர்ந்து உடன் வர, எய்தினுள் என்ப—
நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினுள். 226

இரக்கமும் தருமமும் துணைக்கொண்டு, இன் உயிர்
புரக்கும் நன் குலத்து வந்து ஒருவன் பூண்டது ஓர்
பரக்கழி ஆம் எனப் பரந்து, நீண்டதால்—
அரக்கியர் வாய் திறந்து அரற்றும் ஓதையே. 227

நூபுரம் புலம்பிட, சிலம்பு நொந்து அழ,
கோபுரம்தொறும் புறம் குறுகினுர் சிலர்;
'ஆ! புரந்தரன் பகை அற்றது ஆம்' எனு,
மா புரம் தவிர, விண் வழிச் சென்ருர் சிலர். 228

227. பரக்கழி - பெரும்பழி; 228. மா புரம் தவிர - பெரிதாகிய மதில் வழி தவிர்ந்து.

அழைப்பு ஒலி முழக்கு எழ, அழகு மின்னிட,
குழைப் பொலி நல் அணிக் குலங்கள் வில்லிட,
உழைப் பொலி உண் கண் நீர்த் தாரை மீது உக,
மழைப் பெருங் குலம் என, வான் வந்தார் சிலர். 229

அரக்கிமார் அழுகை

தலைமிசைத் தாங்கிய கரத்தர், தாரை நீர்
முலைமிசைத் தூங்கிய முகத்தர், மொய்த்து வந்து,
அலைமிசைக் கடலின் வீழ் அன்னம்போல், அவன்
மலைமிசைத் தோள்கள்மேல் வீழ்ந்து, மாழ்கினர். 230

தழுவினர் தழுவினர் தலையும் தாள்களும்,
எழு உயர் புயங்களும், மார்பும், எங்கணும்,
குழுவினர், முறை முறை கூறு கூறு கொண்டு
அழுதனர் அயர்த்தனர், அரக்கிமார்களே. 231

வருத்தம் ஏது எனின், அது புலவி; வைகலும்,
பொருத்தமே வாழ்வு எனப் பொழுது போக்குவார்,
ஒருத்தர்மேல் ஒருத்தர் வீழ்ந்து, உயிரின் புல்லினர்—
திருத்தமே அனையவன் சிகரத் தோள்கள்மேல். 232

இயக்கியர், அரக்கியர், உரகர் ஏழையர்,
மயக்கம் இல் சித்தியர், விஞ்சை மங்கையர்,—
முயக்கு இயல் முறை கெட முயங்கினர்கள்—தம்
துயக்கு இலா அன்பு மூண்டு, எவரும் சோரவே. 233

'அறம் தொலைவுற மனத்து அடைத்த சீதையை
மறந்திலையோ, இனும்? எமக்கு உன் வாய்மலர்
திறந்திலை; விழித்திலை; அருளும் செய்கிலை;
இறந்தனையோ?' என இரங்கி, ஏங்கினர். 234

மண்டோதரி இராவணன் மார்பில் விழுந்து புலம்புதல்

தரங்க நீர் வேலையில் தடித்து வீழ்ந்தென
உரம் கிளர் மதுகையான் உருவின் உற்றனள்,
மரங்களும் மலைகளும் உருக, வாய் திறந்து,
இரங்கினள்—மயன் மகள்,—இனைய பன்னினள்: 235

232. பொருத்தம் - பொருந்தி இருப்பது, கூடல்; திருத்தமே அனையவன் - வீரந் தங்கிய துறை என்னத்தக்க இராவணன்; திருத்தம் - தீர்த்தம், ஈண்டு வீரம் தங்கிய துறை 233. துயக்கு - மாறுபாடு.

'அன்னேயோ! அன்னேயோ! ஆ, கொடியேற்கு
அடுத்தவாறு! அரக்கர் வேந்தன்
பின்னேயோ, இறப்பது? முன் பிடித்திருந்த
கருத்து அதுவும் பிடித்திலேனே?
முன்னேயோ விழுந்ததுவும், முடித் தலையோ?
படித் தலைய முகங்கள்தானே?
என்னேயோ, என்னேயோ, இராவணனார்
முடிந்த பரிசு! இதுவோ பாவம்! 236

'வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திரு மேனி, மேலும் கீழும்,
எள் இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும்
இடன் நாடி, இழைத்தவாறோ?
''கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும்'' எனக் கருதி, உடல் புகுந்து,
தடவியதோ ஒருவன் வாளி? 237

'ஆரம் போர் திரு மார்பை அகல் முழைகள்
எனத் திறந்து, இவ் உலகுக்கு அப்பால்
தூரம் போயின, ஒருவன் சிலை துரந்த
சரங்களே; போரில் தோற்று,
வீரம் போய், உரம் குறைந்து, வரம் குறைந்து,
வீழ்ந்தானே! வேறே! கெட்டேன்!
ஓர்அம்போ, உயிர் பருகிற்று, இராவணனை?
மானுடவன் ஊற்றம் ஈதோ! 238

'காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேர் அழகும், அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர் பிரான், தயரதனார், பணியதனால்
வெங் கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார்
பெருந் தவமாய்ப் போயிற்று, அம்மா! 239

236. முன் பிடித்திருந்த கருத்து - முன்பு தொடங்கி உறுதியாகக்கொண்டிருந்த மனக்கருத்து; 238. போர்த்தல் - அணிதல்; 239. காந்தையர் - பெண்பாலார்; கடைமுறை - முடிவில்; புரந்தரன் - இந்திரன்.

' ''தேவர்க்கும், திசைக் கரிக்கும், சிவனுர்க்கும்,
அயனுர்க்கும், செங் கண் மாற்கும்,
ஏவர்க்கும், வலியானுக்கு என்று உண்டாம்
இறுதி?'' என ஏமாப்புற்றேன்;
ஆவற்கண் நீ உழந்த அருந் தவத்தின்
பெருங் கடற்கும், வரம் என்று ஆன்ற
காவற்கும், வலியான் ஓர் மானுடவன்
உளன் என்னக் கருதினேனே? 240

'அரை கடை இட்டு அமைவுற்ற முக்கோடி
ஆயுவும் முன் அறிஞர்க்கேயும்
உரை கடையிட்டு அளப்ப அரிய பேர் ஆற்றல்,
தோள் ஆற்றற்கு உலப்போ இல்லை;
திரை கடையிட்டு அளப்ப அரிய வரம் என்னும்
பாற்கடலைச் சீதை என்னும்
பிரை கடை இட்டு அழிப்பதனை அறிந்தேனே,
தவப் பயனின் பெருமை பார்ப்பேன்? 241

'ஆர் அனுர், உலகு இயற்கை அறிதக்கார்?
அவை ஏழும் ஏழும் அஞ்சும்
வீரனுர் உடல் துறந்து, விண் புக்கார்;
கண் புக்க வேழ வில்லால்,
நார நாள் மலர்க் கணையால், நாள் எல்லாம்
தோள் எல்லாம், நைய எய்யும்
மாரனுர் தனி இலக்கை மனித்தனுர்
அழித்தனரே, வரத்தினுலே! 242

மண்டோதரி உயிர் பிரிதல்

என்று அழைத்தனள், ஏங்கி எழுந்து, அவன்
பொன் தழைத்த பொரு அரு மார்பினைத்
தன் தழைக் கைகளால் தழுவி, தனி
நின்று அழைத்து உயிர்த்தாள், உயிர் நீங்கினுள். 243

வான மங்கையர், விஞ்சையர், மற்றும் அத்
தான மங்கையரும், தவப் பாலவர்,
ஆன மங்கையரும், அருங் கற்புடை
மான மங்கையர்தாமும், வழுத்தினுர். 244

240. ஆவற்கண் - ஆவலோடு; 241. ஆயு - ஆயுள், வாழ்நாள்; உரை கடை இடுதல் - சொல்லால் முடிவுகட்டல்; 242. கண் புக்க வேழ வில் - கணுப் பொருந்திய கருப்பு வில்; நார நாள் மலர்க் கணை - (வண்டொழுக் காகிய) நாணியைக் கொண்ட நாள்மலராகிய அம்பு.

பின்னர், வீடணன், பேர் எழில் தம்முனை,
வன்னி கூவி, வரன்முறையால், மறை
சொன்ன ஈம விதி முறையால் தொகுத்து,
இன்னல் நெஞ்சினெடு இந்தனத்து எற்றினன். 245

கடன்கள் செய்து முடித்து, கணவனேடு
உடைந்து போன மயன் மகளோடு உடன்
அடங்க வெங் கனலுக்கு அவி ஆக்கினன்—
குடம் கொள் நீரினும் கண் சோர் குமிழியான். 246

வீடணன், யாவர்க்கும் உரிய கடன்களை இயற்றி, இராமனை அடைதல்

மற்றையோர்க்கும் வரன்முறையால் வகுத்து,
உற்ற தீக் கொடுத்து, உண்குறு நீர் உகுத்து,
'எற்றையோர்க்கும் இவன் அலது இல்' என,
வெற்றி வீரன் குரை கழல் மேவினன். 247

வந்து தாழ்ந்த துணைவனை, வள்ளலும்,
'சிந்தை வெந் துயர் தீருதி, தெள்ளியோய்!
முந்தை எய்தும் முறைமை இது ஆம்' என,
அந்தம் இல் இடர்ப் பாரம் அகற்றினன். 248

37　　　மீட்சிப் படலம்

இராமன் ஆணைப்படி, இலக்குவன் வீடணனுக்கு முடி சூட்டுதல்

'வருந்தல், நீதி மனு நெறி யாவையும்
பொருந்து கேள்விப் புலமையினேய்!' என,
அருந் தவப் பயனல் அடைந்தாற்கு அறைந்து,
இருந் தவத்து இளையோற்கு இது இயம்பினன்:* 1

'சோதியான் மகன், வாயுவின் தோன்றல், மற்று
ஏது இல் வானர வீரரொடு ஏகி, நீ
ஆதி நாயகன் ஆக்கிய நூல் முறை
நீதியானை நெடு முடி சூட்டுவாய்.'* 2

245. வன்னி கூவி - அக்கினியைப் பிரதிட்டை செய்து.
37: 2. ஆதி நாயகன் - நாராயணன்; நூல் - வேதம்.

என்று கூறி, இளவலொடு ஆரையும்
வென்றி வீரன் விடை அருள் வேலையில்,
நின்ற தேவர் நெடுந் திசையோரொடும்
சென்று, தம் தம செய்கை புரிந்தனர்.* 3

சூழ் கடல் புனலும், பல தோயமும்,
நீள் முடித் தொகையும், பிற நீர்மையும்,
பாழி துற்று அரி பற்றிய பீடமும்,
தாழ்வு இல் கொற்றத்து அமரர்கள் தந்தனர்.* 4

வாச நாள் மலரோன் சொல, மான்முகன்
காசும் மா நிதியும் கொடு, கங்கை சூடு
ஈசனே முதலோர் வியந்து ஏத்திட,
தேசு உலாம் மணி மண்டபம் செய்தனன்.* 5

மெய் கொள் வேத விதி முறை விண்ணுளோர்
தெய்வ நீள் புனல் ஆடல் திருத்திட,
ஐயன் ஆணையினால், இளங் கோளரி
கையினால் மகுடம் கவித்தான் அரோ.* 6

கரிய குன்று கதிரினைச் சூடி ஓர்
எரி மணித் தவிசில் பொலிந்தென்னவே,
விரியும் வெற்றி இலங்கையர் வேந்தன் நீடு
அரியணைப் பொலிந்தான், தமர் ஆர்த்து எழ. 7

தேவர் பூ மழை, சித்தர் முதலினோர்
மேவு காதல் விரை மலர், வேறு இலா
மூவரோடு, முனிவர், மற்று யாவரும்,
நாவில் ஆசி நறை மலர், தூவினர்.* 8

முடி புனைந்த நிருதர் முதலவன்
அடி வணங்கி இளவலை, ஆண்டை அந்
நெடிய காதலினோர்க்கு உயர் நீர்மை செய்து,
இடி கொள் சொல்லன் அனலற்கு இது இயம்பினன்:* 9

'விலங்கல் நாண மிடைதரு தோளினாய்!
இலங்கை மா நகர் யான் வரும் எல்லை, நீ
கலங்கலா நெடுங் காவல் இயற்று' என,
அலங்கல் வீரன் அடி இணை எய்தினன்.* 10

3. செய்கை - கடமை; 4. தோயம் - தீர்த்தம், புண்ணிய நீர்; துற்றுதல் - பொருந்துதல்; 5. மான் முகன் - மானின் முகம் உடையவனாகிய மயன்; 9. உயர் நீர்மை - உயர்ந்த சிறப்பு.

வணங்கிய வீடணனை இராமன் தழுவி, நீதிகள் உரைத்தல்

குரக்கு வீரன், அரசு, இளங் கோளரி,
அரக்கர் கோமகனோடு அடி தாழ்தலும்,
பொருக்கெனப் புகல் புக்கவற் புல்லி, அத்
திருக் கொள் மார்பன் இனையன செப்பினன்:* 11

'உரிமை மூஉலகும் தொழ, உம்பர்தம்
பெருமை நீதி அறன் வழிப் பேர்கிலாது,
இருமை ஏய் அரசாளுதி, ஈறு இலாத்
தரும சீல!' என்றான்—மறை தந்துளான்.* 12

பன்னும் நீதிகள் பல் பல கூறி, 'மற்று
உன்னுடைத் தமரோடு, உயர் கீர்த்தியோய்!
மன்னி வாழ்க! என்று உரைத்து, அடல் மாருதி-
தன்னை நோக்கினன், தாயர் சொல் நோக்கினான்.* 13

சீதைக்குச் செய்தி சொல்லி வர, இராமன் அனுமனை அனுப்புதல்

இப் புறத்து, இன எய்துறு காலையில்,
அப் புறத்ததை உன்னி, அனுமனை,
'துப்பு உறச் செய்ய வாய் மணித் தோகைபால்
செப்புறு, இப்படிப் போய்' எனச் செப்பினான். 14

அனுமன் சீதையிடம் செய்தி கூறுதல்

வணங்கி, அந்தம் இல் மாருதி, மா மலர்
அணங்கு சேர் கடி காவு சென்று அண்மினான்;
உணங்கு கொம்புக்கு உயிர் வரு நீர் என,
சுணங்கு தோய் முலையாட்கு இவை சொல்லுவான்: 15

'ஏழை, சோபனம்! ஏந்திழை, சோபனம்!
வாழி, சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி ஆன அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது, சோபனம்!' 16

பாடினான் திரு நாமங்கள்; பல் முறை
கூடு சாரியின் குப்புற்றுக் கூத்து நின்று
ஆடி, அங்கை இரண்டும் அலங்குறச்
சூடி நின்றனன், குன்று அன்ன தோளினான். 17

11. குரக்கு வீரன் - சுக்கிரீவன்; இளங் கோளரி - இளவரசனாகிய வலிய சிங்கம் போன்ற அங்கதன்; 16. சோபனம் - மங்கலம்; 17. குப்புறுதல் - குதித்தல்.

'தலை கிடந்தன, தாரணி தாங்கிய
மலை கிடந்தனபோல்; மணித் தோள் எனும்
அலை கிடந்தன; ஆழி கிடந்தென,
நிலை கிடந்தது, உடல் நிலத்தே' என்றான். 18

'அண்ணல் ஆணையின், வீடணனும் மறக்
கண் இலாதவன் காதல் தொடர்தலால்,
பெண் அலாது, பிழைத்துளதாகும் என்று
எண்ணல் ஆவது ஓர் பேர் இலதால்' என்றான். 19

ஒரு கலைத் தனி ஒண் மதி நாளொடும்
வரு கலைக்குள் வளர்வது மானுறப்
பொரு கலைக் குலம் பூத்தது போன்றனள்—
பருகல் உற்ற அமுது பயந்த நாள். 20

ஆம்பல் வாயும் முகமும் அலர்ந்திட,
தேம்பும் நுண் இடை நோவ, திரள் முலை
ஏம்பல் ஆசைக்கு இரட்டி வந்து எய்தினாள்—
பாம்பு கான்ற பனி மதிப் பான்மையாள். 21

புந்தி ஓங்கும் உவகைப் பொருமலோ,
உந்தி ஓங்கும் ஒளி வளைத் தோள்கொலோ,
சிந்தி ஓடு கலையுடைத் தேர்கொலோ—
முந்தி ஓங்கின யாவை—முலைகொலோ? 22

குனித்த, கோலப் புருவங்கள்; கொம்மை வேர்
பனித்த, கொங்கை; மழலைப் பணிமொழி
நுனித்தது ஒன்று, நுவல்வது ஒன்று, ஆயினாள்;—
கனித்த இன் களி கள்ளினின் காட்டுமோ? 23

அனையள் ஆகி, அனுமனை நோக்கினாள்,
இனையது இன்னது இயம்புவது என்பது ஓர்
நினைவு இலாது நெடிது இருந்தாள்—நெடு
மனையின் மாசு துடைத்த மனத்தினாள். 24

'"யாது இதற்கு ஒன்று இயம்புவல்?" என்பது
மீது உயர்ந்த உவகையின் விம்மலோ?
தூது பொய்க்கும் என்றோ?' எனச் சொல்லினான்,
நீதி வித்தகன்; நங்கை நிகழ்த்தினாள்: 25

21. ஏம்பல் ஆசை - மகிழ்ச்சிவழிப்பட்ட விருப்பம்; 22. பொருமல் - பூரிப்பு; உந்துதல் - (உடல் பூரிப்பால்) தள்ளுதல்; 23. கொம்மை - பருமை; வேர் - வியர்வை; இன் களி - இனிய மகிழ்ச்சி.

சீதை மறுமொழி

'மேக்கு நீங்கிய வெள்ள உவகையால்
ஏக்கமுற்று, ''ஒன்று இயம்புவது யாது?'' என
நோக்கி நோக்கி, அரிது என நொந்துளேன்;
பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ? 26

'முன்னை, ''நீக்குவென் மொய் சிறை'' என்ற நீ
பின்னை நீக்கி, உவகையும் பேசினை;
''என்ன பேற்றினை ஈகுவது?'' என்பதை
உன்னி நோக்கி, உரை மறந்து ஓவினேன். 27

'உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தனி
விலை இலாமையும் உன்னினென்; மேல் அவை
நிலை இலாமை நினைந்தனென்; நின்னை என்
தலையினால் தொழவும் தகும்—தன்மையோய்! 28

'ஆதலான், ஒன்று உதவுதல் ஆற்றலேன்;
''யாது செய்வது?'' என்று எண்ணி இருந்தனென்;
வேத நல் மணி வேகடம் செய்தன்ன
தூத! என் இனிச் செய் திறம்? சொல்' என்றாள். 29

அனுமன் விருப்பும் சீதையின் மறுப்பும்

'எனக்கு அளிக்கும் வரம், எம்பிராட்டி! நின்
மனக் களிக்கு மற்று உன்னை அம் மானவன்-
தனக்கு அளிக்கும் பணியினும் தக்கதோ?—
புனக் களிக் குல மா மயில் போன்றுளாய்!' 30

என உரைத்து, 'திரிசடையாள், எம் மோய்!
மனவினில் சுடர் மா முக மாட்சியாள்-
தனை ஒழித்து, இவ் அரக்கியர் தங்களை
வினையினில் சுட வேண்டுவென், யான்' என்றான்.* 31

'உரை அலா உரை உன்னை உரைத்து, உராய்
விரைய ஓடி, ''விழுங்குவம்'' என்றுளார்
வரை செய் மேனியை வள் உகிரால் பிளந்து,
இரை செய்வேன், மறலிக்கு, இனி' என்னுமால்.* 32

26. மேக்கு நீங்கிய - தனக்கு மேலானது இல்லாத; ஏக்கமுறுதல் - திகைப் படைதல்; 27. ஓவினேன் - செயலற்றிருந்தேன்; 29. வேத மணி - துளையிட்டு அணிவதற்குரிய மணி; வேதம் - துளையிடுகை, வடசொல்; வேகடம் செய்தல் - சாணை பிடித்துத் தூய்மை செய்தல்; 30. மானவன் - மனுவின் வழியில் தோன் றியவன்; 31. மனவு - மணி; மா - அழகு; வினையினின் - ஊழ்வினையை ஒத்து.

'குடல் குறைத்து, குருதி குடித்து, இவர்
உடல் முருக்கியிட்டு உண்குவேன்' என்றலும்,
அடல் அரக்கியர், 'அன்னே! நின் பாதமே
விடலம்; மெய்ச் சரண்' என்று விளம்பலும்,* 33

அன்னே, 'அஞ்சன்மின், அஞ்சன்மின்! நீர்' என,
மன்னும் மாருதி மா முகம் நோக்கி, 'வேறு
என்ன தீமை இவர் இழைத்தார், அவன்
சொன்ன சொல்லினது அல்லது?—துய்மையோய்!* 34

'யான் இழைத்த வினையினின் இவ் இடர்-
தான் அடுத்தது, தாயினும் அன்பினோய்!
கூனியின் கொடியார் அலரே, இவர்!
போன அப் பொருள் போற்றலே, புந்தியோய்!* 35

'எனக்கு நீ அருள், இவ் வரம்; தீவினை-
தனக்கு வாழ்விடம் ஆய சழக்கியர்
மனக்கு நோய் செயல்!' என்றனள்—மா மதி-
தனக்கு மா மறுத் தந்த முகத்தினள்.* 36

இராமன், வீடணனை நோக்கி, 'தேவியைச் சீரொடும் தா' எனல்

என்ற போதின், இறைஞ்சினன், 'எம்பிரான்-
தன் துணைப் பெருந் தேவி தயா' என
நின்ற காலே, நெடியவன், 'வீடண!
சென்று தா, நம தேவியை, சீரொடும்.'* 37

என்னும் காலே, இருளும் வெயிலும் கார்
மின்னும் காலே இயற்கைய வீடணன்,
'உன்னும் காலேக் கொணர்தி' என்று ஓத, அப்
பொன்னின் கால் தளிர் சூடினன், போந்துளான். 38

'கோலம் புனைந்து வருக' என வீடணன் கூறல்

'வேண்டிற்று முடிந்தது அன்றே; வேதியர் தேவன் நின்னைக்
காண்டற்கு விரும்புகின்றான்; உம்பரும் காண வந்தார்;
''பூண் தக்க கோலம் வல்லே புனைந்தனே, வருத்தம் போக்கி,
ஈண்டுக் கொண்டு அணைதி'' என்றான்; எழுந்தருள், இறைவி!' என்றான்.

36. செயல் - செய்யற்க; 38. பொன் - திருமகளின் கூறுபாடாகிய சீதை.

சீதை, இங்கு இருந்த தன்மையில் வருதலே தக்கது எனல்

'யான் இவண் இருந்த தன்மை, இமையவர் குழுவும், எங்கள்
கோனும், அம் முனிவர்தங்கள் கூட்டமும், குலத்துக்கு ஏற்ற
வான் உயர் கற்பின் மாதர் ஈட்டமும், காண்டல், மாட்சி;
மேல் நிலை கோலம் கோடல் விழுமியது அன்று—வீர!' 40

வீடணன் வற்புறுத்தல்

என்றனள், இறைவி; கேட்ட இராக்கதர்க்கு இறைவன், 'நீலக்
குன்று அன தோளினுன் தன் பணியினின் குறிப்பு இது' என்ருன்;
'நன்று' என நங்கை நேர்ந்தாள், நாயகக் கோலம் கொள்ள;
சென்றனர், வான நாட்டுத் திலோத்தமை முதலோர், சேர. 41

வான மாதர்கள் சீதைக்குக் கோலம் புனைதல்

மேனகை, அரம்பை, மற்றை உருப்பசி, வேறும் உள்ள
வானக நாட்டு மாதர் யாரும், மஞ்சனத்துக்கு ஏற்ற
நான நெய் ஊட்டப் பட்ட நவை இல கலவை தாங்கி,
போனகம் துறந்த தையல் மருங்குற நெருங்கிப் புக்கார். 42

காணியைப் பெண்மைக்கு எல்லாம், கற்பினுக்கு அணியை, பொற்பின்
ஆணியை, அமிழ்தின் வந்த அமிழ்தினை, அறத்தின் தாயை,
சேண் உயர் மறையை எல்லாம் முறை செய்த செல்வன் என்ன,
வேணியை, அரம்பை, மெல்ல, விரல் முறை சுகிர்ந்து விட்டாள்.

பாகு அடர்ந்து அமுது பில்கும் பவள வாய்த் தரளப் பத்தி
சேகு அற விளக்கி, நானம் தீட்டி, மண் சேர்ந்த காசை
வேகடம் செய்யுமாபோல், மஞ்சன விதியின், வேதத்து
ஓகை மங்கலங்கள் பாடி, ஆட்டினர், உம்பர் மாதர். 44

உரு விளை பவள வல்லி பால் நுரை உண்டதென்ன
மரு விளை கலவை ஊட்டி, குங்குமம் முலையின் ஆட்டி,
கருவிளை மலரின் காட்சிக் காசு அறு தூசு, காமன்
திரு விளை அல்குற்கு ஏற்ப மேகலை தழுவச் சேர்த்தார். 45

42. நான நெய் - கத்தூரி, புனுகு; போனகம் - உணவு; 43. செல்வன் - திருமால், வியாத முனிவன் எனலும் ஆம்; வேணி - சடைப்பட்ட கூந்தல்; 44. ஓகை மங்கலம் - உவகையினை விளைக்கும் மங்கல வாழ்த்துப் பாடல்கள்; 45. உரு - நிறம், ஈண்டுச் செந்நிறம்; மரு - மணம்.

சந்திரன் தேவிமாரின் தகை உறு தரளப் பைம் பூண்,
இந்திரன் தேவிக்கு ஏற்ப, இயைவன பூட்டி, யாணர்ச்
சிந்துரப் பவளச் செவ் வாய்த் தேம் பசும் பாகு தீற்றி,
மந்திரத்து அயினி நீரால் வலஞ்செய்து, காப்பும் இட்டார். 46

சீதையை இராமனிடம் வீடணன் அழைத்து வருதல்

மண்டல மதியின் நாப்பண் மான் இருந்தென்ன, மானம்
கொண்டனர் ஏற்றி, வான மடந்தையர் தொடர்ந்து கூட,
உண்டை வானரரும் ஒள் வாள் அரக்கரும் புறம் சூழ்ந்து ஓட,
அண்டர் நாயகன்பால், அண்ணல் வீடணன் அருளின் சென்ருன்.

இப் புறத்து இமையவர், முனிவர் ஏழையர்,
துப்பு உறச் சிவந்த வாய் விஞ்சைத் தோகையர்,
முப் புறத்து உலகினும் எண்ணில் முற்றினேர்,
ஒப்புறக் குவிந்தனர், ஓகை கூறுவார். 48

அருங் குலக் கற்பினுக்கு அணியை அண்மினுர்,
மருங்கு பின் முன் செல வழி இன்று என்னலாய்,
நெருங்கினர்; நெருங்குழி, நிருதர் ஓச்சலால்,
கருங் கடல் முழக்கு எனப் பிறந்த, கம்பலே. 49

அவ் வழி, இராமனும் அலர்ந்த தாமரைச்
செவ்வி வாள் முகம்கொடு செயிர்த்து நோக்குரு,
'இவ் ஒலி யாவது?' என்று இயம்ப, இற்று எனு,
கவ்வை இல் முனிவரர் கழறினுர்அரோ. 50

முனிவரர் வாசகம் கேட்புருதமுன்,
நனி இதழ் துடித்திட நகைத்து, வீடணன்-
தனே எழ நோக்கி, 'நீ, தகாத செய்தியோ,
புனித நூல் கற்று உணர் புந்தியோய்?' என்ருன். 51

'கடுந் திறல் அமர்க் களம் காணும் ஆசையால்,
நெடுந் திசைத் தேவரும் நின்ற யாவரும்
அடைந்தனர்; உவகையின் அடைகின்ருர்களேக்
கடிந்திட யார் சொனுர்?—கருது நூல் வலாய்! 52

46. சந்திரன் தேவிமார் - இருபத்தேழு விண்மீன்கள்; அயினி நீர் - ஆலத்தி நீர்; 49. ஓச்சுதல் - அடித்தற்குக் கையினே மேலே உயர்த்தல்; 50. கவ்வை - பழிச்சொல்.

'பரசுடைக் கடவுள், நேமிப் பண்ணவன், பதுமத்து—அண்ணல்,
அரசுடைத் தெரிவைமாரை இன்றியே அமைவது உண்டோ?
கரை செயற்கு அரிய தேவர், ஏனையோர், கலந்து காண்பான்
விரசுறின், விலக்குவாரோ? வேறு உளார்க்கு என்கொல்?—வீர!

'ஆதலான், அரக்கர் கோவே! அடுப்பது அன்று உனக்கும், இன்னே
சாதுகை மாந்தர்தம்மைத் தடுப்பது' என்று அருளி, செங்கண்
வேதநாயகன்தான் நிற்ப, வெய்து உயிர்த்து, அலக்கண் எய்தி,
கோது இலா மனனும் மெய்யும் குலைந்தனன் குணங்கள் தூயோன்.

இராமன் கோலம் கண்ட சீதை அனுமன் உதவியைப் பாராட்டல்

அருந்ததி அனைய நங்கை அமர்க் களம் அணுகி, ஆடல்
பருந்தொடு கழுகும் பேயும் பசிப் பிணி தீருமாறு
விருந்திடு வில்லின் செல்வன் விழா அணி விரும்பி நோக்கி,
கருந் தடங் கண்ணும் நெஞ்சும் களித்திட, இனைய சொன்னாள்:

'சீலமும் காட்டி, என் கணவன் சேவகக்
கோலமும் காட்டி, என் குலமும் காட்டி, இஞ்
ஞாலமும் காட்டிய கவிக்கு நாள் அருக்
காலமும் காட்டும்கொல், என் கற்பு?' என்றாள். 56

'எச்சில், என் உடல்; உயிர் ஏகிற்றே; இனி
நச்சு இலை' என்பது ஓர் நவைஇலாள் எதிர்,
பச்சிலை வண்ணமும் பவள வாயும் ஆய்க்
கைச் சிலை ஏந்தி நின்றானைக் கண்ணுற்றாள். 57

சீதை இராமனைத் தொழுது, ஏக்கம் நீங்குதல்

மானமீது அரம்பையர் சூழ வந்துளாள்,
போன பேர் உயிரினைக் கண்ட பொய் உடல்
தான் அது கவர்வுறும் தன்மைத்து ஆம் எனல்
ஆனனம் காட்டுற, அவனி எய்தினாள். 58

பிறப்பினும் துணைவனை, பிறவிப் பேர் இடர்
துறப்பினும் துணைவனை, தொழுது, 'நான் இனி
மறப்பினும் நன்று; இனி மாறு வேறு வீழ்ந்து
இறப்பினும் நன்று' என ஏக்கம் நீங்கினாள். 59

53. பரசு - மழுப்படை; 54. சாதுகை மாந்தர் - நல்லொழுக்கமுடையவர்கள்; 56. சேவகக் கோலம் - வீரத் தோற்றம்; குலம் - குலத்தின் பெருமை; 57. எச்சில் - தூய்மை இழந்தது; நச்சு - விருப்பம்; 58. ஆனனம் - முகம்.

இராமன் சீதையை அமைய நோக்குதல்

கற்பினுக்கு அரசினை, பெண்மைக் காப்பினை,
பொற்பினுக்கு அழகினை, புகழின் வாழ்க்கையை,
தற் பிரிந்து அருள் புரி தருமம் போலியை,
அற்பின் அத் தலைவனும் அமைய நோக்கினன். 60

சீதையை இராமன் கடிந்து உரைத்தல்

சுணங்கு உறு துணை முலை முன்றில் தூங்கிய
அணங்கு உறு நெடுங் கணீர் ஆறு வார்வுற,
வணங்கு இயல் மயிலினை, கற்பின் வாழ்வினை,
பணம் கிளர் அரவு என எழுந்து, பார்ப்புறு, 61

'ஊண் திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட,
மாண்டிலை; முறை திறம்பு அரக்கன் மா நகர்
ஆண்டு உறைந்து அடங்கினை; அச்சம் தீர்ந்து, இவண்
மீண்டது என் நினைவு? ''எனை விரும்பும்'' என்பதோ? 62

'உன்னை மீட்பான்பொருட்டு, உவரி தூர்த்து, ஒளிர்
மின்னை மீட்டுறு படை அரக்கர் வேர்அற,
பின்னை மீட்டு, உறு பகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான்பொருட்டு, இலங்கை எய்தினேன். 63

'மருந்தினும் இனிய மன்னுயிரின் வான் தசை
அருந்தினையே; நறவு அமைய உண்டியே;
இருந்தனையே? இனி எமக்கும் ஏற்பன
விருந்து உளவோ? உரை—வெறுமை நீங்கினாய்! 64

'கலத்தினின் பிறந்த மா மணியின் காந்துறு
நலத்தின் நிற் பிறந்தன நடந்த; நன்மை சால்
குலத்தினில் பிறந்திலை; கோள் இல் கீடம்போல்
நிலத்தினில் பிறந்தமை நிரப்பினாய்அரோ. 65

'பெண்மையும், பெருமையும், பிறப்பும், கற்பு எனும்
திண்மையும், ஒழுக்கமும், தெளிவும், சீர்மையும்,
உண்மையும், நீ எனும் ஒருத்தி தோன்றலால்,
வண்மை இல் மன்னவன் புகழின், மாய்ந்தவால். 66

60. பொற்பு - அழகு; போலி - போன்றவள்; அற்பு - அன்பு; 62. ஊண் - உணவு; 63. மின்னை மீட்டுறு படை - மின்னலைப் புறங்கொடுத்து மீளச் செய்யும் ஆயுதங்கள்; 65. கோள் - கொள்கை; நல்லுணர்வு; கீடம் - புழு; நிரம்புதல் - நிறைவு செய்தல், உறுதிப்படுத்தல்.

'அடைப்பர், ஐம் புலன்களை; ஒழுக்கம் ஆணியாச்
சடைப் பரம் புனைந்து, ஒளிர் தகையின் மா தவம்
படைப்பர்; வந்து இடை ஒரு பழி வந்தால், அது
துடைப்பர், தம் உயிரொடும்—குலத்தின் தோகைமார். 67

'யாது யான் இயம்புவது? உணர்வை ஈடு அறச்
சேதியாநின்றது, உன் ஒழுக்கச் செய்தியால்;
சாதியால்; அன்று எனின், தக்கது ஓர் நெறி
போதியால்' என்றனன்—புலவர் புந்தியான். 68

முனிவரும், அமரரும், மற்றும் முற்றிய
நினைவு அரு மகளிரும், நிருதர் என்று உளார்
எனைவரும், வானரத்து எவரும், வேறு உளார்
அனைவரும், வாய் திறந்து, அரற்றினர்அரோ. 69

இராமனின் சுடுமொழி கேட்ட சீதையின் துயர நிலை

கண் இணை உதிரமும், புனலும் கான்று உக,
மண்ணினை நோக்கிய மலரின் வைகுவாள்,
புண்ணினைக் கோல் உறுத்தனைய பொம்மலால்
உள் நினைப்பு ஓவி நின்று, உயிர்ப்பு வீங்கினள். 70

பருந்து அடர் சுரத்திடை, பருகு நீர் நசை
வருந்து அருந் துயரினல் மாள லுற்ற மான்,
இருந் தடம் கண்டு, அதின் எய்துருவகைப்
பெருந் தடை உற்றெனப் பேதுற்றாள்அரோ. 71

உற்று நின்று, உலகினை நோக்கி, ஒடு அரி
முற்றுறு நெடுங் கண் நீர் ஆலி மொய்த்து உக,
'இற்றது போலும், யான் இருந்து பெற்ற பேறு;
உற்றதால் இன்று அவம்!' என்று என்று ஓதுவாள்; 72

'மாருதி வந்து, எனைக் கண்டு, ''வள்ளல் நீ
சாருதி ஈண்டு'' எனச் சமையச் சொல்லினன்;
யாரினும் மேன்மையான் இசைத்தது இல்லையோ,
சோரும் என் நிலை? அவன் தூதும் அல்லனே? 73

68. சாதியால் - சாதி, சாவாய், ஆல் அசை; போதியால் - போதி, போவாய், ஆல் அசை; 70. கோல் - அம்பு; பொம்மல் - மிகுதி, ஈண்டுத் துயர மிகுதி; உள் நினைப்பு - உள்ளத்தின் நினைவாகிய உணர்வு; 72. அரி - செவ்வரி.

'எத் தவம், எந் நலம், என்ன கற்பு, நான்
இத்தனை காலமும் உழந்த ஈது எலாம்
பித்து எனல் ஆய், அவம் பிழைத்தது ஆம் அன்றே,
உத்தம! நீ மனத்து உணர்ந்திலாமையால். 74

'பார்க்கு எலாம் பத்தினி; பதுமத்தானுக்கும்
பேர்க்கல் ஆம் சிந்தையள் அல்லள், பேதையேன்;
ஆர்க்கு எலாம் கண்ணவன், "அன்று" என்றால், அது
தீர்க்கல் ஆம் தகையது தெய்வம் தேறுமோ? 75

'பங்கயத்து ஒருவனும், விடையின் பாகனும்,
சங்கு கைத் தாங்கிய தருமமூர்த்தியும்,
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்,
மங்கையர் மன நிலை உணர வல்லரோ? 76

'ஆதலின், புறத்து இனி யாருக்காக என்
கோது அறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன்?
சாதலின் சிறந்தது ஒன்று இல்லை; தக்கதே,
வேத! நின் பணி; அது விதியும்' என்றனள். 77

சீதை தான் வேண்டியபடி இலக்குவன் அமைத்த தீயை அணுகுதல்

இளையவன்தனை அழைத்து, 'இடுதி, தீ' என,
வளை ஒலி முன் கையாள் வாயின் கூறினள்;
உளைவுறு மனத்தவன் உலகம் யாவுக்கும்
களைகணைத் தொழ, அவன் கண்ணின் கூறினன். 78

ஏங்கிய பொருமலின் இழி கண்ணீரினன்,
வாங்கிய உயிரினன் அனைய மைந்தனும்,
ஆங்கு எரி விதி முறை அமைவித்தான்; அதன்
பாங்குற நடந்தனள், பதுமப் போதினாள். 79

தீயிடை, அருகுறச் சென்று, தேவர்க்கும்
தாய் தனிக் குறுகலும், தரிக்கிலாமையால்,
வாய் திறந்து அரற்றின—மறைகள் நான்கொடும்,
ஒய்வு இல் நல் அறமும், மற்று உயிர்கள் யாவையும். 80

74. அவம் பிழைத்தது - பயனின்றி வறிதே கழிந்தது; 75. ஆர்க்கு எலாம் - உலகத்தவர் எல்லோருக்கும்; 79. பொருமல் - விம்முதல்.

வலம்வரும் அளவையில் மறுகி, வான் முதல்
உலகமும் உயிர்களும் ஓலமிட்டன;
அலம்வரல் உற்றன; அலறி, 'ஐய! இச்
சலம்இது தக்கிலது' என்னச் சாற்றின. 81

இந்திரன் தேவியர் முதல ஏழையர்,
அந்தர வானின்நின்று அரற்றுகின்றவர்,
செந் தளிர்க் கைகளால் சேயரிப் பெருஞ்
சுந்தரக் கண்களை எற்றித் துள்ளினர். 82

நடுங்கினர், நான்முகன் முதல நாயகர்;
படம் குறைந்தது, படி சுமந்த பாம்பு; வாய்
விடம் பரந்துளது என, வெதும்பிற்றால் உலகு;
இடம் திரிந்தன, சுடர்; கடல்கள் ஏங்கின. 83

சீதை தீயிடைப் புகுதல்

கனத்தினால் கடந்த பூண் முலைய கைவளை,
'மனத்தினால், வாக்கினால், மறு உற்றேன்எனின்,
சினத்தினால் சுடுதியால், தீச் செல்வா!' என்றாள்;
புனத் துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினாள். 84

நீந்த அரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்த தன் கோயிலே எய்துவாள் எனப்
பாய்ந்தனள்; பாய்தலும், பாலின் பஞ்சு எனத்
தீய்ந்தது அவ் எரி, அவள் கற்பின் தீயினால். 85

சீதை எரியால் வாட்டமுறாது விளங்குதல்

அழுந்தின நங்கையை அங்கையால் சுமந்து
எழுந்தனன்—அங்கி, வெந்து எரியும் மேனியான்,
தொழும் கரத் துணையினன், சுருதி ஞானத்தின்
கொழுந்தினைப் பூசலிட்டு அரற்றும் கொள்கையான். 86

ஊடின சீற்றத்தால் உதித்த வேர்களும்
வாடிய இல்லையால்; உணர்த்துமாறு உண்டோ?
பாடிய வண்டொடும், பனித்த தேனொடும்,
சூடின மலர்கள் நீர் தோய்த்த போன்றவால். 87

81. சலம் - கோபம்; 84. கனத்தினால் கடந்த - நிறையினால் மிக்குள்ள; 85. பாலின் பஞ்சு - பால் போல வெண்ணிறமுடைய பஞ்சு; 86. சுருதி ஞானத்தின் கொழுந்து - வேதங்கள் உணர்த்தும் தத்துவ ஞானத்தின் கொழுந்தாகிய இராமன்; 87. வேர் - வியர்வை.

திரிந்தன உலகமும் செவ்வை நின்றன;
பரிந்தவர் உயிர் எலாம் பயம் தவிர்ந்தன;
அருந்ததி முதலிய மகளிர் ஆடுதல்
புரிந்தனர், நாணமும் பொறையும் நீங்கினார். 88

அக்கினிதேவன் முறையீடும், இராமன் வினாவும்

'கனிந்து உயர் கற்பு எனும் கடவுள்-தீயினால்,
நினைந்திலை, என் வலி நீக்கினாய்' என,
அநிந்தனை அங்கி, 'நீ அயர்வு இல் என்னையும்
முனிந்தனை ஆம்' என முறையிட்டான்அரோ. 89

இன்னது ஓர் காலையில், இராமன், 'யாரை நீ?
என்னை நீ இயம்பியது, எரியுள் தோன்றி? இப்
புன்மை சால் ஒருத்தியைச் சுடாது போற்றினாய்;
அன்னது ஆர் சொல்ல? ஈது அறைதியால்' என்றான். 90

அக்கினிதேவன் மறுமொழி

'அங்கி, யான்; என்னை இவ் அன்னை கற்பு எனும்
பொங்கு வெந் தீச் சுடப் பொறுக்கிலாமையால்,
இங்கு அணைந்தேன்; உறும் இயற்கை நோக்கியும்,
சங்கியாநிற்றியோ, எவர்க்கும் சான்றுளாய்? 91

'வேட்பதும், மங்கையர் விலங்கினார்எனின்
கேட்பதும், பல் பொருட்கு ஐயம் கேடு அற
மீட்பதும், என்வயின் என்னும் மெய்ப்பொருள்—
வாள்-பெருந் தோளினாய்!—மறைகள் சொல்லுமால். 92

'ஐயுறு பொருள்களை ஆசு இல் மாசு ஒரீஇக்
கையுறு நெல்லி அம் கனியின் காட்டும் என்
மெய்யுறு கட்டுரை கேட்டும், மீட்டியோ?—
பொய் உறு மாருதி உரையும் போற்றலாய்! 93

'தேவரும் முனிவரும், திரிவ நிற்பவும்,
மூவகை உலகமும், கண்கள் மோதி நின்று,
''ஆ!'' எனல் கேட்கிலை; அறத்தை நீக்கி, வேறு
ஏவம் என்று ஒரு பொருள் யாண்டுக் கொண்டியோ? 94

89. அநிந்தனை அங்கி - பழிப்பில்லாத தீக் கடவுள்; 91. சங்கியாநிற்றல் - ஐயுற்று நிற்றல், 92. கேட்பது - (சான்றாக வைத்து) உறுதிமொழியைக் கேட்பது; 94. ஏவம் - பாவம்.

'பெய்யுமே மழை? புவி பிளப்பது அன்றியே
செய்யுமே, பொறை? அறம் நெறியில் செல்லுமே?
உய்யுமே உலகு, இவள் உணர்வு சீறினால்?
வய்யுமேல், மலர்மிசை அயனும் மாயுமே.' 95

சீதையை இராமன் ஏற்றுக் கொள்ளல்

பாடு உறு பல் மொழி இனைய பன்னி நின்று,
ஆடுறு தேவரோடு உலகம் ஆர்த்து எழ,
சூடு உறும் மேனிய அலரி, தோகையை
மாடு உறக் கொணர்ந்தனன்; வள்ளல் கூறுவான்: 96

'அழிப்பு இல சான்று நீ, உலகுக்கு; ஆதலால்,
இழிப்பு இல சொல்லி, நீ இவளை, "யாதும் ஓர்
பழிப்பு இலள்" என்றனை; பழியும் இன்று; இனிக்
கழிப்பிலள்' என்றனன்—கருணை உள்ளத்தான். 97

பிரமன், இராமனது உண்மை நிலை உணர்த்துதல்

உணர்த்துவாய் உண்மை ஒழிவு இன்று, காலம் வந்துளதால்,
புணர்த்தும் மாயையில் பொதுவுற நின்று, அவை உணரா
இணர்த் துழாய்த் தொங்கல் இராமற்கு' என்று இமையவர் இசைப்ப,
தணப்பு இல் தாமரைச் சதுமுகன் உரைசெயச் சமைந்தான்:

'மன்னர் தொல் குலத்து அவதரித்தனை; ஒரு மனிதன்
என்ன உன்னலை உன்னை, நீ; இராம! கேள், இதனை;
சொன்ன நான்மறைத் துணிவினில் துணிந்த மெய்த் துணிவு
நின் அலாது இல்லை; நின்னின் வேறு உளது இலை—நெடியோய்!

'பகுதி என்று உளது, யாதினும் பழையது, பயந்த
விகுதியால் வந்த விளைவு, மற்று அதற்குமேல் நின்ற
புகுதி, யாவர்க்கும் அரிய அப் புருடனும், நீ; இம்
மிகுதி உன் பெரு மாயையினால் வந்த வீக்கம். 100

95. வய்தல் -வைதல், சபித்தல்; 96. பாடு - பெருமை; அலரி - அக்கினி; மாடு - பக்கம்; 99. உன்னலை - எண்ணாதே; 100. பகுதி - பிரகிருதி, மூலப் பகுதி; விகுதி - விகிருதி, காரியங்களாகிய ஏனைய தத்துவங்கள்; புகுதி - தத்துவங்களின் இயல்புகளை உட்புகுந்து அழுந்தி உணரவல்ல நுண்ணுணர்வாகிய ஞானம்; புருடன் - புருடதத்துவம், சீவான்மா; மிகுதி - மிக்கு விரிந்து காணப்படும் பிரபஞ்சம்.

'முன்பு பின்பு இரு புடை எனும் குணிப்பு அரு முறைமைத்
தன் பெருந் தன்மை தான் தெரி மறைகளின் தலைகள்,
''மன் பெரும் பரமார்த்தம்'' என்று உரைக்கின்ற மாற்றம்,
அன்ப! நின்னை அல்லால், மற்று இங்கு யாரையும் அறையா. 101

'எனக்கும், எண் வகை ஒருவற்கும், இமையவர்க்கு இறைவன்-
தனக்கும், பல் பெரு முனிவர்க்கும், உயிருடன் தழீஇய
அனைத்தினுக்கும், நீயே பரம் என்பதை அறிந்தார்
வினைத் துவக்குடை வீட்ட அருந் தளைநின்று மீள்வார். 102

'என்னைத்தான் முதல் ஆகிய உருவங்கள் எவையும்
முன்னைத் தாய் தந்தை எனும் பெரு மாயையில் மூழ்கி,
தன்னைத் தான் அறியாமையின், சலிப்ப; அச் சலம் தீர்ந்து,
உன்னைத் தாதை என்று உணர்குவ, முத்தி வித்து, ஒழிந்த.

' ''ஐ-அஞ்சு ஆகிய தத்துவம் தெரிந்து அறிந்து, அவற்றின்
மெய் எஞ்சாவகை மேல் நின்ற நினக்குமேல் யாதும்
பொய் எஞ்சா இலது'' என்னும் ஈது அரு மறை புகலும்;
வய்யம் சான்று; இனி, சான்றுக்குச் சான்று இலை, வழக்கால்.

'அளவையால் அளந்து, "ஆம்", "அன்று", என்று அறிவுறும் அமைதி
உளவை யாவையும் உனக்கு இல்லை; உபநிடத்து உனது
களவை ஆய்ந்து உறத் தெளிந்திலது ஆயினும், கண்ணல்,
துளவை ஆய் முடியாய்! ''உளை நீ'' எனத் துணியும். 105

'கரணம் என்று உள உன்னை வந்து அறிவு காணுமே,
அரணம் அல்லவர்க்கு இவை கடந்து அகல்வு அரிது ஆக,
மரணம் தோற்றம் என்று இவற்றிடை மயங்குப; அவர்க்கு உன்
சரணம் அல்லது ஓர் சரண் இல்லை, அன்னவை தவிர்ப்பான்.

'தோற்றம் என்பது ஒன்று உனக்கு இல்லை; நின்கணே தோற்றும்,
ஆற்றல் சால் முதல் பகுதி; மற்று அதனுள் ஆம், பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்கள்; அவை சென்று, கடைக்கால்
வீற்று வீற்று உற்று வீவுறும்; நீ என்றும் விளியாய். 107

101. குணிப்பு - அளவு; மறைகளின் தலைகள் - உபநிடதங்கள்; பரமார்த்தம் - மேலான பரம்பொருள்; 102. எண் வகை ஒருவன் - எண் வகை வடிவங்களையுடைய சிவன்; 104. பொய் எஞ்சா இலது - பொய்யாகாமல் (மெய்யாக) இல்லை; 105. துளவை - திருத்துழாய்; 106. அரணம் - அரண், ஈண்டுப் பெருந்தடை; சரணம் - திருவடி; சரண் - புகலிடம்.

'மின்னைக் காட்டுதல்போல் வந்து விளியும் இவ் உலகம்-
தன்னைக் காட்டவும், தருமத்தை நாட்டவும், தனியே
என்னைக் காட்டுதி; இறுதியும் காட்டுதி; எனக்கும்
உன்னைக் காட்டலை; ஒளிக்கின்றும் இலை, மறை உரையால்.

'என் உருக் கொடு இவ் உலகினை ஈனுதி; இடையே
உன் உருக் கொடு புகுந்து நின்று ஓம்புதி; உமைகோன்-
தன் உருக் கொடு துடைத்தி; மற்று இது தனி அருக்கன்
முன் உருக் கொடு பகல் செயும் தரத்தது—முதலோய்! 109

'ஓங்காரப் பொருள் தேருவோர்தாம் உனை உணர்வோர்;
ஓங்காரப் பொருள் என்று உணர்ந்து, இரு வினை உகுப்போர்;
"ஓங்காரப் பொருள் ஆம்", "அன்று" என்று ஊழி சென்றாலும்,
ஓங்காரப் பொருளே பொருள் என்கலா உரவோர். 110

'இனையது ஆகலின், எம்மை மூன்று உலகையும் ஈன்று, இம்
மனையின் மாட்சியை வளர்த்த எம் மோயினை வாளா
முனையல்' என்று அது முடித்தனன்—முந்து நீர் முளைத்த
சினையின் பந்தமும் பகுதிகள் அனைத்தையும் செய்தோன். 111

சிவபெருமான் இராமனுக்கு உண்மையை உணர்த்துதல்

என்னும் மாத்திரத்து, ஏறு அமர் கடவுளும் இசைத்தான்:
'உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால், உரவோய்!
முன்னை ஆதி ஆம் மூர்த்தி நீ; மூவகை உலகின்
அன்னை சீதை ஆம் மாது, நின் மார்பின் வந்து அமைந்தாள்.

'துறக்கும் தன்மையள் அல்லளால், தொல்லை எவ் உலகும்
பிறக்கும் பொன் வயிற்று அன்னை; இப் பெய்வளை பிழைக்கின்,
இறக்கும் பல் உயிர்; இராமன்! நீ இவள் திறத்து இகழ்ச்சி
மறக்கும் தன்மையது' என்றனன்—வரதர்க்கும் வரதன். 113

இராமனைத் தெருட்டுமாறு துறக்கத்திலுள்ள தயரதனுக்குச் சிவபெருமான் பணித்தல்

பின்னும் நோக்கினன், பெருந் தகைப் புதல்வனைப் பிரிந்த
இன்னலால் உயிர் துறந்து, இருந் துறக்கத்துள் இருந்த
மன்னவற் சென்று கண்டு, 'நின் மைந்தனைத் தெருட்டி,
முன்னை வன் துயர் நீக்குதி, மொய்ம்பினோய்!' என்றான். 114

108. காட்டுதி - படைத்தாய்; 109. சூரியன் தனது தோற்றத்தால் பகலை உண்டாக்கி, மேலெழுந்து உச்சமடைந்து கழிதலால் பகலை நடத்தி, தனது மறைவால் பகலை முடித்தல் போலத் திருமால் மும்மூர்த்திகளின் உள்ளே கரந்து நின்று முத்தொழிலையும் செய்கின்றான் என்க. 111. எம் மோய் - எம்முடைய தாய்; மோய் - தாய்; சினையின் பந்தம் - தேகங்களின் சம்பந்தம், அண்டப் பரப்பு எனலும் ஆம்; பகுதிகள் - யோனி பேதங்கள், உடம்பு முதலிய கூறுகள் எனலும் ஆம்; 113. வரதர் - வரந்தரும் கடவுளர்.

பூதலம் வந்த தயரதன் – இராமன் உரையாடல்

ஆதியான் பணி அருள் பெற்ற அரசருக்கு அரசன்
காதல் மைந்தனைக் காணிய உவந்தது ஓர் கருத்தால்,
பூதலத்திடைப் புக்கனன்; புகுதலும், பொரு இல்
வேத வேந்தனும் அவன் மலர்த் தாள்மிசை விழுந்தான். 115

வீழ்ந்த மைந்தனை எடுத்து, தன் விலங்கல் ஆகத்தின்
ஆழ்ந்து அழுந்திடத் தழுவி, தன் கண்ணின் நீர் ஆட்டி,
வாழ்ந்த சிந்தையின் மனங்களும் களிப்புற, மன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட, நின்று இவை புகன்றான்: 116

'அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்
இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது, என்னைக்
கொன்று நீங்கலது, இப்பொழுது அகன்றது, உன் குலப் பூண்
மன்றல் ஆகம் ஆம் காந்த மா மணி இன்று வாங்க. 117

'மைந்தரைப் பெற்று வான் உயர் தோற்றத்து மலர்ந்தார்,
சுந்தரப் பெருந் தோளினாய்! என் துணைத் தாளின்
பைந் துகள்களும் ஒக்கிலர் ஆம் எனப் படைத்தாய்;
உய்ந்தவர்க்கு அருந் துறக்கமும் புகழும் பெற்று உயர்ந்தேன்.

'பண்டு நான் தொழும் தேவரும் முனிவரும் பாராய்,
கண்டு கண்டு எனைக் கைத்தலம் குவிக்கின்ற காட்சி;
புண்டரீகத்துப் புராதனன்தன்னொடும் பொருந்தி
அண்டமூலத்து ஓர் ஆசனத்து இருத்தினை, அழக!' 119

வணங்கிய சீதைக்குத் தயரதன் தேறுதல் கூறுதல்

என்று, மைந்தனை எடுத்து எடுத்து, இறுகுறத் தழுவி,
குன்று போன்று உள தோளினன், சீதையைக் குறுக,
தன் துணைக் கழல் வணங்கலும், கருணையால் தழுவி
நின்று, மற்று இவை நிகழ்த்தினன், நிகழ்த்த அரும் புகழோன்:

' "நங்கை! மற்று நின் கற்பினை உலகுக்கு நாட்ட,
அங்கி புக்கிடு" என்று உணர்த்திய அது மனத்து அடையேல்;
சங்கை உற்றவர் பெறுவதும் உண்டு; அது சரதம்;
கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல். 121

116. மனங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள்; 117. குலப் பூண் - நலம் சிறந்த அணிகள்; மன்றல் - மணம்; 121. சரதம் - சத்தியம்.

'"பொன்னைத் தீயிடைப் பெய்தல் அப் பொன்னுடைத் தூய்மை—
தன்னைக் காட்டுதற்கு" என்பது மனக் கொளல் தகுதி;
உன்னை காட்டினன், "கற்பினுக்கு அரசி" என்று, "உலகில்,
பின்னைக் காட்டுவது அரியது" என்று எண்ணி, இப் பெரியோன்.

'பெண் பிறந்தவர், அருந்ததியே முதல் பெருமைப்
பண்பு இறந்தவர்க்கு அருங் கலம் ஆகிய பாவாய்!
மண் பிறந்தகம் உனக்கு; நீ வான்நின்றும் வந்தாய்;
எண் பிறந்த நின் குணங்களுக்கு இனி இழுக்கு இலையால்'.

தயரதன் இலக்குவனைத் தழுவிப் பாராட்டுதல்

என்னச் சொல்லி, அவ் ஏந்திழை திரு மனத்து யாதும்
உன்னச் செய்வது ஓர் முனிவு இன்மை மனம் கொளா உவந்தான்;
பின்னைச் செம்மல் அவ் இளவலை, உள் அன்பு பிணிப்ப,
தன்னைத் தான் எனத் தழுவினன், கண்கள் நீர் ததும்ப. 124

கண்ணின் நீர்ப் பெருந் தாரை மற்று அவன் சடைக் கற்றை
மண்ணின் நீத்தம் ஒத்து இழிதர, தழீஇ நின்று, 'மைந்த!
எண் இல் நீக்க அரும் பிறவியும் என் நெஞ்சின் இறந்த
புண்ணும் நீக்கினை, நுமையனைத் தொடர்ந்து உடன் போந்தாய்.

'புரந்தரன் பெரும் பகைஞனைப் போர் வென்ற உன்தன்
பரந்து உயர்ந்த தோள் ஆற்றலே தேவரும் பலரும்
நிரந்தரம் புகல்கின்றது; நீ இந்த உலகின்
அரந்தை வெம் பகை துடைத்து, அறம் நிறுத்தினை—ஐய!'

தயரதன், வரம் கேள் எனலும், இராமன் கேட்ட வரமும்

என்று, பின்னரும், இராமனை, 'யான் உனக்கு ஈவது
ஒன்று கூறுதி, உயர் குணத்தோய்!' என,'உனை யான்
சென்று வானிடைக் கண்டு, இடர் தீர்வென் என்று இருந்தேன்;
இன்று காணப் பெற்றேன்; இனிப் பெறுவது என்?' என்றான்.

'ஆயினும், உனக்கு அமைந்தது ஒன்று உரை' என, அழகன்,
'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்,
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக!' எனத் தாழ்ந்தான்;
வாய் திறந்து எழுந்து ஆர்த்தன, உயிர் எலாம், வழுத்தி. 128

123. பண்பு இறந்தவர் - குணங்களால் மிக்கோர்; 124. முனிவு - வெறுப்பு; 125. நுமையன் - நின் அண்ணன், ஈண்டு இராமன்; 126. அரந்தை - துன்பம்; 128. தெய்வம் - கைகேயி; மகன் - பரதன்.

'வரத கேள்!' எனத் தயரதன் உரை செய்வான்: 'மறு இல்
பரதன் அன்னது பெறுக! தான் முடியினைப் பறித்து, இவ்
விரத வேடம் மற்று உதவிய பாவிமேல் விளிவு
சரதம் நீங்கலதாம்' என்றான், தழீஇய கை தளர. 129

கைகேயின்மேல் தயரதன் கொண்ட கோபம் தணிதல்

'ஊன் பிழைக்கிலா உயிர் நெடிது அளிக்கும் நீள் அரசை
வான் பிழைக்கு இது முதல் எனாது, ஆள்வுற மதித்து,
யான் பிழைத்தது அல்லால், என்னை ஈன்ற எம் பிராட்டி-
தான் பிழைத்தது உண்டோ?' என்றான், அவன் சலம் தவிர்ந்தான்.

எவ் வரங்களும் கடந்தவன் அப் பொருள் இசைப்ப,
'தெவ் வரம்பு அறு கானிடைச் செலுத்தினாட்கு ஈந்த
அவ் வரங்களும் இரண்டு; அவை ஆற்றினாற்கு ஈந்த
இவ் வரங்களும் இரண்டு' என்றார், தேவரும் இரங்கி. 131

வரம் இரண்டு அளித்து, அழகனை, இளவலை, மலர்மேல்
விரவு பொன்னினை, மண்ணிடை நிறுத்தி, விண்ணிடையே
உரவு மானம்மீது ஏகினன்—உம்பரும் உலகும்
பரவும் மெய்யினுக்கு உயிர் அளித்து, உறு புகழ் படைத்தோன்.

இராமன் தேவர்களிடம் வரம் வேண்டல்

கோட்டு வார் சிலைக் குரிசிலை அமரர்தம் குழாங்கள்
மீட்டும் நோக்குறா, 'வீர! நீ வேண்டுவ வரங்கள்
கேட்டியால், என, 'அரக்கர்கள் கிளர் பெருஞ் செருவில்
வீட்ட, மாண்டுள குரங்கு எலாம் எழுக!' என விளம்பி, 133

பின்னும் ஓர் வரம், 'வானரப் பெருங் கடல் பெயர்ந்து,
மன்னு பல் வனம், மால் வரைக் குலங்கள், மற்று இன்ன
துன் இடங்கள், காய் கனி கிழங்கோடு தேன் துற்ற,
இன் உண் நீர் உளவாக! என இயம்பிடுக' என்றான். 134

வரம் தரும் முதல், மழுவலான், முனிவரர், வானோர்,
புரந்தராதி, மற்று ஏனையோர், தனித் தனி புகழ்ந்து ஆங்கு,
'அரந்தை வெம் பிறப்பு அறுக்கும் நாயக! நினது அருளால்
குரங்கு இனம் பெறுக!' என்றனர், உள்ளமும் குளிர்ப்பார்.

129. விளிவு - கோபம்; சரதம் - நிச்சயம்; 130. முதல் - காரணம்; சலம் - வெகுளி; 133. கோட்டு வார் சிலை - வளைகின்ற நெடிய வில்; 134. துன் இடங்கள் - சேரத்தக்க இடங்கள்; 135. முதல் - முதல்வனாகிய பிரமதேவன்.

முந்தை நாள் முதல் கடை முறை அளவையும் முடிந்த
அந்த வானரம் அடங்கலும் எழுந்து, உடன் ஆர்த்து,
சிந்தையோடு கண் களிப்புற, செரு எலாம் நினையா,
வந்து தாமரைக் கண்ணனை வணங்கின, மகிழ்ந்து. 136

கும்பகன்னனோடு இந்திரசித்து, வெங் குலப் போர்
வெம்பு வெஞ் சினத்து இராவணன், முதலிய வீரர்
அம்பின் மாண்டுள வானரம் அடங்க வந்து ஆர்ப்ப,
உம்பர் யாவரும் இராமனைப் பார்த்து, இவை உரைத்தார்:

'இடை உவாவினில் சுவேலம் வந்து இறுத்து, எயில் இலங்கைப்
புடை அவாவுறச் சேனையை வளைப்பு உறப் போக்கி,
படை அவாவுறும் அரக்கர்தம் குலம் முற்றும் படுத்து,
கடை உவாவினில் இராவணன் தன்னையும் கட்டு, 138

' ''வஞ்சர் இல்லை இவ் அண்டத்தின்'' எனும்படி மடித்த
கஞ்ச நாள் மலர்க் கையினாய்! அன்னை சொல் கடவா,
அஞ்சொடு அஞ்சு நான்கு என்று எணும் ஆண்டு போய் முடிந்த;
பஞ்சமிப் பெயர் படைத்துள திதி இன்று பயந்த. 139

'இன்று சென்று, நீ பரதனை எய்திலை என்னின்,
பொன்றுமால் அவன் எரியிடை; அன்னது போக்க,
வென்றி வீர! நீ போதியால்' என்பது விளம்பா,
நின்ற தேவர்கள் நீங்கினார்; இராகவன் நினைந்தான். 140

இராமன் விரைந்து செல்ல விமானம் வேண்டல்

'ஆண்டு பத்தொடு நாலும் இன்றோடு அறும்ஆயின்,
மாண்டதாம் இனி என் குலம், பரதனே மாயின்;
ஈண்டுப் போக ஓர் ஊர்தி உண்டோ?' என, 'இன்றே
தூண்டு மானம் உண்டு' என்று, அடல் வீடணன் தொழுதான்.

வாங்கினான் இரு நிதியொடு தனதனில், வள்ளால்!
ஓங்குமால், வெள்ளம் ஏழு பஃது ஏறினும், ஒல்காது;
ஈங்கு உளார் எலாம் இவருவது; இவரின் நீ இனிது
பூங் குலா நகர் புகுதி, இஞ் ஞான்று' எனப் புகன்றான். 142

138. இடை உவா - தேய்பிறையாகிய பிற்பக்கத்தின் இடை (அட்டமி); கடை உவா - பிற்பக்கத்தின் கடைசி நாள் (அமாவாசை); 142. தனதன் - குபேரன்; ஒல்காது - தளராது; பூங் குலா நகர் - அழகு விளங்குகின்ற அயோத்தி நகர்.

'இயக்கர் வேந்தனுக்கு அரு மறைக் கிழவன் அன்று ஈந்த,
துயக்கு இலாதவர் மனம் எனத் தூயது, சுரர்கள்
வியக்க வான் செலும் புட்பக விமானம் உண்டு' என்றே
மயக்கு இலான் சொல, 'கொணருதி வல்லையின்' என்றான்.*

அண்டகோடிகள் அனந்தம் ஒத்து, ஆயிரம் அருக்கர்
விண்டது ஆம் என விசும்பிடைத் திசை எலாம் விளங்க,
கண்டை ஆயிர கோடிகள் மழை எனக் கலிப்ப,
கொண்டு அணைந்தனன் நொடியினின், அரக்கர்தம் கோமான்.*

இராமன், சீதை இலக்குவன் முதலியோருடன் விமானத்தில் ஏறித் துணைவர்க்கு விடைதரல்

'அனைய புட்பக விமானம் வந்து அவனியை அணுக,
இனிய சிந்தனை இராகவன் உவகையோடு, 'இனி நம்
வினையம் முற்றியது' என்று கொண்டு ஏறினன்; விண்ணோர்
புனை மலர் சொரிந்து ஆர்த்தனர், ஆசிகள் புகன்றே. 145

வணங்கு நுண் இடைத் திரிசடை வணங்க, வான் கற்பிற்கு
இணங்கர் இன்மையாள் நோக்கி, 'ஓர் இடர் இன்றி இலங்கைக்கு
அணங்குதான் என இருத்தி' என்று, ஐயன்மாட்டு அணைந்தாள்;
மணம் கொள் வேல் இளங் கோளரி மானம் மீப் படர்ந்தான்.*

அண்டம் உண்டவன் மணி அணி உதரம் ஒத்து, அனிலன்
சண்ட வேகமும் குறைதர, நினைவு எனும் தகைத்தாய்,
விண்தலம் திகழ் விமானப் புட்பகம் எனும் அதன்மேல்
கொண்ட கொண்டல், தன் துணைவரைப் பார்த்து, இவை குணித்தான்:*

வீடணன்தனை அன்புற நோக்குறா, விமலன்,
'தோடு அணைந்த தார் மவுலியாய்! சொல்வது, ஒன்று உளது; உன்
மாடு அணைந்தவர்க்கு இன்பமே வழங்கி, நீள் அரசின்,
நாடு அணைந்தவர் புகழ்ந்திட, வீற்றிரு நலத்தால்.* 148

'நீதி ஆறு எனத் தெரிவுறு நிலைமை பெற்று உடையாய்!
ஆதி நான்மறைக் கிழவன் நின் குலம் என அமைந்தாய்!
ஏதிலார் தொழும் இலங்கை மா நகரினுள், இனி நீ
போதியால்' எனப் புகன்றனன்—நான் மறை புகன்றான்.* 149

144. கண்டை - மணி; 146. இணங்கர் இன்மையாள் - ஒப்பு இல்லாதவள், சீதை; 149. நீதி ஆறு - நீதியின் நெறி; ஏதிலார் - பகைவர்.

'சுக்கிரீவ! நின் தோளுடை வன்மையால் தசம் தொகு
அக் கிரீவனைத் தடிந்து, வெம் படையினுல் அசைந்த
மிக்க வானரச் சேனையின் இளைப்பு அற மீண்டு, ஊர்
புக்கு, வாழ்க!' எனப் புகன்றனன்—ஈறு இலாப் புகழோன்.*

வாலி சேயினை, சாம்பனை, பனசனை, வயப் போர்
நீலன் ஆதிய நெடும் படைத் தலைவரை, நெடிய
காலின் வேலையைத் தாவி மீண்டு அருளிய கருணை
போலும் வீரனை, நோக்கி, மற்று இம் மொழி புகன்ருன்.* 151

துணைவர் முடிசூட்டு விழாக் காண அனுமதி வேண்டலும்
இராமன் இசைதலும்

ஐயன் இம் மொழி புகன்றிட, துணுக்கமோடு அவர்கள்,
மெய்யும் ஆவியும் குலைதர, விழிகள் நீர் ததும்ப,
செய்ய தாமரைத் தாள் இணை முடி உறச் சேர்த்தி,
'உய்கிலேம், நின்னை நீங்கின்' என்று இனையன உரைத்தார்.*

'பார மா மதில் அயோத்தியின் எய்தி, நின் பைம் பொன்
ஆர மா முடிக் கோலமும் செவ்வியும் அழகும்,
சோர்வு இலாது, யாம் காண்குறும் அளவையும் தொடர்ந்து
பேரவே அருள்' என்றனர்—உள் அன்பு பிணிப்பார்.* 153

அன்பினுல் அவர் மொழிந்த வாசகங்களும், அவர்கள்
துன்பம் எய்திய நடுக்கமும், நோக்கி, 'நீர் துளங்கல்;
முன்பு நான் நினைந்திருந்தது அப் பரிசு; நும் முயற்சி
பின்பு காணுமாறு உரைத்தது' என்று உரைத்தனன்—பெரியோன்.

ஐயன் வாசகம் கேட்டலும், அரி குலத்து அரசும்,
மொய் கொள் சேனையும், இலங்கையர் வேந்தனும், முதலோர்
வையம் ஆளுடை நாயகன் மலர்ச் சரண் வணங்கி,
மெய்யினேடு அருந் துறக்கம் உற்ருர் என வியந்தார்.* 155

யாவரும் புட்பகத்தின்மேல் ஏறுதல்

அனையது ஆகிய சேனையோடு அரசனை, அனிலன்
தனயன் ஆதியாம் படைப் பெருந் தலைவர்கள்தம்மை,
வனையும் வார் கழல் இலங்கையர் மன்னனை, 'வந்து இங்கு
இனிதின் ஏறுமின், விமானம்' என்று, இராகவன் இசைத்தான்.

150. தசம் தொகு - பத்தாகக் கூடிய; அக் கிரீவன் - அக் கழுத்தினையுடையவன், இராவணன்; தடிந்து - தடிந்தேன்; 153. பேர்தல் - மீண்டு செல்லுதல்; 156. அனிலன் - வாயுதேவன்.

சொன்ன வாசகம் பிற்பட, சூரியன் மகனும்,
மன்னு வீரரும், எழுபது வெள்ள வானரரும்,
கன்னி மா மதில் இலங்கை மன்னொடு கடற்படையும்,
துன்னினர், நெடும் புட்பகமிசை ஒரு சூழல்.* 157

பத்து நால் என அடுக்கிய உலகங்கள் பலவின்
மெத்து யோனிகள் ஏறினும் வெளியிடம் மிகுமால்;
முத்தர் ஆனவர் இதன் நிலை மொழிகுவது அல்லால்,
இத் தராதலத்து இயம்புதற்கு உரியவர் யாரே! 158

எழுபது வெள்ளத்தோரும், இரவி கான்முளையும், எண்ணின்
வழு இலா இலங்கை வேந்தும், வான் பெரும் படையும், சூழ,
தழுவு சீர் இளைய கோவும், சனகன் மா மயிலும், போற்ற,
விழுமிய குணத்து வீரன் விளங்கினன், விமானத்து உம்பர்.

அண்டமே போன்றது ஐயன் புட்பகம்; அண்டத்து உம்பர்,
எண் தரும் குணங்கள் இன்றி, முதல் இடை ஈறு இன்றி ஆகி,
பண்டை நான்மறைக்கும் எட்டாப் பரஞ்சுடர் பொலிவதே போல்,
புண்டரீகக் கண் வென்றிப் புரவலன் பொலிந்தான் மன்னோ?

தேனுடை அலங்கல் மௌலிச் செங் கதிர்ச் செல்வன் சேயும்,
மீனுடை அகழி வேலை இலங்கையர் வேந்தும், வெற்றித்
தானையும், பிறரும், மற்றைப் படைப் பெருந்தலைவர்தாமும்,
மானுட வடிவம் கொண்டார், வள்ளல்தன் வாய்மைதன்னால்.

வழிக் காட்சிகளைச் சீதைக்கு இராமன் காட்டுதல்

குட திசை மறைந்து, பின்னர்க் குண திசை உதயம் செய்வான்
வட திசை அயனம் உன்னி வருவதே கடுப்ப, மானம்
தடை ஒருசிறிது இன்று ஆகி, தாவி வான் படரும் வேலை,
படை அமை விழியாட்கு ஐயன் இனையன பகரலுற்றான்.* 162

வென்றி வீடணன் கொணர்ந்த புட்பக விமானம் தன்மேல்,
ஒன்றும் நல் சீதையோடும், உம்பரும் பிறரும் காண,
வென்று உயர் சேனையோடும், இராமனும் விரைவின் எய்தி,
தென் திசை இலங்கை ஆதி, தேவிக்குத் தெரியக் காட்டும்.*

'இலங்கையை வலஞ் செய்து ஏக' என நினைந்திடுமுன் விமானம்
வலம் கிளர் கீழை வாயில் வர, 'பிரகத்தன், நீலன்
நலம் கிளர் கையின் மாண்டது இவண்' என, நமன்தன் வாயில்
கலந்திட, 'ஈங்குக் கண்டாய், சுபாரிசற் கட்டது' என்றான்.*

158. வெளியிடம் - வெறுமையான இடப்பரப்பு; 162. அயனம் - வழி.

குடதிசை வாயில் ஏக, 'குன்று அரிந்தவனை வென்ற
விட நிகர் மேகநாதன் இளவலால் வீழ்ந்தது' என் முன்,
வட திசை வாயில் மேவ, 'இராவணன் மவுலி பத்தும்,
உடலமும் இழந்தது இங்கு' என்று உணர்த்தி வேறு உரைக்கலுற்றான்.*

சேதுவைக் காட்டி, அதன் தூய்மையைப் புகழ்தல்

'நன்னுதல்! நின்னை நீங்கி, நாள் பல கழிந்த பின்றை,
மன்னவன் இரவி மைந்தன், வான் துணையாக நட்ட
பின்னை, மாருதி வந்து, உன்னைப் பேதறுத்து, உனது பெற்றி
சொன்னபின், வானரேசர் தொகுத்தது இச் சேது கண்டாய்.

'மற்று இதன் தூய்மை எண்ணின், மலர் அயன்தனக்கும் எட்டா;
பொன் தொடித் தெரிவை! யான் என் புகலுகேன்! கேட்டி, அன்பால்
பெற்ற தாய் தந்தையோடு தேசிகற் பிழைத்து, சூழ்ந்த
சுற்றமும் கெடுத்துளோரும் எதிர்ந்திடின் சுரர்கள் ஆவார்.

'இந்திரற்கு அஞ்சி, மேல் நாள், இருங் கடல் புக்கு, நீங்காக்
கந்தர சயிலம், தன்னைக் கண்டவர் வினைகள் தீர்க்கும்
கந்தமாதனம் என்று ஓதும் கிரி, இவண் கிடப்ப கண்டாய்;
பைந்தொடி! அடைத்த சேது பாவனம் ஆயது' என்றான். 168

'கங்கையோடு, யமுனை, கோதாவரி, நருமதை, காவேரி,
பொங்கு நீர் நதிகள் யாவும், படிந்து அலால், புன்மை போகா;
சங்கு எறி தரங்க வேலை தட்ட இச் சேது என்னும்
இங்கு இதின் எதிர்ந்தோர் புன்மை யாவையும் நீங்கும்அன்றே.*

'நெற்றியின் அழலும் செங் கண் நீறு அணி கடவுள் நீடு
கற்றை அம் சடையில் மேவு கங்கையும், ''சேது ஆகப்
பெற்றிலம்'' என்று கொண்டு, பெருந் தவம் புரிகின்றாளால்;
மற்று இதன் தூய்மை எவ்வாறு உரைப்பது?—மலர்க்கண் வந்தாய்!'*

தெவ் அடும் சிலைக் கை வீரன் சேதுவின் பெருமை யாவும்,
வெவ் விடம் பொருது நீண்டு மிளிர் தரும் கருங் கண் செவ் வாய்,
நொவ் இடை, மயில் அனுட்கு நுவன்றுழி, 'வருணன் நோனுது
இவ் இடை வந்து கண்டாய், ''சரண்'' என இயம்பிற்று' என்றான்.

168. கந்தர சயிலம் - குகைகளுடன் பொருந்திய மலை; பாவனம் - தூய்மை; 169. தட்ட - தடுத்துக் கட்டப்பெற்ற.

'இது தமிழ் முனிவன் வைகும் இயல் தரு குன்றம்; முன் நாறு
அது வளர் மணிமால் ஓங்கல்; உப் புறத்து, உயர்ந்து தோன்றும்
அது திகழ் அனந்த வெற்பு' என்று அருள் தர, 'அனுமன் தோன்றிற்று
எது?' என, அணங்கை நோக்கி, இற்று என இராமன் சொன்னான்:

'வாலி என்று அளவு இல் ஆற்றல் வன்மையான், மகர நீர் சூழ்
வேலையைக் கடக்கப் பாயும் விறல் உடையவனை வீட்டி,
நூல் இயல் தரும நீதி நுனித்து அறம் குணித்த மேலோர்-
போல் இயல் தபனன் மைந்தன் உறைதரும் புரம் ஈது' என்றான்.

'கிட்கிந்தை இதுவேல், ஐய! கேட்டியால்: எனது பெண்மை
மட்கும்தான், ஆய வெள்ள மகளிர் இன்று ஆகி, வானோர்
உட்கும் போர்ச் சேனை சூழ, ஒருத்தியே அயோத்தி எய்தின்;
கள் கொந்து ஆர் குழலினாரை ஏற்றுதல் கடன்மைத்து' என்றாள்.

அம் மொழி இரவி மைந்தற்கு அண்ணல்தான் உரைப்ப, அன்னான்
மெய்ம்மை சேர் அனுமன் தன்னை நோக்கி, ''நீ விரைவின், வீர!
மைம் மலி குழலினாரை மரபினின் கொணர்தி' என்ன,
செம்மை சேர் உள்ளத்து அண்ணல் கொணர்ந்தனன், சென்று மன்னோ.

வரிசையின் வழாமை நோக்கி, மாருதி மாதர் வெள்ளம்
கரை செயல் அரிய வண்ணம் கொணர்ந்தனன், கணத்தின் முன்னம்;
விரை செறி குழலினார் தம் வேந்தனை வணங்கி, பெண்மைக்கு
அரசியை ஐயனோடும் அடி இணை தொழுது, நின்றார். 176

மங்கலம் முதலவாய மரபினின் கலப்பை யாவும்
அங்கு அவர் கொணர்ந்து, பெண்மைக்கு அரசியைத் தொழுது சூழ,
நங்கையும்உவந்து, 'வேறு ஓர் நவை இலை, இனி மற்று' என்றாள்;
பொங்கிய விமானம்தானும், மனம் என, எழுந்து போன. 177

போதா விசும்பில் திகழ் புட்பகம் போதலோடும்,
சூது ஆர் முலைத் தோகையை நோக்கி, 'முன் தோன்று சூழல்
கோதாவரி; மற்று அதன் மாடு உயர் குன்று நின்னை,
பேதாய்! பிரிவுத் துயர் பீழை பிணித்தது' என்றான். 178

172. நாறுதல் - தோன்றுதல்; மால் ஓங்கல் - திருமாலிருஞ்சோலை மலை; அனந்தவெற்பு - திருவேங்கட மலை; 173. தபனன் - சூரியன்; 174. மட்குதல் - பொலிவழிந்து சிதைத்தல்; ஆய வெள்ள மகளிர் - தோழியர் கூட்டமாகிய மகளிர்; கள் கொந்து - தேன் நிறைந்த பூங்கொத்து.

'சிரத்து வாச வண்டு அலம்பிடு தெரிவை! கேள்: இது நீள்
தரத்து உவாசவர், வேள்வியர், தண்டகம்: அதுதான்
வரத்து வாசவன் வணங்குறு சித்திரகூடம்;
பரத்துவாசவன் உறைவிடம் இது' எனப் பகர்ந்தான். 179

மின்னை நோக்கி, அவ் வீரன் ஈது இயம்பிடும் வேலை,
தன்னை நேர் இலா முனிவரன் உணர்ந்து, தன் அகத்தின்,
'என்னை ஆளுடை நாயகன் எய்தினன்' என்னு,
துன்னு மா தவர் சூழ் தர, எதிர்கொள்வான், தொடர்ந்தான்.

பரத்துவாசன் ஆச்சிரமத்தில் இராமன் இறங்குதல்

ஆதபத்திரம், குண்டிகை, ஒரு கையின் அணைத்து,
போதம் முற்றிய தண்டு ஒரு கையினில் பொலிய,
மா தவப் பயன் உருவு கொண்டு எதிர் வருமாபோல்,
நீதி வித்தகன் நடந்தமை நோக்கினன், நெடியோன். 181

எண் பக, தினை அளவையும் கருணையோடு இசைந்த
நட்பு அகத்து இலா அரக்கரை நருக்கி, மா மேரு
விட்பு அகத்து உறை கோள் அரி எனப் பொலி வீரன்.
புட்பகத்தினை வதிகென நினைந்தனன், புவியில். 182

பரத்துவாசனது உபசரிப்பு

உன்னும் மாத்திரத்து, உலகினை எடுத்து உம்பர் ஓங்கும்
பொன்னின் நாடு வந்து இழிந்தெனப் புட்பகம் தாழ,
என்னை ஆளுடை நாயகன், வல்லையின் எதிர் போய்,
பன்னு மா மறைத் தபோதனன் தாள்மிசைப் பணிந்தான். 183

அடியின் வீழ்தலும் எடுத்து, நல் ஆசியோடு அணைத்து,
முடியை மோயினன் நின்றுழி, முளரி அம் கண்ணன்
சடில நீள் துகள் ஒழிதர, தனது கண் அருவி
நெடிய காதல் அம் கலசம்அது ஆட்டினன், நெடியோன். 184

கருகு வார் குழல் சனகியோடு இளவல் கை தொழுதே,
அருகு சார்தர, அருந் தவன் ஆசிகள் வழங்கி,
உருகு காதலின் ஒழுகு கண்ணீரினன், உவகை
பருகும் ஆர் அமிழ்து ஒத்து, உளம் களித்தனன், பரிவால். 185

179. உவாசவர் - உபாசகர்; மனத்தைப் பொறிவழிப் போகாது தடுத்து இறைவன்பால் செலுத்துதல்; வரத்து வாசன் - பெருமை பெற்ற தேவேந்திரன்; 181. ஆதபத்திரம் - குடை; 182. எண் - நெஞ்சம்; விட்பு - (மலையில் உள்ள) பிளப்பு; 184. சடிலம் - சடை; நீள் துகள் - மிக்க புழுதி; 185. கருகு குழல் - கறுத்த கூந்தல்.

வானரேசனும், வீடணக் குரிசிலும், மற்றை
ஏனை வீரரும், தொழும்தொறும் ஆசிகள் இயம்பி,
ஞான நாதனைத் திருவொடு நன் மனை கொணர்ந்தான்,
ஆன மாதவர் குழாத்தொடும் அரு மறை புகன்றே. 186

பன்னசாலையுள் புகுந்து, நீடு அருச்சனை பலவும்
சொன்ன நீதியின் புரிந்து, பின், சூரியன் மருமான்-
தன்னை நோக்கினன், பல் முறை கண்கள் நீர் ததும்ப,
பின் ஓர் வாசகம் உரைத்தனன், தபோதரின் பெரியோன்: 187

'முனிவர் வானவர் மூவுலகத்துளோர் யாரும்
துனி உழந்திடத் துயர் தரு கொடு மனத் தொழிலோர்
நனி மடிந்திட, அலகைகள் நாடகம் நடிப்ப,
குனியும் வார் சிலைக் குரிசிலே! என், இனிக் குணிப்பாம்? 188

'விராதனும், கரனும், மானும், விறல் கெழு கவந்தன்தானும்,
மராமரம் ஏழும், வாலி மார்பமும், மகர நீரும்,
இராவணன் உரமும், கும்பகருணனது ஏற்றம்தானும்,
அராவ அரும் பகழி ஒன்றால் அழித்து, உலகுஅளித்தாய்—ஐய!'

'சித்திர கூடம் தீர்ந்து, தென் திசைத் தீமை தீர்த்திட்டு
இத் திசை அடைந்து, எம் இல்லின் இறுத்தமை இறுதியாக,
வித்தக! மறந்திலேன் யான்; விருந்தினையாகி, எம்மோடு
இத்திறம் இருத்தி' என்றான், மறைகளின் இறுதிகண்டான்.*

'கரதலம் அதனின் நீடு கார்முகம் வளைய வாங்கி,
சரத வானவர்கள் துன்பம் தணித்து, உலகங்கள் தாங்கும்
மரகத மேனிச் செங்கண் வள்ளலே! வழுவா நீதிப்
பரதனது இயல்பும் இன்றே பணிக்குவென்; கேட்டி' என்றான்.*

'வெயர்த்த மேனியன்; விழி பொழி மழையன்; மூ வினையைச்
செயிர்த்த சிந்தையன்; தெருமரல் உழந்து உழந்து அழிவான்;
அயிர்த்து நோக்கினும், தென் திசை அன்றி, வேறு அறியான்;
பயத்த துன்பமே உருவு கொண்டென்னலாம் படியான்.* 192

இந்தியம் களைந்து, இருங் கனி காய் நுகர்ந்து, இவுளிப்
பந்தி வந்த புல் பாயலான்; பழம்பதி புகாது,
நந்தியம்பதி இருந்தனன், பரதன்—நின் நாமம்
அந்தியும், பகல் அதனினும், மறப்பிலன் ஆகி.'* 193

187. மருமான் - வழித்தோன்றல், ஈண்டு இராமன்; தபோதர் - தவச் செல்வர்; 188. குணித்தல் - எண்ணியுரைத்தல்; 192. மூ வினை - மூத்த வினை, முதிர்ந்த ஊழ்வினை; பயத்த துன்பம் - அச்சத்துடன் கூடிய துன்பம்.

என்று உரைத்து, 'அரக்கர் வேந்தன் இருபது என்று உரைக்கும் நீலக்
குன்று உரைத்தனைய தோளும், குலவரைக் குவடும் ஏய்க்கும்
என்று உரைத்தனைய மௌலித் தலை பத்தும், இறுத்த வீர!
நின்தனைப் பிரிந்தது உண்டே, யான்' என நிகழ்த்தினானால்.*

'மின்னை ஏய் உமையினானும், விரை மலர்த் தவிசினானும்,
நின்னையே புகழ்தற்கு ஒத்த நீதி மாதவத்தின் மிக்கோய்!
உன்னையே வணங்கி, உன்தன் அருள் சுமந்து உயர்ந்தேன்; மற்று இங்கு
என்னையே பொருவும் மைந்தன் யான் அலாது இல்லை' என்றான்.*

அவ் உரை புகலக் கேட்ட அறிவனும், அருளின் நோக்கி,
'வெவ் அரம் பொருத வேலோய்! விளம்புகேன்; கேட்டி,
எவ் வரம் எனினும்; தந்தேன்; இயம்புதி' எனலும், ஐயன்,
'கவ்வை இன்று ஆகி வென்றி கவிக்குலம் பெற்று வாழ்க.'*

' ''அரி இனம் சென்ற சென்ற அடவிகள் அனைத்தும் வானம்
சொரி தரு பருவம் போன்று, கிழங்கொடு கனி காய் துன்றி,
விரிபுனல் செழுந்தேன் மிச்கு, விளங்கு!'' என இயம்புக' என்றான்;
விரியும் மாதவனும், 'அஃதே ஆக!' எனப் புகன்றிட்டானால்.*

அருந்தவன், 'ஐய! நின்னோடு அனிக வெஞ் சேனைக்கு எல்லாம்
விருந்து இனிது அமைப்பென்' என்னா, விளங்கும் முத்தியின் நாப்பண்,
புரிந்து ஓர் ஆகுதியை ஈந்து, புறப்படும் அளவில், போகம்
திருந்திய வானநாடு சேர வந்து இறுத்தது அன்றே.* 198

அரைசரே ஆதியாக, அடியவர் அந்தமாக,
கரைசெயல் அரிய போகம் துய்க்குமா கண்டு, இராமற்கு
அரைசியல் வழாமை நோக்கி, அறுசுவை அமைக்கும் வேலை,
விரைசெறி கமலக்கண்ணன் அனுமனை விளித்துச் சொன்னான்:*

அனுமனைப் பரதன்பால் அனுப்புதல்

'இன்று நாம் பதி வருதுமுன், மாருதி! ஈண்டச்
சென்று, தீது இன்மை செப்பி, அத் தீமையும் விலக்கி
நின்ற காலையின் வருதும்' என்று ஏயினன், நெடியோன்;
'நன்று' எனா, அவன், மோதிரம் கைக் கொடு நடந்தான். 200

195. மின்னை ஏய் உமையினான் - மின்னலைப் போன்ற உமாதேவியைப் பாகத்திற்கொண்ட சிவபெருமான்; 196. கவ்வை - துன்பம்; 199. துய்க்குமா கண்டு - நுகருமாறு; அரைசியல் - அரசர்க்கு உரிய சிறப்பு முறையாகிய தகுதி; 200. ஈண்ட - விரைந்து.

தந்தை வேகமும், தனது நாயகன் தனிச் சிலையின்
முந்து சாயகக் கடுமையும், பிற்பட முடுகி,
சிந்தை பின் வரச் செல்பவன், குகற்கும் அச் சேயோன்
வந்த வாசகம் கூறி, மேல் வான் வழிப் போனான். 201

இன்று இசைக்கு இடம் ஆய இராகவன்
தென் திசைக் கருமச் செயல் செப்பினும்,
அன்று இசைக்கும் அரிய அயோத்தியில்
நின்று இசைத்துள தன்மை நிகழ்த்துவாம்: 202

நந்தியம்பதியில் பரதன் இருந்த நிலை

நந்தியம்பதியின்தலை, நாள்தொறும்
சந்தி இன்றி நிரந்தரம், தம்முனார்
பந்தி அம் கழல் பாதம் அருச்சியா,
இந்தியங்களை வென்றிருந்தான்அரோ. 203

துன்பு உருக்கவும், சுற்றி உருக்க ஒணா
என்பு உருக்கும் தகைமையது இட்டது ஆய்,
முன்பு உருக் கொண்டு ஒரு வழி முற்றுரு
அன்பு உருக் கொண்டது ஆம் எனல் ஆகுவான்; 204

நினைந்தவும் தடம் கண் இணை நீர் வர,
இனைத்த தண்டலை நாட்டு இருந்தேயும், அக்
கனைத்த கந்தமும் காயும் கனிகளும்
வனத்த அல்ல அருந்தல் இல் வாழ்க்கையான்; 205

நோக்கின் தென் திசை அல்லது நோக்குறான்;
ஏக்குற்று, ஏக்குற்று, 'இரவி குலத்து உளான்
வாக்கில் பொய்யான்; வரும், வரும்' என்று, உயிர்
போக்கிப் போக்கி, உழக்கும் பொருமலான்; 206

உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன்,
எண்ணும் கீர்த்தி இராமன், திரு முடி
மண்ணும் நீர்க்கு வரம்பு கண்டால் அன்றி,
கண்ணின் நீர்க்கு ஓர் கரை எங்கும் காண்கிலான். 207

201. சாயகம் - அம்பு; 203. சந்தி - இடையீடு; 207. மண்ணும் நீர் - திருமஞ்சனம் ஆட்டும் நீர்.

சோதிடர், 'இராமன் வரவேண்டிய நாள் இன்று' எனல்

அனையன் ஆய பரதன், அலங்கலின்
புனையும் தம்முனார் பாதுகைப் பூசனை
நினையும் காலை, நினைத்தனனும்அரோ,
மனையின் வந்து அவன் எய்த மதித்த நாள். 208

'யாண்டு வந்து இங்கு இறுக்கும்?' என்று எண்ணினான்,
'மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டுக் கூய்த் தருக' என்ன, வந்து எய்தினார்,
'ஆண்தகைக்கு இன்று அவதி' என்றார்அரோ. 209

இராமன் வாராமையால் பரதன் அவலமுறுதல்

என்ற போதத்து, இராமன் வனத்திடைச்
சென்ற போதத்தது அவ் உரை, செல்வத்தை
வென்ற போதத்த வீரனும் வீழ்ந்தனன்,
கொன்ற போதத்து உயிர்ப்புக் குறைந்துளான். 210

மீட்டு எழுந்து, விரிந்த செந் தாமரைக்
காட்டை வென்று எழு கண் கலுழிப் புனல்
ஓட்ட, உள்ளம் உயிரினை ஊசல் நின்று
ஆட்டவும், அவலத்து அழிந்தான்அரோ. 211

'எனக்கு இயம்பிய நாளும், என் இன்னலும்,
தனைப் பயந்தவள் துன்பமும், தாங்கி, அவ்
வனத்து வைகல் செய்யான்; வந்து அடுத்தது ஓர்
வினைக் கொடும் பகை உண்டு' என விம்மினான். 212

'மூவகைத் திருமூர்த்தியர் ஆயினும்,
பூவகத்தில், விசும்பில், புறத்தினில்,
ஏவர் கிற்பர் எதிர் நிற்க, என்னுடைச்
சேவகற்கு?' என ஐயமும் தேறினான். 213

'என்னை, ''இன்னும் அரசியல் இச்சையன்
அன்னன் ஆகின், அவன் அது கொள்க'' என்று
உன்னினான்கொல், உறுவது நோக்கினான்?
இன்னதே நலன்' என்று இருந்தான்அரோ. 214

208. அலங்கலின் - மலர்மாலைகளால்; 210. போதத்த வீரன்-ஞானத்தையுடைய வீரன், பரதன்; 211. ஓட்ட - சொரிய; 212. பயந்தவள் - கோசலை; 213. பூவகம் - பூவுலகம்; புறம் - புறம்பான பாதலம்.

பரதன், சத்துருக்கனை அழைத்தல்

'அனைத்தில் அங்கு ஒன்றும் ஆயினும் ஆகுக;
வனத்து இருக்க; இவ் வையம் புகுதுக;
நினைத்து இருந்து நெடுந் துயர் மூழ்கிலேன்:
மனத்து மாசு என் உயிரொடும் வாங்குவேன்.' 215

என்னப் பன்னி, 'இளவலை என்னுழைத்
துன்னச் சொல்லுதிர்' என்னலும், தூதர் போய்,
'உன்னைக் கூயினன், உம்முன்' என முனம்,
முன்னர்ச் சென்றனன், மூவர்க்கும் பின் உளான். 216

பரதன் வரம் வேண்டுதல்

தொழுது நின்ற தன் தம்பியை, தோய் கணீர்
எழுது மார்பத்து இறுகத் தழுவினன்,
அழுது, 'வேண்டுவது உண்டு, ஐய! அவ் வரம்,
பழுது இல் வாய்மையினாய்! தரற்பாற்று' என்றான். 217

' "என்னது ஆகும்கொல், அவ் வரம்?" என்றியேல்,
சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்;
மின்னு தீயிடை யான் இனி வீடுவென்;
மன்னன் ஆதி; என் சொல்லை மறுது' என்றான். 218

கேட்ட சத்துருக்கன் வருந்தி, நொந்து உரைத்தல்

கேட்ட தோன்றல், கிளர் தடக் கைகளால்
தோட்ட தன் செவி பொத்தி, துணுக்குறா,
ஊட்டு நஞ்சம் உண்டான் ஒத்து உயங்கினன்;
நாட்டமும் மனமும் நடுங்கா நின்றான். 219

விழுந்து, மேக்கு உயர் விம்மலன், வெய்து உயிர்த்து,
எழுந்து, 'நான் உனக்கு என்ன பிழைத்துளேன்?
அழுந்து துன்பத்தினாய்!' என்று அரற்றினன்—
கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான். 220

'கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒரு தம்பி; "போனவன்
தான் வரும் அவதி போயிற்று" என்னா,
ஆனாத உயிர் விட என்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நானாது,
யானும் இவ் அரசு ஆள்வென்? என்னே,
இவ் அரசாட்சி! இனிதே அம்மா! 221

218. ஆதி - ஆவாய்; 221. அவதி - கால எல்லை.

' ''மன்னின் பின், வள நகரம் புக்கு
இருந்து வாழ்ந்தானே, பரதன் என்னும்
சொல் நிற்கும்'' என்று அஞ்சி, புறத்து
இருந்தும், அருந் தவமே தொடங்கினையே!
''என்னின் பின் இவன் உளனும்'' என்றே
உன் அடிமை உனக்கு இருந்ததேனும்,
உன்னின் பின் இருந்ததுவும், ஒரு
குடைக் கீழ் இருப்பதுவும் ஒக்கும்' என்றான். 222

பரதன் எரி அமைக்கப் பணித்தல்

மூத்து உருக் கொண்டு அமைந்தனைய முழு வெள்ளிக்
கொழு நிறத்து, முளரிச் செங் கண்,
சத்துருக்கன் அஃது உரைப்ப, 'அவன் இங்குத்
தாழ்க்கின்ற தன்மை, யான் இங்கு
ஒத்திருக்கலால் அன்றே? உலந்ததன்பின்,
இவ் உலகை உலைய ஒட்டான்;
அத் திருக்கும் கெடும்; உடனே புகுந்து ஆளும்
அரசு; எரி போய் அமைக்க' என்றான். 223

கோசலை விரைந்து வருதல்

அப்பொழுதின், இவ் உரை சென்று, அயோத்தியினின்
இசைத்தலுமே, அரியை ஈன்ற
ஒப்பு எழுத ஒண்ணாத கற்புடையாள்,
வயிறு புடைத்து, அலமந்து ஏங்கி,
'இப்பொழுதே உலகு இறக்கும், யாக்கையினை
முடித்து ஒழிந்தால், மகனே!' என்னா,
வெப்பு எழுதினால் அன்ன மெலிவுடையாள்
கடிது ஓடி, விலக்க வந்தாள். 224

மந்திரியர், தந்திரியர், வள நகரத்தவர்,
மறையோர், மற்றும் சுற்ற,
சுந்தரியர் எனைப் பலரும் கை தலையில்
பெய்து இரங்கித் தொடர்ந்து செல்ல,
இந்திரனே முதல் ஆய இமையவரும்
முனிவரரும் இறைஞ்சி ஏத்த,
அந்தர மங்கையர் வணங்க, அழுது அரற்றி,
பரதனை வந்து அடைந்தாள் அன்றே. 225

222. மன் - மன்னன் ஆதற்குரிய இராமன்; 223. திருக்கு - மாறுபாடு;
225. தந்திரியர் - சேனைத் தலைவர்

கோசலை பரதனைத் தடுத்துக் கூறுதல்

விரி அமைத்த நெடு வேணி புறத்து அசைந்து
வீழ்ந்து ஒசிய, மேனி தள்ள,
எரி அமைத்த மயானத்தை எய்துகின்ற
காதலனை இடையே வந்து,
சொரிவு அமைப்பது அரிது ஆய மழைக் கண்ணுள்
தொடருதலும், துணுக்கம் எய்தா,
பரிவு அமைந்த திரு மனத்தான் அடி தொழுதான்;
அவள் புகுந்து, பற்றிக் கொண்டாள். 226

'மன் இழைத்ததும், மைந்தன் இழைத்ததும்,
முன் இழைத்த விதியின் முயற்சியால்;
பின் இழைத்ததும், எண்ணில், அப் பெற்றியால்;
என் இழைத்தனை, என் மகனே?' என்றாள். 227

'நீ இது எண்ணினையேல், நெடு நாடு எரி
பாயும்; மன் அருஞ் சேனையும் பாயுமால்;
தாயர் எம் அளவு அன்று; தனி அறம்
தீயின் வீழும்; உலகும் திரியுமால். 228

'தரும நீதியின்தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம், கண்களால்;
அருமை ஒன்றும் உணர்ந்திலை; ஐய! நின்
பெருமை, ஊழி திரியினும், பேருமோ? 229

'எண் இல் கோடி இராமர்கள் என்னினும்,
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?
புண்ணியம் எனும் நின் உயிர் போயினால்,
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ? 230

'இன்று வந்திலனேஎனின், நாளையே
ஒன்றும் வந்து, உனை; உன்னி, உரைத்த சொல்
பின்றும் என்று உணரேல்; பிழைத்தான்எனின்,
பொன்றும் தன்மை புகுந்தது போய்' என்றாள். 231

226. விரி அமைத்த வேணி - விரித்தல் பொருந்திய சடை; 227. மன் இழைத்தது - தயரதன் இறந்தது; மைந்தன் இழைத்தது - இராமன் காடுபுகுந்தது; பின் இழைத்தது - பின்பு குறித்த காலத்தில் வாராதிருப்பது.

'ஒருவன் மாண்டனன் என்று கொண்டு, ஊழி வாழ்
பெரு நிலத்துப் பெறல் அரும் இன் உயிர்க்
கருவும் மாண்டு அறக் காணுதியோ?—கலைத்
தருமம் நீ அலது இல் எனும் தன்மையாய்! 232

' ''இறக்கையும், சிலர் ஏகலும், மோகத்தால்
பிறக்கையும், கடன்'' என்று, பின் பாசத்தை
மறக்கைகாண், மகனே! வலி ஆவது;
துறக்கைதானும்?' என்றாள்—மனம் தூய்மையாள். 233

கோசலையின் உரையைப் பரதன் மறுத்தல்

' ''மைந்தன் என்னை மறுத்து உரைத்தான்'' எனல்;
எந்தை மெய்ம்மையும், இக் குலச் செய்கையும்,
நைந்து போக, உயிர் நிலை நச்சிலேன்;
முந்து செய்த சபதம் முடிப்பனால். 234

'யானும், மெய்யினுக்கு இன் உயிர் ஈந்து போய்,
வானுள் எய்திய மன்னவன் மைந்தனால்;
கானுள் எய்திய காகுத்தற்கே கடன்?
ஏனையோர்க்கும் இது இழுக்கு இல் வழக்கு அன்றோ? 235

'தாய் சொல் கேட்டலும், தந்தை சொல் கேட்டலும்,
பாசத்து அன்பினைப் பற்று அற நீக்கலும்,
ஈசற்கே கடன்; யான் அஃது இழைக்கிலேன்;
மாசு அற்றேன், இது காட்டுவென், மாண்டு' என்றான். 236

அனுமன், பரதன் முன் தோன்றி எரியை அவித்தல்

என்று தீயினை எய்தி, இரைத்து எழுந்து
ஒன்று பூசலிடும் உலகோருடன்
நின்று பூசனை செய்கின்ற நேசற்கு,
குன்றுபோல் நெடு மாருதி கூடினான். 237

'அய்யன் வந்தனன்; ஆரியன் வந்தனன்;
மெய்யின் மெய் அன்ன நின் உயிர் வீடினால்,
உய்யுமே, அவன்?' என்று உரைத்து, உள் புகா,
கய்யினால் எரியைக் கரி ஆக்கினான். 238

232. கலை - நூல்கள்; 233. மோகம் - அவா, அவிச்சை; 235. இது - மேற்கொண்ட விரதத்தை நிறைவேற்றுவது; 236. ஈசன் - தலைவனாகிய இராமன்.

ஆக்கி, மற்று அவன் ஆய் மலர்த் தாள்களைத்
தாக்கத் தன் தலை தாழ்ந்து வணங்கி, கை
வாக்கின் கூடப் புதைத்து, 'ஒரு மாற்றம் நீ
தூக்கிக் கொள்ளத் தகும்' எனச் சொல்லினான். 239

'இன்னம் நாழிகை எண்-ஐந்து உளது, ஐய!
உன்னை முன்னம் வந்து எய்த உரைத்த நாள்;
இன்னது இல்லைஎனின், அடி நாயினேன்
முன்னம் வீழ்ந்து, இவ் எரியில் முடிவெனால். 240

'ஒன்றுதான் உளது; உன் அடியேன் சொலால்,
நின்று தாழ்த்தருள், நேமிச் சுடர் நெடுங்
குன்று தோன்றளவும்; இது குன்றுமேல்,
பொன்றும், நீயும், உலகமும்—பொய் இலாய்! 241

'எங்கள் நாயகற்கு இன் அமுது ஈகுவான்,
பங்கயத்துப் பரத்துவன் வேண்டலால்,
அங்கு வைகினன் அல்லது, தாழ்க்குமோ?
இங்கண், நல்லது ஒன்று இன்னமும் கேட்டியால்: 242

இராமனது மோதிரத்தை அடையாளம் காட்டல்

'அண்டர் நாதன் அருளி அளித்துளது
உண்டு ஓர் பேர் அடையாளம்; உனக்கு அது
கொண்டு வந்தனென்; கோது அறு சிந்தையாய்!
கண்டு கொண்டருள்வாய்' எனக் காட்டினான். 243

காட்டிய மோதிரம் கண்ணில் காண்டலும்,
மூட்டு தீ வல் விடம் உற்று முற்றுவார்க்கு
ஊட்டிய நல் மருந்து ஒத்ததாம்அரோ,
ஈட்டிய உலகுக்கும் இளைய வேந்தற்கும். 244

அழுகின்ற வாய் எலாம் ஆர்த்து எழுந்தன;
விழுகின்ற கண் எலாம் வெள்ளம் மாறின;
உழுகின்ற தலை எலாம் உயர்ந்து எழுந்தன;
தொழுகின்ற, கை எலாம், காலின் தோன்றலை. 245

239. வாக்கு - வாய்; தூக்கிக் கொள்ளுதல் - கேட்டல்.

மோதிரம் பெற்ற பரதன் நிலை

மோதிரம் வாங்கி, தன் முகத்தின்மேல் அணைத்து,
'ஆதரம் பெறுவதற்கு ஆக்கையோ?' என
ஓதினர் நாண் உற, ஓங்கினன்—தொழும்
தூதனை முறை முறை தொழுது துள்ளுவான். 246

ஆதி வெந் துயர் அலால், அருந்தல் இன்மையால்,
ஊது றப் பறப்பதாய் உலர்ந்த யாக்கை போய்,
'ஏதிலன் ஒருவன்கொல்' என்னல் ஆயது;
மாதிரம் வளர்ந்தன, வயிரத் தோள்களே. 247

அழும்; நகும்; அனுமனை ஆழிக் கைகளால்
தொழும்; எழும்; துள்ளும், வெங் களி துளக்கலால்;
விழும் அழிந்து; ஏங்கும்; போய் வீங்கும்; வேர்க்கும்; அக்
குழுவொடும் குனிக்கும்; தன் தடக் கை கொட்டுமால். 248

'ஆடுமின், ஆடுமின்!' என்னும்; 'ஐயன்பால்
ஓடுமின், ஓடுமின்!' என்னும்; 'ஓங்கு இசை
பாடுமின், பாடுமின்!' என்னும்; 'பாவிகாள்!
சூடுமின், சூடுமின், தூதன் தாள்!' எனும். 249

'வஞ்சனை இயற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவர், இனி' எனத் தோளைக் கொட்டுமால்;
குஞ்சித அடிகள் மண்டிலத்தில் கூட்டுற,
அஞ்சனக் குன்றின் நின்று ஆடும், பாடுமால். 250

வேதியர்தமைத் தொழும்; வேந்தரைத் தொழும்;
தாதியர்தமைத் தொழும்; தன்னைத் தான் தொழும்;
ஏதும் ஒன்று உணர்குறுது இருக்கும்; நிற்குமால்;—
காதல் என்றதுவும் ஓர் கள்ளின் தோன்றிற்றே! 251

பரதன் அனுமனைப் பாராட்டி, 'நீ யார்?' எனல்

அத் திறத்து ஆண்தகை, அனுமன்தன்னை, 'நீ
எத் திறத்தாய்? எமக்கு இயம்பி ஈதியால்!
முத் திறத்தவருளே ஒருவன்; மூர்த்தி வேறு
ஒத்திருந்தாய் என உணர்கின்றேன்' என்றான். 252

246. ஆதரம் - இராமனது அன்பு; 250. கைகையார் - கைகேயி; குஞ்சித அடிகள் - மடித்த அடிகள்; மண்டலம் - வட்ட வடிவம்.

'மறையவர் வடிவு கொண்டு, அணுக வந்தனே;
இறைவரின் ஒருத்தன் என்று எண்ணுகின்றனென்;
''துறை எனக்கு யாது எனச் சொல்லு, சொல்!'' என்றான்;
அறை கழல் அனுமனும் அறியக் கூறுவான்: 253

அனுமன் தன் வரலாறு கூறுதல்

'காற்றினுக்கு அரசன்பால் கவிக் குலத்தினுள்
நோற்றனள் உயிற்றின் வந்து உதித்து, நும் முனாற்கு
ஏற்றிலா அடித் தொழில் ஏவலாளனேன்;
மாற்றினென் உரு, ஒரு குரங்கு, மன்ன! யான். 254

'அடித் தொழில் நாயினேன் அருப்ப யாக்கையைக்
கடித் தடந் தாமரைக் கண்ணின் நோக்கு' என,
பிடித்த பொய் உருவினைப் பெயர்த்து நீக்கினான்,
முடித்தலம் வானவர் நோக்கின் முன்னுவான். 255

வெஞ் சிலை இருவரும், விரிஞ்சன் மைந்தனும்,
'எஞ்சல் இல் அதிசயம் இது' என்று எண்ணினார்;
துஞ்சிலது ஆயினும், சேனை துண்ணென
அஞ்சினது, அஞ்சனை சிறுவன் ஆக்கையால். 256

'ஈங்கு நின்று யாம் உனக்கு இசைத்த மாற்றம் அத்
தூங்கு இருங் குண்டலச் செவியில் சூழ்வர
ஓங்கல ஆதலின், உலப்பு இல் யாக்கையை
வாங்குதி, விரைந்து' என, மன்னன் வேண்டினான். 257

அனுமனுக்குப் பரதன் பரிசு கொடுத்தல்

சுருக்கிய உருவனாய்த் தொழுது, முன் நின்ற
அருக்கன் மாணாக்கனை ஐயன், அன்பினால்
பொருக்கென வனத்திடைப் புகுந்த தன்மையை
உருக்கி என் உணர்வுற உரைத்தியால்' என்றான். 258

சித்திரகூடத்தைத் தீர்ந்த பின், சிரம்
பத்து உடையவனுடன் விளைந்த பண்பும், தான்
இத் தலை அடைந்ததும், இறுதி ஆய, போர்
வித்தகத் தூதனும் விரிக்கும் சிந்தையான், 259

253. துறை - வரலாறு; 255. அருப்ப யாக்கை - சிறுமையுள்ள குரங்கு உடம்பு; அருப்பம் - அற்பம்; 256. இருவர் - பரத சத்துருக்கனர்; விரிஞ்சன் மைந்தன் - பிரமன் புதல்வனாகிய வசிட்டன்; 258. அருக்கன் மாணாக்கன் - சூரியன் மாணாக்கனாகிய அனுமன்.

'குன்று உறழ் வரி சிலைக் குரிசில், எம்பிரான்
தென் திசைச் சித்திரகூடம் தீர்ந்தபின்,
வன் திறல் விராதனை மடித்து, மா தவர்
துன்றிய தண்டக வனத்துள் துன்னினன். 260

'ஆங்கு உறை தபோதனர், ''அரக்கர்க்கு ஆற்றலேம்,
நீங்கினம் தவத் துறை, நீதியோய்!'' என,
'தீங்கு செய்பவர்களைச் செகுத்தல் திண்ணம்; நீர்
வாங்குமின் மனத் துயர், வாய்மையால்' என்றான். 261

'ஆறு நால் ஆண்டு அவண் வைகி, அப் புறத்து
ஈறு இலா முனிவரர் ஏய ஆணையால்
மாறு இலாத் தமிழ் முனி வனத்தை நண்ணினன்,
ஊறு இலா முனிவரன் உவந்து முன் வர. 262

'குடங்கையில் வாரிதி அனைத்தும் கொண்டவன்
தடங் கணான்தனை எதிர் தழுவி, சாபமும்,
கடுங் கணைப் புட்டிலும், கவசம்தானும், அத்
திடம் படு சுரிகையும், சேர ஈந்தனன். 263

'அப் புறத்து எருவையின் அரசைக் கண்ணுற,
துப்பு உறச் சிவந்த வாய்த் தோகைதன்னுடன்
மெய்ப் புகழ்த் தம்பியும் வீரன்தானும் போய்,
மைப் பொழில் துறு பஞ்சவடியின் வைகினர். 264

'பல் பகல் இறந்த பின்றை, பாதக அரக்கி தோன்றி,
மெல்லிய இடையினாளை வெகுண்டுழி, இளைய வீரன்
அல்கிய திருவைத் தேற்றி, அவளுடைச் செவியும் மூக்கும்
மல்கிய முலையும் கொய்தான்; மறித்து, அவள் கரற்குச் சொன்னாள்.

'கரனொடு திரிசிராவும், கடிய தூடணனும், காந்தி
எரியும் மூன்று அனலே ஒப்பார், எழுந்து, வெஞ் சேனையோடும்
விரவினர்; ஐயன் செங் கை வில்லினை நோக்கும் முன்பு, ஓர்
எரி தவழ் பஞ்சின் உக்கார்; அரக்கியும், இலங்கை புக்காள்.

'இருபது தடக் கையான்மாட்டு இசைத்தலும், எழுந்து பொங்கி,
ஒருபது திசையும் உட்க, வஞ்சக உழை ஒன்று ஏவி,
தரு பதம் சமைந்த முக்கோல் தாபத வடிவம் கொண்டு,
திருவினை நிலத்தொடு ஏந்தி, தென் திசை இலங்கை புக்கான்.

262. ஏய - ஏவிய; 263. குடங்கை - உள்ளங்கை; சுரிகை - வாள்;
265. அல்குதல் - உள்ளம் நெகிழ்தல்; 267. பதம் - பக்குவம்.

'போகின்ற காலை, ஏற்ற சடாயுவைப் பொருது வீட்டி,
வேகின்ற உள்ளத்தானை வெஞ் சிறை அதனின் வைத்தான்;
ஏகின்ற வஞ்ச மான் மாரீசன்-கொன்று, இளவலோடு
பாகின்ற கீர்த்தி அண்ணல் தந்தையைப் பரிவின் கண்டான்.

'அன்னவன்தனக்கு வேண்டும் அருங் கடன் முறையின் ஆற்றி,
நன்னுதல்தன்னைத் தேடித் தென் திசை நடக்கும் ஐயன்,
மன்னிய கவந்தன்தன்னை உயிரொடு சாபம் மாற்றி,
தன்னையே மறப்பிலாத சவரி பூசனையும் கொண்டான். 269

'ஆங்கு அவள்தனது சொல்லால், அருக்கன் மா மகனை அண்மி,
பாங்குற நட்டு, ''வாலி பருவரல் கெடுப்பென்'' என்னா,
ஓங்கிய மரமும் வாலி உரமும் ஊடுருவ எய்திட்டு,
ஆங்கு அவன்தனக்குச் செல்வம் அரசொடும் அருளின் ஈந்தான்.

'கால மா மாரி நீங்க, கவயனோடு இடபன், காந்து
நீலன், மா மயிந்தன், சாம்பன், சதவலி, பனசன், நீடு
வாலி மா மைந்தன் என்று இவ் வானரத் தலைவரோடு
கூல வான் சேனை சூழ, அடைந்தனன், எங்கள் கோமான்.

'எழுபது வெள்ளத்து உற்ற குரக்கினம் எழுந்து பொங்கி,
அழுவ நீர் வேலை என்ன அடைந்துழி, அருக்கன் மைந்தன்,
தழுவிய திசைகள்தோறும் தனித்தனி இரண்டு வெள்ளம்
பொழுது இறை தடாது மீளப் போக்கினன், திருவை நாடி.

'தென் திசை இரண்டு வெள்ளம் சேனையும், வாலி சேயும்
வன் திறல் சாம்பனோடு வாவினர் ஏவ, நாயேன்
குன்றிடை இலங்கை புக்கு, திருவினைக் குறித்து மீண்ட
பின்றை வந்து, அளக்கர் வேலைப் பெரும் படை இறுத்தது அன்றே.

அறிவினுக்கு அறிவு போல்வான் வீடணன், அலங்கல் தோளான்,
செறி புயத்து அரக்கன் தம்பி, ''திருவினை விடுதி; அன்றேல்,
இறுதி உற்றனை, நின் வாணாள்'' என அவன் உரைப்ப, சீறிக்
கறுவுற, பெயர்ந்து போந்து, கருணையான் சரணம் பூண்டான்.

'ஆங்கு அவற்கு அவயம் நல்கி, அரசொடு முடியும் ஈந்து,
பாங்கினால் வருணன்தன்னை அழைத்திட, பரிவு இலாமை
தாங்கினன் சிறிது போது, தாமரை நயனஞ் சேப்ப,
ஓங்கும் நீர் ஏழும் அன்னான் உடலமும் வெந்த அன்றே. 275

268. பாகின்ற கீர்த்தி - பரவுகின்ற புகழ்; 271. கூலம் - வால், குரங்கு.

'மற்று அவன் அவயம் என்ன, மலர்ச் சரண் அடைந்த வேலை,
வெற்றி வானரர்கள் பொங்கி, வெற்பினுல் வேலை தட்டல்
முற்றுற நன்கு இயற்றி, மொய் ஒளி இலங்கை புக்கு,
பற்றினர் சுற்றி ஆர்த்தார், வானவர் பயங்கள் தீர்ந்தார்.

'மலையினை எடுத்த தோளும், மதமலை திளைத்த மார்பும்,
தலை ஒரு பத்தும் சிந்தி, தம்பிதன் தோளும் தாளும்
கொலை தொழில் அரக்கர்ஆயோர் குலத்தொடும் தலத்து வீழ,
சிலையினை வளைவித்து, ஐயன் தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.

'இலக்குவன் பகழி ஒன்ருல் இந்திரசித்து என்று ஓதும்
விலக்க அரு வலத்தினுனும் இளைஞரும் கிளையும் வீழ்ந்தார்;
மலக்கம் உண்டு உழலும் தேவர் மலர் மழை தூவி ஆர்த்து, அன்று
உலக்குநர் குழுக்கள்தோறும் உடற் குறை ஆடல் கண்டார்.

'தேவரும் முனிவர்தாமும், சித்தரும் தெரிவைமாரும்,
மூவகை உலகுளோரும், முறை முறை தொழுது மொய்ப்ப,
பூவைபோல் நிறத்தினுனும், வீடணப் புலவர் கோமாற்கு
யாவையும் இயம்பி, "மாண்டோர்க்கு இயற்றுதி கடன்கள்" என்ருன்.

'நான்முகன், விடையை ஊரும் நாரி ஓர் பாகத்து அண்ணல்,
மான்முகன் முதலாய் உள்ள வானவர் தொழுது போற்ற,
ஊன்முகம் கெழுவு வேலாய்! உம்பர் நாயகியைச் சீறி,
தேன் முகம் மலரும் தாரான், அரி சொல, சீற்றம் தீர்ந்தான்.

'மெய்யினுக்கு உயிரை ஈந்த வேந்தர்கோன் விமானத்து எய்த,
அய்யனும் இளைய கோவும் அன்னமும் அடியில் வீழ,
கய்யினுல் பொருந்தப் புல்லி, கண்ணின் நீர்க் கலசம் ஆட்டி,
"செய்வரம் அருளுக" என்ருன்; திருவின் நாயகனும் கொண்டான்.

' "என்னை நன் கருணைதன்னுல் ஈன்று எடுத்து, இனிது பேணும்
அன்னையும் மகனும் முன்போல் ஆக" என, அருளின் ஈந்து,
மன்னவன் போய பின்றை, வானரம் வாழ்வு கூர,
பொன் நெடு நாட்டில் உள்ளார் வரம் பல வழங்கிப் போனுர்.

'வெள்ளம் ஓர் ஏழு பத்தும், விலங்க அரும் வீரர் ஆகி
உள்ளவர் அறுபத்து ஏழு கோடியும், ஒற்றை ஆழி
வள்ளல்தன் மகனும், உள்ளம் மகிழ்வுற விமானம் ஈந்தான்—
எள்ளல் இல்லாத கீர்த்தி வீடணன், இலங்கை வேந்தன். 283

278. உலக்குநர் - இறப்பவர்; 280. மான்முகன் - மானின் முகமுடைய மயன்; அரி - அங்கியங் கடவுள்; 283. ஒற்றை ஆழி வள்ளல்தன் மகன் - சூரியன் மகனுகிய சுக்கிரீவன்.

'ஆரியன் பின்னை நின்னை அன்பினால் நினைந்து, காதல்
சூரியன் மகனும், தொல்லைத் துணைவரும், இலங்கை வேந்தும்,
பேர் இயல் படையும், சூழ, பெண்ணினுக்கு அரசியோடும்
சீரிய விமானத்து ஏறி, பரத்துவன் இருக்கை சேர்ந்தான்.

'அன்பினால் என்னை, நின்பால் ஆழியும் காட்டி, ''ஆன்ற
துன்பு எலாம் துடைத்தி என்று'' துரந்தனன், தோன்றல்' என்று,
முன்பினால் இயன்ற எல்லாம் மொழிந்தனன்—முது நீர் தாவி
வன்பினால் இலங்கை முற்றும் எரிக்கு உணவாக வைத்தோன்.

பரதன், அனுமனது கையைப் பற்றிக்கொண்டு கங்கை சார்தல்

காலின் மா மதலை சொல்ல, பரதனும் கண்ணீர் சோர,
'வேலி மா மதில்கள் சூழும் இலங்கையில் வேட்டம் கொண்ட
நீல மா முகில் பின் போனான் ஒருவன்; நான் நின்று நைவேன்,
போலுமால்; இவைகள் கேட்பேன்; புகழ் உடைத்து, அடிமை மன்னோ.'

என்று அவன் இரங்கி ஏங்கி, இரு கணும் அருவி சோர,
வன் திறல் அனுமன் செங் கை வலக் கையால் பற்றி, காலின்
சென்றனன் இருளினூடு, செறி புனல் கங்கை சேர்ந்தான்,
குன்றினை வலஞ் செய் தேரோன் குண கடல் தோன்றும் முன்னர்.*

இராவணன் வேட்டம் போய் மீண்டு, எம்பிரான், அயோத்தி எய்தி,
தராதல மகளும் பூவின் தையலும் மகிழ, சூடும்
அராவு பொன் மௌலிக்கு எய்ந்த சிகாமணி, குணபால் அண்ணல்
விராவுற எடுத்தாலென்ன, வெய்யவன் உதயம் செய்தான்.*

காலை வந்து இறுத்த பின்னர், கடன் முறை கமலக்கண்ணன்
கோல நீள் கழல்கள் ஏத்தி, குரக்கினத்து அரசை நோக்கி,
'சாலவும் கலைகள் வல்லோய்! தவறு உண்டு போலும், வாய்மை;
மூலமே உணரின், உன்தன் மொழிக்கு எதிர் மொழியும் உண்டோ?

'எழுபது வெள்ளம் சேனை வானரர், இலங்கை வேந்தன்
முழு முதல் சேனை வெள்ளம், கணக்கு இல மொய்த்த என்றால்,
அழுவ நீர் வேலை சுற்றும் அரவம் இன்றாக வற்றோ?
விழுமிது, ''எம்பிரான் வந்தான்'' என்று உரைத்தது, வீர!' என்றான்.

285. ஆன்ற துன்பு - நிறைந்த துன்பம்; 288. குணபால் அண்ணல் - கிழக்குத் திசைக்குக் காவலனாகிய இந்திரன்.

'ஓசனை இரண்டு உண்டு அன்றே, பரத்துவன் உறையும் சோலை;
வீசு தெண் திரையிற்று ஆய வெள்ளம் ஓர் ஏழு பத்தும்
மூசிய பழுவம் இங்ஙன் கிடப்பதோ, முரற்றல் இன்றி?
பேசியது அமையும்; நம் கோன் எங்கு உளன், பெரும!' என்றான்.

பரதன் அஃது உரைத்தலோடும், பணிந்து மாருதியும், 'சீர் சால்
விரத மா தவத்து மிக்கோய்! விண்ணவர் தமையும் வேண்டி
வரதன் ஆண்டு அளிப்ப வந்த வரத்தினால், மலரும் தேனும்
சரதமே மாந்தி மாந்தித் துயின்றது, தானை எல்லாம். 292

'வானவர் கொடுக்க வந்த வரத்தினால், மதுபம் மூசும்
தேனொடு கிழங்கும் காயும் கனிகளும் பிறவும் சீர்த்துக்
கானகம் பொலிதலாலே, கவிக் குலம் அவற்றை மாந்தி,
ஆனனம் மலர்ந்தது இல்லையாகும்; நீ துயரல், எந்தாய்!

'இனி ஒரு கணத்தின், எம் கோன் எழுந்தருள் தன்மை ஈண்டுப்
பனி வரும் கண்ணின் நீயே பார்த்தி' என்று உரைத்தான்; இப்பால்,
முனிதனது இடத்து வந்த முளரி அம் கண்ணன், வண்ணக்
குனி சிலைக் குரிசில், செய்தது இற்று எனக் குணிக்கலுற்றாம்:

குகன், பரத்துவாசன் இருக்கை சேர்தல்

அருந்தவன் சுவைகள் ஆறோடு அமுது இனிது அளிப்ப, ஐயன்
கருந் தடங் கண்ணியோடும் களைகணும் துணைவரோடும்,
விருந்து இனிது அருந்தி, நின்ற வேலையின், வேலை போலும்
பெருந் தடந் தானையோடும், கிராதர் கோன் பெயர்ந்து வந்தான்.

தொழுதனன்; மனமும் கண்ணும் துளங்கினன்; சூழ ஓடி
அழுதனன்; கமலம் அன்ன அடித்தலம்அதனின் வீழ்ந்தான்;
தழுவினன் எடுத்து, மார்பில் தம்பியைத் தழுவுமாபோல்;
'வழு இலர் வலியர்அன்றே, மக்களும் மனையும்?' என்றான். 296

'அருள் உனது உளது, நாயேற்கு; அவர் எலாம் அரிய ஆய
பொருள் அலர்; நின்னை நீங்காப் புணர்ப்பினால் தொடர்ந்து போந்து
தெருள்தரும் இளைய வீரன் செய்வன செய்கலாதேன்;
மருள் தரு மனத்தினேனுக்கு இனிது அன்றோ, வாழ்வு மன்னே?

291. மூசுதல் - மொய்த்தல், நெருங்குதல்; பழுவம் - பரப்பு; முரற்றல் ஒலித்தல்; 294. குணிக்கல் - சொல்லுதல்; 295. கிராதர் கோன் - வேடர் தலைவனாகிய குகன்.

ஆயன பிறவும் பன்னி, அழுங்குவான் தன்னை, 'ஐய!
நீ இவை உரைப்பது என்னே; பரதனின் நீ வேறு உண்டோ?
போய், இனிது இருத்தி' என்ன, புளிஞர்கோன் இளவல் பொன் தாள்
மேயினன் வணங்கி, அன்னை விரை மலர்த் தாளின் வீழ்ந்தான்.

தொழுது நின்றவனை நோக்கி, துணைவர்கள் தமையும் நோக்கி,
முழுது உணர் கேள்வி மேலோன் மொழிகுவான்; 'முழு நீர்க் கங்கை
தழுவு இரு கரைக்கும் நாதன்; தாயினும் உயிர்க்கு நல்லான்;
வழுவு இலா எயினர் வேந்தன்; குகன் எனும் வள்ளல் என்றான்;

அண்ணல் அஃது உரைத்தலோடும், அரி குலத்து அரசன் ஆதி
நண்ணிய துணைவர் யாரும் இனிது உறத் தழுவி, நட்டார்;
கண் அகல் ஞாலம் எல்லாம் கங்குலால் பொதிவான் போல,
வண்ண மால் வரைக்கும் அப் பால் மறைந்தனன், இரவி என்பான்.

அலங்கல் அம் தொடையினானும், அந்தியின் கடன்கள் ஆற்றி,
பொலங் குழை மயிலினோடு துயிலுற, புணரி போலும்
இலங்கிய சேனை சூழ, இளவலும் எயினர் கோனும்,
கலங்கலர் காத்து நின்றார்; கதிரவன் உதயம் செய்தான். 301

கதிரவன் உதிப்ப, காலைக் கடன் கழித்து, இளவலோடும்
அதிர் பொலன் கழலினான் அவ் அருந் தவன் தன்னை ஏத்தி,
விதி தரு விமானம் மேவி, விளங்கிழையோடும், கொற்றம்
முதிர் தரு கருணையோடும், முனி மனம் தொடரப் போனான்.

தாவி வான் படர்ந்து மானம் தடையிலாது ஏகும் வேலை,
தீவிய கன்னி ஆகிச் செருக்கிய காமச் செவ்வி
ஓவியம் உயிர் பெற்றென்ன உம்பர்கோன் நகரும் ஒவ்வா
மா இயல் அயோத்தி சூழும் மதில் புறம் தோன்றிற்று அன்றே.

பொன் மதில் கிடக்கை சூழப் பொலிவுடை நகரம் தோன்ற,
நன் மதிக் கிழவர் தம்மை நோக்கிய ஞான மூர்த்தி,
'சொல் மதித்து ஒருவராலும் சொலப்படா அயோத்தி தோன்றிற்று'
என்னலும், கரங்கள் கூப்பி எழுந்தனர், இறைஞ்சி நின்றார்.

புட்பக விமானத்தின் வருகை

அன்னது ஓர் அளவையின், விசும்பின் ஆயிரம்
துன் இருங் கதிரவர் தோன்றினார் என,
பொன் அணி புட்பகப் பொரு இல் மானமும்,
மன்னவர்க்கு அரசனும், வந்து தோன்றினார். 305

'அண்ணலே! காண்டியால்—அலர்ந்த தாமரைக்
கண்ணனும், வானரக் கடலும், கற்புடைப்
பெண் அருங் கலமும், நின் பின்பு தோன்றிய
வண்ண வில் குமரனும், வருகின்றார்களே. 306

'ஏழ்-இரண்டு ஆகிய உலகம் ஏறினும்
பாழ் புறம் கிடப்பது, படி இன்றுயது, ஓர்
சூழ் ஒளி மானத்துத் தோன்றுகின்றனன்
ஊழியான்' என்று கொண்டு, உணர்த்தும் காலையே. 307

பொன் ஒளிர் மேருவின் பொதும்பில் புக்கது ஓர்
மின் ஒளிர் மேகம்போல் வீரன் தோன்றலும்,
அந் நகர் ஆர்த்த பேர் ஆர்ப்பு, இராவணன்
தென் நகர்க்கு அப் புறத்து அளவும் சென்றதால். 308

இராமனைப் பரதன் காணுதல்

ஊனுடை யாக்கை விட்டு உண்மை வேண்டிய
வானுடைத் தந்தையார் வரவு கண்டென,
கானிடைப் போகிய கமலக்கண்ணனை,
தானுடை உயிரினை, தம்பி நோக்கினான். 309

கெட்ட வான் பொருள் வந்து கிடைப்ப, முன்பு தாம்
பட்ட வான் படர் ஒழிந்தவரின் பையுள் நோய்
சுட்டவன், மானவன்-தொழுதல் உன்னியே,
விட்டனன் மாருதி கரத்தை, மேன்மையான். 310

அக் கணத்து அனுமனும் அவண் நின்று ஏகி, அத்
திக்குறு மானத்தைச் செவ்வன் எய்தி, அச்
சக்கரத்து அண்ணலைத் தாழ்ந்து முன் நின்றான்;
உக்கு உறு கண்ண நீர் ஒழுகும் மார்பினான். 311

'உருப்பு அவிர் கனலிடை ஒளிக்கலுற்ற அப்
பொருப்பு அவிர் தோளனைப் பொருந்தி, நாயினேன்,
திருப் பொலி மார்ப! நின் வரவு செப்பினேன்;
இருப்பன ஆயின, உலகம் யாவையும். 312

'தீவினை யாம் பல செய்ய, தீர்வு இலா
வீவினை முறை முறை விளைவ, மெய்ம்மையாய்!
நீ அவை துடைத்து நின்று, அழிக்க நேர்ந்ததால்;
ஆயினும், அன்பினாய்! யாம் செய் மா தவம்.' 313

310. பையுள் நோய் - பெருந்துன்பம்: 313. வீவினை - சாதற்குரிய வினை.

என்று உரைத்து, அனுமனை இறுகப் புல்லினன்;
ஒன்று உரைத்து இறுப்பது என், உனக்கும், எந்தைக்கும்,
இன் துணைத் தம்பிக்கும், யாய்க்கும்?' என்றனன்—
குன்று இணைத்தன உயர் குவவுத் தோளினன். 314

ஈடுறு வான் துணை இராமன் சேவடி
சூடிய சென்னியன், தொழுத கையினன்,
ஊடு உயிர் உண்டு என உலர்ந்த யாக்கையன்,
பாடு உறு பெரும் புகழ்ப் பரதன் தோன்றினன். 315

தொழுது நெருங்கிய பரதனை அனுமன் இராமனுக்கு அறிவிக்க, இராமனும் தம்பியைக் கண்டு மகிழ்தல்

தோன்றிய பரதனைத் தொழுது, தொல் அறச்
சான்று என நின்றவன், 'இனைய தம்பியை,
வான் தொடர் பேர் அரசு ஆண்ட மன்னனை,
ஈன்றவள் பகைஞனை, காண்டி ஈண்டு' என, 316

காட்டினன் மாருதி; கண்ணின் கண்ட அத்
தோட்டு அலர் தெரியலான் நிலைமை சொல்லுங்கால்,
ஓட்டிய மானத்துள் உயிரின் தந்தையார்
கூட்டு உருக் கண்டன்ன தன்மை கூடினன். 317

புட்பக விமானம் நிலத்தைச் சார்தல்

ஆனது ஓர் அளவையின், அமரர்கோனொடும்
வானவர் திரு நகர் வருவது ஆம் என,
மேல் நிறை வானவர் வீசும் பூவொடும்
தான் உயர் புட்பகம் நிலத்தைச் சார்ந்ததால். 318

இராமனது வருகையால் தாயர் முதலியோர் உற்ற நிலை

தாயருக்கு அன்று சார்ந்த கன்று எனும் தகையன் ஆனான்;
மாயையின் பிரிந்தோர்க்கு எல்லாம் மனோலயம் வந்தது ஒத்தான்;
ஆய் இளையார்க்குக் கண்ணுள் ஆடு இரும் பாவை ஆனான்;
நோய் உறுத்து உலந்த யாக்கைக்கு உயிர் புகுந்தாலும் ஒத்தான்.

எளிவரும் உயிர்கட்கு எல்லாம் ஈன்ற தாய் எதிர்ந்தது ஒத்தான்;
அளி வரும் மனத்தோர்க்கு எல்லாம் அரும் பத அமுதம் ஆனான்;
ஒளி வரப் பிறந்தது ஒத்தான், உலகினுக்கு; ஒண்கணார்க்குத்
தெளிவு அருங் களிப்பு நல்கும் தேம் பிழித் தேறல் ஒத்தான்.

317. கூட்டு உரு - பொருந்திய உருவம்; 319. மாயையின் பிரிந்தோர் - மாயையிலிருந்து நீங்கிய துறவிகள்; மனோலயம் - மனம் இறைவனோடு ஒன்றுபடும் நிலை.

ஆவி அங்கு அவன் அலால் மற்று இன்மையால், அனையன் நீங்க,
காவி அம் கழனி நாடும், நகரமும், கலந்து வாழும்
மா இயல் ஒண்கணாரும், மைந்தரும், வள்ளல் எய்த,
ஓவியம் உயிர் பெற்றென்ன ஓங்கினர், உணர்வு பெற்றார். 321

கண்ணமும், சாந்தும், நெய்யும், சுரி வளை முத்தும், பூவும்,
எண்ணெயும், கலின மா விலாழியும், எண் இல் யானை
வண்ண வார் மதமும், நீரும், மான்மதம் தழுவும் மாதர்
கண்ண ஆம் புனலும், ஓடிக் கடலையும் கடந்த அன்றே, 322

அனைவரும் அனையர் ஆகி அடைந்துழி, அருளின் வேலை-
தனை இனிது அளித்த தாயர் மூவரும், தம்பிமாரும்
புனையும் நூல் முனிவன்தானும், பொன் அணி விமானத்து ஏற,
வனை கழல் குரிசில் முந்தி, மா தவன் தாளில் வீழ்ந்தான்.*

எடுத்தனன் முனிவன், மற்று அவ் இராமனை ஆசி கூறி,
அடுத்துள துன்பம் நீங்க, அணைத்து அணைத்து, அன்பு கூர்ந்து,
விடுத்துழி, இளைய வீரன் வேதியன் தாளில் வீழ,
வடித்த நூல் முனியும் முன்போல, வாழ்த்தினன், ஆசி கூறி.*

இராமன் தாயரை வணங்கல்

கைகயன் தனயை முந்தக் கால் உறப் பணிந்து, மற்றை
மொய் குழல் இருவர் தாளும் முறைமையின் வணங்கு செங் கண்
ஐயனை, அவர்கள்தாமும் அன்புறத் தழுவி, தம் தம்
செய்ய தாமரைக் கணீரால் மஞ்சனத்தொழிலும் செய்தார்.

சீதையும் இலக்குவனும் வணங்கல்

அன்னமும் முன்னர்ச் சொன்ன முறைமையின் அடியில் வீழ்ந்தாள்;
தன் நிகர் இலாத வென்றித் தம்பியும் தாயர்தங்கள்
பொன் அடித் தலத்தில் வீழ, தாயரும் பொருந்தப் புல்லி,
'மன்னவற்கு இளவல் நீயே; வாழி!' என்று ஆசி சொன்னார்.*

அடியில் வீழ்ந்து வணங்கிய பரதனை இராமன் அன்புறத் தழுவுதல்

சேவடி இரண்டும் அன்பும் அடியுறையாகச் சேர்த்தி,
பூ அடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி,
நாவிடை உரைப்பது ஒன்றும் உணர்ந்திலன், நின்ற நம்பி,
ஆவியும் உடலும் ஒன்றத் தழுவினன், அழுது சோர்வான்.

321. மா இயல் ஒண்கணார் - மாவடுவின் பிளவு போன்ற ஒளி வாய்ந்த கண்களையுடைய மகளிர்; 323. அருளின் வேலை - கருணைக் கடலாகிய இராமன்; 327. அடியுறை - காணிக்கை.

தழுவினன் நின்றகாலை, தத்தி வீழ் அருவி சாலும்
விழு மலர்க் கண்ணீர் மூரி வெள்ளத்தால், முருகின் செவ்வி
வழுவுற, பின்னி மூசு மாசுண்ட சடையின் மாலை
கழுவினன்; உச்சி மோந்து, கன்று காண் கறவை அன்னான்.

இலக்குவன், பரதனது பாதங்களில் விழுந்து வணங்குதல்

அனையது ஓர் காலத்து, அம் பொன் சடை முடி அடியது ஆக,
கனை கழல் அமரர் கோமாற் கட்டவன்-படுத்த காளை,
துனை பரி, கரி, தேர், ஊர்தி என்று இவை பிறவும், தோலின்
வினை உறு செருப்புக்கு ஈந்தான் விரை மலர்த் தாளின் வீழ்ந்தான்.

ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறும் சிவிறி ஓட,
தாள்தொடு தடக் கை ஆரத் தழுவினன்—'தனிமை நீங்கி,
காடு உறைந்து உலைந்த மெய்யோ, கையறு கவலை கூர
நாடு மறைந்து உலைந்த மெய்யோ, நைந்தது?' என்று உலகம் நைய.

சத்துருக்கன் அனைவரையும் வணங்கல்

மூவர்க்கும் இளைய வள்ளல், முடிமிசை முகிழ்த்த கையன்,
தேவர்க்கும் தேவன் தாளும், செறி கழல் இளவல் தாளும்,
பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான்; எடுத்தனர் பொருந்தப் புல்லி,
வாவிக்குள் அன்னம் அன்னாள் மலர் அடித் தலத்து வீழ்ந்தான்.

சத்துருக்கனையும் இராமன் தழுவி, பரத-சத்துருக்கனர்களைத் துணைவர்களுக்கு அறிமுகப்படுத்த, அவர்கள் அவ் இருவரையும் வணங்குதல்

பின் இணைக் குரிசில்தன்னைப் பெருங் கையால் வாங்கி, வீங்கும்
தன் இணைத் தோள்கள் ஆரத் தழுவி, அத் தம்பிமாருக்கு,
இன் உயிர்த் துணைவர்தம்மைக் காட்டினான்; இருவர் தாளும்,
மன் உயிர்க்கு உவமை கூர வந்தவர், வணக்கம் செய்தார்.

குரக்கினத்து அரசை, சேயை, குமுதனை, சாம்பன்தன்னை
செருக் கிளர் நீலன்தன்னை, மற்றும் அத் திறத்தினோரை,
அரக்கருக்கு அரசை, வெவ்வேறு அடைவினின் முதன்மை கூறி,
மருக் கமழ் தொடையல் மாலை மார்பினன், பரதன், நின்றான்.*

329. அமரர் கோமாற் கட்டவன் - இந்திரனை வென்றவனாகிய இந்திரசித்து; காளை - காளை போன்ற இலக்குவன்; 330. சிவறி - பரவி; 332. குரிசில் - ஈண்டுச் சத்துருக்கனன்.

மந்திரச் சுற்றத்துள்ளார்தம்மொடும், வயங்கு தானைத்
தந்திரத் தலைவரோடும், தமரொடும், தரணி ஆளும்
சிந்துரக் களிறு போல்வார் எவரொடும், சேனையோடும்,
சுந்தரத்தடந் தோள் வெற்றிச் சுமந்திரன் தோன்றினானால்.*

அழுகையும் உவகைதானும் தனித்தனி அமர் செய்து ஏற,
தொழுதனன், எழுந்து விம்மி, சுமந்திரன் நிற்றலோடும்,
தழுவினன் இராமன், மற்றைத் தம்பியும் அனைய நீரான்,
'வழு இனி உளது அன்று, இந்த மா நிலக்கிழத்திக்கு' என்றான்.*

'ஏறுக சேனை எல்லாம் விமானமீது' என்று, தன்போல்
மாறு இலா வீரன் கூற, வந்துள அனிக வெள்ளம்
ஊறு இரும் பரவை வானத்து எழிலியுள் ஒடுங்குமாபோல்
ஏறி, மற்று இளைய வீரன் இணை அடி தொழுதது அன்றே.*

'உரைசெயின், உலகம் உண்டான் மணி அணி உதரம் ஒவ்வா,
கரை செயல் அரிய வேதக் குறுமுனி கையும் ஒவ்வா,
விரை செறி அலங்கல் மாலைப் புட்பக விமானம்' என்று என்று,
உரைசெய்து, வான் உளோர்கள் ஒண் மலர் தூவி ஆர்த்தார்.*

அசனியின் குழுவும், ஆழி ஏழும் ஒத்து ஆர்த்ததென்ன,
விசையுறு முரசும், வேதத்து ஓதையும், விளி கொள் சங்கும்,
இசையுறு குரலும், ஏத்தின் அரவமும், எழுந்து பொங்கி,
திசை உறச் சென்று, வானோர் அந்தரத்து ஒலியின் தீர்ந்த.

38　திருமுடி சூட்டு படலம்

இராமன் தம்பியரோடு அரச கோலம் கொள்ளுதல்

நம்பியும் பரதனோடு நந்தியம்பதியை நண்ணி,
வம்பு இயல் சடையும் மாற்றி, மயிர் வினை முற்றி, மற்றைத்
தம்பியரோடு தானும் தண் புனல் படிந்த பின்னர்,
உம்பரும் உவகை கூர, ஒப்பனை ஒப்பச் செய்தார்.　1

நிருதியின் திசையில் தோன்றும் நந்தியம்பதியை நீங்கி,
குருதி கொப்பளிக்கும் வேலோன் கொடி மதில் அயோத்தி மேவ,
சுருதி ஒத்தனைய வெள்ளைத் துரகதக் குலங்கள் பூண்டு,
பருதி ஒத்து இலங்கும் பைம் பூண் பரு மணித் தேரின் ஆனான்,*

38 : 2. நிருதியின் திசை - தென்மேற்குத் திசை.

தம்பிமார் பணி செய்ய, தேர் ஏறி, இராமன் அயோத்தி புகுதல்

ஊழியின் இறுதி காணும் வலியினது உயர் பொன் தேரின்,
ஏழ் உயர் மதமா அன்ன இலக்குவன் கவிகை ஏந்த,
பாழிய மற்றைத் தம்பி பால்நிறக் கவரி பற்ற,
பூமியை அடக்கும் கண்ணீர்ப் பரதன் கோல் கொள்ளப் போனான்.

வீடணக் குரிசில், மற்றை வெங் கதிர்ச் சிறுவன், வெற்றிக்
கோடு அணை குன்றம் ஏறி, கொண்டல் தேர் மருங்கு செல்ல,
தோடு அணை மவுலிச் செங் கண் வாலி சேய் தூசி செல்ல,
சேடனைப் பொருவும் வீர மாருதி பின்பு சென்றான்.* 4

அறுபத்து ஏழ் அமைந்த கோடி யானைமேல் வரிசைக்கு ஆன்ற
திறம் உற்ற சிறப்பர் ஆகி, மானுடச் செவ்வி வீரம்
பெறுகுற்ற வனப்பர் உச்சி பிறங்கு வெண் குடையர் செச்சை
மறு உற்ற அலங்கல் மார்பர், வானரத் தலைவர் போனார். 5

எட்டு என இறுத்த பத்தின் ஏழ் பொழில் வளாக வேந்தர்
பட்டம் வைத்து அமைந்த நெற்றிப் பகட்டினர், பைம் பொன் தேரர்,
வட்ட வெண்குடையர், வீசு சாமரை மருங்கர், வானைத்
தொட்ட வெஞ் சோதி மோலிச் சென்னியர், தொழுது சூழ்ந்தார்.

வானர மகளிர் எல்லாம் வானவர் மகளிராய் வந்து
ஊனம் இல் பிடியும் ஒண் தார்ப் புரவியும் பிறவும் ஊர்ந்து,
மீன்இனம் மதியைச் சூழ்ந்த தன்மையின் விரிந்து சுற்ற,
பூ நிற விமானம்தன்மேல் மிதிலை நாட்டு அன்னம் போனாள். 7

தேவரும் முனிவர்தாமும் திசைதொறும் மலர்கள் சிந்த,
ஓவல் இல் மாரி ஏய்ப்ப, எங்கணும் உதிர்ந்து வீங்கிக்
கேவல மலராய், வேறு ஓர் இடம் இன்றிக் கிடந்த ஆற்றால்,
பூ எனும் நாமம், இன்று இவ் உலகிற்குப் பொருந்திற்று அன்றே.

கோடையில் வறந்த மேகக் குலம் எனப் பதினால் ஆண்டு
பாடு உறு மதம் செய்யாத பணை முகப் பரும யானை,
காடு உறை அண்ணல் எய்த, கடாம் திறந்து உகுத்த வாரி
ஓடின, உள்ளத்து உள்ள களி திறந்து உடைந்ததேபோல். 9

3. ஏழ் உயர் மதமா - ஏழு முழம் உயர்ந்த களிற்றியானை; 4. தூசி - முன்னணி; சேடன் - ஆதிசேடன்; 5. செச்சை - சந்தனக்குழம்பு; 6. எட்டு என இறுத்த பத்து - எட்டு என்று முடிகின்ற பத்து (பதினெட்டு); வளாகம் - பூமி, ஈண்டுத் தேயம். 8. ஓவல் - நீங்குதல்; கேவலம் - தனிமை; பிறிதொன்றின் கலப்பில்லாதது.

துரகதத் தார்ப் புரவி எல்லாம், ஊமங்கையர் சொல் பெற்றென்ன,
அரவப் போர் மேகம் என்ன, ஆலித்த; மரங்கள் ஆன்ற
பருவத்தால் பூத்த என்னப் பூத்தன; பகையின் சீறும்
புருவத்தார் மேனி எல்லாம் பொன் நிறப் பசலை பூத்த. 10

இராமன் அரண்மனை அடைதல்

ஆயது ஓர் அளவில், செல்வத்து அண்ணலும் அயோத்தி நண்ணி,
தாயரை வணங்கி, தங்கள் இறையொடு முனியைத் தாழ்ந்து,
நாயகக் கோயில் எய்தி, நானிலக் கிழத்தியோடும்
சேயொளிக் கமலத்தாளும் திரு நடம் செய்யக் கண்டான். 11

நகர மாந்தரின் மகிழ்ச்சி

‘வாங்குதும் துகில்கள்’ என்னும் மனம் இலர், கரத்தின் பல்கால்
தாங்கினர் என்ற போதும், மைந்தரும் தையலாரும்,
வீங்கிய உவகை மேனி சிறக்கவும், மேன் மேல் துள்ளி
ஓங்கவும், களிப்பால் சோர்ந்த உடை இலாதாரை ஒத்தார்.

வேசியர் உடுத்த கூறை வேதியர் சுற்ற, வெற்றிப்
பாசிழை மகளிர் ஆடை அந்தணர் பறித்துச் சுற்ற,
வாசம், மென் கலவைச் சாந்து, என்று இணையன, மயக்கம்தன்னால்
பூசினர்க்கு இரட்டி ஆனார், பூசலார் புகுந்துளோரும். 13

இறைப் பெருஞ் செல்வம் நீத்த ஏழ்-இரண்டு ஆண்டும், யாரும்
உறைப்பு இலர் ஆதலானே, வேறு இருந்து ஒழிந்த மின்னார்,
பிறைக் கொழுந்து அனைய நெற்றிப் பெய் வளை மகளிர், மெய்யை
மறைத்தனர் பூணின், மைந்தர் உயிர்க்கு ஒரு மறுக்கம் தோன்ற.

விண் உறைவோர்தம் தெய்வ வெறியொடும், வேறுளோர்தம்
தண் நறு நாற்றம் தம்மில் தலைதடுமாறும் நீரால்,
மண் உறை மாதரார்க்கும் வான் உறை மடந்தைமார்க்கும்,
உள் நிறைந்து உயிர்ப்பு வீங்கி ஊடல் உண்டாயிற்று அன்றே.

ஆயது ஓர் அளவில், ஐயன், பரதனை அருளின் நோக்கி,
‘தூய வீடணற்கும், மற்றைச் சூரியன் மகற்கும், தொல்லை
மேய வானரர்கள் ஆய வீரர்க்கும், பிறர்க்கும், நம்தம்
நாயகக் கோயில் உள்ள நலம் எலாம் தெரித்தி’ என்றான்.*

10. துரகதம் - குதிரை கட்டும் தறி; 11. இறை - குலதெய்வமாகிய அரங்கநாதன்; 12. களிப்பு - கள் குடித்த மகிழ்ச்சி; 15. வேறுளோர் - வேறு யுள்ள மக்கள்.

என்றலும், இறைஞ்சி, மற்றைத் துணைவர்கள் யாவரோடும்
சென்றனன் எழுந்து, மாடம் பல ஒரீஇ, உலகில் தெய்வப்
பொன் திணிந்து அமரரோடும் பூமகன் உறையும் மேருக்
குன்று என விளங்கித் தோன்றும் நாயகக் கோயில் புக்கான்.*

வயிரம், மாணிக்கம், நீலம், மரகதம் முதலாய் உள்ள
செயிர் அறு மணிகள் ஈன்ற செழுஞ் சுடர்க் கற்றை சுற்ற,
உயிர் துணுக்குற்று நெஞ்சும் உள்ளமும் ஊசலாட,
மயர்வு அறு மனத்து வீரர், இமைப்பிலர், மயங்கி நின்றார்.

விண்டுவின் மார்பில் காந்தும் மணி என விளங்கும் மாடம்
கண்டனர்; பரதன் தன்னை வினவினர், அவர்க்கு, ‘காதல்
புண்டரீகத்துள் வைகும் புராதனன், கன்னல் தோளான்,
கொண்ட நல் தவம்தன்னாலே உவந்து, முன் கொடுத்தது’ என்றான்.*

‘பங்கயத்து ஒருவன் இக்குவாகுவிற்கு அளித்த பான்மைத்து
இங்கு இது மலராள் வைகும் மாடம்’ என்று இசைத்த போதில்,
‘எங்களால் துதிக்கலாகும் இயல்பதோ’ என்று கூறி,
செங் கைகள் கூப்பி, வேறு ஓர் மண்டபம்அதனில் சேர்ந்தார்.

இருந்தனர், அனைய மாடத்து இயல்பு எலாம் எண்ணி எண்ணி,
பரிந்தனன் இரவி மைந்தன், பரதனை வணங்கி, ‘தூயோய்!
கருந் தட முகிலினாற்குக் காப்பு நாண் அணியும் நல் நாள்
தெரிந்திடாது இருத்தல் என்னோ?’ என்றலும், அண்ணல் செப்பும்:

‘ஏழ் கடல் அதனில் தோயம், இரு நதி பிறவில் தோயம் [என்ன,
தாழ்வு இலாது இவண் வந்து எய்தற்கு அருமைத்து ஓர் தன்மைத்து’
ஆழி ஒன்று உடையோன் மைந்தன், அனுமனைக் கடிதின் நோக்க,
சூழ் புவி அதனை எல்லாம் கடந்தனன், காலின் தோன்றல். 22

‘கோமுனியோடு மற்றைக் கணிதரைக் கொணர்க!’ என்னா
ஏவினன்; தேர் வலான் சென்று இசைத்தலும், உலகம் ஈன்ற
பூமகன் தந்த அந்தப் புனித மா தவன் வந்து எய்த,
யாவரும் எழுந்து போற்றி, இணை அடி தொழுது நின்றார். 23

அரியணை பரதன் ஈய, அதன்கண் ஆண்டு இருந்த அந்தப்
பெரியவன், அவனை நோக்கி, ‘பெரு நிலக் கிழத்தியோடும்
உரிய மா மலராளோடும் உகந்தனர் ஒருவு இல் செல்வம்
கரியவன் உய்த்தற்கு ஒத்த காப்பு நாள் நாளை’ என்றான். 24

19. மணி - கவுத்துவ மணி; கன்னல் தோளான் - கரும்பைப் போன்ற தோள்களை உடையவனாகிய இட்சுவாகு. இக்ஷ்வாகு என்பதன் தமிழாக்கம்; 22. தோயம் - நீர்; 23. கணிதர் - சோதிடர்; 24. பெரியவன் - பெரியவனாகிய வசிட்ட முனிவன்.

இந்திர குருவும் அன்னார் எனையவர் என்ன நின்ற
மந்திர விதியினாரும், வசிட்டனும், வரைந்து விட்டார்—
சந்திர கவிகை ஓங்கும் தயரத ராமன் தாமச்
சுந்தர மவுலி சூடும் ஓரையும் நாளும் தூக்கி. 25

அடுக்கிய உலகம் மூன்றும், ஆதரத் தூதர் கூற,
இடுக்கு ஒரு பேரும் இன்றி, அயோத்தி வந்து இறுத்தார் என்றால்,
தொடுக்குறு கவியான் மற்றைத் துழனியை இறுதி தோன்ற
ஒடுக்குறுத்து உரைக்கும் தன்மை நான்முகத்து ஒருவற்கு உண்டோ?

அவ் வயின் முனிவனோடும் பரதனும், அரியின் சேயும்,
செவ்வியின் நிருதர்கோனும், சாம்பனும், வாலி சேயும்,
எவ்வம் இல் ஆற்றல் வீரர் யாவரும், எழுந்து சென்று, ஆங்கு
அவ்வியம் அவித்த சிந்தை அண்ணலைத் தொழுது சொன்னார்.*

'நாளை நீ மவுலி சூட நன்மை சால் பெருமை நல்நாள்;
காளை! நீ அதனுக்கு ஏற்ற கடன்மைமீது இயற்றுக!' என்று,
வேளையே பொடியதாக விழிக்கும் நீள் நுதலின் வெண் பூம்
பூளையே சூடுவானைப் பொருவும் மா முனிவன் போனான்.* 28

நான்முகத்து ஒருவன் ஏவ, நயன் அறி அயன் என்று ஓதும்
நூல் முகத்து ஓங்கு கேள்வி நுணங்கியோன், வணங்கு நெஞ்சன்,
கோல் முகத்து அளந்து, குற்றம் செற்று, உலகு எல்லாம் கொள்ளும்
மான் முகத்து ஒருவன், நல் நாள் மண்டபம் வயங்கக் கண்டான். 29

இராமன் புண்ணிய நீரில் ஆடுதல்

'சூழ் கடல் நான்கின் தோயம், எழு வகை ஆகச் சொன்ன
ஆழ் திரை ஆற்றின் நீரோடு அமைத்தி இன்று' என்ன, 'ஆம்' என்று.
ஊழியின் இறுதி செல்லும் தாதையின் உலாவி, ஒன்றா
ஏழ் கடல் நீரும் தந்தான், இருந்து உய்ய மருந்து தந்தான்.

எரி மணிக் குடங்கள் பல் நூற்று யானைமேல் வரிசைக்கு ஆன்ற
விரி மதிக் குடையின் நீழல், வேந்தர்கள் பலரும் ஏந்தி,
புரை மணிக் காளம் ஆர்ப்ப, பல்லியம் துவைப்ப, பொங்கும்
சரயுவின் புனலும் தந்தார், சங்குஇனம் முரல மன்னோ.* 31

25. இந்திர குரு - இந்திரனுக்குக் குருவாகிய வியாழன்; 26. ஆதரத் தூதர் - ஆர்வம் பொருந்திய தூதர்; ஒடுக்குறுத்து உரைத்தல் - அடக்கிக் கூறுதல், தொகுத்துக் கூறுதல்; 27. அவ்வியம் - பொறாமை; அண்ணல் - இராமன்; 28. பூளையே சூடுவான் - பூளைப் பூவைச் சூடுபவனாகிய சிவபெருமான்.

மாணிக்கப் பலகை தைத்து, வயிரத் திண் கால்கள் சேர்த்தி,
ஆணிப்பொன் சுற்றி முற்றி, அழகுறச் சமைத்த பீடம்,
ஏண் உற்ற பளிக்கு மாடத்து இட்டனர்; அதனின்மீது
பூண் உற்ற திரள் தோள் வீரன் திருவொடும் பொலிந்தான் மன்னோ.*

மங்கல கீதம் பாட, மறை ஒலி முழங்க, வல் வாய்ச்
சங்குஇனம் குமுற, பாண்டில் தண்ணுமை ஒலிப்ப, தா இல்
பொங்கு பல்லியங்கள் ஆர்ப்ப, பூ மழை பொழிய, விண்ணோர்,
எங்கள் நாயகனை வெவ்வேறு எதிர்ந்து, அபிடேகம் செய்தார்.*

மா தவர், மறைவலாளர், மந்திரக் கிழவர், மற்றும்
மூதறிவாளர், உள்ள சான்றவர் முதல் நீராட்ட,
சோதியான் மகனும், மற்றைத் துணைவரும், அனுமன்தானும்,
தீது இலா இலங்கை வேந்தும், பின் அபிடேகம் செய்தார். 34

'அம் கண் வான், உலகம், தாய அடி, மலர்த் தவிசோன் ஆட்டும்
கங்கை வார் சடையின் ஏற்றான், கண்ணுதல் ஒருவன்; இந் நாள்
சிங்கஏறு அனையான் செய்ய திருமுடி ஆட்டும் நல் நீர்
எங்கண் ஏற்று அன்னோன் வாழும்?' என்றனர், புலவர் எல்லாம்.*

மரகதச் சயிலம் செந் தாமரை மலர்க் காடு பூத்து,
திரை கெழு கங்கை வீசும் திவலையால் நனைந்து, செய்ய
இரு குழை தொடரும் வேற் கண் மயிலொடும் இருந்தது எய்ப்ப,
பெருகிய செவ்வி கண்டார், பிறப்பு எனும் பிணிகள் தீர்ந்தார்.*

தெய்வ நீராடற்கு ஒத்த செய் வினை வசிட்டன் செய்ய,
ஐயம் இல் சிந்தையான் அச் சுமந்திரன் அமைச்சரோடும்
நொய்தினின் இயற்ற, நோன்பின் மாதவர் நுனித்துக் காட்ட,
எய்தின இயன்ற பல் வேறு, இந்திரற்கு இயன்ற என்ன, 37

வசிட்டன் இராமனுக்குத் திருமுடி புனைதல்

அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடை வாள் ஏந்த,
பரதன் வெண் குடை கவிக்க, இருவரும் கவரி பற்ற,
விரை செறி குழலி ஓங்க, வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான், மௌலி.

வெள்ளியும் பொன்னும் ஒப்பார் விதி முறை மெய்யின் கொண்ட
ஒள்ளிய நாளின், நல்ல ஓரையின், உலகம் மூன்றும்
துள்ளின குனிப்ப, மோலி சூடினன்—கடலின் வந்த
தெள்ளிய திருவும், தெய்வப் பூமியும், சேரும் தோளான். 39

32. ஏண் - பெருமை; 36. சயிலம் - மலை; 39. வெள்ளி - அசுர குருவாகிய சுக்கிரன்; பொன் - தேவ குருவாகிய வியாழன்.

சித்தம் ஒத்துளன் என்று ஓதும் திரு நகர்த் தெய்வ நன்னூல்
வித்தகன் ஒருவன் சென்னி மிலைச்சியதுஎனினும், மேன்மை
ஒத்த மூஉலகத்தோர்க்கும் உவகையின் உறுதி உன்னின்,
தம்தம் உச்சியின்மேல் வைத்தது ஒத்தது, அத் தாம மோலி.

பல் நெடுங் காலம் நோற்று, தன்னுடைப் பண்பிற்கு ஏற்ற
பின் நெடுங் கணவன்தன்னைப் பெற்று, இடைப் பிரிந்து, முற்றும்
தன் நெடும் பீழை நீங்கத் தழுவினள், தளிர்க் கை நீட்டி,
நல் நெடும் பூமி என்னும் நங்கை, தன் கொங்கை ஆர. 41

பரதனுக்கு இளவரசு பட்டம் சூட்டல்

விரத நூல் முனிவன் சொன்ன விதி நெறி வழாமை நோக்கி,
வரதனும், இளைஞற்கு ஆங்கண் மா மணி மகுடம் சூட்டி,
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து, நாளும்
கரை தெரிவு இலாத போகக் களிப்பினுள் இருந்தான் மன்னோ. 42

39 விடை கொடுத்த படலம்

இராமன் சீதையோடு அரியணையில் வீற்றிருத்தல்

பூமகட்கு அணிஅது என்னப் பொலி பசும் பூரி சேர்த்தி,
மா மணித் தூணின் செய்த மண்டபம்அதனின் நாப்பண்,
கோமணிச் சிவிகைமீதே, கொண்டலும் மின்னும் போல,
தாமரைக் கிழத்தியோடும் தயரத ராமன் சார்ந்தான். 1

விரி கடல் நடுவண் பூத்த மின் என ஆரம் வீங்க,
எரி கதிர்க் கடவுள்தன்னை இனமணி மகுடம் ஏய்ப்ப,
கரு முகிற்கு அரசு செந்தாமரை மலர்க் காடு பூத்து, ஓர்
அரியணைப் பொலிந்தது என்ன, இருந்தனன், அயோத்தி வேந்தன். 2

மரகதச் சயிலமீது வாள் நிலாப் பாய்வது என்ன,
இரு குழை இடறும் வேற் கண், இளமுலை, இழை நலார்தம்
கரகமலங்கள் பூத்த கற்றை அம் கவரி தெற்ற,
உரகரும், நரரும், வானத்து உம்பரும், பரவி ஏத்த, 3

உலகம் ஈர்-ஏழும் தன்ன ஒளி நிலாப் பரப்ப, வானில்
திலக வாள் நுதல் வெண் திங்கள் சிந்தை நொந்து, எளிதின் தேய,
கலக வாள் நிருதர் கோனைக் கட்டழித்திட்ட கீர்த்தி
இலகி மேல் நிவந்தது என்ன, எழு தனிக் குடை நின்று ஏய. 4

40. வித்தகன்; வசிட்ட முனிவன்; ஒருவன் - இராமன்.

39: 1. பூரி - பொன்.

மங்கல கீதம் பாட, மறையவர் ஆசி கூற,
சங்குஇனம் குமுற, பாண்டில் தண்ணுமை துவைப்ப, தா இல்
பொங்கு பல்லியங்கள் ஆர்ப்ப, பொரு கயல் கருங் கண், செவ் வாய்
பங்கய முகத்தினுர்கள் மயில் நடம் பயில மாதோ. 5

திரை கடல் கதிரும் நாணச் செழு மணி மகுட கோடி
கரை தெரிவு இலாத சோதிக் கதிர் ஒளி பரப்ப, நாளும்
வரை பொரு மாட வாயில் நெருக்குற வந்து, மன்னர்
பரசியே வணங்கும்தோறும் பதயுகம் சேப்ப மன்னே. 6

மந்திரக் கிழவர் சுற்ற, மறையவர் வழுத்தி ஏத்த,
தந்திரத் தலைவர் போற்ற, தம்பியர் மருங்கு சூழ,
சிந்துரப் பவளச் செவ் வாய்த் தெரிவையர் பலாண்டு கூற,
இந்திரற்கு உவமை ஏய்ப்ப எம்பிரான் இருந்தகாலை. 7

சுக்கிரீவன் முதலியோர் வணங்குதல்

மயிந்தன், மா துமிந்தன், கும்பன், அங்கதன், அனுமன், மாறு இல்
சயம் தரு குமுதக்கண்ணன், சதவலி, குமுதன், தண் தார்
நயம் தெரி ததிமுகன், கோகசமுகன் முதல நண்ணுர்
வியந்து எழும் அறுபத்து ஏழு கோடியாம் வீரரோடும். 8

ஏனையர் பிறரும் சுற்ற, எழுபது வெள்ளத்து உற்ற
வானரரோடும் வெய்யோன் மகன் வந்து வணங்கிச் சூழ,
தேன் இமிர் அலங்கல் பைந் தார் வீடணக் குரிசில், செய்ய
மான வாள் அரக்கரோடு வந்து, அடி வணங்கிச் சூழ்ந்தான். 9

வெற்றி வெஞ் சேனையோடும், வெறிப் பொறிப் புலியின் வெவ் வால்
சுற்றுறத் தொடுத்து வீக்கும் அரையினன், சுழலும் கண்ணன்,
கல் திரள் வயிரத் திண் தோள் கடுந் திறல் மடங்கல் அன்னான்,
எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை, குகன், தொழுது சூழ்ந்தான்.

இராமன் அனைவரையும் இனிது இருக்கப் பணித்தல்

வள்ளலும் அவர்கள்தம்மேல் வரம்பு இன்றி வளர்ந்த காதல்
உள்ளுறப் பிணித்த செய்கை ஒளி முகக் கமலம் காட்டி,
அள்ளுறத் தழுவினுன் போன்று அகம் மகிழ்ந்து, இனிதின் நோக்கி,
'எள்ளல் இலாத மொய்ம்பீர்! ஈண்டு இனிது இருத்திர்' என்றான். 11

5. பாண்டில் - கஞ்ச தாளம்; 10. வெறிப் பொறிப் புலி - வெவ்விய புள்ளிகளையுடைய புலி; 11. அள்ளுற - அழுந்த.

நல் நெறி அறிவு சான்றோர், நான்மறைக் கிழவர், மற்றைச்
சொல் நெறி அறிவு நீரார், தோம் அறு புலமைச் செல்வர்,
பல் நெறிதோறும் தோன்றும் பருணிதர், பண்பின் கேளிர்,
மன்னவர்க்கு அரசன் பாங்கர், மரபினுல் சுற்றமன்னே. 12

தேம் படு படப்பை மூதூர்த் திருநகர் அயோத்தி சேர்ந்த
பாம்பு-அணை அமலன் தன்னைப் பழிச்சொடும் வணக்கம் பேணி,
வாம் புனல் பரவை ஞாலத்து அரசரும் மற்றுளோரும்
ஏம்பல் உற்று இருந்தார்; நொய்தின், இரு மதி இறந்தது அன்றே. 13

நெருங்கிய அமரர் எல்லாம் நெடுங் கடற் கிடை நின்று ஏத்த,
பொருக்கென அயோத்தி எய்தி, மற்று அவர் பொருமல் தீர,
வருக்கமோடு அரக்கர் யாரும் மடிதர, வரி வில் கொண்ட
திருக் கிளர் மார்பினன் பின் செய்தது செப்பலுற்றும்: 14

இராமன், மறையவர் முதலியோர்க்குத் தானம் வழங்குதல்

மறையவர்தங்கட்கு எல்லாம் மணியொடு முத்தும் பொன்னும்,
நிறை வளம் பெருகு பூவும், சுரபியும், நிறைத்து, மேல் மேல்,
'குறை இது; என்று இரந்தோர்க்கு எல்லாம் குறைவு அறக் கொடுத்து,
அறை கழல் அரசர்தம்மை 'வருக' என அருள, வந்தார். [பின்னர்,

இராமன், யாவருக்கும் விடை கொடுத்தல்

அய்யனும் அவர்கள்தம்மை அகம் மகிழ்ந்து, அருளின் நோக்கி,
வய்யகம், சிவிகை, தொங்கல், மா மணி மகுடம், பொன் பூண்,
கொய் உளைப் புரவி, திண் தேர், குஞ்சரம், ஆடை இன்ன
மெய் உறக் கொடுத்த பின்னர், கொடுத்தனன் விடையும் மன்னே. 16

சம்பரன்தன்னை வென்ற தயரதன் ஈந்த காலத்து
உம்பர்தம் பெருமான் ஈந்த ஒளி மணிக் கடகத்தோடும்,
கொம்புடை மலையும், தேரும், குரகதக் குழுவும், தூசும்,—
அம்பரம்தன்னை நீத்தான்—அலரி காதலனுக்கு ஈந்தான். 17

அங்கதம் இலாத கொற்றத்து அண்ணலும், அகிலம் எல்லாம்
அங்கதன் என்னும் நாமம் அழகுறத் திருத்துமாபோல்,
அங்கதம் கன்னல் தோளாற்கு அயன் கொடுத்ததனை ஈந்தான்;
அங்கு அதன் பெருமை மண்மேல் ஆர் அறிந்து அறையகிற்பார்?

12. பருணிதர் - பக்குவம் பெற்றவர்; 13. பழிச்சு - துதி; இரு மதி - இரண்டு மாத காலம்; 16. வய்யகம் - வையகம், பூமி; குஞ்சரம் - யானை; 17. உம்பர்தம் பெருமான் - தேவேந்திரன்; அம்பரம் - பரமபதம்; 18. அங்கதம் இலாத - குற்றமில்லாத; அங்கதன் என்னும் நாமம் - அங்கதன் என்னும் பெயர்; அங்கதம் ஈந்தான் - அங்கதம் என்னும் தோள்வளையைக் கொடுத்தான்.

பின்னரும், அவனுக்கு ஐயன் பெரு விலை ஆரத்தோடும்
மன்னும் நுண் தூசும், மாவும், மதமலைக்கு அரசும்; ஈயா,
'உன்னை நீ அன்றி, இந்த உலகினில் ஒப்பு இலாதாய்!
மன்னுக, கதிரோன் மைந்தன்தன்னொடும் மருவி' என்றான்.

மாருதிதன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி,
'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த
பேர் உதவிக்கு யான் செய் செயல் பிறிது இல்லை; பைம் பூண்
போர் உதவிய திண் தோளாய்! பொருந்துறப் புல்லுக!' என்றான். 20

என்றலும், வணங்கி நாணி, வாய் புதைத்து, இலங்கு தானை
முன்தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனை முழுதும் நோக்கி,
பொன் திணி வயிரப் பைம் பூண் ஆரமும், புனை மென் தூசும்,
வன் திறல் கயமும், மாவும், வழங்கினன், வயங்கு சீரான். 21

பூ மலர்த் தவிசை நீத்து, பொன் மதில் மிதிலை பூத்த
தேமொழித் திருவை ஐயன் திருவருள் முகத்து நோக்க,
பா மறைக் கிழத்தி ஈந்த பரு முத்த மாலை கைக் கொண்டு
ஏமுறக் கொடுத்தாள், அந்நாள், இடர் அறிந்து உதவினாற்கே.

சந்திரற்கு உவமை சான்ற, தாரகைக் குழுவை வென்ற,
இந்திரற்கு ஏய்ந்ததாகும் என்னும் முத்தாரத்தோடு
கந்து அடு களிறு, வாசி, தூசு, அணிகலன்கள், மற்றும்
உந்தினன், எண்கின் வேந்தற்கு—உலகம் முந்து உதவினானே.

நவ மணிக் காழும், முத்தும், மாலையும், நலம் கொள் தூசும்,
உவமை மற்று இலாத பொன் பூண் உலப்பு இல பிறவும், ஒண் தார்க்
கவன வெம் பரியும், வேகக் கதமலைக்கு அரசும், காதல்
பவனனுக்கு இனிய நண்பன் பயந்தெடுத்தவனுக்கு ஈந்தான்.

பத வலிச் சதங்கைப் பைந் தார்ப் பாய் பரி, பணைத் திண் கோட்டு
மதவலிச் சைலம், பொன் பூண், மா மணிக்கோவை, மற்றும்
உதவலின் தகைவ அன்றி, இல்லன உள்ள எல்லாம்
சதவலிதனக்குத் தந்தான்—சதுமுகத்தவனைத் தந்தான். 25

21. கயம் - யானை; 22. பா மறைக் கிழத்தி - வேதத்திற் கூறப்படுபவளான கலைமகள்; 24. பவனனுக்கு இனிய நண்பன் - காற்றுக் கடவுளின் இனிய நண்பனாகிய நெருப்புக் கடவுள்; பயந்தவன் - பெற்றெடுக்கப்பட்டவன், ஈண்டு நீலன்; 25. பத வலிச் சதங்கை - வலிய காலில் அணிந்த சதங்கை, பதவலி என்றே கொண்டு பாதத்தில் உள்ள வல்லி (கொடி) போலும் சதங்கை என்பாரும் உண்டு.

'பேச அரிது ஒருவர்க்கேயும் பெரு விலை; இதனுக்கு ஈதுக்
கோ, சரி இலது' என்று எண்ணும் ஒளி மணிப் பூணும், தூசும்,
மூசு அரிக்கு உவமை மும்மை மும் மதக் களிறும், மாவும்,
கேசரிதனக்குத் தந்தான்—கிளர் மணி முழவுத் தோளான்.

வளன் அணி கலனும் தூசும், மா மதக் களிறும், மாவும்,
நளனொடு குமுதன், தாரன், நவை அறு பனசன், மற்றோர்
உளம் மகிழ்வு எய்தும் வண்ணம் உலப்பில பிறவும் ஈந்தான்—
களன் அமர் கமல வேலிக் கோசலக் காவலோனே. 27

அவ் வகை அறு பத்து ஏழு கோடியாம் அரியின் வேந்தர்க்கு
எவ் வகைத் திறனும் நல்கி, இனியன பிறவும் கூறி,
பவ்வம் ஒத்து உலகில் பல்கும் எழுபது வெள்ளம் பார்மேல்
கவ்வை அற்று இனிது வாழக் கொடுத்தனன், கடைக் கண் நோக்கம்.

மின்னை ஏர் மௌலிச் செங் கண் வீடணப் புலவர் கோமான்-
தன்னையே இனிது நோக்கி, 'சராசரம் சுமந்த சால்பின்
நின்னையே ஒப்பார் நின்னை அலது இலர், உளரேல்; ஐய!
பொன்னையே இரும்பு நேரும்ஆயினும் பொரு அன்று' என்றான்.

என்று உரைத்து, அமரர் ஈந்த எரி மணிக் கடகத்தோடு
வன் திறல் களிறும், தேரும், வாசியும், மணிப் பொன் பூணும்,
பொன் திணி தூசும், வாசக் கலவையும், புது மென் சாந்தும்,
நன்று உற, அவனுக்கு ஈந்தான்—நாகணைத் துயிலைத் தீர்ந்தான்.

சிருங்கபேரம்அது என்று ஓதும் செழு நகருக்கு இறையை நோக்கி,
'மருங்கு இனி உரைப்பது என்னோ, மறு அறு துணைவற்கு?' என்னா,
கருங் கைம் மாக் களிறும், மாவும், கனகமும், தூசும், பூணும்,
ஒருங்குற உதவி, பின்னர் உதவினன் விடையும் மன்னோ. 31

அனுமனை, வாலி சேயை, சாம்பனை, அருக்கன் தந்த
கனை கழல் காலினானை, கருணை அம் கடலும் நோக்கி,
'நினைவதற்கு அரிது நும்மைப் பிரிக என்றல்; நீவிர் வைப்பும்
எனது; அது காவற்கு இன்று என் ஏவலின் ஏகும்' என்றான்.

இலங்கை வேந்தனுக்கும் இவ்வாறு இனியன யாவும் கூறி,
அலங்கல் வேல் மதுகை அண்ணல் விடைகொடுத்தருளலோடும்,
நலம் கொள் பேர் உணர்வின் மிக்கோர், நலன் உறும் நெஞ்சர், பின்னர்க்
கலங்கலர், 'ஏய செய்தல் கடன்' எனக் கருதிச் சூழ்ந்தார்.

32. நீவிர் வைப்பு - நீவிர் வாழும் இடங்கள்.

பரதனை, இளைய கோவை, சத்துருக்கனனை, பண்பு ஆர்
விரத மா தவனை, தாயர் மூவரை, மிதிலைப் பொன்னை,
வரதனை, வலம்கொண்டு ஏத்தி, வணங்கினர் விடையும் கொண்டே,
சரத மா நெறியும் வல்லோர் தத்தம பதியைச் சார்ந்தார். 34

குகனைத் தன் பதியின் உய்த்து, குன்றினை வலம் செய் தேரோன்
மகனைத் தன் புரத்தில் விட்டு, வாள் எயிற்று அரக்கர் சூழ,
ககனத்தின்மிசையே ஏகி, கனை கடல் இலங்கை புக்கான்,—
அகன் உற்ற காதல் அண்ணல், அலங்கல் வீடணன், சென்று, அன்றே.

இராமன் பூவுலகைக் காத்துவருதல்

அய்யனும் அவரை நீக்கி, அருள் செறி துணைவரோடும்
வய்யகம் முழுதும் செங்கோல் மனு நெறி முறையில் செல்ல,
செய்ய மா மகளும் மற்றச் செகதல மகளும் சற்றும்
நய்யுமாறு இன்றிக் காத்தான், நானிலப் பொறைகள் தீர்த்தே.

உம்பரோடு இம்பர்காறும், உலகம் ஓர் ஏழும் ஏழும்,
'எம் பெருமான்!' என்று ஏத்தி, இறைஞ்சி நின்று, ஏவல் செய்ய,
தம்பியரோடும், தானும், தருமமும், தரணி காத்தான்—
அம்பரத்து அனந்தர் நீங்கி, அயோத்தியில் வந்த வள்ளல். 37

34. சரதமா நெறி - உண்மையான நெறி (நன்னெறி); 35. குன்று - மேருமலை; 37. வள்ளல் - வள்ளலாகிய இராமன்.

மிகைப் பாடல்கள்

1

கடல் காண் படலம்

மூன்றரைக் கோடியின் உகத்து ஓர் மூர்த்தியாய்த்
தான் திகழ் தசமுகத்து அவுணன், சாலவும்
ஆன்ற தன் கருத்திடை, அயனோடே மயன்
தோன்றுற நினைதலும், அவரும் துன்னினர். 11-1

வந்திடும் அவர் முகம் நோக்கி, மன்னவன்,
'செந் தழல் படு நகர் அனைத்தும் சீர் பெறத்
தந்திடும், கணத்திடை' என்று சாற்றலும்,
புந்தி கொண்டு அவர்களும் புனைதல் மேயினர். 11-2

2

இராவணன் மந்திரப் படலம்

மின் அவிர் குழைகளும் கலனும் வில் இட,
சென்னியின் மணி முடி இருளைச் சீறிட,
அன்னபேர் அவையின் ஆண்டு இருந்த ஆண்டகை
முன்னியது உணர்த்துவான், முறையின் நோக்கினன். 6-1

மோதரன் முதலிய அமைச்சர் தம் கணக்கு
ஓதும் நூறுயிர கோடியோரொடும்,
காது வெஞ் சேனையின் காவலோர் கணக்கு
ஓதிய வெள்ள நூறவர்கள்தம்மொடும், 10-1

கும்பகம் மேவியோன், குறித்த வீடணத்
தம்பியர்தம்மொடும், தருக்கும் வாசவன்
வெம் புயம் பிணித்த போர் வீரன் ஆதியாம்,
உம்பரும் போற்றுதற்கு உரிய, மைந்தரும், 10-2

மாலியவான் முதல் வரம்பு இல் முந்தையோர்
மேலவர்தம்மொடும், விளங்கு சுற்றமாம்
சால்வுறு கிளையொடும், தழுவி, மந்திரத்து
ஏலுறும் இராவணன் இசைத்தல் மேயினன்: 10-3

பின்னும் ஒன்று உரைத்தனன்: 'பிணங்கு மானிடர்
அன்னவர் அல்லர்; மற்று அரக்கர் என்பதற்கு
இந் நிலை பிடித்தனை; இறைவ! நீ' என,
முன் இருபக்கன் ஈது உரைத்து முற்றினன். 21-1

'எரி விழி நுதலினன், இசையும் நின் தவத்து
அருமை கண்டு, அளித்தனன் அழிவு இலாதது ஓர்
பெரு வரம் என்றிடின், பேதை மானிடர்
இருவரும் குரங்கும் என் செய்யல் ஆவதே?' 26-1

'கறை மிடற்று இறை அன்று; கமலத் தேவு அன்று;
நிறை கடல் துயில் பரன் அன்று; நின்று வாழ்
சிறு தொழில் குரங்கொடு சிறிய மானிடர்
உறு திறத்து உணர்ச்சியின் உறுதி யாவதோ?' 40-1

'ஓது பல் அருந் தவம் உஞற்றல் இலதேனும்,
கோதுறு குலச் சிறுமை கொண்டுடையதேனும்,
வாதுறு பகைத் திறம் மலிந்துடையதேனும்,
நீதியதில் நின்றிடின் நிலைக்கு அழிவும் உண்டோ? 52-1

'உந்து தமரோடு உலகினூடு பல காலம்
நந்துதல் இலாது இறைவன் ஆயிட நயந்தோ,
சிந்தையில் விரும்புதல்செய் மங்கையர் திறத்தோ,
புந்திகொடு நீ தவம் முயன்ற பொறை மேனாள்? 52-2

'ஆசைகொடு வெய்தில் இரு மானிடரை அஞ்சி,
காசு இல் ஒரு மங்கையவளைத் தனி கவர்ந்தும்,
கூசியதனால் விளையவும் பெறுதல் கூடாய்,
வீசு புகழ் வாழ்வு வெறிதே அழிவது ஆமோ? 52-3

'நிரம்பிடுகில் ஒன்றுஅதை நெடும் பகல் கழித்தும்,
விரும்பி முயல்வுற்று இடைவிடாது பெறல் மேன்மை;
வரும்படி வருந்தினும் வராத பொருள் ஒன்றை
நிரம்பும் எனவே நினைதல் நீசர் கடன், ஐயா! 52-4

'ஆசு இல் பல அண்டம் உனதே அரசுஅது ஆக
ஈசன் முன் அளித்தது, உன் இருந் தவ வியப்பால்;
நீசர் தொழில் செய்து அதனை நீங்கியிடலாமோ?—
வாச மலரோன் மரபில் வந்த குல மன்னா! 52-5

' ''ஆலம் அயில்கின்றவன் அருஞ் சிலை முறித்து,
வாலியை வதைத்து, எழு மராமரமும் உட்க,
கோல வரி வில் பகழி கொண்டுடையன்'' என்றார்;
சீலம் உறு மானிடன் எனத் தெளியலாமோ? 52-6

'ஆதிபரனும் அவன் அடித் துணை வணங்கி,
சீதையை விடுத்து, ''எளியர் செய் பிழை பொறுக்க'' என்று
ஓதல் கடனும்' என ஒருப்பட உரைத்தான்;
மூதுரை கொள்வோனும், 'அதுவே முறைமை' என்றான். 52-7

என்று அவன் உரைத்திட, இராவணனும், நெஞ்சம்
கன்றி, நயனத்திடை பிறந்தன கடைத் தீ;
'இன்று முடிவுற்றது உலகு' என்று எவரும் அஞ்ச,
குன்று உறழ் புயக் குவை குலுங்கிட நகைத்தான். 52-8

நகைத்து, இளவலைக் கடிது நோக்கி, நவில்கின்றான்:
'பகைத்துடைய மானுடர் வலிச் செயல் பகர்ந்தாய்;
திகைத்தனைகொலாம்; எனது சேவகம் அறிந்தும்,
வகைத்திறம் உரைத்திலை; மதித்திலை; என்?—எம்பி! 52-9

'புரங்கள் ஒரு மூன்றையும் முருக்கு புனிதன்தன்
வரங்களும் அழிந்திடுவதோ? மதியிலாதாய்!
தரம்கொடு இமையோர் எனது தாள் பரவ, யான் என்
சிரம்கொடு வணங்குவதும், மானுடன் திறத்தோ? 52-10

'பகுத்த புவனத் தொகை எனப் பகர் பரப்பும்,
மிகுத்த திறல் வானவரும், வேத முதல் யாவும்,
வகுத்து, அரிய முத்தொழில் செய் மூவரும் மடிந்தே
உகுத்த பொழுதத்தினும், எனக்கு அழிவும் உண்டோ? 52-11

'நிறம்தனில் மறம் தொலைய, நீ துயில் விரும்பி,
துறந்தனை, அருஞ் சமரம்; ஆதல், இவை சொன்னாய்;
இறந்துபட வந்திடினும், இப் பிறவிதன்னில்
மறந்தும் உளதோ, சனகன் மங்கையை விடுத்தல்?' 52-12

எனக் கதம் எழுந்து அவன் உரைக்க, இளையோனும்,
நினைத்தனன், மனத்திடை நிறுத்து உறுதி சொல்ல;
'சினத்தொடும் மறுத்து இகழ்வு செய்தனன்; இது ஊழின்
வினைத் திறம்; எவர்க்கும் அது வெல்வது அரிது அன்றே!' 52-13

கறுத்து அவன் உரைத்திடு கருத்தின் நிலைகண்டே,
'பொறுத்தருள் புகன்ற பிழை' என்று அடி வணங்கி,
உறுத்துதல் செய் கும்பகருணத் திறலினோனும்,
'மறுத்தும் ஒரு வாய்மை இது கேள்' என உரைத்தான்: 52-14

'ஏது இல் கருமச் செயல் துணிந்திடுதல் எண்ணி,
தீதொடு துணிந்து, பினும் எண்ணுதல் சிறப்போ?
யாதும் இனி எண்ணியதில் என்ன பயன்? ஐயா!
போதியது நம் அரசு, பொன்ற வரு காலம். 52-15

என, அவன் அடித் துணை இறைஞ்சி, வாய் புதைத்து,
இனிய சித்திரம் என ஏங்கி நின்று, தான்
நளின மலர்க் கண்கள் நீர் சொரிய, நல் நெறி
வினை பயில் வீடணன் விளம்பல் மேயினன்: 74-1

'சானகி, உலகு உயிர் எவைக்கும் தாய் எனல்
ஆனவள், கற்பினால் எரிந்தது அல்லது,
கோ நகர் முழுவதும் நினது கொற்றமும்,
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ?' 74-2

'ஈசன்தன்வயின் வரம் கொளும்முன்னம், யான் அவனை
வீசும் வான் சுடர் வரையொடும் விசும்பு உற எடுத்தேன்;
ஆசு இல் அங்கது கண்டு அவன் அரும் பதத்து ஊன்றக்
கூசி, என் வலி குறைந்திலென், பாதலத்து அமர்ந்தேன்; 116-1

'அமர்ந்து, நீங்குதற்கு அருமை கண்டு, ''அவன் பதம் அகத்தே
சுமந்து, நீ தவம் புரிக!'' எனச் சுக்கிரன் உரைப்ப,
தமம் திரண்டு உறும் புலப் பகை சிமிழ்த்திடத் தருக்கி
நிமிர்ந்து நின்றனென், நெடும் பகல் அருந் தவ நிலையின். 116-2

'நின்று பல் பகல் கழிந்திட, நிமலன் நெஞ்சு உருகி,
''நன்று, நன்று!'' என நயந்து, எனை வரும்படி அழைத்து,
''ஒன்றினாலும் நீ அழிவு இலாது உகம் பல கழியச்
சென்று வாழுதி'' எனத் தந்த வரம் சிதைந்திடுமோ? 116-3

'கார்த்தவீரியன், வாலி என்று அவர் வலி கடக்கும்
மூர்த்தம் என்னிடத்து இல் எனக் கோடலை; முதல் நாள்
சீர்த்த நண்பினர் ஆயபின், சிவன் படை உவர்மேல்
கோத்து, வெஞ் சமம் புரிந்திலென், எனது உளம் கூசி. 116-4

'இந்த மெய்ம்மை நிற்கு உரைப்பது என்? இவ் வரம் எனக்குத்
தந்த தேவனுக்குஆயினும் என் வலி தவிர்த்துச்
சிந்த ஒண்ணுமோ? மானிடர்திறத்து எனக்கு அழிவு
வந்தது என்று உரைத்தாய்; இது வாய்மையோ?—மறவோய்!
116-5

'ஆயது ஆக, மற்று அந்த மானுடவரோடு அணுகும்
தீய வான் குரங்கு அனைத்தையுஞ் செறுத்து, அற நூறி,
தூய வானவர் யாரையும் சிறையிடைத் தொடுத்துக்
காய்வென்' என்று தன் கண் சிவந்து இனையன கழறும். 1126-6

3 **இரணியன் வதைப் படலம்**

'ஓதும் ஆயிர கோடியின் உகத்து ஒரு முதல் ஆய்,
தாது உலாவிய தொடைப் புயத்து இரணியன் தமரோடு
ஆதி நாள் அவன் வாழ்ந்தனன்; அவன் அருந் தவத்துக்கு
ஏது வேறு இல்லை; யார் அவன்போல் தவம் இழைத்தார்?

[இப் படலத்தின் தொடக்கச் செய்யுளாக, 'வேதம் கண்ணிய' என்த் தொடங்கும் பாடலின் முன்னர், அமைந்துள்ளது.]

'இந்த இந்திரன் இமையவர் அவனுக்கு ஓர் பொருளோ?
உந்தும் அண்டங்கள் அனைத்தினும் உள்ள இந்திரரும்,
அந்த நான்முகர் உருத்திரர் அமரர் மற்று எவரும்,
வந்து, இவன் பதம் முறை முறை வணங்கிட வாழ்ந்தான். 2-1

'திருமகட்கு இறை உலகினும், சேண்படு புரம் மூன்று
எரிபடுத்திய ஈசன்தன் பொருப்பினும், ஏகி,
சுரர் எனப்படும் தூயவர் யாவரும் தொழுது, ஆங்கு
''இரணியாய நம!'' என்று கொண்டு ஏத்தல் கேட்டிருக்கும். 5-1

' ''ஓம் அரியாய நம!'' என ஒழிவுறுது ஓதும்
நாம நான் மறை விடுத்து அவன்தனக்கு உள்ள நாமம்,
காமமே முதல் குறும்பு எறி கடவுளர் முனிவர்-
ஆம் அது ஓதுகில், அவன்தனக்கு ஒப்பவர் யாரோ? 9-1

'ஆலும் வெவ் வலி அவுணர் கோன் அருந் தவப் பெருமை
ஏலுமோ, எமக்கு இயம்பிட? இறைவ! மற்று அவன் பேர்
மூல மா மறை இது என, மூஉலகு உள்ளோர்
தாலமே மொழிந்திட்டது சான்று எனத் தகுமால். 10-1

'குனிப்பு இலாத பல் ஆயிர கோடி அண்டத்தின்
நுனிக்கும் வானவர் முதலிய உயிர்த் தொகை நோக்கில்,
அனைத்தும் அன்னவன் ஏவலைத் தலைக்கொண்டு, அங்கு அவன் பேர்
நினைத்து வாழ்த்திட, மூவர்போல் ஒரு தனி நின்றான். 18-1

'அன்னவன், புகழ், சீலம், நல் அறம், தனி மெய்ம்மை,
உன்னும் நான்மறையோடு அருள் நீதியும் பொறையும்,
இன்ன யாவும் மற்று உருவு கொண்டுளது என உவந்தே,
மன்னுயிர்த் தொகை மகிழ்ந்திட, ஒரு தனி வாழ்ந்தான். 19-1

'நடுங்கி அந்தணன், நாப் புலர்ந்து அரும் புலன் ஐந்தும்
ஒடுங்கி, உள்ளுயிர் சோர்ந்து, உடல் பதைத்து, உளம் வெருவி,
''அடங்கும், இன்று நம் வாழ்வு'' என அயர்ந்து ஒருபடியாய்ப்
பிடுங்கும் மெல் உரை, புதல்வனுக்கு இனையன பேசும். 23-1

'என்று, அவ் வேதியன் இவை இவை இயம்பலும், இது கேட்டு,
ஒன்று மெய்ப்பொருள் உணர்ந்துள சிறுவனும், ''உரவோய்!
நன்று நீ எனக்கு உரைத்தது?'' என்று, இன் நகை புரிந்து, ஆங்கு,
''இன்று கேள் இதின் உறுதி'' என்று எடுத்து இவை உரைப்பான்: 24-1

'என்னும் வாசகம் கேட்டலும், எழுந்து நின்று, இறைவன்
பொன்னின் வார் கழல் பணிந்து, வாய் புதைத்து, அரும் புதல்வன்,
''மன்னர் மன்ன! யான் பழுது ஒன்றும் உரைத்திலென்; மரபால்
உன்னும் உண்மையை உரைத்தனென்; கேள்'' என உரைப்பான். 39-1

'அழிவு இல் வச்சிர யாக்கை என் அருந் தவத்து அடைந்தேன்;
ஒழிவு இல் ஆயிர கோடி கொள் உகம் பல கழியத்
தெளிவு பெற்று, இறை பூண்டுளேன்; யான் அலால் தெய்வம்,
மொழி இல் மூடரும், வேறு உளது ஆம் என்று மொழியார்.
55-1

'உயிர்க்கு உயிர் ஆகி நின்று உதவும் பான்மை, பார்
அயிர்க்குறும் நேயர் தம் செயலில் காண்டல்போல்,
பயிர்ப்பு உறும் அதனிலே பாசம் நீக்கி, வேறு
அயிர்ப்பு அறும் அறிவினில் அறிவர், சீரியோர். 67-1

'நான்முகத்து ஒருவனும், நாரி பாகனும்,
தான் அகத்து உணர்வதற்கு அரிய தத்துவத்-
தோன் இகத்தொடு பரம் இரண்டும் எங்குமாய்,
ஊனகத்து உயிரகத்து உலவும் மூர்த்தியான். 67-2

'வையமேல் இனி வரும் பகை உள எனின்,
வருவது ஒன்று என்றாலும்,
''உய்ய உள்ளுளே ஒருவனை உணர்ந்தனென்''
என்று என் முன் உரைசெய்தாய்;
செய்ய வேண்டுவது என் இனி? நின் உயிர்
செகுக்குவென்; சிறப்பு இல்லாப்
பொய்யிலாளனைப் பொருந்திய பெரும் பகை
போய பின், புகழ் ஐயா! 79-1

' ''இவனை ஏழ் நிலை மாளிகை உம்பர்மேல் ஏற்றிப்
புவனம்தன்னிலே நூக்கும்'' என்று அவுணர் கோன் புகல,
புவனம் உண்டவன் கழல் இணைப் புண்ணியன்தன்னைப்
பவனந்தன்னிலும் வெய்யவர் பற்றியே எடுத்தார். 98-1

'உற்று எழுந்தனர், மாளிகை உம்பர்மேல் கொண்டு,
கற்று அறிந்தவர்க்கு அரசனைக் கடுந் திறல் அவுணர்
பற்றி நூக்கலும், பார் மகள் பரிவுடன், நார் ஆர்
நல் தவற்கு ஒரு தீங்கு இலை என அவண் நயந்தாள். 98-2

'ஓதத்தில் மிதந்து ஓடிய கலமேல்
தீது அற்றே தெளிவோடு திகழ்ந்தான்;
வேதத்து உச்சியின் மெய்ப் பொருள் நாமம்
ஓதிப் பின்னும் உரைப்பதை உற்றான்: 103-1

'கயம் மேவும் இடங்கர் கழற் கதுவ,
பயம் மேவி அழைத்தது பன்முறை உன்
நயம் மேவிய நாமம்; மதக் கரி அன்று
உயுமாறு உதவுற்றிட, வந்திலையோ? 112-1

'வேதன் சிரம் ஒன்றை வெறுத்தமையால்,
காதும் பிரமக் கொலை காய, உலைந்து,
ஓது உன் திரு நாமம் உரைத்த சிவன்
ஏதம் கெட வந்து, இரவு ஓட்டிலையோ? 112-2

'அது கண்டு, அடல் வஞ்சகர், அப் பொழுதில்,
கதம் மிஞ்சிய மன்னன் முனே கடுகி,
''புதல்வன் இறவாது பொருப்பு முநீர்
மிதவைப்பட மேவினன்'' என்றனரால். 113-1

'மிடல் கொண்டு அவர் வீசு கரம் பொடிபட்டு
உடல் சிந்திட, உட்கினர்; ''மற்று அவனுக்கு
ஒடிவு ஒன்று இலது'' என்று அவர் ஓதும் முனம்,
விடம் அஞ்ச எழுந்தனன், வெய்யவனே. 116-1

'நாணி நின் எதிரே ஆண்டு நடுவதாயினது ஓர் செம் பொன்
தூணில் நின்றனனே அன்றி, தோன்றியது இலது' என்று ஒன்ற,
வேணுதண்டு உடையோன் வெய்ய வெள்ளியே விளம்ப, வெள்ளி
காண வந்து அனைய சீயம் கணத்திடைக் கதிர்த்தது அம்மா!
128-1

'ஈது அவன் மகிழ்தலோடும், இரணியன் எரியின் பொங்கி,
''சாதலை இல்லா என் முன் தருக்குறு மாயம் எல்லாம்
போதும்; ஓர் கணத்தில் இன்னே போக்குவேன் போக்குவேன்'' என்று
ஓதினன், அண்ட கோளம் உடைந்திட உருத்துச் சொல்வான்.
128-2

அப் புறத்து அளவு இல் கோடி அண்டங்கள் அனைத்து உள்ளாக,
வெப்புறும் அனந்த கோடி வெள்ளம் என்று உரைப்பர், மேலாம்
துப்புடைக் கனகன் சேனைத் தொகை; அவை அனைத்தும் செந் தீ
ஒப்புற நகைத்து, நீருய் எரித்தது, ஓர் கடவுள் சீயம். 142-1

'இத் திறம் அமரின் ஏற்று, ஆங்கு இருவரும் பொலிந்தகாலை,
பொய்த்திறற் கனகன் வேண்டும் போர் பல இயற்றி, பின்னும்,
எத்தனை கோடி கோடி மாயங்கள் இயற்ற, நோக்கி,
முத்தனும் முறுவல் கொண்டு, ஆங்கு அவை எலாம் முடித்து நின்றுன்.
149-1

நெருப்பு எனக் கனகன் சீறி, நிலம் முதல் புவனம் அஞ்ச,
பொருப்பு இனம் எவையும் சிந்திப் பொடிபடக் குதித்து, போர் வாள்
தரிப்புறச் சுழற்றித் தாக்க வருதலும், தரும மூர்த்தி
பருப்பதம் கடந்த தோளான் பதம் இரண்டு ஒரு கை பற்று,
149-2

'அழிவு இலான் வயிர மார்பத்து, அமலன் மானுடம் ஆம் சீய
எழில் உலாம் உருவு கொண்டு, ஆங்கு இரு கையின் உகிர் வாள் ஓச்சி,
கழியவே பிளத்தலோடும், கனக மா மேரு விண்டு
கிழியவே, குருதி ஓதம் கிளர்ந்தபோல் கிளர்ந்தது அம்மா!
153-1

'இரணியன் வயிர மார்பும் இரு பிளவாகக் கீறிக்
கரை அறும் அவுண வெள்ளப் படை எலாம் கடிதின் மாய்த்து,
தரை முதல் ஆன அண்டப் பரப்பு எலாம் தானே ஆகி,
கருணை கொள் அமலன் பல் வேறு உயிர் எலாம் காத்து நின்றுன்.
153-2

'மங்கை ஒரு பாகன் முதல் அமரர், மா மலர்மேல்
நங்கைதனை ஏவுதலும், நாராயணக் கடவுள்
சிங்கல் இலா மானுடம் ஆம் சீய உருவம் போக்கி,
பொங்கு பரஞ் சுடராய் எங்கும் பொலிய நின்றுன். 164-1

'ஈது ஆங்கு அமலன் இயம்ப, எழிற் புதல்வன்
நார் தாங்கு அரு மறையும் நாடற்கு அரிய செழும்
பாதாம்புய மலரில் பல் முறையும் தான் பணிந்து,
'வேதாந்த மெய்ப்பொருளே!' என்று விளம்பலுற்றுன். 168-1

' ''சீலம் உறுவோய்!' உனக்குச் செப்பும் திருநாமம்
மேலோர் புகழ் பிரகலாதன்'' என, விரும்பி
நால் வேத வாய்மை நனி மா தவத்தோரும்,
மேலாம் அமரர்களும், யாரும், விளம்ப' என்றுன். 173-1

4 வீடணன் அடைக்கலப் படலம்

சிரத்தொகை அனைத்தையும் துளக்கி, தீ எழக்
கரத்தொடு கரம் பல புடைத்து, 'காளை! நீ
உரைத்திடும் உறுதிகள் நன்று, நன்று!' எனச்
சிரித்தனன், கதம் எழுந்து இனைய செப்புவான்: 1-1

'அன்று வானரம் வந்து, நம் சோலையை அழிப்ப,
''கொன்று தின்றிடுமின்'' என, ''தூதரைக் கோறல்
வென்றி அன்று'' என விலக்கினை; மேல் விளைவு எண்ணித்
துன்று தாரவன்-துணை எனக் கோடலே துணிந்தாய். 6-1

'நேர் வரும் உறுதியின் நிலை உரைத்தனென்;
சீரிது என்று உணர்கிலை; சீறிப் பொங்கினாய்;
ஓர்தரும் அறிவு இலார்க்கு உரைக்கும் புந்தியார்,
தேர்வுறின், அவர்களின் சிறந்த பேதையோர்.' 11-1

'மற்று ஒரு பொருள் உளது என்? நின் மாறு இலாக்
கொற்றவ! சரண்' எனக் கூயது ஓர் உரை
உற்றது, செவித்தலத்து; ஐயன் ஒல்லென
நல் துணைவரை முகம் நயந்து நோக்குறு, 33-1

'எந்தையே இராகவ! சரணம்' என்ற சொல்
தந்தவர் எனைவரோ? சாற்றுமின்!' என,
மந்தணம் உற்றுழீஇ, வய வெஞ் சேனையின்
முந்தினர்க்கு உற்றதை மொழிகுவாம்அரோ: 33-2

'மேலைநாள், அமுதமும் விடமும் வெண்கடல்
மூலமாய் உதித்தன; முறையின் முற்றுதல்
சாலுமோ, ஒன்று எனக் கருதல் தக்கதோ—
ஞால நாயக!—தெரிந்து எண்ணி நாடிலே? 86-1

'ஒருவயிறு உதித்தனர், அதிதி, ஒண் திதி,
இருவர்; மற்று அவரிடத்து எண்ணில், எம்பிரான்!
சுரரொடு சுடு சினத்து அவுணர் தோன்றினர்;
கருதின் மற்று ஒன்று எனக் கழறலாகுமோ? 86-2

'எப்பொருள்? ஏவரே? உலகின் ஓர் முறை
ஒப்பினும், குணத்து இயல் உணரின், பேதமாம்
அப் பொருள் நலன் இழிவு இரண்டும் ஆய்ந்து, அகம்
மெய்ப் பொருள் கோடலே விழுமிது' என்பரால். 86-3

'ஆவலின் அடைக்கலம் புகுந்துளான் கருத்து
ஓவலின் இவர் தமக்கு உணர ஒண்ணுமோ?
தேவர்கள் தேவன் நீ; தெளியின், அன்னவர்க்
கூவி, இங்கு அறிவது கொள்கை ஆகுமால். 91-1

மோதி வந்து அடரும் சீய முனிவினுக்கு உடைந்து, வேடன்
மீது ஒரு மரத்தில் சேர, வேண்டு உரை அரிக்குச் சொல்லி,
பேதம் அற்று இருந்தும், அன்னான் பிரிந்த வஞ்சத்தை ஓர்ந்தும்,
காதலின் கனி காய் நல்கிக் காத்ததும் கவியது அன்றோ? 116-1

என்ன முன் பருதிமைந்தன் எழுந்து அடி வணங்கி, 'எந்தாய்
சொன்னதே துணிவது அல்லால், மறுத்து ஒரு துணிவும் உண்டோ?
உன் உளத்து உணராது எது? உனக்கு அரிது யாதோ?' என்னாப்
பன்னி, மற்று அவரை எல்லாம் பார்த்திருந்து உரைக்கலுற்றான். 117-1

வானவர் இதனைக் கூற, வலங்கொடு தானை வைப்பை,
தானை அம் தலைவரோடும் சார்ந்த வீடணனும், 'தாழாது
ஊனுடைப் பிறவி தீர்ந்தேன்' என மனத்து உவந்து, ஆங்கு அண்ணல்
தேன் உகு கமல பாதம் சென்னியால் தொழுது நின்றான். 151-1

5

இலங்கை கேள்விப் படலம்

திரு மறு மார்பனை இறைஞ்ச, செல்வனும்,
அருள் சுரந்து, அரக்கனை அருகு இருத்தியே,
'அரு வரை அனைய தோள் அறிஞ! நீ புகல்
பொருள் உளது எமக்கு; அது புகலக் கேட்டியால். 14-1

மருக் கிளர் தாமரை வாச நாள்மலர்
நெருக்கிடு தடம் என இருந்த நீதியான்,
திருக் கிளர் தாமரை பணிந்த செம்மலை,
'இருக்க, ஈண்டு எழுந்து' என இருந்தகாலையில். 14-2

'வலம் பெறு தசமுகன் தவத்தின் மாட்சி கண்டு,
இலங்குறு மலர் அயன் எண் இல் யோசனைத்
தலம் கொடு சமைத்து, நல் நகரும் தந்து, இதற்கு
''இலங்கை'' என்று ஒரு பெயர் ஈந்த மேலைநாள். 18-1

'ஆய இந் நகரிடை, அரக்கர் ஆகிய
தீயவர் தொகையினைத் தெரிக்கின், எண் இல் நாள்
போயிடத் துணிந்து, அவை புந்தி ஓரினும்
ஓயுமோ? அறிந்தவை உரைப்பென், ஆழியாய்! 19-1

'பேயர்கள் என்ன யான் பிதற்ற, பேர்கிலா
மா இரும் புற மதில் வகுத்த மாப் படை
ஏயின நாள் எலாம் எண்ணும் பித்தர்கள்
ஆயிர வெள்ளமே அறிந்தது, ஆழியாய்! 28-1

'ஈங்கு இவை அன்றியும், ஏழு தீவினும்,
ஓங்கு பாதலத்தினும், உயர்ந்த வானத்தும்,
தாங்கிய சக்கர வாளச் சார்பினும்,
ஆங்கு அவன் படைதனக்கு அளவை இல்லையால். 30-1

'ஆயவர் அளவிலர், அறத்தை நுங்கிய
தீயவர், தேவரைச் செறுத்து, தேவர் ஊர்
காய் எரி படுத்திய கடுமையார்களில்,
நாயக! அறிந்தமை நவிலக் கேட்டியால். 32-1

'இன்னும் மைந்தர்கள் இயம்பின், மூவாயிர கோடி
என்ன உண்டு; அவர் இரதமும், கரிகளும், பரியும்,
துன்னும் ஆள் வகைத் தொகுதியும், செறிந்திட, மேல்நாள்
பன்னகாதிபன் உலகினைப் பரிபவப் படுத்தோர். 51-1

கோ...ன் குடைப்பரா கடு களிற்றை மீக்கொள்ளா
வாடலிந்திர .... ளடைவர வமரிற்
கோடி வெங்கரி கோள் அரி கண்டெனக் குலையா
ஓடினன் தரு முதலியர் பிற விழுந் துருகி. 56-1

'பண்டு அவன் தவத்து உமை ஒரு பாகன் முன் கொடுக்கும்
திண் திறல் பெறும் வானகத் தேர் ஒன்றின் இவர்ந்தே,
அண்ட கோடிகள் எவற்றினும் புகுந்து, அரசுரிமை
கொண்டு மீளுவான் ஒரு கணத்து இலங்கையில், கொடியோன். 58-1

'சுற்று தன் கிளைப் பரப்பொடும் தொலைவு இன்றி வாழ்தற்கு
உற்ற மூன்றரைக் கோடியின் உகம் அவன் தவத்தின்
பெற்றனன், சிவன் கொடுத்திடப் பெரு வரம்; பெரியோய்!
இற்று அவன் செயல்' என்று கொண்டு இனையன உரைப்பான்:
58-2

'ஈது நிற்க, மற்று எந்தை! நீ ஏவிய தூதன்
மோது வாரிதி கடந்து, ஒரு கணத்தினில் முடுகி,
ஆதி நாயகிதன்னைக் கண்டு, அணி நகர் அரணும்,
காது வெஞ் சினத்து அரக்கர்தம் வலிமையும், கடந்தான். 59-1

மழுவும் ஈட்டியும் தோட்டியும் முசலமும் மலையும்
தழுவு மாப் படை முடிவு இலாது அதனொடும் தாமும்,
எழுவர் சூட்சியின் தலைவர்கள், கிளர் ஒளி இரவிக்
குழுவின் வாய்ப்படு புழு என, வழுவுறக் குறைந்தார். 63-1

'இலங்கை வெந்தது; வேறு இனி இயம்புவது எவனோ?
அலங்கலோடு செஞ் சாந்தமும், அன்று தான் அணிந்த
கலன்களோடும் அச் சாத்திய துகிலொடும், கதிர் வாள்
இலங்கை வேந்தனும் விசும்பிடை ஏழு நாள் இருந்தான். 65-1

6 வருணனை வழி வேண்டு படலம்

என்று உரைத்து, இன்னும் சொல்வான்: 'இறைவ! கேள்; எனக்கு
என்றும் மெய்ப் பகைவர் ஆகி, எழு பாதலத்தின் ஈறுய் [வெய்யோர்
நின்றுள தீவின் வாழ்வார், நிமல! நின் கணையால், ஆவி
கொன்று எமைக் காத்தி!' என்றான்; குரிசிலும் கோறலுற்றான்.
78-1

7 சேது பந்தனப் படலம்

சாற்று மா முரசு ஒலி கேட்டு, தானையின்
ஏற்றமோடு எழுந்தனர், 'எறி திரைக் கடல்
ஊற்றமீது ஒளித்து, ஒரு கணத்தில் உற்று, அணை
ஏற்றுதும்' எனப் படைத் தலைவர் யாருமே. 4-1

வல் விலங்கு வழாத் தவர் மாட்டு அருள்
செல் வலம் பெறுஞ் சிந்தையின் தீர்வரோ?
'இவ் விலங்கல் விடோம் இனி' என்பபோல்,
எல் வயங்கும் இரவி வந்து எய்தினன். 25-1

தம் இனத்து ஒருவற்கு ஒரு சார்வு உற,
விம்மல் உற்று, விடாது உறைவோர்கள்போல்,
செம்மை மிக்க குரக்கினம் சேர்க்கையால்,
எம் மலைக் குலமும் கடல் எய்துமே. 29-1

இன்னவாறு அங்கு எழுபது வெள்ளமும்,
அன்ன சேனைத் தலைவரும், ஆழியைத்
துன்னி நின்று, விடாது இடை தூர்த்தலால்,
பொன் இலங்கை தொடுத்து அணை புக்கதே. 65-1

8 ஒற்றுக் கேள்விப் படலம்

என்று, நளனைக் கருணையின் தழுவி, அன்பாய்
அன்று வருணன் உதவும் ஆரமும் அளித்து,
துன்று கதிர் பொற்கலனும் மற்றுள தொகுத்தே,
'வென்றி, இனி' என்று, படையோடு உடன் விரைந்தான். 4-1

இறுத்தனன்—ஏழு-பத்து வெள்ளமாம் சேனையோடும்,
குறித்திடும், அறுபத்தேழு கோடியாம் வீரரோடும்,
பொறுத்த மூ-ஏழு தானைத் தலைவர்களோடும், பொய் தீர்
அலத்தினுக்கு உயிராய் என்றும் அழிவு இலா அமலன் அமமா! 13-1

[நளனுக்கு முடி சூட்டு படலம்]

என்று மகிழ் கொண்டு, இரவி மைந்தனை இராமன்,
'வன் திறலினுன் நளன் வகுத்த அணை, மானக்
குன்றம் நெடுநீரின்மிசை நின்று இலகு கொள்கை
நன்று என முயன்ற தவம் என்கொல்? நவில்க!' என்றான். 13-2

நவிற்றுதிர் எனக் கருணை வள்ளல் எதிர் நாமக்
கவிக்கு இறைவன் எய்தி, இரு கை மலர் குவித்தே,
'புவிக்கு இறைவ! போதின் அமர் புங்கவனிடத்தே
உவப்புடன் உதித்தவர்கள் ஓர் பதின்மர் என்பார். 13-3

'மலரவனிடத்தில் வரு காசிபன், மரீசி,
புலகனுடன் அத்திரி, புலத்தியன், வசிட்டன்,
இலகு விசுவன், பிருகு, தக்கன், இயல்பு ஆகும்
நலம் மருவு அங்கிரவு எனப் புகல்வர் நல்லோர். 13-4

'மக்கள்தனில் ஒன்பதின்மர் வானம் முதலாக
மிக்க உலகைத் தர விதித்து, விசுவப் பேர்
தொக்க பிரமற்கு ஒரு தொழில்தனை விதித்தான்
அக் கணம் நினைத்தபடி அண்டம் முதல் ஆக. 13-5

'அன்ன தொழிலால் விசுவகன்மன் எனல் ஆனன்,
பொன்னுலகை ஆதிய வகுத்திடுதல் போல,
நென்னல் இகல் மாருதி நெருப்பினில் அழிந்த
நன் நகரம் முன்னையினும் நன்கு உற அளித்தான். 13-6

'மூ-உலகின் எவ் எவர்கள் முன்னு மணி மாடம்
ஆவது புரிந்து, மயன் ஆகவும் இருந்தான்;
தேவர் இகல் மா அசுரர் சொற்ற முறை செய்தற்கு
ஆவளவில் வானவர்கள் தச்சன் எனல் ஆனன். 13-7

'அன்னவன் இயற்கை அறிதற்கு அரிய; மேல்நாள்
பன்னு மறை அந்தணன் விதித்தபடி, பார்மேல்
மன்னும் இறையோர் எவரும் வந்தபடி தானே
உன்னும் அவன் மைந்தன் நளன் என்றிட உதித்தான். 13-8

'தாயரொடு தந்தை மகிழும் தனையன், வானின்
மேய மதி போல வளர் மெய்யின் மணி மாட
நாயகம்அது ஆன திரு வீதியில் நடந்தே
ஏய சிறு பாலருடன் ஆடி மனை எய்தும். 13-9

'சிந்தை மகிழ் இல்லில் விளையாடு சிறுவன், தேர்
தந்தை வழிபாடுபுரியும் கடவுள்தன்னை
வந்து திகழ் மா மணி மலர்த்தவிசினோடே
கந்த மலர் வாவியினிடைக் கடிதின் இட்டான். 13-10

'மற்றைய தினத்தின் இறை எங்கு என மருண்டே
பொற்றொடி மடந்தையை விளித்து, ''உரை'' என, போய்
நல் தவ மகச் செயல் நடுக்கி, அயல் நண்ணிச்
சொற்றனள் எடுத்து; வழிபாடு புரி தூயோன், 13-11

'பூசனை புரிந்தவன் வயத்து இறை புகாமே
கோசிகம் அமைத்து, மணி மாடம்அது கோலி,
நேசம் உற வைத்திடவும், நென்னல் என ஓடி
ஆசையின் எடுத்து, அவனும் ஆழ்புனலில் இட்டான். 13-12

'இப்படி தினந்தொறும் இயற்றுவது கண்டே
மெய்ப் புதல்வனைச் சினம் மிகுத்திட வெகுண்டும்,
அப்படி செய் அத்திறம் அயர்த்திலன்; ''இவன்தன்
கைப்படல் மிதக்க'' என ஓர் உரை கதித்தான். 13-13

'அன்று முதல் இன்னவன் எடுத்த புனல் ஆழா
என்று அரிய மாதவர் இசைத்தபடி இன்னே
குன்று கொடு அடுக்க, நிலைநின்றது, குணத்தோய்!'
என்று நளன் வன்திறம் எடுத்துமுன் இசைத்தான். 13-14

சொற்றவை அனைத்தையும் கேட்டு, தூய் மறை
கற்றவர் அறிவுறும் கடவுள், 'இத் தொழில்
முற்றுவித்தனை உளம் மகிழ, மொய்ம்பினோய்!—
மற்று உனக்கு உரைப்பது என், முகமன்?—வாழியாய்!' 13-15

'ஐயன் நல் இயற்கை, எப் பொருளும் அன்பினால்
எய்தினர் மகிழ்ந்திட ஈயும், எண்ணினால்;
செய் தொழில் மனக்கொள, செய்த செய்கை கண்டு
உய் திறம் நளற்கும் அன்று உடைமை ஆதலான். 13-16

'இத் திறம் புரி நளற்கு இன்பம் எய்தவே
வித்தக இயற்றிட வேண்டும்' என்றனன்;
உத்தமன் உரைப்படி உளுற்றற்கு எய்தினார்
முத் திறத்து உலகையும் ஏந்தும் மொய்ம்பினார். 13-17

இங்கு இவை தாதையை எண்ணும் முன்னமே
அங்கு அவன் வணங்கினன், அருகின் எய்தினான்;
'புங்கவ நின் மகற்கு இனிய பொன் முடி
துங்க மா மணிக் கலன் தருதி, தூய்மையாய்!' 13-18

என்றலும், மணி முடி, கலன்கள், இன் நறுந்
துன்று மா மலர்த் தொடை, தூய பொன்-துகில்,
குன்று எனக் குவித்தனன்; கோல மா மலர்
மன்றல் செய் விதானமும் மருங்கு அமைத்து அரோ. 13-19

முடி புனை மண்டபம் ஒன்று முற்றுவித்து,
இடி நிகர் பல் இயம் இயம்ப, வானரர்
நெடிய வான் கங்கையே முதல நீத்த நீர்
கடிது கொண்டு அணைந்தனர் கணத்தின் என்பவே. 13-20

நளன்தனை விதிமுறை நானம் ஆடுவித்து,
இளங் கதிர் அனைய பொன்-துகிலும் ஈந்து, ஒளிர்
களங்கனி அனையவன் ஏவ, கண் அகல்
வளம் திகழ் மண்டப மருங்கின் எய்தினான். 13-21

ஆனதோர் காலையின் அருக்கன் மைந்தனும்
ஏனைய வீரரும் இலங்கை மன்னனும்
வானரர் அனைவரும் மருங்கு சூழ்வர,
தேன் நிமிர் அலங்கலும் கலனும் சேர்த்தியே, 13-22

பொலங்கிரி அனைய தோள்-தம்பி போந்து, ஒளி
இலங்கிய மணி முடி இரு கை ஏந்தினான்,
அலங்கல் அம் தோள் நளற்கு அன்பின் சூட்டினான்—
'குலங்களோடு இனிது வாழ்க!' என்று கூறியே. 13-23

இளையவன் திரு மலர்க் கையின் ஏந்திய
ஒளி முடி புனைந்திட உலகம் ஏழினும்
அளவு இலா உயிர்த்தொகை அனைத்தும் வாழ்த்தியே,
'நளன் இயற்றிய தவம் நன்று' என்று ஓதினார். 13-24

முடி புனை நளன் எழுந்து, இறைவன் மொய் கழல்
அடிமிசை வணங்கிட, அவனுக்கு அந்தம் இல்
படி புகழ் ஆசிகள் பகர்ந்து, 'பார்மிசை
நெடிது உற நின் குலம்!' என நிகழ்த்தினான். 13-25

மற்றையர் அனைவரும் அருள் வழங்கவே
பொன்-திரள் மணி முடி புனைந்த போர்க் களிறு
உற்று, அடி வணங்கிட, உவந்து தாதையும்,
பெற்றனன் விடை கொடு, பெயர்ந்து போயினான். 13-26

இன்னணம் நிகழ்ந்தபின், இனிதின், எம்பிரான்
தன் நிகர் சேதுவை நோக்கி, தையலாள்
இன்னல் தீர்த்திட எழுந்தருள எண்ணினான்;
பின் அவண் நிகழ்ந்தமை பேசுவாம்அரோ. 13-27

கேட்டலும், நளன் என்று ஓதும் கேடு இலாத் தச்சன், கேள்வி
வாட்டம் இல் சிந்தையான், தன் மனத்தினும் கடுகி, வல்லே
நீட்டுறும் அழிவு இல்லாத யோசனை நிலையதாகக்
காட்டினன், மதிலினோடும் பாசறை, கடிதின் அம்மா! 14-1

போயினன், அமலன் பாதம் பொருக்கென வணங்கி, 'இன்னே
ஆயினது அணி கொள் பாடி நகர் முழுது, அமல!' என்றான்;
நாயகன்தானும், வல்லே நோக்கினன் மகிழ்ந்து, 'நன்று!' என்று
எயினன், எவரும் தம்தம் பாசறை இருக்க என்றே. 16-1

அவ் வகை அறிந்து நின்ற வீடணன், அரியின் வீரர்க்கு
ஒவ்வுற உருவம் மாறி அரக்கர் வந்தமை அங்கு ஓத,
செவ்விதின் மாயச் செய்கை தெளிந்திடுமாறு, தாமே
கைவலியதனால் பற்றிக் கொண்டனர், கவியின் வீரர். 25-1

என அவர் இயம்பக் கேட்ட இறைவனுக்கு, இலங்கை வேந்தன்
தனது ஒரு தம்பி, 'அன்னோர் சாற்றிய வாய்மை மெய்யும்
எனது ஒரு மனத்தில் வஞ்சம் இருந்ததும், இன்னே காண்டி;
நினைவதன்முன்னே விஞ்சை நீக்குவென்' என்று நேர்ந்தான்.
29-1

ஆங்கு அவர் புகலக் கேட்ட ஐயனும், அவரை நோக்கி,
'ஈங்கு இது கருமமாக எய்தினீர்என்னின், நீர் போய்,
தீங்கு உறும் தசக்கிரீவன் சிந்தையில் தெளியுமாறே
ஓங்கிய உவகை வார்த்தை உரையும்' என்று ஓதலுற்றான். 32-1

இன்னவாறு இவர்தம்மை இங்கு ஏவிய
மன்னர் மன்னவன் ஆய இராவணன்
அன்ன போது அங்கு அளவு இல் அமைச்சரோடு
உன்னும் மந்திரத்து உற்றதை ஓதுவாம்: 38-1

சொல்லும் மந்திரச் சாலையில், தூய் மதி
நல் அமைச்சர், நவை அறு கேள்வியர்,
எல்லை இல்லவர்தங்களை நோக்கியே,
அல் அரக்கர் பதியும் அங்கு ஓதுவான். 41-1

'ஈது எலாம் உரைத்து என் பயன்? இன்று போய்க்
காதி, மானுடரோடு கவிக் குலம்
சாதல் ஆக்குவென், தான் ஓர் கணத்து' எனும்
போதில், மாலியவானும் புகலுவான்: 46-1

என்னும் வாய்மை இயம்புறு போதினில்,
முன்னமே சென்ற ஒற்றர் முடுகி, 'எம்
மன்னவர்க்கு எம் வரவு உரைப்பீர்!' என,
துன்னு காவலர்தம்மிடைச் சொல்லினர். 52-1

வருணன் அஞ்சி, வழி கொடுத்து 'ஐய! நின்
சரணம்' என்று அடி தாழ்ந்து, அவன் தன் பகை
நிருதர் வெள்ளம் அனந்தம் நிகழ்த்து முன்,
திரிபுரச் செயல் செய்தது, அங்கு ஓர் கணை. 60-1

செவித் துளை இருபதூடும், தீச் சொரிந்தென்னக் கேட்டு,
புவித்தலம் கிழிய, அண்டம் பொதிர் உற, திசையில் நின்ற
இபத் திரள் இரிய, வானத்து இமையவர் நடுங்க, கையால்
குவித் தடம் புயமே கொட்டி, கொதித்து இடை பகரலுற்றான். 66-1

தானை அம் தலைவன் ஈது சாற்றலும், தறுகண் வெம் போர்க்
கோன் அழன்று உருத்து, 'வீரம் குன்றிய மனிதரோடு
வானரக் குழுவை எல்லாம் வயங்கும் என் கரத்தின் வாளால்
ஊன் அறக் குறைப்பென் நாளை, ஒரு கணப் பொழுதில்' என்றான்! 70-1

மன்னவர் மன்னன் கூற, மைந்தனும் வணங்கி, 'ஐயா!
என்னுடை அடிமை ஏதும் பிழைத்ததோ? இறைவ! நீ போய்,
"மன்னிய மனித்தரோடும் குரங்கொடும் மலைவென்" என்றால்,
பின்னை என் வீரம் என்னும்?' என்றனன், பேசலுற்றான்: 70-2

'இந்திரன் செம்மல் தம்பி, யாவரும் எவரும் போற்றும்
சந்திரன் பதத்து முன்னோன்' என்றனர்; 'சமரை வேட்டு,
வந்தனர்; நமது கொற்றம் வஞ்சகம் கடப்பது என்னும்
சுந்தரன் அவனும் இன்னோன்' என்பதும் தெரியச் சொன்னார். 75-1

எரி எனச் சீறி, இவ்வாறு உரைத்து, இரு மருங்கில் நின்ற
நிருதரைக் கணித்து நோக்கி, 'நெடுங் கரி, இரதம், வாசி,
விருதர்கள் ஆதி வெள்ளப் படைத் தொகை விரைந்து, நாளைப்
பொரு திறம் அமையும்' என்னா, புது மலர்ச் சேக்கை புக்கான். 88-1

9 இலங்கை காண் படலம்

கண்டு அகம் மகிழ்ந்து, ஆங்கு அண்ணல், கடி நகர் இலங்கை மூதூர்
விண் தலம் அளவும் செம் பொற் கோபுரம், விளங்கும் வீதி,
மண்டபம், சிகர கோடி, மாளிகை, மலர்க் கா ஆதி
எண் திசை அழகும் நோக்கி, இளவலுக்கு இயம்புகின்றான். 6-1

10 இராவணன் வானரத் தானை காண் படலம்

'ஏறிட்ட கல்லு வீழும் இடம் அற, எண்கினாலே
நாறு இட்டதென்ன ஒவ்வோர் ஓசனை நாலுபாலும்
சூறிட்ட சேனை நாப்பண் தோன்றுவோன் இடும்பன் என்றே
கூறிட்ட வயிரத் திண் தோள் கொடுந் தொழில் மடங்கல் போல்வான்.
27-1

'மற்று இவன் படையில் ஒன்னார் அன்றி, வானவர்களே வந்து
உற்றனர் எனினும், பற்றி உயிர் உகப் பிசைந்திட்டு ஊத,
கொற்றவன் அருளும் கொண்டோன்; குடா வடிக்கு இறைவன்; கூற்றம்
பெற்றவன்; அடைந்தோர்தம்மை உயிர் எனப் பேணும் நீரான். 27-2

'ஆங்கு அவன் எதிரே வேறு ஓர் ஆடகக் குன்றம் ஒன்றை
வாங்கு நீர் மகரவேலை வந்து உடன் வளைந்ததென்ன,
ஓங்கு மைம் முகத்தின் தானையுள் பொலிந்திடுவான், வெற்றி
ஓங்கிய குவவுத் திண்ணை தோள் வினதன் என்று உரைக்கும் வெய்யோன்.
27-3

'அன்னவன்தனக்கு வாமத்து ஐம்பது கோடி யூகம்
தன்னை வந்து இடையில் சுற்ற, தட வரை என்ன நிற்பான்,
கொல் நவில் குலிசத்து அண்ணல் கொதித்து எதிர்கொடுக்கு மேனும்,
வென்னிடக் குமைக்கும் வேகதெரிசி என்று உரைக்கும் வீரன். 27-4

பிளக்கும் மண்பதையும், நாகர் பிலனையும்; இளக்கும் வேரோடு
இளக்கும் இக் குடுமிக் குன்றத்து இனம் எலாம் பிடுங்கி, ஏந்தி,
அளக்கர் கட்டவனும் மாட்டாது அலக்கணுற்றிட விட்டு, ஆர்க்கும்
துளக்கம் இல் மொய்ம்பர் சோதிமுகனும் துன்முகனும் என்பார். 27-5

'குன்றொடு குணிக்கும் கொற்றக் குவவுத் தோள் குரக்குச் சேனை
ஒன்று பத்து ஐந்தொடு ஆறு கோடி வந்து ஒருங்கு சுற்ற,
மின் தொகுத்து அமைந்த போல விளங்கு எயிறு இலங்க, மேருச்
சென்றென வந்து நிற்பான், திறல் கெழு தீர்க்கபாதன். 27-6

'நூற்றிரண்டாய கோடி நோன் கவித் தானை சுற்ற,
காற்றின் மா மகற்குக் கீழ்பால் கன வரை என்ன நிற்பான்,
கூற்றின் மா மைந்தன்; கூற்றும் குலுக்கமுற்று அலக்கண் எய்தச்
சீற்றமே சிந்தும் செங் கண் ததிமுகன் என்னும் சீயம். 27-7

'நாடில், இங்கு இவர் ஆதியாய் நவின்ற மூ-எழுவர்
ஆடல் வெம் படைத் தலைவர்கள் ஆறு பத்து ஏழு
கோடி வீரர்கள், குன்று எனக் குவவிய தோளாய்!
கூடு சேனையும் எழுபது வெள்ளமாய்க் குறிப்பார். 33-1

'அழிவு இலா வலி படைத்துள நம் படை அரக்கர்
ஒழிவு இலாத பல் ஆயிர வெள்ளத்துக்கு உறை ஓர்
துளியும் ஒவ்விடா எழுபது வெள்ளத்தின் தொகை சேர்
எளிய புன் குரங்கு என் செயும்?' என்றனன், இகலோன். 35-1

11 மகுட பங்கப் படலம்

பிடித்தவன் விழித் துணை பிதுங்கிட நெருக்கி,
இடித்து அலம்வரக் கதறி எய்த்திட, இரங்காது
அடிக் கொடு துகைத்து அலை கடற்குள் ஒரு கையால்
எடுத்து உக, இராவணன் எறிந்து, இகலின் ஆர்த்தான். 22-1

எறிந்திட விழுந்து, இரவி சேய் அறிவு சோர்வுற்று,
அறிந்ததொர் இமைப்பளவில் ஆகமது தேறி,
பிறிந்திலன் எனத் தொனி பிறந்திட, மருங்கில்
செறிந்து, 'அமர் அரக்கனொடு செய்வென்!' என வந்தான்.
22-2

என இவை அமலன் கூற, இரு கையும் எடுத்துக் கூப்பி,
மனம் மிக நாணி, ஒன்றும் வாய் திறந்து உரைக்கலாற்ருன்,
பனியினை வென்ருேன் மைந்தன் பின்னரும் பணிந்து நின்றே,
அனகனுக்கு அன்பினேடும் அடுத்தமை அறையலுற்ருன். 38-1

என்றனன்; என்றலோடும், இணை அடி இறைஞ்சி, ஆங்கு,
குன்று உறழ் குவவுத் திண் தோள் கொற்ற வல் வீரற் காண,
தன் தனி உள்ள நாணுல் தழல் விழிக் கொலை வெஞ் சீயம்
நின்றென, எருத்தம் கோட்டி, நிலனுற நோக்கிக் கூறும். 38-2

ஏர் அணி மாட கூடம் இலங்கிய இலங்கை வேந்தை
காரணம் ஆக வாலால் கட்டிய வாலி, அன்றிப்
போரணம் ஆளும் அம்பால் புடைத்த மால் பாதம் போற்றி,
காரணச் சுடரோன் மைந்தன் தலைவனை வணங்கிச் சொல்லும்.
38-3

இரவி போய் மறையும் முன்பு, அங்கு இராமனும், இலங்கை நின்ற
வரை இழிந்து, அனைவரோடும் வந்து, தன் இருக்கை எய்தி,
நிருதர்தம் குலத்தை எல்லாம் நீறு எழப் புரியுமாறே
பொரு திறம் முயன்ற செய்கை புகலுவான் எடுத்துக்கொண்டாம். 49-1

தெய்வத் தாமரையோன் ஆகி யாவையும் தெரியக் காட்டி,
மெய் வைத்த அருளினுலே அவை எலாம் விரும்பிக் காத்து,
சைவத்தன் ஆகி, யாவும் தடிந்திடும் செயலின் மேவும்
கை வைத்த நேமியோன்தன் கால் வைத்த கருத்தமே, யாம்.
49-2

பூசலைக் குறித்து இராமன், பொரும் கவிச் சேனை வெள்ளம்
மாசு அற வகுத்து, நாலு திக்கினும் வளையச் செய்து,
பாசமுற்றுடைய நண்பின் படைத் துணையவர்களோடும்
பாசறை இருந்தான்; அந்தப் பதகனும் இழிந்து போனுன். 49-3

12

அணி வகுப்புப் படலம்

இறைவன் மற்று இதனைக் கூற, எறுழ் வலி அமைச்சர் பொங்கி,
'பிறை முடிப் பரமனேடும் பெரு வரை எடுத்த மேலோய்!
உறு சமர்க்கு எம்மைக் கூவி, ஏவிடாதொழிந்தாய்; யாமும்
சிறு தொழில் குரங்கு அது என்ற திறத்தினும் தாழ்த்தது என்ருர்.
11-1

அமைச்சர் மற்று இதனைக் கூறி, 'அரச! நீ விடைதந்தீமோ?
இமைப்பிடைச் சென்று, வந்த குரங்குஇனப் படையை எல்லாம்
கமைப்பு அறக் கடிது கொன்றே களைகுவம்' என்ற போதில்,
சுமைத் தட வரைத் தோள் கும்பகருணன் சேய் நிகும்பன் சொல்வான்:
12-1

எரி நெருப்பு என்னப் பொங்கி, இராவணன் என்னும் மேலோன்
உரை செறி அமைச்சரோடும், உறு படைத் தலைவரோடும்,
கரி, பரி, இரதம், காலாள், கணக்கு அறும் வெள்ளச் சேனை
மருவுற, திசை நான்கு உம்பர் வகுத்து, அமர் புரியச் சொன்னான். 17-1

இம் முறை அரக்கர் கோமான் அணி வகுத்து, இலங்கை மூதூர்,
மும் மதில் நின்ற தானை நிற்க, மூதமைச்சரோடும்
விம்முறு சேனை வெள்ளத் தலைவர்க்கு விடையும் நல்கி,
கம்மெனக் கமழும் வாச மலர் அணை கருகச் சேர்ந்தான். 22-1

13　　அங்கதன் தூதுப் படலம்

'சூளுறும் வஞ்சனாகத் தோன்றிய இலங்கை வேந்தன்
கோளுறும் சிறையை நீக்கி, குரை கழல் வணங்கும் ஆகில்,
வீழுறும் இலங்கைச் செல்வம் வீடணற்கு அளிப்பென்; எம்பி
ஆளுறும் அயோத்திதன்னை இராவணற்கு அளிப்பென்' என்றான். 7-1

'தப்பு இல வீடணற்கு இலங்கை, தானமாச்
செப்பிய வாய்மைதான் சிதையலாகுமோ?
இப்பொழுது இராவணன் ஈங்கு வந்திடில்,
அப்பொழுது, அயோத்தி நாடு அளிப்பென் ஆணையே.' 7-2

அரி முதல் தேவர் ஆதி அமரிடைக் கலந்த போதும்,
வரி சிலை இராமன் வாளி வந்து உயிர் குடிப்பது அல்லால்,
புரம் ஒரு மூன்றும் தீயப் பொடி செய்தோன் தன்னொடு, அந் நாள்,
அரு வரை எடுத்த வீரன் ஆண்மைக்கும் அவதி உண்டோ? 17-1

வந்தது என், குரங்கு? ஒன்று இல்லை, அடைத்தது என், கடல் வாய்?
சிந்தையின் களியால் என் பேர் தெரியுமோ? தெரியாது ஆகில், [மந்தி
இந்த எம் பதியைக் காக்கும் இறைவனோ? அறிதும்; எங்கள்
விந்தை எம் பெருமான்! வாழி! வீடணன் என்னும் வேந்தன். 19-1

'முந்த ஓர் தசக்கிரீபன் ஆக்கையை மொய்ம்பால் வீக்கும்
அந்த ஆயிரத்தோளானை அரக்கிய மழுவலாளன்
வந்து எதிர்கொள்ள, வீரச் சிலையும் வெவ் வலியும் வாங்கும்
சுந்தரத் தோளன் விட்ட தூதன் நான்' என்னச் சொன்னான். 20-1

'பசை அறு சிந்தையானைத் தமரொடும் படுத்த போதும்,
இசை எனக்கு இல்லை அன்றோ' என்பது ஓர் இகழ்வு கொண்டான்;
வசை அற இசைக்கும் ஊரை வளைக்கவும் வந்திலாதான்,
திசையினை வென்ற வென்றி வரவரச் சீர்த்தது!' என்றான். 36-1

ஆதி அம் பரன், அங்கதன் ஓதல் கேட்டு,
'ஈது அவன் கருத்து என்றிடின் நன்று' என,
சோதியான் மகன் ஆதித் துணைவருக்கு
ஓதினான், அங்கு அமரர்கள் உய்யவே. 43-1

14 முதற் போர் புரி படலம்

ஆதி நாயகன் ஆங்கு அது கூறுமுன்;
பாதமீது பணிந்து, அருள் பற்றியே,
காது வெம் படைக் காவலர் ஆதியோர்
மோது போரை முயலுதல் மேயினர். 3-1

அந்த வேலை, அரக்கர் அழன்று கண்,
சிந்து தீயில் திசை எரி சேர்த்தவன்
முந்து உரைத்த முறைமையின் முந்துற,
வந்து எதிர்த்தனர், வாயில்கள்தோறுமே. 15-1

அன்ன போது அங்கு அரக்கர் பிரான் படை
உன்னும் ஆயிர வெள்ளம் உடன்று எழா,
கன்னி மா மதிலின் புறம் காத்து, உடன்
முன்னி வெஞ் சமர் மூண்டு எழுந்துற்றதே. 15-2

ஆனை பட்ட; அடு பரி பட்டன;
தானை பட்ட, தார் இரதம்; கணை
சோனைபட்டது; துன் அரும் வானரச்
சேனை பட்டது; பட்டது செங்களம். 50-1

ஆர்த்த போதில், அருந் திறல் சிங்கனும்,
சூர்த்த நோக்குடைச் சூரனும், துற்கனும்,
கூர்த்த வெங் கதிர்க் கோபனொடு ஆதியாய்,
வேர்த்து, அரக்கர் வியன் படை வீசினர். 55-1

போர் செய் காலை, இடும்பனும் பொங்கி, அக்
கார் செய் மேனி அரக்கனைக் கைகளால்
மேருமீது இடி வீழ்ந்தெனத் தாக்கலும்,
சோர்வு இலாத அரக்கனும் துள்ளினன். 65-1

வரு சுமாலி மகன் பிரகத்தன் அங்கு
இரதம் ஒன்றதின் ஏறினன்; பின்னரும்,
வரி நெடுஞ் சிலை வேறு ஒன்று வாங்கியே,
சொரியும் மா மழைபோல், சரம் தூவினன். 72-1

வால் அறுந்து, வயிறு துணிந்து, இரு
கால் அறுந்து, கழுத்து அறுந்து, அங்கம் ஆம்
மேல் அறுந்து விளிந்தன—வெஞ் சமர்
ஆலும் வானரச் சேனை அனேகமே. 72-2

நீலன் நெஞ்சிடை அஞ்சு நெடுஞ் சரம்
ஆலம் அன்ன அரக்கன் அழுத்தலும்,
சால நொந்தனன்; நொந்து, தருக்கு அறு,
கால வெங் கனல்போல் கனன்றான்அரோ. 72-3

கனலும் வெங் கண் அரக்கன், கடுஞ் சிலை
புனையும் தேர் பரி பாகொடு போய் அற,
நினைவதற்குமுன் நீலன் அங்கு ஓர் நெடுந்
தனி மராமரம்தான் கொண்டு, தாக்கினான். 72-4

நிருதர் தானை உடைந்தது; நேர்கிலாத்
தருமகோபன், சதமகன், சண்டியோடு
எரிமுகன் இவர் ஆதி இராக்கதர்
செருவின், வெற்றி திகழ, வந்து எய்தினர். 79-1

ஏவி, மற்று அயல் நின்ற அரக்கரை,
'தா இல் என் ஒரு தேரினைத் தம்' எனக்
கூவ, மற்று அவர் கொண்டு உடன் நண்ணினர்,
தேவர் ஆதியர் நெஞ்சம் திடுக்கென. 93-1

ஆய்வு அருஞ் சத கோடி அடல் பரி
மாய்வு அருந் திரைபோல் வரப் பூண்டது;
தேயம் எங்கும் திரிந்தது; திண் திறல்
சாய, இந்திரனே பண்டு தந்தது. 93-2

ஏறினான் இடத் தோள் துடித்தே; அறக்
கூறினான், 'குரங்கோடு மனிதரை
நீறது ஆக்குவென்' என்று, நெருப்பு எழச்
சீறினான், சிவன் போல அத் தேரின்மேல். 94-1

'அண்ட கோடி அகிலமும் இன்றுடே
விண்டு நீங்குறும்' என்று உயர் விண்ணவர்,
கொண்ட ஆகுலத்தால், மனம் கூசியே,
புண்டரீகன் பதியிடைப் போயினர். 99-1

வெள்ளம் ஆங்கு அளப்பில; வெள்ளம், வாம் பரி;
கொள்ளை யார் அதன் கணக்கு அறிந்து கூறுவார்?
உள்ளம் ஆய்ந்து ஓது இரு நூறு வெள்ளம் ஆம்
கள்ள வாள் அரக்கர்கள் கடலின் சூழவே. 105-1

நிருதர்கள் எவருமே நோக்கி நின்று போர்
பொருதனர், அயில் முதல் படைகள் போக்கியே;
மரமொடு மலைகளைப் பிடுங்கி, வானரர்
செருவிடைத் தீயவர் சிதறத் தாக்கினர். 119-1

அண்ட கோளகை வெடித்து, அவனி கீண்டுற,
எண் திசாமுகங்களும் இடிய, ஈசனைக்
கொண்ட வான் கயிலையும் சிகர கோடிகள்
விண்டு நீங்கியதுஎனில், விளம்ப வேண்டுமோ? 123-1

வச்சிர வரைப் புயத்து அரக்கன் வாங்கிய
கைச் சிலை நாண் ஒலி கலந்த காலையில்,
அச்சம் இல் புரந்தரன் ஆதி தேவர்கள்,
உச்சிகள் பொதிர் எறிந்து, உரம் மடங்கினர். 123-2

இப் புறத்து உயிர்கள் எல்லாம் இரிந்திட, அரக்கர் கோமான்
கைப் படு சிலையை வாங்கி, கால மா மழையும் எஞ்ச,
முப் புறத்து உலகம் எல்லாம் மூடியது என்ன, மூளும்
அப்பு மா மாரி சிந்தி, அண்டமும் பிளக்க ஆர்த்தான். 127-1

ஆர்த்தவன் பகழி மாரி சொரிந்து, அரிச் சேனை எல்லாம்
தீர்த்து, ஒரு கணத்தில் போக்க, செங் கதிர்ச் சிறுவன்தானும்
பார்த்து, உளம் அழன்று பொங்கி, பரு வலி அரக்கனோடும்
போர்த் தொழிற்கு ஒருவன் போலப் பொருப்பு ஒன்று ஆங்கு ஏந்திப்
புக்கான். 127-2

அலக்கணுற்று அனுமன் சோர, அங்கதன் முதலாம் வீரர்
மலைக்குற மரங்கள் வாங்கி வருதல் கண்டு, அரக்கன், வாளி
சிலைக்கிடை தொடுத்து, அங்கு ஏந்து மா மலை சிதைத்திட்டு, அன்னோர்
கலக்கமுற்று இரிய, ஒவ்வோர் பகழியின் காய்ந்து கொல்வான்.
138-1

நகைத்து, 'இது புரிந்தான்கொல்லோ?' என்பதன் முன்பு, நாண்வாய்த்
துகைத்து ஒலி ஒடுங்கா முன்னம், சோனை அம் புயலும் எஞ்ச,
மிகைப் படு சரத்தின் மாரி வீரனுக்கு இளையோன் மேவும்
பகைப் புலத்துஅரக்கன் சேனைப் பரவைமேல் பொழிவதானான். 143-1

எரி முகப் பகழி மாரி இலக்குவன் சிலேயின் கோலிச்
சொரிதர, களிறு, பொன் தேர், துரங்கமோடு இசைந்த காலாள்
நிருதர்கள் அளப்பு இல் கோடி நெடும் படைத் தலைவர், வல்லே
பொரு களமீதில் சிந்திப் பொன்றினர் என்ப மன்னே. 153-1

எதிர் வரும் அரக்கர் கோமான் இலக்குவன்தன்னை நோக்கி,
'மதியிலி! மனிதன் நீயும் வாள் அமர்க்கு ஒருவன் போலாம்!
இது பொழுது என் கை வாளிக்கு இரை' என நகைத்தான்; வீரன்
முதிர்தரு கோபம் மூள, மொழிந்து அமர் முடுக்கலுற்றான்.
156-1

அரக்கன் மனம் கொதித்து, ஆண்தகை அமலன்தனக்கு இளையோன்
துரக்கும் பல விசிகம் துகள்பட நூறினன்; அது கண்டு,
அருக்கன் குல மருமான், அழி காலத்திடை எழு கார்
நெருக்கும்படி, சர தாரையின் நெடு மா மழை சொரிந்தான்.
158-1

'மாயத்து உரு எடுத்து, என் எதிர் மதியாது, இது பெரிது என்-
றே இத் தரை நின்றாய்; எனது அடல் வார் சிலேயிடையே
தீ ஒத்து எரி பகழிக்கு இரை செய்வேன் இது பொறுத்தேன்;
ஞாயத்தொடும் ஒரு குத்து அமர் புரிதற்கு எதிர் வரும் நீ.
171-1

கல் தங்கிய முழுமார்பிடைக் கவியின் கரம்அதனால்
உற்று ஒன்றிய குத்தின் வலிஅதனால் உடல் உளைவான்,
பற்று இன்றிய ஒரு மால் வரை அனையான், ஒரு படியால்
மல் தங்கு உடல் பெற்று ஆர் உயிர் வந்தாலென உய்ந்தான்.
179-1

கொதித்து ஆங்கு அடல் அரக்கன் கொடுங் கரம் ஒன்றதின் வலியால்
மதித்தான் நெடு வய மாருதி மார்பத்திடை வர, மேல்
புதைத்து ஆங்குறும் இடிஏறு எனப் பொறி சிந்திய புவனம்;
விதித்தான் முதல் இமையோர் உளம் வெள்கும்படி விட்டான்.
184-1

உருத்து, வெஞ் சினத்து அரக்கன் அங்கு ஒரு கையின் புடைப்ப,
வரைத் தடம் புய மாருதி மயங்கியது அறிந்து, ஆங்கு
இரைத்த திண் பரித் தேர்நின்றும் இரு நிலத்து இழியச்
சரித்து, வானரம் மடிந்திட, சர மழை பொழிந்தான். 186-1

உருத்து இலக்குவன் ஒரு கணத்து அவன் எதிர் ஊன்றிக்
கரத்தின் வெஞ் சிலே வளைக்குமுன், கடுஞ் சினத்து அரக்கன்
சிரித்து, வெம் பொறி கதுவிட, திசைமுகம் அடையப்
பொருத்தி, வெஞ் சரம் பொழிந்து, 'இவை விலக்கு' எனப் புகன்றான்.
200-1

பண்டை நாள் தரு பனித் திரைப் புனல் சடை ஏற்றுக்
கொண்ட தூயவன், கொடுந் தொழில் நிருதர்கள் குழுமி
மண்டு வாள் அமர்க் களத்தில், அம் மலர்க் கழல் சேறல்
கண்டு, கூசலன் நிற்கும்என்றால், அது கடனே? 216-1

அனைய கண்டு, இகல் அரக்கருக்கு இறைவன், அப் பொழுதில்,
மனம் நெருப்பு எழக் கொதித்து, 'ஒரு மனிதன் என் வலியை
நினையகிற்றிலன்; நெடுஞ் சமர் என்னொடும் துணிந்த
வினையம் இன்றொடும் போக்குவென்' என விழி சிவந்தான்.
225-1

அடுக்கி நின்றிடு பகிரண்டப் பரப்பு எலாம் அதிர,
துடிக்கும் நெஞ்சகத்து இமையவர் துளங்குற, கூற்றும்
நடுக்கம் உற்றிட, நல் அறம் ஏங்கிட, கயிலை
எடுக்கும் திண் திறல் அரக்கனும் சிலையை நாண்எறிந்தான்.
225-2

எறிந்து அடல் சிலை வளைத்து, ஒரு கணத்திடை, எரியின்
நிறம் தகும் பல நெடுஞ் சுடர்ப் பகழிகள், நெறியின்
அறிந்திடற்கு அரிது ஆகிய அளப்பு இல் பல் கோடி
செறிந்திட, திசை வானகம் வெளி இன்றிச் செறித்தான். 225-3

ஐயன் நோக்கினன், 'நன்று!' என நகைத்து, அவன் சிலைவாய்
எய்த வெஞ் சரம் பொடிபட, யாவையும் முருக்கி,
வெய்தின் அங்கு அவன்மேற் செல, எழு கணை விடுத்தான்;
கைதவன், கணை ஏழு கொண்டு, அக் கணை கடிந்தான். 225-4

எய்து வெள்ளம் நூற்று-இரண்டு எனத் திரண்ட கால் வயவர்,
மொய் கொள் சேனை அம் தலைவர்கள், முரண் கரி, பரி, தேர்,
வெய்ய வீரர்கள், அளப்பிலர் கோடியர், விறல் சேர்
ஐயன் வெஞ் சரம் அறுத்திட, அனைவரும் அவிந்தார். 236-1

அறுத்த வில் இழந்து அழியுமுன், ஐ-இரு கரத்தும்
பொறுத்து வெஞ் சிலை, நாண் ஒலி புடைத்து, அடற் பகழி
நிறுத்தி வீசினன்—நெடுந் திசை விசும்பொடு நிமிரக்
கறுத்த வான் முகில் கல் மழை பொழிதரும் கடுப்பின். 240-1

நிரைக்கும் ஐ-இரு சிலையிடைச் சர மழை நிருதன்
துரக்க, மாருதி, உடல் உறு குருதிகள் சொரிந்த;
குரக்கு வான் படை குறைந்தன; கூசி வானவர்கள்
இரக்கமுற்று உலைந்து ஓடினர்; இருண்டது எவ் உலகும். 240-2

எறும் வலிப் புயத்து இராகவன் இள நகை எழும்ப,
முறுவலித்து, அவன் பகழிகள் யாவையும் முருக்கி,
பிறை முகச் சரம் ஐ-இரண்டு ஒரு தொடை பிடித்து, ஆங்கு
உறுதி அற்றவன் சிலை ஒரு பத்தையும் ஒறுத்தான். 240-3

'வளைத்த வில்லும் இரதமும் மற்றும் நின்
கிளைத்த யானையும் சேனையும் கெட்டது; இங்கு
இளைத்து நின்றனை; இன்று போய் நாளை வா,
விளைக்கும் வெஞ் சமர் செய் விருப்பு உள்ளதேல்'. 255-1

என்று இராமன் இயம்ப, இராவணன்
ஒன்றும் ஓதலன்; 'உள்ளத்தின், என் வலி
நின்ற நேர்மை நினைத்திலன், மானிடன்;
நன்று சொன்னது!' என நகைத்து ஏகினன். 255-2

15 கும்பகருணன் வதைப் படலம்

என்று எடுத்து உரைத்தோன், பின்னும் உளம் கனன்று, இனைய சொல்
'வன் திறல் மனிதன் வெம் போர் எவரினும் வலியனேனும், [வான்:
பொன்றுதல் இல்லா என்னைப் போர் வெலற்கு எளிதோ? காலம்
ஒன்று அல; உகங்கள் கோடி உடற்றினும், ஒழிவது உண்டோ?
31-1

'மானிடன் என்றே நாணி, கடவுள் மாப் படைகள் யாதும்
யான் எடுத்து ஏகல் விட்டேன்; இன்றை வெஞ் சமரம் போக,
தான் அமர் அழிந்தேன் என்னத் தக்கதோ?' என்றான், அந்த
மானம் இல் அரக்கன்; பின்னர், மாலியவானும் சொல்வான்:
31-2

' ''முப்புரம் எரித்தோன் ஆதி தேவரும் முனிவர்தாமும்,
தப்பு அற உணர்தற்கு எட்டாத் தருமமே, கை வில் ஏந்தி,
இப் பிறப்பு இராமன் என்றே, எம்மனோர் கிளையை எல்லாம்
துப்பு அற, முருக்க வந்தான்'' என்ற சொல் பிழைப்பது உண்டோ?
31-3

'ஆதலின் இறைவ! கேட்டி; அவன் பெருந் தேவி ஆன
மாதினை விடுத்து, வானோர் முனிவரர் வருந்தச் செய்யும்
தீதினை வெறுத்து, தேவர் தேவனும் சிலை இராமன்
பாதமே பணியின், நம்பால் பகை விடுத்து, அவன் போம்' என்றான்.
33-1

'என்றும் ஈறு இலா அரக்கர் இன்ப மாய வாழ்வு எலாம்
சென்று தீய, நும் முனோன் தெரிந்து தீமை தேடினன்;
இன்று இறத்தல் திண்ணமாக, இன்னும் உன் உறக்கமே?'
அன்று அலைத்த செங் கையால் அலைத்து அலைத்து, உணர்த்தினர்.
45-1

சாற்றிய சங்கு தாரை ஒலி அவன் செவியில் சார,
ஆற்றலின் அமைந்த கும்பகருணனுக்கு அதுவும் தாராட்டு
ஏற்றது ஒத்து, அனந்தல் முன்னர்க்கு இரட்டி கொண்டு உறங்க, மல்லர்,
கூற்றமும் குலேய, நெஞ்சம் குறித்து இவை புரியலுற்ருர். 51-1

அன்னவர் உரைப்பக் கேளா, அரசன் மோதரனை நோக்கி,
'மின் எனும் எயிற்று வீர எம்பியைக் கொணர்தி!' என்ன,
'இன்னதே செய்வென்' என்ரு, எழுந்து அடி வணங்கிப் போவான்,
பொன் என விளங்குவான் போய்த் தன் பெருங் கோயில் புக்கான். 54-1

இனைய கும்பகருணன், இராக்கதர்-
தனை முனிந்து இடிஏறு எனச் சாற்றினன்;
'எனை நெடுந் துயில் போக்கியது என்?' என,
மனம் நடுங்கினர், வாய் புதைத்து ஓதினர். 69-1

வட்ட விண்ணையும் மாதிரம் எட்டையும்
கட்டி, வீரம் கணிப்பு அரும் காவலான்
தொட்ட பல் கலனும் சுடர் மௌலியும்
தெட்ட சோதி திளைப்ப நின்ருன்அரோ. 76-1

என்ற போதில் எறும் வலிச் செம் மணிக்
குன்றம் ஐ-இரண்டு ஏந்திக் குல வரை
சென்றது என்னத் திரிந்து உலகு யாவையும்
வென்ற வீரன் இனைய விளம்பினன். 77-1

அக் கணத்து அரக்கர் கோன், 'அளப்பு இல் யானை, தேர்
மிக்க வான் புரவி, கால் வயவர் வெள்ளமோடு,
ஒக்க வான் படைப் பெருந் தலைவர் ஒன்று அறப்
புக்குமின், இளவலைப் புறத்துச் சூழ்ந்து' என்ருன். 99-1

வெள்ளம் நூறு இரதம்; மற்று இரட்டி வெங் கரி;
துள்ளு வான் பரி அதற்கு இரட்டி; தொக்குறும்
வெள்ளி வேல் அரக்கர் மற்று இரட்டி; மேம்படும்
கொள்ளை வான் படைப் பெருந் தலைவர் கோடியால். 102-1

அன்ன போது இராவணற்கு இளவல் ஆகிய
மின்னு வேல் கும்பகன் என்னும் மேலையோன்,
துன்னு போர் அணிகலம் யாவும் சூடியே,
தன் ஒரு தேரினைத் தொழுது தாவினன். 103-1

தொண்டகம், துடி, கன பேரி, துந்துமி,
திண்டிமம், படகம், மா முரசு, திண் மணிக்
கண்டைகள், கடையுகத்து இடிக்கும் ஓதையின்
எண் திசை செவிடு எறிதரச் சென்று உற்றதால். 106-1

எழு கருங் கடல் கரை எறிந்திட்டு, ஊழி நாள்,
முழுது உலகு அடங்கலும் மூடும் தன்மையின்
தழுவியது என, தசமுகன் தன் ஆணையால்,
கிளர் பெரும் படைக் கடல் கெழுமிப் போந்ததால். 106-2

இரைக்கும் மும் மதம் பொழி தறுகண் யானையின்,
நெருக்கமும், நெடுங் கொடித் தொகையின் தேர்க் குலப்
பெருக்கமும், புரவிகள் பிறங்கும் ஈட்டமும்
அரக்கர்தம் பெருக்கமும், ஆயது எங்குமே. 106-3

நாற்படை வகை தொகை நடக்க, தூளிகள்
மேற்பட, விசும்பகம் மறைந்த; வெண் திரைப்
பாற்கடல் எனப் பொலி கவிப் பெரும் படை
காற் படு கதியினின் கரந்தது, ஓடியே. 108-1

குரக்கினப் பெரும் படை குலைகுலைந்து போய்
வெருக் கொள, விசும்பிடை வெய்ய மாயையின்
அரக்கன் இன்று அமைத்தது ஓர் உருக்கொலாம்? நினது
உருக் கொடே கரிய குன்று உற்றவேகொலாம்? 111-1

ஏழு யோசனைக்கு மேலாய் உயர்ந்திடும் முடி பெற்றுள்ளான்;
சூழி வெங் கரிகள் தாங்கும் திசை எலாம் சுமக்கும் தோளான்;
தாழ்வு அறு தவத்தின் மேலாம் சதுமுகன் வரத்தினாலே
வீழ் பெருந் துயிலும் பெற்றான்—வெங் கடுங் கூற்றின் வெய்யோன்.
114-1

சிலை பொழி பகழி, வேல், வாள், செறி சுடர்க் குலிசம், ஈட்டி,
பல வகைப் படைகள் வாங்கி, நிருதர்கள் பல் போர் செய்தார்;
மலையொடு மரங்கள் ஓச்சி, வயிரத் தோள் கொண்டு, மாறாக்
கொலை அமர் எடுத்து, வாகை குரங்குகள் மலைந்த அம்மா.
172-1

பற்றினன் வசந்தன்தன்னை, பனைத் தடங் கைகளாலே;
எற்றினன், 'இவனை மீள விடவொண்ணாது' என்று சொல்லி,
'கொற்றமும் உடையன்' என்னா, குழம்பு எழப் பிசைந்து கொண்டு
நெற்றியில் திலதமாக இட்டனன்—நிகர் இலாதான். 177-1

அளப்பு இல் வெங் கரிகள், பூதம், ஆளி, வெம் பரிகள் பூண்டு, ஆங்கு
இழுப்ப வந்து உடைய தேர் விட்டு, இரு நிலத்து இழிந்து, வெம் போர்க்
களப் படக் கவியின் சேனைக் கடல் வறந்து உலைய, 'கையால்
குளப் படுக' என்று வெய்யோன் குறித்து, உளம் கனன்று புக்கான்.
177-2

நிகர் அறு கவியின் சேனை நிலை கெட, சிலவர்தம்மைத்
துகள் எழக் கயக்கி ஊதும்; சிலவரைத் துகைக்கும், காலின்;
தகர் படச் சிலவர்தம்மைத் தாக்கிடும், தடக் கைதன்னால்;
புகவிடும் சிலவர்தம்மை, விசும்பிடைப் போக, வெய்யோன்.
177-3

வலிதினின், சிலவர்தம்மை வன் கையால் பற்றிப் பற்றி,
தலையொடு தலையைத் தாக்கும்; சிலவரைத் தனது தாளால்
நிலமதில் புதைய ஊன்றி மிதித்திடும்; சிலவர் நெஞ்சைக்
கொலை நகப் படையின் கீறி, குருதி வாய்மடுத்துக் கொள்ளும்.
177-4

கடும் பிணக் குவையினூடே சிலவரைப் புதைக்கும்; கண்ணைப்
பிடுங்குறும் சிலவர்தம்மை; சிலவரைப் பிடித்து, வெய்தின்
கொடுங் கொலை மறலி ஊரில் போய் விழக் குறித்து வீசும்;
நெடும் பெரு வாலின் பற்றிச் சிலவரைச் சுழற்றி நீக்கும். 177-5

பருதி மண்டலத்தில் போகச் சிலவரைப் பற்றி வீசும்;
குருதி வாய் பொழியக் குத்திச் சிலவரைக் குமைக்கும்; கூவித்
திரிதரத் தேவர் நாட்டில் சேர்த்திடும் சிலவர்தம்மை;
நெரிதரச் சிலவர்தம்மைக் கொடுங் கையின் நெருக்கும் அன்றே.
177-6

ஆயிர கோடி மேலும் அடல் குரங்குஅதனை வாரி,
வாயிடைப் பெய்து மூட, வயிற்றிடைப் புகுந்து, வல்லே
கூய் உளம் திகைத்து, பின்னும் கொடியவன் செவியினூடே,
போயது வெளியில் மீண்டும், புற்றிடைப் பறவை என்றே.
179-1

அவ் வழி அரியின் சேனை அதர்பட வசந்தன் என்பான்
தவ் அழி வீரன் நாலு வெள்ளத்தின் தலைவன் என்றான்;
எவ் வழி? பெயர்ந்து போவது எங்கு? என இரு குன்று ஏந்தி,
வெவ் வழிஇசை அக் கும்பகருணன்மேல் செல்ல விட்டான்.
180-1

விசைந்திடு குன்றம் நின்ற விண்ணவர் இரியல் செல்ல,
இசைந்திடு தோளின் ஏற்றான், இற்று நீறு ஆகிப் போக;
வசந்தனைச் சென்று பற்றி வாசம் கொண்டுவந்து கையால்
பிசைந்து சிந்தூரமாகப் பெரு நுதற்கு அணிந்து கொண்டான்.
180-2

நீலனை அரக்கன் தேரால் நெடு நிலத்து இழியத் தள்ளி,
சூலம் அங்கு ஒரு கை சுற்றி, 'தொடர்ந்திடும் பகைஞர் ஆவி
காலன் ஊர் தன்னில் ஏற்றி, கடிதில் என் தமையன் நெஞ்சில்
கோலிய துயரும் தீர்ப்பென்' எனக் கொதித்து, அமரின் ஏற்றான். **186-1**

செய்துறு பகையை வெல்வார், நின்னைப் போல் அம்மை செய்து,
வைதுறு வந்த போது, வலுமுகம் காட்டி, யாங்கள்
கைதுறு வினையை வென்று கடன் கொள்வார் மார்க்கமுள்ளார்;
எய்துறும் இதற்கு என் போல் உன் தகை சிலை உதவி என்றான். **193-1**

மாருதி போதலோடும், வயப் படைத் தலைவர், மற்று ஓர்
மாருதம் என்னப் பொங்கி, வரையொடு மரங்கள் வாரி,
போர் எதிர் புகக் கண்டு, அன்னோர் அனைவரும் புரண்டு போரில்
சோர்தர படைகள் வாரிச் சொரிந்து, அடல் அரக்கன் ஆர்த்தான். **203-1**

மழுவொடு கணிச்சி, சூலம், வாள், மணிக் குலிசம், ஈட்டி,
எழு, அயில், எஃகம் என்று இப் படை முதல் எவையும் வாரி,
மழை எனப் பொழிந்து, நூறு யோசனை வரைப்பில் மேவும்
அளவு அறு கவியின் சேனை அறுத்து, ஒரு கணத்தில் வந்தான். **203-2**

இலக்குவன் கொடுமரத்திடை எறியும் வெம் பகழி
கலக்கம் அற்றிடும் அரக்கர்தம் கரங்களைக் கடிந்தே,
முலைக்குவட்டு, அவர் கன்னியர், முன்றிலின் எறிய,
விலக்க அரும் விறலாளி கண்டு, அவர் உயிர் விளிந்தார். **226-1**

வடி சுடர்ப் பெரும் பகழிகள் ஏற்றின வதனத்து
அடல் அரக்கரும் சிலர் உளர்; அவர் தலை அறுத்து, ஆங்கு
உடன் எடுத்து, அவர் மனையினுக்கு உரிய கன்னியர்பால்
இட, உவப்பொடும் புழுக்கினர், ஊன் இவை அறியார். **226-2**

குஞ்சரத் தொகை, தேர்த் தொகை, குதிரையின் தொகை, மேல்
விஞ்சு வாள் எயிற்று அரக்கர்தம் தொகை எனும் வெள்ளம்,
பஞ்சினில் படும் எரி என, இலக்குவன் பகழி
அஞ்செனப் படு கணத்து, அவை அனைத்தையும் அழித்த. **227-1**

வந்து அம் மாப் படை அளப்பு இல வெள்ளங்கள் மடிய,
அந்தி வான் எனச் சிவந்தது, அங்கு அடு களம்; அமரில்
சிந்தி ஓடிய அரக்கரில் சிலர், 'தசமுகனுக்கு
இந்த அற்புதம் உரைத்தும்' என்று ஓடினர், இப்பால். **227-2**

உரைத்து, நெஞ்சு அழன்று, 'ஒரு கணத்து இவன் உயிர் குடித்து, என்
கருத்து முற்றுவென்' எனச் சினம் கதுவிட, கடுந் தேர்
பரித்த திண் திறல் பாகரை, 'பகைவனுக்கு எதிரே
பொருத்தும்' என்று அடல் கும்பகன் பொருக்கெனப் புகன்றான். 228-1

நாண் தெறித்தனன், பகிரண்டப் பரப்பொடு நவை போய்
மாண்ட விண்ணவர் மணித் தலை துளங்கிட, வயப் போர்
பூண்ட வானரம் நின்றதும் புவியிடை மறிய,
தாண்டி, மற்று அவன் இலக்குவன்தனக்கு இவை சொல்வான்: 233-1

அது கண்டார் அடல் வானவர், ஆசிகள் கூறித்
துதி கொண்டார்; அடல் அரக்கனும் துணை விழி சிவந்து ஆங்கு,
'இது கண்டேன்; இனிக் கழிந்தது, உன் உயிர்' எனக் கனன்றே
கொதி கொண்டான், அடல் சிலையினைக் குழைவுற வளைத்தான். 240-1

புக்க போதில், அங்கு இலக்குவன் பொருக்கெனத் துயர் தீர்ந்து,
அக் கணம்தனில் அரக்கர்தம் பெரும் படை அவிய,
மிக்க வார் சிலை வளைத்து, உரும்ஏறொடு விசும்பும்
உட்க, நாண் எறிந்து, உக முடிவு என, சரம் பொழிந்தான். 248-1

'காய் கதிர்ச் சிறுவனைப் பிணித்த கையினன்,
போயினன் அரக்கன்' என்று உரைத்த போழ்தின்வாய்,
நாயகன் பொருக்கென எழுந்து, நஞ்சு உமிழ்
தீ அன வெகுளியன், இனைய செய்தனன். 272-1

ஆயிரம் பேய் சுமந்து அளித்தது, ஆங்கு, ஒரு
மா இருங் கேடகம் இடத்து வாங்கினன்;
பேய் இரண்டாயிரம் சுமந்து பேர்வது ஓர்
காய் ஒளி வயிர வாள் பிடித்த கையினன். 299-1

வீசினன் கேடகம்; விசும்பின் மீன் எலாம்
கூசின; அமரரும் குடர் குழம்பினர்;
காய் சின அரக்கனும் கனன்ற போது, அவன்
நாசியும் செவியும் வெங் குருதி நான்றவே. 299-2

கும்பகன் கொடுமையும், குலைகுலைந்து போம்
வெம்பு வெஞ் சேனையின் மெலிவும், நோக்கிய
நம்பனும் அரக்கன் கை நடுவண் பூட்டுறும்
செம் பொனின் கேடகம் சிதைத்து வீழ்த்தினன். 301-1

ஆயிரம் பெயரவன் அறுத்து மாற்றுறப்
போயின கேடகம் புரிந்து நோக்கினன்;
பேய் இரண்டாயிரம் சுமக்கப் பெற்றுடை
மா இருங் கேடகம் கடிதின் வாங்கினன். 301-2

போயின கேடகம் போக நோக்கினன்,
ஆயிரம் பெயரவன், அறியும் முன்பு; அவன்
பேய் இரண்டு ஆயிரம் பேணும் கேடகம்
'ஏ' எனும் அளவினில் எய்தச் சென்றதால். 301-3

ஆலம் உண்டவன் முதல் அளித்தது, அன்னவன்
சூலம் உண்டு; அளப்பு இல கோடி பேய் சுமந்து,
ஓலம் இட்டு அமரர்கள் ஓட, ஊழியில்
காலன் ஒத்தவன் கரத்து அளித்தது, அக் கணம். 310-1

பிடித்தனன் வலக் கையில் சூலம், பெட்பொடு;
முடித்தனன், பூசனை மனத்தின் முன்னியே;
விடுத்தனன், 'பகைவனை வென்று மீள்க' என;
தடுப்ப அரிது எனத் தளர்ந்து, அமரர் ஓடினர். 315-1

சூலம் அங்கு அது வரும் துணிவை நோக்கியே,
ஞால நாயகன், அரிக் கடவுள் ஏந்திய
கால வெங் கனல் படை கடிதின் ஏவி, அச்
சூலம் அற்று இரண்டு எனத் துணித்து வீழ்த்தினன். 315-2

அழிந்தது சூலம்; அங்கு அமரர் யாவரும்
தொழும் தகை அமலனைப் புகழ்ந்து துள்ளியே,
'கழிந்தது, எம் மனத் துயர்' என்று கண்ணன்மேல்
பொழிந்தனர், அவன் பெயர் புகன்று, பூமழை. 315-3

வந்த வெஞ் சேனைகள் வளைந்த எல்லையில்
இந்திரன் முதலினர் ஏத்த, வள்ளலும்
சுந்தர நெடுங் கணை மாரி தூவினன்;
சிந்தியது, அப் பெருஞ் சேனை வெள்ளமே. 315-4

இரண்டு பத்து நூறு எனும் படை வெள்ளம்
மற்று இன்றொடு முடிவு எய்திப்
புரண்டு தத்துறப் பொழிந்தனர், இருவர் தம்
பொரு சிலைக் கணை மாரி;
இருண்டது எத்திசை மருங்கினும், பறவையின்
இனம் பல படி மூடி;
திரண்ட வச்சிரக் கதை கரத்து எடுத்தனன்,
கும்பகன் சினம் மூள. 321-1

என்ற போதில், அரக்கனும் நோக்கினன்,
 'எம்பிரான் நுவல் மாற்றம்
நன்று, நன்று!' என, சிரம் துளக்கினன்,
 நகைத்து, இவை இவை நவில்கின்றான்:
'வென்றி தந்து, தம் புறம் கொடுத்து ஓடிய
 விண்ணவர் எதிர் போரில்
பொன்றுமாறு இளைத்து, இன்று போய் வருவெனேல்,
 புகழுடைத்தது போலாம்.' 324-1

இனைய திண் திறல் அரக்கனுக்கு அவ் வழி
 இதயத்தில் பெரு ஞான
நினைவு எழுந்தது; 'இங்கு இவன் பெருங் கடவுள்;
 மற்று இவன் பத நிழல் காண
வினை அறுந்தது; வேறு இனிப் பிறப்பு இலை'
 என்று, தன் மன வேகம்-
தனை மறந்தனன்; மறந்து அவன் தன்மையை
 நினைந்தனன், கருத்தோடும். 350-1

16

மாயா சனகப் படலம்

இம் மொழி அரக்கன் கூற, ஏந்திழை இரு காதூடும்
வெம்மை சேர் அழலின் வந்த வே . . . .
. . . . . .ல் வஞ்சி நெஞ்சம் தீய்ந்தவள் ஆனாள்; மீட்டும்
விம்முறும் உளத்தினோடும் வெகுண்டு, இவை விளம்பலுற்றாள்:
54-1

மங்கையை, குலத்துளாளை, தவத்தியை முனிந்து, வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றான், குலத்துக்கே தக்கான் என்று
கங்கை அம் சென்னியானும் கண்ணனும் கமலத்தோனும்
செங்கைகள் கொட்டி உன்னைச் சிரிப்பரால், சிறுமை என்னா.
72-1

அம் தாமரையின் அணங்கு அதுவே ஆகி உற,
நொந்து, ஆங்கு அரக்கன் மிக நோனா உளத்தினன் ஆய்,
சிந்தாகுலமும் சில நாணும் தன் கருத்தின்
உந்தா, உளம் கொதித்து, ஆங்கு ஒரு வாசகம் உரைத்தான். 89-1

17

அதிகாயன் வதைப் படலம்

முதிர் போர் உறு மொய்ம்பன், முனைத்தலையில்
சதிர் ஏறிய தானை தழைத்திட, அங்கு
எதிர் தேரிடை ஏறினன்; மற்று ஒரு வெங்
கதிரோன் இகல் கண்டிட ஏகினனால். 20-1

தேர் வெள்ளம் அளப்பு இல; திண் புரவித்
தார் வெள்ளம் அளப்பு இல; தந்திஇனக்
கார் வெள்ளம் அளப்பு இல; கண்டகராம்
பேர் வெள்ளம் அளப்பு இல பெற்றதுவால். 20-2

மல் ஏறிய திண் புய மள்ளர் கரத்து
எல் ஏறிய வாள், எழு, வல் முசலம்,
வில்லோடு அயில், வெங் கதை, வேல் முதலாம்
பல் ஆயுத பத்தி பரித்து உடையார். 25-1

என, வந்த நிசாசரன், இவ் உரையைத்
தனு வல்லவனோடு எதிர் சாற்றுதலும்,
சனகன் மகள்தன் ஒரு நாயகன் ஆம்
அனகன் அது கேட்டு, இது அறைந்திடுவான். 50-1

என்றே உலகு ஏழினொடு ஏழினையும்
தன் தாமரைபோல் இரு தாள் அளவா-
நின்றான் உரை செய்ய, நிசாசரனும்
பின்றா உரை ஒன்று பிதற்றினனால். 52-1

வெங் கொலை மத கரி வெள்ளம் ஆயிரம்
துங்க நீள் வரைப் புயத்து அரக்கர் தூண்டினார்;
வெங் கணை இலக்குவன் வெகுண்டு, உகாந்தத்தில்
பொங்கிய மாரியின் பொழிதல் மேயினான். 103-1

முடிவுறும் உகம் பொழி மாரி மும்மையின்
விடு கணை மழை நெடுந் தாரை, வெம் மதக்
கட களிறு அடங்கலும் கழிய, கால், கரம்,
குடல், தலை, குறைத்தமை கூறல் ஆவதோ? 103-2

அறுந்தன, தலை, கழுத்து; அறுந்த, தாள், கரம்;
அறுந்தன, செவி, முகம்; அறுந்த, வால், மருப்பு;
அறுந்தன, குடல், உடல்; அறுந்த, வாய், விழி;
அறுந்தன, கட களிறு ஆய நாமமே. 103-3

அறுத்தன, சில கணை; அறுத்த கூறுகள்
செறுத்தன, சில கணை; சின்னபின்னமாய்
ஒறுத்தன, சில கணை; உம்பர் ஊர் புகத்
தெறித்தன, சில கணை; செப்பல் ஆவதோ? 103-4

மத கரி வெள்ளம் ஆயிரமும் மாண்டுற,
முதிர் சினத்து இலக்குவன், கடிகை மூன்றினில்,
கொதி கொள் வெஞ் சர மழை கொழிப்பக் கண்டு, தாள்
அதிர்வுறு பொலன் கழல் அரக்கர் அண்மினார். 103-5

அடுத்தனர் ஆனை, தேர், புரவி, ஆழியை;
தொடுத்தனர் அணி படச் சூழ்ந்து, வள்ளல்மேல்
விடுத்தனர் படைக் கலம்; வெகுண்டு வீரனும்
தடுத்தனன், ஒரு தனித் தனுவின் வன்மையால். 103-6

பெருங் கடை யுக மழை பிறழ, தன் ஒரு
கரம் படு சிலையினின் கான்ற மாரியின்,
சரம் படச் சரம் பட, தாக்கு இராக்கதக்
கருங் கடல் வறந்தது கழறல் ஆகுமோ? 103-7

இலக்குவக் கடவுள்தன் ஏவின் மாரியால்,
விலக்க அருங் கரி, பரி, இரதம், வீரர் என்று
உலப்ப அரும் வெள்ளமாம் சேனை ஒன்று அற
நிலப் படச் சாய்ந்தமை நிகழ்ந்த போதிலே, 119-1

காந்திய அரக்கனும் கணையின் மாரிகள்
பாய்ந்திட, பருஞ் சிலை விசையின் பற்றினன்;
மாய்ந்தது குரங்கு; அது கண்டு, மா மறை
வேந்தனுக்கு இளவலும் வெகுளி வீங்கவே. 121-1

கார்முக விசை உறும் கணையின் மாரியால்
பார வெஞ் சிலை அறுத்து, அவன்தன் பாய் பரித்
தேரினைப் பாகனோடு அழியச் சிந்தி, மற்று
ஓர் கணை அவன் சிரம் உருளத் தூண்டினன். 121-2

'தாருகன் எனும் படைத் தலைவன் தன் வயப்
போர் அழிந்தவன் உயிர் பொன்றினன்' என,
கார் நிற அரக்கர்கள் கனலின் பொங்கியே,
வீரனை வளைத்தனர், வெகுளி மிக்குளார். 122-1

மழை உற்றன முகில் ஒப்பன செவி மும் மத வழியே
விழ உற்றன, வெறி வெங் கணை நிமிரப் பொறி சிதற,
முழை உற்றன முகில் சிந்தின முன்பு ஏறில முடிய,
உழை உற்றன உலவும்படி உலவுற்றன—கரிகள். 140-1

துள்ளிக் களி வய வானரர் ஆர்த்தார்; அவை தோன்றக்
கள்ளக் கடு நிருதக் குலம் கண்டப்படக் கண்டே,
உள்ளக் கடு வேகத்தொடு தேவாந்தகன், உளத்தே
கொள்ளைப் படை அனையஃது ஒரு கொடுஞ் சூலம் கைக் கொண்டான். 169-1

ஆங்கு அது நிகழக் கண்ட அடல் அதிகாயன் சீறி,
தாங்கு பல் அண்ட கோடிதான் பிளந்து உடைய, தன் கை
வாங்கினன் சிலை; நாண் ஓசை படைத்தபின், வாளி மாரி
பாங்குறு கவியின் சேனைக் கடல்மிசைப் பரப்பி ஆர்த்தான். 186-1

ஆர்த்து அரும் பகழி மாரி ஆயிர கோடி மேலும்
தூர்த்து, அடல் கவியின் சேனை துகள் படத் துணிந்து சிந்தப்
பேர்த்தனன் சிலை நாண் ஓதை; பிறை முகப் பகழி பின்னும்
கோத்தனன், அனந்த கோடி கோடியின்—கொதித்து வெய்யோன். 186-2

உருத்து அதிகாயன், மேன்மேல் ஒண் சுடர்ப் பகழி மாரி
நிரைத்தலின், இடைவிடாது நெடுங் கவிச் சேனை வெள்ளம்
தரைத் தலம்அதனில் பட்டுத் தலை உடல் சிதற, சோரி
இரைத்து எழு கடலின் பொங்க, இமையவர் அலக்கணுற்ருர். 186-3

கரடியின் சேனையோடு கவிக் குலத் தானை எல்லாம்
தரைப் பட, சரத்தின் மாரித் தசமுகன் சிறுவன்-சீற,
கரை அறு கவியின் சேனைத் தலைவர்கள் கனலின் பொங்கி,
வரையொடு மரமும் கல்லும் வாங்கினர், விரைவின் வந்தார். 186-4

வானரத் தலைவர் பொங்கி வருதலும், அரக்கன் மைந்தன்,
போன திக்கு அறிவுருமல், பொழிந்திடும் பகழிதன்னுல்
ஆனவர் உடலம் முற்றும் அழித்தனன்; குருதி பொங்க,
தான் அறிவு அழிந்து, யாரும் தனித் தனி தலத்தின் வீழ்ந்தார். 186-5

திசை முகம் கிழிய, தேவர் சிரம் பொதிர் எறிய, திண் தோள்
தசமுகன் சிறுவன், பின்னும், தடஞ் சிலை குழைய வாங்கி,
விசை கொள் நாண் எறிந்து, மேன்மேல் வெங் கவித் தானை வெள்ளம்
பசை அறப் புலர்ந்து போகப் பொழிந்தனன், பகழி மாரி. 186-6

'வீரருக்கு ஒருவரான விறல் அதிகாயன் வெம் போர்
ஆர் இனித் தடுக்க வல்லார்?' எனப் பதைத்து, அமரர் எல்லாம்
சோர்வுறத் துளங்கி, நில்லாது ஓடினர்; சுடரும் வை வேல்
போர் வலி அரக்கன் சேனை புகுந்தது, கடலின் பொங்கி. 186-7

அங்கதன் தோளில் நின்ற அண்ணல், ஆங்கு அதனைக் கண்டே,
செங் கையில் பிடித்த வீரச் சிலையை நாண் எறிந்து, தீரா
வெங் கொலை அரக்கன் விட்ட கணை எலாம் விளிய வீசி,
துங்க வேல் நிருதர் சேனை துணி படச் சொரிந்தான், வாளி. 186-8

உரை பெறு புவனம் மூன்றும் ஒழிந்திடும் காலத்து, ஏழு
கரு முகில் பொழிவதென்னக் கணை மழை சொரிந்து, காலாள்
இரதமொடு இபங்கள் வாசி யாவையும் களத்தின் வீழ்த்தி,
பொரு திறல் அரக்கனேடும் புகுந்து, அமர் கடிதின் ஏற்ருன். 186-9

புரம் எரித்துடைய புத்தேள் முதலிய புலவர் உள்ளம்
திரிதர, அரக்கன் சீறி, திண் சிலை குழைய வாங்கி,
எரி முகப் பகழி மாரி இடைவிடாது அனந்த கோடி
சொரிதர, அனுமன் ஆதி வீரர்கள் சோர்ந்து வீழ்ந்தார். 195-1

வில்லினுக்கு ஒருவன் ஆகி, உலகு ஒரு மூன்றும் வென்ற
வல் அதிகாயன் என்னும் வாள் எயிற்று அரக்கன் ஓயான்,
கல் இடும் மாரி என்னக் கணை மழை பொழியக் கண்ட
வில்லியும், விடாது, வெய்ய கணை மழை விலக்கி நின்றான்.
203-1

விறல் அதிகாயன் வீழ, வெந் திறல் அரக்கன் மைந்தர்
குறுகினர், மும்மையான ஆயிர கோடி உள்ளார்;
எறி கடற் சேனையோடும் எங்கணும் இரிய ஆர்த்து,
செறிய எண் திசையும் வந்து சூழ்ந்தனர், தெழிக்கும் சொல்லார்.
207-1

வருதலும் அரக்கன், மற்று(அவ்) வானரச் சேனை பின்னும்
பொரு சினம் திருகி முற்றா, பொங்கு அழல் என்னப் பொங்கி,
மரமொடு மலைகள் ஏந்தி, மாதிரம் மறைய, வல்லே
உரும் எனச் சொரிய வீசி உடற்றினர், ஒழிவு இலாதார். 209-1

மற்றும் திறல் வானர வீரர்கள் யாரும்,
கொற்றம் கொள் இராவணன் மைந்தர் குலைந்தே
முற்றும்படி மோதினர்; மோத முடிந்தே
அற்று, அங்கு அவர் யாவரும் ஆவி அழிந்தார். 250-1

அளப்பு இல மைந்தர் எல்லாம், ஆனை, தேர், பரி, ஆள் என்னும்
வழக்குறும் சேனை வெள்ளம் அளப்பு இல மடிய, தாமும்
களத்திடைக் கவிழ்ந்தார் என்ற மொழியினைக் காதில் கேளா,
துளக்கம் இல் அரக்கன், மேருத் துளங்கியது என்ன, சோர்ந்தான். 261-1

18

நாகபாசப் படலம்

எரி முகப் பகழி மாரி தொடுத்து, இகல் அரக்கன் எய்தான்;
எரி முகப் பகழி மாரி தொடுத்து, அவை இறுத்தான், எந்தை;
உரும்இனப் பகழி மாரி உருத்து விட்டு, அரக்கன் ஆர்த்தான்;
உரும்இனப் பகழி மாரி உருத்து விட்டு, இளவல் கொன்றான்.
106-1

நெருக்கி மற்று அனந்த கோடி நெடுங்
கணை அரக்கன் கோத்தான்;
நெருக்கி மற்று அனந்த கோடி நெடுங்
கணை நிமலன் மாய்த்தான்;
முருக்கின் உற்று அனந்த கோடி முகைக்
கணை அரக்கன் மொய்த்தான்;
முருக்கின் உற்று அனந்த கோடி முகைக்
கணை முடித்தான், மொய்ம்பன். 106-2

சிந்து வாளி செறிதலும், சேவகன்
ஐந்து நூறு கடுங் கணையால் அவன்
உந்து தேரை ஒறுத்தனன்; வெய்யவன்
வந்து தேர் ஒன்றின் வல்லையில் ஏறினான். 128-1

அழித்தனன் தடந் தேர் என்று அழன்று, தீ
விழித்தனன்; கடு நெஞ்சம் வெகுண்டு எழத்
தெழித்தனன்; சிலையால் திறல் வாளிகள்
கொழித்தனன்; இமையோர் மெய் குலுங்கினார். 148-1

அங்கதன் தடந் தோளினும் மார்பினும்
புங்க வாளி புகப் புக, தேர் எதிர்,
சிங்கஏறு அனையான் திரள் தோள்வரை
மங்க, வேறோர் மராமரம் வீசினான். 148-2

மல் திண் தோளின் அடித்த மராமரம்
இற்று நூறு திறத்தது, இமைப்பிலோர்
பொன் திண் தேர்மிசைத் தாவினன் பொங்கெலி
முற்று நாளில் முயற்சி முரஞ்சவே. 148-3

கண்ட வாலிதன் காதலனும், கனல்
விண்டதாம் என வெஞ் சினம் உற்றவன்
மண்டு தேர்மிசையில், குதியா வலி
கொண்டு, வான் இடிஏறு எனக் குத்தினான். 148-4

குத்தி, மற்று அவன் கொய் உளை மாப் பரி
பத்தி பத்தியின் வீழ, பரிந்து எதிர்
தத்தி, வல் வில் தடக் கையினால், சரம்
வித்துராமுனம் வீழ்த்தினன், தேர்அரோ. 148-5

மாறு ஓர் தேரின் மடங்கல் என, கனன்று
ஏறினான், சரம் எண்-இரண்டு ஏவினான்;
ஊறு சோரி சொரிய, உயக்கம் உற்று,
ஆறினான் கடிது, அங்கதன் ஆண்மையான். 148-6

கோல் கொள் ஆளும் பரியும் குழம்பதாய்,
காலின் நூறி, கரங்களின் மற்று அவன்
தாலு மூலத்து அடிப்ப, தனு வலான்,
மால் உழந்தவர் போல மயங்கினான். 148-7

பல் ஆயிரத்தின் முடியாத டக்கம் அவை வீச வந்த படர் கால்
செல்லா நிலத்தின் அருளோடு செல்ல, உடல் நின்ற வாளி சிதறுற்று,
எல்லாம் அவித்தும் உணர்வோடும் எண்ணி, அறனே விளக்கும் உர
வல்லான் ஒருத்தன், இடையே படுத்த வடு ஆன, மேனி வடுவும். [வோன்,
264-1

பறவை நாயகன்தான் ஏக, படர் உறு துயரம் நீங்கி,
கறவையும் கன்றும் போலக் களிக்கின்ற மனத்தர் ஆகி,
இறைவனும் இளைய கோவும் யாவரும் எழுந்து நின்றார்;
மறை ஒரு நான்கும், மண்ணும், வானமும், மகிழ்ந்த மாதோ.
270-1

இரு நிலம் கிழிய, பாயும் எறி கடல் இரைப்புத் தீர,
பரவும் எண் திசையைத் தாங்கும் பகட்டினம் இரியல் போக,
கரு வயிறு உடைந்து சிந்தி அரக்கியர் கலங்கி வீழ,
அரு வரை அண்ட கோளம் பிளக்க, நின்று, அனுமன் ஆர்த்தான்.
273-1

19 படைத் தலைவர் வதைப் படலம்

'அளப்ப அரும் வெள்ளச் சேனை நமர் திறத்து அழிந்தது அல்லால்,
களப்படக் கிடந்தது இல்லை, கவிப் படை ஒன்றதேனும்;
இளைப்புறும் சமரம் மூண்ட இற்றை நாள்வரையும், என்னே
விளைப்ப அரும் இகல் நீர் செய்து வென்றது, விறலின் மிக்கீர்!
1-1

'இகல் படைத் தலைவர் ஆய எண்பது வெள்ளத்து எண் இல்
தொகைப்பட நின்றோர் யாரும் சுடர்ப் படை கரத்தின் ஏந்தி,
மிகைப்படும் தானை வெள்ளம் ஈர்–ஐந்தோடு ஏகி, வெம் போர்ப்
பகைப் பெருங் கவியின் சேனை படுத்து, இவண் வருதிர்' என்றான். 1-2

'மன்னவர் மன்னவ! மற்று இது கேண்மோ!
துன்னும் அரக்கரின் வீரர் தொகைப்பட்டு
உன்னிய நாற்பது வெள்ளமும் உற்று, ஆங்கு
அந் நரன் அம்பினில் ஆவி அழிந்தார். 16-1

மத்த மதக் கரியோடு மணித் தேர்,
தத்துறு வாசி, தணப்பு இல காலாள்,
அத்தனை வெள்ளம் அளப்பு இல எல்லாம்,
வித்தக மானிடன் வாளியின், வீந்த. 16-2

இப் படையோடும் எழுந்து இரவின்வாய்
வெப்பு உறு வன் கவி வீரர்கள் ஓதை
எப் புறமும் செவிடு உற்றதை எண்ணி,
துப்புறு சிந்தையர் (வீரர்) தொடர்ந்தார். 20-1

தேர் நிரை சென்றது; திண் கரி வெள்ளக்
கார் நிரை சென்றது; கால் வய வாசித்
தார் நிரை சென்றது; தாழ்வு அறு காலாள்
பேர் நிரை சென்றது; பேசுவர் யாரே? 22-1

'ஐய! கேள்: சிவன் கை வாள் கொண்டு, அளப்ப அரும் புவனம்
வெய்யவன் வெள்ளச் சேனைத் தலைவரின் விழுமம் பெற்றோர், [காக்கும்
கை உறும் சேனையோடும் கடுகினர் கணக்கிலாதோர்,
மொய் படைத் தலைவர்' என்று, ஆங்கு அவர் பெயர் மொழியலுற்றான். 29-1

'இன்னவர் ஆதியர் அளப்பிலோர்; இவர்
உன்ன அருந் தொகை தெரிந்து உரைக்கின், ஊழி நாள்
பின்னரும் செல்லும்' என்று ஒழியப் பேசினான்;
அன்ன போர் அரக்கரும் களத்தை அண்மினார். 35-1

கொடுமரத்திடை இராகவன் கோத்த வெம் பகழி
அடல் அரக்கர் என்று உரைத்திடும் கானகம் அடங்கக்
கடிகை உற்றதில் களைந்தது கண்டு, விண்ணவர்கள்,
'விடியலுற்றது நம் பெருந் துயர்' என வியந்தார். 58-1

வெற்றி வெம் படைத் தலைவர் என்று உரைத்திடும் வெள்ளத்து
உற்ற போர் வலி அரக்கர்கள், ஒரு தனி முதல்வன்
கொற்ற வெஞ் சரம் அறுத்திட, அளப்பு இலர் குறைந்தார்;
மற்றும் நின்றவர் ஒரு திசை தனித் தனி மலைந்தார். 67-1

தேர் போய் அழிவுற்றது எனத் தெளியா,
போர் மாலி பொருந்து தரைப்பட, முன்
ஓர் மா மரம் நீலன் உரத்தொடு கொண்டு
ஏர் மார்பிடை போக எறிந்தனனால். 81-1

அப் போது அழல் வேள்வி அடல் பகைஞன்,
வெப்பு ஏறிய வெங் கனல் போல வெகுண்டு,
'இப் போர் தருக!' என்ற இலக்குவன்மேல்
துப்பு ஆர் கணை மாரி சொரிந்தனனால். 85-1

சொரி வெங் கணை மாரி தொலைத்து, இரதம்
பரி உந்திய பாகு படுத்து, அவன் வெம்
பொரு திண் திறல் போக, இலக்குவன் அங்கு
எரி வெங் கணை மாரி இறைத்தனனால். 85-2

முடிவுற்றனன், மாருதி மோதுதலால்,
கொடு வச்சிர எயிற்றன் எனும் கொடியோன்;
விடம் ஒத்த பிசாசன் விறற் பனச-
னொடும் உற்று, இருவோரும் உடன்றனரால். 92-1

பொர நின்ற பணைப் புய வன் பனசன்
நிருதன் களமீது நெருக்கி, அதில்
பரி வெள்ளம் அளப்பு இல பட்டு அழியத்
தரு அங்கை கொடே எதிர் தாக்கினனால். 92-2

பனசன் அயர்வுற்று ஒருபால் அடைய,
தனி வெம் பரி தாவு நிசாசரன் வெங்
கனல் என்ன வெகுண்டு, கவிப் படையின்
இனம் எங்கும் இரிந்திட, எய்தினனுல். 93-1

விசை கண்டு உயர் வானவர் விண் இரிய,
குசை தங்கிய கோள் என, அண்டமொடு எண்
திசை எங்கணும் நின்று திரிந்துளதால்—
பசை தங்கு களத்து ஒரு பாய் பரியே. 96-1

மற்றும் படை வீரர்கள் வந்த எலாம்
உற்று அங்கு எதிரேறி உடன்று, அமர்வாய்
வில் தங்கும் இலக்குவன் வெங் கணையால்,
முற்றும் முடிவு எய்தி முடிந்தனரால். 100-1

20 மகரக்கண்ணன் வதைப் படலம்

இந்திரியத்தை இகழ்ந்தவன், அந்தோ!
மந்திர வெற்றி வழங்க வழங்கும்
இந்திரம் அற்றது எனக் கடிதிகொல்?
வந்தது என், வில் தொழிலைக் கொலை மான? 5-1

அம்புயக் கண்ணன் கண்டத்து ஆயிரம் பகழி நாட்டி,
தம்பிதன் கவசமீதே இரட்டி சாயகங்கள் தாக்கி,
வெம்பு இகல் அனுமன்மீதே வெங் கணை மாரி வித்தி,
உம்பர்தம் உலகம் முற்றும் சரங்களாய் மூடி உய்த்தான். 19-1

'இந்திரன் பகைஞன் போல இவனும் ஓர் மாய வீரன்;
தந்திரக் குரக்குச் சேனை உளது எலாம் தரையின் வீழ்த்தான்;
எந்திரம் ஆகிப் பார்த்த இடம் எலாம் தானே ஆனுன்;
அந்தரம் அவனேடு ஒப்பார் ஆர்?' என அமலன் சொன்னுன். 29-1

மற்று அவன் இறத்தலோடும், மறைகளும் தேடிக் காணுக்
கொற்றவன் சரத்தின் மாரி கடையுக மழையின் கொள்ளப்
பற்றி, அங்கு அரக்கர் தானை வெள்ளம் அத்தனையும் பாரில்
அற்றவை அழிந்து சிந்த அறுத்து, ஒரு கணத்தில் மாய்த்தான், 31-1

மடிந்தனன் சிங்கன் என்னும் மறம் தரு வயிரத் தோளான்;
தொடர்ந்தனர் அரக்கர், பின்னும்; தொடர்ந்தவர்தம்மை எல்லாம்
கடந்தனர், கவியின் வீரர்; களத்திடைக் கணத்தில் மாய்த்தார்;
நெடுந் திரைப் பரவைமீது நிறைந்தது, குருதி நீத்தம். 38-1

21 பிரமாத்திரப் படலம்

தலைகளை நோக்கும்; தான் தன் சரங்களை நோக்கும்; தன் கைச்
சிலையினை நோக்கும்; செம் பொன் தேரினை நோக்கும்; செய்த
கொலைகளை நோக்கும்; கொன்ற கொற்றவர் தம்மை நோக்கும்;
அலை பொரும் குருதி என்னும் அளக்கரை அமைய நோக்கும். 25-1

ஆர்த்த வானரர் வாய் எலாம் கை எலாம் அசைய,
பார்த்த கண் எலாம் அங்கதன் உடல் எலாம் பாரில்
சீர்த்த வீரியன் இளையவன் இராமன்மேல் செறிய,
தூர்த்த வாளியன் சிலையொடும் விசும்பினைத் தொடர்ந்தான். 77-1

இன்னது இவ் வழி நிற்க, மற்று இருஞ் சமர்க்கு உடைந்தே,
துன்னு வான் வழி இலங்கையில் போகின்ற தோன்றல்,
பொன்னின் வார் சிலைக் கரத்தொடும் பொருக்கெனப் புகுந்து,
தன்னை ஈன்றிடும் ஒரு தனித் தந்தையைக் கண்டான். 88-1

மாண்டனன் அகம்பன், மண்மேல்; மடிந்தன, நிருதர் சேனை;
மீண்டனர், குரக்கு வீரர்; விழுந்தன, சினக் கை வேழம்;
தூண்டின, கொடித் தேர்; அற்றுத் துணிந்தன, தொடுத்த வாசி;—
ஆண்தகை இளைய வீரன் அடு சிலை பொழியும் அம்பால். 137-1

அருந் திறல் அகம்பன் ஆதி அரக்கரோடு, அளவு இல் ஆற்றல்
பொரும் திறல் களிறு, காலாள், புரவி, தேர், அளப்பு இல் கோடி,
இரிந்திடக் கொன்று, தான் அங்கு ஒரு திசை, யாரும் இன்றிப்
பொருந்திய இருளின் பொம்மல் பொலிய, மாருதியும் நின்றான். 140-1

'தோடு அவிழ் அலங்கல் என் சேய்க்கு உணர்த்துமின்' என்னச் சொன்
ஓடினார் சாரர்; வல்லை உணர்த்தினர்; துணுக்கம் எய்தா, [னான்;
ஆடவர் திலகன், 'யாண்டையான் இகல் அனுமன்? வனோர்,
வீடணன், யாங்கண் உள்ளார்? உணர்த்துமின்' விரைவின் என்றான். 157-1

தந்தை இறந்தும், தாயர் பிரிந்தும், தலம் விட்டும்,
பின் தனி மேவும் மாது பிரிந்தும், பிரிவு இல்லா
எம் துணை நீ என்று இன்பம் அடைந்தேன்; இது காணேன்;
வந்தனென், எம்பி! வந்தனென், எந்தாய்! இனி வாழேன்! 202-1

22 சீதை களம் காண் படலம்

அயன் சிவன் அறிவுறு ஆதி நாயகன்,
வியன் கர நேமி அம் படை அவ் வெற்பினை
நியங்கொடு தாங்கி விண் நின்றதால்; அதில்
இயங்கிய ஊதை வெங் களத்தின் எய்தவே. 99-1

வந்த நல் மருந்தினை மருத்து வானவன்
சிந்தையில் பெரு மகிழ் சிறப்பச் சேர்ந்து உறீஇ.
அந்தரத்து அருக்கன் மா மகனொடு ஆயவர்
வந்து இரைத்து, ஆர்த்து, எழும்வகை செய்தான்அரோ. 99-2

23

மருத்துமலைப் படலம்

மூன்று அரத் தாவொடும் புல்லின் முன்னம் வந்து,
ஊன்றின நிலத்து அடி, கடவுள் ஓங்கருள்;
வான் தனி நின்றது; வஞ்சர் ஊர் வர,
ஏன்றிலது; ஆதலால், அனுமன் எய்தினன். 97-1

24

களியாட்டுப் படலம்

வடித்திடும் அமுதத் தேறல் மாந்தினர் எவரும்; உள்ளம்
பிடித்தது களிப்பின் பெற்றி; பிறந்தது காம வேகம்;
எடுத்தனர், மகர யாழின் இன் இசை இனிமையோடு;
நடித்தனர், நங்கைமார்கள் நாடகத் தொகையின் பேதம். 3-1

25

மாயா சீதைப் படலம்

அரக்கரில் சிறந்த வீரர், ஆயிர வெள்ளம் என்னும்
திரைக் கடல் அரக்கர் யாரும் சிதைந்தனர்; திண் தேர், யானை,
சுருக்கம் இல் இவுளி, காலாள் எனும் தொகை அளப்பு இல் வெள்ளம்,
உரைக்கு அடங்காதது எல்லாம், உலந்தது, அங்கு இருவர் வில்லால். 5-1

என்று மாலியவான் கூற, பிறை எயிற்று எழிலி நாப்பண்
மின் தெரிந்தென்ன நக்கு, வெருவுற, உரப்பி, பேழ் வாய்
ஒன்றின் ஒன்று அசனி என்ன உருத்து, 'நீ உரைத்த மாற்றம்
நன்று, நன்று!' என்று சீறி, உரைத்தனன், நலத்தை ஓரான். 8-1

என்றனன் மாருதி; இந்திரசித்தும்,
'ஒன்று உரை கேள்: எனது எந்தையும் ஊரும்
பொன்றுதல் தீரும்; இதின் புகழ் உண்டே?
நன்று உரை!' என்று, பின் நக்கு, உரைசெய்தான். 35-1

'எந்தை உவந்த இலங்கு இழையாளைத்
தந்திடில், இன்று தரும் புகழ் உண்டோ?
சிந்துவென்; எந்தை தியங்கிய காம
வெந் துயர் தீரும் விழுப்பமும் உண்டால்? 36-1

' ''எழுபது வெள்ளத்தோடும் இலங்கையை
இடந்து, என் தோள்மேல்
தழுவுற வைத்து, இன்று ஏகு'' என்று
உரைத்தியேல், சமைவென், தக்கோய்!
பொழுது இறை தாழ்ப்பது என்னே?
புட்பகம் போதல் முன்னம்,
குழுவொடும் கொண்டு போவென்,
கணத்தினின், குதிப்பென், கூற்றின்.' 83-1

கண்டு, தன் கருத்தில் கொண்ட கவலையைக் கடந்து, அங்கு ஆவி
உண்டு எனத் தெளிந்து, தேறும் வீடணன், உற்றது எல்லாம்
கொண்டு தன் அகத்தில் உன்னி, குலவிய உவகை தூண்ட,
தொண்டை வாய் மயில் அன்னாளை மனத்தொடும் தொழுது நின்றான். 91-1

26 நிகும்பலை யாகப் படலம்

நூறு ஆகிய வெள்ளம் நுனித்த கணக்கு
ஆறாதன சேனை அரக்கர் உடற்கு
ஏறாதன இல்லை—இலக்குவன் (வில்)
தாறா நெடு வாளி துரந்திடவே. 42-1

சிர நிரை அறுத்து, அவர் உடலைச் சிந்தி, மற்று
உர நிரை அறுத்து, அவர் ஒளிரும் வெம் படைக்
கர நிரை அறுத்து, வல் அரக்கர் கால் எனும்
தர நிரை அறுப்பது, அங்கு இலக்குவன் சரம். 51-1

ஆயின பொழுதில் அங்கு அளவு இல் மந்திரம்
ஒய்வு இலது உரைத்தனன்; ஓம ஆகுதித்
தீயிடை நெய் சொரிந்து இயற்றும் திண் திறல்
தீயவன், 'என்!' எனத் திகைத்து நோக்கினான். 52-1

'ஆங்கு அது கிடக்க, நான் மனிதர்க்கு ஆற்றலேன்,
நீங்கினென் என்பது ஓர் இழிவு நேர் உற,
ஈங்கு நின்று யாவரும் இயம்ப, என் குலத்து
ஓங்கு பேர் ஆற்றலும் ஒழியும்; ஒல்குமால். 64-1

'நான் உனை இரந்து கூறும் நயமொழி ஒன்றும் கேளாய்;
சானகி தன்னை வாளால் தடிந்ததோ? தனதன் தந்த
மானமேல் சேனையோடும் வடதிசை நோக்கி மீது
போனதோ?—கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்! 69-1

சூர் எலாம் திரண்ட பொன்-தோள் தாபதர்க்கு இளைய தோன்றல்
நீர் எலாம் மறந்தீர் போலும்; யான் செரு ஏற்று நின்று,
கார் எலாம் சொரிவது என்னும் கணைகளால் கவியின் வெள்ளம்
போர் எலாம் மடிந்து நூறி, இறத்தலும் இருகால் பெற்றீர். 84-1

'விடு வாளிகள் கடிது ஓடுவ; வீற்று ஆகுவ; வீயா
நெடு நாணிடை சிதையாதவர், நேர் ஏவிய விசிகம்,
தொடு கார் விசை நுழையா, எதிர் மீளாது, இடை சோரா,
எடு பாணமும் அழியா, முதுகு இடு தூணியை அறுத்தான்.'
126-1

அரு ஆகியும், உரு ஆகியும், அழியா முழுமுதல் ஆம்
கரு ஆகியும், எமை ஆளுறு கருணாகர வடிவாம்
பொருள் ஆகியும், இருள் ஆகியும், ஒளி ஆகியும், பொலியும்
திருமார்பினன் நெடு மாயையை யாரே தெரிந்து அறிவார்?
142-1

ஈது அங்கு அவை நெடு வானிடை நிகழ்கின்றது; இப்பாலில்
காதும் கொலை அரக்கன் அது கண்டான்; 'தகை மலர்மேல்
போதன் தரு படை போக்கினன் போலாம்' எனப் புகைந்தான்; [பான்.
ஏது இங்கு இவன் வலி நன்று; மற்று இது காண்பென்' என்று இசைப்
144-1

உமை பற்றிய பாகன் முதல் இமையோர் பல உருவம்
சமைவுற்றது தான் அல்லது ஒர் பொருள் வேறு இலது எனவே
அமைவுற்றது; பகிரண்டமும் அழிகாலம் இது எனவே
குமைவுற்றிட, வடவைப் பொறி கொழிக்கின்றது, எவ் உலகும். 145-1

27 இந்திரசித்து வதைப் படலம்

என்று அவன் இகழ்ந்தது எல்லாம் இந்திரசித்து கேளான்,
நன்று நம் ஆணை என்னு, நகைசெய்யா, அவனைப் பார்த்து,
'கொன்று நான் இருவர்தம்மைக் குரக்குஇனத்தோடும் மாய்த்து,
வென்று நான் வருவன்,—எந்தாய்!—கேள்'என, விளம்பலுற்றான்.
10-1

'வாசக் குழலாள் மயில் சீதையை நீ
ஆசைப்படுகின்றது நன்று அல காண்;
நாசத்தை உறும், உயிர் போய்; நானே
நேசப்படுகின்றனன்' என்றனனே. 10-2

'சிறியோர் செயல் துன்மதி செய்தனை நீ;
வெறி ஆர் குழல் சீதையை விட்டு அகல,
செறி ஆர் மணி மாளிகை சேர் தரு, நின்
அறியாமையினால் அழிவானதுவே. 10-3

'வண்டு ஆர் குழலார் மலர்மாதினை நீ
கண்டே மனம் வைப்பது கற்பிலகாண்;
விண்டே எதிர் வாலிதன் மார்பு உருவக்
கண்டோன் அவனே, கணை ஒன்றதனால். 10-4

'ஆரே, பிறர் தாரம் உறுப்புஅதனில்
நேரே நினைகின்றவர்? நீ நினைவாய்;
பாரே இழிவு ஆனது; தான் நிலையின்
பேரே ஒழிவு ஆனது' என்று சொன்னான். 10-5

'வட்ட மா மதி முகத்து எம் மங்கையை மூக்கு அரிந்த
கட்ட மானிடவர்தங்கள் கை வலி காட்டினாலும்,
இட்ட நாள் எல்லைதன்னை யாவரே விலக்க வல்லார்?
பட்டு, நான் விழுந்தால் அன்றி, பாவையை விடுவது உண்டோ?
11-1

'பழுது இலா வடிவினாளை, பால் அன்ன மொழியினாளை,
தழுவினால் அன்றி, ஆசை தவிருமோ? தவம் இலாதாய்!
முழுதும் வானவரை வென்றேன்; மூவர் என் முன் நில்லார்கள்;
அழிவுதான் எனக்கும் உண்டோ? ஆண் அலாய்; பேடி!' என்றான். 11-2

சிறு தொழிற்கு உரியர் ஆகி, தீவினைக்கு உறவாய் நின்ற
எறி படை அரக்கர் என்னும் எண் இலா வெள்ளச் சேனை
மறி திரைக் கடலின் போத, வான் முரசு இயம்ப, வல்லே,
தெறு சினத்து அரக்கன், வானோர் திகைத்து உளம் குலைய, சென்றான்.
16-1

அச்சு எனலாக முன்பின் தோன்றலும், அறாத மெய்யன்
தச்சன பகழி மாரி எண்ணல்ஆம் தகவும் தத்தி,
பச்செனும் மரத்தவாறு பெருக்கவும், பதையாநின்றான்,
நிச்சயம் போரில் ஆற்றல் ஒய்வு இலன்; நெஞ்சும் அஞ்சான்.
30-1

'வான் தலை எடுக்க, வேலை மண் தலை எடுக்க, வானோர்
கோன் தலை எடுக்க, வேதக் குலம் தலை எடுக்க, குன்றாத்
தேன் தலையெடுக்கும் தாராய்! தேவரை வென்றான் தீய
ஊன் தலை எடுத்தாய், நீ' என்று உரைத்தனர், உவகை மிக்கார்.
62-1

28 இராவணன் சோகப் படலம்

தொழும்பு செய்து உளர் ஆம் தேவர் துயரினர் போலத் தாமும்
பழங்கண் உற்று, உடைய வேந்தன் இணை அடி விடாது பற்றி,
உளம் களிப்புறுவோர் ஓயாது அழுதனர்; மைந்தன் ஆவி
இழந்தனன் என்னக் கேட்டு, ஆங்கு, இடி உறும் அரவை ஒத்தாள்.
43-1

உம்பரின் உலவும் தெய்வ உருப்பசி முதல ஆய
ஐம்பது கோடி தெய்வத் தாதியர் அழுது சூழ்ந்தார்;
தும்பியின் இனத்தை எல்லாம் தொலைத்திடும் குருளை மாய,
கம்பம் உற்று, அரியின் பேடு கலங்கியது என்னச் சோர்ந்தாள்.
43-2

பத்து எனும் திசையும் வென்று, கயிலையில் பரனை எய்தி,
அத் தலை அமர் செய்து, ஆற்றான்; அவன் இடத்து உமை அன்பால் தன்
கைத்தலக் கிளி நிற்கு ஈய, கவர்ந்து எனக்கு அளித்து நின்ற
வித்தகக் களிறே! இன்னும் வேண்டினேன், எழுந்திராயே! 50-1

'மஞ்சு அன மேனி வள்ளல் வளரும் நாள், மன்னர் தோள் சேர்
நஞ்சு அன விழியால் அன்றி, நகை மணிப் புதல்வர், நல்லோர்,
செஞ் சிலை மலரால் கோலித் திரிந்தவா என்னில், செல்லும்
வெஞ் சமர் இன்னும் காண வல்லனே விதி இலாதேன்!' 52-1

29 படைக் காட்சிப் படலம்

தொல்லை சேர் அண்ட கோடித் தொகையில் மற்று அரக்கர் சேனை
இல்லையால் எவரும்; இன்னே எய்திய இலங்கை என்னும்
மல்லல் மா நகரும் போதா; வான் முதல் திசைகள் பத்தின்
எல்லை உற்றளவும்நின்று, அங்கு எழுந்தது, சேனை வெள்ளம்.
2-1

மேய சக்கரப் பொருப்பிடை மேவிய திறலோர்,
ஆயிரத் தொகை பெருந் தலை உடையவர், அடங்கா
மாயை கற்றவர், வரத்தினர், வலியினர், மறப் போர்த்
தீயர், இத் திசை வரும் படை அரக்கர்—திண் திறலோய்! 22-1

சீறு கோள் அரி முகத்தினர்; திறற் புலி முகத்து ஐஞ்-
ஞூறு வான் தலை உடையவர்; நூற்றிதழ்க் கமலத்து
ஏறுவான் தரும் வரத்தினர்; ஏழ் பிலத்து உறைவோர்;
ஈறு இலாத பல் அரக்கர்; மற்று எவரினும் வலியோர். 25-1

சாலும் மா பெருந் தலைவர்கள் தயங்கு எரி நுதற் கண்
சூலபாணிதன் வரத்தினர், தொகுத்த பல் கோடி
மேலையாம் அண்டத்து உறைபவர், இவர் பண்டு விறலால்
கோல வேலுடைக் குமரனைக் கொடுஞ் சமர் துரந்தோர். 27-1

ஆதி அம் படைத் தலைவர்கள், வெள்ளம் நூறு; அடு போர்
மோது வீரர், மற்று ஆயிர வெள்ளம்; மொய் மனத்தோர்,
'காது வெங் கொலைக் கரி, பரி, கடுந் திறல் காலாள்,
ஓது வெள்ளம் மற்று உலப்பு இல கோடி' என்று உரைப்பார்.
30-1

அன்னது அன்றியும், ஆழி நீர்க்கு அப் புறத்து உலகில்,
துன்னுறும் சத கோடி வெள்ளத் தொகை அரக்கர்-
தன்னை ஓர் கணத்து எரித்தது, சலபதி வேண்ட,
மன் இராகவன் வாளி ஒன்று; அவை அறிந்திலிரோ? 43-1

30 மூலபல வதைப் படலம்

போனபின், பல புவனம் என்று உரைக்கின்ற பொறை சேர்
ஆன அண்டங்கள் எவற்றினும் அமர்ந்திடும் மூலத்
தானை தன்னையும், 'எழுக' எனச் சாற்றினர்—தறுகண்
கோன் உரைத்தமை தலைக்கொளும் கொடும் படைத்தலைவர். 3-1

மூன்றின் நூற்றினோடு ஆயிரம் மூள்வன வெள்ளம்
ஆன்ற தேர், பரி, கரியவை, ஆளையும், அடங்கி,
மூன்று லோகமும் முற்றும் போய் முடிவுறும் என்ன
ஏன்று சென்றது, அவ் இராமன்மேல், இராக்கதப் பரவை. 23-1

'தான் அல்லாது ஒரு பொருள் இலை எனத் தகும் முதல்வன்-
தான் இராமன் என்று எழில் உரு எடுத்ததும் தவறோ?
தான் எம்மோடு பல் புவனங்கள் தனி வயிற்று அடக்கும்
தானம் மேவினர்க்கு இவர் ஒரு பொருள் எனத் தகுமோ? 26-1

'நின்று காண்குதிர், இறைப் பொழுது; இங்கு நீர் வெருவல்;
இன்று இராகவன் பகழி மற்று இராக்கதப் புணரி
கொன்று வற்றிடக் குறைத்து உயிர் குடிக்கும்' என்று அமரர்க்கு
அன்று முக்கணன் உரைத்தல் கேட்டு, அவர் உளம் தெளிந்தார். 26-2

வானின் மேவிய அமரருக்கு இத் துணை மறுக்கம்
ஆனபோது, இனி அகலிடத்து உள்ள பல் உயிர்கள்
ஈனம் எய்தியது இயம்பல் என்? எழுபது வெள்ளத்
தானை ஆகிய கவிப் படை சலித்தது, பெரிதால். 26-3

வாய் உலர்ந்தன சில சில; வயிறு எரி தவழ்வுற்று
ஓய்தல் உந்தின சில சில; ஓடின நடுங்கிச்
சாய்தல் உந்தின சில சில; தாழ் கடற்கு இடையே
பாய்தல் உந்தின சில சில—படர் கவிப் படைகள். 29-1

அனுமன் ஆற்றலும், அரசனது ஆற்றலும், இருவர்
தனுவின் ஆற்றலும், தங்களைத் தாங்குவர் தாங்கார்,
'கனியும் காய்களும் உணவு உள; மலை உள காக்க;
மனிதர் ஆளில் என், இராக்கதர் ஆளில் என், வையம்?' 44-1

என்று, சாம்பவன் முதலிய தலைவர்கள் இயம்ப,
குன்று உலாம் புயத்து அங்கதன் குறுநகை புரிந்தே,
'நன்று நும் உரை; நாயகர்ப் பிழைத்து, நம் உயிர் கொண்டு,
ஒன்றி வாழ்தலும் உரிமையதே?' என உரைப்பான். 44-2

'ஆளி மா முகவர், சீறும் அடு புலி முகவர், மிக்க
யாளி மா முகவர், யானை முகவர், மற்று எரியும் வெங் கண்
கூளி மா முகவர் ஆதி அளப்பு இல கோடி உள்ளார்;
ஊழி சென்றாலும் உட்கார்; ஒருவர் ஓர் அண்டம் உண்பார்.
52-1

என்று எடுத்து, எண்கின் தானைக்கு இறையவன் இயம்பலோடும்,
வன் திறல் குலிசம் ஓச்சி, வரைச் சிறகு அரிந்து, வெள்ளிக்
குன்றிடை நீலக் கொண்மூ அமர்ந்தென, மதத் திண் குன்றில்
நின்றவன் அளித்த மைந்தன் மகன் இவை நிகழ்த்தலுற்றான்.
54-1

'இசைந்தனன் அமருக்கு; எல்லா உலகமும் இமைப்பின் வாரிப்
பிசைந்து, சிற்றுதரத்து உண்ணப்பெற்ற நாள் பிடித்த மூர்த்தம்
இசைந்தது போலும்!' என்று, ஆங்கு, அயன் சிவன் இருவர் தத்தம்
வசம் திகழ் கருத்தினூடே மதித்திட, வயங்கி நின்றான். 69-1

மற்றும் வேறு அறத்துள் நின்ற வான நாடு அணைந்துளோர்,
'கொற்ற வில்லி வெல்க! வஞ்ச மாயர் வீக! குவலயத்து
உற்ற தீமை தீர்க, இன்றொடு!' என்று கூறினர்; நிலம்
துற்ற வெம் படைக் கை நீசர் இன்ன இன்ன சொல்லினர்: 72-1

அரைக் கணத்து அரக்கர் வெள்ளம் அளவு இல் கோடி ஆவி போய்த்
தரைப் பட, பல் அண்ட கோடி தகர, அண்ணல்தன் கை வில்
இரைக்கும் நாண் இடிப்பினுக்கு உடைந்து, 'இராம ராம!' என்று
உரைக்கும் நாமமே எழுந்தது, உம்பரோடும் இம்பரே. 76-1

சிரம் ஒடிந்து சிந்தினர்கள் சிலவர்; செஞ் சுடர்ப் படைக்
கரம் ஒடிந்து சிந்தினர்கள் சிலவர்; கல்லை வெல்லு மா
உரம் ஒடிந்து சிந்தினர்கள் சிலவர்; ஊழி காலம் வாழ்
வரம் ஒடிந்து சிந்தினர்கள் சிலவர்;—மண்ணின் மீது அரோ.
76-2

அண்ட கோளம் எண் திசாமுகங்கள் எங்கும் ஆகியே,
மண்டி மூடி வாழ் அரக்கர்தாமும், வாகை வீரன்மேல்,
கொண்டல் எழும், ஊழிவாய், ஓர் குன்றில் மாரி பொழிவபோல்,
சண்ட வேகம் ஏறி, வாளி மழை சொரிந்து தாக்கினர். 83-1

தேரின்மீது அனந்த கோடி நிருதர், சீறு செம் முகக்
காரின்மீது அனந்த கோடி வஞ்சர், காலின் வாவு மாத்
தாரின்மீது அனந்த கோடி தறுகண் நீசர், தாழ்வு இலாப்
பாரின்மீது அனந்த கோடி பதகர், வந்து பற்றினர். 83-2

துடி, தவண்டை, சங்கு, பேரி, துந்துமிக் குலங்கள், கைத்
தடி, துவண்ட ஞாண், இரங்கு தக்கையோடு பம்பை, மற்று
இடி பொதிந்த முரசம் ஆதி எண் இல் பல்லியக் குழாம்
படி நடுங்கவே, பகைக் களத்தின் ஓசை விஞ்சவே. 83-3

இரைத்து அடர்ந்து அரக்கர் வெள்ளம், எண் இல் கோடி, இடைவிடாது
உருத்தல் கண்டு, இராகவன் புன்முறுவல் கொண்டு, ஒவ்வொருவருக்கு
ஒருத்தனுய தன்மை தானும் உணர்வுருதபடி எழ,
சரத்தின் மாரி பெய்து, அரக்கர் தலை தரைக்கண் வீழ்த்தினுன்.
83-4

'நுனித்திடற்கு அருங் கடுப்பின் நொடிவரைக்குள் எங்குமாய்க்
குனித்த வில் கை வாளி மாரி மழை சொரிந்து கோறலால்,
மனித்தன் மற்று ஒருத்தன் என்ற வாய்மை நன்று நன்று' எனு,
வினைத் திறத்து அரக்கர் விம்மிதத்தர் ஆய், விளம்புவார். 83-5

'விண்ணின்மீது அனந்த கோடி வீரன்' என்பர்; 'அல்ல இம்
மண்ணின்மீது அனந்த கோடி மனிதன்' என்பர்; அல்ல வெங்
கண்ணினூடு அனந்த கோடி கண்ணன்' என்பர்; 'அல்ல உம்
எண்ணமீது அனந்த கோடி உண்டு, இராமன்' என்பரால். 83-6

இத் திறத்து அரக்கர் வெள்ளம் எங்கும் ஈது இயம்ப, நின்று
எத் திறத்தினும் விடாது, இராமன் எங்கும் எங்குமாய்,
அத் திறத்து அரக்கரோடும், ஆனை, தேர், பரிக் குலம்,
தத்துறச் சரத்தின் மாரியால் தடிந்து, வீழ்த்தினுன். 83-7

இடைவிடாது அளப்பு இல் வெள்ளம் இற்று இறந்து போகவும்,
படை விடாது அரக்கர் ஆளிபோல் வளைந்து பற்றவும்,
கொடைவிடாதவன் பொருள் குறைந்திடாதும் வீதல்போல்,
தொடைவிடாது இராமன் வாளி வஞ்சர்மீது தூவினுன். 83-8

இன்னவாறு இராமன் எய்து, சேனை வெள்ளம் யாவையும்,
சின்னபின்னமாக, நீறு செய்தல் கண்டு, திருகியே,
மின்னு வாள் அரக்கர் வெள்ளம், எண்ணில் கோடி, வெய்தினின்
துன்னி, மூடும் அந்தகாரம் என்ன வந்து சுற்றினுர். 96-1

வானின்மீது அனந்த கோடி மாய வஞ்சர் மண்டினுர்;
ஆனைமீது அனந்த கோடி அடல் அரக்கர் அண்மினுர்;
சோனை மேகம் ஒத்து அனந்த கோடி தீயர் சுற்றினுர்,
மீன வேலை ஒத்து அனந்த கோடி வஞ்சர் மேவினுர். 96-2

அடல் வார் சிலை அமலன் சொரி கனல் வெங் கணை கதுவி,
தொடர் போர் வய நிருதக் கடல் சுவறும்படி பருக,
படுமாறு அயல் வரு தீயவர் பல கோடியர் பலரும்
சுடர் ஏறிய படை மாரிகள் சொரிந்தார், புடை வளைந்தார். 101-1

கோல் பொத்திய நெடு நாணினில் கோமான் தொடை நெகிழ,
மேல் பொத்திய நிருதக் குலம் வேரோடு உடன் விளிய,
தோல் பொத்திய உயிர் யாவையும் தொடக்கற்று உடன் மடிய,
கால் பொத்திய கை ஒத்தன, காகுத்தன் வெங் கணையால். 102-1

அது போது அகல் வானில் மறைந்து, அரு மாயை செய் அரக்கர்,
எது போதினும் அழிவு அற்றவர், இருள் வான் உற மூடி,
சத கோடிகள் கணை மாரிகள் தான் எங்கும் நிறைத்தார்;
சது மா மறை அமலன் அவை தடிந்தான், தழற் படையால். 108-1

அமலன் விடும் அனல் வெம் படை அடு வெம் பொறி சிதறி,
திமிலம்கொடு ககனம் செறி திறல் வஞ்சகர் புரியும்
பிமரம் கெட, அவர்தம் உடல் பிளவுண்டு உயிர் அழிய,
சமரம் புகும் அளவு இல்லவர்தமை வென்றது, ஓர் நொடியின். 108-2

காலாள் எனும் நிருதப் படை வெள்ளம் கடைகணித்தற்கு
ஏலாதன பல கோடிகள் இமையோர் கரை காணார்;
பாலாழியின்மிசையே துயில் பரமன் சிலை பொழியும்
கோலால் அவர் குறைவுற்றனர்; குறையாதவர் கொதித்தார். 112-1

கொதித்தார் எழு கடல்போல் வளைவுற்றார்; கொடு முசலம்
குதித்து ஓடிய சிலை வாளிகள், கூர் வேல், கதை, குலிசம்,
விதைத்தார், பொரும் அமலன்மிசை வெய்தே; பல உயிரும்
விதித்தானையும் விதித்தான் சிலை வளைத்தே, சரம் விதைத்தான். 112-2

கொள்ளை வெஞ் சமர் கோலும் இராக்கத
வெள்ளமும் குறைவுற்றது; மேடொடு
பள்ளம் இன்றிப் படும் குருதிக் கடல்
உள்ள வான் கடற்கு ஓடியது இல்லையால். 127-1

தேயம் எங்கும் இடம் சிறிது இன்றியே,
மாய வஞ்சர் மடிய, பிண மலை
போய் வளர்ந்து விசும்பொடும் புல்லிற்றால்;
ஆய தன்மை அங்கு அண்ணலும் நோக்கியே, 127-2

கடல் எரித்த கனற் படை கார்முகத்து-
இடை தொடுத்து, அதை ஏவி, 'இரும் பிணத்
திடல் அனைத்தையும் தீர்க்க' எனச் செப்பினன்;
பொடி-படுத்தி இமைப்பில் புகுந்ததால். 127-3

அண்டம் முற்றும் அனைத்து உயிரும் எடுத்து
உண்டு உமிழ்ந்து படைக்கும் ஒருவனுக்கு
உண்டு எனற்கு அரிது என்? உளது இச் செயல்.
எண் தரும் தவர் எண்ணுவது இல்லையால். 127-4

இற்றது ஆக இராக்கத வீரர்கள்
உற்று, ஓர் ஆயிர வெள்ளம் உடன்று, எதிர்
சுற்றினர், படை மாரி சொரிந்துளார்;
வெற்றி வீரனும் கை வில் வணக்கினன். 127-5

தலை அறுந்தவரும், தடத் திண் புய
மலை அறுந்தவரும், வயக் கையொடு
சிலை அறுந்தவரும், திமிரத்தின் மெய்ந்
நிலை அறுந்தவரும், அன்றி, நின்றது ஆர்? 127-6

தேர் அளப்பு இல பட்ட; சிறு கண் மாக்
கார் அளப்பு இல பட்ட; கடும் பரித்
தார் அளப்பு இல பட்ட; தடம் புயப்
பேர் அளப்பு இலர் பட்டனர், பீடு இலார். 127-7

வானகத்தொடு, மா நிலம், எண் திசை
ஆன திக்கு ஒரு பத்தும், அடுத்துறத்
தான் நெருக்கிய வஞ்சகர்தம் தலை,
போன திக்கு அறியாது, புரட்டினன். 127-8

சுடரும் வேல், கணை, தோமரம், சக்கரம்,
அடரும் மூஇலைச் சூலம், மற்று ஆதியாம்
படையின் மாரி பதகர் சொரிந்து, இடை
தொடர, வீரன் துணித்தனன் வாளியால். 127-9

ஏனமோடு, எண்கு, சீயம், எழு மத
யானை, ஆளி, புலி என்று இவை முகம்
ஆன தீய அரக்கர் மடிந்திட,
வானவன் கணை மாரி வழங்கினன். 127-10

வடி சுடர்க் கணை மாற்ற, அங்கு ஆயிர
முடியுடைத் தலையோர் தலையும் முடிந்து
இடுவது இத் தலத்தே, இடி ஏற்றில் வான்
வட வரைச் சிகரங்கள் மறிவபோல். 127-11

இரதம், யானை, இவுளியொடு எண் இலா
நிருதர் வெள்ளம் நெடு நிலத்து இற்றிட,
சரதம் அன்னை சொல் தாங்கி, தவத்து உறும்
விரத வீரன் தன் வாளியின் வீட்டினன். 127-12

கடு வைத்து ஆர் களன் கைப் படு கார்முகம்
ஒடியத் தாக்கும் ஒருவன் சிலையின்வாய்,
வடவைத் தீச் சொரி வாளியின் மா மழை
பட, மற்று ஆயிர வெள்ளமும் பட்டதால். 127-13

பால் ஒத்து ஆழியில் பாம்பு-அணைமேல் துயில்
சீலத்தான், இமையோர் செய் தவத்தினின்
ஞாலத்து ஆய இறைவன், இராவணன்
மூலத் தானை முடிய முருக்கினன். 127-14

ஈது அவர் சொல, கயிலை ஈசனும் நகைத்து,
'இமையவர்க்கும் ஒளி வான்
ஓதல் இல் அரும் பிரம தத்துவம் முதல்
கடவுள் யாமும் உணராப்
பேதம் உறு மாயை பல பேணி விளையாடுதல்
செய்யாது, பெருமான்
நீத உருவம் கொளும் இராமன் எனவே சுருதி
நின்ற மொழி பொன்றி விடுமோ? 149-1

பாறு தொடர் பகழி மாரி நிரைகள் பட,
நீறுபடும் இரத நிரையின் உடல் தவிர,
வேறு படர அடர் விரவு சுடர் வலையம்
மாறுபட, உலகின் மலைகள் அளறுபட. 154-1

திரிய அலகு இல் மலை, திரிய இரு சுடர்கள்,
திரிய ஒருவன், எதிர் சின விலொடும் அடர
வரி கை ஒரு களிறு திரிய, விடு குயவர்
திரிகை என உலகு முழுதும் இடை திரிய. 163-1

கரிய திலத மலை திரிய, வளி சுடர்கள்
இரிய, ஒரு விலுடை இரு கை ஒரு களிறு
திரிய, விடு குயவர் திரிகை என உலகு
தெரிய, எழு கடலும் முழுதும் முறை திரிய. 164-1

ஆய வல் அரக்கர், மற்று அளவு இல்லாதவர்,
தீ எழும் விழியினர், சினம் கொள் சிந்தையர்,
காயும் வெம் படையினர், கடலின் பொங்கியே
மேயினர், தம்தமில் இவை விளம்புவார். 170-1

'அன்றியும், ஒருவன், இங்கு அமரில், நம் படை
என்று உள கரி, பரி, இரதம், ஈறு இல் போர்
வென்றிடும் பதாதியர், அனந்த வெள்ளமும்
கொன்றனன், கொதித்து, ஒரு கடிகை ஏழினே. 171-1

இவ் உரை வன்னி அங்கு இயம்ப, 'ஈதுபோல்
செவ் உரை வேறு இலை' என்று, தீயவர்
அவ் உரைக்கு அனைவரும் அமைந்து, அங்கு அண்ணலோடு
எவ் உரையும் விடுத்து, அமரின் ஏற்றுளார். 177-1

இன்னவர் ஐ-இரு கோடி என்று உள
மன்னவர் சதமுகம் உடையர்; மற்று அவர்
துன்னினர், மனத்து அனல் சுறுக்கொண்டு ஏறிட
உன்னினர், ஒருவருக்கு ஒருவர் ஓதுவார். 184-1

அடல் ஐ-இரு கோடி அரக்கர் எனும்
மிடல் மன்னவர் வீரனொடும் பொருவார்;
கடை கண்டிலர், காய் கரி, தேர், பரிமாப்
படை கண்டிலர்; கண்டிலர், பட்ட திறம். 206-1

அங்கு அங்கு அவர்தம்மொடும் ஐயன் உயிர்க்கு
அங்கு அங்கு உளன் என்பது தான் அறியாற்கு,
எங்கு எங்கும் இராமன் இராமன் என,
எங்கு எங்கும் இயம்பவும் உற்றுளனால். 212-1

ஏயும் ஐ-இரண்டு கோடி இறைவர் ஒவ்வொருவர் சேனை
ஆயிர வெள்ளம்தானும் அத் துணை வெள்ளம் ஆகி,
தூயவன் அவர்தம் சேனை தொலைத்தபின், இறைவர் ஆவி
போய் அறப் பகழி மாரி பொழிந்தனன், பொன்றி வீழ்ந்தான்.
213-1

இட்டதோர் பேயரின் ஈர்-ஐயாயிரம்
பட்டபோது, ஆடும் ஓர் படு குறைத்தலை
கட்ட நூறுயிரம் கவந்தம் ஆடிடத்
தொட்டனன், சிலை அணி மணி துணுக்கென. 220-1

மாத்திரைப் போதினில், மணி தொனித்திட,
போர்த் தொழில் அரக்கர்மேல் பொருத பூசலில்,
ஏத்திடை இடைவிடாது, ஏழு நாழிகை
கீர்த்தியன் சிலை மணி கிணிகிணென்றதே. 220-2

மொய்த்தனர், நூறு வெள்ள முரண் படைத்தலைவர் கூட்டம்,
பத்து நூறு ஆய வெள்ளப் படையொடு மாயை பற்றி,
ஒத்த யோசனை நூறு என்ன ஓதிய வரைப்பின் ஓங்கி,
பத்து எனும் திசையும் மூடி, சொரிந்தனர் படையின் மாரி.
222-1

யோசனை நூற்றின் வட்டம் இடையறுது உற்ற சேனைத்
தூசி வந்து, அண்ணல்தன்னைப் போக்கு அற வளைத்துச் சுற்றி,
வீசின படையும் அம்பும் மிடைதலின், விண்ணோர் யாக்கை
கூசினர், பொடியர் என்றும் குமிழ்த்தனர், ஓமக் கூடம். 222-2

முன்னவன் அதனை நோக்கி, முறுவலித்து, அவர்கள் ஏவும்
பல் நெடும் பருவ மாரிப் படை எலாம் பொடிபட்டு ஓட,
தன் நெடுஞ் சிலையின் மாரிதனக்கு எழு முகிலும் அஞ்சத்
துன்னுவித்து, அரக்கர் வெள்ளச் சேனையைத் தொலைத்தல் செய்தான்.
222-3

கால வெங் கனலின் மாயக் கடும் படை சிலையில் பூட்டி,
மேலவன் விடுதலோடும், வெம் படை அரக்கர் வெள்ளம்
நாலும் மூ-இரண்டும் ஆன நூறு ஒரு கணத்தில் நண்ணி,
தாலமேல் படுத்து மீண்டது, அவன் சரம் தலைவர்த் தள்ளி.
222-4

முடிந்தது மூலத்தானை; மூவுலகு இருண்ட தீமை
விடிந்தது; மேலை வானோர் வெந் துயர் அவரினோடும்
பொடிந்தது; புனிதன் வாளி போக்கு உறப் பொய்யர் ஆவி
படிந்தது, ககனம் எங்கும்; பலித்தது, தருமம் அன்றே. 222-5

'ஈது ஒரு விளையாட்டு; அன்பின், இத்துணை தாழ்த்தான், ஐயன்;
ஏது அவன் துணியின் இப்பால்? நீசர் ஓர் பொருளோ? இன்னும்
போதுமோ? புவன கோடி போதினும், கணத்தில் பொன்றிப்
போதும்' என்று, அயனோடு ஈசன் அமரர்க்குப் புகன்று நின்றான்.
222-6

சேனை அம் தலைவர், சேனை முழுவதும் அழிந்து சிந்த,
தான் எரி கனலின் பொங்கி, தரிப்பு இலர், கடலின் சூழ்ந்தே
வானகம் மறைய, தம் தம் படைக் கல மாரி பெய்தார்;
ஆனவை முழுதும் சிந்த அறுத்தனன், அமலன் அம்பால். 222-7

பகிரண்டப் பரப்பில் நின்ற பல பல கோடி வெள்ளத்
தொகை மண்டும் அரக்கர் யாரும் துஞ்சினர், கருவும் துஞ்ச;
செகம் உண்ட ஒருவன் செங் கைச் சிலையுறு மணியின் ஓசை
புக, அண்டம் முழுதும் பாலின் பிரை எனப் பொலிந்தது அன்றே.
225-1

நணியனுய்த் தமியன் தோன்றும் நம்பியை வளைந்த வஞ்சர்
அணி உருது அகன்ற வெள்ளம் அவை மடிந்து இறந்த காலக்
கணிதம் ஏழரையே கொண்ட கடிகை; அக் கடிகைவாய் வில்
மணி ஒலி எழும்ப, வானோர் வழுத்திட, வள்ளல் நின்றான். 225-2

31 வேல் ஏற்ற படலம்

அரக்கர் சேனை ஓராயிர வெள்ளத்தை, 'அமரில்
துரக்க, மானுடர்தம்மை' என்று, ஒருபுடை துரந்து,
வெருக் கொள் வானரச் சேனைமேல் தான் செல்வான் விரும்பி,
இருக்கும் தேரொடும் இராவணன் கதுமென எழுந்தான். 2-1

32 வானரர் களம் காண் படலம்

என்று உரைத்து, 'உயர் வான் பிறப்பு எய்திய
வென்றி வெஞ் சின வேழங்கள்தம்மொடும்
துன்று வாசித் தொகைகளும் கேண்ம்' என,
நின்ற வீடணன்தானும் நிகழ்த்துவான். 27-1

33 இராவணன் களம் காண் படலம்

அலக்கண் எய்தி அமரர் அழிந்திட,
உலக்க வானர வீரரை ஓட்டி, அவ்
இலக்குவன்தனை வீட்டி, இராவணன்
துலக்கம் எய்தினன், தோம் இல் களிப்பினே.

[இப் பாடல் இந்தப் படலத்தின் முதற் செய்யுளாக உள்ளது.]

முற்று இயல் சிலை வலாளன் மொய் கணை துமிப்ப, ஆவி
பெற்று, இயல் பெற்றி பெற்றுலென்ன, வாள் அரக்கர் யாக்கை,
சிற்றியல் குறுங் கால் ஓரிக் குரல் கொளை இசையா, பல் பேய்
கற்று இயல் பாணி கொட்ட, களி நடம் பயிலக் கண்டான். 21-1

34 இராவணன் தேர் ஏறு படலம்

ஏழ்-இருநூறு கோடி எனும் படைத் தலைவரோடும்
ஆழியின் வளைந்த சேனை ஐ-இருநூறு வெள்ளம்
ஊழியின் எழுந்த ஓதத்து ஒலித்தலும், அரக்கர் வேந்தன்,
'வாள் அமர் முடிப்பென் இன்றே' என மணித் தவிசு நீத்தான். 2-1

உரை செயற்கு அருந் தவத்தினுக்கு உவந்து, உமை கேள்வன்
அருள உற்றது, அங்கு அவன் மழுக் குலிசமோடு ஆழி
முரிய, மற்றவை முனை மடித்து, ஒன்றினும் முடியா
விரவு வச்சிரக் கவசத்தை மேற்படப் புனைந்தான். 4-1

அண்ட கோடிகள் எவற்றினும் தன் அரசு உரிமை
கண்டு போய் வரும் காட்சியின், கண்ணுதற் பரமன்,
பண்டு அவன் செய்யும் தவத்தினின் பரிந்து, இனிது அளிக்கக்
கொண்ட வானகத் தேரது; குதிரையைக் குறிக்கின், 18-1

ஐம் முகம் பயின்று இரட்டி, அங்கு அடல் புயன் நால்-ஐந்
தும், ஐந் நான்கு எனும் கரத்தொடும், உமையவள் ஒழிய
இம்மை இவ் உரு இயைந்து, எழில் கயிலையோடு ஈசன்
வெம்மை ஆடு அமர்க்கு எழுந்தென, தேர்மிசை விரைந்தான்.
27-1

35 இராமன் தேர் ஏறு படலம்

இத் தகையன் ஆகி, 'இகல் செய்து, இவனை இன்னே
கொத்து முடி கொய்வென்' என, நின்று எதிர் குறிப்ப,
தம்தம் முறுவல் செயல் தவிர்ந்தது என, வானில்,
சித்தர்கள், முனித் தலைவர், சிந்தை மகிழ்வுற்றார். 4-1

36 இராவணன் வதைப் படலம்

புரந்தரன் பகைவன் ஆவி போக்கிய புனிதன், வென்றி
சுரந்தருள் அனுமன், நீலன், அங்கதன், சுக்கிரீவன்,
உரம் தரு வீரர் ஆதிக் கவிப் படைத் தலைவருள்ளார்,
பரந்திடும் அரக்கன் சேனை படுத்தனர், திரியலுற்றார். 5-1

வரம் படைத்து உயர்ந்த வன் போர் வயப் படைத் தலைவரோடு
நிரம்பிய வெள்ளச் சேனை நிருதரும், களிறும், தேரும்,
மரம் படர் கானில் தீப்போல், வள்ளல்தன் பகழி மாரி
பொரும்படி உடல்கள் சிந்தி, பொன்றினர் எவரும் அம்மா.
17-1

பொங்கிய குருதி வெள்ளம் பொலிந்து எழு கடலில் போக,
தங்கிய பிணத்தின் குப்பை தடுத்தது; சமரபூமி
எங்கணும் கவந்தம் ஆட, எய்தி அங்கு அரக்கிமார்கள்,
தங்கள்தம் கணவர்ப் பற்றி, தம் உடல் தாங்கள் நீத்தார்.
17-2

எழும் படை வெள்ளம் எல்லாம், இரண்டு ஒரு கடிகை தன்னில்,
களம் பட, கமலக்கண்ணன் கடுங் கனல் பகழி மாரி [ஆங்கு
வளம் படச் சிலையில் கோலி, பொழிந்து, அவை மடித்தான்; கண்டு,
உளம் கனல் கொளுந்த, தேரின் உருத்து, எதிர், அரக்கன் வந்தான்.
17-3

மூஉலகு அடங்கலும் மூடும் அண்டமேல்
தாவினன் தேரொடும், அரக்கன்; தாவியே,
கூவினன்; அங்கு அறைகூவ, கொண்டலும்
மேவினன், அரக்கனை விடாது பற்றியே. 71-1

அண்டம் ஓராயிர கோடி எங்கணும்
மண்டினர், செருத் தொழில் மலைதல் விட்டிலர்;
அண்டர்கள் கலங்கினர்; 'அரக்கரார்யுளோர்
உண்டு, இனிக் கரு' என ஓதற்கு இல்லையால். 71-2

உமையவள் ஒரு புடை உடையவன் உதவியது,
அமைவுறும் மயல் வினை அளவு இல புரிவது,
சுமை பெறும் உலகு ஒரு நொடிவரை தொடருவது,
இமையவர் அடல் வலி பருகியது, எளிமையின். 89-1

ஆசுரப் பெரும் படைக்கலம், அமரரை அமரின்
ஏசுவிப்பது, எவ் உலகமும் எவரையும் வென்று
வீசு வெற்பு இறத் துரந்த வெங் கணையது,—விசையின்
பூசுரர்க்கு ஒரு கடவுள்மேல் சென்றது போலாம். 96-1

மயன் படைக்கலம் அழிந்தது கண்டு, இகல் மறவோன்,
'சயம் படைத்தது நன்று; இவன் செருக்கினைத் தடுக்க,
பயன் படைத்துள தண்ட மாப் படைகள் உண்டு; அதனால்,
நயம் படைப்பென்' என்று, ஒரு கதை நாதன்மேல் எறிந்தான்.
103-1

அன்ன மாக் கதை விசையொடு வருதலும், அமலன்
பொன்னின் ஆக்கிய சிலையிடை ஒரு கணை பொறுத்தான்;
முன்னது ஆக்கிய கரங்களும் முதிர் பொதிர் எறிய,
சின்னமாக்கினன்; அது கண்டு, அங்கு அரக்கனும் சினந்தான்.
105-1

ஆயது ஆக்கிய செய்கை கண்டு, அரக்கனும் சினந்தே,
தீயின் மாப் படை செலுத்த, அப் படையினின் செறுத்தான்;
தூய நீக்கம் இல் வாயுவின் படை தொட, அரக்கன்
ஏய அப் படை ஏவி, அங்கு அமலனும் இறுத்தான். 107-1

இரவிதன் படை ஏவினன், அரக்கன்; மற்று அமலன்
கருதி, அன்ன திண் படைகொடு காத்தனன்; மதியின்
விரவு வெம் படை வெய்யவன் விடுத்தலும், வீரன்,
உரவு திங்களின் படைகொண்டு, அங்கு அதனையும் ஒறுத்தான்.
107-2

வாருதிக்கு இறை படை கொண்டு அங்கு அரக்கனும் மறைத்
நேர் உதிக்க அப் படை கொண்டு நிமலனும் நீக்க, [தான்;
தார் உதித்திடு தடம் புயத்து அரக்கனும் தருக்கி,
'பேருவிப்பென், மற்று இவன் உயிர்' எனும் உளம் பிடித்தான்.
107-3

முக்கணன் படை முதலிய தேவர்தம் படைகள்
ஒக்க வாரி, அங்கு அரக்கனும் ஊழ் முறை துரப்ப,
புக்கி, அண்ணலை வலங்கொண்டு போனதும், பொடிபட்டு
உக்கி, ஓடினதும் அன்றி, ஒன்று செய்துளதோ? 107-4

இத் திறம்பட மாயையின் படை வகுத்து, எழுந்து, அங்கு
எத் திறங்களும் இடிஉரும் எறிந்திட வெருவி,
சித்திரம் பெற அடங்கிய கவிப் பெருஞ் சேனை
மொய்த்து மூடியது, அண்டங்கள் முழுவதும் மாய. 118-1

'அண்ட கோடிகள் முழுவதும் அடுக்கு அழிந்து உலையக்
கொண்ட காலம் ஈதோ!' எனக் குலைகுலைந்து, அமரர்
துண்ட வான் பிறை சூடியைத் தொழ, அவன் துயரம்
கண்டு, 'இராகவன் கடிந்திடும்; கலங்கலீர்' என்றான். 118-2

மாயையின் படை தொலைந்திட, வகுப்பொடும் எழுந்த
தீய வெவ் வினைச் செய்கைகள் யாவையும் சிதைந்தே
போயது; எங்கணும் இருள் அற ஒளித்தது; அப் பொழுதில்
காயும் வெஞ் சினத்து அரக்கனும் கண்டு, உளம் கறுத்தான். 123-1

நெற்றி விழியான்—அயன், நிறைந்த மறையாளர்,
மற்றை அமரர், புவியில் வானவர்கள், 'ஈர்-ஐந்து
உற்ற தலை தானவன் விடும் கொடிய சூலம்
இற்று ஒழிய ஆன்று அழியுமோ?' என—இசைத்தான். 130-1

'வேதம் ஒரு நாலும், உள வேள்விகளும், வெவ்வேறு
ஓத முதலாய் உதவு பூதம் அவை ஐந்தும்,
நீதியொடு கால்குலைய, நீசன் விடு சூலம்
ஈது அழியும்' என்று இதயம் எண்ணினன், இராமன். 130-2

எவ் வகை உரகமும் இரியல் போயின,
நொவ்வியல் உற்றென; நொடிப்பது என் இனி?
அவ் வயின் அரன் அணி அடல் அராவுமே
கவ்வையின் உழந்தன, சிறையின் காற்றினே. 143-1

பிறைத் தலைப் பகழியால் பின்னும் ஓர் தலை
அறுத்தனன்; முளைத்தது, அங்கு அதுவும் ஆர்த்து; உடன்
மறுத்து இரு தலைதனை மாற்ற, வள்ளலும்
குறைத்திலன் எனும்படி முளைத்த, குன்றுபோல். 150-1

ஆயிரப் பதின் மடங்கு அரக்கன் மாத் தலை
தீமுகப் பகழியால் சினந்து, இராகவன்
ஒய்வு அறத் துணிக்கவும், உடன் முளைத்ததால்,
தீயவன் தவப் பெருஞ் செயலின் வன்மையால். 150-2

அண்ணலும் இடைவிடாது அறுத்து வீழ்த்தலால்,
மண்ணொடு வானகம், மருவும் எண் திசை,
எண்ணுறும் இடம் எலாம் இராவணன் தலை
நண்ணியது; அமரரும் நடுக்கம் எய்தினர். 151-1

இத் திறத்து இராமன் அங்கு ஏவும் வாளியின்
தத்துறும் தலை முளைத்து எய்தும் தன்மையால்,
அத் திறத்து அரக்கனும் அமர் ஒழிந்திலன்—
முத் திறத்து உலகமும் முருக்கும் வெம்மையான். 152-1

தொடுத்த ஆழியின் தோமரம் தூள்பட,
விடுத்த வீரன் அவ் வெய்யவன் மாத் தலை
அடுத்து மீளவும் நின்று அறுத்தான்; உயிர்
முடித்திலன் விளையாடலை முன்னியே. 159-1

ஆனபோது, அங்கு அரக்கன் அத் தேரொடும்
வானமீது எழ, மாதலி தூண்டிட,
ஞான நாயகன் தேரும் எழுந்துறப்
போனது; அண்டப்புறத்து அமர் கோலினர். 163-1

அஞ்சல் இன்றி, அமர்க் களத்து, ஆரியன்
வெஞ் சினத்தொடு வேல் அரக்கன் பொர,
எஞ்ச ஏழு திவசம் இராப் பகல்
விஞ்சு போர் செயும் வேலையில், வீரனும், 182-1

ஆய கண்டு, அங்கு அமலன் விடும் சரம்
சாயகங்களை நூறி, தலைத்தொகை
போய் அகன்றிடச் செய்தலும், போக்கிலாத்
தீயவன் சினந்து, இம் மொழி செப்புவான்: 182-2

'துறக்கும் என்பதை எண்ணி, சிரத் தொகை
அறுக்குமுன் முளைத்து உய்குவது அன்றியே,
மறுக்கும் என்று மனக் கொளல், மா நிலத்து
இறக்கும் மானுடர் போன்று, என் உயிரும், நீ.' 182-3

ஈது அரக்கன் புகல, இராமனும்,
'தீது இருக்குறும் சிந்தையின் நீ தெளிந்து,
ஓது உரைக்கு எதிருற்று, என் பகழி இப்
போது உரைக்கும்' எனக் கொடு பொங்கினன். 182-4

மாறுபடத் தேவர்களை ஏவல்கொளும்
வாள் அரக்கன் மடிய, அன்னான்
ஏறி வரு பொன் தடந் தேர் பாகனும்
பொன்றிட, பண்டு அங்கு இமையா முக் கண்
ஈறு இல் பரன் புகன்றபடி கரந்து இமைப்பின்
ஏகியதால்—இடையே கூடித்
தேறுதல் செய்து உழல் போதில், தீவினை
மாய்த்திடப் போம் நல் வினையே போல. 199-1

'வான் கயிலை ஈசன், அயன், வானவர் கோன்,
முதல் அமரர் வாழ்த்தி ஏத்த,
தான் புவனம் ஒரு மூன்றும் தனி புரந்து,
வைகிய நீ, தாய் சொல் தாங்கி,
கான் புகுந்த மறை முதல்வன் விடும் கடவுள்
வாளி ஒன்று கடிதின் வந்து, உன்
ஊன் புகும் கல் உரம் உருவி ஓட,
உளம் நாணினையோ? உயிரும் உண்டோ? 219-1

'அரு வினை வந்து எய்தியபோது, ஆர் அரசே! உன்தன்
திரு வினை நீ பெறுவதற்குத் திருநாமங்களைப் பரவ,
ஒருபது வாய் உள; வணங்க, ஒண் முடி பத்து உள; இறைஞ்ச,
இருபது கை உள; இலங்கை என்னுகை வீந்தாயே! 221-1

'அரு வினை வந்தெய்திய போழ்து
ஆர் தடுப்பார்? ஆர் அதனை அறிவார்? வீட்டின்
திருவினை நீ பெறுவதற்கு இங்கு இவன்
திருநாமங்கள்தமைச் சிந்தித்து ஏத்த,
ஒருபது நா உள; வணங்க, ஒண் முடிகள்
பத்து உளவே; இறைஞ்ச, மேரு
இருபது கை உள; இலங்கை என்னுகை
உயிரோடும் இழந்திட்டாயே! 221-2

'அன்னை அவள் சீதை அனைத்து உலகும் ஈன்றாள்' என்று
உன்னி உரைத்தேன்; உரை கேளாது, உத்தமனே!
பின்னை இராமன் சரத்தால் பிளப்புண்ட
உன்னுடைய பேர் உடலம் உற்று ஒருகால் நோக்காயோ? 242-1

'ஆரா அமுதாய் அலை கடலில் கண்வளரும்
நாராயணன் என்று இருப்பேன் இராமனை நான்;
ஓராதே கொண்டு அகன்றாய், உத்தமனார் தேவிதனை;
பாராயோ, நின்னுடைய மார்பு அகலம் பட்ட எலாம்? 242-2

இந்தனத்து அகில் சந்தனம் இட்டு, மேல்
அந்த மானத்து அழகுறத் தான் அமைத்து,
எந்த ஓசையும் கீழுற ஆர்த்து, இடை
முந்து சங்கு ஒலி எங்கும் முழங்கிட, 245-1

கொற்ற வெண்குடையோடு கொடி மிடைந்து,
உற்ற ஈம விதியின் உடம்படீஇ,
சுற்ற மாதர் தொடர்ந்து உடன் சூழ்வர,
மற்ற வீரன் விதியின் வழங்கினான். 245-2

இனைய வீரன் இளவலை நோக்கி, 'நீ
புனையும் நன் முடி சூட்டுதி, போய்' என,
அனைய வீரன் அடியின் இறைஞ்சவே,
'அனையனோடும் அனுமனைச் சார்க' என. 248-1

37 மீட்சிப் படலம்

மாருதிச் செல, மங்கலம் யாவையும்
மாருதிப் பெயர்கொண்டு உடன் வந்தனன்;
வீர விற் கை இளவல் அவ் வீடணன்
வீரபட்டம் என, நுதல் வீக்கினன். 4-1

செய்த மா மணி மண்டபத்தே செழுந்
துய்ய நல் மணிப் பீடமும் தோற்றுவித்து,
எய்து வானவ.....................கம்மி...
.... 5-1

மேவி நாரதனே முதல் வேதியர்
ஓவு இல் நான்மறை ஓதிய நீதியில்
கூவி, ஓம விதிமுறை கொண்டிட,
தா இல் சங்கொலி ஆதி தழைக்கவே, 5-2

பொய்யினுக்கு ஒரு வெ......................
....
உய் திறத்தினுக்கே உவந்து உம்பர்கள்
கையினின் கலசப் புனல் ஆட்டினர். 5-3

வேத ஓசை விழா ஒலி மேலிட,
நாத துந்துமி எங்கும் நடித்திட,
வேத பாரகர் ஆசி விளம்பிட,
ஆதி தேவர் அலர் மழை ஆர்த்திட, 6-1

வீர மா முடி சூடிய வீடணன்
வீர ராகவன் தாள் இணை மேவிட,
ஆர மார்பொடு அழுந்திடப் புல்லினன்,
ஆரினும் அறிவரும் ஆதியான். 10-1

'ஆதி நாளில், ''அருள் முடி நின்னது'' என்று
ஓதினேன்; அவை உற்றுளது; உத்தம!
வேத பாரகர் வேறுளர் யாவரும்
ஓதும் நீதி ஒழுக்கின் ஒழுக்குவாய். 11-1

' ''வஞ்சகக் கொடியான் முனம் வவ்விட,
பஞ்சரக் கிளி என்னப் பதைப்பவள்,
நெஞ்சினில் துயர் நீக்கியது'' என்று, நீ
அஞ்சனைப் புதல்வா! அருள்வாய்' என்றான். 13-1

'மங்கை, சோபனம்! மா மயில், சோபனம்!
பங்கயத்து உறை பாவையே, சோபனம்!
அங்கு அ(வ்) ஆளி அரக்கனை ஆரியச்
சிங்கம் இன்று சிதைத்தது, சோபனம்! 16-1

'வல்லி, சோபனம்! மாதரே, சோபனம்!
சொல்லின் நல்ல நல் தோகையே, சோபனம்!
அல்லின் ஆளி அரக்கனை ஆரிய
வல்லியங்கள் வதைத்தது, சோபனம்! 16-2

'அன்னை, சோபனம்! ஆயிழை, சோபனம்!
மின்னின் நுண் இடை மெல்லியல், சோபனம்!
அன்ன ஆளி அரக்கனை ஆரிய
மன்னன் இன்று வதைத்தது, சோபனம்! 16-3

'நாறு பூங் குழல் நாயகி, சோபனம்!
நாறு பூங் குழல் நாரியே, சோபனம்!
ஆறு வாளி அரக்கனை ஆரிய
ஏறும் இன்றும் எரித்தது, சோபனம்!' 16-4

சொன்ன சோபனம் தோகை செவி புக,
அன்னம் உன்னி, அனுமனை நோக்கியே,
'அன்ன போரில் அறிந்துளது, ஐய! நீ
இன்னம் இன்னம் இயம்புதியால்' என்றாள். 16-5

சென்றவன்தன்னை நோக்கி, 'திருவினாள் எங்கே?' என்ன,
'மன்றல் அம் கோதையாளும் வந்தனள், மானம்தன்னில்'
என்றனன்; என்னலோடும், 'ஈண்டு நீ கொணர்க!' என்ன,
'நன்று!' என வணங்கிப் போந்து, நால்வரை, 'கொணர்க!' என்றான்.
46-1

காத்திரம் மிகுத்தோர், நால்வர், கஞ்சுகிப் போர்வையாளர்,
வேத்திரக் கையோர், ஈண்டி, விரைவுடன் வெள்ளம்தன்னைப்
பாத்திட, பரந்த சேனை பாறிட, பரமன் சீறி,
'ஆர்த்த பேர் ஒலி என்?' என்ன, 'அரிகள் ஆர்ப்பரவம்' என்றார். 46-2

என்றபோது இராமன், 'ஐய! வீடணு! என்ன கொள்கை!
மன்றல் அம் குழலினுளை மணம் புணர் காலம் அன்றி,
துன்றிய குழலினுர் தம் சுயம்வர வாஞ்சை, சூழும்
வென்றி சேர் களத்தும், வீர! விழுமியது அன்று, வேலோய்!'
46-3

அற்புதன் இனைய கூற, ஐய வீடணனும் எய்தி,
செப்பு இள முலையாள் தன்பால் செப்பவும், திருவனுளும்,
அப்பினுள் துயிலை நீத்து அயோத்தியில் அடைந்த அண்ணல்
ஒப்பினைக் கண்ணின் கண்டே, உளம் நினைந்து, இனைய சொன்னுள்.
46-4

'அழி புகழ் செய்திடும் அரக்கர் ஆகையால்,
பழிபடும் என்பரால், பாருளோர் எலாம்;
விழுமியது அன்று, நீ மீண்டது; இவ் இடம்
கழிபடும்' என்றனன், கமலக்கண்ணனே. 67-1

கண்ணுடை நாயகன், 'கழிப்பென்' என்றபின்,
மண்ணிடைத் தோன்றிய மாது சொல்லுவாள்:
'எண்ணுடை நங்கையர்க்கு இனியள் என்ற நான்
விண்ணிடை அடைவதே விழுமிது' என்றனள். 67-2

பொங்கிய சிந்தையள் பொருமி, விம்முவாள்,
'சங்கையென்' என்ற சொல் தரிக்கிலாமையால்,
மங்கையர் குழுக்களும் மண்ணும் காணவே,
அங்கியின் வீழலே அழகிதாம்அரோ. 67-3

'அஞ்சினென், அஞ்சினென், ஐய! அஞ்சினென்;
பஞ்சு இவர் மெல்லடிப் பதுமத்தாள்தன்மேல்
விஞ்சிய கோபத்தால் விளையும் ஈது எலாம்;
தஞ்சமோ, மறை முதல் தலைவ! ஈது?' என்ருன். 86-1

கற்பு எனும் கனல் சுட, கலங்கி, பாவகன்
சொல் பொலி துதியினன், தொழுத கையினன்,
'வில் பொலி கரத்து ஒரு வேத நாயகா!
அற்புதனே! உனக்கு அபயம் யான்' என்ருன். 88-1

'இன்னும், என் ஐய! கேள்: இசைப்பென் மெய், உனக்கு;
அன்னவை மனக் கொளக் கருதும் ஆகையால்,
முன்னை வானவர் துயர் முடிக்குறும் பொருட்டு
அன்னை என் அகத்தினுள் அருவம் ஆயினுள். 95-1

'யான் புரி மாயையின்; சனகி என்று உணர்ந்-
தான் கவர் அரக்கன்; அம் மாயை என் சுடர்க்
கான் புகக் கரந்தது; இக் கமல நாயகி
தான் புரி தவத்து உனைத் தழுவ உற்றுளாள்.' 95-2

ஐயன் அம் மொழியினை அருளும் வேலையில்,
மை அறு மன்னுயிர்த் தொகைகள் வாய் திறந்து,
ஒய்யென ஒலித்ததால்; உவகை மீக்கொள,
துய்ய வானவர் துதித்து, இனைய சொல்லுவார்: 97-1

'மிகுத்த மூன்றரைக் கோடியில் மெய் அரைக் கோடி
உகத்தின் எல்லையும் இராவணன் ஏவல் செய்துள எம்
அகத்தின் நோய் அறுத்து, அருந் துயர் களைந்து, எமக்கு அழியாச்
சுகத்தை நல்கிய சுருதி நாயக!' எனத் தொழுதார். 97-2

'திருக் குவால் மலி செல்வத்துச் செருக்குவேம்திறத்துத்
தருக்கு மாய்வுற, தானவர் அரக்கர் வெஞ் சமரில்
இரிக்க, மாழ்கி நொந்து, உனைப் புகல் யாம் புக, இயையாக்
கருக்குளாய் வந்து தோற்றுதி! ஈங்கு இது கடனே?' 109-1

என்ற வாசகம் எறுழ் வலித் தோளினன் இயம்ப,
மன்றல் தாங்கிய மலரவன், வாசவற் கூவி,
'துன்று தாரினோன் சுரருடன் துருவினை துடரச்
சென்று, மற்று அவன்-தருக' என வணங்கினன், சென்றான்.
114-1

'எனக்கும், எண்வகை முனிவர்க்கும், இமையவர் உலகம்-
தனக்கும், மற்று இவள் தாய் என மனக் கொளத் தகுதி;
மனத்தின் யாவர்க்கும் மறு அறுத்திடும் இவள் மலராள்;
புனத் துழாய் முடிப் புரவலன் நீ; நிறை புகழோய்!' 123-1

'வங்க நீள் நெடு வட திசை வானவன் விமானம்
துங்க மா கவி எழுபது வெள்ளமும் சூழ்ந்தால்
எங்குளார் எனும் இடம் உளது; அதன்மிசை ஏறி,
பொங்கு மா நகர் புகுதி, இப் பொழுதினில்' என்றான். 141-1

'மங்கலா நிதி வடதிசை வானவன் மானம்;
துங்கம் ஆர் கவி எழுபது வெள்ளமும் சூழ்ந்தால்,
எங்கு உளார்?'' எனும் இடம் உளது; இதன்மிசை ஏறி,
பொங்கு மா நகர் புகுதி, இப் பொழுதினில்' என்றான். 142-1

'வாங்கினன், அளகேசனைத் துரந்து, இந்த மானம்;
ஓங்கும் மூவுலகத்தவர் ஏறினும், உரவோய்!
ஆங்கு இடம் பினும் உடையதாம்; அதுதனில் ஏறி,
பூங் குலா நகர் புகுதி, இப் பொழுதினில்' என்றான். 142-2

வாங்கினன் அது, மா நிதியோடு அவன் மானம்;
ஏங்கு வெள்ளம் ஓர் எழுபதும் ஏறினல், இன்னும்,
ஆங்கு உளோர் எலாம் ஏறுவது; அதனை நீ ஏறி,
பூங் குலா நகர் புகுதி, இப் பொழுதினில்' என்றான். 142-3

என்று, தேரினை வீடணன் எய்தியது என்றான்;
'நன்றுதான்' என நாயகன் ஏறினன், அவரோடு
அன்றுதான் இளங் கோவொடும் அக் கவி வெள்ளம்
ஒன்றுதான் என ஒரு திசை இருந்ததும் ஒக்கும். 142-4

ஏறினன் விமானம்தன்னில் இராமனும், இளைய கோவும்,
மாறு இலாச் சனகியோடு, வள நகர் இலங்கை வேந்தும்,
கூறிய அனுமன், சாம்பன், குமரன், வெங் கவி வந்து ஏற;
மாறிலோர் நிலத்து நின்றார், வயந்தனர் கொத்தில் உள்ளார். 142-5

[இது முதல் 142-17 வரையில் 'இயமப் படலம்' என்றும், 'வசந்தன் உயிர்வரு படலம்' என்றும், சில பிரதிகளில் உள்ளன.]

மாறதாய் வெள்ளம் சேனை மானத்தின் வராமை நோக்கி,
'ஏறும் நீர் தேரில்' என்ன, 'கருணன் வந்து எதிர்ந்தபோது,
சீறிய நுமரில் எம் கோன் தாக்கிட, அரக்கன் சீறி,
நீறு எழப் பிசைந்தே இட்டான் நெற்றியில்' என்னச் சொன்னார். 142-6

என்ற வாசகம் கேட்டலும், வானரர் இறங்கி,
நின்ற போதினில் இராகவன் தேரின்நின்று இழிந்தான்;
'பொன்றுமா வரக் காரணம் என்?' எனப் புழுங்கா'
துன்று தார்ப் புயத்து இலக்குவ! பொறி' எனச் சொன்னன். 142-7

'வரி சிலை இராமன் ஓலை, மறம் புரி மறலி, காண்க!
எரிகொளும் இலங்கைப் போரில், இன் உயிர் துறந்து போந்த
குரிசிலை, வயந்தன்தன்னைத் தேடியே கொணர்க; அன்றேல்,
உரிய தன் பதமும் வாழ்வும் ஒழிப்பென்' என்று எழுதிவிட்டான். 142-8

அக் கணத்து அருகு நின்ற அனுமன், கைத் திருமுகத்தைத்
தக்கவன் நீட்ட, வாங்கி, தன் தலைமிசையில் சூடி,
'இக்கணம் வருவென்; வாழி! இராம!' என்று, இரு தோள் கொட்டி,
மிக்க மா மடங்கல் போல, விண்ணிடை விசைத்துப் பாய்ந்தான். 142-9

மண்டிப் புக்கனன், மறலிதன் பெரும் பதம்; நரகில்
தண்டிப்புண்டு, அறுப்புண்டு, எரிப்புண்டவர்தம்மைக்
கண்டு, மாருதி கண் புதைத்து, 'அரி! அரி' என்ன,
மிண்டி ஏறினர், நரகிடை வீழ்ந்தவர் எல்லாம். 142-10

துளங்கி, அந்தகன் வந்து, அடி தொழுதலும், தோலா
வளம் கொள் மாருதி, 'வசந்தனைக் காட்டு' என, அவனும்
உளம் கலங்கி, 'உன் நாயகன் அடியர் இங்கு உறுர்கள்;
விளங்கு கீர்த்தியாய்! தேடு விண்ணவர் புரத்து' என்றான்.
142-11

சொன்ன கூற்றுவன்தன்னைத் தன் வாலிடைத் துவக்கி,
பொன்னின் கற்பகப் பதியிடைக் கொண்டு போய்ப் புகலும்,
முன்னை வந்து கண்டு, இந்திரன், 'முனிவு எனோ?' என்ன,
'மன்ன! ஏகுவென்; வயந்தனைக் காட்டுதி' என்றான். 142-12

'வல் அரக்கரை மடித்து, எமை எடுத்த மாருதியே!
இல்லை இங்கு; அயன் உலகிடை அறிதி' என்று இசைப்ப,
சொல்லும் அங்கு அவன்தன்னையும் வாலிடைத் துவக்கி,
பல் உயிர்த் திறம் படைத்தவன் உலகிடைப் பாய்ந்தான்.
142-13

சிந்தை தூயவன் செல, உளம் துளங்கு நான்முகனும்,
'வந்த காரியம் எது?' என, 'வயந்தனைப் பார்த்துச்
சுந்தரத் தடந் தோள் வில்லி நின்றனன்; அவன்தான்
உந்தன் நீள் பதத்துளான்எனின், காட்டு' என உணர்த்தும்:
142-14

'என்னுடைப் பெரும் பதத்தின் மேலாகிய எந்தை-
தன்னுடைப் பெருஞ் சோதியின் கீழதாய்த் தழைத்த
மின்னும் நீடு ஒளி விண்டுவின் பதத்துளான்; விறலோய்!
அன்னவன்தனைக் கொணருதி, ஆங்கு அணைந்து' என்றான்.
142-15

என்ற நான்முகன்தன்னையும், இந்திரன் யமனோடு
ஒன்ற, வால்கொடு துவக்கினன், ஒரு குதிகொண்டான்;
மின் திகழ்ந்து ஒளி விளங்கிடும் விண்டுவின் பதத்தில்
சென்று, கண்டு கொண்டு இழிந்தனன், திசைமுகன் பதியில்.
142-16

மலரின்மேல் அயன் வசந்தற்கு முன் உரு வழங்க,
குலவு வாசவன், யமனை, விட்டு, இரு நிலம் குறுகி,
அலகு இல் வீரன்தன் அடி இணை அவனொடும் வணங்கி,
சலமும் தீர்த்தனன்; படையையும் ஏற்றினன், தேர்மேல்.
142-17

[வேறு சில பிரதிகளில் 142-4 பாடலுக்குப்பின் 142-18 முதல் 142-25 வரையில் உள்ள பாடல்களுடன் வசந்தன் வரலாறு பற்றி, (142-5 முதல் 142-17 வரை) முன்வந்த பாடல்களில் சிலவற்றையும் இடையில் கொண்டு, இவ் வரலாறு வேறு வகையில் அமைந்துள்ளது.]

ஏறினன் இராமன் தேர்மேல் எழில் மலர் மாதினோடும்;
ஏறினன் இளைய கோவும், இராக்கதர் வேந்தனோடும்;
ஏறினன் அனுமன்; சாம்பன், இடபனே, முதலோர் ஏற,
மாறினர் நிலத்து நின்றார், வசந்த கோத்திரத்திலுள்ளார்.
142-18

ஏறினன், இளைய கோவும்; இரவி சேய், சாம்பன், நீலன்,
'ஏறினன், வாலி மைந்தன்' என்றனர்; பலரும் ஏற,
சீறிய கும்பகன்னன் சினத்திடைச் சிதைந்து பட்ட,
மாறிலா வசந்தன் சேனை நின்றது, மாறி மண்மேல். 142-19

வண்டு அலம்பு தார் அமலனும் தம்பியும், மயிலும்,
கண்டு கைதொழு வானரக் கடலும், மற்று யாரும்
எண் தவாத பொன் மானமீது இருந்திடும் இயற்கை
அண்டர் நாதனும், வானமும், அமரரும் ஆமால். 142-20

பாரில் நின்றது அங்கு ஒரு வெள்ளப் படை; அவர்தம்மை,
'வாரும் தேரின்மேல்' என, 'கும்பகர்ணன் வந்து ஏன்ற
போரில் எம் படைத் தலைவனே பொன்றினன்; அவனை
நீர் எழப் பிசைந்து, இட்டனன் நெற்றியில்' என்றார். 142-21

ஆழி வெள்ளம் ஓர் எழுபதும், அனுமனே முதலாம்
ஏழும் மூன்றும் ஆம் பெரும் படைத் தலைவரை இராமன்
சூழ நோக்கினன்; சுக்கிரீவன்தனைப் பாரா,
'வாழி மாப் படை அனைத்தும் வந்தன கொலோ?' என்றான்.
142-22

இரவி கான்முளை இறங்கி வந்து, இராமனை இறைஞ்சி,
'சுருதியாய்! ஒரு பேர் அருள் சொல்லுவ; தொடர்ந்து
வருவதான இச் சேனையில் வசந்தன் என்று உரைக்கும்
ஒருவன் வந்திலன்; கண்டருளுதி' என உரைத்தான். 142-23

கசிந்த ஞானங்கள் கலங்கல் இல் கழல் கும்பகருணன்
இசைந்த போரின் வந்து எய்தலும், இவன்தனை எடுத்துத்
தசைந்த தோல், மயிர், எலும்பு, இவைதமைத் தெரியாமல்,
பிசைந்து மோந்து, உடற் பூசினன், பெரு நுதற்கு அணிந்தே.
142-24

'இசைந்த சீராமன் ஓலை; இலங்கையில் பூசல்தன்னில்
வசந்தனைக் கண்டதில்லை; மதித்தவாறு அழகிது அம்மா!
வசந்தனைக் கொண்டுதானும் வருக! எனோ? வாராதெனில்,
நமன் குலம் களைவென்' என்றான்—'நாளை வா' என்ற வீரன்.
142-25

[இதன்பின் 142-8, 9, 10, 11 என்ற பாடல்கள் உள்ளன.]

'செல்வனே! இன்னம் கேளாய்: யான் தெரி பாசக் கையால்
அல் எனும் அரக்கர்தம்மை வம்மின்!' என்று அழைத்து, மெள்ள
நல் இருட் பரவை மேனி நாரணன் தமரைக் கண்டால்,
'செல்லவே போமின்' என்று விடுக்குவென், செவியில், செப்பி. 142-30

[இதன்பின் 142-12, 13, 14, 15, 16, 17 என்ற பாடல்கள் உள்ளன.]

'மையல் இன்றியே இலங்கை மா நகர் காத்து, மாதே!
செய்யளாகிய திரு எனப் பொலிந்து, இனிது இருத்தி'
கைகளால் மிகப் புல்கியே, கண்கள் நீர் ததும்ப,
பொய் இலா மனத் திரிசடை, 'விடை' எனப் போனாள். 146-1

என்ற காலையில், எழுந்தவன் இயற்கையை நோக்கி,
நன்று நாயகன் அறிவொடு நினைவன நயந்தான்;
சென்று சேனையை நாடினன், திரிந்து வந்து எய்தி,
வென்றி வீரரில் வசந்தனைக் கண்டிலர், வெறுத்தார். 157-3

[சில பிரதிகளில், 'சொன்ன வாசகம் பிற்பட' (157) என்ற பாடலுக்குப் பின், 'வசந்தன் உயிர் வரு படலம்' தொடங்குகிறது. 157-3 என்னும் இந்தப் பாடலுக்கு முன் இதன் முன்னர்த் தந்துள்ள 142-19, 21 என்ற இரு பாடல்களும் காணப்பெறுகின்றன. இதன் பின் 142-22 என்ற பாடல் உள்ளது.]

என்னும் காலை (யில்), இராமனும் யமபடர் யாரும்
மன்னும் தொல் புரம் நோக்கியே, 'மணி நகை முறுவல்
உன்னின் அன்றி, யான் தேவருக்கு உதவி செய்து' என்னா,
பொன்னின் வார் சிலை எடுத்தனன், பொறுத்தனன், பொரவே. 157-5

எண் திசாமுகம் இரிந்து உக, யமபுரம் குலைய,
அண்டகோளகை அடுக்கு அழிந்து உலைவுற, அழியாப்
புண்டரீகத்துப் புராதனன் முதலிய புலவோர்
தொண்டை வாய் உலர்ந்து அலமர, தொடு வில் நாண் எறிந்தான். 157-6

பாக வான் பிறையாம் என, பலர் நின்று துதிப்ப,
வாகை கொண்ட வெஞ் சிலையினை வளைவுற வாங்கி,
மேக சாலங்கள் குலைவுற, வெயிற் கதிர் மாட்சி
சோகம் எய்தி மெய் துளங்கிட, சுடு சரம் துரந்தான். 157-7

வல்லை மாதிரம் மறைந்திட, வானவர் மயங்க,
எல்லை காண்குறு யாவரும் இரியலில் ஏக,
வில்லை வாங்கிய கரம் அவை விதிர்விதிர்ப்பு எய்த,
தொல்லை நான்மறை துளங்கிட, சுடு சரம் துரந்தான். 157-8

வன் புலம் கிளர் நிருதரை வருக்கமோடு அறுக்க,
மின் புலம் கொளும் உரும் என்ன, வீக்கிய வில்லைத்
தன் பொலங் கையில் தாங்கியே தொடுத்த அச் சரங்கள்
தென் புலன்தனை நிறைத்தது; செறிந்தன, சேணில். 157-9

தருமராசனும், காலனும், யமபடர்தாமும்,
உருமு வீழ்ந்தென, சரம் வந்து வீழ்ந்ததை உணர்ந்து,
மரும தாரையில் பட்டது ஓர் வடிக் கணை வாங்கி
நிருமியா, 'இது இராகவன் சரம்' என நினைந்தார். 157-10

'கெட்டது இன்று இனித் தென்புலம்; கேடு வந்து எய்தி;
பட்டனம்; இனிப் பிழைப்பு இலம்' என்பது ஓர் பயத்தால்,
முட்ட எய்திய முயற்சியோடு யாவரும் மொய்ப்ப,
சிட்டர்தம் தனித் தேவனை வணங்கினர், சென்றார். 157-11

'சிறந்த நின் கருணை அல்லால், செய் தவம் பிறிது இலார்மேல்
புறம் தரு முனிவு சாலப் போதுமோ? புத்தேள்! நின்னை
மறந்திருந்து உய்வது உண்டோ? மலர்மிசை அயனைத் தந்த,
அறம் தரு சிந்தை ஐய! அபயம், நின் அபயம்' என்றார். 157-12

'அய்யனே! எமை ஆளுடை அண்டர் நாயகனே!
மெய்யனே!' என, சரணில் வந்து, யாவரும் வீழ்ந்தார்;
'பொய்யினோர் செய்த பிழை பொறுத்தருள்!' என, போர் மூண்டு
எய்ய நேரிலாச் சிலையினை மடக்கினன், இராமன். 157-13

வந்து அடைந்து, 'உனக்கு அபயம்' என்று, அடியினில் வணங்கி,
''எம் தனிப் பிழை பொறுத்தி'' என்று, இயம்பினிர்; இதனால்
உம்தம்மேல் சலம் தவிர்ந்தனென்; யூக நாயகன்தான்
தந்த சேனையில் வசந்தன் வந்திலன்; தருக' என்றான். 157-14

தன் தனிச் சரண் வணங்கலும், இராகவன் சாற்றும்;
'''என் தனிப் பிழை பொறுத்தி'' என்று இயம்பினை; அதனால்
உன்தன்மேல் சலம் தவிர்ந்தனம்; யூபநாயகன்தான்
தந்த சேனையின் வசந்தன் வந்திலன்; தருக' என்றான். 157-15

அண்ணல் ஆரியன், 'தருதி' என்று அருளலும், அவர் போய்,
விண் எலாம் புகுந்து ஓடியே, வசந்தனை விரைவில்
கண்ணின் நாடி, நல் உயிரினைக் காண்கிலாது இருந்தார்;
'திண்ணன் யாக்கை எங்கே?' என, சாம்புவன் செப்பும்: 157-16

[இதன்பின் 142-23, 142-8, 142-9 என்னும் பாடல்கள் உள்ளன.]

அன்னதே என, 'அவன் உயிர்க்கு அமரர்தம் பதிக்கே
முன்னது ஓர் உடல் கொண்டு, இவண் தருக!' என மொழிய,
சொன்ன வாய்மை கேட்டு, அனுமனும் துணைவரைப் பாரா,
'பொன்னின் பாதுகம் பணிந்தனென், விடை' எனப் போனான்.
157-17

[இதன்பின் 142-10, 11, 25, 12, 15, 16 என்னும் பாடல்கள் வர, 'வசந்தன் உயிர் வரு படலம்' முடிவு பெறுகிறது.]

அன்னது ஆதலின் அமரர் அந் நகரிடை, ஆங்கண்
முன்னது ஓர் உடல் நாடியே கொணர்ந்திட, முந்தச்
சொன்ன வாயுவைத் தரிசிக்க, வசந்தனும் தோன்றி,
பொன்னின் பாதுகம் புனைந்தனன்; தருமனும் போனான். 157-29

அன்னகாலையில், புட்பக விமானம் ஆங்கு அடைய,
முன் இராகவன், சானகி, இலக்குவன் முதலா,
மன்னு வானரம் எழுபது வெள்ளமும் வரையா
உன்னி ஏறலும், உச்சியில் சொருகு பூப் போன்ற. 157-30

என்ற புட்பக விமானத்தின் ஏறினர் எவரும்;
'நன்றுதான்' என நாயகன் ஏறினன் திருவோடு;
அன்றுதான் இளங்கோவொடும் அக் கவி வெள்ளம்
ஒன்றுதான் என ஒரு திசை இருந்ததும் ஒக்கும். 158-1

ஆய கண்டு, அமலன் உள்ளம் மகிழ்ந்தனன்; அனுமன் தன்பால்
நேயம் மூண்டு அதுதான் நிற்க, நெடியவன் சரணம் சூடி,
மேயினன், தமர்களோடு வசந்தனும்; விண் மீதாகப்
போயினது, இராமன் சொல்லின், புட்பக விமானம் அம்மா!
158-2

வென்றி சேர் கவியின் வெள்ளக் கடல் முகந்து எழுந்து, விண்மேல்
சென்றது விமானம்; செல்ல, திசையொடு தேசம் ஆதி
என்றவை அனைத்தும் தோன்ற, இராமனும் இனிது தேறி,
தென் திசை இலங்கையின் சீர் சீதைக்குத் தெரிக்கலுற்றான்:
162-1

'மன்னு பொற் கொடிகள் ஆட, மாட மாளிகையின் ஆங்குத்
துன்னு பைம் பொழில்கள் சுற்ற, தோரணம் துவன்றி, "வானோர்
பொன்னகர் ஒக்கும்" என்று புகழ்தலின், புலவராலும்
பன்ன அரும் இலங்கை மூதூர், பவளவாய் மயிலே! பாராய்.
162-2

'வெதிர் எதிர் அஞ்சும் மென் தோள் வெண் நகைக் கனி வாய் வல்லி!
எதிர் பொர வந்த விண்ணோர்-இறைவனைச் சிறையில் வைத்த
அதிர் கழல் அரக்கர் தானை அஞ்சல் இல் ஆறு செல்ல,
கதிர் மதி விலங்கி ஏகும் கடி மதில் மூன்றும் காணாய். 162-3

'வென்றி வேல் கருங் கண் மானே!' என்னொடும் இகலி, வெய்ய
வன் திறல் அரக்கன் ஏற்ற வட திசை வாயில் நோக்காய்;
கன்றிய அரக்கன் சேனைக் காவலன்தன்னை நீலன்
கொன்று, உயிர் கூற்றுக்கு ஈந்த குண திசை வாயில் நோக்காய்.
162-4

'மறத் திறல் வாலி மைந்தன், வச்சிரத்து எயிற்றோன்தன்னைச்
செறுத்து, உயிர் செகுத்து, நின்ற தென் திசை வாயில் நோக்காய்;
அறத்தினுக்கு அலக்கண் செய்யும் அகம்பன்தன் உடலை ஆவி
வெறுத்து, எதிர் அனுமன் நின்ற மேல் திசை வாயில் நோக்காய்.
162-5

'கருங் கடல் நிகர்ப்ப ஆன அகழி ஓர் மூன்றும் காணாய்;
மருங்கு அடர் களபக் கொங்கை மதி நுதல் மிதிலை வல்லி!
இருங் கட முகத்த யானை, இவுளி, தேர், காலாள் துஞ்சி,
பொரும் கடர் நிறத்தர் வீய்ந்த போர்க்களம்தன்னைப் பாராய்.
162-6

'கொடி மதில் இலங்கை வேந்தன் கோபுரத்து உம்பர்த் தோன்ற,
அடு திறல் பரிதி மைந்தன் அவன் நிலை குலையத் தாக்கி,
சுடர் முடி பறித்த அந் நாள், அன்னவன் தொல்லை வெம் போர்ப்
படியினை நோக்கி நின்ற சுவேல மால் வரையைப் பாராய். 162-7

'பூக் கமழ் குழலினாய்! நின் பொருட்டு யான் புகலா நின்றேன்;
மேக்கு உயர் தச்சன் மைந்தன் நளன் இவன் விலங்கலால் அன்று
ஆக்கிய இதனை, வெய்ய பாதகம் அனைத்தும், வந்து
நோக்கிய பொழுதே, நூறும் சேதுவை, நீயும் நோக்காய். 162-8

ஆவினை, குரவரோடும் அரு மறை முனிவர்தம்மை,
பாவையர் குழுவை, இன் சொல் பாலரை, பயந்து தம் இல்
மேவின அவரை, செற்றோர், விரி கடல் சேது வந்து
தோய்வரேல், அவர்கள் கண்டாய், சுரர் தொழும் சுரர்கள் ஆவார்.
169–1

மரக்கலம் இயங்கவேண்டி, வரி சிலைக் குதையால் கீறித்
தருக்கிய இடத்து, பஞ்ச பாதகரேனும் சாரின்,
பெருக்கிய ஏழு மூன்று பிறவியும் பிணிகள் நீங்கி,
நெருக்கிய அமரர்க்கு எல்லாம் நீள் நிதி ஆவர் அன்றே. 169-2

ஆங்கு அது காட்டக் கண்ட ஆயிழை, 'கமலம் அன்ன
பூங் கழற் புயல்போல் மேனிப் புனித! என் பொருட்டால் செய்த
ஈங்கிதற்கு ஏற்றம் நீயே இயம்பு' என, இரதம் ஆங்கே
பாங்குற நிறுவி நின்று, இங்கு இவை இவை பகரலுற்றான்:
170-1

'அந்தணர்தம்மைக் கொன்றோர், அருந் தவர்க்கு இடுக்கண் செய்தோர்,
செந் தழல் வேள்வி செற்றோர், தீ மனை இடுவோர், தம்பால்
வந்து இரந்தவர்க்கு ஒன்று ஈயா வைக்கும் வன் நெஞ்சர், பெற்ற
தந்தையைத் தாயைப் பேணாத் தறுகணர், பசுவைச் செற்றோர், 170-2

'குருக்களை இகழ்வோர் கொண்ட குலமகள் ஒழியத் தங்கள்
செருக்கினால் கணிகைமாரைச் சேர்பவர், உயிர் கொல் தீம்பர்,
இருக்குடன் அமரும் தெய்வம் இகழ்பவர், ஊன்கள் தின்று
பெருக்கிய உடலர், பொய்ம்மை பிதற்றுவோர், பீடை செய்வோர், 170-3

'வெய்யவன் உச்சி சேர மிக வழி நடந்து போவோர்,
மை அறும் முன்னோன்தன்னை வலி செயும் தம்பிமார்கள்,
கை உள முதல்கள்தம்மைக் கரந்து தம்பிக்கு ஒன்று ஈயார்,
துய் அன சொற்கள் சொல்வோர், சோம்பரைச் சுளித்துக் கொல்வோர். 170-4

'ஊரது முனிய வாழ்வோர், உண்ணும்போது உண்ண வந்தோர்க்கு
ஆர்வமோடு அளியாது இல்லம் அடைப்பவர், அமணே சென்று
நீரினுள் இழிவோர், பாவ நெறிகளில் முயல்வோர், சான்றோர்
தாரமது அணைவோர், மூத்தோர்தமை இகழ் அறிவிலாதோர். 170-5

'கண்டிலாது "ஒன்று கண்டோம்" என்று கைக்கூலி கொள்வோர்,
மண்டலாதிபர் முன் சென்று வாழ் குடிக்கு அழிவு செய்வோர்,
மிண்டுகள் சபையில் சொல்வோர், மென்மையால் ஒருவன் சோற்றை
உண்டிருந்து, அவர்கள்தம்பால் இகழ்ச்சியை உரைக்கும் தீயோர், 170-6

'பின்னை வா, தருவென்' என்று பேசித் தட்டுவிக்கும் பேதை,
கன்னியைக் கலக்கும் புல்லோர், காதலால் கள்ளும் மாந்தர்,
துன்னிய கலை வல்லோரைச் சுளிந்து உரைத்து இகழ்வோர், சுற்றம்
இன்னலுற்றிடத் தாம் வாழ்வோர், எளியரை இன்னல் செய்வோர், 170-7

'ஆண்டவன் படவும் தங்கள் ஆர் உயிர் கொண்டு மீண்டோர்,
நாண் துறந்து உழல்வோர், நட்பானவரை வஞ்சிப்போர், நன்மை
வேண்டிடாது இகழ்ந்து, தீமை செய்பவர், விருந்தை நீப்போர்,
பூண்டு மேல் வந்த பேதை அடைக்கலம் போக்கி வாழ்வோர். 170-8

'கயிற்றிலாக் கண்டத்தாரைக் காதலித்து அணைவோர், தங்கள்
வயிற்றிடைக் கருவைத் தாமே வதைப்பவர், மாற்றார்தம்மைச்
செயிர்க்குவது அன்றிச் சேர்ந்த மாந்தரின் உயிரைச் செற்றோர்,
மயிர்க் குருள் ஒழியப் பெற்றம் வெளவுவோர், வாய்மை இல்லோர், 170-9

'கொண்டவன்தன்னைப் பேணாக் குலமகள், கோயிலுள்ளே
பெண்டிரைச் சேர்வோர், தங்கள் பிதிர்க்களை இகழும் பேதை,
உண்டலே தருமம் என்போர், உடைப்பொருள் உலோபர், ஊரைத்
தண்டமே இடுவோர், மன்று பறித்து உண்ணும் தறுகண்ணாளர், 170-10

'தேவதானங்கள் மாற்றி, தேவர்கள் தனங்கள் வெளவும்
பாவ காரியர்கள், நெஞ்சில் பரிவிலாதவர்கள், வந்து
'கா' எனா, 'அபயம்' என்று, கழல் அடைந்தோரை விட்டோர்,
பூவைமார்தம்மைக் கொல்லும் புல்லர், பொய்ச் சான்று போவோர், 170-11

'முறையது மயக்கி வாழ்வோர், மூங்கை அந்தகர்க்குத் தீயோர்,
மறையவர் நிலங்கள்தன்னை வன்மையால் வாங்கும் மாந்தர்,
கறை படு மகளிர் கொங்கை கலப்பவர், காட்டில் வாழும்
பறவைகள், மிருகம், பற்றிப் பஞ்சரத்து அடைக்கும் பாவர், 170-12

கார்க் கன வரை சேர் கானில் கடுங் குழி கல்லும் கட்டர்,
நீர்க் கரை அதனில் ஓட்டி நெடுங் கலை முயல் மான் கொல்வோர்,
ஊர்க் கெழு கூவல் வீழ்ந்த உயிர்ப் பசு எடாது போவோர்,
வார்க் கெழு தன மின்னாரை வழியில் விட்டு ஏகும் மாக்கள், 170-13

வழி அடித்து உண்போர், கேட்டால் வழி
சொல்லாதவர்கள், வைப்பைப்
பொழி இருள் களவு காண்போர்,
பொய் சொல்லிப் பண்டம் விற்போர்,
அழிவு இலா வாய்மை கொன்றோர்,
அடைந்தது......................
....
தெரிசிக்கத் தீர்க என்றான். 170-14

'ஆதியர் மூவர்க்கு அந் நாள், அரு மறை அறைந்த அந்த
நீதியாம் புராணம்தன்னை இகழ்பவர், நிறையக் கேளார்,
பாதியில் விட்டு வைப்போர், படித்தவர்ப்பிரியப்படுத்தார்,
போதம் இலாதார், ''மற்றச் சமயம் பொல்லாதது'' என்பார், 170-15

'என்று இவர் முதலா மற்றும் எழு நரகு அடையும் பாவம்
ஒன்றினர், நன்றிதன்னை மறந்தவர் ஒழிய உள்ளோர்,
துன்றிய வினைகள் எல்லாம், சுடர் கண்ட இருளே போல,
தென் திசை வந்து, சேதுத் தரிசிக்க, தீரும்' என்றான். 170-16

ஆங்கது கேட்டு, அருந்ததியே அனையாளும், 'அவதியுடன்
தீங்கு அணுகும் செய்ந் நன்றி மறந்திடும் தீ மனத்தோர்கள்
தாங்க அரும் பாவங்களையும் எனக்காகத் தவிர்க்க' என,
'நீங்கிடுக' அதுவும்' என்றான்—நிலமடந்தை பொறை தீர்த்தான்.
170-17

'பார் எழுவி வாழ்வோர்கள் பஞ்ச மா பாதகமும்
சீர் எழுவு திரு அணையைத் தெரிசிக்கத் தீர்க' என,
கார் எழுவு திரு மேனிக் கண்ணன் நினைப்பின்படியே,
ஈர்-எழுவர் நால்வர் என்னும் இருடிகளும் எழுதினரால்.
170-18

'பார் மேவும் மாந்தர்கள் செய் பஞ்ச மா பாதகமும்
சீர் மேவும் திரு அணையைத் தெரிசிக்கத் தீர்க' என,
கார் மேவும் திரு மேனிக் காகுத்தன் கட்டுரைத்து,
வார் மேவும் முலைச் சனகி மாதோடும் வழிக்கொண்டான்.
170-19

என்பன பலவும் அந்த ஏந்திழைக்கு இருந்து கூறி,
தன் பெருஞ் சேனையோடும் தம்பியும் அரக்கர் கோவும்
பொன் பொரு விமானம்தன்மேல் போகின்றபோது, மிக்க
இன்புடை இராமன் வேலைக்கு இப் புறத்து இழிந்து, என் செய்வான்.
170-20

முன் பெல அரக்கன்தன்னை முனி கொலை தொடரக் கண்டு, ஆங்கு,
'அன்பினல் அரி பால் தோன்றும் அரனை அர்ச்சித்தால் அன்றி,
துன்பமே தொடரும் பொல்லாச் சூழ் கொலை தொலையாது' என்று ஆங்கு
இன்புறும் இராமன் வேலைக்கு இப் புறத்து இழந்து நின்றான். 170-21

திருவணை உயர் பதம் செப்பி மீண்டபின்,
அருகு அணை திருமகட்கு, ஆங்கு மற்று உள
தரு அணை திரள் புயச் சனக வல்லிக்கு, ஆம்
கரு வரை முகில் நிற வண்ணன் காட்டுவான். 170-22

கப்பை எனும் கன்னியையும், கந்தனர் தாதையையும்;
அப்பொழுதே திருவணைக்குக் காவலராய் அங்கு இருத்தி,
செப்ப அரிய சிலையாலே திருவணையை வாய் கீறி,
ஒப்பு அரியாள் தன்னுடனே, உயர் சேனைக் கடலுடனே, 170-23

வேந்தர் வேந்தனும் வேலையின் கரையினில் வரவே,
வாய்ந்த சாய்கையும் வந்தது; வானவர் வணங்க,
ஏந்து தோள் புயத்து இராமனும், இலக்குவன்தானும்,
வாய்ந்த சீதையும், மானமும், வானர வேந்தும், 170-24

பாய்ந்த வேலையின் கரையிடைப் பரமன் அங்கு உறவே,
சாய்ந்த சாய்கையும் வந்து, அணுகாது அயல் கிடக்க,
ஏந்து திண் புயத்து இராமனும், இளையவன்தானும்,
வாய்ந்த சீதையும், சேனையும், மற்றுள பேரும், 170-25

நின்ற போதினில், நிகர் இலா அகத்தியன் முதலோர்
குன்றுபோல் புயத்து இராகவன்தனை வந்து குறுக,
''நன்று நின் வரவு'' என்னவே, நாதனும் வணங்கி,
வென்றி வேந்தனும் வேதியர்தம்மொடு வியந்து. 170-26

சேதுவின் கரை சேர்ந்த அத் திறல் புனை இராமன்,
'ஏது இத் தலம்?' எனக் குறுமுனிவனைக் கேட்ப,
'வாத ராசனும் வாசுகிதானும் முன் மலைந்த
போது, தந்தது, இப் பொன் நகர்' என்று அவன் புகன்றான்.
170-27

புகன்றவன்தனைப் பூங் கழல் இராகவன் சாய்கை
அகன்ற காரணம் குறுமுனி உரைசெய, அவனும்,
'பகர்ந்த தேவரும், பாற்கடல் பள்ளியான், பரமன்,
புகுந்தது இவ் வழி; பூவில் வந்தவனும், மற்று யாரும்,
170-28

'இருப்பது இத் தலம்; ஆகையால், இராவணன் சாய்கை,
அருத்தி இன்றியே, அகன்றது' என்று அருள் முனி அறைய,
பெருத்த தோளுடை அண்ணலும் பிரியம் வந்து எய்தி,
'கருத்து மற்று இனி உரை' என, குறுமுனி கழறும்:
170-29

'இந்த மா நகர்தன்னிலே இறைவனை அருச்சித்து,
உன்தன் மா நகர் எய்தினால், சாய்கை போம், உரவோய்!'
'அந்த நீதியே செய்தும்' என்று, அனுமனை அழைத்திட்டு,
'எம்தம் நாதனை இமைப்பினில் கொடுவருக' என்றான். 170-30

அந்த வேலை, முனிவன் அளி தெருள்
இந்த மா நிலத்து யாவரும் இன்புற,
'கந்த மேவிய கங்கையில் ஓர் சிலை
தந்து காண்' என, மாருதி தாவினான். 170-31

'போதி' என்று, அவற் போக்கிய இராமனும், இந்த
மாது சீதையும், மைந்தனும் இலக்குவன்தானும்,
தீது தீரவே தீர்த்தங்கள் யாவையும் ஆடி,
ஆதி நாதனும் இருந்தனன், அமரர்கள் வியப்ப. 170-32

ஆன போதினில், ஐயன் மனத்துளே
தான் நினைந்ததுதான் ஆர் அறிகுவார்?
ஞானம் ஓர் வடிவு ஆகிய நாரணன்
மோனமாகி இருந்தனன், மூவரான். 170-33

காலம் சென்றது எனக் கருதி, கையால்
கோலமான மணலினைக் கூட்டியே,
'ஆலம் உண்ட தே இவர் ஆம்' என
ஞாலம் உண்டவர் தம் மனம் நாட்டவே. 170-34

'முகுத்தம் ஆனதே' என முனி மொழிதலும், இராமன்
மிகுத்தது ஓர் இடத்து எய்தியே, வெண் மணல் கூப்பி,
அகத்தினில் புறம் பூசித்தே, அடி மலர் இறைஞ்சி,
செகுத்த தோளுடைத் தம்பியும், சீதையும், தானும், 170-35

ஒத்த பூசனை செய்யவும், அமைதியின் உள்ளச்
சுத்தி மேவிய ஞானமும் தொடர்விடாது இருந்தோன்
அத்தன் பாதகம் ஆனவை அழிதர இயற்றி,
சித்தம் வாழ்தர நின்றனன், தேவர்கள் துதிப்ப. 170-36

நின்ற போதினில், நிறங்களும் படலமும் கொண்டு,
வென்றி சேர் புய மாருதி விரைவினில் வந்து,
'நன்று செய்தனை!' என்னப் போய் நாதனைப் பிடுங்கி,
வென்றி வால் அற்று, மேதினி வீழ்ந்தனன், வீரன். 170-37

[இந்தப் பாடல் காணும் இடத்தில், இதற்குப் பிரதியாக, பின்வரும் ஐந்து பாடல்கள் ஒரு பிரதியில் உள்ளன.]

ஆய வேலையில், கங்கையின் அருஞ் சிலை வாங்கி,
தூய வார் கழல் அனுமனும் தோன்றினன்; தோன்றா,
சீயமாய் மலி அண்ணல் முன் திருச் சிலை வைத்து,
நேயமோடு இரு தாள் பணிந்து, அங்கு அவன் நின்றான்.
170-37(அ)

நின்ற காலையில், அமலன் அங்கு அனுமனை நோக்கி,
ஒன்று அலாத பல் முகமன் அங்கு உரைத்து, 'நம் பூசை
சென்றது ஆதலின், திருச் சிலை தாழ்த்தது; இப் புளினக்
குன்றினால் சிவன் தன்னுருக் குறித்தனென், கோடி'.
170-37(ஆ)

என்னும் வாய்மை அங்கு இராகவன் இயம்பிட, இறைஞ்சி,
முன்னி மாருதி மொழிந்தனன்: 'மூவுலகு உடையோய்!
இன்னும் யான் தரும் கங்கையின் சிலையிடைப் பிழையாது
அன்ன தானத்தின் அமைப்பென் ஓர் இமைப்பிடை' எனவே.
170-37(இ)

ஈர்த்தனன் வாலினலே, இராகவன் பூசை கொள்ளும்
கூத்தனை; அனந்தன் வாழும் குவலயம் அளவும் கூடி
வார்த்த பேர் உருவம் கொள்ள, வால் விசைத்து, அனுமன் அந்த
மூர்த்தி என்று உணரான், நெஞ்சம் மூச்சு அற, தளர்ந்து வீழ்ந்தான். 170-37(ஈ)

மனுபரன் அனுமன்தன்னை வரவழைத்து, ஈசன் வன்மை-
தனை உரைத்து, 'இடை நீ தந்த நாதனை நடுவே நாட்டி,
முனம் அதை ஏத்தி, பின் இம் மூர்த்தியை ஏத்தும்' என்ன,
அனைவரும் அமரர்தாமும் அம் முறை ஏத்தி நின்றார். 170-37(உ)

விழுந்தவன்தனை வெந் திறல் இராகவன் நோக்கி,
'அழுந்து சிந்தையாய்! அறிவு இலாது அதனை என் செய்தாய்?
பொழிந்து மா மலர் இட்டு நீ அருச்சி' என்று உரைப்ப,
எழுந்து போய், அவன், இறைவனை அருச்சனை செய்தான். 170-38

அவ் இடத்து, 'அனுமன் தந்த, கங்கைமேல்
வவ்விடப்படும் வந்திடுவான் சிலை
இவ் இடத்தினில் யாவரும் ஏத்து' என,
தெவ் அடக்கும் சிலையவன் செப்பினன். 170-39

'எம்தன் நாதன் இவன்' என்று இறைமகன்
தந்த நாமம் சராசரம் சார்ந்தபோது,
இந்திரன், பிரமா முதல் எய்தினர்;
வந்து, வானவர் யாவரும் வாழ்த்தினர். 170-40

'இத் தலத்தினில் யாரும் அங்கு ஓர் சிலை
வைத்து மா மனத்து உள்ளே வழுத்துவார்,
நத்து உலாய கை நாரணன், நான்முகன்,
பித்தன், மூவரும் ஏத்தப் பெறுக' என. 170-41

என்று, இராகவன் ஈசன் பெருமையின்
நன்றிதன்னை நவில, அடங்குமோ?
சென்று சென்று, 'செய, செய! போற்றி!' என்று,
அன்று இராச குமாரன் அறைகுவான்: 170-42

பூசனைத் தொழில் முடிந்தபின், பூங் கழல் இராமன்
தேவத் தச்சனை அழைத்து, 'நீள் திரைக் கடல் கிடந்த
காவல் மா மலை கொணர்ந்து, நீ கண்ணுதல் கோயில்
பூவில் வந்தவன் சொல்வழிச் சமை' எனப் புகன்றான். 170-43

நந்தியம் பதி இறைவனை நாதனும் அழைத்தே,
'இந்த மா மலை இரும்' என, யாவையும் நல்கி,
'விந்தை தங்கிய தோளினீர்! வேந்தனைப் பூசித்து,
இந்த மா நகர் இரும்' என, இராமனும் அகன்றான். 170-44

போன காலையில், பூங் கழல் இராகவன் பின்னே
சேனை தான் வர, தேவர்கள் யாவரும் வணங்கி,
மேல் நிலத்தவர் சென்றிட, விடை கொடுத்தருளி,
தானும், சீதையும், தம்பியும், சேதுவைச் சார்ந்தார். 170-45

தேர் ஏறி, மா நாகம் சென்னிமிசைச் சென்று ஏற,
கார் ஏறு கண்ணபிரான், காவலவன் கமழ் துளபத்
தார் ஏறு தடந் தோளான், தனி வயிரக் குனி சிலைக் கைப்
போர் ஏறு, பொலிவுடனே வட திசையில் போயினனால். 170-46

சேர்ந்து, சேதுவின் தென் கரை கடந்து, வந்து எய்தி,
கூர்ந்த மானமேல் இருந்தவன் வட திசை குறுகிப்
போந்து, வானரப் புதுமையும் சனகிக்குப் புகன்று,
தீர்ந்த சேதுவின் கரையையும் காட்டினன், திறலோன். 170-47

வரையலுற்றனன், மலர்க் கரத்து இருந்த வன் சிலையால்,
திரையில் உற்றிட மரக்கலத் தொகுதிகள் செல்ல,
விரைவில் உற்றிடும் விமானத்தின் மீதினில் இருந்தே;
உரை செய்து உற்றனன், சனகிக்குப் பின்னும் அங்கு உரவோன்: 170-48

'நின்னை மீட்பதே நினைந்து, சில் நெறி எலாம் நீந்தி,
என்னை ஈட்டிய திறத்தினில் திருவுடன் இருப்ப,
சொன்ன வேற் படை அரக்கரைக் குறைத்த இச் சேனை
மன்னனால் பெற்ற வலி இது; வென்றியும் அதனால். 170-49

'தேய்ந்த மா மதி போலும் சிலைநுதல்!
வாய்ந்த வானர வாரணம், மாருதி,
ஆய்ந்த மா மணி ஆழியை அன்றுதான்
பாய்ந்த வெற்பு மயேந்திரம் பார்த்தியால். 171-1

'மாருதி நின்னை நாடி வருபவன், ஏறிப் பாயப்
பாரிடைக் குளித்து நின்ற பவள மால் வரையைப் பாராய்;
போரிடைப் பொலன் கொள் பொன் தார்ப் புரவிகள் போக்கு இற்று
நீரிடைத் தரங்கம் ஓங்கும் நெறி கடல் அதனை நோக்காய்!' [என்ன,
171-2

ஆரியன் அனைய கூற, அடி இணை இறைஞ்சி, ஐய
வேரி அம் கமலை செப்பும்: 'விரிந்த கிட்கிந்தை உள்ளார்,
சீரிய அயோத்தி சேரத் திருவுளம் செய்தி' என்ன,
கார் நிற அண்ணல், 'மானம் காசினி குறுக' என்றான். 173-1

என்றவன் சேயை நோக்கி, இசைந்து, கிட்கிந்தை உள்ளார்,
நன்று நம் பதியைக் காண, நாயக! அழைத்தி' என்ன,
சென்று அவன் சாம்பன்தன்னை, 'திசை எட்டும் திரியச் சாற்றி,
இன்று நம் சுற்றம் எல்லாம் இயல்புடன் அழைத்திடு' என்றான்.
174-1

என்றபோது, எழுந்து சாம்பன், இசைந்த கிட்கிந்தை உள்ளார்க்கு
ஒன்று ஒழியாத வண்ணம் ஓதினான்; ஓதக் கேட்டே,
ஒன்றிய கடல்கள் ஏழும் உற்று உடன் உவா உற்றென்ன,
மன்றல்அம் குழலினார்கள் துவன்றினர், மகிழ்ச்சி கூட. 174-2

சந்திர மானம்தன்மேல் தாரகை சூழ்ந்தது என்ன,
இந்திரன் மகனார் தாரத் தாரையும், ருமையும், கூடி
வந்தனர்; வந்து மொய்த்தார், வானர மடந்தைமார்கள்;
இந்திரை கொழுநன்தன்னை ஏத்தினர்; இறைஞ்சி நின்றார்.
176-1

நின்ற வாரிதியை முன்பு நெருப்பு எழக் கடைந்தபோது, அங்கு
ஒன்றல பலவும் ஆங்கே உற்பவித்தவற்றினுள்ளே,
தன்னுடன் பிறந்த முத்து மாலையை, தரையில் தோன்றி
மின் என நின்ற சீதைக்கு அளித்தனள், விரைவில் தாரை.
176-2

தாரையைச் சீதை புல்கி, 'தாமரைக்கண்ணன் அம்பால்
பாரை விட்டு அகன்றான் வாலி; பார்உளோர்க்கு அவதி உண்டோ?
சீரிது மலரோன் செய்கை; தெரியுமோ? தெரியாது அன்றே?
ஆர் இது தெரியகிற்பார், காலத்தின் அளவை அம்மா?' 176-3

என்றிட, தாரை நிற்க; எரி கதிர்க் கடகம் ஒன்று,
மின் திரிந்தனைய கொள்கை மேலைநாள் விரிஞ்சன் ஈந்தது,
அன்று அது இரவி பெற்று நாயகற்கு ஈந்தது, அன்று
சென்று அடி இணையில் இட்டே, இறைஞ்சியே, ருமையும் நின்றாள்.
176-4

நின்றவள்தன்னை நங்கை அம் கையால் தழுவி நின்று,
வன் துணை மங்கைமாரும் மைந்தரும் அங்குச் சூழ,
தன் திருக் கைகளாலே தழுவினள் என்னக் கண்ணால்
ஒன்று அல பலவும் கூற, உணர்ந்து உளம் உவகை உற்றே.
176-5

'கடி கமழ் குழலினுளே! கார்காலம் யாங்கள் வைகும்
வடிவுடைச் சிகரம் ஓங்கும் மாலியவானை நோக்காய்;
அடு திறல் பரிதி மைந்தன் நகர்அதன் அழகு பாராய்;
வடிவு உள மலை ஏழ் அன்ன மராமரம் ஏழும் நோக்காய். 177-1

'கனி வளர் பவளச் செவ் வாய்க் கனங் குழை! நின்னைக் காணத்
துனி வளர் துன்பம் நீங்க, தோழமை நாங்கள் கொண்ட
பனி வளர் இருளை மாற்றும் பகலவன் சேயும் யாமும்
நனி வளர் நட்புக் கொண்ட நலம் தரு நாகம் நோக்காய்.
177-2

'மாழை ஒண் கண்ணாய்! உன்னைப் பிரிந்து யான் வருந்தும் நாளில்,
தாழ்வு இலாத் துயரம் நீங்க, தாமரை உந்தியான் கை
ஆழி ஆம் ஆற்றலானை, அனுமனை, அரக்கர் அஞ்சும்
பாழியான்தன்னை, கண்ட பம்பையாறு அதனைப் பாராய். 177-3

"பொய் வித்தி, வஞ்சம் காத்து, புலை விளைத்து, அறைத்தைத் தின்
கை வித்தும் சரத்தினுன் அக் கடல் பெரும் படையை எல்லாம் [றேன்
நைவித்த இரவு நான்கால் மருந்துக்கு நடந்து, நம்மை
உய்வித்த வீரன்தன்னைக் கண்ட இடம் உது கண்டாயே. 177-4

'சவரியது இருக்கைதானும், கவந்தனைத் தடிந்த கானும்,
இவர் செய எழுந்த ஆற்றல் கரன் உயிர் இழந்த பாரும்,
சவையுறு சுகுட்டன் மைந்தன், சரவங்கன் முதலோர் காதல்
கவை அறு முனிவர்தங்கள் இடங்களும் கருதி நோக்காய்.
177-5

'விரை கமழ் ஓதி மாதே! விராதன் வந்து எதிர்ந்து போர் செய்
நிரை தவழ் அருவி ஓங்கும் நெடு வரை அதனை நோக்காய்;
'சரதம் நான் அரசு வேண்டேன்; தடமுடி சூடுக' என்று
பரதன் வந்து அழுது வேண்டும் பரு வரை அதனைப் பாராய்.
177-6

'வளை பயில் தளிர்க் கை மாதே! வரு புனல் பெருகக் கண்டு,
துளை பயில் வேயின் தெப்பம் இயற்றி, யான் துயரம் இன்றி
விளைதரு புனலை நோக்கி வியந்து உடன் இருப்ப, வெல் போர்
இளையவன் தனியே நீந்தும் யமுனை யாறு இதனைப் பாராய்.
177-7

'பயன் உறு தவத்தின் மிக்க பரத்துவன் இருக்கை பாராய்;
கயல் பொரு கங்கை யாறும், குகன் உறை நகரும், காணாய்;
அயன் முதல் அமரர் போற்ற அனந்தன்மேல் ஆதிமூலம்
துயில் வரும் கடலே அன்ன அயோத்தியைத் தொழுது நோக்காய்,'
177-8

என்று உரைத்து, இளவலோடு சனகியும், இரவி சேயும்,
வென்றி வீடணனும், சேனை வெள்ளமும் விளங்கித் தோன்ற,
பொன் திகழ் புட்பகத் தேர் பூதலத்து இழிய ஏவி,
இன் துணைப் பரத்துவாசன் இடவகை இழிந்தான் அன்றே.
177-9

என்று, மன்னவன் பற்பல புதுமையும் யாவும்
மன்றல் அம் குழல் சனகிக்குக் காட்டினன், மகிழ்ந்து,
குன்று துன்றிய நெறி பயில் குடதிசைச் செவ்வே
சென்று, கங்கையின் திரு நதித் தென் கரை சேர்ந்தான். 182-1

ஆர்த்து விண்ணவர் ஆடினர்; ஆடகத் தேரும்
பேர்த்த போதினில் நிலமிசை அணுகுற, பெரியோர்க்கு
ஆர்த்தம் ஆகிய அடல் கரு மலை என நடந்து,
தீர்த்தம் ஆகிய கங்கையின் தென் கரை சேர்ந்தான். 182-2

மான மானம் மீப்போனது, வட திசை வருவது
ஆன காலையில், அறிவனும் ஆயிழை அறிய,
சேனையோர் திறல் சேது வான் பெருமையும் செப்ப,
தானமாகிய தீர்த்தம் ஆம் திரு நதி சார்ந்தார். 182-3

'பாகம் மங்கையோடு அமர்ந்தவன் பயில்வுறு கங்கை
ஆகும் ஈது' என அறநெறி வழுவுறு அலங்கல்
மேக வண்ணனும் துணைவரும் வியந்து உடன் ஆடி,
தாகம் நீங்கினர்: அவ் இடைத் தேவரும் சார்ந்தார். 182-4

இறுத்த தேரினை இருடிகள் எவரும் வந்து எய்தி,
வெறித் துழாய் முடி வேத மெய்ப் பொருளினை வியவா,
'புறத்ததாம் உயிர் பெற்றனம்' என அகம் பொங்க,
திறத்து இராமன்பால் திருமுனி அவனும் வந்துற்றான். 182-5

வந்த மா முனிவோர்களை வணங்கும் முன், அவர்கள்,
'எந்தை! நீ இன்று இங்கு இருந்து, உள வருத்தமும் நீக்கி,
செந்து, நாளை அத் திருநகர் அடைக' எனச் செப்பி,
உந்து சித்திரகூடத்துள் யாரும் வந்துற்றார். 186-1

'தகும் அருந் தவங்கள் ஈட்டி, தசமுகத்து அரக்கன் பெற்ற
யுகம் அரைக் கோடிகாறும் ஏவல் செய்து உழலும் தேவர்
சுகம் உற, சிலை கைக் கொண்ட தொல் மறை அமல! யார்க்கும்
இக பரம் இரண்டும் காக்கும் இறைவன் நீ அன்றி உண்டோ?'
188-1

இந்த வாசகம் இயம்பினன், பின்னரும் இசைப்பான்,
'எந்தை! நீ இன்று இங்கு இருந்து உள வருத்தமும் போக்கி,
சிந்தை அன்பு செய் திருநகர் நாளை நீ சேர்க!' என்று
அந்தம் இல் பரத்துவன் சொல, அவ் இடத்து அடைந்தான்.
189-1

அடைந்த மா முனித் தலைவனை அருச்சனை செய்து,
மிடைந்த சேனைஅம் பெருங் கடல் சூழ்தர, மேல் நாள்,
கடைந்த பாற்கடல் கண் துயில் நீங்கி, வானவர்கள்
படிந்து போற்றிட இருந்தென, பரிவுடன் இருந்தான். 189-2

இருந்தபோது, இராமன்தன்னை இருடியும் இயம்பும்:'எந்தாய்!
பெருந் திறல் இலங்கைதன்னை எங்ஙனம், பெரியோய்! நீயே
வருந்தினை, குரங்கு கொண்டு, மாய வல் அரக்கன்தன்னைத்
திருந்த அப் போரில் வென்று மீண்டவா செப்புக!' என்றான்.
189-3

இராகவன் அவனை நோக்கி, 'இறந்த வாள் அரக்கர் எல்லாம்
அராவின் மாருதியும், மேன்மை வீடணன்தானும், ஆங்கே
குராவருஞ் சேனை எல்லாம் கொன்றிட, கொற்றம் கொண்டு
விராவியே மீண்டது' என்று, மீளவும் பகரலுற்றான்: 189-4

'தந்திரம் உற்ற சேனை தரைப்பட, மறுப்படாமல்
அந்தரம் உற்ற போது, அங்கு அரு மருந்து அனுமன் தந்தான்;
மந்திர வித்தே! எம்பி வரி சிலை வளைத்த போரில்
இந்திரசித்தும் பட்டான்; இலங்கையும் அழிந்தது அன்றே.
189-5

'கறங்கு கால் செல்லா, வெய்ய கதிரவன் ஒளியும் காணா,
மறம் புகா, நகரம்தன்னில் வானவர் புகுதல் வம்பே;
திறம் புகாது அவிரும் நாளும் சிதைவு இலர்; தேரும் காலை,
அறம் புகா மறத்தினாலே அழிந்தது அப் பதியும், ஐயா! 189-6

'மறக் கண், வெஞ் சினத்தின் வன்கண், வஞ்சக அரக்கர் யாரும்
இறக்க, மற்று இறந்தது எல்லாம் எம்பிதன் ஈட்டின்,எந்தாய்!
பிறப்பு மேல் உளதோ? சூழ்ந்த பெருந் திசை பேரின், பேராத்
துறக்கத்தோ, யாதோ, பெற்றார்? அறிந்தருள், சுருதி நூலோய்!'
189-7

என்ற வாசகம் இருந் தவன் கேட்டு, இகல் இராமன்
தன் துணைப் பெருந் தம்பியைத் தழுவி,' நீ தக்கோய்!
வென்று மீண்டிலைஆயின், அவ் விண்ணவர் முனிவர்
பொன்றுமாறு அன்றி, ஆர் உயிர் புரப்பது ஒன்று உளதோ?
189-8

மா தவன் சொன்ன வாய்மையை மனங்கொண்டு, மறையோன்
பாதம் முந்துற வணங்கி, மா முனிவனைப் பாரா,
'ஏதும் யான் செய்தது இல்லை; அவ் இலங்கைமேல் வெகுண்டு
வேத நாயகன் புருவத்தை நெரித்தனன்; விளிந்தார். 189-9

'அன்றியும் பிறிது உள்ளது ஒன்று உரைசெய்வென்: அது அத்
துன்று தார் புனை மாருதி பெரும் புயத் துணையால்
வென்றி கொண்டனம், யாங்கள்; மேல் விளம்புவது எவனோ?'
என்று இயம்பினன், இருடிக்கும் இளவலும் இயைந்தே.
189-10

அனுமன் என்பவன் வாள்முகம் நோக்கினன்; அவனும்
புனித மா தவன்தனைத் தொழா, 'புண்ணியப் பொருளாம்
தனு வலம் கொண்ட தாமரைக்கண்ணவன் தனயன்
எனும்அது என்கொலோ? யாவர்க்கும் தந்தை நீ' என்றான்.
189-11

அங்கு அவன் சொல, அனுமனும் உரைசெய்வான்: அருணப்
பங்கயந்தனில் சீதையாம் பராபரையாட்டி,
சங்கரன் அயன்தன்னையும் தரணி ஈர்-ஏழும்
தங்கு பொன் வயிற்று அன்னைதன் தன்மையை நிகழ்த்தும்:
189-12

'இராகவன் பெருங் குலத்தையும், இப் பெருஞ் செல்வத்
தராதலம் புகழ் சனகன்தன் மரபையும், தந்து, என்
பராபரத்தினைப் பங்கயத்து அமுது எனப் பணிந்தாள்;
புராதனர்க்கு அரசே!' என மாருதி புகன்றான். 189-13

அன்ன வாசகம் கேட்டலும், அந்தணர் கோவும்,
'என்ன வாசகம் சீதைக்கு இன்று இயம்புவது, யாம்?' என்று,
ஒன்றும் வாசகம் உரைத்திலன்; உள் அன்பு குளிர,
'அன்னை வாசவன் திருவினைத் தந்தது' என்று அறைந்தான்.
189-14

பண் குலாவிய சுக்கிரீவன்தனைப் பாரா,
கண்குலா மனம் களித்தவன் கழல்மிசைப் பணிந்து,
மண்குலாம் புகழ் வீடணன், 'நீலனே முதலாம்
எண்கின் வேந்தனும் அழித்தனர் இலங்கையை' என்றான்.
189-15

என்று அவன் இயம்பக் கேட்டு, அங்கு இருந்த மா தவனும், 'இந்த
வென்றிஅம் தானைக்கு எல்லாம் விருந்தொடு சயனம் மேவிக்
குன்று என வருக!' என்று கூறலும், இமையோர் நாட்டில்
அன்று இனிது அரம்பைமார்கள் அமுது எடுத்து, ஆங்கு வந்தார்.
189-16

பான நெய்யுடன் நானமும் சாந்தமும் பல் பூண்
ஏனை வானவர் மகளிர்கள் ஏந்தி வந்து, இழிந்தார்;
ஆன மெய்ப்படை தம்முடைப் போகத்துள் அழுந்த,
ஆன கற்பினுளுடன் எழுந்து, இராமனும் அறைவான்: 189-17

முனிவன் வாள் முகம் நோக்கி, 'மெய் முழுது உணர் முனியே!
அனுமன் ஆண்தகை அளித்த பேர் உதவி இன்று எம்மால்
நினையவும், உரை நிரப்பவும், அரிது; இனி, நீதிப்
புனித! உண்டி எம்முடன்' எனப் புரவலன் புகன்றுன். 189-18

என்ற வாசகம் கேட்டலும், இருந் தவத்து எவரும்,
'நன்று, நாயகன் கருணை!' என்று உவகையின் நவில,
துன்று தாரவன் பாதுகம் தொழுது, 'அருந் தொல்லோய்!
ஒன்று கேள்' என, உவகையின் மாருதி உரைக்கும்: 189-19

'செய்த மா தவம் உடைமையின், நினக்கு அன்பு சிறந்து
பொய் இல் சாதனம் பூண்டனன்; புண்டரீகக் கண்
ஐய! நின் பெருங் கருணைதான் அடியனேற்கு அமையும்;
உய்யுமாறு இதின் வேறு உளதோ?' என்று மொழிந்தான்.
189-20

திருந்து மா தவன் செய்தது ஓர் பூசனை செய, ஆண்டு
இருந்தபோது, தன் திருவுளத்து இராகவன் நினைந்தான்;
'பொருந்த மா முடி புனைக!' எனப் பொருந்துறுன், போத
வருந்து தம்பிக்கு, 'வருவென் யான்' என்பதோர் வாக்கை.
189-21

முனிவன் இம் மொழி கூறலும், முது மறைப் பெருமான்-
தனை நினைந்து உளம் வருந்திய தம்பிபால் அயரும்
மனம் நெகிழ்ந்து, இரு கண்கள் நீர் வார, அங்கு அமலன்
நினைவின் முந்துறும் மாருதிக்கு, இனையன நிகழ்த்தும்: 193-1

அன்று அவர்தம்மை நோக்கி, அந்த மா தவனும், 'இந்த
வென்றி அம் தானைக்கு எல்லாம் விருந்தொடு சயனம் மற்றும்
குன்றினில் அருளும்' என்று கூறலும், வான நாட்டுள்
ஒன்றிய அரம்பை மாதர் அமுது எடுத்து, ஒருங்கு வந்தார்.
198-1

மாருதி விடைகொண்டு ஏக, வரதனும் மறையோன் பாதம்
ஆர் அருளோடு நீட வணங்கினன்; அவனும் ஆசி
சீரிது கூறி, 'சேறி' என்றலும், மானம் சேர்ந்து,
போர் இயல் தானையோடும் பொருக்கென எழுந்து போனுன்.
201-1

'மான் நேர் விழியாளுடனே வனம் முன்
போனான் ஒரு நாள்; வரும் நாள் இலதோ?
தேனே! அமுதே! தெளிவே! தெளிவின்
ஊனே! உயிரே! உலகு ஆளுடையாய்! 201-2

'அம் பவளச் செவ் வாய், அணி கடகச் சேவகன்,
வம்பு அவிழும் சோலைக் கோசல நாடுடை வள்ளல்,
எம் பெருமான், என்னை, இழி குணத்து நாயேனை,
'தம்பி' என உரைத்த தாசரதி தோன்றானே! 201-3

வாழி மலைத் திண் தோள் சனகன்தன் மா மயிலை,
ஏழ் உலகும் ஆளும் இறைவன் மருமகளை,
''தாழ்வு இல் பெருங் குணத்தாள்தான் உன் கொழுந்தி; நீ
தோழன்'' என உரைத்த தோன்றலார் தோன்றாரோ!' 201-4

'துங்க வில் கரத் தோளினர் சொன்ன நாள்,
இங்கு வந்திலர்; யான் இறப்பேன்' என,
மங்கைமாரும் படையும் வன் சுற்றமும்
அங்கு நீர்க் கங்கை அம்பியில் ஏற்றினன். 201-5

'வேத நாதனும், வில்லியும், விரை மலர்த் திருவும்,
ஏது செய்யினும், என் உயிர் முடிப்பென்' என்று எண்ணி,
ஓத நீரிடை ஓடம்அது உடைத்து, உயிர் விடுவான்,
காதலாருடன் கங்கையின் நடுவுறச் சென்றான். 201-6

'கண்ணும் தோளும் வலம் துடிக்கும்; கரை
வண்ணப் புள்ளும் வலியும் வலத்திலே,'
எண்ணும் காலையிலே, எழில் மாருதி,
'அண்ணல் வந்தனன்' என்று உரையாடினன். 201-7

உள்ள வான் கிளை ஏற்றி, உயர் குகன்
வெள்ளக் கங்கையின் ஆக்கி, விரைந்து, அவண்
உள்ளும் நெற்றி உடைப்பளவில், புகும்
வள்ளலார் விடும் மாருதி தோன்றினன். 201-8

ஓங்கு வாலினை ஓட்டி, அவ் ஓடங்கள்
தீங்கு உறுவகைச் சுற்றி, திருகி, நீர்
ஆங்கு நின்று அங்கு அவை வலித்தான்; அவை
தீங்கு இலாவகை தென் கரை சேர்ந்தவால். 201-9

'கை ஆர் வெய்ய சிலைக் கருணாகரற்குக் காதலுடைத் தோழ-
மை ஆர், சிருங்கவேரபுரம் உடையாய்! மிகு கோசலை களிறு,
மை ஆர் நிறத்தான், வந்தொழிந்தான், மிதிலை வல்லி அவளுடனே;
ஐயா! வந்தான் தம்பியொடும்; அடியேம் உய்ய, வந்தானே.
201-10

'ஆர்? உனை உரை' என, அனுமன் கூறுவான்:
'சீரிய வாயுவின் தோன்றல்; சீரியோய்!
சூருடை இராமற்குத் தூதன்' என்று எனது
ஏருடைத் தலையின்மேல் எழுதப்பட்டுளேன். 201-11

பரதனைத் தீயையும் விலக்கி, பாருடை
வரதனை, இராமனை, மாறிக் காண்பது
சரதமே; இனி இறை தாழ்க்க ஒணாது' என,
கரதலத்து ஆழியும் காட்டிப் போயினான். 201-12

பரத்துவன் வருதலும், பரிந்து, இராமனும்
கரத் துணை குவித்தனன், இளைய காளையோடு;
எரித் திற முனியும் ஆசிகள் இயம்பிட,
விருப்பொடும் இடவகை இனிது மேயினான். 241-1

கோவொடு தூசு, நல் குல மணிக் குழாம்,
மாவொடு கரிக் குலம், வாவு தேர் இனம்,
தாவு நீர் உடுத்த நல் தரணிதன்னுடன்,
ஏ வரும் சிலை வலான், யாவும் நல்கினான். 258-1

நின்றவன், 'இவ் வயின் நெடியவன்தனைச்
சென்று இறைப் பொழுதினில் கொணர்வென், சென்று' எனா,
பொன் திணி பொலங் கழல் வணங்கிப் போயினான்,
வன் திறல் மாருதி வளர்ந்த கீர்த்தியான். 258-2

ஆய காலையில், ஐயனைக் கொண்டு, தன்
தூய காவின் உறைவு இடம் துன்னினான்;
'மேய சேனைக்கு அமைப்பென் விருந்து' எனா,
தீயின் ஆகுதி செங் கையின் ஒக்கினான். 258-3

பான நெய்யொடு, நானமும், சாந்தமும், பலவும்,
ஆன வெள்ளிலையோடு அடைக்காய், கருப்பூரம்,
தேன் அளாவிய முக் கனி காயொடு தேன், பால்,
வான நாட்டு அர மங்கையர் மகிழ்ந்து கொண்டு இழிந்தார்.
258-4

கங்கை தரு கழலாற்கும், இளவலுக்கும், காரிகைக்கும்,
துங்க முடி வீடணற்கும், சுக்கிரிவப் பெருமாற்கும்,
தங்கு பெருஞ் சேனைக்கும், தனித்தனியே, பொன் கலத்தால்
அங்கு அடைவின் மண்டலம் இட்டு, அணி விளங்க நிறைத்தனரால்.
258-5

வெள்ளை நறும் போனகமும், மிகு பருப்பும், பொரிக் கறியும்,
தள்ள அரிய முக்கனியும், சருக்கரையும், நறு நெய்யும்,
எள்ள அரிய பலவிதத்துக் கறியமுதும், இமையவர்தம்
வள்ளல் முதல் அனைவோர்க்கும் வரிசை முறை படைத்தனரால். 258-6

நீர் உலவி, நீர் குடித்து, நினைந்திருந்து, ஆகுதி பண்ணி,
கார் உலவு மேனியனும், காரிகையும், இளங் கோவும்,
தேர் இரவி திருமகனும், தென் இலங்கைப் பெருமானும்,
போரின் உயர் சேனையுடன் போனகம் பற்றினர், பொலிவால்.
258-7

'இரவி காதலன், இலங்கையர் கோன், இவர் உதவி
அரசின் ஆசையது என்னலாம்; அனுமனே! என்பால்
விரவு காதலின் நீ செய்த உதவிக்கு வேறு
தருவது ஒன்று இலை, உடன் உணும் தரமது அல்லால்.' 258-8

[இதன்பின் 189-18, 19, 20 எண்ணுள்ள பாடல்கள் உள்ளன.]

'கொற்றவன் உடன் உண்ணுமோ?—கோது இல் மாதவனே!
வெற்றி வீரனே!' என அஞ்சி நின்றனன்; விமலன்
மற்றப் போனகம் ஒரு கை வாய் வைத்தபின், வாராப்
பற்றி, அப்பொழுது அனுமனும் பரிகலம் பறித்தான். 258-9

பரிகலத்து அமுது ஏந்தியே, பந்திகள்தோறும்
இரவி காதலற்கு, அங்கதற்கு, இலங்கையர் வேந்தற்கு,
உரிய வீரர்கட்கு அளித்து, தான் அவர்கள் ஒபாதி
வரிசையால் உண்ண, மா முனி விருந்தும் உண்டனரால்.
258-10

பரிகலத்து ஒ(வ்)வோர் பிடிகொடு, பந்திகள்தோறும்
இரவி புத்திரற்கு, இலங்கையர் வேந்துக்கும் உதவி,
உரிய நல் தமர் அனைவர்க்கும் உதவி, பின், அவனும்
வரிசையின் கொண்டு, மா முனி விருந்தும் உண்டனனால்.
258-11

அன்ன காலையில் போனகம் அமரர் பொற்கலத்தே
முன்னம்போல் படைத்து, திருமுன்பு வைத்தனரால்;
உன்னும் பேர் உலகு அனைத்தும் உண்டும், பசி தீரா
மன்னன் மா முனி விருந்தும் உண்டு, அகம் மகிழ்ந்தனனால்.
258-12

பான நல் அமுதுடன் கருப்பூரமும், பலவும்,
ஏனை வானவர் மகளிர்கள் ஏந்தி, முன் நிற்ப,
தான மெய்ப் படைத் தம்முடைப் போகத்துள் தந்த
ஆன கற்பக நாட்டு அமிழ்து என்பதும் அயின்றான். 258-13

அண்ணல் மா முனி அருளிய போனகம் அளக்கர்-
வண்ணனே முதல் வானரக் கடல் எலாம் வாய்ப் பெய்து,
உண்ணும் வாசகம் கேட்டு, இமையோர், முனிவோரும்,
மண்ணும், நாகரும், யாவரும், அருந் துயர் மறந்தார். 258-14

மான வேந்தரும் வள்ளலும் மலர்க் கரம் விளக்கி,
ஆன வெள்ளிலையோடு அடைக்காய் அமுது அருந்தி,
ஞான மா முனி பெருமையைப் புகழ்ந்து, நாயகனும்
பானல் வேல் விழியாளொடும் படையொடும் இருந்து, 258-15

ஆர் இருள் அகலும்காலை, அமலனும், மறையோன் பாதம்,
ஆர்வமோடு எழுந்து சென்று, வணங்கலும், அவனும் ஆசி
சீரிது கூறி, 'சேறி' என்றலும், தேர்மேல் கொண்டு,
சீரிய தானையோடும் சிறப்பொடும் மகிழ்ந்து சென்றான். 258-16

விருந்தும் உண்டு, மா முனிவனை விடைகொண்டு, தேர்மேல்
அருந்ததிக் கற்பினாளொடும் படையொடும் அமைந்தான்;
வருந்து கோசல நாடுடன் அயோத்தியும் வாழ,
பரிந்து, இராமனும் ஏகினன், பரதனைக் காண்பான். 258-17

இராவணன் வேட்டம் போய் மீண்டு, எம்பிரான் அயோத்தி எய்தி,
தராதல மகளும் பூவில் தையலும் மகிழ, சூடும்
அராவு பொன் மௌலிக்கு எய்ந்த சிகாமணி, குணபால் அண்ணல்
விராவுற எடுத்தாலென்ன, வெய்யவன் உதயம் செய்தான்.
258-18

இளவலை, ' ''அண்ணலுக்கு எதிர் கொண்ம்'' என்று, நம்
வளை மதில் அயோத்தியில் வாழும் மக்களை,
''கிளையொடும் ஏகு'' எனக் கிளத்தி, எங்கணும்
அளை ஒலி முரசுஇனம் அறைவிப்பாய்' என்றான். 258-19

' ''தோரணம் நட்டு, மேல் துகில் பொதிந்து, நல்
பூரணப் பொற் குடம் பொலிய வைத்து, நீள்
வாரணம் இவுளி தேர் வரிசைதான் வழாச்
சீர் அணி அணிக!'' எனச் செப்புவாய்' என்றான். 258-20

பரத்துவன் உறைவிடத்து அளவும், பைம் பொன் நீள்
சிரத் தொகை மதில் புறத்து இறுதி சேர்தர,
வரத் தகு தரள மென் பந்தர் வைத்து, வான்
புரத்தையும் புதுக்குமா புகறி, போய்' என்றான். 258-21

என்றலும், அவன் அடி இறைஞ்சி எய்தி, அக்
குன்று உறழ் வரி சிலைக் குவவுத் தோளினான்,
நன்று உணர் கேள்வியன், நவை இல் செய்கையன்,
தன் துணைச் சுமந்திரற்கு அறியச் சாற்றினான். 258-22

அவ் உரை கேட்டலும், அறிவின் வேலையான்,
கவ்வை இல் அன்பினால் களிக்கும் சிந்தையான்,
'வெவ் வெயில் எறி மணி வீதி எங்கணும்
எவ்வம் இன்று, அறை பறை எற்றுக!' என்றிட, 258-23

'வானையும் திசையையும் கடந்த வான் புகழ்க்
கோனை இன்று எதிர்கொள்வான், கோல மா நகர்த்
தானையும் அரசரும் எழுகதான்' எனா,
யானையின் வள்ளுவர் முரசம் எற்றினார். 258-24

முரசு ஒலி கேட்டலும், முழங்கு மா நகர்
அரசரும் மாந்தரும் அந்தணாளரும்,
கரை செயல் அரியது ஓர் உவகை கைதர,
திரை செறி கடல் என, எழுந்து சென்றவால். 258-25

'அனகனை எதிர்கொள்க' என்று, அறைந்த பேரி, நல்
கனகம் நல்கூர்ந்தவர் கைப்பட்டென்னவும்,
சனகனது ஊர்க்கு என முன்னம் சாற்றிய
வனை கடிப் பேரியும், ஒத்த ஆம்அரோ. 258-26

அறுபதினாயிரம் அக்குரோணி என்று
இறுதி செய் சேனையும், ஏனை வேந்தரும்
செறி நகர் மாந்தரும், தெரிவைமார்களும்,
உறுபொருள் எதிர்ந்தென, உவந்து போயினார். 258-27

அன்னையர் மூவரும், அமரர் போற்றிட,
பொன் இயல் சிவிகையின் எழுந்து போய பின்,
தம் நிகர் முனிவரும் தமரும் சூழ்தர,
மன்னவன் மாருதி மலர்க்கை பற்றுறா, 258-28

திருவடி இரண்டுமே செம் பொன் மௌலியா,
இரு புறம் சாமரை இரட்ட, ஏழ் கடல்
வெருவரும் முழக்கு என வேழம் ஆர்த்து எழ,
பொரு அரு வெண்குடை நிழற்ற, போயினன். 258-29

எல்லவன் மறைந்தனன்—என்னை ஆளுடை
வில்லியை எதிர் கொள, பரதன் மீச் செல்வான்.
அல்லி அம் கமலமே அனைய தாள்களில்
கல் அதர் சுடும் தன கதிரின் என்னவே. 258-30

அவ் வழி மாருதி அம் கை பற்றிய
செவ் வழி உள்ளத்தான், 'திருவின் நாயகன்,
எவ் வழி உறைத்தது? அச் செயல் எலாம் விரித்து,
இவ் வழி எமக்கு நீ இயம்புவாய்' என்றான். 258-31

என்றலும், மாருதி வணங்கி, 'எம்பிரான்,
மன்றல் அம் தொடையினாய்! அயோத்தி மா நகர்
நின்றதும், மணவினை நிரப்பி மீண்டு கான்
சென்றதும், நாயினேன் செப்பல் வேண்டுமோ?' 258-32

' "ஏடுணர் அலங்கல் மார்பத்து இராவணன் முதலோர்க்கு எல்லாம்
வீடணன் கடன்கள் செய்து மீண்டனன்; அவனுக்கு இன்னே
சூடுக மௌலி" என்ன, சுந்தர இராமன் தம்பி
மாடு அணை துணைவரோடும் மகுடமே புனைந்து விட்டான்.
258-33

தோன்றலும், சுமந்திரன் தொழுத கையினன்,
ஈன்று, காத்து, அழித்து, அவை இயற்றும் அவ் உரு
மூன்றுமாய் நான்குமாய் ஐந்துமாம் முதல்
சான்றினைப் பரதற்குச் சுட்டி, சாற்றுவான். 305-1

அப் பொழுது அவ் வயின் அடைந்துளோர்களைத்
'தப்பு அறக் காண்பென்' என்று ஐயன் தன் மனத்து
ஒப்பு அற எண்ணும் முன், உம்பர் நாடு வந்து
இப் புறத்து இழிந்தென இழிந்த, மானமும். 317-1

அவ் வயின், 'அயோத்தி வைகும் சனமொடும், அக்குரோணி
தவ்வல் இல் ஆறு பத்து ஆயிரமொடும், தாயரோடும்,
இவ் வயின் அடைந்துளோரைக் காண்பென்' என்று இராமன் உன்ன,
செவ்வையின் நிலத்தை வந்து சேர்ந்தது, விமானம்தானும்.
317-2

எவ் வயின் உயிர்கட்கும், இராமன் ஏறிய
செவ்விய புட்பகம் நிலத்தைச் சேர்தலும்,
அவ் அவர்க்கு அணுகிய அமரர் நாடு உய்க்கும்
எவ்வம் இல் மானம் என்று இசைக்கல் ஆயதால். 317-3

நீடு வேல் ஏற்றவற்கு இளைய நின்மலன்
வாடிய மனத்தனுய் வசிட்டன் முன் வர,
சூடிய கடி மலர் தூவி ஆர்த்தனன்;
ஏடு அவிழ் தாமரை இறைஞ்சி, எய்திஞன். 329-1

ஆயிடைக் குகனும் வந்து, ஆங்கு, ஆண்டவன் அடியில் வீழ,
நாயகன் உவந்து புல்லி, 'நண்ணி, என் பின்பு வந்த
தூயனே! கிளையினேடும் சுகம் இருந்தனையோ?' என்று
வாயிடை மொழிந்தான்,—மற்றை மறைகளும் காணு அண்ணல்.
332-1

வேறு வேறு உள்ள சுற்றத்தவர்களும் வேந்தர் ஆதி
கூறிய குழுவினேரும் குழுமி, அங்கு இராமன் பாதம்,
ஊறிய உவகை தூண்ட, தொழுதனர்; உவந்த பின்பு
தேறிய கமலக்கண்ணன் திரு நகர்க்கு எழுதலுற்ருன். 332-2

நம்பியும் பரதனேடு நந்தியம்பதியை நண்ணி,
'வெம்பிய எரியின் பாங்கர், விலக்குவென்' என்று விம்மும்
கொம்பு இயல் மருங்குல் தெய்வக் கோசலை குளிர் பொன் பாதம்
தம்பியரோடும் தாழ்ந்தான், தாமரைக் கண்ணீர் தாழ.
332-3

மூன்று என நின்ற தன்மைக் குணங்களின் உயிர்கட்கு எல்லாம்
